இப்புத்தகத்தில் அடங்கியவை.

கணபதி துணை.

முகவுரை.

"சந்தனப் பொதியத் தடவரைச் செந்தமிழ்ப்
பரமாசாரியன் பதங்கள்
சிரமேற் கொள்ளுதுந் திகழ்தரற் பொருட்டே."

தமிழ்ப்பாஷையிலுள்ள பழைய காப்பியமைந்தனுள் ஒன்றாகிய சிலப்பதிகாரமென்பது சேரமுனிவராகிய இளங்கோவடிகளாலியற்றப்பட்டது; [illegible]றபொருள்கண்ட கணக்காயனார் மகனார் நக்கீரனார் முதலிய உரையாசிரியர்களால் எடுத்துக்காட்டப்படும் பிரமாணநூல்களுளொன்று; சொற்பொருட்சுவைகளிற் சிறந்துள்ளது; எவ்வெப்பொருளைச் சொல்லினும் அவ்வப்பொருளை நேரிற்கண்டாற்போல மனத்திற்குத் தோற்றுமாறும் நன்குபுலப்படுத்துந் தெள்ளிய இனிய நன்னடையுடையது; வணிகனாகிய கோவலன் கண்ணகி என்பவருடைய சரித்திரத்தை எடுத்துக்கூறுவது; (தமிழ்நாட்டரசர் மூவருடைய இராஜதானிகளாகிய காவிரிப்பூம்பட்டினம்) மதுரை வஞ்சியென்னும் மூன்றன்பெருமையை விளக்குவது; பண்டைக்காலத்திருந்த பலவகை யா[illegible] முதலியவற்றை இக்காலத்தார் எளிதிற்றெரிந்துகொள்ளுதற்கேற்ற சிறந்தவுள்ளது; அரசர் நீதியிற் சிறிது பிழைப்பினும் அறமே அவர்க்குக் கூற்றாய்நின்று கொல்லுமென்பதும், கற்புடைமகளிரை மக்களேயன்றி முனிவருந் துதித்தல் இயல்பென்பதும், [illegible]வினையும் [illegible]றையே செய்தோரை நாடிவந்து தம்பயனை ஊட்டுமென்பதும் ஆகிய மூன்றனையும் இவ்வுலகத்தார்க்குத் தெரிவித்தற்பொருட்டே இளங்கோவடிகளாற் செய்யப்பட்டது; மேற்கூறிய மூன்றற்கும் [illegible]டையும் காரணமாகத் தெரிவித்தலின், இந்நூல் சிலப்பதிகாரமென்னும் பெயர் பெற்றது.

இன்னும் இந்நூல், முத்தமிழும் விரவப்பெற்றதாதலின் இயலிசை பொருட்டொடர்நிலைச்செய்யுளென்றும், [illegible] நாடகக்காப்பியமென்றும், உரைப்பாட்டும் இசைப்பாட்டும் இடையே விரவப்பெற்றதாதலின் உரையிடையிட்டபாட்டுடைச்செய்யுளெனப் பெயர்பெறும்.

இக்கதை நடந்தகாலமும் இளங்கோவடிகள்காலமும் ஒன்றே. இது முதலில் தமிழிலேதான் அவராற்செய்யப்பட்டதென்றும் இந்நூற் பதிகச்செய்யுளாலும், வேறுகாரணங்களாலும் விளங்குகின்றமையின், இச்சரித்திரம் வேறுபாஷையிலிருந்துவந்ததென்று சொல்வதற்கிடமில்லை.

இச்சிலப்பதிகாரம், இளங்கோவடிகளால் தான்செய்யப்பட்டதற்குக் காரணமும் கதைச்சுருக்கமுமமைந்துள்ள பதிகச்செய்யுளை முதலிற்கொண்ட மங்கலவாழ்த்துப்பாடல் முதலிய பத்துப்பகுதிகளையுடைய புகார்க்காண்டம், காடுகாண்காதை முதலிய பதின்மூன்றுபகுதிகளையுடைய மதுரைக்காண்டம், குன்றக்குரவை முதலிய ஏழுபகுதிகளையுடைய வஞ்சிக்காண்டமுமாகப் பகுக்கப்பட்டுள்ளது. இதில் இயற்றமிழின் பாகுபாடான வெண்பா வஞ்சிப்பா கலிப்பா என்பவைகளும், இசைத்தமிழின் பாகுபாடான ஆற்றுவரி முதலியபாக்களும், நாடகத்தமிழின் பாகுபாடான உரைப்பாட்டுக்களும் உள்ளன. இவற்றுள் மிகுதியாகவுள்ளது அகவற்பாவே.

இந்நூற்கு அரும்பதவுரையென்றும், அடியார்க்குநல்லாருரையென்றும் இரண்டுரைகளுண்டு. இந்திரவிழவூரெடுத்தகாதையில், [[illegible]] "ஐம்பெருங்குழுவு மெண்பேராயமும்" என்பதன்விசேஷவுரையில், [[illegible]] 'எனக்காட்டினார் அரும்பதவுரையாசிரியர்' என்று அடியார்க்குநல்லார் எழுதியிருத்தலால், இவ்விரண்டினுள், அரும்பதவுரை முந்தியதென்று தெரிகிறது. அப்படியே அரும்பதவுரையிலுள்ள சிலகுறிப்புக்களால் அவ்வுரைக்குமுன்பு இந்நூற்குப் பழையவுரையொன்றிருந்ததாகத் தெரிகிறது. அவ்வுரை இக்காலத்துக் கிடைக்கவில்லை. இந்நூலின் பல இடங்களில் அரும்பதவுரையாசிரியர்கொண்டபாடம் வேறாகவும், அடியார்க்குநல்லார்கொண்டபாடம் வேறாகவுமுள்ளன. அவை அவ்வவ்வுரைவேறுபாடுகளால் நன்குபுலப்படும்.

*அரும்பதவுரை, ஆங்காங்குள்ள திரிசொற்களின்பொருளை ஒருவாறுபுலப்படுத்தச் சிற்சிலவிடத்து மேற்கோள்களையுடைய சுருக்கமாக இந்நூல்முழுமைக்கும் எழுதப்பட்டுள்ளது. அவர் பெயரும் அவரிருந்தவிடமும் அவர்காலமுதலியனவும் ஒருவாற்றானு மறிந்துகொள்ளக்கூடவில்லை.

அடியார்க்குநல்லாருரை அவ்வரும்பதவுரையைப் பெரும்பாலுந் தழுவியும், சிறுபான்மைமறுத்தும், சிலவிடத்துப் பதவுரையாயும், சிலவிடத்துப் பொழிப்புரையாயுமெழுதப்பட்டு, ஆங்காங்குச் சொன்னயம் பொருணயங்களை இனிதுபுலப்படுத்தி, உரியவிடங்களில் இயற்றமிழ்ப்பகுதியாகிய இலக்கணங்களையும், இசைத்தமிழ் நாடகத்தமிழ்ப் பகுதிகளையும்

---

* இவ்வரும்பதவுரை, தனியே அச்சிட்டு இப்புத்தகத்தினிறுதியிற்

வதிற் பயனில்லையென்றெண்ணிக் கிடைத்தவுரையையும் மூலமுழுவ
யுமே அச்சிட்டுவிட்டேன்; அடியார்க்குநல்லாருரையில்லாத பகுதிக
அரும்பதவுரையின் பேருதவியைக்கொண்டே ஒருவாறு பரிசோதிக்க
பட்டன.

இவற்றிலுள்ளஇசைநாடகப்பகுதிகள், இப்பொழுதுகிடைத்த சச்சபுட
வெண்பா தாளசமுத்திரம் *சுத்தானந்தப்பிரகாசமுதலிய பழைய தமிழ்நூல்
களைக்கொண்டும் இசையிலும் பரதத்திலும் வல்லோரைக்கேட்டும் ஒருவாறு
ஆராய்ச்சிசெய்யப்பட்டன. அங்ஙனஞ்செய்யப்பட்டும் சிலபாகங்கள் சற்றே
விளங்கின. இசை நாடகங்களுக்குரிய பரிபாஷைகளிற் பெரும்பான்மை வட
மொழியிலும் தென்மொழியிலும் வேறுவேறுருவங்களோடு கூடியிருத்த
லால் இவற்றிலுள்ள சொற்கள்பல வடநூல்களைக்கொண்டு தெரிந்துகொள்
ளக்கூடவில்லை. அன்றியும் அரங்கேற்றுகாதையிலுள்ள நவமணியிலக்கணமும்
வேறுசிலவும் விசாரித்த இப்பொழுதுள்ள வடநூல்களிற் கூறிய இலக்க
ணங்களோடு சிற்சில மாறுபாடுள்ளனவாகத் தெரிந்தன. இந்நூலில் அடியார்
க்குநல்லார் ஒவ்வொன்றையும் பழைய தமிழ்நூல்மேற்கோள்களைக்கொண்டு
நன்குபுலப்படுத்தியிருந்தும் அப்பழையநூல்களும் அவற்றின்கருத்தை ஒரு
வாறு அறிந்துசொல்வோரும் இக்காலத்தில்லையாதலால் அவை அறிதற்கரிய
வாயிருக்கின்றன. அன்றியும் இவற்றில்வந்திருக்கிற இயற்றமிழ்ச் சொற்க
ளுட்சில இக்காலத்து வழக்கொழிந்தனவாதலால் அவற்றிற்குப்பொருள்
நன்கு புலப்படவில்லை; அவற்றின் உருவமும் விளங்கவில்லை. ஆயி
[illegible] விளங்காதனவாகிய [illegible] வைகட்கு இப்பொழுது இந்நூல
ணும் [illegible] டியே மூல [illegible] வருகளால் இதுபோல பழைய
லும் [illegible] பவுரையாலும் ஒரு [illegible] ச்சி செய்யச்செய்ய இவைகளும்
நூ[illegible]ளையும் உரையையும் ஒப்பு[illegible] ளாம் பிரதிகளிலில்லா தவற்றைக்
பின்பு விளங்குமென்பது என்றுணிபு. [illegible] குறைந்தும் [illegible]போனவாறே இவற
கூட்டியும் உள்ளவற்றை மாற்றியும் [illegible] செய்யுள்வழக்கு என்று [illegible]
றைப் பதிப்பித்திலேன். [illegible] செய்யுள்வழக்கு [illegible] பிரதிகளிலிருந்தவாறே
புங் கருவியாகக்கொண்டு பலமுறை ஆராய்ச்சிசெய்து [illegible]
பதிப்பித்தேன்.

மேற்கூறிய பழைய பிரதிகளுட்பல, இனி வழங்கப்படவேண்டுமென்பதற்
கிடமில்லாமற் பிழைமலிந்து, அநேகவருடங்களாகத் தம்மைப்படிப்பே
ரும் படிப்போருமில்லையென்பதையும் நூல்களைப் பெயர்த்தெழுதித்
தொகுத்துவைத்தலையே விரதமாகக்கொண்ட சிலபுண்ணியசாலிகளாலேயே
தாம் உருவொன்றியிருத்தலையும் நன்கு புலப்படுத்தின. ஒன்றோடொன்
றொவ்வாது பிறழ்ந்து குறைவுற்றுப் பழுதுபட்டுப் பொருட்டொடர்பி

* இந்நூல் தில்லையம்பூர் ம-௱-௱-ஸ்ரீ வேங்கடராம ஐயங்காரவர்களாற் கொ

மற்கோண்முகமாக நன்குவிளக்கும் விசேடவுரையோடுகூடி, இயன்றமட்டில் ஒவ்வொன்றையும் நன்குதெரிவித்து மிகவிரிவாக அமைந்துள்ளது. இவ்வுரையாசிரியரிடமும் காலமுதலியனவும் நன்குவிளங்கவில்லை. ஆயினும் இவ்வுரையாசிரியர்க்கு நிரம்பையர்காவலரென்று ஒரு பெயருண்டென்பதும், இவ்வுரை அக்காலத்திருந்த பொப்பண்ணகாங்கேயர்கோனென்ற ஒருபிரபுவாற் செய்விக்கப்பட்டதென்பதும் இவ்வுரைச்சிறப்புப்பாயிரச் செய்யுட்களால் தெரிகின்றன.

அடியார்க்குநல்லாருரையில், இக்காலத்து விசேடித்துவழங்குதலொழிந்த இசைத்தமிழ் நாடகத்தமிழிலக்கணங்களும் அவற்றிற்குரிய சூத்திரங்களும் பரிபாஷைகளும் இன்னும் வேறுபலவும் நிறைந்திருக்கின்றனவாதலால், இது படிப்போர்களுக்கு மிகவும் பயன்படும்.

இந்நூலை அடியார்க்குநல்லாருரையுடன் பலபிரதிகளைக்கொண்டு பரிசோதித்து எழுதுவோர்க்கும் நோக்கவல்லுநரை இயன்றவரையிற் [illegible] யாவருக்கும் பயன்படும்படி அச்சிடவேண்டுமென்றுநெடுநாளாகக் கருத்துண்டானவிருப்பம் நாள்தோறும்பெருகி என்மனத்தை நிலைகொள்ளவொட்டாமையால் முன்பு சிந்தாமணியை அச்சிட்டகாலந்தொடங்கி அநேகமாக இதன்பிரதிகள்தேடி அவற்றைக்கொண்டு பரிசோதித்துவந்தேன்; அவற்றுள் ஒருபிரதியிலேனும் எட்டாவது கானல்வரிக்குப் [illegible] காதைமுதலிய பிற்பாகத்திற்கும் உரை காணப்படவில்லை. சிலவிடத்திலுள்ள விசேடவுரைக்குறிப்பால் கானல்வரிக்கு அடியார்க்குநல்லார் உரையெழுதியிருந்தாரென்றும் பின்னுள்ளவற்றிற்கும் [illegible] பாகங்களிற் [illegible] யெழுதியிருந்தாரென்றும் தெரிந்தமையால், அவைக [illegible] திருவாவடுதுறையாதீனம் [illegible] தினம் திருவண்ணாமலையாதீனம் [illegible] னும், சென்னையிலும் கருவையிலும் செங்கோலமடமுதலிய ஆதீனசாலைகளிலும், அம்பாசமுத்திரம் நகரம் ஸ்ரீவை [illegible] முள்ள பழைய சைவமடத்தார் ஆசிரமங்களிற் [illegible] [illegible] டயநல்லூர் வேலங்குடிப்புரம் பூழியன்குடி கல்லிடைக்குறிச்சி விக்கிரமசிங்கபுரம் களக்காடு மேலகரம் செங்கோட்டை தென்காசி திருநெல்வேலி வண்ணார [illegible] பேட்டை பாளையங்கோட்டை கும்பகோணம் கொட்டையூர் சீகாழி சிதம்பரம் சேலம் பாகற்பட்டு கருவை திரிசிரபுரம் திருப்பாதிரிப்புலியூர் [illegible] ஆர் மதுரை மிதிலைப்பட்டி செவ்வூர் சென்னபட்டணம் திருமயிலைமுதலிய பல [illegible] வூர்களிலுள்ள [illegible] யவரைத் தமிழ்வித்துவான்கள்விடுகளிலுமுள்ள [illegible] ஏட்டுப்புத்தகங்களைத்தேடியும் இத்தமிழ்நாட்டில் நான் செல்லக்கூடாத இடங்களிலும் இங்கிலாந்து பாரிஸ்நகரம் இவற்றிலுள்ள தமிழ்ப்புத்தகசாலைகளிலும் அங்கங்குள்ள அன்பர்களைக்கொண்டுதேடுவித்தும் பார்த்தேன். [illegible] பயன்செய்யும் அவை கிடைக்கவில்லை. ஆதலால், இனி இவ்வாறு தேடு

வடர்ந்த இப்பிரதிகளைப் பரிசோதித்த துன்பத்தை உள்ளுங்கால் உள்ள முருகும்.

இதுவரையில் அச்சிடப்படாத அடியார்க்குநல்லாருரைப் பகுதி இனி எப்பொழுது கிடைப்பினும் உடனே பரிசோதித்து வெளிப்படுத்த வேண்டுமென்பது எனது கருத்தாதலின் அதனை வைத்திருப்போர் தயைசெய்து அனுப்புவாராயின் உடனே அவர்கள் விரும்பியவண்ணம் உதவிபுரிந்து அதனை அச்சிட்டு அவர்கள் பெயரை நாட்டி வெளிப்படுத்தச் சித்தனாகவிருக்கிறேன்.

இப்புத்தகத்தைக்கொண்டு வேறு நூல்களையும், அவற்றைக்கொண்டு இதனையும் ஆராய்ந்து உண்மைகாண்டற்குக் கருவியாக இவ்வுரையிற் காணப்பட்ட பலவிஷயங்கட்கும் தொகையகராதிமுதலியன இம்முகவுரையின் பின்னர்ப் பதிப்பிக்கப்பட்டுள்ளன.

இந்நூலின் அருமை பெருமையையும் எனது சிறுமையையும் உய்த்துணரவல்ல விவேகிகள் இப்பதிப்பிற் காணப்படும் பிழைகளையும் அவற்றின் திருத்தங்களையும் தயைசெய்து தெரிவிப்பார்களாயின் அந்நன்றியை ஒருபொழுதும் மறவேன்.

எனக்கு இவற்றைத் தேடிப் பரிசோதித்து அச்சிடுவித்தலையாலுண்டான பொருட்செலவு என்னுடைய அளவை உத்தேசிக்குங்கால் மிகப்பெரிது. இவ்விஷயத்தில் எனக்குப் பெரும்பாலும் கவலையுறாதபடி அவ்வப்பொழுது தங்கள் தங்களால் இயன்றவளவு அன்புடன் பொருளுதவி செய்துவந்த *கனவான்களை நான் எக்காலத்தும் மறவேன். அன்றியும், எல்லா ஒருபொழுதும் நேரிற் காணாதவர்களாயிருந்தும் இந்நூல் இவ்வுரையுடன் நின்று நிலவுதல் வேண்டி அச்சிடுவித்தற்கு வேண்டியவற்றையே நன்குமதித்து நன்கொடையாக மிக்க பொருளுதவிசெய்த கொழும்புநகரத்துப் பிரபுசிகாமணியாகிய ம-ள-ள-ஸ்ரீ டா. குமாரசாமிமுதலியாரவர்களுடைய பெருந்தன்மை எப்பொழுதும் மறக்கற்பாலதன்று; இந்நூல்முழுமைக்கும் அடியார்க்குநல்லாருரை அகப்படுமோவென்று இங்கிலாந்திலுள்ள கையெழுத்துப்புத்தகசாலைகளில் தேடிப்பார்த்த கனவானும் இவரே.

பாரிஸ்நகரத்துள்ள கையெழுத்துப் புத்தகசாலையில் தேடிப்பார்த்து உதவிசெய்தவர் புரொபெஸர் ஜூலியன் வின்ஸன் என்பவர்.

இவற்றைப் பரிசோதிக்கத் தொடங்கியதுமுதல் அடிக்கடி விசாரித்து தூண்டுதல்செய்துவந்தவர்களில் ஸ்ரீ திருப்பாதிரிப் புலியூர் ம-ள-ள-ஸ்ரீ ... சேஷையரவர்கள், சிலசமயங்களில் உடனிருந்து பிழைகளைக் குறைப்பதற்கு வேண்டியவற்றைச் செய்ததோடு எனது ... வாயின்றியிருக்கும்படி பார்த்துக்கொண்டதால் யான் கவலையின்றி இருந்தேன். இங்ஙனம் செய்தவர்களில் ம-ள-ள-ஸ்ரீ. ஸா. நாராயணஸ்வாமிப்பிள்ளையவர்கள் முதலியோர் ... முகவுரையின்பின்னர்ப் பதிப்பிக்கப்பட்டிருக்கின்றன.

* இத்தக்கனவான்களுடைய பெயர்கள் இம்முகவுரையின்பின்னர்ப் பதிப்பிக்கப்பட்டிருக்கின்றன.

இனிச் சிறிதும் பொருட்கவலையடையவேண்டாம்' என்றுசொல்லிப் பலவகையான பேருதவிபுரிந்துவந்தார்கள். இவர்கள் அன்புடன்முன்னின்று உபகரித்தமையினாலேயே இம்முயற்சி நிறைவேறிற்று. இம்மகோபகாரிக்கு என்றுஞ்செய்யப்படும் பிரதியுபகாரம் யாதுளது?

சிறுவயல் ஜமீந்தாரவர்களாகிய ம-ள-ள-ஸ்ரீ முத்துராமலிங்கத்தேவரவர்கள், இந்நூலைப் பதிப்பிக்கத் தொடங்கியகாலமுதலாகச் சென்னையிலிருந்து எனக்குச் சகாயஞ்செய்யும்படி நியமித்திருந்த திருமானூர் ம-ள-ள-ஸ்ரீ கிருஷ்ணையரவர்களை நான் விரும்பியவண்ணம் அனுப்பினார்கள்.

மிகவும் சிதைந்துபோன கையெழுத்துப்பிரதிகளை [illegible]கொண்டு சிறிதும் மனச்சலிப்பின்றி இரவும்பகலும் உடனிருந்து படித்து ஒப்புநோக்கிப் பலநாள் உதவிபுரிந்துவந்த வித்தியார்த்திகளிடத்தும் மற்றை அன்பர்களிடத்தும் யான் மிக்க நன்றியறிவுள்ளவனாக இருக்கிறேன்.

இச்சிலப்பதிகார [illegible] இந்நூல் பதிப்பிக்கவிருப்பதாய நூல்களுள் ஒவ்வொன்றையுங் கருதியவண்ணம் நிறைவேற்றுதற்குரிய [illegible] பொருளுதவிமுதலியனபுரிந்து [illegible] எல்லாம்வல்ல [illegible] இறைவனுடைய திருவடித் தாமரைகளைப் பிரார்த்திக்கின்றேன்.

இவ்வுரையைப் பதிப்பிக்குங்காலத்து விளங்காதமேற்கோள்களுள் இடம் விளங்கியவை :—

பக்கம்.	வரி	மேற்கோள்.	நூல்.
ரு0	க0	"சுத்துவக்கும்" . . .	திருக்குறள், சுளை, ..
கஙஅ	கக	"மாசற விசித்த ..வீங்கிது செயலே"	புறநானூறு, ரு0.
உசஉ	உஅ	'வாரிய பெண்ணை வருதரும்பை வைத்தனபோ லேரிய வாய்நூ மெனசெய்யுங் - கூரிய கோட்டானைத் தென்னன் குளிர்சாந் தணியகலங் கோட்டிமனை கொள்ளா முலை.'	*முத்தொள்ளாயிரம்.
ருசரு	கூ	"செறுகதிர் ஞாயிறு நக்கின்ற காய்தலின்"	புறநானூறு, கஎ.

சீவகசிந்தாமணி பத்துப்பாட்டு நச்சினார்க்கினியருரையில் முன்பு இடம் விளங்காத மேற்கோள்களுள் இப்பொழுது விளங்கியவை இப்புத்தகத்தின்பின்னாகச் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

* முத்தொள்ளாயிரமென்னுநூல் இப்பொழுது கிடைக்கவில்லை; ஆயினும் பதிப[illegible]" எனனும் இவ்வெண்பா, தான் எந்ததுக்காட்டுக்கு செய்யுட் [illegible] வந்நூற்பெயரையெழுதிவிளக்கும் புறத்திரட்டென்னும் புத்த "வாரிபெண [illegible]லால், முத்தொள்ளாயிரத்திலுள்ளதென்றறியப்பட்டது.

களின் [illegible]மயில், [illegible] - கபரு - ம் சூத்திரவுரையில இதனை நச்சி [illegible]பயில் [illegible]ச்சிலெழுதப்பட்டிரு [illegible]தொல்காப்பியச்செய்ய[illegible] [illegible]க்கினி.

முகவுரை.

இந்நூலை அச்சிடுவித்தற்குப்
பொருளுதவிசெய்த கனவான்கள் பெயர்.

திருவாவடுதுறையாதீனம்

ஸ்ரீலஸ்ரீ அம்பலவாணதேசிகரவர்கள்

திருவண்ணாமலையாதீனம்

,, ஆறுமுகதேசிகரவர்கள்

திருப்பனந்தாட் காசிமடாதிபதி

ஸ்ரீமத் சாமிநாதத்தம்பிரானவர்கள்

கொழும்பு

மா-மா-ஸ்ரீ பொ. குமாரசாமிமுதலியாரவர்கள்

தஞ்சை

,, சே. கல்யாணசுந்தரஐயரவர்கள்

புதுக்கோட்டை

சின்ன அரண்மனைத் துரையவர்களாகிய

,, பாலசுப்பிரமணியரகுநாததொண்டைமானவர்கள்

பாலைப்பட்டு

,, பா. ஐ. சின்னஸாமிப்பிள்ளையவர்கள்

தேவகோட்டை

,, வீர. லெ. இராமநாதச்செட்டியாரவர்கள்

,, வீர. லெ. சிந்நயச்செட்டியாரவர்கள்

,, அழ. அரு. இராமசாமிச்செட்டியாரவர்கள்

,, அழ. சுப. சு. சுப்பிரமணியச்செட்டியாரவர்கள்

விரை

,, உ. லோ. சந்திரநாதசெட்டியாரவர்கள்.

இங்ஙனம்,
உத்தமதானபுரம்
வே. சாமிநாதையன்.

முகவுரை.

எனக்குக்கிடைத்த சிலப்பதிகாரப் பிரதிகளின் விவரம்:—

அடியார்க்குநல்லாருரையோடுகூடிய பிரதிகள்.

திருவாவடுதுறையாதீனத்துப்		பிரதி	க
	ஸ்ரீ-ஆதீனத்து மஹாவித்துவான		
ம-ா-ா-ஸ்ரீ	வி. மீனாட்சிசுந்தரம்பிள்ளையவர்கள்	,,	க
	திரிசிரபுரம்		
,,	சி. தியாகராஜசெட்டியாரவர்கள்	,,	க
	திருநெல்வேலி		
,,	சாலிவாடீசுவர ஓதுவாரவர்கள்	,,	ச
	சேலம்		
,,	இராமஸாமிமுதலியாரவர்கள்	,,	
	சிதம்பரம்		
,,	சாமி ஐயங்காரவர்கள்	,,	
	செங்கை		
,,	தொ. வேலாயுதமுதலியாரவர்கள்	,,	
,,	சூ. அப்பன்செட்டியாரவர்கள்	,,	
,,	குருஸாமி ஐயரவர்கள்	,,	
	திருமயிலை		
,,	அண்ணாஸாமி உபாத்தியாயர்	,,	
	யாழ்ப்பாணம்		
,,	சி. வை. தாமோதரம்பிள்ளையவர்கள்	,,	
,,	தி. குமாரசாமிச்செட்டியாரவர்கள்	,,	
,,	வி. கனகசபைப்பிள்ளையவர்கள்	,,	

ஆக உரைப்பிரதி

மூலப்பிரதிகள்.

ம-ா-ா-ஸ்ரீ	வி. மீனாட்சிசுந்தரம்பிள்ளையவர்கள்	பிரதி
	மிதிலைப்பட்டி	
,,	அழகியசிற்றம்பலக்கவிராயரவர்கள்	,,
	திருநெல்வேலி	
,,	சாலிவாடீசுவர ஓதுவாரவர்கள்	,,
	ஆறுமுகமங்கலம்	
,,	குமாரசாமிபிள்ளையவர்கள்	,,
	திரிசிரபுரம்	
,,	அண்ணாஸாமிபிள்ளையவர்கள்	,,
	திருமயிலை	
,,	அண்ணாஸாமி உபாத்தியாயர்	
	யாழ்ப்பாணம்	
,,	தி. குமாரசாமிச்செட்டியாரவர்கள்	
,,	வி. கனகசபைப்பிள்ளையவர்கள்	

கணபதி துணை.

இந்நூலாசிரியராகிய

இளங்கோவடிகள் வரலாறு.

இந்நூலாசிரியராகிய இளங்கோவடிகள் சேரநாட்டில் வஞ்சிநகரத்திருந்து அரசுசெய்த சேரலாதனென்னும் அரசனுடைய புத்திரர்; சேரன் செங்குட்டுவனுடைய தம்பி; இவர் முதலில் இளங்கோவென்று சொல்லப்பட்டுப் பின்பு துறவு பூண்டமையால் இளங்கோவடிகளென்று பெயர் பெற்றார். இவர் துறவு பூண்டதற்குக் காரணம் இப்புத்தகத்தின் க-ம் பக்கம் உ-ம் வரிமுதலியவற்றாலும், இவர் இந்நூலைச்செய்ததற்குக் காரணம் இந்நூற்பதிகத்தின் முதற்பாகத்தாலும் விளங்க வுணரலாம். துறவு பூண்டபின்பே இந்நூல் இவரால் செய்யப்பட்டது. பத்தினியைத்துதித்துப் புகழ்ந்துகொண்டு [illegible] உலகத்தாருக்குத் தெரிவிக்கவேண்டுமென்பதைக்கொண்டே இவர் இந்நூலைச்செய்தார்; இவர் தமையனாகிய செங்குட்டுவனுடைய உயர்ச்சியையும் [illegible] போர்வினைச்செயற்பாட்டை யாகனுடைய உயர்ச்சியையும் [illegible] கொம்பாடின்றி நன்றாகச்சொல்லியிருத்தலால், இவருடைய துறவின் சிறப்பு நன்கு புலப்படுகின்றது. இந்நூலினிடையிடையே சொல்லப்படுகிற இவருடைய சரித்திரங்களாற் போந்த நற்பயனையும் தீப்பயனையும் [illegible] நோக்கிச் சொல்லிப்போதல் இவர்க்கியல்பு. பிறரும் யாரேனும் மிக்க துன்பமுற்றதாகச் சொல்லும்பொழுது அத்துன்பத்திற்குக் காரணமாக முற்பிறப்பில் அவர்கள் தீவினைசெய்ததைக்குறித்தும் நல்வினை செய்யாமையைக்குறித்தும் அப்பொழுதப்பொழுது இவர் மனம் இரங்கிற்றென்பதை ஆங்காங்குள்ள பாடல்கள் பலபடக் கூறும். இவர் மலைநாட்டினராதலால் இந்நூலில் அந்நாட்டுச்சொற்கள்பல அங்கங்கே விரவிக் காணப்படும்.

இவர் காலமும் இச்சிலப்பதிகாரக்கதை நிகழ்ந்தகாலமும் ஒன்றாதலாற் காவிரிப்பூம்பட்டினத்திலும் மதுரையிலும் நடந்த சரித்திரங்களை அறிந்தோர்வாய்க்கேட்டும் மலைநாட்டில் நிகழ்ந்ததைத் தாம் நேரிற்கண்டும் இந்நூலைச் செய்தனர். இங்ஙனம் செய்தாரென்பதை இந்நூற்பதிகத்தாலும், உ௫-வது காட்சிக்காதையாலும், ௩௰-வது வரந்தருகாதையாலும் விளங்க வுணர்க.

இக்கதையோடு தொடர்புள்ளதாகிய மணிமேகலையின் கதையையும் இந்நூலினிறுதியிற்சேர்த்துப் பாடக்கருதியிருந்த இவர், அக்கதையை மணிமேகலைப்பெயரால் ஒரு காப்பியமாக யான்செய்து முடிப்பேனென்று மதுரைத்தமிழாசிரியர் கூலவாணிகன் சாத்தனார் சொல்லக்கேட்டு அவ்வாறு செய்யாது விடுத்தனர். இதனை இப்புத்தகத்தின் கூ-ம்பக்கம் ரு-வரிமுதலியவற்றிற் காண்க.

சமயம்.—௨௬-வது கால்கோட்காதையிற் செங்குட்டுவன் இமயஞ்செல்லப் புறப்பட்டபொழுது [அடி ௫௪-௫௭] "நிலவுக்கதிர்* முடித்த நீளிருஞ் சென்னி, யுலகுபொதி யுருவத் துயர்ந்தோன் சேவடி, மறஞ்சேர் வஞ்சி மாலையொடுபுனைந், திறைஞ்சாச் சென்னி யிறைஞ்சிவலங் கொண்டு" எனவும், பின்பு [அடி ௬௨-௬௭] "ஆடக மாடத் தறிதுயி லமர்ந்தோன், சேடங் கொண்டு சிலர்நின் றேத்தத், தெண்ணீர் கரந்த செஞ்சடைக் கடவுள், வண்ணச் சேவடி மணிமுடி வைத்தலி, னங்கது வாங்கி யணிமணிப் புயத்துத், தாங்கின னாகி" எனவும், செங்குட்டுவனைநோக்கி, இமயத்தினின்றும்வந்த முனிவர்கள் கூறியதாக [அடி ௯௮-௯௯] "செஞ்சடை வானவ னருளினில் விளங்க, வஞ்சித் தோன்றிய வானவ கேளாய்" எனவும், வரந்தருகாதையில் மாடலன்கூறியதாக [அடி ௧௪௧-௧௪௨] "ஆனே றுயர்த்தோ னருளினிற் றோன்றி, மாநிலம் விளக்கிய மன்னவ னாதலின்" எனவும் இவரே கூறியிருத்தலாலும், இவர் அவனுடைய தம்பியாதலாலும் இவரது சமயம் சைவமென்று தோற்றுகின்றது. இவருக்கு அடிகளென்று பெயர் வந்திருத்தலைக்கொண்டும், பதிகத்தில், "குணவாயிற் கோட்டத் தரசுதுறந் திருந்த" என்பதிற் கோட்டமென்றதற்கு 'அருகன்கோயில்' என்று அடியார்க்குநல்லார் பொருள்செய்திருத்தலைக் கொண்டும், இந்நூலிற் சிலவிடத்துச் சைனமதக்கொள்கையை இவர் விரித்துச் சொல்லியிருத்தலைக்கொண்டும், இவரது சமயம் சைனமென்று கூறுவாருமுளர்.

காலம்.—"உரையிடை யிட்ட பாட்டுடைச் செய்யு, ளுரைசா லடிக ளருள மதுரைக், கூல வாணிகன் சாத்தன் கேட்டனன்" என இந்நூற் பதிகத்திறுதியிலும் "இளங்கோ வேந்த னருளிக் கேட்ப, வளங்கெழு கூல வாணிகன் சாத்தன், மாவண் டமிழ்த்திற மணிமே கலைதுற, மாறைம் பாட்டினு ளறிய வைத்தனன்" என மணிமேகலையினுடைய பதிகத்திறுதியிலும் கூறியிருத்தலால், இளங்கோவடிகளும் சாத்தனாரும் ஒருவர்முன்னிலையிலொருவர் முறையே சிலப்பதிகாரத்தையும் மணிமேகலையையும் இயற்றினாரென்று போதருதலானும், தொல்காப்பியப்பொருளதிகாரச் செய்யுளியலில், "ஒருபொருள் முதலா" எனனும் சூத்திரத்தின் விசேடவுரையில் 'சீத்தலைச்சாத்தனாராற்செய்யப்பட்ட மணிமேகலை' என மேற்கோள் காட்டியிருத்தலால் மேற்கூறிய சாத்தனார் கடைச்சங்கப் புலவருளொருவராகிய சீத்தலைச்சாத்தனாரென்று தெரிதலானும், இளங்கோவடிகள் காலம் கடைச்சங்கப்புலவர் காலமென்று நிச்சயிக்கப்படுகிறது. அக்கடைச்சங்கப் புலவருட் சிறந்தவரும் மதுரைக்கணக்காயனார் மகனாருமாகிய நக்கீரனார் இறையனாரகப்பொருளுரைக்குத் தாம் இயற்றியவுரையில் இந்நூலிற் கானல்வரியிலுள்ள "திங்கள் கொள்", "துறைமேய் வலம்புரி", "நேர்ந்தநங் காதலர்", "புணர்துணை" என்னும் பாடல்களையெடுத்துதாரணமாகக் காட்டியிருப்பதுஞ் சான்று.

இளங்கோவடிகளுக்குத் தமையனாகிய செங்குட்டுவன் பத்தினிக்கடவுளாகிய கண்ணகியார்க்குக் கோயிலமைத்து விழாக்கொண்டாடியகாலத்து இலங்கையரசனாகிய கயவாகுவென்பவன் உடனிருந்தானென்று வரந்தருகாதையானும், அக்கயவாகுவும் இலங்கையிற் கண்ணகியார்க்குக் கோயில்கட்டுவித்து விழாக்கொண்டாடினானென்று இந்நூற்பதிகத்தைச்சார்ந்த உரைபெறுகட்டுரையானுந் தெரிகின்றன. இற்றைக்குச் சற்றேறக்குறைய ௧௮௦௦-வருடங்களுக்குமுன்பு கயவாகுவென்னுமரசனொருவன் இருந்தானென்று இலங்கைச்சரித்திரத்தால் (மகாவம்சம்) புலப்படுகின்றது. பின்னும் சற்றேறக்குறைய ௧௮௦௦ வருடங்களுக்குமுன்பு கயவாகு

வென்னும் மற்றோரரசனிருந்ததாகவும் அச்சரித்திரத்தால் தெரியவருகின்றது ஆயினும், இந்நூலிற்கூறியவேறுசிலஅரசர்களுடைய காலத்தை ஆராயும்போது இந்நூலாசிரியர்காலம் இரண்டாங்கயவாகுவின் காலத்திற்கு முந்தியதாகத்தெரிகின்றமையின், இவர்காலம் முதற்கயவாகுவின் காலமென்றே துணியப்படுகின்றது.

இந்நூலுரையாசிரியராகிய

அடியார்க்குநல்லார் வரலாறு முதலியன.

இவருடைய வருணம் சமயம் ஊர் காலம் முதலிய இவற்றுள் ஒன்றும் புலப்படவில்லை, ஆனாலும் நச்சினார்க்கினியரால் மறுக்கப்படுவனவற்றுட் சில இவருடைய கொள்கையாக இருத்தலைப்பற்றி இவர் அந்நச்சினார்க்கினியருடைய காலத்திற்கு முந்தியிருக்கலாமென்று ஊகிக்கப்படுகிறது. இவரையும் இவ்வுரையையும் பற்றி எனக்குத் தெரிந்த இரண்டொரு விஷயங்கள் முகவுரையில் எழுதப்பட்டிருக்கின்றன. இவர், மற்றையுரையாசிரியர்கள்போலன்றித் தாம் எடுத்துக்காட்டும் மேற்கோள்களை இன்னஇன்ன நூலின்கண் உள்ளனவென்று பெரும்பாலும் புலப்படுத்தியிருக்கிறார். சிலசிலவிடத்துப் பதப்பிரயோகங்களும் அலங்காரமும் மெய்ப்பாடுகளும் வேறுசில குறிப்பும் தொகுத்தெழுதப்பட்டிருக்கின்றன. செய்யுட்குரிய முதற்பொருள் கருப்பொருள் உரிப்பொருள் ஆகிய இவற்றுள் ஒவ்வொன்றின்வகை பலவற்றிற்கும் இந்நூலிலிருந்தே உதாரணங்கள் காட்டியிருக்கிறார். இந்நூல் செய்யப்படுதற்கு முன்பிருந்த இசைத்தமிழ் நாடகத்தமிழ் நூல்கள் பலவும் இவர் காலத்திற்கு முன்பே இறந்துபோனமையால், இவர் அவ்விசைநாடகப்பகுதிகட்கு (இசைநுணுக்கம் இந்திரகாளியம் பஞ்சமரபு பரதசேநாபதீயம் மதிவாணனார் நாடகத்தமிழ்நூல் என்னும் ஐந்து நூல்களையுமே மேற்கோளாகக்கொண்டனர். இந்திரவிழவூரெடுத்தகாதையில் [அடி. சச] "சித்திரைச் சித்திரைத் திங்கள் சேர்ந்தென" என்றும், கட்டுரைகாதையில் [அடி. ககந-கச] "ஆடித் திங்கட் பேரிருட் பக்கத், தழல்சேர் குட்டத் தட்டமி ஞான்று வெள்ளி வாரத்து" என்றும் சொல்லப்பட்டுள்ள காலவரையறையைக்கொண்டும், அவ்விடத்துள்ள ஒவ்வொரு குறிப்பைக்கொண்டும் ஜோதிடக் கோவலன் கண்ணகி இருவரும் இன்னகாலத்துக் காவிரிப்பூம்பட்டினத்திருந்து புறப்பட்டாரென்றும் இன்ன இன்னகாலத்து இன்னது இன்னது செய்தாரென்றும் எழுதிக்கொண்டுபோகிறார். *[உ0ரு-கச, உகo-கஉ, கோவி-உo, ...-உச, கூ..-உகூ, கூ..-கக, கூசகூ-கூ.] இவருடைய உரைநடை சிற்சிலவிடத்து எதுகைமோனைகளமைந்து ஒலியழகுற்றேருடன் கூடி இனியசுவையையுடைய செய்யுணடையாகவமைந்துள்ளது. ஒவ்வொருபகுதிகளைத் தனித்தனியே படிப்போர்க்கு அவ்வப்பகுதிகள் அங்கங்குள்ளவைகளாலேயே புலப்படவேண்டுமென்பது இவர் கருத்தாதலால் முன்னெழுதியவற்றையே பின்னுமெழுதுவர். அதனை இவ்வுரையிற் பலவிடத்துங் காணலாம். இவர்கருத்து இன்னதாதலை இப்புத்தகத்தின் கூசஉ-ம் பக்கம் ௬-வது வரிமுதலியவற்றிற் காண்க. மூலத்தில் எவ்விடத்தேனும் இசைச்சொற்கள் வந்திருப்பின் அவற்றைத் தனித்தனியே

---

* இங்கேகாட்டிய இவ்விரண்டெண்களுள், முன்னது இப்புத்தகத்தின் பக்கத்தையும், பின்னது அப்பக்கத்துள்ள வரியையும் புலப்படுத்துவன. இப்படிப் பின்வருவனவற்றையும் இவ்வாறே கொள்க.

எடுத்துக்காட்டி இன்னசொல் இன்னநாட்டுவழக்கென்றும், அக்காலத்துவழங்கிய பழமொழிகளின்கருத்து எவ்விடத்தேனும் வந்திருக்குமாயின் அவற்றைத் தனித் தனியே எடுத்துக்காட்டி இன்னது இன்னபழமொழியென்றும் புலப்படுத்தினார். ஒருதலையாகப்பொருள்கொள்ளாது பலரும் தத்தமக்குத் தோற்றியவாறே பொருள் கொள்ளக்கிடந்த போற்றியென்பதை இவர் இகரவீற்றுவியங்கோளாகக்கொண்டு போற்றுவாயாகவென்று பொருள்செய்திருக்கிறார்: [௩௧௧-௧௬] [நச்சினார்க்கினிய ரும் கட்டியென்பதை இகரவீற்றுவியங்கோளாகக் கொண்டார்; சிந்தாமணி, கோவிந்தையாரிலம்பகம், ௩அ] இவர், 'கானல்வரியில் விரியக்கூறுதும்' [௭௧-௫; ௮௨-௫] என்றும், 'புணர் துணரியோன்பகுதியிற்கூறுதும்' [௨௰௧-௧௮.] என்றும் எழுதியிருத்தலால், இவர் கானல்வரிக்கு உரைசெய்திருந்தாரென்பதும், 'அழற்படுகாதைக்கண்ணே விரித்துக்கூறுதும்' [௬௭-௨௧.] என்றும், 'கட்டுரை காதையுள் விரியக்கூறுவாம்' [illegible] என்றும் எழுதியிருத்தலால், கட்டுரை காதைமுதலியவற்றிற்கும் இவர் உரைசெய்யவெண்ணியிருந்தாரென்பதும் வெளி யாகின்றன.

இவராற்சுட்டப்பட்ட உரையாசிரியர் மூவர்:

(௧) இறையனாரகப்பொருளுரையாசிரியராகிய நக்கீரர் [௧௩௨ - ௬.]

(௨) தொல்காப்பியவுரையாசிரியராகிய இளம்பூரணர் [௧௬௮ - ௭.]

(௩) சிலப்பதிகார அரும்பதவுரையாசிரியர் [௧௫௪ - ௧௫]

இக்கதைநிகழ்ந்தகாலத்திருந்த தமிழ்நாட்டரசர்கள்:

இளஞ்செழியன்
கயவாகு
கொங்கிளங்கோசர்
செங்குட்டுவன்
நெடுஞ்செழியன்
*பெருநற்கிள்ளி.

இந்நூலாலும் இவ்வுரையாலுந் தெரிந்த
(௪)—அரசர்கள்.

அநாகுலன்
அவந்திநாட்டரசன்
அழும்பில்வேள்
உத்தரகௌத்தன்
உத்தரன்
உருத்திரன்
கங்கர்
கட்டியர்
கடுங்கோன்
கரிகால்வளவன்
கருநாடர்
கலிங்கர்
கன்னர்
கனகன்
காய்சினவழுதி
கொங்கணர்
சிங்கன்
சித்திரன்
சிவேதன்
சேரலாதன்
தனுத்தரன்
தொண்டியோர்

* பெருங்கிள்ளி என்பவனும் இவனே.

சாரவன்
மகதநாட்டரசன்
மாகீர்த்தியாகிய நிலந்தருதிரு
விற்பாண்டியன்
மாந்தரஞ்சேரலிரும்பொறை
மாளுவவேந்தர்
முசுகுந்தன்
வச்சிரநாட்டரசன்
வசு
விசயன்
விசித்திரன்.

(உ)—நாடுகள்.

அவந்தி
கலிங்கம்
குண்டூர்க்கூற்றம்
குணகாரைநாடு
குமரிநாடு
குறும்பனைநாடு
குன்றநாடு
கொங்கு
கொல்லம்
சோணாடு
தெங்கநாடு
தென்பாலி
நாகநாடு
பாண்டியநாடு
பின்பாலைநாடு
மகதநாடு
மத்திமதேசம்
மதுரைநாடு
முத்தூர்க்கூற்றம்
முன்பாலைநாடு
வச்சிரநாடு

(ங)—ஊர்.

அவந்தி
இடும்பில்
இரவிபுரம்
இலங்கை
உறந்தை
ஊணூர்
கச்சி
கபாடபுரம்
கபிலபுரம்
காப்பியக்குடி
குணவாயில்
கொடுங்கோளூர்
கொடும்பாளூர்
கொற்கை
சிங்கபுரம்
செந்தில்
சேடி
சோ
திருவரங்கம்
நெடுங்குளம்
நேரிவாயில்
பட்டினப்பாக்கம்
பறையூர்
புகார்
மதுரை
மருவூர்ப்பாக்கம்
மாங்காடு
வஞ்சி
வயலூர்
வாரணவாசி
வியலூர்.

(ச)—மலைகள்.

அழகர்மலை
இமயம்
ஏரகம்
குடமலை
குமரிக்கோடு
கொல்லி

சிறுமலை
செங்குன்று
திருச்செங்கோடு
நீலகிரி
நெடுவேள்குன்றம்
பெருமலை
பொதியில்
மேரு
வெண்குன்று
வெள்ளியம்பெருமலை
வேங்கடம்.

(ரு)—ஆறுகள்.

அயிரை
கங்கை
காவிரி
குமரி
சிலம்பாறு
சோணை
தொழுனை
பஃறுளி
பேராறு
பொருனை
வையை.

(சா)—பொய்கை.

இட்டசித்தி
சூரியகுண்டம்
சோமகுண்டம்
பவகாரணி
புண்ணியசரவணம்

(எ)—கோயில்கொண்ட தெய்வங்கள்.

அருகன்
அறுமுகன்
இந்திரன்
ஐயை
ஐராவதம்
கண்ணகி
கற்பகம்
காமன்
கைலாயம்
சந்திரன்
சாத்தன்
சாதவாகனன்
சிவபெருமான்
சூரியன்
திருமால்
பலதேவர்
டத்தன்
மங்கலாதேவி
வச்சிரம்
வேல்.

(அ)—புலவர்.

அகத்தியனார்
அறிவனார்
ஆதிவாயிலார்
இருந்தையூர்க் கருங்கோழி மோசி யார்
இறையனார்
கீரந்தையார்
சிகண்டியார்
சிறுபாண்டரங்கனார்
செயிற்றியனார்
துவரைக்கோமான்
தொல்காப்பியனார்
நாரதனார்
நிதியின்கிழவன்
பாரதசேனாபதியார்
பாண்டியன் மதிவாணனார்
மதுரைக்கூலவாணிகன் சாத்தனார்
மதுரையாசிரியன்மாறனார்
முரஞ்சியூர்முடிநாகராயர்
யாமளேந்திரர்
வெள்ளூர்க் காப்பியனார்.

அடியார்க்குநல்லாருரையிற்கண்ட

நூல்களின் விவரணம்.

அகத்தியம்:—இஃது இயல் இசை நாடகமென்னும் முத்தமிழிலக்கணத்தையும் தெரிவிப்பதாகிய ஒருபெரிய இலக்கணநூல்; தென்மதுரைக்கணிருந்த தலைச்சங்கப்புலவர்களுள் முதல்வராகிய அகத்தியமுனிவரா லருளிச்செய்யப்பட்டது. இது நச்சினார்க்கினியர் காலத்திலேயே இறந்துபோயிற்றென்று தெரிகிறது. ஆயினும் இதிலுள்ள சிலசூத்திரங்கள்மட்டும் பழையவுரைகளில் ஆங்காங்குக் காணப்படுகின்றன. [தென்மதுரை - முன்னம் கடல்கொள்ளப்பட்டது.]

அகநானூறு:—இஃது எட்டுத்தொகையுள் ஏழாவதுதொகை; வாழ்த்துள்பட ௪௦௧ - செய்யுளையுடையது, உத்தரமதுரைக்கணிருந்த கடைச்சங்கப்புலவர்களுள் பாரதம்பாடிய பெருந்தேவனாரால் வாழ்த்துச்செய்யுளும் மாமூலனார் முதல் உலோச்சனாரிறுதியாகவுள்ள புலவர்பலரால் மற்றைநானூறுசெய்யுட்களும் இயற்றப்பட்டுள்ளது; அகப்பொருட்பகுதிகளையே பொருளாகவுடையது; பதின்மூன்றடிச் சிறுமையும் முப்பத்தேழடிப் பெருமையுமுள்ள ஆசிரியப்பாக்களாலமைந்தது, இத்தொகைக்கண் வாழ்த்து ஒழிந்த நானூறுசெய்யுட்களில் முன்புள்ள நூற்றிருபது செய்யுள் களிற்றியானைநிரையெனவும், அவற்றின்பின்புள்ள நூற்றெண்பது செய்யுள் மணிமிடைபவளமெனவும், மற்றையநூறும் நித்திலக்கோவையெனவும் கூறப்படும்; இத்தொகை தொகுத்தான் மதுரை உப்பூரிகுடிகிழார்மகனுவான் உருத்திரசன்மன், தொகுப்பித்தான் பாண்டியன் உக்கிரப்பெருவழுதி. இத்தொகை அகமெனவும், அகப்பாட்டெனவும் [௧௭ - ௬; ௧௨௮ - ௧௫.] கூறப்படும். [உத்தரமதுரை - இப்பொழுது தமிழ்நாட்டிலுள்ள மதுரை.]

அணியியல்:—[௯௨ - ௨௯, ௬௭ - [illegible].] அடியார்க்குநல்லாரால் அணியியலென்று எடுத்துக்காட்டப்பட்ட சூத்திரங்கள் தமிழ்த்தண்டியலங்காரத்துக் காணப்பட்டமையின், அந்நூலில் உள்ளனவாகவே இப்புத்தகத்தில் ஆங்காங்குக் குறிப்பிக்கப்பட்டன; ஆயினும் முற்காலத்து அணியியலென்னும்பெயருள்ள அலங்காரநூல் ஒன்று இருந்ததென யாப்பருங்கலவிருத்தியுரைமுதலியவற்றால் புலப்படுகின்றமையின், இந்நூற்பெயர் இங்கே வேறு எழுதப்பட்டது. இதன்வரலாறு வேறொன்றும் தெரியவில்லை.

இசைநுணுக்கம்:—இது சாரகுமாரன் அல்லது சயந்தகுமாரனென்பவன் இசையறிதற்பொருட்டு, அகத்தியமுனிவர் மாணாக்கர் *பன்னிருவருள் ஒருவராகிய சிகண்டியென்னும் அருந்தவமுனிவரால் வெண்பாவாலியற்றப்பட்ட இசைத்தமிழ் நூல்; இஃது இடைச்சங்கமிருந்தகாலத்துச் செய்யப்பட்டதென்று [௫ - ௭.] அடியார்க்குநல்லாருரையாலும், அச்சங்கப்புலவர்க்கு நூலாகவிருந்ததென்று இறையனாரகப்பொருளுரையாலும் தெரிகிறது.

---

* அகத்தியமுனிவர் மாணாக்கர் பன்னிருவராவார் இன்னாரென்று இக்காலத்து வழங்கும்வகையில் இச்சிகண்டியென்னும்பெயர் காணப்படவில்லை.

இந்திரகாளியம்:—இது யாமளேந்திரரென்னும் ஆசிரியராற்செய்யப்பட்ட இசைத்தமிழ்நூல்; அடியார்க்குநல்லார் உரையெழுதுவதற்கு மேற்கோளாகக் கொண்ட நூல்களு ளொன்று.

உதயணன்கதை :—[கூ - எ] இது பைசாசபாஷையிற் குணாட்டியரென்னும் மகாபண்டிதரொருவரால் முற்காலத்துச் செய்யப்பட்டுள்ள பிருகத்கதையின் மொழிபெயர்ப்பாகவுள்ளது. நூலாசிரியர்பெயர் புலப்படவில்லை. சொற்சுவை பொருட்சுவைகளில் மிகச்சிறந்தது; உதயணனென்ற இராசகுமாரனொருவனுடைய சரித்திரத்தை நிரம்பச் செவ்வையாக விரித்துக்கூறுவது; சிந்தாமணிமுதலிய காப்பியங்களினும் இதனை மிகமேலாகமதித்து அடியார்க்குநல்லார் எடுத்துக் காட்டியிருக்கிறார்; அதனை இப்புத்தகத்தின் இரண்டாவது மூன்றாவது பக்கங்களிலுணர்க. ஒவ்வொரு சிற்றுறுப்பும் மிகப்பெரிய ஆசிரியப்பா ஒவ்வொன்றால் இயற்றப்பட்டுள்ளது. அச்சிற்றுறுப்புக்கள் பலவமைந்த காண்டமென்னும் பேருறுப்புக்களையுடையது, அவற்றுள், க - வது உஞ்சைக்காண்டம் ருஅ - பகுப்பினையும், உ - வது இலாவாணகாண்டம் உ0 - பகுப்பினையும், ௩ - வது மகதகாண்டம் உஎ - பகுப்பினையும், ௪ - வது வத்தவகாண்டம் கஎ - பகுப்பினையும், ரு - வது நரவாணகாண்டம் ௯ - பகுப்பினையும் உடையன இப்பொழுதுகிடைத்த கையெழுத்துப் பிரதியில் முதலும் கடையும் பழுதுபட்டுப்போய்விட்டமையால் முதலாவது உஞ்சைக்காண்டத்தில் ௩உ - சிற்றுறுப்புக்கள் காணப்படவில்லை; ஐந்தாவது நரவாணகாண்டத்தினமேலுள்ள காண்டங்கள் இவையென்பதும் அவற்றின் சிற்றுறுப்புக்கள் இத்தனையென்பதும் தெரியவில்லை. இது கதையெனவும் பெருங்கதையெனவும் வழங்கும். [ரு - ௪, கஎ - கரு, ககஉ - உஎ] இவ்வடியார்க்குநல்லாருரைப் பரிசோதனையாலேயே இந்நூல் இக்காலத்து வெளிப்பட்டதென்று சொல்லலாம். உதயணகுமாரன்கதையென்று விருத்தத்தாலமைந்த தமிழ்நூலொன்று சைனர்களுடைய அச்சிலுள்ளது; அதனை உரையாசிரியர்கள் அங்கீகரித்திருப்பதாகத் தெரியவில்லை.

ஓவியநூல் :—இந்நூலின்வரலாறு யாதொன்றுந்தெரியவில்லை [உ00-உ௫.]

கலிங்கத்துப்பரணி :—இந்நூற்பெயர் அடியார்க்குநல்லாரால் எழுதப்படவில்லை; ஆயினும் இந்திரவிழவூரெடுத்தகாதையுரையில், [க௬௫ - உஉ, உஅ; க௬எ - ௪, ௫; க௬அ - உ௬.] அவர் எடுத்துக்காட்டிய செய்யுட்கள் இதிற்காணப்பட்டமையால், இந்நூற்பெயர் இங்கே எழுதப்பட்டது. இப்பரணி, "பரணிக்கோர்சயங்கொண்டான்" என்று புகழ்பெற்ற சயங்கொண்டான் என்னும் புலவராற்செய்யப்பட்டது. இதனாற் சிலசோழர்களுடைய வரலாறு புலப்படும்.

கலி :—இது கபாடபுரத்திருந்த இடைச்சங்கப்புலவர்களியற்றிய நூல்களுளொன்று; [௬ - ௫] இது பெருங்கலித்தொகையென்றுங் கூறப்படும்.

கலித்தொகை :—இஃது எட்டுத்தொகையுள் ஆறாவது; நூற்றைம்பது கலிப்பாக்களையுடையது, கடைச்சங்கப்புலவராலியற்றப்பட்டது; பாலை குறிஞ்சி மருதம் முல்லை நெய்தலென்னும் ஐந்திணைக்குமுரிய முதற்பொருள் கருப்பொருள் உரிப்பொருளென்னும் மூவகைப்பொருள்களையும் இனிதுவிளக்கி அகப்பொருட் பகுதிகளை விரித்துக்கூறுவது, சொல்லினிமை பொருளினிமையில் மிகச்சிறந்தது; இதிலுள்ள செய்யுட்கள் பலபுலவராற்செய்யப்பட்டனவென்று பழையவுரைகளைக்

கொண்டு ஊகித்தறியப்படுமாயினும் கிடைத்தபிரதிகளில் அவ்வச்செய்யுளின்பின்னர் இயற்றிய ஆசிரியர்களின் பெயர்கள் மற்றைத்தொகைகளிற்போல எழுதப்படாமையின் இயற்றியவர் இன்னாரின்னாரென்று தெரிந்துகொள்ளக்கூடவில்லை. இதற்கு நச்சினார்க்கினியர் உரைசெய்திருக்கின்றனர். இது நூறுங்கலித்தொகையென்றும், கலியென்றும் கூறப்படும்.

களரியாவிரை :—இது தலைச்சங்கப்புலவர்களியற்றிய நூல்களுள் ஒன்று. [கக௲ - உஅ] இதன்வரலாறு வேறொன்றும் தெரியவில்லை.

கணுநூல் :—இது கணுவின்பயனைப் புலப்படுத்துவதற்குக் கட்டளைக்கலித்துறையால் இயற்றப்பட்ட ஒருநூலென்றுமட்டும் தெரிகின்றது; நூலாசிரியர்பெயர் தெரியவில்லை. [௬௫௫ - ௪.]

குணநூல் :—இது நாடகத்தமிழ்நூல்களுளொன்று. இதிலுள்ள சில சூத்திரங்கண்மட்டுமே நடைபெறுகின்றனவென்றும் நூல இறந்துபோயிற்றென்றும் அடியார்க்குநல்லாரெழுதியிருக்கின்றனர். [௪ - உ௬ ; ௬௪ - கக.]

குருகு :—இஃது இடைச்சங்கப்புலவர்களியற்றிய நூல்களுளொன்று; முதுநாரையென்னுநூல் தலைச்சங்கத்தாரியற்றிய நூல்களுளொன்றாதலின், இஃது அஃதன்று. [௫ - ௬.]

குறுந்தொகை:—இஃது எட்டுத்தொகையுள் இரண்டாவதுதொகை, கடவுள் வாழ்த்துள்பட நானூற்றிரண்டுபாட்டுக்களையுடையது; இப்பாட்டுக்களுட் கடவுள் வாழ்த்து பாரதம்பாடியபெருந்தேவனாராலும், மற்றைச்செய்யுட்கள் திப்புத்தோளார்முதல் அம்மூவனாரிறுதியாகவுள்ளபுலவர் இருநூற்றைவராலும் இயற்றப்பட்டுள்ளன; இந்நூல் அகப்பொருட்பகுதிகளையே பொருளாகவுடையது; நாலடிச்சிற்றெல்லையாகவும் எட்டடிப்பேரெல்லையாகவுமுள்ள ஆசிரியப்பாக்களால் தொகுக்கப்பட்டது; இத்தொகைமுடித்தான் பூரிக்கோ. இத்தொகையின் செய்யுட்களுள், இருபதுசெய்யுட்களொழிந்த மற்றைச்செய்யுட்களுக்குப் பேராசிரியர் பொருளெழுதினரென்றும், அவரெழுதாதொழிந்த இருபது செய்யுட்களுக்கும் நச்சினார்க்கினியர் பொருளெழுதினாரென்றும் பின்னுள்ள பாடல்கள் உணர்த்துகின்றன: "பாரத்தொல் காப்பியமும் பத்துப்பாட் டுங்கலியு, மாரக் குறுந்தொகையு ளைஞ்ஞான்குஞ் - சாரத், திருத்தகு மாமுனிசெய் சிந்தா மணியும், விருத்திநச்சி னார்க்கினிய மே." "நல்லறி வுடைய தொல்பே ராசான், கல்வியுங் காட்சியுங் காசினி யறியப், பொருடெரி குறுந்தொகை யிருபது பாட்டிற், கிதுபொரு ளென்றவ னெழுதா தொழிய, விதுபொரு ளென்றதற் கேற்ப வுரைத்தும்." [நச்-ர் உரை-ம்.]

கூத்தநூல் :—[௬0 - அ.] இது நாடகத்தமிழ்நூல். இதன்வரலாறு வேறொன்றுந் தெரியவில்லை.

சயந்தம் :—இது நாடகத்தமிழ்நூல்களுளொன்று; இதிலுள்ள சூத்திரங்களிற் சில நடைபெறுகின்றனவன்றி நூலின்முதனடுவிறுதிகாணாமையின், இந்நூல் இறந்துபோயதுமென்று அடியார்க்குநல்லாரெழுதியிருக்கின்றனர். [௪-உ௬; ௬௪-கஉ.]

சிந்தாமணி :—இது திருத்தக்கதேவரென்னும் சைனமுனிவராலியற்றப்பட்டது; பதின்மூன்று இலம்பகவுறுப்பையும் மூவாயிரத்துநூற்றுநாற்பத்தைந்து கவிகளையுமுடையது; தமிழிலுள்ள சிறந்த காவியங்களைந்தனுள் ஒன்று; சொல்லழகும் பொருளழகும் நிறைந்துள்ளது. நச்சினார்க்கினியரால் உரைசெய்யப்பட்டது.

இதற்கு வேறொருபழையவுரையுண்டென்று நச்சினார்க்கினியருரையால் விளங்குகின்றது. இது சீவகன்கதையைக்கூறுவதாகலின் சீவகசிந்தாமணியென்றும், நூற்பயனாகிய நாற்பொருளையும் நன்குவிளங்கக்கூறுதலின் முடிபொருட்டொடர்நிலைச் செய்யுளென்றுங்கூறப்படும். [கூ - எ.]

சிறுபாணாற்றுப்படை:—இது பத்துப்பாட்டுள் மூன்றாவதுபாட்டு; எறுமா நாட்டு நல்லியக்கோடனைக் கடைச்சங்கப்புலவருள் ஒருவராகிய இடைக்கழிநாட்டு நல்லூர் நத்தத்தனார் பாடியது; இருநூற்றறுபத்தொன்பதடிகளையுடையது; நச்சினார்க்கினியரால் உரைசெய்யப்பட்டது; இது சிறுபாணாறெனவும் சிறுபாணெனவும் வழங்கும். [உ௦ - கக]

சூளாமணி:—இது தமிழிலுள்ள பழைய சைனகாவியத்துள் ஒன்று; தோலாமொழித்தேவரென்னுஞ் சைனமுனிவரா லியற்றப்பட்டது; இரண்டாயிரத்து நூற்றுமுப்பத்தொரு செய்யுளையுடையது; சொற்சுவை பொருட்சுவைகளிற்சிறந்தது; இக்காப்பியக்கதாநாயகன் திவிட்டனென்பவன். [உச - கச.]

செயிற்றியம்:—இது செயிற்றியனாரென்னும் ஆசிரியராற் சூத்திரரூபமாக இயற்றப்பட்ட நாடகத்தமிழ்நூல் இதன் சூத்திரங்களிற்சில நடைபெறுகின்றனவன்றி நூலின் மூதனவெிறுதிகாணாமையின் இறந்ததுபோலுமென்று அடியார்க்கு நல்லா ரெழுதியிருக்கின்றனர். [ச - உகூ]

தண்டியலங்காரம்:—இது தண்டியாசிரியரால் வடமொழியில் இயற்றிய காவியாதரிசமென்னும் அலங்காரநூலின் மொழிபெயர்ப்பான ஒருதமிழ்நூல்; இது பொதுவணியியல், பொருளணியியல், சொல்லணியியலென்று மூன்றியலையுடையது; இதிலுள்ள சூத்திரத்தொகை நூற்றிருபத்துமூன்று, நூலாசிரியர்பெயர் தண்டியென்பது. அவரிருந்த இடமும் அவர்காலமும் புலப்படவில்லை.

தாளவகையோத்து:—இது தாளவிலக்கணத்தைக் கூறுநூல்களுள் ஒன்று. [அகூ - கஉ.] இதன்வரலாறு வேறொன்றுந் தெரியவில்லை.

திருக்குறள்:—இது சங்கமருவிய பதினெண் கீழ்க்கணக்கினுளொன்று. தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனாரால்அருளிச்செய்யப்பட்டது; அறம் பொருள் இன்பமென்னும் மூன்றன்பகுதிகளை விரித்து விளங்கக்கூறுவது, இதனால் முப்பாலென்று பெயர்பெற்றது ஒவ்வொரு பொருளையும் வறபுறுத்திக்கூறும் பப்பத்துக் குறள்வெண்பாக்களைத் தனித்தனியேயுடைய கங்கூ - அதிகாரவுறுப்புக்களையுடையது. இதற்குப் பதின்மருரைசெய்தனரென்பர் அவ்வுரையுட் பரிமேலழகருரையே சிறந்தது. இதனை, "உரை யெல்லாம் பரிமே லழகன், றெரித்தவுரையாமோ தெளி" என்பதனாலுணர்க. இந்நூலின்பெருமையினைக் கடைச்சங்கப்புலவர்களியற்றிய திருவள்ளுவமாலை நன்கு புலப்படுத்தும். இதற்கு உரைசெய்த பதின்மரின்னாரென்பதைப் பின்வரும் வெண்பாவாலுணர்க. "தருமர் மணக்குடையர் தாமத்தர் நச்சர், பரிதி பரிமே லழகர் - திருமலையர், மல்லர் கவிப்பெருமாள் காளிங்கர் வள்ளுவநூற், கெல்லையுரை செய்தா ரிவர்."

திருச்சிற்றம்பலக்கோவையார்:—இது சைவசமயாசாரியராகிய ஸ்ரீமாணிக்கவாசகசுவாமிகளால் அருளிச்செய்யப்பட்டது; நானூறுகட்டளைக்கலித்துறைகளையுடையது; அகப்பொருட்பகுதிகளைப் பொருளாகவுடையது; வேறுபொருளுண்டென்றும் பெரியோர்கூறுவர். இதற்கு மிகச்செவ்விதான பழைய உரை ஒன்

றுண்டு. அது சிலகாலத்திற்குமுன் அச்சிடப்பட்டுள்ளது; அவ்வுரையாசிரியர் நச்சினார்க்கினியரென்பது பலருடையகொள்கை; யான் எண்ணியிருந்ததும் அதுவே. ஆயினும் தமிழ்ப்பிரயோகவிவேகநூலாசிரியராகிய சுப்பிரமணியபண்டிதர் தாமியற்றிய அப்பிரயோகவிவேகவுரையில் இந்நூலுக்குரைசெய்தோர் பேராசிரியரெனப் பலவிடத்தும் புலப்படுத்தியிருத்தலானும், தென்னாட்டில் ஆழ்வார்திருநகரி முதலியவற்றிலிருந்த பரம்பரைத் தமிழ்வித்துவான்கள் வீடுகளிலிருக்கும் ஏட்டுப்பிரதிகளில் திருச்சிற்றம்பலக்கோவையாருரையென்றுள்ளவைகளுட் பலவற்றின் தலைப்பிலும் பேராசிரியருரையென்றே எழுதப்பட்டிருத்தலானும், ஒன்றிப்பார்த்தவிடத்துச் சிறிதும் அவைகள் வேறுபாடின்றி அச்சிடப்பட்ட உரையாகவேயிருத்தலானும் இந்நூலுரையாசிரியர் நச்சினார்க்கினியரென்று உறுதியாகச் சொல்லக்கூடவில்லை. இது திருக்கோவையாரென்றும் வழங்கப்படும்.

திருமுருகாற்றுப்படை:—இது பத்துப்பாட்டின் முதலாவதுபாட்டு; குமரவேளைக் கடைச்சங்கப்புலவருளொருவராகிய மதுரைக்கணக்காயனார் மகனார் நக்கீரனார் பாடியது; முந்நூற்றுப்பதினேழடிகளையுடையது; முருகக்கடவுளுடைய படைவீடுகளாகிய திருப்பரங்குன்றமுதலிய திருப்பதிகளாறையும் நிரம்பப்பாராட்டிக்கூறுவது, நச்சினார்க்கினியரால் உரைசெய்யப்பட்டது.

திவாகரம்:—இது தமிழிலுள்ள நிகண்டுகளுள் ஒன்று; அம்பர்நகரத்திருந்த சேந்தனென்பவனுடைய வேண்டுகோளின்படி திவாகரமுனிவராற்செய்யப்பட்டது, தெய்வப்பெயர்த்தொகுதிமுதலிய பன்னிரண்டு தொகுதிகளையுடையது.

தொல்காப்பியம்:—இது அகத்தியமுனிவர் மாணாக்கர் பன்னிருவருள் ஒருவரும் இடைச்சங்கப்புலவருள் ஒருவருமாகிய தொல்காப்பியமுனிவராலருளிச்செய்யப்பட்ட இயற்றமிழிலக்கணநூல்; தனித்தனியே ஒன்பது ஒன்பது இயல்களையுடைய எழுத்ததிகாரம் சொல்லதிகாரம் பொருளதிகாரமென்னும் மூன்று அதிகாரங்களையுடையது. இதிலுள்ள சூத்திரங்களின் தொகை ஆயிரத்தறுநூற்றுப்பன்னிரண்டு. இடைச்சங்கத்தார்க்கும் கடைச்சங்கத்தார்க்கும் நூலாக இருந்து விளங்கியது; இதற்குக் கடைச்சங்கப்புலவருள் ஒருவராகிய கல்லாடரும் இளம்பூரணரும் சேனாவரையரும் பேராசிரியரும் நச்சினார்க்கினியரும் உரைசெய்திருக்கின்றனர். தொல்காப்பியரென்பதற்குத் தொல்காப்பியக் குடியையுடையாரென்று பொருள்கூறுவர்.

நாலடியார்:—இது பதினெண்கீழ்க்கணக்கினுள் முதலாவது; சைனமுனிவர்களால் இயற்றப்பட்டது, கடவுள்வாழ்த்துள்பட நானூற்றொருவெண்பாக்களையுடையது; பதுமனாரென்பவர் திருக்குறளிற்போல இதனைப்பொருளை அறம் பொருள் இன்பமென்னும் முப்பாற்பகுதி ஒவ்வொருபொருளை வரையறுத்துவனவாகிய பப்பத்துப்பாடல்களைத் தனித்தனியேதொகுத்து நாற்பது அதிகாரமாகப் பகுத்தனர். இதற்கு அப்பதுமனாரும் வேறுசிலரும் உரைசெய்திருக்கின்றனர்.

நான்மணிக்கடிகை:—இது பதினெண்கீழ்க்கணக்கினுள் இரண்டாவது, கடவுள்வாழ்த்துள்பட நூற்றொரு வெண்பாக்களையுடையது; [சில பிரதிகளில் ௧௦௭ - பாடல்களிருக்கின்றன.] விளம்பிநாகனாரென்னும் ஆசிரியரால் இயற்றப்பட்டது; இதிலுள்ளவெண்பாக்கள் ஒவ்வொன்றும் விதியாகவேனும் விலக்காகவேனும் இரண்டும் விரவியேனுமுள்ள நந்நான்கு பொருளைக்கூறும். இதற்குப் பழையவுரையொன்றுண்டு.

நூல் :—இது நாடகத்தமிழ்நூலுளொன்றன்பெயரென்றுமட்டுந் தெரிகிறது ; [௪ - ௫ ; ௧௦௧ - ௧௮.] இதன்வரலாறு வேறு யாதொன்றுந் தெரியவில்லை.

நெடுநல்வாடை :—இது பத்துப்பாட்டுள் ஏழாவதுபாட்டு ; நூற்றெண்பத்தெட்டடிகளையுடையது ; பாண்டியன் நெடுஞ்செழியனை மதுரைக்கணக்காயனார் மகனார் நக்கீரனார்பாடியது ; நச்சினார்க்கினியரால் உரைசெய்யப்பட்டது.

பஞ்சபாரதீயம் :—இது தேவவிருடி நாரதனார்செய்த இசைத்தமிழ்நூல் ; தம்முடைய காலத்திலேயே இந்நூலிறந்துபோயிற்றென்று அடியார்க்குநல்லாரெழுதியிருக்கின்றனர். [௪ - ௨௪.]

பஞ்சமரபு :—இஃது அறிவனாரென்னும் ஆசிரியராற்செய்யப்பட்ட இசைத்தமிழ்நூல், சிலப்பதிகாரவுரையெழுதுவதற்கு அடியார்க்குநல்லார் மேற்கோளாகக்கொண்ட நூல்களுளொன்று [௫ - ௧௫, ௧௯௫ - ௧௪]

பட்டினப்பாலை :—இது பத்துப்பாட்டுள் ஒன்பதாவதுபாட்டு ; ௩௦௧ - அடிகளையுடையது, சோழன்கரிகாற்பெருவளத்தானைக் கடியலூருருத்திரங்கண்ணனார் பாடியது ; நச்சினார்க்கினியரால் உரைசெய்யப்பட்டது.

பதிற்றுப்பத்து :—இது கடைச்சங்கப்புலவர்களியற்றிய எட்டுத்தொகையுள் நான்காவது தொகை ; சேரர்குலத்தாரையேபாடியது. இத்தொகையால் அக்காலத்திருந்த சேரர்பலருடைய வரலாறுகள் பலவும் அவர்களுடைய வள்ளன்மையும் நன்குபுலப்படும். இஃது ஒவ்வொருபுலவர் பப்பத்தாகச்செய்யப்பட்ட நூறு பாட்டுக்களையுடையது. இதனாலேயே இத்தொகை பத்துப்பகுதியாகப் பகுக்கப்பட்டுள்ளது, அவற்றுள் முதற்பத்தும் பத்தாவதுபத்தும் பலவிடத்துப்பிரதிகளினும் காணப்படாமையால் அவையிறந்தனபோலும். எஞ்சியவற்றுள்,—

இரண்டாம்பத்து, இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனைக் குமட்டூர்க்கண்ணனார் பாடி உம்பற்காட்டு ஐந்நூறூர்பிரமதாயம்பெற்று முப்பத்தெட்டியாண்டு தென்னாட்டுள் வருவதனிற்பாகம்பெற்றது.

மூன்றாம்பத்து, இமயவரம்பன்றம்பி பல்யானைச்செல்கெழுகுட்டுவனைப் பாலைக்கௌதமனார்பாடிச் சுவர்க்கம்பெற்றது

நான்காம்பத்து, காங்காய்க்கண்ணி நார்முடிச்சேரலைக் காப்பியாற்றுக்காப்பியனார் பாடி நாற்பதுநூறாயிரம்பொன் பரிசிலும் அவனாள்வதிற் பாகமும்பெற்றது

ஐந்தாம்பத்து, கோச்செங்குட்டுவனைப் பரணர்பாடி உம்பற்காட்டுவாரியையும் அவன்மகன் குட்டுவஞ்சேரலையும் பரிசில்பெற்றது. [இளங்கோவடிகள் தமையனும் பத்தினிக்கடவுளாகிய கண்ணகியாரைப் பிரதிட்டித்தவனும் இச்சேரனே.]

ஆறாம்பத்து, ஆடுகோட்பாட்டுச்சேரலாதனைக் காக்கைபாடினியார் நச்செள்ளையார்பாடி ஒன்பதுகாப்பொன்னும் நூறாயிரங்காணமும்பெற்று அவன்பக்கத்திருத்தலைக்கொண்டது. [நச்செள்ளையாரென்றும் பிரதிபேதமுண்டு.]

ஏழாம்பத்து, செல்வக்கடுங்கோவாழியாதனைக் கபிலர்பாடி நூறாயிரங்காணமும் அவன் ஒருபெரியமலைமீதேறிக்கண்டுகொடுத்த நாடும் பரிசில்பெற்றது.

எட்டாம்பத்து, தகடூரெறிந்த பெருஞ்சேரலிரும்பொறையை அரிசில்கிழார் பாடி ஒன்பதுநூறாயிரங்காணம் பரிசில்பெற்றது. [தகடூர்யாத்திரையென்னுநூல இவ்வரசன்மீது செய்யப்பட்டிருத்தல்வேண்டும்.]

ஒன்பதாம்பத்து, குடக்கோ இளஞ்சேரலிரும்பொறையைப் பெருங்குன்றூர்கிழார்பாடி முப்பத்தீராயிரங்காணமுதலியனபெற்றது.

இத்தொகையைத் தொகுத்தோரும் தொகுப்பித்தோரும் இன்னாரென்று தெரியவில்லை. விரிப்பிற்பெருகும், இதற்கு அரும்பதவுரையாக ஒருரையுள்ளது; அது மிகவும் பிழைபட்டுப் பிறழ்ந்து சிதைந்துபோயிருக்கின்றது. அவ்வுரையாசிரியர் பெயர் தெரியவில்லை.

பரதசேனாபதீயம்:—இஃது ஆதிவாயிலாரென்னும் ஆசிரியரால் வெண்பாவாற்செய்யப்பட்ட நாடகத்தமிழ்நூல்; சிலப்பதிகாரவுரையெழுதுவதற்கு அடியார்க்குநல்லார் மேற்கோளாகக்கொண்ட நூல்களுளொன்று. [ரு - கரு; கூரு - கச]

பரதம்:—இது நாடகத் தமிழ்நூலுளொன்று; இதனை இறந்துபோன நூல்களுள் ஒன்றாக அடியார்க்கு நல்லாரெழுதியிருக்கின்றனர். [ச - உரு]

பரிபாடல்:—ஒருவகைப்பாவின் பெயராகிய பரிபாடலென்பது அப்பாவாலாகிய நூலுக்காயிற்று. தலைச்சங்கப்புலவர்களால் எண்ணிறந்தபரிபாடல்களும் [கசுஎ - உஅ] கடைச்சங்கப்புலவர்களால் எழுபது பரிபாடலும் இயற்றப்பட்டன; இதனை இறையனாரகப்பொருளுரை முதலியவற்றானுணர்க. அவற்றுள் முந்தியவை இறந்துபோயின. இப்பொழுதுள்ள பரிபாடலென்னுநூல் கடைச்சங்கப்புலவரால் இயற்றப்பட்ட எழுபது பரிபாட்டையுடையது. அஃது எட்டுத்தொகையுள் ஐந்தாவதுதொகை, இயற்றிய ஆசிரியர்களின்பெயர் அவ்வப்பாக்களின் கீழ்க்குறிக்கப்பட்டுள்ளன; அவ்வெழுபதுள், அ - பாட்டுத் திருமாலுக்கும், ருக - குமரவேளுக்கும், க - காடுக்கும், உசு - வையையாற்றிற்கும், ச - மதுரைக்குமாகப் பகுக்கப்பட்டுள்ளன. இதனை அடியில்வரும் பழையவெண்பாவாலுணர்க.

> "திருமாற் கிருநான்கு செவ்வேட்கு முப்பத்
> தொருபாட்டுக் காடுகாட் கொன்று - மருவினிய
> வையையிரு பத்தாறு மாமதுரை நான்கென்ப
> செய்யபரி பாடற் றிறம்."

இதனைத்தொகுத்தோரும் தொகுப்பித்தோரும் இன்னாரென்று புலப்படவில்லை. இவ்வெழுபதுபாடலுள் இப்பொழுது கிடைத்தவை இருபதே; மற்றவை பிரதிகளிற் காணப்படவில்லை. இதற்குப் பழையவுரையொன்றுண்டு.

பழமொழி:—[உகக - உ0] இது சங்கமருவிய பதினெண் கீழ்க்கணக்குள் ஒன்று; அக்காலத்து வழங்கிய பழமொழிகளுள் ஒவ்வொன்று பொருந்தக்கணமைந்த நானூறு வெண்பாக்களையுடையது; நூலாசிரியர் சைனராகிய முன்றுறையரையனார்; இதனைப் பின்வரும் வெண்பாவாலுணர்க. "பிண்டியி னீழற் பெருமா னடிவணங்கிப், பண்டைப் பழமொழி நானூறுங் - கொண்டினிதா, முன்றுறை மன்னவ னான்கடியுஞ் செய்தமைத்தான், இன்றுறை வெண்பா விவை." இதற்குப் பழையவுரையொன்றுண்டு.

பாசண்டம்:—இது தொண்ணூற்றறுவகைச் சமயசாத்திரத் தருக்கக்கோவை; [உகரு - கக.] இஃது இன்னபாவானதென்று புலப்படவில்லை.

புறநானூறு:—இஃது எட்டுத்தொகையுள் எட்டாவது தொகை; கடவுள் வாழ்த்துள்பட நானூற்றோரகவற்பாக்களையுடையது; கடைச்சங்கப் புலவர்களுள் பாரதம்பாடிய பெருந்தேவனாரால் கடவுள்வாழ்த்துச் செய்யுளும் முரஞ்சியூர் முடி

நாகராயர்முதல் கோவூர்கிழாரிறுதியாகவுள்ள புலவர் பலரால் மற்றைநானூறு செய்யுட்களும் இயற்றப்பட்டுள்ளது; இதனைத் தொகுத்தோரும் தொகுப்பித்தோரும் இன்னாரினாரென்று விளங்கவில்லை; இது புறப்பாட்டெனவும் புறமெனவும் வழங்கும்; இதனால் அக்காலத்திருந்த தமிழ்நாட்டரசர் பலருடைய சரித்திரமும் புலவர்கள் பலருடையசரித்திரமும் வேறுபல வரலாறுகளும் நன்குவிளங்கும்; இந்நூற்கு மிகச்செவ்விதான உரையொன்றுண்டு; உரையாசிரியர்பெயர் தெரியவில்லை; அவ்வுரை, முதலிலுள்ள இருநூற்றறுபது பாடல்களுக்குமட்டும் கிடைத்திருக்கிறது. [கம - உ௪; ௬எ - கஎ.]

புறப்பொருள்வெண்பாமாலை:— இது செந்தமிழிலக்கணம் ஐந்தனுள் பொருளின் பகுதியாகிய புறப்பொருளிலக்கணமாக ஐயனாரிதனாரென்னு மாசிரியரால் இயற்றப்பட்டது; தொல்காப்பியத்திலுள்ள புறப்பொருளிலக்கணத்திற்கும் இதற்கும் சில வேறுபாடுண்டு; ஆயினும் முற்காலத்துள்ள உரையாசிரியர்கள்பலராலும் தழுவப்பட்டுப் பெருமைபெற்றது; சொற்சுவை பொருட்சுவைகளில் மிகச் சிறந்த பல உதாரணவெண்பாக்களையுடையது; இதற்குப் பழையதாகிய உரையொன்றுண்டு. [கரு௮ - ௪, ௭.]

பெருங்குருகு:—இது தலைச்சங்கப்புலவரியற்றிய இசைத்தமிழ் நூல்களுளொன்று; இந்நூல் தமது காலத்தேதானே இறந்துபோயிற்றென்று அடியார்க்குநல்லாரெழுதியிருக்கின்றனர் [௪ - உ௬] இது முதுகுருகென்றும் சொல்லப்படும். [கக௭ - ௨௰]

பெருங்குறிஞ்சி:—[ககரு - கடு] இப்பெயருள்ள நூலொன்றிருந்ததாகமட்டுந் தெரிகின்றதேயன்றி இதன்வரலாறு வேறு யாதொன்றுந் தெரியவில்லை.

பெருநாரை:—இது தலைச்சங்கப்புலவரியற்றிய இசைத்தமிழ் நூல்களுளொன்று; அடியார்க்குநல்லார்காலத்தேதானே இஃது இறந்துபோயிற்றென்று தெரிகிறது, [௪ - உ௬.] முதுநாரையென்றும் இதற்குப் பெயருண்டு. [கக௭ - உ௮.]

பெரும்பாணாற்றுப்படை:—இது பத்துப்பாட்டின் நாலாவது பாட்டு; கச்சிநகரத்திருந்த தொண்டைமானிளந்திரையனைக் கடியலூருருத்திரங்கண்ணனார் பாடியது; ஐந்நூறடிகளையுடையது; நச்சினார்க்கினியரால் உரைசெய்யப்பட்டது; இது பெரும்பாணாறெனவும் பெரும்பாணெனவும் வழங்கும்.

பொருநராற்றுப்படை:—இது பத்துப்பாட்டின் இரண்டாவதுபாட்டு; இராசசூயம்வேட்டபெருநற்கிள்ளியெனும் சோழன் கரிகாற்பெருவளத்தானை முடத்தாமக்கண்ணியார் பாடியது; இருநூற்றெழுபத்தெட்டடிகளையுடையது; நச்சினார்க்கினியரால் உரைசெய்யப்பட்டது; இது பொருநாறெனவும் வழங்கும்.

மணிமேகலை.—இது தமிழிலுள்ள பழைய காப்பியமைந்தனுளொன்று; சிலப்பதிகாரக்கதாநாயகனான கோவலனுடைய காதற்பரத்தையாகிய மாதவிமகள் மணிமேகலையென்பவளுடைய துறவுமுதலிய சரித்திரங்களை விரித்துக்கூறுதலின், இப்பெயர்பெற்றது; முதலிற் கலைதெய்வபாட்டையுடைத்தாய் விழாவறைகாதை முதற் பவத்திறமறுகெனப் பாவைநோற்றகாதையிறுதியாகவுள்ள முப்பதுகாதையையுடையது; ஒவ்வொருகாதையும் ஒவ்வொருபெரிய ஆசிரியப்பாவாற் செய்யப்பட்டுள்ளது; சொற்சுவை பொருட்சுவைகளிற் சிறந்து எளிதாகப்பொருளையுணர்த்தும் இனிய நடையையுடையது. மணிமேகலை பௌத்தசமயக்கொள்கையைத்

தழுவியொழுகியவளாதலின் அக்கொள்கையையே இந்நூல் சிறப்பித்துக்கூறும். சிலப்பதிகார நூலாசிரியராகிய இளங்கோவடிகள்கேட்ப மதுரைக்கூலவாணிகன் சாத்தனார் இந்நூலையியற்றினர். இதனை, "இளங்கோ வேந்த னருளிக் கேட்ப, வளங்கெழு கூல வாணிகன் சாத்தன், மாவண் டமிழ்த்திற மணிமே கலைதுற, வாறைம் பாட்டி னறிவித் தனன்" என்னும் இந்நூற் பதிகத்தாலுணர்க. இந்நூலி னருமைபெருமையையுளங்கொண்டே "மாதவி பெற்ற மணிமே கலைநம்மை வாழ் விப்பதே" என மகாகவியாகிய கம்பர்புதல்வர் அம்பிகாபதியும், "கொந்தார் குழன் மணி மேகலை நாணுட்பங் கொள்வ தெங்ஙன்" எனத் துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகளும் தாங்களியற்றிய கோவைகளிற் சிலேடையிலமைத்து விளக்கினர்.

மதிவாணர்நாடகத்தமிழ்நூல் :— இது சூத்திரப்பாவாலும், [௩௭ - ௩௮.] வெண்பாவாலும் [௯௯ - ௧௬.] மதிவாணரென்னும் பாண்டியரொருவராற் செய் யப்பட்ட நாடகத்தமிழ்நூல், அடியார்க்குநல்லார் உரையெழுதுவதற்கு மேற்கோ ளாகக்கொண்ட நூல்களுளொன்று [௫ - ௧௪.]

மதுரைக்காஞ்சி :—இது பத்துப்பாட்டினுள் ஆறாவதுபாட்டு. எழுநூற்றெண்பத் திரண்டடிகளையுடையது; தலையாலங்கானத்துச் செருவென்றபாண்டியன் நெடுஞ் செழியனை மாங்குடிமருதனார் பாடியது, நச்சினார்க்கினியரால் உரைசெய்யப்பட் டது. [௪௦௧ - ௨௨.]

மலைபடுகடாம் :—இது பத்துப்பாட்டினுள் பத்தாவதுபாட்டு; ௫௮௩ - அடி களையுடையது; இரணியமுட்டத்துப் பெருங்குன்றூர்ப் பெருங்கௌசிகனார் பல் குன்றக்கோட்டத்துச் செங்கண்மாத்துவேள் நன்னன்சேய்நன்னனைப் பாடியது, நச்சினார்க்கினியராலுரைசெய்யப்பட்டது, கூத்தராற்றுப்படையெனப்படுவதுமிது.

முத்தொள்ளாயிரம் :—இது கடைச்சங்கப்புலவராலியற்றப்பட்ட நூல்களு ளொன்று, இரண்டாயிரத்தெழுநூறு வெண்பாக்களையுடையது, தமிழ்நாட்டரசர் களாகிய சேரசோழபாண்டியர்கள் மூவர்மீதும் தனித்தனியே தொள்ளாயிரந் தொள்ளாயிரம வெண்பாக்களாக மூன்றுபகுதிப்படுத்தித் தொகுத்திருத்தலின் இப் பெயர்பெற்றதென்பர். இந்நூலிலுள்ள செய்யுட்களுட் சிலசில பழையவுரைகளில் ஆங்காங்குக்காணப்படுவனவன்றி நூல் முழுவதும் அகப்படவில்லை, சொற்சுவை பொருட்சுவைகளில் மிகச்சிறந்தது, பெரும்பாலும் அகப்பொருட்பகுதிகளையே தழுவிவருவதெனத் தோற்றுகின்றது; இச்சிலப்பதிகாரப்பதிப்பில் ௨௨௨ - ம் பக் கம் ௨௬ - ம் வரியில் "வாரிய ... ... கொள்ளாமலே" யென்பது இந்நூற் செய்யுளே. இதன்வரலாறு வேறு யாதொன்றும் தெரியவில்லை.

முறுவல் :—இது பழைய நாடகத் தமிழ்நூல்களுளொன்று, இந்நூல் அக் காலத்தே யிறந்துபோயிற்றென்று அடியார்க்குநல்லாரெழுதியிருக்கின்றார் ௯ ௨௬

வளையாபதி :—இது தமிழிலுள்ள பழைய காப்பியமைந்தனுளொன்று இதன்பாடல்களுட் சில முன்னோருரைகளில் ஆங்காங்கு எடுத்துக்காட்டப்பட் டிருமவ்வளவேயன்றி நூலின் முதனடுவிறுதிகாணப்படாமையின் இந்நூல் இன்ன சரித்திரத்தையுடையதென்றும் நூலாசிரியர் இன்னாரென்றும் புலப்படவில்லை.

வெண்டாளி :—இஃது இடைச்சங்கத்தாரியற்றிய நூல்களுளொன்று. [௯-௬]

தொகையகராதி.

[இத்தொகையகராதிமுதலியவை பெரும்பாலும் அடியார்க்குநல்லாருரையி லுள்ளவற்றிற்கே எழுதப்பட்டன. இத்தொகையுட் சிலவற்றிற்குவகை அவ்வவ் விடங்களில் எழுதப்படவில்லை]

	பக்கம்	வரி
கருங்கை இருவகை,	௧௨௯	௨௨
கள்வர்க்குரிய சாதனங்கள் எட்டு,	௬௧௨	௨௫
காங்கூலக்கை மூன்றுவகை,	௭௯	௧௫
காருகத்தொழில் இருவகை,	௧௨௭	௨௫
காலம் பன்னிரண்டு,	௧௨	௨௫
கிரியை எட்டு,	௮௯	௨
கீதவுரு மூன்று,	௧௦௬	௬௪
கீதவுறுப்புக்கள் நான்கு,	௧௦௬	௧
குற்றெழுத்தைந்து,	௮௫	௬௧
குறிக்கோள் எட்டு,	௭௬	௧௦
குறுமுனிவர்மாணாக்கர்பன்னிருவரென்பது,	௫	௯
கூலம் ஈரெண்வகை,	௬௪௮	௨௪
கூலம் எண்வகை, ௬௦-௭,	௧௨௮	[illegible]
கூலம் பதினெண்வகை,	௧௨௮	௧௦
கை ஆறுவகை,	௭௪	௨௨
கை இரண்டுவகை,	௭௪	௧௧
கோட்கள் நான்கு,	௨௪௦	௨௬
சத்துவம் பத்துவகை,	௯௭	௬௧
சந்தி ஐந்துவகை,	௯௯	௬௦
சாதிப்பெரும்பண் நான்கு,	௨௦௬	௧௫
சாதி பத்துவகை,	௯௭	௬௫
சாதியோசைகள் மூன்று,	௧௯௬	௯
சாந்திக்கூத்து நாலவகை,	௯௪	௪
சாரணர் எண்மர்,	௨௪௫-௨௮	
சீவ ஒன்பது,	௯௯-௬௯	
செங்கோட்டியாழுறுப்பு ஆறு,	௬௧௬	௧௦
செய்யுள் அறுவகை,	௧௨	௨௬
சேதம் இருவகை,	௭௧	௨௭
சொல் மூன்றுவகை, ௭௦-௨௮,	௭௪	௧௪
சொல்வகை நான்கு,	௭௦	௬௨
சொற்கள் நால்வகை, ௮௭-௧௮,	௮௯	௧௧
ஞானம் ஐந்து,	௨௪௯	௬௫
தசநாடி,	௮௪-௧௪,	௨௨
தசவாயு,	௮௪-௧௧,	௨௧
தண்ணுமைத் தொழிலின் கூறு இரண்டு,	௯௧	௯
தமிழ்நாட்டின் நான்கெல்லை,	௮௮	௧௧
தலைச்சங்கப்புலவர் நாலாயிரத்து நானூற்று நாற்பத்தொன்பதின்மர்,	௧௯௭	௨௭
தாளம் நாற்பத்தொன்று,	௭௬	௨௪
தாளவகை நான்கு,	௬௪௦	௧௧
தானம் மூவகை,	௬௧௬-௬௦,	௬௯,
திணை இரண்டு,	௪௨	௨௦

	பக்கம்	வரி
திரிதர வில்லா விருக்கை ஒன்பது,	௨௦௦	௨௯
திருமாலாடல் பத்து,	௧௯௫	௧௫
திறம் பன்னிரண்டு,	௬௧௯	௪
தூக்கு எழுவகை, ௭௪-௪,	௬௪௧	௧
தேசிக்காலு இருபத்துநான்கு,	௭௬-௨௯	
தேவர்களின் வகை,	௧௪௯	௧௯
நரம்பின்வகை நான்கு,	௨௦௨	௧௨
நாடகநூலின் கூறு இரண்டு,	௮௮	௧௫
நாடி எழுபத்தீராயிரம்,	௮௪	௬௯
நால்வகை வருணப் பூதங்கள்,	௬௭-௬௮	
நிருத்தக்கை முப்பது,	௯௫	௬௦
நிலத்தின்வகை மூன்று,	௧௯	௭
நிலம நால்வகை,	௧௨	௨௪
நின்றாடல் ஆறு, ௭௨-௪,	௧௫	௧
நீலமணிக்குணம் பதினொன்று,	௬௪௯	௨௪
நீலமணிக் குற்றம் எட்டு,	௬௪௯	௨௦
நீலமணிச் சாதி நான்கு,	௬௪௯	௨௬
நெட்டெழுத்தைந்து,	[illegible]	[illegible]
பகைநரம்பு நான்கு,	௨௦௧	௨௨
பசாசக்கைவகை மூன்று,	௭௭	௪
பஞ்சபரமேட்டிகள்,	௨௬௨	௨௨
பஞ்சமந்திரம், ௨௬௯-[illegible],	௨௪௦	௨
பஞ்சவாசகங்கள்,	௧௨௬	௯
பண்கள் நூற்றுமூன்று,	[illegible]	௨
பண் நான்கு, ௮௯-[illegible],	௬௨	௬௯
பண்ணின் இலக்கணம் பதினொன்று,	௯௨	௯
பண்ணீர்மை நூற்றுமூன்று,	௬௧	௨௦
பண் நூற்றுமூன்று, ௨௦௨-௬௧,	௬௧௬	௬௪
பத்துத் துவர்,	௧[illegible]	௧௬
பதியிலாா வீதியிரண்டு,	௬௪௬	௯
பதினோராடல்,	௭௧-௬௮	
பதினோராடல் இருவகைப் பட்டமென்பது,	௧[illegible]	௧
பன்னிருபாலையினுரு தொண்ணூற்றொருநூறும பன்னிரண்டும்,	௯௪	௧
பாணிவிகற்பம் பதினொன்று,	௭௪	௨
பால் பதினான்கு,	௧௨	௨௧
பாலை நான்குவகை,	௪௦௫	௧௧
பாலைப் பண்ணின் திறம் ஐந்து,	௧௧௭	௨
புலன் ஐந்து,	௮௪	௧௧
பெண்கை எட்டு,	௭௪	௬௬

விஷயசூசிகை.

இதில் இரட்டைக்கையென்று குறிப்பியாதனவற்றை ஒற்றைக்கையெனக் கொள்க

அரும்பதவகராதி.

[இந்த அகராதியிற் சிறுபான்மையாக அரிய தொடர்மொழிகளும் விரவிவரும்.]

அகத்தியனார்-தமிழாசிரியர்; இவர் முதற் சங்கத்தும், [௧௯௭ - ௨௯.] இடைச் சங்கத்துமிருந்தவர் : [௩-௨.]

அகநிலை - ஊர் : ௧௬௪ - ௩௧.

அகநிலைமருதம் - உழைகுரலாயகோடிப் பாலை : ௨0௩ - ௧௨.

அகமார்க்கம் - மெய்க்கூத்து : ௬௪ - ௪0.

அகலுள் - எங்கும்; தெருவுமாம்.

அகவை - உட்பட்டபிராயம.

அசை - தாளவகையுளொன்று : அதன் மாத்திரை - ௧; அதறகுவடிவு - ௭; அதன்மெழுழில் தாக்கியெழுதல் : ௭௩ - ௧௭, ௨0; ௩௪0 - ௨௧, ௨௫.

அசைவு - மடிவு : ௧௩௮ - ௨௪.

அஞ்ஞை - தாய் : ௨௧௯ - ௧௧.

அடக்கம் - ஒருவகைத் தோற் கருவி : ௮௯ - ௧0.

அடுக்கம் - சோலை : ௨௬௬ - ௨௩.

அடுப்பு - நிரை.

அடைச்சி - செருகி.

அணிநிலா - நல்லநிலா : ௧0௮ - ௨௭.

அதள்புனையரணம் - தோற்கைத்தள மென்னுங்கருவி : ௩௬௩ - ௧௯

அதிர்வு - யாழ் நரம்பைச் சிதறவுந்தல் : ௨0௧ - ௨௪.

அதிரல் - மோசிமல்லிகை : ௩௧௯ - ௩௪.

அந்தரி-ஒருவகைத்தோற்கருவி : ௮௯-௯.

அநாகுலன் - இடைச்சங்கத்தார் காலத்திருந்த தெய்வபாண்டியன், திலோத்தமையோடு சேர்ந்து சாரகுமாரனென்ற ஓர் புதல்வனைப் பெற்றோன் : ௫ - ௭

அநிருத்தன் - காமன்மகன்

அம்பணம் - தரகரளக்குமரக்கால் : ௩௪௮ - ௨0.

அம்பணவர் - பாணர் : ௩௧௨ - ௩௨

அமலை - கூத்து.

அயமுகம் - ஓரிருக்கை : ௨00 - ௩0.

அரங்கொழிசெய்யள் - புறநாடகவுருக்களுள் இறுதியுரு : ௭௨ - ௨௩.

அரிமுகவம்பி - சிங்கமுகவோடம் : ௩௧௮ - ௧௪.

அரியகம் - காற்சரியென்னும்அபரணம்.

அரியாயோகம் - கருவிவிலக்காகப் புனைந்த அரைப்பட்டிகை : ௩௬௩ - ௧.௮.

அருகியன்மருதம் - குரல்குரலாய செம்பாலை : ௨0௩ - ௧௪.

அருங்கலச்செப்பு - மணிக்கலம் பெய்த பணிப்பெட்டகம்.

அரை - மேகலை, ஆகுபெயர் : ௩௩௫ - ௭.

அலிப்பேடு - அல்லியமென்னுங்கூத்து.

அவந்தி - உஞ்சைநகரம : ௧௩௩ - ௧௮.

அவினயக்கூத்து - சாந்திக்கூத்து நான்கினுளொன்று : ௯௪ - ௫.

அவினயம் - விலக்குறுபபினு ளொன்று : ௯௯ - ௧.

அழுவம் - பரப்பு : ௧௩௯ - ௨௧.

அளவு - தாளவகையுள் ஒன்று. அதன் மாத்திரை - ௩, அதன்வடிவு - ஃ, அதன்மெழுழில் தாக்கினவோசை நேரோ மூன்றுமாத்திரை பெறுமளவும் ஒருதல் : ௭௩-௧௮, ௨௧, ௩௪0-௨௨, ௨௯.

அளி - கொடை.

அளித்தல் - அளிசெய்தல்.

அளை - மோர்.

அறங்கூறவையம் - அறங்கூறும் தருமாசனத்தார் : ௧௬௨ - ௯

அறவோர்பள்ளி - அருகர்பள்ளி புத்தர் பள்ளி.

அறவேைம்படை - தருமம் போதிக்குமிடம்.

அறிவனார் - பஞ்சமரபு நூலாசிரியர் : ௫ - ௧௩; ௧௯௩ - ௧௪.

அறுபொருள் - ஐயமற்ற பொருள்.

அறுவை - தோணிலிடுமுறி.

அறை - குழி.

ஆகரி - ஒருபண் : ௨0௨ - ௩௩.

ஆசு - சிறுமை.

ஆடற்கூத்தியர் - அகக் கூத்தாடுவோர் : ௧௩௨ - ௨௫.

ஆடுதல் - உடம்படுதல் : ௨௨௧ - ௧௧.

ஆதிவாயிலார் - பாரதசேனாபதிய நூலாசிரியர் : ௫ -

ஆபோகம்-கீதவுறுப்புளொன்று: ௧௦௩-௧.
ஆம்பற்குழல் - வெண்கலத்தாற் குமுத வடிவாக அணைசபண்ணிச் செறித்த குழல்: ௪௦௯ - ௨௭.
ஆம்பி - பன்றிப்பத்தர்; அது நீரிறைக்குங் கருவியுளொன்று: ௨௪௧ - ௧.
ஆமந்திரிகை - இடக்கையென்னும் வாச்சியம்: ௧௦௨ - ௧௫.
ஆயப்பாலை - நால்வகைப் பாலையுளொன்று: ௪௦ ௧௧.
ஆயம் - சேவிக்குந் தோழிமார்; பசுத்திரள்.
ஆயினும் - ஒரெண்ணிடைச்சொல்.
ஆயுள்வேதர் - மருத்துவநூலோர்: ௧௩௧-௨.
ஆர்த்தும் - நிறைவிக்கும்; நுகர்விக்குமெனறுமாம்.
ஆர்ப்பு - மாதநிறையிரந்தசுருதி = ஓங்கவிசைத்தல்: ௨௦௧ - ...
ஆவஞ்சி - ஒருவகைத்தோற்கருவி; ஆவினுடைய வஞ்சித்தோலைப் போர்த்தலால் இப்பெயர்பெற்றது: ௮௬-௩௨.
ஆற்றுவரி - இசைப்பாவகையுள் ஒன்று: ௧௬௩ - ௪.
இடக்கை - உத்தமத்தோற்பெருங்கருவி: ௩௪௧ - ௧௦.
இடந்தலைப்படுத்தல் - கூட்டுதல்.
இடாகினி - சுடுகாட்டிற் பிணங்களைத் தின்னும் பேய்: ௨௧௫ - ௨...
இடுதேளிடுதல் - தேளிடப்படுவார் காணுமே தேளல்லாதம் தான்அறமறையககொண்டுவந்து மேலேயிட்டு அவரைக் கலங்கப்பண்ணுதல், பாய்ச்சுத்தேளுமாம்: ௨௧௯ - ௧௫.
இடைக்கருவி — சல்லி: ௮௭ - ௫.
இடைகழி - வாயில்.
இடைநிலை - இடையிற்படுந்தரவு: ௧௬௨-௩௩.
இடைப்பாட்டு - ஔகம்: ௩௪௨ - ௩.
இணை - இரண்டுசேரப்பு: ௨௦௨ - ௧௨.
இணையிணை - பலவாளவேலை: ௧௧௬ - ௬.
இணையாவினைக்கை - ஒற்றைக்கை.
இந்திரர் - தேவர்: ௧௯௩ - ௯.
இயக்கி - ஆரியாங்கனை: ௩௬௫ - ௩௨.
இயவு - செலவு.
இரத்தவிந்து - ஒருவகை மாணிக்கம்: ௩௪௬ - ௧.
இராசவாகனம் - கோவேறுகழுதை: ௧௭௨ - ௧௫.

இரிதல் - நீங்குதல்: ௧௧௪ - ௨௮.
இரீஇ - இருத்தி.
இருந்தையூர்க்கருங்கோழி மோசியார் - இடைச்சங்கப் புலவருளொருவர்: ௩ - ௨.
இருமை - பெருமை, கருமை.
இலம் - இல்லாமை.
இலவந்திகை - நீராவியைச்சூழ்ந்த வயந்தச் சோலை: ௨௩௩ - ௯.
இழைத்து - வரித்து=எழுதி: ௩௩௫-௮.
இளை - காவற்காடு, கட்டுவேலி.
இறுமுறை - முடியுமுறை, வருந்துந்தன்மை.
இறையனார் - தலைச்சங்கப்புலவருளொருவர்: ௧௯௭ - ௨௬.
இறைவன் - எப்பொருளிலுந் தங்குகின்றவன்: ௨௪௭ - ௨௬.
இனையள் - இனைதலையுடையாள்.
ஈக்க - தருக.
ஈரொற்றுவாரம் - இரண்டுமாத்திரை பெற்றுவருஞ்செய்யுள்: ௧௦௧ - ௩௬.
உக்கிரம் - கீதவடிவுளொன்று: ௧௦௩-௧.
உகம் - தலைப்பாட்டு: ௩௪௨ - ௩.
உடுக்கை - ஒருவகைத் தோற் கருவி: ௮௬ - ௮.
உண்மையின் - உண்டாகலின்.
உத்தரகுரு - போகபூமி.
உதயகிரி - ஒருராகம்: ௨௦௨ - ௩௪.
உபாங்கம் - ஒருவகைத் தோற் கருவி: ௮௬ - ௧௧.
உய்யானம் - அரசர் விளையாடுங் காவற் சோலை: ௩௩௮ - ௧௭.
உயிர்மருந்து - மிருதசஞ்சீவினி.
உரவோன் - விளிவில்லாதோன்.
உரு - பாடல்.
உருகுதல் - குழைந்திடத்தல்
உருவக் கொடியோர் - கொடியுருவினோர்: ௩௩௭ - ௧௭.
உரை - புகழ்.
உரைத்தல் - பூசுதல்.
உழத்தல் - வெல்லுதல்.
உழி - அளவு.
உளை - வாணர்மகள்.
உன்று - உளாரென்னும் பறவை: ௨௪௧ - ௨௬.
உற்கட்டிதம் - ஒருக்கை: ௨௦௦ - ௩௦.
ஊக்கம் - வலி: [௧௫௯ - ௨௬.] மனவெழுச்சி, முயற்சி: [௧௩௮ - ௨௪.]
ஊசி - கிளிக்கழு.

ஊரல் - குளுவையென்னும்பறவை, நீர் மேலூர்தலின் ஆகுபெயர்: உசக-உ௬.
ஊழ் - முறை.
எட்டி - வாணிகர்பெறும் ஒரு பட்டம்.
எரிபொத்தி - அழலெழுட்டி.
எருத்தம் - புறக்கழுத்து.
எலிமயிர் - புடைவைசெய்வதற்குக் கருவியாயுள்ளது: ௬௪அ - ௭.
எழுதுவரிக்கோலம் - பத்திக்கீற்று.
எனறூழ் - வெயில்: ௬௬௭ - உ௬.
எனும் - சிறிதும்: ௬அ௫ - உ௫.
ஏகதாளம் - ஒரொத்துடைய தாளம்: ௧௦௬ - ௬; அளைமாத்திரையுடையது. ௭௬ - உ௬.
ஏகபாதம் - ஓரிருக்கை: உ௦௦ - ௬௧.
ஏகை - இரேகை.
ஏர்பு - எழுந்து: ௬௬௫ - ௬௫.
ஏர்மங்கலப் பாட்டு - ஏரைப் பாடுவது. உசஉ - ௬௬.
ஏவற்சிலதியர் - மடைப்பள்ளியாரடியார்: ௧௬உ - உ௭.
ஏனப்படம் - பன்றிமுகக்கடகு: ௬௪௬-உஉ
ஒசிதல் - ஒதுங்குதல்.
ஒட்டுப்புதவம் - இரட்டைக்கதவு.
ஒடுக்கம் - அந்தம்.
ஒத்து - அந்தரக்கொட்டு. ௧௦உ - ௬௦.
ஒதுக்கம் - நடை.
ஒபபடி - ஓரிருக்கை: உ௦௦ - ௬௦.
ஒய் - யானையைப் பாகர்வையும் ஆரியமொழி.
ஒய்தல் - போக்குதல்.
ஒற்றல் - நினைதல். ௬உ - ௬.
ஒற்று - செங்கோட்டியாழுறுப்பினுளொன்று: ௬௧௬ - ௧௭.
ஓ - தூம்பிற்கதவு.
ஓசனித்தல் - போதற்கொருப்பட்டு முயறல்.
ஓசுநர் - பரவர், எண்ணெய்வாணிகருமாம்: ௧உ௬ - ௧உ
ஓமை - ஓர் மரம்.
ஓர் - இடைச்சொல்.
ஓரொற்றுவாரம் - ஒருமாத்திரை பெற்று வருஞ் செய்யுள்: ௧௦௧ - ௬௬.
ஔகம் - இடைப்பாட்டு: ௬௪உ - ௬.
கச்சை - யானைக் கீழ்வயிற்றுக் கச்சை: ௧௪உ - ௬௬.
கஞ்சகாரர் - வெண்கலக்கன்னார்: ௧உ௬-௧௬.
கட்டுரை - பொருள்பொதிந்தவுரை.
கட்டுண்மாக்கள் - களவுகண்டுண்ணு முறைமையுடையமாக்கள்.
கடவுளர் - முனிவர்.
கடி - வரைவு, மிகுதி.
கடிகையார் - அரசனுக்குச் சென்றநாழிகைக்குக் கவிசொல்லுவார்: ௧௬உ - ௧௬.
கடிப்பகை - வெண்சிறுகடுகு.
கடுங்கோன் - தலைச்சங்கமிருந்திய பாண்டியர்களில் இறுதியான்: ௧௬௭ - ௬௦.
கடுத்தல - சந்தேகித்தல்.
கடுமை - சினம்: ௧௬௬ - ௧உ.
கடைஇ - செலுத்தி.
கடைக்கருவி - உடுக்கை: அ௭ - ௫.
கடைக்கூட்டல் - ஒருப்படுத்தல்.
கடைகழிமகளிர் - பொதுமகளிர்: ௬௬௬ - ௧௧.
கடையம் - கடைசிக்கூத்து: இது பதினோராடலுளொன்று; வாணாசுரனுடைய நகரின் வடக்குவாயிற்கண்ணுள்ள வயலிடத்தேநின்று இந்திராணியாடியது: ௧௬௭ - ௧௬.
கணனுள்வினைஞர் - சித்திரகாரிகன்: ௧உ௬ - உ௫.
கணனுளர் - சாந்திக்கூத்தர்; [௧௬உ - ௧அ.] மதங்கரென்றுமாம்.
கணனுளாளர் - மதங்கர்.
கணமெனுடையாட்டியர் - கள்ளைவிற்கும் வலைசியர்: ௧உ.அ - ௧.அ.
கணவிடுதூம்பு - ஒருவகைத்தோற்கருவி: அ௬ - ௧௦.
கணபபறை - ஒருவகைத் தோற்கருவி: அ௬ - அ.
கதிகை - தொடைவிசேடம்.
கதுப்புறவடைச்சி - கொணடைகளிலே வைத்துப் புனைக்கச்செருகி.
கப்பம் - கற்பம்; பிராகிருதம்: உ௭௭ - ௭.
கபாடபுரம் - இடைச்சங்கமிருந்தவூர்: உ - ௫.
கம்மியா - பணித்தட்டார.
கயம் - கருமை.
கயமலர் - பெரியமலா
கரடிகை - ஒருவகைத் தோற்கருவி: அ௬ - அ
கரணம் - விநோதக்கூத்து அறினுளொன்று: [௬௪ - உ௬.]; கைத்தொழில்: ௬௦ - உ௧.
கரிமுகவம்பி - யானைமுகவோடம்.

கருந்தொழில் - கொலைத்தொழில்.
கருமக்கழிபலம் - பாவத்தைக் கழிக்கும் புண்ணியம்.
கருமுகை - பித்திகை : ௨௰௬ - ௧.
கருமை - வலிமை : ௧௨௬ - ௨௰.
கருவிக்குயிலுவர் - தோற்கருவி வாசிப்பார்.
கருவிரலூகம் - கரியவிரலையுடைய குரங்குபோலிருந்து சேர்ந்தாரைக் கடிக்கும் பொறி
கரைதல் - வருந்துதல், அவகாசித்தலுமாம்.
கலங்கரைவிளக்கம் - கப்பலையழைக்கும் தீநாவென்னும் விளக்கு.
கலம் - யாழ் ௨௰௪ - ௧௭
கலிநடம் - விநோதக்கூத்து ஆறினுளொன்று
கலை - சரீரம்: ௨௬௬ - ௨
கவர்பரிப்புரவி - பகுத்து விரையும் செலவினையுடைய குதிரை: ௧ - ௧
கவலை - கவாகருநெறி.
கவுக்கை - அகத்திட்டகை.
கழி - உப்பளம். ௧௬ - ௧.
கழு - கழுக்கோல்
களமர் - உழவருடைய கீழ்க்குடிமக்கள்
களித்துயில் - இன்பநதுயில். ௧௪௪ - ௪.
களிற்றரசுவயங்கியகோட்டம் - ஐராவதந்திற்குங்கோயில் ௧௪௨ - ௨௭
கறை - கடமை. ௧௧௰ - ௭.
கன்றமராயம் - கன்றுகள்மேவிய பிடித்திரள்: ௬௯௭ - ௨.
கனறுதல் - அடிப்படுதல்.
கன்னகம் - கன்னககோல்.
கனிக்காய் - உதாயக்காய். ௬௨ - ௨.
காண்டல் - பணையுதல். ௧௪௰ - ௬
காதை - கதையையுடையது. ௨ - ௧௯
காந்தாரபஞ்சமம் - பாலைப்பண்ணின்றிறமைந்தனுளொன்று: ௧௧௭ - ௬
காந்தாரம் - ஓரபண்: ௨௰௨ - ௬௬. ஆசான் அகச்சாதி: ௬௧௬ - ௬௬; பாலைப்பண்ணின்றிறமைந்தனுளொன்று. ௧௯௭ - ௪.
காமரு - காமம்வருமென்பது விகாரத்தாற் காமருவெனநின்று கண்டார்க்கு விருப்பம்வருமென்பதாயிற்று: ௧௧௬ - ௯௨.
காய்சினவழுதி - தலைச்சங்கமிருத்திய பாண்டியர்களுள் முதல்வன்: ௧௯௭ - ௯௰.
காயம் - வெள்ளுள்ளி.
காரி - காரியெருது.
கால்கோள் - விழவின் தொடக்கம்: ௧௪௨ - ௨௮.
காலக்கணிதர் - சோதிட நூலோர்: ௧௯௧ - ௨.
காவதம் - காதம்=பகுதிப்பொருள்விகுதி: ௨௯௪ - ௬.
காவற்கணிகையர் - களத்தாடுங் கூத்திகள்: ௧௯௨ - ௨௬.
காவிரிப்பாவைதன்புதல்வர் - வேளாளர்: ௨௪௪ - ௧.
காழியர் - பிட்டுவாணிகர்; வண்ணாருமாம். ௧௨௮ - ௧௬.
காழூன்றுகடிகை - குத்துக்கோல்: ௬௪௬ - ௨௬
காற்சரி - காலணியுளொன்று.
கான்மோதிரம் - கால்விரலணி.
காணப்படம் - காணமாகியகடகு: ௬௪௬ - ௨௰.
கானம் - நந்தனவனம்; காடுமாம்: ௯௯௭ - ௧
கானல்வரி - இசைப்பா வகையுளொன்று ௧௯ - ௫.
கிங்கிணபடம் - தோற்கடகு ௬௪ - ௨௬
கிடை - கிடேச்சு. ௧௬௰ - ௬
கிணை - மருதப்பறை, தடாரிப்பறை
கிடரி - கொம்பிலணியும்பணி: ௧௪௬ - ௨௬.
கிழார் - புட்டைபபொறி = நீரிலிறக்கும் கருவியிலொன்று: ௨௪௧ - ௧.
கிளை - ஐந்துநரம்பு. ௨௰௨ - ௧௪.
கிற்றல் - செய்தல்.
கீரந்தையார் - இடைச்சங்கப்புலவருளொருவர்: ௬ - ௪.
குடக்கால் - குடத்தண்டு.
குடக்கூத்து - விநோதக்கூத்தாறினுளொன்று.
குடகவரை - காவிரிதோன்றுமலை ௨௪௰ - ௧௭.
குடசம் - வெட்பாலைவிசேடம்.
குடம் - பதினோராடலுளொன்று; அஃது அநிருத்தனை வாணன் சிறைவைத்தபொழுது அவ்வாணனுடைய சோநகர வீதியிற்சென்று கண்ணன் பஞ்சலோகங்களாலும் மண்ணாலுஞ்செய்த குடங்கொண்டாடிய கூத்து; அன்றியும் இது விநோதக்கூத்தாறினுளொன்று: [௧௯௯ - ௭.] தயிர்த்தாழி.

குடமுழா - ஒருவகைத் தோற்கருவி : அசு - அ.
குடிஞை - பேராந்தை.
குடை - பதினோராடலுளொன்று ; அஃது போர்செய்தற்காற்றாத அசுரர்கள் படைக்கலங்களைக் களத்திலெறிந்துவிட்டு வருத்தமுற்றபொழுது தன்குடையை ஒருமுகவெழினியாக முன்னே சாய்த்துநின்று முருகனாடியது : கசுசு - ரு.
குண்டூர்க்கூற்றம் - சேரநாட்டின் ஒரு பகுதி: உசுரு - ருச.
குந்தம் - சிறுசவளம்.
குமரவேள் - தலைச்சங்கப் புலவருளொருவர் : ககஎ - உசு.
குமரி - ஒருவகை மலைநாடு: ககஅ - உ.
குமரிக்கோடு - ஒருமலை: உசுரு - ரு0.
குயிலுவமாக்கள் - இடக்கைமுதலாய கருவியாளர் : க0க - கக.
குயிலுவர் - தோற்கருவி யிசைப்பார்: ககஉ - உஅ.
குயிற்றுதல் - அழுத்துதல்: கசரு உசு.
குரல் - பூங்கொத்து: ருருச - உரு.
குரவை - வரிக்கூத்தினொருறுப்பு: [கூச - உஉ], விநோதக்கூத்தாறினுளொன்று ; கைகோத்தாடுங்கூத்து : கருரு - கஎ.
குருவிந்தம் - ஒருவகை மாணிக்கம்.
குலதெய்வம் - குலத்தை யுண்டாக்கிய தெய்வம்.
குழலளகம் - குழற்சியையுடைய அளகம்.
குறங்குசெறி - தொடையாபரணம்.
குறிப்பு - விலக்குறுப்பினுளொன்று : அசு - க.
குறுங்கண் - சாளரம் ; ஆகுபெயர்: ருருரு - உஉ.
குறுமை - சிறுமை.
கூடம் - இசைநிறைவாதது ; தன்பகையாகிய ஆறாநரம்பினிசையிற் குன்றித் தன்னோசைமழுங்கல : [உ0க - உச,] ; பகை.
கூடை - ஒற்றைக்கை : [அ0 - உரு] ; ஒற்றித்தொத்தலும் இரட்டித்தொத்தலும் : க0ரு - கக.
கூடைப்பாடல் - சொற்செறிவும் இசைச்செறிவு முடையது ; இயக்கம் நான்கினுளொன்று : கூஉ - கரு.
கூவியர் - அப்பவாணிகர்: கஉஅ - கசு.
கூளி - பேய், பூதம்: கசக - அ.

கெடுத்து - காணாது: க0கூ - க0.
கெழீஇய - பொருந்தின.
கெழு - ஒருசாரியை.
கெழுதகைமை - உரிமை.
கேவணம் - மணியழுத்துங்குழி.
கை - செயல்.
கைக்கோல் - கொடிறு.
கையறுதல் - செயலறுதல்.
கைவிடலீயான் - நெகிழவிட்டிலன்.
கொங்கு - கொங்குநாடு : [ருக - சு] ; தாது.
கொட்டு - அமுக்குதல்: ருச0 - உரு.
கொடிவழித்தீர்த்தம் - வேங்கடமலையிலுள்ள ஒரு தீர்த்தம் : உருஎ - உஅ.
கொடுகொட்டி - பதினோராடலுளொன்று ; அது திரிபுரம் தீமடுத்தெரியக்கண்டு சிவபெருமான் ஜயானந்தத்தாற் கைகொட்டியாடியது : கருசு - உஅ.
கொடும்பாடு - கொடுமைப்பாடு.
கொண்மென - கொண்மினென.
கொல்லம் - ஓர் மலைநாடு : ககஅ - உ.
கொல்லல் - வெட்டல்: கஉகூ - கக.
கொழுமுறி - இளந்தளிர் : ககரு - ருஉ.
கொள்கை - செருக்கு : கசரு - சு.
கொளுச்சொல் - கருத்து.
கொளை - ஒற்றறுப்பு : சகக - க0.
கொன்றைக்குழல் - கொன்றைப் பழத்தைத்துருவித் துளைத்தூதுவது : ச0கூ - உஅ.
கோசிகன் - ஓரந்தணன் : ரு0அ - உசு.
கோட்டுமா - கிடா.
கோடு - கொடுமுடி.
கோடுகடைத்தொழில - ஆனைக்கோடு முதலியவற்றைக் கடையுந் தொழிற்குரிய கருவிகள் : ருசுசு - க.
கோதைமாதவி - மாலைபோலப் பூக்குங் குருக்கத்தி : ருருஎ - கரு.
கோவியன் வீதி - இராசப்பெருந்தெரு : செண்டுவெளியுமாம் : கரு0 - உரு.
கௌசிகம் - ஒருபண் : கசுரு - ருக.
கௌடி - ஒருபண் : உ0உ - ருரு.
சத்துவம் - விலக்குறுப்பினுளொன்று : சுசு - க.
சதக்கினி - நூற்றுவரைக் கொல்வதாகிய பொறி.
சதங்கை - காலணியுளொன்று.
சதுரப்பாலை - நால்வகைப்பாலையுளொன்று : ச0ரு - கக.
சந்தி - விலக்குறுப்பினுளொன்று: அசு - க.

சந்திரவளையம் - ஒருவகைத்தோற்கருவி: ,அரு - கூ.
சம்புடம் - ஒரிருக்கை : ௨௦௦ - ௬௦.
சமபாதவிருத்தம் - இசைப்பா வகையு ளொன்று : கரு௬ - க௦.
சயந்தம் - நாடகத்தமிழ்நூல் : ௪ - ௨௯.
சல்லிகை - உத்தமத்தோற்கருவி : ௬௪க- க௦.
சலதி - பொய்சொல்லுபவள்.
சலம் - பொய் . ௨௨க - சக.
சவலை - இசைப்பாவகையுளொன்று.
சாதி-விலக்குறுப்பினுளொன்று . ௯௯-க.
சாதுரங்கம் - ஒருவகை மாணிக்கம்.
சாரகுமாரன் - அநாகுலனுக்குத் திலோ த்தமையிடத்துப் பிறந்தோன் ; சயந்த குமாரனென்றும் இப்பெயர்வழங்குகி ன்றது. இவன் இசைப் பொருட் டுச் சிகண்டியென்னும் முனிவரால் இசைநுணுக்கமென்னும் இசைத் தமிழ்நூலியற்றப்பட்டது . ௩ - கக.
சாரியை - புறக் கூத்துக்குரிய ஆடலு ளொன்று . எ௬ - ௯.
சால் - அமைதி.
சாலினி - தேவராட்டி . இவள் வேட்டுவ மகள் ௨எ - ௨க.
சிகண்டி - ஒருமுனிவர் . இவர் குறுமுனி வர் மாணாக்கர் பன்னிருவருளொரு வர் , இசைநுணுக்கமென்னும் இசைத தமிழ்நூல் செய்தோர் . ௩-௪ . ஆசா னென்னும் பண்ணின் புறச்சாதி ௬க௬ - ௬.
சிகரம் - விற்பிடிக்கையின்பெயர் எ௯- ௨௯.
சிங்களம் - ஒருவகைக்கூத்து ௭௯ - ௪
சிந்து - இசைப்பாவகையு ளொன்று க௯௬ - க௦.
சில்லை - இழிவு.
சிலதியர் - ஏவன்மகளிர்.
சிலை - ஒருகோள் . ௨௪௦ - ௨௬
சிவிகை - சுடகத்தண்டு : ௬௬ - ௭.
சிறத்தல் - மிகுதல்.
சிறுதேவபாணி - இசைப்பாவகையுளொ ன்று : [க௯௬ - ௪], நாடகத்தமிழில் வருங்கால் வருணப்பூதரை துதிப் பது : க௯௬ - க௯.
சிறுபறை - ஒருவகைத்தோற்கருவி: ௮க௯ - க௦.
சிறுபாண்டரங்கனார் - இடைச்சங்கப்புல வருளொருவர் : ௬ - ௬.
சிறுமியர் - சிறுபெண்கள் ; குட்டநாட்டு வழக்கு.
சிறுமுதுக்குறைவி - சிறியபருவத்தே பெரிய அறிவினையுடையாள் : ௬௫௬ - ௫.
சின்மலர் - சிலமலர்.
சின்மொழி - இழிந்தமொழி ; சிலவான மொழியுமாம் : ௨௪௨ - ௨௯.
சிக்கை - ஒருநூல் : ௪க௦ - ௬௨.
சீப்பு - கதவுக்குவலியாக உள்வாயிற்படி யிலே நிலத்திலேவீழவிடுமரம்.
சீர் - தாளவறுதி.
சுடுகாட்டுக்கோட்டம் - சக்கரவாளக்கோ ட்டம் : ௨க௯ - ௪.
சுடுமண் - ஒடு : ௬௬௬ - ௨௪.
சுண்ணம் - சொலவகை நான்கினுளொ ன்று ; அது நாலடியால் வருவது : ௭௦ - ௬௬.
சுத்தகாந்தாரம் - ஆசானுடைய பெருகு சாதி : ௬க௬ - ௬௪.
சுந்தரம் - நிறம் . கக௪ - ௨.
சுரத்தல் - இடைவிடாது சொரிதல்.
சுரிதகம் - சொல்வகை நான்கினுளொ ன்று , அது எட்டடியால் வருவது . ௭௦ - ௬௬.
சுருங்கை - கரந்துபடை : ௬௬௨ - ௬க.
சுவத்திகம் - ஒரிருக்கை : ௨௦௦ - ௬௦.
சுவை - விலக்குறுப்பினுளொன்று : ௯௯- க.
சூதர் - நின்றேத்துவார் : க௬௨ - எ.
சூர்த்து - அச்சமுறுத்து . [க௬௯ - ௨க] ; சுழன்று : க௬௯ - ௨.
செந்துருத்தி - ஒருபண் : ௨௦௨ - ௬௬.
செந்துறை- இசைப்பாவகையுளொன்று: க௬௬-கக.
செம்பகை - தாழ்ந்த இசை ; இன்பமின் றியிசைத்தல் ௨௦க - ௨௨.
செயிற்றியம் - நாடகத்தமிழ்நூல்களுளொ ன்று . ௪ - ௨௯.
செறிதல் - ஒடுங்குதல்.
சேடல் - உச்சிச்செழுந்திலென்னுமரம்.
சேதம் - விலக்குறுப்பினுளொன்று : ௯௯- ௨.
சொக்கம் - சாந்திக்கூத்து நான்கினு ளொன்று ; த்தவிருத்தம் : ௬௪ - எ.
சொல் - விலக்குறுப்பினுளொன்று : ௯௯ - க.
சொலவகை - விலக்குறுப்பினுளொன்று: ௯௯ - க.

சோ - வாணாசுரன் நகர் : ௧௬௬ - ௯.
சோமராகம் - பாலைப்பண்ணின்றிறமைந்தனுளொன்று : ௬௧௭ - ௩.
சௌகந்தி - ஒருவகைமாணிக்கம்.
ஞாயில் - குருவித்தலை.
தக்கராகம் - பாலைப்பண்ணின்றிறம் ஐந்தனுளொன்று : ௧௬௭ - ௩.
தக்கை - ஒருவகைத்தோற்கருவி : ௮௬ - ௮.
தகுணிச்சம் - ஒருவகைத் தோற்கருவி : ௮௬ - ௧௦.
தகை - கொழுநர் ; ஆகுபெயர் : ௩௩௪ - ௧௪.
தசாக்கரி - ஆசான்பண்ணின் அருகுசாதி ; ௩௧௩ - ௩௪.
தடம் - பரப்பு.
தடவு - தடா = தூபமுட்டி : ௩௩௫ - ௨௦.
தடாரம் - இரண்டொத்துடைய தாளம் : ௧௬௩ - ௩௨.
தடாரி - ஒருவகைத்தோற்கருவி : ௮௬ - ௯.
தண்கான் - இழிந்தகாடு.
தண்ணுமை - உத்தமத் தோற்கருவி : [௩௪௧ - ௯] ; ஒருவகைத்தோற்கருவி : [௮௬ - ௯] ; குடமுழா : [௩௪௧ - ௧௧] மத்தளம் : ௧௦௨ - ௧௧.
தண்பதங்கொளுந்தலைநாள் - புதுப்புனல் விழவு கொண்டாடுந்தலைநாள் : ௧௭௫ - ௧௮.
தண்பதப்பெருவழி - புதுப்புனலாடப் போம் பெரியவீதி : ௨௩௩ - ௧௨.
தந்திரிகரம் - செங்கோட்டியாழுறுப்பினுளொன்று : ௩௧௩ - ௧௦.
தமருகம் - ஒருவகைத் தோற்கருவி : ௮௬ - ௬.
தலைக்கண் விருத்தி - பதுமாசனம். ௨௦௧ - ௩.
தலைக்கோல் - கணிகையர்பெறும் சிறந்த பட்டம் : ௩௪௧ - ௧௮.
தலைப்பாட்டு - உகம் : ௩௪௨ - ௩.
தலைபோகுமண்டிலம் - இசைப்பாவகையுளொன்று : ௧௬௩ - ௫.
தழூஉம் - தழுவிக்கும் : ௩௩௭ - ௧௬.
தளிப்புடம் - ஓரிருக்கை : ௨௦௦ - ௩௦.
தாக்கணங்கு - தீண்டிவருத்துந் தெய்வம்.
தாரம் - மந்தாரமென்னுந் தெய்வதரு ; முதலிற்றோன்றிய நரம்பு : ௨௦௨ - ௫.
தானநிலை - வலிவு மெலிவு சமமென்பன : ௯௪ - ௩௫.

திகிரி - ஆக்கினைச்சக்கரம்.
திமிலை - ஒருவகைத்தோற்கருவி : ௮௬ - ௪.
திரள் - மிகமுடுகிய நடையையுடைய பாடல் ; இயக்கம் நான்கினுளொன்று : ௯௨ - ௧௩.
திரிகோணப்பாலை - நால்வகைப்பாலையுளொன்று : ௪௦௫ - ௧௧.
திரிபதை - இசைப்பாவகையுளொன்று : ௧௬௩ - ௧௦.
திரு - கொங்கைமேலுள்ள வீற்றுத்தெய்வம் : ௫௩ - ௧௮.
திருமணிகுயிற்றுநா - முத்துக்கோப்பார் : ௧௩௧ - ௧௨.
திருவிளை - திருமகள் : ௩௭ - ௨௯.
திலோத்தமை - அகாகுலனென்னுந் தெய்வப்பாண்டியனோடுசேர்ந்து சாரகுமாரனென்பவனைப்பெற்ற தெய்வமகள் : ௫ - ௯.
திவவு - செங்கோட்டு யாழுறுப்பினுளொன்று : [௩௧௩ - ௧௦] ; நரம்புகளை வலிபெறக்கட்டும வார்க்கட்டு.
திளைத்தல் - ஒருதொழிலை இடைவிடாது பயிறல்.
திறம் - கற்பு.
தீர்ந்திலது - தீர்ந்தில்து
தீர்மென்று - தீர்மினென்று : ௨௧௫ - ௪.
துடி - ஒருவகைத்தோற்கருவி : [௮௬ - ௧௧] ; பதினோராடலுளொன்று ; அஃது கடலில வேற்றுருவங்கொண்டு நின்ற சூரனது சேனசத்தைப் பிளந்து அவன்போரைக்கடந்த முருகன் அக்கடலிடையே துடிகொட்டியாடியது : ௧௬௫ - ௩௦.
துடுமை - ஒருவகைத்தோற்கருவி : ௮௬ - ௧௦.
துணங்கை - ஒருவகைக்கூத்து ; சிங்கிக்கூத்தென்றுமாம் : ௧௩௫ - ௧௪.
துணை - கணவன் : ௧௧௦ - ௧௪.
துப்பு - கருவி.
தும்பி - வண்டிலொருசாதி : ௧௧௧ - ௭.
துருவை - கீதவுறுப்புளொன்று : ௧௦௩ - ௧.
துவா - செம்மைநிறம் : ௧௬௧ - ௯௬.
துவரைக்கோமான் - இடைச்சங்கப்புலவருளொருவர் : ௩ - ௪.
துறவோருறைக்குஞ்செயல் - புராணமோதல்.
துன்னகாரர் - தையற்காரர் : ௧௩௦ - ௧.

தூக்கு - தாளவகை நான்கினுளொன்று; அதற்கு மாத்திரை - ௨; வடிவு - ௨; அதன்றொழில் தாக்கித்தூக்குதல்: ௩௪௦ - ௨௨, ௨௫.
தூமம் - ஒருகோள்: ௨௪௦ - ௨௩.
தூவெள்ளை - தூநிறவெள்ளை.
தெங்கநாடு - குமரியாற்றுக்கும் பஃறுளியாற்றுக்கும் இடையிலிருந்த நாடு: ௧௯௭ - ௩௫.
தெழித்தல் - பிரித்தல் = குடநாட்டுவழக்கு.
தென்மதுரை - தலைச்சங்கமிருந்த ஊர், இது முற்காலத்துக் கடல்கொள்ளப்பட்டது: ௧௩௭ - ௨௫.
தேசிகம் - இயற்சொன்முதலிய நான்கு சொற்கூறுடைய சொற்பிரயோகம். ௬௦ - ௧.
தேவபாணி - இசைப்பாவின் பகுதியுளொன்று. ௧௯௩ - ௩. பறநாடகவுருக்களுள் முதலாவது. ௭௨ - ௨௩. பதினோராடற்கும் முகநிலை. ௧௯௩ - ௨௫.
தொண்டியோர் - சோழகுலத்தோர் ௩௩௭ - ௭.
தொய்யில் - பத்திக்கீற்று.
தொல்காப்பியனார் - இடைச்சங்கப்புலவருளொருவர், இவர் தொல்காப்பியவிலக்கண நூலாசிரியர் ௩ - ௦.
தொழுநோய் - வெப்புநோய் ௩௧ - ௨௩.
தொழுனை - யமுனையாறு
தொளி - சேறு.
தோடி - ஒருபண்: ௨௦௨ - ௩௩
தோடு - காதணி
தோரியமடந்தையர் - ஆடிமுதிர்ந்தவர் ௧௦௧ - ௨௨.
தோல் - பரிசை, கருங்கடகென்பாருமுளர்: ௧௩௯ - ௧௩.
தோலின்றுணைவர் - உறைகாரர்: பறம்பர்முதலாயினோர்: ௧௩௦ - ௨.
தோற்பாவை - விநோதக்கூத்தாறினுளொன்று; அது தோலாற்பாவைசெய்து ஆட்டுவிப்பது. ௯௪ - ௨௨.
நகைத்திறச்சுவை - விநோதக்கூத்து. [௯௪ - ௨௯.]. வசைக்கூத்தென்பாருமுளர்.
நகைவேழம்பர் - சாமாணிகள்; சிரிக்கும்பரியாசகருமாம். ௧௬௭ - ௩௨.
நங்கை - மருமகள்.
நட்பு - காலகரமபு: ௨௦௨ - ௧௭.
நடுங்குதல் - சலித்தல்.
நலம்பாராட்டுதல் - புனைந்து அழகுசெய்தல்.
நளி - செறிவு.
நாகநாடு - பவணம்.
நாகராகம் - ஒருபண்: ௨௦௨ - ௩௩.
நாட்டியம் - புறநடம்: ௧௦௩ - ௨௪.
நாடகம் - சாந்திக்கூத்து நான்கினுளொன்று: [௯௪ - ௫.] அது கதைதழுவிவருங்கூத்து.
நாத்தூண் - கணவனுடன் பிறந்தாள்: ௩௪௧ - ௩௨.
நாம் - அச்சம், இஃது உரிச்சொல்.
நாமம் - புகழ்.
நாரதன் - தேவவிருடி; பஞ்சபாரதீயமென்னும் இசைத்தமிழ் நூலாசிரியன். ௪ - ௨௪.
நாவாய் - தோணிமுதலாயுள்ள சலசரங்கள்.
நாழிகைக்கணக்கர் - கடிகையார்; நாழிகைவட்டில்வைப்போருமாம.
நாழிகைப்பறை - ஒருவகைத் தோற்கருவி: ௮௯ - ௧௧.
நாள்வழிப்படிமடிசில் - போசனம்.
நானம் - நெய்.
நிக்கந்தன் - அருகன்.
நிகர் - ஒளி. ௨௧௩ - ௨௭
நிசாளம - ஒருவகைத்தோற்கருவி ௮௯ - ௧௦
நிதியின்கிழவன் - தலைச்சங்கப்புலவருள் ஒருவர் ௧௩௭ - ௨௭
நிலா - ஒளி ௧௦௪ - ௬௧
நிலைஇய - நிலைபெற்றன
நிழல் - ஒளி: ௧௧ - ௧௪
நீரமாடம - பள்ளியோடம்: ௩௩௩ - ௨௪.
நீரணிமாடம் - பள்ளியோடம்: ௨௫௦ - ௧௫.
நீலகந்தி - ஒருவகைமாணிக்கம.
நீலம் - ஒருவகைமாணிக்கம்.
நீலவிதானம - நீலப்பட்டுமேற்கட்டி.
நுட்பம - காந்துறுகோள்களுளொன்று: ௨௪௦ - ௨௩.
நுணபொறிவெள்ளை - சிலமணையினேறு.
நுதல்விழிநாட்டத்திறையோன்கோயில் - இறைவிகண்புதைத்தபொழுது நெற்றியிற்புறப்படவிட்ட கண்ணையுடைய இறைவன் கோயில்: ௩௨௯ - ௨௭.
நுழைதல் - கழிதல்: ௨௩௩ - ௨௪.

நெய் - புழுகுநெய்; இது கூந்தற்கு அணியப்படுவது : ககசு - உ௮.
நெற்றிச்செகில்-செகிற்சுட்டியேறு; நெற்றியொழிந்த செகில்.
நேர்திறம் - பாலைப்பண்ணிற்றிறமைந்தனுள் ஒன்று : ககஎ - ரு.
நொடித்தல் - சொல்லுதல்.
நொடை - விலை கஉ௮ - கரு
நோக்கு - விநோதக்கூத்து ஆறனுள் ஒன்று.
நோலை - எள்ளுருண்டை : கரு௫ - கரு.
பஃறுளியாறு - குமரியாற்றிற்குத்தெற்கின்கணோடிய ஓராறு . கருஎ - ருரு
பகல் - அரையாமம் · கக௮ - ரு.
பகல்வாயில - பகற்றோற்றுகிறவாயில= கீழ்த்திசை · உகச - உஉ
பகன்றை - பெருங்கையாலென்றுங் கொடி.
பகை - ஆறுநரம்பும் மூன்றுநரம்பும் உ௦உ - க௫.
பசந்து - பொன்னிறங்கொண்டு . க௦௫ - கசு.
பட்டடை - நரம்புகளின் இளிக்குப்பெயர் : ருக - ருரு.
பட்டிமண்டபம் - வித்தியாமண்டபம் ஓலக்கமண்டபமுமாம் · கரு௰ - உ௨.
படகம் - ஒருவகைத்தோற்கருவி ௮ரு - எ.
படப்பை - தோட்டக்கூறு, பக்கம்.
படலை - இலைத்தொடை . ககஎ - க.
படலைமாலை - பச்சிலைமாலை ககரு - உரு
படாகை - பெருங்கொடி.
படாதன் - அடாதன.
படி - வடிவு.
படிமை - தெய்வவடிவு
படையுள்படுவோன்-சின்னமூதி · க௰ரு - உக.
பண்ணை-தோட்டங்கள், ஓடைகளுமாம்.
பணிக்களரி - தொழில்செய்யுமிடம்.
பணித்தல் - அருளிச்செய்தல், திசைசசொல்; பணிவிடையென்னும்வழக்குமது : கருசு - உரு.
பதியெழுவறியா - பதியினின்றும் பெயர்தலையறியாத.
பதினோராடல் - புறக்கூத்திற்குரியவற்றுள் ஒருவகை · எரு - எ.
பதுமம் - ஒருவகைமாணிக்கம்.
பதுமராகம் - ஒருவகைமாணிக்கம்.
பதுமுகம் - ஓரிருக்கை · உ௦௦ - ரு௦.
பந்தர் - நிழல் : உருரு - ௮.
பயம் - மன்னர்விழைச்சி : ௫௫ - ரு.
பரத்தன் - பரத்தையை நுகர்பவன் : ரு௮௫ - ருஎ.
பரதர்-வணிகர்:[கசசு-க௫];பழிகாமுகர்.
பரதவர் - பட்டினவர் : கஉரு - ௨.
பரி - மிகுதி . உ௫க - கரு.
பரிமுகவம்பி - குதிரைமுகவோடம்.
பரியகம் - பாதசாலமென்னுமணி.
பழங்குடி - தொன்மரபு; ஆதிகாலத்தேறியகுடியுமாம்.
பள்ளி - இடம்.
பற்று - வாரப்பாடல் · ருசக - ௰.
பறை-மறித்தளக்குங்கருவி : ருசு - க௫.
பன்முறைக்கருவியர் - படைக்கும் ?ற்சதுதக்குங்கொட்டுவோர் : கரு௨-ரு௰.
பன்னிருவிலைஞர் - ஆட்டுவாணிகா கஉரு - கரு
பனித்து - பனிகொண்டு [க௦ரு-க௰], பனிப்பெய்யப்பட்டு [க௰ரு - கஎ] குடநாட்டுவழக்கு,
பாகம் - ஒருவகைத்தோற்கருவி . ௮ரு - கக
பாங்கு - பகுதித்திறள்
பாசவர் - இலைமுகிடுவோர், கறிநறுக்கித்துவிற்பார், பச்சிறைச்சி நூட்டிறைச்சிவிற்பார் கஉ௫ - ௬.
பாட்டிடைச்செய்யுள் - பலபாக்களோடு உரைப்பாட்டையும் இசைப்பாட்டையுமுடைய இயலிசைநாடகப் பொருட்டொடர்நிலைசெய்யுள் உ௫-௨ரு
பாடகம் - காலணிகளுளொன்று.
பாடி - நகரி ரு௦ - க௰.
பாடு - படுக்கை உ௨க - கக
பாடுகிடத்தல் - வருங்கிடத்தல உக௫௰
பாண்டரங்கம் - பதினோராடலுளொன்று, அது வானோராகியதேரில் முன்னின்ற திசைமுகன்காணப்பாரதிவடிவாகிய இறைவன் வெண்ணீற்றையணிந்தாடியது . கரு௫ - ரு.
பாண்டியன்மதிவாணனார் - மதிவாணர் நாடகத்தமிழ்நூலாசிரியர் ௫ - க௰.
பாண்டில் - தேர்வட்டை ருசரு - கக.
பாணி - பாட்டு [க௰உ - உரு], தாளம் எரு - க௫.
பாதசாலம் - காலணியுளொன்று.
பார்சுதிலோசனம் - தாளததுளொன்று: அது பதினாறுமாத்திரையையுடையது : எரு - உரு.

பாரதி - பைரவி.
பாரதியரங்கம் - சுடுகாடு.
பாவை - பதினோராடலுளொன்று. இது போர்செய்தற்குச்சமைந்த அவுணர் மோகித்துவிழும்படி திருமகள் கொல்லிப்பாவைவடிவாயாடியது: [௧௬எ-௬]; மதனைப்பாவைமுதலியன. உ௮௬-ரு.
பால்வாய்க்குழவி - மேற்பெறக்கடவ நல்லபகுதியையுடைய குழவி.
பாலையாழ் - ஒருபண். உ௦௨ - ௬௬.
பிஞ்ஞை=பின்னை - நப்பின்னை.
பிடா - புறக்கழுத்து ௧௬௮ - ௨௫.
பிடவம்-குட்டிபபிடவமென்னுங்கொடி: ௩௪௯ - ௩௯.
பிண்டி - ஒற்றைக்கை: [எ௭ - ௧௩]; பொருட்கை: ௮௦ - ௩௨.
பிணையல்-இரட்டைக்கை: [எ௮-௩௬]. தொழிற்கை: [௮௦ - ௩௩]; மார்பிலிடுவன: ௩௪௪ - எ.
பிரகலை - கீதவுறுப்புளொன்று ௧௦௩ - ௧.
பிரமரி - புறக்கூத்துக்குரியவாடலுளொன்று எ௩ - ௬.
பிழா - இடாஃநீரிறைக்குங்கருவியிலொன்று.
பிற்பாடு - பின் ௩௦௪ - ௨௮.
பிறக்கு - வேறு, பிருதக்கென்னும் வடமொழிச்சிதைவு ௧௩௮ - ௨௦.
பிறக்கொழிய - பின்னிட்டொழிய ௧௩௮ - ௧௪.
பிறங்குதல் - விளங்கல்; மிகுதலுமாம்.
பிறவாயாக்கைப் பெரியோன் - சிவன். ௧௪௫ - ௬.
பின்னா - பின்னேன் ௨௬௪ - ௧௪.
பீலி - கால்விரலணி. ௧௩௬ - ௩
புகர் - அழகு. ௨௧௭ - ௨௦
புண்ணியத்திசை - வடதிசை ௧௩௨ - ௧௨.
புதா=போதா - பெருநாரை, மரக்கால் நாரையுமாம்: ௨௪௧ - ௨எ.
புதைத்தல் - போர்த்தல்; மலைநாட்டு வழக்கு: ௧௨௯ - ௧௫.
புரிகுழன்மாதவி - கடைகுழன்று சுருண்டகூந்தலையுடைய மாதவி.
புல் - புறக்காழ்.
புலரிவைகறை - வைகறைக்காலக்கழிவும் புலருதன்முன்னுமாகிய அக்காலம் ௩௨௬ - ௧௭:
புழுக்கல் - முதிரைப்பண்டம் = அவரை துவரைமுதலியன: ௧௩௫ - ௧௨.
புழை - ஏவறை: ௩௭௨ - ௧௧.
புள் - கணந்துட்புள்: ௨௪௧ - ௨எ.
புற்கலம் - உடம்பு; ௮௩ - ௧௬.
புறந்தருதல் - புறங்கண்டுபுகுதல்.
புறநடம்-வென்றிக்கூத்துமுதலானவை: ௬௫ - ௧௬.
புறநிலைமருதம் - உழைகுரலாய்க் கைக்கிளைகுரலாய மேற்செம்பாலை: ௨௦௩-௧௩.
புறநீர்மை - ஒருதிறம்: ௨௦௩ - ௨௪.
புறநீர்மையென்னுந்திறம் - இது பள்ளியெழுச்சி பாடுதற்குரியது. ௧௧௬-௨௩.
புறம்பணையான் - சாதவாகனன்; புறம்பணைந்த இடம், புறம்பணை: ௨௧௪-௩௦.
பூவல் - செம்மண்
பூவிலைமடந்தையர் - அற்றைப்பரிசங்கொள்வோர்: ௧௩௨ - ௨௬.
பெருகியன்மருதம் - குரல்தாரமாய்த்தாரங்குரலாய விளரிப்பாலை. ௨௦௩-௧௫.
பெருங்கலம் - ஆயிரங்கோலையுடைய பேரியாழ்: ௬ - ௨௧.
பெருங்குடிவாணிகர் - வணிகருள் ஒருவகையார்.
பெருந்தேவபாணி - இசைப்பாவகையுளொன்று: ௧௬௩ - ௭; ௧௬௩ - ௧௧; நாடகத்தமிழில் வருங்காற் பலதேவரை மூவடிமுக்கால வெண்பாவாற் றுதிப்பது ௧௬௩ - ௧௫.
பெருநடை - புறக்கூத்துக்குரிய ஆடலுளொன்று. எ௩ - ௫.
பெரும்பறை - ஒருவகைத்தோற்கருவி. ௨௬ - ௧௧.
பெருமுளை - ஒருவகைப்பாட்டு ௨௪௨ - ௨௮.
பெருவண்ணம் - இசைப்பாவகையுளொன்று: ௧௬௩ - ௬.
பேடு - பதினோராடலுளொன்று. இது தன்மகன் அநிருத்தனைச் சிறைமீட்டு வாணாசுரன்நகரத்தில் ஆண்மைத்தன்மையிற்றிரிந்த பெண்மைக்கோலத்தோடு காமனாடியது. ௧௬௬ - ௨௦.
பேதுறவு - அறிவின்றிரிவு.
பொங்கர் - வாடற்பூ.
பொங்கல் - கள்ள. ௧௩௫ - ௧௪.
பொத்தை - மட்சிறுமலை.
பொதி - பண்டங்கள் பொதிந்தவை; ஆகுபெயர்: ௧௪௦ - ௨௦.

பொதியறை - துவாரமில்லாத கீழறை: ௨௪௮ - ௧௮.
பொதும்பர் - மரச்செறிவு: ௨௩௪ - ௬.
பொதுவறுசிறப்பு - தனக்கேயுரிய சிறப்பு.
பொருநர் - எதிர்த்துப்பொருவோர் ௧௩௭ - ௧௫.
பொருள் - விலக்குறுப்பினு ளொன்று. ௯௫ - ௧௩.
பொன்செய்கொல்லர் - உருக்குத்தட்டார்: ௧௨௯ - ௩௦.
போகு - நெடுமை.
போர்க்கதவு - இரட்டைக்கதவு.
போற்றி - போற்றுவாயாக. ௬௧௧ - ௧௧.
மகரவாய்மோதிரம் - கால்விரலணி ௧௯௯ - ௩.
மகன் - கணவன் ௩௮௧ - ௨௯.
மட்டம் - மூன்றெழுத்துடைய தாளம் ௧௦௩ - ௯.
மடம் - அழகு.
மடன் - கொளுத்தக்கொண்டு கொண்டதுவிடாமை.
மடி - வயிறு: ௨௧௯ - ௫.
மண் - சுதை: ௧௨௬ - ௨௮.
மண்டலநிலை - தேசிக்கூத்திற்குரியநிலை ௧௦௩ - ௮.
மண்டலமாக்கள் - அரசர் ௨௦௭ - ௨௫.
மண்டிலம் - ஒரிருக்கை: ௨௦௦ - ௩௧.
மண்டை - ஒருவகை மண்கலம். ௩௮௩ - ௨௨.
மண்ணீட்டாளர் - சிற்பாசாரிகள், சுதையாற்பாவையுள்ளிட்டன பண்ணுவாரென்றும் குயவரென்றுமாம் ௧௨௬ - ௨௯
மணமுரசு - விழாமுரசு: ௧௪௨ - ௩௨:
மத்தளம் - ஒருவகை உத்தமத்தோற்கருவி: ௮௯ - ௨௯, ௩௪௫ - ௬.
மதங்கர் - பெரும்பாணர், குழலருமாம்.
மதுரைநாடு - குமரியாற்றிற்கும் பஃறுளியாற்றிற்கும் இடையிலுள்ளநாடு: ௧௬௭ - ௩௫.
மதுரையாசிரியன்மாறனார் - இடைச்சங்கப்புலவருளொருவர் ௩ - ௬.
மயன் - தெய்வத்தச்சன்: ௪௯ - ௧௬.
மரக்கால் - பதினோராடலுளொன்று. அஃது - அவுணர் வஞ்சத்தால்வெல்லுதல்கருதிப் பாம்பு தேள்முதலியவாய்ப் புகுதலையுணர்ந்த துர்க்கை அவற்றை உழக்கிக் களைதற்கு மரத்தாலாகிய கால்கொண்டு ஆடியது: ௪௯ - ௩௩.
மராஅம் - வெண்கடம்பு.
மல்லாடல் - பதினோராடலுளொன்று; அது வாணாசுரனைவெல்லுதற்குக் கண்ணன் மல்லனாய்ச்சென்று அறைகூவி அவனைப்பிடித்து உயிர்போகநெரித்து ஆடியவாடல்: ௧௩௫ - ௨௧.
மறித்தோளவியத்துறிக்காவாளர் - ஆட்டுமறியையும் கோடரியையுமுடைய தோளிலே உறிகட்டினகாவையுடைய இடையர் ௩௭௬ - ௧௦.
மறுகு - பெருந்தெரு. ௧௦௪ - ௩.
மறையோர் - பஞ்சக்கிராமிகள் ௧௩௦ - ௩௩
மன்னும் - இடைச்சொல்: ௩௨ - ௭.
மா - கருமை, நிறம்: ௧௧௪ - ௧.
மாகதர் - இருந்தேத்துவோர் ௧௩௨ - ௨.
மாடகம் - வீக்குங்கருவியாகிய வீக்கையுறுப்பு.
மாயம் - களவு.
மோ - இடைச்சொல்.
மார்க்கம் - வழி.
மாலையிற்புனைந்த - மாலையின்வர்க்கமாகப் புனைவன நாற்குவாக்கம்; கெட்டியால் மாலைகளைச்செண்டுகளாகப்புனைந்து விற்பனவும் பூமாலைவர்க்கமுமாம் ௬௪௩ - ௬௪
மானமதச்சேறு - கத்தூரிக்குழம்பு; சவ்வாதுமாம்
மிளை - காவற்காடு ௬௧ - ௩௧.
முகநிலை - முகத்திற்படுந்தரவு: ௧௯௨ - ௩௨
முகம - அந்தரக்கொட்டு ௧௦௨ - ௩௦.
முகவைப்பாட்டு - பொலிபாடும்பாட்டு ௨௬௩ - ௪
முடம - குமறம் ௮ - ௩௮.
முடித்தகேள்வி - கரைகண்டகேள்வி.
முத்தகம் - இசைப்பாவகையுளொன்று: ௧௯௩ - ௪.
முத்தூற்றுக்கூற்றம் - சோழநாட்டிலுள்ள ஒரு சிறுநாடு: ௨௯௫ - ௩௩.
முதற்கருவி - மத்தளம்: ௮௭ - ௪.
முதனடை - மிகவும் தாழ்ந்தசெலவினையுடையபாடல்; இயக்கநான்கினுளொன்று: ௩௨ - ௧௨.
முதிர்தல் - சூழ்தல், முற்றுதல்.
முரஞ்சியூர்முடிநாகராயர் - தலைச்சங்கப்புலவருளொருவர்: ௧௬௭ - ௨௯.
முரிநிலை - இறுதியிற்படுந்தரவு: ௧௯௨ - ௩௩.

முருடு - பத்தல்; மத்தளமுமாம்.
முல்லை - ஓர்பண் : கக0 - உரு.
முல்லைக்குழல் - முல்லைக் கொடியால் முப்புரியாகத்தெற்றியவளையை வளை வாய்க்கட்செறித்து ஊதுங்குழல் : ௬0௯ - உ௯.
முழவு - ஒருவகைத்தோற்கருவி; [அரு-௬.] குடமுழா : ௩0௪ - கஉ.
முன்பாலைநாடு - குமரியாற்றிற்கும் பஃறுளியாற்றிற்கும இடையிலுள்ளநாடு : ககஎ - ௬ரு.
முன்பு - வலி.
முற்பெண்டிர் - மறக்குடி மகளிர் : க௬௫ - ௫.
மூதூரப்பொழில் - இலவந்திகைச் சோலை : ௬௬௪ - ௬.
மெய்க்கூத்து - சாந்திக்கூத்து நான்கினுளொன்று, அது மெய்த்தொழிற் கூத்து : ௬௪ - ௮.
மெய்ப்பாட்டியற்கை - பரமாகமம்
மைந்து - அழகு : உக0 - கஎ.
மைவிளக்கு - கெய்விளக்கு
மொந்தை - ஒருவகைத்தோற்கருவி ...
மோதகம் - பிட்டு : ...
யவனர் - துருக்கர், (வாயில்காத்தல் இவர்கள் தொழில்) மிலேச்சர் : ... ௬௧.
யாமளேந்திரர் - இந்திரகாளியநூலாசிரியர் : ... - கஉ.
யாவதும் - யாதும்; பகுதிப்பொருள் விகுதி : ... - க௭
யோகம் - அரைப்பட்டிகை; வியாதிகளைக்கெடுக்கும் மருந்து : ௬௬ - க௭.
யோனி - விலக்குறுப்பினுள் ஒன்று : ௬ரு - க௬.
வசி - மழை. ... - க...
வட்டப்பாலை - நால்வகைப்பாலையுளொன்று : ௪0... - கக.
வட்டம் - ஒருகோள் ... 0 - ...
வண்கை - வழங்குங்கை.
வண்ணம் - இசைப்பாவகையுள் ஒன்று. [க௬௬ - கக], தொய்யிற்குழம்புமுதலியன : [கஉஎ - ௪]; விலக்குறுப்பினுளொன்று : [௬... - க.]; சொல்வகை நான்கினுளொன்று; அது பதினாறடியால்வருவது : ௭0 - ௬௬.
வம்பமாக்கள் - புதியமாக்கள். க௪0 - ரு.
வம்பின்முடிச்சு - புதுமையாக முடிவன : அவை அல்லிக்கயிறு முதலியன, ௬௪௬ - உ௬.
வம்பு - கயிறு : ௬௪௬ - ௬0.
வரி - கோலச்சாரி : [உஎ - உரு], வரிப்பாட்டு : [௬0௭ - உக.] விலக்குறுப்பினுளொன்று : ௬௬ - உ.
வரிதகம் - சொல்வகைநான்கினுளொன்று, அது முப்பத்திரண்டடியால் வருவது : ௭0 - ௬௪.
வலயம் - பாத்தி.
வலவை - நாணிலி, வல்லபம் : க௬ரு - க௬, உ0.
வழுத்தல் - அபிமந்திரித்தல்.
வளைதருகுழியம் - கட்டிக்குழியம் : ௬௪௬ - உ0.
வளைபோழுநர் - சங்கறுப்பார் : க௬க - கரு.
வளைவிற்பொறி - வளைந்து தானேயெய்யும் எந்திரவில் : ௬௭க - உ௬.
வாசவர் - பஞ்சவாசம்விற்போர் : கஉ௬ - ௪.
வாயில் - கதவு.
வாரம் - இடக்கைநான்கினுளொன்று : [... உ - க...], தேவரு. [௬... - கஉ]; சொல்லொழுக்கமும இசையொழுக்கமுமுடைய பாடல் : [௬உ - க௪], தெய்வப்பாடல் : க0உ - ...; பற்று ௬௪௬ - ௬0.
வாரொலிகூந்தல்-நீண்டு ஒலித்தகூந்தல்.
வால் - இளமை : க௪உ - உஎ.
வாலாமை - ஆசௌசம்.
வான்வரிக்கொடுங்காய் - வளைந்த வரிகளையுடைய வெள்ளரிக்காய்.
வான்கொடி - வானவல்லி
வானவல்லி - மின்னுக்கொடி?
விகாரம் - கையாற் கருவியாற்பண்ணுது மனத்தானிருமித்தல் : உ௬க - ௬௬.
வித்தம் - ஒருவகைமாணிக்கம்.
வியம் - ஏவல்
வியர்ப்பிரிய - வியாபரிய - விகாரம் : க௬௪ - உ௭.
வியன் - வேறுபாடு : கஉ௬ - உ௬.
வியன்பெருஞ்சேவடி - அகன்று நீர்த்த வடசேடி. ... - கஉ.
விரலேறு - ஒருவகைத் தோற்கருவி : ... கம.
விரிமுரண் - இசைப்பாவகையுளொன்று : க௬௬ - ரு.

விரியல் - மலர்ச்சி.
விருத்தி - இருப்பு : [௨00 - ௨௬.] விலக்குறுப்பினுளொன்று : ௬௫ - ௧௯.
விருந்தாட்டு - நித்தல்விழாவன்றி யாண்டுதோறுஞ் செய்யும்விழவு : ௧௫௮-௧௭.
விலங்கு - குறுக்கு.
விழித்தல் - விளங்குதல்.
விழுக்கு - நிணம் : ௧௯௫ - ௧௯.
வினயம் - தேவபாணி : ௨0௧ - ௧௧.
வீங்குதல் - மிகுதல்.
வீறு - உயர்ச்சி.
வெண்டுறை - இசைப்பாவகையுளொன்று : [௧௬௯ - ௯ ; ௧௬௯ - ௧௧]; ஒருவகைப்பாடல் : ௮௭ - ௧௫.
வெள்ளூர்க்காப்பியனார் - இடைச்சங்கப்புலவருளொருவர் : ௯ - ௯.
வெள்ளை - ஏறு.
வேதாளிகர்-வைதாளியாடுவோர் : ௧௬௨-௯.
வேதினத் துப்ப - ஈர்வாட்டொடக்கத்தனவாகிய கருவிகள் : ௯௪௯ - ௯௫.
வேல் - வல்லயம்.
வேலி - சூழ்தல்.
வேற்கோட்டம் - முருகவேள்நிற்குங் கோயில், வேல் - ஆகுபெயர் : ௨௧௪-௨௭.
வேனல் - வேனில் : ௨௧0 - ௨௨.
வைகல் - ஒருபொழுது : [௧0௫ - ௮]; துயிறல்.
வைகறை - துயிலறுதற்குக்காரணமாக உள்ளபொழுது.
வையம் - கூடாரப்பண்டி : [௯௯௮-௪], கொல்லாப்பண்டி . ௯௪௯ - ௧0.

சிலப்பதிகாரத்தில் இன்னும் பலவகையான அரும்பதங்களும் தொடர்மொழிகளும் உள்ளனவேனும், அவகாசமின்மையால் இப்பொழுது அவற்றை எடுத்தெழுதிப் பதிப்பிக்கக்கூடவில்லை.

விளங்காமேற்கோளகராதி.

1. 6090

இவற்றுட் சிலவற்றின் மேற்கோபதிப்பிக்கப்பட்ட நூற்பெயர்கள் அடியார்க்கு நல்லாராலேயே குறிக்கப்பட்டவை; அவை அந்நூல்களின் இன்னபாகத்துள்ளன வென்று விளங்காமையால் இவற்றோடு சேர்க்கப்பட்டன.

கணபதி துணை.

சிலப்பதிகாரக் கதைச்சுருக்கம்.

[க.—புகார்காண்டம்.]

சோழவளநாட்டிற் காவிரிநதி கடலொடுகலக்கும் சங்கமுகமென்னுந் துறையையுடையதும் சோழர்களுடைய பழைய இராசதானியாகவுள்ளதும் பெரியோர்களாற் சிறப்பித்துப் பாராட்டி மிகப் புகழப்படுவதுமாகிய காவிரிப்பூம்பட்டினத்தில் சோழர்கள் அரசாட்சிசெய்துவருகையில், இப்பர் கவிப்பர் பெருங்குடியரென்னும் மூவகைவணிகருட் பெருங்குடியர்குலத்திலுதித்தோனாகிய மாசாத்துவானென்பான், தன்மகனாகிய கோவலனுக்கு அந்நகரில் அம்மரபிலுதித்த மாநாய்கன் மகள் கண்ணகியை மிக்கசிறப்புடன் மணம்புரிவிக்க, கோவலன் கண்ணகிபால் மிகவும் அன்புவைத்து நலம்பாராட்டி இன்புற்றுத் தருக்கி மகிழ்ந்து நடக்கு நாட்களில், ஒருநாள், அக்கோவலன்றாயாகிய பெருமனைக்கிழத்தியென்பவள், கோவலனும் கண்ணகியும் இல்வாழ்க்கையைச் செவ்வையாக நடத்திக் கைதேர்ந்து உயர்ச்சிபெற்றுவிளங்குதலைக் காணவேண்டி வேறொருமாளிகையில் இல்லறநடத்துதற்குவேண்டும் பொருள்களை நிரப்பி வேலைசெய்பவர்களையும் நியோகித்து அவ்விருவரையும் அதிலிருத்த, அவர்கள் மனமொருமையோடு அதிலிருந்து அறவோர்க்களித்தல் அந்தணரோம்பல் துறவோர்க்கெதிர்தல் முதலியவற்றைச்செய்து இல்வாழ்க்கையை ஒழுங்காக நடத்திவருவாராயினர்; இவ்வாறு சிலவருடங் கழிந்தன.

இப்படியிருக்கையில், கோவலன், மிக்க அழகுடையவளும் ஆடல் பாடல் முதலியவற்றில் மிகத்தேர்ச்சிபெற்றவளுமாகிய மாதவியென்னும் நாடகக்கணிகையை விரும்பித் தன்பாலுள்ள பலவகைப்பொருள்களையும் நாடோறுங்கொடுத்து அவளோடும் இடைவிடாது மருவி மகிழ்வானாயினன். கண்ணகி பிரிவாற்றாதுவருந்தி அவ்வருத்தத்தைச் சற்றும் வெளிப்படுத்தாமல் அவன்பாற் சிறிதேனும் வெறுப்பின்றி இல்லறவொழுக்கத்தை வழுவாது நடத்திவந்தாள்; அக்காலத்து வழக்கப்படி அந்நகரத்தில் இந்திரனுக்குத் திருவிழா நடத்தப்பட்டது. அதன்முடிவில் அந்நகரத்தார் தத்தம் பரிவாரங்களோடு கடலாடுதற்குச் சென்றார்கள்; கோவலனும் மாதவியுடன் கடற்கரையையடைந்து ஓரிடத்திருந்து அவள்கையிலிருந்த வீணையைவாங்கிப் பலவகைப்பட்ட வரிப்பாட்டுக்களைப் பாடிக்கொண்டு அவ்வீணையை வாசித்தான்; அவன்பாடியபாட்டுக்கள் பலவகைப்பட்ட அகப்பொருட்சுவையைத் தழுவியிருந்தமையின், மாதவி, 'இவன் வேறுமகளிர்பால் விருப்புடையன்' என்றெண்ணிப் புலந்து அவன்கையிலுள்ள வீணையைவாங்கித் தான் வேறுகுறிப்பில்லாதவளாகவிருப்பினும் அவன் வேறுகுறிப்புள்ளவளாகத் தனக்குத்தோற்றினமை

யின், தானும் வேறுகுறிப்புடையாள்போலவே அகப்பொருட்சுவையைத்தழுவிய பலவகைப்பட்ட வரிப்பாட்டுக்களைப் பாடிக்கொண்டு அவ்வீணையை வாசித்தாள்; அதனைக்கேட்ட கோவலன், வேறொருவர்மேல் மனம்வைத்து இவள்பாடுகிறாளென்றெண்ணி ஊழ்வினையின்முயற்சியால் வெறுப்புற்று அவளோடு அளவளாவாமல் தன்வீட்டையடைந்து, தேவந்தியென்னும் பார்ப்பனத்தோழியோடு சல்லாபஞ்செய்துகொண்டிருந்த கண்ணகியைக்கண்டு, அவளுடன் பள்ளியறையிற்புகுந்து அவள்மேனிவாட்டத்தையும் மனவருத்தத்தையுந்தெரிந்து, 'பொய்யை மெய்யாகக் காட்டியொழுகும் பரத்தையோடுமருவி ஒழுகியகாரணத்தால் முன்னோர்தேடி வைத்த பொருட்குவியல்களையெல்லாம் தொலைத்து வறுமையடைந்தேன்; அஃது 'எனக்கு மிகவும் நாணைத்தருகின்றது' என்றுசொன்னான். கண்ணகி, மாதவிக்குக் கொடுத்தற்குப் பொருளில்லாமையால் தளர்ந்துசொன்னானென்றுகருதி, 'அடியேனிடத்து இரண்டுசிலம்புள்ளன; அவற்றைக் கைக்கொண்டருள்க' என்று சொன்னாள்; அவன், 'மதுரையையடைந்து இச்சிலம்பை வாணிகமுதலாகக்கொண்டு வியாபாரஞ்செய்து மிக்க பொருள்தேடுதற்கெண்ணினேன்; நீயும் வரல்வேண்டும்' என்றான்; அவளும் சம்மதிக்க, கோவலன் அன்றிரவின் கடையாமத்திற் கண்ணகியையழைத்துக்கொண்டு ஒருவருமறியாதபடி புறப்பட்டுக் காவிரியின் வடகரை வழியாக மேற்கேசென்று ஒருபூஞ்சோலையையடைந்து அதில் தவஞ்செய்துகொண்டிருந்த ஆருகதசமயத் தவமுதியோளாகிய கவுந்தியைக்கண்டு வணங்கி, 'மதுரையிலுள்ள பெரியோர்கள்பால் அறநூற்கேள்விகளைக் கேட்டற்கு உடன்வருவேன்' என்று சொல்லிய அவளோடும் வழிக்கொண்டு அரங்கமடைந்து அங்குவந்த சாரணர்களைத்தரிசித்து ஓடமேறிக் காவிரியின் தென்கரைசேர்ந்து ஒருபொழிலிலிருந்தான்; அப்பொழுது அங்குவந்து கண்ணகியையும் கோவலனையும் அவமதித்துப் பேசிய ஒருபரத்தையையும் ஒருதூர்த்தனையும் கவுந்தி நரிவடிவங்கொள்ளும்படி சபித்து, அவர்கள் அவ்வாறானதையறிந்து இரங்கிய கோவலன்கண்ணகியிவர்கள் வேண்டுகோளால் அவர்களுக்கு அவ்வடிவு ஒருவருடத்தில் நீங்கும்படி சாபவிடை செய்தாள். பின்பு மூவரும் உறையூரையடைந்தார்கள்

[உ.—மதுரைக்காண்டம்.]

அடைந்தவர்கள் அன்று அந்நகரிற்றங்கி மறுநாட்காலையிற் புறப்பட்டுச் சிறிதுதூரஞ்சென்று ஓரிடத்திருந்து இளைப்பாறி, அங்குவந்த ஒரந்தணனால் வழி தெரிந்துகொண்டு அப்பாற்சென்றார்கள். செல்லும்பொழுது ஒருநாட்காலையிற் கோவலன், கவுந்தியையும் கண்ணகியையும் ஓரிடத்தில்வைத்துவிட்டுக் காலைக்கடன் கழித்தற்பொருட்டு ஒருபொய்கையையடைந்துநிற்கையில், தன்பிரிவாற்றாதவருந்திய மாதவியாலனுப்பப்பட்டு அவளோலையுடன் காவிரிப்பூம்பட்டினத்தினின்றும் அங்குவந்த கௌசிகனென்னும் அந்தணனைக்கண்டு தன்பிரிவால் தன் தந்தை தாய் முதலியோர்களும் மாதவியும் படுகிறவருத்தங்களை அவனால் தெரிந்து மிக வருத்தமுற்றுத் தான்புறப்பட்டதற்குக் காரணத்தையும் தன்வணக்கத்தையும் தன்னுடைய தந்தைக்குச்சொல்லிப் பாதுகாத்துக்கொண்டிருக்கும்படி அவனையனுப்பிவிட்டுக் கவுந்தியையும் கண்ணகியையுமடைந்து அவர்களுடன் புறப்பட்டு இடையிற் சந்தித்த பாணர்களுடன் அளவளாவி அவர்களால் வழியினளவு தெரிந்துகொண்டு

போய் வையையாற்றையடைந்து அதனைத்தொழுது புணையேறி அக்கரைசென்று மதுரையின் மதிற்புறத்ததாகிய முனிவரிருக்கையில் தங்கினான்.

மற்றைநாட்காலையிலெழுந்து கவுந்தியை வணங்கித் தங்களுக்கு முன்புநேர்ந்த துன்பங்களைச்சொல்லி வருந்திப் பின்பு அவள்தேற்றத்தேறிக் கண்ணகியை அவள் பால்வைத்துவிட்டுத் தான் வாணிகஞ்செய்தற்குரிய இடமறிதற்பொருட்டு மதுரா நகரத்தின் உள்ளேசென்று அதன்வளங்களையெல்லாங்கண்டு மீண்டு கவுந்தியை யடைந்து அந்நகர்ச்சிறப்புமுதலியவற்றைச்சொல்லி, பின்பு, அங்கேவந்த தனது நட்பாளனாகிய மாடலனென்னுமந்தணனோடு சல்லாபஞ்செய்துகொண்டிருந்தான். அப்பொழுது, கவுந்தி, அங்குவந்த இடைச்சியர் தலைவியாகிய மாதரியைக்கண்டு அவளது நல்லொழுக்கத்தைநோக்கி, 'இவளிடத்திற் கண்ணகியை அடைக்கலமாகக் கொடுக்கலாம்' என்று நிச்சயித்து அவளையழைத்துக் கண்ணகியின் கற்புமேம் பாட்டையும் அவள்மென்மைத்தன்மையையும், உயர்ந்தோர்களாற் கொடுக்கப்படும் அடைக்கலப்பொருளைப் பாதுகாத்தோர் அடைந்தபயனையும் அவட்கு விளங்கச் சொல்லிக் கண்ணகியை அவளிடம் ஒப்பிக்க அவள் மகிழ்ச்சியுடன் ஏற்று விடைபெற்றுக் கண்ணகியைக் கோவலனுடனழைத்துக்கொண்டு ஆயர்பாடியிலிருக்கும் தன்வீட்டையடைந்து அவ்விருவரையும் புதியமனையொன்றிலிருக்கவைத்து மிகவுப சரித்துத் தன்மகள் ஐயையென்பவளைக் கண்ணகிக்குத் துணையாகவைத்துச் சமைத்தற்குரியபொருள்கள் பலவற்றையும் கொணர்ந்துகொடுப்பக் கண்ணகி அவற்றைச் செவ்விதாகச்சமைத்து முறைப்படியுண்பிக்கக் கோவலன் இனிதாகவுண்டு கண்ணகியை அருகழைத்து அணைத்து, 'நீ இந்தப்பாலைவழியில் வந்ததையெண்ணி நம் தாய்தந்தையர் என்னதுன்பமுற்றார்களோ! மிக்க செல்வத்தை அனுபவித்துக்கொண்டிருந்த நாம் இந்தக் கொடியதுன்பத்தையனுபவித்தது கனவோ? கனவாயின், இதற்குக்காரணமாக முன்புசெய்த தீவினையாதோ? யான் ஒன்றுமறிந்திலேன்; வீணரோடும் விடரோடுங்கூடிப் பிறரைப் புறங்கூறுங் கூட்டத்திற்புகுந்து, நல்லொழுக்கத்தைத்துறந்த மகாபாவியாகிய எனக்கு இனித் தீக்கதியன்றி நற்கதியுண்டாமோ? இருமுதுகுரவர்க்கும் ஏவல்செய்தலையொழிந்தேன்; உனக்கும் துன்பஞ்செய்தேன்; இக் கூடாவொழுக்கம் தீதென்று சிறிதுமெண்ணிலேன்' என்று பலவாறிரங்கி, 'சுற்றமுதலியவற்றைநீங்கி நாணமுதலியவற்றையும் கற்பையும் பெருந்துணையாகக்கொண்டு என்னோடுவந்து என்னது தனிமையைத்தீர்த்த "பொன்னே கொடியே புனைபூங் கோதாய், நாணின் பாவாய் நீணில விளக்கே, கற்பின் கொழுந்தே பொற்பின செல்வி" இனி, உன்னுடைய சிலம்புகளுள் ஒன்றைக்கொண்டுபோய் விரைவில்விற்றுவருவேன்; வருமளவும் தனிமையால்வருந்துதலையொழிவாயாக' என்றுசொல்லி, ஒருசிலம்பைவாங்கிக்கொண்டு அவள் தனியேயிருத்தலைக்கண்டு மனம்வெதும்புதலாலே பெருகிய தன்கண்ணீரை அவள்கண்டால் வருந்துவாளென்று மறைத்தவனாகி அவ்விடத்தைநீங்கிப் பிரிதற்குத் துணிவில்லாத மனமுடையவனாய்ச் சென்று எதிர்ப்பட்ட துர்நிமித்தங்களை அறியாமற் கடைத்தெருவிற்புகுந்து எதிரே நூறு பொற்கொல்லர் பின்னேவர முன்வந்த ஒரு பொற்கொல்லனைக்கண்டு இவன் அரசனாற்பெயர்பெற்றோனென்றெண்ணி அவனருகிற்சென்று, 'அரசன்றேவியணிதற்குத் தகுதியான சிலம்பினை விலைமதிக்கும் வன்மையுடையாயோ' என்று வினாவி, அவன் மிக்கபணிவுடன் தான்வல்லனாதலைக் குறிப்பிக்கக் கோவலன் தான்கொணர்ந்த சிலம்பைக் காட்டினன். அவன்பார்

த்து, 'இதனை அரசனுக்கு யான்தெரிவித்துவருமளவும் என்வீட்டிற்கு அயலதாகிய இவ்விடத்தே நீரிரும்' என்று ஓரிடத்தைக்காட்டிச் செல்லக் கோவலன் அவ்விடத்தேயிருந்தான். சென்றபொற்கொல்லன் முன்பு அரசன்மனைவியின் சிலம்புள் ஒன்றைவஞ்சித்துத் திருடிக்கொண்டவனாதலால், 'யான் முன்புவஞ்சித்துக்கவர்ந்துகொண்ட சிலம்பு என்னிடத்தேயுள்ளதென்று இராசாவுக்கு வெளிப்படுவதற்கு முன்னமே அதனோடு ஒத்த சிலம்பைக்கொணர்ந்த இப்புதியவனால் என்மீதுண்டாகும் ஐயத்தைப் போக்கலாம்' என்று தன்னுள்ளே நிச்சயித்துக்கொண்டு, தன் மனைவியின் ஊடல்தீர்த்தற்பொருட்டுத் தன்கோயிலைநீங்கி அவள்கோயிலைநோக்கிக் காமபரவசனாய்ச்செல்லும் பாண்டியன் நெடுஞ்செழியனைக்கண்டு வணங்கித்துதித்து, 'கன்னக்கோல்முதலியன இல்லாமலே கோயிற்கண்ணிருந்த சிலம்பைத் திருடியவன் அடியேனுடைய சிறிய குடிலில் அச்சிலம்போடு வந்திருக்கிறான்' என்றுசொல்லப் பாண்டியன் உடனே காவலாளர்களையழைத்து, 'என்மனைவியின்சிலம்பு இவன்கூறிய கள்வன்கையிடத்ததாயிருப்பின், அவனைக்கொல்லுதற்கு அச்சிலம்போடு கொண்டுவருக' என்றுசொல்லக்கருதியவன், வினைபலிக்குங்காலமாதலால் மயங்கி, 'அவனைக்கொன்று அச்சிலம்பைக் கொணர்வீராக' என்று கட்டளையிட்டான். பொற்கொல்லன் தன்னெண்ணம் பலித்ததென்று தன்னுள்ளே மகிழ்ந்து அக்காவலாளருடன்சென்று கோவலனையடைந்து அவனைநோக்கி, 'இவர்கள் அரசன்கட்டளையாற் சிலம்புகாணவந்தவர்கள்' என்றுசொல்லிக் கோவலனுடைய முகக்குறிமுதலியவற்றைக்கண்டு இவன்கள்வனல்லனென்றுசொல்லும் காவலாளர்களையிகழ்ந்துரைத்து அவனைக் கள்வனென்று வற்புறுத்துதற்குக் களவுநூலிலுள்ள ஏதுக்களையெல்லாம் அவர்களுக்கெடுத்துக்காட்டினன்; அப்பொழுது அவர்களுள் அறிவின்மையினாற் கொலையஞ்சானொருவன் விரைந்துசென்று கோவலனைத் தன் கைவாளால் வெட்டிவீழ்த்தினன்

இப்பாற் கண்ணகியிருந்த இடைச்சேரியில் பலவகையான உற்பாதங்களுண்டாயின; அதுகண்ட மாதரிமுதலியோரால் உற்பாதசாந்தியாகத் திருமாலைக்குறித்துக் குரவைக்கூத்து ஆடப்பட்டது; அதன்முடிவில் மாதரி நீராடுதற்பொருட்டு வையையாற்றிற்குச் சென்றாள்; அப்பொழுது, சிலம்புதிருடியவனென்று துணிந்து கோவலனை அரசனேவலாளர் கொன்றசெய்தியை மதுரையிலிருந்துவந்த ஒருத்திசொல்லக்கேட்டுக் கண்ணகி பதைபதைத்து மூர்ச்சித்துப் பலவாறுபுலம்பித் தானும் அவனுடனிறத்தற்குத் துணிந்து இடைச்சியாமத்தியில்நின்று சூரியனை நோக்கி, 'கதிர்ச்செல்வனே! நீயறிய என்கணவன் கள்வனோ' என்றாள்; அவன், 'நின்கணவன் கள்வனல்லன்; அவனைக் கள்வனென்ற இவ்வூரை விரைவில் தீயுண்ணும்' என்று அசரீரியாகக் கூறினன். அதைக்கேட்ட கண்ணகி மிகுந்த கோபத்தோடு தன்னிடமிருந்த மற்றொரு சிலம்புடனே புறப்பட்டுக் கண்டார்நடுங்கும்படி வீதிவழியேசென்று ஆங்குள்ள மகளிரைநோக்கிப் பலவாறுபுலம்பி, 'என்கணவனை முன்போலக்கண்டு அவன்சொல்லும் நல்லுரையைக் கேட்பேன்; அங்ஙனங் கேளேனாயின், என்னை இகழுமின்' என்று சபதஞ்செய்துகொண்டுசென்று வெட்டுண்டுகிடந்த கோவலனைச் சிலர்காட்டக்கண்டு அளவில்லாத துயரத்தையடைந்து அவனை முன்னிலைப்படுத்திப் பலவிதமாகப் பிரலாபித்து அவனுடம்பைத் தழுவிக்கொள்ள, அவ்வளவில், அவன் உயிர்பெற்றெழுந்துநின்று மதிபோன்ற முகம்வாடியதேயென்றுசொல்லிக் கையாலே அவள்கண்ணீரைமாற்ற, அவள் அவனுடைய

பாதங்களை இரண்டுகையாலும் பூண்டுகொண்டு பணிந்தாள்; உடனே அவன் நீஇங்கிருக்கவென்றுசொல்லி அவ்வுடம்பையொழித்துவிட்டுச் சுவர்க்கம்புகுதற்குத் தேவர்களோடுகூடிச் சென்றான்.

இங்கே இப்படியிருக்கப் பாண்டியன்நெடுஞ்செழியன்மனைவி, தீக்கனாக்கள் பலவற்றைக்கண்டுசென்று அவற்றைத் தன்கணவனோடு சொல்லிக்கொண்டிருந்தாள்; அப்பொழுது, கண்ணகி கோபந்தணியாதவளாய் அரண்மனைவாயிலையடைந்து வாயிலோனால் தன்வரவை அரசனுக்கறிவித்து அவனனுமதிப்படி அவன்முன்சென்று, அவன்கேட்பத் தன் ஊர் பேர்முதலியவற்றையும், ஆராயாது கோவலனைக் கொல்வித்த கொடுங்கோன்மையையும் வெகுதுணிவாகச்சொல்லிக் கோவலன் கள்வனல்லனென்று தெளிவித்தற்பொருட்டு, தன் சிலம்பினுள்ளேயுள்ள பரல் மாணிக்கமென்றாள்; அவன், தன்தேவிசிலம்பின் பரல் முத்தென்று சொல்லி, கொல்லப்பட்ட கோவலனிடமிருந்துகிடைத்த சிலம்பை வருவித்துவைப்ப, கண்ணகி அதையுடைத்தாள்; உடைக்கவே அதனினின்றும் மாணிக்கப்பரல் தெறித்தது; அதுகண்டு அரசன் நடுநடுங்கி, 'இழிந்த பொற்கொல்லன் சொல்லைக் கேட்ட கொடுங்கோன்மையையுடைய நானோவரசன்! நானோவரசன்!! ஐயோ! மிகப்புகழ்பெற்ற இந்த அருமந்தகுலம் என்னாற் பழியடைந்ததே! என் ஆயுள் இன்றே அழியக்கடவது' என்றுசொல்லி மிகவுந் துக்கித்து மயங்கித் தானிருந்த ஆசனத்தில்வீழ்ந்து இறந்தான்; அதனையறியாத அவன்மனைவி பாதுகாத்தருள வேண்டுமென்று கண்ணகிபாதத்தில் வீழ்ந்தாள், வீழவே கண்ணகி, 'நான் பத்தினியாயிருத்தல் உண்மையாயின், இவ்வூரை அழித்துவிடுவேன்பார்' என்று சபதம் செய்து தனது இடக்கொங்கையை வலக்கையால் திருகியெடுத்து அதை அந்நகரத்துன்மீதெறிந்தாள்; எறியவே, அக்கினிதேவன் பார்ப்பனக்கோலத்தோடுவந்து, 'மகாபத்தினி! உனக்குப்பிழைசெய்தநாளில் இவ்வூரை எரித்துவிடும்படி முன்னமே ஏவல் பெற்றுளேன், இப்பொழுது யாரையழித்தல்வேண்டும்' என்றுகேட்ப, அவள், "பார்ப்பாரறவோர் பசுப்பத்தினிப்பெண்டிர், மூத்தோர் குழவியெனு மிவரைக் கைவிட்டுத், தீத்திறத்தார் பக்கமே சேர்கென்று" சொல்ல, அப்பொழுதே அந்நகரில் அவள்சொல்லியவண்ணம் தீப்பற்றிக்கொண்டது. உடனே அந்நகரைக்காக்கும் வருணப்பூதங்கள் நான்கும் பெயர்ந்துசென்றன, அந்நகரத்துள்ள இடங்கள்பலவும் எரியத்தொடங்கவே அவ்வெம்மையை ஆற்றாதவளாகி மதுரையின் அதிதேவதை கண்ணகிபால்வந்துநின்று அவளைநோக்கி, 'யான் இந்நகரின் தெய்வம்; உனக்குச் சிலவற்றைச்சொல்லவந்தேன்; அவற்றை நீ கேட்பாயாக; இந்நகரத்து முன்பிருந்தபாண்டியர்களுள் ஒருவரேனும் சிறிதும் கொடுங்கோன்மையுடையாரல்லர்; இந்நெடுஞ்செழியனும் அத்தன்மையனே; ஆயினும் இது வந்தவரலாற்றைச் சொல்லுவேன்: முன்பு கலிங்கநாட்டிலுள்ள சிங்கபுரத்தரசனாகிய வசுவென்பவனும் கபிலபுரத்தரசனாகிய குமரனென்பவனும் தம்முட் பகைகொண்டு ஒருவரையொருவர் வெல்லக்கருதியிருந்தார்; அப்பொழுது சிங்கபுரத்துக் கடைவீதியிற்சென்று இயல்பாகப் பண்டம்விற்றுக்கொண்டிருந்த சங்கமனென்னும் வணிகனை அந்நகரத்தரசனிடம் தொழில்செய்துகொண்டிருக்கும் பரதனென்பவன் இவன் பகைவனுடைய ஒற்றனென்று பிடித்து அரசனுக்குக்காட்டிக் கொலைசெய்துவிட்டான்; அப்பொழுது அந்தச்சங்கமன்மனைவியாகிய நீலியென்பவள் மிகுந்ததுயரமுற்றுப் பதினான்குநாள் பலவிடத்துமலைந்து பின்பு ஒருமலையின்

மேலேறிக் கணவனைச்சேர்தற்பொருட்டுத் தன்னுடையஉயிரை விடுதற்குநினைத்த வள், 'எமக்குத் துன்பஞ்செய்தோர் மறுபிறப்பில் இத்துன்பத்தையே அடைவாராக வாக' என்று சாபமிட்டிறந்தாள்; அப்பரதன் இக்கோவலனாகப்பிறந்தான்; ஆத லால் நீங்கள் இத்துன்பமடைந்தீர்கள்; நீ இற்றைக்குப் பதினாலாவதுதினத்தின் பகல்சென்றபின்பு உன்னுடையகணவனைக்கண்டுசேர்வை' என்றுசொல்லி அவ ளைத்தேற்றிச்செல்ல, பின்பு கண்ணகி மதுரையைநீங்கி வையைக்கரைவழியே மேற்றிசைநோக்கிச்சென்று மலைநாடடைந்து அதிலுள்ள திருச்செங்குன்றென்னும் மலைமேலேறி ஒருவேங்கைமரத்தினிழலினின்று பதினாலாவதுதினத்தின் பகல் சென்றபின்பு அங்கே தெய்வவடிவத்தோடுவந்த கோவலனைக் கண்டுகளித்து அவனுடன் விமானத்தின்மேலேறித் தேவர்கள் போற்றுமபடி சுவர்க்கமடைந் தாள்.

[௩.—வஞ்சிக்காண்டம்]

கண்ணகி, இவ்வாறு கணவனோடு விமானமேறிச் சுவர்க்கம்போகக்கண்ட வேட்டுவமகளிரும் வேடர்களும் மிகுந்த ஆச்சரியமடைந்து தமது குறிச்சியிற் கண் ணகிபொருட்டு ஒருகுரவைக்கூத்துச் செய்வித்தார்கள் பின்பு அவ்வேடர்கள், இந்த அதிசயத்தைத் தந்நாட்டு அரசனாகிய செங்குட்டுவனுக்குத் தெரிவிக்க வேண்டு மென்றெண்ணிப் பலவகையான காணிக்கைப்பொருள்களையும கைக்கொண்டு சென்று, மலைவளங்காண்டற்குத் தனதுதேவி வேண்மாளோடும் தம்பி இளங்கோ வடிகளோடும் புறப்பட்டு நால்வகைததானையுஞ்சூழவந்து பேராற்றங்கரையிலுள்ள மணற்குவியலிலிருக்கும் சேரன்செங்குட்டுவனைக் கண்டுவணங்கிச் சொன்னார்கள், அதுகேட்டு அவ்வரசன் அதிசயிக்க, அங்குவந்திருந்த மதுரைத்தமிழ்ப்புலவராகிய சாத்தனார், மதுரையிற் கோவலன்கொலையுண்டதையும் அங்கே கண்ணகியால் நட ந்தவற்றையும் மதுராநகர்த்தெய்வம் அவர்களுக்குமுன்வந்து சொல்லியதையும் விரி த்துச்சொன்னார்; செங்குட்டுவன், பாண்டியன் இறந்ததற்கிரங்கித் தன்தேவியின் வேண்டுகோளால் கண்ணகியாகிய பத்தினிக்கடவுளைப் பிரதிஷ்டித்து வழிபடுதற் கெண்ணி, அவளுருவஞ்செய்தற்குச் சிலைகொணர்தற்பொருட்டு மந்திரிகளோடும் ஆலோசித்து, முன்னம் இமயமலையினின்றும்வந்த முனிவர்கள் 'ஆரியமன்னராகிய கனகனும் விசயனும் தமிழ்நாட்டரசரையிகழ்ந்தார்' என்றுசொல்லக்கேட்டிருந்த லால், அவ்வரசர்களைவென்று அவர்கள்முடியில் அச்சிலையையேற்றிக் கொண்டுவரு வேனென்று சபதம்செய்து, உடனே சேனைகளுடன்புறப்பட்டு நீலகிரியையடைந்து அங்குத்தங்கி இமயமலையினின்றும்வந்த முனிவர்கள்கூறிய ஆசியைப்பெற்று அப பாற்சென்று கங்காநதியையடைந்து தனது நட்பரசர்களாகிய கன்னர்கள் கொணர் ந்துவைத்திருந்த ஓடமேறி அக்கரைசென்று அவ்விடத்திற்றங்கி அங்கே போர்செய் தற்குவந்த கனகவிசயரையும் அவருக்குத்துணையாகவந்த உத்தரன்முதலிய அரசர் களையும்வென்று தாபதவேடமுதலியவற்றைக்கொண்டோடிய அவ்வரசர்களைப்பிடி த்து அகப்படுத்திக்கொண்டு தன்மந்திரியாகிய வில்லவன்கோதையையும் சேனை யையும் அனுப்பி இமயமலையினின்றும் சிலைவருவித்து அதைக் கனகவிசயர்முடியி லேற்றி விதிப்படி கங்கையில் நீர்ப்படைசெய்து இப்பால்வந்து அதன்தென்கரை யிற் சேனையோடுந்தங்கி அங்குக் கங்கையாடிவந்த மாடலனாற் கோவலன் வரலாறு

முதலியவற்றையும் நெடுஞ்செழியனுக்குப்பின்பு இளங்கோவேந்தன் அரசாட்சிசெய்துவருதலையுமறிந்து அம்மாடலனுக்குத் தன் நிறையாகிய ஐம்பதுதுலாம்பொன் தானஞ்செய்து தன்னால்வெல்லப்பட்ட கனகவிசயரைச் சோழனுக்கும் பாண்டியனுக்கும் காட்டிவரும்படி நீலன்முதலிய ஒற்றர்களையனுப்பிவிட்டுச் சேனையுடன் புறப்பட்டு இடையிலுள்ளவளங்களையெல்லாம் பார்த்துக்கொண்டு வஞ்சிநகரமடைந்து ஆங்குள்ளவர்களோடும் அளவளாவி மகிழ்வுற்றிருந்தான்; அப்படியிருக்கையில், ஒருநாள், முன்பு அனுப்பப்பட்ட நீலன்முதலிய ஒற்றர்கள் வந்து, 'தோல்வியடைந்து மாறுவேடம்பூண்டுசென்ற கனகவிசயர்முதலியோரைப் பிடித்துக்கொண்டுவந்ததைச் சோழனும் பாண்டியனும் இகழ்ந்துசொன்னார்கள்' என்றுசொல்லக்கேட்டு மிகுந்தகோபங்கொண்டு, அங்குவந்திருந்த மாடலன், 'நீ கோபந்தணிக; இளமை யாக்கை செல்வமுதலியவைகள் நிலையா; நல்லபதத்தையடைவிக்கும் யாகத்தை இனிச்செய்தல்வேண்டும்' என்று பல ஏதுக்கள்முகமாக எடுத்துச்சொல்லக்கேட்டு அக்கோபந்தணிந்து, அம்மாடலன்சொல்லியவண்ணம யாகத்திற்குரியவற்றை அமைக்கும்படி வில்லவனையனுப்பி, ஆரியவரசர் முதலியோரைச் சிறையினின்றும்நீக்கி அவர்களுக்குவேண்டியவற்றை உபசரிக்கும்படி வில்லவன்கோதைக்குச்சொல்லி அன்றோர்பலருடன்சென்று சிறந்த கம்மியர்களாற்செய்யப்பட்ட ஓராலயத்தில் இமயச்சிலையாலியற்றப்பட்டுள்ள வடிவத்திற் பத்தினிக்கடவுளாகிய கண்ணகியைப் பிரதிஷ்டைபண்ணி விதிப்படி நித்தியபூசைமுதலியவற்றை நடத்தும்படி கட்டளையிட்டு அங்கேயிருந்தான். அப்படியிருக்கும்பொழுது, முன்னம், கோவலன் கொலையுண்டதுமுதலியவற்றை மாடலனாற்கேட்ட தேவந்தியும் கண்ணகியின செவிலித்தாயும் அவளடித்தோழியும் காவிரிப்பூம்பட்டினத்தினின்றுநீங்கி மதுரையையடைந்து அங்கே கண்ணகியைக்காணமையால் மாதரிமகள் ஐயையைக் கண்டு அவளையழைத்துக்கொண்டு வையைக்கரைவழியேசென்று மலைநாடுபுகுந்து கண்ணகிநோயிலையடைந்து அங்கிருந்த செங்குட்டுவனைக்கண்டு தங்களை இன்னாரென்று அறிவித்துக் கண்ணகியின் பிரிவாற்றாமையால் வருந்திப் புலம்பினார்கள்; அப்பொழுது கண்ணகி தெய்வவடிவத்தோடு வெளிப்பட்டுச் செங்குட்டுவனுக்குக் காட்சிகொடுத்து வாழ்த்தினள்; பின்பு செங்குட்டுவன் மாதவிமகளாகிய மணிமேகலையின் துறவைத் தேவந்திசொல்லக்கேட்டு, அவள்மேல் ஆவேசித்த சாத்தனென்னுந்தெய்வத்தின்கட்டளையால் மாடலன் தன்கையிலுள்ள கமண்டலநீரை அங்கு வந்திருந்த மூன்று இளம்பெண்கள்மீது தெளிப்ப உடனே கண்ணகியைக்குறித்துப் புலம்பிய அம்மூவரையும் கண்ணகிதாய் கோவலன்தாய் மாதரி என்னும் இம்மூவருடைய பிறப்பினராகஅறிந்து, அவர்கள் அவ்வாறுபிறந்ததற்குக் காரணத்தை மாடலன்சொல்லக்கேட்டுப் பத்தினிக்கடவுளுக்கு நித்தியபூசை செய்யும்படி தேவந்திக்குச்சொல்லித் தான் அக்கடவுளை மூன்றுமுறை வலம்வந்து வணங்கி நின்றான்; அப்பொழுது ஆரியமன்னரும் மாளவவேந்தரும் இலங்காபுரத்தரசனாகிய கயவாகுவும் அங்குவந்து அக்கடவுளைநோக்கி 'இச்செங்குட்டுவனைப்போல எங்களுடைய நாட்டில் யாங்கள் உனக்குச்செய்யும் பூசையில் நீ எழுந்தருளி எங்களுக்கு அருள்செய்யவேண்டும்' என்றுபிரார்த்திப்ப, 'நீங்கள்விரும்பியபடியே வரந்தந்தேனென்று' அப்பொழுது ஒருகுரல உண்டாயிற்று அதனைக்கேட்ட செங்குட்டுவனும் மற்றையரசர்களும் மிகுந்தசந்தோஷமடைந்தார்கள். பின்பு, செங்குட்டுவன் மாடலனோடு யாகசாலைக்குச் சென்றான். அப்பால், இளங்கோவடிகள் பத்தினிக்கடவுள்

கோயிலுக்குச்சென்றார் ; அவருக்குமுன்பு பத்தினிக்கடவுள் தேவந்திமேற்றோன்றி அவருடைய வரலாறுகளைச் சொல்லி உவப்பித்தாள்.

கோவலன் வெட்டுண்டுவிழுந்தகாலந்தொடங்கிப் பாண்டியநாட்டில் மழை இல்லாதுபோயிற்று ; வறுமையும் நோயும் அதிகரித்தன ; அதுதெரிந்து கொற்கை நகரத்திருந்த அரசனாகிய இளஞ்செழியன் பத்தினிக்கடவுளுக்கு ஆயிரம்பொற் கொல்லரைப் பலியிட்டுக் களவேள்வியாற்சாந்திசெய்து விழாவெடுத்தலால், அந் நாட்டில் மிகவும் மழைபெய்தது ; முற்கூறிய வறுமையும் நோயும் நீங்கின. அதனைக்கேள்வியுற்றுக் கொங்குமண்டிலத்தரசரும், இலங்காபுரத்தரசனாகிய கயவாகுவும், சோழநாட்டில் உறையூரிலிருந்த அரசனாகிய பெருநற்கிள்ளியும் கண்ணகிக்குக் கோயில்கட்டுவித்து நித்தியபூசை விழாமுதலியவற்றைச்செய்துவழிபட அவர் நாடுகள் மிகுந்த வளமுற்றன.

அபிதானவிளக்கம்.

அயிரை - ஒருநதி.

அரங்கம் - திருவரங்கம்.

அரட்டன் - ஒருசெட்டி; இவன் சேரநாட்டிலுள்ளான்; கோவலனுக்கும் கண்ணகிக்கும் சேர்ந்த துன்பத்தை மாடலன்சொல்லக்கேட்டு இறந்த பெருமனைக் கிழத்தியும் கண்ணகிதாயும் இவனுக்குப புத்திரிகளாக வந்து பிறந்தனர்

அவந்தி - ஒருதேசம்; உஞ்சைநகர் = உச்சயினி

அழகர்மலை - இது பாண்டிநாட்டுள்ளது; இதிற் புண்ணியசரவணம பவகாரணி இட்டசித்தியென்னும் மூன்றுபொய்கைகளும் சிலம்பாறென்று ஒரு ஆறும் உள்ளன. இம்மலையில திருமால நின்றகோலத்துடன் எழுந்தருளியிருக்கின்றார்.

அழும்பில் - சேரநாட்டிலுள்ள ஒரு குறுநிலமன்னவனுடைய வூர்.

அழும்பிலவேள - செங்குட்டுவனுடைய நட்பாளனாகிய ஒரு குறுநிலமன்னன

ஆடகமாடம் - திருவனந்தபுரத்திற்கும், இரவிபுரத்திற்கும் பெயர்; இரவிபுரமென்பது மலைநாட்டிலுள்ளதோரூர்.

ஆரியமன்னா - வடக்கிலகனுள்ள ஆரியநாட்டரசர்.

இட்டசித்தி - அழகர்மலையிலுள்ள ஒரு பொய்கை; இது ஆடுவோர்க்கு நினைத்தவெல்லாங் கொடுப்பது

இடும்பில் - ஒரூர்.

இமயம் - ஒருமலை.

இயக்கி - ஒருபெண்தெய்வம்; ஆரியாங்கனையென்பர்; இப்பெயா பாண்டிநாட்டில் இசக்கியென வழங்குகின்றது.

இருநிதிக்கிழவன் - கோவலனுடைய தந்தையின் சிறப்புப்பெயர், இவன், கோவலன் கொலையுண்டிறந்தமைகேட்டுத் துறவுபூண்டான்.

இலங்கை - கடல்சூழ்ந்த இலங்காபுரமென்னுநகரம்; இது கயவாகுவென்னுமரசனுடைய இராசதானி; இதனை இக்காலத்து அனுராதபுரமென்பர்.

இலஞ்சிமன்றம் - காவிரிப்பூம்பட்டினத்துள்ள ஐந்துமன்றத்துள் ஒன்று, இது பலநோயையும்நீக்கும் ஒருபொய்கையையுடையது.

இளங்கோசர் - கொங்குமண்டலத்தரசர்.

இளங்கோவடிகள் - சிலப்பதிகாரநூலாசிரியர்; இவரை இளங்கோவென்றும் சேரமுனியென்றும் அடிகளென்றும் அடியார்க்குநல்லார் வழங்குவர்.

இளஞ்செழியன் - கொற்கைநகரத்திருந்த வெற்றிவேற்செழியன்.

உஞ்சை - உச்சயினிமாநகரம்; இது அவந்திதேசத்துள்ளது.

உத்தரகுரு - போகபூமியிலொன்று.

உத்தரகௌத்தன் - வாரணவாசிநகரத்தரசன்.

உத்தரன் - கனகவிசயர்க்குத் துணையாயினோரரசன்.

உருத்திரன - கனகவிசயர்க்குத் துணையாயினோரரசன்.

உருப்பசி - தேவகணிகையரிலொருத்தி; இவள், அகத்தியமுனிவர் சாபத்தால் மானிடமகளாகப பிறந்து மாதவியென்று பெயர்பெற்றாள்.

உறந்தை - உறையூர்; சோழர்களின் இராசதானியுளொன்று. இக்கதைநிகழ்ந்தபொழுது இதில்இருந்த சோழன் பெருநற்கிள்ளியென்பவன்.

ஊங்கணூர் - சேரநாட்டிற் கடற்கரைக்கணுள்ளதோரூர், இதன்பக்கமாகக் கடலில வசந்தால முளைத்துநின்ற ஒரு கடப்பமரத்தைச் சேரனொருவன் வெட்டினான்.

ஐயை - மாதரிமகள்; இவள், கண்ணகிபால் மிக அன்புள்ளவளாகவிருந்தமையால் தேவந்தியோடு சோணாடுசென்று கண்ணகிகோயிலை யடைந்தாள்.

கங்கை - ஒருநதி.

கச்சி - காஞ்சிநகரம்.

கண்ணகி - கோவலன்மனைவி; இவள் கற்புமுதலியவற்றை வெளிப்படுத்தற் பொருட்டே இச்சிலப்பதிகாரம் செய்யப்பட்டது. இவ்ளை மறக்கற்புடையாளென்பர். திருமாபத்தினி, பத்தினிக்கடவுள், மங்கலமடந்தை, வீரபத்தினியென்பன இவளுடைய பரியாய நாமங்கள்.

கபிலபுரம் - கலிங்கநாட்டிலுள்ள ஒருநகரம்.

கயவாகு - இலங்காபுரத்தரசன்; இவன், தன்னகரத்தில் கண்ணகியாகிய பத்தினிக்கடவுளுக்கு முந்திப் பலிபீடஞ் செய்வித்துக் கோயில்கட்டுவித்து வருடந்தோறும் உற்சவம்நடத்தியவன்.

கரிகால்வளவன் - காவிரிப்பூம்பட்டினத்திருந்து அரசாண்ட ஒரு சோழன்; இவனுக்குக் கரிகாலனென்றும் பெயர்; இவன் இமயமலைவரையிற்சென்று இடையிலுள்ள அரசர்களைவென்று அரசாட்சிசெய்தவன்.

கலிங்கம் - வடநாடுகளுள் ஒன்று.

கவுந்தி - சைனமதத்தினளாகிய ஒருதவமுதியோள்; கவுந்தியடிகளென்று இவளைக்கூறுவர். இவள், கோவலனும் கண்ணகியும் மதுரைக்குச் செல்லும்பொழுது அவர்களுக்கு வழித்துணையாகச்சென்று இடையில் அவர்களை அவமதித்துப்பேசிய இருவரை நரியாகும்படி சபித்து மதுரையையடைந்தபின் கண்ணகியை மாதரியிடம் அடைக்கலமாகக் கொடுத்தவள்.

கன்னர் - செங்குட்டுவனுக்கு நட்பினராகிய ஆரியவரசர்; இவர் நூற்றுவர்.

கனகவிசயர் - கனகனும் விசயனும்; இவர் ஆரியமன்னருள் ஒருசாரார்; இவ்விருவரும் பாலகுமாரனபுதல்வர்; முதலிற செங்குட்டுவனுக்குப் பகைவராயிருந்து பின்பு அவனால் வெல்லப்பட்டோர்.

காப்பியக்குடி - சோழநாட்டிலுள்ள ஓரூர்; இது, சீகாழிக்குச் சிறிதுதூரம் வடக்கேயுள்ளது; தேவந்தியின் கணவனும் தேவனுமாகிய சாத்தன் மானிடமகனாய் இவ்வூரில்வளர்ந்தான்.

கார்த்திகை - வார்த்திகனென்னும் அந்தணன்மனைவி; தக்ஷிணாமூர்த்தியென்பவனது தாய்.

காவிரி - ஒருநதி.

கீரந்தை - மதுரையிலிருந்த ஒருவன்பெயர்.

குடமலை - மேற்றிசைக்கண்ணதோர்மலை; காவிரிதோன்றுவதற்கிடமாயுள்ளது.

குணவாயில் - திருக்குணவாயிலென்பதோரூர்; வஞ்சிநகரத்திற்குக் கீழ்த்திசைக்கண் உள்ளது. இளங்கோவடிகள் துறவுபூண்டு இவ்வூரிலிருந்தார்.

குமரன் - கபிலபுரத்தரசன்.

குமரி - தென்பாற்கண்ணதோராறு; இஃது அக்காலத்தே கடல்கொள்ளப்பட்டது; மலைநாடுகளுள் ஒன்றற்கும் பெயர்.

குமரிக்கோடு - தென்பாற்கண்ணதோர் மலை.

குயிலாலுவம் - இமயமலையின்பக்கத்துள்ளதோர் சிவஸ்தலம்.

கூனி - மாதவிதோழி, இவளுக்கு வசந்தமாலையென்றும் பெயருண்டு.

கொங்கர் - கொங்குமண்டலத்தரசர்.

கொங்கு = கொங்குமண்டலம் - குடநாடு.

கொடுங்கோளூர் - சேரநாட்டிலுள்ளதோரூர்; இக்காலத்துக் கொடுங்களூரென்று வழங்கப்படுகின்றது; திருவஞ்சைக்களத்திற்கு ஒன்றரைநாழிகை வழித்தூரத்திலுள்ளது. இதுதான வஞ்சிநகரமென்பது சிலருடையகொள்கை. [திருவஞ்சைக்களம் திருவஞ்சிக்குளமென்று இக்காலத்து வழங்கி வருகின்றது.]

கொடும்பை - கொடும்பாளூர்; இது பாண்டிநாட்டுள்ளது; அக்காலத்தில உறையூரிலிருந்து மதுரைக்குச்செல்லும் வழியிலுள்ளதென்றுதெரிகிறது.

கொல்லி - ஒருமலை.

கொற்கை - பாண்டியர்களின் பழைய இராசதானி, இக்கதை நிகழ்ந்தபொழுது இந்நகரத்திருந்த அரசன் வெற்றிவேற்செழியனென்பவன், இஃது இப்பொழுது மிகச்சிறிய ஊராகவிருக்கின்றது.

கோசர் - கொங்குமண்டலத்தரசர்; இவர் தங்கள்நாட்டில் கண்ணகிக்குத் திருவிழாச்செய்தவர்.

கோப்பெருந்தேவி - நெடுஞ்செழியன் மனைவி, தன்கணவன் கண்ணகிக்கு வழக்கில்தோற்று இறந்தமைதெரிந்து உடனே மரித்தாள்; இவளை அறக்கற்புடையாளென்பர்.

கோவலன் - இச்சிலப்பதிகாரக்கதாநாயகனான ஒரு வைசியன்; இப்பெயர் கோபாலனென்பதன் மரூஉ.

கோழி - உறையூர், முற்காலத்து இதிலிருந்த ஒருகோழி யானையைப் போரில் வென்றமையால் இதற்கு இப்பெயர் வந்தது.

கௌசிகன் - மாதவிக்கு நட்பாளனாகிய காவிரிப்பூம்பட்டினத்துள்ள ஓர் அந்தணன்; இவனைக் கோசிகனென்றுங் கூறுவர். இவன், கோவலன் மதுரைக்குப்போகும்பொழுது வழியிடையில் அவனைக்கண்டு மாதவியோலையைக்கொடுத்தோன்.

சங்கமன் - ஒருவாணிகன், நீலிகணவன்.

சஞ்சயன் - செங்குட்டுவனுடைய தூதரில் தலைவன்.

சாக்கையன் - பறையூரிலிருந்த வோரந்தணன்.

சாத்தன் - தொண்ணூற்றறுவகைச் சமய சாத்திரங்களைப்பயின்று மகாசாத்திரனென்று பெயர்பெற்ற ஒரு தெய்வத்தின்பெயர்.

சாத்தனார் - இந்நூலாசிரியர்காலத்திருந்தஒரு புலவர், கண்ணகி மதுரையை அழித்ததுமுதலியவற்றைச் செங்குட்டுவனுக்கும் இளங்கோவடிகட்கும் சொன்னவர்; சாத்தனாரெனவும், சீத்தலைச்சாத்தனாரெனவும், தமிழாசானெனவும், மதுரைக்கூலவாணிகன் சாத்தனெனவுமிவரைக்கூறுவர், மணிமேகலை நூலாசிரியர் இவரே.

சாயலன் - காவிரிப்பூம் பட்டினத்துள்ள ஒரு வணிகன்; வணிகர்கள்பெறுதற்குரிய எட்டிப்பட்டம்பெற்றோன்.

சாலினி - வேட்டுவ மகளாகிய தேவராட்டி.

சிங்கபுரம் - கலிங்கநாட்டிலுள்ள ஒரு நகரம்.

சிங்கன் - கனகவிசயர்க்குத் துணையாயினோரரசன்.

சித்திரன் - கனகவிசயர்க்குத் துணையாயினோரரசன்.

சித்திராபதி - மாதவிநற்றாய்.

சிலம்பாறு - அழகர்மலைக்கணுள்ளதோராறு; இதற்கு நூபுரகங்கையென்றும் பெயருண்டு.

சிவேதன் - கனகவிசயர்க்கு நட்பாளனாகிய ஓரரசன்.

சிறுமலை - பாண்டிநாட்டுள்ளதோர்மலை.

சூரியகுண்டம் - காவிரியின் சங்கமுகத்துக்கு அயலதாகிய ஒரு தடாகம்.

செங்குட்டுவன் - இளங்கோவடிகட்கு மூத்தோனாகிய சேரன்; இவன், கண்ணகி தன்னாட்டையடைந்து தன் கணவனோடு சுவர்க்கம்புகுந்தாளென்பதைக்கேட்டு இமயமலையிலிருந்து சிலைகொணர்ந்து அவள்வடிவமமைப்பித்துப் பிரதிஷ்டை செய்வித்துப் பூசையுந் திருவிழாவுநடத்தினோன்.

செங்குன்று - கொடுங்கோளூர்க்கு அயலதாகிய ஒருமலை, இதில் கண்ணகி, ஒரு வேங்கைமரத்தினிழலில் நிற்கும்பொழுது, தான் அங்குத் தெய்வவடிவத்தோடுவந்த கோவலனைக் கண்டு சுவர்க்கம்புகுந்தாள்.

செங்கோடு - திருச்செங்கோடென்னுமலை; இதனை முருகக்கடவுளுக்குரிய இடமாக இளங்கோவடிகள் கூறியிருக்கின்றனர்.

செந்தில் - பாண்டி நாட்டிலுள்ளது; முருகக்கடவுளின் படைவீடுகளுளொன்று, இக்காலத்தது திருச்செந்தூரென்று வழங்கப்படுகின்றது.

சேடக்குடும்பியன் - திருவனந்தபுரத்துள்ளானோரந்தணன்; தன்பால் அடைக்கலமாக இருந்த கண்ணகிக்கு நேர்ந்த துன்பங்களைக்கேட்டுத் தீயில் விழுந்திறந்த மாதரி, மறுமையில் இவனுக்கு மகளாயினள்.

சேடி - ஒரு வித்தியாதரநகரம்.

சேரலாதன் - செங்குட்டுவனுக்கும் இளங்கோவடிகட்கும் தந்தை.

சோதை - சேரலாதனமனைவி.

சோமகுண்டம் - காவிரியின் சங்கமுகத்துக்கு அயலதாகிய ஒரு தடாகம்.

சோணை - வச்சிரநாட்டைச்சார்ந்த ஓராறு.

தக்கிணன் - தக்ஷிணாமூர்த்தி; இவன், பாண்டிநாட்டுள்ள திருத்தங்காலிலிருக்கும்வார்த்திகனென்னும் ஓரந்தணன் புதல்வன்.

தலைச்செங்கானம் - சோழநாட்டுள்ள தோரூர். தலைச்செங்காடெனவும் வழங்கும். இது மாடலனென்னும் அந்தணனூர், காவிரிப்பூம்பட்டினத்தருகிலுள்ளது.

தனுத்தரன் - கனகவிசயர்க்கு நட்பாளனாகிய அரசன்.

திருச்செங்கோடு - முருகக்கடவுளின் திருப்பதியாகிய ஒருமலை.

திருத்தங்கால் - பாண்டிநாட்டுள்ள தோரூர்; இது வார்த்திகனுக்கு ஒரு பாண்டியனால் பிரமதாயமாகக்கொடுக்கப்பட்டது; ஸ்ரீவில்லிபுத்தூருக்குச் சமீபமாகவுள்ளது; இதனைத் திருத்தண்காலென்று பிற்காலத்தார் வழங்குவர்.

திருமாபத்தினி - கண்ணகியின் சிறப்புப் பெயர்.

துவரை - கண்ணன் பசுமேய்த்துவிளையாடியதோரூர்.

தேவந்தி - கண்ணகியின் பார்ப்பனத்தோழியாய் மாநாய்கன்மனையில் வளர்ந்தவள்; மானிடவடிவங்கொண்ட சாத்தனென்னும் தெய்வத்தின் மனைவி; தான்கண்ட தீக்கனவைக் கண்ணகி சொல்லியபொழுது தேற்றியவள்; கண்ணகிக்கும் கோவலனுக்கும் நேர்ந்ததுன்பத்தைக்கேட்டு மதுரையையடைந்து பின்பு வஞ்சிநகரஞ்சென்று, அங்குப் பிரதிட்டிக்கப்பட்டிருந்த கண்ணகி வடிவத்தைப் பூசித்தவள்.

தொண்டி - சோழகுலத்தோருறையும் ஒருநகரம்.

தொழுனை - யமுனையாறு.

நீலகிரி - ஒருமலை, செங்குட்டுவன் வஞ்சிநகரத்திலிருந்து இமயமலைக்குச்செல்லும்பொழுது இதில ஒருநாள் தங்கியிருந்தான்.

நீலன் - செங்குட்டுவனுடைய ஒற்றரில் தலைவன்.

நீலி - சங்கமனென்னும் வைசியன்மனைவி; கோவலன் கொலையுண்டிறக்கும்படி அவனுடைய முற்பிறப்பில் அவனைச்சபித்தவள்.

நெடியோன்குன்றம் - வேங்கடமலை. இது தமிழ்வழங்குநிலத்திற்கு வடவெல்லையாயுள்ளது.

நெடுங்கல்நின்றமன்றம் - காவிரிப்பூம்பட்டினத்துள்ள ஐவகைமன்றத்துளொன்று; இது, பித்தேறினோர் நஞ்சுண்டோர் பாம்பாற்கடியுண்டோர் பேய்பிடிக்கப்பட்டோராகிய இவர்கள் துயரத்தை நீக்குவது.

நெடுங்குளம் - பாண்டிநாட்டுள்ள ஓரூர்; இஃது, அக்காலத்தில் உறையூரிலிருந்து மதுரைக்குச்செல்லும்வழியிலுள்ளது.

நெடுஞ்செழியன் - மதுரையிலிருந்த ஒரு பாண்டியன்: இவன் ஆராயாது கோவலனைக் கொலைபுரிவித்துக் கண்ணகிக்கு வழக்கிற்றோற்றுத் தனாகுண்டான பழியைநினைந்து உயிரைவிட்டவன்.

நெடுவேள்குன்றம் - திருச்செங்குன்றென்னுமலை; இது சேரநாட்டிலுள்ளது.

நேரிவாயில் - உறையூரின் தெற்குவாயிலின்கண்ணதோரூர்; இதில் தன் மைத்துனனுக்குப்பகைவர்களாகியஒன்பது அரசர்களைச் செங்குட்டுவன்போர்செய்துவென்றான்.

பட்டினப்பாக்கம் - காவிரிப்பூம் பட்டினத்தின் உண்ணகர்.

பத்தினிக்கடவுள் - கண்ணகி, இவளுக்கு இப்பெயர், கோவலனோடு சுவர்க்கஞ்சென்றபின்பு வந்தது. இலங்கையின் பலபாகத்துமுள்ள கண்ணகிகோயிலைப் பத்தினிகோயிலென்று அங்குள்ள சிங்களவர் வழங்கிவருவதாகத் தெரிகிறது.

பரதன் - கோவலனுடைய முற்பிறப்பின் பெயர்; இவன் சிங்கபுரத்தரசனிடத்திருந்தபொழுது காரணமின்றிச் சங்கமனென்னும் வணிகனைக் கொன்று அவன் மனைவியாகிய நீலியாற் சபிக்கப்பட்டான்.

பராசரன் - சோழநாட்டுள்ள ஒரந்தணன்; இவன் மலைநாடுசென்று மாந்தரஞ்சேரலிரும் பொறையென்னுஞ் சேரனிடத்து மிக்க பரிசுபெற்று மீண்டுவருங்கால் திருத்தங்காலிலிருந்த தக்ஷிணாமூர்த்தியென்னும் பார்ப்பனச் சிறுவனைப் பரீக்ஷித்து அவனுக்குள்ள கல்விவன்மையைக் கண்டு அவனுக்கு நன்கொடையளித்தவன்.

பவகாரணி - அழகர்மலையிலுள்ள ஓர் பொய்கை; இஃது, நீராடுவோர்க்குப் பழம்பிறப்பிற்செய்தவற்றை யுணர்த்துவது.

பழையன் - பாண்டிநாட்டில் மோகூரிலுள்ள குறுநிலமன்னன்.

பறையூர் - சேரநாட்டிலுள்ளதோரூர்.

பஃறுளி - குமரியாற்றிற்குத் தெற்குள்ள தோராறு; இஃது அக்காலத்தே கடல் கொள்ளப்பட்டது.

பாலகுமாரன் - ஆரியமன்னருளொருவன்; செங்குட்டுவனால் வெல்லப்பட்ட கனகவிசயர் தந்தை.

பாவைமன்றம் - காவிரிப்பூம்பட்டினத்திலுள்ள ஐவகை மன்றத்துளொன்று; இஃது, அரசனுடைய செங்கோல் கோடுதல்முதலியகுற்றங்களின், அவற்றைப் பாவை அழுது தெரிவித்தற்கிடமாகவுள்ளது.

புகார் - காவிரிப்பூம்பட்டினம்.

புண்ணியசரவணம் - அழகர்மலைக்கணுள்ளதோர் பொய்கை; இது, தன்பால் நீராடுவோர்க்கு ஐந்திரவியாகரணத்தைத் தெரிவிப்பது.

பூதசதுக்கம் - காவிரிப்பூம்பட்டினத்துள்ள ஐவகை மன்றத்துளொன்று, இது, கூடாவொழுக்கமுடையோர் முதலிய பாவிகளைப் பூதம்புடைத்துண்ணுதற்கிடமாயுள்ளது.

பூதம் - தனக்கு உதவிசெய்த முசுகுந்தனைப் பாதுகாத்தற்பொருட்டு இந்திரனால் அனுப்பப்பட்டுக் காவிரிப்பூம்பட்டினத்திற்கு வந்து கோயில்கொண்டிருப்பதோர்தெய்வம்.

பெருங்கிள்ளி - இக்கதை நிகழ்ந்தபொழுது உறையூரிலிருந்த சோழன், இப்பெயர் பெருநற்கிள்ளியெனவும் வழங்கும்.

பெருமகள் - கோவலன்மாதா; இவளைப் பெருமனைக்கிழத்தியென்றும், பெரிய கிழத்தியென்றும் வழங்குவர். இவள், மதுரையிற் கோவலன் கொலையுண்டிறந்ததை மாடலனால் தெரிந்து வருந்தித் தன் உயிரை விடுத்தனள்.

பெருமலை - சேரநாட்டிலுள்ளதோர்மலை.

பேராறு - சேரநாட்டிலுள்ளதோராறு.

பைரவன் - கனகவிசயருடைய நட்பாளராகிய அரசருளொருவன்.

பொதியில் - பாண்டிநாட்டிலுள்ளதோர் மலை; இது, தேவர்களுக்கும் முனிவர்களுக்கும் பொதுவிடமாயிருத்தலின் இப்பெயர் பெற்றது.

பொருனை - தாமிரபன்னிநதி; இது பாண்டிநாட்டுள்ளது, இவ்வாற்றிற்குரியவன் சேரனென்றுங் கூறியிருக்கின்றனர்.

மகதம் - ஒருநாடு.

மங்கலமடந்தை - ஒரு பெண்தெய்வம்; மங்கலாதேவியென்பர்; இத்தெய்வத்திற்கு ஆலயம் மலைநாட்டிலும் அதைச் சார்ந்த நாடுகளிலும் உண்டு. மங்களூரென்பதை இதுபற்றிவந்த மங்கலாபுரமென்னும்பெயரின் மரூஉவென்று கூறுவர்.

மணிமேகலை - ஒரு பெண்தெய்வத்திற்கும், கோவலனுக்கு மாதவிபாற் பிறந்த மகளுக்கும், ஒரு தமிழ்நூலுக்கும் பெயர்.

மணிவண்ணன் - காவிரிப்பூம்பட்டினத்திற்கு மேற்கே கோயில் கொண்ட திருமாலின் பெயர்.

மத்தியம் - ஒருதேசம்.

மதுரை - பாண்டியநாட்டிராசதானிகளுளொன்று, இக்கதைநிகழ்ந்தபொழுது இதில் அரசனாக இருந்த பாண்டியன், நெடுஞ்செழியன்.

மதுரைமாதெய்வம் - மதுரைநகரத்தின் அதிதேவதையாகிய ஒரு பெண்தெய்வம்; இத்தெய்வத்தால் கண்ணகி கோவலனுடைய முற்பிறப்பு வரலாறுமுதலியவற்றைத் தெரிந்து கொண்டாள்.

மருவூர்ப்பாக்கம் - காவிரிப்பூம்பட்டினத்திலொருபாகம்.

மாங்காடு - குடமலைப்பக்கத்துள்ளதோரூர்; இது இக்காலத்து மாங்காடென்று வழங்கப்படுகின்றது.

மாசாத்துவான் - கோவலன்தந்தையின் இயற்பெயர்; இவன், கோவலனிறந்ததை மாடலன் சொல்லக்கேட்டுத் தனக்குள்ள பொருளனைத்தையுந் தானஞ்செய்துவிட்டுத் துறவு பூண்டான்.

மாடலன் - தலைச்செங்கானத்திலுள்ள ஒரு அந்தணன், கோவலனுடைய நட்பாளன், கோவலன் மதுரையிற் கொலையுண்டது முதலியவற்றைக் காவிரிப்பூம்பட்டினத்தார்க்குச்சொல்லி, தன் சொல்லால் அவர்களிற்சிலர் இறந்தமைதெரிந்து, அப்பாவத்தைப்போக்குதற்பொருட்டுப் போய்க் கங்கையாடி மீளுகையில் இடையே செங்குட்டுவனைக்கண்டு, அவனவளாவி, வஞ்சிநகரஞ்சார்ந்து, அவனை யாகஞ்செய்யும்படி தூண்டி, அது செய்வித்து, அவனை நல்வழிப்படுத்தினவன்.

மாதரி - மதுரையைச்சார்ந்த ஆயர்பாடியிலிருக்கும் இடைச்சியர்தலைவி; இவள்,

கோவலன் கொலையுண்டிறந்ததையும் கண்ணகி துன்புற்றதையும் கேட்டு வருத்தமுற்றுத் தீயிலவிழுந்திறந் தாள்.

மாதவி - அகத்தியமுனிவர் சாபத்தால் உலகிற்பிறந்த உருப்பசிக்கும், கோவலன் காதற்பரத்தைக்கும் பெயர்.

மாந்தரஞ்சேரலிரும்பொறை - சேரருள் ஒருவன், பராசரனென்னும் அந்தணனுக்குப் பரிசில்கொடுத்தோன்.

மாநாய்கன் - கண்ணகிபிதா, இவன், கோவலன் கொலையுண்டதையும் கண்ணகி துன்புற்றதையும் மாடலன்கூறக் கேட்டுத் துன்புற்றுத் தன்பொருளை யெல்லாம் தானம்செய்துவிட்டுத் துறவுபூண்டான்.

மாலதி - காவிரிப்பூம்பட்டினத்திலுள்ள ளோர் பார்ப்பனி.

மாளுவவேந்தர் - மாளுவதேசத்தரசர்

முசுகுந்தன் - சூரியனமரபிற்பிறந்த ஒரு சக்கரவர்த்தி; இவன் காவிரிப்பூம்பட்டினத்தை முன்னம் ஆண்டவன்.

மேரு - ஒருமலை

யவனர் - வடநாட்டினருள் ஒருபகுதியார்.

வச்சிரநாடு - சோணையாற்றின்கரையிலுள்ளது.

வசந்தமாலை - மாதவிதோழி, கூனியென்றும் இவளுக்குப்பெயருண்டு.

வசு - சிங்கபுரத்தரசன்

வஞ்சி - சேரர்களுடைய இராசதானி. இதைக் கொடுங்கோளூரென்பார் சிலர், திருவஞ்சைக்களமென்பாருஞ்சிலர், இவ்விரண்டூர்களும் கொச்சியைச்சார்ந்தநாட்டில் ஒன்றற்கொன்று சமீபமாக உள்ளன.

வயலூர் - பாண்டிநாட்டிலுள்ள ஓரூர். இது, வார்த்திகனுக்கு ஒரு பாண்டியனால் பிரமதாயமாகக் கொடுக்கப்பட்டது. திருத்தங்காலுக்குக் கிழக்கேயுள்ளது.

வார்த்திகன் - தக்ஷிணாமூர்த்திபிதா.

வாரணவாசி - மத்யமதேசத்துள்ள ஒரு நகர்.

விசித்திரன் - கனகவிசயருடைய நட்பாளனாகிய ஓரரசன்.

வியலூர் - செங்குட்டுவனால், வெல்லப்பட்டவூர்களுளொன்று, வியலூரெனவும் வழங்கும்.

வில்லவன்கோதை - செங்குட்டுவன் மந்திரி.

வீரபத்தினி - கண்ணகி; நெடுஞ்செழியனை யழகிலனென்று மதுரையைத் தனது முலையாலெரித்தமையின், இவளுக்கு இப்பெயர் வந்தது.

வெண்குன்று - முருகக்கடவுளுடைய திருப்பதிகளுளொன்று.

வெள்ளிடைமன்றம் - காவிரிப்பூம்பட்டினத்துள்ள ஐந்துமன்றத்துள் ஒன்று; இது திருடர்களை வெளிப்படுத்துவது.

வெள்ளியம்பலம் - மதுரையிலுள்ள ஒரு மன்றம்

வெள்ளியம்பெருமலை - விஞ்சையர்களுடையமலை.

வெற்றிவேற்செழியன் - கொற்கை நகரத்திருந்த ஓர் பாண்டியன்; இவன், கண்ணகிசபத்தால் பொற்கொல்லரை பலியிட்டுத் திருவிழாச்செய்து தன்னாட்டிற் சம்பவித்திருந்த துன்பங்களையெல்லாம் நீக்கினவன். இவனுக்கு இளஞ்செழியனென்றும் பெயருண்டு.

வேங்கடம் - ஒருமலை

வேண்மாள் - செங்குட்டுவன் மனைவி; இவள், கண்ணகியைப்பிரதிஷ்டித்துப் பூசிக்கவேண்டுமென்று தன் கணவனை வேண்டிக்கொண்டாள்.

வையை - ஒருநதி.

சூசிபத்திரம்.

நூற்சிறப்புப்பாயிரம்.

நீடிருங் குன்ற நிழல்காலு மண்டிலத்துக்
கோடுகோ டாய்த்தோன்றுங் கொள்கைத்தே - கூடலார்
கொண்டாடுஞ் செஞ்சொற் குடகக்கோ முனிசேரன
றண்டா வுரைமுத் தமிழ்.

நலத்தகு நால்வரென் றேத்திய நான்முகத் தோன்படைத்த
குலத்திற் கார வணிகர் குலபதி கோபதி
.... பூம்புகார் போற்றுகின்ற
சிலப்பதி காரஞ்செய் தானெடுஞ் சேரர் சிகாமணியே.

இவ்விரண்டும் பழைய செய்யுட்களே. இவற்றுள் இரண்டாஞ்செய்யுளுடைய இரண்டாமடியின் இறுதிப்பாகமும் மூன்றாமடியின் முதற்பாகமும் ஒருபிரதியிலும் காணப்படவில்லை.

கணபதி துணை.

சிலப்பதிகாரம்.

அடியார்க்குநல்லாருரை.

உரைப்பாயிரம்.

குணவாயில்........ வாழ்வீரங்கென..

இவ்வியலிசைநாடகப் பொருட்டொடர்நிலைசெய்யுளை அடிகள் செய்கின்ற காலத்து இயற்றமிழ்நூல் தொல்காப்பியமாதலானும், பிறர் கூறியநூல்கள் நிரம்பா இலக்கணத்தனவாதலானும் அந்நூலின்முடிபே இதற்கு முடிபென்றுணர்க. அந்நூலிற் செய்யுளியலின்கண்ணே ஆசிரியா பாவும் இனமுமென நான்கினுக்கு அப்பாவினைத் தொகைவகையறையான் இரண்டென அடக்கியும், விரிவகையறையான் ஆறெனவிரித்தும், அவற்றை அறம்பொருளின்பத்தாற் கூறுகவென்றுங்கூறிப், பின்பு அம்மைமுதலிய வனப்பும் தொடர்நிலைச்செய்யுட்கு இலக்கணமென்றுகூறியவர், † "இழுமென் மொழியான் விழுமியது நுவலினும், பரந்த மொழியா னடிநிமிர்ந் தொழுகினும்" என்பதனாற் குவிந்து மெல்லென்றசொல்லானும், பரந்து வல்லென்றசொல்லானும் அறம்பொருளின்பம்பயப்ப வீடென்னும் விழுமியபொருள்பயப்ப ஒருகதைமேற் கொச்சகத்தானும், ஆசிரியத்தானும், வெண்பா வெண்கலிப்பாவானும், மற்றும் இன்னோரன்ன செய்யுட்களானும் கூறுகவென்றமையான், இத்தொடர்நிலைச்செய்யுள் அங்ஙனங்கூறிய தொடர்நிலையெனவுணர்க.

முந்துநூல்களிற் காப்பியமென்னும் வடமொழிப்பெயரின்றேனும் ஆசிரியர், ‡ "வடசொற் கிளவி வடவெழுத் தொரீஇ, யெழுத்தொடு புணர்ந்த சொல்லா கும்மே" என்றார், 'ஆகும்மே' என்ற இலேசினான் உய்த்துணரற்பாலதனை மாறுகைகள் ஐயந்தீர்தற்கன்றே பின்னும்

* "வாழ்வீரங்கென" என்பது இச்சிலப்பதிகாரத்தின் இறுதிக்கண்ணது.

† தொல்காப்பியம், பொருளதிகாரம், செய்யுளியல், ௨௧௧.

‡ ,, சொல்லதிகாரம், எச்சவியல், ௫.

*"சிதைந்தன வாயினு மியைந்தவை வரையார்" என்றாரெனக்கொள்க. அன்றியும் பெரியதனைப் பெருங்காப்பியமென்றேகூறி மறுக்கவேண்டுதலானும், சான்றோர் செய்யுட்களினும், † "கூத்திய ரிருக்கையுஞ் சுற்றிய தாகக், காப்பிய வரசனைக் கலந்தவை சொல்லி" என இரண்டாம் ஊழியதாகிய கபாடபுரத்தின் ‡ இடைச்சங்கத்துத் தொல்காப்பியம்

* தொல்காப்பியம், சொல்லதிகாரம், எச்சவியல், ௬.

† உதயணன்கதை, வத்தவகாண்டம், யாழ்பெற்றது: "ஊரக வரைப்பி னுள்ளவை கொணர்ந்தார்க், கின்னுரை யமிழ்தமொடு மன்ன னீத்துக், கோப்புக வமைத்த கொற்ற வாயிலும், யாப்புற வதன்பெயர் பாற்படக் கொளீஇ, வாயின் முன்றிலவைப்புற மாகச், சேயுயர் மாடஞ் சித்திரத் தியற்றி, யுயிர்பெற வுருவ மியற்றி யதனைச், செயிர்தீர் சிறப்பொடு சேர்த்தவண் வழிபடு, நான்மறை யாளர் நன்றுண் டாகெனத், தாமுறை பிழையார் தலைநின் றுண்ணுஞ், சாலையுந் தனியும் பாலமைத் தியற்றிக், கூத்திய ரிருக்கையுஞ் சுற்றிய தாகக், காப்பிய வரசனைக் கலந்தவை சொல்லி"

‡ இடைச்சங்கமும் மற்றை இரண்டுசங்கங்களுமிருந்த இடமுதலியவற்றைப் பின்வரும் ஆசிரியப்பாவானுணர்க: "வேங்கடங் குமரி தீம்புனற் பௌவத், தின்னான் கெல்லையி னிருந்தமிழ் பயின்ற, செந்நாப் புலவர் செய்தியீண் டுரைப்பின், றுடகக் குடுமி மாடக் கூடலின், முன்னர்ச் சங்கக் கன்மாப் பலகையிற், றிரிபுர மெரித்த விரிசடைக் கடவுண், மன்றன் மராத்தார்க் குன்றெறி யிளஞ்சேய், இன் றீறற் புலமைக் குண்டிகைக் குறுமுனி, புவிபுகழ் மருதங் கவினிய முரிஞ்சிப், பதிமுடி நாக னிதியின் கிழவ, னினையர்நா லாற்று நாற்பத்தொன் பதின்ம, ரனையர் நானூன் காயிர நூற்றொடு, நாற்பத்தொன் பதின்மர் பார்க்கிற்செந் தமிழோர், புரிந்தன செய்யுட் பெரும்பரி பாடலு, முதுநாரை யடுத்த நாரையுங் குருகுங், கதியுறச் செய்த களரியா விரையு, மாங்கவ ரிருந்தது மத்தொகை யாகு, மீங்கிவர் தம்மை யிரீஇயபாண் டியர்கள், காய்சின வழுதிமுதற் கடுங்கோ னீறு, வேசிலாவகை யெண்பத்தொன் பதின்மர், கவியரங் கேறினோ ரெழுவ ராகு, மகத்தவ முடைய வகத்திய மிலக்கணம், வடவெறு காட்சி நடுவட் சங்கத், தகத்தியர் தொல்காப் பியத்தமிழ் முனிவ, ரிருந்தை யூரிற் கருங்கோழி மோசியா, ரொள்ளாப் புலமை வெள்ளூர்க் காப்பிய, னிறவா விசையிற் சிறுபாண் டாரங்கன், றேசிக மதுரையா சிரியன் மாறன், றவரொப் பாய துவரைக் கோமான், றேருங் கவிபுனை கீரந் தையரிவ, ரொன்பதோ டடுத்த வைம்பதின்ம ராகுந், தவலருங் கேள்வித் தன்மைய ருள்ளிட், டிவர்மூ வாயிரத் தெழுநூற் றுவரே, வையகம் பரவச் செய்த செய்யுளு, மிருங்கலி கடிந்த பெருங்கலித் தொகையொடு, குருகுவெண் டாளி தெருள்வியா ழமாலை, யங்கா னிலக்கண மகத்திய மதனொடு, பின்னுட் செய்த பிறங்குதொல் காப்பிய, மதிநலங் கவின்ற மாபு ராணம், புதுநலங் கனிந்த பூத புராணம், வல்லிதி னுணர்ந்த நல்லிசை நுணுக்கமுந், தாவாக் காலந் தமிழ்பயின் றதுவு, மூவா யிரத்தோ டெழுநூற் றியாண்டு, பரீஇய சங்க மிரீஇயபாண் டியர்கள், வெண்டேர்ச் செழியன் முதலா விறல்கெழு, திண்டேர்க் கொற்ற முடத்திரு மாறன், முரசுடைத் தானை மூவா வந்த, மாசுநிலை யிட்டோ ரைம்பத்தொன் பதின்ம, ரிவ்வகை யரசரிற் கவியரங் கேறின, ரைவகை யரச ராயிடைச் சங்கம், விண்ணகம் பரவு மேதகு கீர்த்திக், கண்ணகன் பரப்பிற் கபாடபுர மென்ப, பருங்கடைச் சங்க மிருந்தோர் யா

புலப்படுத்திய மாகீர்த்தியாகிய நிலந்தருதிருவிற் பாண்டியனவைக்கள
த்து அகத்தியனாரும், தொல்காப்பியனாரும், இருந்தையூர்க் கருங்கோழி
மோசியாரும், வெள்ளூர்க் காப்பியனாரும், சிறுபாண்டரங்கனாரும், மது
ரையாசிரியன்மாறனாரும், துவரைக்கோமானும், கீரந்தையாருமென் றித்
தொடக்கத்தார் ஐம்பத்தொன்பதின்மருள்ளிட்ட மூவாயிரத்தெழுநூற
்றுவர்தம்மாற் பாடப்பட்ட கலியும், குருகும், வெண்டாளியுமுதலிய
செய்யுளிலக்கியம் ஆராய்ந்துசெய்த * உதயணன்கதையுள்ளும், † "கரு
துவ தங்கொன் றுண்டோ காப்பியக் கவிகள் காம, வெரியெழ விகற்பித்

தெனிற், சிறுமே தாவியார் சேந்தம் பூதனா, ரறிவுடை யரனார் பெருங்குன் றூர்
கிழார், பாடல் சான்ற விளங்கிரு மாறன், கூடலா சிரியர் நல்லந் துவனார், பரவு
தமிழ் மதுரை மருதனிள நாக, ரவிர்கணைக் காயர் நவினக் கீரர், கீரங் கொற்றர்
கிளர்தே னூர்கிழா, ரோருங் கலைமண லூரா சிரியர், நல்லூர்ப் புளியங் காய்ப்பெ
ருஞ் சேந்தர், செல்லூ ராசிரியர் முண்டம் பெருங்குமரர், முசுறியா சிரியர் நீல
கண்டனா, ரசைவிரி குன்றத் தாசிரிய ரன்றி, நாத்தலங் கனிக்குஞ் சீத்தலைச் சாத்தர்,
முப்பா லுணரு மூப்பூரி குடிகிழா, ருருத்திர சன்மர் மருத்துவ ராகிய, காம நாற்
கலைத் தாமோ தரனா, மாதவள னார்போ டோதுமிள நாகர், கடியுங் காமப் படியங்
கொற்றனா, ரருஞ்செயி லூர்வாழ் பெருஞ்சுவ னாருடன், புவிபுகழ் புலமைக் கபிலர்
பரணா, ரின்னுந் தடிந்த நன்னாக ரன்றியு, மொல்காப் பெருமைத் தொல்காப் பியத்
துக், குறையிடை யிட்ட விரகர்கல் லாடர், பேர்மூல முணரு மாமூலர் தம்மொடு,
விச்சை கற்றிடு நச்செள்ளை யார்முதற், றேனூற் றெடுப்பச் செந்தமிழ் பகர்ந்தோர்,
நானூற் றுவர்முத லாறப்தொன் பதின்மர். பீடுபெற வுலகிற் பாடிய செய்யுண்,
முத்தொள் ளாயிர மற்றிணை நெடுந்தொகை, யகநா னூறு புறநா னூறு, குறுந்தொகை
கற்றிணை பேரிசை வரியோ, டறம்பகல் பதிற்றுப்பத் தைம்பதோ டிருபான், பெறு
பரி பாடலுங் குறுங்கலி நூற்றைம், பதுமுத லாகிய கலையறுங் கலைக; ளக்கா
லத்தவர்க் ககத்திய மதநூல், மிக்கா மிலக்கணம் விளங்குதொல் காப்பிய, மென்
னூற் கேள்விய ரிருந்தா யிரத்திரு, தொளாயிரத் தைம்பது வருட மென்ப, விடர்
ப்படா திவர்களைச் சங்க மிரீஇயினார், முடத்திரு மாறன் முதலா வுக்கிரப், பெருவ
ழுதி யீறாப் பிறங்குபாண் டியர்கள், நரபதிக ளாகு நாற்பத்தொன் பதின்ம, ரிவருட்
கவியரங் கேறினர் மூவர், புவியிற் சங்கம் புகழ்கூட மதுரை, யாதிமுச் சங்கத் தருந்
தமிழ்க் கவிஞ, ரோதிய செய்யு ளாலவாய்ப் பெரும்பொருள், வானாக் கேட்குந் தோ
ளாச் செவிக்கும், கேட்கத் தெரியா வோட்டைசெஞ் சிறுக்கு, அழையா வாதலி
னிழைபுலன் றன்னொடும, விழைவாகக் குறைக்க வேண்டுவர் தெரிந்தே." —இச்
செய்யுள் பாண்டிநாட்டின்ன தேவியூர்ச் சிற்றம்பலக்கவிராயரவர்கள் வீட்டி
லிருந்த பழைய ஏட்டுப்புத்தகங்களுள் ஒன்றில் எழுதப்பட்டிருந்தது.

* இவ்வுதயணன்கதை யென்பது பெருங்கதையென்றும், கதையென்றும் மேல்
வடுத்தாளப்படும்.

† சிவஞானசித்தியார், சுபக்கம், உ-கு: "உருவமென் றுரைத்தி
யாயி னிறைவற்கத் தொழுக்கி தன்னை, யுருவமே கண்ணுறு லெனத்தும் புலப்படா
வொழுகு மைத்தாற், கருதுவ தங்கொன் றுண்டோ காப்பியக் கவிகள் காம, வெரி
யெழ விகற்பித் திட்டா ரிறைசெய்ப போ கிளைவ யென்றே."

திட்டார்" எனச் சிந்தாமணியுள்ளும் *"நாடகக் காப்பிய நன்னூ னுனிப்போர்" என மணிமேகலையுள்ளும் பிறவற்றுள்ளுங் கூறினமை யானும், சொற்றொடர்நிலை பொருட்டொடர்நிலையென்னுந் தொடர்நிலைச் செய்யுட்குங் காப்பியமென்று பெயர்கூறுதலும் ஆசிரியர் கருத்தென வுணர்க. இதனுள் முற்கூறிய வனப்பென்பது பெரும்பான்மையும் பலவுறுப்புந்திரண்டவழிப் பெறுவதோர் அழகாதலிற் பலசெய்யுளும் உறுப்பாய்த் திரண்டுபெருகிய தொடர்நிலைசெய்யுட்கு இவ்வெட்டும் அலங்காரமாயின ; ஆகவே இக்காப்பியத்திற்கும் தோலென்பது ஓர் சொல்லலங்காரமாகவேயுணர்க. இனி இதன்செய்யுள் காதையென்று வழங்குதலிற் கதையையுடையது காதையாமாகலின், ஆசிரியம வெண்பா வெண்கலிப்பாவென்னும் இவற்றோடு சிறுபான்மையாள் ஒருசார் கொச்ச கக்கலி மயங்கிவருதலானும, காண்டமெனக் குறிபெறுதலானும் இத னைக் கதையென்றல் வலியுடைத்தென்பார்க்கு, அற்றன்று ; கதையென் பது பொய்ப்பொருள் புணர்த்துக்கூறுவது ; என்னை ? "கதையெனக் கருதல் செய்யான் மெய்யெனத் தானுங் கொண்டான்" என்றமையானும், வழக்கினுள்ளும் இஃது ஒருகதையென்பவாகலானும், "நாடகக் காப் பியம்" என்றலானும் கதையென்பதல்லது. இனி அது நல்ல புலவராற் பொருளொடுபுணராப் பொய்ம்மொழியால் நாட்டப்பட்டுவருவதாகலின், இஃது அவ்வாறன்றி யோனியென்னும் நாடகவுறுப்பும் நாடகமுந் தழுவி, உள்ளோன் தலைவனாக உள்ளதோர் பொருண்மேற சித்திரிக்கப் படாது பட்டாங்கு கிளந்து பலவினப் பாட்டான் வருதலின், ஈது அன்னதன்றென்பார்க்குக் காப்பியமென்றலுமாம.

இனி இசைத்தமிழ்நூலாகிய பெருநாரை பெருங்குருகும் பிறவும் தேவவிருடி நாரதன்செய்த பஞ்சபாரதீயமுதலாயுள்ள தொன்னூல்களு மிறந்தன. நாடகத்தமிழ்நூலாகிய பரதம் அகத்தியமுதலாயுள்ள தொன் னூல்களுமிறந்தன. பின்னும் முறுவல் சயந்தம் குணநூல் செயிற்றிய மென்பனவற்றுள்ளும் ஒருசார்சூத்திரங்கள்நடக்கின்ற அத்துணையல லது முதல் நடு இறுதி காணாமையின், அவையும் இறந்தனபோலும். இறகவேவரும் †பெருங்கலமுதலிய பிறவுமாம. இவற்றுட் பெருங் கலமாவது பேரியாழ் ; அது கோட்டினதளவு பன்னிருசாணும், வண ரளவு சாணும், பத்தரளவு பன்னிருசாணும், இப்பெற்றிக்கேற்ற ஆணி களும் ; திவவும், உந்தியும்பெற்று ஆயிரங்கோல் தொடுத்தியல்வது ; என்னை ? "ஆயிர நரம்பிற் றாகியா தாகு, மேனை யுறுப்பு மொப்பன கொளலே, பத்தர தளவுங் கோட்டின தளவு, மொத்த வெண்ப ஆருமூன் றிரட்டி, வணர்சா ணொழித்தென வைத்தனர் புலவர்" என நூலுள்ளும்,

* மணிமேகலை, கக-வது, சிறைக்கோட்டமறக்கோட்டமாக்கியகாதை.

† அருங்கலமெனவும் பிரதிபேதமுண்டு.

*"தலமுதல் ஊழியிற் றானவர் தருக்கறப், புலமக ளாளர் புரிநரப் பாயிரம், வலிபெறத் தொடுத்த வாக்கமை பேரியாழ்ச், செலவுமுறை யெல்லாஞ் செல்கையிற் றெரிந்து, மற்றை யாழுங் கற்றுமுறைபிழையான்" எனக் கதையினுள்ளுங் கூறினாராகலாற் பேரியாழ் முதலிய வனவும் இறந்தனவெனக்கொள்க.

இனித் தேவவிருடியாகிய குறுமுனிபாற் கேட்ட மாணாக்கர் பன்னிருவருட் சிகண்டியென்னும் அருந்தவமுனி, இடைச்சங்கத்து அநாகுலனென்னும் தெய்வப்பாண்டியன் தேரொடு விசும்புசெல்வோன் திலோத்தமையென்னுந் தெய்வமகளைக்கண்டு தேரிற் கூடினவிடத்துச் சனித்தானைத் தேவரும் முனிவரும் †சரியாநிற்கத் தோன்றினமையிற் சாரகுமாரனென அப்பெயர்பெற்றகுமரன் இசையறிதற்குச்செய்த இசைநுணுக்கமும், பாரசவமுனிவரில் யாமளேந்திரர்செய்த இந்திரகாளியமும், அறிவனார்செய்த பஞ்சமரபும், ஆதிவாயிலார்செய்த பரதசேனாபதீயமும், கடைச்சங்கமிரீஇய பாண்டியருட் கவியரங்கேறிய பாண்டியன்மதிவாணனார்செய்த முதனூல்களிலுள்ள வசைக்கூத்திற்கு மறுதலையாகிய புகழ்க்கூத்தியன்ற மதிவாணர்நாடகத்தமிழ்நூலுமெனவைந்தும் இந்நாடகக்காப்பியக்கருத்தறிந்த நூல்களன்றேனும் ஒருபுடையொப்புமைகொண்டு முடித்தலைக்கருதிற்று இவ்வுரையெனக்கொள்க.

எடுத்தின் றிறனறிந்தோ ரின்சொற் பொருளி
னடுத்தந் தனிலோரார் றறிந்தோ - முடித்தும்
பழுதற்ற முத்தமிழின் பாடற் குரையின்
றெழுதத் துணிவதே யாம்.

---

* உதயணன்கதை, வத்தவகாண்டம், யாழ்பெற்றது: "தலமுதல் ஊழியிற் றானவர் தருக்கறப், புலமக ளாளர் புரிநரப் பாயிரம், வலிபெறத் தொடுத்த வாக்கமை பேரியாழ்ச், செலவுமுறை யெல்லாஞ் செல்கையிற் றெரிந்து, மற்றை யாழுங் கற்றுமுறை பிழையான், பண்ணுந் திறனுந் திண்ணிதிற் சிவணி, வகைநயக் காணத்துத் தகைநய நவின்று, நாரத கீதக் கேள்வி நுனித்துப், பரந்தவ னாற்கும் விருந்தின னன்றித், தண்கோ சம்பி தன்னக ராதலிற், கண்போற் காதலாக் காணிய வருவோன், கார்வளி முழக்கி னீர்நசைக் கெழுந்த, யானைப் பேரினத் திடைப்பட் டயலதோர், கான வேங்கைக் கவர்சினை யேறி, யச்ச மெய்தி யெத்திசை மருங்கினு, நோக்கினன்"

† "சரியநிற்கத்தோன்றினமையிற் சாரகுமாரனெனப் பெயர்பெற்ற" என்னும் பிரதிபேதமுண்டு.

சிலப்பதிகாரம்.

உரைச்சிறப்புப்பாயிரம்.

க பருந்து நிழலுமெனப் பாவு முரையும்.
பொருந்துவெற்றி யெல்லாப் பொருளுந் - தெரிந்திப்
படியார்க்கு நல்லமிர்தம் பாலித்தா னன்றோ
வடியார்க்கு நல்லாயெனன் பான்.

உ ஓருந் தமிழொரு மூன்று முலகின் - புறவகுத்துச
சேரன் றெரித்த சிலப்பதி காரத்திற் சேர்ந்தபொரு
ளாருந் தெரிய விரித்துரைத் தானடி யார்க்கு நல்லான்
காருந் தருவு முனையா னிரம்பையர் காவலனே.

ங காற்றைப் பிடித்துக் கடத்தி லடைத்துக் கடியபெருங்
காற்றைக் குரம்பைசெய் வார்செய்கை போலுமக் காலமெனுங்
கூற்றைத் தவிர்த்தருள் பொப்பண்ண காங்கெயர் கோனளித்த
சோற்றுச செருக்கல்லவோ தமிழ் மூன்றுரை சொலவித்ததே.

கணபதிதுணை.

சிலப்பதிகாரம்.

அடியார்க்குநல்லாருரை.

பதிகம்.

குணவாயிற் கோட்டத் தரசுதுறந் திருந்த
குடக்கோச் சேர லிளங்கோ வடிகட்குக்
குன்றக் குறவ ரொருங்குடன் கூடிப்
பொலம்பூ வேங்கை நலங்கிளர் கொழுநிழ
லொருமுலை யிழந்தா ளோர்திரு மாபத்தினிக்
கமரர்க் கரசன் றமர்வந் தீண்டியவள்
காதற் கொழுநனைக் காட்டி யவளொடெங்
கட்புலங் காண விட்புலம் போய
திறும்பூது போலுமஃ தறிந்தருளு நீயென
வவனுழை யிருந்த தண்டமிழ்ச் சாத்த
னியானறி குவனது பட்டதென் றுரைப்போ
னாரங் கண்ணிச் சோழன் மூதூர்ப்
பேராச் சிறப்பிற் புகார்நக ரத்துக்
கோவல னென்பானோர் வாணிக னவ்வூர்
நாடக மேத்து நாடகக் கணிகையொ
டாடிய கொள்கையி னரும்பொருள் கேடுறக்
கண்ணகி யென்பான் மனைவி யவள்காற்
பண்ணமை சிலம்பு பகர்தல் வேண்டிப்
பாடல்சால் சிறப்பிற் பாண்டியன் பெருஞ்சீர்
மாட மதுரை புகுந்தன னதுகொண்டு
மன்பெரும் பீடிகை மறுகிற் செல்வோன்
பொன்செய் கொல்லன் றன்கைக் காட்டக்
கோப்பெருந் தேவிக் கல்லதை யிச்சிலம்
பியாப்புற வில்லையீங் கிருக்கென் றேகிப்
பண்டுதான் கொண்ட சில்லரிச் சிலம்பினைக்

கண்டனன் பிறனோர் கள்வன் கையென
வினைவிளை கால மாதலின் யாவதுஞ்
சினையலர் வேம்பன் றேரா னாகிக்
கன்றிய காவலர்க் கூஉய்க் கள்வனைக்
கொன்றச் சிலம்பு கொணர்க வீங்கெனக்
கொலைக்களப் பட்ட கோவலன் மனைவி
நிலைக்களங் காணா ணெடுங்கணீ ருகுத்துப்
பத்தினி யாகலிற் பாண்டியன் கேடுற
முத்தார மார்பின் முலைமுகந் திருகி
நிலைகிளர் கூட னீளெரி யூட்டிய
பலர்புகழ் பத்தினி யாகு மிவளென
வினைவிளை கால மென்றீர் யாதவ
வினைவிளை வென்ன விறலோய் கேட்டி
யதிராச் சிறப்பின் மதுரை மூதூர்க்
கொன்றையஞ் சடைமுடி மன்றப் பொதியிலில்
வெள்ளியம் பலத்து நள்ளிருட் கிடந்தே
னாரஞ ருற்ற வீரபத் தினிமுன்
மதுரைமா தெய்வம் வந்து தோன்றிக்
கொதியழற் சீற்றங் கொங்கையின் விளைத்தோய்
முதிர்வினை நுங்கட்கு முடிந்த தாகலின்
முந்தைப் பிறப்பிற் பைந்தொடி கணவனொடு
சிங்கா வண்புகழ்ச் சிங்க புரத்துச்
சங்கம னென்னும் வாணிகன் மனைவி
யிட்ட சாபங் கட்டிய தாகலின்
வாரொலி கூந்தனின் மணமகன் றன்னை
யீரேழ் நாளகத் தெல்லை நீங்கி
வானோர் தங்கள் வடிவி னல்லதை
யீனோர் வடிவிற் காண்ட லில்லெனக்
கோட்டமில் கட்டுரை கேட்டனன் யானென
வரசியல் பிழைத்தோர்க் கறங்கூற் றாவதூஉ
முரைசால் பத்தினிக் குயர்ந்தோ ரேத்தலு
மூழ்வினை யுருத்துவந் தூட்டு மென்பதூஉஞ்
சூழ்வினைச் சிலம்பு காரண மாகச்
சிலப்பதி கார மென்னும் பெயரா
னாட்டுதும் யாமோர் பாட்டுடைச் செய்யுளென
முடிகெழு வேந்தர் மூவர்க்கு முரிய
தடிக ணீரே யருளுகென் றாற்கவர்

மங்கல வாழ்த்துப் பாடலுங் குரவர்
மனையறம் படுத்த காதையு நடநவின்
மங்கை மாதவி *யரங்கேற்று காதையு
மந்தி மாலைச் சிறப்புச்செய் காதையு
மிந்திர விழவூ ரெடுத்த காதையுங்
†கடலாடு காதையும், மடலவிழ்
கானல் வரியும் வேனில்வந் திறுத்தென
மாதவி யிரங்கிய காதையுந் தீதுடைக்
கனாத்திற முரைத்த காதையும் வினாத்திறத்து
நாடுகாண் காதையுங் காடுகாண் காதையும்
வேட்டுவ வரியுந் தோட்டலர் கோதையொடு
புறஞ்சேரி யிறுத்த காதையுங் கறங்கிசை
யூர்காண் காதையுஞ் சீர்சா னங்கை
யடைக்கலக் காதையுங் கொலைக்களக் காதையு
மாய்ச்சியர் குரவையுந் தீத்திறங் கேட்ட
துன்ப மாலையு நண்பக னடுங்கிய
வூர்சூழ் வரியுஞ் சீர்சால் வேந்தனொடு
வழக்குரை காதையும் வஞ்சின மாலையு
மழற்படு காதையு மருந்தெய்வந் தோன்றிக்
கட்டுரை காதையு மட்டலர் கோதையர்
குன்றக் குரவையு மென்றிவை யனைத்துடன்
காட்சி கால்கோ ணீர்ப்படை நடுகல்
வாழ்த்து வரந்தரு காதையொ
டிவ்வா றைந்து
முறையிடை யிட்ட பாட்டுடைச் செய்யு
ளுரைசா லடிக ளருள மதுரைக்
கூல வாணிகன் சாத்தன் கேட்டனன், இது
பால்வகை தெரிந்த பதிகத்தின் மரபென.

உலகத்துக் காப்பியஞ்செய்வோன் அறனும் பொருளும் இன்பமும் வீடுங் கூறல்வேண்டுமென்றே; இந்நாடகக்காப்பியத்தினுள் அறனும் பொருளும் இன்பமும் சிறிதாயினுங்கூறி வீடுகூறிற்றிலர்; என்னையெனின், ‡"யானறி குவனது பட்டதென்று" உரைத்தசாத்தனார் நாற்பொருளும் பயப்பப் பெருங்காப்பியமாகச் செய்யக்கருதியிருக்கின்றார்க்கு, அடிகள், §"நாட்டுதும் யாமோர் பாட்டுடைச் செய்யுள்" என உளப்பாட்டுத்தன்மையாற்கூறச் சாத்தனார் இவர் எனையிருவேந்தரையும் புகழ்ந்துரையாரென்பதுகருதி மூவேந்தர்க்கும் உரியதாகலின் ||"நீரே

* அரங்கேற்றுக்காதையெனவும் பாடம். § பதிகம் ௬௦.
† கடலாட்டுக்காதையெனவும் பாடம். || ,, ௬௨.
‡ பதிகம், ௧௧.

யருளுக" என்று ஏகாரவினாப்பொருண்மையான் அவர்கருத்துநிகழ்ச்சிவிளங்கு வான்கூற, அவர் அதனையேதுணிந்து தமது முத்தமிழ்க்கல்வியும் வித்தகக்கவியும் காட்டுதற்குத் தாம் வகுத்துக்கொண்ட மூவகையுள்ளுறையின் விளைவுதோன்ற, மங்கலவாழ்த்துப்பாடல்முதல் வரந்தருகாதையிறுதி முப்பதுவகைத்தாகவரையறுத்து, அதனை அதிகாரமாகப்பொதிந்து முன்வைத்துப் பின்னர், அறனும் பொருளும் இன்புமுங்கூறி அடைக்கலக்காதையிறுதிக்கண், *"போதி யறவோன் றன்முன், மணிமே கலையை மாதவி யளிப்பவும்" எனக் கோவலன் முன்கண்டகனவின்கண் நிகழ்ந்ததை எதிர்காலநிமித்தமாக மாடலற்குக் கூறுதலானும், நீர்ப்படையுள், †"மாதவி ......மணிமே கலையை வான்றுய ருறுக்குங், கணிகையர் கோலங் காணு தொழிகெனக், கோதைத் தாமங் குழலொடு களைந்து. போதித் தானம் புரிந்தறங் கொள்ளவும்" என்றலானும், வாழ்த்தின்கண் ‡"மாதவி தன்றுறவுங் கேட்டாயோ தோழி, மணிமே கலைதுறவுங் கேட்டாயோ தோழி" எனத் தேவந்தி கூறுதலானும், வரந்தருகாதையில், §"மணிமே கலையார். யாதவ டுறத்தற் கேதுவீங் குரை" என ||"மையீ ரோதி" முதல ¶"போதித் தானம் புரிந்தறம் படுத்தனள்" என்பதிறுதிக் கப் பக்குவஞ்சொல்லி, **"பருவ மன்றியும் பைந்தொடி நங்கை, திருவிழை கோல நீங்கினள்" என்றமையானும் மணிமேகலை துறந்தாளென்பதுணர்ந்து அத் துறவினைப் பின்வைத்து அதனோடு நாற்பொருளும்பூரித்தப பெருங்காப்பியமாக முடித்தலைக்கருதி அடிகள் சாத்தனார்க்கு இவ்வுரையையுரைத்துழி, அவர் மணிமேகலைபெயரான் அவள்துறவே துறவாக அறனும்வீடும்பயப்ப ஓர் காப்பியஞ்செய் தமைத்தனனெனக்கேட்டு, அவ்வடிகள் விரும்பி இவ்விரண்டினையும் ஒருகாப்பியமாக்கி உலகின்கண் நடாத்துவான்வேண்டவும் இருவர்செய்தலின், இரண்டாக நடந்தனவென்க.

க - உ. குணவாயிற் கோட்டத் தரைசுதுறந் திருந்த
குடக்கோச் சேர லிளங்கோ வடிகட்கு

அடிகளென்றது, துறத்தலான். அத்துறவின்வரலாறு யாதோவெனின்,— குமரியொடுவடவிமயத் தொருமொழிவைத் துலகாண்ட சேரலாதற்குத் திகழொளி ஞாயிற் றெழ்பரி நெடுந்தேர்ச் சோழன் றன்மக ணற்சோணை யீன்ற மக்க ளிருவ ருண் முன்னோன் றனைப் பின்ன ரியற்றிப் பின்னோனாந் தலையும் பெருந்தம் யாகென வன்னவர் தம்மொடு தென்னா செம்பியர் தனையடி போற்றத் தமனிய மண்டபத்துச் சிங்கஞ் சுமந்த பொங்கணை மீமிசை யுவரித் திரையிற் கவரி யிரட்ட வேந்த னிருந்துழிச் சார்ந்த நிமித்திக னடிமுதன் முடிவரை நெடிது நோக்கி யின்றே ளகழியப் பொன்றிக ழுலகஞ் சோதி நீயெனச் சேரலற் குரைத்தவன் மைந்தனை நோக்கி நந்தாச் செங்கோ லந்தமி லின்பத் தரசா ளுரிமை யிளையோற் குண்டென வுளைவ னன்வெகுண் டழுக்காற் றெழுக்கத் திழுக்கு மெஞ்சினன் கண்ணெரி தவழ வண்ணலை நோக்குங் கொங்கவிழ் நறுந்தார்க் கொடித்தேர்த் தானைச் செங்குட் டுவன்றன் செல்ல னீங்கப் பகல்செல் வாயிற் படியோர் தமமு

* அடைக்கலக்காதை, க0ரு - க0ச.
† நீர்ப்படை, க0ரு, க0அ.
‡ வாழ்த்து, அடித்தோழியரற்று.
§ வரந்தருகாதை, [illegible] - ரு.
|| வரந்தருகாதை, கப.
¶ ,, உ-அ.
** ,, [illegible]ரு.

னாகலிடப் பாரமகல நீக்கிச் சிந்தை செல்லாச் சேணெடுந் தூரத் தந்தமி லின்பத் தரசாள் வேந்தாயினனென்பது. இக்கதையைப் பதிற்றுப்பத்தினுள் அஞ்சாம் பத்தின் முடிவின்கண், * "வடவ ருட்கும்" என்னுங் கவியுள்ளும், வாழ்த்தின்கணும், வரந்தருகாதைக்கண்ணுங் காண்க.

குணவாயில் - திருக்குணவாயிலென்பதோரூர்; அது வஞ்சியின் கீழ்த்திசைக்கணுள்ளது; அஃது ஆகுபெயர். அது குணக்கண்வாயில் குணவாயில்; குணக்கின்கண்வாயில் குணவாயிலென்னச் சாரியைபெற்றும் பெறாதும்வரினும் அமையும். என்னை? † "ஏழ னுருபிற்குத் திசைப்பெயர் முன்னர்ச், சாரியைக் கிளவி யியற்கையு மாகும்" என்றாராகலின். வாயிற்கோட்டமென்பது ‡ "லகார விறுதி னகார வியற்றே" என்பதனால், ஏழனுருபின்கண்வந்த சாரியை லகாரவீறு, வருமொழி முதல வல்லெழுத்துவர னகாரம வேற்றுமைக்கண் திரிந்து றகாரமாயிற்றே போலத் திரிந்தது. கோட்டம் - அருகன்கோயில். அது § "மஃகான் புள்ளிமு னத்தே சாரியை" என்பதனால் ஏழனுருபின்கண் சாரியைபெற்று, ‖ "அத்தே வற்றே யாயிரு மொழிமே லொற்றுமெய் கெடுதல் தெற்றென் றற்றே" என்பதனான் மகரங்கெட்டு, ¶ "அத்தி னகர மகரமுனை யில்லை" என்பதனால், அகரங்கெட்டுமுடிந்தது. ** "அவற்றுள், மெய்யீ றெல்லாம் புள்ளியொடு நிலையல்" †† "குற்றிய லுகரமு மற்றென மொழிப" என்பதனாலும், ‡‡ "புள்ளி யீற்றுமு னுயிர்தனித் தியலாது, மெய்யொடுஞ் சிவணு மவ்வியல் கெடுத்தே" என்பதனாலும் வருமொழி அகரமேறிற்று. அரசு - அரசாட்சி. துறந்திருந்த - நிலைமொழியீறுங் குற்றுகரம முற்கூறியவாறே முடிந்தது. குடக்கோவென்பது §§ "அகர விறுதிப் பெயர்நிலை முன்னர், வேற்றுமை யல்வழிக் கசதபத் தோன்றிற், றத்த மொத்த வொற்றிடை மிகுமே" என்பதனால், பெயரொடுபெயர்புணர்ந்து வலியொற்றுமிக்கது. கோச்சேரலென்பது ‖‖ "ஒகார விறுதி யேகார வியற்றே" என்பதனால், ஒகாரவீற்றுப் பெயர்ச்சொல் அல்வழிக்கண் ஏகாரவீற்று அல்வழியேபோல வல்லெழுத்துப் பெற்று முடிகவெனாமையின், வலியொற்றுமிக்கது. சேரலென்றது - அண்ணல்,

* "வடவ ருட்கும் வான்றோய் வெல்கொடிக், குடவர் கோமா னெடுஞ்சேர லாதற்குச், சோழன் . மகள், கானவில் கானங் கணையிற் போகி, யாரிய வண்ணலை வீட்டிப் பேரிசை, யின்ப வருவிக் கங்கை மண்ணி, யினந்தெரி பல்லான் கன்றொடு கொணர்ந்து, பாலும் பலவி லிலம்பிற் புறத்திறுத், துறுபுலி யன்ன வயவர் வீழச், சிறுகுர னெய்தல் வியலூ ரெறிந், தக்கரை நண்ணிக் கொடுகூ ரெறிந்து, பழையன் காக்குங் கருஞ்சினை வேம்பின், முழாரை முழுமுத றுமியப் பண்ணி, வாலிழை கழித்த நறும்பல் பெண்டிர், பல்லிருங் கூந்தன் முரற்சியாற், குஞ்சர வொழுகை பூட்டி வெந்திறல், ஆராச் செருவிற் சோழர்குடிக் குரியோ, ரொன்பதின்மர் வீழ வாயிற்புறத் திறுத்து.... செருவி னாற்றலை யறுத்துக், கெடலருந் தானையொடு கடல்பிறக் கோட்டிய, செங்குட் டுவனைக், கரண மமைந்த காசறு செய்யுட், பரணர் பாடினார் பத்துப் பாட்டு"

†	தொல், எழுத், உருபிய, ௨௬.	**	தொல், எழுத், புணரியல், ௨.	
‡	,, ,, புள்ளிமய, ௭௧.	††	,, ,, ,,	௩.
§	,, ,, உருபியல், ௧௩.	‡‡	,, ,, ,,	௩௬.
‖	,, ,, புணரியல், ௩௨.	§§	,, ,, உயிர்மய,	௯.
¶	,, ,, ,, ௨௫.	‖‖	,, ,, உயிர்மய,	௭௨.

தோன்றல், திரையல், இளவலென்ருற்போல்வதோர் லகாரவீற்றுப் பெயர்ச்சொல்; அன்றியும் சேரலனென்னும் பெயர்த்திரிசொல்லெனினுமமையும். சேரலிளங்கோ வென்பது "புள்ளி யீற்றுமு னுயிர்" என்பதனால், லகாரவொற்றீற்று நிலைமொழி மேல் வருமொழிமுதல் இகரவுயிரேறிமுடிந்தது. கோவடிகட்கென்பது *"எல்லா மொழிக்கு முயிர்வரு வழியே, யுடம்படு மெய்யி னுருபுகொளல் வரையார்." என்பதனால், வகரவுடம்படுமெய்யாயிற்று. அடிகட்கென்றது †"ளகார விறுதி ணகார வியற்றே" என்பதனால், ணகாரம் வேற்றுமைக்கண் திரிந்து டகாரமாயிற்றே போல இதுவும் வேற்றுமைக்கண் திரிந்து டகாரமாயிற்று.

அரசென்பதற்கு இரண்டனுருபு விரித்துத் துறந்தென்னும் வினையெச்சத் தோடும், துறந்தென்னும் வினையெச்சத்தை இருந்தவென்னும் பெயரெச்சத்தோடு முடித்து அதனையும் அடிகளென்னும் பெயரோடே முடிக்க.

அரசாட்சியைத்துறந்து திருக்குணவாயிற்கோயிற்கண்ணேயிருந்த குடதிசைக் கோவாகிய செங்குட்டுவனென்னுஞ்சேரற்கு இளங்கோவாகிய அடிகட்கெனப் பண்பொட்டு விரித்துரைக்க. இளமைப்பருவத்தே இராசபோகத்தைத்துறத்தல் அருமையால் துறந்தென்றும், அங்ஙனம் போகநுகர்ந்தவிடத்தே மீட்டுந்தவவுருத் தாங்கியிருத்தலருமையான் இருந்தென்றுங்கூறினர்.

இம்முதலிரண்டடிக்கும் இத்துணையுங்கூறியது எழுத்துச்சந்திமுடிவும் சொன் முடிவுமெனக்கொள்க.

இனிப் பொருளாராய்ச்சி எண்வகைய. அவை திணை, பால், செய்யுள், நிலம், காலம், வழு, வழக்கு, இடமென்பன. அவற்றுள், திணை - இரண்டு; ஆவன: அகத்திணை புறத்திணையென்பன. பால் - பதினான்கு; ஆவன : கைக்கிளைமுதல் பெருந்திணையிறுவாய் ‡எழும், வெட்சிமுதல் பாடாண்டிணை இறுவாய் §எழும். செய்யுள் - அறுவகை; ஆவன : வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா, பரிபாடற்பா, மருட்பாவென்பன. நிலன் - நால்வகை; ஆவன : முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தலென்பன. காலம் - பன்னிரண்டு; ஆவன : ‖சிறுபொழுதாறும் ¶பெரும்பொழுதாறும். வழு - பதினான்கு; ஆவன: அகத்திணைவழுவேழும், புறத் திணை வழுவேழும். வழக்கு - இருவகை; ஆவன : நாடகவழக்கும், உலகியல்வழக்கு மென்பன. இடம் - இருவகை; ஆவன : வழக்கிடமும், செய்யுளிடமும்.

இவற்றுள் நிறுத்தமுறையானே அகத்திணைப் பொருட்பகுதிமுதலியன இப் பதிகச்செய்யுளுண்முடியாமையின், அவை முடியுமிடங்கூறுதற்கு, ஆசிரியர் அகப்

---

* தொல், எழுத், புணரியல், ௩அ. † தொல், எழுத், புள்ளிமய, ௪௰௪.

‡ ஏழாவன : கைக்கிளைத்திணை, முல்லைத்திணை, குறிஞ்சித்திணை, மருதத் திணை, நெய்தற்றிணை, பாலைத்திணை, பெருந்திணையென்பன. இவை அகத்திணை யெனப்படும்.

§ ஏழாவன: வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, காஞ்சி, பாடாண் டிணையென்பன. இவை புறத்திணையெனப்படும்.

‖ சிறுபொழுதாறாவன : மாலை, யாமம், வைகுறு, காலை, நண்பகல், எற்பா டென்பன.

¶ பெரும்பொழுதாறாவன : கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனிலென்பன.

பொருட்பகுதிகூறுவார், *"மாயோன் மேய காடுறை யுலகமுஞ், சேயோன் மேய மைவரை யுலகமும், வேந்தன் மேய தீம்புன லுலகமும், வருணன் மேய பெருமண லுலகமு, முல்லை குறிஞ்சி மருத நெய்தலெனச், சொல்லிய முறையாற் சொல்ல வும் படுமே" என முல்லைத்திணையை முதலாகக்காட்டுதலின் அம்முறையே அகத் திணைப்பொருட்பகுதி முடியுமிடம் ஈண்டு எடுத்துக்காட்டப்படும்.

†"முதலெனப் படுவது நிலம்பொழு திரண்டி, னியல்பென மொழிப வியல் புணர்ந் தோரே" என்பதனால், முதற்பொருள் இருவகைப்படும். முல்லைத்திணை நிலமுதற்பொருள். ‡"காரு மாலையு முல்லை" என்பதனால், அத்திணைக்குரிய பெரும்பொழுதும் சிறுபொழுதுங் கொள்ளப்படும். பெரும்பொழுது: §"காரே வந்தது" என்பதனாற் காரும், சிறுபொழுது: ||"மாலைநீ யாயின" என்பதனால் மாலையுங்கூறினார். கருப்பொருள், ¶"தெய்வ முணாவே மாமரம் புட்பறை, செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ, யவ்வகை பிறவுங் கருவென மொழிப" என் பதனாலுணர்க. இந்நிலத்திற்குக் கருப்பொருள்: **"கன்று குணிலாக் கனியுகுத்த மாயவன்" என்பதனாற் றெய்வமும், ††"அமைவிலை யுணவின்" என்பதனால் உணவும், ‡‡"சீர்கெழு வேட்கையின் மானின்று விளிக்கும்" எனபதனான்மாவும், §§"கொல்லைப் புனத்துக் குருந்தொசித்தான்" என்பதனான் மரமும், ||||"கான வாரணங் கதிர்வர வியம்ப" என்பதனாற் புள்ளும், ¶¶"ஏறங் கோட்பறை" என் பதனாற் பறையும், ***"கோகுல மேய்த்து" என்பதனாற் செய்தியும், †††"குட முதல் . . வேண்டிய பெயரே" என்பதனான் முல்லையாழும், பண்: ‡‡‡"முல்லைத் தீம் பாணி யென்றாள்" என்பதனாற் சாதாரியுங் கூறினார். உரிப்பொருள்: §§§"புணர்தல் பிரித லிருத்த லிரங்க, லூட லிவற்றி னிமித்த மென்றிவை, தேருங் காலைத் திணைக்குரிப் பொருளே" என்பதனாலுணர்க. ||||||"இருந்தேங்கி வாழ்வா ருயிர்ப்புறத்தாய்" என்பதனால் இருத்தலும், ||||||"போருளி னீழல்" என்பதனால் நிமித்தமுங்கூறினார். பிறவுமென்றதனால் நிலமக்களும் நீர்நிலையும் வார்கொடியும் பூவுங்கொள்ளப்படும்; இவற்றுள், ¶¶¶"இளைசூழ் கோவலர்" என்பதனால் நிலமக்க ளும், ****"புடைநெறிப் போயோர் பொய்கையிற் சென்று" என்பதனால் நீர் நிலையும், ††††"ஆய்கொடிக் கவலையும்" என்றதனால் வார்கொடியும், ‡‡‡‡"காயா மலர் மேனி" §§§§"முல்லை நிகர்மலர்" என்பவற்றாற் பூவும் பிறவுங்கூறினார்.

---

* தொல், பொரு, அகத்திணை, ரு.
† ,, ,, ,, ச.
‡ ,, ,, ,, சு.
§ கால்கோட்காதை, கஅ.
|| கானல்வரி, "பையுணோய்"
¶ தொல், பொருள், அகத்தி, கஅ.
** ஆய்ச்சியர்குரவை, "கன்று"
†† கொலைக்களக்காதை, கூ.
‡‡ காடுகாண்காதை, எஅ.
§§ ஆய்ச்சியர்குரவை, "செக்கர்"
|||| புறஞ்சேரியிறுத்தகாதை, கூஎ.
¶¶
*** ஆய்ச்சியர்குரவை. "கோவலம".
††† ,, "குடமுத"
‡‡‡ ,, "செங்கை"
§§§ தொல், பொருள், அகத்தி, கச.
|||||| கானல்வரி, "பிரிந்தார்"
¶¶¶ கொலைக்களக்காதை, ச.
**** காடுகாண்காதை, ககக.
†††† ,, அஉ.
‡‡‡‡ வேட்டுவவரி, "ஆய்பொன்னரி."
§§§§ கனாத்திறமுரைத்தகாதை, க-உ.

குறிஞ்சித்திணை நிலமுதற்பொருள். பெரும்பொழுது : *"அருவி யொலிக்கு ………மலைகாண் குவம்" என்பதனாற் கூதிர்ப்பொழுதும், சிறுபொழுது : †"குன்றத்துச் சென்று வைகியும்" என்றதனால் நள்ளியாமமும், கருப்பொருள் : ‡"நீலப் பறவைமேல்………புதல்வன் வரும்" என்பதனால் தெய்வமும், §"ஐவன வெண் ணெலும் ……தொய்யூந் தினையும்" என்பதனால் உணவும், ||"புலியொடு பொரூஉம்புகர்முகம்" என்பதனான் மாவும், ¶"கோங்கம் வேங்கை" என்பதனான் மரமும், **"கானக் கோழியுந் தேன்மொழிக் கிள்ளையும்" என்பதனாற் புள்ளும், ††"தொண்டகந் தொடுமின் சிறுபறை தொடுமின்" என்பதனாற் பறையும், ‡‡"தொய்யூந் தினையும" §§"நறவுக் கண்ணுடைத்த" என்பவற்றாற் செய்தியும், ||||"அந்தீங் குறிஞ்சி" என்பதனால் யாழும், ¶¶"குறிஞ்சி பாடுமின்" என்பதனாற் பண்ணும், உரிப்பொருள் : ***"அஞ்சலோம் பென்று நலனுண்டு" என்பதனாற் புணர்தலும், ***"நல்காதார்" என்பதனாற் புணர்தனிமித்தமும், †††"குன்றவருங்கண்டுநிற்க" ‡‡‡"குறத்தியர் பாடிய" என்பனவற்றால் மக்களும் §§§"அருவி யாடியு மகன்சுனை குடைந்தும்" என்பதனால் நீர்நிலையும், ||||||"எ… வல்லியு மிருங்கறி வல்லியும்" என்பதனால் வார்கொடியும், ¶¶¶"விரவு மலர்தூவுமின்" என்பதனாற் பூவும் பிறவுங்கூறினர்.

மருதத்திணை நிலமுதற்பொருள். ****"இன்னிள வேனில் வந்த திவணென' என்பதனாற் பெரும்பொழுதும், ††††"வான்கண விழியா வைகறை யாமத்து' என்பதனாற் சிறுபொழுதும், கருப்பொருள் : ‡‡‡‡"மலைச்சிற கரிந்த வச்சிர வே… தற்கு" என்பதனால் தெய்வமும், §§§§"குமரிக் கூட்டிற் கொழும்பல் லுணவு' என்பதனால் உணவும், ||||||||"கழாமயிர் யாக்கைச் செங்கட் காரான்" என்பதனா… மாவும், ¶¶¶¶"மருதோங்கு முன்றுறை" என்பதனான் மரமும், *****"கம்புட் கோழியுங் கனைகுரனுறையும்" என்பதனாற் புள்ளும், †††††"தெண்கிணைப் பொருநர் செருக்குட னெடுத்த" என்பதனாற் பறையும், ‡‡‡‡‡"ஏரோடு நின்றோ… §§§§§"அரிந்துகால் குவித்தோர" என்பனவற்றாற் செய்தியும், யாழ் : ||||||||||"அ…

---

* காட்சிக்காதை, ரு - எ.
† குன்றக்குரவை, க.
‡ ,, "செறிவளை"
§ காடுகாண்காதை, அ0 - அக.
|| காட்சிக்காதை, உக.
¶ ,, கஎ.
** ,, ருச.
†† குன்றக்குரவை, "குருவி"
‡‡ காடுகாண்காதை, அக.
§§ காட்சிக்காதை, உஎ.
|||| நடுகற்காதை, கூரு
¶¶ குன்றக்குரவை, "குருவி"
*** ,, "ஆடுது"
††† ,, "குருவி"
‡‡‡ நீர்ப்படை, உஉகூ.
§§§ குன்றக்குரவை, "குருவி"
|||||| காட்சிக்காதை, சக.
¶¶¶ குன்றக்குரவை, "குருவி"
**** வேனிற்காதை, எ.
†††† நாடுகாண்காதை, க.
‡‡‡‡ ஊர்காண்காதை, கூ…
§§§§ நாடுகாண்காதை, கஉக.
|||||||| ,, கஉக.
¶¶¶¶ ஊர்காண்காதை, எட.
***** நாடுகாண்காதை, கக…
††††† ,, ககூஅ.
‡‡‡‡‡ ,, ககூரு.
§§§§§ ,, ககூகூ.
|||||||||| வேனிற்காதை, உகூ.

ராமப்பின் யாழ்கை வாங்கி" என்பதனான் மருதயாழும், பண்: *"வைகறைப் பாணியும்" என்பதனால் மருதப்பண்ணும், உரிப்பொருள்: †"சிலம்புள கொண்மென" என்பதனால் ஊடலும், ‡"விடுதலறியா விருப்பினன்" §"போற்றா வொழுக்கம் புரிந்தீர்" என்பனவற்றால் நிமித்தமும், ‖"கருங்கை வினைஞருங் களமரும்" ¶"சின்மொழிக் கடைசியர்" **"உழவ ருழத்தியா" என்பனவற்றால் நிலமக்களும், ††"பூரா நிலஞ்சிப் பொருகய லோட்டி" என்பதனால் நீர்நிலையும், ‡‡"கோதை மாதவி" என்பதனால வார்கொடியும், §§"வெண்பூ மல்லிகை ....தண்செங் கழுநீர்" என்பதனாற் பூவும் பிறவுங்கூறினார்.

நெய்தற்றிணை நிலமுதற்பொருள். பெரும்பொழுது - காரும் இருவகை வேனிலும். இவை ஆசிரியர் எடுத்தோதாமையின் அடிகள் கூறிற்றிலர்போலும். சிறுபொழுது: ‖‖"வையமோ கண்புதைப்ப வந்தாய் மருண்மாலை" என்பதனால் மாலையும், கருப்பொருள்: தெய்வம்: ¶¶"கடற்றெய்வங் காட்டிக் காட்டி" என்பதனால் வருணனும், உணா: ***"விலைமீ னுணங்கல் பொருட்டாக" என்பதனான் மீனவிலையுணவுங்கூறினா. மா, உமணர் பகடன்றி இந்நிலத்திற்கு விலங்கின்மையின் ஆசிரியர் கூறிற்றிலர்போலும. இனி முதலையும் சுறாவும் †††மாவென்பர், ‡‡‡"கெண்டை யஞ்சினை மேய்ந்து கொர்நதுபோய், முண்ட கத்துறை சேர்ந்த முதலைமா, வண்டலீ வார்கரை மாமக ரக்குழாங், கண்டு நின்று கனலுங் கழியெலாம்" எனக் காட்டுவாருளராயினும், அவை மீனெனப்படுவதல்லது மாவெனப்படா; §§§"பொறைமலி பூம்புன்னை" என்பதனால் மரமும், ‖‖‖"அன்னந் துணையோ டாட" என்பதனாற் புள்ளுங்கூறினார். பறை கூறிற்றிலர்; மீன்கோட் பறையெனக. ¶¶¶"கடல்புக் குயிர்கொன்று வாழ்வர்" என்பதனாற் செய்தியும், ****"சித்திரப்படத்து ....குற்ற நீங்கிய யாழ்" என்பதனால் யாழும், பண்: ††††"நுளையர் விளரி" என்பதனால் விளரிப்பண்ணும், உரிப்பொருள்: ††††"கொளவலலா யென்னுவி கொன்" என்பதனால் இரங்கலும், ‡‡‡‡"பேருளி னீழ, விருந்தேங்கி வாழ்வார்" என்பதனால நிமித்தமும், §§§§"சேரிப் பரதர் வலை முன்றில" ‖‖‖‖"பவள வுலக்கை" ¶¶¶¶"எறிவளைகளார்ப்ப" என்பனவற்றால் பரதரும் பரத்தியரும் நுளையரும் நுளைச்சியருமாகிய நிலமக்களும். *****"ஈாக்தண்

* புறஞ்சேரியிறுத்தகாதை, ௧௬௯.
† கனாத்திறமுரைத்தகாதை, ௭௯.
‡ அரங்கேற்றுகாதை, ௧௭௪.
§ கொலைக்களக்காதை, ௮௧.
‖ நாடுகாண்காதை, ௧௨௫.
¶ ,, ௧௯௦
**
†† நாடுகாண்காதை, ௭௮.
‡‡ ஊர்காண்காதை, ௧௧௫.
§§ ,, ௭௮ - ௭௯.
‖‖ கானல்வரி, "பையுளோய்கூட"
¶¶ ,, "கரியமலர்"
*** ,, "வலைவாணர்"
††† என்பவர் நக்கீரனர்.
‡‡‡ சூளாமணி, நாட்டுச்சருக்கம், ௨௨.
§§§ கானல்வரி, "துறைமேய்"
‖‖‖ ,, "அன்னந்"
¶¶¶ ,, "கடல்புக்"
**** ,, முதற்கட்டுரை.
†††† ,, "நுளையா"
‡‡‡‡ ,, "பிரிந்தார்"
§§§§ ,, "வாரித்தரள"
‖‖‖‖ ,, "பவள"
¶¶¶¶ ,, "எறிவளை"
***** ,, "நேர்ந்தகம்"

றை" என்பதனால் நீர்நிலையும், *"அம்மெ னிணர வடம்புகாள்" என்பதனால் வார்கொடியும், †"நறுஞாழல் கையி னேந்தி" என்பதனாற் பூவும் பிறவுங்கூறினார்.

"சொல்லிய முறையாற் சொல்லவும் படும்" என்பதனாற் சொல்லாதமுறையாற் சொல்லவும்படுமென அருத்தாபத்திகோடலானும், ‡"நடுவுநிலைத் திணையே நண்பகல் வேனிலொடு, முடிவுநிலை மருங்கின் முன்னிய நெறித்தே" என்பதனானும், §"முல்லையுங் குறிஞ்சியு முறைமையிற் றிரிந்து, நல்லியல் பிழந்து நடுங்குதுயருறுத்துப், பாலை யென்பதோர் படிவங் கொள்ளுங், காலை யெய்தினிர்" என்பதனானும்போந்த இப்பெற்றித்தாகிய பாலைத்திணை நிலமுதற்பொருள். பெரும்பொழுது : ||"வேனிற் கிழவனொடு வெங்கதிர் வேந்தன், றானலந் திருகித் தன்மையிற் குன்றி" என்பதனால் இருவகைவேனிலும், சிறுபொழுது : ¶"பைங்கதிர மயம் பார்த்திருந் தோர்க்கு" என்பதனால் **நண்பகலுங்கூறினார். கருப்பொருள் : தெய்வம், ஆசிரியர் புலப்பட எடுத்தோதிற்றிலரேனும், ††"கடுங்கதிர் திருகலின" எனவும், ‡‡"வெங்கதிர் வேந்தன் றானலந் திருகி" எனவும், §§"ஐயை கோட்டத் தெய்யா வொருசிறை" எனவும், ||||"கொற்றவையுங் கொடுமரமுஞ் செல்லும்" எனவுங் கூறுதலானும், பிறவாற்றானும் பரிதியஞ்செல்வனும், கிரியஞ்செல்வியுமெனக்கொள்க. உணா : ¶¶"ஆறிடை யத்தத் தியங்குந ரல்லது, மாறி வளம்பெறா வில்லே ருழவர்" என்பதும், ஆறெறிந்துஞ் சூறைகொண்டும் உண்ணுமுணவுமாம். மா : ***"மானின்று விளிக்கும்" என்பதனால் உழைமான்முதலியனவும், †††"அலர்தலை மராமு முலறுதலை யோமையும்" என்பதனால் மரமும், ‡‡‡"கானவாரணங் கதிர்வர வியம்ப" என்பதனாற் புள்ளும், §§§"துண்ணெனத் துடியொடு" என்பதனாற் பறையும், ||||||"பொருள்கொண்டு புண்செயின்" என்பதனாற் செய்தியும், ¶¶¶"செந்திறம் புரிந்த செங்கோட்டியாழ்" என்பதனால் யாழும், பண் : ****"ஆசான் றிறத்தின்" என்பதனாற் காந்தாரபஞ்சமமுங் கூறினார் ; உரிப்பொருள் : ††††"தொடிவளைச் செங்கை தோளிற்காட்டி" எனவும், ‡‡‡‡"ஆறிடையுழந்த மாதரைநோக்கி" எனவுங் கூறினமையாற் போக்கும், வாளாது போக்கெல்லாம பாலையென்றலின், உடன்போக்கும் கொள்ளப்பட்டன. நிலமக்கள் : §§§§"கண்ணி லெயினர்" எனவும், |||||||"இளமா வெயிற்றி" எனவுங்கூறலின், எயினரும் எயற்றியரும். ஈண்டு நீரின்மை நிலை : "நீர்நசை வேட்கையின்

---

* கானல்வரி, "தம்முடைய"
† ,, "நிணங்கொள்"
‡ தொல், பொரு, அகத்திணை, கூ.
§ காடுகாண்காதை, சுச-சுஎ.
|| ,, சுஉ - சுகூ.
¶ புறஞ்சேரியிறுத்தகாதை, கசு
** எற்பாடெனவும் பிரதிபேதம்.
†† வேட்டுவவரி, க.
‡‡ காடுகாண்காதை, சுஉ - சுகூ.
§§ வேட்டுவவரி, ச.
|||| ,, "கள்விலையாட்டி"
¶¶ காடுகாண்காதை, உ0க - உக0.
*** காடுகாண்காதை, எஅ.
††† ,, எரு.
‡‡‡ புறஞ்சேரியிறுத்தகாதை, கூஎ.
§§§ வேட்டுவவரி, "துண்ணென்"
|||||| ,, "பொருள்"
¶¶¶ புறஞ்சேரியிறுத்தகாதை, க[illegible].
**** ,, ககஉ.
†††† ,, கூகூ.
‡‡‡‡ ,, கூ0.
§§§§ வேட்டுவவரி, "துண்ணென்"
||||||| ,, "இளமா"

மாணின்று விளிர்க்கும்" என்பதனானும், *"நீரின்றி வேனி றெறுநிலம் பாலை" என்பதனானும் நீரின்மையே இந்நிலத்திற்குச் சிறப்பெனவுணர்க. †"அறுநீர்ப் பைஞ்சுனை யாமறப் புலர்தலி, னுகுநெற் பொரியும் வெம்மை" என அகப்பாட்டினுள், ‡"மரையா மரல்கவர" எனக் கலியுள்ளுங் கூறினார். §"ஆய்கொடிக் கவலையும்" என்பதனால் வார்கொடியும், ||"கொம்பர் நல்லில வங்கள் குவிந்தன" என்பதனாற் பூவும் பிறவுங் கூறினார்.

இச்சொல்லப்பட்ட ஐந்திணையின் முதல் கரு உரிப்பொருளும் பிறவுமாகிய அகத்திணைப்பொருட்பயனை உடம்பொடுபுணர்த்தியுணர்த்திப் புறத்திணைப்பொருட்பயனும் பிறவும் இவ்வாறு உடம்பொடுபுணர்த்தியுணர்த்துங்காற் புணர்த்துரைக்கப்பட்டுக் கேட்போர்க்கு இன்பம்பயவாது உணர்வுசலிக்குமாதலின் வந்தன வந்துழிக் காட்டுதலைக் கருதிற்று இவ்வுரையென்க.

இனி இசைநாடகத் தமிழ்நூலது பகுதியும், இவைபோலப் பெருவழக்கின் றாதலானும், நிலத்தோடும் காலத்தோடும், கண்டத்தோடும், கருவியோடும், நிலையோடும், இயக்கத்தோடும், இருவகை பலவகைவிலக்குறுப்புக் கை காலவட்டணை பொருள் விருத்தி யோனி சந்தி சாதி சுவை குறிப்பு சத்துவம் அவிநயம் சொல் சொல்வகை வண்ணம் வரி சேதமென்பனவற்றோடும் கதையோடும் பலகூத்துக் கூறுங்கால் உய்த்துணர்வில்லோர்க்குச் செவிச்சுவைபயக்குமாதலானும் ஈண்டு விரியாது விரித்தலைக் கருதிற்று இவ்வுரையெனக்கொள்க.

இனிப் பதிகச்செய்யுளுள், முதலீரடியும்போல யாண்டும்விரியாதது உரை பெருகுமென்பதனைக் கருதியெனக்கொள்க

* திவாகரம், ஐந்தாவது இடப்பெயர்த்தொகுதி.

† அகநானூறு, களிற்றியானைநிரை, க. "வண்டுபடத் ததைந்த கண்ணி யொண்கழ, லுருவக் குதிரை மழவ ரோட்டிய, முருக னற்போர் நெடுவே ளாவி, யறுகோட் டியானைப் பொதினி யாங்கட், சிறுகா ரோடன் பயினொடு சேர்த்திய, கற்போற் பிரியல மென்ற சொற்றா, மறந்தனர் கொல்லோ தோழி சிறந்த, வேய் மருள் பணைத்தோ ணெகிழச் சேய்நாட்டுப், பொலங்கல வெறுக்கை தருமார் நிலம்பக, வழல்போல் வெங்கதிர் பைதறத் தெறுதலி, னிழறேய்ந் துலறிய மரத்த வறைகாய், பறுநீர்ப் பைஞ்சுனை யாமறப் புலர்தலி, னுகுநெற் பொரியும் வெம்மை யாவரும், வழங்குந ரின்மையின் வௌவுநர் மடியச், சுரம்புல் லென்ற வாற்ற வலங்குசினை, நாரின் முருங்கை நவிரல் வான்பூச், சூரலங் கடுவளி யெடுப்ப வாருற், றுடைதிரைப் பிதிர்வின் பொங்கிமுன், கடல்போற் றோன்றல காடிறந் தோரே." எ - து பிரிவிடை ஆற்றாளாய தலைமகள் தோழிக்குச்சொல்லியது; மாமூலனார்.

‡ கலித்தொகை, பாலை, ரு: "மரையா மரல்கவர மாரி வறப்ப, வரையோங் கருஞ்சுரத் தாரிடைச் செல்வோர், சுரையம்பு மூழ்கச் சுருங்கிப் புரையோர்த முண்ணீர் வறப்பப் புலர்வாடு நாவிற்குத், தண்ணீர் பெறாஅத் தடுமாற் றருந்துயரங், கண்ணீர் நனைக்குங் கடுமைய காடென்றா, லென்னீ ரறியாதீர் போல விவைகூறி, னின்னீர வல்ல நெடுந்தகா யெம்மையு, மன்பறச் சூழாதே யாற்றிடை நும்மொடு, துன்பந் துணையாக நாடி னதுவல்ல, தின்பமு முண்டோ வெமக்கு"

§ காடுகாண்காதை, ௬௰. || வேட்டுவவரி, "செம்பொன்"

க-கூ. குணவாயிற் கோட்டத் தரசுதுறந் திருந்த
குடக்கோச் சேர லிளங்கோ வடிகட்குக்
குன்றக் குறவ ரொருங்குடன் கூடிப்
பொலம்பூ வேங்கை நலங்கிளர் கொழுநிழ
லொருமுலை யிழந்தா ளோர் திருமா பத்தினிக்
கமரர்க் கரசன் றமர்வந் தீண்டியவள்
காதற் கொழுநனைக் காட்டி யவளொடெங்
கட்புலங் காண விட்புலம் போய
இறும்பூது போலுமஃ தறிந்தரு ளியென

குன்றக்குறவர் - எழனுருபுத்தொகை: குன்றம் - கொடுங்கோளூர்க்கு அயலதாகிய செங்குன்றென்னுமலை. அது திருச்செங்கோடென்பவாலெனின், அவரறியார்; என்னை? அத்திருச்செங்கோடு வஞ்சிநகர்க்கு வடகீழ்த்திசைக்கண்ணதாய் அறுபதின்காதவாறுண்டாகலானும், *அரசனும் உரிமையும் மலைகாண்குவமென்றுவந்து கண்ட அன்றே வஞ்சிபுகுதலானும் அது கூடாமையினென்க.

இதன்பொருள் திருக்குணவாயிற்கோயிற்கண்ணே அரசபோகத்தைத்துறந்து தவவுருத்தாங்கியிருந்த குடதிசைக்கோவாகிய செங்குட்டுவனென்னுஞ் சேரற்கு இளங்கோவாகிய அடிகட்குக் குறவரெல்லாருந் திரண்டுசென்று எமதூர் மலைப்பக்கத்துப் பொன்போலும்பூவினையுடைய வேங்கைமரத்தின் நிழற்கண்ணே ஒருமுலையிழந்துவந்துநின்றாள் ஓர் மாபத்தினி, அவள்பொருட்டு இந்திரன்றமர் ஈண்டி வந்து அவள்கொழுநனைக் காட்டி அவளோடும் அவர் எங்கட்புலங்காண விட்புலம்போயவது ஓரதிசயமாயிருந்தது; அதனை நீ அறிந்தருளுவாயாக என்றளவிலேயென்க.

பொலம்பூ - உவமத்தொகை. நலம் - குளிர்ச்சி. கிளர்தல் - மிகுதல். திருமாபத்தினி - அழகியவீரபத்தினி. குவ்வுருபு - பொருட்டு, அது †"வரிசைக்கு வருந்தும்" என்றாற்போலநின்றது. தமர் - தேவர் ஒடு - உடனிகழ்ச்சி. கட்புலம் - கண்ணினதறிவு; கண்ணென்கின்றபுலமுமாம். விட்புலம் - விண்ணிடம்

* அரசன் - செங்குட்டுவன், உரிமை - வேண்மாள். இவர்கள் மலைகண்டவன்றே வஞ்சிபுகுந்ததனைக் காட்சிக்காதையிற்காண்க.

† "புறநானூறு, சஎ: "வள்ளியோர்ப் படர்ந்து புள்ளிற் போகி, நெடியவென்னாது சுரம்பல கடந்து, வடியா நாவின் வல்லாங்குப் பாடிப், பெற்றது மகிழ்ந்து சுற்ற மருத்தி, யோம்பா துண்டு கூம்பாது வீசி, வரிசைக்கு வருந்துமிப் பரிசில வாழ்க்கை, பிறர்க்குத் தீதறிந் தன்றோ வின்றே திறப்பட, நண்ணார் நாண வண்ணீக் தேகி, யாங்கினி தொழுகி னல்ல தோங்கிய, மண்ணாள் செல்வ மெய்திய, நம்மோ ரன்ன செம்மலு முடைத்தே." திணை - வஞ்சி. துறை - துணைவஞ்சி சோழன் நலங்கிள்ளியுழைநின்று உறையூர்புகுந்த இளந்தத்தனைக் காரியாற்றுத் துஞ்சியநெடுங்கிள்ளி, ஒற்றுவந்தானென்று கொல்லபுகுவழிக் கோவூர்கிழார் பாடி உய்யக்கொண்டது.

இறும்பூது - அதிசயம்; *"இறும்பூதுசான்ற" என்றார் மணிமேகலையிலும். சென்றெனவும், நின்றெனவும் வருவிக்க.

குறவர் கூடிப் பத்தினிக்கு ஈண்டி வந்து போய அது இறும்பூதுபோலுமென்றாரென்க.

ஈண்டிவந்து காட்டிக் காணப் போயவென்னும்பெயரெச்சம் அதுவென்னுஞ்சுட்டுப்பெயரோடு முடிந்தது. போய அது போயதெனவிகாரம். இதனுட் பத்தினியென்பதூஉம், தமரென்பதூஉம், கொழுநனென்பதூஉம் குன்றக்குறவரறிந்தமை குறைச்சொல்லையுட் காண்க. இது மருட்கையென்னுமெய்ப்பாடு.

க௦-கக. அவ்வழி யிருந்த தண்டமிழ்ச் சாத்தன்
யானறி குவனது பட்டதென் றுரைப்போன்

இ - ள். குறவர் இளங்கோவடிகளை நோக்கி அறிந்தருளென்றவளவிலே செங்குட்டுவன் அதிசயித்து முகநோக்கப் பரிசில்காரணமாகவந்து அவணுழையிருந்த சாத்தன் அதனைக் குறிப்பானறிந்து அதுவிளைந்ததெல்லாம் யானறிகுவனென்றுரைக்கின்றவனென்க

அதுவென்றது - ஒருமுலையிழந்ததனை. பட்டது - விளைந்தது.

க௨-௨௦. ஆரங் கண்ணிச் சோழன் மூதூர்ப்
பேரா சிறப்பிற் புகார்நக ரத்துக்
கோவல னென்பானோர் வாணிக னவ்வூர்
நாடக மேத்து நாடகக் கணிகையொ
டாடிய கொள்கையி னரும்பொருள் கேடுறக்
கண்ணகி யென்பான் மனைவி யவள்காற்
பண்ணமை சிலம்பு பகர்தல் வேண்டிப்
பாடல்சால் சிறப்பிற் பாண்டியன் பெருஞ்சீர்
மாட மதுரை புகுந்தனன்

இ - ள். ஆத்தித்தாரையுடைய செம்பியனது பழைய நகரங்களின்வைத்து மாறாத விழவுச்சிறப்பினையுடைய புகாராகிய நகரத்திடத்துக் கோவலனென்று பெயர்கூறப்படுவானோர்வாணிகன் தன்னூர்க்கண் நாடகத்தானேத்தும் நாடகப் பொதுமகளாகிய மாதவியென்பாளோடுகூடிய ஒழுக்கத்தாலே பெறுதற்கரிய பொருள் தொலைதலின், அவன்மனைவி கண்ணகியென்று பெயர்கூறப்படுவாள்;

* மணிமேகலை, உ௦-வது, உதயகுமரனைக் காஞ்சனன் வாளாலெறிந்த காதை. "இறும்பூது சான்ற முலையுங் காணாய், வெறும்பை போல வீழ்ந்துவேறாயின, தாழ்ந்தொசி தெங்கின் மடல்போற் றிரங்கி, வீழ்ந்தன விளவேய்த் தோளுங் காணாய், நரம்பொடு விடுதோ லுகிர்த்தொடர் கழன்று, திரங்கிய விரல்களிவையுங் காணாய், வாழைத் தண்டே போன்ற குறங்கிணை, தாழைத் தண்டினுணங்கல் காணாய், ஆவக் கணைக்கால் காணா யோநீ, மேவிய நரம்போ டென்பு புறங் காட்டுவ, தளிரடி வண்ணங் காணா யோநீ, முளிமுதிர் தெங்கி னுதிர்காயுணங்கல், பூவினுஞ் சாந்தினும் புலால்மறைத் தியாத்துத், தூசினு மணியினுந் தொல்லோர் வகுத்த, வஞ்சத் தெரியாய்"

அவளுடைய காலணியாகிய ஓசையமைந்த சிலம்பினை விற்றல்வேண்டித் தமிழி னது பாடல்சிறந்த சிறப்பினையுடைய பாண்டியனது மிக்கபுகழையுடைய மாடமது ரைக்கண்ணே சென்றுபுக்கானென்க.

நாடகமேத்துமென்றது - நாடகந்தான் இவளாற்சிறப்பெய்துதலின், ஏத்திற் றென்றவாறு. இனி ஏத்துநாடகமெனமாறிப் பதினோராடலாக்கி உரைப்பினு மமையும். இனி நான்கனுருபுவிரித்து உருப்பசிமுதலியோர்யாவரும் ஏத்துமெனவு மாம். கணிகையர்பலராதலின், இவளை நாடகக்கணிகையென்றார், பதியிலா ளென்பது தோன்ற. ஆடுதல் - அனுபவித்தல், *"இளையார்வினையாட" என்றார் சிந்தாமணியினும். அரும்பொருள் - அறனும் இன்பமுந்தரும்பொருள். †"அப் பொருடுன்னுங் காலத்துன் னூதன மில்லையே" என்றார் பிறரும். கேடுற - அழிவுற. ‡"வஞ்சியும் வறிதே, மதுரையும் வறிதே, உறந்தையும் வறிதே" என்றா

* சீவகசிந்தாமணி, பதுமையாரிலம்பகம், கஅரு "பரிந்த மாலை பறைந்தன குங்குமங், கரிந்த கண்ணி கலந்த மகிழ்ச்சியு, ளரிந்த மேகலை யார்த்தன வஞ்சிலம், பிரிந்த வண்டினை யார்வினை யாடவே"

† சீவகசிந்தாமணி, விமலையாரிலம்பகம், ௬௫. "பொன்னி னாகும் பொருபடை யப்படை, தன்னி னாகுந் தரணி தரணியிற், பின்னை யாகும் பெரும்பொரு ளப்பொரு, டுன்னுங் காலத்துன் னூதன மில்லையே"

‡ சிறுபாணாற்றுப்படை, ௫௦ - ௮௩. "முனிவிகந் திருந்த முதுவா யிரவல, தொழுமீன் குறைய வொதுங்கி வள்ளிதழ்க், கழுநீர் மேய்ந்த கயவா யெருமை, பைங்கறி நிவந்த பலவி னீழன், மஞ்சண் மெல்லிலை மயிர்ப்புறந் தைவர, வினையா விளங்க ணாற மெல்குபு பெயராக், குளவிப் பள்ளிப் பாயல் கொள்ளுங், குடபுலங் காவலர் மருமா னொன்னார், வடபுல விமயத்து வாங்குவிற் பொறித்த, வெழுவுறழ் திணிதோ ளியறேர்க் குட்டுவன், வருபுனல் வாயில் வஞ்சியும் வறிதே யதாஅன்று, நறவுவா யுறைக்கு நாகுமுதிர் நுணவத், தறைவாய்க் குறுந்துணி யயிலுளி பொருத, கைபுனை செப்பங் கடைந்த மார்பிற், செய்பூங் கண்ணி செவிமுதற் றிருத்தி, நோன்பகட் டுமண ரொழுகையொடு வந்த, மகாஅ ரன்ன மந்தி மடவோர், நகாஅ ரன்ன நளிநீர் முத்தம், வாள்வா யெருந்தின் வயிற்றகத் தடக்கித், தோள்புற மறைக்கு நல்கூர் நுசுப்பி, னுளரிய லைம்பா லுமட்டிய ரீன்ற, கிளர்பூட் புதல்வரொடு கிலுகிலி யாடுந், தத்துநீர் வரைப்பிற் கொற்கைக் கோமான், றென்புலங் காவலர் மருமா னொன்னார், மண்மாறு கொண்ட மாலை வெண்குடைக், கண்ணார் கண்ணிக் கடுந்தேர்ச் செழியன், றமிழ்நிலை பெற்ற தாங்கரு மரபின், மகிழ்நனை மறுகின் மதுரையும் வறிதே யதாஅன்று, நறுநீர்ப் பொய்கை யடைகரை நிவந்த, துறுநீர்க் கடம்பின் றுணையார் கோதை, யோவத் தன்ன வுண்டுறை மருங்கிற், கோவத் தன்ன கொங்குசேர் புறைத்தலின், வருமுலை யன்ன வண்முகை யுடைந்து, திருமுக மவிழ்ந்த தெய்வத் தாமரை, யாசி லங்கை யரக்குத்தோய்ந் தன்ன, சேயிதழ் பொதிந்த செம்பொற் கொட்டை, யேம வின்றுணை தழீஇயிற குளர்ந்து, காமர் தும்பி காமரஞ் செப்புந், தண்பணை தழீஇய தளரா விருக்கைக், குணபுலங் காவலர் மருமா னொன்னா, ரோங்கெயிற் கதவ முருமுச்சுவல் சொறியுந், தூங்கெயி லெறிந்த தொடிவிளங்கு தடக்கை, நாடா நல்லிசை நற்றேர்ச் செம்பிய, னோடாப் பூட்கை யுறந்தையும் வறிதே."

ராதலின், இதனைப் பேராச்சிறப்பினையுடைய புகாரென்றார். காற்சிலம்பு பகர்தல் வேண்டியெனவே தலைக்கோலமுதலிய அணிகளனைத்தும் முன்னமேதொலைந்தது விளங்குகின்றது. சிறப்பிற்பாண்டியனென்றும், பெருஞ்சீர்மாடமதுரையென்றும் அடிகள்புகழ்ந்தார்; இவையும் பழவினையால் அழிந்தவென்னுமிரக்கந்தோன்ற. மாடமதுரைபுகுந்தனனென்பதி - காட்டினன்றி ஒரூரின்கண், உயிரும் பொருளு மிழந்தானென்பது மேல்வினையத் தோன்றிநின்றது.

நகரத்துவாணிகன் கொள்கையாற் கேடுறுதலிற் பகர்தல்வேண்டி மனைவி யோடுபுகுந்தனனென்க.

உ0-உஉ. அதுகொண்டு

மன்பெரும் பீடிகை மறுகிற் செல்வோன்
பொன்செய் கொல்லன் றன்கைக் காட்ட

இ - ள். அங்ஙனம் முன்னாட்புகுந்தனனாய்ப் பிற்றைஞான்று அதனைக் கொண்டு போய்விற்கைக்குப் பீடிகைமறுகிற் செல்கின்றவன் கூற்றுவன்வந்தாற் போல முன்வந்த பொற்கொல்லனைக்கண்டு அவன்கையிற்காட்டவென்க.

கண்டென ஒருசொல்வருவிக்க. அதுகொண்டென்றார், அச்சிலம்பால் மேல் விளைவன தோன்ற; அது அநியாயபுரத்தே புகுகின்றவன் கூற்றத்தையும் உடன் கொண்டு புக்கானென்றாற்போன்றிருந்தது. மன் - கழிவின்கண்வந்தது.

செல்வோன் கண்டு காட்டவென்க.

உ௩-உ௬. கோப்பெருந் தேவிக் கல்லதை யிச்சிலம்
பியாப்புற வில்லை யீங்கிருக் கென்றே
பண்டுதான் கொண்ட சில்லரிச் சிலம்பினைக்
கண்டனன் பிறனோர் கள்வன் கையென

இ - ள். அங்ஙனங் காட்டக்கண்ட பொற்கொல்லன் இப்பெருவிலைச்சிலம்பு கோப்பெருந்தேவிக்கே ஆவதன்றிப் பிறர் பூணுந்தரமல்லவாதலான், இதனை யான் அரசற்குணர்த்திவருந்துணையும் இக்கோட்டத்திருக்கவெனச் சொல்லிப்போய்த் தான் முன்பு பணிக்களரியில் வஞ்சித்துக்கொண்டு நிலைநிற்றலான் ஆராய்ச்சி சிறிதுபிறந்துவருகின்றசிலம்பினைப் பிறர்நாட்டு ஓர்கள்வன்கையிற் கண்டேனென்று அரசற்குரைப்பவென்க.

தான்கொண்டவென்றார், தன்னெஞ்சறியத் தான்கொண்டதனை இங்ஙனங் கூறினானென்பதுதோன்ற. ஈங்கிருக்கவென்றார், பிறிதோரிடத்தாயின் ஊர்காவலர் ஆராய்வரென்றுகருதினானென்பதுதோன்ற. என்றேயென்றார், அவன்கருத்தும் முயற்சியுந்தோன்ற. சில்லரிச்சிலம்பினையென்றார், தொழிற்பன்மைதோன்ற. பிற னோர்கள்வன்கையிற்கண்டனனென்றார், தன்னையுங் கள்வனென்றமைதோன்ற.

உ௭-௩0. வினைவிளை காலம் ஆதலின் யாவதுஞ்
சினையலர் வேம்பன் றேரா னாகிக்
கன்றிய காவலர்க் கூஉய்க் கள்வனைக்
கொன்றச் சிலம்பு கொணர்க வீங்கென

இ - ள். அங்ஙனம் அவன்சொல்லக்கேட்ட பாண்டியன்றான் முற்பவத்திற் செய்த தீவினைவந்து பலிக்கின்றகாலமாதலாலே ஒன்றையுந்தேரானாய்க் காவலில்

அடிப்பட்டோரையழைத்து இவன்சொன்ன அக்கள்வனைக்கொல்ல அச்சிலம்பையும் அவனையும் இப்பொழுதே இங்கே கொண்டுவருவீராகவெனச் சொல்லக்கருதினவன் காமபரவசனாய் இச்சிலம்பு இவளூடல்தீர்க்கு மருந்தாமென்னுங்கருத்தால் வாய்சோர்ந்து கொன்று அச்சிலம்பை இப்பொழுதே கொணர்கவென்றுகூற வென்க.

'இதனானன்றே *"தென்னவன் தீதிலன் றேவர் கோமான் கோயில், நல் விருந் தாயினன்" என்றகருத்துமெனகொள்க.' அச்சிலம்பெனக் 'கோப்பெருந்தேவிசிலம்பைச் சுட்டிக்கூறினனாயிற் கள்வனைக்கொன்று சிலம்பைக்கொணர்க வென்றானெனினுங் குற்றமில்லை; அக்கருத்தினானன்றே வழக்குரைகாதையுள்ளும் "கள்வனைக் கோறல் கடுங்கோ லன்று" என்றதுமென்க. இங்ஙனங்கூறியது, †"பாட்டிடை வைத்த குறிப்பி னானும், பாவின் றெழுந்த கிளவி யானும், பொருளொடு புணராப் பொய்ம்மொழி யானும், பொருளொடு புணர்ந்த நகைமொழி யானு மென், றுரைவகை நடையே நான்கென மொழிப" என்பதனானென்க. இதனை மேல்வருவனவற்றிற்குங் கொள்க. இதனை ஆராயுநெறி பலவுளவாகவும், அவற்றுள் ஒன்றையும் தோந்திலனெப்பார் யாவதும் தேராளுகியென்றார். முன்னர்க் ‡கை குறைத்தனமுதலிய முறைசெய்தோன் இதனைத் தேர்ந்திலனென்று அடிகள் இரங்கிக்கூறினார். கன்றியகாவலரொன்றார், அவரும் முன்னர்த் தீதுசெய்யாரெனபது தோன்ற.

காலமாதலில் தேராளுகிக் கூறுய்க் கொன்று கொணர்கவென்றானென வியைக்க.

௫௧-௫௬. நொல்லைகளைப் பட்ட கோவலன் மனைவி
நிலைகளைக் காணு னெடுங்கணீ ருகுத்துப்
பத்தினி யாகலிற் பாண்டியன் கேடுற
முத்தார மார்பின் முலைமுகந் திருகி
நிலைகிளர் கூட லெரியூட்டிய
பலர்புகழ் பத்தினி யாகு மிவளென

இ - ள். அங்ஙனம் கொன்றுகொணர்கவென்று அரசன்கூறக்கேட்ட காவலரும் வினைவிளைகாலமாதலிற் கொல்லக் கொலையிடத்தேபட்ட கோவலனமனைவி தனக்குநிலையிடங்காணாளாய் அவடான் பதகினியாதலிற் பாண்டியன்முன்னர்ச் சென்று அவனுயிரகேடுறக் கண்ணீருகுத்து அவனூரையும் தன்முலைமுகததெழுந்த

* வாழ்த்துக்காதை, செங்குட்டுவற்குக் கண்ணகி கடவுணல்லணிகாட்டியது
† தொல்காப்பியம், பொருளதிகாரம், செய்யுளியல், கஎ௬.
‡ பாண்டியன் தனகைகுறைத்ததை மேல் கட்டுரைகாதை [௪௧-௫உ] யிலுட "எனக்குத் தகவன்று லென்பதே நோக்கித், தனக்குக் கரியாவான் றானாய்த் தற்றை, நினைத்துத்தன் கைகுறைத்தான் பாண்டியன் காணு, மெனச்செய்யார் மாணுவினை" என்னும் பழமொழிச் (௧0உ-வது) செய்யுளிலுங்காண்க. இதனை ருசுளவது திருக்குறளுரையில் "தன்கைகுறைத்தான்" எனப் பரிமேலழகரும் குறிப்பிதனர். இக்கதையையுட்கொண்டே "தீமைசெய் தாய்போற் செங்கை குறைத்தா ..." என்றார் ...த்கோகிமனிவாகம்.

நிலையுண்மைப்பண்ணிய பலரும்புகழப்படும் பத்தினிகாணும் இக்குறவர்சொன்னவளென்றுகூற வென்க.

பாண்டியனும் கூடலுங்கேடுற உகுத்து ஊட்டியவென்க. கண்ணும் முலையும் உகுத்த நீராலும் நெருப்பாலும் அடுதலும் சுடுதலுஞ்செய்தாளென்பதாயிற்று. அக்கருத்தானன்றே வாழ்த்தினுள்ளும் "தொல்லை வினையாற் றுயருழந்தாள் கண்ணினீர், கொல்ல வுயிர்கொடுத்த கோவேந்தன்" என்பதூஉம்

௧௭-௧௮. வினைவிளை கால மென்றீ ரியாதவர்
வினைவிளை வென்ன

இ-ள். நீர் முன்னை வினைவிளைகாலமென்று சொல்லிப்போந்தீர், அவர்க்கு வினைவிளைந்தகாலம் என்னையென்று அரசன் வினவவென்க.

௧௯-௩௪. விறலோய் கேட்டி
அதிராச் சிறப்பின் மதுரை மூதூர்க்
கொன்றையஞ் சடைமுடி மன்றப் பொதியிலில்
வெள்ளியம் பலத்து நள்ளிருட் கிடந்தே
னாரஞ ருற்ற வீரபத் தினிமுன்
மதுரைமா தெய்வம் வந்து தோன்றிக்
கொதியழற் சீற்றங் கொங்கையின் விளைத்தோய்
முதிர்வினை நுங்கட்கு முடிந்த தாகலின்
முந்தைப் பிறப்பிற் பைந்தொடி கணவனொடு
சிங்கா வண்புகழ்ச் சிங்க புரத்தினோர்
சங்கம னென்னும் வாணிகன் மனைவி
யிட்ட சாபங் கட்டிய தாகலின்
வாரொலி கூந்தனின் மணமகன் றன்னை
யீரேழ் நாளகத் தெல்லை நங்கை
வானோர் தங்கள் வடிவி னல்லதை
யீனோர் வடிவிற் காண்ட லில்லெனக்
கோட்டமில் கட்டுரை கேட்டனன் யானென

இ-ள். விறலோய், கேட்பாயாக; கலக்கமில்லாத சிறப்பினையுடைய மதுரையாகிய மூதூரிடத்து மன்றப்பொதியில்களில் இறைவனுறைகின்ற வெள்ளியம்பலத்துள் யான் துயின்றேனாக. செறிந்த இருளின்கண்ணே அந்நகர்க்குக் காவற்றெய்வமாகிய மதுரைமாதெய்வம் பெரியவருத்தமுற்ற வீரபத்தினிமுன்னர்வந்து வெளிப்பட்டு நினது மிக்கசினத்தால் வெவ்விய அழலை நின்கொங்கையிடத்தே விளைவித்தோய், பைந்தொடி, நுங்கட்கு முற்பட்ட தல்வினை முடிந்ததாகலான், நின் கணவனோடு நினக்கு முற்பிறப்பின்கண்ணே குன்றாதபுகழையுடைய நல்ல கலிங்கநாட்டுச் சிங்கபுரமென்னுநகரின்கட் சங்கமனென்னும் வாணிகனுடைய *மனைவி

* மனைவி - நீலி; இவள் சாபமிட்டசெய்தி முதலியவற்றை இந்நூற் கட்டுரைகாதையாலும், மணிமேகலை ௨௬-வது வஞ்சிமாநகர்புக்ககாதையாலும் விளங்க வுணர்க.

யிட்டசாபம் இப் பிறப்பின்கண்ணே வந்துறுமுண்டதாகலின், நீண்டு செறிந்ததோர் கூந்தலையுடையாய், நின்கணவனை இவ்வேளையன்றி நீ இனிப் பதினாலாநாட் பகல் நீங்கியபொழுதிற் காண்பை; காணுங்கால் வானோர்வடிவிற்காண்பதல்லது மக்கள்வடிவிற் காண்பதில்லையென்றுகூற அவ்வஞ்சமற்றகட்டுரையினை யான்கேட்டேனென்றுகூறவென்க.

கேட்டி - இகரவீற்று முன்னிலையொருமை வினைத்திரிசொல். * "இ ஐ ஆய்" என்னுஞ் சூத்திரத்தான்முடிக்க. அதிராச்சிறப்பு - பகைவரால் நடுக்கமில்லாத சிறப்பு; † "நீர்முற்றி மதில்பொரூஉம்" என்பதனானுணர்க. கொன்றையஞ்சடைமுடி - ஆகுபெயரான் இறைவன். பொது இல் - பொதியில்; உகரவீறு இகரமாய்த் திரிந்து உடம்படுமெய்யும் பெற்றுக் ‡ "ஊர்ந்தவல்ல" என்னும் அதிகாரப்புறனடையான் முடிந்தது. மன்றப்பொதியிலில்வெள்ளியம்பலத்தென்றது, பொன்னம்பலமுமுண்டாதலின்; என்னை? § "கண்ணிலாக் கவர்வன கனக கூடமும், வெண்ணிலாச் சொரிவன வெள்ளி வேயுளுந், தண்ணிலாத் தவழ்மணித் தலமுஞ் சார்ந்தரோ, மண்ணினு வியன்றில மதலை மாடமே" என்றார் சூளாமணியுள்ளும். நள்ளிருள் - செறிந்தவிருள்; ||உரிச்சொல் ஈறுதிரிந்தது. இனி வினைத்தொகையாக்கி அனுகரணத்தையுடைய இருளென்பதுஞ் சிறந்தது; "நள்ளென் றிறந்த நடுவுகொள் யாமத்து" என்றாராகலின். ஆரஞர்-பெரியவருத்தம்; ஆவது கணவனை யிழத்தல். "மக்க ளிழந்த விடும்பையினு மனையா ளிழந்த விடும்பையினு, மிக்க விடும்பை யோவாத விசைவை யிடும்பை ¶யெனவிளவித், தக்க வதனு லென்கழுத்திற் றாலி நீதந் தருளென்று, தொக்க மணிநீண முடியானைத் தொழுது பின்னு மினைசொல் லும்" என்றார் பிறரும். வீரபத்தினி - மறக்கற்புடையாள். கோப்பெருந்தேவி - அறக்கற்புடையாள். ** "ஆறியகற்புஞ் சீறியகற்புமென இருவகை. கொதியழல் - வெவ்வழல். சிற்றம் - மிகுசினம். வினைத்தோய் முன்னிலைத்தொழிற்பெயர். முதிர்தல் - முற்படுதல். எனவே நல்வினைமுடிதலாமென்க ††"ஏனைவினையுலப்ப" என்றார் பிறரும். இனி முதிர்வினையால் இவைமுடிந்தவென்ன வழக்காறுக்கினும்

---

* தொல்காப்பியம், சொல்லதிகாரம், வினையியல், உசு.

† கலித்தொகை, மருதம், உ: "கார்முற்றி யிணரூழ்த்த கமழ்தோட்ட மலர்வேய்ந்து, சீர்முற்றிப் புலவர்வாய்ச் சிறப்பெய்தி யிருநிலந், தார்முற்றி யதுபோல, தகைபூத்த வையைதன், னீர்முற்றி மதில்பொரூஉம் பகையல்லா னேராதார் போர்முற்றொன் றறியாத புரிசைசூழ் புனலூரன்"

‡ தொல்காப்பியம், எழுத்ததிகாரம், குற்றியலுகரப்புணரியல, எஅ.

§ சூளாமணி, நகரவருணனைச்சருக்கம், எ.

|| உரிச்சொல் நளி.

¶ எனவிளம்பவென்றும் பாடம்.

** "ஆறிய கற்பிற் றேறிய நல்லிசை, வண்டார் கூந்த லொண்டொடி கணவ" என்றார் பதிற்றுப்பத்திலும்; (கூ - ம் பத்து, கூ.)

†† நாலடியார், செல்வநிலையாமை, ரு. "யானை யெருத்தம் பொலியக் குடைநிழற்கீழ்ச், சேனைத் தலைவராய்ச் சென்றோரு - மேனை, வினையுலப்ப வேறு [illegible] கொண்ட மனையாளை மாற்றார் கொள."

அமையும். வைப்புத்தொடியும், கூத்தும் அன்மைவிளி. 'இங்கல் - குன்றல். வார்தல் - நெடுமை. ஒலி - தழைத்தல். எல்லை - பகற்பொழுது. கோட்டம் - வஞ்சம். கட்டுரை - பொருள்பொதிந்தசொல்; உறுதியையுடைய சொல்லுமாம். வினைவிளைவு யாதென்றவினாவினுக்குப் பாண்டியன்வினைவிளைவு கூறிற்றிலராலெனின், அது கட்டுரைகாதையின் விளங்கவுணரப்படும்.

௫௫-௬0. அரசியல் பிழைத்தோர்க் கறங்கூற் றாவதூஉ
முரைசால் பத்தினிக் குயர்ந்தோ ரேத்தலு
மூழ்வினை யுருத்துவந் தூட்டு மென்பதூஉஞ்
சூழ்வினைச் சிலம்பு காரண மாகச்
சிலப்பதி கார மென்னும் பெயரா
னாட்டுதும் யாமோர் பாட்டுடைச் செய்யுளென

அங்ஙனம் அரசனோடு சாத்தர்கூறக்கேட்ட அடிகள் பொருட்பகுதியை மூவகை யுள்ளுறையாக வகுத்துக்கூறுவரால் :

இ - ள். நல்லொழுக்கிற்குரிய அரசியலுட் சிறிது ஒழுக்கம் பிழைப்பினும் அவ்வரசனை அறக்கடவுடானே கூற்றமாய்க் கொல்லுமென்பதூஉம், புகழமைந்த கற்புடைமகளை மக்களேயன்றித் தேவருமுனிவருமுதலாயுள்ளோர் சென்றேத்துதலியல்பாதலும், முன்செய்த இருவினையும் செய்தமுறையே செய்தோனை நாடிவந்து உருக்கொண்டுநின்று நுகர்விக்குமென்பதூஉ மாகிய இம்மூன்றுபகுதியும் இச்சிலம்புகாரணமாக முறைமையிற் பிறந்தனவாதலிற் சிலப்பதிகாரமென்னும் பெயரான் ஒருகாப்பியமாக நாம் நிறுத்துதுமென்று அவ்வடிகள்சொல்லவென்க.

அறம் - அறக்கடவுள். பத்தினிக்கு - பத்தினியை. உருத்து - உருக்கொண்டு; முதிர்ந்தென்றுமாம். வினை - தொழில். நாட்டுதும் - உயர்திணைக்கண்வந்த இடவழுவமைதித் தனித்தன்மை; அஃது உளப்பாட்டுத் தன்மைபோன்றிருந்தது. பாட்டுடைச் செய்யுள் - பலபாக்களோடு உரைப்பாட்டையும் இசைப்பாட்டையுமுடைய இயலிசைநாடகப் பொருட்டொடர்நிலைச்செய்யுள். அறம் கொல்லுமென்பது, *"என்பிலதனை வெயில்போலக் காயுமே, யன்பி லதனை யறம்" என்பதனாலுணர்க. ஆவதூஉம், ஏத்தலும், ஊட்டலும் இச்சிலம்புகாரணமாகப் பிறந்தனவென ஒருசொல் வருவித்து முடிக்க.

௬௧-௬௨. முடிகெழு வேந்தர் மூவர்க்கு முரிய
தடிக ணீரே யருளுகென் றாற்கு

இ - ள். முடிபொருந்திய தமிழ்நாட்டு வேந்தர்மூவர்க்கும் உரியதாகலின், அடிகள் நீரேயருளிச்செய்கவென்று வினவிய சாத்தர்க்கென்க.

கெழுவென்னுஞ்சாரியை, † "லனவென வரூஉம் புள்ளி யிறுதிமு, னும்முங் கெழுவு முளப்படப் பிறவு, மன்ன மரபின் மொழியிடைத் தோன்றிச், செய்யுட் டொடர்வயின் மெய்பெற நிலையும்" என்னுஞ்சூத்திரத்துள், அன்ன மரபின் மொழியிடைத் தோன்றி என்பதனால் அவ்விருபுள்ளியீற்றுச்சொல்லும் அல்லாதனவும் சாரியைபெ

---

* திருக்குறள், அன்புடைமை, எ.

† தொல்காப்பியம், எழுத்ததிகாரம், குற்றியலுகரப்புணரியல், எசு.

ற்று முடிவளவுளவென்றாராகலின், புள்ளியீறல்லாதவழிவந்த சாரியைச்சொல்லெனக்கொள்க. சாரியையாவது சொல் தொடர்ந்துசெல்லு நெறிக்கணின்று அதற்குப் பற்றுக்கோடாகச் சிறிது பொருள்பயந்தும் பயவாததுமாய் நிற்பது. அவற்றுள் இது சிறிதுபொருள்பயப்ப நிற்பது; பொருந்துதலென்னும் பொருண்மை சாரும். மூவர்க்கு முரியது; 'புகாரினும், மதுரையினும், வஞ்சியினு நிகழ்ந்ததாகலின். அடிகள் - அண்மைவிளி. என்றாற்கு - தான் பாடக்கருதி வினவினசாத்தர்க்கு; அங்ஙனங் கூறாது இங்ஙனங் கூறினாரென்க. என்சொல்லிய வாறோவெனின், இச்செய்கின்ற காப்பியம் மூவேந்தர்க்குமுரியதென்பதனால், எனையோரை இவர் புகழ்ந்துரையாராகலின், யாம் காப்பியஞ்செய்யக்கடவேமென்பதுகருதி நீரேயருளுகென ஏகாரவினாப்பொருண்மைதோன்ற இதுகருதி இதுசொன்னார்க்கு அவர் கருதியபொருளிற்குடம்படாது சொல்லிற்கு உடன்பட்டாரென்பதாயிற்று.

இனித் தாம் வகுத்துக்கொண்டதனைக் கூறுவார்.

௬௨-௬௩. அவர், மங்கல வாழ்த்துப் பாடலும்

இ - ள். அவர்மணத்தில் மகளிர் வாழ்த்துதலையுடைய பாடலும்,

மங்கலம் - கலியாணம். இதனை மங்கலவாழ்த்துக் காதையுமென்னாது பாடலுமென்றது என்னையோவெனின்,—இஃது ஆசிரியப்பாவால் வாராது கொச்சகக்கலியால் வருதலானும், கதையையுடையது காதையாமாதலானும், அவ்வாறு இதிற்கதை நிகழ்ச்சியின்மையானும், வாழ்த்தும் உரையும் பாடலுமாய் வருதலானும் இங்ஙனம் பெயர்கொடுத்தாரெனவுணர்க. அஃது அற்றாக; மேலும் கானல்வரி, வேட்டுவவரி, ஆய்ச்சியர்குரவை, துன்பமாலை, ஊர்சூழ்வரி, வஞ்சினமாலை, குன்றக்குரவை இவையிற்றையும் காதையென்றிலராலெனின்,—அவற்றைக்கூறாததும் சில வேறுபாடு கருதிப்போலும். என்னைவேறுபாடெனின், அவை தத்தமுடிவிற் கூறுதும்.

௬௩-௬௪. குரவர், மனையறம் படுத்த காதையும்

இ - ள். இருமுதுகுரவரும் இவரை இல்வாழ்க்கையில் அடிப்படுத்தவேண்டி வேறுபடவிட்ட காதையும்,

௬௪-௬௫. நடநவின்
மங்கை மாதவி யரங்கேற்று காதையும்

இ - ள். ஐயாண்டில் தண்டியம்பிடித்து எழாண்டு நடநவின்றமாதவி மங்கை பருவத்தே அரங்கேற்றினகாதையும்,

௬௬. அந்தி மாலைச் சிறப்புச்செய் காதையும்

இ - ள். அந்திக்காலத்து மாலையைச் சிறப்புச்செய்த காதையும்,

௬௭. இந்திர விழவூ ரெடுத்த காதையும்

இ - ள். அந்நகரின்கண் இந்திரனுக்கு விழவெடுத்தகாதையும்,

௬௮. கடலாடு காதையும்

இ - ள். அங்ஙனமெடுத்த விழவிறுதியிற் கடலாடினகாதையும்,

இ - ள். அங்ஙனங் கடலாடிய கோவலனும் மாதவியும் கழிக்கானலிடத்து யாழ்ப்பாட்டு நிகழ்த்திய கானல்வரியும்,

இஃது இசைப்பாவாற்பெற்றபெயர். இதனுள்ளும் கதை நிகழாமையுணர்க.

சுசு-எ௦. வேனில்வந் திறுத்தெனெ, மாதவி யிரங்கிய காதையும்

இ - ள். இளவேனில்வந்து தலைப்பட்டதாகப் பிரிந்தமாதவி வருந்தியகாதையும்,

எ௦-எக. தீதுடைக், கனாத்திற முரைத்த காதையும்

இ - ள். கண்ணகி தான்கண்ட தீங்கையுடைய கனவின்றிறத்தைத் தேவந்திக்கு உரைத்தகாதையும்,

இது கலிவெண்பாட்டாகலின், *"ஒருபொரு ணுதலிய வெள்ளடி யியலாற், றிரிபின்றி வருவது கலிவெண் பாட்டே" என்பதனாற் கனாநிலையுரைத்தற் பொருண் முடிபாகிய பாலதனைக்கூறுதலிற் காதையாயிற்றெனவுணர்க.

எக-எஉ. வினாத்திறத்து, நாடுகாண் காதையும்

இ - ள். கண்ணகியார் மதுராபுரியாதென வினாவின திறத்தையுடைய சோணாட்டின்வளனை அவர்கண்டகாதையும்,

இனிக் கவுந்தியடிகளை வினவின திறமெனவும், பிறர் வினாவுந்திறத்தையுடைய எனவுமமையும்.

எஉ. காடுகாண் காதையும்

இ - ள். அங்ஙனம் மருதநிலமாகிய நாட்டினைக்கண்டு இன்புற்றவர் பாலைநிலமாகிய காட்டினைக்கண்டு துன்புற்றகாதையும்,

எந. வேட்டுவவரியும்

இ - ள். வேட்டுவமகளாகியசாலினி கொற்றவை யுருக்கொண்டாடிய கோலச்சாரியும்,

"இருவகைபலவகையென்னும் விலக்கோடரியவுறுப்புப் பதினொராட்டுக் கூவை வரி † சேதமவிநயகாடகமென்றிவர்ருற் றக்கவவனே யாடலாசான்" என்றமையான், வரியென்பது கோலச்சாரி. இது வேட்டுவமகளாகியசாலினிகொற்றவை யுருக்கொண்டு ஆடுதலின், ‡"கொற்றவை கொண்ட வணிகொண்டு நின்றவிப், பொற்றொடி மாதர் தவமென்னை கொல்லோ" என்பதனாற் கூத்துள்படுதலின், காடகவரிப்பெயராய், வேட்டுவவரி நிகழ்தலின் வேட்டுவவரியாயிற்று. இது கூத்தாற் பெற்றபெயர்.

எந-எச. தோட்டலர் கோதையொடு, புறஞ்சேரி யிறுத்த காதையும்

இ - ள். கண்ணகியோடு மதுரைப்புறஞ்சேரியிற் சென்றுவிட்ட காதையும்,

எச-எரு. கறங்கிசை, யூர்காண் காதையும்

---

* தொல்காப்பியம், பொருளதிகாரம், செய்யுளியல், கஙிச.

† சோகமெனவும் பிரதிபேதமுண்டு.

‡ வேட்டுவவரி.

இ - ள். முழங்காநின்ற முரசொலியையுடைய மதுரையைக் கோவலன் கண்டகாதையும்,

எரு-எசு. சீர்சா னங்கை, யடைக்கலக் காதையும்

இ - ள். அழகெல்லாமமைந்த கண்ணகியாகியநங்கையை மாதரிபாற் கவுந்தியடிகள் அடைக்கலங்கொடுத்தகாதையும்,

எசு. கொலைக்களக் காதையும்

இ - ள். கோவலன் கொலைக்களப்பட்டகாதையும்,

எஎ. ஆய்ச்சியர் குரவையும்

இ - ள். தஞ்சேரிக்கு உற்பாதசாந்தியாக மாதரிமுதலாயுள்ள ஆய்ச்சியர் குரவைக் கூத்தாடின முறைமையும்,

"குரவை யென்பது கூறுங் காலைச், செய்தோர் செய்த காமமும் விறலும், மெய்தவுரைக்கு மியல்பிற் றென்ப" எனவும், "குரவை யென்ப தெழுவர் மங்கையர், செந்நிலை மண்டலக் கடகக் கைகோத், தந்நிலை கொட்பநின் றாட லாகும்" எனவுஞ் சொன்னாராகலின், இதுவும் ஆய்ச்சியரிடத்து நிகழ்தலான் ஆய்ச்சியர்குரவையெனக் கூத்தாற் பெற்றபெயர்.

எஎ-எஅ. தீத்திறங் கேட்ட, துன்ப மாலையும் .

இ - ள். அங்ஙனம் அவன் கொலையுண்ட தீத்திறத்தைக் கண்ணகிகேட்டுத் துன்புற்றவியல்பும்,

இதுவும் ஊர்சூழ்வரியும் சிறிது கதைநிகழ்ச்சியுளவெனினும் மருட்கையென்னு மெய்ப்பாடும் அவலம் அரற்றுக் கவலை கையாறென்னுமிவையும் நிகழ்தலியல்பினன் இதனை மாலையென்றாரெனக் கொள்க.

எஅ-எகூ. நண்பக னடுங்கிய, வூர்சூழ் வரியும்

இ - ள். எல்லாருங்காண நாணிறந்து வெளிப்பட்டவுருவினொடு கண்ணகி ஊர்சூழ்வந்த ஊர்சூழ்வரியும்,

கண்ணகி ஊர்சூழவருவதனைப் பத்தினிப்பெண்டிர் கண்கூடாகக் கண்டலின் இஃது ஊர்சூழ்வரி யென்பதாயிற்று. இதுவுங் கூத்தாற் பெற்றபெயர்.

எகூ - அ0. சீர்சால் வேந்தனொடு, வழக்குரை காதையும்

இ - ள். புகழமைந்ததென்னனோடு கண்ணகி வழக்குரைத்தகாதையும்,

உரைகாதை - வினைத்தொகை; இறப்பு.

அ0. வஞ்சின மாலையும்

இ - ள். அங்ஙனந்தானுரைத்த வழக்கு வளர்ந்தோற்று உயிருந்தோற்ற நெடுஞ்செழியன்றேவியைநோக்கிக் கண்ணகி வஞ்சினங்கூறிய இயல்பும்,

வஞ்சினமாவது மேற்கோள். இக்கலிவெண்பாட்டுப் பத்தினித்தன்மைத்தாகி ஒருபொருளையே கருதிக்கூறிய இயல்பையுடைத்தாகலின் மாலையென்றார்.

அ0 - அ௧. அழற்படு காதையும்

இ - ள். அங்ஙனம் வஞ்சினங்கூறினவள் முலைமுகத்து எழுந்த தீ அவளேவிய இடமெங்கும் பட்டு எரித்தகாதையும்,

௮௧-௮௨. அருந்தெய்வந் தோன்றிக், கட்டுரை காதையும்

இ - ள். அங்ஙனம் அழற்படுதலின் அதற்காற்றாது மதுராமாதெய்வம் அவ்வழறணித்தற்குவந்து இவளது பவத்தொடர்பு கட்டுரைத்தகாதையும்,

௮௨-௮௩. மட்டலர் கோதையர், குன்றக் குரவையும்

இ - ள். மதுவொழுகமலர்ந்த கோதையினையுடைய குறத்தியர் இவளை வேங்கைநிழற்கண் கண்டதற்கு உற்பாதசாந்தியாக முருகவேளைநோக்கி அக்குன்றின்கண் ஆடிய குரவையும்,

ஆய்ச்சியர்குரவையிற் கூறியது இதற்குங்கூறுக. கோதையென்று பாடங்கூறிக் கோதைக்கு அவர்களெடுத்த குரவையெனினும் அமையும்.

௮௩. என்றிவை யனைத்துடன்

இ - ள். என்று சொல்லப்பட்ட இவ்விருபத்துநான்குடனே,

௮௪-௮௬. காட்சி கால்கோ ணீர்ப்படை நடுகல்
வாழ்த்து வரந்தரு காதையொ
டிவ்வா றைந்தும்

௮௪. காட்சி—இ - ள். காட்சிக்காதையும்,

கற்காட்சியும், குறவர் பாடுகட்காட்சியுமென்க.

௮௪. கால்கோள்—இ - ள். கற்கொண்ட காதையும்,

கற்கோள் - கால்கோளென விகாரம்.

௮௪. நீர்ப்படை—இ - ள். அக்கொண்டகல்லினைக் கங்கையாற்று நீர்ப்படுத்தினகாதையும்,

௮௪. நடுகல்—இ - ள். அக்கல்லினை நட்டகாதையும்,

௮௫. வாழ்த்து—இ - ள். அங்ஙனநடுங்கல்லான பிரதிட்டையும் விழவும் பெற்ற பத்தினிக்கடவுள் செங்குட்டுவனையும் நெடுஞ்செழியனையும் பெருங்கிள்ளியையும் வாழ்த்தினகாதையும்,

௮௫. வரந்தரு காதையொடு

இ - ள். அங்ஙனம்வாழ்த்தியகடவுள் அவரோடு கனகவிசயர்முதலிய ஆரிய மன்னருள்ளிட்டார்க்கு வரங்கொடுத்தகாதையோடே,

ஒடு - ஒப்பிலொப்புரை; எண்ணொடுவுமாம். தருதல் - கொடை.

௮௬. இவ்வா றைந்தும்— இ - ள். முப்பதென்றெண்ணப்பட்ட,

௮௭. உரையிடை யிட்ட பாட்டுடைச் செய்யுள்

இ - ள். உரையிடையிட்டனவும் பாட்டுடையனவுமாகிய செய்யுளை,

அனைத்துடன் காதையொ டிவ்வா றைந்தும் உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுளென்க. உம்மை முற்று.

அஅ. உரைசா லடிக ளருள

இ - ள். புகழமைந்த இளங்கோவடிகள் அருளிச்செய்ய, அருளுகென்றற்கு அருளவென்க.

அஅ-அகூ. மதுரைக்

கூல வாணிகன் சாத்தன் கேட்டனன்

இ - ள். மதுரைக் கூலவாணிகனான சாத்தன் கேட்டனன்;

கூலம் எண்வகைத்து. அவை நெல்லு, புல்லு, வரகு, தினை, சாமை, இறுங்கு, தோரை, இராகி. * பதினெண்வகைத்தென்பர் கூத்தநூலார்.

அகூ. இது— இ - ள். இவ்வரையறை

கூ0. பால்வகை தெரிந்த பதிகத்தின் மரபென

இ - ள். அறப்பால், பொருட்பால், காமத்துப்பாலாகிய அப்பால்களின் வகையைத்தெரிந்த செய்யுளின் பதிகத்தினது மரபு இதுவென்க.

என்வென்னும் அசைச்சொல் ஆசிரியப்பாவிற்கு முடிபு சிறப்புடைத்து.

அடிகட்கு அறிந்தருணீயென இருந்தசாத்தன் உரைப்போன் இவளென வினை விளைவு யாதென, விறலோய் கேட்டனன்யானென அறங்கூற்றாவதூஉம் உயர்ந்தோ ரேத்தலும் ஊட்டுமென்பதூஉங் காரணமாகப் பெயரான் நாட்டுதும் யாம் ஓர் பாட்டுடைச்செய்யுளென அருளுகென்றற்கு அருளக் கேட்டனனென்க.

அறுபத்தெட்டாமடியுட் †"கடலாடு காதையும்" எனக்குறளடியும், (அகு) "வாழ்த்து வரந்தருகாதையொடு" எனச்சிந்தடியும் (அகூ) "இவ்வாறைந்தும்" எனக் குறளடியும் வந்து, ‡"ஈற்றய லடியே யாசிரிய மருங்கிற், றோற்ற முச்சீர்த் தாகுமென்ப" என்ற ஆசிரியர், §"இடையும் வரையார் தொடையுணர் வோரே" என்றதனாற் குட்டச் செந்தூக்காயிற்று.

இது, நாற்பொருளுள்ளும் அகத்திணைக்கண்ணது இன்பமாகலானும், புறத்திணைக்கண்ணது பொருளும் அறனுமாகலானும் வீடொழிந்த முடிபு கூறிநின்றது. அதனானன்றே, ||"மணிமே கலைமே லுரைப்பொருண் முற்றிய சிலப்பதிகாரம்" என்பாரானதுவு மென்க.

பதிகம் முற்றிற்று.

---

* கூலம் பதினெண்வகைத்தென்பதைப் பின்வருஞ் சூத்திரத்தானுமுணர்க. "அந்தணர் வேள்வியோ டருமறை முற்றுக, வேந்தன் வேள்வியோ டியாண்டுபல வாழ்க, வாணிக ரிருநெறி நீணிதி தழைக்க, பதினெண் கூலமு முழவர்க்கு மிகுக, வரங்கியற் கூத்து நிரம்பிவினை முடிக, வாழ்க நெடுமுடி கூகவென் வாய்ச்சொலென், றப்படிப் பலிகொடுத் திறைவனிற் றொருகுச், செப்பட வமைத்துச் செழும்புகை காட்டிச், சேவடி தேவரை யேதிப் பூசனை, மூவடி முக்கால் வெண்பா மொழிந்து, செவியிழுக் குறுமை வேதனை யெத்திக, கலியொழுக் கத்து நின்றுழி வேந்தன், கொடுப்பன கொடுபப வடுக்குமென்ப" என்றா மதிவாணனார்.

† இந்த அடியிலுள்ள 'மடலவிழ்' என்பதைத் தனிச்சொல்லாகக் கொள்க.

‡ தொல்காப்பியம், பொருளதிகாரம், செய்யுளியல், சுஅ.

§ ,, ,, ,, சுகூ.

|| இதனைச் சிலப்பதிகார இறுதிக்கட்டுரையிற்காண்க.

உரைபெறு கட்டுரை.

க. அன்றுதொட்டுப் பாண்டியனாடு மழைவறங்கூர்ந்து வறுமையெய்தி வெப்புநோயுங் குருவுந் தொடரக் கொற்கையிலிருந்த வெற்றிவேற்செழியன் நங்கைக்குப் பொற்கொல்லராயிரவரைக்கொன்று களவேள்வியால் விழவொடுசாந்திசெய்ய நாடுமலிய மழைபெய்து நோயுந் துன்பமு நீங்கியது.

உ. அதுகேட்டுக் கொங்கிளங் கோசர் தங்கணாட்டகத்து நங்கைக்கு விழவொடுசாந்திசெய்ய மழைதொழிலென்றும் மாறாதாயிற்று.

ங. அதுகேட்டுக் கடல்சூழிலங்கைக் கயவாகுவென்பான் நங்கைக்குநாட் பலிபீடிகை கோட்டமுந்துறுத்தாங்கு அரந்தைகெடுத்து வரந்தருமிவ ளென ஆடித்திங்க ளகவையினாங்கோர் பாடிவிழாக்கோள் பன்முறை யெடுப்ப மழைவீற்றிருந்து வளம்பலபெருகிப் பிழையாவிளையு ளாடாயிற்று.

ச. அதுகேட்டுச் சோழன்பெருங்கிள்ளி கோழியகத்து எத்திறத்தானும் வரந்தருமிவளோர் பத்தினிகடவுளாகுமென நங்கைக்குப் பத்தினிக் கோட்டமுஞ்சமைத்து நித்தல்விழாவணி நிகழ்வித்தோனே.

க. அன்றுதொட்டு.........நோயுந்துன்பமுநீங்கியது

அன்றென்றது கதையை உட்கொண்டு நின்றது: * "வெள்வா ளெறிந்தனன் விலங்கூ டறுத்துப், புண்ணுமிழ் குருதி பொழிந்துடன் பரப்ப, மண்ணக மடந்தை வான்றுயர் கூரக், காவலன் செங்கோல் வளைஇய வீழ்ந்தனன், கோவலன்" என்றாராகலின்.

இ - ள். பாண்டியனாடு அன்றுதொடங்கி மழைவறத்தன்மிக்கு அதனானே வறுமையுற்றுத் தொழுநோயும் குருவும் இடைவிடாதுகலிதலிற் கொற்கைக்கணிருந்த இளஞ்செழியன் நங்கைக்கு ஆயிரம்பொற்கொல்லரைப் பலியிட்டுக் களவேள்வியாற் சாந்திசெய்து விழவெடுத்தலானே அவனாடு மிகவும் மழைபெய்து முற்கூறிய வறுமையும் நோயுநீங்கிற்று.

வெப்பு - தொழுநோய்; † "வெப்பின்முப்பழச்சுனை" யென்றாராகலின். இது வெதுப்பெனினு மமையும்.

உ. அதுகேட்டு.........மாறாதாயிற்று

இ - ள். அங்ஙனம் செழியன் நன்மைசெய்து அலைவுநீங்குதலின் அதனைக்கேட்டுக் கொங்குமண்டிலத்து இளங்கோவாகிய கோசரும் நங்கைக்கு அங்ஙனம் சாந்தியும் விழவுஞ்செய்தலான் அலைவுநீங்குதலோடே மழை பெய்தற்றொழில் பெய்யு நாளென்றும் வழுவாதாயிற்று.

---

* கொலைக்களக்காதை, உகரு - உகஎ.

† சீவகசிந்தாமணி, நாமகளிலம்பகம், சுக: "விலக்கில்சாலை யாவர்க்கும் வெப்பின்முப்ப முச்சுனைத், தலைத்தணீர்ம லரணிந்து சந்தனஞ்செய் பந்தரும், கொலைத்தலைய வேற்கணார் கூத்துமன்றி ஞாங்கர்பொறி, நிலத்தலைய துப்பெலா நிறைந்துளும்பு மூர்களே."

(னும்)

பெய்யுநாளென்றது திங்கண்மும்மாரியை; பருவநாளெனினுமமையும்.

௩. அதுகேட்டு.........நாடாயிற்று.

இ - ள். அதுகேட்டுக் கடலை அகழாகவுடைய இலங்காபுரத்துக் கயவாகுவென்று பெயர்கூறப்பட்ட அரசன் நங்கைக்கு அங்ஙனம் நாடோறும் பலிகொள்ளுதலையுடைய பலிபீடத்தை முந்தச்செய்து பின்பு கோட்டமுமமைத்து முற்கூறியதுன்பங்களைக்கெடுத்து நமக்கு வேண்டும்வரங்களை இவள்தருமென்று துணிந்து ஆடித்திங்களிடத்தே ஆட்டைவிழாவாகத் தன்னகரவீதிதோறும் உலாச்செய்விக்க மழைகுறைவின்றிநிலைபெறுதலானே அன்றே பொய்யாதுவிளையும் விளைவினையுடைய நாடாயிற்று அவனாடு.

பாடம் - நகரி.

௪. அதுகேட்டு.........நிகழ்வித்தோனே

இ - ள். அதனைக்கேட்டுச் சோழனாட்டு உறையூரிடத்தே பெருநற்கிள்ளியரசனாகியவளவன் இவள் பத்தினிக்கடவுளாதலின், எத்திறத்தானும் நமக்கு அரந்தையைக்கெடுத்து வரந்தருமெனக்கருதி நங்கைக்கு அங்ஙனம் கோட்டமுமமைத்து நித்தல் விழவும் நடத்தினானென்க.

எத்திறத்தானுமென்றார்; இவள்பிறந்த உரிமைபற்றி. கோழியென்றது - ஒருகோழி நிலமுக்கியத்தால் யானையோடு பொருது அதனைப் போர்தொலைத்தல்கண்டு அந்நிலத்திற்செய்த நகர்க்குப் பெயராயிற்று; * "முறஞ்செவி வாரண முன்சம முருக்கிய, புறஞ்சிறை வாரணம்" என்றார்மேலும். நித்தல்விழா - சீபலி. அரந்தை-துன்பம்.

உரைபெறுகட்டுரை-இவைமுற்கூறிய கட்டுரைச்செய்யுள்; "உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யு, ளுரைசாலடிகளருள" என்றமையால் காப்பியங்கட்குச் சிறுபான்மை இவ்வுறுப்புக்களும் சிலவருமெனக்கொள்க. என்னை? † "உரையும் பாடையும் விரவியும் வருமே" என்பது அணியியலாகலின்.

உரைபெறுகட்டுரை முற்றிற்று.

---

* காடுகாண்காதை, ௨௪௭ - ௨௪௮.

† தண்டியலங்காரம், பொதுவணியியல், ௪: "ஒருதிறப் பாட்டினும் பலதிறப் பாட்டினு, முரையும் பாடையும் விரவியும் வ[illegible]ாயிற்க

உ

கணபதிதுணை.

சிலப்பதிகாரம்

அடியார்க்குநல்லாருரை.

முதலாவது

புகார்காண்டம்.

க.—மங்கலவாழ்த்துப்பாடல்.

திங்களைப் போற்றுதுந் திங்களைப் போற்றுதுங்
கொங்கலர்தார்ச் சென்னி குளிர்வெண் குடைபோன்றிவ்
வங்க ணுலகளித்த லான்.

ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதுங்
காவிரி நாடன் றிகிரிபோற் பொற்கோட்டு
மேரு வலந்திரித லான்.

மாமழை போற்றுதும் மாமழை போற்றுதும்
நாமநீர் வேலி யுலகிற் கவனளிபோன்
மேனின்று தான்சுரத்த லான்.

பூம்புகார் போற்றுதும் பூம்புகார் போற்றுதும்
வீங்குநீர் வேலி யுலகிற் கவன்குலத்தோ
டோங்கிப் பரந்தொழுக லான்.

ஆங்கு,
பொதியி லாயினு மிமய மாயினும்
பதியெழு வறியாப் பழங்குடி கெழீஇய
பொதுவறு சிறப்பிற் புகாரே யாயினு
நடுக்கின்றி நிலைஇய வென்ப தல்லதை
யொடுக்கங் கூறா ருயர்ந்தோ ருண்மையின்
முடித்த கேள்வி முழுதுணர்ந் தோரே

அதனால்,
நாகநீ ணகரொடு நாகநா டதனொடு
போகநீள் புகழ்மன்னும் புகார்நக ரதுதன்னின்

மாகவா னிகர்வண்கை மாநாய்கன் குலக்கொம்ப
ரீகைவான் கொடியன்னா ளீராறாண் டகவையாள்

அவளுந்தான்,
போதிலார் திருவினாள் புகழுடை வடிவென்றுந்
தீதிலா வடமீனின் றிறமிவ டிறமென்றும்
மாதரார் தொழுதேத்த வயங்கிய பெருங்குணத்துக்
காதலாள் பெயர்மன்னுங் கண்ணகியென் பாண் மன்னோ

ஆங்கு,
பெருநில முழுதாளும் பெருமகன் றலைவைத்த
வொருதனிக் குடிகளோ டுயர்ந்தோங்கு செல்வத்தான்
வருநிதி பிறர்க்கார்த்து மாசாத்து வானென்பா
னிருநிதிக் கிழவன்மக னீரெட்டாண் டகவையான்

அவனுந்தான்,
மண்டேய்த்த புகழினான் மதிமுக மடவார்தம்
பண்டேய்த்த மொழியினா ராயத்துப் பாராட்டிக்
கண்டேத்துஞ் செவ்வேளென் றிசைபோக்கிக் காதலாற்
கொண்டேத்துங் கிழமையான் கோவலனென் பான்மன்னோ

அவரை,
இருபெருங் குரவரு மொருபெரு நாளால்
மணவணி காண மகிழ்ந்தனர் மகிழ்ந்துழி
யானை யெருத்தத் தணியிழையார் மேலிரீஇ
மாநகர்க் கீந்தார் மணம்.

அவ்வழி,
முரசியம்பின முருடதிர்ந்தன முறையெழுந்தன பணிலம்
வெண்குடை
யரசெழுந்ததொர் படியெழுந்தன வகலுண்மங்கல வணி
யெழுந்தது
மாலைதாழ் சென்னி வயிரமணித் தூணத்து
நீல விதானத்து நித்திலப்பூம் பந்தர்க்கீழ்
வானூர் மதியஞ் சகடணைய வானத்துச்
சாலி யொருமீன் றகையாளைக் கோவலன்
மாமுது பார்ப்பான் மறைவழி காட்டிடத்
தீவலஞ் செய்வது காண்பார்க ணோன்பென்னை
விரையினர் மலரினர் விளங்கு மேனிய
ருரையினர் பாட்டினர் ரொசிந்த நோக்கினர்
சாந்தினர் புகையினர் தயங்கு கோதைய

நேர்ந்திள முலையின ரிடித்த சுண்ணத்தர்
விளக்கினர் கலத்தினர் விரிந்த பாலிகை
முளைக்குட நிரையினர் முகிழ்த்த மூரலர்
போதொடு விரிகூந்தற் பொலனறுங் கொடியனார்
காதலற் * பிரியாமற் கவவுக்கை ஞெகிழாமற்
றீதறு-கெனவேத்திச் சின்மலர் கொடுதூவி
யங்க ணுலகி னருந்ததி யன்னாளை
மங்கல நல்லமளி யேற்றினார் தங்கிய
விப்பா லிமயத் திருத்திய வாள்வேங்கை
யுப்பாலைப் பொற்கோட் டுழையதா வெப்பாலுஞ்
செருமிகு † சினவேற் செம்பிய
னொருதனி யாழி யுருட்டுவோ னெனவே.

திங்களைப் போற்றுதுந் திங்களைப் போற்றுதுங்
கொங்கலர்தார்ச் சென்னி குளிர்வெண் குடைபோன்றிவ்
வங்க ணுலகளித்த லான்

இ - ள். நாம் திங்களைப் போற்றுவேம்; திங்களைப் போற்றுவேம். அஃது எற்றுக்கெனின், தாது பரத்தல்செய்த மாலையையுடைய ‡ சென்னியுடைய குளிர்ச்சியையுடைய வெண்குடைபோன்று பொதுவற இவ்வுலகிற்கு அளிசெய்தலானென்க.

இது பண்பும் பயனுங் கூடின உவமம். கொங்கு - தாது. அம் - அழகு. கண் - இடம். போற்றுதும் - பன்மைத் தன்மை; § "அம்மாம்" என்னுஞ் சூத்திரத்துக் கடதறவால் முடிந்தது. இது || "நடைமிகுத் தேத்திய குடைநிழன் மரபு"

ஞாயிறு போற்றுது ஞாயிறு போற்றுதுங்
காவிரி நாடன் றிகிரிபோற் பொற்கோட்டு
மேரு வலந்திரித லான்

இ - ள். நாம் ஞாயிற்றைப் போற்றுவேம்; ஞாயிற்றைப் போற்றுவேம். அஃது எற்றுக்கெனின், காவிரிநாட்டையுடையானுடைய ஆழிபோலப் பொலிவுபெற்ற கொடுமுடியையுடைய மேருவை வலமாகத் திரிதருதலானென்க.

திகிரி - ஆக்கினைசக்கரம். இது தொழிலுவமம்.

மாமழை போற்றுது மாமழை போற்றுது
நாமநீர் வேலி யுலகிற் கவனளிபோன்
மேனின்று தான்சுரத்த லான்

இ - ள். நாம் பெரிய மழையைப் போற்றுவேம்; பெரிய மழையைப் போற்று'

---

* பிரியாமைக் கவவுக்கை ஞெகிழாமையென்றும் பாடம்.

† நெடுவேலென்றும் பாடம்.

‡ சென்னி - சோழன்.

§ தொல்காப்பியம், சொல்லதிகாரம், வினையியல், ௫.

|| ,, பொருளதிகாரம், புறத்திணையியல், ௩௬.

வேம். அஃதெற்றுக்கெனின், அச்சத்தைத்தரும் கடல்சூழுலகிற்கு அவன் அளிசெய்யுமாறுபோல மாறாது மேலாய்நின்று தன்பெயலான் வளத்தைச் சுரத்தலானென்க.

நாம் - நாமமெனஉரிச்சொல் ஈறுதிரிந்தது; புகழெனினு மமையும்; ஏழ்வகைப் பெயருமாம். வேலி - சூழ்தல். அளி - கொடை. மேனின்று-மேலாய் நின்று. தான் - அசை. சுரத்தல் - இடைவிடாதுசொரிதல். உலகிற்குச் சொரிதலானென இயையும்.

பூம்புகார் போற்றுதும் பூம்புகார் போற்றுதும்
வீங்குநீர் வேலி யுலகிற் கவன்குலத்தோ
டோங்கிப் பரந்தொழுக லான்

பூம்புகார் - விகாரம்; பூ - பொலிவு.

இ - ள். நாம் * புகாரைப் போற்றுவேம்; புகாரைப்போற்றுவேம். அஃதெ ற்றுக்கெனின், மிக்க கடலை வேலியாகவுடைய உலகின்கண் அவன் குலம்புகழ்வார் இதனையும் புகழ்வாராகலினென்க.

உலகிற்கு - உலகின்கண்; உருபுமயக்கம்; † "யாதனு......சாரும்" என்பதனான் முடிந்தது; ‡ "தில்லைச் சூழ்பொழிற்கு" என்றாற்போல.

திங்களை முற்கூறினார், இத் தொடர்நிலைச் செய்யுட்குச் சிறந்த முதன்மொழி அதுவாகலான். இத் திங்கள்முதலியவற்று இவனளித்தல்முதலிய செய்கையொத்தலான்; இவையும் இவனைற் சிறந்தனவென்பதாம். இறப்பப் புனைந்துரைத்தற்கு, "குடைநிழல் மரபு" என்றதனால் கிகிரியும் கொடையும் உயர்ச்சியும் புனைந்துகூறியவாறாயிற்று.

ஆங்கு,
பொதியி லாயினு மிமய மாயினும்
பதியெழு வறியாப் பழங்குடி கெழீஇய
பொதுவறு சிறப்பிற் புகாரே யாயினு
நடுக்கின்றி நிலைஇய வென்ப தல்லதை
யொடுக்கங் கூறா ருயர்ந்தோ ருண்மையின்
முடித்த கேள்வி முழுதுணர்ந் தோரே

இ - ள். அப்படிப்போற்றினல்லது, முனைவனூலின் முடித்தகேள்வியான் எனைத்துப்பொருளையு முணர்ந்தபெரியோர, பொதியில் இமயம் புகாரென்னும் இம் மூன்றும் ஒருதன்மையவாதலான், ஆதியிற்றோன்றிச் சலிப்பின்றி நிலைபெறறனவென்று கூறினல்லது, அவற்றிற்கு அந்தமுண்டென்றுகூறார், அவற்றில் உயர்ந்தோருண்டாதலா னென்க.

---

* புகார் - காவிரிப்பூம் பட்டினம்.

† தொல்காப்பியம், சொல்லதிகாரம், வேற்றுமைமயங்கியல், உ௩.

‡ திருச்சிற்றம்பலக்கோவையார், க௬௭. "சுரும்புறு நீலங்கொய் யற்றமி நின்று துயில்பயின்மோ, வரும்பெறற் றோழியொ டாயத்து நாப்ப ணமரரொன்று, றிரும்புறு மாமதில் பொன்னிஞ்சி வெள்ளிப் புரிசையன்றோர், துரும்புறச் செற்ற கொற் றத்தெம்பி ரான்றில்லைச் சூழ்பொழிற்கே."

ஆயினுமென்பது ஓரெண்ணிடைச்சொல்; * "கிளந்த வல்ல வேறுபிற தோன்றினுங், கிளந்தவற் றியலா னுணர்ந்தனர் கொளலே" என்னும் புறனடையாற் கொள்க. பதியெழுவறியா - பதியினின்றும் பெயர்தலையறியாத; எனவே பகையின்மை கூறிற்று. பழங்குடி - தொன்மரபு; ஆதிகாலத்தேறிய குடியுமாம். கெழீஇய- பொருந்தின. பொதுவறுசிறப்பு - தனக்கே உரியசிறப்பு. ஒடுக்கம் - முடிவு. உயர்ந்தோர் - முனிவனும், இறைவனும், அரசனும். இனி உயர்ந்தோர் அகத்தியனும் இருடிகளும் பழங்குடியினுள்ளாருமென்றுமாம்; என்றது இமயத்தோடும் பொதியிலோடுமுள்ள இருடிகளையும் வணிகரையும் உவமித்தவாறும். உண்மையின் - உண்டாகலின். முடித்தகேள்வி - கரைகண்ட கேள்வி.

இவற்றாற் செம்பியன் சிறப்பும் புகார்ச்சிறப்பும் கூறியவாறாயிற்று.

அதனால்—இ - ள். அஃது அத்தன்மையதாகலான்,

என்றது புகார் நிலைபேறுடையதாகலாற் போகமும் புகழும் நிலைபேறுடைய வென்றவாறு.

நாகநீ ணகரொடு நாகநா டதனொடு
போகநீள் புகழ்மன்னும் புகார்நக ரதுதன்னின்
மாகவா னிகர்வண்கை மாநாய்கன் குலக்கொம்ப
ரீகைவான் கொடியன்னா ளீராறாண் டகவையாள்

இ - ள். சுவர்க்கம் பவணமென்னும் இவற்றிற்குள்ள புகழும் போகமும் நிலைபெற்ற அப்புகாரென்னு நகரின்கண் மழைபோல்வழங்கும் கையையுடைய மாநாய்கனுடைய குலத்திற்றோன்றிய கொம்புங்கொடியும் போல்வாள்; பன்னீராண்டிற்குட்பட்ட பிராயத்தாளாயினாளென்க.

நாகநீணகர் - சுவர்க்கம், நாகநாடு † பவணம். போகநீள்புகழ் - உம்மைத்தொகை; இருபெயர்க்கண்வந்தது; எதிர்நிரனிறை. மன்னும் - நிலைபெறும்; இடைநிலை விளக்கு. மாகவான் - விசும்பின்மேகம். மாநாய்கன் - சிறப்புப்பெயர். ஈகை- பொன்; வான்கொடி - வானவல்லி; பொன்மெய் வானவல்லியென்க அவற்றோடு மொக்க மன்னும் புகாரெனினுமமையும்.

அவளுந்தான்—இ - ள் அவள்தான்,

உம்மை இசைநிறை.

போதிலார் திருவினாள் புகழுடை வடிவென்றுந்
தீதிலா வடமீனின் றிறமிவ டிறமென்றும்
மாதரார் தொழுதேத்த வயங்கிய பெருங்குணத்துக்
காதலாள் பெயர்மன்னுங் கண்ணகியென் பாண்மன்னோ

இ - ள். போதிற்பொருந்திய திருமகளுடைய புகழுடையவடிவு இவ்வடிவை யொக்குமென்றும், பழுதில்லாத அருந்ததியுடைய புகழையுடைய கற்பு இவள் கற்பையொக்குமென்றும் உலகின்மாதரார் தன்னைத்தொழுதேத்தும்படி விளங்கிய

* தொல்காப்பியம், சொல்லதிகாரம், இடையியல், ௪௮.

† பவணம் - நாகலோகம். சுவர்க்கத்திலும் நாகலோகம் போகத்திற் சிறந்ததென்பது சைனநூற்றுணிபு.

பெருங்குணங்களைக் காதலிப்பாள்; அவள்யாரெனிற் கண்ணகியென்று பெயர்கூறப் படுவாளென்க.

பெயரால் வேறுபடுமென்பதாம். திருவினள் - ஒருபெயர். தீது-பிறர் நெஞ்சு புகுதல். திறம் - கற்பு. மன்னும் - இடைச்சொல். புகழ் - இடைநிலைவிளக்கு. பின்வருகின்ற இவளென்பதனை முன்னுங்கூட்டுக. மன்னும் ஓவும் இடைச்சொல்.

ஆங்கு,
பெருநில முழுதாளும் பெருமகன் றலைவைத்த
வொருதனிக் குடிகளோ டுயர்ந்தோங்கு செல்வத்தான்
வருநிதி பிறர்க்கார்த்து மாசாத்து வானென்பா
னிருநிதிக் கிழவன்மக னீரெட்டாண் டகவையான்

இ - ள். அப்புகாரினிடத்து*நெடுநிலமுழுவதையும் தனியேயாளும் கரிகாலனை முதற்குடியாகவைத்து எண்ணுதலையுடைய ஒப்பற்றகுடிகளின் மிக்கோங்கிய செல்வத்தையுடையான்; அவன்யாரெனின், தன்னுடையபொருளை இல்லாதார்க்கருளும் மாசாத்துவானென்று பெயர்கூறப்படுவான்; அவ்விரு நிதிக்கிழவனுடையமகன் பதினாறண்டிற் குட்பட்ட பிராயத்தானென்க.

பன்னிரண்டும் பதினாறுமாகிய பிராயத்தின் முதிர்தல் மரபன்மையின், அகவையாள், அகவையானென்றார். ஒப்பின்மையின் மிகுதிகூறுவார், ஒருதனிக்குடியென்றார். ஓடு - இன்; உருபுமயக்கம்; உறழ்பொரு; இதுவும் புறனடையான் முடிந்தது. வருநிதி - நல்வினையாற் கலத்தினும் காலினும் வருநிதி; நியாயத்தால் வருநிதியுமாம். பிறர்க்கு - பொருளற்றார்க்கு; நிதியற்றார்க்கும் நல்வினைசெய்தார்க்குமென்றுமாம். பலர்க்கென்றும் பாடம்; அதற்கு இல்லாராகிய பலர்க்கென்க. ஆர்த்தும் - நிறைவிக்கும்; நுகர்விக்குமென்றுமாம். மாசாத்துவான் - இயற்பெயர். இருநிதிக்கிழவன் - சிறப்புப்பெயர்.

அவனுந்தான்—இ - ள். அவன்றான்,

ஈண்டும் உம்மை இசைநிறை.

மண்டேய்த்த புகழினான் மதிமுக மடவார்தம்
பண்டேய்த்த மொழியினா ராயத்துப் பாராட்டிக்
கண்டேத்துஞ் செவ்வேளென் றிசைபோக்கிக் காதலாற்
கொண்டேத்துங் கிழமையான் கோவலனென் பான்மன்னோ

இ - ள். மண்ணைத்தொலைத்த புகழினையுடையான், பண்ணைத்தொலைத்த மொழியினராகிய மதிபோலுமுகத்தினையுடைய மடவார், தங்காதலால் உலகிற் கண்டேத்தப்படுஞ்செவ்வேளென்று அவனிசையைத் தமதாயத்தின்கட் பாராட்டிப் பரப்பிக் காமக்குறிப்பின் உட்கொண்டு ஏத்துதற்குரியான்; அவன்யாரெனின், கோவலனென்று பெயர்கூறப்படுவானென்க.

மண்டேய்த்த வென்றார், புகழ்வளரப் பூமி சிறுகலான். மண் இடத்திற் சிறிது என்றார் வள்ளுவனாரும். புகழினான் - எழுவாய். பண்டேய்த்த - பண்ணைக்கெடுத்த. செவ்வேளென்றார், வேள் இருவருளராகலின். முருகவேளைச் செவ்வேளென்றது,

---

* நேமிநிலமென்றும் பிரதிபேதமுண்டு.

*"ஞாயிறு கடற்கண் டாஅங்கு" என்பதனால். போக்கி - எங்கும் போகப்பண்ணி; பரப்பியென்றபடி. கொண்டு - காமக்குறிப்பினால் உட்கொண்டு. கிழமை - உரிமை. இனி, மடவாரென்பதற்குப் பூமாதும் கலைமாதும் சயமாதும் புகழ்மாதும் புவிமாது மென்று கூறி, இவர், அழகிற்கும் அறிவுக்கும் ஆண்மைக்கும் புகழ்க்கும் பொறைக்கும் இவனென்றுட்கொண்டு ஏத்தும் கிழமையானெனினுமமையும்; †"கலையினை தகலமுங் காட்சிக் கின்பமுஞ், சிலையினை தகலமும் வீணைச் செல்வமு, மலையினி னக லிய மார்ப னல்லதிவ் வுலகினி லிலேயென வொருவ னயினான்" என்றாற்போல. இனி, மொழியினாலென்று பாடமாயின், மடவார் திரண்டு மொழியாலே, புகழினான் செவ்வேளென்று இசையைப்பரப்ப ஏனையோருங் காதன்மையாற் கொடை அழகு வீரம் இவற்றிற்குரியான் யாவனெனிற் கோவலனென்று பெயர்சொலப்படுவா னென்றலு மொன்று. இப்பொருளுக்குப் போக்கி - போக்கவென்க.

கண்ணகியை முற்கூறினார், பத்தினியை ஏத்துதல் உட்கோளாகலான்.

அவரை,
இருபெருங் குரவரு மொருபெரு நாளான்
மணவணி காண மகிழ்ந்தனர் மகிழ்ந்துழி

இ - ள். அத்தன்மையாரைக் குரவரிருவரும் ஒருபெருநாளிலே மணவணி காணவேண்டி மனமகிழ்ந்தனர்; மகிழ்ந்தவளவிலே யென்க.

உழி - அளவு.

யானை யெருத்தத் தணியிழையார் மேலிரீஇ
மாநகர்க் கீந்தார் மணம்

இ - ள். அவ்வா அணியிழையாரை யானையெருத்தத்திருத்தி அம்மாநகர்க்கு இவர்மணமென்னுமகிழ்ச்சியைக் கொடுத்தாரென்க.

எருத்தம் - புறக்கழுத்து. இரீஇ - இருத்தி. ஈந்தாரெனவே அறிவித்தாரென் பதாயிற்று. சிலமகளிரையணிந்து யானையேற்றி அறிவித்தல் மரபு.

அவ்வழி,
முரசியம்பின முருடதிர்ந்தன முறையெழுந்தன பணிலம்
வெண்குடை
யரசெழுந்ததொர் படியெழுந்தன வகலுண்மங்கல வணி
யெழுந்தது

இ - ள். அவ்விடத்து, முரசுமுதலிய இயம்பின; முருடுமுதலிய அதிர்ந்தன; பணிலமுதலிய முழங்குதலெழுந்தன; வெண்குடைகள் அரசனுயர்வெழுந்தபடி எழுந்தன; மங்கலவணி எங்கும் எழுந்ததென்க.

முருடு - பத்தல்; மத்தளமுமாம். அகலுள் - தெருவுமாம்.

---

* பத்துப்பாட்டு, திருமுருகாற்றுப்படை, உ: "பலர்புகழ் ஞாயிறு கடற்கண் டாஅங், கோவற விமைக்குஞ் சேண்விளங் கவிரொளி, யுறுநர்த் தாங்கிய மதனுடை நோன்றாட் செறுநர்த் தேய்த்த செல்லுறழ் தடக்கை, மறுவில் கற்பின் வாணுதற் கணவன்."

† சீவகசிந்தாமணி, கோவிந்தையாரிலம்பகம், ௩. 411

மாலைதாழ் சென்னி வயிரமணித் தூணத்து
நீல விதானத்து நித்திலப்பூம் பந்தர்க்கீழ்

இ - ள். மாலைதங்கிய சென்னியையுடைய வயிரமணித் தூணினைபொருந்திய மண்டபத்து நீலப்பட்டு மேற்கட்டியின்கீழ்கிறுத்தினை முத்தின்பந்தரிடத்தேயென்க.

நீலவிதானங்கூறினார், முத்து ஒளிபெறுதல்நோக்கி; அஃது அக்காலத்து முத்து கோசகுவாா ஒப்புககு, விரித்து நோக்குப. பூ - பொலிவு.

வானூர் மதியஞ் சகடணைய வானத்துச்
சாலி யொருமீன் றகையாளைக் கோவலன்
மாமுது பார்ப்பான் மறைவழி காட்டிடத்
தீவலஞ் செய்வது காண்பார்க ணோன்பென்னை

இ - ள். மதியம் சகடணைந்தநாளிலே, பார்ப்பான் மறையிற் சோதிடாங்கத் துள் வணிகர்க்குக் கூறியநெறியிலே சடங்குகாட்ட இவர் இங்ஙனம் தீவலஞ்செய் கின்ற விதனைக் காண்கின்றவர் கண்கள் முற்பவத்திற்செய்த தவம் யாதுகாணென் பாராயும்,

காண்கின்றவர்கள் நோன்பு என்னையெனினுமமையும். சகடு - உரோகிணி. மாமுதுபார்ப்பான் - பிதாமகன் ; புரோகிதனுமாம்.

விரையினர் மலரினர் விளங்கு மேனிய
ருரையினர் பாட்டின ரொசிந்த நோக்கினா

இ - ள். விளங்குமேனியா, விரையினராய் மலரினராய் உரையினராய்ப் பாட்டினராய் ஒதுங்கிப்பார்த்த பார்வையராயும்,

சாந்தினர் புகையினர் தயங்கு கோதைய
ரேந்திள முலையின ரிடித்த சுண்ணத்தர்

இ - ள். ஏந்திளமுலையினர், சாந்தினராய்ப் புகையினராய்க் கோதையராய்ச் சுண்ணத்தராயும்,

விளக்கினர் கலத்தினர் விரிந்த பாலிகை
முளைக்குட நிரையினர் முகிழ்த்த மூரலர்

இ - ள். முகிழ்த்தமூரலர், விளக்கினராய்க் கலத்தினராய் முளைப்பாலிகை யினராய் நிறைகுடத்திட்ட கை புல்லினும் போதினும் நெகிழாமற் புணர்ந்தனரா யும் நிரையினர்கள்.

ஒருசொல் வருவிக்க.

போதொடு விரிகூந்தற் பொலனறுங் கொடியனார்
காதலற் பிரியாமற் கவவுக்கை ஞெகிழாமற்
றீதறு கெனவேத்திச் சின்மலர் கொடுதூவி
யங்க ணுலகி னருந்ததி யன்னாளை
[illegible]

விப்பா லிமயத் திருத்திய வாள்வேங்கை
யுப்பாலைப் பொற்கோட் டுழையதா வெப்பாலுஞ்
செருமிகு சினவேற் செம்பிய
னொருதனி யாழி யுருட்டுவோ னெனவே.

இ-ள். கூந்தலையுடைய கொடியன்னார், இவளும் தன்காதலனைத் தன்கண்ணினும நெஞ்சினும், பிரியாமற் புணர்வோளாக; இவள்காதலனும் இவளை அகத்திட்டகை * புல்லினும் போதினும் நெகிழாமற் புணர்வானாக; இருவரன்பும் சருவதா ஒருவரன்பாகவென நினைந்து தம் வழிபடுதெய்வத்தை மனத்தால்வணங்கி அவ்வகையேத்திப் பின்பு சிலமலரைத்தூவி, இப்பால் இமயத்திருத்திய வேங்கை பொற்கோட்டு உப்பாலிடத்ததாயே நிற்பதாக; எப்பாலுந் தன் போரமேம்பட்ட வேலையுடைய கரிகாலன் மாறில்லாத தன்றிகிரியை உருட்டுவோனாகவெனச் சொல்லி, உலகில் அருந்ததியன்னாளை அமளியேற்றினாரென்க.

கொடியன்னார், பிரியாமல் நெகிழாமல் நீதறுகென ஏத்தித் தூவி அருந்ததியன்னாளை உழையதாக உருட்டுவோனாகவென அமளியேற்றினாரென்க.

இது பிராசாபத்தியம்.

பா - மயங்கிசைக் கொச்சககலிப்பா.

பருந்துநிழலுமென ... ... அடியார்க்குநல்லானென்பான்.

ஒருந்தமிழ் ... ... நிரம்பையர்காவலனே.

நாற்றை ... ... சொலவித்ததே.

மங்கலவாழ்த்துப்பாடல் முற்றிற்று.

* புல்லும்போதுநெகிழாமலெனவும் பாடபேதமுண்டு.

இரண்டாவது

மனையறம்படுத்த காதை.

உரைசால் சிறப்பி னரசுவிழை திருவிற்
பரதர் மலிந்த பயங்கெழு மாநகர்
முழங்குகடன் ஞால முழுவதும் வரினும்
வழங்கத் தவாஅ வளத்த தாகி
யரும்பொரு டரூஉம் விருந்திற் றேஎ
மொருங்குதொக் கன்ன வுடைப்பெரும் பண்டங்
கலத்தினுங் காலினுந் தருவன ரீட்டக்
குலத்திற் குன்றாக் கொழுங்குடிச் செல்வ
ரத்தகு திருவி னருந்தவ முடித்தோ
ருத்தர குருவி னொப்பத் தோன்றிய
கயமலர்க் கண்ணியுங் காதற் கொழுநனு
மயன்விதித் தன்ன மணிக்கா லமளிமிசை
நெடுநிலை மாடத் திடைநிலத் திருந்துழிக்
கழுநீ ராம்பன் முழுநெறிக் குவளை
யரும்புபொதி யவிழ்ந்த சுரும்பிமிர் தாமரை
வயற்பூ வாச மளைஇ யயற்பூ
மேதகு தாழை விரியல்வெண் டோட்டுக்
கோதை மாதவி சண்பகப் பொதும்பர்த்
தாதுதேர்ந் துண்டு மாதர்வாண் முகத்துப்
புரிகுழ லளகத்துப் புகலேக் கற்றுத்
திரிதரு சுரும்பொடு செவ்வி பார்த்து
மாலைத் தாமத்து மணிநிரைத்து வகுத்த
கோலச் சாளரக் குறுங்க ணுழைந்து
வண்டொடு புக்க மணவாய்த் தென்றல்
கண்டு மகிழ்வெய்திக் காதலிற் சிறந்து
விரைமலர் வாளியொடு வேனில்வீற் றிருக்கு
நிரைநிலை மாடத் தரமிய மேறிச்
சுரும்புணக் கிடந்த நறும்பூஞ் சேக்கைக்
கரும்பும் வல்லியும் பெருந்தோ ளெழுதி
முதிர்கடன் ஞால முழுவதும் விளக்குங்
கதிரொருங் கிருந்த காட்சி போல

வண்டுவாய் திறப்ப நெடுநிலா விரிந்த
வெண்டோட்டு மல்லிகை விரியன் மாலையொடு
கழுநீர்ப் பிணையல் முழுநெறி பிறழத்
தாரு மாலையு மயங்கிக் கையற்றுத்
தீராக் காதற் றிருமுக நோக்கிக்
கோவலன் கூறுமோர் குறியாக் கட்டுரை
குழவித் திங்க ளிமையவ ரேத்த
வழுவொடு முடித்த வருமைத் தாயினு
* முரிதி னின்னோ டுடன்பிறப் புண்மையிற்
பெரியோன் றருக திருநுத லாகென
வடையார் முனையகத் தமர்மேம் படுநர்க்குப்
படைவழங் குவதோர் பண்புண் டாகலி
னுருவி லாள னொருபெருங் கருப்புவி
லிருகரும் புருவ மாக வீக்க
மூவா மருந்தின் முன்னர்த் தோன்றலிற்
றேவர் கோமான் றெய்வக் காவற்
படைநினக் களிக்கவத னிடைநினக் கிடையென
வறுமுக வொருவனோர் பெறுமுறை யின்றியு
மிறுமுறை காணு மியல்பினி னன்றே
யஞ்சுடர் நெடுவே லொன்றுநின் முகத்துச்
செங்கடை மழைக்க ணிரண்டா வீத்தது
மாயிரும் பீலி மணிநிற மஞ்ஞைநின்
சாயற் கிடைந்து தண்கா னடையவு
மன்ன நன்னுதால் மென்னடைக் கழிந்து
நன்னீர்ப் பண்ணை நளிமலர்ச் செறியவு
மளிய தாமே சிறுபசுங் கிளியே
குழலும் யாழு மமிழ்துங் குழைத்தநின்
மழலைக் கிளவிக்கு வருந்தின வாகியு
மடநடை மாதுநின் மலர்க்கையி னீங்கா
துடனுறைவு மரீஇ யொருவா வாயின
நறுமலர்க் கோதைநின் னலம்பா ராட்டுநர்
மறுவின் மங்கல வணியே யன்றியும்
பிறிதணி யணியப் பெற்றதை யெவன்கொல்
பல்லிருங் கூந்தற் சின்மல ரன்றியு
மெல்லவிழ் மாலையொ டென்னுற் றனர்கொ

---

* உரிதிதுநின்னோடெனவும், உரிதினினின்னோடெனவும் பாடம்.

ளுன நல்லகி னறும்புகை யன்றியு
மான்மதச் சாந்தொடு வந்ததை யெவன்கொ
றிருமுலைத் தடத்திடைத் தொய்யி லன்றியு
மொருகாழ் முத்தமொ டுற்றதை யெவன்கொ
றிங்கண் முத் தரும்பவுஞ் சிறுகிடை வருந்தவு
மிங்கிவை யணிந்தன ரென்னுற் றனர்கொன்
மாசறு பொன்னே வலம்புரி முத்தே
காசறு விரையே கரும்பே தேனே
யரும்பெறற் பாவா யாருயிர் மருந்தே
பெருங்குடி வாணிகன் பெருமட மகளே
மலையிடைப் பிறவா மணியே யென்கோ
வலையிடைப் பிறவா வமிழ்தே யென்கோ
யாழிடைப் பிறவா விசையே யென்கோ
தாழிருங் கூந்தற் றையா னின்னையென்
றுலவாக் கட்டுரை பலபா ராட்டித்
தயங்கிணர்க் கோதை தன்னொடு தருக்கி
வயங்கிணர்த் தாரோன் மகிழ்ந்துசெல் வுழிநாள்
வாரொலி கூந்தற் பேரியற் கிழத்தி
மறப்பருங் கேண்மையோ டறப்பரி சாரமும்
விருந்து புறந்தரூஉம் பெருந்தண் வாழ்க்கையும்
வேறுபடு திருவின் வீறுபெறக் காண
வுரிமைச் சுற்றமோ டொருதனி புணர்க்க
யாண்டுசில கழிந்தன விற்பெருங் கிழமையிற்
காண்டகு சிறப்பிற் கண்ணகி தனக்கென.

* தூமப் பணிகளொன்றித் தோய்ந்தா லெனவொருவர்
காமர் மனைவியெனக் கைகலந்து - நாமந்
தொலையாத வின்பமெலாந் துன்னினார் மண்மே
னிலையாமை கண்டவர்போ னின்று.

க-உ. † உரைசால் சிறப்பி னரசுவிழை திருவிற்
பரதர் மலிந்த பயங்கெழு மாநகர்

---

* இவ்வெண்பாப் பலபிரதிகளிலில்லை; தூமப் பணிபலவுந் தோலாத வேம்லங் தேன்வும் பாடம்.

† இந்த "உரைசால் சிறப்பின்" என்னும் அடிக்குமுன்னர், "திருவின் செல்வியொடு பெருகில மடந்தையை, யொருதனி யாண்ட செருவடு திண்டோட், கரிகாற் பெரும்பெயர்த் திருமா வளவனைப், பாலை பாடிப் பரிசிலன் றெடுத்த, மாலைத் தாங்கிய வளங்கெழு செல்வத், தாறைந் திரட்டி யராயிரங் குடிகளும், வீறுசான் ஞாலத்து வியலணி யாகி, யுயர்ந்தோ ருலகிற் பயந்தரு தான, மில்லது மிரப்பு நல்லோர் குழு

இ - ள். புகழமைந்த சிறப்பினையுடைய அரசரும் விரும்பும் செல்வத்தையுடைய, பரதரான் மிகுதிபெற்ற பயன்மிக்க மாநகரென்க.

அரசென்பது *"குடிமை யாண்மை" என்னுஞ் சூத்திரத்து "நிலையின வாயினு, மகிழிணை மருங்கிற் கிளந்தாங் கியலும்" என்பதனால் முடிந்தது. சிறப்புமுண்மை விரிக்க. இனிப் பரதர் மிகுதிபெறுதற்குக் காரணமான நகரெனினுமாம். பயம் - மன்னர் விழைச்சி.

ங-கக. முழங்குகடன் ஞால முழுவதும் வரினும்
வழங்கத் தவாஅ வளத்த தாகி
யரும்பொரு டரூஉம் விருந்திற் றேஎ
மொருங்குதொக் கன்ன வுடைப்பெரும் பண்டங்
கலத்தினுங் காலினுந் தருவன ரீட்டக்
குலத்திற் குன்றாக் கொழுங்குடிச் செல்வ
ரத்தகு திருவி னருந்தவ முடித்தோ
ருத்தர குருவி னொப்பத் தோன்றிய
கயமலர்க் கண்ணியுங் காதற் கொழுநனும்

இ - ள். மாநகர், கலத்தானும் காலானும் ஈட்டுதலானே, பெறுதற்கரிய பொருளைத்தரூஉம் புதுமையையுடைய தீவுமுதலிய தேயங்கள்வந்துகூடி, ஒருங்குதொக்காற்போன்றுள்ள பண்டம், முழங்குகடல்சூழ்ந்த ஞாலமுழுதும் ஒக்கவரினும் வழங்கத் தொலையாதவளத்தினையுடையதாகலின், அங்ஙனம் அறத்திணக்கிய பொருளால் †தலைப்படுதானத்தைச் செய்தோ ரெய்தும் உத்தரகுருவினை யொக்கும்படி, குலத்திற்குன்றாத செல்வர்க்குத் தோன்றிய பெரியமலர்போலும் கண்ணையுடையாளும் அவள் காதலிக்கப்படும் கொழுநனுமென்க.

அத்தகு திருவினென்பதற்கு அவ்வளத்திற்குத் தக ஒழுகும் மனைவியோடேயெனினுமமையும். அரும்பொருளாவன: ‡"நீரின் வந்த நிமிர்பரிய புரவியும், காலின் வந்த கருங்கறி மூடையும், வடமலைப் பிறந்த மணியும் பொன்னுங், குடமலைப் பிறந்த வாரமு மகிலுந், தென்கடன் முத்துங் குணகடற் றுகிருங், கங்கை வாரியுங் காவிரிப் பயனு, மீழத் துணவுங் காழகத் தாக்கமு, மரியவும் பெரியவும்" எனப் பட்டினப்பாலையுட் சொன்னவும் பிறவும். §"இருவகைப் பிரிவு நிலைபெறத் தோன்றினு, முரிய தாகு மென்மனார் புலவர்" என்பதனாற் கலத்தினும் காலினு மென்றார். கலம்-

வுந், தெய்வத் தானமுந் திருந்திய பூமியு, மைய றுறையுஞ் மறவோர் பள்ளியும், விண்ணவ ருலகினி னண்ணிடு நகரமொ, டெண்ணுவரம் புரியா விசையொடு சிறந்த" என்னும் அடிகள் பதின்மூன்றும், மிதிலைப்பட்டி அழகியசிற்றம்பலக்கவிராயரவர்கள் வீட்டுச் சிலப்பதிகார மூலப்பிரதியில் இருந்தன.

* தொல்காப்பியம், சொல்லதிகாரம், கிளவியாக்கம், ௫௬.

† தலைப்படுதானம் - உத்தமதானம். "அறத்தி னாறிய வரும்பெரும்பொருளைப், புறத்துறைக் குற்றமூன் றறுத்தகற் றவர்க்குக், கொள்கெனப் பணிந்து குறையிரந் தவர்வயி, னுள்ளமுவந் தீவ துத்தம தானம்." என்பது திவாகரம்.

‡ பத்துப்பாட்டு, பட்டினப்பாலை, ௧௮௫ - ௧௯௨

§ தொல்காப்பியம், பொருளதிகாரம், அகத்திணையியல், ௩௩.

மரக்கலம். கால் - வட்டை. இதனானே பின்னரிரு மரபோரும் கலத்தொடு சேறல் பின்னருழிக்கு மரபெனக்கொள்க. அருந்தவம் - ஈண்டுத் தானம். உத்தரகுரு-போக பூமி. அஃது அறுவகைப்படும்; என்னை: * "ஆதி யரிவஞ்ச நல்லரி வஞ்ச, மேமத வஞ்ச மிரண வஞ்சந், தேவ குருவ முத்தர குருவமெனப், போக பூமி யறுவகைப் படுமே" என்றாராகலின். அதிற்பிறந்து † போகநுகருமாறு, முடிபொருட்டொடர் நிலையுள் தானப்பயன் கூறும்வழிக்காண்க. ஈட்டுதலால் ஒருங்கு தொக்கன்ன பண்டம் வழங்கத்தவா வளத்ததெனக் கூட்டுக. குலத்திற்குன்றுதல் - பூப்பின்கட்பிரிதல்; அன்றி ‡ நடுவின்றி நன்பொருள் வெஃகலுமாம். குலத்திற்குன்றாமை - § "நெடுநுகத்துப் பகல்போல, நடுவுநின்ற நன்னெஞ்சினோர், வடுவஞ்சி வாய்மொழிந்து, தமவும் பிறவு மொப்ப நாடிக், கொள்வதூஉ மிகைகொளாது கொடுப்பதூஉங் குறைகொடாது" என்பதெனக் கொள்க. செல்வர் - இருவர் பிதாக்களும்.

மாநகர், வளத்ததாகலின் ஒக்கும்படி செல்வர்க்குத்தோன்றிய கண்ணியும் கொழுநனு மென்க.

௧௨-௧௩. மயன்விதித் தன்ன மணிக்கா லமளிமிசை
நெடுநிலை மாடத் திடைநிலத் திருந்துழி

இ - ள். அங்ஙனந் தோன்றிய கண்ணியும் கொழுநனும் மாடத்து இடைநிலைக்கணே மயன் நிருமித்துவைத்தாற் போன்ற மணிக்காலமளிமிசையே இருந்துழி யென்க.

உழி - அளவு. மயன் - தெய்வத்தச்சன். நெடுநிலை - எழுநிலை. இடைநிலம்-நாலாநிலம்.

௧௪-௨௫. கழுநீ ராம்பன் முழுநெறிக் குவளை
யரும்புபொதி யவிழ்ந்த சுரும்பிமிர் தாமரை
வயற்பூ வாச மளைஇ யயற்பூ
மேதகு தாழை விரியல்வெண் டோட்டுக்
கோதை மாதவி சண்பகப் பொதும்பர்த்
தாதுதேர்ந் துண்டு மாதர்வாண் முகத்துப்
புரிகுழ லளகத்துப் புகலேக் கற்றுத்
திரிதரு சுரும்பொடு செவ்வி பார்த்து
மாலைத் தாமத்து மணிநிரைத்து வகுத்த
கோலச் சாளரக் குறுங்க ணுழைந்து

* திவாகரம், ௧௨ - வது.

† போகபூமியிற் பிறந்து போகநுகருமாற்றைப் பின்வரும் திவாகரச்சூத்திரத்தானுணர்க. "பதினா றாட்டைக் குமரனும் விதிவழிப், பன்னீ ராட்டைக் குமரியு மாகி, யொத்த வன்பினு மொத்த நலத்தினுங், கற்பக நன்மர நற்பய னுதவ, வாகிய செய்தவத் தளவு மவ்வழிப், போக நுகர்வது போக பூமி."

‡ திருக்குறள், வெஃகாமை, க: "நடுவின்றி நன்பொருள் வெஃகிற் குடிபொன்றிக், குற்றமு மாங்கே தரும்."

§ பட்டினப்பாலை, ௨௦௬ - ௨௧௦.

வண்டொடு புக்க மணவாய்த் தென்றல்
கண்டுமகிழ் வெய்திக் காதலிற் சிறந்து

இ - ள். முழுநெறியாகிய மேற்கு குவளையுடைய அரும்புகள் சுரும்பிமிர இதழவிழ்ந்த கழுநீர்முதலிய நீர்ப்பூக்களின் வாசத்தைக் கலந்துண்டு, அவற்றின் வேறாய கோட்டுப்பூமுதலியவற்றுள் தாழையினது விரிந்த வெள்ளிய தோட்டினையும், சண்பகப் பொதும்பரிலுண்டாகிய கோதைபோலும் மாதவிப்பூவின் தாதினையும் ஆராய்ந்துண்டுபோந்து, வாண்முகத்து மாதருடைய புரிந்த குழற்சியையுடைய அளகத்துண்டாகிய கலவைமணம்பெறுதற்கு வேட்கையுற்றுப் புகுதற்கு வழிகாணுமற் சுழலுகின்ற சுரும்பொடும் வண்டொடும், மணித்தாமத்தாலே ஒழுங்குபடநிரைத்து வகுத்த அழகினையுடைய சாளரக்குறும்புழையாற் செவ்வியறிந்து நுழைந்துபுக்க மணவாய்த் தென்றலைக்கண்டு, மகிழ்ச்சியெய்திப் புணர்ச்சியைவிரும்பிக் காதன்மிகுதலாலென்க.

சாதிபற்றி ஆம்பலென்றாரெனினு மமையும். சண்டுக்கூறியது சேதாம்பலென வுணர்க. இஃது அவற்றோடு ஒருதன்மைத்தாகிய பகற்போதன்றெனினும் அவைவிரியுங்காலத்து இது குவிதலின்மையிற் கலந்துண்டென்றார். இதழொழிக்கப்படாத வெனவே செவ்விகூறிற்று. * "நீமபெருங் குண்டு சுனைபூத்த குவளைக, கூம்புவிடு முழுநெறி" என்றார் புறப்பாட்டினும். கோதை - மாலை; ஒழுங்குமாம். வெண்டோட்டுத்தாழையுமாம்; சண்பகப்பொதும்பர்க் கோதைமாதவியென்க. பொதும்பர் - மரச்செறிவு. இவை சண்பகத்தோடு மலர்தலின் தேர்ந்துண்டென்றார். வாண்முகத்தளக மென்பாருமுளர். புகல்-புகுதற்கு. ஓடு - ஒருவினை. செவ்விபார்த்து நுழைந்து புக்க வென்க. செவ்வி-இவர் மகிழுஞ்செவ்வி. பின்னின்ற உண்டென்பதனை அளைஇ உண்டெனவும், தேர்ந்துண்டெனவும் இரண்டிடத்தும் ஒட்டுக. அன்றி அளைஇ வண்டொடுபுக்க தென்றலெனினுமமையும். மணவாய்த்தென்றல் - மணத்தைத் தன்னிடத்தே யுடைய தென்றல்.

அளைஇ உண்டு தேர்ந்துண்டு வேட்கையுற்றுத் திரிதருசுரும்பொடும் வண்டொடும்புக்க தென்றலென்க.

உச-உ௭. விரைமலர் வாளியொடு வேனில்வீற் றிருக்கு
நிரைநிலை மாடத் தரமிய மேறி

இ - ள். அங்ஙனம் அவர் காதன்மிகுதலாலே இடைநிலத்துநின்றும் மேல் நிரைத்துவகுத்த நிலங்களில் மணத்தினையுடைய மலர்வாளியோடே காமன்வீற்றிருக்கும் வேனிலமாகிய நிலாமுற்றத்தின்மேல் ஏறியென்க.

---

* புறநானூறு, ௧௧௬: "நீமபெருங் குண்டு சுனைபூத்த குவளைக, கூம்புவிடு முழுநெறி புரள்வரு மல்கு, லேந்தெழின் மழைக்க ணின்னகை மகளிர், புன்மூசு கவலைய முண்மிடை வேலிப, டஞ்சி முன்றிற் சிற்றி லாங்கட், பீரை நாறிய சுரையிவர் மருங்கி, னீத்திலைக் குப்பை யேறி யுமண, ருப்பொய் சாகாட் டெண்ணுப மாதோ, நோகோ யானே தேய்கமா காலை, பயில்பூஞ் சோலை மயிலெழுந் தாலவும், பயிலிருஞ் சிலம்பிற் கலைபாய்ந் துகளவுங், கலையுங் கொள்ளா வாகிப் பலவுங், கால மன்றியு மரம்பயம் பகரும், யாணர் நன்னாட் டுள்ளும் பாணர், நெடுவரை யேறித் தந்தை, பெரிய நறவிற் கூர்வேற் பாரிய, தருகும யறியார் போரெதிர்ந்து வந்த, வலம்படு தானை வேந்தர், பொலம்படைக் கலிமா வெண்ணு வோரே." திணை - பொதுவியல். துறை - கையறுநிலை. கபிலர்பாடியது.

வேனில் - ஆகுபெயராற் காமன். பகையின்றிக் கல்வியொடு செல்வத்திடை நஞ்சுற்றகாம நுகர்ந்திருத்தலின், வாளியும் காமனும் வருத்தாதிருந்தமைதோன்ற வீற்றிருக்கு மென்றார். இஃது உதாரமென்னு மலங்காரம்; என்னை? * "உதார மெனப் படுவ தோதிய செய்யுளிற், குறிப்பி னொருபொரு ணெறிப்படத் தோன்றல்" என்பது அணியியலாகலின்.

உ௮-௩௧. சுரும்புணக் கிடந்த நறும்பூஞ் சேக்கைக்
கரும்பும் வல்லியும் பெருந்தோ ளெழுதி
முதிர்கடன் ஞால முழுவதும் விளக்குங்
கதிரொருங் கிருந்த காட்சி போல

இ - ள். அங்ஙனம் நிலாமுற்றத்து ஏறினவர்கள், சுரும்புகளுண்டற்குப் பரித்து வைத்தாற்போலக் கிடந்த நறும்பூஞ் சேக்கைக் கண்ணே, கடல்சூழ் ஞாலமுழுவதையும் விளக்கும் ஞாயிறும் திங்களும் சேர இருப்பக்கண்ட காட்சிபோல இருந்து, கரும்பு வல்லியென்பனவற்றைப் பெரிய தோளிலேயெழுதியென்க.

கரும்பையும் வல்லியையும் தோளில் எழுதியென்னவே தொய்யிலொன்றையும் முலைமேலெழுதி யென்பதாயிற்று. பூவின்செவ்வி கூறுவார், சுரும்புணக்கிடந்த வென்றார். இனி † அதிகாரப்புறனடையால், உகரங்கெடுத்து உண என்பதனைப் பெயர்ப்படுத்துச் சுரும்புகட்காம் பலவகையுணவும் உளவழி அவ்வக்காலத்து ஆண்டுச்சென்று ஏறியும் இழிந்தும் சுழன்றும் மெய்வருந்தாது அவையெல்லாம் ஒருகாலத்து ஒருவழியுண்ணும் உணவுகிடந்த தன்மையொத்த பூஞ்சேக்கை யெனவுமமையும். இது பூக்களின் சாதிப்பன்மையும், செவ்வியுங் கூறிற்றாகும். முதிர்தல் - முற்றுதல்; சூழ்தலுமாம்; ‡ "நீர்முற்றி மதில்பொரூஉம்" என்றார் பிறரும்; முதிர்ந்த கடலுமாம். ஒருங்கிருத்தல் இல்பொருளுவமம். போல இருந்தென ஒருசொல்வருவிக்க.

இனிப் புணர்ச்சி கூறுவார்:

௩௨-௩௭. வண்டுவாய் திறப்ப நெடுநிலா விரிந்த
வெண்டோட்டு மல்லிகை விரியன் மாலையொடு
கழுநீர்ப் பிணையன் முழுநெறி பிறழத்
தாரு மாலையு மயங்கிக் கையற்றுத்
தீராக் காதற் றிருமுக நோக்கிக்
கோவலன் கூறுமோர் குறியாக் கட்டுரை

இ - ள். அங்ஙனமிருந்தவர்கள், வண்டுகள் புரிநெகிழ்க்க வாயவிழ்ந்த, வெள்ளிய இதழையுடைய மல்லிகையினது பெரிய இளக்கத்தையுடைய மாலையோடே, இதழொடியாது கட்டின கழுநீர்ப்பிணையலும், குலைந்தலைய, மார்பிலிட்ட இவ்விருவகைமாலையு மயங்கப்பட்டு, இருவரும் செயலற்ற புணர்ச்சியிறுதிக்கண்ணே கோவலன், திருமகளைப் போல்வாளுடைய முகத்தைநோக்கித், தனது அறிவுமுதலியனவற்றைக் குறியாத நலம்பாராட்டலென்னும் பொருள்பொதிந்த உரையைக் கூறுமென்க.

* தண்டியலங்காரம், பொதுவணியியல், ௨௧.
† தொல்காப்பியம், எழுத்ததிகாரம், குற்றியலுகரப்புணரியல், ௭௮.
‡ கலித்தொகை, மருதம், ௨.

நிலாவிரிந்த-உவமத்தொகை; ஒளியுமாம். விரியல்-மலர்ச்சி. பிறழ-சரிய. மயங்கி-மயங்கப்பட்டு; இடக்கர். தீரா - தீர்தலென்னும் வினைப்பொருண்மையெதிர்மறை யுறும் - முற்று ஓர்-இடைச்சொல். இனிக் குறியாக்கட்டுரை - மூன் கருதப்படாத கட்டுரையெனினும் பொருந்தும். சட்டுரை - நலம்பாராட்டலென்னும் பொருள் பொதிந்தவுரை.

ஏறி இருந்து எழுதிப் பிறழ மயங்கிக் கையற்றுக் கூறுமென்க.

அக்கட்டுரை மேற்கூறுவார்.

௩௮-௪௧. குழவித் திங்க ளிமையவ ரேத்த
வழுவொடு முடிந்த வருமைத் தாயினு
முரிதினின் னோ டுடன்பிறப் புண்மையிற்
பெரியோன் றருக திருநுத லாகென

இ - ள். பிறை, இறைவன் இமையவரேத்தாநிற்கத் தன்முடிக்கு அழகுசெய் தல்காரணத்தாற் சூடிய பெறுதற்கருமையுடைத்தெனினும் அதனை அவன் நினக் குத் திருநுதலாகத் தரக்கடவன்; அஃது என்னையெனின், அப் பிறை நின்னோடு உடன் பிறப்புண்டாகலின் நினக்கு உரித்தாதலானென்க.

பெரியோன் - இறைவன். "உரித்தனுரிது குறியா வின்ப மெளிதல்" எனவும், "உரிதினிற் கொண்டாகுப் பெயாதல் வேண்டும்" எனவும் அகப்பாட்டினுங்கூறி னார். திங்கட்குழவியென்றது "சொல்லிய வல்ல பிறவுவண் வரினும்" என்னும் மரபியற் புறனடையான் முடியும் *"அப்பிறை, பதினெண் கணனு மேத்தவும் படுமே" என்றார் புறப்பாட்டினும். அருமைத்து - அஃறிணை வினைக்குறிப்பு முற்று. தருகவென்றது சூடினபிறை இரண்டுகலையாதலின், அதனை எண்ணாட்டிங் களாக்கித் தருகவென்பது கருத்து; என்னை † "மாக்கட லடுவெ ணெண்ணாட் பக்கத் துப், பசுவெண் டிங்க டோன்றி யாங்குக், கதுப்பயல் விளங்குஞ் சிறுநுதல்" என்றா ராகலின். இதனுள் மேற் கூறுகின்ற கரும்பையும் வச்சிரத்தையும் அவ்வவ் வுறுப் புக்கட்சேர்பத் திருத்தி ஈக்க அமைக்க வென்பதாயிற்று; என்றது கரும்பிற்கு நிற னும், வச்சிரத்துக்கு நேர்மையும உண்டாக்கியென்றவாறு. இஃது 'எதிரதுபோற்ற' லென்னும் தந்திரவுத்திவகை

இங்ஙனங்கூறினார்; பிறை திருவொடு பாற்கடலிடைப் பிறத்தலின், இவளைத் திருமகளாகமதித்து.

---

* புறநானூறு, கடவுள்வாழ்த்து. "கண்ணி கார்நறுங் கொன்றை காமர், வண்ண மார்பிற் றாருங் கொன்றை, யூர்தி வால்வெள் ளேறே சிறந்த, சீர்கெழு கொடியு மவ் வே றென்ப, கறைமிட றணியலு மணிந்தன் றக்கறை, மறைநவி லந்தணர் நுவலவும் படுமே, பெண்ணுரு வொருதிற னாகின் றவ்வுருத், தன்னு ளடக்கிக் கரக்கினுங் கரக் கும், பிறைநுதல் வண்ண மாகின் றப்பிறை, பதினெண் கணனு மேத்தவும் படுமே, யெல்லா வுயிர்க்கு மேம மாகிய, நீரற வறியாக் கரகத்துத், தாழ்சடைப் பொலிந்த வருந்தவத் தோற்கே." பாரதம்பாடிய பெருந்தேவனார் பாடியது.

† குறுந்தொகை, ௧௨௯ "எலுவ சிறாஅ ரேமுறு நண்ப, புலவர் தோழ கேளா யத்தை, மாக்கட லடுவெ ணெண்ணாட் பக்கத்துப், பசுவெண் டிங்க டோன்றி யாங்குக், கதுப்பயல் விளங்குஞ் சிறுநுதல், புதுக்கோ ளியானையிற் பிணித்தற்றா லெம்மே." எ-து தலைமகன் பாங்கற்குரைத்தது கோப்பெருஞ் சோழன் பாடியது.

சஉ-சரு. அடையார் முனையகத் தமர்மேம் படுநர்க்குப்
படைவழங் குவதோர் பண்புண் டாகலி
னுருவி லாள னொருபெருங் கருப்புவி
லிருகரும் புருவ மாக வீக்க

இ - ள். அநங்கன் போர்செய்தற்கு எடுத்த ஒப்பில்லாத கருப்புவி லொன்றையும் நினக்குக் கரிய இருபுருவமாகத் திருத்தித் தரக்கடவன்; அஃதெற்றாலெனின், பகைவர்முனையிடத்தே மன்னரை மேம்படுப்பார்சிலர்க்குப் படைக்கலமுதலிய கொடுத்தல் அரசர்க்கு இயல்பாதலானென்க.

தன்னால் ஒறுக்கப்படாத தெவ்வேந்தரை அழிக்குங்கால் இவருறுப்பாகியபடைக் கலங்கொண்டன்றி அழிக்கலாகாமையிற் கூறினார். ஈக்க - "ஈத்துவக்கும்" என்றாற்போலநின்றது. முனிவராகிய மூரட்பகையை அழித்தற்கு வல்வில்லை வேண்டுதலின், ஒருபெருங்கருப்புவில்லென்றார். என்றது காமனுக்குக் *காமநூலும் ஆலேயும் வில்லாதலின், அதன் வன்மைகூறினார். ஒருபெருங்கருப்புவில் இருகரும்புருவமென்றது சேமவில்லையுங்கூட்டி; † "வானார்......வேண்டினேன்" என்றாராகலின்.

சசு-சஅ. மூவா மருந்தின் முன்னர்த் தோன்றலிற்
றேவர் கோமான் றெய்வக் காவற்
படைநினக் களிக்கவத னிடைநினக் கிடையென

இ - ள். இந்திரன் அசுரரையழித்துச் சுரரைக் காத்தற்காகவெடுத்த வச்சிரப் படையை நினக்கு இடையாகவெனத் திருத்தித் தரக்கடவன்; அஃது எற்றாலெனின், இமையவர்க்கு மரணமின்மையைப் பயக்கும் அமிழ்திற்கு நீ முறபிறத்தலானென்க.

ஆகவென ஒருசொல் வருவிக்க. மூவா - மூத்தவென்னும் பெயரெச்ச வெதிர்மறை. எனவே மூப்புக்கும் பிணிக்கும் மருந்தென்பதாயிற்று; என்றது அமிர்தத்தை. மருந்தின் - உருபுமயக்கம். நீ அமுதாகலின், நினக்குமுன்னர் வச்சிரம் பிறத்தலாலெனினுமமையும். வச்சிரமும அமுதமும் கடல்கடைகின்ற காலத்துப் பிறந்தவெனப் புராணங்கூறும். வச்சிரம் இருதலைச்சூலமாய் நடுவு பிடியாயிருத்தலான் அதனிடையை நுசுப்புக்கு உவமங்கூறுப. இறைவன் காமன் இந்திரனென்னுமிவர், பிறை கரும்பு வச்சிரமென்னுமிவற்றை நுதல் புருவம் இடையாகத் தருக ஈக்க அளிக்க உடன்பிறப்புண்மையிற் பண்புண்டாகலின் முன்னர்த் தோன்றலினென உய்த்துரைக்க.

சகூ-ருஉ. அறுமுக வொருவனோர் பெறுமுறை யின்றியு
மிறுமுறை காணு மியல்பினி னன்றே

* காமநூல் - பூவிசேடம். இதனை மன்மததந்திரமென்பர் வடநூலார். இது மன்மதனுக்கு வில்லென்பதை அரவிசயத்திற் காண்க.

† சீவகசிந்தாமணி, சுரமஞ்சரியாரிலம்பகம், ௭௧ : "வானார் கமழ்மதுவுஞ் சாந்து மேந்தி மதுத்துளித்து வண்டுஞ் சுரும்பு மூசுந், தேனார்பூங் கோதாய் நினக்குக் காமன் சிலையிரண்டுஞ் செவ்வனே கோலித் தந்தான், றேனாரப் பண்ணித் தடாறு நீக்கித் தண்குருதி தோய்த்துத் தசைமை சான்ற, வூன்றோர்ந்த வோரிணை யம்புந் தந்தானென்னை யுளனாக வேண்டினானே."

யஞ்சுடர் நெடுவே லொன்றுநின் முகத்துச்
செங்கடை மழைக்க ணிரண்டா யீத்தது

இ - ள். முருகவேள் தன்கையில் அழகிய சுடரையுடைய நெடிய வேலொன் றையும் நின்முகத்து மழைக்கண் இரண்டுமாம்படி ஈதற்குக் காரணமும் வேறில்லையாக ஈத்தது யான் இறந்துபடுமுறைமையைத் தன்கண்ணாற் காணவேண்டுதல் காரணத்தானென்க.

* "துன்னுநர்க் காண்மார்" என்றாற்போல. பெறுமுறையின்றியும் - அவ்வாறு ஈன்றது ஈத்தற்கு உரிமையின்றாகவும். வேலொன்று இரண்டாக வீத்தல்-திருமுருகாற்றுப்படையிலுள்ள. † "ஒக்கிய முருக னெஃக மொன்றிரண் டனைய கண்ணாள்" என்றாகலின். இனிப் பெறுமுறை யின்றியுமென்பதற்குத் தனக்குப் பெறுங்கூறு ஒன்றும் இல்லையாகவுமெனினுமமையும். இறுமுறை - முடியுமுறை; வருந்துந்தன்மை யெனினுமமையும். இவை ‡ புகழுவமையலங்காரம்; அஃதாவது "இறையவன் சடைமுடி மே லெங்காளுந் தவழும், பிறையேர் திருநுதலும் பெற்ற - தறையனல்சூழ், பூவலயந் தாங்கு மரவின் படம்போலும், பாவைநின் னல்குற் பரப்பு" என வரும்.

இவற்றுட் புலனாய் எழுதப்பட்ட உறுப்புக்களைப் பாராட்டி, இனிக் கட்புலனும் ஆகாதுமாய் எழுதப்படாதன பாராட்டுவான்.

ருரு-சுக. மாயிரும் பீலி மணிநிற மஞ்ஞைநின்
சாயற் கிடைந்து தண்கா னடையவு,
மன்ன நன்னுதால் மென்னடைக் கழிந்து
நன்னீர்ப் பண்ணை நளிமலர்ச் செறியவு,
மளிய தாமே சிறுபசுங் கிளியே
குழலும் யாழு மமிழ்துங் குழைத்தநின்
மழலைக் கிளவிக்கு வருந்தின வாகியு,
மடநடை மாதுநின் மலர்க்கையி னீங்கா
துடனுறைவு மரீஇ யொருவா வாயின

இ - ள். நன்னுதால், மாதே, மயிற்குலம் நின்னுடைய சாயற்கு எதிர்ந்துவந்து பொருது தோற்றுத் தண்ணிய காட்டிடத்தேபோய் ஒடுங்காநிற்கவும், அன்னம் மெல்

---

* கலித்தொகை, பாலை, ௪. "வலிமுன்பின் வல்லென்ற யாக்கைப் புலிநோக்கிற், சுற்றமை வில்லர் சுரிவளர் பித்தைய, ரற்றம்பார்த் தல்குங் கடுங்கண் மறவர்தாங், கொள்ளும் பொருளில ராயினும் வம்பலர், துன்னுநர்க் காண்மார் தொடர்ந்துயிர் வௌவலிற், புள்ளும் வழங்காப் புலம்புகொ ளாரிடை, வெள்வேல் வலத்திர் பொருடரல் வேட்கையி, னுள்ளினி ரென்ப தறிந்தன ளென்றோழி."

† சீவகசிந்தாமணி, பதுமையாரிலம்பகம், கஉசு: "நோக்கினு ணிறையுநாணு மாமையுங் கவினு கொய்திற், போக்கினன் வளையும் போர்த்தான் பொன்னிறப் பசலை மூழ்கிற், றாக்கினு ளரங்க னப்புத் தூணியை யாரு ளானோ, நோக்கிய முருகன் வைவே லோரிரண் டனைய கண்ணாள்."

‡ புகழுவமையாவது உவமையைப்புகழ்ந்துவமிப்

லிய நடையினைக்கண்டு எதிர்ந்துவந்து தோற்றுத் தனதுநடையழிந்து நல்லநீர்பொருந்தின பண்ணையிற் செறிந்த மலரிற்புக்கு மறையவும், சிறிய பசிய கிள்ளைகள்தாம் குழலிசையினையும் யாழிசையினையும் அமுதத்தினையும் கலந்து குழைத்தாலொத்த நினது முதிராத மழலைக்கிளவிக்கு எதிர்ந்துவந்து தோற்றனவாயும், நின்னை வழிபட்டு அக்கிளவி கற்பக்கருதி நினதுசையினின்றும் நீங்காவாய், நின்னுடனே வெறுப்புத் தோன்றாமல் உறைதலையும் பொருந்திப் பிரியாவாயினவாகலின், இந்நாள் அளிக்கத் தக்கனகாணென்றானென்க.

மாயிரு - *"கோயில்" போலநின்றது; அதிகாரப்புறனடைவிதி. மா - கருமை. இருமை - பெருமை. மணி - நீலமணி. † சாயல் - மென்மை. தண்கான் - இழிந்த காடு. நன்னுதால்- ‡ "எஞ்சிய விரணடி னிறுதிப் பெயரே, நின்ற வீற்றய னீட்டம் வேண்டும்" என்பதனால் நீட்டித்தது. நளி - செறிவு. செறிதல் - ஒடுங்குதல். குழைத்த-இல்பொருளுவமை; §"கரும்புந் தேனு மமிழ்தும் பாலுங் கலந்த தீஞ்சொல்"என்றாற்போல. இனிக் குழைத்த - குழைவித்தவெனினுமமையும், வருத்தியவென்பதாம "குழைமுற்றின வாழைக் கொழுங்கனி குழைத்தும்" என்றாராகலின். மாது - முன்னிலைவிளி; ||"ஒவு மவ்வு மேயொடு சிவணும்" என்பதனான் முடிந்தது.

அடையவும, செறியவுமே இவை ஒருவர்வாயினவாகலான் அளியவென்க.

கிளியும இவள்வளாப்பன பலவாகலாற் பன்மைகூறினார்.

கூஉ-கூச. நறுமலர்க் கோதைநின் னலம்பா ராட்டுநர்
மறுவின் மங்கல வணியே யன்றியும்
பிறிதணி யணியப் பெற்றதை யெவன்கொல்

இ - ள். இத்தன்மையையாகிய கோதாய், நின்னைப் புனைந்து அழகுசெய்யும களிர் குற்றமற்ற நினது புனையாத அழகன்றியும் வேறுசில அணிகளை அணிந்ததனாற் பெற்ற உதவி யாதுதானென்றானென்க.

¶ "ஐயா யாகும்" என்பதனாற் கோதை கோதாயென விளியேற்றது. மங்கலவணி - மங்கலியமென்பாருமுளர்.

---

* சீவகசிந்தாமணி, நாமகளிலம்பகம், கஉகூ: "கந்து மாம ணித்திரள் கடைந்து செம்பொ னீள்சுவர், சந்து போழ்ந்தி யற்றிய தட்டு வேய்ந்து வெண்பொறு, விந்தி ரன்றி ருநக ருரிமை யோடு மிவ்வழி, வந்தி ருந்த வண்ணமே யண்ணல் கோயில் வண்ணமே."

† தொல்காப்பியம், சொல்லதிகாரம், உரியியல், உகூ.

‡ „ „ விளிமரபு, உஎ.

§ சீவகசிந்தாமணி, இலக்கணையாரிலம்பகம், சுக: "கரும்புந் தேனு மமிழ் தும் பாலுங் கலந்த தீஞ்சொன் மடவாட், கரும்பு மிலையு மயங்கி யாய்ந்த முல்லை சூட்டு மிலைச்சித், திருந்து திங்கள் சூழ்ந்த மின்னிற் செம்பொற பட்டஞ் சேர்த்தி விரும்பு முத்த மாலை நான்ற விழுப்பொன் மகரஞ் செறித்தாள்."

|| தொல்காப்பியம், சொல்லதிகாரம், விளிமரபு, ரு.

¶ „ „ „ சு.

௬௫-௬௬. பல்லிருங் கூந்தற் சின்மல ரன்றியு
மெல்லவிழ் மாலையொ டென்னுற் றனர்கொல்

இ - ள். பலவகைத்தாகிய கூந்தலிற் சிலமலரைப்பெய்தலேயன்றி அதன்மேலும் ஒளிபொருந்தி அவிழ்கின்ற மாலையைப் புனைதற்கு அந்தமாலையொடு அவர்கள் என்ன உறவுடையார்களோ வென்றானென்க.

சின்மலர் - மங்கலமலர்; கறுப்புமுல்லை முதலியவை; அருச்சனை மலருமாம்

௬௭-௬௮. நான நல்லகி லாரும்புகை யன்றியு
மான்மதச் சாந்தொடு வந்ததை யெவன்கொல்

இ - ள். அவர், கூந்தற்கு நெய்மையுடைய நல்ல அகிற்புகையை ஊட்டுதன் மேலும் மான்மதச்சாந்தை அணிதற்கு அதனோடு தமக்குளதாகிய அந்தக்கண்ணோட்டம் யாதுதானென்றானென்க.

மான்மதம் - கத்தூரி.

௬௯-௭0. திருமுலைத் தடத்திடைத் தொய்யி லன்றியு
மொருகாழ் முத்தமொ டுற்றதை யெவன்கொல்

இ - ள். அவர் அழகிய முலைத்தடத்தின்மேல் தொய்யிலெழுதுதன்மேலும் தனிமுத்துவடத்தைப் பூட்டுவதற்கு அதனோடு அவர்களுண்டான கெழுதகைமை யாதுதானென்றானென்க.

கெழுதகைமை-உரிமை. திரு- * முலைமேற்றோன்றும் வீற்றுத்தெய்வம். தடம்-பரப்பு. தொய்யில்-பத்திக்கீற்று. காழ் - வடம். முத்தக்காழென மாறுக.

௭௧-௭௨. திங்கண் முத் தரும்பவுஞ் சிறுகிடை வருந்தவு
மிங்கிவை யணிந்தன ரென்னுற் றனர்கொல்

இ - ள். இங்ஙனமாகிய மங்கலவணியும் சின்மலரும் அகிற்புகையும் தொய்யிலும் பாரமாய், அரும்பவும் வருந்தவும் இவ்விடத்து இவைகளைவைத்தும், இவர்கள் பிறிதணியும் மாலையும் சாந்தும் முத்தும் அணிந்தாராகலின், அவர்கள் என்னபேய் கொண்டார்களோ வென்றானென்க.

௭௩-௭௪. மாசறு பொன்னே....................தேனே

௭௩. மாசறுபொன்னே -இ - ள். கட்கினிமையான் மாசறவோடிய பொன்னை யொப்பாய்;

௭௩. வலம்புரி முத்தே—இ-ள். ஏற்றின் இன்பத்தான்முத்தையொப்பாய்; மரபின் தூய்மைகூறுவான் வலம்புரிமுத்தென்றான்

௭௪. காசறு விரையே—இ - ள். உயிர்ப்பின் இனிமையாற் குற்றமற்ற விரையையொப்பாய்;

௭௪. கரும்பே—இ - ள். சுவையினினிமையாற் கரும்பை யொப்பாய்;

௭௪. தேனே—இ-ள். இனியமொழியையுடைமையால் தேனையொப்பாய்;

---

* "ஆமணங்கு குடியிருந் தஞ்சுணங்கு பரந்தனவே" என்றார் சிந்தாமணியிலும்; நாமகளிலம்பகம், ௧௪௨.

இவற்றாற்சொல்லியது, ஒளியும் ஊறும் நாற்றமும் சுவையும் ஓசையுமாகலின், * "கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியு மைம்புலனு, மொண்டொடி கண்ணே யுள" என நலம்பாராட்டப்பட்டன.

௭௫-௮௧. அரும்பெறற் பாவா யாருயிர் மருந்தே
பெருங்குடி வாணிகன் பெருமட மகளே
மலையிடைப் பிறவா மணியே யென்கோ
அலையிடைப் பிறவா வமிழ்தே யென்கோ
யாழிடைப் பிறவா விசையே யென்கோ
தாழிருங் கூந்தற் றையா னின்னையென்
றுலவாக் கட்டுரை பலபா ராட்டி

இ - ள். பாவாய், மருந்தே, மடமகளே, தையால், நின்னை யான் மணியே † யென்கோ! அமுதேயென்கோ! இசையேயென்கோ! எனச் சொல்லித்தொலையாத நலம்பாராட்டாகிய பொருள்பொதிந்த உரையைப் பலபாராட்டியென்க.

உயிர்மருந்து - மிருதசஞ்சீவினி. இவற்றாற்சொல்லியது என்னையெனின்,— காட்சியின் உயிர்மயக்குறுதலிற் கொல்லியிற்பாவாயென்றும், அவ்வாறு அழியுமுயிரை இமைப்பிற் றருதலின் ஆருயிர்மருந்தேயென்றுங்கூறி, மலையிடைப்பிறக்குமணி குழையாமையின் அதிற்பிறவா மணியே யென்பேனோ, அலையிடைப்பிறக்கும் அமிர்திற்கு இவ்வடிவின்மையின் அதனிற்பிறவாத அமுதேயென்பேனோ, யாழ் கட்கின்னாதாகலின் அதனிடைப்பிறவாத இசையேயென்பேனோவெனத் தெரிதருதேற்றவுவமையென்னு மலங்காரமும், மலை கடலென விரோதமும், பின்வருநிலையென்னு மலங்காரமும் புலப்படுத்தினாரென வுணர்க.

௮௨-௮௩. தயங்கிணர்க் கோதை தன்னொடு தருக்கி
வயங்கிணர்த் தாரோன் மகிழ்ந்து செல்வுழிநாள்

இ - ள். வயங்கிணர்த்தாரோன் இங்ஙனம் கோதையொடு தருக்கி மகிழ்ந்து செல்லாநின்றநாளிலே ஒருநாள்,

தயங்கல் வயங்கலிரண்டும் விளக்கமாதலிற் பரியாயமென்னும் அலங்காரமும், தலையாய எதுகைத்தொடையின்பமும் புலப்படுத்தினமையுணர்க.

௮௪-௯௰. வாரொலி கூந்தற் பேரியற் கிழத்தி
மறப்பருங் கேண்மையோ டறப்பரி சாரமும்
விருந்து புறந்தரூஉம் பெருந்தண் வாழ்க்கையும்
வேறுபடு திருவின் வீறுபெறக் காண
வுரிமைச் சுற்றமோ டொருதனி புணர்க்க
யாண்டுசில கழிந்தன விற்பெருங் கிழமையிற்
காண்டகு சிறப்பிற் கண்ணகி தனக்கென

இ - ள். நீண்டு ஒலித்த கூந்தலையுடைய, வீரபத்தினியை இருநிதிக்கிழவன்

* திருக்குறள், புணர்ச்சிமகிழ்தல், க.
† என்கோ-என்பேனோ.

லைக்கிழத்தி, சுற்றந்தழாலோடே துறவறத்திற்குச் செய்யும் பரிசாரமும், விருந்னரைப் புறங்கண்டுபுகுதலும் ஒழிந்த செய்கைகளு மாகிய இவற்றோடுபொருந்திய ல்வாழ்க்கையைப் பலபடைப்பாசிய செல்வத்தோடே நடத்திக் கைவந்து உயர்ச்சி பறுதலைக் காணவேண்டி, அடிமைத்திரளோடே வேறேகூட்ட, அத்தைக் கண்டண் அங்ஙனம் காட்சிதரும் சிறப்பினையுடைய கண்ணகிக்கு இறபெருங்கிழமையிற லவாண்டு கழிந்தனவென்க.

மறப்பு - பொச்சாப்பு. இதனை எல்லாவற்றோடு மொட்டுக. இதன்கருத்து: கண்மையோ டெனவே சுற்றந்தழாலும், அறப்பரிசாரமு மெனவே அறவோர்க்களிதலும் அந்தணரோம்பலும் துறவோர்க்கெதிர்தலுமென்பதாயிற்று. இவற்றோடே பாருந்திய வாழ்க்கையெனவே அருளுடைமை, அன்புடைமை, இனியவைகூறல்முதலிய இல்லறப்பகுதி யெல்லாமடங்கும். இக்கருத்தானன்றே, கொலைக்களக்காதையிற் கண்ணகியார், *"அறவோர்க் களித்தலு மந்தண ரோம்பலுந், துறவோர்க்கெதிர்தலுந் தொல்லோர் சிறப்பின், விருந்தெதிர் கோடலு மிழந்த வென்னை" என்றது மென்க. கூந்தலையுடைய பேரியற்கிழத்தி யெனினுமமையும் பேரியற்கிழத்தி-கோவலன்மாதா. கண்ணகிக்குச் சிலயாண்டு கழிந்தனவெனவே மாதவிக்குப் பலயாண்டு கழிதலும் கொள்ளப்பட்டது. இன்னும் மேற் கனாத்திறமுரைத்தகாதையில், தேவந்தி †"கண்ணகி நல்லாளுக் குற்றகுறை யுண்டென்று" என்புழி எச்சவும்மை விரிக்க இவட்கு அவள் இளமைப்பருவந்தொடங்கி நிகழும் பார்ப்பனத்தோழியாய் மாநாய்கன் மனைவளர்தலின், ஒருகாலத்தே குடிபுகுச் செல்கின்றுழிப் பிரிவும் ஒருகாலத்தாயிற் றென்பதாகலின், ‡"நாலீராண்டு நடந்ததற் பின்னர்" என்பதனை இருவர்க்குமாக்கி மாதவிக்கு எட்டினிறந்த பலயாண்டு சேறலிற் கண்ணகிக்குச் சிலயாண்டு கழிந்தவெனப் பொருள் கூறலுமொன்று. இதனுன் மிக்க பலமின்று; ஏற்குமேற் கொள்க. இது போலி.

§ செல்வர்க்குத்தோன்றிய கண்ணியும் கொழுநனும் தென்றலைக் கண்டு மகிழ்ந்து சிறந்து எறிக்காட்சிபோலச் சேக்கையிலிருந்து எழுதி மயங்கிக் கையற்று முகநோக்கிக் குறியாக்கட்டுரை கூறுகின்றவன் திங்கள் முதலியவற்றை முதன்முதலில் வரச்சொல்லிப் பலபாராட்டி மகிழ்ந்து செல்வுழி ஒருநாள் பேரியற்கிழத்தி புணர்க்கக் கண்ணகிதனக்குப் பெருங்கிழமையோடு ஆண்டு சில கழிந்தனவெனக்கூட்டுக.

எல்லாவடியும் நேரடியாய் வந்து முடிதலின், இது நிலைமண்டிலவாசிரியப்பா.

பெருந்தோழிலுமென ... ... அடியார்க்குநல்லானென்பான்.
ஒருந்தமிழ் ... ... நிரம்பையர்காவலனே.
காற்றை ... ... சொல்லிநகதே.

மனையறம்படுத்தகாதை முற்றிற்று.

* கொலைக்களக்காதை, ௭௧ - ௭௩.

† கனாத்திறமுரைத்தகாதை, ௬௧.

‡ வரந்தருகாதை, ௮௫.

§ இம்முடிபிலுள்ள செய்தெனெச்சஞ்சிலவற்றைச் செயவெனெச்சத்திரிபாகக் கொள்க.

மூன்றாவது

அரங்கேற்றுகாதை.

[கூத்தியதமைதி.]

தெய்வ மால்வரைத் திருமுனி யருள
வெய்திய சாபத் திந்திர சிறுவனொடு
தலைக்கோற் றானத்துச் சாப நீங்கிய
மலைப்பருஞ் சிறப்பின் வானவர் மகளிர்
சிறப்பிற் குன்றாச் செய்கையொடு பொருந்திய
பிறப்பிற் குன்றாப் பெருந்தோண் மடந்தை
தாதவிழ் புரிகுழன் மாதவி தன்னை
யாடலும் பாடலு மழகு மென்றிக்
கூறிய மூன்றி னொன்று குறைபடாமல்
ஏழாண் டியற்றியோ ரீரா றாண்டிற்
சூழ்கழன் மன்னற்குக் காட்டல் வேண்டி

[ஆடலாசிரியனமைதி]

யிருவகைக் கூத்தி னிலக்கண மறிந்து
பல்வகைக் கூத்தும் விலக்கினிற் புணர்த்துப்
பதினோ ராடலும் பாட்டுங் கொட்டும்
விதிமாண் கொள்கையின் விளங்க வறிந்தாங்
காடலும் பாடலும் பாணியுந் தூக்குங்
கூடிய நெறியின கொளுத்துங் காலைப்
பிண்டியும் பிணையலு மெழிற்கையுந் தொழிற்கையுங்
கொண்ட வகையறிந்து கூத்துவரு காலைக்
கூடை செய்தகை வாரத்துக் களைதலும்
வாரஞ் செய்தகை கூடையிற் களைதலும்
பிண்டி செய்தகை யாடலிற் களைதலு
மாடல் செய்தகை பிண்டியிற் களைதலுங்
குரவையும் வரியும் விரவல செலுத்தி
யாடற் கமைந்த வாசான் றன்னொடும்

[இசையாசிரியனமைதி]

யாழுங் குழலுஞ் சீரு மிடறுந்
தாழ்குரற் றண்ணுமை யாடலொ டிவற்றி

னிசைந்த பாட லிசையுடன் படுத்து
வரிக்கு மாடற்கு முரிப்பொரு ளியக்கித்
தேசிகத் திருவி னோசைகடைப் பிடித்துத்
தேசிகத் திருவி னோசை யெல்லா
மாசின் றுணர்ந்த வறிவின னாகிக்
கவியது குறிப்பு மாடற் றொகுதியும்
பகுதிப் பாடலுங் கொளுத்துங் காலை
வசையறு கேள்வி வகுத்தனன் விரிக்கு
மசையா மரபி னிசையோன் றானு

[கவிஞனமைதி.]

மிமிழ்கடல் வரைப்பிற் றமிழக மறியத்
தமிழ்முழு தறிந்த தன்மைய னாகி
வேத்தியல் பொதுவிய லென்றிரு திறத்தி
னாட்டிய நன்னூ னன்கு கடைப்பிடித்
திசையோன் வக்கிரித் திட்டதை யுணர்ந்தாங்
கசையா மரபி னதுபட வைத்து
மாற்றோர் செய்த வசைமொழி யறிந்து
நாத்தொலை வில்லா நன்னூற் புலவனு

[தண்ணுமையோனமைதி.]

மாடல் பாட லிசையே தமிழே
பண்ணே பாணி தூக்கே முடமே
தேசிக மென்றிவை யாசி னுணர்ந்து
கூடை நிலத்தைக் குறைவின்று மிகுத்தாங்கு
வார நிலத்தை வாங்குபு வாங்கி
வாங்கிய வாரத் தியாழுங் குழலு
மேங்கிய மிடறு மிசைவன கேட்பக்
கூருகிர்க் கரணங் குறியறிந்து சேர்த்தி
யாக்கலு மடக்கலு மீத்திறம் படாமைச்
சித்திரக் கரணஞ் சிதைவின்று செலுத்து
மத்தகு தண்ணுமை யருந்தொழின் முதல்வனுஞ்

[குழலோனமைதி.]

சொல்லிய வியல்பிற் சித்திர வஞ்சனை
புல்லிய வறிந்து புணர்ப்போன் பண்பின்
வர்த்தனை நான்கு * மயலறப் பெய்தாங்
கேற்றிய குரலிளி யென்றிரு நரம்பி

* மயலறத்தெரிந்தென்றும் பாடம்.

னெப்பக் கேட்கு முணர்வின னாகிப்
பண்ணமை முழவின் கண்ணெறி யறிந்து
தண்ணுமை முதல்வன் றன்னொடும் பொருந்தி
வண்ணப் பட்டடை யாழ்மேல் வைத்தாங்
கிசையோன் பாடிய விசையி னியற்கை
வந்தது வளர்த்து வருவ தொற்றி
யின்புற வியக்கி யிசைபட வைத்து
வார நிலத்தைக் கேடின்று பார்த்தாங்
கீர நிலத்தி னெழுத்தெழுத் தாக
வழுவின் றிசைக்குங் குழலோன் றானு

[யாழாசிரியனமைதி.]

மீரேழ் தொடுத்த செம்முறைக் கேள்வியி
னோரேழ் பாலை நிறுத்தல் வேண்டி
வன்மையிற் கிடந்த தார பாகமு
மென்மையிற் கிடந்த குரலின் பாகமு
மெய்க்கிளை நரம்பிற் கைக்கிளை கொள்ளக்
கைக்கிளை யொழிந்த பாகமும் பொற்புடைத்
தளராத் தாரம் விளரிக் கீத்துக்
கிளைவழிப் பட்டன ளாங்கே கிளையுந்
தன்கிளை யழிவுகண் டவள்வயிற் சேர
வேனை மகளிருங் * கிளைவழிச் சேர
மேல துழையிளி கீழது கைக்கிளை
வம்புறு மரபிற் செம்பாலை யாய
திறுதி யாதி யாக வாங்கவை
பெறுமுறை வந்த பெற்றியி னீங்காது
படுமலை செவ்வழி யரும்பா லையெனக்
குரல்குர லாகத் தற்கிழமை திரிந்தபின்
முன்னதன் வகையே முறைமையிற் றிரிந்தாங்
கிளிமுத லாகிய வெதிர்படு கிழமையுங்
கோடி விளரி மேற்செம் பாலையென
நீடுக் கிடந்த கேள்விக் கிடக்கையி
னிணைநரம் புடையன வணைவுறக் கொண்டாங்
கியாழ்மேற் பாலை யிடமுறை மெலியக்
குழன்மேற் கோடி வலமுறை மெலிய
வலிவு மெலிவுஞ் சமனு மெல்லாம்
பொலியக் கோத்த புலமை யோனுட

* கிளைவயிற்சேரவென்றும் பாடம்.

[அரங்கினமைதி.]

னெண்ணிய நூலோ ரியல்பின் வழாஅது
மண்ணக மொருவழி வகுத்தனர் கொண்டு
புண்ணிய நெடுவரைப் போகிய நெடுங்கழைக்
கண்ணிடை யொருசாண் வளர்ந்தது கொண்டு
நூனெறி மரபி னரங்க மளக்குங்
கோலள விருபத்து நால்விர லாக
வெழுகோ லகலத் தெண்கோ னீளத்
தொருகோ லுயரத் துறுப்பின தாகி
யுத்தரப் பலகையோ டரங்கின் பலகை
வைத்த விடைநில நாற்கோ லாக
வேற்ற வாயி லிரண்டுடன் பொலியத்
தோற்றிய வரங்கிற் றொழுதன ரேத்தப்
பூதரை யெழுதி மேனிலை வைத்துத்
தூணிழற் புறப்பட மாண்விளக் கெடுத்தாங்
கொருமுக வெழினியும் பொருமுக வெழினியுங்
கரந்துவர லெழினியும் புரிந்துடன் வகுத்தாங்
கோவிய விதானத் துரைபெறு நித்திலத்து
மாலைத் தாமம் வளையுட னாற்றி
விருந்துபடக் கிடந்த வருந்தொழி லரங்கத்துப்

[தலைக்கோலமைதி.]

பேரிசை மன்னர் பெயர்புறத் தெடுத்த
சீரியல் வெண்குடைக் காம்புநனி கொண்டு
கண்ணிடை நவமணி யொழுக்கி மண்ணிய
நாவலம் பொலந்தக டிடைநிலம் போக்கிக்
காவல் வெண்குடை மன்னவன் கோயி
லிந்திர சிறுவன் சயந்த னாமென
வந்தனை செய்து வழிபடு தலைக்கோல்
புண்ணிய நன்னீர் பொற்குடத் தேந்தி
மண்ணிய பின்னர் மாலை யணிந்து
நலந்தரு நாளாற் பொலம்பூ ணோடை
யரசுவாத் தடக்கையிற் பரசினர் கொண்டு
முரசெழுந் தியம்பப் பல்லிய மார்ப்ப
வரசொடு பட்ட வைம்பெருங் குழுவுந்
தேர்வலஞ் செய்து கவிகை கொடுப்ப
வூர்வலஞ் செய்து புகுந்துமுன் வைத்தாங்

[அரங்கிற்புகுந்தாடுகின்றமுறைமை.]

இயல்பினின் வழாஅ விருக்கை முறைமையிற்
குயிலுவ மாக்க ணெறிப்பட நிற்ப
வலக்கான் முன்மிதித் தேறி யரங்கத்து
வலத்தூண் சேர்தல் வழக்கெனப் பொருந்தி
யிந்நெறி வகையி னிடத்தூண் சேர்ந்த
தொன்னெறி யியற்கைத் * தோரிய மகளிருஞ்
சீரியல் பொலிய நீரல நீங்க
வார மிரண்டும் வரிசையிற் பாடப்
பாடிய வாரத் தீற்றினின் றிசைக்குங்
கூடிய குயிலுவக் கருவிக ளெல்லாங்
குழல்வழி நின்றது யாழே யாழ்வழித்
தண்ணுமை நின்றது தகவே தண்ணுமைப்
பின்வழி நின்றது முழவே முழவொடு
கூடிநின் றிசைத்த தாமந் திரிகை
யாமந் திரிகையோ டந்தர மின்றிக்
கொட்டிரண் டுடையதோர் மண்டல மாகக்
கட்டிய மண்டலம் பதினொன்று போக்கி
வந்த முறைமையின் வழிமுறை வழாம
லந்தரக் கொட்டுட னடங்கிய பின்னர்
மீத்திறம் படாமை † வக்காணம் வகுத்துப்
பாற்பட நின்ற பாலைப் பண்மேல்
நான்கி னொரீஇய நன்கன மறிந்து
மூன்றளந் தொன்று கொட்டி யதனை
யைது மண்டலத்தாற் கூடை போக்கி
வந்த வாரம்வழி மயங்கிய பின்றை
யாறு நாலு மம்முறை போக்கிக்
கூறிய வைந்தின் கொள்கை போலப்
பின்னையு மம்முறை பேரிய பின்றைப்
பொன்னியல் பூங்கொடி புரிந்துடன் வகுத்தென
நாட்டிய நன்னூ னன்கு கடைப்பிடித்துக்
காட்டின ளாதலிற் காவல் வேந்த
னிலைப்பூங் கோதை யியல்பினின் வழாமைத்
தலைக்கோ லெய்தித் தலையரங் கேறி

* தோரியமகளுமெனவும் பாடம்.

† வர்த்தனைவகுத்தென்றும் பாடம்.

* விதிமுறை கொள்கையி னாயிரத் தெண்கழஞ்
சொருமுறை யாகப் பெற்றன ளதுவே
நூற்றுப்பத் தடுக்கி யெட்டுக் கடைநிறுத்த
வீறுயர் பசும்பொன் பெறுவ திம்மாலை
மாலை வாங்குநர் சாலுநங் கொடிக்கென
மானமர் நோக்கியோர் கூனிகைக் கொடுத்து
நகர நம்பியர் திரிதரு மறுகிற்
பகர்வனர் போல்வதோர் பாண்மையி னிறுத்த
மாமலர் நெடுங்கண் மாதவி மாலை
கோவலன் வாங்கிக் கூனி தன்னொடு
மணமனை புக்கு மாதவி தன்னோ
டணைவுறு வைகலி னயர்ந்தனன் மயங்கி
விடுத லறியா விருப்பின னாயினன்
வடுநீங்கு சிறப்பிற்றன் மனையக மறந்தென.

எண்ணு மெழுத்து மியலைந்தும் பண்ணான்கும்
பண்ணின்ற கூத்துப் பதினொன்று - மண்ணின்மேற்
போக்கினாள் பூம்புகார்ப் பொற்றொடி மாதவிதன்
வாக்கினா லாடரங்கின் வந்து.

[கூத்தியது அமைதி.]

௧ - ௧௧. தெய்வமால்வரை ....காட்டல்வேண்டி

௧-௭. தெய்வ மால்வரைத் திருமுனி யருள
வெய்திய சாபத் திந்திர சிறுவனொடு
தலைக்கோற் றானத்துச் சாப நீங்கிய
மலைப்பருஞ் சிறப்பின் வானவர் மகளிர்
சிறப்பிற் குன்றாச் செய்கையொடு பொருந்திய
பிறப்பிற் குன்றாப் பெருந்தோண் மடந்தை
தாதவிழ் புரிகுழன் மாதவி தன்னை

தெய்வமால்வரை - தெய்வத்தன்மையையுடைய பெரியவரையென உருபுதொக்கது. வரை - பொதியில்; திருமுனி - அகத்தியன். வரை பொதியிலாதலும், திருமுனி அகத்தியனாதலும் பெறுமாறு என்னை? இமயமும் இறைவனுமாகற்பாலவெனின்,—அற்றன்று; மேல், † "திருமுனி யருள, வெய்திய சாபத் திந்திர சிறுவனொடு, தலைக்கோற் றானத்துச் சாப நீங்கிய" என இக்காதையிலும், ‡ "நயந்தெரி பாடலுந், தோரிய மடந்தை வாரம் பாடலு, மாயிரங் கண்ணோன் செவியக நிறைய, நாடக முருப்பசி நல்கா ளாகி, மங்கல மிழப்ப வீணை மண்மிசைத், தங்குக விவளெனச்

* விதிமுறையாகியவென்றும் பாடம். † அரங்கேற்றுகாதை, ௧ - ௩.
‡ கடலாடுகாதை, ௧௮-௨௫.

சாபம் பெற்ற, மங்கை மாதவி வழிமுதற் றோன்றிய, வுங்கர வல்குல்" எனக் கடலாடு காதையிலும் கூறினாராதலாலும், நான்முகத்துள்ளும் "திருந்திய பொதியி லருந்திற லகத்தியன், சுந்தர மணிமுடி யிந்திரன் மகனை, மாணு விறலோய் வேணு வாகென, விட்ட சாபம் பட்ட சயந்தன், சாப விடையெமக் கருடவத் தோயென்று, மேவின்ன் றொழுது மேதக வுரைப்ப, வருந்தவ 'மாமுனி தமிழ்க்கூத் தியர்க்குத், திருந்திய தலைக்கோற் றனந் நீருமென், றவனினி துரைப்ப வாங்கவன் தனனென" என்றாராகலானும் பொதியிலும் அகத்தியனு மென்பதாயிற் றெனக்கொள்க. அருளநீங்கியவென்க. அவன் சாபமிட்டருள வென்றுமாம். அருளாற் பாடமாயின், அவனதருளாற் சாபநீங்கியவென்க.

இ - ள். தெய்வத்தன்மையையுடைய பெரிய பொதியின்மலைக்கட் டிருமுனியாகிய அகத்தியன் முன்பாலிட்ட *சாபம் இந்திரசிறுவனோடே அம்முனியருளத் தலைக்கோற்றனத்து நீங்கிய மாறுபடுதலரிய சிறப்பினையுடைய அரம்பையரில், வரிசையிற் குறைவற்ற நாடகத்தொழிலொடுபொருந்திய உருப்பசியாகிய அம்மாதவி மரபில்வந்த பிறப்பிற்குன்றுதலில்லாத பெரியதோளினையும் தாதுகளவிழும் பூக்களையுடைய கடைகுழன்றுசுருண்ட குழலினையுமுடைய மாதவியாகிய மடந்தைதன்னையென்க.

பெருந்தோளென்றார், மகளிர்தோள் பெருத்தல் மரபாதலின். என்னை? † "அகலல்கு றோள்கண் ணென மூவழிப் பெருகி" என்றாராகலின்.

அ-௯. ஆடலும் பாடலு மழகு மென்றிக்
கூறிய மூன்றி னொன்றுங் குறை படாமல்

இ - ள். கூத்தும் பாட்டும் அழகுமென்றுசொல்லப்பட்ட இம்மூன்றினுள்ளும் ஒன்றுங் குறைவுபடாமல்,

இவை குறைவுபடாமைக்குக் காரணமுடையளாகலினென்க.

௧௦-௧௧. ஏழாண் டியற்றியோ ரீரா றாண்டிற்
சூழ்கழன் மன்னற்குக் காட்டல் வேண்டி

இ - ள். ஐயாண்டில் தண்டியம்பிடிப்பித்து ஏழாண்டு இயற்றுவித்துப் பன்னிராண்டில் வீரக்கழல்சூழ்ந்த காலினையுடைய சோழன்கரிகாற்பெருவளத்தாற்கு அவளைவட்டரங்கேறிக் காட்டலைவிரும்பியென்க.

என்னை? "பண்ணியம்வைத் தானைமுகன் பாதம் பணிந்துநாட், புண்ணிய வோ

* இந்திரனவைக்களத்து ஒருவரையொருவர் விழைந்து அகத்தியமுனிவராற் சாபம்பெற்ற சயந்தனும் உருப்பசியும் முறையே விந்தமலையில் மூங்கிலாயும், காஞ்சிநகரத்துத் தேவகணிகையாயும் பிறந்தனரென்று, "வானவர் கோமான் வானிடை யிருந்து" என்னும் ஆசிரியப்பாவாற் சுந்தாநந்தப்பிரகாசபாரதநூலாசிரியர் கூறினர்.

† கலித்தொகை, முல்லைக்கலி, அ. "இகல்வேந்தன் சேனை யிறுத்தவாய் போல, வகலல்கு றோள்கண் ணெனமூவழிப் பெருகி, நுதலடி நுசுப்பென மூவழிச் சிறுகிக், கவலையாற் காமனும் படையிடு வனப்பினோ, டகலாங்க ணளைமாறி யலமந்து பெயருங்கா, ணகைவல்லேன் யானென்றென் னுயிரோடு படைதொட்ட, விகலாட்டி நின்னை யெவன்பிழைத்தே னெல்லாயான்."

னா புகன்றனகொண் - டெண்ணியே, வண்டிருக்குங் கூந்தன் மடவரலை யையாண் டிற், றண்டியஞ்சேர் விப்பதே சால்பு" எனவும், "வட்டணையுந் தாசியும் பண்ணை மைய வெண்மையாண், டிட்டபே ரீராருண் டெய்தியபின்-வட்டணையுங், கீதக் குறிப்பு மலங்கார முங்கிளரச், சோதித் தரங்கேறச் சூழ்" எனவும் "நன்னர் விருப்புடையோ னற்குணமு மிக்குயர்ந்தோள், சொன்னகுலத் தாலமைந்த தோன்மையளாய்ப்-பன்னிரண்டாண், டேய்ந்ததற்பி னாடலுடன் பாடலழ கிம்மூன்றும், வாய்ந்தவரங் கேற்றல் வழக்கு" எனவுங்கூறினர் பரதசேனாபதியார்.

[ஆடலாசிரியன் அமைதி.]

௧௨-௨௫. இருவகைக் கூத்தி னிலக்கண மறிந்து,
பல்வகைக் கூத்தும் விலக்கினிற் புணர்த்துப்
பதினொ ராடலும் பாட்டுங் கொட்டும்
விதிமாண் கொள்கையின் விளங்க வறிந்தாங்
காடலும் பாடலும் பாணியுந் தூக்குங்
கூடிய நெறியின கொளுத்துங் காலைப்
பிண்டியும் பிணையலு மெழிற்கையுந் தொழிற்கையுங்
கொண்ட வகையறிந்து கூத்துவரு காலைக்
கூடை செய்தகை வாரத்துக் களைதலும்
வாரஞ் செய்தகை கூடையிற் களைதலும்
பிண்டி செய்தகை யாடலிற் களைதலு
மாடல் செய்தகை பிண்டியிற் களைதலுங்
குரவையும் வரியும் விரவல செலுத்தி
யாடற் கமைந்த வாசான் றன்னொடும்

இ - ள். இருவகைத்தாகிய அகக்கூத்தின் இலக்கணங்களையறிந்து, பலவகைப்பட்ட புறநடங்களையும் விலக்குறுப்புக்களைச் சேரப்புணர்க்கவும், வல்லனாகி, அல்லிய முதற் கொடுகொட்டியீறாகக்கிடந்த பதினொருகூத்துக்களும், அக்கூத்துக்களுக்குரிய பாட்டுக்களும், அவற்றுக்கடைத்த வாச்சியங்களின் கூறுகளும், நூல்களின் விதித்தவழியே தெரிந்து, கூத்தும் பாட்டும் தாளங்களும் தாளங்களின் வழிவந்த தூக்குக்களும், தம்மிற்கூடின நெறியையுடைய அகக்கூத்தும் புறக்கூத்துமுதலாயின நிகழ்த்துமிடத்துப், பிண்டி பிணையல் எழிற்கை தொழிற்கையென்றுசொல்லப்பட்ட நான்கினையும் நூலினகத்துக்கொண்ட கூறுபாட்டையறிந்து, அகக்கூத்து நிகழுமிடத்துக் கூடைக்கதியாகச்செய்தகை, வாரக்கதியுட் புகாமலும், வாரக்கதியாகச்செய்தகை கூடைக்கதியுட் புகாமலும், புறக்கூத்துநிகழுமிடத்து ஆடனிகழுமிடத்து அவிநய நிகழாமலும், அவிநயநிகழுமிடத்து ஆடனிகழாமலும், குரவைக்கூத்தும் வரிக்கூத்தும் தம்மில் விரவாதபடியுஞ் செலுத்தி அமைந்த ஆடலாசிரியனுமென்க.

இது பொழிப்புரை.

௧௨. இருவகைக் கூத்தாவன: வசைக்கூத்து, புகழ்க்கூத்து; வேத்தியல், பொதுவியல்; வரிக்கூத்து, வரிச்சாந்திக்கூத்து; சாந்திக்கூத்து, விநோதக்கூத்து; ஆரியம், தமிழ்; இயல்புக்கூத்து, தேசிக்கூத்தெனப் பலவகைய. இவை விரிந்தநூல்களிற் காண்க.

கஉ. ஈண்டு இருவகைக் கூத்தாவன: சாந்தியும், விநோதமும். என்னை? "அவை தாம், சாந்திக் கூத்தும் விநோதக் கூத்துமென், றாய்ந்தற வகுத்தன னகத்தியன் றானே" என்றாராகலின்.

"சாந்திக் கூத்தே தலைவ னவிநய, மேந்திய நின்றாடிய வீரிரு நடமவை, சொக்க மெய்யே யவிநய நாடக, மென்றிப் பாற்படூஉ மென்மனார் புலவர்" என்பதனால் நாயகன் சாந்தமாக ஆடியகூத்துச் சாந்திக்கூத்தெனப்படும். இவற்றுள்,—

சொக்கமென்பது சுத்தநிருத்தம். அது நூற்றெட்டுக்கரணமுடைத்து.

மெய்க்கூத்தாவது தேசி வடுகு சிங்களமென மூவகைப்படும். இவை மெய்த்தொழிற்கூத்தாகலின், மெய்க்கூத்தாயின. இவை அகச்சுவைபற்றியெடுத்தலின், அகமார்க்கமென நிகழ்த்தப்படும். அகச்சுவையாவன: இராசதம், தாமதம், சாத்துவிகமென்பன. "குணத்தின் வழியதகக் கூத்தெனப் படுமே" என்றார் குணநூலுடையார். "அகத்தெழு சுவையா னகமெனப் படுமே" என்றார் சயந்த நூலுடையாருமெனக்கொள்க.

அவிநயக்கூத்தாவது * நிருத்தக்கை தழுவாது பாட்டினதுபொருளுக்குக் கைகாட்டி வல்லபஞ்செய்யும் பலவகைக்கூத்து.

நாடகம் - கதைதழுவிவருங் கூத்து.

விநோதக்கூத்தாவது குரவை, கலிநடம், குடக்கூத்து, கரணம், நோக்கு, தோற்பாவை என்பர். இவற்றுள்,—

குரவையென்பது காமமும் வென்றியும் பொருளாகக் குரவைச்செய்யுள் பாட்டாக எழுவரேனும் எண்மரேனும் ஒன்பதின்மரேனும் கைபிணைந்தாடுவது; "குரவை யென்பது கூறுங் காலைச், செய்தோர் செய்த காமமும் விறலு, மெய்தக் கூறு மியல்பிற் றென்ப" என்றாராகலின். குரவை வரிக்கூத்தின் ஒருறுப்பு; அவை வந்தவழிக் கண்டுகொள்க.

கலிநடமென்பது கழாய்க்கூத்து.

குடக்கூத்தென்பது மேற் பதினோராடலுட் காட்டப்படும்.

கரணமாவது படிந்தவாடல்.

நோக்கென்பது பாரமும் நுண்மையும் மாயமுமுதலாயினவற்றை உடையது.

தோற்பாவையென்பது தோலாற் பாவைசெய்து ஆட்டுவிப்பது.

இன்னும் ஙகைத்திறச்சுவை யென்பதனோடு ஏழென்பாருமுளர். அஃதாவது விதூடகக்கூத்து. இதனை வசைக்கூத்தென்பாருமுளர். வசை-வேத்தியல், பொதுவியலென இரண்டுவகைப்படும்; அவைமுந்துநூல்களிற் கண்டுகொள்க. வெறியாட்டுமுதலாகத் தெய்வமேறியாடுகின்ற அத்திறக்கூத்துக்களுங்கூட்டி ஏழென்பாருமுளர். என்னை? "எழுவகைக் கூத்து மிழிகுலத் தோர்ஙா, யாட வகுத்தன னகத்தியன் றானே" என்றாராகலின்.

* நிருத்தக்கை - ௱௦. அவைபின்னர்க் காட்டப்படும்.

௧௨. இவற்றினிலக்கணங்களாவன: * "அறுவகை நிலையும் † ஐவகைப் பாதமும், ‡ ஈரெண் வகைய வங்கக் கிரியையும், § வருத்தனை நான்கு || நிருத்தக்கை முப்பது, மத்தகு தொழில வாகு மென்ப." இவை விரிப்பிற்பெருகும்.

௧௩. பல்வகைக்கூத்தாவன; வென்றிக்கூத்தும், வசைக்கூத்தும், விநோதக் கூத்துமுதலியன; என்னை? "பல்வகை யென்பது பகருங் காலை, வென்றி வசையே விநோத மாகும்" என்றாராகலின்.

"அவற்றுள், மாற்றா னொடுக்கமு மன்ன னுயர்ச்சியு, மேற்படக் கூறும் வென்றிக் கூத்தே."

"பல்வகை யுருவமும் பழித்தக் காட்ட, வல்ல தாதல் வசையெனப் படுமே."

¶ "எனவிவை தாளத்தி னியல்பின வாகும்."

"விநோதக் கூத்து வேறுபா டுடைத்து, வென்றி விநோதக் கூத்தென விளம்புவர்." இதன்கருத்து: கொடித்தேர்வேந்தரும் குறுநிலமன்னருமுதலாக உடையோர் பகைவென்றிருந்தவிடத்து விநோதங்காணுங் கூத்தென்பதாம்.

௧௩. விலக்கினிற்புணர்த்து - விலக்குறுப்பினோடு பொருந்துவித்து; இன் - சாரியை; மூன்றனுருபு ஐந்தனோடுமயங்கிற்று; வென்றிக்கூத்துமுதலாகிய பலவகைப்பட்ட புறநடங்களையும் வேந்தவிலக்குப் படைவிலக்கு ஊர்விலக்கென்று சொல்லப்பட்ட விலக்குக்களாகிய பாட்டுக்களுக்கு உறுப்பாய்வருவனவற்றுடனே பொருந்தப் புணர்த்தி. பொருந்தப் புணர்த்தல் - ஈண்டுப் பாட்டுக்களுக்கு வரவுவகுத்தல்.

விலக்குறுப்பாவன: பதினான்குவகைப்படும்; அவை பொருள், யோனி, விரு

* அறுவகைநிலையாவன: ௧. வைணவம், ௨. சமநிலை, ௩. வைசாகம், ௪. மண்டலம், ௫. ஆலீடம், ௬. பிரத்தியாலீடமென்பன.

† ஐவகைப்பாதமாவன: ௧ சமநிலை, ௨. உற்கடிதம், ௩. சஞ்சாரம், ௪. காஞ்சிதம், ௫. குஞ்சிதமென்பன.

‡ அங்கக்கிரியைபதினாறவன: ௧. சரிகை, ௨. புரிகை, ௩. சமகலி, ௪. கிரிகை, ௫. ஊர்த்துவகலிகை, ௬ பிருட்டகம், ௭. அர்த்தபிருட்டகம், ௮. சுவத்திகம், ௯. உல்லோலம், ௧௦. குர்த்தனம், ௧௧. வெட்டனம், ௧௨. உபவெட்டனம், ௧௩. தானபதப்பிராயவிருத்தம், ௧௪. உக்ஷேபணம், ௧௫. அவக்ஷேபணம, ௧௬. நிகுஞ்சனமென்பன.

§ வருத்தனைநான்காவன: ௧. அபவேட்டிதம், ௨. உபவேட்டிதம், ௩. வியாவர்த்திதம், ௪. பராவர்த்திதமென்பன.

|| நிருத்தக்கைமுப்பதாவன: ௧. சதுரச்சிரம், ௨. உத்துவீதம், ௩. தலமுகம், ௪. சுவத்திகம், ௫. விப்பிரகீர்ணம், ௬. அருத்தரேசிதம், ௭. அராளகடகாமுகம், ௮. ஆவித்தவத்திரம், ௯. சூசீமுகம், ௧௦. ரேசிதம், ௧௧. உத்தானவஞ்சிதம், ௧௨. பல்லவம், ௧௩. நிதம்பம், ௧௪. கசதந்தம், ௧௫. இலதை, ௧௬. கரிச்கை, ௧௭. பக்கவஞ்சிதம், ௧௮. பக்கப்பிரதியோகம், ௧௯. கருடபக்கம், ௨௦. தண்டபக்கம், ௨௧. ஊர்த்துவமண்டலி, ௨௨. பக்கமண்டலி, ௨௩. உரோமண்டலி, ௨௪. உரப்பார்சுவார்த்தமண்டலி, ௨௫. முட்டிகச்சுவத்திகம், ௨௬. நளினீபதுமகோசம், ௨௭. அலபதுமம், ௨௮. உற்பணம், ௨௯. இலளிதை, ௩௦. வலிதையென்பன. இவை, சுந்தாநந்தப்பிரகாசமென்னும் பழைய தமிழ்ப்பரதநூலிற் காணப்பட்டன.

¶ வென்றிக்கூத்தும் வசைக்கூத்தும் தாள இயல்புடையனவென்றபடி.

த்தி, சந்தி, சுவை, சாதி, குறிப்பு, சத்துவம், அவிநயம், சொல், சொல்வகை, வண்ணம், வரி, சேதமெனவிவை; என்னை? "விலக்குறுப் பென்பது விரிக்குங் காலைப், பொருளும் யோனியும் விருத்தியுஞ் சந்தியுஞ், சுவையுஞ் சாதியுங் குறிப்புஞ் சத்துவமு, மவிநயஞ் சொல்லே சொல்வகை வண்ணமும், வரியுஞ் சேதமு முளப்படத் தொகைஇ, யிசைய·வெண்ணி னீரே ழுறுப்பே" என்றாராகலின்.

அவற்றுள்,—பொருளாவது நான்குவகைப்படும்; என்னை? "அறம்பொரு ளின்பம் வீடென நான்குந், திறம்படு பொருளெனச் செப்பினர் புலவர்" என்றாராகலின். இவை நாடகத்திற் பிரிந்தும் கூடியும் வருங்காற் பெயர்வேறுபடும். அவை நாடகம், பிரகரணப்பிரகரணம், பிரகரணம், அங்கமெனப்பெயராம். என்னை? "அவைதாம், நாடகம் பிரகர ணப்பிர கரண, மாடிய பிரகரண மங்க மென்றே, யோதுப நன்னூ லுணர்ந்திசி னோரே" என்றார் மதிவாணனாரும். "அறமுத னான்கு மொன்பான் சுவையு, முறைமுன் னாடக முன்னோ ருரைக்கும்" எனவும், "அறம்பொரு ளின்ப மரசா சாதி" எனவும், "அறம்பொருள் வாணிகர் சாதியென் றுரைப" எனவும், "அறமேற் சூத்திர ரங்க மாகும்" எனவும் சொன்னா செயிற்றியனார். இவை நான்கும் நாடகமென்றறிக.

யோனி நான்குவகைப்படும். உள்ளோன் தலைவனாக உள்ளதோர் பொருண்மேற் செய்தலும், இல்லோன் றலைவனாக உள்ளதோர் பொருண்மேற் செய்தலும், உள்ளோன் தலைவனாக இல்லதோர் பொருண்மேற் செய்தலும், இல்லோன் தலைவனாக இல்லதோர் பொருண்மேற் செய்தலு மெனவிவை; என்னை? "உள்ளோற் குள்ளது மில்லோற் குள்ளது, முள்ளோற் கில்லது மில்லோற் கில்லது, மென்னா துரைத்தல் யோனி யாகும்" என்றாராகலின்.

விருத்தி நான்குவகைப்படும். அவை சாத்துவதி, ஆரபடி, கைசிகி, பாரதியெனவிவை. இவற்றுள்,—சாத்துவதியாவது அறம்பொருளாகத் தெய்வமானிடர் தலைவராக வருவது. ஆரபடியாவது பொருள்பொருளாக வீரராகிய மானிடர் தலைவராக வருவது. கைசிகியாவது காமம் பொருளாகக காமுகராகியமக்கள் தலைவராகவருவது. பாரதியாவது கூத்தன் தலைவனாக நட்டன் நடிப் பொருளாகக் காட்டியும் உரைத்தும் வருவது. இச்சொல்லப்பட்ட நால்வகைவிருத்தியுள்ளும் பாரதிவிருத்தி, அந்த மூன்றுவிருத்தியும்போலப் பிறிதின்றலைவர் பிறிதுபொருள்பற்றி விருத்திகூறாது பொருளாலே விருத்திகூறுமெனக்கொள்க

சந்தி ஐந்துவகைப்படும். அவை முகம், பிரதிமுகம், கருப்பம், விளைவு, துய்த்தலெனவிவை. இவற்றுள் முகமாவது * எழுவகைப்பட்ட உழவினாற சமைக்கப்பட்ட பூழியுளிட்டவித்துப் பருவஞ்செய்து முளைத்து முடிவதுபோல்வது. பிரதிமுகமாவது அங்ஙனம் முளைத்தல் முதலாய் இலைதோன்றி நாற்றாய்முடிவதுபோலவது. கருப்பமாவது அந்நாற்று முதலாய்க் கருவிருந்து பெருகித் தன்னுட் பொருள்பொதிந்து கருப்பமுற்றிநிற்பதுபோல்வது. விளைவாவது கருப்பமுதலாய் விரிந்து கதிர்திரண்டிட்டுக் காய்தாழ்ந்து முற்றி விளைந்துமுடிவதுபோல்வது. துய்த்தலாவது விளையப்பட்ட பொருளை அறுத்துப் போரிட்டுக் கடாவிட்டுத் தூற்றிப் பொலிசெய்து கொண்டுபோய் உண்டு மகிழ்வதுபோல்வது. இவை ஐந்துசந்தியும் நாட்டியக்கட்டுரை.

சுவை ஒன்பதுவகைப்படும். அவை வீரச்சுவையவிநயம், பயச்சுவையவிநயம்,

---

* ஆரம்பத்திற்கு ஏழங்கமுண்டென்று வடநூலாரிற் சிலர் கூறுவராதலின், அதற்குப்பொருந்த எழுவகைப்பட்ட உழவென்றார்.

இழிப்புச்சுவையவிநயம், அற்புதச்சுவையவிநயம், இன்பச்சுவையவிநயம், அவலச்சுவையவிநயம், நகைச்சுவையவிநயம், நடுவுநிலைச்சுவையவிநயம், உருத்திரச்சுவையவிநயம். இவற்றுள்,—

“வீரச்சுவை யவிநயம் விளம்புங் காலை, முரிந்த புருவமுஞ் சிவந்த கண்ணும், பிடித்த வாளுங் கடித்த வெயிறு, மடித்த வுதடுஞ் சுருட்டிய நுதலுந், *திண்ணென வுற்ற சொல்லும் பகைவரை, யெள்ளல் செல்லா விகழ்ச்சியும் பிறவு, நண்ணு மென்ப நன்குணர்ந் தோரே.”

“அச்ச வவிநய மாயுங் காலை, யொடுங்கிய வுடம்பு நடுங்கிய நிலையு, மலங்கிய கண்ணுங் கலங்கிய வுள்ளமுங், கரந்துவர லுடைமையுங் கையெதிர் மறுத்தலும், பரந்த நோக்கமு மிசைபண் பினவே.”

“இழிப்பி னவிநய மியம்புங் காலை, யொடுங்கிய கண்ணு மெயிறுபுறம் போதலு, மொடுங்கிய முகமு முகுட்டுக் காலுஞ், சோர்ந்த யாக்கையுஞ் சொன்னிரம் பாமையு, நேர்ந்தன வென்ப நெறியறிந் தோரே.”

“அற்புத வவிநய மறிவரக் கிளப்பிற், சொற்சோர் வுடையது சோர்ந்த கையது, மெய்ம்மயிர் குளிர்ப்பது வியத்தக வுடைய, தெய்திய திமைத்தலும் விழித்தலு மிகவாதென், றையமில் புலவ ரறைந்தன ரென்ப.”

“காம வவிநயங் கருதுங் காலைத், தூவுள் ளுறுத்த வடிவுந் தொழிலுங், காரிகை கலந்த கடைக்க ணோக்குங் கவின்பெறு, மூரன் முறுவல் சிறுநிலா வரும்பலு, மலர்ந்த முகனு மிரந்தமென் கிளவியுங், கலந்தன பிறவுங் கடைப்பிடித் தனரே.”

“அவலத் தவிநய மறிவரக் கிளப்பிற், கவலையொடு புணர்ந்த கண்ணீர் மாரியும், வாடிய நீர்மையும் வருந்திய செலவும், பீடழி யிடும்பையும் பிதற்றிய சொல்லு, நிறைகை யழிதலு நீர்மையில் கிளவியும், பொறையின் றாகலும் புணர்த்தினர் புலவர்.”

“நகையி னவிநய நாட்டுங் காலை, மிகைபடு நகையது பிறர்நகை யுடையது, கோட்டிய முகத்தது .....,விட்டுமுரி புருவமொடு விலாவுறுப் புடையது, செய்வது பிறிதாய் வேறுசே திப்பதென், றையமில் புலவ ராய்ந்தன ரென்ப.”

“நாட்டுங் காலை நடுவுநிலை யவிநயங், கோட்பா டறியாக் கொள்கையு மாட்சியு, மறந்தரு நெஞ்சமு மாறிய விழியும், பிறழ்ந்த காட்சி நீங்கிய நிலையுங், குறிப்பின் றாகலுந் துணுக்க மில்லாத், தகைமிக வுடைமையுந் தண்ணென வுடைமையு, மனத்தற் கருமையு மன்பொடு புணர்தலுங், கலக்கமொடு புணர்ந்த நோக்குங் கதிப்பும், விலக்கா ரென்ப வேண்டுமொழிப் புலவர்.” * உருத்திரச்சுவை யவிநயம் †

‡ அஃதாவது விரலென்பது; சத்துவமென்பாருமுளர். அச்சத்துவந்தான் § பத்

* உருத்திரச்சுவைக்குத் தாம் ஒருபிரதியிலும் இல்லை. அச்சுவையின்மெய்ப்பாடுகளை, “கைபிசையா வாய்மடியாக் கண்சிவவா வெய்துயிரா, மெய்குலையா வேரா வெகுண்டெழுந்தான்” என்பதனாலுணர்க.

† நிறுத்தமுறையே சுவையின்பின்னர் வகைகாட்டுதற்குரிய சாதி பத்துவகைப்படும். அவை, நாடகம், பிரகரணம், பாணம், பிரகஸநம், டிமம், வியாயோகம், சமவாகாரம், வீதி, அங்கம், ஈஹாமிருகமெனவிவை.

‡ அஃதென்றது அச்சுவையுணர்வு உள்ளத்து நிகழ்ந்தவழித்தோன்றும் மேற்கூறிய உடம்பின்வேறுபாட்டை.

§ இத்தொகையும் இதன்வகையும் வடநூல்விதிக்குமாறாக உள்ளன.

துவகைப்படும். என்னை? மெய்ம்மயிர்சிலிர்த்தல், கண்ணீர்வார்தல், நடுக்கமடுத்தல், வியர்த்தல், தேற்றம், களித்தல், விழித்தல், வெதும்பல், சாக்காடு, குரற்சிதைவு எனவிவை. சத்துவமாவது,குறிப்புவழியதே. ஆஃது, சுத்தச்சுவையாகின்ற ஒன்பதினும் பாவிக்கும் அத்துணையே மெய்ம்மைத்தாய் வருவதெனக்கொள்க. என்னை? வேம்பென்று காட்டப்புக்கால் அவ்வேம்பின் இரதங்காட்டாதே அதுதான் இறைவனுக்கு மெய்யின்கண்வருவது. கருணையென்றுற் பாவித்துக்காட்டுமதன்றி மெய்யாகக் கண்ணீர்வந்தழுவது. அல்லாத சுவைகளும் வந்த சத்துவமும. இப்படி ஒட்டிக்கண்டுகொள்க. அவைதாம் அச்சுவைகளின் வந்தாற் றோற்றமுடம்பில்; உடம்பின் மிகத்தோற்றும் முகத்து; முகத்தின்மிகத்தோற்றும் கண்ணில்; கண்ணின்மிகத்தோற்றும் கண்ணின்கடையகத்தென்றவாறு.

குறிப்பு - சுவையதன்கட்டோன்றுவது.

சத்துவம் - அக்குறிப்பின்கண் நிகழ்கின்ற நிகழ்ச்சி.

அவிநயமென்பது பாவகம். அஃது இருபத்து நான்குவகைத்து. வரலாறு: வெகுண்டோனவிநயம், ஐயமுற்றோனவிநயம், சோம்பினோனவிநயம், களித்தோனவிநயம், உவந்தோனவிநயம், அழுக்காறுடையோனவிநயம், இன்பமுற்றோனவிநயம், தெய்வமுற்றோனவிநயம், ஞஞ்ஞையுற்றோனவிநயம், உடன்பட்டோனவிநயம், உறங்கினோனவிநயம், துயிலுணர்ந்தோனவிநயம், செத்தோனவிநயம், மழைபெய்யப்பட்டோனவிநயம், பனித்தலைப்பட்டோனவிநயம், வெயிற்றலைப்பட்டோனவிநயம், நாணமுற்றோனவிநயம், வருத்தமுற்றோனவிநயம், கண்ணோவுற்றோனவிநயம், தலைநோவுற்றோனவிநயம், அழற்றிறம்பட்டோனவிநயம், சீதமுற்றோனவிநயம், வெப்பமுற்றோனவிநயம், நஞ்சுண்டோனவிநயமெனவிவை இவற்றுள்,—

"வெகுண்டோ னவிநயம் விளம்புங்காலை, மடித்த வாயு மலர்ந்த மார்புந், துடித்த புருவமுஞ் சுட்டிய விரலுங், கன்றின வுள்ளமொடு கைபுடைத் திடுதலு, மன்னர் நோக்கிமோ டாய்ந்தனர் கொளலே."

"பொய்யில் காட்சிப் புலவோ ராய்ந்த, வைய முற்றோ னவிநய மொழிப்பின், வாடிய வுறுப்பு மயங்கிய நோக்கமும், பீடழி புலனும் பேசாதிருத்தலும், பிறழ்ந்த செய்கையும் வான்றிசை நோக்கலு, மறைந்தனர் பிறவு மறிந்திசி னோரே."

"மடியி னவிநயம் வகுக்குங் காலை, நொடியொடு பலகொட் டாவிமிக வுடைமையு, மூரி நிமிர்த்தலு முனிவொடு புணர்தலுங், காரண மின்றி யாழ்ந்துமடிந் திருத்தலும், பிணியு மின்றிச் சோர்ந்த செலவோ, டணிதரு புலவ ராய்ந்தன ரென்ப."

"களித்தோ னவிநயங் கழறுங் காலை, யொளித்தவை யொளியா னுரைத்தவின்மையுங், கவிழ்ந்துஞ் சோர்ந்துந் தாழ்ந்துந் தளர்ந்தும், வீழ்ந்த சொல்லொடு மிழற்றிச் சாய்தலுங், களிகைக் கவர்ந்த கடைக்கணோக் குடைமையும், பேரிசை யாளர் பேணினர் கொளலே."

"உவந்தோ னவிநய முரைக்குங் காலை, நிவந்தினி தாகிய கண்மல ருடைமையு, மினிதி னியன்ற வுள்ள முடைமையு, முனிவி னகன்ற முறுவனகை யுடைமையு, மிருக்கையுஞ் சேறலுங் கானமும் பிறவு, மொருங்குட னமைந்த குறிப்பிற் றன்றே."

"அழுக்கா றுடையோ னவிநய முரைப்பி, னிழுக்கொடு புணர்ந்த விசைபொருளுடைமையுங், கூம்பிய வாயுங் கோடிய வுரையு, மோம்பாது விதிர்க்குங் கைவகை

யுடைமையு, மாரணங் காகிய வெகுளி யுடைமையுங், காரண மின்றி மெலிந்தமுக முடைமையு, மெலிவொடு புணர்ந்த விடும்பையு மேவரப், பொலியு மென்ப பொருந்துமொழிப் புலவர்."

"இன்பமொடு புணர்ந்தோ னவிநய மியம்பிற், றுன்ப நீங்கித் துவர்த்த யாக்கையுந், தயங்கித் தாழ்ந்த பெருமகிழ் வுடைமையு, மயங்கி வந்த செலவுநனி யுடைமையு, மழகுள் ளூறுத்த சொற்பொலி வுடைமையு, மெழிலொடு புணர்ந்த நறுமல ருடைமையுங், கலங்கள்சேர்ந் தகன்ற தோளுமார் புடைமையு, நலங்கெழு புலவர் நாடினரென்ப."

"தெய்வ முற்றோ னவிநயஞ் செப்பிற், கைவிட் டெறிந்த கலக்க முடைமையு, மடித்தெயிறு கௌவிய வாய்த்தொழி லுடைமையுந், துடித்த புருவமுந் துளங்கிய நிலையுஞ், செய்ய முகமுஞ் சேர்ந்த செருக்கு, மெய்து மென்ப வியல்புணர்ந் தோரே."

"ஞஞ்ஞை யுற்றோ னவிநய நாடிற், பன்மென் றிறுகிய நாவழி வுடைமையு, நுரைசேர்ந்து கூம்பும் வாயு நோக்கினர்க், குரைப்பான் போல வுணர்வி லாமையும், விழிப்போன் போல விழியா திருத்தலும், விழுத்தக வுடைமையு மொழுக்கி லாமையும், வயங்கிய திருமுக மழுங்கலும் பிறவு, மேவிய தென்ப விளங்குமொழிப் புலவர்." இஃது ஏழுறுமாக்களவிநயம்.

"சிந்தையுடம் பட்டோ னவிநயந் தெரியின், முந்தை யாயினு முணரா நிலைமையும், பிடித்த கைமே லடைத்த கவினு, முடித்த லுறாத கரும நிலைமையுஞ், சொல்லுவது யாது முணரா நிலைமையும், புல்லு மென்ப பொருந்துமொழிப் புலவர்."

"துஞ்சா நின்றோ னவிநயந் துணியி, னெஞ்சுத லின்றி யிருபுடை மருங்கு, மலர்ந்துங் கவிழ்ந்தும் வருபடை யியற்றியு, மலர்ந்துயிர்ப் புடைய வாற்றலு மாகும்."

"இன்றுயி லுணர்ந்தோ னவிநய மியம்பி, லொன்றிய குறுங்கொட் டாவியு முயிர்ப்புந், தூங்கிய முகமுந் துளங்கிய வுடம்பு, மோங்கிய திரிபு மொழிந்தவுங் கொளலே."

"செத்தோ னவிநயஞ் செப்புங் காலை, யத்தக வச்சமு மழிப்பு மாக்கலுங், கடித்த நினைப்பலின் வெடித்துப் பொடித்துப், போந்ததுணி வுடைமையும் வலித்த வுறுப்பு, மெலிந்த வகடு மென்மைமிக வுடைமையும், வெண்மணி தோன்றக் கருமணி கரத்தலு, முண்மையிற் புலவ ருணர்ந்த வாறே."

"மழைபெய்யப் பட்டோ னவிநயம் வகுக்கி, னிழிதக வுடைய வியல்புகனி யுடைமையு, மெய்கூர் நடுக்கமும் பிணித்தலும் படாத்தை, மெய்பூண் டொடுக்கிய முகத்தொடு புணர்தலு, மொளிப்படு மனனி லுலறிய கண்ணும், விளியினுந் துளியினு மடிந்தசெவி யுடைமையுங், கொடுகிவிட் டெறிந்த குளிர்மிக வுடைமையும், நடுங்கு பல்லொலி யுடைமையு முடியக, கனவுகண் டாற்ற னெழுதலு முண்டே."

"பனித்தலைப் பட்டோ னவிநயம் பகரி, னடுக்க முடைமையு நகைபடு நிலைமையுஞ், சொற்றளர்ந் திசைத்தலு முற்றமி லவதியும், போர்வை விழைதலும் புந்திநோ வுடைமையும், நீரும் விழியுஞ் சேறு முனிதலு, மின்னவை பிறவு மிசைந்தனர் கொளலே."

"உச்சிப் பொழுதின் வந்தோ னவிநய, மெச்ச மின்றி யியம்புங் காலைச், சொரியா நின்ற பெருந்துய ருழந்து, தெரியாநின்ற வுடம்பெரி யென்னச், சிவந்த கண்ணு மயர்ந்த நோக்கமும், பயந்த தென்ப பண்புணர்ந் தோரே."

"நாண முற்றோ னவிநய நாடி, னிறைஞ்சிய தலையு மறைந்த செய்கையும், வாடிய முகமுங் கோடிய வுடம்புங், கெட்ட வொளியுங் கீழ்க்க ணோக்கமு, மொட்டின ரென்ப வுணர்ந்திசி னோரே."

"வருத்த முற்றோ னவிநயம் வகுப்பிற், பொருத்த மில்லாப் புன்க ணுடைமையுஞ், சோர்ந்த யாக்கையுஞ் சோர்ந்த முடியுங், கூர்ந்த வியர்வுங் குறும்பல் லுயாவும், வற்றிய வாயும் வணங்கிய வுறுப்பு, முற்ற தென்ப வுணர்ந்திசி னோரே."

"கண்ணோ வுற்றோ னவிநயங் காட்டி, னண்ணிய கண்ணீர்த் துளிவிரற் றெறித்தலும், வளைந்த புருவத் தொடு வாடிய முகமும், வெள்ளிடை நோக்கின் விழிதரு மச்சமுந், தெள்ளிதிற் புலவர் தெளிந்தனர் கொளலே."

"தலைநோ வுற்றோ னவிநயஞ் சாற்றி, னிலைமை யின்றித் தலையாட் டுடைமையுங், கோடிய விருக்கையுந் தளர்ந்த வேரொடு, பொரவிர லிடுக்கிய நுதலும் வருந்தி, யொடுங்கிய கண்ணொடு பிறவுந், திருந்து மென்ப செந்நெறிப் புலவர்."

"அழற்றிறம் பட்டோ னவிநய முரைப்பி, னிழற்றிறம் வேண்டு நெறிமையின் விருப்பு, மழலும் வெயிலுஞ் சுடரு மஞ்சலு, நிழலு நீருஞ் சேறு முவத்தலும், பனிநீ ருவப்பும் பாதிரித் தொடையலு, நுனிவிர லீர மருநெறி யாக்கலும், புக்க துன்பொடு புலர்ந்த யாக்கையுந், தொக்க தென்ப துணிவறிந் தோரே."

"சீத முற்றோ னவிநயஞ் செப்பி, னோதிய பருவர லுள்ளமோ டழத்தலு, மீர மாகிய போர்வை யுறுத்தலு, மார வெயிலுழந் தழலும் வேண்டலு, முரசியு மூன்று முயிர்த்து முரைத்தலுந், தக்கன பிறவுஞ் சாற்றினர் புலவர்."

"வெப்பி னவிநயம் விரிக்குங் காலைத், தப்பில் கடைப்பிடித் தன்மையுந் தாகமு, மெரியி னன்ன வெம்மையோ டியைவும், வெருவரு மியக்கமும் வெம்பிய விழியும், நீருண் வேட்கையு நிரம்பா வலியு, மோருங் காலை யுணர்ந்தனர் கொளலே."

"கொஞ்சிய மொழியிற் கூரெயிறு மடித்தலும், பஞ்சியின் வாயிற் பனிநுரை கூம்பலுந், தஞ்ச மாந்தர் தம்முக நோக்கியோ, ரின்சொ லியம்புவான் போலியம் பாமையும், நஞ்சுண் டோன்ற னவிநய மென்ப."

"சொல்லிய வன்றியும் வருவன வுளவெனிற், புல்லுவழிச் சேர்த்திப் பொருந்து வழிப் புணர்ப்ப." எனவரும்।

இனி, சொல்வருமாறு: அது மூன்றுவகைப்படும்; உட்சொல், புறச்சொல், ஆகாயச்சொல்லென. அவை நெஞ்சொடுகூறல், கேட்போர்க்குரைத்தல், தானேகூறல். என்னை? "நெஞ்சொடு கூறல் கேட்போர்க் குரைத்தல், தஞ்சம் வரவறிவு தானே கூறலென், றம்மூன் றென்ப செம்மைச் சொல்லே" என்றாராகலின்.

சொல்வகை நான்குவகைப்படும்; சுண்ணம், சுரிதகம், வண்ணம், வரிதகமென. "சுண்ணம் நான்கடியான் வருவது. சுரிதகம் எட்டடியான்வருவது. வண்ணம் நானான்கடியான்வருவது. வரிதகம் முப்பத்திரண்டடியான் வருவது. என்னை? "சுண்ண நான்கடி சுரிதக மெட்டடி, வண்ண நானான்கு வரிதக மெண்ணான்கென், றெண்ணிய வடித்தொகை யெய்தவும் பெறுமே" என்றாராகலின்.

வண்ணம் ஒருவகையான் மூன்றுவகைப்படும்; பெருவண்ணம், இடைவண்ணம், வனப்புவண்ணமென. அவற்றுட்பெருவண்ணம் ஆறாய்வரும். இடைவண்ணம் இருபத்தொன்றாய் வரும். வனப்புவண்ணம் * நாற்பத்தொன்றாய்வரும்.

* நாற்பத்தொன்பதென்றும் பிரதிபேதமுண்டு.

வரி எட்டுவகைப்படும்; கண்கூடுவரி, கானல்வரி, உள்வரி, புறவரி, கிளர்வரி, தேர்ச்சிவரி, காட்சிவரி, எடுத்துக்கோள்வரியென. என்னை? "கண்கூடு கானல்வரி யுள்வரி புறவரி, கிளர்வரி யைந்தோ டொன்ற வுரைப்பிற், காட்சி தேர்ச்சி யெடுத்துக் கோளென, மாட்சியின் வருஉ மெண்வகை தெரிந்தே" என்றாராகலின். அவற்றின் பகுதியெல்லாம் கானல்வரியிற் கூறுதும்.

இவ்வரியென்பதனைப் பல்வரிக்கூத்தென்பாருமுளர்; என்னை? "சிந்துப் பிழுக்கை யுடன்சந்தி யோர்முலை, கொந்தி கவுசி குடப்பிழுக்கை, கந்தன்பாட் - டாலங் காட் டாண்டி பருமண னெல்லிச்சி, சூலந் தருநட்டந் தூண்டிலுடன் - சீலமிகு, மாண்டி யமண்புனவே டாளத்தி கோப்பாளி, பாண்டிப் பிழுக்கையுடன் பாம்பாட்டி - மீண்ட, கவ்வுட் சடைவீர மாகேசங் காமன், மகிழ்சிந்து வாமன ரூப - விகடநெடும், பத்திரங் கொற்றி பலகைவாள் பப்பரப்பெண், டத்தசம் பாரத் தகுணிச்சங் - கத்து, முறையீண் டிருஞ்சித்து முண்டித மன்னப், பறைபண் டிதன்புட்ப பாணமிறைபரவு, பத்தன் குரங்கையே பப்பறை காவதன், பித்தனொடு மாணி பெரும்பிழுக்கை - யெத்துறையு, மேத்திவருங் கட்களி யாண்டு விளையாட்டுக், கோத்த பறைக்குடும்பு தோற்கூத்து - மூத்த, கிழவன் கிழவியே கிள்ளுப் பிறாண்டி, யழகுடைய பள்ளிவிக்கட் டாங்கந் - திகழ்செமபொ, னமமனை பந்து கழங்காட லாலிக்கும், வினணகக் காளி விறற்கொந்தி - யல்லாத, வாய்ந்த தனிவண்டு வாரிச்சி பிச்சியுடன், சாந்த முடைய சடாதாரி - யேய்ந்தவிடை, தக்கபிடார் கீர்த்தந் தளிப்பாட்டுச் சாதுரங்கந், தொக்க தொழில் புனைந்த சோணண்டு - மிக்க, மலையாளி வேதாளி வாணி குதிரை, சிலையாடு வேடு சிவப்புத் - தலையிற், றிருவிளக்குப் பிச்சி திருக்குன் றயிற்பெண், டிருண்முகத்துப் பேதை யிருளன் - பொருமுகத்துப், பல்லாங் குழியே பகடி பகவதியா, னல்லாதந் தோள்வீச்சு நரசாழ - வல்லாத, வுந்தி யவலிடி யூராளி யோகினிச்சி, குந்திவரும் பாரன் குணலைக்கூத் - தந்தியம்போ, தாடுங் களிகொய்யு முள்ளிப்பூ வையனுக்குப், பாடும்பாட் டாடும் படுபள்ளி - நாடறியுங், கும்பிடு நாட்டங் குணாட்டங் குணலையே, தஞ்சாத சும்மைப்பூச் சோனக - மஞ்சரி, யேற்ற வுழைமை பறைவிமுத லென்றெண்ணிக், கோத்தவரிக் கூத்தின் குலம்" என்றாராகலின்.

சேதம்: ஆரியம் தமிழென இருவகைக்கூத்து; என்னை? "ஆரியந் தமிழெனுஞ் சீர்கட மிரண்டினு, மாதிக் கதையை யவற்றிற் கொப்பச், சேதித் திடுவது சேதமென் றாகும்" என்றாராகலின்.

இனி விலக்குறுப்பென்ற சொற்குப் பொருள் யாதோவெனின்,—தலைவன் செலுத்துகின்ற கதையை விலக்கியும், அக்கதையை நடாத்தியும், முன்புசெய்த கதைக்கே உறுப்பாகுவதென்க

௧௪-௧௫. பதினோ ராடலும் பாட்டுங் கொட்டும், விதிமாண் கொள்கையின் விளங்க வறிந்தாங்கென்பது அல்லியமுதல கொடுகொட்டி யீறாய்க்கிடந்தனவும், அவற்றுக்குரிய பாட்டுக்களும், அக்கூத்துக்களின் விகற்பங்களுக்கெல்லாம் அமைந்த வாச்சியக்கூறுகளும், மாட்சிமைப்பட்ட நூல்களில்விதித்த முறைமையாலே விளங்க வறிந்தென்க.

௧௪. பதினோராடலாவன: "கடையூழியி ராணிமர்க் காலியந்தை கந்தன், குடை துடிமா லல்லியமற் கும்பஞ்-சுடர்விழியாற், பட்டமதன் பேடுதிருப் பாவையரன் பாண்டரங்கங், கொட்டியிவை காண்பதினோர் கூத்து." இவை தெய்வவிருத்தி.

இவை இரண்டுகூறுபடும். என்னை? "அல்லியங் கொட்டி குடைகுடம் பாண் டரங்க, மல்லுட னின்றுட லாறு." "துடிகடையம் பேடு மரக்காலே பாவை, வடிவு டன் வீழ்ந்தாட லைந்து." இவை அசுரரைக்கொல்ல அமரராடின.

"அல்லிய மாயவ னாடிற் றதற்குறுப்புச், சொல்லுப வாறு மெனல்."

"கொட்டி கொடுவிடையோ னாடிற் றதற்குறுப், பொட்டிய நான்கா மெனல்."

"அறுமுகத்தோ னாடல் குடைமற் றதற்குப், பெறுமுறுப்பு நான்கா மெனல்."

"குடத்தாடல் குன்றெடுத்தோ னாடலதனுக், கடைக்குப வைந்துறுப் பாய்ந்து."

"பாண்டரங்க முக்கண னாடிற் றதற்குறுப், பாய்ந்தன வாறு மெனல்."

"நெடியவ னாடிற்று மல்லாடன் மல்லிற், கொடியா வுறுப்போரைந் தாம்."

* "துடியாடல் வேன்முருக னாடலதனுக், கொடியா வுறுப்போரைந் தாம்."

"கடைய மயிராணி யாடிற் றதனுக், கடைய வுறுப்புக்க ளாறு."

"காமன தாடல்பே டாட லதற்குறுப்பு, வாய்மையி னாராயி னான்கு."

"மாயவ ளாடன் மரக்கா லதற்குறுப்பு, நாமவகை யிற்சொலுங்கா லைந்து."

"பாவை திருமக ளாடிற் றதற்குறுப், போவாம லொன்றுடனே யொன்று."

"புரமெரித்தல், சூர்மார் துளைபடுத்தல், கஞ்ச, னுரனெரித்தல், வாணனை வாளாய்த்தல், - பெரிய, வரன்முத லாகவே லன்முதன் மாயோ, னமர்முத லாடிய வாறு" எனக் கண்டுகொள்க.

கச. பாட்டுமென்பது அகநாடகங்களுக்கும் புறநாடகங்களுக்கும் உரிய உருக் களுமென்க.

அகநாடகங்களுக்குரிய உருவாவன: கந்தமுதலாகப் பிரபந்தவுருவீறாக இருபத் தெட்டும். இவற்றுள், கந்தமென்பது அடிவரையறையுடைத்தாய் ஒருதாளத்தாற் புண ர்ப்பது. பிரபந்தமென்பது அடிவரையறையின்றிப் பலதாளத்தாற் புணர்ப்பது.

புறநாடகங்களுக்குரிய உருவாவன: தேவபாணிமுதலாக அரங்கொழிசெய்யுளீ றாகச் செந்துறைவிகற்பங்களெல்லாமென்க.

கச. கொட்டுமென்பது கூத்துவிகற்பங்களுக்கமைந்த வாச்சியக்கூறுகளுமென் றவாறு.

அவை கீதாங்கம், நிருத்தாங்கம், உபயாங்கமென்பன. அவற்றுள் கீதாங்கம் கீ த்துக்குவாசிப்பது; நிருத்தாங்கம் நிருத்தத்திற்கு வாசிப்பது, உபயாங்கம் இரண்டிற் கும் வாசிப்பது.

கரு. விதிமாண் கொள்கையின் விளங்க வறிந்தென்பது அவற்றை நூல்களி விதித்தமுறையே விளங்கவறிந்தென்க. ஆங்கு - அசைநிலை.

கசு. ஆடலும் முற்கூறிய அகக்கூத்தினும் புறக்கூத்தினுமுள்ள ஆடலுமெ ன்றவாறு.

---

* ...... னங்கை யெழுவரதாடலெனவும்பாடம்.

கீற்று கடிசரிமுதலாகிய * தேசிக்குரிய கால்களும், சுற்றுதல் எறிதல் உடைத்தல் முதலாகிய † வடுகிற்குரிய கால்களும், உடற்றூக்குமுதலாகிய ‡ உடலவர்த்தனையும் அகக்கூத்துக்குரியன. ஈண்டுச் சிங்களமென்று வழங்கிவருகின்ற கூத்துச் சொல் விற்றிலராலெனின், "சிங்கள மிருவகை நிலையினு மெய்தும்" என்னுஞ்சூத்திரத்தான் இதற்கு வேறு கால்களின்மையிணென்க; பாலைக்கு நிலமில்லாததுபோல. §

புறக்கூத்துக்குரிய ஆடல்களாவன: பெருநடை, சாரியை, பிரமரி இவைமுதலாயினவும், பதினோராடலிற் கூத்துக்களுமாம்.

இவ்வகையால் அகக்கூத்துக்களுக்கும், புறக்கூத்துக்களுக்குமுரிய ஆடலுமென்றவாறு.

௧௬. பாடலுமென்பது பண்ணைன்முதலிய எட்டுவகைப்பட்ட குறிக்கோளும்; அவை "இன்பந் தெளிவே நிறையோ டொளியே, வன்சொ லிறுதி மந்த முச்சமென, வந்த வெட்டும் பாடலின் பயனே" என்றுசொல்லப்பட்ட எண்வகைப்பயனுமுடைய பாடலும்.

௧௬. பாணியுமென்பது தாளங்களுமென்றவாறு; "கொட்டு மசையுந் தூக்கு மளவு, மொட்டப் புணர்ப்பது பாணி யாகும்" என்றாராகலின்.

இவை மாத்திரைப்பெயர்கள்; கொட்டு அரைமாத்திரை; அதற்குவடிவு, க; அசை ஒருமாத்திரை; அதற்குவடிவு, எ; தூக்கு இரண்டுமாத்திரை; அதற்குவடிவு, உ; அளவு மூன்றுமாத்திரை; அதற்குவடிவு, ஃ எனக்கொள்க. என்னை? "ககரங் கொட்டே யெகர மசையே, யுகரந் தூக்கே யளவே யாய்தம்" என்றாராகலின். இவற்றின் றொழில் வருமாறு: கொட்டாவது அமுக்குதல்; அசையாவது தாக்கியெழுதல்; தூக்காவது தாக்கித் தூக்குதல்; அளவாவது தாக்கினவோசை நேரே மூன்றுமாத்திரை பெறுமளவும் வருதலெனக்கொள்க.

அரைமாத்திரையுடைய ஏகதாளமுதலாகப் பதினாறுமாத்திரையுடைய பார்வதிலோசனமிறுகச சொன்ன நாற்பத்தொருதாளமும் புறக்கூத்திற்குரிய; ஆறன்மட்டமென்பனவும், எட்டன்மட்டமென்பனவும் தாளவொரியலென்பனவும், தனிநிலை

* தேசிக்குரியகால்கள், உ௪; க. கீற்று, உ. கடிசரி, ௩. மண்டலம், ௪. வர்த்தனை, ௫. கரணம், ௬. ஆலீடம், எ. குஞ்சிப்பு, அ. கட்டுப்புரியம், ௯. களியம், ௧௦. உள்ளாளம், ௧௧. கட்டுதல், ௧௨. கம்பித்தல், ௧௩. ஊர்தல், ௧௪. நடுக்கல், ௧௫. வரிங்குதல், ௧௬. அப்புதல், ௧௭. அனுக்குதல், ௧௮. வாசிப்பு, ௧௯. குத்துதல், உ௦. நெளிதல், உ௧. மாறுகால், உஉ. இட்டுப்புகுதல், உ௩. சுற்றிவாங்குதல், உ௪. உடற்புரிவு.

† வடுகிற்குரியகால்கள், ௧௪; க. சுற்றுதல், உ. எறிதல், ௩. உடைத்தல், ௪. ஒட்டுதல், ௫. கட்டுதல், ௬. வெட்டுதல், எ. போக்கல், அ. நீக்கல், ௯. முறுக்கல், ௧௦. அனுக்கல், ௧௧. வீசல், ௧௨. குடுப்புக்கால், ௧௩. கத்தரிகைக்கால், ௧௪. கூட்டுதல்.

‡ உடலவர்த்தனை, ௯ ; க. மெய்சாய்த்தல், உ. இடைநெரித்தல், ௩. சுழித்தல், ௪. அணைத்தல், ௫. தூக்குதல், ௬. அசைத்தல், எ. பற்றல், அ. விரித்தல், ௯. குவித்தலெனவிவை. "மெய்சாய் விடைநெரிவு மேற்சுழிவோ டாங்கணைத்தல், கைதூக் கசைத்தல் கலைபற்றல்-கைகள், விரித்தல் குவித்தலிவை சிங்களமா மென்று, தெரித்தனர் தண்டமிழோர் தேர்ந்து." என்பது கு-ம். மெய்சாய்த்தல் - உடற்றூக்கு.

§ நிலமின்மையை, தொல், பொரு, அகத், உ-ஞ. உரையிற்காண்க.

யொரியலென்பனவும், ஒன்றன்பாணிமுதலாக எண்கூத்துப்பாணியீறாகக் கிடந்த பதினொருபாணிவிகற்பங்களும், முதனடை வாரமுதலாயினவும் அகக்கூத்திற்குரிய வென்க.

கசு. தூக்குமென்பது இத்தாளங்களின் வழிவரும் செந்தூக்கு, மதலைத்தூக்கு, துணிபுத்தூக்கு, கோயிற்றூக்கு, நிவப்புத்தூக்கு, கழாற்றூக்கு, நெடுந்தூக்கெனப் பட்ட எழுதூக்குக்களுமென்க; "ஒருசீர் செந்தூக் கிருசீர் மதலை, முச்சீர் துணிபு நாற்சீர் கோயி, லைஞ்சீர் நிவப்பே யறுசீர் கழாலே, யெழுசீர் நெடுந்தூக் கென்மனார் புலவர்" என்றாராகலின்.

கஎ. கூடிய நெறியினவென்பது முற்சொல்லப்பட்ட கூத்தும் பாட்டும் தாளமும் தூக்கும் தம்மிற்கூடின நெறியையுடைய அகக்கூத்தும் புறக்கூத்துமுதலாயினவுமென்க.

கஎ. கொளுத்துங்காலை - ஆட்டுவிக்குமிடத்தென்க.

கஅ. பிண்டியுமென்பது ஒற்றைக்கையுமென்றவாறு.

முற்கூறிய சொல்விகற்பமாகிய உட்சொல், புறச்சொல், ஆகாயச்சொலென்னு மூன்றினையும், அவிநயத்தோடே நாட்டிச்செய்யுமிடத்துச் செய்யுமுறைமைதான் நான்குவகைப்படும்; கையும் கருத்தும் மிடறும் சரீரமுமென. என்னை? "அவை தாங், கையே கருத்தே மிடறே சரீரமென், றெய்தமுன் பமைத்த விலையென மொழிப" என்றாராகலின்.

அவற்றுட் கைதான் இரண்டுவகைப்படும்; இணையாவினைக்கையும் இணைக்கையுமென. இவை ஒற்றைக்கை இரட்டைக்கையென்றும் வழங்கப்படும். இன்னும் ஒருசாரார் ஒற்றைக்கை இரட்டைக்கையென்னு மிவற்றை, இவ்வகையோடும் * ஆண்கை பெண்கை அலிக்கை பொதுக்கையென்னும் நான்கினையுங்கூட்டி ஆறென்பாருமுளர். என்னை? "மெய்பெறத் தெரிந்து மேலோ ராய்ந்த, கைவகை தன்னைக் கருதுங் காலை, யிணையா வினைக்கை யிணைக்கை யென்ன, வணையுமென்ப வறிந்திசி னோரே" "...... மொழிநரு முளரே." "இணையா வியல்வ திணையா வினைக்கை, யிணைந்துடன் வருவ திணைக்கை யாகும்" என்று பிறருங்கூறினாராகலின்.

இனி அவற்றுள் இணையாவினைக்கை முப்பத்துமூன்று வகைப்படும். அவை பதாகை-க, திரிபதாகை-உ, கத்தரிகை - ௩, தூபம் - ச, அராளம்-ரு, இளம்பிறை-சு, சுகதுண்டம் - எ, முட்டி - அ, கடகம்-௯, சூசி - க0, கமலகோசிகம்-கக, காங்கூலம்-கஉ, கபித்தம் - க௩, விற்பிடி - கச, குடங்கை - கரு, அலாபத்திரம் - கசு, பிரம

* ஆண்கைமுதலிய நான்கன்வகையினை வரும்வெண்பாக்களால் உணர்க. க. "முட்டி சிகர மலர்பதுமஞ் சந்தஞ்சம், விட்ட சிலந்தி மிகுசூசி - ஒட்டுஞ், சதுரம் பதாகந் தருதிரிப தீக, மதிகமுறுமாண்கைநவ மாம்" உ. "கடகஞ் சுகதுண்டங் காங்கூல மன்னு, மடைவாம் பிறைக்கை யராளந் - தடமருவு, மன்னபக்கந் தாம்பிரசூடமொடு மான்றலையே, யின்னவெட்டும் பெண்ணுறுகு மே" ௩. "சர்ப்பசிரம் வண்டு தனிமுகுளங் கத்தரிகை, விற்பனஞ்சேர் கோசங் கபித்தமுட-னற்புதமே, யாகுமலிக்கைக ளாறென் றுரைப்பரே, பாகனைய சொல்லாய் பரிந்து" ச. "உன்னமா மண்டல......வலம்புரியே, மெய்ந்நிலையாஞ் சங்கிலதை மேம்படவே-மன்னிவரு, தூமமொடு பிண்டியாய்ச் சொன்னார் பொதுக்கையெனத், தாம முறுங்குழலாய் தான்" இவை சுந்தாநந்தப்பிரகாசத்திலுள்ளன.

ரம்-கஎ, தாம்பிரசூடம் - கஅ, பசாசம் - கக, முகுளம்-உ0, பிண்டி - உக, தெரிநிலை-உஉ, மெய்ந்நிலை - உங, உன்னம்-உச, மண்டலம் - உரு, சதுரம் - உசு, மான்றலை-உஎ, சங்கு - உஅ, வண்டு - உகூ, இலதை - ௩0, கபோதம் - ௩க, மகரமுகம் - ௩உ, வலம்புரி - ௩௩; என்னை? "இணையா வினைக்கை யியம்புங் காலை, யிணைவுறு பதாகை திரிபதா கையே, கத்தரிகை தூப மராள மிளம்பிறை, சுகதுண் டம்மே முட்டி கடகஞ், சூசி பதும கோசிகந் துணிந்த, மாசில்காங் கூலம் வழுவறு கபித்தம், விற்பிடி குடங்கை யலாபத் திரமே, பிரமரந் தன்னொடு தாம்பிர சூடம், பசாச முகுளம் பிண்டி தெரிநிலை, பேசிய மெய்ந்நிலை யுன்ன மண்டலஞ், சதுர மான்றலை சங்கே வண்டே, யதிர்வி லிலதை கபோத மகரமுகம், வலம்புரி தன்னொடு முப்பத்து மூன்றெண், றிலங்குமொழிப் புலவ ரிசைத்தன ரென்ப" என்றாராகலின்.

இவற்றுட் பிண்டியென்பது ஒன்றாய் ஆகுபெயரான் ஒற்றைக்கைக்குப் பெயராயிற்று. பிணையல் இணைதலாதலால் இணைக்கையாயிற்று. ஆதலாற் பிண்டியும் பிணையலுமென்றாரெனக்கொள்க.

இவற்றுட் பிண்டிக்குக்காட்டிய முப்பத்துமூன்று வகையினுள்,—

பதாகைக்கையாவது நான்குவிரலும் தம்முள் ஒட்டிநிமிரப் பெருவிரல் குஞ்சித்து நிற்பது; என்னை? "பதாகை யென்பது பகருங் காலைப், பெருவிரல் குஞ்சித் தலைவிர னான்கு, மருவி நிமிரு மரபிற் றென்ப" என்றாராகலின், க.

இக்கைகளின் தொழில் முதலியவிரிப்பின் உரைபெருகுமாதலின், விடுக்கப்பட்டன; விரிந்தநூல்களிற் கண்டுகொள்க.

திரிபதாகையாவது பதாகைக்கையின் * அணிவிரல் முடக்குவது; என்னை? "திரிப தாகை தெரியுங் காலை, யதைப தாகையி னணிவிரன் முடக்கினஃ, தாமென மொழிப வறிந்திசி னோரே" என்றாராகலின். உ.

கத்தரிகையாவது திரிபதாகையின் முடங்கிய அணிவிரற்புறத்ததாகிய நடுவிரலைச் சுட்டுவிரலோடு பொருந்தநிமிர்ப்பது; என்னை? "கத்தரி கையே காண்டக விரிப்பி, னத்திரி பதாகையி னணியின் புறத்தைச், சுட்டக மொட்ட விட்டுநிமிர்ப் பதுவே" என்றாராகலின். ௩.

தூபமென்பது நிமிர்ந்த நடுவிரலும் சுட்டுவிரலும் பாதிப்படவளையநிற்பது; என்னை? "தூப மென்பது துணியுங் காலை, விளங்குகத் தரிகை விரலகம் வளைந்து, துளங்கு மென்ப துணிபுறிந் தோரே" என்றாராகலின். ச.

அராளமாவது பெருவிரல் குஞ்சித்துச் சுட்டுவிரல் முடக்கி ஒழிந்தவிரன்மூன்றும் நிமிர்ந்துவளைவது; என்னை? "அராள மாவ தறிவரக் கிளப்பிற், பெருவிரல் குஞ்சித்துச் சுட்டுவிரன் முடக்கி, விரல்கண் மூன்று நிமிர்த்தகம் வளைத்தற், குரிய தென்ப வுணர்ந்திசி னோரே" என்றாராகலின். ரு.

இளம்பிறை: "சுட்டும் † பேடு ‡ அநாமிகை சிறுவிர, லொட்டி யகம்வளைய வொசித்த பெருவிரல், விட்டு நீங்கும் விதியிற் றென்ப." சு.

---

* அணிவிரல் - பவித்திரவிரல்.

† பேடு - நடுவிரல்; இது பேடியெனவும் வழங்கப்படும்.

‡ அநாமிகை - பவித்திரவிரல்.

சுகதுண்டம்: "சுகதுண்ட மென்பது தொழில்பெறக் கிளப்பிற், சுட்டு விரலும் பெருவிர ஞனு, மொட்டி யுகிர்நுனை கவ்வி முன்வளைந், தநாமிகை முடங்கப் பேட் டொடு சிறுவிர, ஞன்மிக நிமிர்ந்த தகுதித்தென்ப." எ.

முட்டி: "முட்டி யென்பது மொழியுங் காலைச், சுட்டு நடுவிர லநாமிகை சிறு விர, லிறுக முடக்கி யிவற்றின்மிசைப் பெருவிரன், முறுகப் பிடித்த முறைமைத் தென்ப." அ.

கடகம்: "கடக முகமே கருதுங் காலைப், பெருவிர னுனியுஞ் சுட்டுவிர னுனியு, மருவ வளைந்தவ் வுகிர்நுனி கௌவி, யொழிந்த மூன்றும் வழிவழி நிமிர, மொழிந் தன ரென்ப முடிபறிந் தோரே." கூ.

சூசி: "சூசி யென்பது துணியுங் காலை, நடுவிரல் பெருவிர லென்றிவை தம்மி, லடைவுட னுற்றிச் சுட்டுவிர னிமிர, வொழிந்தன வழிவழி முடங்கி நிற்ப, மொழி ந்தனர் மாதோ முடிபறிந் தோரே." க0.

பதுமகோசிகம்: "பதும கோசிகம் பகருங் காலை, யொப்பக் கைவளைத் தைந்து விரலு, மெய்ப்பட வகன்ற விதியிற் றாகும்." கக.

காங்கூலமாவது மூன்றுவகைப்படும்; குவிகாங்கூலம், முகிழ்காங்கூலம், விரி காங்கூலமெனை. என்னை? *"காங்கூ லம்மே கருதுங் காலைச், சுட்டும் பேடும் பெருவி ரன் மூன்று, மொட்டிமுன் குவிய வநாமிகை முடங்கிச், சிறுவிர னிமிர்ந்த செய் கைத் தாகும்" "முகிழ்காங் கூல முந்துற மொழிந்த, குவிகாங் கூலங் குவிவிழந் ததுவே." "மலர்காங் கூல முதுமலர்ந் ததுவே." கஉ.

கபித்தமாவது சுட்டுவிரனுனியும் பெருவிரனுனியும் உகிர்நுனை கௌவிப்பிடித்து ஒழிந்த மூன்றுவிரலும் மெல்லெனப் பிடிப்பது; என்னை? "கபித்த மென்பது காணுங் காலைச், சுட்டுப் பெருவிர லொட்டிநுனி கௌவி, யல்ல மூன்றுமெல் லப்பிடிப் பதுவே" என்றாராகலின். கங.

விற்பிடி: "விற்பிடி யென்பது விரிக்குங் காலைச், சுட்டொடு பேடி யநாமிகை சிறு விர, லொட்டி யகப்பால் வளையப் பெருவிரல், விட்டு நிமிரும் விதியிற் றாகும்." இத ற்குச் சிகரமென்றும் பெயர். கச.

குடங்கையாவது எல்லாவிரலுங்கூட்டி உட்குழிப்பது; என்னை? "குடங்கை யெ ன்பது கூறுங் காலை, யுடங்கு விரற்கூட்டி யுட்குழிப் பதுவே" என்றாராகலின். கரு.

அலாபத்திரமாவது சிறுவிரன்முதலாகியவைந்தும் வளைந்துமறிவது. என்னை? "அலாபத் திரமே யாயுங் காலைப், புனைமையின் மிகுத்த சிறுவிரன் முதலா, வருமு றை யைந்தும் வளைந்துமறி வதுவே" என்றாராகலின். கசு.

பிரமரமாவது அநாமிகைவிரலும் நடுவிரலும் தம்மிற்பொருந்தி வலஞ்சாயப் பெ ருவிரல் நடுவிரலினுள்ளேசேரச் சுட்டுவிரலும் சிறுவிரலும் பின்பேவளைந்துநிற் பது; என்னை? "பிரமர மென்பது பேணுங் காலை, யநாமிகை நடுவிர லறவுறப் பொ ருந்தித், தாம்வலஞ் சாயத் தகைசால் பெருவிர, லொட்டிய நடுவுட் சேரச் சிறுவிரல், சுட்டு வளைந்துபின் றேன்றிய நிலையே" என்றாராகலின். கஎ.

தாம்பிரசூடமாவது நடுவிரலும் சுட்டுவிரலும் பெருவிரலும் தம்மில் நுனியொ த்துக் கூடி வளைந்து சிறுவிரலும் அணிவிரலும் முடங்கிநிமிர்வது; என்னை? "தாம்

* காங்கூல்மென்றது குவிகாங்கூலத்தை.

பிர சூடமே சாற்றுங் காலைப், பேடே சுட்டுப் பெருவிர லுனியொத்துக், கூடி வளை ந்து சிறுவிர லணிவிர, லுடனதின் முடங்கி நிமிரநிற் பதுவே" என்றுராகலின். கஅ.

பசாசமாவது பெருவிரலும் சுட்டுவிரலுமன்றி ஒழிந்த மூன்றுவிரலும் தம்மிற் பொலிந்துநிற்பதெனக்கொள்க. அப்பசாசந்தான் மூன்றுவகைப்படும்; அகநிலைப்பசாசம், முகநிலைப்பசாசம், உகிர்நிலைப்பசாசமெனை. அவற்றுள் அகநிலைப்பசாசம் சுட்டு விரல்நுனியிற் பெருவிரலகப்படுவது; முகநிலைப்பசாசம் அவ்விரன்முகங்கூடி உகிர் விட்டுநிற்பது; உகிர்நிலைப்பசாசம் சுட்டுவிரலும் பெருவிரலும் உகிர்நுனை கவ்வி நிற்பது. என்னை? "பசாச மென்பது பாற்படக் கிளப்பி, னகநிலை முகநிலை யுகி ர்நிலை யென்னத், தொகநிலை பெற்ற மூன்றுமென மொழிப." "அவைதாம், சுட்டுவிர லுனியிற் பெருவிர லகப்பட, வொட்டி வளைத்த தகநிலை முகநிலை, யவ்விர லுனிகள் கவ்விப் பிடித்தல், செவ்வித் தாகுஞ் சிறந்த வுகிர்நிலை, யுகிர் நுனை கவ்விய தொழிந்த மூன்றுந், தகைமையி னிமிர்த்தலும் மூன்றற்குந் தகுமே" என்றுராகலின். கக.

முகுளமாவது ஐந்துவிரலும் தம்மில் தலைகுவிந்து உயர்ந்துநிற்பது; என்னை? "முகுள மென்பது மொழியுங் காலை, யைந்து விரலுந் தலைகுவிந் தேற்ப, வந்து நிகழு மாட்சித் தாகும்" என்றுராகலின். உo.

பிண்டியென்பது சுட்டுவிரல் பேடிவிரல் அநாமிகை சிறுவிரல் ஒட்டிநெகிழமுடங்க அவற்றின்மேலே குறுக்கிடப் பெருவிரல் கட்டி விலங்கி விரல்வழி முறையொற்றல்; என்னை? "பிண்டி யென்பது பேசுங் காலைச், சுட்டுப் பேடி யநாமி கை சிறுவிர, லொட்டி நெகிழ முடங்க வவற்றின்மிசை, விலங்குறப் பெருவிரல் விட்டுங் கட்டியு, மிலங்குவிரல் வழிமுறை யொற்றலு மியல்பே" என்றுராகலின். உக.

தெரிநிலையாவது எல்லாவிரலும் விரிந்து குஞ்சித்துநிற்பது; என்னை? "தெரிநிலை யென்பது செப்புங் காலை, யைந்துவிரலு மலர்ந்துகுஞ் சித்த, கைவகை யென்ப கற் றறிந் தோரே" என்றுராகலின். உஉ.

மெய்ந்நிலையாவது சிறுவிரலும் அணிவிரலும் நடுவிரலும் சுட்டுவிரலும் விட்டு நிமிரச் சுட்டுவிரன்மேற் பெருவிரல் சேரவைப்பது; என்னை? "மெய்ந்நிலை யென்பது விளம்புங் காலைச், சிறுவிர லநாமிகை பேடொடு சுட்டிவை, யுறுத லின்றி நிமிரச் சுட்டின்மிசைப், பெருவிரல் சேரும் பெற்றித் தென்ப" என்றுராகலின். உங.

உன்னமாவது சிறுவிரலும் பெருவிரலும் தம்முட்கூட ஒழிந்த மூன்றுவிரலும் விட்டு நிமிர்வது; என்னை? "உன்ன நிலையே யுணருங் காலைப், பெருவிரல் சிறுவிர லென்றிவை யிணைய, வருமுறை மூன்று மலர்ந்துநிமிர்ந் ததுவே" என்றுராக லின். உச.

மண்டலம்: "மண்டல மென்பது மாசறக் கிளப்பிற், பேடு நுனியும் பெருவிரனு னியுங், கூடி வளைந்துதம் முகிர்நுனை கவ்வி, யொழிந்த மூன்று மொக்க வளைவதென, மொழிந்தன ரென்ப முழுதுணர்ந் தோரே" என்றுராகலின். உரு.

சதுரமாவது சுட்டுவிரலும் நடுவிரலும் அணிவிரலும் தம்முட் சேர்ந்து இறைஞ் சப் பெருவிரல் அகம்வரவைத்துச் சிறுவிரல் பின்பே நிமிர்ந்துநிற்பது; என்னை? "சதுர மென்பது சாற்றுங் காலை, மருவிய மூன்று நிமிர்ந்தகம் வளையப், பெருவிர

லகமுறப் பொறப்பச் சேர்த்திச், சிறுவிரல் பின்பே நிமிர்ந்த செவ்வியி, னிறுமுறைத் தென்ப வியல்புணர்ந் தோரே" என்றாராகலின். உசு.

மான்றலையாவது பெருவிரலும் சிறுவிரலுமொழிந்த மூன்றும் தம்மில் ஒத்து ஒன்றி முன்னே இறைஞ்சிநிற்பது; என்னை? "மான்றலை யென்பது வகுக்குங் காலை, மூன்றிடை விரலு நிமிர்ந்தக மிறைஞ்சிப், பெருவிரல் சிறுவிர லென்றிவை நிமிர் ந்து, வருவ தென்ப வழக்கறிந் தோரே" என்றாராகலின். உஎ.

சங்காவது பெருவிரல் நிமிர ஒழிந்த நான்குவிரலும், வளைந்துநிற்பது; என்னை? "சங்கெனப் படுவது சாற்றுங் காலைச், சிறுவிரன் முதலாச் செறிவிர னான்கும், பெறு முறை வளையப் பெருவிர னிமிர்ந்தாங், கிறுமுறைத் தென்ப வியல்புணர்ந் தோரே" என்றாராகலின். உஅ.

வண்டாவது பெருவிரலும் அணிவிரலும் வளைந்து நுனியொன்றிச் சிறுவிரல் நிமிர்ந்து சுட்டுவிரலும் நடுவிரலும் நெகிழ வளைந்துநிற்பது; என்னை? "வண்டென் பதுவே வகுக்குங் காலை, யநாமிகை பெருவிர னனிமிக வளைந்து, தாநுனி யொன்றித் தகைசால் சிறுவிரல், வாலிதி னிமிர மற்றைய வளைந்த, பாலின தென்ப பயன்றெரிந் தோரே" என்றாராகலின். உகூ.

இலதையாவது நடுவிரலும் சுட்டுவிரலும் கூடிநிமிரப் பெருவிரல் அவற்றின்கீ ழ்வரைசேர ஒழிந்த இரண்டுவிரலும் வழிமுறை பின்னே நிமிர்ந்துநிற்பது; என் னை? "இலதை யென்ப தியம்புங் காலைப், பேடியுஞ் சுட்டும் பிணைந்துட னிமிர்ந்து, கூடிய பெருவிரல் கீழ்வரை குறுகக், கடையிரு விரலும் பின்னர் நிமிர்ந்த, நடை யின தென்ப நன்னெறிப் புலவர்" என்றாராகலின். ௩௦.

கபோதமென்பது பதாகைக்கையிற் பெருவிரல் விட்டுநிமிர்வது; என்னை? "காணுங் காலைக் கபோத மென்பது, பேணிய பதாகையிற் பெருவிர னிமிரும்" என் றாராகலின். ௩க.

மகரமுகமாவது பெருவிரலும் சுட்டுவிரலும் நிமிர்ந்துகூட ஒழிந்த மூன்றுவிர லும் தம்முளொன்றி அதற்குவேறாய்நிற்பது. என்னை? "மகரமுக மென்பது வகுக் குங் காலைச், சுட்டொடு பெருவிரல் கூட வொழிந்தவை, யொட்டி நிமிர்ந்தாங் கொ ன்று வாகும்" என்றாராகலின். ௩உ.

வலம்புரியாவது சிறுவிரலும் பெருவிரலுநிமிர்ந்து சுட்டுவிரலின் அகம்வளைந்து ஒழிந்தவிரண்டும் நிமிர்ந்து இறைஞ்சிநிற்பது. என்னை? "வலம்புரிக் கையே வாய்ந்த கனிட்ட, னலந்திகழ் பெருவிர னயமுற நிமிர்ந்து, சுட்டுவிரன் முடங்கிச் சிறுவிர னடுவிரல், விட்டுநிமிர்ந் திறைஞ்சும் விதியிற்றென்று, கூறுவர் தொன்னூற் குறிப்பு ணர்ந் தோரே" என்றாராகலின். ௩௩.

இச்சொல்லப்பட்ட முப்பத்துமூன்றும் பிண்டிக்கையெனக்கொள்க. * இணை யாவினைக்கையெனினும் ஒற்றைக்கையெனினும் பிண்டிக்கையெனினுமொக்கும்.

கஅ. இத்தன்மையவாகிய பிண்டிக்கையுமென்க.

கஅ. பிணையலுமென்பது இரட்டைக்கையுமென்றவாறு.

அஃதாவது இணைக்கை. அது பதினைந்துவகைப்படும். அவையாவன அஞ்ச லி, புட்பாஞ்சலி, பதுமாஞ்சலி, கபோதம், கற்கடகம், சுவத்திகம், கடகாவருத்தம், நிட்தம், தோரம், உற்சங்கம், புட்பபுடம், மகரம், சயந்தம், அபயவத்தம், வருத்த

* இணையாவிணைக்கையெனவும் பிரதிபேதமுண்டு.

மானமென்றிவை. என்னை? "எஞ்சுத லில்லா விணைக்கை யியம்பி, லஞ்சலி தன்னொடு புட்பாஞ் சலியே, பதுமாஞ் சலியே கபோதங் கற்கடகம், நலமாஞ் சுவத்திகங் கடகா வருத்த, நிடதந் தோர முற்சங்க மேம்பட, வுறுபுட் பபுட மகரஞ் சயந்த, மந்தமில் காட்சி யபய வத்த, மெண்ணிய வருத்த மானந் தன்னொடு, பண்ணுங்காலைப் பதினைந்தென்ப" என்றாராகலின். அவற்றுள்,—

அஞ்சலியென்பது இரண்டுகையும் பதாகையாய் அகமொன்றுவது. என்னை? "அஞ்சலி யென்ப தறிவுறக் கிளப்பி, னெஞ்ச லின்றி யிருகையும் பதாகையாய், வந்தகம் பொருந்து மாட்சித் தென்றனர, ரந்தமில் காட்சி யறிந்திசி னோரே." க.

புட்பாஞ்சலியாவது இரண்டுகையும் குடங்கையாய்வந்து ஒன்றுவது. என்னை? "புட்பாஞ் சலியே பொருந்தவிரு குடங்கையுங், கட்டி நிற்குங் காட்சிய தென்ப" என்றாராகலின். உ.

பதுமாஞ்சலியாவது இருகையும் பதுமகோசிகமாகக் கூட்டுவது; என்னை? "பதுமாஞ்சலியே பதும கோசிக, மெனவிரு கையு மியைந்துநிற் பதுவே" என்றாராகலின். ௩.

கபோதமென்பது இரண்டுகையும் கபோதமாகக்கூட்டுவது; என்னை? "கருதுங் காலைக் கபோத விணைக்கை, யிருகையுங் கபோத மிசைந்துநிற் பதுவே" என்றாராகலின். ௪.

கற்கடகமென்பது தெரிநிலைக்கையிரண்டும் அங்குலிபிணைந்து வருவதெனக்கொள்க; என்னை? "கருதுங் காலைக் கற்கட கம்மே, தெரிநிலை யங்குலி யிருகையும் பிணையும்" என்றாராகலின். ௫.

சுவத்திகமென்பது மணிக்கட்டிற்பொருந்திய பதாகை யிரண்டையும் மணிக்கட்டிலேற்றிவைப்பது; என்னை? "சுவத்திக மென்பது சொல்லுங் காலை, மணிக்கட் டமைந்த பதாகை யிரண்டையு, மணிக்கட் டேற்றி வைப்ப தாகும்" என்றாராகலின். ௬.

கடகாவர்த்தமாவது இரண்டுகையும் கடகமாய் மணிக்கட்டுக்கு ஏற இயைந்து நிற்பது; என்னை? "கருதிய கடகா வருத்தக் கையே, யிருகையுங் கடக மணிக்கட் டியைவது" என்றாராகலின். எ.

நிடதமாவது முட்டியாக இரண்டுகையும் சமஞ்செய்வது; என்னை? "நிடதமென்பது நெறிப்படக் கிளப்பின், முட்டி யிரண்டுகை யுஞ்சம மாகக், கட்டி நிற்குங் காட்சித் தென்ப" என்றாராகலின். அ.

* தோரமாவது இரண்டுகையும் பதாகையாக்கி அகம்புறமொன்றி முன் தாழ்ந்துநிற்பது; என்னை? "தோர மென்பது துணியுங் காலை, யிருகையும் பதாகை யகம்புற மொன்ற, மருவிமுன் றாழும் வழக்கிற் றென்ப" என்றாராகலின். ௯.

உற்சங்கமாவது ஒருகை பிறைக்கையாகக்கொண்டு ஒருகை அராளமாக்கி இரண்டுகையும் மணிக்கட்டிலேற்றிவைப்பது; என்னை? "உற்சங்க மென்ப துணருங் காலை, யொருகை பிறைக்கை யொருகை யராளந், தெரிய மணிக்கட்டி லேற்றிவைப் பதுவே" என்றாராகலின். ௰.

புட்பபுடமாவது குடங்கையிரண்டும் தம்மிற் பக்கங் காட்டி நிற்பது; என்னை?

---

* இது உடோளமெனவுங் கூறப்படும்.

"புட்பபுட மென்பது புகலுங் காலை, யொத்த விரண்டு குடங்கையு மியைந்து, பக்கங் காட்டும் பான்மைத் தென்ப" என்றாராகலின். கக.

மகரமென்பது கபோதமிரண்டுகையும் அகம்புறமொன்றவைப்பது; உச்சித்த மென்பதும் இதனதுபெயர். "மகர மென்பது வாய்மையி னுரைப்பிற், கபோத மிரண்டு, கையு மகம்புற, மொன்ற வைப்பதென் றுரைத்தனர் புலவர்" என்றாராகலின். கஉ.

சயந்தமென்பது................ ....கங.

அபயவத்தமாவது இருகையும் சுகதுண்டமாக நெஞ்சுறநோக்கி நெகிழ்ந்துநிற்பது; என்னை? "அபயவத் தம்மே யறிவுறக் கிளப்பின், வஞ்சமில்!சுகதுண்ட மிருகையு மாட்சியி, னெஞ்சுற நோக்கி நெகிழ்ந்துநிற் பதுவே" என்றாராகலின். கச.

வருத்தமானமாவது முகுளக்கையிற் கபோதக்கையை எதிரிட்டுச் சேர்ப்பது; என்னை? "வருத்த மானம் வகுக்குங் காலை, முகுளக் கையிற் கபோதக் கையை, நிகழச் சேர்த்து நெறியிற் றென்ப" என்றாராகலின். கரு.

இச்சொல்லப்பட்ட பதினைந்தும் பிணையற்கையெனக்கொள்க. இணைக்கையெனினும் இரட்டைக்கையெனினும் பிணையலெனினுமொக்கும்.

கஅ. இத்தன்மையவாகிய பிணையலுமென்க.

கஅ. எழிற்கையுந் தொழிற்கையுமென்பது: எழிற்கை - அழகுபெறக் காட்டுங் கை. தொழிற்கை - தொழில்பெறக்காட்டுங்கை. உம்மையாற் பொருட்கையும் கூறப்பட்டது. பொருட்கை-பொருளுறக்காட்டுங்கை; என்னை? "அவைதாம், எழிற்கை யழகே தொழிற்கை தொழிலே, பொருட்கை கவியிற் பொருளா கும்மே" என்றாராகலின்.

ககூ. கொண்ட வகையறிந்து - கொண்டவகையறிதலாவது பிண்டியும் பிணையலும் புறக்கூத்துக்குரியகையென்றும், எழிற்கையும் தொழிற்கையும் அகக்கூத்துக்குரியகையென்றுமறிதல்.

ககூ. கூத்துவருகாலையென்பது கூத்துக்களின் வரவு நிகழுமிடத்தென்க.

உ0 - உக. கூடை செய்தகை வாரத்திற் களைதலும், வாரஞ் செய்தகை கூடையிற் களைதலுமென்றது அகக்கூத்து நிகழுமிடத்து ஒற்றையிற்செய்த கைத்தொழில் இரட்டையிற் புகாமலும், இரட்டையிற்செய்த கைத்தொழில் ஒற்றையிற்புகாமலுங் களைதல். இன்னும் தேசியிற் கைத்தொழில் * மார்க்கத்துப் புகாமலும், மார்க்கத்துக் கைத்தொழில் தேசியிற்புகாமலும் களைதலென்றுமாம்; ஒற்றையும் இரட்டையும் தேசிக்கூறுகலானும் இரட்டையும் இரட்டைக்கிரட்டையும் வடுகிற் கூறுகலானுமென்க.

உஉ - உங. பிண்டி செய்தகை யாடலிற் களைதலு, மாடல் செய்தகை பிண்டியிற் களைதலுமென்றது புறக்கூத்தினிடத்துப் பிண்டியென்பது பொருட்கையென்றும் பிணையலென்பது தொழிற்கையென்றுமாம். இதன்கருத்து ஆடல் நிகழுமிடத்து அவிநயநிகழாமலும் அவிநயநிகழுமிடத்து ஆடனிகழாமலுங்களைதல்.

உச. குரவையும் வரியும் விரவலசெலுத்தியென்பது குரவைக்கூத்திற்குரிய கால்களும் வரிக்கூத்திற்குரிய கால்களும் தம்மில் விரவாதபடியே கூத்தை நடத்தியென்க.

---

* மார்க்கம் - வடுகு.

"குரவை யென்பது கூறுங் காலைச், செய்தோர் செய்த காமமும் விறலு, மெய்த வுரைக்கு மியல்பிற் றென்ப."

"வரியெனப் படுவது வகுக்குங் காலைப், பிறந்த நிலனுஞ் சிறந்த தொழிலு, மறியக் கூறி யாற்றுழி வழங்கல்."

உரு. ஆடற் கமைந்த வாசான் றன்னொடு மென்றது இக்கூத்துக்களை இப்படியால் அவற்றுடனேபொருந்த ஆடவும் ஆடுவிக்கவும் வல்ல ஆடலாசிரியனோடுமென்றவாறு.

அறிந்து புணர்த்து விளங்கவறிந்து அறிந்து செலுத்தி அமைந்த ஆசானென்க.

[இசையாசிரியன் அமைதி.]

உசா-௩சா. யாழுங் குழலுஞ் சீரு மிடறுந்
தாழ்குரற் றண்ணுமை யாடலொ டிவற்றி
னிசைந்த பாட லிசையுடன் படுத்து
வரிக்கு மாடற்கு முரிப்பொரு ளியக்கித்
தேசிகத் திருவி னோசை கடைப்பிடித்துத்
தேசிகத் திருவி னோசை யெல்லா
மாசின் றுணர்ந்த வறிவின னாகிக்
கவிய து குறிப்பு மாடற் றொகுதியும்
பகுதிப் பாடலுங் கொளுத்துங் காலை
வசையறு கேள்வி வகுத்தனன் விரிக்கு
மசையா மரபி னிசையோன் றானும்

இ - ள். யாழ்ப்பாடலும் வங்கியப்பாடலும் இருவகைத்தாளக் கூறுபாடுகளும் மிடற்றுப்பாடலும் மந்தமாகியசுரத்தினையுடைய தண்ணுமையும் அகக்கூத்துப் புறக்கூத்துப் பதினோராடலென்னுங் கூத்துக்களும் வல்லனாய் இவற்றுடனே சேரச்செய்த உருக்களை இசைகொள்ளும்படியும் இரதம் பொருந்தும்படியும் புணர்க்கவும் வல்லனாய் இருவகைப்பட்ட பாடல்களுக்கும் பொருளான இயக்கம் நான்கினையுமமைத்துத் தேசாந்தரங்களிற் பாடைகளையுமறிந்து அந்தப்பாடைகள் இசைபூணும்படியையுமறிந்து இயற்புலவனினைவும் நாடகப்புலவனிடம் வரவுகளும் இவற்றுக்கடைத்த பாடல்களும் தம்மிற்சந்திப்பிக்குமிடத்துக் குற்றந்தீர்ந்த நூல்வழிக்காலே வகுக்கவும் விரிக்கவும் வல்லனாயுள்ள இசைப்புலவனுமென்றவாறு.

இது பொழிப்புரை.

உசா. யாழுமென்றது யாழ்ப்பாடலுமென்றவாறு.

யாழ் நால்வகைப்படும்; அவை பேரியாழ், மகரயாழ், சகோடயாழ், செங்கோட்டியாழென்பன. இவை நாலும் பெரும்பான்மை; சிறுபான்மையான் வருவனவுமுள; என்னை? "பேரியாழ் பின்னு மகரஞ் சகோடமுடன், சீர்பொலியுஞ் செங்கோடு செப்பினர் - தார்பொலிந்து, மன்னுந் திருமார்ப வண்கூடற் கோமானே, பின்னு முளவே பிற" என்றாராகலின். இந்நால்வகை யாழிற்கும் நரம்புகொள்ளுமிடத்துப் பேரியாழிற்கு இருபத்தொன்றும், மகரயாழிற்குப் பதினேழும், சகோடயாழிற்குப் பதினாறும், செங்கோட்டியாழிற்கு ஏழுங்கொள்ளப்படும். என்னை? "ஒன்று மிருபது மோ

ரேழ்மேற் பத்துடனே, நின்றபதி னேழு நேடுங்காற் - குன்றாத, நால்வகை யாழி ற்கு நன்னரம்பு சொன்முறையே, மேல்வகை நூலோர் விதி" என்றாராகலின். இனி இவ்வியாழென்னும் ஒன்றிற்கமைந்த பலவுறுப்பாகிய "கோட்டின தமைதியுங் கொளுவிய வாணியு மாட்டிய பத்தரின் வகையு மீரட்கமும், தந்திரி யமைதியுஞ் சாற்றிய பிற்வு, முந்திய நூலின் முடிந்த வகையே" வகுக்கப்பட்டனவெல்லாம் கானல்வரியில், "குற்றநீங்கிய யாழ்" என்பதன்கண் விரியக்கூறுதும்.

உசு. குழலுமென்பது வங்கியப்பாடலுமென்றவாறு.

குழல் - வங்கியம்; அதற்கு மூங்கில், சந்தனம், வெண்கலம், செங்காலி, கருங்காலியென ஐந்துமாம். என்னை? "ஓங்கிய மூங்கி லுயர்சந்து வெண்கலமே, பாங்குறு செங் காலி கருங்காலி -பூங்குழலாய், கண்ண னுவந்த கழைக் கிவைக ளாமென்றார், பண்ணமைந்த நூல்வல்லோர் பார்த்து" என்றாராகலின். இவற்றுள் மூங்கிலிற் செய்வது உத்தமம். வெண்கலம் மத்திமம். ஏனைய அதமமாம். மூங்கில் பொழுதுசெய்யும். வெண்கலம் வலிது. மரம் எப்பொழுதும் ஒத்துநிற்கும். இக்காலத்துக் கருங்காலி செங்காலி சந்தனம் இவற்றாற் கொள்ளப்படும்; கருங்காலிவேண்டுமென்பது பெருவழக்கு. கழை - குழல். இவை கொள்ளுங்கால் உயர்ந்த ஒத்தநிலத்திற் பெருகவளர்ந்து நாலுகாற்றுமயங்கின் நாதமில்லையாமாதலான் மயங்காநிலத்தின்கண் இளமையும் நெடும்பிராயமுமின்றி ஒருபுருடாயுப்புக்க பெரியமரத்தைவெட்டி ஒருபுருடாகாரமாகச்செய்து அதனைநிழலிலே யாற இட்டுவைத்துத் திருகுதல் பிளத்தல் போழ்ந்துபடுதல்செய்கையறிந்து ஓர் யாண்டுசென்றபின் இலக்கணவகையான் வங்கியஞ்செய்யப்படும்; என்னை? "உயர்ந்த சமதலத் தோங்கிக்கா ணுன்கின், மயங்காமை நின்ற மரத்தின்-மயங்காமே, முற்றியமா மரந் தன்னை முதறடிந்து, குற்றமிலோ ராண்டிற் கொளல்" என்றாராகலின். இதன் பிண்டியிலக்கணம்: நீளம் இருபதுவிரல்; சுற்றளவு நாலரைவிரல். இது துளையிடமிடத்து நெல்லரிசியில் ஓர்பாதி மரனிறுத்திக்கடைந்து வெண்கலத்தாலே அணைசுபண்ணி இடமுகத்தையடைத்து வலமுகம் வெளியாகவிடப்படும். என்னை? "சொல்லு மிதற்களவு நாலேங்காஞ் சுற்றளவு, நல்லவிர லலரையா நன்னுதலாய் - மெல்லத், துளையளவு நெல்லரிசி தூம்பிடமாய, வளைவலமேல் வங்கிய மென்" என்றாராகலின். இனித் துளையளவிலக்கணம்: அளவு இருபதுவிரல். இதிலே தூம்முகத்தின் இரண்டுநீக்கி முதல்வாய்விட்டு இம்முதல்வாய்க்கு ஏழங்குலம்விட்டு வளைவாயினுமிரண்டுநீக்கி நடுவினின்ற ஒன்பதுவிரலினும் எட்டுத்துளையிடப்படும். இவற்றுள் ஒன்று முத்திரையென்றுகழித்துநீக்கி நின்ற ஏழினும் ஏழுவிரல்வைத்து ஊதப்படும். துளைகளின் இடைப்பரப்பு ஒருவிரலகலம் கொள்ளப்படும். "இருவிரல்க ணீக்கி முதல்வாயேழ் நீக்கி, மருவு துளையெட்டு மன்னும் - பெருவிரல்க, ளலஞ்சு கொள்க பரப்பென்ப நன்னுதலாய், கோலஞ்செய் வங்கியத்தின் கூறு" என்றாராகலின். இவ்வங்கியம் ஊதுமிடத்து வளைவாய்சேர்ந்த துளையை முத்திரையென்றுநீக்கி முன்னின்ற ஏழினையும் ஏழுவிரல்பற்றி வாசிக்க. ஏழுவிரலாவன: இடக்கையிற்பெருவிரலும் சிறுவிரலுநீக்கி மற்றைமூன்றுவிரலும், வலக்கையிற் பெருவிரலொழிந்த நான்குவிரலும் ஆக ஏழுவிரலுமென்க. என்னை? "வளைவா யருகொன்று முத்திரையாய் நீக்கித், துளையேழி னின்ற விரல்கள் - விளையாட், டிடமூன்று நான்குவல மென்றார்கா ணேகா, வடமாரு மென்முலையாய் வைத்து" என்றாராகலின். இவ்வங்கியத்து ஏழுதுளைகளில் இசைபிறக்குமாறு: அஃது எழுத்தாற்பிறக்கும். எழுத்து, ச ரி க ம ப த நி என்பன. இவ்வேழெழுத்தினையும்

மாத்திரைப்படுத்தித்தொழில் செய்ய இவற்றுள்ளே ஏழிசையும்பிறக்கும். ஏழிசை யாவன: சட்சம், இடபம், காந்தாரம், மத்திமம், பஞ்சமம், தைவதம், நிடாதமென்பன. இவைபிறந்து இவற்றுள்ளே பண்கள் பிறக்கும். என்னை? "சரிக மபதநியென் றேழெழுத்தாற் றானம், வரிபரந்தகண்ணினாய் வைத்துத் - தெரிவரிய, வேழிசையுந் தோன்று மிவற்றுள்ளே பண்பிறக்குஞ், சூழ்முதலாஞ் சுத்தத் துளை" என்றாராகலின்.

௨௬. இத்தன்மைத்தாகிய குழலுமென்க.

௨௬. சீருமென்பது "செம்முறை யுறழ்பே மெய்ந்நிலை கொட்ட, னீட்ட லிமிர்த்தல்" என்றுசொல்லப்படாநின்ற வண்ணக்கூறுபாட்டையும் இருவகைத்தாளக்கூறுபாட்டையும் பாலைநிலையினையும் பண்ணுநிலையினையும் நிலைப்படப்படுத்துத் தூய்தாகக்காட்டுந் தன்மையுமென்க.

இதன்பகுதியெல்லாம் ஈண்டுரைப்பிற்பெருகும். வந்தவழிக்கண்டுகொள்க. அஃதன்றித் தாளவகையோத்தினுட் கண்டுகொள்க.

௨௬. மிடறுமென்பது * சாரீரவினையுமென்றவாறு.

அதனைப், "பூதமுதற் சாதனத்தாம் புற்கலத்தின் மத்திமத்து, நாதமுத லாமெழுத்து நாலாகி-வீதி, வருவரத்தாற் றானத்தால் வந்து வெளிப்பட், டுருவரத்தாற் றோற்ற மிசைக்கு" என்பதனாலுணர்க. புற்கலம் - உடம்பு. அப்புற்கலத்துக்கு முதலாயுள்ள பூதமாவன: மண் நீர் தீ வளி வானெனவிவை. என்னை? "மண்ணுடனீர் நெருப்புக் கால்வான மென்றிவைதா, மெண்ணிய பூதங்க ளென்றறிந்து - நண்ணிய, மன்னர்க்கு மண்கொடுத்து மாற்றார்க்கு விண்கொடுத்த, தென்னவர்கோ மானே தெளி" என்றாராகலின். இப்பூதங்களைந்தாலும் புற்கலமாமென்ற ஆசானை மாணாக்கன் பணிந்து பூதங்கடாம் ஒன்றோடொன்று கூடுவனவல்ல; மண் செறிதலைக் குணமாகவுடைத்து; நீர் நெகிழ்தலைக் குணமாகவுடைத்து; தீத் தெறுதலைக் குணமாகவுடைத்து; காற்று ஓரிடத்தும் நிலைபெற்றுநிற்பதன்று; ஆகாயமென்பது ஒருருவுண்டுடில்லையன்று; அன்றியும் "செப்பிய பூதங்கள் சேர்ந்தோர் குறியன்றே, யப்பரிச மண்ணைந்து நீர்நாலா - மொப்பரிய, தீயாகின் மூன்றிரண்டு காற்றம் பரமொன்று, வேயாறுந் தோளி விளம்பு" என்பதனால் மண் ஐந்துபயனுடைத்து; நீர் நான்குபயனுடைத்து; தீ மூன்றுபயனுடைத்து; காற்று இரண்டுபயனுடைத்து; வான் ஒருபயனுடைத்து; ஆதலால் இவை ஒன்றோடொன்று கூடுவனவல்லவாகவும் இவற்றின் கூட்டமுடம்பென்றீராதலால் இவ்வைந்தின்கூட்டம் உடம்பாவது எவ்வாறோவெனின்,—இதற்குவிடை: "மெய்வாய்கண் மூக்குச் செவியெனப் பேர்பெற்ற, வைவாயு மாயவற்றின் மீதடுத்துத் - துய்ய, சுவையொளியூ றோசை நாற்றமென் றைந்தா, லவைமுதற் புற்கலமாம்" என்பது பூதங்கள் பரிணமித்து உடம்பாமாறுகூறுகின்றது. பூதங்களைந்தும் தத்தம் தன்மைநீங்கி மண் உடம்பாயும், நீர் வாயாயும், தீக் கண்ணாயும், காற்று மூக்காயும், ஆகாயம் செவியாயு நின்று உடம்பாம். பொறிகடோறும் வினியோகப்பட்ட புலன் சுவைமுதல் ஐந்துவகைப்படும். இவ்வைந்தும் பொறியைந்தினுமேறி, மண்ணால் உடம்பு ஊறாயும், நீரால் வாய் சுவையாயும், தீயாற் கண் ஒளியாயும், காற்றால் மூக்கு நாற்றமாயும், வானாற் செவி ஓசையாயும்வந்து உடம்பாம். அன்றியும் மண்ணின்பகுதி நரம்பு இறைச்சி என்பு மயிர் தோலென்வைந்து. நீரின்பகுதி நீர் மூளை சுக்கிலம் நிணம் உதிரமெனவைந்து. "பசிசோம்பு மைதுனங் காட்சிநீர் வேட்கை,

* சரீரவீணையென்றும் பிரதிபேதமுண்டு.

தெரிகின்ற தீக்குணமோ ரைந்து - மொசிகின்ற, போக்கு வரவுநோய் கும்பித்தன் மெய்ப்பரிசம், வாக்குடைய காற்றின் வகை" என்பது தீயின்குணமும் காலின்குணமுமுணர்த்துகின்றது; ஆவன: பசி சோம்பு மைதுனம் காட்சி நீர்வேட்கையெனவிவை தீக்குணம். போக்கு வரவு நோய் கும்பித்தல் பரிசமெனவிவை காற்றின்குணம். "ஓங்கும் வெகுளி மதமரன மாங்கார, நீங்கா வுலோபமுட னிவ்வைந்தும்-பாங்காய, வண்ண மூலமடவாய் வானகத்தின் கூறென்று, றெண்ணிமிக நூலுணர்ந்தோ ரெண்." இது ஆகாயத்தின்குணமுணர்த்துகின்றது. வெகுளி மதம் மானம் ஆங்காரம் உலோபமெனவிவை. இப்பூதகுணம் இருபத்தைந்துங் கொண்டு உடம்பாம். "ஒப்பார் பிராண னபான னுதான னுடன், றப்பா வியானன் சமானனே - யிப்பாலு, நாகன் றனஞ்சயன் கூர்மன் கிருகரன், றீதிலாத் தேவதத்த னே." என்பது தசவாயுக்களையுமுணர்த்துகின்றது. ஆவன: பிராணன் அபானன் உதானன் வியானன் சமானன் நாகன் கூர்மன் கிருகரன் தேவதத்தன் தனஞ்சயனெனவிவை. "இடைபிங் கலைசுழுனை காந்தாரி யத்தி, புடைகின்ற சிங்குவை சங்கி னிபூடாவோ, டங்குகு கன்னி யலம்பு வெனவுரைத்தார், தங்குதச நாடிக டாம்" தசநாடிகளாவன: இடை, பிங்கலை, சுழுமுனை, காந்தாரி, அத்திசிங்குவை, சங்கினி, பூடா, குகு, கன்னி, அலம்பு எனவிவை; "பூத வகைகளோ ரைந்தாய்ப் பொறியைந்தாய், வாதனையோ ரையைந்தாய் மாருதமு, மேதகுசீர்ப், பத்தாகு நாடிகளும் பப்பத்தாம் பாரிடத்தே, முத்திக்கு வித்தா முடம்பு" என்பது பூதபரிணாமமுணர்த்துகின்றது. பூதங்களைந்தாவன: மண் முதலாயின; பொறியைந்தாவன: செவிமுதலாயின; புலனைந்தாவன: சத்தமுதலாயின; வாதனையையைந்தாவன: நரம்புமுதலிய ஐந்தும், நீர்முதலிய ஐந்தும், பசிமுதலிய ஐந்தும், போக்குமுதலிய ஐந்தும், வெகுளிமுதலிய ஐந்தும். தசவாயுக்களாவன: பிராணன்முதலியபத்தும். தசநாடிகளாவன: இடை பிங்கலைமுதலிய பத்தும். மூலாதாரத்து எழுபத்திராயிரநாடிகளும் பீர்க்கங்கூட்டின் மூன்றுகண்ணும் போல இடை பிங்கலை சுழுமுனையென்னும் மூன்றுநாடிகளுமாய் நடுவுநின்ற சுழுமுனையொழிய இரண்டானும் மேனோக்கியேறி இரண்டுமூக்கானும் ஒரோர் பாரிசத்து ஐந்து நாழிகையாகக் கொண்டு ஒருமாத்திரையில் நூற்றிருபத்தைந்து சுவாதமாய் ஒருசுவாதத்திலே பன்னிரண்டங்குலிவாயுப் புறப்பட்டு நாலங்குலி தேய்ந்து எண்விரலடங்குகின்றது பிராணவாயுவெனக்கொள்க. மாத்திரையாவது: இரண்டரை நாழிகையை எட்டுக்கூறிட்டு ஒருகூறென்றறிக. அபானவாயு மலமூத்திரங்களைப் பெய்விக்கும். உதானன் கண்டத்தானத்தில் நிற்கும். வியானவாயு போக்குவரவு செய்து இயங்கப்பண்ணும். சமானவாயு அறுவகைச்சுவையையும் அன்னத்தையும் பிரித்து எழுவகைத் தாதுவின்கண்ணுங்கலப்பிக்கும். கூர்மன் இமைப்பும் விழிப்பும் உறக்கமும் உணர்ச்சியும் பண்ணும். நாகன் விக்கலிடுவிக்கும். கிருகரன் கோபத்தைப்பண்ணுவிக்கும். தேவதத்தன் உடம்பெரிப்பைப் பண்ணுவிக்கும். தனஞ்சயன் பிராணன் போனபின்னும் உடம்பைவிடாதேநின்று மூன்றுநாளுதிப்பித்து உச்சந்தலையிற் பிறகூற்றிலே மூன்றுநெற்கிடை வெடித்துப்போமென்றறிக. நாடிகள் எழுபத்திராயிரத்தினும் தசநாடிகளும் தசவாயுக்களும் பிரதானமெனக்கொள்க. என்னை? "இடைபிங் கலையிரண்டு மேறும் பிராணன், புடைகின் றபானன்மலம் போக்குந் - தடையின்றியுண்டனகீ ழாக்கு முதானன் சமானனெங்குங், கொண்டெறியு மாறிரதக் கூறு" (க) எனவும், "கூர்ம னிமைப்புவிழி கோணுங்கன் விக்கலாம், போர்வில் வியானன் பெரிதியக்கும் - போர்மலியுங், கோபங் கிருகரனுங் கோப்பி னுடம்பெரிப்புத், தேவதத்த னைகமென்று தேர்" (உ) எனவும், "ஒழிந்த தனஞ்சயன்பே ரோதி னுயிர்போ

ய்க், கழிந்தாலும் பின்னுடலைக் கட்டி-யழிந்தழிய, மூந்நா ளுநிப்பித்து முன்னியவான் மாவின்றிப், பின்னு வெடித்துவிடும் போந்து." (௩) எனவும் இசைநுணுக்க முடைய சிகண்டியாரும் கூறினாராகலின். இங்ஙனம் பூதங்களானும் பொறிமுதலியவற்றானும் வாயுக்களானும் நாடிகளானும் பரிணமித்துச் சுக்கிலசுரோணிதங்களாலே உடம்பாகக்கொண்டு இருவினையுந் தன்னகத்தடக்கி உயிர்பிறக்குமென்றறிக. "துய்யவுடம் பாவன தொண்ணூற்று றங்குலியா, மெய்யெழுத்து நின்றியங்கு மெல்லத்தான் – வையத், திருபாலு நாற்பத் தெழுபாதி நீக்கிக், கருவாகு மாதாரங் காண்" என்பது இசைக்குப் பிறப்பிடமாயுள்ள ஆதாரமுணர்த்துகின்றது. சரீரத்தளவு தன்கையால் தொண்ணூற்றுறங்குலம. இதனுள் மேலே நாற்பத்தேழரையங்குலமும் கீழே நாற்பத்தேழரையங்குலமும்விட்டு நடுநின்ற ஓரங்குலம் மூலாதாரம். இதன்மேலே நால்விரல்விட்டுப் பின்னுதாரநின் றியங்குமெனக்கொள்க. "ஆதாரம் பற்றியசைவ முதலெழுத்து, மூதார்ந்த மெய்யெழுத்து முன்கொண்டு – போதாரு, முந்தியிடைவளியா யோங்குமிடை பிங்கலையால், வந்துமே லோசையாம் வைப்பு." "ஐவகைப் பூதமு மாய சரீரத்து, மெய்பெற நின்றியங்கு மெய்யெழுத்தாற் – றுய்ய, வொரு நாடி நின்றியங்கி யுந்திமே லோங்கி, வருமா லெழுத்துடம்பின் வந்து."

இனி ஆளத்தியாமாறுணர்த்துகின்றது. "மகரத்தி னொற்றாற் சுருதி விரவும், பகருங் குறினெடில்பா ரித்து – நிகரிலாத், தென்னா தெனாவென்று பாடுவரே லாளத்தி, மன்னுவிச் சொல்லின் வகை" முதற்பாடுமிடத்து மகரத்தினொற்றாலே நாதத்தையுச்சரிக்குமரபுபகரிற் பாரித்து முற்கூறிய நாதத்தினைத் தொழில்செய்யுமிடத்துக் குற்றெழுத்தாலும் நெட்டெழுத்தாலுஞ்செய்யப்படும். அவை அச்சு பாரணையென்றுபெயர்பெறும். அச்சுக்கு எழுவாய் குற்றெழுத்து. பாரணைக்கு எழுவாய் நெட்டெழுத்து. அச்சு தாளத்துடனிகழும். பாரணை கூத்துடனிகழும். ஆளத்திசெய்யுமிடத்துத் தென்னாவென்றும் தெனாவென்றும் இரண்டசையுங்கூட்டித் தென்னாதெனாவென்றும் பாடப்படும். இவைதாம் காட்டாளத்தி, நிறவாளத்தி, பண்ணாளத்தியெனமூன்றுவகைப்படும். இவற்றுட் காட்டாளத்தி அச்சுடனிகழும். நிறவாளத்தி நிறங்குலையாமற் பாரணையுடனிகழும். பண்ணாளத்தி பண்ணையே கருதி வைக்கப்படும். "குன்றாக் குறிலைந்துங் கோடா நெடிலைந்து, நின்றார்ந்த மந்றாந் தவ்வொடு-நன்றாக, நீளத்தா லேழு நிதானத்தா னின்றியங்க, வாளத்தி யாமென் றறி" என்பது ஆளத்திக்கு இன்னும் படுவதோரிலக்கணமுணர்த்துகின்றது. குன்றாக்குறிலைந்துங் கோடா நெடிலைந்துமென்பது குற்றெழுத்தாலும் நெட்டெழுத்தாலும் ஆளத்திசெய்யப்படும் எ-று. குற்றெழுத்தைந்தாவன: அ இ உ எ ஒ. நெட்டெழுத்தைந்தாவன: ஆ ஈ ஊ ஏ ஓ எனவிவை. நின்றார்ந்தவென்பது மெய்யெழுத்தாகிய பதினெட்டெழுத்தினுள்ளும் மவ்வும் நவ்வும் தவ்வுமென மூன்றெழுத்தினுமல்லா மற்றையெழுத்துக்கள் ஆளத்திக்கு வரப்பெறா எ-று. இம்மூவகைமெய்யினுள்ளும் மவ்வினம் சுத்தத்திற்குரித்து; நவ்வினம் சாளகத்திற்குரித்து; தவ்வினம் தமிழ்க்குரித்து. விரவும்பெறும். இங்ஙனம் மூலாதாரந்தொடங்கி எழுத்தினுதம் ஆளத்தியாய்ப் பின்னிசையென்றும் பண்ணென்றும்பெயராம். என்னை? "பாவோ டணைத லிசையென்றார் பண்ணென்றார், மேவார் பெருந்தான மெட்டானும - பாவாய், யெடுத்தன் முதலா விருநான்கும் பண்ணிப், படுத்தமையாற் பண்ணென்று பார்" பல இயற்பாக்களுடனே நிறத்தை இசைத்தலால் இசையென்றுபெயராம். பெருந்தானமெட்டினும் கிரியைகளெட்டானும் பண்ணிப்படுத்தலாற் பண்ணென்று பெயராயிற்று. பெருந்தானமெட்டாவன:

நெஞ்சும் மிடறும் நாக்கும் மூக்கும் அண்ணாக்கும் உதடும் பல்லும் தலையுமெனவிவை. கிரியைகளெட்டாவன: எடுத்தல் படுத்தல் நலிதல் கம்பிதம் குடிலம் ஒலி உருட்டு தாக்கு எனவிவை.

இங்ஙனம்பிறந்த பண்ணைப்படும் பண்ணும் இசையுமாகிய இவற்றைப் பயக்கு மிடறு, ஆகுபெயரான் மிடற்றுப்பாடலு மென்றாயிற்று.

உஎ. தாழ்குரற் றண்ணுமை யென்பது தாழ்ந்த குரலினையுடைய தண்ணுமைக் கருவிமுதலாயின வாசித்தலுமென்க. அவையாவன: பேரிகை, படகம், இடக்கை, உடுக்கை, மத்தளம், சல்லிகை, கரடிகை, திமிலை, குடமுழா, தக்கை, கணப்பறை, தமருகம், தண்ணுமை, தடாரி, அந்தரி, முழவு, சந்திரவளையம், மொந்தை, முரசு, கண்விடு தூம்பு, நிசாளம், துடுமை, சிறுபறை, அடக்கம், தகுணிச்சம், விரலேறு, பாகம், உபாங்கம், நாழிகைப்பறை, துடி, பெரும்பறையெனத் தோலாற்செய்யப்பட்டகருவிகள்; என்னை? "பேரிகை படக மிடக்கை யுடுக்கை, சீர்மிகு மத்தளஞ் சல்லி கை கரடிகை, திமிலை குடமுழாத் தக்கை கணப்பறை, தமருகந் தண்ணுமை தாவி றடாரி, யந்தரி முழவொடு சந்திர வளைய, மொந்தை முரசே கண்விடு தூம்பு, நிசாளந் துடுமை சிறுபறை யடக்க, மாசி றகுணிச்சம் விரலேறு பாகந், தொக்க வுபாங்கந் * துடிபெரும் பறையென, மிக்க நூலோர் விரித்துரைத் தனரே" என்றாராகலின். இவை அகமுழவு அகப்புறமுழவு புறமுழவு புறப்புறமுழவு † பண்ணமைமுழவு நாண் முழவு காலைமுழவென எழுவகைப்படும். அவற்றுள் அகமுழவாவன முன்சொன்ன ‡ உத்தமமான மத்தளம் சல்லிகை இடக்கை கரடிகை பேரிகை படகம் குடமுழா வெனவிவை. அகப்புறக்கருவியாவன: முன்சொன்ன மத்திமமான தண்ணுமை தக்கை தகுணிச்சமுதலாயின. புறமுழவாவன: முன்சொன்ன அதமக்கருவியான கணப்பறைமுதலியன. புறப்புறக்கருவியாவன: முற்கூறப்படாத நெய்தற்பறைமுதலாயின. பண்ணமைமுழவாவன: முன்சொன்ன வீரமுழவுநான்கும். அவையாவன முரசு நிசாளம் துடுமை திமிலையெனவிவை. நாண்முழவாவன: நாட்பறை; ஆவது நாழிகைப்பறை. காலைமுழவாவன முன் துடியென்றது.

இனி இவற்றுள், மத்தளம்: மத்து ஓசைப்பெயர்; இசையிடனாகிய கருவிகட்கெல்லாம் தளமாதலான் மத்தளமென்று பெயராயிற்று. இக்கருவி பலகூத்திற்கும் உரித்தாகலானும் பாடல் எழுத்தான் உள்ளே பிறத்தலானும் முழவுகளெல்லாம் இதனுள்ளே பிறத்தலானும் இதனை நான்முகனுமென்ற வாறு.

சல்லிகையென்பது சல்லென்ற ஓசையையுடைத்தாதலாற் பெற்றபெயர்.

ஆவஞ்சியெனினும் குடுக்கையெனினும் இடக்கையெனினுமொக்கும்; அதற்கு ஆவினுடைய வஞ்சித்தோலைப் போர்த்தலால் ஆவஞ்சியென்று பெயராயிற்று; குடுக்கையாகவடைத்தலாற் குடுக்கையென்றுபெயராயிற்று; வினைக்கிரியைகள் இடக்கையாற்செய்தலின் இடக்கையென்றுபெயராயிற்று.

---

* முன்புகூறிய நாழிகைப்பறை இவ்விடத்துக்கூறப்பட்டிலது.

† பன்மைமுழவெனவும் பிரதிபேதமுண்டு.

‡ "தரித்த மதங்க மத்தளஞ் சல்லி, பொருந்த கரடிகையே பேரி - யுரத்த, படகங் குடமுழவம் பாங்காய வேழு, மடைவே முதற்கருவி யாம்" என்றார் சுத்தாநந்த

கரடி கத்தினாற்போலும் ஓசையையுடைத்தாதலாற் கரடிகையென்று பெயரா யிற்று.

பிறவற்றையும் இங்ஙனம் உய்த்துணர்ந்துகொள்க.

இவற்றுள் முதலிற் கரங்கொள்வது மத்தளமாதலின் முதற்கருவியாயிற்று.

இடைக்கருவி சல்லி; இடைகொளவைத்ததாகலின். கடைக்கருவி உடுக்கை; கடைக்கட்டுக்கு உரித்தாகலின்.

இங்ஙனமாகிய கருவிகட்கெல்லாம் முதலாதனேக்கித் தண்ணுமையொன்றனை யுமே கூறினர்.

உஎ. ஆடலொடென்பது அகக்கூத்துப் புறக்கூத்துப் பதினோராடலென்றுசொ ல்லப்படாநின்ற ஆடலுடனேயென்க. ஒடு - உடனிகழ்ச்சி; "ஒடுவென் கிளவி யுட னிகழ் வாகும்" என்ருராகலின். இச்சொல்லப்பட்டவற்றுடனே யென்றவாறு.

உஎ - உஅ. இவற்றி னிசைந்த பாட லிசையுடன் படுத்தென்பது இச்சொல்ல ப்பட்ட கூத்துக்களுக்குச் சேரச்செய்த உருக்களை இசைகொள்ளும்படியும் சுவைபொ ருந்தும்படியும் புணர்க்கவல்லனாகி யென்க.

உகூ. வரிக்குமாடற்கு முரிப்பொருளியக்கியென்பது செந்துறை வெண்டுறை என்னப்படாநின்ற இருவகைப்பாடல்களுக்கும் உரிமைப்பொருளாயமைந்த இயக்க நான்கினையுமமைத்தென்றவாறு.

௩௦. தேசிகத்திருவினோசை கடைப்பிடித்தென்பது இயற்சொல் திரிசொல் தி சைச்சொல் வடசொலென்றுசொல்லப்பட்ட சொற்கள் இசைபூணும்படியைக் கடை ப்பிடித்தறிந்தென்றவாறு.

௩க - ௩உ. தேசிகத் திருவி னோசை யெல்லா, மாசின் றுணர்ந்த வறிவினனாகி - என்பது இச்சொற்களிற் புணர்ப்புண்ட இசைவேறுபாடுகளையெல்லாம் குற்றந்தீர உணரவல்ல அறிவினையுடையனாகியென்க.

௩௩. கவியது குறிப்புமென்பது இயற்புலவனினைந்த கோட்பாடுமென்க.

௩௩. ஆடற் றொகுதியுமென்பது ஆடலாசிரியனிடம் மேல்வரவுகளின் தொகுதி யுமென்க.

௩௪. பகுதிப்பாடலுமென்பது இவற்றின்பகுதிக்கமைந்த பாடலுமென்க.

௩௪. கொளுத்துங் காலையென்பது இக்கூத்துக்களை ஆசிரியன் குறிப்புக்கும் பா டலுள்ளிட்டவற்றுக்கும் சேரவியற்றுமிடத்தென்க.

௩௫ - ௩௬. வசையறு கேள்வி வகுத்தனன் விரிக்கு, மசையா மரபி னிசையோ ன் றானுமென்பது இச்சொல்லப்பட்டவற்றைக் குற்றந்தீர்ந்த நூல்வழக்காலே வகுக் கவும் விரிக்கவும்வல்ல பாடலாசிரியனுமென்க.

இசையுடன்படுத்து இயக்கிக் கடைப்பிடித்து உணர்ந்த அறிவினனாகி விரிக்கும் இசையோனென்க.

[கவிஞன் அமைதி.]

௩௭ - ௪௪. இமிழ்கடல் வரைப்பிற் றமிழக மறியத்
தமிழ்முழு தறிந்த தன்மைய னாகி
வேத்தியல் பொதுவிய லென்றிரு திறத்தி
னாட்டிய நன்னூ னன்கு கடைப்பிடித்
திசையோன் வக்கிரித் திட்டத்தை யுணர்ந்தாங்
கசையா மரபி னதுபட வைத்து
மாற்றோர் செய்த வசைமொழி யறிந்து
நாத்தொலை வில்லா நன்னூற் புலவனும்

௩௭-௩௮. இமிழ்கடல் வரைப்பிற் றமிழக மறியத், தமிழ்முழு தறிந்த தன்மைய னாகி - ஆரவாரத்தையுடைய கடல்சூழ்ந்தநிலத்திலே வடக்கும் தெற்கும் குடக்கும் குணக்கும் வேங்கடங் குமரி தீம்புனற்பௌவமெனத் தமிழ்நாட்டிற்கு எல்லைகூறப்பட்ட தமிழ்த்தேசத்தாரறிய மூன்றுதமிழும் போமென்னுந் தன்மையையுடையனாகி யென்க.

௩௯-௪௦. வேத்தியல் பொதுவிய லென்றிரு திறத்தி, னாட்டிய நன்னூ னன்குக டைப் பிடித்தென்பது வேத்தியலென்றும் பொதுவியலென்றுங் கூறப்பட்ட இரண்டு கூறுபாட்டினையுடைய நாடகநூலை நன்றாகக்கடைப்பிடித்தென்க.

வேத்தியல் - அகம், பொதுவியல் - புறமென்பாரும், பிறிதுகூறுவாருமுளர். அவை முடிந்தநூல்களிற் கண்டுகொள்க.

௪௧-௪௨. இசையோன் வக்கிரித் திட்டதை யுணர்ந்தாங், கசையா மரபி னது பட வைத்தென்பது இசைப்புலவன் ஆளத்திவைத்த பண்ணீர்மையை முதலும் முறையும் முடிவும் நிறையும் குறையும் கிழமையும் வலிவும் மெலிவும் சமனும் வரையறையும் நீர்மையுமென்னும் பதினொருபாகுபாட்டினானுமறிந்து அறிந்தவண்ணம் அவன் தாளநிலையில் எய்தவைத்த நிறம் தன்கவியினிடத்தே தோன்றவைக்க வல்லனாயென்க.

௪௩-௪௪. மாற்றோர் செய்த வசைமொழி யறிந்து, நாத்தொலை வில்லா நன்னூற் புலவனுமென்பது பகைவராற்செய்யப்பட்ட வசையின் அளவறிந்து அவைதோற்றாதபடியிலே வசையின்மொழிகளான் நாடகக்கவி செய்யவல்ல நல்ல நூலைவல்ல புலவனுமென்றவாறு.

"இன்ன னல்லோன் செய்குவ னாயிற், றேற்றா மாந்த ராரியம் போலக், கேட்டார்க் கெல்லாம் பெருநகை தருமே" என்றாரர்கவின்.

தன்மையனாகிக் கடைப்பிடித்து உணர்ந்து வைத்து அறிந்து தொலைவில்லாத புலவனுமென்க.

[தண்ணுமையோன் அமைதி.]

௪௫ - ௫௫. ஆடல் பாட லிசையே தமிழே
பண்ணே பாணி தூக்கே முடமே
தேசிக மென்றிவை யாசி னுணர்ந்து
கூடை நிலத்தைக் குறைவின் றிகுந்தாங்கு

வார நிலத்தை வாங்குபு வாங்கி
வாங்கிய வாரத் தியாழுங் குழலு
மேங்கிய மிடறு மிசைவன கேட்பக்
கூருகிர்க் கரணங் குறியறிந்து சேர்த்தி
யாக்கலு மடக்கலு மீத்திறம் படாமைச்
சித்திரக் கரணஞ் சிதைவின்று செலுத்து
மத்தகு தண்ணுமை யருந்தொழின் முதல்வனும்

இ - ள். எல்லாக்கூத்துக்களும் எல்லாப்பாட்டுக்களும் எல்லாவிசைகளும் வடவெழுத்தொரீஇ வந்த எழுத்தானே கட்டப்பட்ட வாக்கியக்கட்டளைக் கூறுபாடு களும் எல்லாப்பண்களும் இருவகைத்தாளங்களும் எழுவகைத்தூக்குக்களும் இவற் றின்குற்றங்களும் இயற்சொல்முதலிய நால்வகைச்சொற்களுமென்று சொல்லப் பட்டனவற்றை நுண்ணிதாக உணர்ந்து ஒரோருருவை இரட்டிக்கிரட்டி சேர்த்த விடத்து நெகிழாதபடி நிரம்பநிறுத்தவும் அவ்விடத்துப் பெறும் இரட்டியேயாய்ப் பாகவுருவானவழி நிற்குமானநிறுத்திக் கழியுமானங்கழிக்கவும் வல்லனாய் இப்படி நிகழ்ந்த உருக்களில் யாழ்ப்பாடலும் குழலின்பாடலும் கண்டப்பாடலும் இயைந்து நடக்கின்றபடி கேட்போர் செவிக்கொள்ள அமைந்த கரணத்தாற் குறியறிந்து சேரவாசித்து மற்றைக் கருவிகளிற் குறைநிரப்புதலும் மிகுதியடக்குதலும் ஆக்கு மிடத்தும் அடக்குமிடத்தும் இசையில் இரந்திரந்தோன்றாதபடியே செய்தலும் செய்யுமிடத்துக் கைத்தொழில் அழகுபெறச் செய்துகாட்டலும் வல்லனாய அழகு தக்க தண்ணுமைக்கருவியினையும் அரிய தொழிலினையுமுடைய ஆசிரியனுமென்ற வாறு.

இது பொழிப்புரை.

சரு. ஆடலென்பது எல்லாக்கூத்துக்களும் எ - று.

சரு. பாடலென்பது பண்ணன்முதலிய எல்லாப்பாடலியல்பும் எ - று.

சரு. இசையென்பது நரப்புடைவாலுரைக்கப்பட்ட பதினோராயிரத்துத் தொள்ளாயிரத்துத் தொண்ணூற்றொன்றாகிய ஆதியிசைகளும் எ - று.

அவையாவன : "உயிருயிர் மெய்யள வுரைத்தவைம் பாலினு, முடறமி ழிய லிசை யேழுடன் பகுத்து, மூவேழ் பெய்தந் ...., தொண்டு மீண்ட பன்னீ ராயிரங், கொண்டன ரியற்றல் கொளைவல்லோர் கடனே" என்னுஞ்சூத்திரத்தா லுறழ்ந்து கண்டுகொள்க.

சரு. தமிழென்பது வடவெழுந்தொரீஇ வந்த எழுத்தானே உறழ்ந்து கட்டப் பட்ட வாக்கியக்கூறுகளும், இயலிசைநாடகமென்று சொல்லப்பட்ட மூவகைத் தமிழ்களும் எ - று.

சகூ. பண்ணென்பது நரப்படைவால் நிறந்தோன்றப் பண்ணப்படாநின்ற பண்ணும் பண்ணியற்றிறமும் திறமும் திறத்திறமும் எ - று.

சகூ. பாணி என்பது இருவகைத்தாள விகற்பங்களும் எ - று.

சகூ. தூக்கென்பது செந்தூக்கு முதலாய எழு தூக்குக்களும் எ - று.

சகூ. முடமென்பது இவற்றின் குற்றங்களும் எ - று.

சஎ. தேசிகமென்பது இயற்சொன்முதலிய நான்குசொற்கூறாய சொற்பிர யோகமும் எ - று.

சஎ. என்றிவை யாசினுணர்ந்தென்பது என்றுசொல்லப்பட்ட ஒன்பதும் இலக்கணவழியே நுண்ணிதாக அறிந்தென்க.

ஆசு - சிறுமை. ஆசின்றென்பது பாடமாயிற் குற்றமின்றியுணர்ந்தென்க. என்னை? "ஆசே சிறுமையுங் குற்றமு மாகும்" என்றாராகலின். இன்றியென்பது இன்றாயிற்று; செய்யுளாதலின்.

சஅ-சகூ. கூடை நிலத்தைக் குறைவின்று மிகுத்தாங்கு, வார நிலத்தை வாங்குபு வாங்கியென்பது ஒருருவை இரட்டிக்கிரட்டி சேர்த்தவிடத்து நெகிழாதபடி நிரம்பநிறுத்தவும் அவ்விடத்துப் பெறும் இரட்டியேயாய்ப் பாகவுருவானவழி நிற்குமானம் நிறுத்திக் கழியுமானங் கழிக்கவும் வல்லனையென்க.

ருo-ருஉ. வாங்கிய வாரத் தியாழுங் குழலு, மேங்கிய மிடறு மிசைவன சேட்பக், கூருகிர்க் கரணங் குறியறிந்து சேர்த்தியென்பது இப்படி நிகழ்ந்த உருக்களில் யாழ்ப்பாடலும் குழலிசையும் கண்டப்பாடலும் இயைந்து நடக்கின்றபடி கேட்போர் செவிக்கொள்ளத் தண்ணுமைக்கருவியமைந்தகரணத்தாற் குறியறிந்து சேரவாசித்தென்க.

ருகூ. ஆக்கலாவது மற்றைக்கருவிகளிற் குறையைநிரப்புதல்.

ருகூ. அடக்கலாவது மற்றைக்கருவிகளின் மிகுதியை அடக்குதல்.

ருகூ. மீத்திறம் படாமையாவது ஆக்குமிடத்தும் அடக்குமிடத்தும் இரண்டிரண்டு தெரியாமற் செய்வதென்க.

ருச. சித்திரக் கரணஞ் சிதைவின்று செலுத்துமென்பது இவ்வனைத்தும் செய்யுமிடத்துக் கைத்தொழில் அழகுபெறச்செய்து காட்டுமென்க.

ருரு. அத்தகு தண்ணுமை யருந்தொழின் முதல்வனுமென்பது இச்சொல்லப்பட்ட கூறுகளில் ஒன்றுங் குறைவின்றியேயிருக்கும் தண்ணுமைக்கருவியாசிரியனுமென்க.

உணர்ந்து மிகுத்து வாங்கிச் சேர்த்திச் செலுத்தும் தண்ணுமைமுதல்வனுமென்க.

[குழலோன்றமைதி.]

ருகூ-கூகூ. சொல்லிய வியல்பிற் சித்திர வஞ்சனை
புல்லிய வறிந்து புணர்ப்போன் பண்பின்
வர்த்தனை நான்கு மயலறப் பெய்தாங்
கேற்றிய குரலிளி யென்றிரு நரம்பி
னொப்பக் கேட்கு முணர்வின னாகிப்
பண்ணமை முழவின் கண்ணெறி யறிந்து
தண்ணுமை முதல்வன் றன்னொடும் பொருந்தி
வண்ணப் பட்டடை யாழ்மேல் வைத்தாங்

இசையோன் பாடிய விசையி னியற்கை
வந்தது வளர்த்து வருவ தொற்றி
யின்புற வியக்கி யிசைப்பட வைத்து
வார நிலத்தைக் கேடின்று பார்த்தாங்
கீர நிலத்தி னெழுத்தெழுத் தாக
வழுவின் றிசைக்குங் குழலோன் றானும்

௫௪. சொல்லிய வியல்பினென்பது நூல்களிற்சொன்ன முறைமையாலே யென்க.

௫௫-௫௭. சித்திர வஞ்சனை, புல்லிய வறிந்தென்பது சித்திரப்புணர்ப்பும் வஞ்சனைப்புணர்ப்புமென்று சொல்லப்பட்ட இரண்டுகூற்றினையுமறிந்தென்க.

இவற்றுட் சித்திரப்புணர்ப்பாவது இசைகொள்ளும் எழுத்துக்களின்மேலே வல்லொற்றுவந்தவழி மெல்லொற்றுப்போலப் பண்ணீர்மைநிறுத்தல். வஞ்சனைப் புணர்ப்பாவது இசைகொள்ளா வெழுத்துக்களின்மேலே வல்லொற்று வந்தவழி மெல்லொற்றுப்போல நெகிழ்த்துப்புணர்த்தல்.

௫௭. புணர்ப்போன்பண்பினென்பது பாடலாசிரியனையொத்த அறிவினையுடையனாகியென்க.

௫௮. வர்த்தனை நான்கு மயலறப் பெய்தாங்கென்பது வங்கியத்து விரலுளர்ந் தூதுந் துளைகள் தர்ச்சனி முதலாக விட்டுப்பிடிப்பது ஆரோகணமாதலானும் கனிட்டன்முதலாக விட்டுப்பிடிப்பது அவரோகணமாதலானும் இரண்டுகூறும் இப்படிச் செய்தல் வர்த்தனையாகலான் இப்படியால் நூற்றுமூன்று பண்ணீர்மைகளையும் தந்நிலைகுலையாமற் காட்டவல்லனாயென்க.

தர்ச்சனி - சுட்டுவிரல். கனிட்டன் - சிறுவிரல். ஆங்கு - அவ்விடத்து.

௫௯ - ௬௦. ஏற்றிய குரலிளி யென்றிரு நரம்பி, னொப்பக் கேட்கு முணர்வினனாகியென்பது பதினாற்கோவையினிடத்துக் குரனரம்பு இரட்டிக்கவரும் அரும்பாலையையும், இளி நரம்பு இரட்டிக்கவரும் மேற்செம்பாலையையும், இவைபோல அல்லாத பாலைகளையும் இசைநூல்வழக்காலே இணைநரம்புதொடுத்துப்பாடும் அறிவினையுமுடையனாயென்க.

௬௧. பண்ணமை முழவின் கண்ணெறி யறிந்தென்பது பண்ணுதலமைந்த முழவின் கண்ணெறியினையறிந்தென்றவாறு.

௬௨. தண்ணுமை முதல்வன் றன்னொடும் பொருந்தியென்பது தண்ணுமை முதல்வனுடன் பொருந்தியென்க. தன்னொடுமென்ற உம்மையாற் பொருந்துமிடம் பொருந்தியென்க.

௬௩. வண்ணப் பட்டடை யாழ்மேல் வைத்தாங்கென்பது, பட்டடை - நரம்புகளின் இளிக்குப் பெயர்; என்னை? எல்லாப் பண்ணிற்கும் அடிமணையாதலின். வண்ணம் - நிறம். இதனை யாழ்மேல்வைத்தென்க.

ஆங்கு - அசை. இளிக்கிரமத்தாலே பண்களை யாழ்மேல் வைத்தெனக்கூட்டினுமமையும்.

சுச. இசையோன் பாடிய விசையி னியற்கையென்பது அங்ஙனம்வைத்து அதன்வழியே இசைக்காரன்பாடிய பாட்டினியல்பையென்க.

சுரு. வந்தது வளர்த்தென்பது, பாடுகின்ற பண்வரவுகளுக்குச் சுரம் குறைவு படாமை நிறுத்தியென்க.

சுரு. வருவ தொற்றியென்பது அந்தப்பண்ணுக்கு அயல்விரவாமல் நோக்கி யென்க. ஒற்றல் - நினைதல்.

சுசு. இன்புற வியக்கியென்பது, வண்ணமுதலாகக் காட்டப்பட்ட பாடலில் இயன்ற *அழகெல்லாம் நிரம்பக்காட்டியென்க.

சுசு. இசைபட வைத்தென்பது முற்கூறிய முதலும் முறையுமுதலாய பண் ணிலக்கணம் பதினொன்றையும் நிரம்பவைத்தென்க.

சுஎ. வார நிலத்தைக் கேடின்று பார்த்தென்பது, முதனடை வாரம் கூடை திரளென்றுசொல்லப்படும் இயக்கநான்கினும் முதனடை மிகவும் தாழ்ந்தசெல வினை உடைத்தாகலானும், திரள் மிக முடுகிய நடையினை உடைத்தாகலானும், இவைதவிர்ந்து இடைப்பட்ட வாரப்பாடல் சொல்லொழுக்கமும் இசையொழுக் கமுமுடைத்தாகலானும், கூடைப்பாடல் சொற்செறிவும் இசைச்செறிவுமுடைத் தாகலானும் சிறப்புநோக்கி அவ்விரண்டினுள்ளும் வாரப்பாடலை அளவுநிரம்ப நிறு த்தவல்லனுயென்க. எனவே கூடைப்பாடலும் அமைவதாயிற்று. நிலம் - இடம்.

சுஎ - சுஅ. ஆங், கீர நிலத்தி னெழுத்தெழுத் தாகவென்பது பாடலினிடத் துச் சொன்னீர்மைகளின் எழுத்துக்கள் சிதையாமலே எழுத்தெழுத்தாக இசைக் குங் குழலோனென்க. அன்றியும் ச ரி க ம ப த நி யென்பாருமுளர்.

சுகூ. வழுவின் றிசைக்குங் குழலோன் றானுமென்பது, இச்சொல்லப்பட்ட இயல்புகளை இலக்கணப்படியில் வழுவாமல் வாசித்துக்காட்டவல்ல வங்கியத்தானு மென்க.

அறிந்து மயலறப்பெய்து உணர்வினனுகி, அறிந்து, பொருந்தி, வைத்து வளர் த்து ஒற்றி இயக்கி வைத்துப் பார்த்து இசைக்குங்குழலோனென்க.

[யாழாசிரியன் அமைதி.]

எ0-சுகூ. ஈரேழ் தொடுத்த செம்முறைக் கேள்வியி
னோரேழ் பாலை நிறுத்தல் வேண்டி,
வன்மையிற் கிடந்த தார பாகமு
மென்மையிற் கிடந்த குரலின் பாகமு
மெய்க்கிளை நரம்பிற் கைக்கிளை கொள்ளக்
கைக்கிளை யொழிந்த பாகமும் பொற்புடைத்
தளராத் தாரம் விளரிக் கீத்துக்
கிளைவழிப் பட்டனை ளாங்கே கிளையுந்
தன்கிளை யழிவுகண் டவள்வயிற் சேர,

---

* வழக்கெல்லாமென்றும் பிரதிபேதமுண்டு.

வேனை மகளிருங் கிளைவழிச் சேர
மேல துழையிளி கீழது கைக்கிளை
வம்புறு மரபிற் செம்பாலை யாய
திறுதி யாதி யாக வாங்கவை
பெறுமுறை வந்த பெற்றியி னீங்காது
படுமலை செவ்வழி யரும்பாலையெனக்
குரல்குர லாகத் தற்கிழமை திரிந்தபின்
முன்னதன் வகையே முறைமையிற் றிரிந்தாங்
கிளிமுத லாகிய வெதிர்படு கிழமையுங்
கோடி விளரி மேற்செம் பாலையென
நீடிக் கிடந்த கேள்விக் கிடக்கையி
னிணைநரம் புடையன வணைவுறக் கொண்டாங்
கியாழ்மேற் பாலை யிடமுறை மெலியக்
குழன்மேற் கோடி வலமுறை மெலிய
வலிவு மெலிவுஞ் சமனு மெல்லாம்
பொலியக் கோத்த புலமை யோனுடன்

௭௦ - ௭௧. ஈரேழ் தொடுத்த செம்முறைக் கேள்வியின், ஓரேழ் பாலை நிறுத்தல் வேண்டியென்பது, *ஆயப்பாலையாய்நின்ற பதினாற்கோவை, கோணின்று செப்பமுடைத்தாய்ப் பெண்டிர்க்குரிய தானமுடைய பாடலியல்பொருத்தமைந்த சிறப்புடைத்தாகலான் இதிலே செம்பாலை படுமலைப்பாலை செவ்வழிப்பாலை அரும்பாலை †கோடிப்பாலை விளரிப்பாலை மேற்செம்பாலையெனப்பட்ட ஏழுபாலையினையும் இணைநரம்புதொடுத்து … றுத்திக் காட்டல்காரணமாகவென்க.

௭௨ - ௭௮. வ… கிடந்த தார பாகமு, மென்மையிற் கிடந்த குரலின் பாகமு, மெ… யிற் கைக்கிளை கொள்ளக், கைக்கிளை யொழிந்த பாகமும் பொற்புடைத், தளராத் தாரம் விளரிக் கீத்துக், கிளைவழிப் பட்டன ளாங்கே கிளையுந், தன்கிளை யழிவுகண் டவள்வயிற் சேரவென்பது "தார பாகமுங் குரலின் பாகமு, நேர்படு வண்கிளை கொள்ள நிற்ப, முன்னர்ப் பாகமும் பின்னர்ப் பாகமும், விளரிகுர லாகு மென்மனார் புலவர்" என்னுஞ்சூத்திரத்தின்விதிபற்றி வட்டப்பாலையின்முடிவு தானமாய் வலிந்தநிலைமையினையுடைய தாரம்பெற்ற இரண்டலகில் ஓரலகையும் இப்பாலையின் முதல் தானமாய் மெலிவினிற்கும் குரல்நரம்பு பெற்ற நாலலகில் இரண்டலகையும் தாரநரம்பில் அந்தரக்கோலிலே கைக்கிளையாக நிறுத்தத் தாரந்தான் கைக்கிளையாயிற்று. அந்தநரம்பில் ஒழிந்த ஓரலகையும் பண்டை விளரியிலேகூட்ட அவ்விளரி துத்தநரம்பாயிற்று. இப்படிப் பன்னிரு

* ஆயப்பாலை - நான்குவகைப்பாலையினுள் ஒன்று. நான்குவகையாவன: ஆயப்பாலை, சதுரப்பாலை, வட்டப்பாலை, திரிகோணப்பாலையென்பன; "ஆயஞ் சதுரம் வட்டந் திரிகோணமெனப், பாய நான்கும் பாலை யாகும்" என்பதனாலறிக.

† இதனை இக்காலத்துக்கோடிப்பாலையென வழங்குகின்றனர்.

காற்றிரிக்கப் பன்னிருபாலையும் பிறக்கும். பன்னிருபாலையினுரு தொண்ணூற் ருென்றும் பன்னிரண்டுமோய்ப் பண்கள் நூற்றுமூன் ருதற்குக் காரணமாமெனக் கொள்க. இவ்விடத்துத் தாரசுரம்பின் அந்தரக்கோலைத் தாரமென்முர்; “ தன்ன மூந் தாரமுந் தன்வழிப் படர” என்னுஞ்சூத்திரத்தாலெனக்கொள்க.

எகூ. ஏனை மகளிருங் கிளைவழிச் சேரவென்பது இதனைப் பெண்டிர்க்குரிய தானமாகிய பதினுற்கோவையிலே பொருந்தக்கூட்டவேண்டுமென்றவாறு.

கூட்டும்படி :

அ௦ - அக. மேல துழையிளி கீழ்து கைக்கிளை, வம்புறு மரபிற் செம்பாலை யாயதென்பது உழைமுதற் கைக்கிளை இறுதியாக மெலிவுநான்கும் சமம் ஏழும் வலிவுமூன்றுமாய் உழைமுதலாகச் செம்பாலையாயதென்க.

அஉ - அங. இறுதி யாதி யாக வாங்கவை, பெறுமுறை வந்த பெற்றியி னீங் காதென்பது தாரமுதலாகப் பெறுமுறையாய்வந்தபடியே நீங்காமலென்றவாறு.

கிழமை - அ௫. படுமலை செவ்வழி யரும்பா லையெனக், குரல்குர லாகத் தற் கச் செவ்வழ்தபினென்பது கைக்கிளைகுரலாகப் படுமலைப்பாலையும் துத்தம் குரலா அரும்பப்பாலையும் குரல்குரலாக அரும்பாலையும் தற்கிழமைதிரிந்தபினென்க.

அசு - ஆலைக்கு நரம்பு இரட்டித்தபெற்றித்தென்க.

வெதிர்படு கிழ கூ. முன்னதன் வகையே முறைமையிற் றிரிந்தாங், கிளிமுத லாகிய வக் கிடக்கை மையுங், கோடி விளரி மேற்செம் பாலையென, நீடிக் கிடந்த கேள் விளரி குரலா யினென்பது முன்பிற்படியே தாரம் குரலாகக் கோடிப்பாலையும், செம்பாலை இக் க விளரிப்பாலையும், இளி குரலாக மேற்செம்பாலையுமாய் மேற் றற்கோவைப் ரிநரம்பிரட்டித்த நிலைமையினையுடைத்தாய் இப்படிச்சமைந்த பதி

கூ௦. இலை பாலை நிலையிலென்றவாறு.

கோவைப் பாலைண்நரம் புடையன வணைவுறக் கெ கன்பது இப்பதினுற் பாலையும் இளிகுரலாகிய மேற்செம்பாலையும்போல் ல்குரலாகிய அரும் உழைகுரலாகச் செம்பாலைக்கு உ ஐந்துபாலையும் கைக்கிளைபெ ழும்பயதும கைக்கிளை குரலாகப் படுமலைக்குக் லா துமதுத்தங்குரலாகச் செவ்வழிக்குத் துத்தம்பெய்தும் தாரங்கு கோடிப்பாலைக்குத் தாரம்பெய்தும் விளரிகுரலாக விளரிப்பாலைக்குவிளரி பெய்தும் பாடப்படுமென்றவாறு.

கூக - கூஉ. யாழ்மேற் பாலை யிடமுறை மெலியக், குழல் மேற்கோடி வல முறை மெலிய என்பது. யாழினிடத்து அரும்பாலைமுதலாயின இடமுறை மெலிய வும் குழலினிடத்துக் கோடிப்பாலை முதலாயின வலமுறைமெலியவும் பாடப்படு மென்றவாறு.

கூங - கூச. வலிவு மெலிவுஞ் சமனு மெல்லாம், பொலியக் கோத்த புலமை யோனுடனென்பது இப்படியால் வலிவும் மெலிவும் சமனுமெனப்படாநின்ற தான நிலையினையுடைய இசைக்கூறுபாடுகளுக்கெல்லாம் நரப்புடைவு கெடாமலும் பன ணீர்மை முதலாயின குன்ருமலும் புணர்க்கவல்லனாய் அப்புணர்ப்பிற்றுமைந் எழுத்துக்களால் இசைசெய்யவல்ல யாழாசிரியனுமென்றவாறு.

நிறுத்தல்வேண்டிப்பொலியக்கோத்த புலமையோனென்க.

[அரங்கின் அமைதி.]

௯௫ - ௧௧௩. எண்ணிய நூலோ ரியல்பின் வழாது
மண்ணக மொருவழி வகுத்தனர் கொண்டு,
புண்ணிய நெடுவரைப் போகிய நெடுங்கழைக்
கண்ணிடை யொருசாண் வளர்ந்தது கொண்டு
நூனெறி மரபி னரங்க மளக்குங்
கோலள விருபத்து நால்விர லாக
வெழுகோ லகலத் தெண்கோ னீளத்
தொருகோ லுயரத் துறுப்பின தாகி
யுத்தரப் பலகையோ டரங்கின் பலகை
வைத்தவிடைநில நாற்கோ லாக
வேற்றவாயி லிரண்டுடன் பொலியத்
தோற்றிய வரங்கிற் றொழுதனரேத்தப்
பூதரை யெழுதி மேனிலை வைத்துத்
தூணிழற் புறப்பட மாண்விளக் கெடுத்தாங்
கொருமுக வெழினியும் பொருமுக வெழினியுங்
கரந்துவர லெழினியும் புரிந்துடன் வகுத்தாங்
கோவிய விதானத் துரைபெறு நித்திலத்து
மாலைத் தாமம் வளையுடன் நாற்றி
விருந்துபடக் கிடந்த வருந்தொழி லரங்கத்து

௯௫ - ௯௬. எண்ணிய நூலோ ரியல்பின் வழாது, மண்ணக மொருவழி வகுத்தனர் கொண்டென்பது, எண்ணப்பட்ட சிற்பநூலாசிரியர் வகுத்த இயல்புகளின் வழுவாதவகை அரங்கு செய்தற்கு நிலக்குற்றங்கள் நீங்கினவிடத்திலே நிலம் வகுத்துக்கொண்டென்க.

மண்ணகநிலமாவது: "தந்திரத்து.........அரங் கியற்றுங் காலை, யறனமிழ்த் தியற்று வழக்குடைத் தாகி, நிறைகுழிப் பூழி குழிநிறை வாற்றி, நாற்றமுஞ் சுவையு மதுரமு மாய்க்கனந், தோற்றிய வெண்மைச் சுவட துடைத்தா, யென்புமி கூர்ங்கல் களியுவ ரீணை, துன்ப நீறு துகளிவை யின்றி, யூரகத் தாகி யுளைமான் பூண்ட, தேரகத் தோடுந் தெருவுமுக நோக்கிக், கோடல் வேண்டு மாடலரங் கதுவே" என்பது தந்திரவழி அரங்கு இவ்வுலகத்துச் செய்யுமிடத்துத் *தெய்வத்

* "ஆடலும் பாடலுங் கொட்டும் பாணியும், நாடிய வரங்கு சமைக்குங் காலைத், தேவர் குழாமுஞ் செபித்த பள்ளியும், புள்ளின் சேக்கையும் புற்று நீங்கிப், போர்க்களி யானைப் புரைகூடஞ் சாராது, மாவின் பந்தியொடு மயங்கல்செய் யாது, செருப்புகு மிடமுஞ் சேரியு நீங்கி, நுண்மை யுணர்ந்த திண்மைத் தாகி, மதுரச் சுவைமிகூஉ மதுர நாறித், தீரா மாட்சி நிலத்தொடு பொருந்திய, வித்திறத்த தாகு மரங்கினுக் கிடமே." "அரங்கி னுயரமு மகலமு நீளமும், பொருந்த நாடி யுரைக்குங் காலைப், பெருந்தண் மால்வரைச் சிறுகழை கண்ணிற், கண்ணுனிடை யொருசாண் வளர்ந்தது கொண்டே, இருபத்து நால்விரற் கோலள வதனை,

தானமும் பள்ளியும் அந்தணரிருக்கையும் கூபமுங்குளனும் காவுமுதலாகவுடையன அழியாத இயல்பினையுடைத்தாய் நிறுக்கப்பட்ட குழிப்பூழி குழிக்கொத்துக் கல்லப்பட்டமண் நாற்றமும் மதுரநாறி. இரதமும் மதுரமாகித் தானுந்திண்ணிதாய் என்பும் உமியும் கல்லும் பரலுஞ் சேர்ந்தநிலம் களித்தரை உவர்த்தரை ஈரத்தரை பொல்லாச்சாம்பற்றரை பொடித்தரை என்றுசொல்லப்பட்டனவொழிந்து ஊரின் நடுவணதாகித் தேரோடும்வீதிகளெதிர்முகமாக்கிக்கொள்ளல்வேண்டுமென்க. நிலந்தான், வன்பால் மென்பால் இடைப்பாலென்று மூன்றுவகைப்படும். அவற்றுள், வன்பாலாவது குழியின் மண்மிகுவது. மென்பாலாவது குறைவது. இடைப்பாலாவது ஒப்பு. ஈண்டு இவை பெரும்பான்மையாற்கொள்ளப்படும். அதுவேயென்ற இலேசினானே துவர்ப்புப் பயமும், புளிப்பு நோயும், காழ்ப்புப் பசிநீடுதலும் கைப்புக் கேடும், உவர்ப்புக் கலக்கமும்பண்ணுமாதலான் நீக்கப்பட்டன. என்னை "உவர்ப்பிற் கலக்கமாங் கைப்பின்வருங் கேடு, துவர்ப்பிற் பயமாஞ் சுவைக-ளவற்றிற், புளிநோய் பசிகாழ்ப்புப் பூங்கொடியே தித்திப், பளிபெருகு மாவதரங்கு" என்றார் பரதசேனாபதியார். இதனுள் நாற்றமென்பன கொள்ளிலையும் செந்நெல்லும் சண்பகமும் சுரபுன்னையுமெனவிவை. ஒழிந்தன தீமைப்பால.

இங்ஙனம் ஒருவகையான் அரங்கிற்கு நிலம்வகுத்துக்கொண்டென்க.

௯௭ - ௧௦௦. புண்ணிய நெடுவரைப் போகிய நெடுங்கழைக், கண்ணிடையொருசாண் வளர்ந்தது கொண்டு, நூனெறி மரபி னரங்க மளக்குங், கோலளவிருபத்து நால்விர லாகவென்பது, பொதியின்மலைமுதலாய புண்ணியவரைப்பக்கங்களிலே நெடிதாகி உயரவளர்ந்த மூங்கிலின் கண்ணுக்கண்ணிடை ஒருசாணாக வளர்ந்ததுகொண்டு நூல்களிற்சொல்லுகின்றபடியே அரங்கஞ்செய்ய அளக்குங் கோல் உத்தமன்கைப் பெருவிரலில் இருபத்துநாலுகொண்டது ஒருகோலாக நறுக்கியென்க.

என்னை? "ஒத்த வணுமுத லுயர்ந்துவரு கணக்கி, னுத்தமன் பெருவிர லிருபத்து நாலுள, கோலே கோடல் குறியறிந் தோரே" என்றாராகலின். இதனுள் அணுமுதற் பெருவிரலளவு உயர்ந்துவருமாறு : அணு எட்டுக்கொண்டது தேர்த்துகள் ; தேர்த்துகள் எட்டுக்கொண்டது இம்மி ; இம்மி எட்டுக்கொண்டது எள்ளு ; எள்ளு எட்டுக்கொண்டது நெல்லு ; நெல்லு எட்டுக்கொண்டது பெருவிரலெனக் கொள்க. உத்தமராவார் : கழிய நெடுமையும் கழியக் குறுமையுமில்லோர்.

௧௦௧ - ௧௦௨. எழுகோ லகலத் தெண்கோ னீளத், தொருகோ லுயரத் துறுப்பின தாகியென்பது, இக்கோலால் எழுகோலகலமும் எண்கோனீளமும் ஒருகோற் குறட்டுயரமுமுடையதாயென்க.

என்னை ? "அக்கோ லேழுகன் றெட்டு நீண்டு, மொப்பா லுயர்வு மொருகோலாகு, நற்கோல் வேந்த னயக்குறு வாயின், முக்கோ ரூனு முயரவு முரித்தே"

லெழுகோ லகலத் தெண்கோ னீளத், தொருகோ லுயரத் துறுப்பின தாகி, யுத்தரப் பலகையோ டரங்கின் பலகை, வைத்த விடைநில நாற்கோ லாகப், பூதரையெழுதி மேனிலை வைத்து, நந்தி யென்னுந் தெய்வமு மமைத்துத், தூணிழற் புறப்பட மாண்விளக் கெடுத்து..............கோவும் யானையுங் குரங்கும் பிச்சனும், பாவையும் பாங்குடைப் புருடா மிருகமும், 'யாவையு மெழுதி யிங்கிலம் விளங்கப், பாவையர்க் கியற்றுவ தரங்கெனப் படுமே" என்றார் சுத்தாநந்தப்பிரகாசத்திலும்.

என்றார் செயிற்றியனார் : "அக்கோ லொருகோ லளவுறக் கல்வி, மிக்க கம்மியர் வடகலை விதிமுறைக், கூறிய வன்றியுங் குறிவகைக் கேற்றன, வேற்கச் செய்க வியல்புணர்ந் தோரே" எனக் கூறினருமுளர்.

௧0௩ - ௧0௪. உத்தரப் பலகையோ டரங்கின் பலகை, வைத்த விடைநில நாற்கோ லாக, வேற்ற வாயி லிரண்டுடன் பொலியத், தோற்றிய வரங்கிலென்பது, தூணத்துக்கு மீதுவைத்த உத்தரப்பலகைக்கும் அரங்கினிடத்து அகலத்துக் கிட்டபலகைக்கும் இடைநின்றநிலம் நான்குகோலாக உயரங்கொண்டு இத்தன்மையவாய அளவுக்குப் பொருந்தவகுத்த வாயில் இரண்டினையுடைத்தாகச்செய்யப் பட்ட அரங்கினிடத்தென்க.

வாயிலிரண்டென்பது அரங்கிற்குட் புகவும் புறப்படவுஞ்சமைத்த வாயிலெனக்கொள்க. ஏற்றவென்பதனால் கரந்துபோக்கிடனும், கண்ணுளர் குடிஞைப் பள்ளியும், அரங்கமும், அதனெதிர் மன்னர் மாந்தரோடிருக்கும் அவையரங்கமும், இவற்றினைச்சூழ்ந்த புவிநிறைமாந்தர் பொருந்தியகோட்டியும் முதலாயினகொள்க. தோற்றியவரங்கு - இப்படியாகச் சமைக்கப்பட்டு நூல்சொல்லுகின்றபடியெல்லாம் தோற்றியவரங்கென்க.

௧0௫ - ௧0௭. தொழுதன ரேத்தப், பூதரை யெழுதி மேனிலைவைத்தென்பது அந்தணர் அரசர் வணிகர் சூத்திரரென்று சொல்லப்பட்ட *நால்வகைவருணப் பூதரையும் எழுதி மேனிலத்தே யாவரும் புகழ்ந்துவணங்கவைத்தென்க.

என்னை ? "கூறிய வரங்கிற் குறியொடு புணர்ந்தாங், காநேர்க் கியற்று மரங்கி னெற்றிமிசை, வழுவில் பூத நான்கு முறைப்பட, வெழுதின ரியற்ற வியல்புணர்ந் தோரே" என்றாராகலின். இப்பூதநான்கின் உண்டியும் அணியும் ஆடையும் மாலையும் சாந்தமும் பொழுதும் செயலுமுதலியவெல்லாம் அழற்படுகாதைக்கண்ணே விரித்துக்கூறுதும்.

௧0௮. தூணிழற் புறப்பட மாண்விளக் கெடுத்தாங்கென்பது தூண்களின் நிழல் நாயகப்பத்தியின்கண்ணும் அவையின்கண்ணும் படாதபடி மாட்சிமைப்பட்ட நிலைவிளக்குநிறுத்தியென்க.

என்னை ? "விளக்கியல் வனப்பும்" என்றாராகலின்.

௧0௯ - ௧௧0. ஒருமுக வெழினியும் பொருமுக வெழினியுங், கரந்துவர லெழினியும் புரிந்துடன் வகுத்தாங்கென்பது இடத்தூணிலையிடத்தே உருவுதிரையாய் ஒருமுகவெழினியும் இரண்டுவலத்தூணிடத்தும் உருவுதிரையாய்ப் பொருமுக வெழினியும், கரந்துவரலெழினி மேற்கட்டுத்திரையாகவும் செயற்பாட்டுடனே வகுத்தென்க.

மேற்கட்டுத்திரையாய்நிற்பது ஆகாயசாரிகளாய்த் தோன்றுவார்க்கெனக் கொள்க. என்னை ? "முன்னிய வெழினிதான் மூன்று வகைப்படும்" என்றார் மதிவாணனார்; "அரிதரங்கிற், செய்தெழினி மூன்றமைத்துச் சித்திரத்தாற் பூதரையு, மெய்த வெழுதி யியற்று" என்றார் பாரதசேனாபதியாரும்.

௧௧௧. ஓவிய விதானத்தென்பது சித்திரவிதானத்தையுமுடைத்தாயென்க.

---

* நால்வகைவருணப்பூதங்கள் : ௧. வச்சிரதேகன். ௨. வச்சிரதந்தன். ௩. வருணன். ௪. இரத்தகேசுவரன்.

ககக-ககஉ. உரைபெறு நித்திலத்து, மாலைத் தாமம் வளையுடனாற்றியென்பது, சந்திரன் குரு அங்காரகனென்னும் வெண்ணீர்மை பொன்னீர்மை செந்நீர்மை யென்னும் புகழ்மையைத் தமக்குரிமையாகப்பெற்ற முத்துமாலைகளாற் சரியும் தூக்கும் தாமமும் நாற்றியென்க.

ககங. விருந்துபடக் கிடந்த வருந்தொழி லரங்கத்து என்பது புதுமையுடைத்தாகச் சமைத்த அரிய தொழிலையுடைய அரங்கின்கண்ணென்க.

வகுத்தனர்கொண்டு வைத்து எடுத்து வகுத்து நாற்றிக்கிடந்த அரங்கமென்க.

[தலைக்கோல் அமைதி.]

ககச-கஉஅ. பேரிசை மன்னர் பெயர்புறத் தெடுத்த
சீரியல் வெண்குடைக் காம்புநனி கொண்டு,
கண்ணிடை நவமணி யொழுக்கி மண்ணிய
நாவலம் பொலந்தக டிடைநிலம் போக்கிக்,
காவல் வெண்குடை மன்னவன் கோயி
லிந்திர சிறுவன் சயந்த னாகென
வந்தனை செய்து வழிபடு தலைக்கோல்,
புண்ணிய நன்னீர் பொற்குடத் தேந்தி
மண்ணிய பின்னர் மாலை யணிந்து,
நலந்தரு நாளாற் பொலம்பூ ணோடை
யரசுவாத் தடக்கையிற் பரசினர் கொண்டு
முரசெழுந் தியம்பப பல்லிய மார்ப்ப
வரசொடு பட்ட வைமபெருங் குழுவுந்
தேர்வலஞ் செய்து கவிகைக் கொடுப்ப
வூர்வலஞ் செய்து புகுந்துமுன் வைத்தாங்கு

ககச-ககரு. பேரிசை மன்னர் பெயர்புறத் தெடுத்த, சீரியல் வெண்குடைக் காம்புநனி கொண்டென்பது, பெரிய புகழையுடைய அரசர்பொருதுடைந்து புறங்கொடுத்தவழிப்பெற்ற அழகிய இயல்பினையுடைய வெண்கொற்றக்குடைக்காம்பைத் தலைக்கோலாகக்கொண்டென்க.

இனி மாற்றார் எயிற்புறத்து மிளைக்கண் வெட்டிக்கொண்ட மூங்கிலென்றுமாம். இது கூறிற்று; வேத்தியலும் பொதுவியலுமாகலான். இவற்றுட் பொதுவியற்கு மலையின் மூங்கிலுமாம்.

ககசு-ககஎ. கண்ணிடை நவமணி யொழுக்கி மண்ணிய, நாவலம் பொலந்தகடிடைநிலம் போக்கியென்பது, கண்டோறும் நவமணிகளாற்கட்டி இடைநிலங்களைச் சாம்பூநதமென்னும் பொற்றகட்டாற்செறிய மலக்கமாகக்கட்டியென்க.

மலக்கம் - மாறு. என்னை?. "புண்ணியமால் வெற்பிற் பொருந்துங் கழைகொண்டு, கண்ணிடைக்கண் சாண்கன கஞ்சாரு - மெண்ணிய, நீளமெழு சாண் கொண்டு நீராட்டி நன்மைபுனை, காளிற் றலைக்கோலை நாட்டு" "ஆவ தகத்தியனார் சாபத்தா லன்மூங்கில்" என்றார் பரதசேனாபதியார்.

௧௧௮-௧௨௦. காவல் வெண்குடை மன்னவன் கோயி, லிந்திர சிறுவன் சயந்த னாகென், வந்தனை செய்து வழிபடு தலைக்கோலென்பது இத்தலைக்கோலை இந்திரன் மகன் சயந்தனாகநினைத்து மந்திரவிதியாலே பூசித்து வழிபட்டு அரசன்கோயிலிலே காப்புமைத்திருத்தியென்க.

சயந்தனாதல் முன்னர்க் கூறிப்போந்தாம்.

௧௨௧ - ௧௨௨. புண்ணிய நன்னீர் பொற்குடத் தேந்தி, மண்ணிய பின்னர் மாலை யணிந்தென்பது, நாடகக்கணிக்க தலைக்கோல் கொள்ளுநான்று புண்ணிய நதிகளினீரைப் பொற்குடத்திலே முகந்துவந்து இத்தலைக்கோலை நீராட்டியபின்பு மாலைகளுஞ்சூட்டியென்க.

முன்கூறிப்போந்த ஆடலாசிரியன்முதலாயினோர் அரங்கத்தின்கண்ணே இத் தலைக்கோலைவைத்துப் பொற்குடத்தானீராட்டி மாலைசூட்டியெனவியைக்க.

௧௨௩. நலந்தருநாளாலென்பது இதற்குப்பொருந்திய நல்லநாளினாலெனக.

அவையாவன: பூராடம் கார்த்திகை பூரம் பரணி இரேவதி திருவாதிரை அவிட்டம் சித்திரை விசாகம் மகம் எனவிவை. நாளென்றது நலந்தருநாளென்ற இலேசினால், இராசிமுதலியனவுங்கொள்க. இராசிகளாவன: இடபம் சிங்கம் துலாம் கற்கடகம் விருச்சிகம் மிதுனம் எனவிவை. என்னை? "பூராடங் கார்த் திகை பூரம் பரணிகலஞ், சீராதிரை யவிட்டஞ் சித்திரையோ - டாருமற, மாசி யிடப மரிதுலை வான்கடகம், பேசிய தேண்மிதுனம் பேசு" என்றார் மதிவாணனாரும்.

நாளால் நீராட்டியென முன்னுஞ்சேர்க்க.

௧௨௩ - ௧௨௪. பொலம்பூ ணோடை, யரசுவாத் தடக்கையிற் பரசினர் கொண்டென்பது, பொன்னாற்செய்த பூணையும் பட்டத்தினையுமுடைய பட்ட வருத் தனத்தின் கையிலே வாழ்த்துடனேகொண்டென்க.

௧௨௫ - ௧௨௮. முரசெழுந் தியம்பப் பல்லிய மார்ப்ப, வரசொடு பட்ட வைம் பெருங் குழுவுந், தேர்வலஞ் செய்து கவிகைக் கொடுப்ப, வூர்வலஞ் செய்து புகுந்து முன் வைத்தாங்கென்பது, வீரமுரசுமுதலாய மும்முரசுகளும் எழுந்துமுழங்க அவையேயன்றிப் பலவாச்சியங்களுமுழங்க அரசனும் அமாத்தியர் புரோகிதர் சேனாபதித்தொடக்கத்தாருங்கூட வீதியின்கணின்ற தேரினை இந்தயானையோடும் உடன்கொண்டு வலஞ்செய்து தேர்மிசைநின்ற கவியின்கையிலே இத்தலைக்கோலைக் கொடுப்ப ஊரை வலமாகவந்து அரங்கத்தின்கட்புகுந்து தலைக்கோலை எதிர்முகமாக வைத்தபினென்றவாறு.

என்னை "பிணியுங் கோளு நீங்கிய நாளா, லணியுங் கவினு மாசற வியற்றித், தீதுதீர் மரபிற் றீர்த்த நீரான், மாசது தீர மண்ணுறீ ராட்டித், தொடலையு மாலையும் படலையுஞ் சூட்டிப், பிண்ட முண்ணும் பெருங்களிற்றுத் தடக்கைமிசைக், கொண்டு சென்றுநீஇஇக் கொடியெடுத் தார்த்து, முரசு முருடு முன்முன் முழங்க, வரசு முத லான வைம்பெருங் குழுவுந், தேர்வலஞ் செய்து கவிகைக்கொண் டேறி, யூர்வலஞ் செய்து புகுந்த பின்றைத், தலைக்கோல் கைக்கொடுத் தரசன் கவிகைத், தலைக் கோல் கோட றக்க தென்ப" என்றார் செயிற்றியனார்.

[அரங்கிற்புகுந்து ஆடுகின்றவியல்பு.] ன்ப

கஉகூ-கஎரு. இயல்பினின் வழாஅ திருக்கை முறைமையிற்
குயிலுவ மாக்க ணெறிப்பட நிற்ப
வலக்கான் முன்மிதித் தேறி யரங்கத்து
வலத்தூண் சேர்தல் வழக்கெனப் பொருந்தி
யிந்நெறி வகையா லிடத்தூண் சேர்ந்த
தொன்னெறி யியற்கைத் தோரிய மகளிருஞ்
சீரியல் பொலிய நீரல நீங்க
வார மிரண்டும் வரிசையிற் பாடப்
பாடிய வாரத் தீற்றினின் றிசைக்குங்
கூடிய குயிலுவக் கருவிக ளெல்லாங்
குழல்வழி நின்றது யாழே யாழ்வழித்
தண்ணுமை நின்றது தகவே தண்ணுமைப்
பின்வழி நின்றது முழவே முழவொடு
கூடிநின் றிசைத்த தாமந் திரிகை
யாமந் திரிகையோ டந்தர மின்றிக்
கொட்டிரண் டுடையதோர் மண்டில மாகக்
கட்டிய மண்டிலம் பதினொன்று போக்கி
வந்த முறைமையின் வழிமுறை வழாமல்
லந்தரக் கொட்டுட னடங்கிய பின்னர்
மீத்திறம் படாமை வக்காணம் வகுத்துப்
பாற்பட நின்ற பாலைப் பண்மேல்
நான்கி னொரீஇய நன்கன மறிந்து
மூன்றளந் தொன்று கொட்டி யதனை
யைதுமண் டலத்தாற் கூடை போக்கி
வந்த வாரம்வழி மயங்கிய பின்றை
யாறு நாலு மம்முறை போக்கிக்
கூறிய வைந்தின் கொள்கை போலப்
பின்னையு மம்முறை பேரிய பின்றைப்
பொன்னியல் பூங்கொடி புரிந்துடன் வகுத்தென
நாட்டிய நன்னூ னன்கு கடைப்பிடித்துக்
காட்டினள் ஆதலிற் காவல் வேந்த
னிலைப்பூங் கோதை யியல்பினின் வழாமைத்
தலைக்கோ லெய்தித் தலையரங் கேறி
விதிமுறை கொள்கையி னாயிரத் தெண்கழஞ்
சொருமுறை யாகப் பெற்றன ளதுவே

நூற்றுப்பத் தடுக்கி யெட்டுக் கடைநிறுத்த
வீறுயர் பசும்பொன் பெறுவதிம் மாலை
மாலை வாங்குநர் சாலுநங் கொடிக்கென
மானமர் நோக்கியோர் கூனிகைக் கொடுத்து
நகர நம்பியர் திரிதரு மறுகிற்
பகர்வனர் போல்வதோர் பான்மையி னிறுத்த
மாமலர் நெடுங்கண் மாதவி மாலை
கோவலன் வாங்கிக் கூனி தன்னொடு
மணமனை புக்கு மாதவி தன்னொ
டணைவுறு வைகலி னயர்ந்தனன் மயங்கி
விடுத லறியா விருப்பின னாயினன்
வடுநீங்கு சிறப்பிற்றன் மனையக மறந்தென

௧௨௯. இயல்பினின் வழாஅ விருக்கை முறைமையி னென்பது அரசன்முதலியோர்யாவரும் வரிசைக்கேற்ற இருக்கைமுறைமைகளிலே இருந்தபின்னரென்க.

௧௩௦. குயிலுவ மாக்க ணெறிப்பட நிற்பவென்பது குயிலுவக் கருவியாளர் தாம் நிற்கக்கடவ முறைமைகளிலே நிற்கவென்க.

முறைமையாவது "ஆடிட முக்கோ லாட்டுவார்க் கொருகோல், பாடுநர்க் கொருகோ லந்தர மொருகோல், குயிலுவர் நிலையிட மொருகோல்" என்று நூலிற் கூறின முறைமையென்க. குயிலுவராவார் இடக்கைமுதலாய கருவியாளர்.

௧௩௧-௧௩௨. வலக்கான் முன்மிதித் தேறி யரங்கத்து, வலத்தூண் சேர்தல் வழக்கெனப் பொருந்தியென்பது, நாடகக்கணிகையாகிய அரங்கேறுகின்றமாதவி அரங்கத்திலே வலக்கால் முற்படவிட்டேறிப் பொருமுகவெழினிக்கு நிலையிடனான வலப்பக்கத்தூணிடத்தே சேர்தல் வழக்கென்னுமிடத்தாலே சேர்ந்தென்றவாறு.

௧௩௩-௧௩௪. இந்நெறி வகையி லிடத்தூண் சேர்ந்த, தொன்னெறி யியற்கைத் தோரிய மகளிருமென்பது மாதவி வந்தேறிநின்றபடியே இடத்தூணிலையிடமாகிய ஒருமுகவெழினியிடம்பற்றிய பழையநெறியியற்கையையுடைய தோரிய மடந்தையருமென்க.

தோரியமடந்தையராவார் ஆடிமுதிர்ந்தவர்; "இந்நெறி வகையா லிடத் தூண் சேர்வோ, டொன்னெறி மரபிற் றோரிய மகளே" எனவும், "தலைக்கோ லரிவை குணத்தொடு பொருந்தி, நலத்தகு பாடலு மாடலு மிக்கோ, ளியற்படு கோதைத் தோரிய மகளே" எனவும் சொன்னாராகலின்.

௧௩௫-௧௩௬. சீரியல் பொலிய நீரல நீங்க, வார மிரண்டும் வரிசையிற் பாட வென்பது நன்மையுண்டாகவும் தீமைநீங்கவும்வேண்டித் தெய்வப்பாடல் இரண்டினையும் பாடவென்றவாறு.

இனிச் சீரியல்பொலிய நீரலநீங்கவென்பதற்குத் தாளவியல்பு பொலிவுபெற அவதாளநீங்கவென்றுமாம். வாரமிரண்டாவன ஓரொற்றுவாரம், ஈரொற்றுவார மென்னுஞ்செய்யுள். அவை தாளத்து ஒருமாத்திரையும் இரண்டுமாத்திரையும் பெற்றுவரும்.

௧௩௭-௧௩௮. பாடிய வாரத் திற்றினின் றிசைக்குங், கூடிய குயிலுவக் கருவி களெல்லாமென்பது தெய்வப்பாடலின் இறுதியிலேநின்று கூடி இசையாநிற்கும் கருவிகளெல்லாமென்றவாறு.

இக்கருவிகள் எவ்வண்ணங்கூடியிசைத்தனவோவெனின்,—

௧௩௯. குழல்வழி நின்றதி யாழேயென்பது வங்கியத்தின்வழியேநின்றது யாழ்ப்பாடலென்றவாறு.

எனவே மிடற்றுவழியது யாழாகலான் 'மிடற்றுவழிப்பாடலும் யாழ்வழித் தெனக்கொள்க.

௧௩௯-௧௪௦. யாழ்வழித், தண்ணுமை நின்றது தகவேயென்பது யாழ்ப்பாட லின்வழியே தண்ணுமையாகிய மத்தளநின்றதென்க.

௧௪௦-௧௪௧. தண்ணுமைப், பின்வழி நின்றது முழவேயென்பது மத்தளக் கருவியின் பின்வழியே குடமுழாநின்றதென்க.

௧௪௧-௧௪௨. முழவொடு, கூடிநின் றிசைத்த தாமந் திரிகையென்பது முழ வொடுகூடிநின்று வாச்சியக் கூறுகளை அமைத்தது ஆமந்திரிகையென்னுங்கருவி யென்றவாறு.

ஆமந்திரிகை - இடக்கை. நின்றிசைத்தது கருவியென்றது ஓசையென்க. அஃதேன் மிடற்றுப்பாடல் சொல்லிற்றிலரெனின், வாரப்பாடல் பாடியபின்ன ரெனவே மிடற்றுப்பாடலுமடங்கும்.

௧௪௩. ஆமந் திரிகையோ டந்தர மின்றியென்பது இவ்வாமந்திரிகையோடே முன்சொன்ன குயிலுவக்கருவிகளனைத்தும் பருந்தும்நிழலும்போல ஒன்றாய்நிற்ப வென்றவாறு.

௧௪௪. கொட்டிரண் டுடையதோர் மண்டல மாகவென்பது ஒருதாளத்திற்கு இரண்டுபற்றாகவென்க

௧௪௫. கட்டிய மண்டலம் பதினொன்று போக்கியென்பது பஞ்சதாளப்பிரபந்த மாகக் கட்டப்பட்ட தேசியொத்தை ஒருதாளத்திற்கு இரண்டுபற்றாகப் பத்தும் தீாவு ஒன்றுமாகப் பதினொருபற்றாலே தேசிக்கூத்தையாடிமுடித்தென்க.

௧௪௬. வந்த முறைமையின் வழிமுறை வழாமலென்பது இப்படிச்செய்கை நாடகநூல்களினமைந்தமுறைமையாகலான் அம்முறைமை வழுவாமலென்க.

௧௪௭. அந்தரக் கொட்டுட னடங்கிய பின்னர்

இதனை அந்தரக்கொட்டென்றும், முகமென்றும் ஒத்தென்றும் பெயர்கூறுப. இந்தவொத்து ஆடினபின்னரல்லது உருக்காட்டுதல் வழக்கல்லவென்ப; என்னை? "முகமுா டெற்றிரி யோகப் பொருட்டே" என்றாராகலின்.

௧௪௮-௧௪௯. மீத்திறம் படாமை வக்காணம் வகுத்துப், பாற்பட நின்ற பாலைப் பண்மேலென்பது மங்கலப்பண்ணாய் நரப்படைவுமுடைத்தாயிருக்கின்ற பாலைப் பண்ணை அளவுகோடாதபடி ஆளத்தியிலேவைத்து அதன்மேலேயென்க.

௧௫௦. நான்கி னொரீஇய நன்கன மறிந்தென்பது மங்கலச்சொல்லினையுடைத் தாய் நாலுறுப்புங் குறைபாடில்லாத உருவுக்குச் சொற்படுத்தியும் இசைப்படுத்தியு மறிந்து பாட்டும் கொட்டும் கூத்தும் நிகழ்த்தியென்க.

நாலுறுப்பாவன: உக்கிரம், துருவை, ஆபோகம், பிரகலையென்பன. ஈண்டு நாலுறுப்புக்களும் குறைபாடில்லாத உருவெனவேண்டியது, *மூன்றுறுப்பாலே வருவனவுமுளவாதலின். அவை இரண்டாமடியே ஈற்றடியாகப் பாடிமுடிவன. அவை மங்கலத்துக்குப் பொருந்தாவெனக்கொள்க.

கஙக. மூன்றளந் தொன்று கொட்டி யதனையென்பது அதனை மூன்றொத்துடைய மட்டத்திலெடுத்து ஒரொத்துடைய ஏகதாளத்திலேமுடித்தென்க.

கஙஉ. ஐதுமண் டலத்தாலென்பது அழகிய மண்டலநிலையாலென்க.

தேசிக்கூத்தெல்லாம் மண்டலநிலையாதலின், ஐதுமண்டலத்தாலென்றார். என்னை? "கொண்ட தேசிப் பகுதி யெல்லா, மண்டல நிலையின் வருதகவுடைத்தே" என்றாராகலின்.

கஙஉ. கூடை போக்கியென்பது தேசிக்கு ஒற்றித்தொத்தலும் இரட்டித்தொத்தலுமேயாகலின் அவற்றை ஆடி முடித்தென்க.

இவைகளல்லது இரட்டிக்கிரட்டி வரப்பெறாதென்க.

கஙங. வந்த வாரம்வழி மயங்கிய பின்றையென்பது முதனடையினும் வாரத்தினும் தேசிக்கூத்தெல்லாம் ஆடிமுடித்தென்க.

முடிக்கை - பண்மாறு.

இனி மார்க்கம் கூறுகின்றது.

கஙச. ஆறு நாலு மம்முறை போக்கியென்பது பஞ்சதாளப்பிரபந்தமாகக் கட்டப்பட்ட வடுகிலொத்தையும் தேசியிலொத்தைக்காட்டினாற்போல இரட்டிக்கிரட்டியாகவாடியென்க.

கஙரு-கஙசு. கூறிய வைந்தின் கொள்கை போலப், பின்னையு மம்முறை பேரிய பின்றையென்பது சொல்லிப்போந்த தேசியைப்போல வடுகும்மட்டதாளமுதலாக ஏகதாளமீறாக வைசாகநிலையிலே ஆடிமுடித்தபின்னரென்க.

என்னை? "வைசாக நிலையே வடுகிற்கும் வனையார்" என்றாராகலின்.

கஙஎ. பொன்னியல் பூங்கொடி புரிந்துடன் வகுத்தெனவென்பது பொன்னானியன்றதோர் பூங்கொடி கூத்துநடித்தாற்போலவென்க.

கஙஅ-கஙகூ. நாட்டிய நன்னூ னன்குகடைப் பிடித்துக், காட்டின ளாதலினென்பது தாண்டவம் நிருத்தம் நாட்டியமென்னும் மூன்றுகூறுபாட்டினும் நாட்டியமென்பது புறநடத்தையாகலின், அதனை நூல்களிற்சொன்ன முறைமை வழுவாமல் அவிநயித்துப் பாவகந்தோன்ற விலக்குறுப்புப்பதினாலின் நெறிவழுவாமல் ஆடிக்காட்டினாளாதலாலென்க.

அன்றி நாட்டியநன்னூல் .... ளாதலினென்பதற்கு இக்கதையிற்கூறிய முத்தமிழ்வகையும் காட்டினாளாதலினென்றுமாம்.

---

* ஈதவடிவுகள் மூன்றென்பர் சுத்தாநந்தப்பிரகாசமுடையார். மூன்றாவன: உக்கிரம், துருவை, ஆபோகமென்பன. துருவையென்பது துருமையெனவும், ஆபோகமென்பது ஆயோகமெனவும் பிரதிகளில் வேறுபட்டிருக்கின்றன.

கடுக-கசுo. காவல் வேந்த, னிலைப்பூங் கோதை யியல்பினின் வழாமையென்பது அரசன், இம்மாதவியுடைய கூத்துக்கும் பாட்டுக்கும் அழகுக்குமேற்றமுறைமையினால் ஒன்றும் வழுவாமலென்க.

அன்றி, இலைப்பூங்கோதை - அரசனுடையமாலை. அதனால் தன்கூத்தும் பாட்டுமென்னும் இவைமுதலியவற்றின்-இயல்பின் ஒன்றுநீங்காமலென்றுமாம். என்சொல்லிய் வாறுமோவெனின்,—நாடகமகள் அரங்கேறக்கண்ட அரசன் அவண்மேற் காமக்குறிப்புடையனாதலியல்பு. அங்ஙனம் மாதவியாடல் பாடல் அழகென்னுமிவைமுதலிய கண்களிப்பக்கண்டும் கேட்டும் நெஞ்சமழிந்து காமக்குறிப்புமீதூரவும் நாழிவளை வனையின் கவைபிறக்குமென்பதுகருதி வளையானுயினனென்பதாம். இலைப்பூங்கோதையைத் தலைக்கோற்கு அடையாக்கினுமமையும். இயல்பினின் - இயல்பினால்.

கசுக தலைக்கோ லெய்தியென்பது தன்வரிசைக்குத்தக்கபடியே தலைக்கோற்பெயர்பெற்றென்றவாறு.

கசுக. தலையரங்கேறியென்பது முன்னரங்குமுதலிய எல்லாமுதன்மையும்பெறுவதற்குக்காரணமாகிய தலையரங்கேறியென்க.

கசுஉ - கசுஙூ. விதிமுறை கொள்கையி னாயிரத் தெண்கழஞ், சொருமுறையாகப் பெற்றனளென்பது இந்நாடகக்கணிகையர்க்குத் தலைவரிசை ஆயிரத்தெண்கழஞ்சுபொன் பரிசம்பெறுகை நூல்வழக்காதலின் இவளும் அவ்வாயிரத்தெண்கழஞ்சுபொன் பரிசம்பெற்றாளென்க.

என்னை? "முட்டில் பாணரு மாடிய மகளிரு, மெட்டொடு புணர்ந்தவாயிரம்பொன் பெறுப" என்றாராகலின். ஒருமுறையாகப் பெற்றனள் - ஒருநாளைக்குப் பரிசமாகவென்றரசனாற் பெற்றனளென்க. பெறுகை - நினைப்பிடுகையுமாம். ஆயிரம்பரிசமும் எண்கழஞ்சு மெய்ப்போகத்துக்குமாக நிச்சயித்தென்க.

கசுஙூ. அதுவேயென்பது அன்றுதொடங்கி அதுவேபரிசமானதென்க.

கசுச. நூற்றுப்பத் தடுக்கி யெட்டுக் கடைநிறுத்தவென்பது நூற்றைப் பதின்மடங்காக அடுக்கி அதன்கடைக்கண்ணே எட்டைநிறுத்தினவென்க.

கசுரு - கசுசு. வீறுயர் பசும்பொன் பெறுவதிம் மாலை, மாலை வாங்குநர் சாலுநங் கொடிக்கென, மானமர் நோக்கியோர் கூனிகைக் கொடுத்து, நகர நம்பியர் திரிதரு மறுகிற், பகர்வனர் போல்வதோர் பான்மையி னிறுத்தவென்பது வீறுபெற்றுயர்ந்த பசும்பொன்னை விலையாகப்பெறுவது இம்மாலை; இம்மாலைபெற்ற பொன் தந்து இதனை வாங்கிச்சூடுநர் மாதவிக்கு மணமகனாதலமையுமென்றுசொல்லி மான்போன்ற நோக்கினையுடையாளோர்கூனிகைக்கொடுத்து நகரியிற் பெருந்தெருவிலே விலைக்குவிற்பாளைப் போல்வதோர் பண்பினால் நிறுத்தவென்க.

இவளுக்குப்பரிசமென்னாது மாலைக்குப்பரிசமென்று மிகுத்துக்கூறினார். வீறுயர்பசும்பொன் - மாற்றான் உயர்ச்சிபெற்ற பசியபொன்; ஆவது கிளிச்சிறை. மாலை - அரசன்பாற்பெற்ற பசும்பொன்மாலை. மாலை - படிக்கட்டளை.

கஎ0 - கஎஉ. மாமலர் நெடுங்கண் மாதவி மாலை, கோவலன் வாங்கிக் கூனிதன்னொடு - மணமனை புக்கென்பது திருமலரொன்றுசொல்லப்பட்ட தாமரைமலர்

போன்ற *கண்ணையுடைய மாதவியுடைய பரிசமாலையைக் கோவலனெனப்படும் வாணிகன்வாங்கிக் கூனியுடனே அவண்மனையிற்சென்றுபுக்கெனக.

வாங்கிப் புக்கென இயைக்க.

கஎஉ - கஎச. மாதவி தன்னோடு, டணைவுறு வைகலி னயர்ந்தனன் மயங்கி, விடுத லறியா விருப்பின னாயினனென்பது இங்ஙனம்புக்க கோவலன் மாதவிதன்னுடன் மணந்த அப்பொழுதே அயர்ந்தனனாய் மயங்கி அவளை நீங்குதல்கூடாத விருப்பினையுடையனாயினனென்க.

வைகல் - ஈண்டு ஒருபொழுது. விடுதலறியா - விடாத; ஒருசொல்.

கஎரு. வடுநீங்கு சிறப்பிற்றன் மனையக மறந்தெனவென்பது குற்றமற்ற கற்புச்சிறப்பினையுடைய மனைவியையும், மனையையுமறந்தென்க.

ஆடன் முதலியன காட்டல்வேண்டி ஆடலோனும் இசையோனும் இயற்புலவனும் தண்ணுமையோனும் குழலோனும் யாழோனுங்கூடி வகுத்தனர் கொண்டு தொழுதனரேத்த எழுதி வைத்து எடுத்து வகுத்து நாற்றிக் கிடந்த அரங்கத்துக் கொண்டு ஒழுக்கிப் போக்கி ஆகெனச் செய்து ஏந்தி அணிந்து கொண்டு இயம்ப ஆர்ப்பச் செய்து கொடுப்ப வைத்தபின் நிற்ப ஏறிப் பொருந்திச் சேர்ந்த மகளிரும் பொலிய நீங்கப் பாட இசைக்கும்; கருவிகளெல்லாம். நின்றது; நின்றது; நின்றது; நின்றிசைத்தது; பதினொன்றுபோக்கி அம்முறைபோக்கி வகுத்தெனக் கடைப்பிடித்துக் காட்டினளாதலின், எய்தி ஏறிப் பெற்றனள்; பெற்று நிறுத்தக் கோவலன்வாங்கி மனைபுக்கு அயர்ந்து மயங்கி மறந்து விருப்பினனாயினனென்க.

பருந்து நிழலுமென ... ...அடியார்க்குநல்லானென்பான்.
ஒருந்தமிழ்..... ... ...நிரம்பையர்காவலனே.
காற்றை .. ..சொல்வித்ததே.

அரங்கேற்றுகாதை முற்றிற்று.

நான்காவது

அந்திமாலைச்சிறப்புச்செய்காதை.

விரிகதிர் பரப்பி யுலகமுழு தாண்ட
வொருதனித் திகிரி யுரவோற் காணே
னங்கண் வானத் தணிநிலா விரிக்குந்
திங்களஞ் செல்வன் *யாண்டுளன் கொல்லெனத்
திசைமுகம் †பசந்து செம்மலர்க் கண்கண்
முழுநீர் வார முழுமெயும் பனித்துத்
திரைநீ ராடை யிருநில மடந்தை
யரசுகெடுத் தலம்வரு மல்லற் காலைக்
கறைகெழு குடிகள் கைதலை வைப்ப
வறைபோகு குடிகளொ டொருதிறம் பற்றி
வலம்படு தானை மன்ன ரில்வழிப்
புலம்பட விறுத்த விருந்தின் மன்னரிற
றாழ்துணை ‡துறந்தோர் தனித்துய ரெய்தக்
காதலர்ப் புணர்ந்தோர் களிமகி ழெய்தக்
குழல்வளர் முல்லையிற் கோவலர் தம்மொடு
மழலைத் தும்பி வாய்வைத் தூத
வறுகாற் குறும்பெறிந் தரும்புபொதி வாசஞ்
சிறுகாற் செல்வன் மறுகிற றூற்ற
வெல்வளை மகளிர் மணிவிளக் கெடுப்ப
மல்லன் மூதூர் மாலைவந் திறுத்தென,
விளைய ராயினும் பகையர சுகடியுஞ்
செருமாண் டென்னர் குலமுத லாகலி
னந்தி வானத்து வெண்பிறை தோன்றிப்
புன்கண் மாலைக் குறும்பெறிந் தோட்டிப்
பான்மையிற் றிரியாது பாற்கதிர் பரப்பி
மீனர சாண்ட வெள்ளி விளக்கத
தில்வளர் முல்லையொடு மல்லிகை யவிழ்ந்த
பல்பூஞ் சேக்கைப் பள்ளியுட் பொலிந்து
செந்துகிர்க் கோவை சென்றேந் தல்கு

---

*யாங்குளன்கொலென்றும் பாடம். ‡துணையிழந்தோரென்றும் பாடம்.
†பயந்தென்றும் பாடம்.

லந்துகின் மேகலை யசைந்தன வருந்த
நிலவுப்பயன் கொள்ளு நெடுநிலா முற்றத்துக்
கலவியும் புலவியுங் காதலற் களித்தாங்
கார்வ நெஞ்சமொடு கோவலற் கெதிரிக்
கோலங் கொண்ட மாதவி யன்றியுங்
குடதிசை மருங்கின் வெள்ளயிர் தன்னொடு
குணதிசை மருங்கிற் காரகி றுறந்து
வடமலைப் பிறந்த வான்கேழ் வட்டத்துத்
தென்மலைப் பிறந்த சந்தன மறுகத்
தாமரைக் கொழுமுறி தாதுபடு செழுமலர்
காமரு குவளை கழுநீர் மாமலர்
பைந்தளிர்ப் படலை பருஉக்கா ழாரஞ்
சுந்தரச் சுண்ணத் துகளொடு மளைஇச்
சிந்துபு பரிந்த செழும்பூஞ் சேக்கை
மந்த மாருதத்து மயங்கினர் மலிந்தாங்
காவியங் கொழுந ரகலத் தொடுங்கிக்
காவியங் கண்ணுற் களித்துயி லெய்த
வஞ்செஞ் சீறடி யணிசிலம் பொழிய
மென்றுகி லல்குன் மேகலை நீங்கக்
கொங்கை முன்றிற் குங்கும மெழுதாண்
மங்கல வணியிற் பிறிதணி மகிழாள்
கொடுங்குழை துறந்து வடிந்துவீழ் காதின
டிங்கள் வாண்முகஞ் சிறுவியர்ப் பிரியச்
செங்கய னெடுங்க ணஞ்சன மறப்பப்
பவள வாணுத றிலக மிழப்பத்
தவள வாணகை கோவல னிழப்ப
மையிருங் கூந்த னெய்யணி மறப்பக்
கையறு நெஞ்சத்துக் கண்ணகி யன்றியுங்
காதலர்ப் பிரிந்த மாதர் நோதக
வூதுலைக் குருகி னுயிர்த்தன ரொடுங்கி
வேனிற் பள்ளி மேவாது கழிந்து
கூதிர்ப் பள்ளிக் குறுங்க ணடைத்து
மலயத் தாரமு மணிமுத் தாரமு
மலர்முலை யாகத் தடையாது வருந்தத்
தாழிக் குவளையொடு தண்செங் கழுநீர்
வீழ்பூஞ் சேக்கை மேவாது கழியத்
துணைபுண ரன்னத் தூவியிற் செறித்த

பிணையணை மேம்படத் திருந்துதுயில் பெறாஅ
துடைப்பெருங் கொழுநரொ டூடற் காலத்
திடைக்குமி ழெறிந்து கடைக்குழை யோட்டிக்
கலங்கா வுள்ளங் கலங்கக் கடைசிவந்து
விலங்கிநிமிர் நெடுங்கண் புலம்புமுத் துறைப்ப
வன்ன மென்னடை நன்னீர்ப் பொய்கை
யாம்ப னாறுந் தேம்பொதி நறுவிரைத்
தாமரைச் செவ்வாய்த் தண்ணறற் கூந்தற்
பாண்வாய் வண்டு நோதிறம் பாடக்
காண்வரு குவளைக் கண்மலர் விழிப்பப்
புள்வாய் முரசமொடு பொறிமயிர் வாரணத்
துள்வாய்ச் சங்க முறைமுறை யார்ப்ப
வுரவுநீர்ப் பரப்பி னூர்துயி லெடுப்பி
யிரவுத் தலைப்பெயரும் வைகறை காறு
முரையிருள் யாமத்தும் பகலுந் துஞ்சார்
விரைமலர் வாளியொடு கருப்புவில் லேந்தி
மகர வெல்கொடி மைந்தன் றிரிதர
நகரங் காவ னனிசிறந் ததுவென.

க - உ. விரிகதிர் பரப்பி யுலகமுழு தாண்ட
வொருதனித் திகிரி யுரவோற் காணேன்

இ - ள். விரிந்த கதிர்களைப்பரப்பித் தொக்க உலகமனைத்தையும் ஒருதிகிரி யாலாண்ட விளிவில்லாதோனை ஈண்டுக்காண்கின்றிலேனென்க.

கதிர் - ஆரும், கிரணமும். முழுதுமென்னுமுற்றும்மை தொக்கது. ஒருதனித் திகிரி - ஒப்பற்ற ஒற்றைத்தேராழி; சக்கரமுமாயிற்று; சிலேடை. இவன் ஓராழியான் ஏழுலகையுமாண்டானென்பதுதோன்றத் தேராழியைத் திகிரியென்றார். ஆண்ட ஆழியையுடைய உரவோனெனினுமமையும்.

௩ - ௪. அங்கண் வானத் தணிநிலா விரிக்குந்
திங்களஞ் செலவன் யாண்டுளன் கொல்லென

இ - ள். அழகிய இடத்தையுடைய வானின்கண் நல்லநிலாவை விரிக்குந் திங்களாகிய செல்வன் எவ்விடத்துள்ளானோதானென்றென்க.

அத்து - எழனுருபின்கண்வந்த சாரியை. நிலா - ஒளி. அம் - *புறனடையாற்கொள்க. இது பண்புத்தொகைக்கண்வந்தது. திங்களஞ்செல்வன் †"காலமுலகம்" என்னுஞ்சூத்திரத்துள், ஞாயிறுதிங்களென்பன உயர்திணைமேலனவாய்ப்

---

*தொல்காப்பியம், எழுத்ததிகாரம், புள்ளிமயங்கியல், ௧௧௦.
† „ சொல்லதிகாரம், கிளவியாக்கம், ௫௭.

பால்பிரிந்திசையாவெனவும், *"நின்றாங் கிசைத்த லிவணியல் பின்று" எனவே நின்றமுறைமையானே ஈறுபெற்றுநின்று உயர்திணையாயிசைத்தல் இவணியல் பின்றெனவுங்கூறிய ஆசிரியர், †"இசைத்தலு முரிய வேறிடத் தான" எனக் கால முதலாகியசொல் உயர்திணையாயிசைத்தலு முரிய; ஈறுதிரிந்து வாய்பாடுவேறுபட்ட வழியென்றாராகலின், ஈறுதிரிந்து திங்களஞ்செல்வனென்றுயிற்றெனக. மேலும் இவ்வாறுவருவனவற்றிற்கும் இதுவே விதியென்க. கொல் - ஐயம்.

> ௫ - ௮. திசைமுகம் பசந்து செம்மலர்க் கண்கண்
> முழுநீர் வார முழுமெயும் பனித்துத்
> திரைநீ ராடை யிருநில மடந்தை
> யரசுகெடுத் தலம்வரு மல்லற் காலை

இ - ள். கடலை ஆடையாகவுடைய பெரிய நிலமடந்தை தன்கொழுநனைக் காணாது திசையாகிய தன்முகநான்கும் பசப்பூரப்பட்டு மலர்க்கண்கள்நீர்வார மெய்ம்முழுதும்பனித்து நெஞ்சஞ்சுழல்கின்ற இடுக்கட்பொழுதிலென்க.

திசைமுகம் - திக்காகியமுகம். பசந்து - பொன்னிறங்கொண்டு. மலர்க் கண்கணீர்வார - கள்ளென்றும், கண்களென்றுமாயிற்று. முழுமெயும் - மெய்முழுது மென்றுமாறுக. பனித்து - பனிகொண்டு; பனியென்பதொருநோயுமுண்டு; அது குடநாட்டுவழக்கு; பனிப் பெய்யப்பட்டு என்றபடி. அரசு - தன்கொழுநனாகிய பகலோன். அரசென்பதனை, ‡"குடிமையாண்மை" என்னுஞ்சூத்திரத்து 'நிலையின வாயினும்' என்பதனான்முடிக்க. கெடுத்து - காணப்பெறாது; §"எற்கெடுத் திரங்கி" என்றாற்போல, அலம்வரும் - சுழலும். அல்லற்காலை - இடுக்கட் பொழுதில். பசந்தென்றார், மாலைக்காலத்துப்பரந்த பச்சைவெயிலை; ||"செல் சுடர்ப் பசுவெயிற் றோன்றி யன்ன" என்றார் மதுரைக்காஞ்சியினும். இக்காலத்து இதனைக் காடுகிழாள்வெயிலென்ப. செம்மலர்க்கண்கண்முழுநீர்வாரவென்பதற்குச் செம்மலரிடமெல்லாம் கள்ளாகியநீர் முழுதும்வாரவெனவும், சிவந்த மலர்போலும் கண்களிரண்டும் நீர்வாரவெனவும் சிலேடைப்பொருண்மைகாண்க. பனித்தென் பது பனியென்னுநோய்கொண்டென்றும், நடுங்கியென்றுமாயிற்று; அக்காலத்துப் பனிப் பெய்யுமாகலின்.

> ௯ - ௧௨. கறைகெழு குடிகள் கைதலை வைப்ப
> வறைபோகு குடிகளொ டொருதிறம் பற்றி

---

*தொல்காப்பியம், சொல்லதிகாரம், கிளவியாக்கம், ௫௮.
† ,, ,, ,, ௫௯.
‡ ,, ,, ,, ௫௭.
§மணிமேகலை, ஐந்தாவது மணிமேகலாதெய்வந்தோன்றியகாதை: "வார் கழல் வேந்தே வாழ்கநின் கண்ணி, தீநெறிப் படரா நெஞ்சினை யாகுமதி, யீங்கிவ டன்னே டெய்திய காரணம், வீங்குநீர் ஞால மாள்வோய் கேட்டருள், யாப்புடை யுள்ளத் தெம்மனை யிழந்தோன், பார்ப்பன முதுமகன் படிம வுண்டியன், மழை வளந் தரூஉ மழவோம் பாளன், பழவினைப் பயத்தாற் பிழைமண மெய்தி, யெற் கெடுத்திரங்கி."
||பத்துப்பாட்டு, ௬. மதுரைக்காஞ்சி, ௪௧௧.

வலம்படு தானை மன்ன ரில்வழிப்
புலம்பட விறுத்த விருந்தின் மன்னரின்

இ - ள். தம் பெயருக்குவருமிறைவையறிந்து பொருந்தியிறுக்கும் இறைக்குடிகள் துயரமுற, அங்ஙனமிறுத்து குறும்புசெய்யும் வில்லேருழவரை ஒருதலையாகப்பற்றி (வெற்றிபொருந்திய தானைமன்னரில்லாத இடமறிந்து அவர்நிலமெல்லாங்கெடும்படி) புதிதாக வந்துவிட்ட குறுநிலமன்னரைப்போலவென்க.

கறை - கடமை; *"கறைபன் னீராண் டுடன்விடுமின்" என்றார் சிந்தாமணியினும். கெழு - †"முடிகெழுவேந்தர்" என்பதனுள் முடித்தாம். துயருறுதலென்னும் பொருணிகழ்ச்சியைத் தலைமேற் கைவைக்கவென்னும் தொழினிகழ்ச்சியாற் கூறினர்; ‡"கையால் வயிறதுக்குவார்" என்றாற்போல. அறைபோதல் - கீழறுத்தல். ஒடு - ஐ. வலம் - வெற்றி. இல்வழி - இல்லாதகாலத்தே; இடப்பொருள் காலத்தோடு மயங்கிற்று. புலம் - அவர்நிலம். இறுத்த - வந்துவிட்ட. §"சேனை யிறுத்தவாய் போல" என்றாராகலின். விருந்து - புதுமை.

கரு - உO. தாழ்துணை துறந்தோர் தனித்துய ரெய்தக்
காதலர்ப் புணர்ந்தோர் களிமகிழ் வெய்தக்
குழல்வளர் முல்லையிற் கோவலர் தம்மொடு
மழலைத் தும்பி வாய்வைத் தூத
வறுகாற் குறும்பெறிந் தரும்புபொதி வாசஞ்
சிறுகாற் செல்வன் மறுகிற் றூற்ற
வெல்வளை மகளிர் மணிவிளக் கெடுப்ப
மல்லன் மூதூர் மாலைவந் திறுத்தென

இ - ள். தம்மனத்திற்றங்கிய கொழுநர்தம்மைப் பிரிந்திருக்கின்றமகளிர் கறைகெழுகுடிகளைப்போல ஒடுங்கித் துயரமுறத், தங்காதலரைப் புணர்ந்திருக்கின்றமகளிர் அறைபோகு குடிகளைப்போலத் தருக்கி மகிழ்ந்து இன்பமுறக், குழலிலேவளர்கின்ற முல்லையென்னும்பண்ணிலே கோவலரும், குழலிலே வளர்கின்ற முல்லைமலரிலே தும்பியும் வாய்வைத்தூத, அரும்புகள் உள்ளடக்கிய வாசத்தை

* சீவகசிந்தாமணி, நாமகளிலம்பகம் உஎஎ: "கறைபன் னீராண் டுடன்விடுமின் காமர் சாலை தளிநிறுமின், சிறைசெய் சிங்கம் போன்மடங்கிச் சேரா மன்னர் சினமழுங்க, வுறையுங் கோட்ட முடன்சீமி னொண்பொற் குன்றந் தலைதிறந்திட், டிறைவன் சிறுவன் பிறந்தானென் றேற்பார்க் கூர்தோ றுய்த்தீமின்."

† பதிகம், ஆக. [உரு - ம் பக்கம்.]

‡ சீவகசிந்தாமணி, நாமகளிலம்பகம், உசுசு: "கையார் வளைகள் புடைத்திரங்குவார் கதிர்முலை மேலாரம் பரிந்தலறுவார், நெய்யார் கருங்குழன்மேன் மாலை சிந்தி நிலத்தியவார் நின்று திருவில்வீச, மையார் கடிப்பிணையும் வார்குழையுங் களைந்திடுவார் கையால் வயிறதுக்குவா, ரையாவோவென் றழுவார் வேந்தன்செய்த கொடுமை கொடி தென்பார் கோல்வளையினார்"

§ கலித்தொகை, முல்லைக்கலி, அ: "இகல்வேந்தன் சேனை யிறுத்தவாய் போல."

இடையிடையேபுக்கு வண்டுகளுண்ணாதபடி கடிந்தோட்டித் தென்றலஞ்செல்வன் அதனை மறுகெல்லாந்தூற்ற,ஒளிவளையையுடைய மகளிர் இருவகைவிளக்குமெடுப்ப வளமிக்க மூதூர்க்கண்ணே விருந்தின்மன்னனைப்போல மாலையென்னுங்குறும்பு வந்துவிட்டதாகவென்க.

தாழ்தல் - தங்குதல். துணை - தோட்டுணையென்றுமாம். களிமகிழ் - வினைத் தொகை. குழல் - ஊதுங்குழலும், மயிரும். முல்லை - மலரும், பண்ணும். முல்லையிற் சாரியைநிற்ப உருபுதொக்கது. தும்பி - வண்டில் ஒருசாதி. ஊதுங்குழலினும் முல்லையினும் கோவலரோடு தும்பி வாய்வைத்தூதவெனினுமமையும். இது நிரனிறை. ஊதுதலும், கோவலர்க்கும் தும்பிக்கும்பொது. எல் - ஒளி. மல்லல் - வளன். அறுகாலைக் குறும்பென்றார், தென்றல் தளிர்ப்பித்தும், பூப்பித்துஞ் செய்ய அவற்றைத் தான்புகுந்துண்டலான். சிறுகாற்செல்வனென்பதை முற்கூறியவாற்றான்முடிக்க.

அல்லற்காலை விருந்தின்மன்னரில் தனித்துயரெய்தக் களிமகிழ்வெய்த வாய் வைத்தூத மறுகிற்றூற்ற மணிவிளக்கெடுப்ப மாலை வந்திறுத்ததெனவென்க.

உக - உ௬. இளைய ராயினும் பகையரசு கடியுஞ்
செருமாண் டென்னர் குலமுத லாகலி
னந்தி வானத்து வெண்பிறை தோன்றிப்
புன்கண் மாலைக் குறும்பெறிந் தோட்டிப்
பான்மையிற் றிரியாது பாற்கதிர் பரப்பி
மீனர சாண்ட வெள்ளி விளக்கத்து

இ - ள். தாம் பிராயத்தான் இளையராயினும் பகைவேந்தரை முற்றக்கடிய வல்ல செருவின்மேம்பட்ட தென்னர்குலத்திலே முதற்றோன்றுதலாலே அந்திப் பொழுதே செவ்வானினிடத்தே வெண்பிறை தான்றோன்றி வருத்தத்தைத்தரும் மாலையாகிய குறும்பையெறிந்து ஓட்டி அரசியலிற்றப்பாது தனது வெள்ளிய கதிராகிய புகழைப்பரப்பிச் சந்திரன் நாட்டையாண்ட வெண்மையையுடைய விளக்கத்திலேயென்க.

தென்னர் குலமுதலாதலினென்பதற்குத் தென்னர்குலத்திற்கு முதலாகை யாலேயெனினுமமையும், சோமகுலத்தென்னனென்னாது தென்னர்குலச்சோம னென்றார்; அவன், அளியினொத்து வலியினும் தெறலினும் ஒவ்வாமையானும் குறைவும் நிறைவும் மறுவுமுடைமையானும் இவர்க்கு அவை இன்மையானும் உயர்ச்சிநோக்கி. பிறை தென்னர்குலமாதலின், வளவர் குலத்து இரவியாண்ட நிலமழிய வந்துவிட்ட மாலைக்குறும்பை எறிந்து ஓட்டி ஆண்டதென்க. அன்றி ஓட்டித் தான் மீனிராச்சியத்தை ஆண்டதெனினுமமையும். அந்தி - மாலைப்பின் பொழுது. வாளாது வானத்துப்பிறையென்னாது வெண்பிறையெனப் பண்படுத் தமையான், *எடுத்தமொழி இனஞ்செப்பிச் செவ்வானத்து வெண்பிறைதோன்றிய தென்பதாயிற்று. புன்கண் - வருத்தம். மாலையைக் குறும்பென்றார்; இடை நின்றகாலத்துப் புகுந்து வருத்துதலின். குறும்பெறிந்தோட்டி - குறும்பை அறுத் தோட்டி. பான்மையிற்றிரியாது - அரசியலின்வழாது. பாற்கதிர் - பால்

* தொல்காப்பியம், சொல்லதிகாரம், கிளவியாக்கம். ௬௦.

போலுங்கதிர். அதற்குப் புகழெனவும் ஒருபொருடோன்றும். மீனரசு - சந்திரன்; உடுபதியென்பவாதலின். அன்றிமீனிராச்சியமெனினுமமையும்.

உஎ-ா-ச இல்வளர் முல்லையொடு மல்லிகை யவிழ்ந்த
பல்பூஞ் சேக்கைப் பள்ளியுட் பொலிந்து
செந்துகிர்க் கோவை சென்றேந் தல்கு
லந்துகின் மேகலை யசைந்தன வருந்த
நிலவுப்பயன் கொள்ளு நெடுநிலா முற்றத்துக்
கலவியும் புலவியுங் காதலற் களித்தாங்
கார்வ நெஞ்சமொடு கோவலற் கெதிரிக்
கோலங் கொண்ட மாதவி யன்றியும்

இ - ள். முல்லையொடு மல்லிகையும் ஒழிந்த தாழிக்குவளைமுதலிய பலபூவும் அவிழ்ந்த பள்ளியிடத்தே பொலிவுபெற்று அழகேந்திய அல்குறன்னிடத்தில் துகில் செல்லப்பட்டுச் செந்துகிர்க்கோவையாகிய மேகலை அசைந்தனவாய் இரங்காநிற்க நிலாவினது பயனைக் கொள்ளுதற்குக்காரணமாகிய உயர்ந்த நிலாமுற்றத்தின்கண்ணே தன்காதலனுக்கு ஒருகாற் கலவியையும் மறுகாற் புலவியையும் மாறியளித்து அவ்விடத்து ஆர்வமிக்க நெஞ்சத்தோடு கோவலனை எதிரேற்றுமுயங்கி அம்முயக்கத்தால் முன்குலைந்த ஒப்பனையைப் பின்னும் வேட்கைவிளைக்குங்கோலமாக அக்கோலத்தினைத் திருத்திய மாதவியும் அவளன்றியுமென்க.

இல்வளர் - மனைவளர். ஒடு - எண்ணொடு. சேக்கைப்பள்ளி - சேருஞ்சயனம். துகிர்க்கோவை - பவளக்கோவை. துகின்மேகலை - துகின்மேற்சூழ்ந்தமேகலையென்பாருமுளர். அசைந்தனவருந்த நிலவுப்பயன் கொள்ளுமென இடக்கரடக்கிக் கூறினார். எதிரியெனவே முயக்கங்கூறினார். இனிச் சென்று, அகன்றெனச் செல்லுதல் அகறலாக்கி, அகன்றேந்தல்குலிடத்துத் துகின்மேற்சூழ்ந்தமேகலை அசைந்தனவாய் இரங்கவெனினுமமையும். மேகலை - பவளக்கோவை எட்டினாற் செய்தது. *"எண்கோவை மேகலை காஞ்சி யெழுகோவை" என்றாராகலின். †"தவழும் புதல்வனை யொருகையாற் றழீஇப், பவழஞ் சேர்ந்த பல்கா ழல்குலர்" என்றார் கதையினும்.

விளக்கத்திலேபொலிந்து அளித்து எதிரிக்,கோலங்கொண்ட மாதவியென்க.

அவிழ்ந்த பூஞ்சேக்கையெனவே செவ்வியும், பொலிந்தெனவே அழகும் இளமையுங்கூறிற்று.

---

* "எண்கோவை மேகலை காஞ்சி யெழுகோவை, பண்கொள் கலாபம் பதினாறு - கண்கொள், பருமம் பதினெட்டு முப்பத் திரண்டு, விரிசிகை யென்றுணரற் பாற்று."

† பெருங்கதை, உஞ்சைக்காண்டம், சா - வது ஊர்தீயிட்டது: "தவழும் புதல்வனை யொருகையாற் றழீஇப், பவழஞ்சேர்ந்த பல்கா ழல்குல, ரவிழ்ந்த பூந்துகி லங்கையி னசைஇ, நகைப்பூங் கோதையொடு நான்ற கூந்தற்கு, மிகைக்கை காணுது புகைத்தீ யெறிப்பப், படைத்தோன் குற்ற மெடுத்துரை யிதற்கென,வங்கித் தேவ னருளென வயன்மனைப், பொங்குநீர்ப் பொய்கைப் புக்கன ரொருசார்."

௩௫-௩௬. குடதிசை மருங்கின் வெள்ளயிர் தன்னொடு
குணதிசை மருங்கிற் காரகி லுறந்து

இ-ள். மேற்றிசையிடத்துண்டான அயிர்முறியோடே கீழ்த்திசையிடத்துண்டான அகின்முதலியவற்றாற் புகைக்கும்புகையைத்துறந்தென்க.

குடதிசையயிர் - யவனதேசத்து அயிர். அயிர் - கண்டசருக்கரை. குணதிசையகில்; காரகில். குடதிசை, குணதிசை; வெள்ளயிர், காரகிலென்பனவற்றுட் செய்யுளின்பமும் அலங்காரமுமுணர்க. அகிலென்றது ஆகுபெயராற் புகையை. *“இருங்கா ழகிலொடு வெள்ளயிர் புகைப்ப” என்றார் நெடுநல்வாடையினும். புகையுறுப்பு அறுவகையாகவும் தலைமைபற்றி இவ்விரண்டினையுங் கூறினார்.

௩௭-௩௮. வடமலைப் பிறந்த வான்கேழ் வட்டத்துத்
தென்மலைப் பிறந்த சந்தன மறுக

இ-ள். வடதிசைக்கண்ணதாகிய இமயமலைக்கட்பிறந்த சிலாவட்டத்திலே தென்றிசைக்கண்ணதாகிய பொதியமலையிற்பிறந்த சந்தனஞ்சுழலவென்க.

வான்கேழ்வட்டம் - மிக்க ஒளியையுடைய சிலாவட்டம். †“வடவரை தந்த வான்கேழ் வட்டம்” என்றார் பெருங்குறிஞ்சியினும். மறுக - சுழல; அரைக்கவென்றபடி. அகிறுறந்து சந்தனமறுகவென்க. இவற்றின் விரோதமுமுணர்க.

௩௯-௪௬. தாமரைக் கொழுமுறித் தாதுபடு செழுமலர்க்
காமரு குவளைக் கழுநீர் மாமலர்ப்
பைந்தளிர்ப் படலை பருஉக்கா ழாரஞ்
சுந்தரச் சுண்ணத் துகளொடு மளைஇச்
சிந்துபு பரிந்த செழும்பூஞ் சேக்கை
மந்த மாருதத்து மயங்கினர் மலிந்தாங்
காவியங் கொழுந ரகலத் தொடுங்கிக்
காவியங் கண்ணாற் களிதுயி லெய்த

இ-ள். தாமரைக்கொழுமுறியினையும், அதன் மலரினையும், குவளையையும், கழுநீர்மலரினையும், பச்சிலையுடனே கலந்துதொடுத்த படலைமாலையுடனே கோவையுற்ற பருமுத்தமும் சிறந்த சுண்ணத்தோடு சிந்திக் கலந்துகிடந்த வளவிய பூஞ்சேக்கையிடத்து அங்ஙனம்புணர்ந்த உபகாரணப்புணர்ச்சியிறுதியில் மயங்கியமகளிர் தென்றலான்மயக்கந்தீர்ந்து தங்காதன்மிகுதியான் மயங்கித் தமதாவிபோலுங் கொழுநர்மார்பிடத்தே காவிபோலும் கண்மலர்களைப் பொருந்தவைத்து இன்பக் களியான அனந்தல்கூடவென்க.

கொழுமுறி - இளந்தளிர். காமம்வருமென்பது விகாரத்தாற் காமருவென நின்று கண்டார்க்கு விருப்பம்வருமெ[ன்பதா]யிற்று. காண்வரு பாடமாயிற் காட்சி

---

* பத்துப்பாட்டு, நெடுநல்வாடை, ௫௫-௫௬. “தண்ணறுந் தகர முளரி நெருப்பமைத், திருங்கா ழகிலொடு வெள்ளயிர் புகைப்ப.”

† “வடவர் தந்த வான்கேழ் வட்டம்” என்றார் நெடுநல்வாடையிலும். [௫௧.]

வருமென்க. குவளை - நீலோற்பலம். மா - நிறம். பைந்தளிர் - பச்சிலை. படலை - இலைத்தொடை. பரூஉக்காழாரம் - பருமுத்துவடம். சுந்தரம் - நிறம். அளைஇ - கலந்து. சிந்துபு அளைஇயென மாறுக. மயங்கினர்மலிந்து - மயங்கினராய்க்காதன் மிக்கெனினுமமையும். ஆங்கு - அங்ஙனம். களித்துயில் - இன்பத்துயில்.

சஎ-௫எ. அஞ்செஞ் சீறடி யணிசிலம் பொழிய
மென்றுகி லல்குன் மேகலை நீங்கக்
கொங்கை முன்றிற் குங்கும மெழுதாள்
மங்கல வணியிற் பிறிதணி மகிழாள்
கொடுங்குழை துறந்து வடிந்துவீழ் காதின
டிங்கள் வாண்முகஞ் சிறுவியர்ப் பிரியச
செங்கய னெடுங்க ணஞ்சன மறப்பப்
பவள வாணுத றிலக மிழப்பத்
தவள வாணகை கோவல னிழப்ப
மையிருங் கூந்த னெய்யணி மறப்பக்
கையறு நெஞ்சத்துக் கண்ணகி யன்றியும்

இ - ள். சீறடி தன்னையணியுஞ்சிறப்பைச் சிலம்பு பெறுதொழிய, அல்குல் தன்னையணியுஞ்சிறப்பை மேகலை பெறுதுநீங்க, முகம் தன்னையணியுஞ்சிறப்பைச் சிறுவியர் பெறுதுபிரிய, சிவந்து நெடிதான கயல்போலுங்கண் தன்னையணியுஞ் சிறப்பை அஞ்சனம் பெறுதுமறப்ப, நுதல் தன்னையணியுஞ்சிறப்பைத் திலகம் பெறுமலிழப்ப, தன்னைக்கூடினாற்பெறுந் தவளவாணகையைக் கோவலன்பெறுது இழப்ப, தன்னை அணிந்தாற்பெறுங் கூந்தலின்மணத்தைப் புழுகுநெய் பெறுதுமறப்ப, இவை இங்ஙனமாம்படி தான் எழுதாளாய் மகிழாளாய்க் காதினளாய்க் கையற்ற நெஞ்சத்தையுடையளாகிய கண்ணகியும், அவளன்றியுமென்க.

துகில் - அல்குற்கு அடை; *"துப்புறழ் தொண்டைச் செவ்வாய்" போல நின்றது. மேகலை - எண்கோவை. கொங்கைமுன்றில் - முலைமுற்றம். மங்கல வணியிற்பிறிதணி - மங்கலவணியின்வேறுனவணி. கொடுமை - வளைவு. வடிந்து வீழ்காதினளென்பது, அணியாமையினும் பிறந்த அழகுகூறிற்று. வியர்பிரிய - விகாரம். அன்றி வியர்ப்பு இரியவெனினுமமையும். இரிதல - நீங்குதல். நெய் - புழுகுநெய். ஒழிய நீங்கப் பிரிய மறப்ப இழப்பவெனப் பரியாய வாய்பாட்டான் வந்து இழப்பவென்னும் பொருளவாயின. இவ்வினையெச்சங்களை எழுதாள் மகிழாள் காதினளென்னும்குறிப்புவினைப்பெயரான்முடித்து இப்பெயர்கட்குப் பண் பொட்டுவிரித்து இவற்றைக் கையற்றவென்னும் பெயரெச்சத்தோடுமுடித்து இப் பெயரெச்சத்தை நெஞ்சென்னும் பெயரோடுமுடித்து இதனையுடைய கண்ணகி யென்க. இனித் தவளவாணகை கோவலனிழப்பவென்பதனுன் அவன்பிரிய

---

* சீவகசிந்தாமணி, நாமகளிலம்பகம், எஅ, "துப்புறழ் தொண்டைச் செவ் வாய்த் தோழியர் காமத் தூதி, நெருப்பகத் தன்று ருகி யாக வாயிரத் தோரெட் டீருச், செப்பித்தஞ் செம்பொ னல்கு லலம்வரா வின்றி விற்கு, முப்பமை காமத் துப்பி னவரிட முரைத்து மன்றே."

வென்பதாம் ; ஆகவே இவ்வுறுப்புக்கள், அவன்பிரிவுக்கு உடம்பட்டனவென்று முனிந்து ஒழிய நீங்க இரிய மறப்ப இழப்ப,இவற்றோடு குழையையுந் துறந்தகாதினள் எழுதாள் மகிழாளாதலான் இவையும் பயனிழப்பத் தானும் அழகும் இன்பமுமிழத்தலாற் கையற்றநெஞ்சினையுடைய கண்ணகியெனவுரைப்பினுமமையும் ; *"அருங்கல. ......அதுக்கினள்" எனவும், †"மஞ்சசூழ்.........சிறினள்" எனவும் சிந்தாமணியினுங்கூறினாராகலின்.

ரு௰-எக. காதலர் பிரிந்த மாதர் நோதக
ஊதுலைக் குருகி னுயிர்த்தன ரொடுங்கி
வேனிற் பள்ளி மேவாது கழிந்து
கூதிர்ப் பள்ளிக் குறுங்க ணடைத்து
மலயத் தாரமு மணிமுத் தாரமு
முலர்முலை யாகத் தடையாது வருந்தத்
தாழிக் குவளையொடு தண்செங் கழுநீர்
வீழ்பூஞ் சேக்கை மேவாது கழியத்
துனைபுண ரன்னத் தூவியிற் செறித்த
விணையணை மேம்படத் திருந்துதுயில் பெறாஅ
துடைப்பெருங் கொழுநரொ டூடற் காலத்
திடைக்குமி ழெறிந்து கடைக்குழை யோட்டிக்
கலங்கா வுள்ளங் கலங்கக் கடைசிவந்து
விலங்கிநிமிர் நெடுங்கண் புலம்புமுத் துறைப்ப

இ-ள். அங்ஙனம் கையற்ற கண்ணகியேயன்றியும், தங்காதலரைப்பிரிந்த மாதர் பிரிவால் துன்பமுறுதலானே ஊதுகின்ற துருத்தியின் உலைமூக்குப்போல அழலெழவுயிர்த்தனராய்ச் செருக்கடங்கி இவ்விளவேனிற்காலத்திற்கமைந்த நிலாமுற்றத்தின்மேவாதொழிந்து கூதிர்க்காலத்திற்கமைந்த இடைநிலத்து ஒடுங்கி ஆண்டுத் தென்றலுநிலவும்புகாமற் சாளரக்கண்களையடைத்துச் சந்தனமுமுத்தும் ஆகத்துமுலையில் அடையப்பெறாது வருந்தக் குவளை செங்கழுநீர்முதலிய குளிர்ந்த மலர்கள் தாம்விரும்பிய பூஞ்சேக்கையிற் பள்ளித்தாமமாய் மேவப்பெறாமல் வருந்தத், தன்சேவலோடுபுணர்ந்த அன்னப்பேடை அப்புணர்ச்சியான் உருகியுதிர்த்த வயிற்றின்மயிர் எஃகிப்பெய்த பல்வகையணைமீதே மேன்மைபெறத் தங்கொழுநரகலத்தே துயிலும் களித்துயிலைப்பெறாமல் அவரோடு முன்பு ஊடிய காலத்து இடைநின்ற குமிழையெறிந்து கடைநின்றகுழையைத்துரந்து பெருமை

* சீவகசிந்தாமணி, பதுமையாரிலம்பகம், உ०௬. "அருங்க லக்கொடி யன்னவ னேகின, னிருந்திவ் வாகத் தெவன்செய்விர் நீரென, மருங்கு ேநாவ வளர்ந்த வனமுலைக், கருங்கண் சேந்து கலங்க வதுக்கினள்."

† சீவகசிந்தாமணி, பதுமையாரிலம்பகம், உ०அ. "மஞ்சு சூழ்வரை மார்பனைக் காணிய, துஞ்ச லோம்புமி னென்னவுந் துஞ்சினீ, ரஞ்ச னத்தொடு மையணி மின்னென, நெஞ்சி னீணெடுங் கண்மலா சிறினள்."

யும் உரனுமுடைமையாற் கலங்காதநெஞ்சமும் கலங்கும்படி கடைசிவந்து குறக் கிட்டப்பிறழும் நெடியகண்கள் அன்னைம்பிறழ்ந்து உவகைமுத்தைச் சிந்தாது புலம்புமுத்தைச்சிந்தவென்க.

நோதக - கண்டார்க்கு நோவுதக. ஊதுலைக்குருகு - துருத்தி; வெளிப்படை. அலர்தல் - பரத்தல். ஆகத்துமுலையென்க; முலையாகமுமாம். கழியவென்பது ஈண்டு வருந்தவென்பதாயிற்று. துணை - சேவல். தூவி - மயிர். இணையணை - பலவான அணை; *"ஐந்துமூன்றடுத்த" என்றாராகலின். இருந்துயில் - முற் கூறிய களித்துயில். உடைப்பெருங்கொழுநர் - தங்களையுடைய பெரியகொழுநர். ஊடற்காலத்து - முன்னூடுங்காலங்களில். கலங்காவுள்ளம் - பெருமையும் உரனு முடையவுள்ளம். விலங்கிநிமிர் - குறுக்கிட்டுப்பிறழும். நிமிர்நெடுங்கண் - வினைத் தொகை. புலம்புமுத்து - துன்பக்கண்ணீர்; உவகைக்கண்ணீருமுண்டாகலின். புலம்பு - தனிமையுமாம். உறைப்ப - உகுப்ப.

கண்ணகியன்றியும் மாதர் ஒடுங்கிக் கழிந்து அடைத்து வருந்தக் கழியப் பெறாது முத்துறைப்பவென்க.

எஉ-எசு. அன்ன மென்னடை நன்னீர்ப் பொய்கை
யாம்ப னாறுந் தேம்பொதி நறுவிரைத்
தாமரைச் செவ்வாய்த் தண்ணறற் கூந்தற்
பாண்வாய் வண்டு நேர்திறம் பாடக்
காண்வரு குவளைக் கண்மலர் விழிப்ப

இ-ள். அன்னமாகிய மென்னடையினையும் தேம்பொதிநறுவிரை ஆம்ப னாறும் தாமரையாகிய வாயினையும் தண்ணறலாகிய கூந்தலினையுமுடைய பொய்கை யென்பாள், பாண்டன்மையைத் தம்மிடத்தேயுடைய வண்டுகளாகிய பள்ளியுணர் த்துவார் புறநீர்மையென்னும் திறத்தாற் பள்ளியெழுச்சிபாட, அழகுவரும் குவளை யாகிய கண்மலர்விழிப்பவென்க.

ஆம்பல் - வாய்க்கு அடை: †"துப்புறழ் தொண்டைச் செவ்வாய்" போல; பண்ணுமாம். நாறும் - தோன்றும்; ‡"அருமணி மரகதத் தங்க னாறிய" எனச் சிந்தாமணியினும், §"மரகத மணிக்கயத் தங்க ணாறிய, வழனிறப் பொன்னித ழாயிரம் விரித்து" எனக் கதையினுள்ளுங்கூறினாராகலின். தேம் - இனிமையும்,

---

* சீவகசிந்தாமணி, காந்தருவதத்தையாரிலம்பகம், ௬௪௬. "ஐந்துமூன் றடு த்த செல்வத் தமளிமூன் றியற்றிப் பூம்பட், டெந்திர வெழினி வாங்கி யின்முக வாசச் செப்புஞ், சிந்தனச் சாந்தச் செப்புந் தண்மலர் மாலை பெய்த, விந்திர நீலச் செப்பு மிணையவ ரேந்தி னரே."

† சீவகசிந்தாமணி, நாமகளிலம்பகம், எ௮.

‡ ,, ,, கருச. அருமணி மரகதத் தங்க ணாறிய, வெரிநிறப் பொன்னித ழேந்து தாமரைத், திருமக ளிவளெனத் திலக வெண் குடைப், பெருமகன் கோயிலுட் பேதை வைகுமே."

§ உதயணன்கதை.

தேனும். நறுவிரை - நல்லமணம். பாண் - பாண்சாதி. நேர்திறம் - நேர்ந்ததிறம்; ஆவது புறநீர்மை. அது, பாலைப்பண்ணின்றிறமைந்தின் ஒன்றென்க; என்னை? "தக்கராக நேர்திறங் காந்தாரபஞ்சமமே, தக்கங் கழிசோம ராகமே - மிக்கதிறற்-காந்தார மென்றைந்தும் பாலைத் திறமென்றார், பூந்தா ரகத்தியனார் போந்து" என்ப வாகலின். குவளைக்கண்மலர் - குவளையாகிய கள்ளையுடையமலர்; குவளைக் கண் மலருமாயிற்று. விழித்தல் - மலர்தலும், கண்விழித்தலுமாயிற்று. இனித் தேம் பொதி நறுவிரைத்தாமரையாகிய ஆம்பலும் செவ்வாயெனினுமமையும். இனிப் பெண்பாலாதலிற் பண்டோற்றும்வாயென வாய்க்கடையாக்கலுமொன்று. பாணைப் பாட்டாக்கி வண்டின்வாய்க்கு அடையாக்கினுமமையும். பாட விழிப்பவென இயையும். அன்னமென்பதுமுதல் விழிப்பவென்னுந்துணையுங்கூறியவிவை உருவகமென்னுமலங்காரமென்றுணர்க.

௭௭-அச. புள்வாய் முரசமொடு பொறிமயிர் வாரணத்து
முள்வாய்ச் சங்க முறைமுறை யார்ப்ப
வுரவுநீர்ப் பரப்பி னூர்துயி லெடுப்பி
யிரவுத் தலைப்பெயரும் வைகறை காறு
மளையிருள் யாமத்தும் பகலுந் துஞ்சார்
விரைமலர் வாளியொடு கருப்புவில் லேந்தி
மகர வெல்கொடி மைந்தன் றிரிதர
நகரங் காவ லனிசிறந் ததுவென

இ - ள். பொய்கை கண்மலர்விழிப்பப் புள்ளொலியாகிய முரசுடனே கோழியும் சங்கமும் முறைமுறையார்ப்பக் கடல்போலும் பரப்பையும் ஒலியையுமுடைய வூரைத்துயிலெழுப்பி அல்லற்காலை வந்துபுக்க இருள் இவ்விடத்துநின்றுநீங்கும் வைகறையாமமளவும் முன்சென்ற அரையிருளினும் ஓர்யாமத்தினும் அரையாமத்தினும் ஒருகணப்பொழுதுந்துஞ்சாரம்படி காமன் ஏந்தித் திரிதருதலானே இந் நகரம் மிகவும் காவல்சிறந்ததென்க.

*"நடுநாள் யாமத்தும் பகலுந் துஞ்சான்" என்றார் புறத்தினும். †"கைச் சிலை கணையோ டேந்திக் காமனிக் கடையைக் காப்பான்" என்றார் சிந்தாமணியினும். முள்வாய் - கூர்த்தவாய். முறைமுறையார்ப்ப - தத்தம் இனமரபினார்ப்ப.

---

* புறநானூறு, க௮௯: "தெண்கடல் வளாகம் பொதுமை யின்றி, வெண்குடை நிழற்றிய வொருமை யோற்கு, நடுநாள் யாமத்தும் பகலுந் துஞ்சான், கடுமாப் பார்க்குங் கல்லா வொருவற்கு, முண்பது நாழி யுடுப்பவை யிரண்டே, பிறவு மெல்லா மோரொக் கும்மே, செல்வத்துப் பயனே யீதல், துய்ப்பே மெனினே தப்புந பலவே." மதுரைக் கணக்காயனார்மகனார் நக்கீரனார் பாடியது.

† சீவகசிந்தாமணி, சுரமஞ்சரியாரிலம்பகம், கசு. "பச்சிலைப் பட்டு முத்தும் பவளமு மிமைக்கு மல்கு, னச்சிலை வேற்கண் மாதர் நகைமுக முறுவன் மாந்தி, யிச்சையுங் குறிப்பு நோக்கி யெய்வதே கரும மாகக், கைச்சிலை கணையோ டேந்திக் காமனிக் கடையைக் காப்பான்."

இன் - உவமவுருபு. *"துயிலெடை" என்பவாகலின், எடுப்பியென்றார்; பிரிந்தார்க்கும் புணர்ந்தார்க்குந்துயிலின்மை காமனால் வருதலின். இரவு தலைப்பெயரு மென்பதனை இரவுத்தலையென்றார்; †"கிளர்தவல்ல" என்னுமதிகாரப்புறனடையால்; "தடவுத்திரை" போல வல்லெழுத்துப்பெற்றது. தலை - இடம். பெயரும் - நீங்கும். கா(று)ம் - அளவும். அரையிருள் - இரண்டாம் யாமம். யாமம் - ஓர் யாமம். அரையிருள்யாமம் - உம்மைத்தொகை; இருபெயர்க்கண் வந்தது. பகல் - அரையாமம். ‡"மற்றை யாமம் பகலுறக் கழிப்பி" என்றார் மதுரைக்காஞ்சியுள்ளும்; பகுத்தலிற் பகலாயிற்று. நனி - மிகுதி. இனித் துஞ்சானென்றுபாடமோதிக் காமன் துஞ்சானாய்த்திரிதருதலின், நகரம் காவல்சிறந்ததெனினுமமையும்.

ஆர்ப்ப எடுப்பித் தலைப்பெயரும் வைகறைகாறும் துஞ்சாராம்படி காமன் ஏந்தித் திரிதருதலான் நகரம் காவல் மிகச்சிறந்ததென்க.

என - அசை. இது முதல் நடு இறுதியாக அளவடியான்முடிதலின், நிலைமண்டில ஆசிரியப்பா.

கூடினார் பானிழலாய்க் கூடார்பால் வெய்யதாய்க்
காவலன் வெண்குடைபோற் காட்டிற்றே - கூடிய
மாதவிக்குங் கண்ணகிக்கும் வானூர் மதிவிரிந்து
போதவிழ்க்குங் கங்குற் பொழுது.

பருந்து நிழலுமென... ...அடியார்க்குநல்லானென்பான்.
ஒருந்தமிழ ... ...நிரம்பையர்காவலனே.
காற்றை ... ...சொல்வித்ததே.

அந்திமாலைச்சிறப்புச்செய்காதை முற்றிற்று.

* தொல்காப்பியம், பொருளதிகாரம், புறத்திணையியல், ருரு. "சூதரேத்திய துயிலெடை நிலையும்." "பயில்பூம் பள்ளித் துயிலெடை மாக்கள்" என்றார் பெருங்கதையிலும், வத்தவகாண்டம், கனவிறுத்தது.

† தொல்காப்பியம், எழுத்ததிகாரம், குற்றியலுகரப்புணரியல், எஅ.

‡ பத்துப்பாட்டு, மதுரைக்காஞ்சி, ருருரு.

ஐந்தாவது

இந்திரவிழவூரெடுத்தகாதை.

அலைநீ ராடை மலைமுலை யாகத்
தாரப்பே ரியாற்று மாரிக் கூந்தற்
கண்ணகன் பரப்பின் மண்ணக மடந்தை
புதையிருட் படாஅம் போக நீக்கி
யுதய மால்வரை யுச்சித் தோன்றி
யுலகுவிளங் கவிரொளி மலர்கதிர் பரப்பி
வேயா மாடமும் வியன்கல விருக்கையு
மான்கட் காலதர் மாளிகை யிடங்களுங்
கயவாய் மருங்கிற் காண்போர்த் தடுக்கும
பயனற வறியா யவன ரிருக்கையுங்
கலந்தரு திருவிற் புலம்பெயர் மாக்கள்
கலந்திருந் துறையு மிலங்குநீர் வரைப்பும்
வண்ணமுஞ் சுண்ணமுந் தண்ணறுஞ் சாந்தமும்
பூவும் புகையு மேவிய விரையும்
பகர்வனர் திரிதரு நகர வீதியும்
பட்டினு மயிரினும் பருத்தி நூலினுங்
கட்டு நுண்வினைக் காருக ரிருக்கையு
*மாரமு மகிலுந் தூசுந் துகிரு
மாசறு முத்து மணியும் பொன்னு
மருங்கல வெறுக்கையோ டளந்து கடையறியா
வளந்தலை மயங்கிய நனந்தலை மறுகும
பால்வகை தெரிந்த பகுதிப் பண்டமொடு
கூலங் குவித்த கூல வீதியும்
காழியர் கூவியர் கண்ணொடை யாட்டியர்
மீன்விலைப் பரதவர் வெள்ளுப்புப் பகருநர்
பாசவர் வாசவர் †பன்னிண விலைஞரோ
டோசுநர் செறிந்த வூன்மலி யிருக்கையுங்
கஞ்ச காரருஞ் செம்புசெய் குநரு
மரங்கொ றச்சருங் கருங்கைக் கொல்லருங்

---

* தூசுந் துகிரு மாரமு மகிலு மென மாற்றி வழங்குவாருமுளர்.

† மைந்நிண விலைஞரெனவும் பைந்நிண விலைஞரெனவும் பாடம்.

கண்ணுள் வினைஞரு மண்ணீட் டாளரும
*பொன்செய் கொல்லரு நன்கலந் தருநரும்
துன்ன காரருந் தோலின் றுன்னருங்
கிழியினுங் கிடையினுந் †தொழில்பல பெருக்கிப்
பழுதில் செய்வினைப் பால்கெழு மாக்களுங்
குழலினும் யாழினுங் குரன்முத லேழும்
வழுவின் றிசைத்து வழித்திறங் காட்டு
மரும்பெறன் மரபிற் பெரும்பா ணிருக்கையுஞ்
சிறுகுறுங் கைவினைப் பிறர்வினை யாளரொடு
மறுவின்றி விளங்கு மருவூர்ப் பாக்கமும்
கோவியன் வீதியுங் கொடித்தேர் வீதியும்
பீடிகைத் தெருவும் பெருங்குடி வாணிகர்
மாட மறுகு மறையோ ரிருக்கையும்
வீழ்குடி யுழவரொடு விளங்கிய கொள்கை
யாயுள் வேதருங் காலக் கணிதரும்
பால்வகை தெரிந்த பன்முறை யிருக்கையுந்
திருமணி குயிற்றுநர் சிறந்த கொள்கையொ
டணிவளை போழுந ரகன்பெரு வீதியுஞ்
சூதர் மாகதர் ‡வேதா ளிகரொடு
நாழிகைக் கணக்கர் நலம்பெறு கண்ணுளர்
காவற் கணிகைய ராடற் கூத்தியர்
பூவிலை மடந்தைய ரேவற் சிலதியர்
பயிற்றொழிற் குயிலுவர் பன்முறைக் கருவியர்
நகைவே ழம்பரொடு வகைதெரி யிருக்கையுங்
கடும்பரி கடவுநர் களிற்றின் பாகர்
நெடுந்தே ரூருநர் கடுங்கண் மறவ
ரிருந்து புறஞ்சுற்றிய பெரும்பா யிருக்கையும்
பீடுகெழு சிறப்பிற் பெரியோர் மல்கிய
பாடல்சால் சிறப்பிற் பட்டினப் பாக்கமு
மிருபெரு வேந்தர் முனையிடம் போல
விருபாற் பகுதியி னிடைநில மாகிய
கடைகால் யாத்த மிடைமரச் §சோலைக்
கொடுப்போ ரோதையுங் கொளவோ ரோதையு
நடுக்கின்றி நிலைஇய நாளங் காடியிற்

---

* பொன்செய்புலவரெனவும் பாடம். ‡ வேதாளியரென்றும்பாடம்.
† கழிபலபெருக்கியெனவும் பாடம். § சோலையுளென்றும் பாடம்.

சித்திரைச் சித்திரைத் திங்கள் சேர்ந்தென, அந்நாள்
வெற்றிவேன் மன்னற் குற்றதை யொழிக்கெனத்
தேவர் கோமா னேவலிற் போந்த
காவற் பூதத்துக் கடைகெழு பீடிகைப்
புழுக்கலு நோலையும் விழுக்குடை மடையும்
பூவும் புகையும் பொங்கலுஞ் சொரிந்து
துணங்கைய ரணங்கெழுந் தாடிப்
பெருநில மன்ன னிருநில மடங்கலும்
பசியும் பிணியும் பகையு நீங்கி
வசியும் வளனுஞ் சுரக்கென வாழ்த்தி
மாதர்க் கோலத்து வலவையி னுரைக்கு
மூதிற் பெண்டி ரோதையிற் பெயர
மருவூர் மருங்கின் மறங்கொள் வீரரும்
பட்டின மருங்கிற் படைகெழு மாக்களு
முந்தச் சென்று முழுப்பலி பீடிகை
வெந்திறன் மன்னற் குற்றதை யொழிக்கெனப்
பலிக்கொடை புரிந்தோர் வலிக்குவரம் பாகெனக்
கல்லுமிழ் கவணினர் கழிப்பிணிக் கறைத்தோற்
பல்வேற் பரப்பினர் மெய்யுறத் தீண்டி
யார்த்துக் களங்கொண் டோரார மழுவத்துச்
சூர்த்துக் கடைசிவந்த சுடுநோக்குக் கருந்தலை
வெற்றி வேந்தன் கொற்றங் கொள்கென
நற்பலி பீடிகை நலங்கொள வைத்தாங்
குயிர்ப்பலி யுண்ணு முருமுக்குரன் முழக்கத்து
மயிர்க்கண் முரசொடு வான்பலி யூட்டி
யிருநில மருங்கிற் பொருநரைப் பெறாஅச்
செருவெங் காதலிற் றிருமா வளவன்
வாளுங் குடையு மயிர்க்கண் முரசு
நாளொடு பெயர்த்து நண்ணார்ப் பெறுகவிம்
மண்ணக மருங்கினென் வலிகெழு தோளெனப்
புண்ணியத் திசைமுகம் போகிய வந்நா
ளசைவி லூக்கத்து நசைபிறக் கொழியப்
பகை*விலக் கியதிப் பயங்கெழு மலை
யிமையவ ருறையுஞ் சிமையப் பிட
கொடுவரி †யேற்றிக் கொள்கையி

---

* விலங்கியதெனவும் பாடம். † எழுதி

மாநீர் வேலி வச்சிர நன்னாட்டுக்
கோனிறை கொடுத்த கொற்றப் பந்தரு
மகதநன் னா/ .டு வாள்வாய் வேந்தன்
பகைப்புறத்துக் கொடுத்த பட்டிமண் டபமு
மவந்தி வேந்த னுவந்தனன் கொடுத்த
நிவந்தோங்கு மரபிற் றோரண வாயிலும்
பொன்னினு மணியினும் புனைந்தன வாயினு
நுண்வினைக் கம்மியர் காணா மரபின
துயர்நீங்கு சிறப்பினவர் தொல்லோ ருதவிக்கு
மயன்விதித்துக் கொடுத்த மரபின வவைதா
மொருங்குடன் புணர்ந்தாங் குயர்ந்தோ ரேத்து
மரும்பெறன் மரபின் மண்டப மன்றியும்
வம்ப மாக்க டம்பெயர் பொறித்த
கண்ணெழுத்துப் படுத்த வெண்ணுப் பலபொதி
கடைமுக வாயிலுங் கருந்தாழ்க் காவலு
முடையோர் காவலு மொரீஇய வாகிக்
கட்போ ருளரெனிற் கடுப்பத் தலையேற்றிக்
கொட்பி னல்லது கொடுத்த லீயா
துள்ளுநர்ப் பனிக்கும் வெள்ளிடை மன்றமுங்
கூனுங் குறளு மூமுஞ் செவிடு
மழுகுமெய் யாளரு முழுகினர் ஆடிப்
பழுதில் காட்சி நன்னிறம் பெற்று
வலஞ்செயாக் கழியு மிலஞ்சி மன்றமும்
வஞ்ச முண்டு மயற்பகை யுற்றோர்
நஞ்ச முண்டு நடுங்கு துயருற்றோ
ரழல்வாய் நாகத் தாரெயி றழுந்தினர்
கழல்கட் கூளிக் கடுநவைப் பட்டோர்
சுழல வந்து தொழத்துயர் நீங்கு
நிழல்கா னெடுங்க னின்ற மன்றமுந்
...வமறைந் தொழுகுந் தன்மை யிலாள
...றைந் தொழுகு மவலைப் பெண்டி.
...ா கமைச்சர் பிறர்மனை நயப்போர்
...யாளர் புறங்கூற் றாளரென்
...ாசத்துக் கைப்படு வோரெனக்
...டுங்குர லெடுப்பிப்
...னும் பூத சதுக்கமு

மரசுகோல் கோடினு மறங்கூ றவையத்
துரைநூல் கோடி யொருதிறம் பற்றினு
நாவொடு நவிலாது நவைநீ ருகுத்துப்
பாவை நின்றழூஉம் பாவை மன்றமு
மெய்வகை யுணர்ந்த விழுமியோ ரேத்து
மைவகை மன்றத்து மரும்பலி யுறீஇ
வச்சிரக் கோட்டத்து மணங்கெழு முரசங்
கச்சை யானைப் பிடர்த்தலை யேற்றி
வால்வெண் களிற்றரசு வயங்கிய கோட்டத்துக்
கால்கோள் விழவின் கடைநிலை சாற்றித்
தங்கிய கொள்கைத் தருநிலைக் கோட்டத்து
மங்கல நெடுங்கொடி வானுற வெடுத்து
மரகத மணியொடு வயிரங் குயிற்றிய
பவளத் திரள்காற் பைம்பொன் வேதிகை
நெடுநிலை மாளிகைக் கடைமுகத் தியாங்கணுங்
கிம்புரிப் பகுவாய்க் கிளர்முத் தொழுக்கத்து
மங்கலம் பொறித்த மகர வாசிகைத்
தோரண நிலைஇய தோமறு பசும்பொற்
பூரண கும்பத்துப் பொலிந்த பாலிகை
பாவை விளக்குப் பசும்பொற் படாகை
தூமயிர்க் கவரி சுந்தரச் சுண்ணத்து
மேவிய கொள்கை வீதியிற் செறிந்தாங்
கைம்பெருங் குழுவு மெண்பே ராயமு
மரச குமரரும் பரத குமரருங்
கவர்பரிப் புரவியர் களிற்றின் றொகுதிய
ரிவர்பரித் தேரின ரியைந்தொருங் கீண்டி
யரசு மேம்படீஇய வகனிலை மருங்கி
னுரைசான் மன்னன் கொற்றங் கொள்கென
மாயிரு ஞாலத்து மன்னுயிர் காக்கு
மாயிரத் தோரெட் டரசு தலைக்கொண்ட
தண்ணறுங் காவிரித் தாதுமலி பெருந்துறைப்
புண்ணிய நன்னீர் பொற்குடத் தேந்தி
மண்ணக மருள வானகம் வியப்ப
விண்ணவர் தலைவனை விழுநீ ராட்டிப்
பிறவா யாக்கைப் பெரியோன் கோயிலு
மறுமுகச் செவ்வே ளணிதிகழ் கோயிலும்

வால்வளை மேனி வாலியோன் கோயிலு
நீல மேனி நெடியோன் கோயிலு
மாலை வெண்குடை மன்னவன் கோயிலு
மாமுது முதல்வன் வாய்மையின் வழாஅ
நான்மறை மரபிற் றீமுறை யொருபா
னால்வகைத் தேவரு மூவாறு கணங்களும்
பால்வகை தெரிந்த பகுதித் தோற்றத்து
வேறுவேறு கடவுளர் சாறுசிறந் தொருபா
லறவோர் பள்ளியு மறனோம் படையும்
புறநிலைக் கோட்டத்துப் புண்ணியத் தானமுந்
*திறவோ ருரைக்குஞ் செயல்சிறந் தொருபாற்
கொடித்தேர் வேந்தனொடு கூடா மன்ன
ரடித்தளை நீக்க வருள்சிறந் தொருபாற்
கண்ணு ளாளர் கருவிக் குயிலுவர்
பண்ணியாழ்ப் புலவர் பாடற் பாணரொ
டெண்ணருஞ் சிறப்பி னிசைசிறந் தொருபான்
முழவுக்கண் டுயிலாது முடுக்கரும் வீதியும்
விழவுக்களி சிறந்த வியலு ளாங்கட்
காதற் கொழுநனைப் பிரிந்தல ரெய்தா
மாதர்க் கொடிங்குழை மாதவி தன்னொ
டில்வளர் முல்லை மல்லிகை மயிலை
தாழிக் குவளை சூழ்செங் கழுநீர்
பயில்பூங் கோதைப் பிணையலிற் பொலிந்து
காமக் களிமகிழ் வெய்திக் காமர்
பூம்பொதி நறுவிரைப் பொழிலாட் டமர்ந்து
நாண்மகி ழிருக்கை நாளங் காடியிற்
பூமலி கானத்துப் புதுமணம் புக்குப்
புகையுஞ் சாந்தும் புலராது சிறந்து
நகையா டாயத்து நன்மொழி திளைத்துக்
குரல்வாய்ப் பாணரொடு நகரப் பரதரொடு
திரிதரு மரபிற் கோவலன் போல
விளிவாய வண்டினொ டின்னிள வேனிலொடு
மலய மாருதந் திரிதரு மறுகிற்
கருமுகில் சுமந்து குறுமுய லொழித்தாங்
கிருகருங் கயலொ டிடைக்குமி ழெழுதி

---

* திறவோருரைக்குமெனவும் பாடம்.

யங்கண் வானத் தரவுப்பகை யஞ்சித்
திங்களு மீண்டுத் திரிதலு முண்டுகொ
ணீர்வாய் திங்க ளீணிலத் தமுதின்
சீர்வாய் துவலைத் திருநீர் மாந்தி
மீனேற்றுக் கொடியோன் மெய்பெற வளர்த்த
வான வல்லி வருதலு முண்டுகொ
லிருநில மன்னற்குப் பெருவளங் காட்டத்
திருமகள் புகுந்ததிச் செழும்பதி யாமென
வெரிநிறத் திலவமு முல்லையு மன்றியுங்
கருநெடுங் குவளையுங் குமிழும் பூத்தாங்
குள்வரிக் கோலத் துறுதுணை தேடிக்
கள்ளக் கமலந் திரிதலு முண்டுகொன்
மன்னவன் செங்கோன் மறுத்த லஞ்சிப்
பல்லுயிர் பருகும பகுவாய்க் கூற்ற
மாண்மையிற் பிரிந்துத னருந்தொழி றிரியாது
நாணுடைக் கோலத்து நகைமுகங் கோட்டிப்
பண்மொழி நரம்பிற் றிவவியாழ் மிழற்றிப்
பெண்மையிற் றிரியும் பெற்றியு முண்டெனு
வுருவி லாள னொருபெருஞ் சேனை
யிகலம ராட்டி யெதிர்நின்று விலக்கியவ
ரெழுதுவரி கோல முழுமெயு முறீஇ
விருந்தொடு புக்க பெருந்தோட் கணவரொ
டுடனுறைவு மரீஇ யொழுக்கொடு புணர்ந்த
வடமீன் கற்பின் மனையுறை மகளிர்
மாதர்வாண் முகத்து மணித்தோட்டுக் குவளைப்
போது புறங்கொடுத்துப் போகிய செங்கடை
விருந்திற் றீர்ந்தில தாயின் யாவது
மருந்துந் தருங்கொலிம் மாநில வரைப்பெனக்
கையற்று நடுங்கு நல்வினை நடுநா

ளுள்ளக நறுந்தா துறைப்பமீ தழிந்து
கள்ளக நடுங்குங் கழுநீர் போலக்
கண்ணகி கருங்கணு மாதவி செங்கணு
முண்ணிறை கரந்தகத் தொளித்துநீ ருகுத்தன
வெண்ணுமுறை யிடத்தினும் வலத்தினுந் துடித்தன
விண்ணவர் கோமான் விழவுநா ளகத்தென.

க - சு. அலைநீ ராடை மலைமுலை யாகத்
தாரப்பே ரியாற்று மாரிக் கூந்தற்
கண்ணகன் பரப்பின் மண்ணக மடந்தை
புதையிருட் படாஅம் போக நீக்கி
யுதய மால்வரை யுச்சித் தோன்றி
யுலகுவிளங் கவிரொளி மலர்கதிர் பரப்பி

இ - ள். கடலாகிய ஆடையினையும், மலையாகியமுலையினையும், அம்முலையூாகத்துப் பெரிய யாறாகிய ஆரத்தினையும் மாரியாகிய கூந்தலினையுமுடைய இடமகன்ற பரப்பினையுடைய *அரசுகெடுத்தலம்வரும் நிலமடந்தை அல்லற்காலைப் பசந்து வாரப் பனித்துப் போர்த்த இருளாகிய படாத்தைத் தன் கதிர்க்கைகளானீக்கி அவிரொளி உதயமூல்வரையுச்சிக்கட்டோன்றி விரிந்தகதிர்களைப்பரப்பவென்க.

மலை - பொதியிலும், இமயமும். இவற்றைச் சாதியொருமையாற்கூறினார். "பொதியிலு மிமயமும் புணர்முலை யாக" என்றார்கதையினும். ஆரப்பேர்யாற்று - பேர்யாற்றாரத்தெனப் பாடமாற்றுக. ஆரம் - முத்துவடம். மாரி - முகில். அகன் பரப்பு - வினைத்தொகை. புதைத்தல் - போர்த்தல்; மலைநாட்டுவழக்கு. போக - அகல. உலகுவிளங்கவிரொளி - உலகுவிளங்குதற்குக்காரணமாகத் தான்விளங்குமொளி; ஆவது ஞாயிறு. மலர்தல் - விரிதல். பரப்பி - பரப்பவெனத்திரிக்க. வாளாது மண்மடந்தையென்னாது கண்ணகன்பரப்பின் மண்ணகமடந்தையென்று மிகுத்துக்கூறினார், அத்தன்மையாளைப் போர்த்த நீலப்படாத்தைத் தன்றேசினால் நீக்கிய ஒளியெனற்கு. எனவே செம்பியன்மரபுயர்ச்சி கூறியவாறாயிற்று.

படாத்தைநீக்கித் தோன்றிப் பரப்பவென்க.

எ. வேயாமாடமும் — இ - ள். நிலாமுற்றமும்,

எ. வியன்கல விருக்கையும் — இ - ள். வேற்றுமைப்பட்ட அணிகலம் பெய்த சாக்கறையும்,

வியன் - மிகுதியுமாம்.

அ. மான்கட் காலதர் மாளிகை யிடங்களும்

இ - ள். மானின்கண்போலக் கோணஞ்செய்த சாளரங்களையுடைய மாளிகையிடங்களும்,

காலதர் - சாளரம்

கூ - க0. கயவாய் மருங்கிற் காண்போர்த் தடுக்கும்
பயனறவறியா யவன ரிருக்கையும்

இ - ள். புகார்முகப்பக்கங்களில் தம்மைக்காண்போர்கண்கள் [illegible] போக விடாமற்றடுக்கும் பயன் தொலைதலையறியாத மிலேச்சரிருக்குமிடங்களும்

கக - கஉ. கலந்தரு திருவிற் புலம்பெயர் மாக்கள்
கலந்திருந் துறையு மிலங்குநீர் வரைப்பும்

* இங்கே தந்துரைத்தவற்றை அந்திமாலைச்சிறப்புச்செய்காதை [illegible] அடிகளிற்காண்க.

இ - ள். மரக்கலந்தரும் செல்வப்பொருட்டால் தாம்பிறந்த நிலத்தைவிட்டுப் போந்த பரதேசிகள்பலரும் ஒருநிலத்தாரைப்போலக் கலந்து செறிந்திருக்கும் அலைவாய்க்கரையிருப்பும்,

௧௩. வண்ணமும்—இ - ள். தொய்யிற்குழம்பு முதலியவும்,

எழுதுவண்ணமுமாம்.

௧௩. சுண்ணமும்—இ - ள். பூசுசுண்ணமும்,

௧௩. தண்ணறுஞ் சாந்தமும்—இ - ள். குளிர்ந்த நறிய பசுங்கூட்டும்,

௧௪. பூவும்—இ - ள். விடுபூத் தொடைப்பூக் கட்டுப்பூவென்னும் மூவகைப் பூவகையும்,

௧௪. புகையும்—இ - ள். புகையுறுப்பும்,

ஆவன: *"நேர்கட்டி செந்தேனிரியாசம் பச்சிலை, யார மகிலுறுப்போ டாறு" எனவிவை.

௧௪. மேவிய விரையும்—இ - ள். தம்மிற்பொருந்திய விரையும்,

ஆவன: †"கோட்டந் துருக்கந் தகர மகிலார, மோட்டிய வைந்தும் விரை" எனவிவை.

௧௫. பகர்வனர் திரிதரு நகர வீதியும்

இ - ள். இவற்றை விற்பவராய்த் திரிதருதலைச்செய்யும் நகரத்தெருவுமென்க.

மாடமும், இருக்கையும், இடங்களும், இருக்கையும், வரைப்பும், வண்ண முதல் விரையீருயுள்ளனவற்றை விற்பவராய்த் திரிதருதலைச்செய்யும் நகரத்தெருவுமென்க.

௧௬ - ௧௭. பட்டினு மயிரினும் பருத்தி நூலினுங்
கட்டு நுண்வினைக் காருக ரிருக்கையும

இ - ள். பட்டுநூலானும் எலிமயிரானும் பருத்திநூலானும் நுண்ணியதொழில்களை ஊசியாற் பிணிக்கும் பட்டுச்சாலியரிருக்குமிடங்களும்,

‡அச்சுக்கட்டிகளென்பாருமுளர். காருகத்தொழில் இருவகைத்து; §"பருத்திநூல் பட்டுநூ லமைத்தாடை யாக்கலுஞ், சுமத்தலு மகழ்தலுங் காருகவினைத் தொழில்" என்றாராகலின். இவற்றுள் ஈண்டுக் கூறியோர் முன்னையோர்.

௧௮ - ௨௧. தூசு மகிலுந் தூசுந் துகிரு
மாசறு முத்து மணியும் பொன்னு
மருங்கல வெறுக்கையோ டளந்து கடையறியா
வளந்தலை மயங்கிய நனந்தலை மறுகும்

---

* "நேர்கட்டி சேந்தே னிரியாசங் கர்ப்பூர, மார மகிலுறுப்போ ரைந்து." எனக்காட்டுவர் நச்சினார்க்கினியரும், இந்நூல் அரும்பதவுரையாசிரியரும்.

† கொட்டமெனவும் ஒட்டியவெனவும் பாடங்கூறுவதுமுண்டு.

‡ அச்சுக்கொட்டிகளெனவும் பிரதிபேதமுண்டு.

§ திவாகரம் ௧௨-வது.

இ - ள். சந்தனமும் அகிலும் பட்டும் பவளமும் குற்றமற்ற முத்தும் ஒழிந்த மணிகளும் பொன்னுமாகிய இவற்றைப் பொற்பணியோடே இலக்கங்காண்போர் ஒரெண்ணினும் எண்ணிக் கரைகாணவரிய வளம் தம்மிடந்தோறும் மயங்கப்பட்டவைவற்றையுடைய இடமகன்ற மறுகும்,

உஉ - உங. பால்வகை தெரிந்த பகுதிப் பண்டமொடு
கூலங் குவித்த கூல வீதியும்

இ - ள். பகுதிவேறுபடப் பிரித்த முதிரை முதலிய பண்டத்தோடு எண்வகைக் கூலமும் குவித்துவிற்கும் கூலக்கடைத்தெருவும்,

எண்வகைக்கூலமாவன: "நெல்லுப் புல்லு வரகுதினை சாமை, யிறுங்கு *தோரையொடு கழைவிளை நெல்லே" எனவிவை. இனிக் கூலம் பதினெண் வகைத்தென்பர் கூத்தநூலாசிரியர்; என்னை? †"பதினெண் கூலமு முழவர்க்கு மிதுக" என்றாராகலின்; பலசரக்கென்பாருமுளர்.

உச. காழியர்—இ - ள். பிட்டுவாணிகரும்,

வண்ணருமாம்; ‡"காழியர், கௌவைப் பரப்பின் வெவ்வுவர்ப் பொழிப்ப" என்றார் அகப்பாட்டினும்.

உச. கூவியர்—இ - ள். அப்பவாணிகரும்,

§"காரகற் கூவியன் பாகொடு பிடித்த" என்றார் பெரும்பாணாற்றினும்.

உச. கண்ணொடை யாட்டியர்—இ - ள். கள்ளைவிற்கும் வலைச்சியரும்,

நொடை - விலை; ||"மீனொடுத்து நெற்குவை" என்றார் புறப்பாட்டினும்.

---

* தோரையிராகியெண்கூலமெனவும் பாடம்.

† மதிவாணர்நாடகத்தமிழ்நூல்.

‡ அகநானூறு, களிற்றியானைநிரை, அகூ. "தெறுகதிர் ஞாயிறு நடுநின்று காய்தலி, னுறுபெயல் வறந்த வோடுதேர் நனந்தலை, யுருத்தெழு குரல குடுமிச் சேவல், புல்சாய் விடரகம் புலம்ப வரைய, கல்லெறி யிசையி னிரட்டு மாங்கட், சில்வீடு கறங்குஞ் சிறியிலை வேலத், தூழுறு விளைநெற் றுதிரக் காழியர், கௌவைப் பரப்பின் வெவ்வுவர்ப் பொழிப்பக், களரி பரந்த கன்னெடு மருங்கின், விளரூன் றின்ற வீங்குசிலை மறவர், மைபடு திண்டோண் மலிர வாட்டிப், பொறைமலி கழுதை நெடுநிரை தழீஇய, திருந்துவாள் வயவ ரருந்தலை துமித்த, படுபுலாக் கமழு ஞாட்பிற் றுடியிகுத், தருங்கலந் தெறுத்த பெரும்புகல் வலத்தர், விலங்கெழு குறும்பிற் கோண்முறை பகுக்குங், கொல்லை யிரும்புன் நெடியவென் றைது, மெல்லென் சேவடி மெலிய வேக, வல்லுநள் கொல்லோ தானே தேம்பெய், தளவுறு தீம்பா லலைப்பவு முண்ணா, ளிடுமணற் பந்தரு ளியலு, நெடுமென் பணைத்தோண் மாஅ யோளே" எ - து. மகட்போக்கிய செவிலிசொல்லியது. இப்பாட்டினுட் காழிய ரென்றது வண்ணரை. மதுரைக் காஞ்சிப்புல்லவனார் பாடியது.

§ பத்துப்பாட்டு, பெரும்பாணாற்றுப்படை, ஙஎஎ.

|| புறநானூறு, ஙசங.

உரு. மீன்விலைப் பரதவர்—இ-ள். மீன்விலையையுடைய பரதவரும்,

பரதவர் - பட்டினவர்.

உரு. வெள்ளுப்புப் பகருநர்—இ-ள். உமணரும்,

உமட்டியருமாம்; அளவருமாம்.

உசா. பாசவர்—இ-ள். *இலையமுதிடுவோரும்,

அன்றிக் கயிறுதிரித்து விற்பாருமாம்; பச்சிறைச்சி சூட்டிறைச்சி விற்பாருமாம்.

உசா. வாசவர்—இ-ள். பஞ்சவாசம்விற்பாரும்,

அவை "தக்கோலந் தீம்பூத் தகைசா லிலவங்கங், கற்பூரஞ் சாதியோ டைந்து" எனவிவை.

உசா - உஎ. பன்னரிணை விலைஞரோ
டோசுநா செறிந்த வூன்மலி யிருக்கையும்

இ-ள். ஆட்டுவாணிகருடனே பரவருஞ் செறிந்த ஊன்மிக்க இருப்பிடங்களும்,

ஓசுநர் எண்ணெய்வாணிகருமென்ப.

உஅ. கஞ்சகாரரும—இ-ள். வெண்கலக் கன்னரும்,

உஅ. செம்புசெய் குநரும்—இ-ள். செம்புகொட்டிகளும்,

உகூ. மரங்கொல் தச்சரும—இ-ள். மரத்தைவெட்டுந்தச்சரும்,

கொல்லல் - வெட்டல்.

உகூ. கருங்கைக் கொல்லரும்—இ-ள். வலிய கையையுடைய கொல்லரும்,

கருங்கை இருவகைத்து; என்னை? "கொன்றுவாழ் தொழிலினும் வன்பணித் தொழிலினுங், கன்றிய தொழிற்கை கருங்கை யெனப்படும்" என்றாராகலின். ஈண்டு வலிய கையையுடைய கொல்லருமென்பதாயிற்று.

௩0. கண்ணுள் வினைஞரும—இ-ள். சித்திரகாரிகளும், †

௩0. மண்ணீட் டாளரும்—இ-ள். சிற்பாசாரிகளும்,

அன்றிச் சுதையாற் பாவையுள்ளிட்டன பண்ணுவாரென்றுமாம்; குயவருமென்ப. மண் - ஈண்டுச் சுதை; ‡"மண்ணீடு டியைந்த மரத்தனையா" என்றாராகலின்.

௩க. பொன்செய் கொல்லரும்—இ-ள். உருக்குத்தட்டாரும்,

௩க. நன்கலந் தருநரும்—இ-ள். இரத்தினப்பணித்தட்டாரும்,

---

* இலையமுது - வெற்றிலை.

† கண்ணுள்வினைஞரென்பதற்கு நோக்கினுர் கண்ணிடத்தே தந்தொழிலை நிறுத்துவோரென்பர் நச்சினார்க்கினியர். [பத்துப்பாட்டு; உகஎ-ம் பக்கம்.]

‡ திருக்குறள், கயமை, ௬.

௩௨. துன்ன காரரும்—இ-ள். *சிப்பியரும்,

௩௨. தோலின் றுன்னரும்—இ-ள். உறைகாரரும், பறம்பர்முதலாயி னரும்,

௩௩-௩௪. கிழியினுங் கிடையினுந் தொழில்பல பெருக்கிப்
பழுதில்செய்வினைப் பால்கெழு மாக்களும்

இ-ள். கிழி கிடையென்பவற்றாற் புட்பம் வாடாமாலை பொய்க்கொண்டை முதலியஉருப்பிறக்குந்தொழில்களை மிகுத்துக்காட்டிக் குற்றமற்ற கைத்தொழிலால் வேறுபட்ட இயல்பையுடையோரும்,

கிழி - சீரை. கிடை - கிடேச்சு. இனி, கிழியாற் படிமை படமுதலியவும், கிடையால் விலங்கு பறவை பூ பூங்கொத்துமுதலியவும் அமைப்போருமாம்.

௩௫ - ௩௭. குழலினும் யாழினுங் குரன்முத லேழும்
வழுவின் றிசைத்து வழித்திறங் காட்டு
மரும்பெறன் மரபிற் பெரும்பா ணிருக்கையும்

இ-ள். துளைக்கருவியானும் நரப்புக்கருவியானும் குரன்முதலாயுள்ள ஏழிசையினையும் ச ரி க ம ப த நி யென்னும் ஏழெழுத்தினையும் மூவகைவங்கியத்தினும் நால்வகையாழினும்பிறக்கும் பண்களுக்கு இன்றியமையாத மூவேழுதிறத்தையுங் குற்றமின்றாக இசைத்துக்காட்டவல்ல பெறுதற்கரிய இசைமரபையறிந்த குழலர் பாணர்முதலாய பெரிய இசைக்காரரிருக்குமிடங்களுமென்க.

உம்மையால் எழுத்துக்களுங்கொள்ளப்பட்டன.

௩௮ - ௩௯. சிறுகுறுங் கைவினைப் பிறர்வினை யாளரொடு
மறுவின்றி விளங்கு மருவூர்ப் பாக்கமும்

இ-ள். ஒழுக்கத்திற்சிறியராய்ச் சிறுதொழிலைப் பிறர்க்குச்செய்து அதனான் வரும் பொருளையுண்ணும் கைவினையாளரோடே முற்கூறிய யவனர்முதல் பெரும் பாணீறாயுள்ளாரோடு குற்றமின்றிவிளங்கும் மருவூர்ப்பாக்கமுமென்க.

௪0. கோவியன் வீதியும—இ-ள். இராசப்பெருந்தெருவும்,

செண்டுவெளியென்பாருமுளர்.

௪0. கொடித்தேர் வீதியும்—இ-ள். கொடியணிந்த தேரோடும் விழா வீதியும்,

௪௧. பீடிகைத் தெருவும்—இ-ள். கடைத்தெருவும்,

௪௧-௪௨. பெருங்குடி வாணிகர் மாட மறுகும்

இ-ள். †பெரிய குடிப்பிறப்பையுடைய வாணிகரது மாடமாளிகை தெருவும்,

௪௨. மறையோ ரிருக்கையும்—இ-ள். பஞ்சக்கிராமிகளிருக்குமிடமும்

* சிப்பியர் - தையற்காரர்.

† பெருங்குடிவாணிகர்-மூவகைவாணிகருள் ஒருபாலார். "பெருங்குடி வாணிகன் பெருமட மகளே" என்றார் முன்னும்.

சங - சரு. வீழ்குடி யுழவரொடு விளங்கிய கொள்கை
யாயுள் வேதருங் காலக் கணிதரும்
பால்வகை தெரிந்த பன்முறை யிருக்கையும்

இ - ள். உழவின்மேல்விரும்புங் குடிகளோடும் உழவரோடும் மருத்துவ நூலோரும் சோதிடநூலோரும் வேறுவேறு வகைப்படத்தெரிந்த பலமுறைமை யோடிருக்கும் இருப்பிடங்களும்

வீழ்குடி - காணியாளர், *"பகடு புறந்தருநர் பார மோம்பிக், குடிபுறந் தருகுவை யாயின்" என்றார் பிறரும். யாவரும் விரும்புங்குடியென்றுமாம்; †"உழுதுண்டு. ....செல்பவர்" என்பதனாற்கொள்க. குடியொடும் உழவரொடுமென்க. அன்றி உழவில்விரும்புங்குடியெனவுமாம்; "உழவினிற் காமுற்று வாழ்தல்" என்றாராகலின். வேளாண்‡சாமந்த ரென்பாருமுளர்.

சசா. திருமணி குயிற்றுநர்—இ - ள். முத்துக்கோப்பாரும், வரிசையானவேகடிகளுமாம்.

சஎ - சஅ. சிறந்த கொள்கையோ
டணிவளை போழுந ரகன்பெரு வீதியும்

---

* புறநானூறு, கூரு: "களியிரு முந்நீ ரேணி யாக, வளியிடை வழங்கா வானஞ் சூடிய, மண்டிணி கிடக்கைத் தண்டமிழ்க் கிழவர், முரசுமுழங்கு தானை, மூவருள்ளு, மரசெனப் படுவது நினதே பெரும, வலங்குகதிர்க் கனலி நால்வயிற் றோன்றினு, மிலங்குகதிர் வெள்ளி தென்புலம் படரினு, மந்தண் காவிரி வந்துகவர் பூட்டத், தோடுகொள் வேலின் றோற்றம் போல, வாடுகழைக் கரும்பின் வெண்பூ நுடங்கு, நாடெனப் படுவது நினதே யத்தை, யாங்க, நாடுகெழு செல்வத்துப் பீடுகெழு வேந்தே, நினவ கூறுவ லெனவ கேண்மதி, யறம்புரிந் தன்ன செங்கோ னாட்டத்து, முறைவேண்டு பொழுது பதனெளி யோரீண், டுறைவேண்டு பொழுதிற் பெயலபெற் றோரே, ஞாயிறு சுமந்த கோடுதிரள் கொண்மூ, மாக விசும்பி னடுவுநின் றாங்குக், கண்பொர விளங்குநின் விண்பொரு வியன்குடை, வெயின் மறைக் கொண்டன்றோ வன்றே வருந்திய, குடிமறைப் பதுவே கூர்வேல் வளவ, வெளிற்றுப் பனந்துணியின் வீற்றுவீற்றுக் கிடப்பக், களிற்றுக்கணம் பொருத கண்ணகன் பறந்தலை, வருபடை தாங்கிப் பெயர்புறத் தார்த்துப், பொருபடை தரூஉங் கொற்றமு முழுபடை, யூன்றுசான் மருங்கி னீன்றதன் பயனே, மாரி பொய்ப்பினும் வாரி குன்றினு, மியற்கை யல்லது செயற்கையிற் றோன்றினுங், காவலர்ப் பழிக்குமிக் கண்ணகன் ஞால, மதுநற் கறிந்தனை யாயி னீயு, நொதுமலாளர் பொதுமொழி கொள்ளாது, பகடு புறந்தருநர் பார மோம்பிக், குடிபுறந் தருகுவை யாயி னின், னடிபுறந் தருகுவ ரடங்கா தோரே." திணை - பாடாண்டிணை. துறை - செவியறிவுறூஉ. சோழன் குளமுற்றத்துத்துஞ்சிய கிள்ளிவளவனை வெள்ளைக்குடிநாக ஞர் பாடிப் பழஞ்செய்க்கடன் வீடுகொண்டது.

† திருக்குறள், உழவு, ௩. "உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாந், தொழுதுண்டு பின்செல் பவர்."

‡ சாமந்தர் - சிற்றரசர்.

இ - ள். தமக்குச்சிறந்த கோட்பாட்டால் அழகிய வளைகளையறுப்பாரும் வாழ்கின்ற அகன்ற பெரிய வீதியும்,

போழுநரொன்றது சங்கறுப்பாளை., அணிவளை - வினைத்தொகையுமாம்.

'வீழ்குடிமுதல் போழுநரீருயுள்ளவர் மிக்கசெருக்கோடிருக்கும் வீதியுமெனினுமமையும்.

சஅ - ருரு. சூதர் மாகதர்......வகைதெரியிருக்கையும

சஅ. சூதர்—இ - ள். நின்றேத்துவார்,

சஅ. மாகதர்—இ - ள். இருந்தேத்துவ"

சஅ. வேதாளிகரொடு—இ - ள். வைதாளியாடுவார் என்று சொல்லப்பட்ட இவரோடே,

மிட்டைய கண்டருமென்ப.

சகூ. நாழிகைக் கணக்கர்—இ - ள். கடிகையார்,

அவர் அரசனுக்குச் சென்றநாழிகைக்குக் கவிசொல்லுவார்; "பூமென் கணையும் பொருசிலையுங் கைக்கொண்டு,காமன் றிரியுங் கருவூரா - யாமங்க, ளொன்றுபோ யொன்றுபோ யொன்றுபோய் நாழிகையு, மொன்றுபோ யொன்றுபோ யொன்று" என. நாழிகைவட்டிலிடுவாருமென்ப. *"சூத ரேத்த மாகதர் நுவல, வேதாளிகரொடு,நாழிகை யிசைப்ப" என்றார் பிறரும்.

சகூ. நலம்பெறு கண்ணுளர்—இ - ள். தாம் கொண்ட கோலத்தானும் கூத்தானும் நலம்பெறுஞ் சாந்திக்கூத்தர்,

என்னை? "வாசிகை வைத்து மணித்தோ டணியணிந்து, மூசிய சுண்ண முகத்தெழுதித் - தேசுடனே, யேந்துசுடர் வாள்பிடித்திட் டீசனுக்குங் காளிக்குஞ், சாந்திக்கூத் தாடத் தகும்." என்பதனுனறிக. மதங்கரென்பாருமுளர்.

ருO. காவற் கணிகையர்—இ - ள். களத்தாடுங் கூத்திகள்,

இராக்கிடைப் பெண்டுகளென்பாருமுளர்.

ருO. ஆடற்கூத்தியர்—இ - ள். அகக்கூத்தாடும் பதியிலார்,

ருக. பூவிலை மடந்தையர்—இ - ள். அற்றைப்பரிசங்கொள்வார்,

ருக. ஏவற் சிலதியர்—இ - ள். மடைப்பள்ளியாரடியார்,

ரு௨. பயிறொழிற் குயிலுவர்—இ - ள். தோற்கருவி யிசைப்பார்,

ரு௨. பன்முறைக் கருவியர்—இ - ள். படைக்கும் உற்சவத்துக்குங் கொட்டுவார்,

யாழ்முதலாகிய நரப்புக்கருவிகளையுடையாருமென்ப.

ருரு. நகைவே ழம்பரொடு—இ - ள். சாரமாணிகளோடே,

சிரிக்கும்பரியாசகருடனுமென்ப.

---

* பத்துப்பாட்டு, மதுரைக்காஞ்சி, சு௭௦ - சு௭௧.

௫௩. வகைதெரி யிருக்கையும்—இ-ள். சூதர்முதல் வேதாளிகரோடும் நாழிகைக்கணக்கர்முதல் வேழம்பரோடும் எண்ணப்பட்ட இவர்கள் தத்தம் இனத்தின்வகைதெரிந்த இருப்பிடங்களுமென்க.

௫௪ - ௫௬. கடும்பரி கடவுநர் .... பெரும்பா யிருக்கையும்

௫௪. கடும்பரி கடவுநர்—இ-ள். கடிய பரிகளைக் கடவுவாராகிய அச்சுவவாரியர்,

௫௪. களிற்றின் பாகர்—இ-ள். யானைப்பாகர்,

இன் - சாரியை.

௫௫. நெடுந்தேரூருநர்—இ-ள். தேர்ப்பாகர்,

௫௫. கடுங்கண் மறவர்—இ-ள். சினக்கண்ணையுடைய காலாட்படைத் தலைவர்,

கடுமை - சினம். இனி முன்னர்க்கூறிய முப்படைக்கும் தறுகண்மையையுடைய வீரரென்றுமாம்.

௫௬. இருந்துபுறஞ் சுற்றிய பெரும்பா யிருக்கையும்

இ-ள். என்று கூறப்பட்ட வீரர்கள் அரசன்கோயிலைச் சூழவிருக்கும் பெரிய பரந்த இருப்புக்களுமென்க. *

---

* "பன்மீன் விலைஞர் வெள்ளுப்புப் பகருநர், கண்ணொடை யாட்டியர் காழியர் கூவியர், பைந்நிண விலைஞர் பாசவர் வாசவ, ரென்னுநர் மறுகு மிருங்கோ வேட்களுஞ், செம்பு செய்நருங் கஞ்ச காரரும், பைம்பொன் செய்நரும் பொன் செய் கொல்லரு, மரங்கொ றச்சரு மண்ணீட் டாளரும், வரந்தர வெழுதிய வோவிய மாக்களுந், தோலின் றுன்னருந் துன்ன வினைஞரு, மாலைக் காரருங் காலக் கணிதரு, நலந்தரு பண்ணுந் திறனும் வாய்ப்ப, நிலங்கலங் கண்ட நிகழக் காட்டும், பாண ரென்றிவர் பல்வகை மறுகும், விலங்கரம் பொரூஉம் வெள்வளை போழ்நரோ, டிலங்குமணி வினைஞ ரிரீஇய மறுகும், வேத்தியல் பொதுவியல் லென்றிவ் விரண்டின், கூத்தியல் லறிந்த கூத்தியர் மறுகும், பால்வே றாக வெண்வகைப் பட்ட, கூலங் குவைஇய கூல மறுகு, மாகதர் சூதர்வே தாளிகர் மறுகும், போகம் புரக்கும் பொதுவர்பொலி மறுகுங், கண்ணுழை கல்லா நுண்ணூற் கைவினை, வண்ண வறுவையர் வளந்திகழ் மறுகும், பொன்னுரை காண்போர் நன்மனை மறுகும், பன்மணி பகர்வோர் மன்னிய மறுகு, மறையோ ரருந்தொழில் குறையா மறுகு, மரசியன் மறுகு மமைச்சியன் மறுகு, மேனைப் பெருந்தொழில்செ யேனோர் மறுகு, மன்றமுங் கவலையுஞ் சந்தியுஞ் சதுக்கமும், புதுக்கோ ளியானையும் பொற்றேர்ப் புரவியுங், கதிக்குற வடிப்போர் கவின்பெரு வீதியுஞ், சேணோங் கருவி தாழ்ந்தசெய் குன்றமும், வேணவா மிகுக்கும் விரைமரக் காவும், விண்ணவர் தங்கள் விசும்பிட மறந்து, நண்ணுதற் கொத்த நன்னீ ரிடங்களுஞ், சாலையுங் கூடமுந் தமனியப் பொதியிலுங், கோலங் குயின்ற கொள்கை யிடங்களுங், கண்டு மகிழ்வுற்றுக் கொண்ட வேடமொ, டந்தர சாரிக ளமர்ந்தினி துறையு, மிந்திர விகார மெனவெழில் பெற்று, நவையறு நாத னல்லறம் பகர்வோ, ருறையும் பள்ளி புக் கிறைவனை நல்லாள்" என்றூர் மணிமேகலையிலும்; ௨௮-வது கச்சிமாநகர் புக்ககாதை.

௫௭ - ௫௮. பீடுகெழு சிறப்பிற் பெரியோர் மல்கிய
பாடல்சால் சிறப்பிற் பட்டினப் பாக்கமும்

இ - ள். கோவியல்வீதி முதலாக இருக்கையிறுதியாகிய இருப்பிடங்களை யுடைய பெருமையமைந்த சிறப்பினையுடைய பெரியோர்திரண்ட பாடலமை சிறப்பினையுடைய பட்டினப்பாக்கமுமென்க.

௫௯ - ௬௭. இருபெரு வேந்தர் முனையிடம் போல
விருபாற் பகுதியி னிடைநில மாகிய
கடைகா லியாத்த மிடைமரச் சோலைக்
கொடுப்போ ரோதையுங் கொள்வோ ரோதையு
நடுக்கின்றி நிலைஇய நாளங் காடியிற்
சித்திரைச் சித்திரைத் திங்கள் சேர்ந்தென, அந்நாள்
வெற்றிவேன் மன்னற் குற்றதை யொழிக்கெனத்
தேவர் கோமா னேவலிற் போந்த
காவற் பூதத்துக் கடைகெழு பீடிகை

இதில் "சித்திரைச் சித்திரைத் திங்கள் சேர்ந்தென, அந்நாள்" என்பதனைப் புழுக்கன்முதலிய சொரிந்தென்பதனோடு முடிக்க.

இ - ள். பெரியவேந்தரிருவர் போர்குறித்து வந்துவிட்ட பாசறையிருப்புக்கு நடுப்பட்டநிலம் போர்க்களமானாற்போல முற்கூறிய மருவூர்ப்பாக்கமும் பட்டினப் பாக்கமுமென இரண்டுகூறுபட்ட ஊர்க்குநடுப்பட்ட பொதுநிலமாகிய நாளங் காடி; அஃது எத்தன்மையதாகிய நாளங்காடியெனின், நிரைபடச்செறிந்த சோலை யின்மரங்களிற் கால்களே தூணாகக்கட்டப்பட்ட கடைகளையுடைய கொடுப்போர் கொள்வோரோதை இடையறாது நிலைபெற்ற நாளங்காடியென்க அந்நாளங் காடித்தெருவின்கண்ணே பூதத்து வாயிற் பீடிகையென்க. அஃது எத்தன்மைய தாகிய பூதமெனின், வெற்றிபொருந்திய வேலையுடைய முசுகுந்தனென்னும் மன்ன னுக்குவரும் இடையூற்றை ஒழிப்பாயெனத் தேவர்கோன் ஏவுதலானே அத்தேவ ருலகினின்றும் போந்து அந்நாண்முதலாகப் பலிகொண்டுபோதும் *பூதமென்க அப்பூதத்து நாளங்காடிக்கட் பலிபீடிகையிடத்தேயென்க.

அல்லங்காடியுமுண்டாதலின், இதனை நாளங்காடியென்றார்.

௬௮ - ௭௫. புழுக்கலு நோலையும் விழுக்குடை மடையும்
பூவும் புகையும் பொங்கலுஞ் சொரிந்து
துணங்கையர் குரவைய ரணங்கெழுந் தாடிப்

* இந்தப்பூதம் முசுகுந்தன்பொருட்டுத் தேவருலகினின்றும் இந்திரனேவ லான் இந்நகரில்வந்து பலியுண்டிருத்தலை, [கடலாடுகாதை ௭ - ௧௯.] "கடுவிசை யவுணர் கணங்கொண் டெண்டிக், கொடுவரி யூக்கத்துக் கோனகர் காத்த, தொடு கழன் மன்னற்குத் தொலைந்தன ராகி, நெஞ்சிருள் கூர நிகர்த்துமேல் வீட்ட, வஞ் சம் பெயர்த்த மாபெரும் பூதந், திருந்துவே லண்ணற்குத் தேவ னேவ, விருந்து பலி யுண்ணு மிடனும்" என்பதனானும், இதன் உரையானும் உணர்க.

பெருநில மன்ன னிருநில மடங்கலும்
பசியும் பிணியும் பகையு நீங்கி
வசியும் வளனுஞ் சுரக்கென வாழ்த்தி
மாதர்க் கோலத்து வலவையி னுரைக்கு
மூதிற் பெண்டி ரோதையிற் பெயர

இ - ள். சித்திரைமாதத்துச் சித்திரைநாளிலே நிறைமதிசேர்ந்ததாக அந்நாளிலே நாணிலிகளைப்போல வாய்சோர்ந்துரைக்கும் மாதர்க்கோலத்து மறக்குடிப் பெண்டிர் அப்பீடிகைக்கண்ணே புழுக்கல்முதலியவற்றையுகுத்து எம்மன்னனுடைய நிலமுழுதும் பசிமுதலியனநீங்கி வசிமுதலியனசுரக்கவெனவாழ்த்தித் துணங்கையராய்க் குரவையராய் அணங்கெழுந்தாடிக் கொக்கரிப்போடே பெயரவென்க.

புழுக்கல் - முதிரைப்பண்டம், அவரை துவரை முதலியன. "புழுக்குவ புழுக்கல்" என்றாராகலின் நோலை - *எட்கசி. விழுக்குடைமடை - நிணச்சோறு. பொங்கல் - கள்ளு; பொங்கற்சோறுமென்ப. துணங்கை - துணங்கைக் கூத்து; என்னை? †"முடக்கிய விருகை பழுப்புடை யொற்றித - துடக்கிய நடையது துணங்கை யாகும்" என்றாராகலின். இதனைச் சிங்கியென்பாருமுளர். குரவை - கைகோத்தாடுங் கூத்து. அணங்கெழுந்தாடி - தேவரேறியாடி. பகை - உட்பகை. வசி - மழை; ‡"வசிதொழி லுதவ மாதிரங் கொழீஇ" என்றார் பிறரும், வசியுமாம். மாதர்க் கோலம் - கண்டு எவருங்காதலிக்கப்படும் ஒப்பனை. வலவையின் - நாணிலிகளைப்போல, §"வலவைக ளல்லாதார்" என்றார் பிறரும், வல்லபத்தாலென்பாருமுளர். மூதிற்பெண்டிர் - மறக்குடிமகளிர்.

சேர்ந்ததாக அந்நாள் ஒளி கதிர்பரப்பாநிற்பப் புழுக்கல் முதலியன பீடிகையிலே சொரிந்து பெண்டிர் வாழ்த்தி ஆடிப் பெயரவென்க.

இவர் அரசன்கோயில் அகப்பரிசாரமாயமகளிர்.

எசு - அ/ மருவூர் மருங்கின் மறங்கொள் வீரரும்
பட்டின மருங்கிற் படைகெழு மாக்களும்
முந்தச் சென்று முழுப்பலி பீடிகை
வெந்திறன் மன்னற் குற்றதை யொழிக்கெனப்
பலிக்கொடை புரிந்தோ ரலிக்குவரம் பாகெனக்
கல்லுமிழ் கவணினர் கழிப்பிணிக் கறைத்தோற்
பல்வேற் பரப்பினர் மெய்யுறத் தீண்டி

---

* நோலை - எள்ளுருண்டையென்பர் அரும்பதவுரையாசிரியர்.

† திவாகரம், ஒன்பதாவது.

‡ மணிமேகலை, கஉ - வது பாத்திரமரபுகூறியகாதை.

§ நாலடியார், நன்றியில்செல்வம், அ. "வலவைக ளல்லாதார் காலாறு சென்று, கலவைக ளுண்டு கழிப்பர் - வலவைகள், காலாறுஞ் செல்லார் கருனையாற் றுய்ப்பவே, மேலாறு பாய விருந்து."

யார்த்துக் களங்கொண் டோரா ரமரழுவத்து
சூர்த்துக் கடைசிவந்த சுடுநோக்குக் கருந்தலை
வெற்றி வேந்தன் கொற்றங் கொள்கென
நற்பலி பீடிகை நலங்கொள வைத்தாங்
குயிர்ப்பலி யுண்ணு முருமுக்குரன் முழக்கத்து
மயிர்க்கண் முரசொடு வான்பலி யூட்டி

இ - ள். அந்தமுசுருந்தன் இருவகைப் பாக்கத்தோரும் அக்காலத்துப் பூதத்திற்குப் பலிகொடுப்பதற்கு முன் பினென்று தந்தமில் முந்துகூற வலியவராவோர் நெருங்கிச்சென்று தம்மைத் தாமேயிடும்பலியை உண்ணும்பீடிகையிலே மன்னற்கு உற்றதை ஒழிப்பாயாகெனப் பூதத்திற்குச்சொல்லிப பலிகொடுத்தலைப் புரிந்தோர் அப்பலிக்கும் வலிக்கும் வரம்பாகக்கடவரென அவ்வரசன்குறையும் ஆயமும் அக்காலத்தே நிருமித்தலாலே இக்காலத்து வீரரும் மாக்களும் கவணினராய்த் தோலோடு வேற்பரப்பினராய் அமர்க்களப்பரப்பிலே உடற்கரித்து ஆர்த்துக் களங்கொண்டவீரர் பார்த்தோரை அச்சமுறுத்துக் கடைசிவந்த சுடுங்கொள்ளிபோலும் பார்வையையுடைய தமது பசுந்தலை வேந்தன் கொற்றங்கொள்கெனப் பேசும்படி அரிந்து ஒப்பித்துப் பீடிகையிலேவைத்த அப்பொழுதே அக்குறையுடல்கள் தமக்கு வாயின்மையின் தத்தந்தோளிற்பூண்ட மயிர்க்கண்முரசினவாயால் உயிர்க்கடன் தந்தோம்; கொண்மினென்று நின்று பலியூட்டியென்க.

கழி - ஊன். பிணி - பிணித்தல். கறை - கறுப்பு. தோல - பரிசை. *"மழையென மருளும் பல்தோல்" என்றாகலின், கருங்கடகென்பாருமுளர். மெய்யுறத் தீண்டி - உடற்கரித்து. அழுவம் - பரப்பு. சூர்த்து - அச்சமுறுத்து. என்றது †"நீண்டபலி பீடத்தி லறுத்து வைத்த நெறிக்குஞ்சித் தலையைத்தன் னினமெனறெண்ணி, யாண்டலைப்புள் ளருகணைந்து பார்க்கு மாலோ வணைதலுமச் சிரமச்ச முறுத்து மாலோ" என்றாற்போல்வரும். (விருத்திச்செய்யுள்.) சுழன்றெனபாருமுளர். சுடுநோக்கு - சுடுவதுபோலுநோக்கு. என்றது கொள்ளிக்கண்ண ‡"கண்ணுட் டியாற் சுட்டுநீ ருக்கி" என்றார் பிறரும். கருந்தலை - பசுந்தலை. நலங்கொளவைத்தென்றது தமது அரிந்த தலையிற குலைந்தமயிரையுங் கோதிமுடித்தும் குருதிதிலகத்தையும் நுதலிலே அணிந்துவைத்தென்றவாறு; என்னை? §"மோடி முன்றலையை வைப்ப ரேமுடி குலைந்த குஞ்சியை முடிப்பரோ, யாடி நின்றுகுரு திப்பு துத்திலத முழ்மு கத்தினி லமைப்பரே" என்பது. (கவிச் சக்கரவிருத்தி.) உருமு - இடி. மயிர்க்கண்முரசம் - புலியைப்பொருது கொன்றுநின்று சிலைத்துக் கோட்டுமண் கொண்ட ஏறு இறந்துழி அதன் உரிவையை மயிர்சீவாமற் போர்த்தமுரசு, என்னை? ||"புனைமருப் பழுந்தக் குத்திப் புலியொடு பொருது வென்ற, கனைகுர லுருமுச் சீற்றக் கதழ்விடை யுரிவை போர்த்த, துனைகுரன் முரசத் தானைத் தோன்

* புறநானூறு, கஎ.

† கலிங்கத்துப்பரணி.

‡ சீவகசிந்தாமணி, காந்தருவதத்தையாரிலம்பகம், ௬க௫.

§ கலிங்கத்துப்பரணி.

|| சீவகசிந்தாமணி, முத்தியிலம்பகம், ௬0க.

நிலைத் தம்பி னென்று, னானைமல ரலங்கற் கண்ணி நந்தனுந் தொழுது சேர்ந்தான்" எனவும், "கொல்லேற்றுப் பசுந்தோல் சீவாது போர்த்த, மயிர்க்கண் முரச மோ வல விரங்க" எனவும சொன்னார்பிறரும். முரசொடுவான்பலியூட்டி - முரசத் தால் உயிர்ப்பலியூட்டி ; என்றது *"அடிக்கழுத்தி னுடன்சிரத்தை யரிவ ராலோ, புரிந்தபிர மணங்கின்கைக் கொடுப்ப ராலோ, கொடுத்தசிரங் கொற்றவையைத் துதிக்கு மாலோ, குறையுடலங் கும்பிட்டு நிற்குமாலோ" எனவும், †"மண்ணி றுள்ற வறுத்த தங்கடலை, வைத்த பீடிகை வலங்கொள, விண்ணி ளுயகிதன் யாக ளாலெதொறு மீள வுஞ்சிலர் மிறைப்பரே" எனவும்வரும், இவற்றுற்சொலலியவை, ‡அவிப்பலியென்னும் புறப்பொருட்பகுதியும், காப்பியத்துக்கு அங்கமான நவச் சுவையுள்ளும் வீரசுவையுமிகயுமெனக.

வரம்பாகெனக் கவணினர் பாப்பினராய்த் திண்டிக் கொண்டோர் கருந்தலை கொள்கெவ வைத்து ஊட்டவென விணைமுடிக்க.

ஊட்டவெனத்திரிக்க.

இனி மூன்றாட் கரிகாலன் செய்தசெயல் கூறுவார்.

அ௮ - ௯௪. இருநில மருங்கிற் பொருநரைப் பெறாஅச்
செருவெங் காதலின் திருமா வளவன்
வாளுங் குடையு மயிர்க்கண் முரசு
நாளொடு பெயர்த்து நண்ணார்ப் பெறுகஇம்
மண்ணக மருங்கினென் வலிகெழு தோளெனப்
புண்ணியத் திசைமுகம் போகிய வந்நாள்

இ - ள். தமிழ்நாட்டெல்லையுள் தன்னோடு எதிர்த்துப்பொருமரசரை இரண்டு திசையினும்பெறாத கரிகாலன் போரிலே பேராசையுடையனாதலின், வடதிசை பெருந்திசையாதலிற் பகைபெறலாமெனக்கருதி ஆணைக்சேறறதவிரும்பி வாளும் குடையும் முரசும் நாளொடுபெயர்த்து என்வலிகெழுதோள் இத்திசையினுயினும் நண்ணாரைப் பெறுவதாகவேண்டுமென்று தான் வழிபடுதெய்வத்தை மனத்தான் வணங்கி அவ்வடதிசையைநோக்கிப் போகிய அந்நாளிலெனக.

பொருநரை இருநிலமருங்கிற் பெறா வளவன் பெயர்த்துப் பெறுக என்றே னெனப் போகிய அந்நாளெனக.

இருநிலமருங்கினென்பது இவன் ஆளும் நிலவெல்லைப் புறத்தென்பதாயிற்று; ஆகவே மேற்கும் தெற்குமெனக்கொள்க; என்றது சேர பாண்டியரை. இனி

* கலிங்கத்துப்பரணி.

† ,,

‡ புறப்பொருள் வெண்பாமாலை, வாகைப்படலம், ௨௦ அவிப்பலியென்பது "வெள்வா ளமருட் செஞ்சோ றல்ல, துள்ளா மைந்த ருயிர்ப்பலி கொடுத்தன்று. வரலாறு: "சிறந்த திதுவெனச் செஞ்சோறு வாய்ப்ப, மறந்தரு வாளம றொன் றும் - பிறங்கழலுள், ளாருயி ரென்னு மவிவேட்டா ராங்கவற்றால், வீரியரெய் தற் பால வீடு"

இருநிலமருங்கினென்பதற்குத் தமிழ்ப்பூமி இருகூற்றிலெனினுமமையும். வாளும் குடையும் முரசும்பெயர்த்தல் - வாணாட்கோள், குடைநாட்கோள், முரசநாட்கோ ளென்பன. இவை நாட்கொண்டுபெயர்த்தல். இவற்றுள், வாணாட்கோடல்: *"செற்றார்மேற் செலவமர்ந்து, கொற்றவாணாட் கொண்டன்று" வரலாறு: "அறிந்தவ ராய்ந்தநா ளாழித்தேர் மன்ன, னெறிந்திலங் கொள்வா ளியங்க - மதிந் திக்லிப், பின்பகலே யன்றியும் பேரு ரகநாட்டு, நன்பகலுங் கூகை நரும்." குடைநாட்கோடலென்பது, †"பெய்தாமஞ் சுரும்பிமிரப் பெரும்புலவர் புகழ்பாடக், கொய்தார் மன்னவன் குடைநாட் கொண்டன்று." வரலாறு: "முன்னர் முரசிரங்க மூரிக் கடற்றானை, துன்னருந் துப்பிற் றொழுதெழா - மன்னர், குடைநாளுலந்தனவா லோதநீர் வேலிக், குடைநாளிறைவன் கொள." முரசநாட்கோடலென்பது: "........ மாசற விதித்த வியங்கிற செயலே." பிறவும் வந்தவழிக் காண்க. மண்ணகமருங்கின் - இந்நிலவெல்லையுள். பனிபடியத்திசை - வடதிசை. முகம் - இடம்.

கூரு - கூஅ. அசைவி லூக்கத்து நசைபிறக் கொழியப்
பகைவிலக் கியதிப் பயங்கெழு மலையென
இமையவ ருறையுஞ் சிமையப் பிடர்த்தலைக்
கொடுவரி யொற்றிக் கொள்கையிற் பெயர்வோற்கு

இ - ள். அங்ஙனம் பொருவாரைப்பெறவேண்டி வடதிசைநோக்கிப் போகின்றநாளிலே இமையவருறையும் இமயமலை பகையாகக் குறுக்கிட்டு விலக்கியதாகலின், மனஞ்சலித்து மீள்கின்றவன் மடிதலின்றி மேலுஞ்செல்லுமுயற்சியை பின்னிட்டொழிய இம்மலை எனக்குப் பகையாகக் குறுக்கிட்டு விலக்கிற்றென முனிந்து அதன்பிடரிடத்தே தனதுபுலியைப்பொறித்துத் தான்வேட்டது பெறாத கோட்பாட்டால் மீள்கின்ற கரிகாலற்கென்க.

அசைவு - மடிதல். ஊக்கம் - மனவெழுச்சி, முயற்சியுமாம். பிறக்கு - பிருதக்கென்னும் வடமொழிச்சிதைவென்க; வேறாகவென்றபடி. பிடர் - புறக்கழுத்து. தலை - இடம். ஒற்றி - பொறித்து. பிடர்த்தலையேற்றியென்றது தானேடு எதிர்த்துவிலக்குதலின் அதனைப் புறங்காணுதற்கும் அதன்வடபாலும் தனது ஆணைசேறற்கும் சாத்தனதருளால் தான்பெற்ற செண்டாலே அதனை அடித்துத் திரித்துப் பொறித்து மறித்து நிறுத்தானெனவுமாக, என்னை? ‡"செண்டு கொண்டு கரிகாலனொரு காலி லிமயச் சிமைய மால்வரை திரித்தருளி மீள வதனைப், பண்டு நின்றபடி நிற்கவிது வென்று முதுகிற் பாய்புலிபொறி குறித்தது மறித்த பொழுதே" எனவும், "கச்சி வளைக்கைச்சி காமக்கோட் டங்காவல், மெச்சி யினிதிருக்கு மெய்ச்சாத்தன் - கைச்செண்டு, கம்பக் களிற்றுக் கரிகாற் பெருவளத்தான், செம்பொற் கிரிதிரித்த செண்டு" எனவுங்கூறினாராகலின்.

---

* புறப்பொருள் வெண்பாமாலை, வஞ்சிப்படலம், ௪.

† ” ” ௫.

‡ கலிங்கத்துப்பரணி. "இலங்கு வேற்கரி காற்பெரு வளத்தோன், வன்றிறற்புலி யிமையமால் வரைமேல் வைக்க வேகுவோன்" என்றார் பெரியபுராணத்திலும்.

௯௯ - ௧௦௦. மாநீர் வேலி வச்சிர நன்னாட்டுக்
கோனிறை கொடுத்த கொற்றப் பந்தரும்

இ - ள். கடலை அரணாகவுடைய வச்சிரநாட்டுக்கோன் தானிடக்கடவமுறைமையில் திறையாகவிட்ட அவனது முத்தின்பந்தரும்,

வேலி - அரண். வச்சிரநாடு - *சோணைக்கரை. இறை - திறை. கொற்றப் பந்தர் - அவன்றனக்குக் கொற்றத்தான்வந்த பந்தர், அது மேற்கூறுப, அன்றிக் கொற்றவன்முன்னோர் நிற்கும்பந்தரெனினுமமையும். இவன் †உதாசீனன்.

௧௦௧ - ௧௦௨. மகதநன் னாட்டு வாள்வாய் வேந்தன்
பகைப்புறத்துக் கொடுத்த பட்டிமண் டபமும்

இ - ள். வாட்போர் வாய்ப்புடையனாகிய மகதவேந்தன் பகையாற் பொருதாங்கமாட்டாது அப்பகையிடத்துத் தரப்பட்ட பட்டிமண்டபமும்,

பட்டிமண்டபம் - வித்தியாமண்டபம், ‡அலங்கமண்டபமுமென்ப. புறம் - இடம். இவன் சத்துரு.

௧௦௩ - ௧௦௪. அவந்தி வேந்த னுவந்தனன் கொடுத்த
நிவந்தோங்கு மரபிற் றோரண வாயிலும்

இ - ள். அவந்திநாட்டுவேந்தன் உவந்தனனாய்க்கொடுத்த மிகவுயர்ந்த தொழின் மரபுடைய வாயிற்றோரணமும்,

அவந்தி - உஞ்சை. தொழின்மரபு - "குலப்புடைவை" என்றாற்போலநின்றது. இவன் மித்திரன்.

௧௦௫ - ௧௧௦. பொன்னினு மணியினும் புனைந்தன வாயினும்
நுண்வினைக் கம்மியர் காணா மரபின
துயர்நீங்கு சிறப்பினவர் தொல்லோ ருதவிக்கு
மயன்விதித்துக் கொடுத்த மரபின வவைதாம்
ஒருங்குடன் புணர்ந்தாங் குயர்ந்தோ ரேத்தும்
அரும்பெறன் மரபின் மண்டபம்

இ - ள். இப்பந்தரும் மண்டபமும் தோரணமுமென்றுமிவை பொன்னாலும் மணியாலும் செய்யப்பட்டனவாயினும் நுண்ணிய தொழிலைவல்ல கம்மியராற்பண்ணப்படாதன, ஆயின் இவை யாராற் பண்ணப்பட்டனவெனின், இவற்றை அக்காலத்துக் கொடுத்த அம்மூவருடைய தொல்லோர் ஒரோர்காலத்து ஒரோவிடத்துச்செய்த உதவிக்குக் கைம்மாறாக மயன் நிருமித்துக்கொடுக்கப்பட்டன. இவை ஒன்றற்கொன்று சேய்நாட்டனவாய்க் கூடப்படாதன, இவனுடையான் ஒருநாட்டு

* சோணை - ஓர் யாறு. சோழனக்கரையென்றும் பிரதிபேதமுண்டு.

† உதாசீனன் - பகைநட்பில்லாதான் = அயலான்.

‡ ...த்துக் கூடிய சமயத் துறுபொருள் வாதிகள், பட்டிமண் டபத்துப் பாங்கறிந் தேறு... என்றார் மணிமேகலையிலும். "பன்னருங் கலைதெரி பட்டி மண்டபம்" என... * ...ருங்கூறினார்.

ஒருரின்கண்ணே கூடிதலானும் மயன் நிருமித்தலானும் பெரியோரான் ஏத்தப்படும் இந்த *மண்டபத்தும்,

காண்டல் - பண்ணுதல்; "கோயில் குளங்கண்ட" என்றாற்போல நின்றது.

கசுo. அன்றியும்—இ - ள். அதுவொழிந்தும்,

கசுக - கசுஎ. வம்ப மாக்க டம்பெயர் பொறித்த
கண்ணெழுத்துப் படுத்த வெண்ணுப் பலபொதி
கடைமுக வாயிலுங் கருந்தாழ்க் காவலு
முடையோர் காவலு மொரீஇய வாகிக்
கட்போ ருளரெனிற் கடுப்பத் தலையேற்றிக்
கொட்பி னல்லது கொடுத்த லீயா
துள்ளுநர்ப் பனிக்கும் வெள்ளிடை மன்றமும்

இ - ள். அளவும் நிறையும் எண்ணுமாகிய இலக்கங்கள்தம்மிடத்திடப்பட்ட பெயர்பொறித்த பொதிகள் பண்டசாலைவாயிலையும் பற்றுயத்தக் கருந்தாழாகிய காவலையும் உடையோர் காத்திருக்குங்காவலையும் விடப்பட்டவாகலான் இந்நகர்க்குப் புதியமாக்கள்சிலர் கட்போருளராயின் அவர்கழுத்துக்கடுக்கப் பொதியை வைத்து ஊரைச்சூழ்விப்பினல்லாது அவர்க்கே அவற்றைக் கொடுத்துவிடாதாதலாற் களவென்பதனை மனத்தாற் கனவில்நினைப்பினும் நினைப்போரை நடுக்குவிக்கும் வெளியான இடத்தையுடைய மன்றமுமென்க.

எண்ணெழுத்துப்படுத்தவென்க. எண்ணெழுத்து - இலக்கம். பலபண்டங்களையும்பொதிந்தனவற்றைப் பொதியென்பது ஆகுபெயர். வம்பமாக்கள் கட்போருளராயினென்றார், இந்நாட்டு இவ்வூரில்வாழ்வோரெல்லாம் செல்வராதலாற் செய்யாரெனவும் புறநாட்டிற்சிலர் இம்மன்றின்றன்மையறியாது களவுசெய்யக்கருதுவரெனவும் புலப்படுத்தற்கு. தலையேற்றியென்பதற்குத் தாந்தாம் தலைமேலேற்றிக் கொண்டெனினுமமையும். பொதிகள் ஒரீஇயவாதலான் உளரெனில் அவரைக் கொட்பினல்லது ஈயாது பனிக்குமன்றமென்க. பனிக்குமன்றமென இடத்துநிகழ் பொருளின்றொழில் இடத்தின்மேனின்றது. வம்பமாக்களாகிய உடையோரெனினுமமையும்.

கசுஅ - கஉக. கூனுங் குறளு மூமுஞ் செவிடு
மழுகுமெய் யாளரு முழுகினர் ராடிப்
பழுதில் காட்சி நன்னிறம் பெற்று
வலஞ்செயாக் கழியு மிலஞ்சி மன்றமும்

இ - ள். கூனர்முதலாயுள்ளோரும் தொழுநோயால் அழுகுமெய்யையுடையோரும் புக்குமுழுகினவளவிலே பழுதில்லாத தோற்றத்தையுடைய நல்ல நிறம் பெறுகையினாலே தன்னைவலஞ்செய்து தொழுது ஆடி நீங்கும் பொய்கையையுடைய மன்றமுமென்க.

---

* இவற்றை உட்கொண்டே "வச்சிர மவந்தி மகதமொடு குழீஇயபுராந்தி மண்டபம்" என்பர் மேல் நடுகற்காதையிலும்.

பெற்று வலஞ்செய்து ஆடிக் கழியுமென்க. மூழுகினராடியென இருபெய ரொட்டுப் பண்புத்தொகையாக்கினுமமையும். இலஞ்சியை மகிழெனன்பார்க்குக் காவிரியில் நீராடிவந்து மகிழைச் சூழ்ந்தேதன்னவேண்டுதலின், மகிழினும் மன்றி னும் பயமின்றுமாதலின், அங்ஙனங்கூறல் பொருத்தமின்றென்றொழிக்க.

கஉஉ - கஉஎ. வஞ்ச முண்டு மயற்பகை யுற்றோர்
நஞ்ச முண்டு நடுங்குதுய ருற்றோ
ரழல்வாய் நாகத் தாரெயி றழுந்தினர்
கழல்கட் கூளிக் கடுநவைப் பட்டோர்
சுழல வந்து தொழத்துயர் நீங்கு
நிழல்கா னெடுங்க னின்ற மன்றமும்

இ - ள். வஞ்சனையாற் சிலர் மருந்தூட்டவுண்டு பித்தேறினாரும், நஞ்சையுண்டு நடுங்குதுயரமுற்றோரும், அழலும் விடத்தையுடைய அரவின்வாயிற் கூர்த்த எயி றழுந்தக் கடியுண்டாரும், பிதுங்கின கண்ணையுடைய பேய்பிடிக்கப்பட்டாரு மென்னுமிவர்கள் ஒருகாற் சூழவந்துதொழ அதனுடனே அத்துயர்கள் நீங்குதற்குக் காரணமாகிய ஒளியைக்காலவதோர் நெடியகல் நாட்டிநிற்குமன்றமுமென்க.

மயற்பகை - மயலாகிய பகை. ஆர் - கூர்மை. கழல்கட்கூளி - விகாரமாக் கிப் பச்சைக்கழல்போலும் கண்ணையுடைய கூளியெனினுமமையும். கூளி - பூதமு மென்ப. நிழல் - ஒளி ; *"நிழன்மணி" என்றாற்போல.

கஉஅ - கஙச. தவமறைந் தொழுகுந் தன்மை யிலாள
ரவமறைந் தொழுகு மலவைப பெண்டி
ரறைபோ கமைசசர் பிறர்மனை நயப்போர்
பொய்க்கரி யாளர் புறங்கூற் றாளரென்
கைக்கொள் பாசத்துக் கைப்படு வோரெனக்
காத நான்குங் கடுங்குர லெடுப்பிப்
பூதம் புடைத்துணும் பூத சதுக்கமும்

இ - ள். தம்மைப் பிறர்நம்புவதற்குத் தவவேடத்தின்மறைந்துநின்று அத்தவத் திற்கு இழுக்கானவற்றின்கணொழுகும் பொய்வேடத்தாரும், தம்மைத் தங்கணவர் நம்புதற்குப் பொய்யொழுக்கத்தின்மறைந்துநின்று வசீகரிப்பினொழுகும் அலவற் பெண்டிரும், தம்படைகுடிமுதலியவைந்தினொடு உயிருறுப்புரிமைக்குத் தம்மைத் தேறியளித்த அரசனைக் கீழ்மையெண்ணுமமைச்சரும், தமதுமனைவியர் தனிப்பத் தனித்த பிறர்மனைவியரை விரும்பும் துச்சாரிகளும், தமதுநெஞ்சறிபொருளை வஞ் சித்துப் பொய்ச்சான்றேறுவாரும், சிறப்புச்செய்துழி உழை நின்றுபுகழ்ந்து அவர் புறக்கொடையிற் பழிதூற்றுவாருமாகிய இவர்களே என்கையிற்கொண்ட இப்பா சத்திடத்து அகப்படும்பெயரென அவ்வூர் நாற்காதவெல்லையுங்கேட்கும்படி தனது கடியகுரலாலுணர்த்திப் பின் அங்ஙனஞ்செய்வாரைப் பாசங்கட்டிவா நிலத்திற் புடைத்துண்ணும் பூதநிற்றலான் அப்பெயர்பெற்ற பூதசதுக்கமும்,

---

* சீவகசிந்தாமணி, நாமகளிலம்பகம், உகஉ.

சதுக்கம் - நாற்சந்தி. தன்மை - தவத்தோடொற்றுமைப்படுந்தன்மை ; அதனையில்லாமையாவது கூடாவொழுக்கம். *அலவல் ; விகாரம், அறைபோதல் - கீழறுத்தல். பொய்க்கரி - பொய்ச்சான்று, கை - இடம். காதநான்குமெனமுற்றும்மைகொடுத்தலானே ஊர் நாற்காதவட்டிக்கையென்பதுணர்க. குரலெடுப்பி - குரலானுணர்த்தி. †"துயிலெடுப்பி" என்றாற்போலநின்றது.

கஙரு-கஙஅ. அரசுகோல் கோடினு மறங்கூ றவையத்
துரைநூல் கோடி யொருதிறம் பற்றினு
நாவொடு நவிலாது நவைநீ ருகுத்துப்
பாவைநின் றழூஉம் பாவை மன்றமும்

இ - ள். அரசனுடைய செங்கோன்மையிற் சிறிதுகோடிற்றாயினும் தருமநூன்முறைமையின் அறங்கூறும் தருமாசனத்தார் உரைக்கும் நடுவுநிலைமைகோடி ஒருமருங்குபற்றினும் நாவாற்கூறாது நீருகுத்துக் கண்ணாற்கூறும் பாவைநிற்றலான் அப்பெயர்பெற்ற பாவைமன்றமும்,

அறங்கூறவையம் - தருமாசனத்தார் வழக்குரைக்குமிடம். நாவொடு - நாவால்.

கஙகூ - கசும. மெய்வகை யுணர்ந்த விழுமியோ ரேத்து
மைவகை மன்றத்து மரும்பலி யுறீஇ

இ - ள். முற்கூறப்பட்டனவாகிய வெள்ளிடைமன்றமுதற் பாவைமன்றமீறாயுள்ள உண்மைத்திறத்தையுணர்ந்த சீரியோராலேத்தப்படும் ஐவகைப்பட்ட மன்றத்தும் அரும்பலியுறீஇயென்க.

ஒளி உச்சித்தோன்றிப் பரப்பச் சொரிந்து ஆடிப் பெயர வைத்து ஊட்ட மண்டபமன்றியும் மன்றத்தும் பலியிட்டென்க.

அன்றியுமென்றவும்மையும், மன்றத்துமென்றவும்மையும் இறந்தது தழீஇய வெச்சவும்மையாகலானும் அரும்பலியென்றமையானும் இவையும் அப்பலியானமையுணர்க.

கசுக - கசுச. வச்சிரக் கோட்டத்து மணங்கெழு முரசங்
கச்சை யானைப் பிடர்த்தலை யேற்றி
வால்வெண் களிற்றர சுவயங்கிய கோட்டத்துக்
கால்கோள் விழவின் கடைநிலை சாற்றி

இ - ள். ‡வச்சிரக்கோட்டத்திலிருக்கும் முரசையெடுத்துக் கச்சையணிந்த யானையினது பிடரிடத்தேயேற்றி, என்றும் இளைய வெள்ளிய அயிராவதநிற்குங் கோயிலிலேசென்று விழவின் முதலும் முடிவுஞ் சாற்றியென்க.

மணமுரசு - விழாமுரசு ; மண்ணென்றோதி மார்ச்சனையென்பாருமுளர். கச்சை - கீழ்வயிற்றிற்கச்சை. தலை - இடம். வயங்குதல் - விளங்குதல். கால்

---

* அல்லவையெனவும் பிரதிபேதமுண்டு.

† அந்திமாலைச்சிறப்புச்செய்காதை, எகூ.

‡ "வச்சிரக் கோட்டத்து மணமுழா வாங்கிக், கச்சை யானைப் பிடர்த்தலை யேற்றி" என்றார் மணிமேகலையிலும் ; முதலாவது விழாவறைகாதை.

்கோள் விழவின் கடைநிலை சாற்றி - விழவின் தொடக்கமும் முடிவுமறிவித்து.
;ளிற்றரசிற்குச்சாற்றி, அஃது இந்திரனைக்கொணர்தற்கு.

வாங்கி ஏற்றிச் சாற்றியென்க.

௱சரு - கசசு. தங்கிய கொள்கைத் தருநிலைக் கோட்டத்து
மங்கல நெடுங்கொடி வானுற வெடுத்து

இ - ள். பூமியிற்றங்கிய முறைமையையுடைய தருக்கோட்டத்தின்முன்னர் அட்ட
மங்கலத்தோடு அயிராவதமெழுதியகொடியைத் துறக்கத்தேசெல்லவெடுத்தென்க.
இந்திரன்றங்கிய செருக்கையுடைய தருவெனினுமமையும்.

௱சஎ - கருசு. மரகத மணியொடு வயிரங் குயிற்றிப்
பவளத் திரள்காற் பைம்பொன் வேதிகை
நெடுநிலை மாளிகைக் கடைமுகத் தியாங்கணும்
கிம்புரிப் பகுவாயக் கிளர்முத் தொழுக்கத்து
மங்கலம் பொறித்த மகர வாசிகைத்
தோரண நிலைஇய தோமறு பசும்பொற்
பூரண கும்பத்துப் பொலிந்த பாலிகை
பாவை விளக்குப் பசும்பொற் *படாகை
தூமயிர்க் கவரி சுந்தரச் சுண்ணத்து
மேவிய கொள்கை வீதியின்

இ - ள். மரகதம் வயிரமென்னுமிவற்றைப் புருவம்பிறக்க ஆயப்பலகையாகப்
படுத்து அதன்மீதே செம்பவளத்தூண்களைநிரைத்த பைம்பொற்றிண்ணைகளையுடைய
மாளிகைவாயிலிடந்தோறும் கிம்புரிசெறித்த கொம்பினையும் அங்காந்தவாயாற்
கான்ற முத்தொழுங்கையும் அட்டமங்கலங்களையும்பொறித்த வாசிகைவடிவாக
வளையச்செய்த மகரதோரணங்கள் நிலைபெறநிறுத்தின வீதி; அது பசிய பொன்னாற்
செய்த நிறைகுடமும் பாலிகையும் விளக்கும் கொடியும் கவரியும் ஒழிந்தனவும்
சுண்ணத்தோடேமேவிய வீதியிலென்க.

குயிற்றுதல் - அழுத்துதல். முகம் - இடம். கிம்புரி - கொம்பிலணியும்பணி.
கிளர்முத்து - பருமுத்து. ஒளிகிளருமுத்தெனினுமமையும். கிளைபாடமாயிற் கொ
த்தாகத்தோன்றுமுத்தென்க. வாசிகைத்தோரணம் - உவமத்தொகை. தோம் -
ஈண்டோட்டம். குயிற்றிய பாடமாயின், வயிரங்குயிற்றியகாலையுடைய வேதிகை
யென்க.

அவ்வேதிகையையுடைய மாளிகைக் கடைமுகத்தியாங்கணும் தோரணநிலை
பெற்ற மேவியகொள்கைவீதியென்க.

கருஎ. செறிந்து—இ - ள். அவ்வீதியிலேநிறைந்து,

கருஅ. ஆங்கு—இ - ள். அங்ஙனம் பலியிட்டவப்பொழுதே,

---

* இப்படியே "படாகையும் விதானமும் பாற்கடல் கடுப்ப" எனவும்,
"தண்பெரும் படாகை" எனவும் கொடியைப் படாகையென்று கூறுவர் பெருங்
கதையிலும்.

௧௫௭ - ௧௬௦. ஐம்பெருங் குழுவு மெண்பே ராயமு
மரச குமரரும் பரத குமரரும்
கவர்பரிப் புரவியர் களிற்றின் றொகுதிய
ரிவர்பரித் தேரின ரியைந்தொருங் கீண்டி

இ - ள். ஐம்பெருங்குழுவும் ஆயமுஞ்செறிந்த வீதிக்கண்ணே புரவியர் களிற்றினர் தேரினரான அரசகுமரரும் பரதகுமரரும் தம்மிற்பொருந்தி ஒன்றுபடத் திரண்டென்க.

ஐம்பெருங்குழு, *"அமைச்சர் புரோகிதர் சேனா பதியர், தவாத்தொழிற் றூதுவர் சாரண ரென்றிவர், பார்த்திபர்க் கைம்பெருங் குழுவெனப் படுமே" எனுமிவர். எண்பேராயம், †"கரணத் தியலவர் கரும விதிகள், கனகச் சுற்றங் கடைகாப் பாளர், நகர மாந்தர் நளிபடைத் தலைவர், யானை வீர ரிவுளி மறவ, ரினைய ரெண்பே ராய மென்ப" எனுமிவர். இனி "சாந்துபூக் கச்சாடை பாக்கிலை கஞ்சுக நெய், யாய்ந்த விவரெண்ம ராயத்தோர் - வேந்தர்க்கு, மாசனம்பார்ப் பார்மருத்தர் வாழ்நிமித்த ரோடமைச்ச, ராசி லவைக்களத்தா ரைந்து" எனக்காட்டுவர் ‡அரும்பதவுரையாசிரியர். பரதர் - வணிகர். கவர்பரி - பகுத்துவிரையும் செலவு. இவர்தல் - தேரைக்கொண்டெழுதல்.

௧௬௧ - ௧௬௮. அரசுமேம் படீஇய வகனிலை மருங்கி
னுரைசால் மன்னன் கொற்றங் கொள்கென
மாயிரு ஞாலத்து மன்னுயிர் காக்கு
மாயிரத் தோரெட் டரசுதலைக் கொண்ட
தண்ணறுங் காவிரித் தாதுமலி பெருந்துறைப்
புண்ணிய நன்னீர் பொற்குடத் தேந்தி
மண்ணகம் மருள வானகம் வியப்ப
விண்ணவர் தலைவனை விழுநீ ராட்டி

இ - ள். மிகப்பெரிய ஞாலத்தின் கண்ணே தமதான அரசியல் மேம்படுவான் வேண்டி, மன்னுயிர்காக்கும் ஆயிரத்தோரெட்டரசு தலையிற் சுமப்பித்துக்கொண்ட காவிரியிற் பூவின்றாதுமலிந்த பெரிய சங்கமத்துறையிற் குளிர்ந்த நறியதீர்த்த நீரை, மண்ணகமும்வானகமுமருள வியப்ப, எம்மன்னன் கொற்றங்கொள்வானாக வெனச்சொல்லிப் பொற்குடத்தேந்தி விண்ணவர்தலைவனை இந்நகரிடத்தே சிறப்புடைத்தாம்படி முற்கூறிய அரசகுமரரும் பரதகுமரரும் மஞ்சனமாட்டவென்க.

ஆட்டாநிற்பவெனத்திரிக்க. அகனிலை - ஊர். உரை - புகழ். சால் - அமைதி. மன் - ஆக்கத்தின்வந்தது. பொற்குடம் - அபிடேககலசம். மண்ணகமருள - மண

* திவாகரம், ௧௬௯. † திவாகரம், ௧௬௯.

‡ சிலப்பதிகாரத்திற்கு அரும்பதவுரையென்று ஒரு பழையவுரையுண்டு; அவ்வுரையாசிரியர்பெயர் ஒருவாற்றானும் புலப்படவில்லை. அவ்வுரையின் கருத்தைப் பெரும்பான்மை தழுவியும் சிறுபான்மை மறுத்தும் இவ்வடியார்க்குநல்லாருரை அமைந்துள்ளது.

ணகம் விண்ணகமாய் மாருட. அன்றி மண்ணிலுள்ளோர் இப்படியே அவ்விண்ணகமிருப்பதெனை ஒப்புக்காணவென்க. வானகம்வியப்ப - வானகத்துள்ளோர் தம் துறக்கத்தினும் ஈது சிறப்புடைத்தென்று வியக்க. இனி மருள மருளுதலாலெனக்கூறி இருதிறத்தோரும் ஐயுற்றுத் தெளிந்து வியப்பவென்றலுமொன்று. விண்ணவர்தலைவன் - ஈண்டு அவன்வச்சிரம். மானதத்தால் நீராட்டியென்னவுமாம். அரசு மேம்படீஇய வகலிலை யென நின்றவாறே எனைநகர்கட்கு அரசாய் மேம்பட்ட நகரென உரைப்பினுமமையும்.

ஏற்றிச் சாற்றி எடுத்துச் செறிந்து ஈண்டி ஏந்தி ஆட்டவென்க.

கசுகூ. *பிறவா யாக்கைப் பெரியோன் கோயிலும்

இ - ள். என்றும் பிறவாத யாக்கையையுடைய இறைவன்கோயிலும்,

இனி யாக்கையிற்பிறவாப் பெரியோனெனினுமமையும்; என்றது அருபியெனறபடி.

கஎ0. அறுமுகச் செவ்வே ளணிதிகழ் கோயிலும்

இ - ள். ஆறுமுகத்தையும் செய்யநிறத்தையுமுடைய முருகவேள்கோயிலும்,

†"மூன்று மாறு நெடுமுதல் குறுகும்" என்பதனுல் அறுமுகமாயிற்று.

கஎக. வால்வளை மேனி வாலியோன் கோயிலும்

இ - ள். வெள்ளிய வளைபோலுநிறத்தையுடைய வெள்ளைமூர்த்திகோயிலும், என்றது பலதேவனை; ‡"வலியொத்தீ வாலியோனை" என்றார் பிறரும்.

கஎஉ. நீல மேனி நெடியோன் கோயிலும்

---

* "முதல்விழி நாட்டத் திறையோன் முதலாப், பதிவாழ் சதுக்கத்துத் தெய்வமீறு, வேறுவேறு சிறப்பின் வேறுவேறு செய்வினை, யாறறி மரபி னறிந்தோர் செய்மின்" என்றார் மணிமேகலையிலும்; க. விழாவறைகாதை.

† தொல்காப்பியம், எழுத்ததிகாரம், குற்றியலுகரப்புணரியல், கூ௫.

‡ புறநானூறு, ருசு. "ஏற்றுவல னுயரிய வெரிமரு ளவிர்சடை, மாற்றருங் கணிச்சி மணிமிடற் றோனும், கடல்வளர் புரிவளை புரையுமேனி, யடல்வெந் நாஞ்சிற் பனைக்கொடி யோனு, மண்ணுறு திருமணி புரையு மேனி, விண்ணுயர் புட்கொடி விறல்வெய் யோனு, மணிமயி லுயரிய மாறா வென்றிப், பிணிமுக வூர்தி யொண்செய் யோனுமென, ஞாலங் காக்குங் கால முன்பிற், றோலா நல்லிசை நால்வ ருள்ளுங், கூற்றொத் தியே மாற்றருஞ் சீற்றம், வலியொத் தியே வாலி யோனைப், புகழொத் தியே யிகழுந ரடுநனை, முருகொத் தியே முன்னியது முடித்தலி, னாங்காங் கவரவ ரொத்தலின் யாங்கு, மரியவு முளவோ நினக்கே யதனு, லிரவலர்க் கருங்கல மருகா தியா, யவனர், நன்கலந் தந்த தண்கமழ் தேறல், பொன்செய் புனைகலத் தேந்தி நாளு, மொண்டொடி மகளிர் மடுப்ப மகிழ்சிறந், தாங்கினி தொழுகுமதி யோங்குவாண் மாற, வங்கண் விசும்பி னாரிரு ளகற்றும், வெங்கதிர்ச் செல்வன் போலவுங் குடதிசைத், தண்கதிர் மதியம் போலவு, நின்று நிலைஇய ருலக மோ டுடனே." திணை - பாடாண்டிணை. துறை - பூவைநிலை. பாண்டியன் இலவந்திப்பள்ளித் துஞ்சிய நன்மாறனை மதுரைக்கணக்காயனார் மகனார் நக்கீரனார் பாடியது.

இ - ள். நீலமணிபோலும் நிறத்தையுடைய நெடியமால்கோயிலும்,

மேனியென்றார், ஆகுபெயரால் நிறத்தை.

களங. மாலை வெண்குடை மன்னவன் கோயிலும்

இ - ள். முத்தமாலையணிந்த வெண்கொற்றக் குடையையுடைய வாசவன் கோயிலும்,

செவ்வேள், வாலியோன், நீலமேனியோனென்பவற்றுள் தொடர்நிலையும் இன்பமும் அலங்காரச்சுவையுமுணர்க.

களச - கள௫. மாமுது முதல்வன் வாய்மையின் வழாஅ
நான்மறை மரபிற் றீமுறை யொருபால்

இ - ள். மிக்க முதுமையையுடைய முதல்வனாகிய வேதாவினுடைய வாய்மையிற்றப்பாத நாலாகிய வேதங்கள்சொன்னநெறி ஓமங்கள் நடந்தன ஒருபக்கமென்க.

களசு - களஅ. நால்வகைத் தேவரு மூவா றுகணங்களும்
பால்வகை தெரிந்த பகுதித் தோற்றத்து
வேறுவேறு கடவுளர் சாறுசிறந் தொருபால

இ - ள். நால்வகைப்பட்டதேவரும் பதினெண்வகைப்பட்ட கணங்களுமென வேற்றுமைப்படத் தெரிந்துவகுக்கப்பட்ட தோற்றத்தையுடைய கடவுளரது விழவு சிறக்க ஒருபக்கமென்க.

நால்வகைத்தேவராவார்: முப்பத்துமூவர். அவர் வசுக்களெண்மரும், திவாகரர் பன்னிருவரும், உருத்திரர் பதினொருவரும், மருத்துவர் இருவருமெனவிவர். மூவாறுக்கணங்களாவார்: "கின்னரர் கிம்புருடர் விச்சா தரர்கருடர், பொன்னமர் பூதர் புகழியக்கர் - மன்னு, முரகர் சுரர்சா ரணர்முனிவர் மேலாம், பரகதியோர் சித்தர் புலர்" "காந்தருவர் தாரகைகள் காணுப் பசாசகண, மேந்துபுகழ் மேய விராக்கதரோ - டாய்ந்ததிறற், போகா வியல்புடைய போகபூமி யோருடனே, யாகாச வாசிகளா வார்" எனவிவர். ஆகாசர் நாகர் சித்தர் காந்தருவர் விஞ்சையர் பூசகர் தாரகை போகபூமியோர் கிம்புருடர் சுரர் அசுரர் பூதம் முனி தேவர் கருடர் இராக்கதர் இயக்கர் சாரணர் எனவுங்கொள்க.

களகூ-கஅக. அறவோர் பள்ளியு மறனோம் படையும்
புறநிலைக் கோட்டத்துப் புண்ணியத் தானமுந்
துறவோ ருரைக்குஞ் செயல்சிறந் தொருபால்

இ - ள். அறவோர்பள்ளிமுதலியவெல்லாவற்றிலும் தருமம்போதித்தலும் புராணம்படித்தலும் பிறவுமாகிய செய்கைகண்மிக ஒருபக்கமென்க.

அறவோர்பள்ளி - அருகர்பள்ளி, புத்தர்பள்ளி. அறனோம்படை - தருமம் போதிக்குமிடம். புறநிலைக்கோட்டத்து - புறம்புள்ள ஸ்ரீகோயிலுடனே. புண்ணியத் தானமும் - மற்றுமுள்ள புண்ணியத்தானங்களும். துறவோருரைக்குஞ் செயல் - புராணம்.

கஅஉ - கஅங. கொடித்தேர் வேந்தனொடு கூடா மன்ன
ரடித்தளை நீக்க வருள்சிறந் தொருபால்

இ - ள். கூடாமன்னரோடு வினையோரும் அடித்தளைநீக்குதற்குக் கொடித்தேர் வேந்தன் அருள் சிறக்க ஒருபக்கம்;

ஒடுவை அசையாக்கினுமமையும்.

கஅச - கஅசு. கண்ணு ளாளர் கருவிக் குயிலுவர்
பண்ணியாழ்ப் புலவர் பாடற் பாணரொ
டெண்ணருஞ் சிறப்பி னிசைசிறந் தொருபால்

கண்ணுளாளர் - மதங்கர்; ஆவார் பெரும்பாணர்; குழலருமென்ப. கருவிக்குயிலுவர் - தோற்கருவிவாசிப்பார். பண்ணியாழ்ப்புலவர் - கட்டப்பட்ட யாழ் வாசிக்கவல்ல அறிஞர்.

இ - ள். குழலுந் தோலு நரம்பும் கண்டமுமென்னுமிவற்றை இசைக்கவல்ல இவர்களாலே அளந்தறிதலரிய சிறப்பையுடைய இசைகள் மிக ஒருபக்கமென்க.

இவற்றையெல்லாம் சிறக்கவெனத் திரித்துக்கொள்க.

கஅஎ - கஅஅ. முழவுக்கண் டுயிலாது முடுக்கரும் வீதியும்
விழவுக்களி சிறந்த வியலு ளாங்கட்

இ - ள். கங்குலும் பகலும் இங்ஙனநடக்கலான், முழவின்கண்கள் அடங்குதலின்றிக் குறுந்தெருக்களும் நெடுந்தேர்வீதிகளும் விழவாற்களிப்புமிக்க அகன்ற ஊரிடத்தென்க.

சிறக்க நீராட்டக் களிசிறந்த வியலுளென்க.

“காதற்கொழுநனை” என்பதுமுதல் “மறுகில்” (உ௦ரு) என்னுந்துணையும் சிலேடை.

கஅகூ - ககூ௦. காதற் கொழுநனைப் பிரிந்தல ரெய்தா
மாதர்க் கொடுங்குழை மாதவி தன்னோடு

இ - ள். மாதவிமேற் சொல்லுமிடத்துத் தான் காதலிக்கப்பட்ட கொழுநனைப் பிரிந்து வேறுபாட்டால் அலருறாத அழகிய வளைந்த மகரக்குழையையுடைய மாதவியென்றும், குருக்கத்திமேற் சொல்லுமிடத்து எல்லாருங் காதலிக்குங்கொழுவிய நனையாந்தன்மையைவிட்டு முதிர்ந்து அலராகாத வளைந்த அழகிய தளிரையுடைய மாதவியென்றும்பிரிக்க.

நனை - அரும்பு. கண்ணகிபிரிந்து அலரையெய்துதலால் அலரெய்தாத மாதவியென்றார். குருக்கத்தியை அலரெய்தாவென்றார், செவ்வியழியாமைபற்றி.

ககூக - ககூரு. இல்வளர் முல்லை மல்லிகை மயிலை
*தாழிக் குவளை சூழ்செங் கழுநீர்
பயில்பூங் கோதைப் பிணையலிற் பொலிந்து
காமக் களிமகிழ் வெய்திக் காமர்
பூம்பொதி நறுவிரைப் பொழிலாட் டமர்ந்து

* “தாழியுண் மலர்ந்த தண்செங் குவளை, பூழுறு நறும்போ தொருகையிற் பிடித்து” எனப் பெருங்கதையிலும், “தாழிவாய்க் குவளை” எனச் சிந்தாமணியிலுங் கூறினர்.

இ - ள். முற்கூறியமாதவியுடனே முல்லைமுதல் கழுநீரீறுயுள்ள பூப்பயின்ற பிணையலாலே பொலிவுபெற்றுக் காமத்தாற்களித்து மகிழ்ச்சியெய்தி அழகிய நறிய விரைபடுபூம்பொழிலில் விளையாட்டை விரும்பியென்க.

இல்வளர்தலை முல்லைமுதன் மூன்றுக்குமேற்றுக. மயிலை - இருவாட்சி. சூழ்தல் - வண்டின்செருழில். இதனை விரித்து எங்கும் ஒட்டுக. கோதையாகிய பிணையலெனப் பண்பொட்டுவிரிக்க; ஒழுங்குமாம்; *"கோதையருவி" போல. பூம்பொதி நறுவிரைப் பொழில் - நறியவிரையைப் பொதிந்த பூவையுடையபொழில்; விகாரம். ஆட்டு - விளையாட்டு; ஆவது புணர்ச்சி.

கசுரு-கசுஎ நாண்மகி ழிருக்கை நாளங் காடியிற்

பூமலி கானத்துப் புதுமணம் புக்கு

இ - ள். நாடோறும் மகிழ்ந்திருக்கும் இருப்பையுடைய நாளங்காடியிற் பூவிற்குமிடங்களிற் பலபூமணமாகிய புதியமணத்தின் உள்புக்கு,

பூவிற்குமிடங்களைப் பூவின்மிகுதியாற் கானமென்றார்.

கசுஅ-கசுகூ. புகையுஞ் சாந்தும் புலராது சிறந்து

நகையா டாயத்து நன்மொழி திளைத்து

இ - ள். அகிற்புகை சாந்தென்னுமிவற்றின் செவ்விவாய்ப்புமிக்கு நகைத்து விளையாடும் திரளோடே காமக்குறிப்பாகிய மகிழ்ச்சிமொழியிலே இடைவிடாது பயின்றென்க.

புலராது - புலராமல்; செவ்விமாறுமலென்றபடி. திளைத்தல் - ஒருதொழிலை இடைவிடாதுபயிறல்; †"திளைத்தவர் பருகிய" என்றார் பிறரும்.

உ00-உ0ந. குரல்வாய்ப் பாணரொடு நகரப் பரத்தரொடு

திரிதரு மரபிற் கோவலன் போல

விளிவாய் வண்டினொ டின்னிள வேனிலொடு

மலய மாருதந் திரிதரு மறுகில்

இ - ள். குரலென்னுமிசையைப்பாடும் வாயையுடைய பாணரோடும் பரத்தரோடுந்திரிகின்ற ஒழுக்கத்தையுடைய கோவலனைப்போல இளியென்னுமிசையைப்பாடும் வாயையுடைய வண்டினோடும் இளவேனிலோடும் இந்நகரிடத்து மந்தமாருதம் உலாவுதலைச்செய்யும் மறுகிடத்தென்க.

குரலுக்கிளிகூறினர்; கிளையாதலேக்கி. பரத்தர் - பழிகாமுகர். திரிதருதல் - உலாத்துதல்.

மாதவிதன்னொடும் பயில்பூம்பிணையலாற் பொலிந்து எய்தி அமர்ந்து புக்குச் சிறந்து திளைத்துப் பாணரொடும் பரத்தரொடுந்திரிகின்ற ஒழுக்கத்தையுடைய கோவலனைப்போல வண்டினொடும் இளவேனிலொடும் மாருதந்திரிதருமறுகிலென்க.

இச்செய்தென்னும் வினையெச்சங்களைத் திரிதருமென்னும் வினையொடுமுடித்து அச் செய்யுமென்னும் பெயரெச்சத்தையும் கோவலனென்னும் பெயரொடு முடித்து அவனைப்போலத் திரிதருமென்க.

---

* சீவகசிந்தாமணி, காந்தருவதத்தையாரிலம்பகம், கூகூ.

† ,, நாமகளிலம்பகம், உச.

பாணர்க்கு வண்டும், பரத்தர்க்கு வேனிலும், கோவலற்கு மாருதமும் உவமம்.
இனி வீதிவருணனை கூறுவார்.

௨௦௪-௨௦௭. கருமுகில் சுமந்து குறுமுய லொழித்தாங்
கிருகருங் கயலோ டிடைக்குமி ழெழுதி
யங்கண் வானத் தரவுப்பகை யஞ்சித்
திங்களு மீண்டுத் திரிதலு முண்டுகொல்

இ - ள். அழகிய வானத்திடத்தே திரியும் அரவாகிய பகை செறுமென்றஞ்சி ஆண்டுத் திரியாமல் ஓர் பெரிய முகிலைச்சுமந்து சிறியமுயலையொழித்து இருமருங்கினும் இரண்டு கருங்கயலினையும் இடையே ஒரு குமிழமலரையுமெழுதி இங்ஙனம் *உள்வரிக்கோலங்கொண்டு திங்களும் இந்நிலத்தே திரிதருகின்றதுகொல்லோ வெனவும்,

உம்மை - சிறப்பு. கருமை - பெருமை.

௨௦௮-௨௧௧. நீர்வாய் திங்க ணிலத்துதித்தின்
சீர்வாய் துவலைத் திருநீர் மாந்தி
மீனேற்றுக் கொடியோன் மெய்பெற வளர்த்த
வான வல்லி வருதலு முண்டுகொல்

இ - ள். காமன்றான், முன்பு இறைவன் நுதல்விழியானிழந்த மெய்பெறுதற்காக ஈரம் வாய்ப்புப்பெற்ற திங்களாகிய பெரியநிலத்தே சீர்மைவாய்ப்புப்பெற்ற துவலையையுடைய அமிர்தகலையினீரைமாந்தி, வளரவளர்த்த வானவல்லி இந்நிலத்தே வருதலுமுண்டாயிற்றோதானெனவும்,

வளரவென ஒருசொல் வருவிக்க. மாந்தி மெய்பெறவெனினுமமையும். இதனை வானவல்லி என்றார், காமவல்லியுமுண்மைதோன்ற. வானவல்லி - மின்னுக்கொடி. உம்மை - சிறப்பு.

௨௧௨-௨௧௭. இருநில மன்னற்குப் பெருவளங் காட்டத்
திருமகள் புகுந்ததிச் செழும்பதி யாமென
வெரிநிறத் திலவமு முல்லையு மொன்றியுங்
கருநெடுங் குவளையுங் குமிழும் பூத்தாங்
குள்வரிக் கோலத் துறுதுணை தேடிக்
கள்ளக் கமலந் திரிதலு முண்டுகொல்

இ - ள். வளத்தையுடைய இப்பதியிடத்தே திருமகள் வந்துபுகுதற்குக்காரணம் மிக்கநிலத்தையுடைய கரிகாலற்குத் தனதுவளங்காட்டவாயிருந்தது தப்பாதெனக்கருதி எரிபோலு நிறத்தையுடையதோர் இலவமலரையும் பலமுல்லைமுகையையுமொழிந்தும் இரண்டு கரிய பெரிய குவளைமலரையும் ஒருகுமிழமலரையும் பூத்து இங்ஙனங்கொண்ட உள்வரிக்கோலத்தோடு தனது அன்புமிக்கதுணையைத் தேடிக் கமலந்திரிதலும் உண்டாயிற்றோதானெனவும்,

* உள்வரிக்கோலம் பாண்டவர்போல வேற்றுருக்கொண்டுநடிக்குங்கோலம்.

கள்ளக்கமலமென்றார், உருமாறித்திரிதலின்; கள்ளையுடைய அக்கமலமென்ப
இயல்பு. ஆங்கு - பூத்த அப்போதே. வளம் - செல்வமும் அழகும்.

௨௧௮-௨௨௩. மன்னவன் செங்கோன் மறுத்த லஞ்சிப்
பல்லுயிர் பருகும் பகுவாய்க் கூற்ற
மாண்மையிற் றிரிந்துத னருந்தொழி றிரியாது
நாணுடைக் கோலத்து நகைமுகங் கோட்டிப்
பணமொழி நரம்பிற் றிவ்வியாழ் மிழற்றிப
பெண்மையிற் றிரியும் பெற்றியு முண்டென

இதற்குக் கொல்லென்னும் இடைச்சொல் வருவிக்க.

இ - ள். முன்பு ஒடியொளித்த பகுவாய்க் கூற்றம் தான் ஆணுருவோடு திரிந்து பல்லுயிரைப்பருகில் அரசன்செங்கோலை மறுத்ததாமென்று அதற்கஞ்சி மறைந்துநின்று பருகவேண்டிக் கடுத்தமுகமும் இடித்தகுரலுமொழித்து வாணகைமுகமும் யாழிசைமொழியுங்கொண்டு நகைத்து மிழற்றிப் பெண்ணுருவோடு இந்த வீதியிற்றிரியுந்தன்மையும் உண்டாயிற்றோதானெனவும்.

பருகுங்கூற்றம் - பலவுயிரையும் ஒருவாயிற் பருகுங்கூற்றம். பகுவாய் - அங்ஙன்பருகுங்கால் அங்காக்கும்வாய். தன் அருந்தொழில் திரியாது ஆண்மையிற் றிரிந்து பெண்மையிற்றிரியுமென்னுமுமையும். இதன்கருத்து - கூற்றம் தன் கொலைத்தொழில்கெடாமல் ஆணுருக்கெடப் பெண்ணுருவால் திரியுமென்றபடி. அருந்தொழில் - கொலைத்தொழில். நாணுடைக் கோலத்து நகைமுகங் கோட்டியென்றது ஒருருவைக் கோட்டுவார்க்கு நாணுடைமைகோட்டல் அரிதாகலின், முதல் அதனைக்கோட்டிப பின்பு அதனோடு நகைமுகத்தையுங்கோட்டியென்பதாயிற்று.

கூற்றம் அஞ்சித் திரியாமற் கோட்டி மிழற்றிப் பெண்மையிற்றிரியும் பெற்றியென்க.

மாருதம்திரிதருமறுகில் திங்களும் வல்லியும் கமலமும் கூற்றமும் திரிதலுமுண்டுகொல் வருதலுமுண்டுகொல் திரிதலுமுண்டுகொல பெற்றியுமுண்டுகொலெனக் கூறியென்க.

இது, திங்கள்முதலியவற்றைப் பொதுமகளிருறுப்போடும் தொழிலோடு முறுவித்துக் காமுகர்புகழ்ந்துகூறுதலெனக்கொள்க.

௨௨௪-௨௩௪. உருவி லாள னொருபெருஞ் சேனை
யிகலம ராட்டி யெதிர்நின்று விலக்கியவ
ரெழுதுவரி கோல முழுமெயு முறீஇ
விருந்தொடு புக்க பெருந்தோட கணவரொ
டுடனுறைவு மரீஇ யொழுக்கொடு புணர்ந்த
வடமீன் கற்பின் மனையுறை மகளிர்
மாதர்வாண் முகத்து மணித்தோட்டுக் குவளைப்
போதுபுறங் கொடுத்துப் போகிய செங்கடை

விருந்திற் றீர்ந்ில-தாயின் யாவது
மருந்துந் தருங்கொலிம் மாநில வரைப்பெனக்
கையற்று நடுங்கு நல்வினை நடுநாள்

இ - ள். காமனுடைய ஒப்பிலாத பெரியசேனையாகிய பரதமகளிர் ஊட லானுகிய மாறுபட்ட அமளை இங்ஙனம்புகழ்ந்துசொல்லி வென்று, அவர்போகா மல் எதிர்நின்றுவிலக்கிப் புணர்தலின், அவருடைய முலைமுதலியவற்றினெழுதிய தொய்யின்முதலிய பத்திக்கீற்றுத் தமதுமார்பமுழுதும் உறுதலானே, விருந்தொடு புக்க கணவரோடே உடனுறைதலைமருவி, வழிபாட்டோடும்பொருந்திபபுணர்ந்த அருந்ததிபோலும் கற்பையுடைய இல்லறமகளிரை அப்பெருந்தோட்கணவரே இம்மாதருடைய ஒளிபொருந்தியமுகத்து நீலமணிபோலும் இதழையுடைய குவ ளைப்போதுகள் புறங்கொடுத்துப்போதற்குக் காரணமாகிய கரியகண்களின் கடைச் சிவப்பு அவ்விருந்தால் தீர்ந்ததில்லையாயின், இப்பெரிய நிலவெலலே இதற்கு ஒரு மருந்தையும் தரவற்றேவெனத் தமதுநெஞ்சொடுகூறிச் செயலற்றுநடுங்கும் விழா நடுநாளிலெனக.

இகலமராட்டி - மாறுபட்ட அமளைச் சயித்து; ஆடு - வென்றி. என்றது புலவி யாலே கூடாதமகளிரை இங்ஙனம்புகழ்ந்து புலவியைத்தீர்த்தென்றபடி. எதிர் நின்று விலக்கி - போகப்புக்கவர்களைப் போகாமல்விலக்கி. வரிக்கோலம் - வினைத் தொகை. முழுமெயும் - மார்பமுழுதும்; *“முழுமெயும் புன்க ணுற்றோர்க்கு” என்றார் பிறரும். உறீஇ - உறுவித்து; புணர்ந்தென்றபடி. தீர்ந்திலது - விகாரம். யாவதும் - சிறிதும்; உம்மை - சிறப்பு. மருந்துந் தருங்கொலிம் மாநில வரைப் பெனத் தருதல் வரைப்புகேற்றுக. வரைப்பென்றார், வரைப்பிலுள்ளாரை. நல் வினை - விழா.

ஆட்டி விலக்கி உறீஇப் புக்க கணவர் நடுங்குநாளென்க.

நிலவரைப்புத் தருங்கொலென்றார், சல்லியகரணி சந்தானகரணி சமனிய கரணி மிருதசஞ்சீவினி யென்னும் இவைமுதலிய மருந்துகளைத்தரும் நிலவரை ப்பு இவ்வூடன்முதலியவற்றிற்கு மருந்து தரமாட்டாதென்றற்கு.

இனி, திங்கள் வாளவல்லிமுதலியவற்றைக் கூறுதலைக் கண்டோர்கூற்றாக்கி அவர் அங்ஙனங்கூற அக்காமன்சேனையாகியமகளிர் மாறுபட்டுத்தம்முறுப்புக்களால் அமளைச்செய்வித்து வீதியிற்போவாரைப் போகாமல் தடுத்தலின் அவருடைய முலையிலெழுதிய தொய்யிலுறுதலின் விருந்தொடுபுக்கவெனினுமமையும். இனி இம்மகளிர் நெருங்குதலாலே மாந்தர் பூரர்பாற்றள்ளிப்பெயர்கின்றவர் தம் மார்பிற் பொறித்தலாலெனவுமாம். இஃது “உறுத்தலு மொன்றலும்” என்னும் ஆலிங்கன விகற்பம்; †“பூசுசாந் தொருவர் பூசிற் றெழுவர்தம் மகலம் பூசி, மாசன மிடைந்தெ ருது வண்கடை மலிந்த தன்றே” என்றார் பிறரும். உடனுறைவுமரீஇயெனவே ஊடறீர்தலும் ஒழுக்கொடுபுணர்ந்தவெனவே காட்டிற்றுஞ்செய்து கதம்படாராத விற் புலவி துனியிற் செல்லாது ஊடலுணர்ந்தமையும் விளங்கிகின்றன.

---

* சீவகசிந்தாமணி, காந்தருவதத்தையாரிலம்பகம், கூஉஎ.

† ,, நாமகளிலம்பகம், அஎ.

உகரு-உசo. உள்ளக நறுந்தா துறைப்பமீ தழிந்து
கள்ளக நடுங்குங் கழுநீர் போலக்
கண்ணகி கருங்கணு மாதவி செங்கணு
முண்ணிறை கரந்தகத் தொளித்துநீ ருகுத்தன
வெண்ணுமுறை யிடத்தினும் வலத்தினுந் துடித்தன
விண்ணவர் கோமான் விழவுநா ளகத்தென.

இ - ள். *இந்திரனுடைய விழாநாளகத்து உள்ளுள்ள நறியதாதுகண் மதுவை யூறிப் பிலிற்றுதலால், அகநிறைந்து மீது அழியப்பொழிய நின்றுநடுங்கும் கழுநீரினைப்போலக் கண்ணகியுடைய கருங்கண்ணும் மாதவியுடைய செங்கண்ணும் உண்ணிறை கரத்தலானே இதயத்தையொளித்து நீரையுகுத்தன; அவையே முன் எண்ணியமுறையே இடமும் வலமுந் துடித்தனவென்க.

அழிந்து - அழிய.

தாதெறிப்பவென்றுபாடமோதித் தாது ஒளிவிடவெனப் பொருளுரைப்பாருமுளர். கழுநீர்போலவென்றது, ஊறி நிறைந்து இதழினின்றும்வழிந்து சிந்துதலின். நடுங்குமென்றார், மல்கிநின்று அலைந்துசிந்துமாகலின். கருங்கண் செங்கணென்றார், இருவர்க்கும் கூட்டமின்மையும் உண்மையுமுணர்த்தற்கு. இடத்தினும் வலத்தினுந்துடித்தனவென்றார், மேல் இருவர்க்கும் கூட்டமும் பிரிவுமுணர்த்தற்கு., விழவுநாளகத்தென்றார், தீர்த்தத்தின்முன்னாளென்பது உணர்த்தற்கு.

மடந்தை போர்த்த படாத்தைப் போகநீக்கி ஒளி உச்சித்தோன்றிப் பரப்பச் சொரிந்து ஆடிப் பெயர நலங்கொளவைத்து ஊட்ட மண்டபமன்றியும் மன்றத்தும் பலியுறீஇ ஏற்றிச் சாற்றி எடுத்து ஈண்டிக்கொள்கென ஆட்டக் களிசிறந்த வியலுளாங்கண் திரிதருமறுகில் உண்டுகொலென்று சேனையாட்டி விலக்கி உறீஇப் புக்க வினைவர் நடுங்குநாள், உகுத்தனவாகிய கருங்கண்ணும் செங்கண்ணும் விழாநாளகத்து இடத்தினும் வலத்தினுந் துடித்தனவென வினைமுடிக்க.

இஃது எல்லாவடியும் அளவடியாய்வந்துமுடிதலின் நிலைமண்டிலவாசிரியப்பா.

புருந்து நிழலுமென ... ...அடியார்க்குநல்லானென்பான்.
ஒருந்தமிழ் ... ...நிரம்பையர்காவலனே.
காற்றை ... ...சொல்வித்ததே.

இந்திரவிழவூரெடுத்தகாதை முற்றிற்று.

---

* பண்டைக்காலத்தில் என்னகரத்து விழாக்கொண்டருளவேண்டுமென்று ந்த ஓர் சோழன்வேண்டுகோளுக்கு இந்திரன் உடன்பட்டானென்பதும், அ தொடங்கி இவ்விந்திரவிழா இக்காவிரிப்பூம்பட்டினத்து நடைபெற்றுவருகின் தென்பதும் மணிமேகலை விழாவறைகாதையால் விளங்குகின்றன. இந்திரவி வுண்டென்பதை வான்மீகி காளிதாசர் முதலியோர் சுத்தம் நூல்களிற் குறிப்பித் க்கின்றனர்.

ஆறாவது

கடலாடு காதை.

வெள்ளி மால்வரை வியன்பெருஞ் சேடிக்
கள்ளவிழ் பூம்பொழிற் காமக் கடவுட்குக்
கருங்கய னெடுங்கட் காதலி தன்னொடு
விருந்தாட் டயருமோர் விஞ்சை வீரன்
றென்றிசை மருங்கினோர் செழும்பதி தன்னு
ளிந்திர விழவுகொண் டெடுக்குநா ளிதுவெனக்
கடுவிசை யவுணர் கணங்கொண் டீண்டிக்
கொடுவரி யூக்கத்துக் கோநகர் காத்த
தொடுகழன் மன்னற்குத் தொலைந்தன ராகி
நெஞ்சிருள் கூர நிகர்த்துமேல் விட்ட
வஞ்சம் பெயர்த்த மாபெரும் பூதந்
திருந்துவே லண்ணற்குத் *தேவ னேவ
விருந்து பலியுண்ணு மிடனுங் காண்கு
மமரா வதிகாத் தமரனிற் பெற்றுத்
தமரிற் றந்து தகைசால் சிறப்பிற்
பொய்வகை யின்றிப் பூமியிற் புணர்த்த
வைவகை மன்றத் தமைதியுங் காண்குது
நாரதன் வீணை நயந்தெரி பாடலுந்
தோரிய மடந்தை வாரம் பாடலு
மாயிரங் கண்ணோன் செவியக நிறைய
நாடக வுருப்பசி நல்கா ளாகிய
மங்கல மிழப்ப வீணை மண்மிசைத்
தங்குக விவளெனச் †சாபம் பெற்ற
மங்கை மாதவி வழிமுதற் றோன்றிய
வங்கர வல்கு லாடலுங் காண்குதுந்
துவரிதழ்ச் செவ்வாய்த் துடியிடை யோயே
யமரர் தலைவனை வணங்குதும் யாமெனச்
சிமயத் திமயமுஞ் செழுநீர்க் கங்கையு

---

* தேவர்கோனேவவென்றும்பாடம்.

† சாபமேற்றவெனவும்பாடம்.

முஞ்சையம் பதியும் விந்தத் தடவியும்
வேங்கட மலையுந் தாங்கா விளையுட்
காவிரி நாடுங் காட்டிப் பின்னர்ப்
பூவிரி படப்பைப் புகார்மருங் கெய்திச்
சொல்லிய முறைமையிற் றொழுதனன் காட்டி
மல்லன் மூதூர் மகிழ்விழாக் காண்போன்
மாயோன் பாணியும் வருணப் பூதர்
நால்வகைப் பாணியு நலம்பெறு கொள்கை
வானூர் மதியமும் பாடிப் பின்னர்ச்
சீரியல் பொலிய நீரல நீங்கப்
பாரதி யாடிய பாரதி யரங்கத்துத்
திரிபுர மெரியத் தேவர் வேண்ட
வெரிமுகப் பேரம் பேவல் கேட்ப
வுமையவ ளொருதிற னாக வோங்கிய
விமையவ னாடிய கொடுகொட்டி யாடலுந்
தேர்மு னின்ற திசைமுகன் காணப்
பாரதி யாடிய வியன்பாண் டரங்கமுங்
கஞ்சன் வஞ்சங் கடத்தற் காக
வஞ்சன வண்ண னாடிய வாடலு
ளல்லியத் தொகுதியு மவுணற் கடந்த
மல்லி னாடலு மாக்கட னடுவ
ணீர்த்திரை யரங்கத்து நிகர்த்துமுன் னின்ற
சூர்த்திறங் கடந்தோ னாடிய துடியும
படைவீழ்த் தவுணர் பையு ளெய்தக்
குடைவீழ்த் தவ [illegible] டிய குடையும
வாணன் பே [illegible] ட டந்து
நீணில மள [illegible] குடமு
மாண்மை [illegible] ண்மைக் கோலத்துக்
காம னாடி [illegible] டலுங்
காயுசின் [illegible] கடுந்தொழில் பொறாஅ
மாயவ ளாடு மரக்கா லாடலுஞ்
செருவெங் கோல மவுணர் நீங்கத்
திருவின் செய்யோ ளாடிய பாவையும்
வயலுழை நின்று வடக்கு வாயிலு
ளயிராணி மடந்தை யாடிய கடையமு
மவரவ ரணியுட னவரவர் கொள்கையி

னிலையும் படிதமு நீங்கா மரபிற்
பதினோ ராடலும் பாட்டின் பகுதியும்
விதிமாண் கொள்கையின் விளங்கக் காணாய்
தாதவிழ் பூம்பொழி லிருந்தியான் கூறிய
மாதவி மரபின் மாதவி யிவளெனக்
காதலிக் குரைத்துக் கண்டுமகிழ் வெய்திய
மேதகு சிறப்பின் விஞ்சைய னன்றியு
மந்தரத் துள்ளோ ரறியா மரபின்
வந்து காண்குறூஉம் வானவன் விழவு
மாடலுங் கோலமு மணியுங் கடைக்கொள
வூடற் கோலமோ டிருந்தோ னுவப்பப்
பத்துத் துவரினு மைந்து விரையினு
முப்பத் திருவகை யோமா லிகையினு
மூறின நன்னீ ருரைத்தநெய் வாச
நாறிருங் கூந்த னலம்பெற வாட்டிப்
புகையிற் புலர்த்திய பூமென் கூந்தலை
வகைதொறு மான்மதக் கொழுஞ்சே றூட்டி
யலத்தக மூட்டிய வஞ்செஞ் சீறடி
நலத்தகு மெல்விர னல்லணி செறீஇப்
பரியக நூபுரம் பாடகஞ் சதங்கை
யரியகங் காலுக் கமைவுற வணிந்து
குறங்கு செறிதிரள் குறங்கினிற் செறித்துப்
பிறங்கிய முத்தரை முப்பத் திருகாழ்
நிறங்கிளர் பூந்துகி னீர்மையி னுடீஇக்
காமர் கண்டிகை தன்னொடு பின்னிய
தூமணித் தோள்வளை தோளுக் கணிந்து
மத்தக மணியொடு *வயிரங் கட்டிய
சித்திரச் சூடகஞ் செம்பொற் கைவளை
பரியகம் வால்வளை பவழப் †பல்வளை
யரிமயிர் முன்கைக் கமைவுற வணிந்து
வாளைப் பகுவாய் வணக்குறு மோதிரங்
கேழ்கிளர் செங்கேழ் கிளர்மணி மோதிரம்
வாங்குவில் வயிரத்து மரகதத் தாள்செறி
காந்தண் மெல்விரல் காப்ப வணிந்து

* வயிரங்குயிற்றியவெனவும்பாடம்.
† பல்வடமெனவும்பாடம்.

சங்கிலி நுண்டொடர் பூண்ஞாண் புனைவினை
யங்கழுத் தகவயி னாரமோ டணிந்து
கயிற்கடை யொழுகிய காமர் தூமணி
செயத்தகு கோவையிற் சிறுபுற மறைத்தாங்
கிந்திர நீலத் *திடையிடை திரண்ட
சந்திர பாணித் தகைபெறு கடிப்பிணை
யங்கா தகவயி னழகுற வணிந்து
தெய்வ வுத்தியொடு செழுநீர் வலம்புரி
தொய்யகம் புல்லகந் தொடர்ந்த தலைக்கணி
மையீ ரோதிக்கு மாண்புற வணிந்து
கூடலு மூடலுங் கோவலற் களித்துப்
பாடமை சேக்கைப் பள்ளியு ளிருந்தோ
ளுருகெழு மூதூ ருவவுத் தலைவந்தெனப்
பெருநீர் போகு மிரியன் மாக்களொடு
மடலவிழ் கானற் கடல்விளை யாட்டுக
காண்டல் விருப்பு வேண்டின ளாகிப்
பொய்கைத் தாமரைப் புள்வாய் புலம்ப
வைகறை யாமம் வாரணங் காட்ட
வெள்ளி விளக்க நள்ளிருள் கடியத்
தாரணி மார்பனொடு பேரணியணிந்து
வான வண்கைய னத்திரி யேற
மானமர் நோக்கியும் வைய மேறிக்
கோடிபல வடுக்கிய கொழுநிதிக் குப்பை
மாடமலி மறுகிற் பீடிகைத் தெருவின்
மலரணி யொழுக்கத்து மணிவிளக் கெடுத்தாங்
கலர்கொடி யறுகு நெல்லும் வீசி
மங்கலத் தாசியர் தங்கல னொலிப்ப
விருபுடை மருங்கினுந் திரிவனர் பெயருந்
திருமக ளிருக்கை செவ்வனங் கழிந்து
மகர வாரி வளந்தந் தோங்கிய
நகர வீதி நடுவட் போகிக்
கலந்தரு திருவிற் புலம்பெயர் மாக்கள்
வேலை வாலுகத்து விரிதிரைப் பரப்பிற்
கூல மறுகிற் கொடியெடுத்து நுவலு
மாலைச் சேரி மருங்குசென் றெய்தி

---

* இடையிடைசிறந்தவெனவும்பாடம்.

வண்ணமுஞ் சாந்து மலரு
*பண்ணியப் பகுதியும் பகர்வோ
செய்வினைக் கம்மியர் கைவினை வி
காழியர் மோதகத் தூழுறு விளக்கமு
கூவியர் காரகற் குடக்கால் விளக்கமு
நொடைநவின் மகடூஉக் கடைகெழு விள
இடையிடை மீன்விலை பகர்வோர் விளக்
†இலங்குநீர் வரைப்பிற் கலங்கரை விளக்கமு
விலங்குவலைப் பரதவர் மீன்றிமில் விளக்கமு
மொழிபெயர் தேத்தோ ரொழியா விளக்கமுங்
கழிபெரும் பண்டங் காவலர் விளக்கமு
மெண்ணுவரம் பறியா வியைந்தொருங் கீண்டி
யிடிக்கலப் பன்ன வீரயிர் மருங்கிற்
கடிப்பகை காணுங் காட்சிய தாகிய
விரைமலர்த் தாமரை வீங்குநீர்ப் பரப்பின்
மருத வேலியின் மாண்புறத் தோன்றுங்
கைதை வேலி நெய்தலங் கானற்
பொய்த லாயமொடு பூங்கொடி பொருந்தி
நிரைநிரை ‡யெடுத்த புரைதீர் காட்சி
மலைப்பஃ றாரமுங் கடறபஃ றாரமும்
வளந்தலை மயங்கிய துளங்குகல விருக்கை
யரசிளங் குமரரு முரிமைச் சுற்றமும்
பரத குமரரும் பல்வே றாயமு
மாடுகள மகளிரும் பாடுகள மகளிருந்
தோடுகொண் மருங்கிற் சூழ்தர லெழினியும்
விண்பொரு பெரும்புகழ்க் கரிகால் வளவன்
றண்பதங் கொள்ளுந் தலைநாட் போல
வேறுவேறு கோலத்து வேறுவேறு கம்பலை
சாறயர் களத்தின் வீறுபெறத் தோன்றிக்
கடற்கரை மெலிக்குங் காவிரிப் பேர்யாற்
றிடங்கெட வீண்டிய நால்வகை வருணத்
தடங்காக் கம்பலை யுடங்கியைந் தொலிப்பக்
கடற்புலவு கடிந்த மடற்பூந் தாழைச்
சிறைசெய் வேலி §யகவயி னாங்கோர்

---

* பண்டியத்தொகுதியெனவும் பாடம்.
‡ அடுத்தவெனவும்பாடம்.
† விலங்குநீர்ப்பரப்பினெனவும்பாடம்.
§ அகவயிற்பூத்தவெனவும்பாடம்.

பரப்பி
...ழவுடன் போக்கி
...த்த வெண்கா லமளிமிசை
...ற வசந்த மாலைகைத்
...ல்யாழ் செவ்வனம் வாங்கிக்
...றன்னொடுங் கொள்கையி னிருந்தனன்
...நெடுங்கண் மாதவி தானென.

...வெள்ளி மால்வரை வியன்பெருஞ் சேடிக்
கள்ளவிழ் பூம்பொழிற் காமக் கடவுட்குக்
கருங்கய னெடுங்கட் காதலி தன்னொடு
விருந்தாட் டயருமோர் விஞ்சை வீரன் ...

இ-ள். வெள்ளியம்பெருமலைக்கண் அகன்றுயர்ந்த வடசேடிக்கண்ணே, மது வொழுக மலர்கின்ற பூக்களையுடையதோர் பொழிலிடத்தே கரிய கயல்போலும் நெடிய கண்களையுடைய தனது காதலியுடனேயிருந்து காமக்கடவுட்கு விழவை விரும்பிச்செய்வானோர் விச்சாதரவீரனென்க.

வியன்பெருஞ்சேடி - அகன்றுயர்ந்த வடசேடி. அவிழ்பூ - வினைத்தொகை. காமக்கடவுள் - காமதேவன். விருந்தாட்டு - நித்தல்விழாவன்றி யாண்டுதோறும் விரும்பும் விழவு.

காதலிதன்னொடு அமருமென்க.

௫-௬. தென்றிசை மருங்கினோர் செழும்பதி தன்னு
ளிந்திர விழவுகொண் டெடுக்குநா ளிதுவென

இ-ள். வீரன் பங்குனித்திங்கள் இருபத்தொன்பதிற் சித்திரைநாளிலே அ... விழாமுடிதலின், தென்றிசைப்பக்கத்து ஒருவளவியநகரிடத்து இந்திரவிழவிற்கு கால்கொண்டு கொடியெடுக்குநாள் மேலைமாதத்து இந்தச் சித்திரைநாளென சொல்லியென்க.

இதுவெனச் சுட்டினன்; அன்றும் சித்திரையாகலின். ஈண்டுத் திங்களு திதியுங்கூறியது என்னையெனின், கோவலனும் மனைவியும் ஊரினின்றும்போ... திங்களும் திதியும் வாரமும் நாளும் வழிச்செலவும் ஒழிவும், மதுரையிற்சென் புக்கு இவன் இறந்துபட்ட திங்கள்முதலாயுள்ளவற்றோடு மாறுகொள்ளாது மு... தற்கெனக்கொள்க. அது யாண்டுமோவெனின், வேனிற்காதையினும் நாடுகா... காதையினும் காடுகாண்காதை கட்டுரைகாதையென்னும் இவற்றுள்ளுமெ... கொள்க.

௭-௧௩. கடுவிசை யவுணர் கணங்கொண் டீண்டிக்
கொடுவரி யூக்கத்துக் கோநகர் காத்த
தொடுகழன் மன்னற்குத் தொலைந்தன ராகி
நெஞ்சிருள் கூர நிகர்த்துமேல் விட்ட

வஞ்சம் பெயர்த்த மாபெரும் பூதந்
திருந்துவே லண்ணற்குத் தேவ னேவ
விருந்துபலி யுண்ணு மிடனுங் காண்கும்

இ - ள். மிக்கவேகத்தினையுடைய அசுரர் கூட்டமாகவந்துநெருங்கி, இந்திரனது நகரைக்காத்த புலிபோலும் வலியையுடைய முசுகுந்தனுக்குத் தோற்றுப் பின்பு தம்மில் ஒத்துக்கூடி அம்முசுகுந்தனது நெஞ்சமும் இருள்கூரும்படி பிரயோகித்த அத்திரத்தைத்தப்போக்கிய பெரிய பூதத்தை அவ்வண்ணல்பொருட்டு இந்திரனேவப் போந்து அப்புகாரிலிருந்து அது பலியுண்ணும் நாளங்காடியிடமுங் காண்பமென்றாலென்க.

இதனை, "முந்நா ளிந்திரன் ...., காவ லொழித்துச் சேவல்கொண் டெழுந்த, வேட்கை யமுத மீட்க வெழுவோ, ரிந்நகர் காப்போர் யாரென நினைதலு, நேரிய னெழுந்து நீவரு காறுந், தார்கெழு மார்ப தாங்கல் கடனென, வுவந் தனன் கேட்டுப் புகழ்ந்தவிப் பூத, நின்வழி யாகென நிறீஇப் பெயர்வுழிக், கடுவிசை யவுணர் கணங்கொண் டீண்டிப், பொருதுபோர் தொலைந்தன ராகிப் பெரிதழிந், தாழ்ந்த நெஞ்சிற் சூழ்ந்தனர் நினைத்து, வஞ்ச மன்றிது வஞ்சத் தல்லது, வேறலரி தெனத் தேறினர் தேறி, வளைத்துத் தொடுத்த வல்வா யம்பி, னயின்முகங் கான்ற வாரிருள் வெயிலோ, ரிருகணும் புதையப் பாய்தலி னொருகணு, நெஞ்சங் காணு நிற்ப நின்ற, வஞ்சம் பெயர்த்த மாபெரும் பூதம்" என்பதனானுமுணர்க. என்சொல்லியவாறோவெனின், ஆங்ஙனம்விட்ட அம்பு கண்ணையும் மனத்தையும் புதைத்தலாற் போர்த்தொழிலொழிந்துநின்ற முசுகுந்தற்கு அவ்விருளுடைதற்குக் காரணமாயதோர் மந்திரத்தையருள அதனான் வஞ்சங்கடிந்து அவுணரைக் கொன்று குவித்து நின்றானைக்கண்ட இந்திரன், அவனை எங்ஙனம் கொன்றுகுவித்தாயென் றற்கு அவன் இப்பூதத்தினசெயலெனக் கேட்ட விந்திரன், அப்பூதத்தை அவன் பொருட்டு மெய்காவலாக ஏவுதலின் ஆங்குநின்றும்போந்து ஈங்குப் புகாரினு ளிருந்து பலியுண்ணும் நாளங்காடியிடமும் காண்பேமென்பதாம். ஏவப் போந் தென ஒருசொல் வருவிக்க. கொடுவரி - புலி. ஊக்கம் - வலி. சோநகர் - அமராவதி. மன்னன் - முசுகுந்தன். நெஞ்சிருள்கூர - உள்ளக்கண்ணையும் அவ்விருள் மறைப்ப; சிறப்பும்மை தொக்கது. நிகர்த்து தம்மிலொத்துக்கூடி. வஞ்சம் - தாமதாத்திரம்; ஆவது அந்தகாரத்தைப் பண்ணுவதோரம்பு. பெயர்த்த - போக்கின. பூதம் - பூதத்தை. அண்ணற்கு - அண்ணல்பொருட்டு. தேவன் - இந்திரன். தேவர் பாடமாயின் ஒருவரைக்கூறும் பன்மைக்கிளவியென்க. காண்கும் - உளப்பாட்டுத் தன்மை; உம் ககரமூர்ந்துவந்தது.

கணங்கொண்டு ஈண்டித் தொலைந்தனராகி நிகர்த்து விட்ட வஞ்சமென்க.

௧௪-௧௭. அமரா வதிகாத் தமரனிற் பெற்றுத்
தமரிற் றந்து தகைசால் சிறப்பிற்
பொய்வகை யின்றிப் பூமியிற் புணர்த்த
ஐவகை மன்றத் தமைதியுங் காண்குதும்

இ - ள். முன் அசுரரால்வந்த இடர்நீங்க அமராவதியைக்காக்கலான் அவ் விந்திரனாற்பெற்று இவன்மரபிலுள்ளாராலே கொண்டுவந்து பொய்க்கும்பகுதி

யின்றிப் பூமியிலே நிலைபெறவைத்த அழகுமிக்க சிறப்பினையுடைய ஐந்துவகைப் பட்ட மன்றங்களின்பெருமையையும் காண்பேமென்றானென்க.

அமரனில் - அமரனாலே. தமர் - முசுகுந்தன்முன்னோர். அன்றிக் கரிகாலன் மரபிலுள்ளாரெனினுமமையும். பொய்வகையின்றி - இம்மன்றிற்கு ஆண்டுள்ள செய்கை ஈண்டும் பொய்த்தலின்றி. புணர்த்த - அங்ஙனங்கொடுத்த இந்திரன்கால மன்றிப் பின்னுள்ளகாலங்களும் புணரும்படிசெய்த. ஐவகைமன்றம் - முன்னர் இந்திரவிழவூரெடுத்தகாதையிற்கூறிய மன்றங்கள். அமைதி - பெருமை.

கஅ-உகு. நாரதன் வீணை நயந்தெரி பாடலுந்
தோரிய மடந்தை வாரம பாடலு
மாயிரங் கண்ணோன் செவியக நிறைய
நாடக முருப்பசி நல்கா ளாகி
மங்கல மிழப்ப வீணை மண்மிசைத்
தங்குக விவளெனச் சாபம் பெற்ற
மங்கை மாதவி வழிமுதற் றோன்றிய
வங்கர வல்கு லாடலுங் காண்குதும்

இ - ள். யாழாசிரியனாகிய நாரதமுனிவன் யாழின் ஏழிசையின்பமும் தெரியப் பாடும் பாடலையும், தோரியமடந்தை வாரம்பாடலையும், நாடகத்தினையும் உருப்பசி இந்திரனுடைய செவியாரப்பாடிக் கண்ணார ஆடுதலும் விரும்பாளாதலான் 'வீணை மங்கலமிழக்க' 'மண்மிசைத்தங்குக'; இவள் மண்ணிற்போய்ப்பிறக்கவெனச்சாபமீ தலின், அதனைப் பெற்றுவந்துபிறந்த மங்கையாகிய மாதவிவழியிற்றோன்றிய அரவ போலும் அல்குலையுடைய மாதவியுடைய ஆடலையும் அவ்விடத்துக் காண்பே மென்றானென்க.

தோரியமடந்தையென்பாள் - ஆடிமுதிர்ந்தாற் பின்பு ஆடன்மகளிர்காலிற் ஒற்றறுத்துப்பாடுமவள்; என்னை? "இந்நெறி வகையா லிடத்துண் சேர்வோ டொன்னெறி மரபிற் றோரிய மகளே" எனவும், "தலைக்கோ லரிவை குண தொடு பொருந்தி, நலத்தகு பாடலு மாடலு மிக்கோள், சொலப்படு கோதை தோரிய மகளே" எனவும் கூறியவாற்றானறிக. வாரம் - ஒரொற்றுவாரமு ஈரொற்றுவாரமுமென்னுஞ் செய்யுள். அவை தாளத்து ஒருமாத்திரையும் இரண் மாத்திரையும் பெற்றுவரும் உருப்பசியின் சாபவரலாறு என்னையோவெனின் *"வயந்த மாமலை நயந்த முனிவர், னெய்திய வவையி னிமையவர் வணங்க, விரு விந்திரன் றிருந்திழை யுருப்பசி, யாட னிகழ்க பாடலோ டங்கென, †வோவிய சேனன் மேவினனெழுந்து, கோலமுங் கோப்பு நூலொடு புணர்ந்த, வினை நடமு மிசையத் திருத்திக், கரந்துவர லெழினியொடு புகுந்தவன் பாடலிற், பெ முக வெழினியிற் புறந்திகழ் தோற்றம், யாவரும் விழையும் பாவனை யாக னயந்த காதற் சயந்தன் முகத்தி, னோக்கெதிர் நோக்கிய பூக்கமழ் கோதை, நா வேட்கையி னுடனெகிழப், பாடன் முதலிய பல்வகைக் கருவிக, ளெல்லா னெ

---

* வயந்தமாமலை - பொதியின்மலை; வயந்தம் - தென்றல்.

† ஓவியச்சேனன் - சித்திரசேனனென்னுங் கந்தருவன்.

தலி னெல்லா முனிவர, னொருதலை யின்றி யிருவர் நெஞ்சினுங், காமக் குறிப்புக் கண்டனன் வெகுண்டு, சுந்தர மணிமுடி யிந்திரன் மகனை, மாணா விறலோய் வேணு வாகென, விட்ட சாபம் பட்ட சயந்தன், சாப விடையரு ளுவத்தோய் நீயென, மேவினன் பணிந்து மேதக வுரைப்ப, வோடிய சாபத் துருப்பசி தலைக் கட்டுங், காலக் கழையு நீயே யாகி, மலயமால் வரையின் வந்துகண் ணுற்றுத், தலையரங் கேறிச் சார்தி யென்றவன், கலக நாரதன் கைக்கொள் வீணை, யலகி லம்பண மாகெனச் சபித்துத், தந்திரி யுவப்பத் தந்திரி நாரிற், பண்ணிய வீணை மண்மிசைப் பாடி, யீண்டு வருகெனப் பூண்ட சாப, மிட்டவக் குறுமுனி யாங்கே, விட்டன னென்ப வேந்தவை யகத்தென" என்பதனானறிக. இதனாற்சொல்லியது: நாரதன் கலகப்பிரியனாதலால் தனது யாழைப் பகைநரம்புபட இசைத்தலில் தான் இங்ஙனமிசைத்தற்குக் காரணமின்றாகவும் இவள் கலங்கினமை தான் நமக்கறி வித்து நம்மால் இவளை முனிவிப்பான்வேண்டி நம்மை மதியானாயினானென அவ னொடும் சாபமிடுகின்றவன் வீணை மங்கலமிழக்க மண்மிசைத்தங்குக; இவள் மண்ணிற்போய்ப் பிறக்கவெனச் சாபம் இட்டானென்பது. வீணை மண்மிசைத் தங்குகவெனவே இவனை நீங்காவரத்தின் வந்ததாகலான் இவனும் மண்மிசைத் தங்குகவென்பதாயிற்று; எனவே இவன் மண்ணிற் பிறவானாதலுணர்க. இவ் வீணையை உருப்பசிகையில் வீணையென்பாருமுளர், அது பொருத்தமின்று. அங் ஙனம் இவள் மண்மிசைப்பிறக்கவெனச் சபித்தலின் அதனைப் பெற்று வந்துபிறந்த மங்கையாகிய மாதவிவழிப்பெயராய் அவ்வழியிற்றோன்றிய அரவுபோலு மல்குலை யுடைய மாதவியுடைய ஆடலையும் அவ்விடத்துக் காண்பேமென்றானென்க. ஈண்டுச் சயந்தன் சாபமும் விடையுங் கூறாதது, அரங்கேற்றுகாதைக்கண் *"இந்திர சிறுவனொடு, தலைக்கோற் றானத்துச் சாப நீங்கிய" என்றாராகலினெனக்கொள்க. இனி வீணையைச் சீரவீணையாக்கி மங்கலமிழப்ப என்பதற்கு இவள் இக்கடவுள் யாக்கையொழிந்து மக்கள்யாக்கையில் தங்குகவெனச் சபித்தானென்பதுங்கொ ள்க. இனி உருப்பசிக்குச் சயந்தன்மேற்சென்ற காதன்மை புதல்வர்மேற்செல்லும் கண்ணோட்டமென்பார்க்கு அங்ஙனம் புதல்வரைநோக்கி மகிழ்வார்க்கு அன்பு சிற த்தலொழிந்து நிலைகலங்கி ஆடல் பாடல் நெகிழ்தலும் மூன்றுகாலமுமுண ர்ந்த முனிவன் அதனை அறியாது சபித்தானென்றலும் பொருந்தாமையின் அங்ங னமுரைத்தல் குற்றமென்க. மண்மிசைத்தங்குகவென்றதை வீணைக்குமேற்றுக.

௨௫ - ௨௭. துவரிதழ்ச் செவ்வாய்த் துடியிடை யோயே
யமரர் தலைவனை வணங்குதும் யாமென

இ - ள். வடசேடியிற் பொழிற்கண் கடவுட்குக்காரிகையோடு விருந்தாட்டம ரும் வீரன், இதுவெனக்கூறி, இடனுங்காண்கும், அமைதியுங்காண்குதும்; ஆட லுங்காண்குதுமாதலால் துடியிடையாய், யாமும் தலைவனை வணங்குவேம் வருவா யாகவெனச் சொன்ன அப்பொழுதேயென்க.

துவர் - செம்மைநிறம். ஓய் - †"ஆயென் கிளவியு மவற்றொடு கொள்ளும்" என்பதனான் முடிந்ததாம். ஏகாரம் இசைநிறை. யாமுமென்னுமும்மை தொக்

* அரங்கேற்றுகாதை, ௨ - ௩.

† தொல்காப்பியம், சொல்லதிகாரம், வினையியல், ௧௫.

கது. இனி எனவென்பதனை *"எனவெ னெச்சம் வினையொடு முடிமே" என்பதனுன் என்றுசொல்லிப் போந்தெனச் சொல்லெச்சமாக்கி முடிப்பினுமமையும்.

உஅ - ருச. சிமயத் திமயமுஞ் செழுநீர்க் கங்கையு
முஞ்சையம் பதியும் விந்தத் தடவியும
வேங்கட மலையுந் தாங்கா விளையுட்
காவிரி நாடுங் காட்டிப் பின்னாப
பூவிரி படப்பைப் புகார்மருங் கெய்திச்
சொல்லிய முறைமையிற் றொழுதனன் காட்டி
மல்லன் மூதூர் மகிழ்விழாக காணபோன்

இ - ள். அவன், கொடுமுடியையுடைய இமயமலையையும் வளவிய நீரையுடைய கங்கையாற்றினையும் அவந்தியென்னும் பதியினையும் விந்தமலைசூழ்ந்த அடவியினையும் வேங்கடமென்னுமலையினையும் நிலம்பொறுத விளையுளினையுடைய காவிரிநாட்டினையும் தன்காதலிக்கு இஃது இன்னது இன்னதென்றுகாட்டி ஆண்டாண்டுள்ள பயனுகர்தற்கு வேண்டுநாட்டங்கிப் பின்பு சிலநாளிற் படப்பையையுடைய புகாரென்னு நகரிடத்தேவந்து முன்புசொன்ன முறைமையால் இடனும் அமைதியும் இவையென்று தொழுதனனாய்த் தன்காதலிக்குக் காட்டி வளவிய தேவருமகிழும் மூதூர்க்கண் நடக்கின்ற விழவைத் தானும் காண்கின்றவனென்க.

சிமயம் - உச்சி. அடவி - காடு. தாங்காவிளையுள் - நிலம்பொறுதவிளைத்தல்; †"வேலி யாயிரம் விளையுட் டாக" என்றுராகலின். விளைத்தலென்பது விளையுளென மருவிற்று. புலிப்‡பாய்த்துள், தேரைப்பாய்த்துளென்பதுபோல. படப்பை - தோட்டக்கூறு. புகார் - ஆகுபெயர். மணிவிழாப் பாடமாயின், அழகிய விழாவென்க. காண்போன் - தொழிற்பெயர்.

ருரு. மாயோன் பாணியும—இ - ள். திருமாலைப்பரவுந்தேவபாணியும்,

இனிப் பதினோராடல் கூறுவான் எடுத்துக் கொண்டார்; அவற்றுள், கொடுகொட்டியென்பது இத்தன்மைத்தென்கின்றது.

மாயோன் - திருமால். பாணி - தேவபாணி. பாணியென்பது பாட்டு. அது தேவர்ப்பராவுதலாயிற்று; என்னை §"ஏனை யொன்றே, தேவர்ப் பராவுதன் முனனிலைக் கண்ணே" என்றுராகலின். அது முத்தமிழ்க்கும் பொது அஃது இயற்றமிழின்வருங்காற் கொச்சகவொருபோகாய் வரும். வரும்வழியும் பெருந்தேவபாணி, சிறுதேவபாணியென இருவகைத்தாய் வரும். என்னை? "கூறிய வுறுப்பிற் குறைபா டின்றித், தேறிய விரண்டு தேவ பாணியும்" என்றுராகலின். அங்ஙனம் "வருந் தரவினை நிலையெனவடக்கி முகத்திற்பின்தரவினை முகநிலையெனவும், இடைநிற்பனவற்றை இடைநிலையெனவும், இறுதியினிற்பனவற்றை முரிநிலையெனவும் பரவுதற்பொருண்மையாற் பெயர்கொடுத்தார் செய்யுளியலின்கணணுமெனக

* தொல்காப்பியம், சொல்லதிகாரம், எச்சவியல், சஉ.
† பத்துப்பாட்டு, பொருநராற்றுப்படை, உசசு - உசஎ.
‡ பாய்த்துள் - பாய்தல்.
§ தொல்காப்பியம், பொருளதிகாரம், செய்யுளியல், கஙஅ.

கொள்க. இனி இசைத்தமிழின்வருங்கால் முகநிலை கொச்சகம் முரியென்ப ஒருசாராசிரியர். அன்றி இசைப்பா, இசையளவுப்பாவென்னும் இருபகுதியுள் இஃது இசைப்பாவின் பகுதியென்ப. அது பத்துவகைப்படும்: செந்துறை, வெண்டுறை, பெருந்தேவபாணி, சிறுதேவபாணி, முத்தகம், பெருவண்ணம், ஆற்றுவரி, கானல்வரி, விரிமுரண், தலைபோகுமண்டிலமெனவரும். என்னை? "செந்துறை வெண்டுறை தேவபா ணியிரண்டும், வந்தன முத்தகமே வண்ணமே - கந்தருவத், தாற்றுவரி கானல் விரிமுரண் மண்டிலமாத், தோற்று மிசையிசைப்பாச் சுட்டு" என்றார் இசைநுணுக்கமுடைய சிகண்டியாரென்க. இன்னும் சுத்தம் சாளகம் தமிழென்னும் சாதியோசைகள் மூன்றினுடனும் கிரியைகளுடனும் பொருந்தும் இசைப்பாக்கள் ஒன்பதுவகையென்ப. அவை சிந்து, திரிபதை, சவலை, சமபாத விருத்தம், செந்துறை, வெண்டுறை, பெருந்தேவபாணி, சிறுதேவபாணி, வண்ணமெனவிவை. என்னை "செப்பரிய சிந்து திரிபதை சீர்ச்சவலை, தப்பொன்றுமிலலாச் சமபாத மெய்ப்படியுஞ், செந்துறை வெண்டுறை தேவபாணி வண்ணமென்ப, பைந்தொடியா யின்னிசையின் பா" என்றார் பஞ்சமரபுடைய அறிவனாரென்னுமாசிரியரென்க. இனி நாடகத்தமிழில் தேவபாணிவருங்காற் பெருந்தேவபாணி பலதேவரையும் சிறுதேவபாணி வருணப்பூதரையும் மூவடிமுக்கால் வெண்பாவால் துதிக்கின்றுழி அவரணியும் தாரும் ஆடையும் நிறனும் கொடியுந் துதித்து அவராற் பெறவேண்டுவனவுந் துதிக்கப்படும் என்னை? "திருவளரரங்கிற் சென்றினி தேறிப், பரவுந் தேவரைப் பரவுங் காலை, மணிதிகழ் நெடுமுடி மாணிபத் திரனை, மணிதிகழ் பளிங்கி னொளியினை யென்றுங், கருந்தா துடுத்த கடவுளை யென்று, மிரும்பனைத் தனிக்கொடி யேந்தினை யென்றுங், கொடுவாய் நாஞ்சிற் படையோ யென்றுங், கடிமலர் பிணைந்த கண்ணியை யென்றுஞ், சேவடி போற்றிச் சிலபல வாயினு, மூவடி முக்கால் வெள்ளையி.ற் மொழிப" என்றார் மதிவாணனாரென்க. இவை ஈண்டுரைப்பிற் பெருகும். பிறவும் வந்தவழிக் காண்க. இனி முற்கூறிய பதினோராடற்கும் முகநிலையாகிய தேவபாணி மாயோன்பாணி. அது வருமாறு: "மலர்மிசைத் திருவினை வலத்தினி லமைத்தவன், மறிதிரைக் கடலினை மதித்திட வடைத்தவ, னிலகொளிச் சுடவரை கரத்தினி லெடுத்தவ, னினநிரைத் தொகைகளை யிசைத்தலி லழைத்தவன், முலையுணத் தருமவ னுலைத்தினை முடித்தவன், முடிகள்பத் துடையவ னுரத்தினை யறுத்தவ, னுலகினைத் தையுமொரு பதத்தினி லொடுக்கின, னொளிமலர்க் கழறரு வுதற்கினி யழைத்துமே" இஃது எண்சீரான்வந்த கொச்சகவொருபோகு. பண் - கௌசிகம். தாளம் - இரண்டொத்துடைத் தடாரம். சிறுதேவபாணி ஈண்டுக்கூறிற்றிலரெனினும் இனம்பட்டுவருதலிற் கூறல்வேண்டுவதாயிற்று. அது வருமாறு: வண்ணமலர்ச் சரங்கோத்து மதனவேண் மிகவெய்யக், கண்ணனவோர் புலம்பல்லாக் கனல்விழியா லெரித்தனையா, லெண்ணிறந்த தேவர்களு மிருடிகளு மெழுந்தோட, வொண்ணுதலாள் பாகங்கொண் டொருதனியே யிருந்தனையே" என்பது. இதனுள் இறைவனை முற்கூறாது மாயோனை முற்கூறியதென்னையோவெனின், மாயோன் காவற்கடவுளாய் அருளை அருத்தலானென்க.

௫௫ - ௫௬. வருணப் பூதர், நால்வகைப் பாணியும்

இ - ள். வருணப்பூதர் நால்வரையும்பரவும் நால்வகைத் தேவபாணியுமென்றவாறு.

அவை வருமாறு: "அந்தணர் வேள்வியோ டருமறை முற்றுக, வேந்தன் வேள்வியோ டியாண்டுபல வாழ்க, வாணிக ரிருநெறி நீணிதி தழைக்க, பதினெண் கூலமு முழவர்க்கு மிகுக, வரங்கியற் கூத்து நிரம்பிவினை முடிக, வாழ்க நெடுமுடி கூர்கவென் வாய்ச்சொலென், றிப்படிப் பலிகொடுத் திறைவனிற் றெருக்குச், செப்பட வமைத்துச் செழும்புகை காட்டிச், சேவடி தேவனை யேத்திப் பூதனை, மூவடி முக்கால் வெண்பா மொழிந்து, செவியிழுக் குறுமை வேந்தனை யேத்திக், கலி யொழுக் கத்து நின்றுழி வேந்தன், கொடுப்பன கொடுப்ப வடுக்கு மென்ப" என்றார் மதிவாணனாரென்க.

௩௬ - ௩௭. நலம்பெறு கொள்கை
வானூர் மதியமும் பாடிப் பின்னர்

இ - ள். பல்லுயிர்களும் தன்கலையால் நன்மைபெறுந் தன்மையையுடைய வானின் ஊர்ந்துசெல்லும் மதியமும்பாடியென்க.

எனவே சந்திரனைப்பாடும் தேவபாணியென்பதாயிற்று. ஆதித்தனை முற்கூறா தது இறைவனை முற்கூறியவாற்றாற் கொள்க. இதற்குச் செய்யுள்: "குறைகடல் மதிக்கு மதலையை குறுமுய லொளிக்கு மரணினை, யிரவிரு ளகற்று நிலவினை, யிறையவன் முடித்த வணியினை, கரியவன் மனத்தி னுதித்தனை, கயிரவ மலர்த்து மவுணனை, பரவுநர் தமக்கு நினதிரு பதமலர் தபுக்க வினையையே" எனவரும். பண்ணும் தாளமும் முற்கூறியன.

௩௮. சீரியல் பொலிய நீரல நீங்க

இ - ள். அவதாளநீங்கத் தாளவியல்பு பொலிவுபெறவென்றவாறு.

இதனை நீரலநீங்கச் சீரியல் பொலியவென மாறுக. அன்றி அவதாளநீங்குத லால் தாளவியல்பு பொலிவுபெறாநிற்கவெனவுமாம். இவற்றை மேல் மாதவிக் கடையாக்கி முடிக்க.

௩௯ - ௪௩. பாரதி யாடிய பாரதி யரங்கத்துத்
திரிபுர மெரியத் தேவர் வேண்ட
வெரிமுகப் பேரம் பேவல் கேட்ப
வுமையவ ளொருதிற னாக வோங்கிய
விமையவ னாடிய கொடுகொட்டி யாடலும

பாரதி - பைரவி. அவளரங்கம் சுடுகாடு; அவளாடுதலாற் பெற்றபெயர்.

இ - ள். தேவர் புரமெரியவேண்டுதலால் வடவையெரியைத் தலையிலேயுடைய பெரியவம்பு ஏவல்கேட்டவளவிலே அப் புரத்தில் அவுணர் வெந்துவீழ்ந்த வெண் பலிக்குவையாகிய பாரதியரங்கத்திலே உமையவள் ஒருகூற்றினளாய் நின்று பாணி தூக்குச் சீரென்னும் தாளங்களைச் செலுத்தத் தேவர்யாவரினுமுயர்ந்த இறைவன் சயானந்தத்தாற் கைகொட்டிநின்று ஆடிய கொடுகொட்டியென்னுமாடலும்.

முகம் - தலை. பேரம்பு - பரமபுருடன். ஏவல்கேட்ப - சுட்டவளவிலே. திரி புரம் தீமடுத்தெரியக்கண்டு இரங்காது கைகொட்டிநின்று ஆடுதலிற் கொடுமை யுடைத்தாதனோக்கிக் *கொடுகொட்டியென்று பெயர்கூறினார்.

---

* கொடுங்கொட்டி-கொடுகொட்டியென விகாரமாயிற்றென்பர் நச்சினார்க்கினியர்

இப் பதினோராடலும் இருவகைப்படும் : "அல்லியங் கொட்டி குடைகுடம் பாண்டரங்க, மல்லுட னின்றாட லாறு" "துடி கடையம் பேடு மரக்காலே பாவை, வடிவுடன் வீழ்ந்தாட லைந்து" என்பவாகலின். "கொட்டி கொடுவிடையோ னாடிற் றதற்குறுப், பொட்டிய நான்கா மெனல்."

௪௪ - ௪௫. தேர்மு னின்ற திசைமுகன் காணப்
பாரதி யாடிய வியன்பாண் டரங்கமும்

இ - ள். வானோராகிய தேரில் நான்மறைக் கடும்பரிபூட்டி நெடும்புறமறைத்து வார்துகின்முடித்துக், கூர்முட்பிடித்துத் தேர்முனின்ற திசைமுகன் காணும்படி பாரதிவடிவாய இறைவன் வெண்ணீறணிந்தாடிய பாண்டரங்கக்கூத்தும்,

நின்று பாடமாயிற் காண நின்றாடியவென்க. "பாண்டரங்க முக்கணா னாடிற் றதற்குறுப், பாய்ந்தன வாறு மெனல்."

௪௬ - ௪௮. கஞ்சன் வஞ்சங் கடத்தற் காக
வஞ்சன வண்ண னாடிய வாடலு
ளல்லியத் தொகுதியும்

இ - ள். அஞ்சனவண்ணன் ஆடியவாடல்பத்துள், கஞ்சன்வஞ்சத்தின் வந்த யானையின்கோட்டை ஒசித்தற்கு நின்றாடிய அல்லியத்தொகுதியென்னுங்கூத்தும்,

தொகுதியென்றார், முகம் மார்பு கை கால்களின் வட்டணை அவிநயமுதலியன விருந்தும் தொழில்செய்யாதுநிற்றலின். "ஆட வின்றி நிற்பவை யெல்லா, மாயோ னாடும் வைணவ நிலையே" என்றார் ; அல்லியமென்பதனை அவிப்பேடென்பாரு முளர். "அல்லிய மாயவ னாடிற் றதற்குறுப்புச், சொல்லுப வாறு மெனல்."

௪௮ - ௪௯. அவுணற் கடந்த, மல்லி னாடலும்

இ - ள். வாணனாகிய அவுணனை வேறற்கு மல்லனாய்ச் சேர்ந்தாரிற்சென்று அறைகூவி உடற்கரித்தெழுந்து அவனைச் சேர்ந்தவளவிலே சடங்காகப்பிடித்து உயிர்போகநெரித்துத் தொலைத்த மல்லாடலும்,

அவுணற்கடந்த - அவுணனெண்ணத்தைக் கடந்த. "நெடியவ னாடிற்று மல் லாடன் மல்லிற், கொடியா வுறுப்போரைந் தாம்."

௪௯ - ௫௧. மாக்கட னடுவண்
னீர்த்திரை யரங்கத்து நிகர்த்துமுன் னின்ற
சூர்த்திறங் கடந்தோ னாடிய துடியும்

இ - ள். கரிய கடலினடுவுநின்ற சூரனது வேற்றுருவாகிய வஞ்சத்தையறிந்து அவன்போரைக்கடந்த முருகன் அக்கடனடுவண் திரையே அரங்கமாகநின்று துடி கொட்டியாடிய துடிக்கூத்தும்,

நிகர்த்து - நேரொத்து. "துடியாடல் வேன்முருக னாட லதனுக், கொடியா வுறுப்போரைந் தாம்.

௫௨ - ௫௩. படைவீழ்த் தவுணர் பையுளெய்தக்
குடைவீழ்த் தவர்முன் னாடிய குடையும

இ - ள். அவுணர் தாம் போர்செய்தற்கெடுத்த படைக்கலங்களைப் போரிற் காற்றாது போகட்டு வருத்தமுற்றவளவிலே முற்கூறியமுருகன் தன்குடையை முன்னேசாய்த்து அதுவே ஒருமுகவெழினியாக நின்றாடிய குடைக்கூத்தும்,

வையுமொய்த ஆடியவெனவியையும். "அறுமுகத்தோ னாடல் குடைமற் றத ற்குப், பெறுமுறுப்பு நான்கா மெனல்."

ருச - ருரு. வாணன் பேரூர் மறுகிடை, நடந்து
நீணில மளந்தோ னாடிய குடமும்

இ - ள். காமன்மகன் அநிருத்தனைத் தன்மகள் உழைகாரணமாக வாணன், சிறைவைத்தலின், அவனுடைய சோவென்னும் நகரவீதியிற்சென்று நிலங்கடந்த நீனிறவண்ணன் குடங்கொண்டாடிய குடக்கூத்தும்,

பஞ்சலோகங்களாலும் மண்ணாலும் குடங்கொண்டாடினது. "குடத்தாடல் குன்றெடுத்தோ னாட லதனுக், குடைக்குப வைந்தாறுப் பாய்ந்து" இது விநோதக் கூத்து ஆறினுளொன்றென்றுணர்க ; என்னை ? "பரவிய சாந்தி யனறியும் பரதம், விரவிய விநோதம் விரிக்குங் காலைக், குரவை கலிநடங் குடக்கூத் தொன்றிய, கரண நோக்குத் தோற்பா வைக்கூத், தென்றிவை யாறு நகைத்திறச் சுவையும், வென்றியும் விநோதக் கூத்தென விசைப்ப" என்றாராகலின்.

ருசா - ருஎ. ஆண்மை திரிந்த பெண்மைக் கோலத்துக்
காம னாடிய பேடி யாடலும்

இ - ள். ஆண்மைத்தன்மையிற்றிரிந்த பெண்மைக்கோலத்தோடு காமனாடிய பேடென்னுமாடலும்,

ஆண்மைத்தன்மையிற் றிரிதலாவது விகாரமும் வீரியமும் நகரும்பெற்றியும் பத்தியும் பிறவுமின்றாதல். ஆண்மை திரிந்தவென்பதனால் தாடியும் பெண்மைக் கோலத்தென்பதனால் முலைமுதலிய பெண்ணுறுப்புப் பலவுமுடையது ஆண்பே டென்று பெயர்பெறுமெனக்கொள்க. என்னை ? *"சுரியற் றாடி மருள்படு பூங் குழற், பவளச் செவ்வாய்த் தவள வொண்ணகை, யொள்ளரி நெடுங்கண் வெள்ளி வெண் டோட்டுக், கருங்கொடிப் புருவத்து மருங்குவளை பிறைநுதற், காந்தளஞ் செங்கை யேந்திள வனமுலை, யகன்ற வல்கு லந்நுண் மருங்கு, லிகந்த வட்டுடை யெழுதுவரிக் கோலத்து, வாணன் பேரூர் மறுகிடை நடந்து, நீணில மளந்தோன் மகன்முன் னாடிய, பேடிக் கோலத்துப் பேடுகாண் குநரும்" என்றாராகலின். இது தனதுமகன் அநிருத்தனைச் சிறைமீட்டுக் காமன் சோநகரத்தாடியது. "காமன தாடல்பே டாட லதற்குறுப்பு, வாய்மையி னாராயி னைந்து."

ருஅ - ருகூ. காய்சின வவுணர் கடுந்தொழில் பொறாஅள்
மாயவ ளாடிய மரக்கா லாடலும்

இ - ள். காயுஞ்சினத்தையுடைய அவுணர் வஞ்சத்தாற்செய்யும் கொடுந்தொழி லைப் பொறாளாய் மாயோளால் ஆடப்பட்ட மரக்காலென்னும் பெயரையுடைய ஆடலும்,

---

* மணிமேகலை, மூன்றாவது மலர்வனம்புகுகாதை.

மாயவள் - துர்க்கை. அவுணர் உண்மைப்போரான் வேறலாற்றாது வஞ்சத்தான் வேறல்கருதிப் பாம்பு தேள் முதலியவாய்ப் புகுதலையுணர்ந்து அவள் அவற்றை உழக்கிக் களைதற்கு மரக்கால்கொண்டு ஆடுதலின், மரக்காலாடலாயிற்று. "மாயவளாடன் மரக்கா லதற்குறுப்பு, நாமவகை யிற்சொலுங்கா ணன்கு."

௬௦ - ௬௧. செருவெங் கோல மவுணர் நீங்கத்
திருவின் செய்யோ ளாடிய பாவையும்

இ - ள். அவுணர் வெவ்விய போர்செய்தற்குச் சமைந்த போர்க்கோலத்தோடு மோகித்துவீழும்படி கொல்லிப்பாவைவடிவாய்ச் செய்யோளாகிய திருமகளால் ஆடப்பட்ட பாவையென்னுமாடலும்,

கோலநீங்கவென்றார், அதற்கேற்பப் பொராது அஞ்சியுவிதலின். "பாவை திருமக ளாடிற் றதற்குறுப், போவாம லொன்றுடனே யொன்று."

௬௨ - ௬௩. வயலுழை நின்று வடக்கு வாயிலு
ளயிராணி மடந்தை யாடிய கடையமும்

இ - ள். வாணனுடைய முற்கூறிய பெரியநகரின் வடக்குவாயிற்கண் உளதாகிய வயலிடத்தேநின்று அயிராணியென்னுமடந்தை ஆடிய கடையமென்னுமாடலும்,

அயிராணி - இந்திராணி. கடையம் - கடைசிக்கூத்து. "கடைய மயிராணி யாடிற் றதனுக், கடைய வுறுப்புக்க ளாறு."

௬௪ - ௭௧. அவரவ ரணியுட னவரவர் கொள்கையி
னிலையும் படிதமு நீங்கா மரபிற்
பதினோ ராடலும் பாட்டின் பகுதியும்
விதிமாண் கொள்கையின் விளங்கக் காணாய்
தாதவிழ் பூம்பொழி லிருந்தியான் கூறிய
மாதவி மரபின் மாதவி யிவளெனக்
காதலிக் குரைத்துக் கண்டுமகிழ் வெய்திய
மேதகு சிறப்பின் விஞ்சைய னன்றியும்

இ - ள். அங்ஙனங்கூறப்பட்ட அவரவருடைய அணிகளுடன் அவரவருடைய கொள்கையாற் பொருந்தி நின்றாடலும் வீழ்ந்தாடலுமாகிய அவரவரைநீங்காத மரபினையுடைய பதினொருவகைப்பட்ட ஆடலும் அவ்வாடல்கட்கேற்ற பாடல்களின் வேறுபாடும் அவற்றிற்குவிதித்த மாட்சிமைப்பாட்டோடு அவற்றைப் புலப்படக் காண்பாயாக; அன்று கள்ளவிழ்பூம்பொழிற்கண்ணேயிருந்து நின்னோடு யான்கூறப்பட்ட மாதவிமரபின்வந்த மாதவி இவள்காணென்று தன்காதலிக்குச் சொல்லித் தானுங்கண்டு மகிழ்ச்சிமிக்க மேம்பாடுதக்க மரபினையுடைய விஞ்சையனும், அவனன்றியும்,

௭௨ - ௭௩. அந்தரத் துள்ளோ ரறியா மரபின்
வந்துகாண் குறூஉம் வானவன் விழவு

மாடலுங் கோலமு மணியுங் கடைக்கொள
வூடற் கோலமோ டிருந்தோ னுவப்ப

இ - ள். சுவர்க்கத்திலுள்ளாராகிய தேவரெல்லாம் உள்வரி கொண்டுவந்து காணப்படும் இந்திரவிழவும் மாதவியாடலும் அவ்வாடற்குச் சமைந்த கோலமும் ஆடுதலாற்பிறந்தவழகும் முடிதலின், அதனாற்பிறந்த வெறுப்போடிருந்த கோவல னுவக்கும்படி,

அந்தரத்துள்ளோர் - விச்சாதரருமாம். மானிடர் தம்மைக்காண்டல் பொரு மையின் அறியாமரபினென்றார். இனி, இவளாடலும் கோலமும் தனது அறிவு நிறை ஓர்ப்புக் கடைப்பிடிகளைக் கைக்கொண்டுவிடுதலாலே பிறக்கும் இவ் வாறுமென்னும் வெறுப்போடிருந்தானெனினுமமையும். ஊடலோடென்னாது கோலமோடென்றார் மனத்தினிகழ்ந்த ஊடலை முகங்காட்டுதலின்.

எசு - எகூ. பத்துத் துவரினு மைந்து விரையினு
முப்பத் திருவகை யோமா லிகையினு
மூறின நன்னீ ருரைத்தநெய் வாச
நாறிருங் கூந்த னலம்பெற வாட்டி

இ - ள். வாசநெய்யுரைத்த மணங்கமழும் கரிய கூந்தலைப் பத்துவகைப்பட்ட துவரினானும் ஐந்துவகைப்பட்ட விரையினானும் முப்பத்திருவகைத்தாகிய ஓமா லிகையானும் ஊறிக்காயப்பட்ட நன்னீராலே நிறம்பெறவாட்டியென்க.

இருமை - கருமை. பத்துத்துவராவன : "பூவந்தி திரிபலை புணர்கருங் காலி, நாவ லோடு நாற்பான் மரமே." ஐந்துவிரையாவன : "கோட்டந் துருக்கந் தகர மகிலார, மோட்டிய வைந்தும் விரை." முப்பத்திருவகை ஓமாலிகையாவன : "இலவங்கம் பச்சிலை கச்சோல மேலங், குலவிய நாகணங் கோட்ட - நிலவிய, நாக மதாவரிசி தக்கோல நன்னாரி, வேகமில் வெண்கோட்ட மேவுசீர் - போகாத, கத்தூரி வேரி யிலாமிச்சங் கண்டில்வெண்ணெய், யொத்தகடு நெல்லி யுயர்தான்றி - துத்தமொடு, வண்ணக்கச் சோல மரேணுக மாஞ்சியுட, னெண்ணுஞ் சயிலேக மின்புழுகு - கண்ணுநறும், புன்னைநறுந் தாது புலியுகிர் பூஞ்சரளம், பின்னு தமாலம் பெருவகுளம் - பன்னும், பதுமுக நுண்ணேலம் பைங்கொடு வேரி, கதிர்நகையா யோமாலி கை" என்னுமிவையெனக்கொள்க ; என்னை? "ஒரை விரையினு மீரைந் துவரினு, மாறைந்தின் மேலிரண் டோமா லிகையினு, நாறைங் கதுப்பி னுனமு நன்குளைஇ, யூறின நன்னீ ருவந்தன ளாட்டி" என்றாராகலின்.

அ0 - அக. புகையிற் புலர்த்திய பூமென் கூந்தலை
வகைதொறு மான்மதக் கொழுஞ்சே றூட்டி

இ - ள். அங்ஙனமாகியநீராளுட்டிப் பொலிவினையுடைய புகையிற்புலர்த்திய கூந்தலை ஐந்துவகைபெறவகுத்த வகைதோறும் மான்மதத்தின கொழுவிய சேற்றை ஊட்டியென்க.

மான்மதச்சேறு - கத்தூரிக்குழம்பு ; சவாதுமாம்.

அஉ - அங. அலத்தக மூட்டிய வஞ்செஞ் சீறடி
நலத்தகு மெல்விர னல்லணி செறீஇ

இ - ள். செம்பஞ்செழுதிய அழகிய சிவந்த சீறடிக்கேற்ற நலத்தகும் மெல்லிய விரலிடத்தே செறிக்கப்படும் நல்லணிகளைச்செறித்து,

விரலணி - மகரவாய்மோதிரம், பீலி, கான்மோதிரமுதலியன.

அச - அரு. பரியக நூபுரம் பாடகஞ் சதங்கை
யரியகங் காலுக் கமைவுற வணிந்து

இ - ள். பாதசாலமும் சிலம்பும் பாடகமும் சதங்கையும் காற்சரியுமென்னும், இவற்றைக் காலுக்குப் பொருத்தமுறும்படி அணிந்தென்க.

பரியகமாவது "பொன்னிதழ் பொதிந்த பன்னிற மணிவடம், பின்னிய தொடரிற் பெருவிரன் மோதிரந், தன்னொடு தொடக்கித் தமனியச் சிலம்பின், புறவாய் சூழ்ந்து புணரவைப் பதுவே." என்னை? "அவ்வாய் மகரத் தணிகிளர் மோதிரம், பைவாய் பசும்பொற் பரியக நூபுர, மொய்மணி நாவின் முல்லையங் கிண்கிணி, கௌவிய வேனவுங் காலுக் கணிந்தாள்" என்றார்.

அசு. குறங்கு செறிதிரள் குறங்கினிற் செறித்து

இ - ள். குறங்குசெறியென்னும் பணியைத் திரண்ட குறங்கிடத்தே செறித்தென்க.

குறங்குசெறி - கவான் ஆபரணம்.

அஎ - அஅ. பிறங்கிய முத்தரை முப்பத் திருகாழ்
நிறங்கிளர் பூந்துகி னீர்மையி னுடீஇ

இ - ள். பருமுத்தக்கோவை முப்பத்திரண்டாற்செய்த விரிசிகையென்னுங் கலையை நீலநிறங்கிளரும் பூத்தொழிலையுடைய நீலச்சாதருடையின்மீதே உடுத்தென்க.

என்னை? "குறங்கு செறியொடு கொய்யலங் கார, நிறங்கிளர் பூந்துகி னீர்மையி னுடீஇப், பிறங்கிய முத்தரை முப்பத் திருகா, ழறிந்த தமைவர வல்குற் கணிந்தாள்" என்றார்.

அகூ - கூ0. காமர் கண்டிகை தன்னொடு பின்னிய
தூமணித் தோள்வளை தோளுக் கணிந்து

இ - ள். காமஞ்செய்யும் மாணிக்கவளையுடன் நீங்காமற் பொற்றொடரால் பிணித்த முத்தவளையைத் தோளுக்கு அணிந்தென்க.

காமம் - காமரென விகாரம். தூமணி - முத்து. என்னை? "ஆய்மணி கட்டி யமைந்தவிலைச் செய்கைக், காமர் கண்டிகைக் கண்டிரண் முத்திடைக், காமர் பொற் பாசங் கொளுத்திக் கவின்பெற, வேய்மருண் மென்றோள் விளங்க வணிந்தாள்" என்றார்.

கூக - கூச. மத்தக மணியொடு வயிரங் கட்டிய
சித்திரச் சூடகஞ் செம்பொற் கைவளை
பரியகம் வாலவளை பவழப் பல்வளை
யரிமயிர் முன்கைக் கமைவுற வணிந்து

இ - ள். முகப்பிற்கட்டிய மாணிக்கத்தோடே பத்திகளில் வயிரங்களழுத்தப் பட்ட சித்திரத்தொழிலையுடைய சூடகமும் செம்பொன்னாற்செய்த வளையும் நவ ரத்தினவளையும் சங்கவளையும் பவழவளைகளும் என்னுமிவற்றை ஐதான மயிரை யுடைய முன்கைக்குப் பொருத்தமுற அணிந்தென்க.

பரியகம் - சரியுமாம். வால்வளை - வெள்ளிவளையுமாம். பவழப்பல்வளை - கைவடமுமாம். அரியகை முன்கைக்கென்பதூஉம் பாடம். என்னை? "புரை தபு சித்திரப் பொன்வளை போக்கி, வெரியவிர் பொன்மணி யெல்லென் கடகம், பரியகம் வால்வளை பாத்தில் பவழ, மரிமயிர் முன்கைக் கமைய வணிந்தாள்." என்றார்.

கரு - கஅ. வாளைப் பகுவாய் வணக்குறு மோதிரங்
கேழ்கிளர் செங்கேழ் கிளர்மணி மோதிரம்
வாங்குவில் வயிரத்து மரகதத் தாள்செறி
காந்தள் மெல்விரல் கரப்ப வணிந்து

இ - ள். வாளைமீனினது அங்காந்தவாயை வணங்குதலுறுவிக்குநெளியும் சிவ ந்தவொளி உச்சமாகக் கதிராரும் மாணிக்கப்பீடமும் பக்கத்தேவளைந்து நிரையும் ஒளியையுடைய வயிரஞ்சூழ்ந்த மரகதக்கடைசெறியும் பிறவுமாகிய இவற்றைக் காந்தண் மலர்போலும் மெல்லிய விரல்கள் மறையும்படியணிந்து,

பகுவாய்மோதிரமுமாம்; ஒப்பிலாகியபெயர். கேழ்கிளர்மணி, அஃது, எக்கே ழெனிற் செங்கேழ்கிளர் மணியென்க. வாங்குவில் - வளைத்துக்கொள்ளும் ஒளி.

கசுக - க00. சங்கிலி நுண்டொடர் பூண்ஞாண் புனைவினை
யங்கழுத் தகவயி னாரமோ டணிந்து

இ - ள். வீரசங்கிலியும் நேர்ஞ்சங்கிலியும் பூணப்படுஞாணும் என்னுமிவற் றோடு கைபுனையப்பட்ட தொழில்களையுடைய சவடி சரப்பளிமுதலாயுள்ள பிற வற்றையும் அழகிய கழுத்திடத்தே முத்தாரத்தோடணிந்தென்க.

க0க - க0உ. கயிற்கடை யொழுகிய காமர் தூமணி
செயத்தகு கோவையிற் சிறுபுற மறைத்தாங்கு

இ - ள். முற்கூறிய சங்கிலிமுதல் ஆரமீறாயுள்ள அணிகட்கெல்லாம் தலை யொன்றாய்க் கொக்குவாய்ப் படிகண்தொடக்கிய பன்மணிக்கோவையால் தூக்க மாகச் செய்யப்பட்ட பின்றாலியாற் சிறுபுறத்தை மறைத்தென்க.

கயிற்கடை - கொக்குவாய். ஒழுகியகோவையென்க. சிறுபுறம் - பிடர் "சங்கிலி நுண்டொடர் பூண்ஞாண் புனைவினைத், தொங்க லருத்தித் திருந்துங் கட் லணி, தண்கடன் முத்தின் றகையொரு காழெனக், கண்ட பிறவுங் கழுத்துக் கணிந்தாள்" என்றார். ஆங்கு - அசை.

க0௩ - க0ரு. இந்திர நீலத் திடையிடை திரண்ட
சந்திர பாணித் தகைபெறு கடிப்பிணை
யங்காது தகவயி னழகுற வணிந்து

இ - ள். முகப்பிற்கட்டின இந்திரநீலத்திடையிடையே பயிலக்கட்டின வயிரங்களால் அழகுபெற்ற நீலக்குதம்பையை வடிந்த காதினிடத்தே அழகு மிகும்படி அணிந்தென்க.

என்னை ? "நூலவ ராய்ந்து நுவலருங் கைவினைக், கோலங் குயின்ற குணஞ்செய் கடிப்பிணை, மேலவ ராயினு மெச்சும் விறலொடு, காலமை காதிற் கவின்பெறப் பெய்தாள்" என்றார்.

௧௦௬-௧௦௮. தெய்வ வுத்தியொடு செழுநீர் வலம்புரி
தொய்யகம் புல்லகந் தொடர்ந்த தலைக்கணி
மையீ ரோதிக்கு மாண்புற வணிந்து

இ - ள். சீதேவியாரென்னும் பணியுடனே வலம்புரிச்சங்கும் பூரப்பாளையும் தென்பல்லி வடபல்லியென்னுமிவையும் தம்மில் தொடர்ந்து ஒன்றான தலைக்கோலத்தைக் கரிய பெரிய ஓதிக்கு அழகுறும்படியணிந்தென்க.

செழுநீர் - வலம்புரிக்கடை. என்னை ? "கேழ்கிளர் தொய்யகம் வாண்முகப் புல்லகஞ், சூளா மணியொடு பொன்னரி மாலையுந், தாழ்தரு கோதையுந் தாங்கி முடிமிசை, யாழின் கிளவி யரம்பைய ரொத்தாள்" என்றார்.

ஊடற்கோலமோடிருந்தோனுவப்ப ஆட்டி ஊட்டிச் செறீஇ அணிந்து செறித்து உடீஇத் தோளுக்கணிந்து அமைவுறவணிந்து கரப்பவணிந்து ஆரமோடணிந்து சிறுபுறமறைத்து அழகுறவணிந்து மாண்புறவணிந்தென்க.

௧௦௯ - ௧௧௦. கூடலு மூடலுங் கோவலற் களித்துப்
பாடமை சேக்கைப் பள்ளியு ளிருந்தோள்

இ - ள். கூடலையும் பின்னர் ஊடலையும் கோவலற்களித்துப் படுக்கையமைந்த சேரும்பள்ளியிடத்தே இருந்தவளென்க.

பின்னர் ஊடலளித்தலாவது : "எண்ணில்காமமெரிப்பினுமேற்செலாப் பெண்மையும் நாணும் அழிந்துவந்து குறையுற்றுக் கூடுந்துணையும் நீயிர் பிரிவாற்றியிருந்திர் ; அன்பிலீரென ஊடுவது." ஊடலையளித்தல் - அதனானவருந் துன்பத்தையளித்தல்.

௧௧௧ - ௧௧௪. உருகெழு மூதூ ருவவுத் தலைவந்தெனப்
பெருநீர் போகு மிரியன் மாக்களொடு
மடலவிழ் கானற் கடல்விளை யாட்டுக்
காண்டல் விருப்பு வேண்டின ளாகி

இ - ள். விழவிற்குக் கொடியெடுத்தநாண்முதல் நாலேழ்நாளும் விழவுநடந்து பிற்றைஞான்று கொடியிறங்கி விழாவாற்றுப்படுத்த பிற்றைஞான்று உவாத் தலைவந்ததாக மாற்றார்க்கு உட்குதலைப் பொருந்துவிக்கும் மூதூரினின்றும் கடற்கரைக்கண் இடம்பிடிக்க விரைந்துசெல்லுமாக்களோடு தானும் மடலவிழாநின்ற கைதை புன்னைமுதலியவற்றையுடைய கழிக்கானல்பொருந்திய கடல்விளையாட்டைக் காண்டலை விருப்பத்தோடே வேண்டினளாகியென்க.

பெருநீர் - கடல். இரியல் - விரைவு. காண்டல் - நீர்ப்போரில் வெற்றி தோல்விகாண்டல். வேண்டினள் - காண்டற்குத் தானும்போகக் கோவலனை வேண்டிக்கொண்டாள். எனவே அவனும் உடம்பட்டமை உணர்த்திற்று.

கசரு - கஉ0. பொய்கைத் தாமரைப் புள்வாய் புலம்ப
வைகறை யாமம் வாரணங் காட்ட
வெள்ளி விளக்க நள்ளிருள் கடியத்
தாரணி மார்பனொடு பேரணி யணிந்து
வான வண்கைய னத்திரி யேற
மானமர் நோக்கியும் வைய மேறி

இ - ள். அங்ஙனம் வேண்டி அவனும் உடம்பட்டவளவிலே பொய்கைகளில் தாமரைப்பூஞ்சேக்கையில் துயில்கின்ற புட்கள், அச்சேக்கையை நீங்குதலான் வாய் விட்டுப் புலம்பாநிற்ப வைகறைப்பொழுதென்பதனை வாரணங்கள் அறிவிக்க வைகறைக்காலத்துச் செறிந்தவிருளை வெள்ளியவிளக்கம் கடியாநிற்க அக்காலத்தே மதாணிமுதலிய பேரணிகலங்களையணிந்து முகில்போலும் வண்மைகையையுடைய கோவலன் இராசவாகனமாகிய அத்திரியேற அத் தாரணிமார்பனோடு போதற்கு மானின் பார்வைத்தன்மைபொருந்திய நோக்கினையுடையாளும் வையத்தின் ஏறியென்க.

புலம்பக் காட்டக் கடியவென்னும் செயவெனெச்சங்கள் ஏற ஏறியென்னும் வினைகொண்டுமுடிந்தன. வாளாது வாரணமென்றமையால் இருவகைவாரணமுங் கொள்க. அத்திரி - கோவேறுகழுதை. வையம் - *கொல்லாப்பண்டி.

கஉக-கஉஎ. கோடிபல வடுக்கிய கொழுநிதிக் குப்பை
மாடமலி மறுகிற் பீடிகைத் தெருவின்
மலரணி மெழுக்கத்து மணிவிளக் கெடுத்தாங்
கலர்கொடி யறுகு நெல்லொடு வீசி
மங்கலத் தாசியர் தங்கல னொலிப்ப
விருபுடை மருங்கினுந் திரிவனர் பெயருந்
திருமக ளிருக்கை செவ்வனங் கழிந்து

இ - ள். கோடியென்னுமிலக்கத்தைப் பலகோடிமேலடுக்கப்பட்ட வளவிய நிதித்திரளையுடைய மாடங்கண்மலிந்த மறுகினையுடைய பீடிகைத்தெருவின்கண் மலரணிதற்குக் காரணமாகிய மெழுக்கோடே மாணிக்கவிளக்குக்களையுமெடுப்ப அவ்விடத்தே தாசியர் மலரையும் அறுகையும் நெல்லையும் மங்கலமாகச்சிந்தி இரு மருங்கினிடத்தும் தங்கலனொலிப்பத் திரிந்துபெயர்தலைச்செய்யும் திருமகளுக்கிருப்பிடமாகிய அவ்விடத்தை வேறாகக்கழிந்தென்க.

குப்பை - குவியல். மாடம் - சரக்கறைகள். மறுகு - ஏனைத்தெரு. மணி - அழகுமாம். கொடி - அறுகுக்கடை. அலருமென்னுமும்மை தொக்கது. மங்கலம் - அழகுமாம். அங்காடியிற் செல்வமிகுதிகூறுவார் திருமகளிருக்கையென்றார். கழிதற்கருமையிற்கழிந்தென்றார். தாசியர் கலனொலிப்பத் திரிவனர்பெயருமிருக்கை யென்க.

---

* கோவாலவண்டியெனவும் பிரதிபேதமுண்டு.

௧௨௮ - ௧௨௯. மகர வாரி வளந்தந் தோங்கிய
நகர வீதி நடுவட் போகி

இ - ள். கடலினதுவளத்தைக் கொணர்தலான் உயர்ச்சிபெற்ற நகரத்தெருவினூடே போயென்க.

கடல்வளம் - முத்தும் பவளமும் சங்குமுதலியன.

௧௩௦ - ௧௩௩. கலந்தரு திருவிற் புலம்பெயர் மாக்கள்
வேலை வாலுகத்து விரிதிரைப் பரப்பிற்
கூல மறுகிற் கொடியெடுத்து நுவலு
மாலைச் சேரி மருங்குசென் றெய்தி

இ - ள். மரக்கலங்கொடுவந்த திருவினையுடைய தமதுதேசங்களைவிட்டுப்போந்த பரதேசிகள் திரைகளிட்ட வெண்மணலையுடைய அலைவாயிருப்பிற் பலவகைக்கூலமுங் குவித்தமறுகில் இன்னசரக்கு ஈண்டுளதென்று கொடிகளெடுத்துச்சொல்லும ஒழுங்குபட்ட சேரிகளைப்போய் நெய்தலங்கானலையெய்தியென்க.

வாலுகம் - வெண்மணல். வேலை விரிதிரைப்பரப்பின் வாலுகத்தையுடைய மறுகென்க. எடுத்துநுவலும் - எடுத்தலாற்சொல்லுமென்றுமாம்.

௧௩௪ - ௧௩௫. வண்ணமுஞ் சாந்து மலருஞ் சுண்ணமும்
பண்ணிய பகுதியும் பகர்வோர் விளக்கமும்

இ - ள். எழுதுவண்ணமும் சாந்தும் மலரும் சுண்ணமும் பண்ணிகாரவருக்கங்களுமென்னும் இவற்றைவிற்போர்வைத்த விளக்குக்களும்,

௧௩௬. செயவினைக் கம்மியர் கைவினை விளக்கமும்

இ - ள். இணைகத்தாற் செய்யுந்தொழில்களைவல்ல பணித்தட்டார் பணி பண்ணுமிடங்களில்வைத்த விளக்கங்களும்,

௧௩௭. காழியர் மோதகத் தூழுறு விளக்கமும்

இ - ள். பிட்டுவாணிகர் பிட்டுவிற்றற்கு முறைமுறையாகவைத்த விளக்குக்களும்,

மோதகம் - ஈண்டுப் பிட்டு.

௧௩௮. கூவியர் காரகற் குடக்கால் விளக்கமும

இ - ள். காரகலையுடைய அப்பவாணிகர் குடத்தண்டில்வைத்த விளக்குக்களும்,

௧௩௯. நொடைநவின் மகடூஉக் கடைகெழு விளக்கமும்

இ - ள். பலபண்டமும் விற்கும் மிலேச்சமகளிர் தங்கடைகளில்வைத்த விளக்குக்களும்,

௧௪௦. இடையிடை மீன்விலை பகர்வோர் விளக்கமும

இ - ள். இடையிடையே மீன்விற்போர் விளக்குக்களும்;

௧௪௧. இலங்குநீர் வரைப்பிற் கலங்கரை விளக்கமும்

இ - ள். பாடைவேறுபட்டதேயத்து நிலையறியாது ஓடுங்கலங்களை அழைத்தற் கிட்ட விளக்குக்களும்,

கசஉ. விலங்குவலைப் பரதவர் மீன்றிமில் விளக்கமும்

இ - ள். மீன்களைக் குறுக்கிட்டு மறித்துப்படுக்கும் வலையையுடைய பரதவர் திமிலில்வைத்த விளக்குக்களும்,

*"முந்நீர் நாப்பட் டிமிற்சுடர் போலச்,' செம்மீ னிமைக்கு மாக விசும்பின்" என்றார் பிறரும்.

கசங. மொழிபெயர் தேத்தோ ரொழியா விளக்கமும்

இ - ள். பாடை வேறுபட்டதேயத்து மிலேச்சர் பிறதுறைகளிற்போகாமற் பனைகளைக் காலாகநாட்டி அதன்மீதே மண்ணிட்டெரிக்கும் நீநாவென்னும் விளக்குக்களும்,

கசச. கழிபெரும் பண்டங் காவலர் விளக்கமும்

இ - ள். மிக்க பெரிய பண்டங்களையுடைய பண்டசாலைகாப்போரிட்ட விளக்குக்களும்,

கசரு-கருO. எண்ணுவரம் பறியா வியைந்தொருங் கீண்டி
யிடிக்கலப் பன்ன வீரயிர் மருங்கிற்
கடிப்பகை காணுங் காட்சிய தாகிய
விரைமலர்த் தாமரை வீங்குநீர்ப் பரப்பின்
மருத வேலியின் மாண்புறத் தோன்றுங்
கைதை வேலி நெய்தலங் கானல்

இ - ள். வரம்பறியப்படாவாய் இச்சொல்லப்பட்ட விளக்குக்களெல்லாம் எண்ணுதற்கியைந்து ஒன்றிமிகுதலாலே இடியைக்கலந்தாலொத்த மணலின்மீது இட்ட வெணசிறுகடுகும் புலப்படக்காணுங் காட்சியையுடையதாகிய, மிக்க நீர்ப்பரப்பில் விரைமலர்த்தாமரையை வேலியாகவுடைய மருதநிலத்தினும் அழகுறத்தோன்றும் கைதையை வேலியாகவுடைய நெய்தனிலத்திற் கழிக்கானற்கணணேயென்க.

எண்ணுவரம்பு - எண்ணின்பெருமைக்கு வரம்பு. ஈண்டுதல் - மிகுதல். இடி - மா. இடிக்கலப்பென்றார், தெள்ளாதமாவை. ஈரயிர் - மிகவும் நுணணியமணல். வீங்குநீர்வரைப்பில் தாமரைவேலிமருதத்திற்றோன்றும் கைதைவேலிநெய்தலங் கானலென்க.

கருக. பொய்த லாயமொடு பூங்கொடி பொருந்தி

இ - ள். அங்ஙனமாகிய கானலிடத்தே தனது விளையாட்டின்மகளிருடனே பூங்கொடிபோல்வாள் விளையாடச் சென்றுபொருந்தியென்க.

கருஉ-கருச. நிரைநிரை யெடுத்த புரைதீர் காட்சி
மலைப்பஃ றாரமுங் கடற்பஃ றாரமும
வளந்தலை மயங்கிய துளங்குகல விருக்கை

* புறநானூறு, சுo.

இ - ள். நிரைநிரையாகக் குவித்த குற்றமற்ற காட்சியையுடைய மலைதரும் பலபண்டமும் கடல்தரும் பலபண்டமுமாகிய வளம் இடந்தோறும் மயங்கிக்கிடக்கின்ற கலங்களசைகின்ற கடற்றுறைமுகங்களிற் சோலைசூழ்ந்த இருப்பிடத்தே,

துளங்குதல் - அசைதல்.

௧௫௫ - ௧௫௮. அரசிளங் குமரரு முரிமைச் சுற்றமும்
பரதர் குமரரும் பல்வே றாயமு
மாடுகள மகளிரும் பாடுகள மகளிருந்
தோடுகொண் மருங்கில்

இ - ள். அரசகுமாரரும் அவருடைய உரிமைச்சுற்றமும் பரதகுமாரரும் அவருடைய பல்வேறுவகைப்பட்ட ஆயமகளிரும் ஆடன்மகளிரும் பாடன்மகளிரும் தொகுதிகொண்ட இடங்கடோறும்,

வணிககுமரர்க்கு உரிமையென்றது அவர் புனலாடல் மரபன்மையின். பரிசனமகளிரும் சிலதியர்முதலாயினோருமென்பார் பல்வேறாயமென்றார். ஆடுகளம் - அரங்கு. பாடுகளம் - கண்டம். இவை அடை. தோடு - தொகுதி. இதனையுடைய பொழிலிடத்தெனவுமாம்.

௧௫௮ ௧௬௨. சூழ்தர வெழினியும
விண்பொரு பெரும்புகழ்க் கரிகால் வளவன்
றண்பதங் கொள்ளுந் தலைநாட் போல
வேறுவேறு கோலத்து வேறுவேறு கம்பலை
சாறயர் களத்தின் வீறுபெறத் தோன்றி

இ - ள். சூழ்தருதலையுடைய எழினியும் முற்கூறிய தொகுதியும் வேறுவேறு கோலமும் வேறுவேறுகம்பலையும் விண்ணிலேசென்றுபொரும் பெரிய புகழையுடைய இக்கரிகால்வளவன் புதுப்புனல்விழவுகொண்டாடும் தலைநாட்போலே இவ்விழவினிறுதிக்கட் புனலாடிடங்களும் வீறுபெறத்தோன்றாநிற்கவென்க.

தோடு கம்பலையும், எழினி கோலமும் தோன்றவென எதிர்நிரனிறை. எழினிக்கோலம் - உருக்கள். தோன்றி - தோன்றவெனத்திரிக்க.

௧௬௩-௧௬௫. கடற்கரை மெலிக்குங் காவிரிப் பேர்யாற்
றிடங்கெட வீண்டிய நால்வகை வருணத்
தடங்காக் கம்பலை யுடங்கியைந் தொலிப்ப

இ - ள். அலையையன்றிக் கடலினது கரையைக் குத்தியிடிக்கும் காவேரிப் புகார்முகமெங்கும் வறிதிடமின்றாகச் சேரநெருங்கிய நால்வகைவருணத்திலுள்ளாருடைய அடக்கப்படாத கம்பலையெல்லாங்கூடி ஓரோசையாய் நின்றொலிப்பவென்க.

௧௬௬-௧௭௪. கடற்புலவு கடிந்த மடற்பூந் தாழைச்
சிறைசெய் வேலி யகவயி னாங்கோர்
புன்னை நீழற் புதுமணற் பரப்பில்

ஞெவிய வெழினி சூழவுடன் போக்கி
விதானித்துப் படுத்த வெண்கா லமளிமிசை
வருந்துபு நின்ற வசந்த மாலைகைத்
திருந்துகோ லல்யாழ் செவ்வனம் வாங்கிக்
கோவலன் றன்னொடுங் கொள்கையி னிருந்தனண்
மாமலர் நெடுங்கண் மாதவி தானென

இ - ள். அங்ஙனந்தோன்ற ஒலியாநிற்பக் கடலின்று புலால் நாற்றத்தைக் கெடுத்த மடலவிழும் பூவையுடைய கைதையாற் சிறையாகச்சூழப்பட்ட நடுவணுளவாகிய புன்னைநீழலில் அழுக்கற்ற மணல்பரந்தநிலத்தே சித்திரத்திரையை வளைத்து மேற்கட்டுங்கட்டியிடப்பட்ட வெண்கால் அமளிமிசையே, வருந்திநின்ற வயந்தமாலைகையதாகிய நல்ல யாழைவாங்கிப் பெரிய மலர்போலும் நெடுங்கண்ணையுடைய மாதவி கோவலன்றன்னொடும் சேரவிருந்தாளென்க.

வெண்கால் - மருப்புக்கால். திருந்துகோனல்யாழ் - இன்பத்தைவிளைத்தற்குக் காரணமாகிய கோலையுடைய யாழ், எனவே மேல் துன்பத்தை விளைவிக்குமென்பது கருத்து. செவ்வனம்வாங்கியென்றார், பின்னர் ஊடலோடு வாங்குதலின்.

வெள்ளிமால்வரைச் சேடிக்கண் விருந்தாட்டமரும் விஞ்சைவீரன் இடனுங் காண்கும், அமைதியுங்காண்குதும்; ஆடலுங்காண்குதும்; வணங்குதும் யாமெனக் காட்டிப் பின்னர்ப் புகார்மருங்கெய்திக் காட்டிக் காணபோன், காணாய்; மாதவி இவளென்வுரைத்து மகிழ்வெய்திய அவ்விஞ்சையனன்றியும் அந்தரத்துள்ளோர் வந்துகாண்குறூஉம் விழவும் ஆடலும் கோலமும் அணியுங்கடைக்கொள இருந்தோனுவப்ப ஆட்டி ஊட்டிச் செறீஇ அணிந்து செறித்து உடீஇத் தோளுக்கணிந்து அமைவுறவணிந்து கரப்பவணிந்து ஆரமோடணிந்து சிறுபுறமறைத்து அழகுறவணிந்து மாணபுறவணிந்து அளித்து இருந்தோள் உவவுவந்தென வேண்டினளாகிப் புலம்பக்காட்டக் கடிய அணிந்து எற எறிச் செவ்வனங்கழிந்து நடுவட்போகி மருங்கு சென்றெய்திப் பொருந்தி வாங்கிக் கோவலன்றன்னொடும்மாதவி வெண்காலமளிமிசை இருந்தனளென வினைமுடிக்க.

இது நிலைமண்டிலம்.

வேலை மடற்றாழை யுட்பொதிந்த வெண்டோட்டு
மாலைத் துயின்ற மணிவண்டு - காலைக்
களிநறவந் தாதூதத் தோன்றிற்றே காமர்
தெளிநிற வெங்கதிரோன் றேர்.

புருந்து நிழலுமென ... ...அடியார்க்குநல்லாயனென்பான்.
ஒருந்தமிழ் ... ...நிரம்பையாகாவலனே.
காற்றை ... ...சொல்வித்ததே.

கடலாடுகாதை முற்றிற்று.

ஏழாவது

கானல்வரி.

கட்டுரை.

க. சித்திரப் படத்துட் புக்குச் செழுங்கோட்டின் மலர்புனைந்து
மைத்தடங்கண் மணமகளிர் கோலம்போல் வனப்பெய்திப்
பத்தருங் கோடு மாணியு நரம்புமென்
றித்திறத்துக் குற்றநீங்கிய யாழ்கையிற் றொழுது வாங்கிப்
பண்ணல் பரிவட்டணை யாராய்த றைவரல்
கண்ணிய செலவு விளையாட்டுக் கையூழ்
நண்ணிய குறும்போக் கென்று நாட்டிய
வெண்வகையா லிசையெழீஇப்
பண்வகையாற் பரிவுதீர்ந்து
மரகதமணித் தாள்செறிந்த மணிக்காந்தண் மெல்விரல்கள்
பயிர்வண்டின் கிளைபோலப் பன்னரம்பின் மிசைப்படர
வார்தல் வடித்த லுந்த லுறழ்தல்
சீருட லுருட்ட றெருட்ட லள்ள
லேருடைப் பட்டடையென விசையோர் வகுத்த
வெட்டு வகையி னிசைக்கர ணத்துப்
பட்டவகைதன் செவியினோர்த்
தேவலன்பின் பணியாதெனக்
கோவலன் கையாழ் நீட்ட வவனுங்
காவிரியை நோக்கினவுங் கடற்கானல் வரிப்பாணியு
மாதவிதன் மனமகிழ வாசித்த றொடங்குமன்.

க. சித்திரப்படம் - உறை. கோட்டில் மலர் புனைந்து - கோட்டுறுப்பில் மலர்மாலையை அணிந்து; "வீழ்மணி வண்டு பாய்ந்து மிதித்திடக் கிழிந்த மாலை, சூழ்மணிக் கோட்டு வீணை" என்றார் சிந்தாமணியிலும்; [காந்-உருகூ] மணமகளிர் - கலியாணமகளிர். பத்தர் கோடு ஆணி நரம்பு என்பன யாழுறுப்புக்கள்; "கோடே பத்த ராணி நரம்பே, மாடக மெனவரும் வகையின தாகும்" என்பதனாலறிக. தொழுது - யாழ், மாதங்கியென்னும் தெய்வமிருத்தற்கிடமென்று நூல்கள் கூறுமாதலின், அதனைத் தொழுது. வாங்கி - வயந்தமாலை கையினின்றும் வாங்கி. பண்ணல்முதலிய எட்டும் கலைத்தொழிலென்று சொல்லப்படும்; அவற்றுள், பண்ணல் - பாடநினைத்த பண்ணுக்கு இணை கிளை பகை நட்பான நரம்புகள் பெயருந்தன்மை

ஆற்றுவரி. வேறு.

திங்கண் மாலை வெண்குடையான் சென்னி செங்கோ லதுவோச்சிக்
கங்கை தன்னைப் புணர்ந்தாலும் புலவாய் வாழி காவேரி
கங்கை தன்னைப் புணர்ந்தாலும் புலவா தொழிதல் கயற்கண்ணாய்
மங்கை மாதர் பெருங்கற்பென் றறிந்தேன் வாழி காவேரி. (க)

மாத்திரையறிந்து வீக்குதல்; பரிவட்டணை - அவ்வீக்கினநரம்பை அகவிரலாலும் புறவிரலாலும் கரணஞ்செய்து தடவிப்பார்த்தல்; ஆராய்தல் - ஆரோகண அவரோகணவகையால் இசையைத்தெரிதல்; தைவரல் - அநுசுருதியேற்றுதல்; செலவு - ஆளத்தியிலே நிரம்பப்பாடுதல்; [ஆளத்தியிலக்கணத்தை அ௫ - ம் பக்கத்திற் காண்க.] விளையாட்டு - பாடநினைத்தவண்ணத்திற் சந்தத்தைவிடுதல்; கையூழ் - வண்ணத்திற்செய்தபாடலெல்லாம் இன்பமாகப் பாடுதல்; குறும்போக்கு - குடகச்செலவும் துள்ளற்செலவும் பாடுதல். இவற்றைச் சீவகசிந்தாமணி, காந்தருவதத்தையாரிலம்பகம், கசுரு-ம் கவியுரையிற் காண்க. இன்னும் விரித்துக்கூறுவர் அரும்பதவுரையாசிரியர். இசை எழீஇ - சுரங்களையெழுப்பி. பண் வகையால் பரிவு தீர்ந்து - பண்கூற்றிற் குற்றந்தீர்ந்து; உருபுமயக்கம்; பரிவு - குற்றம். மரகதமணித் தாள் - மரகதமணிமோதிரம்; "மரகதத் தாள்செறி" என்றார் கடலாடுகாதையிலும்; [கூஎ] பயிர்வண்டு - பாடுகின்றவண்டு; பயிர் - ஒலி. வார்தல் - சுட்டுவிரலாற்றொழில்செய்தல்; வடித்தல் - சுட்டுவிரலும் பெருவிரலுங்கூட்டி நரம்பை அகமும் புறமுமாராய்தல்; உந்தல் - நரம்புகளைத்தெறித்து வலிவிற்பட்டதும் மெலிவிற்பட்டதும் நிரல்பட்டதுமறிதல்; உறழ்தல் - ஒன்றிடையிட்டும் இரண்டிடையிட்டும் நரம்புகளைத்தெறித்தல்; உருட்டல் - இடக்கைச்சுட்டுவிரல் உருட்டலும், வலக்கைச்சுட்டுவிரல் உருட்டலும், சுட்டொடு பெருவிரற்கூட்டியுருட்டலும், இருபெருவிரலும் இயைந்துடனுருட்டலுமெனுமிவை. பிறவற்றை வந்துழிக்காண்க. பட்ட வகை தன் செவியின் ஓர்த்து - உண்டான இசைக்கூறுபாடுகளை மாதவி தன் செவியாலுணர்ந்து. ஏவலன் - இதனை வாசியென்று ஏவுகின்றேனல்லேன். பின்பணியாதென - இனி இடுங்கட்டளை யாதென்று. கோவலன் கை யாழ் நீட்ட - கோவலனது கையில் யாழை நீட்ட; யாழைத் திருத்திய தான் முற்படவாசியாமல் அவன்றலைமைதோன்றக் கொடுத்தாள். காவிரியை நோக்கின - ஆற்றுவரி. கானல்வரிப்பாணி - கானலைச்சுட்டிய வரிப்பாட்டு. தொடங்கும் - தொடங்குவான். புக்குப் புனைந்து எய்தி நீங்கிய யாழை (வயந்தமாலை கையினின்றும் மாதவி) தொழுது வாங்கி எழீஇ ஓர்த்து அவ்வியாழை அவள் கோவலன்கைநீட்ட அவனும் நோக்கினவும் வரிப்பாணியுமாகிய பாட்டுக்களை மாதவி மனமகிழ வாசித்தற்றொடங்குமெனமுடிக்க. படாத்தெனவும், கோட்டுமலரெனவும், இத்திறத்தவெனவும், செவியோர்த்தெனவும், பாணியாகெனவெனவும் பாடபேதமுண்டு.

உ. வெண்குடையானாகியசென்னி; சென்னி - சோழன். புலவாய் - புலத்தல்செய்யாய். கயற்கண்ணாய் - கயலாகியகண்ணையுடையாய். புலவாதொழிதல் கற்பென்றியையும். காவேரி - கவேரன்புதல்வி; இதனை, "தவாநீர்க் காவிரிப் பாவைதன் றாதை, கவேரனாங் கிருந்த கவேர வனமும்" என்பதனானுணர்க; மணிமேகலை, மூன்றாவது மலர்வனம்புகுகாதை.

௩. மன்னு மாலை வெண்குடையான் வளையாச் செங்கோ லதுவோச்சிக்
கன்னி தன்னைப் புணர்ந்தாலும் புலவாய் வாழி காவேரி
கன்னி தன்னைப் புணர்ந்தாலும் புலவா தொழிதல் கயற்கண்ணாய்
மன்னு மாதர் பெருங்கற்பென் றறிந்தேன் வாழி காவேரி. (௨)

௪. உழவ ரோதை மதகோதை யுடைநீ ரோதை தண்பதங்கொள்
விழவ ரோதை சிறந்தார்ப்ப நடந்தாய் வாழி காவேரி
விழவ ரோதை சிறந்தார்ப்ப நடந்த தெல்லாம் வாய்காவா
மழவ ரோதை வளவன்றன் வளனே வாழி காவேரி. (௩)

சார்த்துவரி. வேறு.

௫. மோது முதுதிரையான் மொத்துண்டு போந்தசைந்த முரல்வாய்ச் சங்க
மாதர் வரிமணன்மேல் வண்ட லுழுதழிப்ப மாழ்கி யைய
கோதை பரிந்தசைய மெல்விரலாற் கொண்டோச்சுங் குவளை மாலைப்
போது சிறங்கணிப்பப் போவார்கண் போகாப் புகாரே யெம்மூர்.

இது, தோழி தலைமகன்முன்னின்று வரைவு கடாயது;
கையுறைமறையெனினுமமையும.

௬. காதல ராகிக் கழிக்கானற் கையுறைகொண் டெம்பின் வந்தா
ரேதிலர் தாமாகி யாமிரப்ப நிற்பதையாங் கறிகோமைய

௩. கன்னி - தெற்கேயுள்ள குமரியென்னுமோர்நதி; இது கன்னியாகுமரி யென்றுஞ்சொல்லப்படும்.

௪. தண்பதங்கொள் விழவர் - புதுப்புனலாடுவார்; மழவரோதைவளவன் - மழவர்கள்கொட்டும் வீரமத்தளவோசையையுடைய சோழன்; மழவர் - ஒருவகை வீரர்; "இரும்புழல் வல்சிக் கழற்கான் மழவர், பூந்தலை முழவி னோன்றலை கடுப்ப" என்றார் மதுரைக்காஞ்சியிலும்; [௩௯௫ - ௩௯௬.] நடந்ததெல்லாம் வளனென வினையும். 'திங்கண்மாலை' முதலியமூன்றும் முகமுடைவரியென்றுங் கூறப்படும். வரிப்பாட்டு, தெய்வத்தைச்சுட்டுவனவும் மக்களைச்சுட்டுவனவுமென இருவகைய; அவற்றுள், 'திங்கண்மாலை' முதலியன மக்களைச்சுட்டுவன.

௫. முரல்வாய் - ஒலித்தலையுடையவாய். மாதர் - வண்டிச்சிறுமிய..., வண்டல் - அம்மகளிர்விளையாட்டு; வண்டிச் சிற்றில்முதலியன; ஆகுபெயர். மாழ் மயங்கி. கோதை - கூந்தல். பரிந்து - அவிழ்ந்து. போது - மலரும்பருவத் மாலைக் குவளைப்போதென்க. சிறங்கணிப்ப, கடைக்கணிக்க. புகார் - காவ பட்டினம். சங்கம் உழுது வண்டலையழிப்ப மாதர் மாழ்கி ஓச்சும் மாலைக் போது சிறங்கணிப்பப் போவார்கண் போகாப் புகாரெனமுடிக்க. புற வென்றும் பாடம். சிந்தியகுவளைப்போதுகள் மகளிர் கடைக்கணித்தாற் தமையின், சிறங்கணிப்பவென்றார்.

௬. காதலராகி - அன்புடையாராகி. கானல் - கடற்கரைச்சோலை காணிக்கை. எம்பின்வந்தார் - எமது பின்னேவந்து இரந்தவர். ஏதி

மாதரார் கண்ணு மதிநிழனீ ரிணைகொண்டு மலர்ந்த நீலப்
போது மறியாது வண்டூச லாடும் புகாரே யெம்மூர். (உ)

இதுவுமது.

எ. கரிய மலர்நெடுங்கட் காரிகைமுன் கடற்றெய்வங் காட்டிக் காட்டி
யரியசூள் பொய்த்தா ரறனிலரென் றேழையம்யாங் கறிகோ மைய
விரிகதிர் வெண்மதியு மீன்கணமு மாமென்றே விளங்கும வெள்ளைப்
புரிவளையு முத்துங்கண் டாம்பல் பொதியவிழ்க்கும் புகாரே யெம்மூர்.

கானல்வரி. வேறு.

இது, குறியிடத்துச் சென்றபாங்கன், தலைமகளாது காதன்மிகுதி
குறிப்பினானறிந்து கூறியது.

அ. துறைமேய் வலம்புரி தோய்ந்து மணலுழுத தோற்ற மாய்வான்
பொறைமலி பூம்புன்னைப் பூவுதிர்ந்து நுண்டாது போர்க்குங் கான
னிறைமதி வாண்முகத்து நேர்கயற்கண் செய்த
வுறைமலி யுய்யாநோ யூர்சுணங்கு மென்முலையே தீர்க்கும்போலும்.

அன்று கையுறைகொண்டு எம்பின்வந்து காதலராகி இரந்தவர் இன்று தாம் ஏதில ராகி யாமிரக்கும்வண்ணம் நிற்கின்றார்; அங்ஙனநிற்றலை யாம் யாங்கறிகோம். அறிகோம் - அறிவோம். காதலர் ஏதிலர் தாமென முன்னிலையைப் படர்க்கைவாய் பாட்டாற் கூறினார். ஐய - அண்மைவிளி. நீர் மதி நிழல் இணை கொண்டு - நீரில் மதியினது பிரதிபிம்பத்தில் இரண்டாகி; மாதரார்முகத்திலுள்ள கண்களுக்கும் மதி நிழலில் மலர்ந்த நீலோற்பலமலர்களிரண்டற்குமுள்ள வேறுபாடறியாது வண்டு கள் மயங்குவனவாயின. மதிநிழலென்றதனால் முகம் வருவிக்கப்பட்டது. ஊச லாடுதல் - அங்குமிங்குமலைதல்.

எ. கரியமலர் - நீலமலர். கடற்றெய்வம் - வருணன். அரிய சூள் - விடுத்தற் கரியசூள்; சூள் - சபதம். ஈண்டும் பொய்த்தாரென்று முன்னிலையைப்படர்க்கை வாய்பாட்டாற் கூறினார். வளை - சங்கு. வளையை மதியென்றும் முத்துக்களை மீன் கணமென்றுங்கருதி ஆம்பல் பொதியவிழ்க்குமென்க. பொதியவிழ்த்தல் - மலர்தல். பாட்டுடைத்தலைவன் பதியோடுசார்த்திப்பாடிய வரிப்பாட்டாதலின், 'மோது முது நீர்' முதலியமூன்றும் சார்த்துவரியெனப்பட்டன. பாட்டுடைத்தலைவன் - சோழன். "பாட்டுடைத் தலைவன பதியொடும் பெயரொடுஞ், சார்த்திப் பாடலிற் சார்த்தெனப் படுமே" என்றார். அச்சார்த்து முகச்சார்த்து, முரிச்சார்த்து, கொச்சகச் சார்த்தென மூன்றுவகைப்படும். அவற்றுள், இம்மூன்றும் முகச்சார்த்து.

அ. பொறை மலி புன்னை - பூவாகிய பாரமிக்க புன்னை. கானல் - கானலில். கயற்கண் - கயல்நேர்கண். கானலிற்செய்தவெனவியையும். உறைமலி - மலி உறை - மருந்து. உய்யாநோய்-போக்கமுடியாதநோய். ஊர்சுணங்கு - ஊர்கின்ற சுணங்கூர்மென்முலை. போலும் - ஒப்பில்போலி. நிறைமதியென்றும்

இது, கழற்றெதிர்மறை.

௯. நிணங்கொள் புலாலுணங்க னின்றுபுள் ளோப்புதற் றலைக்கீ டாகக்
கணங்கொள்வண் டார்த்துலாங் கன்னி நறுஞாழல் கையி லேந்தி
மணங்கமழ் பூங்கானன் மன்னிமற் றாண்டோ
ரணங்குறையு மென்ப தறியே னறிவேனே லடையேன் மன்னோ. (உ)

இதுவுமது.

௧௦. வலைவாழ்நர் சேரி வலையுணங்கு முன்றின் மலர்கை யேந்தி
விலைமீ னுணங்கற் பொருட்டாக வேண்டுருவங் கொண்டு வேறோர்
கொலைவே லெடுங்கட் கொடுங்கூற்றம் வாழ்வ
தலைநீர்த்தண் கான லறியே னறிவேனே லடையேன் மன்னோ. (௩)

நிலைவரி. வேறு.

இது, தமியளாக இடத்தெதிர்ப்பட்ட தலைவிக்குத் தலைமகன் கூறியது.

௧௧. கயலெழுதி வில்லெழுதிக் காரெழுதிக் காமன்
செயலெழுதித் தீர்ந்தமுகந் திங்களோ காணீர்
திங்களோ காணீர் திமில்வாழ்நர் சீறூர்க்கே
யங்கணேர் வானத் தரவஞ்சி வாழ்வதுவே. (க)

இதுவுமது.

௧௨. எறிவளைக ளார்ப்ப விருமருங்கு மோடுங்
கறைகெழுவேற் கண்ணோ கடுங்கூற்றங் காணீர்

---

௯. புலால் உணங்கல் - புலால்வற்றல். ஓப்புதல் - ஓட்டுதல். தலைக்கீடு - வியாஜம். ஞாழல் - புலிநகக்கொன்றை. அணங்கு - வருத்துந்தெய்வம். புள்ளோப்புதலைத் தலைக்கீடாகக்கொண்டு ஞாழலையேந்திக் கானலில் அணங்குறையுமென்பதையறியேன்; அறிவேனாயின், ஆண்டுச் செல்லேனென்க. கையிலூன்றியெனவும் பாடம்.

௧௦. வலைவாழ்நர் - வலைவளத்தால் வாழ்பவர். சேரி - சேரியில். உணங்கும் - உலரும். உணங்கற் பொருட்டாக - உணங்கலைக்காத்தற்பொருட்டாக. கானலிற் கூற்றம் வேண்டுருவங்கொண்டு வாழ்வதை அறியேனென்க. வலைவாணரென்றும் பாடம். கூற்றம் - இயமன்.

௧௧. கயல் வில் காரென்றது முறையே கண் புருவம் கூந்தலாகிய இவற்றை. காமன்செயல் - பிறரை வருத்துந்தொழில். தீர்ந்தமுகம் - பணிக்குறையற்றுக் கைவிட்டமுகம். திங்களோ, ஓ - வியப்பு. காணீர் - பாரீர். திமில் - மீன்படகு; "நிரைதிமில் வேட்டுவர்" என்றார் மதுரைக்காஞ்சியிலும்; [௧௧௬.] திங்கள் வானத்தரவையஞ்சிச் சீறூரில் வாழ்வதைக் காணீரென்க. சீறூர்க்கு - உருபுமயக்கம்.

௧௨. எறிவளை - அறுக்கும்வளை; கரையிலே அலைகளெறிகிறவளையென்றுமாம். கண்ணோ, ஓ - வியப்பு சங்குகள் முழங்க அவற்றைப்பார்த்து ஓடுங்கண்ணையுடை

கடுங்கூற்றங் காணீர் கடல்வாழ்நர் சீறூர்க்கே
மடங்கெழுமென் சாயன் மகளா யதுவே. (உ)

இதுவுமது.

கங. புலவுமீன் வெள்ளுணங்கல் புள்ளோப்பிக் கண்டார்க்
கலவநோய் செய்யு மணங்கிதுவோ காணீ
ரணங்கிதுவோ காணீ ரடும்புமர்தண் கானற்
பிணங்குநே ரைம்பாலோர் பெண்கொண் டதுவே. (ங)

முரிவரி. வேறு.

இது, தலைமகன பாங்கன்கேட்ப உற்றதுரைத்தது.

கச. பொழிறரு நறுமலரே புதுமணம் விரிமணலே
பழுதறு திருமொழியே பணையிள வனமுலையே
முழுமதி புரைமுகமே முரிபுருவ வில்லிணையே
யெழுதரு மின்னிடையே யெனையிடர் செய்தவையே. (க)

இதுவுமது.

கரு. திரைவிரி தருதுறையே திருமணல் விரியிடமே
விரைவிரி நறுமலரே மிடைதரு பொழிலிடமே
மருவிரி புரிகுழலே மதிபுரை திருமுகமே
யிருகய லிணைவிழியே யெனையிடர் செய்தவையே. (உ)

யாள்; வேற்கண் - அன்மொழித்தொகை; ஆகுபெயரென்பர் அரும்பதவுரையா சிரியர். சாயல் - மென்மை. கூற்றம் சீறூரின்கண் மகளாயது காணீரென்க. ஆர்ப்பவெம்மருங்குமோடுமென்றும் பாடம்.

கங. அலவ - அலந்து அலைபட. அணங்கு - வருத்துந்தெய்வம். பிணங்கு நேர் ஐம்பால் - செறிந்த மெல்லிய கூந்தல். பெண் கொண்டது - பெண்வடிவுகொண் டது. இதுவோ, ஓ - வியப்பு. அணங்கு கானலிற் பெண்வடிவுகொண்டிருத்தலைக் காணீரென்க. நிலைவரியின் இலக்கணத்தை, "முகமு முரியுந் தன்னொடு முடியு, நிலையை யுடையது நிலையெனப் படுமே" என்னுஞ் சூத்திரத்தாலறிக. அலவனோ டென்றும், அவலநோயென்றும் பாடபேதமுண்டு.

கச. இடர்செய்தவை, மலரும் மணலும் மொழியும் முலையும் முகமும் வில் லிணையும் இடையுமென்க. ஏகாரங்கள் எண்ணுப்பொருளன. முரிபுருவம் - வளைந்தபுருவம். இணை - இரண்டு. எழுதருமிடை - எழுதுதற்கரிய இடை. எழுதரிய வெனவும், செய்தவிவையெனவும் பாடம்.

கரு. இடர்செய்தவை, துறையும் இடமும் மலரும் இடமும் குழலும் முகமும் விழியுமென்க. திரை - அலை. விரை - நறுமணம். ஏகாரங்கள் எண்ணுப்பொருள. விரிவிடமெனவும், செய்தவிவையெனவும் பாடம்.

இதுவுமது.

கசூ. வளைவளர் தருதுறையே மணம்விரி தருபொழிலே
தளையவிழ் நறுமலரே தனியவ டிரியிடமே
முளைவள ரிளநகையே முழுமதி புரைமுகமே
யிளவள ரிணைமுலையே யெனையிடர் செய்தவையே. (ங.)

திணைநிலைவரி. வேறு.

இது, புணர்ச்சிநீட இடந்தலைப்பாட்டிற் புணர்தலுறுவான் ஆற்றாமைகூறியது.

கஎ. கடல்புக் குயிர்கொன்று வாழ்வர்நின் னையர்
உடல்புக் குயிர்கொன்று வாழ்வைமன் நீயு
மிடல்புக் கடங்காத வெம்முலையோ பார
மிடர்புக் குருமின் னிடையிழவல் கண்டாய். (க)

இதுவுமது.

கஅ. கொடுங்கண் வலையா லுயிர்கொல்வா னுந்தை
நெடுங்கண் வலையா லுயிர்கொல்வை மன்நீயும்
வடங்கொண் முலையான் மழைமின்னுப் போல
நுடங்கி யுகுமென் னுசுப்பிழவல் கண்டாய். (உ)

கசூ. இடர்செய்தவை, துறையும் பொழிலும் மலரும் இடமும் நகையும் முகமும் முலையுமென்க. வளை - சங்கு. இளையவளிளமுலையெனவும், செய்தவிவை எனவும் பாடம். முரிவரியின் இலக்கணத்தை, "எடுத்த வியலு மிசையுந் தீம்மின், முரித்துப் பாடுதன் முரியெனப் படுமே" என்னுஞ்சூத்திரத்தாலுணர்க.

கஎ. நின் ஐயர் - உனது மூத்தோர். மிடல்புக்கு - வலியிலே புகுந்துநின்று. இடர்புக்கு - இடரிலே கிடந்து. இடை இழவல் - இடையை இழந்துவிடாதே. நின்னையர் கடலிற்புகுந்து உயிர்களைக்கொன்று வாழாநிற்பர்; நீயும் உடலிற்புகுந்து உயிரைக்கொன்று வாழ்கின்றனை; உனது குலதருமத்தை நீ இங்ஙனஞ்செய்கின்ற கொடுமையாலே இடைமுரியவுங்கூடும்; அன்றியும் முலைகளோ பாரமாகவுள்ளன; ஆதலால், கொல்லுதலைத்தவிர்ந்து அப்பாரத்தை என்தோளிலேற்றி இடையைப் பாதுகாக்கக்கடவையென்க. எனது ஆற்றாமையைத் தீரென்பதுகருத்து. பின்னுள்ள கவிகளிரண்டற்கும் இப்படியே பொருள்கொள்க. இடர்புக்கிடுமிடை யிழவலெனவும் பாடம்.

கஅ. கொடுங்கண்வலை - வளைந்த கண்களையுடைய வலை; கண் - ஈண்டு வலையின் இடைவெளி. நுந்தை - உன்தந்தை. நெடுங்கண்வலை - நீண்ட கண்ணாகிய வலை. நுடங்கி - அசைந்து. நுசுப்பு இழவல் - இடையை இழவாதே. மழைமின்னுப்போலவெனவும், நுடங்குமிளமென்னுசுப்பெனவும் பாடம்.

இதுவுமது.

௧௯. ஓடுந் திமில்கொண் டுயிர்கொல்வர் நின்னையர்
கோடும் புருவத் துயிர்கொல்வை மன்னியும்
பீடும் பிறரெவ்வம் பாராய் முலைசுமந்து
வாடுஞ் சிறுமென் மருங்கிழவல் கண்டாய். (௩)

வேறு.

இது, குறியிடத்துச்சண்ட பாங்கன் சொல்லியது; புணர்ந்துநீங்குவான் விடுத்த லருமையான் ஆற்றானாய்த் தன் நெஞ்சிற்குச் சொல்லியதுமாம்.

௨௦. பவள வுலக்கை கையாற் பற்றித்
தவள முத்தங் குறுவாள் செங்கண்
தவள முத்தங் குறுவாள் செங்கண்
குவளை யல்ல கொடிய கொடிய. (௪)

இதுவுமது.

௨௧. புன்னை நீழற் புலவுத் திரைவா
யன்ன நடப்ப நடப்பாள் செங்க
ணன்ன நடப்ப நடப்பாள் செங்கண்
கொன்னே வெய்ய கூற்றங் கூற்றம். (௫)

இதுவுமது.

௨௨. கள்வாய் நீலங் கையி னேந்திப்
புள்வா யுணங்கல் கடிவாள் செங்கண்

---

௧௯. கோடும்புருவம் - வளைந்தபுருவம். பீடும் பிறர் எவ்வம் பாராய் - உனது பெருமையினையும் பிறர்படுந்துன்பத்தையும் நீ பார்த்தல்செய்யாய்; எவ்வமுமென னுமும்மை விகாரத்தால் தொக்கது. பாராமுலையெனவும் பாடம்; அதற்குத் தமது பீடும் பிறரெவ்வமும் பாராதமுலையென்க. மருங்கு இழவல் - இடையை இழ வாதே. கொள்வரென்றும் கொள்வையென்றும் பாடம். ‘கடல்புக்கு’ என்ற கவி முதலியமூன்றும் சாயல்வரியென்று சில மூலப்பிரதிகளில் எழுதப்பட்டுள்ளன.

௨௦. பவள உலக்கை - பவளத்தாலாகிய உலக்கை. தவள முத்தம் - வெண் மையாகிய முத்து. குறுவாள் - குற்றுவாள். கண் குவளை அல்ல - கண்கள் குவளைக ளல்ல=நிறத்தாற் குவளையென்னவேண்டா. உலக்கையைக் கையாற்பற்றி முத்தத் தைக் குறுவாள்கண்கள் குவளையல்ல; கொடிய கொடியவென்க. பின்னுள்ள செய்யுளிரண்டற்கும் இப்படியே பொருள்கொள்க.

௨௧. நீழல் நடப்பாளென இயையும். அன்னம் நடப்ப - தான் நடத்தலைப் பார்த்து அன்னம் நடக்கும்படி; தன் நடைக்கஞ்சி அன்னமோடும்படியென்று மாம். கொன்னேவெய்ய - மிகக்கொடியன.

௨௨. கள்வாய்நீலம் - தேனை வாயினிடத்தேயுடைய நீலம். புள்வாயுணங்கல் - உணங்கல் வாய்ப் புள்=உணங்கலிடத்துவரும் பறவைகள். கடிவாள் - ஓட்டுவாள்.

புள்வா யுணங்கல் கடிவாள் செங்கண்
வெள்வே லல்ல வெய்ய வெய்ய. (கூ)

வேறு.

இது, காமஞ்சாலா இளமையோள்வயின்
ஏமஞ்சாலா இடும்பையெய்தியோன் சொல்லியது.

உரு. சொன்மட வன்னஞ் சொன்னடை யொவ்வாய்
சொன்மட வன்னஞ் சொன்னடை யொவ்வாய்
ஊர்திரைநீர் வேலி யுழக்கித் திரிவாள்பின்
சென்மட வன்னஞ் சொன்னடை யொவ்வாய். (எ)

கட்டுரை.

உச. ஆங்குக், கானல்வரிப் பாடல்கேட்ட மானெடுங்கண் மாதவியு
மன்னுமோர் குறிப்புண்டிவன் றன்னிலை மயங்கினானெனக்
கலவியான் மகிழ்ந்தாள்போற் புலவியால் யாழ்வாங்கித்
தானுமோர் குறிப்பினள்போற் கானல்வரிப் பாடற்பாணி
நிலத்தெய்வம் வியப்பெய்த நீணிலத்தோர் மனமகிழக்
கலத்தொடு புணர்ந்தமைந்த கண்டத்தாற் பாடத்தொடங்குமன்.

'பவளவுலக்கை' முதலியமூன்றும் கந்தருவமார்க்கத்தால் இடைமடக்கிவந்தன. இம்மூன்றும் துள்ளல்வரியென்று சிலபிரதியில் எழுதப்பட்டுள்ளன.

உரு. சொல் மடவன்னம் - புலவர்களால் உவமையாகச்சொல்லப்படும் மடவன்னமே. அன்னம் - விளி. சொல் நடை ஒவ்வாய் - உன்னடையைக்காட்டிலுஞ் சிறந்ததென்று புகழ்ந்துசொல்லப்படும் இவள்நடையை நீ ஒவ்வாய். ஊர் திரை நீர் வேலி உழக்கித் திரிவாள் - பரக்கின்ற அலைகளையுடைய கடலாற்சூழப்பட்ட உலகத்திலுள்ளாரைவென்று விளையாட்டுவிருப்பினாலோடுவாள்; நீர்வேலி - நெய்தனிலமுமாம். திரிவாள்பின் செல்லுகின்ற அன்னமே, இவள் விளையாடுங்காலத்து இவள்நடையை உன்னடை ஒக்குமென்று நீ கருதுவையாயினும், இவள் விளையாட்டொழிந்து தன்னியல்பாற் செல்லுங்காலத்து இவள்நடையை உன்னடை ஒவ்வாதாதலால், இனிப் பின்செல்லாதிருக்கக் கடவையென்பதாம். இக்கவியும் கந்தருவமார்க்கத்தால் அடிமடக்கிவந்தது. பின், சொன்மடவன்னமென்றும்பாடம்.

உச. 'மன்னும் ஓர் குறிப்பு உண்டு - அவ்விடத்துக் கோவலன்வாசித்த உருக்கள் களவுப்புணர்ச்சியில் தலைமகன்கூறிய கூற்றாயிருத்தலின், இவன் தன்மேலன்பிலன்; உள்ளத்து நிலைபெற்ற வேறோர்குறிப்பு ஒன்றுண்டு. இவன் தன் நிலை மயங்கினானென - இவன் தன்றன்மை வேறுபட்டானென்று புலந்து. புலவியால் - அப்புலவியால்; புலவி - இளையகலாம்; புலவியால் வாங்கியென்க. கலவியால் மகிழ்ந்தாள்போல் - அப்புலவியைப் புலப்படுத்தாமற் கலவியால் மனமகிழ்ந்தாள் போல. யாழ்வாங்கி - கோவலன்கையினின்றும் யாழைவாங்கி. தானும் ஓர் குறிப்பினள் போல் - தான் வேறுகுறிப்பு இலளாயினும் அவன் வேறுகுறிப்பினனாகப் பாடினமையின், தானும் வேறுகுறிப்புடையாள்போல. நிலத்தெய்வம் - வருணன்.

ஆற்றுவரி. வேறு.

உரு. மருங்கு வண்டு சிறந்தார்ப்ப மணிப்பூ வாடை யதுபோர்த்துக்
கருங்கயற்கண் விழித்தொல்கி நடந்தாய் வாழி காவேரி
கருங்கயற்கண் விழித்தொல்கி நடந்ததெல்லா நின்கணவன்
திருந்து செங்கோல் வளையாமை யறிந்தேன்வாழி காவேரி. (க)

உசு. பூவார் சோலை மயிலாடப் புரிந்து குயில்க ளிசைபாடக்
காமர் மாலை யருகசைய நடந்தாய் வாழி காவேரி
காமர் மாலை யருகசைய நடந்த தெல்லா நின்கணவன்
நாம வேலின் றிறங்கண்டே யறிந்தேன் வாழி காவேரி. (உ)

உஎ. வாழி யவன்றன் வளநாடு மகவாய் வளர்க்குந் தாயாகி
யூழியுய்க்கும் பேருதவி யொழியாய் வாழி காவேரி
யூழி யுய்க்கும் பேருதவி யொழியாதொழுக லுயிரோம்பு
மாழி யாள்வான் பகல்வெய்யோ னருளே வாழி காவேரி. (ங)

சார்த்துவரி. வேறு.

இது, கையுறைமறை.

உஅ. திங்கதிர் வாண்முகத்தாள் செவ்வாய் மணிமுறுவ லொவ்வாவேனும்
வாங்குநீர் முத்தென்று வைகலு மான்மகன்போல் வருதி யைய

கலத்தொடுபுணர்ந்தமைந்த கண்டத்தாற் பாடத் தொடங்குமன் - யாழின் எழா லோடுகலந்து ஒன்றுபட்ட தனது மிடற்றாற் பாடத்தொடங்குவாள். மாதவியும் புலவியால் யாழ்வாங்கிப் பாடற்பாணி பாடத்தொடங்குமெனமுடிக்க. பாடல் கேட்டெனவும், கண்டத்தாற் பாடுமெனவும் பாடம்.

உரு. வண்டு - வண்டும், வளையலும். பூவாடை - பூவாகிய ஆடையும், பூத்தொழி லமைந்த ஆடையும். கயற்கண் - கயலாகியகண்ணும், கயல்போன்றகண்ணும். ஒல்கி - அசைந்து, ஒதுங்கி. ஒதுங்குதல் மகளிர்குணம். இது சிலேடை. கணவன் - ஈண்டுச் சோழன். வளையாமையேயென்னும் தேற்றேகாரம் தொக்கது. காவேரி, நடந்ததெல்லாம் வளையாமையே ; யான் அதனை அறிந்தேனெனமுடிக்க.

உசு. புரிந்து - விரும்பி. காமர் - விருப்பம். நாமம் - அச்சம் ; உரிச்சொல் ஈறுதிரிந்தது ; புகழுமாம். வேலின் திறங்கண்டு - வேலின்வன்மையைக்கண்டு= இனிப் பிறரால் வருத்தமில்லையென்றறிந்து. கண்டே, ஏகாரம் - தேற்றம். காவேரி, நீ நடந்ததெல்லாம் வேலின்றிறங்கண்டே ; அதனை யானறிந்தேனென முடிக்க. மயிலாலவெனவும், குழல்களிசைபாடவெனவும் பாடம்.

உஎ. வளநாடு - சோழநாடு. மகவாய் - மகவாக ; எச்சத்திரிபு. ஆழியாள்வான் - சக்கரவர்த்தி. பகல்வெய்யோன் - நடுவுநிலைமையைவிரும்புவோன். காவேரி, நீ ஒழியாதொழுகல் வெய்யோனருளேயெனமுடிக்க. உலகோம்புமெனவும்பாடம். 'மருங்குவண்டு' முதலிய மூன்றும் கந்தருவமார்க்கத்தால் இடைமடக்கிவந்தன.

உஅ. திங்கதிர் - மதி. மணிமுறுவல் - அழகியமுறுவல். ஒவ்வாவேனும் - நீர் கொடுக்கும் முத்துக்கள் முறுவலை ஒவ்வாவாயினும். வாங்கும் நீர் முத்து

வீங்கோதந் தந்து விளங்கொளிய வெண்முத்தம் விளைசூழ் கானற்
பூங்கோதை கொண்டு விலைஞர்போல் மீளும் புகாரே யெம்மூர். (க)
இது, தோழியிற்கூட்டங்கூடியபின்பு வாரா வரைவலென்றாற்குத்
தோழிகூறியது.

உகூ. மறையின் மணந்தாரை வன்பரதர் பாக்கத்து மடவார் செங்கை
யிறைவளைக ளுற்றுவதை யேழைய மெங்ஙனம்யாங் கறிகோ மைய
நிறைமதியு மீனுமெனவன்ன நீள்புன்னை யரும்பிப் பூத்த
பொறைமலிபூங் கொம்பேற வண்டாம்ப லூதும் புகாரே யெம்மூர்.
இதுவுமது.

ஙo. உண்டாரை வென்றநறா வூணொளியாப் பாக்கத்துளுறையொன்றின்றித்
தண்டாநோய் மாதர் தலைத்தருதி யென்பதியாங் கறிகோ மைய
வண்டால் திரையழிப்பக் கையால் மணன்முகந்து மதிமே னீண்ட
புண்தோய்வே லீர்மல்க மாதர் கடறூர்க்கும் புகாரே யெம்மூர். ( )

திணைநிலைவரி. வேறு.

இஃது, அறியேனென்று வலிதாகச்சொல்லிக் குறைநயப்பித்தது.

ஙக. புணர்துணையோ டாடும் பொறியலவ னோக்கி
யிணர்ததைபூங் கான லென்னையு நோக்கி
யுணர்வொழியப் போன வொலிதிரைநீர்ச் சேர்ப்பன்
வணர்சுரிமையம் பாலோய் வண்ணமுண் டேனல். (க)

என்று - நீர் இம்முத்துக்களை வாங்குமினென்று. மான்மகன் - மயங்கியமகன்; காமனுமாம். ஓதம் - கடல். ஓதம் வெண்முத்தைத்தந்து கானற்கோதைகொண்டு விலைஞர்போல் மீளும் புகாரென்க. ஓதம் - எழுவாய். விலைஞர் - விற்போர்; ஒன்றைக்கொடுத்து ஒன்றைப்பெறுவது விலைஞருக்கியல்பு. ஒளிர்வெண்முத்த மென்றும் பாடம்.

உகூ. மறை - இரகசியம். மணந்தாராகியமடவாரை; மடவாரது, உருபு மயக்கம். பாக்கம் - கடற்கரையூர். இறை - தங்குதல். மடவாரதுசெங்கை வளைக ளுற்றுவதை. அன்னம் பூத்த புன்னைக்கொம்பேற, அவ்வன்னத்தையும் அரும்பு முதலியவற்றையும் முறையே நிறைமதியும் மீனுமாகக்கருதி ஆம்பல் மலரும் புகாரென்க. வண்டூதுமெனவே மலர்தல் பெறப்பட்டது.

ஙo. உண்டாரை வெல் நறா - உண்டவர்களைத் தன்கடுமையால் வெல்லும் நறா. ஊண் ஒளியா - உண்ட உணவை மறையாத. உறை - மருந்து. தண்டா நோய் - அமையாத காமநோய். வண்டல் - மகளிர்விளையாட்டு; வண்டால் - விகாரம். மதியும், வேலும் உருவகம். மாதர், தமதுவண்டலைத் திரையழிப்பக் கையால் மணலைமுகந்து கடலைத்தூர்க்கும் புகாரென்க; இது, “முன்னைத்தஞ்சிற் றில்” என்னுங் கவியில் ‘அன்னைக் குரைப்பே னறிவாய் கடலே’ என்பதுபோலப் பெண்களுடைய பேதைமைத்தன்மையை நன்குபுலப்படுத்திநின்றது.

ஙக. ஆடும் - விளையாடும். அலவன் - நண்டு. பொறியலவன் - “புள்ளிக் கள்வன்” என்பதுபோலநின்றது. இணர் - பூங்கொத்து. உணர்வு ஒழிய - அறிவு

இது, காமமிக்க கழிபடர்கிளவி.

௩௨. தம்முடைய தண்ணளியுந் தாமுந்த மான்றேரு
மெம்மை நினையாது விட்டாரே விட்டகல்க
வம்மென் னிணர வடம்புகா ளன்னங்கா
ளம்மை மறந்தாரை நாமறக்க மாட்டேமால். (௨)

இதுவுமது.

௩௩. புன்கண்கூர் மாலைப் புலம்புமென் கண்ணேபோற்
றுன்ப முழவாய் துயிலப் பெறுதியா
லின்கள்வாய் நெய்தானீ யெய்துங் கனவினுள்
வன்கணார் கானல் வரக்கண் டறிதியோ. (௩)

இதுவுமது.

௩௪. புள்ளியன்மான் றேராழி போன வழியெல்லாந்
தெள்ளுநீ ரோதஞ் சிதைத்தாய்மற் றென்செய்கோ
தெள்ளுநீ ரோதஞ் சிதைத்தாய்மற் றெம்மொடீங்
குள்ளாரோ டுள்ளா யுணராய்மற் றென்செய்கோ. (௪)

தன்னைவிட்டுநீங்க. வணர்சுரி ஐம்பாலோய் - வளைந்த கடைகுழன்ற கூந்தலையுடையாய். சேர்ப்பன்வண்ணமென்க. இப்பாட்டின்கருத்து, [திருக்கோவையார், ௮௪] "நீகண் டனையெனின் வாழலை நேரிழை யம்பலத்தான், சேய்கண் டனையன்சென் றாங்கோ ரலவன்றன் சீர்ப்பெடையின், வாய்வண் டனையதொர் நாவற் கனிநனி நல்கக்கண்டு, பேய்கண் டனையதொன் றாகிநின் றானப் பெருந்தகையே" என்பதுபோல நின்றதுகாண்க.

௩௨. தண்ணளியுந் தாமுந்த மான்றேருமென்று பின்பு சிலசொல்ல எண்ணியவள் அதனைக் காதன்மிகுதியான்மறந்து கலங்கி, விட்டாரென்றாள்; "மடமா மயிலே குயிலே மழலை, நடைமா னனமே நலமார் கிளியே, யுடனாடு மெனை யனை யென் றுருகாத், தொடையாழ் மழலைம் மொழிசோர்ந் தனளே" என்றாருமுளர். [சீவகசிந்தாமணி, கேம, ௧௧௫.] அன்றி உயர்திணையையும் அஃறிணையையுமெண்ணி உயர்திணையான் முடித்தாரென்றுமாம். மறக்கமாட்டேமென்றது ஒருசொல்.

௩௩. புன்கண் - துன்பம். துயிலுதல் - குவிதல். இன்கள்வாய்நெய்தா லென்றாள்; தன்கண் துயிலாதுவருந்த அது கவற்சியின்றித் துயிறலின், நீ கள்ளுண்டுமயங்கினையாதலாற் கேட்டுஞ் சொல்லமாட்டாயாயினுமென்று. எய்துங் கனவினுளென்றாள்; உறங்குவார்க்குக் கனவுமுண்டென்றுகருதி.

௩௪. புள் இயல் மான் - பறவையின் இயல்பையுடையகுதிரை; விரைந்து செல்லுவனவென்றபடி. ஆழி - உருளை. வழியெல்லாஞ்சிதைத்தாய். எனசெய்கு - என்செய்வேன்; தனித்தன்மை; ஒகாரம் ஈற்றசை. ஈங்கு உள்ளார் - ஈங்குள்ளாராகிய அலர்தூற்றும் அயலார். உணராய் - நீ அவர்களோடுள்ளாயாதலால் என்னையறியாய். அன்றி, எம்மொடீங் குள்ளாரோ டுள்ளாயென்பதற்கு எம்மனம் விட்டுநீங்காத தலைவரோடு உள்ளாயாதலாலென்றுமாம்.

இதுவுமது.

௩௫. சேர்ந்தநங் காதலர் நேமி நெடுந்திண்டே
ரூர்ந்த வழிசிதைய வூர்கின்ற வோதமே
பூந்தண் பொழிலே புணர்ந்தாடு மன்னமே
யீர்ந்தண் டுறையே யிதுதகா தென்னீரே. (௫)

இதுவுமது.

௩௬. சேர்ந்தநங் காதலர் நேமி நெடுந்திண்டே
ரூர்ந்த வழிசிதைய வூர்ந்தாய்வாழி கடலோத
மூர்ந்த வழிசிதைய வூர்ந்தாய்மற் றெம்மோடு
தீர்ந்தாய்போற் றீர்ந்திலையால் வாழி கடலோதம். (௬)

மயங்குதிணைநிலைவரி. வேறு.

இஃது, அலரறிவுறீஇ வரைவு கடாயது.

௩௭. நன்னித்-திலத்தின் பூணணிந்து நலஞ்சார் பவளக் கலையுடுத்துச்
செந்நெற் பழனக் கழனிதொறுந் திரையு-லாவு கடற்சேர்ப்ப
புன்னைப் பொதும்பர் மகரத்திண் கொடியோ னெய்த புதுப்புண்க
ளென்னைக் காணு வகைமறைத்தா லன்னை காணி னென்செய்கோ.

இதுவுமது.

௩௮. வாரித் தரள நகைசெய்து வண்செம் பவள வாய்மலர்ந்து
சேரிப் பரதர் வலைமுன்றிற் றிரையு லாவு கடற்சேர்ப்ப
மாரிப் பீரத் தலர்வண்ண மடவாள் கொள்ளக் கடவுள்வரைந்
தாரிக் கொடுமை செய்தாரென் றன்னை யறியி னென்செய்கோ. (௨)

இதுவுமது.

௩௯. புலவுற் றிரங்கி யதுநீங்கப் பொழிற்றண் டலையிற் புகுந்துதிர்ந்த
கலவைச் செம்மன் மணங்கமழத் திரையு லாவு கடற்சேர்ப்ப

---

௩௫. சேர்ந்த - நம்மோடுபொருந்திய; பிரியேனென்று சூளுறைந்தவென்று மாம். நேமி - உருளை. ஓதம் - வெள்ளம். இதுவென்றது பிரிதலை. பிரிவென்னவும் அஞ்சுகின்றாளாதலின், இதுவெனச் சுட்டியொழிந்தாள்.

௩௬. நேமி நெடு திண்டேர் - வட்டக்காலாற்சிறந்த நெடிய திண்ணியதேர். தீர்ந்தாய் போறல் தீர்ந்திலை - உறவுபோலிருந்து உறவாயினையில்லை. இது, கந்தருவ மார்க்கத்தால் இடைமடக்கிவந்தது.

௩௭. பொதும்பர் - பொதும்பரில்=சோலையில். பொதும்பர் தாதுக்களையுதிர்த்துப் புதுப்புண்களைமறைத்தாலென்றுமாம். என்செய்கு - என்செய்வேன்.

௩௮. வாரித்தரளம் - கடல்முத்து. பீரத்தலர் - பீர்க்கின் அலர். கடவுள் வரைந்து - கடவுளைவழிபட்டு. அறியின் - ஆராய்ந்தறியின். கொடுநோய்செய்தா ரென்றும் பாடம்.

௩௯. புலவுற்றிரங்கியது நீங்க - புலாலால்நாற்றத்தையடைந்து முழங்கிக்கொண் டிருத்தலொழிய; புலத்தலையடைந்து வருந்தியது நீங்கவென்றும் ஒருபொருள்.

பலவுற் றொருநோய் துணியாத படர்நோய் மடவா டனியுழப்ப
வலவுற் றிரங்கி யறியாநோ யன்னை யறியி லென்செய்கோ. (௩)

வேறு.

இது, மாலைப்பொழுதுகண்டு ஆற்றளாகிய தலைமகள் தோழிக்குரைத்தது.

௪0. இளையிருள் பரந்ததுவே யெற்செய்வான் மறைந்தனனே
களைவரும் புலம்புநீர் கண்பொழீஇ யுகுத்தனவே
தளையவிழ் மலர்க்குழலாய் தணந்தார்நாட் டுளதாங்கொல்
வளைநெகிழ வெரிசிந்தி வந்தவிம் மருண்மாலை. (௪)

இதுவுமது.

௪க. கதிரவன் மறைந்தனனே காரிருள் பரந்ததுவே
யெதிர்மலர் புரையுண்க ணெவ்வநீ ருகுத்தனவே
புதுமதி புரைமுகத்தாய் போனார்நாட் டுளதாங்கொல்
மதியுமிழ்ந்து கதிர்விழுங்கி வந்தவிம் மருண்மாலை. (௫)

இதுவுமது.

௪உ. பறவைபாட் டடங்கினவே பகல்செய்வான் மறைந்தனனே
நிறைநிலா நோய்கூர நெடுங்கணீ ருகுத்தனவே
துறுமல ரவிழ்குழலாய் துறந்தார்நாட் டுளதாங்கொன்
மறவையா யென்னுயிர்மேல் வந்தவிம் மருண்மாலை. (௬)

சாயல்வரி. வேறு.

இது, மெலிதாகச்சொல்லிக் குறை நயப்பித்தல்;
ஆற்றுவித்தற்பொருட்டுத் தோழி இயற்பழிக்கத் தலைமகள்
இயற்பட மொழிந்ததூஉமாம்.

௪௩. கைதை வேலிக் கழிவாய் வந்தெம்
பொய்த லழித்துப் போனா ரொருவர்
பொய்த லழித்துப் போனா ரவர்நம்
மையன் மனம்விட் டகல்வா ரல்லர். (௧)

தோன்றிற்று. கலவை - பலவுங்கலந்தது. செம்மல் - பழம்பூ. பலவுற்று - பலநோயிலேபொருந்தி. படர் - நினைவு. அலவுற்று - மெலிந்து.

௪0. இளையிருள் - இளைய இருள்; விகாரம். எற்செய்வான் - சூரியன். களைவரும் புலம்புநீர் - களைதற்கரிய தனிமைவருத்தத்தால்வந்த நீர்; புலம்பு - தனிமை. மாலை உளதாங்கொலெனவியையும்.

௪க. எதிர்மலர் - செவ்விமலர்; எதிர்த்துப்பிணைத்தமலரென்றும், தோற்றுகின்ற மலரென்றுமாம். எவ்வம் - துன்பம்.

௪உ. பாட்டடங்கின - ஒலித்தலடங்கின. நிறைநிலாநோய்கூர - நிறுத்தநில்லாவாய் நோய்கள் அதிகரியாநிற்க. மறவையாய் - மறத்தையுடைத்தாய். மயங்குதிணைநிலைவரியென்றது வருந்தினவொழுக்கம்.

௪௩. பொய்தல் அழித்து - விளையாட்டைமறப்பித்து. நம்மையன்மனமென்றுள்; ஒற்றுமையால்.

இதுவுமது.

சச. கானல் வேலிக் கழிவாய் வந்து
நீநல் கென்றே' நின்று ரொருவர்
நீநல் கென்றே நின்று ரவர்நம்
மானேர் நோக்க மறப்பா ரல்லர். (உ)

இதுவுமது.

சரு. அன்னந் துணையோ டாடக் கண்டு
நென்ன ணேக்கி நின்று ரொருவர்
நென்ன ணேக்கி நின்று ரவர்நம்
பொன்னேர் சுணங்கிற் போவா ரலலர். (ங)

முகமில்வரி. வேறு.

இது, காமமிக்க கழிபடர்கிளவி.

சசா. அடையல் குருகே யடையலெங் கானல
அடையல் குருகே யடையலெங் கானல்
உடைதிரைநீர்ச் சேர்ப்பற் குறுநோ யுரையாய்
அடையல் குருகே யடையலெங் கானல்.

வேறு.

சஎ. ஆங்கனம்பாடிய வாயிழை பின்னரும்
காந்தண் மெல்விரற் கைக்கிளை சேர்குரற்
றீந்தொடைச் செவ்வழிப் பாலை யிசையெழீஇப்
பாங்கினிற் பாடியோர் பண்ணுப் பெயர்த்தாள்.

வேறு.

இது, மாலைப்பொழுதுகண்டு தலைவிகூறியது.

சஅ. நுளையர் விளரி நொடிதருந்தீம் பாலை
யிளிகிளையிற் கொள்ள விறுத்தாயான் மாலை

சச. நீநல்கு என்றே நின்றார் - நீ அருள்செய்வாயென்றுசொல்லியேநின்றார்.

சரு. சுணங்கின் - சுணங்குபோல. 'கைதைவேலி' முதலியமூன்றும் கந்தருவமார்க்கத்தால் இடைமடக்கிவந்தன.

சசா. உரையாய் - சொல்லாதிருக்கின்றனை; அடையல் - அடையாதே. சேர்ப்பற்கு நோய் உரையாய்; ஆதலால், குருகே எங்கானலில்வந்து அடையலென முடிக்க. இதுவும் கந்தருவமார்க்கத்தால் அடிமடக்கிவந்தது.

சஎ. ஆங்கனம்பாடிய - அவன்பாடினாற்போலப்பாடிய. எழீஇ - எழுப்பி. பண்ணு - பண்ணை.

சஅ. விளரிநொடிதருந்தீம்பாலை - விளரிப்பாலை; நொடிதருதல் - சொல்லுதல். இளி - யாழ்நரம்புள் ஒன்று. கிளை - கைக்கிளையென்னுநரம்பு. நின்றநரம்'

யிளிகிளையிற் கொள்ள விருத்தாய்மன் னியேற்
கொளவல்லா யென்னுவி கொள்வாழி மாலை. (க)

இதுவுமது.

சக. பிரிந்தார் பரிந்துரைத்த பேரருளி னீழ
லிருந்தேங்கி வாழ்வா ருயிர்ப்புறத்தாய் மாலை
யுயிரப்புறத்தாய் நீயாகி லுள்ளாற்று வேந்த
னெயிற்புறத்து வேந்தனோ டென்னுதி மாலை. (உ)

இதுவுமது.

ருo. பையுணோய் கூரப் பகல்செய்வான் போய்வீழ
வையமோ கண்புதைப்ப வந்தாய் மருண்மாலை
மாலைநீ யாயின் மணந்தா ரவராயின்
ஞாலமோ நல்கூர்ந் ததுவாழி மாலை. (ங)

வேறு.

இது, வரைவுநீட்டித்தவிடத்துத் தலைமகன்
சிறைப்புறந் தானாகக்கூறியது.

ருக. நீத்துழைஇ வந்தவிச் செல்லன் மருண்மாலை
தூக்காது துணிந்தவித் துயரெஞ்சு கிளவியாற்
பூக்கமழ் கானலிற் பொய்ச்சூள் பொறுக்கென்று
மாக்கடற் றெய்வநின் மலரடி வணங்குதும்.

பிற்கு ஆருநரம்பு பகையாகலின், இளிகிளையிற்கோடல் கூடமென்னும் குற்மென்பர். கொளவல்லாய் - கொள்ளுதற்குவல்லாய். கொளைவல்லாயெனவு பாடம்.

சக. பரிந்து - அன்புடையராய். ஏங்கி - வருந்தி. உயிர்ப்புறத்தாய் - உரைச்சூழ்ந்தாய். உள்ளாற்றுவேந்தன் - சொச்சியான். எயிற்புறத்துவேந்தன் உழிஞையான்; வேந்தனோடு - வேந்தனுக்கு. உள்ளாற்று வேந்தனுடைய எய் புறத்துவேந்தனுக்கும் உனக்கும் என்னவுறவுண்டு.

ருo. வையமோகண்புதைப்ப - வையத்துள்ளார் கண்புதைப்ப. நீ அவரெ னுஞ்சொற்கள் கொடுமைகுறித்துநின்றன. ஞாலமோ நல்கூர்ந்ததென்றாள்; , நோய் எல்லார்க்குமுண்டென்று தனக்குத் தோற்றுதலால். இது 'தான்ச உலகுகவிழும்' என்னும் பழமொழிபோல நின்றது. பைதனோயென்றும் பாட

ருக. துழைஇ - பரப்பி. செல்லல் - வருத்தம். தூக்காது - நம்மைவரு மென்று கருதாது. துணிந்த இத்துயர் எஞ்சு கிளவியால் - துணிதற்குக்காமான நல்லவார்த்தையோடே. அஃதாவது நின்னிற்பிரியேனென்றது. கான கூறியவென ஒருசொல் வருவிக்க. பொய்ச்சூள - பொய்ச்சபதம்.

வேறு.

௫உ. எனக்கேட்டு,

கானல்வரி யான்பாடத் தானொன்றின்மேல் மனம்வைத்து
மாயப்பொய் பலகூட்டு மாயத்தாள் பாடினளென
யாழிசைமேல் வைத்துத்தன் ஊழ்வினைவந் துருத்ததாகலி
னுவவுற்ற திங்கண்முகத்தாளைக் கவவுக்கை ஞெகிழ்ந்தனனாய்ப்
பொழுதீங்குக் கழிந்ததாகலி னெழுதுமென் றுடனெழா
தேவலாள ருடன்சூழ்தரக் கோவலன்றான் போனபின்னர்த்
தாதவிழ் மலர்ச்சோலை யோதையாயத் தொலியவித்துக்
கையற்ற நெஞ்சினளாய் வையத்தி னுள்புக்குக்
காதலனுட னன்றியே மாதவிதன் மனைபுக்காள்
ஆங்கு,
மாயிரு ஞாலத் தரசு தலைவணக்குஞ்
சூழி யானைச் சுடர்வாட் செம்பியன்
மாலைவெண் குடைகவிப்ப
வாழி மால்வரை யகவயி னுங்கென.

கானல்வரி முற்றிற்று.

௫உ. எனக்கேட்டு - என்று மாதவிபாடக்கேட்டு. கானல்வரி யான் பாடத் தான் ஒன்றின்மேல் மனம் வைத்து மாயப் பொய் பல கூட்டும் மாயத்தாள் பாடினளென - நான் கானல்வரிபாடத் தான் அப்படிப்பாடாமல் என்னையொழிய வேறொன்றின்மேல் மனம்வைத்து வஞ்சனையுடன்கூடிய பொய்கள் பலவற்றைக்கூட்டும் மாயத்தாளாகிப் பாடினளென்று கோவலன் எண்ணி. யாழிசைமேல்வைத்துத் தன் ஊழ்வினை உருத்ததாகலின், ஞெகிழ்ந்தனனாய் உடனெழாது கோவலன் போனபின்னரென இயையும். உருத்தது - கோபித்தது. ஞெகிழ்தல் - நெகிழ்தல். கவவு - அகத்திடுதல். கையற்ற - செயலற்ற. வையம் - வண்டி. ஆங்கு அசை. ஆழிமால்வரை - சக்கரவாளகிரி. அகவயிற் கவிப்பவெனப் புக்காளெனவியையும்.

இக்கானல்வரிப்பொருட்குறிப்பு, பெரும்பாலும் இந்நூலின் அரும்பதவுரையைத் தழுவியே எழுதப்பட்டது.

எட்டாவது

வேனிற்காதை.

நெடியோன் குன்றமுந் தொடியோள் பௌவமுந்
தமிழ்வரம் பறுத்த தண்புன னாட்டு
மாட மதுரையும் பீடா ருறந்தையுங்
கலிகெழு வஞ்சியு மொலிபுனற் புகாரு
மரைசுவீற் றிருந்த வுரைசால் சிறப்பின்
மன்னன் மாரன் மகிழ்துணை யாகிய
வின்னிள வேனில் வந்த திவணென
வளங்கெழு பொதியின் மாமுனி பயந்த
விளங்காற் றூத னிசைத்தன னாதலின்
மகர வெல்கொடி மைந்தன் சேனை
புகாறு கோலங் கொள்ளுமென் பதுபோற்
கொடிமிடை சோலைக் குயிலோ னென்னும
படையுள் படுவோன் பணிமொழி கூற
மடலவிழ் கானற் கடல்விளை யாட்டினுட்
கோவல னூடக் கூடா தேகிய
மாமலர் நெடுங்கண் மாதவி விரும்பி
வானுற நிவந்த மேனிலை மருங்கின்
வேனிற் பள்ளி யேறி மாணிழை
தென்கடன் முத்துந் தென்மலைச் சந்துந்
தன்கட னிறுக்குந் தன்மைய வாகலிற்
கொங்கை முன்றிற் குங்கும வளாகத்து
மையறு சிறப்பிற் கையுறை யேந்தி
ய[illegible]திர மரபின் யாழ்கை வாங்கி
ம[illegible]ர கீதம் பாடினள் மயங்கி
யொ[illegible]ன்பான் விருத்தியுட் டலைக்கண் விருத்தி
நன்ப[illegible]ா லமைந்த விருக்கைய ளாகி
வலக்[illegible]கப் பதாகை கோட்டொடு சேர்த்தி
யிடக்கை[illegible] நால்விரன் மாடகந் தழீஇச்
செம்பகை [illegible] யார்ப்பே யதிர்வே கூடம்
வெம்பகை நீ[illegible]க்கும் விரகுளி யறிந்து

பிழையா மரபி னீரேழ் கோவையை
யுழைமுதற் கைக்கிளை யிறுவாய் கட்டி
யிணைகிளை பகைநட் பென்றிந் நான்கி
னிசைபுணர் குறிநிலை யெய்த நோக்கிக்
குரல்வா யிளிவாய்க்* கேட்டன ளன்றியும்
வரன்முறை மருங்கி னைந்தினு மேழினு
முழைமுத லாகவு முழையீ றாகவுந்
†குரன்முத லாகவுங் குரலீ றாகவு
மகநிலை மருதமும் புறநிலை மருதமு
மருகியன் மருதமும் பெருகியன் மருதமு
நால்வகைச் சாதியு நலம்பெற நோக்கி
மூவகை யியக்கி முறையுளிக் கழிப்பித்
திறத்து வழிப்படூஉந் தெண்ணிசைக் கரணத்துப்
புறத்தொரு பாணியிற் பூங்கொடி மயங்கிச்
சண்பக மாதவி தமாலங் கருமுகை
வெண்பூ மல்லிகை வேரொடு மிடைந்த
வண்செங் கழுநீ ராயிதழ்க் கத்திகை
யெதிர்பூஞ் செவ்வி யிடைநிலத் தியாத்த
முதிர்பூந் தாழை முடங்கல்வெண் டோட்டு
விரைமலர் வாளியின் வியனில மாண்ட
வொருதனிச் செங்கோ லொருமக ளாணையி
னொருமுக மன்றி யுலகுதொழு திறைஞ்சுந்
திருமுகம் போக்குஞ் செவ்விய ளாகி
யலத்தகக் கொழுஞ்சே றளைஇ யயலது
பித்திகைக் கொழுமுகை யாணியிற் கொண்டு
மன்னுயி ரெல்லா மகிழ்துணை புணர்க்கு
மின்னிள வேனி லிளவர சாளன்
‡அந்திப் போதகத் தரும்பிடர்த் தோன்றிய
திங்கட் செல்வனுஞ் செவ்விய னல்லன்
புணர்ந்த மாக்கள் பொழுதிடைப் படுப்பினுந்
தணந்த மாக்கள் தந்துணை மறப்பினு
நறும்பூ வாளியி னல்லுயிர் கோடல்
விறும்பூ தன்றிஃ தறிந்தீ மின்னென

---

* கொண்டனளெனவும் பாடம்.
† குரல்குரலாகவுமெனவும் பாடம்.
‡ அந்தியம் போதகமெனவும் பாடம்.

வெண்ணெண் கலையு மிசைந்துடன் போகப்
பண்ணுந் திறனும் புறங்கூறு நாவிற்
றளைவா யவிழ்ந்த தனிப்படு காமத்து
விளையா மழலையின் விரித்துரை யெழுதிப்
பசந்த மேனியள் படருறு மாலையின்
வசந்த மாலையை வருகெனக் கூஉய்த்
தூமலர் மாலையிற் றுணிபொரு ளெல்லாங்
கோவலற் களித்துக் கொணர்க வீங்கென
மாலை வாங்கிய வேலரி நெடுங்கண்
கூல மறுகிற் கோவலற் களிப்பத்
திலகமு மளகமுஞ் சிறுகருஞ் சிலையுங்
குவளையுங் குமிழுங் கொவ்வையுங் கொண்ட
மாதர் வாண்முகத்து மதைஇய நோக்கமொடு
காதலிற் றோன்றிய கண்கூடு வரியும்
புயல்சுமந்து வருந்திப் பொழிகதிர் மதியத்துக்
கயலுலாய்த் திரிதருங் காமர் செவ்வியிற்
பாகுபொதி பவளந் திறந்து நிலாவுதவிய
நாகிள முத்தி னகைநலங் காட்டி
வருகென வந்து போகெனப் போகிய
கருநெடுங் கண்ணி காண்வரிக் கோலமு
மந்தி மாலை வந்ததற் கிரங்கிச்
சிந்தைநோய் கூருமென் சிறுமை நோக்கிக்
கிளிபுரை கிளவியு மடவன நடையுங்
களிமயிற் சாயலுங் கரந்தன ளாகிச்
செருவேனெடுங்கட் சிலதியர் கோலத்
தொருதனி வந்த வுள்வரி யாடலுஞ்
சிலம்புவாய் புலம்பவு மேகலை யார்ப்பவுங்
கலம்பெறு நுசுப்பினள் காதனோக்கமொடு
திறத்துவே றாயவென் சிறுமை நோக்கியும்
புறத்துநின் றாடிய புன்புற வரியுங்
கோதையுங் குழலுந் தாதுசே ரளகமு
மொருகாழ் முத்தமுந் திருமுலைத் தடமு
மின்னிடை வருத்த நன்னுத றோன்றிச்
சிறுகுறுந் தொழிலியர் மறுமொழி யுய்ப்பப்
புணர்ச்சியுட் பொதிந்த கலாந்தரு கிளவியி
னிருபுற மொழிப்பொருள் கேட்டன ளாகித்

தளர்ந்த சாயற் றகைமென் கூந்தல்
கிளர்ந்துவே றாகிய கிளாவரிக் கோலமும்
பிரிந்துறை காலத்துப் பரிந்தன ளாகி
யென்னுறு கிளைகட்குந் தன்னுறு துயரந்
தேர்ந்துதேர்ந் துரைத்த தேர்ச்சிவரி யன்றியும்
வண்டலர் கோதை மாலையுண் மயங்கிக்
கண்டவர்க் குரைத்த காட்சி வரியு
மடுத்தடுத் தவர்முன் மயங்கிய மயக்க
மெடுத்தவர் தீர்த்த வெடுத்துக்கோள் வரியு
மாடன் மகளே யாதலி னாயிழை
பாடுபெற் றனவப் பைந்தொடி தனக்கென
வணித்தோட்டுத் திருமுகத் தாயிழை யெழுதிய
மணித்தோட்டுத் திருமுக மறுத்ததற் கிரங்கி
வாடிய வுள்ளத்து வசந்த மாலை
தோடலர் கோதைக்குத் துனைந்துசென் றுரைப்ப
மாலை வாரா ராயினு மாணிழை
காலைகாண் குவமெனக் கையறு நெஞ்சமொடு
பூமல ரமளிமிசைப் பொருந்தா தவிந்தனள்
மாமலர் நெடுங்கண் மாதவி தானென.

க - உ. நெடியோன் குன்றமுந் தொடியோள் பௌவமுந்
தமிழ்வரம் பறுத்த தண்புன னாட்டு

நெடியோன் குன்றம் - வேங்கடமலை. தொடியோள் - பெண்பாற்பெயராற் குமரியென்பதாயிற்று. ஆகவே தென்பாற்கண்ணதோர் ஆற்றிற்குப் பெயராம். ஆனால், நெடியோன்குன்றமும் தொடியோள் நதியுமென்னாது பௌவமுமென்றது என்னையெனின், முதலூழியிறுதிக்கண் தென்மதுரையகத்துத் தலைச்சங்கத்து அகத்தியனாரும் இறையனாரும் குமரவேளும் *முரஞ்சியூர் முடிநாகராயரும் நிதியின்கிழவனும் என்றிவருள்ளிட்ட நாலாயிரத்து நானூற்று நாற்பத்தொன்பதின்மர் எண்ணிறந்த பரிபாடலும் முதுநாரையும் முதுகுருகும் களரியாவிரையுமுள்ளிட்டவற்றைப் புனைந்து தெரிந்து நாலாயிரத்து நானூற்று நாற்பதிற்றியாண்டு †இரீயினார், காய்சினவழுதிமுதற் கடுங்கோனீறாயுள்ளார எண்பத்தொன்பதின்மர்; அவருட் கவியரங்கேறினார் எழுவர் பாண்டியருள் ஒருவன் சயமாகீர்த்தியனாகிய நிலந்தருதிருவிற்பாண்டியன் தொல்காப்பியம் புலப்படுத்து இரீயினான். அக்காலத்து அவர்நாட்டுத் தென்பாலிமுகத்திற்கு வடவெல்லையாகிய பஃறுளியென்னுமாற்றிற்கும் குமரியென்னுமாற்றிற்குமிடையே எழுநூற்றுக் காவதவாறும் இவற்றின் நீர்மலிவானென மலிந்த ஏழ்தெங்கநாடும் ஏழ்மதுரைநாடும் ஏழ் முன்பாலைநாடும் ஏழ்

---

* முரிஞ்சியூரெனவும் பிரதிபேதமுண்டு. † இரீயினார் - பிறவினை.

பின்பாலைநாடும் ஏழ் குன்றநாடும் ஏழ்குணகாரைநாடும் ஏழ் குறும்பனைநாடுமென்னும் இந்த நாற்பத்தொன்பதுநாடும் குமரி கொல்லமுதலிய பன்மலைநாடும் காடும் நதியும் பதியும் தடநீர்க்குமரி வடபெருங்கோட்டின்காறும் கடல்கொண்டொழிதலாற் குமரியாகிய பௌவமென்றாரென்றுணர்க. இஃது என்னை பெறுமாறெனின், *"வடிவே லெறிந்த வான்பகை பொறாது, பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக், குமரிக் கோடு கொடுங்கடல் கொள்ள" என்பதனானும் கணக்காயனார் மகனார் நக்கீரனாருரைத்த இறையனார்பொருளுரையானும் உரையாசிரியராகிய இளம்பூரணவடிகள் முகவுரையானும் பிறவாற்றானும்பெறுதும். அஃது அற்றாக, வடக்கின்கண் வேங்கடமலை தெற்கின்கட் குமரிக்கடலெனக் குறியாற்கூறினவர் கீழ்பான் மேல்பாற்கு எல்லைகூறாதது என்னையோவெனின், நெடுந்திசையாகிய வடபாற்கெல்லை குன்றமென்றும் தென்பாற்கெல்லை குமரிப்பௌவமென்றுங்கூறினமையான் ஒழிந்ததிசைகட்கு ஒழிந்தபௌவம் எல்லையென்பதாயிற்று ; என்னை ? "வேங்கடங் குமரி தீம்புனற் பௌவமென், றிந்நான் கெல்லை தமிழது வழக்கே" என்றார் சிகண்டியாருமாகலின். அன்றியும் வடதிசைக்கண் வடுகொழிந்த திரிபுடைமொழி பலவுளவாகலான் மலையெல்லைகூறி ஒழிந்த திசைமூன்றிற்கும் திரிபின்மையாற் கடலெல்லைகூறினாரெனினுமமையும்.

இ - ள். வடக்கின்கண் வேங்கடமலையும் தெற்கின்கட் குமரிக்கடலும் கிழக்கின்கண்ணும் மேற்கின்கண்ணும் ஒழிந்த கடல்களுமே தமிழ்நாட்டிற்கு எல்லையென்று கூறுபடுத்த மூவேந்தருடைய குளிர்ந்த புனலையுடைய நல்லநாட்டிடத்தென்க.

௩-எ. மாட மதுரையும் பீடா ருறந்தையுங்
கலிகெழு வஞ்சியு மொலிபுனற் புகாரு
மரசுவீற் றிருந்த வுரைசால் சிறப்பின்
மன்னன் மாரன் மகிழ்துணை யாகிய
வின்னிள வேனில் வந்த தீவணென

இந்நகரம் நான்கிற்கும் மாடமுதலியநான்கும் அடை.

இ - ள். மதுரையும் உறந்தையும் வஞ்சியும் புகாருமென்னும் நான்குநகரிற்கும் அரசனைத் தன் தேரும் புரவியும் யானையும் சேனையும் இச்சொன்னமுறையே வைத்து வீற்றிருந்த புகழமைந்த சிறப்பினையுடைய மாரனாகிய மன்னனுக்கு மனமகிழுந்துணையாகிய இன்பத்தைத்தரும் இளவேனிலென்னும் இளவரசன் இப்பொழுது இங்கே வந்துவிட்டானென்றென்க.

வந்தது - வருமென்னும் எதிர்காலத்தை இறந்த காலத்தாற்கூறினார் ; விரைவு; என்னை ? †"வாராக் காலத்து நிகழுங் காலத்து, மோராங்கு வரூஉம் வினைச்சொற் கிளவி, யிறந்த காலத்துக் குறிப்பொடு கிளத்தல், விரைந்த பொருள வென்மனார் புலவர்" என்றாராகலின். இஃது என்சொல்லியவாறோவெனின், காமனுக்குத் தேர் தென்றலும், புரவி கிள்ளையும், யானை அந்தியும், சேனை மகளிருமாதலால்

* காடுகாண்காதை, ௧௮-௨௦.

† தொல்காப்பியம், சொல்லதிகாரம், வினையியல்; ௪௪.

தேர் தென்னர்காவலும், புரவி *கிள்ளிகாவலும், யானை சேரமான்காவலுமாக்கித் தானும் தன்சேனையும் புகாரில் வீற்றிருந்தானென்பதுகருத்து. அஃது, †"உருவி லாள னொருபெருஞ் சேனை, யிகலமை ராட்டி யெதிர்நின்று விலக்கி" என்பதனானும், "மகர வெல்கொடி மைந்தன் சேனை, புகரறு கோலங் கொள்ளுமென் பது போல்" என மேற்கூறுதலானுமுணர்க. "திண்பரித் தென்றலந் தேருந் தார்புனை, வண்பரிக் கிள்ளையு மாலை யானையுங், கண்கடைப் படுகொலைக் காமர் சேனையு, மெண்படப் புகுந்தன னிரதி காந்தனே" என்றார் பிறருமெனக்கொள்க

அ-கரு. வளங்கெழு பொதியின் மாமுனி பயந்த
இளங்காற் றூத னிசைத்தன னாதலின்
மகர வெல்கொடி மைந்தன் சேனை
புகரறு கோலங் கொள்ளுமென் பதுபோற்
கொடிமிடை சோலை குயிலோ னென்னும
படையுள் படுவோன் பணிமொழி கூற

இ - ள். வளமைபொருந்திய பொதியத்துமுனிபயந்த இளங்காலாகியதூதன் வேலோனுக்கிசைத்தனனாதலானே காமன்சேனையாயுள்ளாரெல்லாம் கோலங் கொண்மினென்னும் பொருள்பயப்பப் பூங்கொடிகணமிடைந்த சோலையென்னும் பாசறையிலிருக்கும் அக்குயிலோனென்னும் சின்னமூதி காற்றூதன் தனக்குப் பணித்தமொழியைச் சேனைக்குக் கூறவென்க.

இளங்காற்றூதன் - தென்றலாகியதூதன்; இளைய காற்றூதனென்றுமாயிற்று. காற்றூதன் - ஓட்டுன். சேனை - மகளிர். கோலங்கோடல் - அக்காலத்திற்கேற் பனவுடுத்து முடித்துப் பூசிப் பூண்டல்; போர்க்கோலமென்றுமாயிற்று. படையுள் படுவோன் - சின்னமூதி; "சேனையுள் படுநனை யானையி னேவி" என்றார் கதை யினும். பணிமொழி - காற்றூதன் பணித்தமொழி. பணித்தல் - அருளிச்செய்தல், திசைச்சொல்; ‡"மண்டல மேபணி யாய்" என்பதுபோல. பணிவிடையென் னும்வழக்குமது.

கசு - கஅ. மடலவிழ் கானற் கடல்விளை யாட்டினுட்
கோவல னூடக் கூடா தேகிய
மாமலர் நெடுங்கண் மாதவி விரும்பி
வானுற நிவந்த மேனிலை மருங்கின்
வேனிற் பள்ளி யேறி

இ - ள். கடலாட்டாகிய விளையாட்டின்கண்ணே மடலவிழுங்கானலிடத்துக் கோவலனோடு ஊடுதலாலே தமியளாய்த் தன்மனையிற்புக்க கரியமலர்போலும்

* கிள்ளி - சோழன்.

† இந்திரவிழவூரெடுத்தகாதை, உஉச - உஉரு.

‡ திருச்சிற்றம்பலக்கோவையார், கஉஉ: "விண்டலை யாவர்க்கும் வேந்தர் வண் டில்லைமெல் லங்கழிசூழ், கண்டலை யேகரி யாக்கன்னிப் புன்னைக் கலந்த கள்வர், கண்டிலை யேவரக் கங்குலெல் லாமங்குல் வாய்விளக்கு, மண்டல மே பணி யாய்தமி யேற்கொரு வாசகமே."

நெடியகண்ணையுடைய மாதவி அதற்குவிரும்பிப் பருவத்திற்குப்பொருந்த வாணி லேயுறவுயர்ந்த மேனிலையில் ஒருபக்கத்து நிலாமுற்றத்தேயேறியென்க.

விளையாட்டினுளென்ருர், விளையாட்டுப்பூசல் வினையாயிற்றென்னும் வழக்குப் பற்றி.

கஅ - உஉ. மாணிழை

தென்கடன் முத்துந் தென்மலைச் சந்துந்
தன்கட னிறுக்குந் தன்மைய வாகலிற்,
கொங்கை முன்றிற் குங்கும வளாகத்து
மையறு சிறப்பிற் கையுறை யேந்தி

இ - ள். அந்த மாட்சிமைப்பட்ட இழையினையுடையாள் முத்தும் சந்தும் அக் காலத்திற்கு எப்பொழுதும் தான் கடனாகவிடக்கடவ திறையாகலான் முன்சென்ற பின்பனிக்காலத்திற் குங்குமத்தால் அலங்கரிக்கப்பட்ட முலைமுற்றமாகிய பரப் பிலே அம்முத்தையும் சந்தையும் கையுறையாகவேந்தியென்க.

கையுறை-காணிக்கை. ஏந்தியெனவே பூண்டும் பூசியுமென்பதாயிற்று. காணிக் கைகாட்டுவார் காண்பார்முன்றிலிற் கொணர்ந்துகாட்டுவாராகலிற் கொங்கைமுன் றிலில் ஏந்தியென்ருர். முலைக்குமுற்றம் - மார்பு.

உங - உரு. அதிரா மரபின் யாழகை வாங்கி
மதுர கீதம் பாடின ணயங்கி
யொன்பான் விருத்தியுட் டலைக்கண் விருத்தி
நன்பா லமைந்த விருக்கைய ளாகி

இ - ள். மாதவி, பணிமொழிகூற, அதற்குவிரும்பி ஏறிப் பூண்டு பூசி ஒன்பது வகைப்பட்ட இருப்பினுள் முதற்கண்ணதாகிய பதுமாசனமென்னும் ஆசனத் திருந்து கோவைகலங்கா மரபினையுடையயாழைக் கையில்வாங்கிக் கண்டதால் முந்துற மதுரகீதமாகப்பாடி அதுமயங்கிக் கலத்தாற் பாடத் தொடங்கினவ ளென்க.

இதனுள் விருத்தியென்பது இருப்பு. ஓவியநூலுள் நிற்றல் இருத்தல் கிடத்தல் இயங்குதலென்னும் இவற்றின்விகற்பங்கள் பலவுள. அவற்றுள் இருத்தல் திரிதர வுடையனவும் திரிதரவில்லனவுமென இருபகுதிய. அவற்றுள் திரிதரவுடையன யானை தேர் புரவி பூனைமுதலியன; திரிதரவில்லன ஒன்பதுவகைப்படும். அவை, பதுமுகம், உற்கட்டிதம், ஒப்படியிருக்கை, சம்புடம், அயமுகம், சுவத்திகம், தனிப் புடம், மண்டிலம், ஏகபாதம் எனவிவை; என்னை? "பதுமுக முற்கட் டிதமே யொப்படி, யிருக்கை சம்புட மயமுகஞ் சுவத்திகந், தனிப்புட மண்டில மேக பாத, முளப்பட வொன்பது மாகுந், திரிதர வில்லா விருக்கை யென்ப" என்ருராகலா னும், *"பன்னாள் கழிந்த பின்னர் முன்னு, ளண்மெய்ப் பாட்டினு ளிரக்க மெய்ந் நிறீஇ, யொண்வினை யோவியர் கண்ணிய விருத்தியுட், டலையத னும்பர்த் தான் குறிக் கொண்ட, பாவை நோக்கத் தாரணங் கெய்தி" எனப் பெருங்கதையுட் கூறினமையானுங்கொள்க. இனி நாடகநூலார் இவ்விருப்பை ஐம்பதென விரி

* பெருங்கதை, ருடு - வது நருமதைச்சம்பந்தம்.

வரையறையாற்கூறித் தொகைவரையறைகூறுவார் அவற்றை ஒன்பதினடக்கினாரெனவுணர்க ; என்னை ? "ஆதிப்பா விருத்தி யைம்பதிற் புலவோ, ரோதிக் கொண்டனரொன்பான் விருத்தி" என்றாராகலின். அவற்றுள் தலைக்கண்விருத்தியாவது பதுமாசனம். இதனாற்சொல்லியது அதிரர்மரபினையுடைய யாழைக் கையின்வாங்கிப் பதுமாசனமாகவிருந்தவள் தனக்கு நாயகனின்மையால் தியாதநாயகனுக மான தத்தாஜேக்கி எதிர்முகமாகவிருந்து வாசித்தலைக் கருதினாளென்பது. என்னை ? "முதற்க ணெதிர்முக நோக்கி நயத்தக, வொருவ னாகிய தோற்றமும்" என்றாராகலின். யாழ்வாசிக்குமுறைமையை, "நல்லிசை மடந்தை நல்லெழில் காட்டி, யல்லியம் பங்கயத் தயனினிது படைத்த, தெய்வஞ் சான்ற திருஞ்சுவை நல்யாழ், மெய்பெற வணங்கி மேலொடு கீழ்புணர்த், திருகையின் வாங்கி யிடவயி னிரீஇ, மருவிய விநய மாட்டுதல் கடனே" என்பதனானறிக. விநயம் - தேவபாணி.

உஎ - உஅ. வலக்கைப் பதாகை கோட்டொடு சேர்த்தி
யிடக்கை நால்விரல் மாடகந் தழீஇ

இ - ள். வலக்கையைப்பதாகையாகக் கோட்டின்மிசையேவைத்து இடக்கை நால்விரலான் மாடகத்தைத்தழுவியென்க.

பதாகைக்கையாவது பெருவிரல்குஞ்சித்து ஒழிந்தவிரலெல்லாநிமிர்த்தல் ; என்னை ? "எல்லா விரலு நிமிர்த்திடை யின்றிப், பெருவிரல் குஞ்சித்தல் பதாகையாகும்" என்றாராகலின். மாடகம் - வீக்குங்கருவி. அது முன்னர் ஆணியென்பதனுட்கூறினும்.

உகூ - ௩0. செம்பகை யார்ப்பே யதிர்வே கூடம்
வெம்பகை நீக்கும் விரகுளி யறிந்து

செம்பகை ஆர்ப்பு அதிர்வு கூடமென்னுநான்கினும் செம்பகை - தாழ்ந்த விசை - இன்பமின்றியிசைத்தல். ஆர்ப்பு மாத்திரையிறந்த சுருதி=ஒங்கவிசைத்தல். அதிர்வு நரம்பைச் சிதறவுந்தல். கூடம் இசைநிறவாதது=தன்பகையாகிய அருநரம்பினிசையிற்குன்றித் தன்றேசைமழுங்கலெனக்கொள்க. இதனை, "இன்னிசை வழிய தன்றி யிசைத்தல்செம் பகைய தாகுஞ், சொன்னமாத் திரையினேங்க விசைத்திடுஞ் சுருதி யார்ப்பே, மன்னியவிசைவ ராது மழுங்குதல் கூடமாகு, நன்னுதால் சிதற வுந்த லதிர்வென நாட்டி னாரே" என்பதனாற்கொள்க. இது பஞ்சபாரதீயம்.

அன்றி, "செம்பகை யென்பது பண்ணோ டுளரா, வின்பமி லோசை யென்மனார் புலவர்" "ஆர்ப்பெனப் படுவ தளவிறந் திசைக்கும்" "அதிர்வெனப் படுவ திழுமென லின்றிச், சிதறி யுரைக்குந ருச்சரிப் பிசையே" "கூடமென்பது குறியுற விளம்பின், வாய்வதின் வராது மழுங்கியிசைப் பதுவே" எனக்கூறினாருமுளர். இவைநான்கும் மரக்குற்றத்தாற் பிறக்கும் ; என்னை ? "நீரிலே நிற்ற லழுகுதல் வேத னிலமயக்குப், பாரிலே நிற்ற லிடிவீழ்த னேய்மரப் பாற்படல்கோ, ணேரிலே செம்பகை யார்ப்பொடு கூட மதிர்வுநிற்றல், சேரினேர் பண்க ணிறமயக்குப்படுஞ் சிற்றிடையே" என்றார்.

இ - ள். இச்சொல்லப்பட்ட பகைநரம்புநான்கும் புகாமல் நீக்கும்விரகைக் கடைப்பிடித்தறிந்தென்க.

௩௧ - ௩௨. பிழையா மரபி னீரேழ் கோவையை
யுழைமுதற் கைக்கிளை யிறுவாய்க் கட்டி

இ - ள். மயங்காமரபினையுடைய இப்பதினாற்கோவையாகிய சகோடயாழை உழைகுரலாகக் கைக்கிளைதாரமாகக் கட்டியென்க.

இக்குரன்முதலேழினும் மூற்றோன்றியதுதாரம்; "தாரத்துட் டோன்று முழையுழை யுட்டோன்று, மோருங் குரல்குரலி னுட்டோன்றிச் - சேருமினி, யுட்டோன்றுந் துத்தத்துட் டோன்றும், விளரியுட், கைக்கிளை தோன்றும் பிறப்பு" என்பதனால் தாரத்தில் முதற்பிறப்பதாகிய உழைகுரலாய்க் கைக்கிளைதாரமாகிய கோடிப்பாலை முதற்பிறக்கக்கட்டியென்க.

௩௩ - ௩௪. இணைகிளை பகைநட் பென்றிந் நான்கி
னிசைபுணர் குறிநிலை யெய்த நோக்கி

இணை கிளை பகை நட்பென்றுசொல்லப்பட்ட நான்கினும், இணை - இரண்டு நரம்பு; என்னை? "இணையெனப் படுவ கீழு மேலு, மணையத் தோன்று மளவின வென்ப." கிளை - ஐந்துநரம்பு; என்னை? "கிளையெனப் படுவ கிளக்குங் காலைக், குரலே யிளியே துத்தம் விளரி, கைக்கிளை யெனவைந் தாகு மென்ப." பகை - ஆறும் மூன்றும்; "நின்ற நரம்பிற் காறு மூன்றுஞ், சென்றுபெற நிற்பது கூட மாகும்." கூடமெனினும் பகையெனினுமொக்கும். நட்பு - நாலாநரம்பு.*

இ - ள். இந்நான்கனுள் இசைபுணருங்குறிநிலையைப்பொருந்தநோக்கியென்க.

௩௫. குரல்வா யிளிவாய்க் கேட்டனள்

இ - ள். குரல்முதலாக எடுத்து இளிகுரலாக வாசித்தாளென்க.

இனி வட்டப்பாலை இடமுறைத்திரிபு கூறுகின்றார். "குன்றாக் குரற்பாதி தாரத்தி லொன்று, நடுவ ணிணைகிளை யாக்கிக் - கொடியிடையாய், தாரத்தி லொன்று விளரிமே லேறடவுந், நேரத் தகுகுரலா நின்று." என் - எனின், உழை குரலாகிய கோடிப்பாலைநிற்க இடமுறைதிரியுமிடத்துக் குரல்குரலாயது செம்பாலை; இத னிலே குரலிற்பாதியும் தாரத்திலொன்றும் இரண்டின் அந்தரத்திலே கிளையாக்கித் தாரத்திலே நின்ற ஓரலகை விளரியின்மேலேறட விளரிகுரலாய்ப் படுமலைப்பாலையாம். இம்முறையே துத்தம் குரலாயது செவ்வழிப்பாலையாம். இளி குரலாயது அரும்பாலையாம். கைக்கிளை குரலாயது மேற்செம்பாலையாம். தாரம் குரலாயது விளரிப்பாலையாம். என அந்தரமைந்துநீக்கி உறழ்ந்து கண்டுகொள்க. இவ்விடத் தில் தாரநரம்பின் அந்தரக்கோலைத் தாரமென்றது "தன்னமுந் தாரமுந் தன்வழிப் படர" என்னுஞ்சூத்திரவிதியானென்க. இவ்வேழு பெரும்பாலையினையும் முத லடுத்து நூற்றுமூன்று பண்ணும் பிறக்கும் அவற்றுள் செம்பாலையுட்பிறக்கும் பண் கள்: பாலையாழ், நாகராகம், ஆகரி, தோடி, கௌடி, காந்தாரம், செந்துருத்தி, உதயகிரியெனவிவை. பிறவும் விரிப்பின் உரைபெருகுமாதலின் அவற்றை வந்த வழிக்கண்டுகொள்க. "நாற்பெரும் பண்ணுஞ் சாதி நான்கும், பாற்படு திறனும் பண்ணெனப் படுமே" என்றார்.

* கிளை ஐந்தாநரம்பென்றும், பகை ஆறாநரம்பென்றும் பிரதிபேதமுண்டு.

௩௫ - ௩௬. அன்றியும்,

வரன்முறை மருங்கி னைந்தினு மேழினும்

இ - ள். அங்ஙனம் இளிகுரலாக வாசித்தலேயன்றி முற்கூறியவகையே ஐந்து நரம்பானமுறைமையின் ஏழுநரம்பு வாசித்தாளென்றவாறு.

௩௭ - ௪௧. உழைமுத லாகவு முழையி றாகவுங்
குரன்முத லாகவுங் குரலீ றாகவு
மகநிலை மருதமும் புறநிலை மருதமு
மருகியன் மருதமும் பெருகியன் மருதமு
நால்வகைச் சாதியு நலம்பெற நோக்கி

இனி உழைகுரன்முதல் குரலீறாயுள்ள நான்கிற்கும் அகநிலைமருதமுதற் பெருகியன்மருதம் ஈறாயுள்ளநான்கும் நிரனிறை.

இ - ள். முன்னணிந்தமுறையே உழைகுரலாய கோடிப்பாலை அகநிலைமருதமாகவும், உழைகுரலாய்க் கைக்கிளைகுரலாய மேற்செம்பாலை புறநிலைமருதமாகவும், குரல்குரலாய செம்பாலை அருகியன்மருதமாகவும், குரல்தாரமாய்த் தாரங்குரலாய விளரிப்பாலை பெருகியன்மருதமாகவும் இச்சொல்லப்பட்ட சாதிப்பெரும்பண்ணையும் ஓசையினிமைபெற நோக்கியென்றவாறு.

௪௨. மூவகை யியக்கி முறையுளிக் கழிப்பி

இ - ள். வலிவும் மெலிவும் சமனுமென்னும் மூவகைப்பட்டசுருதியும் நிற்கு நிலைமையிலேநிறுத்தி முறையானே அத்தொழிலைக் கழித்தென்க.

௪௩ - ௪௪. திறத்து வழிப்படூஉந் தென்றிசைக் காரணத்துப்
புறத்தொரு பாணியிற் பூங்கொடி மயங்கி -

இ - ள். திறங்கட்குப் பிறப்பிடமாயுள்ள இச்சாதிப்பெரும்பண்களுட் புறநிலை மருதப்பண்ணை வாசித்தலிலே மயங்கியென்க.

அன்றி அத்திறங்களுட் புறச்சீர்மையென்னும் திறத்தில் மயங்கியென்றுமாம்.

௪௫ - ௭௧. சண்பக மாதவி தமாலங் கருமுகை
வெண்பூ மல்லிகை வேரொடு மிடைந்த
வருசெங் கழுநீ ராயிதழ்க் கத்திகை
யெதிர்பூஞ் செவ்வி யிடைநிலத் தியாத்த
முதிர்பூந் தாழை முடங்கல்வெண் டோட்டு
விரிமலர் வாளியின் வியலிட மாண்ட
வொருதனிச் செங்கோ லொருமக னாணையி
னொருமுக மன்றி யுலகுதொழு திறைஞ்சுந்
திருமுகம் போக்குஞ் செவ்வியளாகி
யலத்தகக் கொழுஞ்சே றளைஇ யுயலது
பித்திகைக் கொழுமுகை யாணியிற் கொண்டு

மன்னுயி ரெல்லா மகிழ்துணை புணர்க்கு
மின்னிள வேனி லிளவர சாள
வந்திப் போதகத் தரும்பிடர்த் தோன்றிய
திங்கட் செல்வனுஞ் செவ்விய னல்லன்
புணர்ந்த மாக்கள் பொழுதிடைப் படுப்பினுந்
தணந்த மாக்க டந்துணை மறப்பினு
நறும்பூ வாளியி னல்லுயிர் கோட
னிறும்பூ தன்றிஃ தறிந்தீ மின்னென
வெண்ணெண் கலையு மிசைந்துடன் போகப்
பண்ணுந் திறனும் புறங்கூ றுநாவிற்
றலைவா யவிழ்ந்த தனிப்படு காமத்து
விலையா மழலையின் விரித்துரை யெழுதிப்
பசந்த மேனியள் படருறு மாலையின்
வசந்த மாலையை வருகெனக் கூஉய்த்
தூமலர் மாலையிற் றுணிபொரு ளெல்லாங்
கோவலர்க் களித்துக் கொணர்க வீங்கென

இ - ள். அங்ஙனம் கண்டத்தினும் கலத்தினுமயங்கிய மாதவியாகிய பூங்கொடி பசந்தமேனியளாய்ச் சிறியவாளியாலே பெரியநிலமுழுதையுமாண்ட ஒப்பில்லாத தனிச்செங்கோலையுடைய ஒருவனாகிய காமராசனானையாலே ஒருமுகமன்றி உலக மெல்லாம் எதிர்கொண்டு தொழுதிறைஞ்சப்படும் அவன்றிருமுகத்தைப் போக விடக்கடவோமென்னும் நினைவாற்பிறந்த செவ்வியையுடையளாகிச் சண்பக முதலியவற்றால் நெருங்கத்தொடுத்த பூவின் மணமாறுபடும் செவ்வியையுடைய மாலையினிடையே தொடுத்த செவ்வி எதிர்கொள்ள முதிர்ந்த தாழைப்பூவினது முடக்கத்தையுடைய வெள்ளியதோட்டிலே அதற்கயலதாகியதோர் பித்திகையி னது கொழுவியமுகையாகிய எழுத்தாணியைக் கையின்வாங்கிக்கொண்டு, அதனைச் செம்பஞ்சின்குழம்பிற்றோய்த்து உதறி எழுதுகின்றவள் உலகின்மிக்க உயிர்ப பன்மைகளைத் தாம் மகிழுந்துணையோடு புணர்விக்கும் இனிய இளவேனிலென்பான் இளவரசன்; ஆதலால் நெறிப்படச்செய்யான்; அவனேயன்றியும், அந்திப்பொழுதின் கண்ணே அரும்புகின்ற விரகவிதனத்தின்மேலே வந்துதோன்றிய திங்களாகிய செல்வனும் இன்றுண்டான பண்பன்றிய பிறப்பினும் தோட்டமுடையன்; ஆதலாற் புணர்ந்தோர் இடைப்படுப்பினும் தணந்தோர் மறப்பினும் நறிய பூவாளியாலே இன்பநுகருமுயிரைக் கொண்டுவிடுதல் அவற்குப் புதியதொன்றன்று, இதனை அறிமி னென்றுகொண்டு அறுபத்துநால்வகைக்கலைகளும் வழிபட்டுப் புகழ்ந்தொழுக அவற்றுட் பண்களும் திறங்களுமாகிய அவை புறங்கூறப்படுநாவில் முற்றாத மழ லைச்சொல்லோடே அப்பாசுரத்தைப் பேசிப்பேசியெழுதி நினைவுமிகும் மாலைக் காலத்தே வசந்தமாலையை வருகவெனவழைத்து இம்மாலையிலெழுதிய பொருளை யெல்லாம் கோவலர்க்கேற்பச்சொல்லி இப்பொழுதே இங்கே கொணர்வாயாக வென்றாளென்க.

தமாலம் - பச்சிலை. கருமுகை - பித்திகை. கத்திகை - தொடைவிசேடம். இடைநிலம் - தொடைநடு. தாழைமுட்டங்கல் - இருபெயரொட்டுமாம். போக்கும்-போகவிடும். செவ்வி - ஈண்டுமேனோர்த்தம். அலத்தகச்சேறு - செம்பஞ்சுக்களி. திங்கட்செல்வன் - "கால முலகம்" என்னுஞ்சூத்திரத்துள் ஞாயிறு திங்களென்பன உயர்திணைமேலனவாய்ப் பால்பிரிந்திசையாவெனவும், "நின்றாங் கிசைத்த லிவணியல் பின்று" எனவே நின்றமுறையானே ஈறுபெற்றுநின்று உயர்திணையாயிசைத்தல் இவணியல்பின்றெனவுங்கூறிய ஆசிரியர், "இசைத்தலு முரிய வேறிடத்தான" எனக் காலமுதலாகியசொல் உயர்திணையாயிசைத்தலுமுரிய; ஈறுதிரிந்து வாய்பாடுவேறுபட்டவழியென்றாராகலின், இதுவும் ஈறுதிரிந்து திங்கட்செல்வனென்றாயிற்றென்க. மேலும் இவ்வாறு வருவனவற்றிற்கும் இவ்விதிகொள்க. திங்களாகிய செல்வனெனப் பண்பொட்டுவிரிக்க. செவ்வியனல்லன், செம்மை—நடுவுநிலைமை; *"செவ்வியான் கேடும்" எனவும், †"செவ்விய ரல்லார்" எனவுங்கூறினமையின். பொழுதிடைப் படுப்பினும் - சிறிதுபொழுதை இடையே பயமின்றாகக் கழிப்பினும்; என்றது ஊடல்நீட்டிப்பினுமென்றபடி. தணத்தல் - ஓதன் முதலியவற்றாற்சென்று குறித்துக்கூறும் பருவம் பொய்த்தல். வாளியின், இன் - ஆன்; உருபுமயக்கம். நல்லுயிர் - காமவின்பத்தைநுகருமுயிர். இறும்பூது - புதுமை. அறிந்திமின் - அறிமின்; பகுதிப்பொருள் விகுதி. புறங்கூறுநா - புறங்கூறுதற்குக் காரணமேயான நா; புறங்கூற்று - நிகரல்லார் தம்பெருமையான் அவரில்வழி இகழ்ந்துகூறுபவாகலின் இவையுங்கூறின, இவற்றைப் பழிக்குநாவெனவுமாம். தளைவாயவிழ்ந்த - கட்டுக்குலைந்த; என்றது தன்வரைத்தன்றாதல்; என்னை? ‡"பஞ்சிறை கொண்ட பைம்பொற் கலைபுறஞ் சூழ வைத்து, நஞ்சிறை கொண்ட நாகப் படம்பழித் தகன்ற வல்குல், வெஞ்சிறைப பள்ளி யாக விழுமுலைத் தடத்து வைகத் தஞ்சிறைப் படுக்க லாதார் தம்பரி வொழிக வென்றாள்" என்றார் பிறரும். தனிப் [illegible] - சிறந்தார்க்கும் உரைக்கலாவதன்றாய் அரிதாய் அகத்தே சுட்டுருக்குங் காமம். விளைதல் - முற்றுதல். மழலையின் - மழலையோடே. படருறுமாலை நினைவு மிகுமாலை; படர் - துன்பமுமாம். துணி[illegible]ருள் - §மறத்தலால்வருந்தண்டம்; திருவாணைக்குமேல் ஆக்கினை இல்லையெ[illegible]க. அளித்து - இனிமையாற் கொடுத்து, "உணர்த்திய மன்ட மாணை [illegible]மை" என்ப. கத்திகை[illegible]டைநிலத்தில்யாத்த தாழைவெண்டோட்டின் எழுதியென்க. துணிபொருளென்பதற்குத் தீர்ந்தபொருளெனினுமமையும். அளிக்கவென்றது அளித்துக் கொள்கவென்றாள், இது காமன் திருமுகமாதலானும் முன்னும் இவன்பிரிவது அறியாமையானுமெனக்கொள்க. இனி இவ்வாறன்றி அந்திப்போதகமென்பதனை யானையாக்கி அதன்புறக்கழுத்திற்றோன்றி[illegible] திங்களெனிற் பிறையாம்; ஆகவே நாடுகாண் காதையுள், ||"வைகறை யாமத்து, மீன்திகழ் விசும்பின் வெண்மதி நீங்கக், காரிருளின்ற கடைநாட் கங்குல், ஊழ்வினை கடைஇ யுள்ளந் துரப்ப .நெடுங்கடை கழிந்து" என்பதனாற் பூருவபக்கத்துப் பதினாலாம்பக்கமாதலான் அதனோடும்,

* திருக்குறள், அழுக்காறாமை, ௯. † நாலடியார், புல்லறிவாண்மை, உ.

‡ சீவகசிந்தாமணி, கேமசரியாரிலம்பகம், கஉஎ.

§ இறத்தலாலென்றும் பிரதிபேதமுண்டு.

|| நாடுகாண்காதை, க - அ.

*"ஆடித் திங்கட் பேரிருட் பக்கத், தழல்சேர் குட்டத் தட்டமி ஞான்று, வெள்ளி வாரத் தொள்ளெரி யுண்ண, வுரைசான் மதுரையோ டரசுகே டுறுமெனு, முரையு முண்டு" என்பதனோடும் பிறவற்றோடும் மாறுகொள்ளுமாதலான் இவ்வாறுகூறுதல் பொருந்தாதெனவுணர்க. இனி இவ்விழவின் முதலும் முடிவும் கடலாட்டும் புலவியும் புறப்பாடும் வதிச்செலவும் பொறையுயிர்த்திருப்பும் நிறைபதிப்புகலும் திதருநாளும் ஊர்திப்பாடும் முதனடுவிறுதியாகக் கட்டுரைகாதையுள் விரியக்கூறுவாம்; அதனுட் கண்டுகொள்க. இனி இதன்பிறப்பை இகழ்ந்துகூறுவாள், தந்தைதாயரிடத்தன்றி அலித்தன்மையதாகிய மாலையெனும் யானையின்பிடரிற் பிறந்த செலவனென்றுளெனினுமமையும். செவ்வியனல்லன் - புணர்ந்தார்க்கும் பிரிந்தார்க்கும் ஒருதன்மையனல்லனெனினுமமையும்.

பூங்கொடி இருக்கையளாகிச் சேர்த்தித் தழீஇ அறிந்து கட்டி நோக்கிக் கேட்டனள்; கேட்டு நோக்கி இயக்கிக் கழிப்பி மயங்கிச் செவ்வியளாகி அலைஇக் கைக்கொண்டு எழுதிக் கூஉய் அளித்துக் கொணர்க ஈங்கென்றுளென வினைமுடிக்க.

௪௨ - ௪௩. மாலை வாங்கிய வேலரி நெடுங்கண்
கூல மறுகிற் கோவலற் களிப்ப

இ - ள். இங்ஙனம் மாதவிகூற அம்மாலையைவாங்கிய வசந்தமாலை, போய் எண்வகைக கூலங்கள்செறிந்த மறுகினையுடைய கோவலனைக்கண்டு அவனுக்கு அம்மாலையைக் கொடுப்பவென்க.

போயெனவும் கண்டெனவும் வருவிக்க.

௪௪ - ௪௭. திலகமு மளகமுஞ் சிறுகருஞ் சிலையுங்
குவளையுங் குமிழுங் கொவ்வையுங் கொண்ட
மாதர்வாண் முகத்து மதைஇய நோக்கமொடு
காதலிற் றோன்றிய கண்கூடு வரியும்

இனிக் குரவையும் வரியுமென்னு ...ரண்டனுள், வரிகூறுவார், அதனை இவள் தொழிலாகச் சார்த்திக்கூறுகின்ற ... ...ரியாவது, அவரவர் பிறந்தநிலத்தன்மையும் பிறப்பிற்கேற்ற தொழிற் ... ...தான்றநடித்தல்; என்னை? "வரியெனப் படுவது வகுக்குங் காலைப், பிறந்த நிலனுஞ் சிறந்த தொழிலு, மறியக் கூறி யாற்றுழி வழங்கல்" என்றாராகலின். அவ்வரி எட்டுவகைப்படும்; கண்கூடுவரி, காண்வரி, உள்வரி, புறவரி, கிளர்வரி, தேர்ச்சிவரி, காட்சிவரி, எடுத்துக்கோள்வரியென; என்னை? "கண்கூடு காண்வரி யுள்வரி புறவரி, கிளர்வரி யைந்தோ டொன்ற வுரைப்பிற், †காட்சி தேர்ச்சி யெடுத்துக் கோளென, மாட்சியின் வருஉ மெண்வகை நெறித்தே" என்பவாகலின். அவற்றுட் கண்கூடாவது பிரிய தரிசனம்; அஃதாவது காட்சி, அஃது ஒருவர்கூட்டவன்றித் தானே வந்துநிற்குநிலைமை; என்னை? கண்கூடென்பது கருதுங் காலை, இசைப்ப வாராது தானே வந்து, தலைப்பெய்து நிற்குந் தன்மைத் தென்ப" என்றாராகலின்.

---

* கட்டுரைகாதை, ௧௩௨ - ௧௩௪.

† காட்சிவரி, தேர்ச்சிவரிக்குப் பின்புள்ளதேனும் எதுகைநயம்பற்றி முன் வைக்கப்பட்டது.

இ - ள். சிலைமுதலியவற்றை உறுப்பாகக்கொண்ட திலதமுதலியவற்றை யுடைய மாதர்முகத்தின் மதர்த்தநோக்கத்தோடே என்மேற் காதலையுடையாள் போற்றோன்றி முதற்கண் எதிர்முகமாகநின்றுநடித்த நடிப்பும்,

எஅ - அரு. புயல்சுமந்து வருந்திப் பொழிகதிர் மதியத்துக்
கயலுலாய்த் திரிதரூஉ காமர் செவ்வியிற்
பாகுபொதி பவளந் திறந்து நிலாவுதவிய
நாகிள முத்தி னகைநலங் காட்டி
வருகென வந்து போகெனப் போகிய
கருநெடுங் கண்ணி காண்வரிக் கோலமும்

"காண்வரி யென்பது காணுங் காலை, வந்த பின்னர் மனமகிழ் வுறுவன, தந்து நீங்குந் தன்மைய தாகும்."

இ - ள். புயல்சுமந்துவருந்திக் கதிரைப்பொழியும் மதியிடத்தே கயல்களுலா வித்திரிகின்ற செவ்வியோடே பாகைப்பொதிந்த பவளத்தைத்திறந்து ஒளியைத் தருகின்ற முத்தையொத்த நகைநலத்தைக்காட்டி வருகெனவந்து போகவெனப் போகிய கரிய நெடிய கண்ணுளுடைய காண்வரியென்னுங்கோலமும்,

இளமுத்தென்ருர், ஒளிபெறுதல்கருதி. இளநாகின்றமுத்தெனினுமமையும்.

அஎ - அகூ. அந்தி மாலை வந்ததற் கிரங்கிச்
சிந்தைநோய் கூருமென் சிறுமை நோக்கிக்
கிளிபுரை கிளவியு மடவன நடையுங்
களிமயிற் சாயலுங் கரந்தன ளாகிச்
செருவேன் னெடுங்கட் சிலதியர் கோலத்
தொருதனி வந்த வுள்வரி யாடலும்

உள்வரியென்பது வேற்றுருக்கொண்டுநடித்தல்; என்னை? "உள்வரி யென்ப துணர்த்துங் காலை, மண்டல மாக்கள் பிறிதோ ருருவங், கொண்டுங் கொள்ளாது மாடுதற் குரித்தே" என்றாராகலின். மண்டலமாக்களாவார் அரசர். பாண்டவர் பிறிதுருவங்கொண்டதுவுமது.

இ - ள். யான் ஊடிப் பிரிந்தகாலத்து அந்திமாலைவந்ததாகப் பிரிவாற்றாமை விரங்கி என்சிந்தைநோய்மிகும் வறுமையைத் தானறிந்து கிளியொத்த கிளவியை யும் மடப்பம்பொருந்திய அன்னத்தையொத்த நடையினையும் களித்த மயில் போலுஞ் சாயலினையுங்கரந்தனளாகி வேல்போன்ற கண்ணையுடைய தனதுசிலதியர் கோலத்தைக்கொண்டு தான் தனிவந்துநின்றுநடித்த உள்வரியென்னுநடிப்பும்,

கூ0 - கூரு. சிலம்புவாய் புலம்பவு மேகலை யார்ப்பவுங்
கலம்பெறு நுசுப்பினள் காதனோக்கமொடு
திறந்தருவே முயவென சிறுமை நோக்கியும்
புறத்துநின் றாடிய புன்புற வரியும்

புறவரியாவது தலைவனுடனணையாது புறத்துநின்று விளையாடுவது ; என்னை ? "புறவரி யென்பது புணர்க்குங் காலை, யிசைப்ப வந்து தலைவன்முற் படாது, புறத்துநின் றாடி விடைபெறு வதுவே" என்றாராகலின்.

இ - ள். கலங்களைப் புனையவும்பெறாத நுசுப்பினையுடையாள் சிலம்பு வாய்விட்டுப் புலம்பவும் மேகலை வாய்விட்டார்ப்பவும் என்றகாதலையுடையாள்போல் வந்து நோக்கியநோக்கோடே தன்னைப்பிரிதலால் தன்மைதிரிந்த எனதுவறுமையையறிந்தும் என்னுடனணையாது புறம்பேநின்றுநடித்தநடிப்பும்,

நுசுப்பினள் புலம்பவும் ஆர்ப்பவும் நோக்கமொடு நோக்கியும் நின்றாடிய புறவரியுமென்க.

கூச - க0க. கோதையுங் குழலுந் தாதுசே ரளகமு
மொருகாழ் முத்தமுந் திருமுலைத் தடமு
மின்னிடை வருத்த நன்னுத றோன்றிச்
சிறுகுறுந் தொழிலியர் மறுமொழி யுய்ப்பப்
புணர்ச்சியுட் பொதிந்த கலாந்தரு கிளவியி
னிருபுற மொழிப்பொருள் கேட்டன ளாகித்
தளர்ந்த சாயற் றகைமென் கூந்தல்
கிளர்ந்துவே றாகிய கிளர்வரிக் கோலமும்

கிளர்வரியென்பது நடுநின்றார் இருவருக்கும் சந்துசொல்லக் கேட்டுநிற்பது ; என்னை ? "கிளர்வரி யென்பது கிளக்குங் காலை, யொருவ ருய்ப்பத் தோன்றி யவாவா, யிருபுற மொழிப்பொருள் கேட்டுநிற் பதுவே" எனறாராகலின்.

இ - ள். நன்னுதல் கோதைமுதலியன மின்னிடையைவருத்தத் தோன்றி வந்தணுகாதே புறவாயிலேவந்துநின்று சிலதியர் வார்த்தைகேட்டு மறுமாற்றச் சொல்லைப் புணர்ச்சியை உட்பொதிந்திருக்கின்ற எனது புலவிச்சொல்லைக்கேட்டு அதனை இருபுறமொழிப்பொருளாகக்கொண்டு தளர்ந்தமேனியினையும் அழகியகூந்தலினையுமுடையாள் புலவியாற்போகின்றாள்போல நடித்துப்போனநடிப்பும்,

இதனாற்கூறியது : யான் புணர்ச்சிநிமித்தமாகப் புலந்து தன்சிலதியர்க்குச் சொல்லிவிட்டமொழியைக்கேட்டு அப்படியன்றிப் புலந்துசொன்னேனாக நடித்துப்போனநடிப்பென்றபடி.

க0உ - க0ச. பிரிந்துறை காலத்துப் பரிந்தன ளாகி
யென்னுறு கிளைகட் குத் தன்னுறு துயரந்
தேர்ந்துதேர்ந் துரைத்த தேர்ச்சிவரி யன்றியும

தேர்ச்சிவரியென்பது நாயகன்கிளைகட்குத் தன்றுன்பங்களைத் தேடித்தேடிச் சொலலுதல் ; என்னை ? "தேர்ச்சி யென்பது தெரியுங் காலைக், கெட்ட மாக்கள் கிளைகண் டவர்முன், பட்டது முற்றது நினைஇ யிருந்து, தேர்ச்சியோ டுரைப்பது தேர்ச்சிவரி யாகும்" என்றாராகலின்.

இ - ள். நான் பிரிந்துறைபொழுதில் தான் பிரிவாற்றாது வருந்தினளாகப் பாவித்து எனது மிக்ககிளைகட்குத் தனது மிக்க துயரத்தைத் தன்மயக்கத்தாலே தேர்ந்துதேர்ந்து சொல்கின்றாளாகநடித்த நடிப்பும் அதுவன்றியும்,

க0ரு - க0௬. வண்டலர் கோதை மாலையுண் மயங்கிக்
கண்டவர்க் குரைத்த காட்சி வரியும்

காட்சிவரியென்பது தன்வருத்தத்தைப் பலருங்காணும்படி நடித்தல்; என்னை? "காட்சிவரி யென்பது கருதுங் காலைக், கெட்ட மாக்கள் கிளைகண் டவர்முன்னர்ப் பட்டது கூறிப் பரிந்துநிற் பதுவே" என்றாராகலின்.

இ - ள். வண்டலர்த்துங்கோதையையுடையாள் மாலைக்காலத்தின்கண்ணே மயங்கிக் கண்டோரெவர்க்கும் தன்விரகத்தைச்சொல்லிநடித்த நடிப்பும்,

க0எ-க0அ. அடுத்தடுத் தவர்முன் மயங்கிய மயக்க
மெடுத்தவர் தீர்த்த வெடுத்துக்கோள் வரியும்

எடுத்துக்கோள்வரியென்பது தான் கையறவெய்தி வீழ்ந்தாளாகவீழ்ந்து பிறர் எடுத்துக்கொள்ளும்படி நடித்தல்; என்னை? "எடுத்துக் கோளை யிசைக்குங் காலை, அடுத்தடுத் தழிந்து மாழ்கி யயலவ, ரெடுத்துக் கோள்புரிந்த தெடுத்துக் கோளே" என்றாராகலின்.

இ - ள். அவர் முன்பு தான் மேன்மேலுமயங்கியமயக்கத்தை அவர் எடுத்துத் தீர்த்த எடுத்துக்கோள்வரியென்னுநடிப்பும்,

க0௯ - கக0. ஆடல் மகளே யாதலி னாயிழை
பாடுபெற் றனவப் பைந்தொடி தனக்கென

இ - ள். ஆயிழாய், பைந்தொடி நாடகமகளாதலான் இங்ஙனநடித்தல் அவட்கு இயல்பன்றோவென்றுகூறவென்க.

இவற்றாற்கூறியது முன்பு தான் இவளோடு கூடியும் ஊடியுஞ்செல்கின்ற காலத்து இங்ஙனநடித்தநடிப்பை நாடகவுறுப்பாகிய கண்கூடுமுதல் எடுத்துக்கோளீறாயுள்ள வரி எட்டினோடும் சிலேடித்துக்கூறியகோவலன் நாடகமகளிர்க்கு இந்நாடகம் பிறந்தவுடைமையன்றோவெனச்சொல்லி ஓலையை மறுத்தானென்பது.

ககக - ககச. அணித்தோட்டுத் திருமுகத் தாயிழை யெழுதிய
மணித்தோட்டுத் திருமுக மறுத்ததற் கிரங்கி
வாடிய வுள்ளத்து வசந்த மாலை
தோடலர் கோதைக்குத் துனைந்துசென் றுரைப்ப

இ - ள். அழகினையுடைய பொற்றோடணிந்த திருமுகத்தையுடைய ஆயிழை எழுதப்பட்ட அழகிய தாழந்தோட்டுத்திருமுகத்தைக் கோவலன்மறுப்பத் தான் அதற்குவருந்தி வாடிய உள்ளத்தையுடைய வசந்தமாலை மாதவிக்குவிரைந்துசென்று உரைப்பவென்க.

அணியும் மணியும் அழகு. தோடு - பொற்றோடும், தாழந்தோடும். துனைவு - விரைவு.

ககரு-கக௮. மாலை வாரா ராயினு மாணிழை
காலைகாண் குவமெனக் கையறு நெஞ்சமொடு
பூமல ரமளிமிசைப் பொருந்தா தவிந்தனண்
மாமலர் நெடுங்கண் மாதவி தானென

இ - ள். துணைந்துசென்றுரைப்பவென்றதனை் ஆற்ருளாகியதலைவியை ஆற்றுவித்தற்பொருட்டுத் தலைவனை இயற்பழித்ததோழிக்குத் தலைவி இயற்படமொழிகின்ருளாகலின், இன்னும் இம்மாலைப்பொழுதினுள்வருவார்; வாராராயினும் காலைப்பொழுதில் ஈண்டு நாம் காண்போமெனச்சொன்னுள்; சொன்னவள் தானிருந்த மலரமளிக்கண்ணே செயலற்ற நெஞ்சத்தோடு வீழ்ந்தாள்; வீழ்ந்தவள் அமளிமிசையே இமைபொருந்தாமற் கிடந்தனள்; அவள் யாரெனிற் கரிய மலர்போலும் நெடியகண்ணையுடைய மாதவிதானென்க.

இனி, தான் அசையுமாம். அளிப்ப அவன் பாடுபெற்றனனென்றுசொல்லி மறுப்ப அதனைக்கட்டுரைத்தவளுக்குக் காண்குவமெனச்சொல்லிப் பொருந்தாது வதிந்தனளென்க. வதிதல் - தங்குதல் பொருந்தாதுவதிதல் - தன்கொழுநனைக் கூடாதுவதிதலுமாம்.

இது நிலைமண்டிலம்

செந்தா மரைவிரியத் தேமாங் கொழுந்தொழுக
மைந்தா ரசோக மடலவிழக் - கொந்தார்
இளவேனல் வந்ததா லென்னாங்கொ லின்று
வளவேனு ற கண்ணனி மனம.

மைந்து - அழகு. கொத்து - கொங்தென மெலிந்துநின்றது. இது, கூனி ஓலைகொண்டு செல்லுகின்றகாலத்துத் தன்னுள்ளேசொல்லியது, கோவலன் கேட்பச்சொல்லியதூஉமாம்.

ஊடினீ ரெல்லா முருவிலான் றன்னணை
கூடுமி னென்று குயில்சாற்ற - நீடிய
வேனற்பா ணிக்கலந்தாண் மென்பூந் திருமுகத்தைக்
காணற்பா ணிக்கலந்தாய் காண்.

இ - ள். உலகில் ஒருவனும் ஒருத்தியுமாயுள்ளோரின் ஊடினவர்களே, நீயிரெல்லாம் அநங்கன்றிருவாணையே கூடுமினென்று குயிற்குலங்கள்சாற்ற, இங்ஙனம்பிரிந்து சாலநீடுதலால் ஆற்ருளாகி இளவேனிற்பொழுதில் நின்னோடு என்றுங் கலந்தாளுடைய மெல்லிய பூவிலெழுதிய திருமுகத்தை, காணவிடுத்து அவள் பாடியபாட்டிற்கு அலந்தோனே, காணபாயாகவென்று ஓலையை நீட்டினளென்க.

பருந்து நிழலுமென ... ...அடியார்க்குநல்லாணென்பான்.

ஒருந்தமிழ் ... ...நிரம்பையர்காவலனே.

காற்றை ... ...சொல்லித்ததே.

வேனிற்காதை முற்றிற்று.

ஒன்பதாவது

கனாத்திறமுரைத்தகாதை.

அகனக ரெல்லா மரும்பவிழ் முல்லை
நிகர்மலர் நெல்லொடு தூஉய்ப் பகன்மாய்ந்த
மாலை மணிவிளக்கங் காட்டி யிரவிற்கோர்
கோலங் கொடியிடையார் தாங்கொள்ள மேலோர்நாண்
மாலதி மாற்றாண் மகவுக்குப் பாலளிக்கப்
பால்விக்கிப் பாலகன் றான்சோர மாலதியும்
பார்ப்பா னொடுமனையா ளென்மேற் படாதனவிட்
டேற்பன கூறுரென் றேங்கி மகக்கொண்
டமரர் தருக்கோட்டம் வெள்ளியானைக் கோட்டம்
புகர்வெள்ளை நாகர்தங் கோட்டம் பகல்வாயி
லுச்சிக் கிழான்கோட்ட மூர்க்கோட்டம் வேற்கோட்டம்
வச்சிரக் கோட்டம் புறம்பணையான் வாழ்கோட்ட
நிக்கந்தக் கோட்ட நிலாக்கோட்டம் புக்கெங்குந்
தேவிர்கா ளெம்முறுநோய் தீர்மென்று மேவியோர்
பாசண்டச் சாத்தற்குப் பாடு கிடந்தாளுக்
கீசன் படிவோ ரிளங்கொடியா யாயிழாய்
செய்தவ மில்லோர்க்குத் தேவர் வரங்கொடார்
பொய்யுரை யன்று பொருளுரையே கையிற்
படுபிணந் தாவென்று பறித்தவன் கைக்கொண்டு
சுடுகாட்டுக் கோட்டத்துத் தூங்கிருளிற் சென்றாங்
கிடுபிணந் தின்னு மிடாகினிப் பேய்வாங்கி
மடியகத் திட்டாள் மகவை யிடியுண்ட
மஞ்ஞைபோ லேங்கி யழுதாளுக் கச்சாத்த
னஞ்ஞைநீ யேங்கி யழலென்று முன்னை
யுயிர்க்குழவி காணாயோ வக்குழவி யாயோர்
குயிற்பொதும்ப ரீழற் குறுக வயிர்ப்பின்னும்
மாயக் குழவி யெடுத்து மடித்திரைத்துத்
தாயர்க்குக் கொடுத்தாளத் தையலா ளாய
மறையோன்பின் மாணியாய் வான்பொருட் கேள்வித்
துறைபோ யவர்முடிந்த பின்ன ரிறையோனுந்

தாயத்தா ரோடும் வழக்குரைத்துத் தந்தைக்குந்
தாயர்க்கும் வேண்டுங் *கடன்கழித்து மேயநாட்
டேவந்தி யென்பாண் மனைவி யவளுக்குப்
பூவந்த வுண்கண் பொறுக்கென்று மேவித்தன்
மூவா விளநலங் காட்டியென் கோட்டத்து
நீவா வெனவுரைத்து நீங்குதலுந் தூமொழி
யார்த்த கணவ னகன்றனன் போயெங்குந்
தீர்த்தத் துறைபடிவே னென்றவனைப் பேர்த்திங்ஙன்
மீட்டுத் தருவா யெனவொன்றின் மேலிட்டுக்
கோட்டம் வழிபாடு கொண்டிருப்பாள் வாட்டருஞ்சீர்க்
கண்ணகி நல்லாளுக் குற்ற குறையுண்டென்
றெண்ணிய நெஞ்சத் தினையளாய் நண்ணி
யறுகு சிறுபூளை நெல்லொடு தூஉய்ச் சென்று
பெறுக கணவனோ டென்றாள் பெறுகேன்
கடுக்குமென் னெஞ்சங் கனவினா லென்கை
பிடித்தனன் போயோர் பெரும்பதியுட் பட்டேம்
பட்ட பதியிற் படாததோரு வார்த்தை
யிட்டன ரூரா ரிடுதேளிட் டென்றன்மேற்
கோவலற் குற்றதோர் தீங்கென் றதுகேட்டுக்
காவலன் முன்னர்யான் கட்டுரைத்தேன் காவலனோ
டூர்க்குற்ற தீங்குமொன் றுண்டா லுரையாடேன்
றீக்குற்றம் போலுஞ் செறிதொடீஇ தீக்குற்ற
முற்றேனோ டுற்ற குறைவனோ டியானுற்ற
நற்றிறங் கேட்கி னகையாகும் பொற்றொடீஇ
கைத்தாயு மல்லை கணவற் கொருநோன்பு
பொய்த்தாய் பழம்பிறப்பிற் போய்க்கெடுக வுய்த்துக்
கடலொடு காவிரி சென்றலைக்கு முன்றின்
மடலவிழ் நெய்தலங் கானற் றடமுள
சோமகுண்டஞ் சூரிய குண்டந் துறைமூழ்கிக்
காமவேள் கோட்டந் தொழுதார் கணவரொடு
தாமின் புறுவ ருலகத்துத் தையலார்
போகஞ்செய் பூமியினும் போய்ப்பிறப்பர் யாமொருநா
ளாடுது மென்ற வணியிழைக் காயிழையாள்
பீடன் றெனவிருந்த பின்னரே நீடிய
காவலன் போலுங் கடைத்தலையான் வந்துநம்

* கடன்செய்தெனவும் பாடம்.

கோவல னென்றாளோர் குற்றிளையாள் கோவலனும்
பாடமை சேக்கையுட் புக்குத்தன் பைந்தொடி
வாடிய மேனி வருத்தங்கண் டியாவுஞ்
சலம்புணர் கொள்கைச் சலதியொ டாடிக்
குலந்தரு வான்பொருட் குன்றந் தொலைந்த
இலம்பாடு நாணுத் தருமெனக் கென்ன
நலங்கேழ் முறுவ னகைமுகங் காட்டிச்
சிலம்புள கொண்மெனச் சேயிழை கேளிச
சிலம்பு முதலாகச் சென்ற கலனோ
டுலந்தபொரு ளீட்டுத லுற்றேன் மலர்ந்தசீர்
மாட மதுரை யகத்துச்சென் றென்னோடிங்
கேடலர் கோதா யெழுகென்று நீடி
வினைகடைக் கூட்ட வியங்கொண்டான் கங்குற்
கனைசுடர் கால்சீயா முன்.

---

௧ - ௪. அகனக ரெல்லா மரும்பவிழ் முல்லை
நிகர்மலர் நெல்லொடு தூஉய்ப் பகன்மாய்ந்த
மாலை மணிவிளக்கங் காட்டி யிரவிற்கோர்
கோலங் கொடியிடையார் தாம்கொள்ள

இ - ள். கொடியிடையார் அகன்ற மனையிடமெங்கும் கதிரோன்மறைந்த மாலைக்காலத்தே அரும்பு புரிநெகிழ்ந்த முல்லையினது ஒளிமலரை நெல்லோடே தூவி இல்லுறைதெய்வத்தை வணங்கி மாணிக்கவிளக்கை மைவிளக்கோடேயெடுத்து அம்மாலைக்காலத்தே இராப்பொழுதைக்காம்படி கொழுநர்மார்பைத் தமது முலையாற் பொருந்துதற்கேற்ற கோலங்களைக் கொள்ளாநிற்பவென்க.

என்றது மகரக்குழைமுதலிய மணியும், பூணும் மதாணியுமுதலிய அணியும் இரட்டையங்கணணி பிணையன்முதலிய பணியுங்களைந்து நொய்யனவே புனைந்தும் பூண்டும் முடித்துஞ்செய்தல். அகனகர் - பட்டினப்பாக்கமெனினுமமையும். நிகர் - ஒளி; *"நீர்வார் நிகர்மலர் கடுப்ப" என்றார் கதையினும். பகல் - ஆகுபெயர். மாய்தல் - மறைதல்; †"களிறுமாய்க்குங் கதிர்க்கழனி" என்றாற்போல. மணிவிளக்கம் - உம்மைத்தொகை; இருபெயர்க்கண்வந்தது. மணி - அழகுமாம். கோலம் - ஒப்பனை; தமது கொழுநரோடிருக்கும் போர்க்கோலமுமாயிற்று. தாம் - அங்ஙனந்தூவியமகளிர்தாம். ‡"நெல்லு மலருந் தூஉய்க் கைதொழுது, மல்ல லாவண மாலை யயர" என்றார் நெடுநல்வாடையினும்.

---

* இந்தவாக்கியம், அகநானூறு, களிற்றியானைநிரை, ௧௧ - ம் பாடலிலும் வந்துள்ளது.

† பத்துப்பாட்டு, மதுரைக்காஞ்சி, ௨௪௭.

‡ ,, நெடுநல்வாடை, ௪௩ - ௪௪.

௪ - ௫. மேலோர்நாண்
மாலதி மாற்றாண் மகவுக்குப் பாலளிக்கப்
பால்விக்கிப் பாலகன் றான்சோர

இ - ள். முன்னொருநாளிலே மாலதியென்பாள் ஓர்பார்ப்பனி தனது மாற்றாள்குழவிக்குத் தன்முலைசுரந்தபாலைச் சங்காலூட்ட அப்பால் விக்குதலாலே தன் கையிலே அக்குழவி மரிக்கவென்க.

சோர்தல் - மரித்தல். பால் - ஆன்பாலுமாம்.

௫ - ௮. மாலதியும
பார்ப்பா னொடுமனையா னென்மேற் படாதனவிட்
டேற்பன கூறாரென் றேங்கி மகக்கொண்டு

இ - ள். அங்ஙனம் பாலகன் மரித்தலானே அம்மாலதியும் பார்ப்பானோடு அவன்மனைவியும் என்மேல் அடாப்பழிகூறுதலொழித்து ஏற்பனகூறாராதலால் இதற்கென்செய்கேனென்றேங்கி அம்மகவைக்கொண்டென்க.

உம்மை - இழிவுசிறப்பு. ஒடு - எண்ணொடு. படாதன. அடாதன. விட்டு - ஒழிந்து.

௯. அமரா தருக்கோட்டம—இ - ள். தேவர்தரு நிற்குங்கோயில்,

௯. வெள்ளியானைக்கோட்டம்—இ - ள். ஐராவதநிற்குங்கோயில்,

௧௦ புகர்வெள்ளை நாகர்தங் கோட்டம—இ - ள். அழகினையுடைய பலதேவர்கோயில்,

புகர் - அழகு. வெள்ளைநாகர் - பலதேவர்.

௧௦ - ௧௧. பகல்வாயி லுச்சிக் கிழான்கோட்டம்

பகல்வாயில் - பகற்றோற்றுகிறவாயில்; ஆவது கீழ்த்திசை. உச்சிக்கிழான் - பகற்பொழுதிற்குரியோன். சூரியன்கோயிலென்றபடி.

இ - ள். கீழ்த்திசையிற்றோற்றுகின்ற சூரியன்கோயில்,

இனிப் பகற்பொழுதிற்கு வருவாயாயுள்ளவனென்றுமாம்.

௧௧. ஊர்க்கோட்டம்—இ - ள். இறைவனாராகிய கைலாயநிற்குங்கோயில்,

௧௧. வேற்கோட்டம்—இ - ள். முருகவேள்நிற்குங்கோயில்,

வேல் - ஆகுபெயர்.

௧௨. வச்சிரக் கோட்டம்—இ - ள். வச்சிரப்படைநிற்குங்கோயில்,

௧௨. புறம்பணையான் வாழ்கோட்டம—இ - ள். சாத்தனென்கோயில்,

புறம்பு அணைந்தவிடம் - புறம்பணையாயிற்று "புறம்பணை யியம்பு மோசை" என்றார் சிந்தாமணியினும்,

௧௩. நிக்கந்தன் கோட்டம்—இ - ள். அருகன்கோயில்,

என்னை? "தக்கந் துடைக்கும் தகைசால் காட்சிய, நிக்கந்த வேடத் திருடிகணங்களை, யொக்க வுடிவீழ்ந் தூலகியல செய்தபி, னக்கதை யாழ்கொண் டமைவரப் பண்ணி" என்றார் வளையாபதியினும்.

௧௩. நிலாக்கோட்டம்—இ - ள். சந்திரன்கோயில்,

இவை செவ்வெண்.

௧௩. புக்கெங்கும்—இ - ள். இக்கூறிய கோயில்களெங்கும்புக்கு,

௧௪ - ௧௫. தேவிர்காளெம்முறுநோய் தீர்மென்று மேவியோர்
பாசண்டச் சாத்தற்குப் பாடு கிடந்தாளுக்கு

இ - ள். இங்ஙனம் எங்கும்புக்கவள் தெய்வங்களே, எமது மிக்க இந்நோயைத் தீர்மினென்று இரப்பவும் ஒருவர்தீராமையின் ஆண்டுப் பொருந்தாதுபோந்து ஈண்டுச் சாத்தனிடத்தேபொருந்தி அவன்பால் வரங்கிடந்தாளையென்க.

தேவும் தெய்வத்திற்கோர்பெயர் ; *"தேவாதி தேவ னவன்சேவடி" என்றா ராகலின். தேவிர், இர் - முன்னிலைப்பன்மை. தீர்மென்று - ஈற்றுமிசையுகரம் கெட்டது. பாசண்டம் - தொண்ணூற்றறுவகைச் சமய சாத்திரத்தருக்கக்கோவை,† என்னை ? "பண்ணாற் றிறத்திற் பழுதின்றி மேம்பட்ட, தொண்ணூற் றறுவகைக் கோவையும் வல்லவன், விண்ணோ ரியங்கும் விறலவ ராயினுங், கண்ணுறி நோக்கிக் கடுநகை செய்வான்" என்றா ரவினயாபதியினுமாகலின். இவற்றிற்குமுதலாயுள்ள சாத்திரங்களைப் பயின்றவனாதலின், ‡மகாசாத்திரனென்பது அவற்குப் பெயரா யிற்று. சாத்தற்கு - உருபுமயக்கம் ; இது, §"மணற்கின்ற" என்றாற்போலநின்றது கிடந்தாளுக்கு - கிடந்தாளை , இயல்புமாம். இப்பொருட்கு ஆசிலாயென்றுசொல்லி யென ஒருசொல் வருவிக்க.

௧௬-௨௨. ஏசும் படியோ ரிளங்கொடியா யாசிலாய்
செய்தவ மில்லோர்க்குத் தேவர் வரங்கொடார்
பொய்யுரை யன்று பொருளுரையே கையிற்
படுபிணந் தாவென்று பறித்தவளைக் கொண்டு
சுடுகாட்டுக் கோட்டத்துத் தூங்கிருளிற் சென்றாங்
கிடுபிணந் தின்னு மிடாகினிப்பேய் வாங்கி
மடியகத் திட்டான் மகவை

இ - ள். சுடுகாட்டுக்கோட்டத்து இடுபிணந்தின்னும் இடாகினிப்பேய் ஏசும் படி ஓரிளங்கொடியாய்த் தூங்கிருளிற்சென்று அங்குப் பாடுகிடந்தாளையோ ஒன்றினுங்குற்றமற்றவளே, கேளாய் ; முற்பவத்தில் தவஞ்செய்யாதோர்க்கு ரும் வரங்கொடார் ; அது பொய்யன்று ; மெய்யெனச்சொல்லி அங்

* சீவகசிந்தாமணி, கடவுள்வாழ்த்து.

† இதனை, "பாசண்டத் துறையு மிவற்றுட் பலவாம், டே றுவகைப் படுமே" என்னும் திவாகரச்சூத்திரத்தானுமுணர்க

‡ மகாசாத்தனென்பதெனவும் பிரதிபேதமுண்டு.

§ அகநானூறு, மணிமிடைபவளம், உ௧உ. "கிளை ம் ணற் மணற்கின்ற, முளையோ ரன்ன முள்ளெயிற்றுத் துவர்வாய், நயவஞ் செவ்வழி நல்யா, ழிசையோர்த் தன்ன வின்றீஞ் கிளவி, யணங்குச நகைஇ"

நின் பிள்ளைப்பிணத்தைப் பார்க்கத் தந்துகாணெனச்சொல்லாநின்று பறித்து அவள்வாங்கி மடியகத்திட்டாளென்க.

ஏசல் - பழித்தல். படி - வடிவு. பிறரைப்பழிக்கும் வடிவையுடையதொரு பெண்வடிவாய். சுடுகாட்டுக்கோட்டம் - *சக்கரவாளக்கோட்டம். தாங்கிருள் - செறிந்தவிருள்; யாவரும் அஞ்சுமிருளுமாம். இடுபிணம் - குழியிலிடுபிணம். மடி - வயிறு. †"படியை மடியகத் திட்டான்" என்பதனானுமுணர்க. இட்டாள் - விழுங்கினாள். மக - ‡"குழவியு மகவு மாயிரண் டல்லவை கிழவ வல்ல மக்கட் கண்ணே" என்பதனாற் கூறப்பட்டது. பாலகனென்பது காலவழக்கு.

உஉ-உ௮. இடியுண்ட

மஞ்ஞைபோ லேங்கி யழுதாளுக் கச்சாத்த
§னாருநைநீ யேங்கி யழலென்று முன்னை
யுயிர்க்குழவி காணாயென் றக்குழவி யாயோர்
குயிற்பொதும்பர் நீழற் குறுக வயிர்ப்பின்றி
மாயக் குழவி யெடுத்து மடித்திரைந்துத்
தாய்கைக் கொடுத்தாளத் தையலாள்

இ - ள். இடிக்குரல்கேட்ட மயில் அகவுமாபோல ஏங்கியழுகின்ற தையலாளுக்கு அச்சாத்தன் அன்னாய், நீசெல்கின்ற வழிமுன்னர்ப் பொதும்பரிடத்து உயிரோடுகிடக்கின்ற குழவியைக் காண்கின்றிலையோவென, அவள் அதுசெய்ய, ஏங்கி அழுகின்றாய் அழாதொழியென்று தான் அக்குழவியாய் அவ்விடத்துச்சென்று கிடப்ப, அவள் வஞ்சக்குழவியை ஐயமின்றித் தன்குழவியென்றெடுத்து வயிற்றிலேயணைத்துக் கொடுபோய்த் தாய்கையிற் கொடுத்தாள்; அங்ஙனமேங்கியழுத அத்தையலாளென்க.

அடிக்கப்பட்டதனை அடியுண்டதென்றாற்போல இடிக்கப்பட்டதனை இடியுண்டதென்றார்; உண்டல் - உறுதல்.

உ௮-௩உ. தாய,

மறையோன்பின் மாணியாய் வான்பொருட் கேள்வித்
துறைபோ யவர்முடிந்த பின்ன ரிறையோனுந்
தாயத்தா ரோடு வழக்குரைத்துத் தந்தைக்குந்
தாயாக்கும் வேண்டுங் கடன்கழித்து மேயநாள்

வாளக்கோட்டம் - காவிரிப்பூம்பட்டினத்துப் பண்டைக்காலத்து மய பட்டது; இதன்வரலாற்றை மணிமேகலை, ஆறுவது சக்கரவாளக் கதையிற்காண்க.

நடிகை, கடவுள்வாழ்த்து: "படியை மடியகத் திட்டா னடியிக்காற் தான் முழுநில மக்காலத், தானிளா தாங்கிய குன்றெடுத்தான் ருமை யழுந்த மகன்."

ல்காப்பியம், பொருளதிகாரம், மரபியல், உ௯.

ஞை - அன்னை; "அஞ்ஞை யிழந்த சிறாரென நொந்து" என்றார் நம்; திருத்தணிகைப்புராணம், சீபரிபூரணநாமப்படலம், ௫௬.

இ - ள். அக்குழவியாய இறையோனும் இருமரபுந்தூய மறையோனுக்குப் பின்செல்லும்பிள்ளையாய் மிக்க கல்விகளையும் இவற்றின்பொருட்கேள்விகளையும் கற்றும் தரித்தும் துறைபோய்த் தந்தைதாயிறந்தபின்னர் அவர்க்கு நீர்க்கடன் முதலியவுஞ்செய்து தன்றாயத்தாரோடும் வெல்வழக்குரைத்து எட்டியாண்டு தன் மனைவியோடேகூடிநடந்தபின் ஒருநாளிலென்க.

வான்பொருட்கேள்வி - மறைநூலும் அங்கமும். துறைபோதல் - அதற்குத் தகவிற்றல். மாணியாயெனவே சௌளமும் உபநயனமும், துறைபோயெனவே கல்விகேள்விமுதலிய பிரமசரியமுங்கூறி, மேல், "தேவந்தியென்பாண் மனைவி" என்பதனான் விவாகமும் காருகத்தமுங்கூறினமையுமுணர்க. இறையோனும், உம்மை - சிறப்பு வழக்குரைத்தெனவே, தன்மனைவிக்குப் பொருட்குறைபாடில்லாமற்செய்து என்பதாயிற்று. இறையோனும் அவர் மடிந்தபின்னர்க் கடன்கழித்து வழக்குரைத்தென்க. தாயரென்றார் மாலதியையுங்கூட்டி. மேயநாள் - மேவிய நாள்- இவளைத் தேவலஞ்செய்த *நாலீராண்டு கழிந்தபின்னர். மேவினனென்று பாடமோதித் தன்னைமேவினவளென்று பொருளுரைப்பாருமுளர்.

ருரு - ருஅ. தேவந்தி யென்பாண் மனைவி யவளுக்குப்
பூவந்த வுண்கண் பொறுகென்று மேவித்தன்
மூவா விளநலங் காட்டியெங் கோட்டத்து
நீவா வெனவுரைத்து நீங்குதலும்

இ - ள் அங்ஙனம் கூடிநடந்த தன்மனைவியாகிய தேவந்தியென்று பெயர் கூறப்படுவாளுடைய பூவின்றன்மை தலைவந்த மையுண்ட கண்கள் இதனைப் பொறுப்பதாகவென நிருமித்துக்கொண்டு பின்பு அவளைமேவித் தனது எக்காலத்தும் முதிராத இளைய அழகினதுநலத்தை வெளிப்படுத்தி அவன் அவள் குறிப்பினையறிந்து அதற்கேற்ப அவட்கு நீ எங்கோட்டத்து வாவெனச்சொல்லிப் பிறர்க்கெல்லாம் நிர்த்தத்துறைபடிவேனெனச்சொல்லி நீங்கினானாகவென்க.

மக்கள்கண்ணிற்குத் தெய்வயாக்கை காணப்பொறாதாகலின் இவள்கட்குப் பொறுக்கக்கடவதென்று நிருமித்துக்கொண்டான்; †"அந்தரத் துள்ளோ ரறியா மரபின், வந்து" என இதனுள்ளும், ‡"காந்துரு வெய்திய கடவு ளாளரும்" ‡"தேவரு மக்களு மொத்துடன் றிரிதரு, நாலேழ் நாளினும்" என மணிமேகலையுள்ளுங் கூறினமையானுமுணர்க. இனி உண்கணென்பதனை முன்னிலைவிளியாக்கி இம்மறையை நீபொறுக்கவென்று சொல்லிக்காட்டினனெனினுமமையும்.

* "பாசண் டன்பாற் பாடு கிடந்தாட், காசில் குழவி யதன்வடி வாகி, வந்தன னன்னைநீ வான்றுய ரொழிகெனச், செந்திறம் புரிந்தோன் செல்லனீக்கிப், பார்ப்பனி தன்னொடு பண்டைத் தாய்பாற், காப்பியத் தொல்குடிக் கவின்பெற வளர்ந்து, தேவந் திகையைத் தீவலஞ் செய்து, நாலீ ராண்டு நடந்ததற் பின்னர், மூவா விளநலங் காட்டியெங் கோட்டத்து, நீவா வென்றே நீங்கினன் சாத்தன்" என மேல் வரந்தருகாதையிலும் இக்கதையை விரித்துக்கூறுவர் [எஉ - அஎ.]

† கடலாடுகாதை, எஉ - எங.

‡ மணிமேகலை, முதலாவது விழாவறைகாதை

௩௬ - ௪0. தூமொழி
யார்த்த கணவ னகன்றனன் போயெங்குந்
தீர்த்தத் துறைபடிவே னென்றவனைப் பேர்த்திங்ஙன்
மீட்டுத் தருவா யெனவொன்றின் மேலிட்டுக்
கோட்டம் வழிபாடு கொண்டிருப்பாள்

இ - ள். அங்ஙனமாகிய தூமொழி என்னெஞ்சிற்பிணித்தகணவன் தீர்த்தத் துறைகளெங்கும்போய்த் தீர்த்தமாடுவேனென்று என்னைவிட்டகன்றனன்; மறுத்தும் இவ்விடத்தே அவன்மனத்தைத் திரும்பப்பண்ணி அழைத்துத் தருவாயென்று ஒருபெயரிட்டுக்கொண்டு அவன்கோட்டத்தை வழிபடுதலை நாடோறும் கடனாகக் கொண்டிருக்கின்றவளென்க.

௪0 - ௪௪. வாட்டருஞ்சீர்க்
கண்ணகி நல்லாளுக் குற்ற குறையுண்டென்
றெண்ணிய நெஞ்சத் தினையளாய் நண்ணி
யறுகு சிறுபூளை நெல்லொடுதூய்உச் சென்று
பெறுக கணவனோ டென்றாள்

இ - ள். நிறைந்த சீருடைய கண்ணகியாகிய நல்லாளுக்குக் கொழுநன்பிரிதலால் உற்றதோர்துன்பமுண்டென்றுநினைந்த நெஞ்சின்வருத்தத்தையுடையாளாய்க் கோட்டத்தைநண்ணி அறுகுமுதலியவற்றை இவள் கணவனைப்பெறல்வேண்டுமெனத் தூவிப் பின்னர்க் கண்ணகிபாற்சென்று ஆண்டு ஆசிகூறுவாள் கணவனைப் பெறுவாயாகவென்றாளென்க.

இனிக் கண்ணகிபானண்ணிச் சென்றுதூவிக் கணவனோடு வாழ்வுபெறுகவென்றாளெனினுமமையும். வாடு வாட்டெனவிகாரம். வாடுதல் - குறைதல. குறைதலரியவெனவே நிறைந்தவென்பதாயிற்று. பிறரால் வாட்டுதலரியவெனவு மாம். இனைதல் - இனையாயிற்று; விகாரம். கணவனோடு - கணவனை.

௪௪ - ௫௪. பெறுகேன்
கடுக்குமென் னெஞ்சங் கனவினா லென்கை
பிடித்தனன் போயோர் பெரும்பதியுட் பட்டேம
பட்ட பதியிற் படாத தொருவார்த்தை
யிட்டனர் ரூரா ரிடுதேளிட் டென்றன்மேற்
கோவலற் குற்றதோர் தீங்கென் றதுகேட்டுக்
காவலன் முன்னர்யான் கட்டுரைத்தேன் காவலனோ
டூர்க்குற்ற தீங்குமொன் றுண்டா லுரையாடேன்
றீக்குற்றம் போலுஞ் செறிதொடீஇ தீக்குற்ற
முற்றேனொ டுற்ற வுறுவனோ டியானுற்ற
நற்றிறங் கேட்கி னகையாகும்

இ - ள். செறிதொடீஇ, நீ இங்ஙனங்கூறுதலாற் பெறுவேனாயினும் என் னெஞ்சம் ஐயுறுகின்றதுகாண்; அஃது எற்றாலெனின், நெருநற் கங்குற் கனவின் கண் என்கொழுநன் என்னைக் கைப்பற்றினனாய்ப்போக யாங்கள் ஓர் பெரிய பதிக்கட்புக்கோம்; அங்ஙனம்புக்க பதியிடத்தே எங்கட்கு ஏலாததோர் படிற்று ரையை அவ்வூரார் இடுதேளிடுமாறுபோல என்மேலிட்டனர்; அங்ஙனம் அவரி டப்பட்ட அப்படிற்றாற் கோவலற்கு ஓர் தீங்குற்றதென்று பிறர் சொல்லக்கேட்டு அதுபொறாது அவ்வூரரசன்முன்னர்,செல்லாதேன்சென்று வழக்குரையாதேன் வழக் குரைத்தேன்; ஆதலால் அவ்வரசனோடு அவ்வூர்க்கும் உற்றதோர் தீங்குண்டு; ஆனா லும் அவை நீக்கலாவாதலான் நினக்குரையேன்; இங்ஙனம் தீவினையுற்ற என்னோடு பொருந்திய மிக்கோனுடனே யான்பெற்ற நற்றிறங்களை நீகேட்பாயாயின் அது நினக்கு நகையைத்தருமென்றுசொல்லவென்க.

கடுக்கும் - ஐயுறும்; கடியென்னுமுரிச்சொல் ஈறுதிரிபு; *"போற்றி னரி யவை போற்றல் கடுத்தபின் - றேற்றுதல் யார்க்கு மரிது" என்றாற்போல. அது † 'ஐயமுங் கரிப்பு மாகலு முரித்தே" என்பதனான்முடிந்தது. கனவினாற் கடுக்குமெ னினுமமையும். இடுதேளிடுதல் - தேளிடப்படுவோர் காணாமே தேளல்லாததொன் றை மறையக் கொடுவந்து மேலேயிட்டு அவரைக் கலங்கப்பண்ணுதல்; பாய்ச்சுத் தேளென்பாருமுளர். என்றன்மேல், தன் - அசை. தீங்கென்றது கேட்டு - தீங் கென்றுசொல்ல அதுகேட்டு; சொல்லவென ஒருசொல்வருவிக்க. ஒடு - எண் ணொடு, வேறுவினை ஒடுவுமாம்; ஆவது காவலன்மரணமும் ஊர்தீப்படும். உம்மை இறந்ததுதழீஇயவெச்சவும்மை. உரையாடேனென்றாள்; ‡"உரையா நிழிதக்க காணிற் கன" என்பது பழமொழியாகலின். தீக்குற்றம் - கடிதான்குற்றம். ஆவது முலைதிருகியெறிதல். நற்றிறம் - இருவரும் சுவர்க்கம்புகுதல. நகையாகு மென்றாள், இது கிட்டாததொன்றாகலின் எனவென ஈண்டும் ஒருசொல் வரு விக்க. என்மேலென்றாள், பெண்பாற்றன்மையான்; அன்றி இப்பழி தான் சுமந்து நிற்றலானெனினுமமையும்.

ருச-௬ச. பொற்றொடீஇ

கைத்தாயு மல்லை கணவற் கொருநோன்பு
பொய்த்தாய பழம்பிறப்பிற் போய்க்கெடுக வுய்த்துக்
கடலொடு காவிரி சென்றலைக்கு முன்றின்
மடலவிழ் நெய்தலங் கானற் றடமுள
சோமகுண்டஞ் சூரிய குண்டத் துறைமூழ்கிக்
காமவேள் கோட்டந் தொழுதார் கணவரொடு
தாமின் புறுவ ருலகத்துத் தையலார்
போகஞ்செய பூமியினும் போய்ப்பிறப்பர் யாமொருநா
ளாடுது மென்ற வணியிழைக்கவ் வாயிழையாள்
பீடன் றெனவிருந்த பின்னரே

* திருக்குறள், மன்னரைச்சேர்ந்தொழுகல், ௯.
† தொல்காப்பியம், சொல்லதிகாரம், உரியியல், அ௮.
‡ பழமொழி, க௮உ.

இ - ள். பொற்றொடீஇ, நீ கண்டகனாக்கொண்டு வருந்தவேண்டா ; நீ அவனால் வெறுக்கப்பட்டாயுமல்லை ; நின்கணவன்காரணமாக ஒருநோன்பு முற்பிறப்பிலேதப்பினாய் ; அதனால் உள்ளதீங்குமிக்கன ; இத்தீங்குங்கெடுவதாகக் காவிரி தன்னீரைக்கொண்டுசென்று கடலோடெதிர்த்து அலைக்கும் சங்கமுகத்தயலதாகிய பூவிரிதழவிழும் நெய்தற்கானலிடத்து இரண்டு தடாகமுள்ளன ; அவை யாவையெனிற் *சோமகுண்டம் சூரியகுண்டமென்னும் பெயரையுடையன ; அவற்றின் றுறைகளின்மூழ்கிக் காமவேள்கோட்டத்திற்புக்கு அவனைத் தொழுதாராயின், அவர் இப்பிறப்பினுள்ள நாளெல்லாம் தங்கணவரோடும் பிரிவின்றியிருந்து இவ்வுலகத்து இன்பமுறுவர் ; மறுமைக்கும் போகபூமியிலேயும் போய்ப்பிறந்து கணவரோடும் பிரிவின்றி மூன்றுபல்லங்காலம் இன்பநுகர்வராதலான் அவற்றை யாமும் ஒருநான்று ஆடக்கடவேமென்று சொன்ன தேவந்திக்குக் கண்ணகி அங்ஙனம் துறைமூழ்கித் தெய்வந்தொழுதல் எங்கட்கு இயல்பன்றென்று சொல்லி இருந்தபின்றாக வென்க.

†"காமனை யென்றுஞ் சொல்லார் கணவற்கை தொழுது வாழ்வார்" என்றாராகலின், இங்ஙனங்கூறினள். இக்குண்டமிரண்டிற்கும் இவ்வுலகத்தின்புறலும், போகபூமியிற்பிறத்தலும் நிரனிறையாக்கலுமொன்று ; அவற்றை, ‡"இருகாமத் திணையேரி" என்றார் பட்டினப்பாலையிலும்.

சு௪ - சுசு. நீடிய

காவலன் போலுங் கடைத்தலையான் வந்து

கோவலனென்றாளோர் குற்றிளையாள்

இ - ள். அங்ஙனஞ்சொல்லி அவளிருக்கின்றவளவிலே குறுந்தொழிலினையாள் காவலன்போலுங்கோவலன் நீடிய நங்கடையிடத்தானென்றாளென்க.

அன்றித் தூரத்தேபார்த்து ஐயுற்று நங்காவலன்போலுமென்று அவனாகுமினவிடத்து. ஐயந்தீர்ந்து கோவலனென்றாளினுமமையும். இனி நங்கோவலன் வருகின்றவரத்து நம்மை நெடுங்காலம் காப்பான்போலே இராநின்றதெனறு ளொனினுமமையும்.

சுசு - எக. கோவலனும

பாடகம் சேர்க்கையுட் புக்குத்தன் பைந்தொடி

வாடிய மேனி வருத்தங்கண் டியாழோர்

* இங்கேகூறிய சோமகுண்டமும் சூரியகுண்டமும் முறையே திருவெண்காட்டுள்ள சோமதீர்த்தமும் சூரியதீர்த்தமுமமென்று சிலபெரியோர் கூறுகின்றனர்.

† சீவகசிந்தாமணி, கனகமாலையாரிலம்பகம், ௭௨. "காமெனிற் சாதந்தை றன்னவன் றணந்த காலைப், பூமுறும் புனைதலின்றிப் பொற்புடன் புலம்ப வைகிக், காமனை யென்றுஞ் சொல்லார் கணவற்கை தொழுது வாழ்வார், தேமலர்த் திருவொ டொப்பார் சேர்ந்தவன் செல்லல் றீர்ப்பார்."

‡ பத்துப்பாட்டு, பட்டினப்பாலை, ௩௮ - ௪௧. "இருகாமத் திணையேரிப், புலிப்பொறிப் போர்க்கதவிற், றிருத்துஞ்சுந் திண்காப்பின்."

சலம்புணர் கொள்கைச் சலதியொ டாடிக்
குலந்தரு வான்பொருட் குன்றந் தொலைந்த
இலம்பாடு நாணுத் தருமெனக் கென்ன

இ - ள். அங்ஙனங் கடைத்தலையானுன கோவலனும் கொடியிடையார்தாம் விளக்கங்காட்டிக் கோலங்கொள்ளாநிற்ப அக்காலத்தேவந்து பெருமையமைந்த சயனத்திடத்தேபுக்கவன் தனது பைந்தொடியுடைய மேனிவாட்டமும் நெஞ்சு வருத்தமுங்கண்டு அவ்வெல்லாப்பொருளையும் பொய்யை மெய்யாகப்பொருந்துவித்தொழுகும் பொய்த்தியோடெங்கூடி ஆடிய ஒழுக்கத்தினுனே நங்குலத்திலுள்ளார் தேடித்தந்த மிக்க நிதிக்குன்றமெலலாம் அவள்பொருட்டால் தொலைந்ததனுன் இல்லாமையுண்டாதல் எனக்கு நாணைத்தருகின்றதுகாணென்னவென்க.

பாடு - படுக்கை. சலம் - பொய். சலதி - பொய்த்தி. ஆடுதல் - உடனுதல். குலந்தருவான்பொருள் - தொன்றுதொட்டுவருகின்றபொருள். இன்று நாணுத்தருமென்றது, கெட்டால் மதிதோன்றுமென்னும்வழக்கு.

௭௨-௭௩. நலங்கேழ் முறுவ னகைமுகங் காட்டிச்
சிலம்புள கொண்மென

இ - ள். இவ்வாறு இவன் தன்னைப்போற்றி இலம்பாடு நாணுத்தருமென்றதனை மாதவிக்குக்கொடுக்கும் பொருட்குறைபாட்டால் தளர்ந்து கூறினுனைக் கருதி, ஒளிபொருந்தியமுகத்தே நலம்பொருந்திய சிறிய முறுவலைவிளைத்து இன்னுஞ் சிலம்பு ஓரிணையுள ; அவற்றைக் கொண்மினென்ருளென்க.

சிலம்புளவென்ருள் ; இவையொழிந்த கலனெல்லாம் தொலைதலால். இவை அணியாதிருத்தலை இவனறியானுகக்கருதினும் அவன் தளாச்சிகூறுதலால் தான் இவையுண்மைநினைந்து கூறினளென்க. புலந்துகூறினுளெனிற் கற்பின்றன்மையன்ரும்

௭௩-௭௯. சேயிழை கேளிச்
சிலம்பு முதலாகச் சென்ற கலனோ
டுலந்தபொரு ளீட்டுத லுற்றேன் மலர்ந்தசீர்
மாட மதுரை யகத்துச்சென் றென்னோடிங்
கேடலர் கோதா யெழுகென்று நீடி
வினைகடைக் கூட்ட வியங்கொண்டான் கங்குற்
கனைசுடர் கால்சீயா முன்.

இ - ள். இங்ஙனம் கருதியசேயிழாய், கேள் ; நீசொன்ன இச்சிலம்பை நான் வாணிகமுதலாகக்கொண்டு முன்புநான் வாங்கியழித்தகலனையும் அல்லாக் கெட்ட பொருளைப் பொருளானும் தேடித்தொகுத்தலைத்துணிந்தேன் ; அஃது எவ்விடத்தே சென்றெனின், விரிந்த புகழையுடைய மதுரையென்னுநகரிடத்தேசென்றுதலாற் கோதாய், அதற்கு நீ இப்பொழுதே இங்குநின்றும் என்னோடெழுவாயாகவென்று சொல்லி முற்பவத்திற்முன்செய்த தீவினை நெடுங்காலநின்று நெஞ்சை ஒருப்படுத்

துதலானே அவ்வினையின் றேவலைக்கொண்டான், எப்பொழுது போதற்கெனிற் கங்குலை அவ்விடத்தினின்றுஞ் சுடர் போக்குவதன்முன்னேயென்க.

சித்தல் - விளக்குதல். சிலம்புமுதலா .... உற்றேனென்பதற்குக் கலனைச் சிலம்பானும் பொருளைப் பொருளாலும் ஈட்டுதலுற்றேனென்றானென்க. இரண்டும் இதனானே ஈட்டுதலுற்றேனென்றானெனினுமமையும்.

இது, கனவென்னும் பொருளையேகருதாது மாலதிகதையையும் தேவந்திகதையையும் கலந்துகூறிற்றேனும், உறுப்பழிவின்றி நடந்ததேனும் முந்நான்கடியினிறந்துவருதலான் நெடுவெண்பாட்டாகாது கலிவெண்பாட்டாதலுணர்க.

காதலி கண்ட கனவு கருநெடுங்கண்
மாதவிதன் சொல்லை வறிதாக்க - மூதை
வினைகடைக் கூட்ட வியங்கொண்டான் கங்குற்
கனைசுடர் கால்சீயா முன்.

இவட்கு மேற்கூட்டமின்மையாற் கருநெடுங்கண்ணென்றார்; கனவு சொல்லை வறிதாக்க வினைகடைக்கூட்ட வியங்கொண்டானென்க. சொல்லைவறிதாக்குதல் - வேனிற்காதையிற் காலைகாண்குவமென்றசொல்லைப் பயனின்றாக்குதல்.

பருந்து நிழலுமென ... ...அடியார்க்குநல்லானென்பான்.

ஒருந்தமிழ் ... ...நிரம்பையர்காவலனே.

காற்றை ... ...சொல்வித்ததே.

கனாத்திறமுரைத்தகாதை முற்றிற்று.

பத்தாவது

நாடுகாண் காதை.

வான்கண் விழியா வைகறை யாமத்து
மீன்றிகழ் விசும்பின் வெண்மதி நீங்கக்
காரிரு ணின்ற கடைநாட் கங்கு
லூழ்வினை கடைஇ யுள்ளந் துரப்ப
வேழகத் தகரு மெகினக் கவரியுந்
தூமயி ரன்னமுந் துணையெனத் திரியுந்
தாழொடு குயின்ற தகைசால் சிறப்பி
னீணெடு வாயி னெடுங்கடை கழிந்தாங்
கணிகிள ரரவி னறிதுயி லமர்ந்த
மணிவண்ணன் கோட்டம் வலஞ்செயாக் கழிந்து
பணையைந் தோங்கிய பாசிலைப் போதி
யணிதிகழ் நீழ லறவோன் றிருமொழி
யந்தர சாரிக ளறைந்தனர் சாற்று
மிந்திர விகார மேழுடன் போகிப்
புலவூண் டுறந்து பொய்யா விரதத்
தவல நீத்தறிந் தடங்கிய கொள்கை
மெய்வகை யுணர்ந்த விழுமியோர் குழீஇய
வைவகை நின்ற வருகத் தானத்துச்
சந்தி யைந்துந் தம்முடன் கூடி
வந்து தலைமயங்கிய வான்பெரு மன்றத்துப்
பொலம்பூம் பிண்டி நலங்கிளர் கொழுநிழ
னீரணி விழவினு நெடுந்தேர் விழவினுஞ்
சாரணர் வரூஉந் தகுதியுண் டாமென
வுலக நோன்பிக ளொருங்குட னிட்ட
விலகொளிச் சிலாதலந் தொழுது வலங்கொண்டு
மலைதலைக் கொண்ட பேர்யாறு போலு
முலக விடைகழி யொருங்குட னீங்கிக்
கலையி லாளன் காமர் வேனிலொடு
மலய மாருத மன்னவற் கிறுக்கும்
பன்மல ரடுக்கிய நன்மரப் பந்த

ரிலவந் திகையி னெயிற்புறம் போகித்
தாழ்பொழி லுடுத்த தண்பதப் பெருவழிக்
காவிரி வாயிற் கடைமுகங் கழிந்து
குடதிசைக் கொண்டு கொழும்புனற் காவிரி
வடபெருங் கோட்டு மலர்ப்பொழி னுழைந்து
காவதங் கடந்து கவுந்திப் பள்ளிப்
பூமரப் பொதும்பர்ப் பொருந்தி யாங்க
ணிறுங்கொடி நுசுப்போ டினைந்தடி வருந்தி
நறும்பல் கூந்தல் குறும்பல வுயிர்த்து
முதிராக் கிளவியின் முள்ளெயி றிலங்க
மதுரை மூதூர் யாதென வினவ
வாறைங் காதநம் மகனாட் டும்பர்
நாறைங் கூந்த லணித்தென நக்குத்
தேமொழி தன்னொடுஞ் சிறையகத் திருந்த
காவுந்தி யையையைக் கண்டடி தொழலு
முருவுங் குலனு முயர்பே ரொழுக்கமும்
பெருமகன் றிருமொழி பிறழா நோன்பு
முடையீ ரென்னோ வுறுக ணாளிர
கடைகழிந் திங்ஙனங் கருதிய வாறென
வுரையாட் டில்லை யுறுதவத் தீர்யான்
மதுரை மூதூர் வரைபொருள் வேட்கையேன்
பாடகச் சீறடி பரற்பகை யுழவா
காடிடை யிட்ட நாடுநீர் கழிதற்
கரிதிவள் செவ்வி யறிகுந ரியாரோ
வுரிய தன்றீங் கொழிகென வொழியீர்
மறவுரை நீத்த மாசறு கேள்விய
ரறவுரை கேட்டாங் கறிவனை யேத்தத்
தென்றமிழ் நன்னாட்டுத் தீதுதீர் மதுரைக்
கொன்றிய வுள்ள முடையே னாகலிற்
போதுவல் யானும் போதுமி னென்ற
காவுந்தி யையையைக் கைதொழு தேத்தி
யடிக ணீரே யருளுதி ராயினிந்
தொடிவளைத் தோளி துயர்தீர்த் தேனெனக்
கோவலன் காணாய் கொண்ட விந்நெறிக்
கேதந் தருவன யாங்குபல கேண்மோ
வெயினிறம் பொறாஅ மெல்லியற் கொண்டு

பயில்பூந் தண்டலைப் படர்குவ மெனினே
மண்பக வீழ்ந்த கிழங்ககழ் குழியைச்
சண்பக நிறைத்த தாதுசேர் பொங்கர்
பொய்யறைப் படுத்துப் போற்றா மாக்கட்குக்
கையறு துன்பங் காட்டினுங் காட்டு
முதிர்பூஞ் செம்மலி னொதுங்கினர் கழிவோர்
முதிர்தேம் பழம்பகை முட்டினு முட்டு
மஞ்சளு மிஞ்சியு மயங்கரில் வலயத்துச்
செஞ்சுளைப் பலவின் பரற்பகை யுறுக்குங்
கயனெடுங் கண்ணி காதற் கேள்வ
வயலுழைப் படர்குவ மெனினே யாங்குப்
பூநா றிலஞ்சிப் பொருகய லோட்டி
நீர்நாய் கௌவிய நெடும்புற வாளை
மலங்குமிளிர் செறுவின் விலங்கப் பாயிற்
கலங்கலு முண்டிக் காரிகை யாங்கட்
கரும்பிற் றொடுத்த பெருந்தேன் சிதைந்து
சுரும்புசூழ் பொய்கைத் தூநீர் கலக்கு
மடங்கா வேட்கையி னறிவஞ ரெய்திக்
குடங்கையி னொண்டு கொள்ளவுங் கூடுங்
குறுநரிட்ட குவளையம் போதொடு
பொறிவரி வண்டினம் பொருந்திய கிடக்கை
நெறிசெல் வருத்தத்து நீரஞ ரெய்தி
யறியா தடியாங் கிடுதலுங் கூடு
மெறிநீ ரடைகரை யியக்கந் தன்னிற்
பொறிமா ணலவனு நந்தும் போற்றா
தூழடி யொதுக்கத் துறுநோய் காணிற்
றாழ்தரு துன்பந் தாங்கவு மொண்ணா
வயலுஞ் சோலையு மல்லது யாங்கணு
மயல்படக் கிடந்த நெறியாங் கில்லை
நெறியிருங் குஞ்சி நீவெய் யோளொடு
குறியறிந் தவையவை குறுகா தோம்பெனத்
தோமறு *கடிஞையுஞ் சுவன்மே லறுவையுங்
காவுந்தி யையைகைப் பீலியுங் கொண்டு
மொழிப்பொருட் டெய்வம் வழித்துணை யாகெனப்
பழிப்பருஞ் சிறப்பின் வழிப்படர் புரிந்தோர்

* கடிகையெனவும்பாடம்.

கரியவன் புகையினும் புகைக்கொடி தோன்றினும
விரிகதிர் வெள்ளி தென்புலம் படரினுங்
கால்பொரு நிவப்பிற் கடுங்குர லேற்றொடு
சூன்முதிர் கொண்மூப் பெயல்வளஞ் சுரப்பக்
குடமலைப் பிறந்த கொழும்பல் றாரமொடு
கடல்வள னெதிரக் கயவாய் நெரிக்குங்
காவிரிப் புதுநீர்க் கடுவரல் வாய்த்தலை
யோவிறந் தொலிக்கு மொலியே யல்ல
தாம்பியுங் கிழாரும் வீங்கிசை யேத்தமு
மோங்குநீர்ப் பிழாவு மொலித்தல் செல்லாக்
கழனிச் செந்நெற் கரும்பூழ் மருங்கிற்
பழனத் தாமரைப் பைம்பூங் கானத்துக்
கம்புட் கோழியுங் கனைகுர னாரையுஞ்
செங்கா லன்னமும் பைங்காற் கொக்குங்
கானக் கோழியு நீர்நிறக் காக்கையு
முள்ளு மூரலும் புள்ளும் புதாவும்
வெல்போர் வேந்தர் முனையிடம் போலப்
பல்வேறு குழூஉக்குரல பரந்த வோதையு
முழாஅ நுண்டொளி யுள்புக் கழுந்திய
கழாமயிர் யாக்கைச் செங்கட் காரான்
சொரிபுற முரிஞ்சப் புரிஞெகிழ் புற்ற
குமரிக் கூட்டிற் கொழும்பல் லுணவு
கவரிச் செந்நெற் காய்த்தலைச் சொரியக்
கருங்கை வினைஞருங் களமருங் கூடி
யொருங்குநின் றார்க்கு மொலியே யன்றியுங்
கடிமலர் களைந்து முடிநா றழுத்தித்
தொடிவளைத் தோளு மாகமுந் தோய்ந்து
சேறாடு கோலமொடு வீறுபெறத் தோன்றிய
செங்கய னெடுங்கட் சின்மொழிக் கடைசியர்
வெங்கட் டொலைச்சிய விருந்திற் பாணியுங்
கொழுங்கொடி யறுகையுங் குவளையுங் கலந்து
விளங்குகதிர்த் தொடுத்த விரியல் சூட்டிப்
பாருடைப் பனர்போற் பழிச்சினர் கைதொழ
வேரொடு நின்றோ ரேர்மங் கலமு
மரிந்துகால் குவித்தோ ரரிகடா வுறுத்த
பெருஞ்செந் நெல்லின் முகவைப் பாட்டுங்

தெண்கிணைப் பொருநர் செருக்குட னெடுத்த
மண்கணை முழவின் மகிழிசை யோதையும்
பேரியாற் றடைகரை நீரிற் கேட்டாங்
கார்வ நெஞ்சமொ டவலங் கொள்ளா
ருழைப்புலிக் கொடித்தே ருரவோன் கொற்றமொடு
மழைக்கரு வுயிர்க்கு மழற்றிக ழட்டின்
மறையோ ராக்கிய *வாவுதி நறும்புகை
யிறையுயர் மாட மெங்கணும் போர்த்து
மஞ்சுசூழ் மலையின் மாணத் தோன்று
மங்கல மறையோ ரிருக்கை யன்றியும்
பரப்புநீர்க் காவிரிப் பாவைதன் புதல்வ
ரிரப்போர் சுற்றமும் புரப்போர் கொற்றமு
முழவிடை விளைப்போர் பழவிற லூர்களும்
பொங்கழி யாலைப் புகையொடு பரந்து
மங்குல்வா னத்து மலையிற் றோன்று
மூரிடை யிட்ட நாடுடன் கண்டு
காவத மல்லது கடவா ராகிப்
பன்னாட் டங்கிச் சென்னா ளொருநா
ளாற்றுவீ யரங்கத்து வீற்றுவீற் றாகிக்
குரங்கமை யுடுத்த மரம்பயி லடுக்கத்து
வானவ ருறையும் பூநா றொருசிறைப்
பட்டினப் பாக்கம் விட்டனர் நீங்காப்
பெரும்பெய ரைய ரொருங்குட னிட்ட
இலங்கொளிச் சிலாதல மேலிருந் தருளிப்
பெருமக னதிசயம் பிறழா வாய்மைத்
தருமஞ் சாற்றுஞ் சாரணர் தோன்றப்
பண்டைத் தொல்வினை பாறுக வென்றே
கண்டிறை கவுந்தியொடு காலுற வீழ்ந்தோர்
வந்த காரணம் வயங்கிய கொள்கைச்
சிந்தை விளக்கிற் றெரிந்தோ ராயிடை
யார்வமுஞ் செற்றமு மகல நீக்கிய
வீர னாகலின் விழுமங் கொள்ளான்
கழிபெருஞ் சிறப்பிற் கவுந்தி காணா
யொழிகென வொழியா தூட்டும் வல்வினை
யிட்ட வித்தி னெதிர்ந்துவந் தெய்தி

* வானவிறும்புகையென்றும், வானவருணஅவென்றும் பாடம்.

யொட்டுங் காலை யொழிக்கவு மொண்ணாது
கடுங்கா னெடுவெளி யிடுஞ்சுட ரென்ன
வொருங்குட னில்லா வுடம்பிடை யுயிர்க
ளறிவ னறவோ னறிவுவரம் பிகந்தோன்
செறிவன் சினேந்திரன் சித்தன் பகவன்
றரும முதல்வன் றலைவன் றருமன்
பொருளன் புனிதன் புராணன் புலவன்
சினவரன் றேவன் சிவகதி நாயகன்
பரமன் குணவதன் பரத்தி லொளியோன்
றத்துவன் சாதுவன் சாரணன் காரணன்
சித்தன் பெரியவன் செம்ம றிகழொளி
யிறைவன் குரவ னியல்குண னெங்கோன்
குறைவில் புகழோன் குணப்பெருங் கோமான்
சங்கர னீசன் சயம்பு சதுமுக
னங்கம் பயந்தோ னருக னருண்முனி
பண்ணவ னெண்குணன் பாத்தில பழம்பொருள்
விண்ணவன் வேத முதல்வன் விளங்கொளி
யோதிய வேதத் தொளியுறி னல்லது
போதார் பிறவிப் பொதியறை யோரெனச்
சாரணர் வாய்மொழி கேட்டுத் தவமுதற்
காவுந் தியுந்தன் கைதலை மேற்கொண்
டொருமூன் றவித்தோ னோதிய ஞானத்
திருமொழிக் கல்லதென் செவியகந் திறவா
காமனை வென்றோ னாயிரத் தெட்டு
நாம மல்லது நவிலா தென்னா
வைவரை வென்றோ னடியிணை யல்லது
கைவரைக் காணினுங் காணா வென்க
ணருளறம் பூண்டோன் றிருமெய்க் கல்லதென்
பொருளில் யாக்கை பூமியிற் பொருந்தா
தருக ரறவ னறிவோற் கல்லதென்
னிருகையுங் கூடி யொருவழிக் குவியா
மலர்மிசை நடந்தோன் மலரடி யல்லதென்
றலைமிசை யுச்சி தானணிப் பொறாஅ
திறுதியி லின்பத் திறைமொழி யல்லது
மறுதர வோதியென் மனம்புடை பெயரா
தென்றவ னிசைமொழி யேத்தக் கேட்டதற்

கொன்றிய மாதவ ருயர்மிசை யோங்கி
நிவந்தாங் கொருமுழ நீணில நீங்கிப்
பவந்தரு பாசங் கவுந்தி கெடுகென்
றந்தர மாறூஉப் படர்வோர்த் தொழுது
பந்த மறுகெனப் பணிந்தனர் போந்து
காரணி பூம்பொழிற் காவிரிப் பேரியாற்று
நீரணி மாடத்து நெடுந்துறை போகி
மாதருங் கணவனு மாதவத் தாட்டியுந்
தீதுதீர் நியமத் தென்கரை யெய்திப்
போதுசூழ் கிடக்கையோர் பூம்பொழி லிருந்துழி
வம்பப் பரத்தை வறுமொழி யாளனொடு
கொங்கலர் பூம்பொழிற் குறுகினர் *சென்றோர்
காமனுந் தேவியும் போலு மீங்கிவ
ராரெனக் கேட்டீங் கறிகுவ மென்றே
நோற்றுணல் யாக்கை நொசிதவத் தீருட
னாறு வழிப்பட்டோ ராரென வினவவெண்
மக்கள் காணீர் மானிட யாக்கையர்
பக்க நீங்குமின் பரிபுலம் பினரென
வுடன்வயிற் றோர்க ளொருங்குடன் வாழ்க்கை
கடவது முண்டோ கற்றறிந் தீரெனத்
தீமொழி கேட்டுச் செவியகம் புதைத்துக்
காதலன் முன்னாக் கண்ணகி நடுங்க
வெள்ளுநர் போலுமிவ ரென்பூங் கோதையை
முள்ளுடைக் காட்டின் முதுநரி யாகெனக்
கவுந்தி யிட்ட தவந்தரு சாபங்
கட்டிய தாதலிற் பட்டதை யறியார்
குறுநரி நெடுங்குரற் கூவிளி கேட்டு
நறுமலர்க் கோதையு நம்பியு நடுங்கி
நெறியி னீங்கியோர் நீரல கூறினு
மறியா மையென் றறியல் வேண்டுஞ்
செய்தவத் தீர்நுந் திருமுன் பிழைத்தோர்க்
குய்திக் கால முரையீ ரோவென
வறியா மையினின் றிழிபிறப் புற்றோ
ருறையூர் நொச்சி யொருபுடை யொதுங்கிப்
பன்னிரு மதியம் படர்நோ யுழந்தபின்

* சென்றுழியெனவும்பாடம்.

முன்னை யுருவம் பெறுகவிங் கிவரெனச்
சாபவிடை செய்து தவப்பெருஞ் சிறப்பிற்
காவுந்தி யையையுந் தேவியுங் கணவனு
முறஞ்செவி வாரண முன்சம முருக்கிய
புறஞ்சிறை வாரணம் புக்கனர் புரிந்தென.

---

௧ - ௩. வான்கண் விழியா வைகறை யாமத்து
மீன்றிகழ் விசும்பின் வெண்மதி நீங்கக்
காரிரு ணின்ற கடைநாட் கங்குல்

இ - ள். உலகிற்குக் கண்ணாகிய ஆதித்தன் தோன்றிவிளங்காத வைகறையென்னும் யாமத்திடத்து மீனோடு அழகுபெற்றொழுகும் வெண்மதியானது விசும்பினின்றும் நீங்கிற்றாகக் கரிய இருள் கடைக்கணின்ற கங்குற் பொழுதிலென்க.

என்பது : அந்தச் சித்திரைத்திங்கட் புகுநாள் - சோதி, திதி - மூன்றாம்பக்கம், வாரம் - ஞாயிறு. இத்திங்களிருபத்தெட்டிற் சித்திரையும் பூரணையுங்கூடிய சனிவாரத்திற் கொடியேற்றி *"நாலேழ் நாளினும்" என்பதனான் இருபத்தெட்டு நாளும் விழாநடந்து கொடியிறங்கி வைகாசி இருபத்தெட்டினிற் பூருவபக்கத்தின் பதின்மூன்றாம் பக்கமும் சோமவாரமும்பெற்ற அனுட்டத்தில் நாட்கடலாடி ஊடுதலின் வைகாசி இருபத்தொன்பதிற் செவ்வாய்க்கிழமையும் கேட்டையும் பெற்ற நற்யோகத்து நிறைமதிப் பதினாலாம்பக்கத்து வைகறைப்பொழுதினிடத்து நிலவுப்பட்ட அந்தரத்திருளிலேயென்றவாறு. அது பூருவபக்கமென்பது தோன்றக் காரிருணின்ற கடைநாட் கங்குலென்றார்; †"குணமுதற் றோன்றிய வாரிருண் மதியிற், றேய்வன கெடுகநின் றெவ்வ ராக்கம்" என இருண்மதியென்றார் மதுரைக்காஞ்சியுள்ளும். கண் - இறைவன்கண்ணென்பாருமுளர். விழித்தல் - விளங்குதல்; அது செய்யாதவைகறை - ஆகுபெயர்; வைகல் - துயிறல; அறல் - அறையாயிற்று; "பொறியறை" போல. ‡

௪. ஊழ்வினை கடைஇ யுள்ளந் துரப்ப

இ - ள். முன்செய்ததீவினை முறையானேவந்து இவனுள்ளத்தைச் செலுத்துதலானேயென்க.

கடைஇ - செலுத்தியென்றுமாம்.

௫ - ௮. ஏழகத் தகரு மெகினக் கவரியுந்
தூமயி ரன்னமுந் துணையெனத் திரியுந்

---

* மணிமேகலை, முதலாவது விழாவறைகாதை: "தூங்கெயி லெறிந்த தொடித்தோட் செம்பியன், விண்ணவர் தலைவனை வணங்கிமுன் னின்று, மண்ணகத் தென்றன் வான்பதி தன்னுண், மேலோர் விழைய விழாக்கோ ளெடுத்த, நாலேழ் நாளினு நன்கினி துறைகென, வமரர் தலைவ னாங்கது நேர்ந்தது"

† பத்துப்பாட்டு, மதுரைக்காஞ்சி, ௧௯௫ - ௧௯௬.

‡ இவ்விசேடவுரையிலுள்ள காலவரையறை பொருந்தாததுபோல் தோற்றுகிறது; ஆயினும் பிரதிகளிலுள்ளவாறே பதிப்பிக்கப்பட்டது. அது விளங்கிய பின்பு தெரிவிக்கப்படும்.

தாழொடு குயின்ற தகைசால் சிறப்பி
பொறியொடு வாயி னெடுங்கடை கழிந்து

இ - ள். ஏழகமாகிய தகரும் எகினமாகியகவரியும் தூய மயிரினையுடைய அன்னமுமாகியவிவை ஒன்றேடொன்று இனமல்லவாயினும் இனம்போலே விடாது திரியும் தாழோடுகூடப் பண்ணப்பட்ட பெருமைபொருந்திய சிறப்பினையுடையு மிகவும் பெரிய கதவையுடைய இடைகழியைக் கழிந்தென்க.

நெடுவாயிற்கடை - பெரிய கதவையுடைய தலைக்கடை. தகர்முதலியன இவள் வளர்த்தனவாகலின், இவளைத் தம்மினமென்றுகருதித் திரியுமெனவுமாம். வாயிற் கணெழுதினவற்றை இனமெனக்கருதித் திரியுமெனவுமமையும். தாழொடுகுயின்றவென்றார், போர்க்கதவாகலின் இனியெளகாமற் பண்ணுகின்றபோதே கூடப் பண்ணுதலான். ஏழகத்தகர்முதலியன இருபெயரொட்டுப் பண்புத்தொகை. வாயில - கதவு. கடைகழிந்தென்றார், மனையின்பெருமையும் காவன்மிகுதியுந் தோன்ற. இனி இவன் அன்று கழிந்தானெனினுமமையும்.

கூ - க0. ஆங்கு
அணிகிளா ரரவி னறிதுயி லமர்ந்த
மணிவண்ணன் கோட்டம் வலஞ்செயாக் கழிந்து

இ - ள். அங்ஙனம் வாயில்கழிந்தபொழுதே அரவணையின்மீதே அறிவோடு துயில்கொள்ளும் மணிவண்ணனென்னும் திருநாமத்தையுடைய திருமால்கோயிலை வலஞ்செய்து கழிந்தென்க.

ஆவது வலத்திட்டேகுதல். அணி - அழகு. அறிதுயில் - யோகநித்திரை. மணிவண்ணன் - பெயர்.

கக - கச. பணையைந் தோங்கிய பாசிலைப் போதி
யணிதிகழ் நீழ லறவோன் றிருமொழி
யந்தர சாரிக ளறைந்தனர் சாற்று
மிந்திர விகார மேழுடன் போகி

இ - ள். ஓங்கிய ஐந்துபணையினையும் பசிய இலையினையுமுடைய மாபோதி* நிழலிலெழுந்தருளிய அறவோனாகிய புத்தன் அருளிச்செய்த ஆகமத்தை ஆகாய சாரிகள் மறையவுருந்தோதி யாவர்க்கும் விளங்கப் பொருளுணர்த்தப்படும் இந்திரனுனிருமிக்கப்பட்ட விகாரங்களேழினையும் அடைவேகண்டு அவற்றைக் கழிந்து போயென்க.

அவை அவ்வூர்ப் †புத்தசைத்தியத்து இந்திரன் நிருமித்தனவாகிய ஏழரங்கு. மாபோதியைந்துபணையது .. .. இயல்பு. திருமொழி - ஆகமம். அறைந்து சாற்றுதல் - ‡பாடமோதிப் பொருளுரைத்தல். விகாரம் - கையாற் கருவியாற் பண்ணாது மனத்தால் நிருமித்தல்.

* போதி - அரசமரம்.

† புத்தசைத்தியம் - பௌத்த வித்தியாசாலை ; புத்தனாலயமுமாம்.

‡ பாடமோதல் - மூலத்தை விளங்கச்சொல்லுதல்.

கரு - உரு. புலவூண் டுறந்து பொய்யா விரதத்
அவல நீக்கறிந் தடக்கிய கொள்கை
மெய்வகை யுணர்ந்த விழுமியோர் குழீஇ
ஐவகை நின்ற வருகத் தானத்துச்
சந்தி யைந்துந் தம்முடன் கூடி
வந்து தலைமயங்கிய வான்பெரு மன்றத்துப்
பொலம்பூம் பிண்டி நலங்கிளர் கொழுநிழ
னீரணி விழவினு நெடுந்தேர் விழவினுஞ்
சாரணர் வரூஉந் தகுதியுண் டாமென
வுலக நோன்பிக ளொருங்குட னிட்ட
விலங்கொளிச் சிலாதலந் தொழுது வலங்கொண்டு

இ - ள். புலாலாகிய ஊணைத்துறந்து பொய்கூறாமையாகிய விரதத்தோடு பொருந்தி *அழுக்காறு அவாமுதலியவற்றைக் கைவிட்டு அறநூன்முதலியவற்றையறிந்து ஐம்புலனையுமடக்கிய கோட்பாட்டையுடையராய் உண்மைவகையுணர்ந்த சீரியோர்திரண்ட ஸ்ரீகோயிலில் பஞ்சபரமேட்டிகள் நிலைபெற்ற ஐந்துசந்தியுங் கூடி வந்து தலைமயங்கியிருக்கின்ற மிக்க பெரிய மன்றிற் பூவையுடைய பிண்டியினது அழகுகிளரும் நிழற்கண்ணே விசேஷ அயனதிகளிலும் விழவுகளிலும் ஆகாயசாரிகள் வரத்தகுமென்று சாவகரெல்லாங் கூடியிடப்பட்ட விளங்காநின்ற ஒளியையுடைய சிலாவட்டத்தை இவர்கடொழுது வலங்கொண்டென்க.

புலவூண் - புலாலோடே உண்ணுமூணுமாம். புலையூண் பாடமாயிற் புலையருண்ணுமூணென்க. விரதத்து - விரதத்தோடே. அவலம் - அழுக்காறு அவாமுதலியன. அறிந்து - அறியப்படும் அறநூல்களை அறிந்து. ஐவகை - பஞ்சபரமேட்டிகள்; அவர்: அருகர், சித்தர், உபாத்தியாயர், ஆசிரியர், சாதுக்களென விவர். ' இனி ஐவகை நின்ற வருகத் தானத்துச் சந்தி... ... ...மன்றென்பதற்கு ஐந்து ஸ்ரீகோயிற்சந்திகூடிய மன்றென்பாருமுளர். பொன் பொலிவாதலன்றிப் பொலம் பொலிவாகாமையின் அருகனுடையான் எப்பொழுதும் பொற்பூவைப் பூக்கும் பிண்டியென்க. சிலாதலம் - சந்திரகாந்தக்கல்லாற் படுத்தது. நீரணி விழவு - அபிடேகவிழவெனினுமமையும்.

உசு - உஎ. மலைதலைக் கொண்ட பேர்யாறு போலு
முலக விடைகழி யொருங்குட னீங்கி

இ - ள். மலையிடத்தே தலையையுடையதோர் பெரியயாறுபோலும் உலகிலுள்ளோராயவர் போக்குவரவு செய்தற்கமைந்த ஊர்வாயிலை அக்காலத்துப் போவாரோடு கலந்துபோய் அதனைவிட்டுநீங்கியென்க.

உலகவிடைகழி - ஊர்வாயில். இடையேகழிதலின், அவ்வாயில் இடைகழியாயிற்று. கோயிற்கோபுரத்தை மலையாகவும், அதனோடு மணந்துகிடந்ததெருவை ஆறாகவும் உவமித்தார்.

---

* "அழுக்கா றவாவெகுளி யின்னாச்சொ னான்கு, மிழுக்கா வியன்றதறம்" என்பது திருக்குறள்; அறன்வலியுறுத்தல், ரு.

உ௰ - ௩௧. கலையி லாளன் காமர் வேனிலொடு
மலய மாருத மன்னவற் கிறுக்கும்
பன்மல ரடுக்கிய நன்மரப் பந்த
ரிலவந் திகையி னெயிற்புறம் போகி

இ - ள். மன்னவற்குக் காமன் வேனிலோடு தென்றலையும் திறையாக இடுதற்குப்பொருந்திய பலமலர்களை நிரைத்த நல்ல மரநிழலையுடைய இலவந்திகையினது எயிற்குப் புறத்திலேபோயென்க.

கலையிலாளன் - அநங்கன்; கலை - சரீரம். காமர் - அழகு. பந்தர் - நிழல். இலவந்திகை - நீராவியைச்சூழ்ந்த வயந்தச்சோலை. அஃது அரசனும் உரிமையு மாடுங் காவற்சோலை; *"இலவந் திகையி னெயிற்புறம் போகி, னுலக மன்னவ னுழையோ ராங்குளர்" என்றார் மணிமேகலையிலும்.

௩உ - ௩௩. தாழ்பொழி லுடுத்த தண்பதப் பெருவழிக்
காவிரி வாயிற் கடைமுகங் கழிந்து

இ - ள். இருமருங்கும் சோலைசூழ்ந்த புதுப்புனலாடப்போம் பெரிய வீதியையுடைய காவிரிக்கரையில் திருமுகத்துறைகழிகின்ற வாயிலையும் கழிந்தென்க.

கடைமுகங்கழிந்தென்றார்; காலையில் நாணீராடுவோர் பிறர்முகநோக்காது போதற்கு மறைந்துகழிவர்; இவரும் அவ்வாறுகழிந்தாரென்றற்கு.

௩௪. குடதிசைக் கொண்டு—இ - ள். மேற்றிசையைநோக்கிக்கொண்டு,

௩௪ - ௩௫. கொழும்புனற் காவிரி
வடபெருங் கோட்டு மலர்ப்பொழி னுழைந்து

இ - ள். வளவிய புனலையுடைய காவிரியினது பெ யுற பொழிலைக்கழிந்தென்க.

கோடு - கரை. நுழைதல் - கழிதல். அன்றி இளமரக்காவாதலால், தாழ்ந்த கோட்டிடை நுழைந்துபோயெனவுமாம்.

காவதங் கடந்து கவுந்திப் பள்ளிப்
பூமரப் பொதும்பர்ப் பொருந்தி யாங்க
ணிறுங்கொடி நுசுப்போ டினைந்தடி வருந்தி
நறும்பல் கூந்தல் குறும்பல வுயிர்த்து

---

* மணிமேகலை, மூன்றாவது மலர்வனம்புகுகாதை: "பன்மல ரடுக்கிய நன்மரப் பந்த, ரிலவந் திகையி னெயிற்புறம் போகி, னுலக மன்னவ னுழையோ ராங்குளர், விண்ணவர் கோமான் விழாக்கொ ணன்னாள், மண்ணவர் விழையார் வானவ ரல்லது, பாடுவண் டிமிரா பன்மரம் யாவையும், வாடா மாமலர் மாலைக ளேக்கலிற், கைபெய் பாசத்துப் பூதங் காக்குமென், றய்யா னத்திடை யுணர்ந்தோர் செல்லார், வெங்கதிர் வெம்மையின் விரிசிறை யிழந்த, சம்பாதி யிருந்த சம்பாதி வனமுந், தவாநீர்க் காவிரிப் பாவைதன் றாதை, கவேரனங் கிருந்த கவேர வனமு, மூப்புடை முதுமைய தாக்கணங் குடைய, யாப்புடைத் தாக வறிந்தோ ரெய்தார்."

முதிராக் கிளவியின் முள்ளெயி றிலங்க
மதுரை மூதூர் யாதென வினவ

இ - ள். நறிய ஐவகைக் கூந்தலையுடையாள் அங்ஙனம் காதமென்றுசொல்லப் படும் எல்லையைக்கடந்துசென்று கவுந்தியடிகளிருக்கின்ற பள்ளிக்கு அயலதோர் பொலிவினையுடைய செறிந்த இளமரச்சோலையளவுஞ்சென்றுபொருந்தி அவ்விடத்தே இனி இஃது இறுமெனத்தக்க கொடிபோலும் இடையும் அடியும் மிகவும் வருந்தி மேல் இளைப்பாற் குறுகவுயிர்த்து முற்றாதமழலைமொழியாலே கூர்த்த எயிறிலங்க மதுரையென்னுமூதூர் யாதுதானென்று கேட்பவென்க.

காவுதம் - காதம்; பகுதிப்பொருள்விகுதி. பொதும்பர் - மரச்செறிவு; கோடரமென்பதுமாம்.

சஉ - சங. ஆறைங் காதநம் மகனாட் டும்பர்
நாறைங் கூந்த லணித்தென நக்கு

இ - ள். நீகூறிய மதுரை நம் அகன்றநாட்டிற்குமேல் ஆறைங்காவதங்காண் இனி அண்ணித்தென்றுகூறி நக்கென்க.

யாதென்றவட்கு முப்பதென்னும் பொருள்மறைந்து காதம் ஆறைங்காதமென்றாற்போலிருத்தற்கு ஆறைங்காதமென்றான். நகுதல் - துன்பநகை. கூந்தல் - விளி.

சச - சரு. தேமொழி தன்னொடுஞ் சிறையகத் திருந்த
காவுந் தியையைக் கண்டடி தொழலும்

இ - ள் அங்ஙனம்வினவின தேமொழிதன்னொடுசென்று தவவேலிக்கணிருந்த கவுந்தியடிகளைக்கண்டு அடிதொழுதலுமென்க.

சிறை - பள்ளியென்றுமாம்; ஸ்ரீகோயிலின் ஒருபக்கமுமாம்.

க... ராகிக் கொண்டு நீங்கிப் போகிக் கழிந்து நுழைந்து கடந்து பொருந்... நக்குக் கண்டு அடிதொழலுமென்க.

சசா - சகூ. உருவுங் குலனு முயர்பே ரொழுக்கமும்
பெருமகன் திருமொழி பிறழா நோன்பு
முடையி ரென்னோ வுறுக ணாளரிற்
கடைகழிந் திங்ஙனங் கருதிய வாறென

இ - ள். இவர்கள் தொழுதார்களாக, அழகும் குடிப்பிறப்பும் ஒழுக்கமும் இறைவனூலிற்கூறிய விரதந்தப்பாமையுமென்னும் இவற்றையெல்லாம் ஒருதலையாகவுடைய நீங்கள் தீவினையாளரைப்போலே நமரிடத்தைக்கழிந்துவருவதற்குக் கருதியதென்னோவென்றுகேட்பவென்க.

பெருமகன் - அருகதேவன். திருமொழி - அவனருளிச்செய்த ஆகமம். உறுகணாளர் - மிடியாளரென்பாருமுளர். கடைகழிதல் இவர்க்கு மரபன்மையிற்கழிந்தென்றார். இவ்வும்மைகள் எண்ணுக்குறித்தனவெனினும் சிறப்புப்பொருண்மை தோன்றநின்றன.

ரு௦ - ருக. உரையாட் டில்லை யுறுதவத் தீர்யான்
மதுரை மூதூர் வரைபொருள் வேட்கையேன்

இ - ள். மிக்க தவத்தினையுடையீர், இவ்வினாவிற்கு ஒருத்தரமில்லை; ஆயினும் யான் கருதியதொன்றுண்டு; அதுயாதெனின், மதுரையாகிய மூதூரிற்சென்று நிருமித்தபொருளைத் தேடக்கடவோமென்னும் வேட்கையையுடையேனாயினேனென்று சொல்லவென்க.

முன்னர்க்காதையில் *"சென்ற கலனோ, டுலந்தபொரு ளீட்டுத லுற்றேன்" என்றானாகலின், அதனை வரைபொருளென்றான். இனி நியாயத்திற்றேடும்பொருளெனினுமமையும். அன்றி, இதற்கு இத்துணைப்பொருட்கு மேற்பட்டதே தானம் பண்ணக் கடவேனென வரைந்தபொருளென்பாருமுளர். எனவென ஒருசொல்வருவிக்க. இனிக் கவுந்தியடிகள் கூறுவார்.

ருஉ - ருச. பாடகச் சீறடி பரற்பகை யுழவா
காடிடை யிட்ட நாடுநீர் கழிதற்
கரிதிவள் செவ்வி யறிகுநர் யாரோ

இ - ள். இனி அங்ஙனங்கருத்தாயின், இவள்சீறடி பருக்கையாகிய பகையை வெல்லமாட்டா; ஆதலால் நீர் காடுநாடுமென்னும் இவ்வழியைக்கடத்தற்கு இவள் செவ்வி ஏற்றதன்று; இனி ஊழ் என்செய்துமுடிக்குமோ; அதனை அறிவாரார் என்றாரென்க.

என்றகருத்து: அடி பரற்பகையுழவா; வழி காடிடையிட்டநாடு; இவள் அதற்கேற்றதன்மையளல்லள்; இனி ஊழ் என்செய்யுமோ, இதனை யாரறியவல்லாரெனப் பரிவுறல்தோன்றநின்றது.

ருரு. உரிய தன்றீங் கொழிகென வொழியீர்

இ - ள். இவையேயன்றியும் குடிப்பிறப்பிற்கும் இவளை ஒருங்குகொண்டு சேறல் ஏலாதாகலின் இனிச் செலவை ஒழிமினென்று யாமொழிப்பவும் ஒழிகின்றிலீராயினீரென்றாரென்க.

ஒழிகென வொழியீரென்றற்கு இவர்க்கு எதிர்வதறிந்துகூறினாரெனின், †"ஐயந்தரு சிறப்பிற் கவுந்தி ....உண்ணா நோன்போ டுயர்பதிப் பெயர்ந்ததும்" என நீர்ப்படையுள் மாடலன் கூறுதலானும், அடைக்கலக்காதையில், ‡"தங்குல வாணர், அரும்பொருள் பெறுநரின் விருந்தெதிர் கொண்டு, கருந்தடங் கண்ணியொடு கடிமனைப் படுத்துவ, ருடைப்பெருஞ் செல்வர் மனைப்புகு மளவு, மிடைக்குல மடந்தைக் கடைக்கலந் தந்தேன்" எனவும், §"தாயு நீயே யாகித் தாங்கு" எனவும், ||"மிகப்பே ரின்பந் தருவது கேளாய்" எனவும் ஒருபொழுதிற்கு இத்துணை ஓம்படையெல்லாம் கூறவேண்டாவாகலானும் இவர்க்குத் தவப்பயனாலே சபித்தலன்றிக் காலவுணர்ச்சியின்மையுணர்க.

ருசு - ருஅ. மறவுரை நீத்த மாசறு கேள்விய
ரறவுரை கேட்டாங் கறிவனை யேத்தத்
தென்றமிழ் நன்னாட்டுத் தீதுதீர் மதுரைக்

* கனாத்திறமுரைத்தகாதை, எச - எரு.
† நீர்ப்படை, எக - அங.
‡ அடைக்கலக்காதை, கஉசு - கஙo.
§ அடைக்கலக்காதை, கஙசு.
|| ,, கருப.

கொன்றிய வுள்ள முடையே னாகலிற்
போதுவல் யானும் போதுமி னென்ற
காவுந்தி யையையைக் கைதொழு தேத்தி
யடிக ணீரே யருளுதி ராயினித்
தொடிவளைத் தோளி துயர்தீர்த் தேனென

இ - ள். மறவுரைகளை நீத்திருக்கும் குற்றமற்ற பொருட்பயனையுடையவர்தம் நூலையுங்கேட்டு அந்த ஆகமப்படியே அறிவனையேத்துதற்குத் தெற்கின்கணுள்ள தமிழ்நாட்டின்கண்ணதாகிய குற்றந்தீர்ந்த மதுரைக்குப்போதற்கு முன்னே ஒருப்பட்ட உள்ளமுடையேனாதலின், யான்போகுவேன்; நீரும் போதுமினென்ற கவுந்தியடிகளைக் கையாற்றொழுது நாவானேத்தி, அடிகளே! நீரே இங்ஙனம் அருள்செய்வீராயின், இவ் வளைபொருந்திய தோளினையுடையாளுடைய துயரெல்லாம் இப்பொழுதே போக்கினேனன்றோவென்று சொல்லவென்க.

நீயிரே இதுசெய்வீராயினென்பது ஓர் வழக்கு. ஏகாரத்தை இசைநிறையாக் கலுமொன்று. தொடி - வளைவு; *"தொடிக்கட் பூவை" என்றாராகலின். நீத் தென்றும் பாடம்.

௬௪ - ௬௫. கோவலன் காணாய் கொண்ட விந்நெறிக்
ஏதந் தருவன யாங்கும்பல கேண்மோ

இ - ள். கோவலனே, நாம் போவதாகவுட்கொண்ட இந்நெறியிடத்து வருத்தத்தைத் தருவன எவ்விடத்தும் பலவுள; அவற்றை நீயறியாய்; ஆதலால், யாம் சொல்லக் கேட்பாயாகவென்றாரென்க.

காணாய் - நீ முன்பு அறியாய். இந்நெறி - வடகரைவழி. மோ - முன்னிலையசை.

௬௬ - ௭௧. வெயினிறம் பொறாஅ மெல்லியற் கொண்டு
பயில்பூந் தண்டலைப் படர்குவ மெனினே
மண்பக வீழ்ந்த கிழங்ககழ் குழியைச்
சண்பக நிறைத்த தாதுசேர் பொங்கர்
பொய்யறைப் படுத்துப் போற்றா மாக்கட்குக்
கையறு துன்பங் காட்டினுங் காட்டும்

இ - ள். வெயிலினது நிறத்தைக் கண்ணாற்பார்க்கவும் பொறாத இம் மெல்லிய இயல்பினையுடையாளைக்கொண்டு நாம் பூப்பயிலும் தண்டலையூடு போகக் கடவேமென்போமாயின், அவ்விடத்து நிலம்பிளக்கும்படி இடங்கொண்டு கீழ்வீழ்ந்த வள்ளிக்கிழங்கை அகழ்ந்துகொண்டகுழிகளைச் சண்பகமரங்கணிறைத்த பூந்தாதுசேர்ந்த பொங்கர் பொய்க்குழிப்படுவித்து அவ்விடங்களை அறிந்து பாதுகாத்

* சீவகசிந்தாமணி, குணமாலையாரிலம்பகம், அ௨: "வடிக்கண் மகளிர் வைத்த மரகதநன் மணிக, ளொடிக்கச் சுடர்விட் டெழு வுழையம் பிணையொன் றணுகிக், கொடிப்புல் லென்று கறிப்பா னவிற் குலவி வளைப்பத், தொடிக்கட் பூவை நோக்கி நகுமா றெளிதோ காண்மின்."

துச்செல்லாதமாக்கட்குச் செயலறுதியாகிய துன்பத்தைக் காட்டுதலையுஞ்செய்யுமென்றாரென்க.

பொங்கர் - ஈண்டு வாடற்பூ. அதுபோர்த்தலாற் பொய்யறைப் படுத்தென்றார். *"பொங்கர் வெண்பொரி சிந்தின புன்கு" என்ப மேலும். கையறுதுன்பம் மீளாத்துன்பமுமாம். காட்டல் - தருதல். பொங்கர்ப்படுத்துக் காட்டுமென்க.

௭௨ - ௭௩. உதிர்பூஞ் செம்மலி னொதுங்கினர் கழிவோர்
முதிர்ந்தேம் பழம்பகை முட்டினு முட்டும்

இ - ள். அங்ஙனமுதிர்ந்த செம்மற்பூ மறைத்த குழியுள்ளவழி நாடுதற்கு நிலனோக்கி ஒதுங்கிச்செல்வோரை முற்றிப்பழுத்து விண்டு தேனொழுகும் பலாப் பழங்கள் தாழ்ந்தகோட்டின்கணிருந்து பகைபோல முட்டுதலையுஞ்செய்யுமென்றாரென்க.

இனித் தேமென்பதனை இனிமையாக்கித் தெங்கம்பழம் முட்டுமெனினுமமையும். பழம் பகையாயெனப் பண்பொட்டுவிரிக்க. முட்டினுமுட்டுவரென்பது பாடமாயின், கழிவோர் செய்யினுஞ்செய்வாரென்க. உம்மையை ஐயவும்மையாக்கிப் பொருளுரைக்க. படர்குவமெனினேயெனக் கழிவோர்கருத்தைக் கொண்டு கூறினார், உலகியலாகலான்.

௭௪ - ௭௫. மஞ்சளு மிஞ்சியு மயங்கரில் வலயத்துச்
செஞ்சுளைப் பலவின் பரற்பகை யுறுக்கும்

இ - ள். அவ்வாறன்றி வெள்ளிடைப் போவோமெனின், ஆண்டு மஞ்சண்முதலிய தம்மில் தலைமயங்கிய பிணக்கத்தையுடைய தோட்டங்களிற் பாத்திதோறும் பலவின் செஞ்சுளைகளினுள்ள வெண்காழாகிய பருக்கைகள் இவள் மெல்லடிக்குப் பகையாய் உறுத்தலைச் செய்யுமென்றாரென்க.

வலயம் - பாத்தி. வலயத்தோடு பரலும் பகையாயுறுக்குமெனினுமமையும். உறுக்கும் - உறுத்தும். என்றகருத்து : மஞ்சள் முதலியன நிலவண்மையான் முற்றிப் பருவஞ்செய்தமுளை சருகின்மறைந்துகிடந்தவற்றோடு பரலும் உறுத்துமென்பதாம்.

௭௬ - ௭௭. கயனெடுங் கண்ணி காதற் கேள்வ
வயலுழைப் படர்குவ மெனினே

இ - ள். கயல்போலும் கண்ணிணையுடையாள் காதலிக்கப்பட்ட கேள்வனே, அங்ஙனம் சோலையும் தோட்டமுமாகிய கரைவழியன்றி வயல்வழியேபோகக்கடவேமென்பேமாயின்,

௭௮ - ௮௧. ஆங்குப்
பூநா றிலஞ்சிப் பொருகய லோட்டி
நீர்நாய் கௌவிய நெடும்புற வாளை
மலங்குமிளிர் செறுவின் விலங்கப் பாயிற்
கலங்கலு முண்டிக் காரிகை

* வேட்டுவவரி, "செம்பொன்."

இ - ள். தம்மிடத்துமலர்ந்த பூக்களின்மணங்கமழாநின்ற குளங்களில் நீர்நாய் பொருகின்றகயல்கள் வெருவியோடவோட்டிக் கௌவப்பட்ட நீண்ட முதுகையுடையவாளைமலங்குகள் நெளியுஞ்சேறுவிற் குறுக்கிடப்பாயுமாயின், இக்காரிகை கல்குநீர்மையுடையாளெனவுங்கூடுமென்றாரென்க.

நீர்நாய் கௌவியவாளை பொருகயலோட்டிப் பாயினெனினுமிமையும். இதனாற்சொல்லியது மீனிரைதேரும் நீர்நாய்காணினும், இடையே பொருகயல்கள் உகளக்காணினும், வாளை பாயக்காணினும், மலங்கு மிளிரக்காணினும் மனத்திற் கலங்கலுமுண்டு இக்காரிகையென்பதாம்.

௮௩ - ௮௫. ஆங்கட்
கரும்பிற் றொடுத்த பெருந்தேன் சிதைந்து
சுரும்புசூழ் பொய்கைத் தூநீர் கலக்கு
மடங்கா வேட்கையி னறிவஞ ரெய்திக்
குடங்கையி னொண்டு கொள்ளவுங் கூடும்

இ - ள். அஃதன்றியும், *கரும்பல்லது காடின்மையான் அவ்விடத்து உளதாய கரும்பின்வைத்த பெருந்தேன் அவை கண்முற்றி நெருங்குதலானே அழிந்தொழுகிச் சுரும்புசூழப்பட்ட பொய்கையின் நல்லநீரோடு சென்று கலந்துவிடும்; ஆதலான் அதனை அறியாமல் தணியாத நீர்வேட்கையான் இவள் தன்குடங்கையான் முகந்துகொண்டு பருகவுந்தகுமென்றாரென்க.

குடங்கையாவது ஐந்துவிரலுங்கூட்டி உட்குழிப்பது; என்னை? "குடங்கையென்பது கூறுங் காலை, யுடங்குவிரற் கூட்டி யுட்குழிப் பதுவே" என்றாராகலின். இதனாற்சொல்லியது நமது †தரிசனத்துக் கடியப்பட்டவாற்றால், தேனுண்டலைப் பரிகரிக்கவென்பதாம். எனவே ஊனையும் உடன்கூறிற்றாம். மேலும் இவ்வாறு வருவனகொள்க.

௮௬ - ௮௯. குறுந ரிட்ட குவளையம் போதொடு
பொறிவரி வண்டின மொருங்கிய கிடக்கை
நெறிசெல் வருத்தத்து நீரஞ ரெய்தி
யறியா தடியாங் கிடுதலுங் கூடும்

இ - ள். களைபறிப்பார் பறித்து வரம்பிலிட்ட குவளைப்பூவுடனே தம்மெய்யிற் பொறியையும் வரியையுமுடைய வண்டினம் மதுமயக்கத்தாற் போகவறியாது உள்ளொடுங்கிக்கிடப்பனவற்றை வழிவரல்வருத்தத்தாலே நீர் உணர்வுமயங்கி வெறும்பூவெனக்கருதி அவற்றின்மேல் அடியிடவுங்கூடுமென்றாரென்க.

இதனாற்சொல்லியது உயிர்க்கொலைபுகாமற் பரிகரிக்கவென்பதாம்.

௯௦ - ௯௩. எறிநீ ரடைகரை யியக்கந் தன்னிற்
பொறிமா ணரவணு நந்தும் போற்று

---

* "கரும்பலாற் காடொன் றில்லாக் கழனிசூழ் பழன நாடும்" என்றார் சிந்தாமணியிலும்; முத்தியிலம்பகம், ௯௦௪.

† தரிசனம் - சாஸ்திரம்.

தூமடி யொதுக்கத் துறுநோய் காணிற்
றாழ்தரு துன்பந் தாங்கவு மொண்ணா

இ - ள். எறியுநீரையுடைய் பெருவாய்க்காலினது அடைகரைவழியே போகக்கடவேமென்பேமாயின், அவ்வடைகரை நீரிலுள்ளனவாகிய பொறிவரிகளினழகையுடைய அலவனும் நந்தும் உள்ளவழியறிந்து பாதுகாவாது முன்புநடக்கு முறைமையான் அடியிட்டுநடக்குநடையின் அவைதாம் உறக்கடவநோயை நம்மாலுறுமாயின் அதனால் நமக்குவரும் கொலைப்பாவம் நம்மால் தாங்கவுமொண்ணாது;

எறிநீர் - வாய்த்தலையினின்றும் குதித்துவரும் வாய்க்காணீர். இயக்கம் - வழி. நந்து - ஈண்டு நத்தை. ஊழ் - முறைமை. ஒதுக்கம் - நடை. நோயென்றார்; கொலையென்று வாக்காற்கூறவுமாகாமையின். இக்கொலைப்பாவம் ஒன்றானும் கழுவப்படாது; அதுவேயுமன்றி மறுமைக்கண் நரகத்திலுறுந்துன்பமும் நம்மாற்றாங்கலாமளவிற்றன்றென்பதனான், உம்மை எச்சவும்மையாயிற்று. அடைகரை - கடற்கரையென்பாருமுளர்.

௬௪ - ௬௭. வயலுஞ் சோலையு மல்லது யாங்கணு
மயல்படக் கிடந்த நெறியாங் கில்லை
நெறியிருங் குஞ்சி நீவெய் யோளொடு
குறியறிந் தவையவை குறுகா தோம்பென

சோலையுமெனவே ஒருசார்வுபற்றித் தோட்டமுமடங்கிற்று. வயலும் சோலையுமென்பனவற்றைக் கூறியமுறையானே எதிர்நிரனிறையாகக்கொள்ளுவாருமுளர்.

இ - ள். ஈண்டுக்கூறியவயலும் ஆண்டுக்கூறியசோலையுமல்லது வேறுபடக்கிடக்குநெறி மேல் நாஞ்செல்லுகின்றவிடத்திற்கில்லையாதலான், நெறித்த குஞ்சியையுடையாய், நீ நின்னைவிரும்பிய மனைவியோடே அவ்வவ்விடங்களைக் குறிப்பானறிந்து அவை அபசாரங்களுறுமற் பாதுகாப்பாயாகவென்றாரென்க.

வெய்யோளுக்குக் குறுகாமலெனினுமமையும்.

காட்டினுங்காட்டும்; முட்டினுமுட்டும்; பாற்பகையுறக்கும்; கலங்கலுமுண்டு, கொள்ளவுங்கூடும்; இடைதலுங்கூடும்; தாங்கவுமொண்ணா. ஆகலாற் குறியறிந்து அவையவை குறுகாதோம்பென்றாரென்க.

இங்ஙனம் மென்மைத்தன்மைகூறுவார், வருணனைகளையும் உடன்கூறினாரென்க. இத்துணையும் கவுந்தியடிகள் தமது பள்ளிக்கணிருந்துகூறினாரெனவுணர்க. வயலுமெனவே வாய்க்காலுமடங்கிற்று.

௬௮ - ௭௨. தோமறு கடிஞையுஞ் சுவன்மே லறுவையுங்
காவுந் தியையைக் பீலியுங் கொண்டு
மொழிப்பொருட் டெய்வம் வழித்துணை யாகெனப்
பழிப்பருஞ் சிறப்பின் வழிப்படர் புரிந்தோர்

இ - ள். கவுந்தியடிகள் கடிஞைமுதலியவற்றைக்கொண்டு பஞ்சமந்திரமே நமக்கு வழித்துணையாகவெனச்சொல்லிச்செல்ல, அவரோடு பழித்தலரிய ஒழுக்கத்தோடு வழிச்செலவைப்புரிந்தவரென்க.

தோம் - குற்றம். கடிஞை - ஐயக்கடிஞை. அறுவை - தோளிலிடுமுறி. மொழிப்பொருட்டெய்வம் - பொருண்மொழியாகியதெய்வம். ஆவது *பஞ்சமந்திரம்; அ ஸி ஆ உ ஸா=அ சி ஆ உ சா. இனிக் கொண்டென்பதனைக் கொள்ளவெனத்திரித்து அடிகளிதுசெய்ய இவர்கள் துணையாகவென்றுரெனினுமமையும்.

கூ0உ - கககூ. கரியவன் புகையினும் புகைக்கொடி தோன்றினும்
விரிகதிர் வெள்ளி தென்புலம் படரினுங்
கால்பொரு நிவப்பிற் கடுங்குர லேற்றொடு
சூன்முதிர் கொண்மூப் பெயல்வளஞ் சுரப்பக்
குடமலைப் பிறந்த கொழும்பல் றாரமொடு
கடல்வள னெதிரக் கயவாய் நெரிக்குங்
காவிரிப் புதுநீர்க் கடுவரல் வாய்த்தலை
யோவிறந் தொலிக்கு மொலியே யல்ல
தாம்பியுங் கிழாரும் வீங்கிசை யேத்தமு
மோங்குநீர்ப் பிழாவு மொலித்தல் செல்லா

இ - ள். கோள்களிற் சனிக்கோள் இடபம் சிங்கம் மீனமென்னுமிவற்றினோடு மாறுபடினும் ஆகாயத்தே தூமக்கோளெழினும், விரிந்த கதிரையுடைய வெள்ளிக் கோள் தென்றிசைக்கண்ணே பெயரினும் காற்றுப்பொரும் குடகவரையினது உச்சிக்கண்ணே கடிய குரலையுடைய உருமேற்றோடு சூன்முதிர்ந்த பருவப்புயல் தன்பெயலாகிய வளத்தைச் சுரத்தலானே அவ்வரையிற்பிறந்த பலபண்டத்தோடு கடுகிவருதலையுடைய காவிரியினீர், முகத்தைக்குத்தியிடிக்குங்கடல் தன் வளத்தைக் கொண்டு எதிர்தலானேதேங்கி, வாய்த்தலைக்கிட்ட கதவின்மீதெழுந்து குதிக்கின்ற அப்புதுப்புனலொலியல்லது ஆம்பிமுதலாயின ஒலித்தல்செல்லாவென்க.

கரியவன் - சனி. புகைக்கொடி - வட்டம், சிலை, நுட்பம், தூமமென்னும் †கோட்களுள்ளினும் தூமக்கோள். ‡"மைம்மீன் புகையினுந் தூமந் தோன்றினுந், தென்றிசை மருங்கின் வெள்ளி யோடினும்" என்றார் பிறரும். கால்பொருநிவப்பு- குடகினுச்சி. ஏறு - இடியேறு. பஃறாரம் - பலதாரம்; தாரம் - பலபண்டம். எனவே மலைவளனுயிற்று. அவன: "தக்கோலந் தீம்பூத் தகைசா லிலவங்கங், கர்ப்பூரஞ் சாதியோ டைந்து." கடல்வளனுவன: "ஓர்க்கோலை சங்க மொளிர் பவளம் வெண்முத்த, நீர்ப்படு முப்பினே டைந்து." கடுவரல் - முடுகிவரும்வரவு. ஓ - தூம்பிற்கதவு. இனி ஓவுதல் - விகாரத்தால் ஒவெனநின்றதெனவுமாம். இத

---

* இந்தப் பஞ்சமந்திரத்தைப் பஞ்சநமஸ்காரமென்பர் சைனர்.

† இவற்றைக் கரந்துறைகோட்களென்பர்.

‡ புறநானூறு, ககள: "மைம்மீன் புகையினுந் தூமந் தோன்றினுந், தென்றிசை மருங்கின் வெள்ளி யோடினும், வயலக நிறையப் புதற்பூ மலர, மனைத்தலை மகவை யீன்ற வமர்க்க, ணுமா நெடுநிரை நன்புல் லாரக், கோஒல் செம்மையிற் சான்றோர் பல்கிப், பெயல்பிழைப் பறியாப் புன்புலத் ததுவே, பிள்ளை வெருகின் முள்ளெயிறு புரையப், பாசிலை முல்லை முகைக்கு, மாயதொடி யரிவையர் தந்தை நாடே."

ற்கு இறத்தல் ஈண்டுத் தவிர்தன்மேற்று. ஆம்பி - பன்றிப்பத்தர். கிழார் - பூட்டைப் பொறி. பிழா - *இடா. †"நீர்த்தெவ்வு நிரைத்தொழுவர், பாடுசிலம்பு மிசையேற்றத், தோடுவழங்கு மகலாம்பியிற், கயமகைய வயனிறைக்கு, மென்பொறை வன் கிழார்" என்றார் பிறரும். இனிக் கரியவன்புகையினுமென்பதற்குச் சனிவாரம் புகையினுமெனவுமாம். இனிப் புகையினும் தோன்றினும் படரினுஞ் சுரப்ப எதிர நீர் வாயத்தலை ஒலிநந்தொலிக்குமொலியலலது ஆம்பிமுதலிய ஒலித்தல்செல்லா மைக்குக் காரணமாகிய காவிரியென முடிப்பினுமமையும். புகையினும் தோன்றினும் படரினுமென்றவும்மைகள், மழைபெய்தொழில் மாற்ற இவற்றின் ஒன்றே அமையுமாகவும் இவையெல்லாம் செய்யினும் கடல்வளனெதிர நெரிக்குமெனக் காவிரியின்சிறப்பை விளக்கிநிற்றலிற் சிறப்பும்மை.

௧௧௨-௧௧௩. கழனிச் செந்நெற் கரும்புசூழ் மருங்கிற்
பழனத் தாமரைப் பைம்பூங் கானத்து

இ - ள். அங்ஙனமொலித்தல்செல்லாக் கழனியிற் செந்நெலும் கரும்புஞ் சூழ்ந்த இடத்தையுடைய நீர்நிலைச்செறுவிலுண்டாகிய தாமரைக்காட்டினெனக.

௧௧௪-௧௧௯. கம்புட் கோழியுங் கனைகுரல் நாரையுஞ்
செங்கா லன்னமும் பைங்காற் கொக்குங்
கானக் கோழியு நீர்நிறக் காக்கையு
முள்ளு மூரலும் புள்ளும் புதாவும்
வெல்போர் வேந்தர் முனையிடம் போலப்
பல்வேறு குழூஉக்குரல் பரந்த வோதையும்

இ - ள். கம்புட்கோழிமுதலியன வெல்லும்போரைவல்ல அரசரிருவர் பொருமிடம்போலப் பலவேறுவகைப்பட்ட திறத்தையும் ஒலியையுமுடையனவாயொலிக்கும் மிக்க ஓசையுமென்க.

கூக்குரலும் பாடம். கம்புள் - சம்பங்கோழி. கானக்கோழி - கானங்கோழி; வெண்மையாக்கிக் காட்டுக்கோழியென்பாருமுளர். நீர்நிறக்காக்கை - நீர்க்காக்கை. உள்ளு - உள்ளான். ஊரல் - குளுவை; நீர்மேலூர்தலின்றல் ஆகுபெயர். புள்ளு - கணந்துட்புள். போதா - பெருநாரை, மரக்காரை; புதா - விகாரம். வெல்போரும், முனையிடமும் - வினைத்தொகை. குழூஉக்குரல் - பலவாயொன்றான ஓசை.

௧௨௦-௧௨௫. உழாஅ நுண்டொளி யுள்புக் கழுந்திய
கழாஅமயிர் யாக்கைச் செங்கட் காரான்
சொரிபுற முரிஞ்சப் புரிஞெகிழ்பு புற்ற
குமரிக் கூட்டிற் கொழும்பல் லுணவு
கவரிச் செந்நெற் காய்த்தலைச் சொரிய

இ - ள். உழவராலுழப்படாத சேற்றுக்குழியிற் சேற்றினுட்புக்கழுந்திய கழுவாதமயிரையுடைய யாக்கையையும் சிவந்தகண்ணையுமுடைய எருமை தன் தினவை

* இடா - இறைகூடை. † பத்துப்பாட்டு, மதுரைக்காஞ்சி, அக - கூ.

௧௪௮-௧௫௫. பரப்புநீர்க் காவிரிப் பாவைதன் புதல்வ
ரிரப்போர் சுற்றமும் புரப்போர் கொற்றமு
முழவிடை விளைப்போர் பழவிற லூர்களும்
பொங்கழி யாலைப் புகையொடு பரந்து
மங்குல் வானத்து மலையிற நோன்று
மூரிடை யிட்ட நாடுடன் கண்டு
காவத மல்லது கடவா ராகிப
பன்னாட் டங்கிச் சென்றொரு நாள்

இ - ள். இரப்பவர்சுற்றத்தையும் புரப்பவர்கொற்றத்தையும் தம் உழவினிடத்தே விளைப்போருடைய பழைய வலிபொருந்திய ஊர்களுமாகிய இவ்விருவகையூர்களையும் இடையிட்ட நாடெல்லாங்கண்டு நடக்குநாட் காதமென்னுமெல்லையல்லது நடந்துதொலைக்கமாட்டாராய்ப் பலநாட்டங்கி நடக்கின்றநாளிலே ஒருநாளென்க.

தூற்றும்பொலி ஆலையிற் பாகுகாய்கின்ற புகையாற் பரக்கப்பட்டு இருட்சியையுடைய முகிறவழ்ந்த மலைபோலத்தோன்றும் பழவிறலூர்களுமென்க.

கொற்றத்தையும் கருவையும், சுற்றத்தையும் கொற்றத்தையும் அழவினும் உழவினும் விளைப்போரதிருக்கையும் ஊர்களுமென்க. *காவிரிநீர் கங்கைநீராதலிற் கங்கைப்புதல்வனைக் காவிரிப்புதல்வரென்றார்; அன்றியும் †"மகவாய் வளர்க்குந் தாயாகி" என்பதனானுங்கொள்க. தோன்றுமிருக்கையும தோன்றூர்களுமென வியையும். அவ்வூர்களையிடையிட்டநாடென்க. உடன்கழிந்தென்றார், இந்நாட்டுச் சிறப்பெல்லாம் கண்டுதொலைத்துக் கழிதலருமையின். புதல்வராகி உழவிடை விளைப்போரென்க.

௧௫௬-௧௬௩. ஆற்றுவீ யரங்கத்து வீற்றுவே றுகிக்
குரங்கமை யுடுத்த மரம்பயி லடுககத்து
வானவ ருறையும் பூநா றொருசிறைப
பட்டினப் பாக்கம் விட்டனா நீங்காப்
பெருமபெய ரைய ரொருங்குடனிட்ட
விலங்கொளிச் சிலாதல மேலிருந் தருளிப்
பெருமக னதிசயம் பிறழா வாய்மைத்
தருமஞ் சாற்றுஞ் சாரணர் தோன்ற

இ - ள். ஆற்றைமறைக்கும் அரங்கத்தில் வேறிடத்தில்லாததன்மைத்தாய் வளைந்த மூங்கின்முள்ளால் வளைக்கப்பட்ட வேலியையுடைய மரம்பயின்ற செறிந்த சோலையில் தேவருறைதற்கொத்த பூப்பொருந்தியதொருபக்கத்தே பட்டினப்பாக்கத்து ‡வான்பெருமன்றத்துப் பிண்டிநீழற்கண்ணே உலகநோன்பிகளிடப்பட்ட

* 'கங்கையாருழைச்சென்ற காவிரியாளை வாங்கி' என்று கூறினர் நச்சினார்க்கினியரும்; இதனைத் தொல்காப்பியப் பாயிரவுரையிற்காண்க.

† கானல்வரி, ௨௭.

‡ வான்பெருமன்றமென்பதுமுதலாக இங்கே தந்துரைத்தவற்றை, இக்காதை ௨௦ - ம் அடிமுதலியவற்றிற்காண்க.

சிலாதலத்தின்மேலிருந்தருளிப் பெருமகனாற்செய்யப்பட்ட அதிசயங்கண்மூன்றுந் தப்பாத ஆகமநூலினுண்மைத்தன்மையையுடைய தருமவொழுக்கத்தை யாவருங் கேட்கும்படி அருளிச்செய்யும் *சாரணர் அப் பட்டினப்பாக்கத்தைவிட்டு நீங்கி வந்துதோன்றவென்க.

அதிசயமூன்றாவன : சகசாதிசயம், கர்மக்ஷயாதிசயம், தெய்வீகாதிசயமென்பன.

வேறுகி உடுத்த ஒருசிறைச் சாரணர்தோன்றவென்க.

௧௬௪-௧௬௯. பண்டைத் தொல்வினை பாறுக வென்றே
கண்டறி கவுந்தியொடு காலுற வீழ்ந்தோர்
வந்த காரணம் வயங்கிய கொள்கைச்
சிந்தை விளக்கிற் றெரிந்தோ னாயினு
மார்வமுஞ் செற்றமு மகல நீக்கிய
வீர னாகலின் விழுமங் கொள்ளான்

இ-ள். முன்செய்த பழவினையெல்லாம் கெட்டொழிவதாகவென்றுட்கொண்டு அவர்வந்தமையைக் கண்டறிந்த கவுந்தியடிகளுடனேசென்று அவரடியிலே தலையுறவீழ்ந்தார்; அங்ஙனம்வீழ்ந்தவர் ஈண்டுவந்தது தனது விளங்கியகோட்பாட்டையுடைய †அவதிஞானத்தால் தெரிந்தவனாயினும் ஆர்வமும் செற்றமும் தன்னை விட்டுப்போம்படி நீக்கிய ‡வீரனாகலாலே இவர்க்குவருந்துன்பத்திற்குத் தான் வருந்தானாகியென்க.

கண்டறிகவுந்தியென்பதனானும் §காலவுணர்ச்சியின்மையுணர்க. ஒடு - ஒரு வினையொடு.

௧௭௦-௧௭௧. கழிபெருஞ் சிறப்பிற் கவுந்தி காணாய்
யொழிகென வொழியா தூட்டும் வல்வினை

இ-ள். மிக்க பெரிய தவச்சிறப்பையுடைய கவுந்தி, யாவரானும் ஒழிக்க வொழியாததாய் நுகர்விக்க வந்துநிற்கின்ற தீவினையைக் காணாயென்றாரென்க.

காணாய் - பாராய். ஒழிகெனவொழியாதென்பதற்கு, நீ ||'உரிய தன்றீங் கொழிக' எனவும் ஒழியாது ஊட்டுந்தீவினையையெனினுமமையும்.

---

* சாரணர் - சமணமுனிவர். அவர், தலசாரணர் சலசாரணர் பலசாரணர் புட்பசாரணர் தந்துசாரணர் சதுரங்குலசாரணர் சங்கசாரணர் ஆகாசசாரணரென எண்வகையர். இவ்விருவராகச்சென்று தருமோபதேசஞ்செய்தல் அவர்கட்கு இயல் பென்பர்.

† அவதிஞானம் - தன்னுடைய அதீதகதமானபரிஞ்ஞானம்; அஃதாவது முற்பிறப்பையறியுமறிவு.

‡ வந்தசாரணரிருவருள், உபதேசிப்போர் மூத்தோரேயாதலின், வீரனென ஒருமையாற்கூறினார்.

§ 'காலவுணர்ச்சியின்மையுணர்க' என்றது, [ருரு - ம் அடி] 'உரிய தன்றீங் கொழிகென வொழியீர்' என்பதன் உரையிற்கூறியதை வற்புறுத்தற்கு.

|| நாடுகாண்காதை, ருரு.

௧௭௨-௧௭௩. இட்ட வித்தி னெதிர்ந்துவந் தெய்தி
யொட்டிய காலை யொழிக்கவு மொண்ணு

இ-ள். விளைநிலத்திட்ட வித்துப்போலப் பயனெதிர்ந்து கண்கூடாக நல்வினைவந்து நுகர்விக்குங்காலத்தும் ஒழிக்கவொண்ணு ; அதுபோல இதுவும் ஒழிக்கவொழியாதென்றாரென்க.

*" உறற்பால.........பாரு மில்" என்றாராகலின். தீவினைதன்னையே கூறினுமமையும். உம்மை - எச்சவும்மை.

௧௭௪-௧௭௫. கடுங்கா னெடுவெளி யிடுசுட ரென்ன
வொருங்குட னில்லா வுடம்பிடை யுயிர்கள்

இ-ள். கடியகாற்றையுடைய நெடியவெளியிலிடப்பட்ட விளக்கென்னும்படி மாயினல்லது கூடி உடனில்லா ; உடம்பினின்ற உயிர்களுமென்றாரென்க.

நல்வினை தீவினைப்பயனாகிய இன்பமுந்துன்பமும் வருங்கால் யாவராலும் ஒழிக்கவொண்ணாவென்பதூஉம், யாக்கைநிலையாமையும் இவர்தம்பால் உறுவது கண்டு கவுந்தியடிகட்குச் சாரணர்கூறினாரெனவுணர்க. விளக்கு உவமித்தார் ; நிலைவற அழிவதற்கும், புக்குழிப் புலப்படாமைக்கும்.

௧௭௬ - ௧௯௧. அறிவ னறவோன்........பொருளுரை யோரெ

௧௭௬. அறிவன் — இ-ள். எல்லாப்பொருளையுமறியும் அறிவையுடையோன்,

௧௭௬. அறவோன் — இ-ள். அறஞ்செய்தலையே தொழிலாகவுடையோன்,

௧௭௬. அறிவுவரம் பிகந்தோன் — இ-ள். யாவருமறியப்படும் அறிவெல்லையைக் கடந்தோன்,

௧௭௭. செறிவன் — இ-ள். எல்லாவுயிர்கட்கும் இதனையுள்ளவன் ; சலியாதவனென்றுமாம்.

௧௭௭. சினேந்திரன் — இ-ள். எண்வகைக் கன்மங்களையும் சயித்தவன்,

அவையாவன : †ஞானவரணீயம், தரிசனவரணீயம், வேதநீயம், மோகநீயம், ஆயுஷ்யம், நாமம், கோத்திரம், அந்தராயமெனவிவை.

௧௭௭. சித்தன் — இ-ள். கிருதகிருத்தியன் = செய்யப்படுவனவற்றைச் செய்துமுடித்தவன்,

கன்மங்களைக் கழுவினவனுமென்ப.

௧௭௭. பகவன் — இ-ள். ‡கேவலஞானி,

* நாலடியார், பழவினை, ௪ : " உறற்பால நீக்க லுறுவர்க்கு மாகா, பெறற்பாலனையவு மன்னவா மாரி, வறப்பிற் றருவாரு மில்லை யதனைச், சிறப்பிற் றணிப்பாரு மில்."

† ஞானவரணீயமுதலியவெட்டும் காதி அகாதியென இருவகைப்பட்டு,௧௪அ-ஆகவிரியுமென்பர்.

‡ கேவலஞானம் - ஐந்துஞானத்துள்ளுஞ்சிறந்தது. ஐந்து ஞானங்களாவன : ௧. மதிஞானம்=சுவபாவபுத்தி ; ௨. சுருதஞானம்--நூலுணர்ச்சி ; ௩. அவதிஞானம்=தன்னுடைய முற்பிறப்பையறியுமறிவு ; ௪. மனப்பரியயஞானம்=தன்னுடைய முற்பிறப்பையும் பிறருடைய முற்பிறப்பையும் அறியுமறிவு ; ௫. கேவலஞானம்=திரிகாலவுணர்ச்சி.

கஎஅ. தருமமுதல்வன்—இ-ள். தருமங்களுக்கு அடியாயுள்ளவன்,

கஎஅ. தலைவன்—இ-ள். எல்லாத்தேவர்க்கும் தலைவனாக எண்ணப்பட்டவன்,

கஎஅ. தருமன்—இ-ள். தருமந்தானாயுள்ளவன்,

கஎகூ. பொருளன்—இ-ள். ஆகமத்தின் பொருளாயுள்ளவன்; உண்மைப்பொருளாயுள்ளவனெனவுமாம்,

கஎகூ. புனிதன்—இ-ள். சுத்தன்; புதியவனுமென்ப.

கஎகூ. புராணன்—இ-ள். பழையவன்,

கஎகூ. புலவன்—இ-ள். எல்லார்க்கும் அறிவாயுள்ளவன்,

கஅ௦. சினவரன்—இ-ள். சினத்தைக் கீழ்ப்படுத்தியவன்,

கஅ௦. தேவன்—இ-ள். தேவர்களுக்கு ஆதியாகிய தேவன்,

கஅ௦. சிவகதி நாயகன்—இ-ள். வீட்டுலகிற்கு நாயகனாயுள்ளவன்,

கஅக. பரமன்—இ-ள். மேலானவன்,

கஅக. குணவதன்—இ-ள். குணத்தையுடையவன்; வதம் - *விரதமுமாம்.

கஅக. பரதிலொளியோன்—இ-ள். மேலாய உலகிற்கு விளக்காயுள்ளவன்,

கஅ௨. தத்துவன்—இ-ள். தத்துவங்களையுடையோன்,

கஅ௨. சாதுவன்—இ-ள். ஒடுங்கினவன்,

கஅ௨. சாரணன்—இ-ள். ஆகாசவாசி,

கஅ௨. காரணன்—இ-ள். எல்லாவற்றிற்கும் காரணமாயுள்ளவன்=காரணபூதன்,

கஅ௩. சித்தன்—இ-ள். எண்வகைச் சித்திகளையுமுண்டாக்கினவன்,

கஅ௩. பெரியவன்—இ-ள். எல்லாவற்றினும் பெரியவன்,

கஅ௩. செம்மல்—இ-ள். நாயகமூர்த்தி,

கஅ௩. திகழொளி—இ-ள். விளங்கும் ஒளியாயுள்ளவன்,

கஅ௪. இறைவன்—இ-ள். எப்பொருளினும் †தங்குகின்றவன்,

கஅ௪. குரவன்—குருமூர்த்தியாயுள்ளவன்,

கஅ௪. இயல்குணன்—இ-ள். இயல்பையே குணமாகவுடையவன்,

கஅ௪. எங்கோன்—இ-ள். எம்முடையசுவாமி,

கஅ௫. குறைவில் புகழோன்—இ-ள். நிறைந்த புகழையுடையோன்,

கஅ௫. குணப்பெருங் கோமான்—இ-ள். குணங்களைச் சம்பத்தாகவுடையவன்,

---

* விரதம் - அணுவிரதம், குணவிரதம், சிக்ஷாவிரதமென மூன்றுவகைப்படும்; அவற்றுள், குணவிரதம் - திக்குவிரதம், தேசவிரதம், அநர்த்ததண்டவிரதமென மூன்றுவகைப்படும்.

† இறுத்தல் - தங்குதல்.

கஅரு. சங்கரன்—இ-ள். சுகத்தைப்பண்ணுகின்றவன்,

கஅரு. ஈசன்—இ-ள். ஐசுவரியவான்,

கஅரு. சயம்பு—இ-ள். தானேதோன்றினவன்,

கஅரு. சதுமுகன்—இ-ள். நான்குமுகன் = அதிசயத்தோடுநான்முகன்.

கஅஎ. அங்கம பயந்தோன்—இ-ள். *அங்காகமத்தை யுண்டாக்கினவன்,

கஅஎ. அருகன்—இ-ள். பூச்சியன்,

கஅஎ. அருண்முனி—இ-ள். சிவபாட மூர்த்தி,

கஅஅ. பண்ணவன்—இ-ள். கடவுள்,

கஅஅ. எண்குணன்—இ-ள். எட்டுக்குணங்களையுடையோன்,

எண்குணமாவன: அநந்தஞானம், அநந்தவீரியம், அநந்ததரிசனம், அநந்த சுகம், நிர்நாமம், நிர்க்கோத்திரம், நிராயுஷ்யமெனவிவை.

கஅஅ. பாத்தில் பழம்பொருள்—இ-ள். பகுத்தற்கரிய புராணப்பொருளாயுள்ளவன்; ஒட்டமற்ற பொன்னையொப்பானெனினுமாம்.

கஅகூ. விண்ணவன்—இ-ள். சுவர்க்கவாசி,

கஅகூ. வேத முதல்வன்—இ-ள். †ஆகமமூன்றிற்குமுதலாயுள்ளவன்,

கஅகூ. விளங்கொளி—இ-ள். அஞ்ஞானவிருணீங்க விளங்குமொளி,

ககூ0-ககூக. ஓதிய வேதத் தொளியுறி னல்லது
போதார் பிறவிப் பொதியறை போகுநா

இ-ள். இந்நாமங்களையுடையோனாலோதப்பட்ட ஆகமமாகிய விளக்கொளியைப் பெற்றாற் போந்தேறினல்லது யாவரும் பிறவியாகிய சிறையினின்றும் போக மாட்டாரென்றவாறெனக.

பொதியறை - துவாரமில்லாதகீழறை.

ககூஉ-ககூஈ. சாரணர் வாய்மொழி கேட்டுத் தவமுதற்
காவுந்தி யுந்தன் கைதலை மேற்கொண்டு

இ-ள். அங்ஙனம் சாரணருளிச்செய்த பெருமையமைந்த உண்மைமொழியைக்கேட்டுத் தவத்திற்கு முதல்வியாகிய கவுந்தியடிகளும் தமது கைகளைத் தலைமேல்வைத்துக்கொண்டு நின்றுகூறுவார:—

ககூச-ககூரு. ஒருமூன் றவித்தோ னோதிய ஞானத்
திருமொழிக் கல்லதென் செவியகந் திறவா

---

*அங்காகமம், கஉ பகுப்புடைத்து. அவைவருமாறு:— க. ஆசாராங்கம், உ. சூத்திரகிருதாங்கம், ஈ. ஸ்தானாங்கம், ச. ஸமவாயாங்கம், ரு. வியாக்கியாப் பிரஞ்ஞப்த்யங்கம், சா. ஞாத்ருசுதாங்கம், எ. உபாஸகாத்தியயநாங்கம், அ. அந்தக்கிருத்தசாங்கம், கூ. அநுத்தரோபபாதிகதசாங்கம், க0. பிரச்நவியாகரணாங்கம், கக. விபாகசூத்திராங்கம், கஉ. திருஷ்டிவாதாங்கம்.

† ஆகமமூன்றாவன: அங்காகமம், பூர்வாகமம், பகுசுருதியாகமமென்பன.

இ - ள். எனதுசெவிகள் காமவெகுளிமயக்கங்களைக் கெடுத்தவனாலோதப்பட்ட ஞானபாதமாகியதிருமொழியைக்கேட்டற்குத் திறப்பினல்லது பிறிதொன்றற்குத் திறப்பனவல்லவென்றாரென்க.

அவித்தல் - அடக்குதலுமாம்.

ககூசு-கசுஎ. காமனை வென்றோ னாயிரத் தெட்டு
நாம மல்லது நவிலா தென்னா

இ - ள். என்னாவும் காமன்செயலை வென்றவனுடைய ஆயிரத்தெட்டுவகைப் பட்ட நாமம் நவிலினல்லது பிறிதொன்றனையே நவிலாதென்றாரென்க.

ககூஅ-கசுகூ. ஐவரை வென்றோ னடியிணை யல்லது
கைவரைக் காணினுங் காணா வென்கண்

இ - ள். எனதுகண்களும் ஐவகைப்பட்ட இந்திரியங்களையும் வென்றவனுடைய அடியிணைகளைக் காணினல்லது பிறிதொரு தேவரடியிணைகளைக் கையகத்தே காணினும் காணாவென்றாரென்க.

ஐவர் - செறலின்கண் இணைமயக்கம். இனிக் கைவரைகாணினும் பாடமாயின், கைவரைகாணல் - கண்விழித்தலாக்கி விழித்திருப்பினும் காணாவென்க.

உOO - உOக. அருளறம் பூண்டோன் றிருமெய்க் கல்லதென்
பொருளில் யாக்கை பூமியிற் பொருந்தாது

இ - ள். எனது பயனற்றயாக்கை அருளால் அறத்தைப்பூண்டோனுடைய திருமேனிப்பொருட்டுப் பூமியிற்பொருந்தினல்லது பிறிதொன்றற்குப் பொருந்தா தென்றாரென்க.

அருளறம் - உம்மைத்தொகையுமாம்.

உOஉ-உOங. அருக ரறவ னறிவோற் கல்லதெ
னிருகையுங் கூடி யொருவழிக் குவியா

இ - ள். எனது இருகையும் அருகர்க்கு அறத்தைக்கூறுவோனாகிய அறிவன் பொருட்டு என்சிரத்தின்மிசையே குவியினல்லது பிறிதொரு தேவர்பொருட்டுக் குவியாவென்றாரென்க.

அருகர் - இருடிகள்.

உOச-உOரு. மலர்மிசை நடந்த மலரடி யல்லதென்
றலைமிசை யுச்சி தானணிப் பொறாஅது

இ - ள். எனது தலையினுச்சியும் பூவின்மீதேநடந்த மலரடியாகிய அணியை யணியப் பொறுப்பினல்லது பிறிதொன்றனையும் அணியப் பொறாதென்றாரென்க.

உOசு-உOஎ. இறுதியி லின்பத் திறைமொழி யல்லது
மறுதர வோதியென் மனம்புடை பெயராது

இ - ள். என்மனமும் ஈறிலின்பமாகிய அநந்தசுகத்தையுடைய இறைவனருளிச்செய்த ஆகமமாகியமொழியை உருவேற ஓதிப் புடைபெயரினல்லது பிறிதொருமொழியையோதிப் புடைபெயராதென்றாரென்க.

மறுதர - மீளவும்.

உoஅ - உகரு. என்றவ னிசைமொழி யேத்தக் கேட்டதற்
கொன்றிய மாதவ ருயர்மிசை யோங்கி
நிவந்தாங் கொருமுழ நீணில நீங்கிப்
பவந்தரு பாசங் கவுந்தி கெடுகென்
றந்தரமாருப் படர்வோர்த் தொழுது
பந்த மறுகெனப் பணிந்தனர் போந்து

இ - ள். தம்மையைத் தலைமேற்கொண்டுநின்று, கவுந்தியடிகள், இறவா; நவிலாது; காணு; பொருந்தாது; குவியா; பொருது; பெயராதென்றுகொண்டு அவன்புகழ்மொழிகளை எத்தக்கேட்டு அதற்குப் பொருந்தியசாரணர் அவ்விடத்திடப்பட்ட சிலாவட்டத்தினின்றுமெழுந்து அதற்கு ஒருமுழவுயரம் மேலாநின்று பிறப்பைத்தரும்பாசம் கவுந்திக்குக் கெடுவதாகவென்றுகூறி அந்தரவழியாக விரைந்துசெல்கின்றவரைநோக்கித் தொழுது பாசங்கள் அறுகவென்று பணிந்தனராய்ப் போந்தென்க.

உகச - உகஅ. காரணி பூம்பொழிற் காவிரிப் பேரியாற்று
நீரணி மாடத்து நெடுந்துறை போகி
மாதருங் கணவனு மாதவத் தாட்டியுந்
தீதுதீர் நியமத் தென்கரை யெய்திப்
போதுசூழ் கிடக்கையோர் பூம்பொழி லிருந்துழி

இ - ள். முகிலையணிந்த பொழிலையுடைய காவிரியாகிய பெரியயாற்றிற்கு மாதரும் கணவனும் கவுந்தியடிகளும் பள்ளியோடத்தேறிப்போய்த் தென்கரையைச்சென்றெய்திப் போதுகள் சூழ்ந்துகிடக்கின்றதோர் பொலிவினையுடைய பொழிலிடத்தேசென்றிருந்தபொழுதிலென்க.

உகசு - உஉo. வம்பப் பரத்தை வறுமொழி யாளனொடு
கொங்கலர் பூம்பொழிற் குறுகினர் சென்றோர்

இ - ள். *இடங்கழிகாமத்தளாகிய குண்டக்கணிகையொருத்தி ஒருவனோடுங் கூடி இவர்களிருக்கின்ற மணம்பரந்ததோர் பொழிலிடத்தே அணுகினராய்ச் சென்றவரென்க.

வம்பப்பரத்தை - புதிய பரத்தைத்தன்மையையுடையாள்; குண்டமென்றபடி. இனி மனவெழுச்சியால் தோன்றினபடி சொல்லித்திரியும் பரத்தையென்றுமாம். வறுமொழியாளன் - பயனில்சொல்லாளன்; விடனென்றபடி.

உஉக - உஉஉ. காமனுந் தேவியும் போலு மீங்கிவ
ராரெனக் கேட்டீங் கறிகுவ மென்றே

இ - ள். இவ்விடத்துவந்திருக்கின்ற காமனையும் இரதியையுமொக்குமிவர்களை யாரென்றுகேட்டு அறியக்கடவோமென்று சொல்லியென்க.

---

* இடங்கழிகாமம் - மிக்ககாமம்; "இடங்கழி காமமொ டடங்கா னாகி, யுடம்போ டென்ற னுள்ளகம் புகுந்தென், னெஞ்சங் கவர்ந்த வஞ்சக் கள்வி" என்றார் மணிமேகலையிலும்; கஅ - வது உதயகுமரன் அம்பலம்புக்ககாதை.

இனி இவ்விடத்துவந்தவிவர் காமனும் தேவியுமே; அல்லராயின், யாரெனக் கேட்டறிகுவமென்றுரெனினுமமையும். இப்பொருட்குப் போலி ஒப்பில்போலி. ஈங்கிவர், ஈங்கு - இவ்விடத்து, கேட்டீங்கு, ஈங்கு - இப்பொழுது.

௨௨௩-௨௨௪. நோற்றுணல் யாக்கை நொசிதவத் தீருட
னாற்று வழிப்பட்டோ ராரென வினவ

இ - ள். *உவாமுதலிய விரதங்களிற் பட்டினிவிட்டுண்டலான் மெலிந்த யாக்கையையும் நுணுகிய தவத்தையுமுடையீர், நும்மொடுகூடி வழிவந்தவிவர் யார்தானென்று வினவவென்க.

ஆற்றுவழிப்பட்டோர் - வழியிற் கூடிவந்தோர்.

௨௨௫-௨௨௬. என்மக்கள் காணீர் மானிட யாக்கையர்
பக்க நீங்குமின் பரிபுலம் பினரென

இ - ள். அவ்விருவரும் இவ்விருவரையும் வினவுதல்கண்ட கவுந்தியடிகள் இவர் என்மக்கள்காணும்; நீர்சொன்ன காமனும் தேவியுமல்லர்; மானிடயாக்கையர்; வழிவருதலால் வருத்தத்தால் மிகவும் வருந்தினர்; அவருழைச்செல்லாதே விடப்போமினென்றுரெனக.

†பரி - மிகுதி; ஒருசொல்லுமாம்.

௨௨௭-௨௨௮. உடன்வயிற் றோர்க ளொருங்குடன் வாழ்க்கை
கடவது முண்டோ கற்றறிந் தீரென

இ - ள். நூல்களையுங்கற்று அதன்பயனையுமறிந்தவரே, ஒருவயிற்றுட்பிறந்தோர் கொழுநனும் மனைவியுமாய்க் கூடிவாழக்கடவதென்று நீர்கற்றநூல்களிற் சொல்லிக்கிடப்பதுமுண்டோ? உண்டாகிற் சொல்லுமென்றுரெனக.

கற்றறிந்தீரென்றது இகழ்ச்சி. இவ்வாறே நீர் கற்றனவுமென்பதாம்.

௨௨௯-௨௩௮. தீமொழி கேட்டுச் செவியகம் புதைத்துக்
காதலன் முன்னர்க் கண்ணகி நடுங்க
எள்ளுநர் போலுமிவ ரென்பூங் கோதையை
முள்ளுடைக் காட்டின் முதுநரி யாகெனக்
கவுந்தி யிட்ட தவந்தரு சாபங்
கட்டிய தாதலிற் பட்டதை யறியார்
குறுநரி நெடுங்குரற் கூவிளி கேட்டு
நறுமலர்க் கோதையு நம்பியு நடுங்கி
நெறியி னீங்கியோர் நீரல கூறினு
மறியா மையென் றறியல் வேண்டுஞ்

* "ஓவா திரண்டுவவு மட்டமியும் பட்டினிவிட்டு" என்றார் சிந்தாமணியிலும்; கேமசரியாரிலம்பகம், ௧௩௯.

† "பரிபுலம் பினனிவன், றுனே தமியன் வந்தனன்" என்றார் மணிமேகலையிலும்; ௧௬ - வது ஆதிரைபிச்சையிட்டகாதை.

செய்தவத் தீர்நுந் திருமுன் பிழைத்தோர்க்
குய்திக் கால முரையீ ரோவென

இ - ள். இங்ஙனம் இவரிகழ்ந்தமொழியைக் கேட்டலாற் செவியைப் புதைத்துக் கண்ணைநிமிர்ந்து, என்பூங்கோதைபோல்வாளை இவரிகழ்ந்தனர், இவ்விகழ்ச்சியால் குடக்குமுட்களையுடையகாட்டில் நுழைந்துதிரியும் முதுநரியாகக்கடவரெனக் கவுந்தியடிகளிட்டசாபம் தவத்தின்விளைவாகிய சாபமாதலால் அவரைச் சென்று பூண்டதாதலின், அங்ஙனம் விளைந்தபடியையறியாராகிய கோதையும் நம்பியுங் குறியநரியினது நெடியகுரலாகக்கூவும் விளியைக்கேட்டு நடுங்கிச்சென்று ஒழுக்கநெறியினின்றும் நீங்கியோர் நீர்மையல்லாதனவற்றைச்சொல்லினும் இஃது அவர் அறிவின்மையாற் கூறியதன்றேயென்று உயர்ந்தோர் தமதறிவான் உணரவேண்டும்; செய்தவத்தீர் உம்முடைய திருமுன் பிழைத்த இவர்க்கு இனிச் சாபநீங்கி உய்தலுடைத்தாங்காலத்தை உரைத்தருளீரென்றுகூறவென்க.

போலும் - ஒப்பில்போலி. முதுநரி - ஓரி. நடுங்கியென்றார்; தம்பொருட்டாகவிளைதலின், ஓகாரம் - இசைநிறை. அடிகள் மனத்தானினைத்து இட்டசாபமாதலாற் பட்டதையறியாரென்றார். இங்ஙனம் அறியாது அவர்கள்சொன்ன இகழ்ச்சியாலும் இதற்கு இவரல்லது வேறு சபிக்கவுரியாரின்மையானும் உய்திக்காலமுரையீரென்றார். விளி - ஓரிக்குரல். 'நெறியி னீங்கியோர் நீரல கூறினு, மறியா மையென் றறியல் வேண்டும்' என்னுந்துணையும் அவருட்கோள். பின்னதை அடிகட்குக் கூறினார்.

உசக - உசரு. அறியா மையினின் றிழிபிறப் புற்றோ
ருறையூர் நொச்சி யொருபுடை யொதுங்கிப்
பன்னிரு மதியம் படர்நோ யுழந்தபின்
முன்னை யுருவம் பெறுகவீங் கிவரெனச்
சாபவிடை செய்து

இ - ள். தமது முப்பொறிகளானவரும் துன்பமென்பதனை அறிந்துகூறுமையானே இன்று இழிபிறப்பையுற்றவிவர் உறையூர் மதிற்புறமாகிய காவற்காட்டிற்றிரிந்து பன்னிரண்டுதிங்கள் இங்ஙனந்துன்பமுழந்தபின்னர் முன்னைப்பிறப்பைப் பெறுவாராகவெனச் சாபவிடைசெய்தென்க.

இன்று இழிபிறப்புற்றோரென்றது நெடுங்காலம் தவஞ்செய்துபெற்ற மக்கட்பிறப்பை ஒருவார்த்தையினிழந்து இழிபிறப்புற்றாரென்றவாறு. எனவே *யாகாவாராயினும் நாகாத்தல்வேண்டுமென்பதாயிற்று; "ஆக்கம் ... ... பென்னுமாறே" என்பதூஉமாயிற்று.' நொச்சி யொருபுடையென்றது அரண்வேண்டாமை விளக்கிற்று; †"நொச்சி வேலித் தித்த னுறந்தை" என்றதுமது. இழிபிறப்பு - விலங்கின்பிறப்பு. முன்னையுருவம் - வம்பப்பரத்தையும் வறுமொழியாளனுமெனவுமாம்.

---

* திருக்குறள், அடக்கமுடைமை, ௭.

† அகநானூறு, மணிமிடைப்பவளம் ௧௨௨: "இரும்பிழி மகாரிவ் வழுங்கன் மூதூர், விழவின் றாயினுந் துஞ்சா தாகு, மல்லல் லாவண மறுகுடன் மடியின், வல்லுரைக் கடுஞ்சொ லன்னை துஞ்சாள், பிணிகோ ளருஞ்சிறை யன்னை துஞ்சிற்,

உ ச௱ரு - உ சஅ. தவப்பெருஞ் சிறப்பிற்
காவுந் தி யையையுந் தேவியுங் கணவனு
முறஞ்செவி வாரண முன்சம முருக்கிய
புறஞ்சிறை வாரணம் புக்கனர் புரிந்தென

இ - ள். தவத்தான்மிக்க சிறப்பையுடைய கவுந்தியடிகளும் தேவியும் கண வனும் முறம்போலுஞ்செவியையுடைய யானையைச் சமரிடத்துக்கெடுத்த புறத்தே சிறையையுடைய கோழியென்னுநகரின்கண்ணே விருப்பத்தோடு புக்காரென்க.

வாரணம் - கோழியூர்; ஆவது உறையூர். முற்காலத்து ஓர்கோழி யானை யைப் போரதொலைத்தலான் அந்நிலத்திற்செய்த நகர்க்குக் கோழியென்பது பெய ராயிற்று. அந்நகர் காண்கின்றபொழுது சிறையும் கழுத்துமாக ஆக்கியவதனாற் புற ம்பே சிறையையுடைய கோழியென்றாயிற்றென்பாருமுளர். அற்றன்று; புறஞ் சிறைவாரணமென்பது சிலேடை: புறத்தே சிறையையுடையகோழியும், புறஞ் சேரியையுடைய உறையூரும்; *"புறஞ்சிறைப் பொழிலும்" என்ப மேலுமாகலின். புறஞ்சிறைவாரணம் - கோழியூரெனக்கொள்க.

பணிந்தனர்போந்து எய்தி இருந்துழிச் சென்றோர் வினவப் பரிபுலம்பின ரெனக் கடவதுமுண்டோ கற்றறிந்தீரெனச் செவியகம்புதைத்து நடுங்க முதுநரி யாகெனக் கட்டியதாகலின், உரையீரோவெனப் பெறுக ஈங்கிவரெனச் சாபவிடை செய்து கவுந்தியும் தேவியும் கணவனும் புரிந்துபுக்காரென்க.

இஃது எல்லாவடியுந் தம்முளொத்துமுடிதலின் நிலைமண்டிலவாசிரியப்பா.

பருந்து நிழலுமென ... ...அடியார்க்குநல்லானென்பான்.

ஒருந்தமிழ் ... ...நிரம்பையர்காவலனே.

காற்றை ... ...சொல்வித்ததே.

நாடுகாண்காதை முற்றிற்று.

றுஞ்சாக் கண்ணர் காவலர் கடுகுவ, ரிலங்குவே லிளைஞர் துஞ்சின் வையெயிற்று, வலஞ்சுரித் தோகை ஞாளி மகிழு, மரவவாய் ஞமலி மகிழாது மடியிற், பகலுரழ் நிலவுக் காலு விசும்பி, னகல்வாய் மண்டில நின்றுவிரி யும்மே, திங்கள்கல் சேர்பு கனையிருண் மடியி, னில்லெலி வலசி வல்வாய்க் கூகை, கழுதுவழங் கியாமத் தழி தகக் குழறும், வளைக்கட் சேவல் வாளாது மடியின், மனைச்செறி•கோழி மாண்குர லியம்பு, மெல்லா மடிந்த காலை யொருநா, ணில்லா நெஞ்சத் தவர்வா ரலரே, யதனு, லரிபெய் புட்டி லார்ப்பப் பரிசிறந், தாதி போகிய பாய்பரி நன்மா, னெச்சி வேலித் தித்த னுறந்தைக், கன்முதிர் புறங்காட் டன்ன, பன்முட் டினதாற் றோழி நங் களவே" எ - து. தலைமகன் சிறைப்புறத்தானாகத் தோழிக்குச் சொல்லுவா ளாய்த் மகள் சொல்லியது; பரணர்.

ர்காண்காதை, க.

கட்டுரை.

முடியுடை வேந்தர் மூவ ருள்ளுந்
தொடிவிளங்கு தடக்கைச் சோழர்குலத் துதித்தோ
ரறனு மறனு மாற்றலு மவர்தம்
பழவிறன் மூதூர்ப் பண்புமேம் படுதலும்
விழவுமலி சிறப்பும் விண்ணவர் வரவு
மொடியா வின்பத் தவருறை நாட்டுக்
குடியுங் கூழின் பெருக்கமு மவர்தந்
தெய்வக் காவிரித் தீதுதீர் சிறப்புங்
பொய்யா வானம் புதுப்புனல் பொழிதலு
மரங்கு மாடலுந் தூக்கும் வரியும்
பரந்திசை யெய்திய பாரதி விருத்தியுந்
திணைநிலை வரியு மிணைநிலை வரியு
மணைவுறக் கிடந்த யாழின் றொகுதியு
மீரேழ் சகோடமு மிடைநிலைப் பாலையுந்
தாரத் தாக்கமுந் தான்றெரி பண்ணு
மூரகத் தேரு மொலியுடைப் பாணியு
மென்றிவை யனைத்தும் பிறபொருள் வைப்போ
டொன்றித் தோன்றுந் தனிக்கோ ணிலைமையு
மொரு பரிசா நோக்கிக் கிடந்த
புகார்க்காண்டம் முற்றிற்று.

[இதன்பொருள்.]

௧ - ௨. முடியுடைவேந்தர்மூவ ருள்ளுந் தொடிவிளங்கு தடக்கைச் சோழர்குலத்துதித்தோர் — மூவேந்தருள்ளும் சோழர்குலத்து உதித்தோருடைய; மூவர் – சோழர் பாண்டியர் சேரர்.

௩. அறன்—"அறனோம்படை" என்றது; [இந்திரவிழவூரெடுத்தகாதை, ௧௭௯.] தருமாசனமென்பாருமுளர்.

௩. மறன்—"இமையவ ருறையுஞ் சிமையப் பிடர்த்தலைக், கொடுவரி யேற்றி" என்றது. [இந்திரவிழவூரெடுத்தகாதை, ௯௭ - ௯௮.]

௩. ஆற்றல்—"கோநகர் காத்த" என்றது. [கடலாடுகாதை, ௮.]

௪. மூதூர்ப்பண்பு மேம்படுதல்—"புகாரேயாயினும்" என்றது. [மங்கலவாழ்த்துப்பாடல்.]

௫. விழவுமலிசிறப்பு—"விண்ணவர் தலைவனை விழுநீ ராட்டி" ன்றது [இந்திரவிழவூரெடுத்தகாதை, ௧௬௮.]

ரு. விண்ணவர்வரவு—"அந்தரத் ... துள்ளோ ரறியா மரபின், வந்து காண் குறூஉம் வானவன் விழவு" என்றது. [கட ...லாடுகாதை, எஉ - எ௬.]

எ. குடி—"இரப்போர் சுற்ற ...மும், புரப்போர் கொற்றமு, •முழவிடை விளைப்போர்" என்றது. [நாடுகாண்கா ...தை, க௪௬ - கரு0]

எ. கூழின்பெருக்கம்—"குமரி ...க் கூட்டிற் கொழும்பல் துணவு, கவரிச்• செந்நெற் காய்த்தலைச் சொரிய" என்ற ...து. [நாடுகாண்காதை, கஉ௬-கஉ௪.]

எ - அ. அவர்தம் தெய்வக்கா ...விரிந் நீறுநீர்சிறப்பு—"கரியவன் புகையினும் புகைக்கொடிதோன்றினும், வி ...திர் வெள்ளி தென்புலம் படரினும்,...... ... காவிரிப் புதுநீர்க் கடுவரல் வாய்த் ...ல, யோவிறந் தொலிக்கும்" என்றது. [நாடுகாண்காதை, க0உ - க0௬·]

௯. பொய்யா வானம் புதுப்பு ...ல் பொழிதல்—"மழைக்கரு வுயிர்க்கு ம் முற்றிக முட்டின் மறையோர்" என்ற ... [நாடுகாண்காதை, க௪௬ - க௪௪.]

கo. அரங்கு—"நூனெறி ம ... ணரங்கம்" என்றதும், [அரங்கேற்று கா ... தை, ௬௬.] "தோற்றிய வரங்கில் ... றதும். [அரங்கேற்றுகாதை, கoசு.]

கo. ஆடல—"ஆடலும்" எ ...து. [அரங்கேற்றுகாதை, கசு.]

கo. தூக்கு—"தூக்கும்" எ ...து. [அரங்கேற்றுகாதை, கசு.]

கo. வரி—கண்கூடுவரிமு ...ல் எடுத்துக்கோள்வரியிறுதியாகவுள்ள எட்டுவரியும். [வேனிற்காதை, எச - கoஅ.]

கக. பாரதி விருத்தி—நாடகவுறுப்பாகிய பாரதிவிருத்தி; அது கடலாடு காதையிற் கூறப்பட்டுள்ள பதினோராடலும். [கடலாடுகாதை, ௩௬ - ௬௩.]

கஉ. திணைநிலைவரி—"கடல்புக்கு" [கானல்வரி,கஎ.] என்னுங்கவிமுதல் "சேரன்மடவன்னம்" [கானல்வரி, உ௩.] என்பதிறுதியாகவுள்ள ஏழும்.

கஉ. இணைநிலைவரி—சார்த்துவரிமுதலாகிய பலவரிகளால்வருவன. [கானல்வரியிற்காண்க.]

க௩. யாழின்றொகுதி—"சித்திரப்பட" முதல், "பட்டடை" ஈறாக வுள்ளன. [கானல்வரி, க.]

க௪. ஈரேழ்சகோடம்—"ஈரேழ் தொடுத்த செம்முறைக் கேள்வி" என்றது. [அரங்கேற்றுகாதை, எo.]

க௪. இடநிலைப்பாலை—"குரல்வா யிளிவாய்க் கேட்டனள்" என்றது. [வேனிற்காதை, ௬ரு.]

கரு. தாரத்தாக்கம் — "குரலீறாகவும்" என்பதனால், தாரங்குரலாகிய விளரிப்பாலைபிறக்குங்கால் தாரம் ஆக்கம்பெறுதல்காண்க. [வேனிற்காதை, ௬அ.]

கரு. தான்றெரிபண்—அகநிலைமருதம், புறநிலைமருதம், அருகியன்மருதம் பெருகியன்மருதமென்னும பண் நான்கும் தெரியுந்திறன். [வேனிற்காதை, ௩௬ - ௪o.]

௧௬. ஊரகந்தேர்—" மகர வா
பொற், பூரண கும்பத்துப் பொலிந்த ப
படாகை, தூமயிர்க் கவரி சுந்தரச் சுண்ண
றது. [இந்திரவிழவூரெடுத்தகாதை, ௧௫௪

௧௬. ஒளியுடைப்பாணி — " சீர்
றுகாதை, ௧௩௫.]

௧௭. என்றிவையனைத்தும்—என்ப

௧௭ - ௧௮. பிற பொருள் வைப்பே
கோள் நிலைமையும்—சொல்லாதொழிர்
பொருந்தித்தோன்றும் ஒப்பற்ற முறைமை

௧௯ - ௨0. ஒருபரிசா நோக்கிக்
ஒருபடிப்பட நோக்கிக்கிடந்த புகார்கான்

புகார்காண்டம்

காலை யரும்பி மலருங் கதிரவனு
மாலை மதியமும்போல் வாழியரோ - வேலை
யகழா லமைந்த வவனிக்கு மாலைப்
புகழா லமைந்த புகார்.

௬. விண்ணவர்வரவு—“அந்தரத்
குறாஉம் வானவன் விழவு” என்றது. [கட

எ. குடி—“இரப்போர் சுற்றுட
விளைப்போர்” என்றது. [நாடுகாண்க

எ. கூழின்பெருக்கம்—“குமரி
செந்நெற் காய்த்தலைச் சொரிய” என்ற

எ - அ. அவர்தம் தெய்வக்கா
யினும் புகைக்கொடிதோன்றினும், விர்
... .காவிரிப் புதுநீர்க் கடுவரல் வாய்த்
[நாடுகாண்காதை, ௧௦௨ - ௧௦௩.]

௯. பொய்யா வானம் புதுப்புட
மழற்றிக முட்டின் மறையோர்” என்ற.

௧௦. அரங்கு—“நான்னெறி ம
தை, ௯௯.] “தோற்றிய வரங்கில்'

௧௦. ஆடல—“ஆடலும்” எ

௧௦. தூங்கு—“தூக்கும்” எ

௧௦. வரி—கண்கூடுவரிமு

யும்) [வேனிற்காதை. ௭௪

ப திகாரம்.

சிகைத், தோரண நிலைஇய தோமறு பசும்
'ாலிகை, பாவை விளக்குப் பசும்பொற்
ரத்து, மேவிய கொள்கை வீதி'' என்
- கருசா.]

ியல் பொலிய'' என்றது. [அரங்கேற்

'' சொல்லப்பட்ட இவைகள் யாவும்,
'பாடு ஒன்றித் தோன்றும் தக
,த பிறபொருள்களைவைத்தவைப்போ
நிலைபெறலும்,

_ந்த புகார்காண்டம் முற்றிற்று
முற்றியது.

முற்றிற்று.

இரண்

மதுரைக்

கக.—காடு

திங்கண்மூன் றடுக்கிய தி
செங்கதிர் ஞாயிற்றுத் தி
கோதைதாழ் பிண்டிக்
வாதியி னேற்றத் த
அந்தன் பள்ளிக் க
மந்திர ரையகத் த
சாரணர் கூறிய தன்
மாதவத் தாட்டியு மா
கன்றவ ருறையிடத் த
தென்றிசை மருங்கிற்
வைகறை யாமத்து வா
வெய்யவன் குணதிசை
எனநீர்ப் பண்ணையும் வ
விளமரக் கானத் திருக்
வாழ்க வெங்கோ மன்ன
யூழிதொ றூழிதொ று
வடியிற் றன்னள *வ
வடிவே லெறிந்
பஃறுளி
குமரி

பதிகாரம்.

*யெய்தா தேகப்
வளஞ் சுரப்ப
னவன் வாழ்கெனத்
ா வாழ்த்தி
ருக தோனை
வனக்
ச் சிறப்பின்
ஞைப்போ
ன்றத்துப்
து போல
டை யருந்திறற்
தேத்த
ருந் துருத்தித்
ன்னையும்
னு
திசை
விளங்கி
நிலைத் தானத்து
ாங்குவிற் பூண்டு
லப்
வெண் சங்கமுந்
னெந்தி
டு
ளிந்து தோன்றிய
ண்ணமு
னுளாங் கவற்ற
ான்

கோத்தொழி லாளரொடு கொற்றவன்
வேத்திய லிழந்த வியனிலம் போல
வேனிற் கிழவனொடு வெங்கதிர் வேந்தன்
றானலந் *திருகத் தன்மையிற் குன்றி
முல்லையுங் குறிஞ்சியு முறைமையிற் றிரிந்து
நல்லியல் பிழந்து நடுங்குதுய ருறுத்துப்
பாலை யென்பதோர் படிவங் கொள்ளுங்
காலை யெய்தினிர் காரிகை தன்னுட
னறையும் பொறையு மாரிடை மயக்கமு
நிறைநீர் வேலியு முறைபடக் கிடந்தவிந்
நெடும்பே ரத்த நீந்திச் சென்று
கொடும்பை நெடுங்குளக் கோட்டகம் புக்கால்
பிறைமுடிக் கண்ணிப் பெரியோ னேந்திய
வறைவாய்ச் சூலத் தருநெறி கவர்க்கும்
வலம்படக் கிடந்த வழிநீர் துணியி
னலர்தலை மராமு †முலவுத்தலை யோமையும்
பொரியரை யுழிஞ்சிலும் புன்முளி மூங்கிலும்
வரிமரற் றிரங்கிய கரிபுறக் கிடக்கையு
நீர்நசைஇ வேட்கையின் மானின்று விளிக்குங்
கானமு மெயினர் கடமுங் கடந்தா
லைவன வெண்ணெலு மறைக்கட் கரும்புங்
கொய்பூந் தினையுங் கொழும்புன வரகுங்
காயமு மஞ்சளு மாய்கொடிக் கவலையும்
வாழையுங் கமுகுந் தாழ்குலைத் தெங்கு
மாவும் பலாவுஞ் சூழடுத் தோங்கிய
தென்னவன் சிறுமலை திகழ்ந்து தோன்று
மம்மலை வலங்கொண் டகன்பதிச் செல்லுமி
னவ்வழிப் படரீ ராயி னிடத்துச்
செவ்வழிப் பண்ணிற் சிறைவண் டரற்றுந்
தடந்தாழ் வயலொடு தண்பூங் காவொடு
கடம்பல கிடந்த காடுடன் கழிந்து
திருமால் குன்றத்துச் செல்குவி ராயிற்
பெருமால் கெடுக்கும் பிலமுண் டாங்கு
விண்ணோ ரேத்தும் வியத்தகு

---

* திருகியெனவும் பாடம்.

† அலறுதலையெனவும்பாடம்.

சிலப்பதிகாரம்.

ரவணம் பவகா ரணியோ
டி யெனும்பெயர் போகி
கா விளங்கிய பொய்கை
ழ சிறப்பின் மூன்றுள வாங்குப்
ரிய சரவணம் பொருந்துவி ராயின்
வர் கோமான் விழுநூ லெய்துவிர்
ணிபடிந் தாடுவி ராயிற்
ணத்திற் பழம்பிறப் பெய்துவி
த்தி யெய்துவி ராயி
சித்தி யெய்துவிர் நீரே
ப் பிலம்புக வேண்டுதி ராயி
குயர் மலையந் துயர்ந்தோற் றொழுது
லவன்றன் சேவடி வைத்து
மும்முறை மலைவலஞ் செய்தா
வீழ்ந்த சிலம்பாற் றகன்றலைப்
கொடி யின்னிற் புயலைங் கூந்தற்
விழ்ந்த கன்னிகா ரத்துத்
வளைத் தோளி யொருத்தி தோன்றி
மக் கின்பமு மறுமைக் கின்பமு
மயு மறுமையு மிரண்டு மின்றியோர்
மையி னிற்பதுஞ் செப்புமி னீயிரிவ்
றாத்தாள் வாழ்வேன் வரோத்தமை யென்பே
ராத்தார்க் குரியே னுரைத்தி ராயிற்
நத்தக் கீர்க்குத் திறந்தேன் கதவெனும்
தவந் திறந்தவள் காட்டிய நன்னெறிப்
தவம் பலவுள போகிடை கழியன
வொட்டுப் புதவமொன் றுண்டத னும்பர்
ட்டிகைப் பூங்கொடி வந்து தோன்றி
றுதியி லின்ப மெனக்கீங் குரைத்தால்
றுதிர் போலுநீர் பேணிய பொருளொடு
ராயி ராயினு முறுகண் செய்யே
டுவழிப் புறத்து நீக்குவ னும்மெனு
ணி னுரைத்த மூன்றின்
காட்டினள் பெயரு
வு மெட்டினும்

வருமுறை வெ
மொருமுறை
வேண்டி
காண்ட
மற்றவை
பொற்ற
னுள்ளம
புண்ணணி நீ
தோன்றிய பி
யென்றுதுயர்
மாண்புடை ம
காண்டகு பில
கந்நெறிப் படர்
செந்நெறி யாகு
வூரிடை யிட்ட
லாரிடை யுண்டே
நடுக்கஞ் *சாலா நயத்திற் றோன்
யிடுக்கண் செய்யா தியங்குநர்த் த
மடுத்துடன் கிடக்கு மதுரைப் பெ
நிணிலங் கடந்த நெடுமுடி யண்ண
றொழு தகையேன் போகுவல்
மாமறை யோன்வாய் வழித்திறங்
காவுந்தி யையையோர் கட்டுரை சொல
நலம்புரி கொள்கை நான்மறை யாள
பிலம்புக வேண்டும பெற்றியீங் கில்லை
கப்பத் திந்திரன் காட்டிய நூலின்
மெய்ப்பாட் டியற்கை விளங்கக் காணா
யிறந்த பிறப்பி னெய்திய வெல்லாம்
பிறந்த பிறப்பிற் காணா யோநீ
வாய்மையின் வழாது மன்னுயி ரோம்புநர்க்
கியாவது முண்டோ வெய்தா வரும்பொருள்
காமுறு தெய்வங் கண்டடி பணிய
நீபோ யாங்களு நீணெறிப் படர்குது
மென்றம் மறையோற் கிசைமொழி யுணர்த்திக்
குன்றாக் கொள்கைக் கோவலன் றன்னுட

* சாராவெனவும்பாடம்.

ரம்.

ரிகாட்

சென்று

ருத்து

பாதலிற்

யென் றென்று ன்

மே நூலோ ராயினுங்
பா த பகுதியோ ராயினும்
பி ண்டு பிறக்கிட் டொழியுங்
க க்கை கடையே போன்மெனச்
செ யெ செழுங்கடை மழைக்கண்
வெ த்து வெண்ணிலாத் திகழுந்
த தாருகாழ் தன்கையாற் பரிந்து
துனியுற் றென்னையுந் துறந்தன ளாதலின்
மதுரை மூதூர் மாநகர்ப் போந்த
ததிர்வழிப் பட்டோ ரெனக்காங் குரைப்பச்
சாத்தொடு போந்து தனித்துய ருழந்தேன்
பாத்தரும் பண்பநின் பணிமொழி யாதெனு
மயக்குந் தெய்வமிவ் வன்காட் டுண்டென
வியத்தகு மறையோன் விளம்பின னாதலின்
வஞ்சம் பெயர்க்கு மந்திரத் தாலிவ்
வைஞ்சி லோதியை யறிகுவன் யானெனக்
கோவல னுவிற் கூறிய மந்திரம்
பாய்கலைப் பாவை மந்திர மாதலின்
வனசா ரிணியான் மயக்கஞ் செய்தேன்

---

* பொய்கையிற்பொருந்தியென்றும்பாடம்.

புனமயிற் சாயற்கும் புண்ணிய முதல்விக்கு
மென்றிற முரையா தேகென் றேகத்
தாமரைப் பாசடைத் தண்ணீர் கொணர்ந்தாங்
கயர்வுறு மடந்தை யருந்துயர் நீர்த்து
ப்போதுசெல் வெங்கதிர் வெம்மையிற் றொடங்கத்
தீதியல் கானஞ் செலவரி தென்று
கோவலன் றன்னொடுங் கொடுங்குழை மாதொடு
மாதலைத் தாட்டியு மயங்கத ரழுவத்துக்
குரவமு மரவமுங் கோங்கமும் வேங்கையும்
விரவிய பூம்பொழில் விளங்கிய விருக்கை
யாரிடை யத்தத் தியங்குந ரல்லது
மாரி வளம்பெறு வில்லே ருழவ
கூற்றுறழ் *முன்பொடு கொடுவில் லேந்தி
வேற்றுப்புலம் போகிநல் வெற்றங் கொடுத்துக்
கழிபே ராண்மைக் கடன்பாரத் திருக்கும்
விழிநுதற் குமரி விண்ணோர் பாவை
மையறு சிறப்பின் வான நாடி
யையைதன் கோட்ட மடைந்தன ராங்கென.

க - ௪. திங்கண்மூன் றடுக்கிய திருமுக் குடைக்கீழ்ச்
செங்கதிர் ஞாயிற்றுத் திகழொளி சிறந்து
கோதைதாழ் பிண்டிக் கொழுநிழ லிருந்த
வாதியி றோற்றத் தறிவனை வணங்கி

இ - ள். கோதைகள் தாழ்ந்த பிண்டியினது வளவிய நிழற்கண்ணே மூன்று திங்களையடுக்கினாற்போலும் திருமுக்குடையினதுகீழ் ஞாயிற்றினது ஒளியி ஒளிசிறப்பவிருந்த அறிவனை வணங்கியென்க.

திங்கண்முதலிய †மூன்றெனினுமாம். முக்குடையாவன: சந்திரா நித்தியவினோதம், சகலபாசனமென்பன. இன்னுருபு தொக்கு அது பொருண்மை தந்தது. திகழ்தல் - விளங்குதல். சிறந்து - சிறப்ப. பிண்டியென்றார்; அவன்பிண்டி கடவுட்டன்மையான் எஞ்ஞான்றும் பூக்குமாதலின். ஆதியி றோற்றத் தறிவனென்பது ஆதியின்மையை வுடையனென்பதாம்; எனவே இனஞ்செப்பி அந்தமின்மையை மு

---

* மொய்ம்பொடென்றும்பாடம்.

† மூன்றுவன: சந்திரன், சூரியன், அக்கினி.

‡ அசோகு மாலையாகப் பூக்குமென்பதை, "மூழாத்தி தாமந் தாழ்ந்துமேல், வழாத்திரு மலரெலா மலர் மிறைகொளக் குனிந்து கூங்குயில், விழாக் என்னும் சீவகசிந்தாமணிச் செய்யுளாலு

மாம்; ஆகவே ஆதியும் அந்தமும் இல்லாதவனென்றவாறும்; எனவே தொருவர் முதலாதலில்லாதவனென்பதாம். இன்னும் இதற்கு யாவ ானேமுதலாயவனென்றுரைப்பினுமமையும். ஆதியிற்றோற்றம் பாடமா , ஆதிக்காலத்தினும் முற்றோன்றியவனென்க. என்றகருத்து காலத்தின்முற் ன்றும்பொருள்கள் யாவுமின்மையின், அதனினும் முற்றோன்றியவனென்ப தாம். அறிவன் - உறையூரிலருகன். வணங்கி - முதனுட் புரிந்து புக்கவர் வணங்கி யென்க.

ரு - அ. கந்தன் பள்ளிக் கடவுளர்க் கெல்லா
முந்தி லரங்கத் தகன்பொழி லகவயிற்
சாரணர் கூறிய தகைசா னன்மொழி
மாதவத் தாட்டியு மாண்புற மொழிந்து

இ - ள். முற்கூறிய நிக்கந்தருடைய பள்ளியிடத்துள்ள *கடவுளர்க்கெல்லாம் ற்றிடைக்குறையாகிய அவ்விடத்து அகன்றபொழிலின்கட் சாரணர்கூறியமொ யைக் கவுந்தியடிகளும் இனிமையுறமொழிந்தென்க.

†நிக்கந்தனைக் கந்தனென்றார். அந்தில் - அசையுமாம். அரங்கம் - முற் ரிய ஆற்றுவீயரங்கம்; திருவரங்கமுமாம். அகன்பொழில் - அம் மரம்பயிலடுக் சாரணர் - பெரும்பெயராயரிட்ட சிலாதலத்துத் தருமஞ்சாற்றுஞ்சாரணர்; வர்கூறியமொழி - ‡"ஒளியுறி னல்லது, போதார் பிறவிப் பொதியறையோர்" என்றமொழி; அதனைக் கவுந்தியடிகளும் மொழிந்தென்க.

அ - கூ. ஆங்கு
அன்றவ ருறைவிடத் தல்கின ரடங்கி

இ - ள். அன்று §சாவகருறைவிடத்து விட்டுத் தங்கியென்க.

என்பது காலைப்பொழுதில் வாய்மொழிகேட்டு மாடப்புனைபோகித் தென் ாயெய்திப் பூம்பொழிலிருந்துழிச் சாபவிடைசெய்து மாலைப்பொழுதின்கட் றைவாரணம் புரிந்துபுக்கனரெனவே அற்றைஞான்றுதங்குதல் கூறவேண் டியும்; முடியவே வழிநாட் சாவகருறைகின்றவிடத்தே தங்கினராய் ஒடுங்கி அவரெனக் கடவுளைச்சுட்டின், அவருறைவிடம் கந்தன்பள்ளியாமாக டு இண்ங்காமை சொல்லவேண்டாவாகலானும் அவரென்றது சாவ கடவுளர்க்கெல்லாம் மாதவத்தாட்டி மாண்புறமொழிந்தெனவே கந்தன்பள்ளியுட் புக்கமையுணர்க. இங்ஙனங்கூறியது, ||"ஆறைங் மையானும் ¶"காவத மல்லது கடவா ராகிப், பன்னாட் டங்கிச்

* - ரண்டு முனிவர்; "தொன்முது கடவுட் பின்னர் மேய" என ளும், "இப்பொழுது பொழுதென் றதுவாய்ப்பக் கூறிய, வெ தோகையுள்ளுங்கூறினர்.

‡ நாடுகாண்காதை, ககo - ககக.

§ த்தார்; இவர்களைச் ச்ராவகரென்பர்.

¶ நாடுகாண்காதை, கருச - கருரு.

சென்று ளொருநாள்'' என்றமையானும், ஈண்டும் '' அன்றவ ருறைவிட, ரடங்கி'' என்றமையானும் சிலநாட்சென்றவழிச் செலவொழிக்தொழிர் டாண்டிருந்து ஆறிச்சென்றமை உணர்த்தற்கெனக்கொள்க.

கO - கச. தென்றிசை மருங்கிற் செலவுவிருப் புற்று
வைகறை யாமத்து வாரணங் கழிந்து
வெய்யவன் குணதிசை விளங்கித் தோன்ற
வளநீர்ப் பண்ணையும் வாவியும் பொலிந்த
விளமரக் கானத் திருக்கை புக்குழி

இ - ள். தென்றிசைக்கண்ணே செல்லுதலை விருப்பமுறுதலானே கோழியூரை வைகறையாமத்தே கழிந்து செல்லாநின்றுழி வெய்யோன்வந்து முன்னர்க் குணதிசையை விளக்கிப் பின்னர்த் தான் தோன்றினுகை, வளவிய நீர்நிறைந்த மருதநிலமும் வாவியுஞ்சிறந்ததோர் இளமரக்கா...ன்மண்டபத்தே சென்று புக்க விடத்தென்க.

வாரணம் - கோழியூர். வணங்கி மொழிந்து அல்கினரடங்கி விருப்புற்று வாரணங்கழிந்து தோன்றினவளவிலே இருக்கைபுக்குழியென்க. விளங்கி - விளக்கி; விகாரம்.

கரு - கசு. வாழ்க வெங்கோ மன்னவர் பெருந்தகை
ஊழிதொ றூழிதொ றுலகங் காக்க

இ - ள். மன்னர்யாவரினும் மிக்க பெரியதகையினையுடைய எங்கோ வாழ்வானுக ; ஊழிதோறும் ஊழிதோறும் இவ்வுலகை அவனே காப்பானுகவென்க.

கஎ - உஉ. அடியிற் றன்னள வரசர்க் குணர்த்தி
வடிவே லெறிந்த வான்பகை பொறாது
பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்
குமரிக் கோடுங் கொடுங்கடல் கொள்ள
வடதிசைக் கங்கையு மிமயமுங் கொ
தென்றிசை யாண்ட தென்னவன்

இ - ள். முன்னொருகாலத்துத் தனது பெருமை காலான்மிதித்துணர்த்தி வேலானெறிந்த அந்தப் பழம்ட பின்னொருகாலத்து அவனது தென்றிசைக்கண்ணதாக பலவாகிய பக்கமலைகளையுடைய குமரிக்கோட்டையும் ெ கண்ணதாகிய கங்கையாற்றினையும்இமயமலையினையும் ை டும் தென்றிசையையாண்ட தென்னவன் வாழ்வானுகவெ

என்றது : அங்ஙனமாகிய நிலக்குறைக்குச் சோழநாட கூற்றமும் சேரமானுட்டுக் குண்டூர்க்கூற்றமுமென்னும்

---

* '' எங்கோ வாழிய . . ..முந்நீர் விழவி னெ டியோன் ... ருளி மணலினும் பலவே'' எனப் பஃறுளியாற்றைப்பாராட் டிலும் ; க.

ட தென்னவன் வாழ்வானாகவென்றவாறு. அடியில் - அடியால். தன் பதனைக் கடன்மேலேற்றலுமொன்று. அரசர்க்கு - உலகிலரசரெல்லா ன்க. வான்பகை - முன்பேசெய்தபகையும. பஃறுளியென்னும் ஆற் ம வேனிற்காதையிற்கூறிப்போந்தாம். கோடு - மலை. கொடுங்கடல் - ல்லாந்தந்தகடல். கடல் வடபால் எறிந்துகொண்ட எல்லையளவும் மீண்டும் தென்றிசையையாண்டவென ஒப்பாகலுமொன்று. அடியா ாத்தி எறிந்த பகைபொறாது கொள்ளத் தானுங்கொண்டு ஆண்ட தென்ன ன்னன்க.

உங - உரு. திங்கட் செல்வன் றிருக்குலம் விளங்கச்
செங்கணா யிரத்தோன் றிறல்விளங் காரம்
பொங்கொளி மார்பிற் பூண்டோன் வாழி

இ - ள். திங்களாகிய செல்வனுடைய மரபு மேம்படுதற்கு இந்திரன்பூட்டிய வலிவிளங்கிய ஆரத்தை ஒளிபொங்கிய தனதுமார்பத்தேபூண்ட பாண்டியன் வாழ் வானாகவென்க.

விளங்கவென்பதனை விகாரவகையான் வியங்கோளாக்குவாருமுளர். விளங் கப்பூண்டோனென இயைக்க. திங்கட்செல்வனென்பதற்கு வேனிற்காதையில் உரைத்ததுரைக்க.

உசா - ங க. முடிவளை யுடைத்தோன் முதல்வன் சென்னியென்
றிடியுடைப் பெருமழை யெய்தா தேகப்
பிழையா விளையுட் பெருவளஞ் சுரப்ப
மழைபிணித் தாண்ட மன்னவன் வாழ்கெனத்
தீதுதீர் சிறப்பிற் றென்னனை வாழ்த்தி
மாமுது மறையோன் வந்திருந் தோனை

நம்முடைய முதல்வனது சென்னிமுடியிலே வளையையுடைத் டைய பருவமழை தனதுநாட்டிற் பெய்தற்றொழிலெய் ிளையுட ாகிய மிக்க வளஞ்சுரக்கும்படி அதனை *விலங் ழ்வானாகவெனக் குற்றந்தீர்ந்த சிறப்பினையுடைய தென் திருந்த முதுமறையோனையென்க.

மூ ீங்கென் வரவெனக்
ா கேட்ப

பானைநோக்கி, ஆண்டு, நும்மூர்யாது? ஈண்டு நும்வரவ ின்னவவென்க.

குன்றாச் சிறப்பின்
யாளன் வருபொரு ளுரைப்போன்

கடலை வற்றச்செய்ததும், இந்திரன்பூட்டிய ஆரத்தை முடிமேல் வளையைச்செலுத்தியதும், மேகத்தைச் சிறை ன் உக்கிரவன்மன் செயலென்று மதுரைப்புராணங்கூறு

இ - ள். மிக்க சிறப்பினையுடைய அம்மறையோன் தான் வருகின்றபொருளை உரைக்கின்றவனென்க.

வருபொருளென்ற பொதுமையான் வருதற்குக் காரணமும் ஊரின்பெயரு மென்பதாயிற்று.

௩௫ - ௪௦. நீல மேக நெடும்பொற் குன்றத்துப்
பால்விரிந் தகலாது படிந்தது போல
வாயிரம் விரித்தெழு தலையுடை யருந்திறற்
பாயற் பள்ளிப் பலர்தொழு தேத்த
விரிதிரைக் காவிரி வியன்பெருந் துருத்தித்
திருவமர் மார்பன் கிடந்த வண்ணமும்

இ - ள். நீலமேகம் ஓங்கிய பொன்மலைமீதே பக்கங்களில் விரிந்து மிகாமல் ஒக்கப் படிந்ததுண்டாகில் அதனையொப்பத் தனது படம்விரித்தெழுந்த ஆயிரந் தலையையும் கிட்டுதற்கரிய திறலையுமுடைய பாம்பணைப்பள்ளிமீதே தேவர்கள் பலரும் தொழுதேத்தத் திரைவிரியும் காவிரியாற்றிடைக்குறையிலே திருமகள்பொருந்திய திருமார்பையுடையோன் கிடந்தகோலமுமென்க.

மேகம் படிந்ததுபோலவென்க.

௪க - ௫க. வீங்குநீ ரருவி வேங்கட மென்னு
மோங்குயர் மலையத் துச்சி மீமிசை
விரிகதிர் ஞாயிறுந் திங்களும் விளங்கி
யிருமருங் கோங்கிய விடைநிலைத் தானத்து
மின்னுக்கொடி யுடுத்து விளங்குவிற் பூண்டு
நன்னிற மேக நின்றது போலப்
பகையணங் காழியும் பால்வெண் சங்கமுந்
தகைபெறு தாமரைக் கையி னேந்தி
நலங்கிள ராரம் மார்பிற் பூண்டு
பொலம்பூ வாடையிற் பொலிந்து தோன்றிய
செங்க ணெடியோ னின்ற வண்ணமும்

இ - ள். கொடிவழித்தீர்த்தமுதலிய மிக்க அருவிநீரையுடைய வேங்கட மென்று பெயர்கூறப்படும் மலையினுச்சிமீதே ஞாயிறுந்திங்களும் இருமருங்கும் ஓங்கிவிளங்கிய இடைப்பட்டவிடத்தே நல்ல நீலநிறத்தையுடையமேகம் தன்மின்னாகிய புதுப்புடைவையையுடுத்துத் தன்வில்லாகிய பணியைப்பூண்டுநின்றாற்போலப் பகையைவருத்தும் ஆழியையும் சங்கையும் அழகிய தாமரைக்கையிலேத்தே வலனுமிடனுமேந்தி அழகுகிளருமாரத்தைத் திருமார்பிற்பூண்டு பொற்பூவாடையை யுடுத்து வெளிப்பட்ட சிவந்த திருக்கண்மலரையுடைய நெடியோன் நின்ற கோலமுமென்க.

மேகம் இடைநிலைத்தானத்து உடுத்துப் பூண்டு நின்றதுபோல ஏந்திப் பூ பொலிந்து உச்சிமீமிசைத்தோன்றிய நெடியோன் நின்றவண்ணமுமென்

மயக்கதிரணிறை. உச்சிமீமிசையென ஒருபொருட்பன்மொழி சிறப்பின்கண் வந்தன.

ருஉ - ருங. என்கண் காட்டென் றென்னுளங் கவற்ற
வந்தேன் குடமலை மாங்காட் டுள்ளேன்

இ - ள். இங்ஙனமாகிய இரண்டுவண்ணத்தையும் காட்டுவாயாகவென்று என் கண் என்னுள்ளத்தைக் கவலைசெய்தலாலே ஈண்டுவந்தேன்; ஆண்டுக் குடகமலைப் பக்கத்து மாங்காடென்னுமூரின்கண் உள்ளவன் நானென்றானென்க.

என்கண் - எழுவாய். *"கண்ணுந் தோளும்" என்பதனாற் கண்ணென்றார். உள்ளேன் - உள்ளவனன்.

ருச - ருஎ. தென்னவ னாட்டுச் சிறப்புஞ் செய்கையுங்
கண்மணி குளிர்ப்பக் கண்டே னாதலின்
வாழ்த்திவந் திருந்தே னிதுவென் வரவெனத்
தீத்திறம் புரிந்தோன் செப்பக் கேட்டு

இ - ள். அத்தென்னவனுடைய நாட்டினுள்ளசிறப்பும், அவன் கொடை அளிமுதலிய செய்கைகளும் கேட்டலன்றிக் கண்கள்குளிரக் கண்டேனாகலான், அவன் புகழை நாவால்வாழ்த்தி வந்திருந்தேன்; என்வரவு இதுவென்றுகொண்டு முத்தீயின்றிறத்து மனம்புரிந்தோன் சொல்லக்கேட்டென்க.

ருஅ - ருகூ. மாமறை முதல்வ மதுரைச் செந்நெறி
கூறு நீயெனக் கோவலற் குரைக்கும்

இ - ள். கோவலன் பெரிய மறைமுதல்வனே, அதுநிற்க; மதுரைக்குச்செல்லும் செவ்வியநெறியை எங்கட்குக் கூறுவாயாகவென, அவற்கு அவன் இதனைக் கூறுமென்க.

அது மேற்கூறுவார்:

கூ0 - கூஎ. கோத்தொழி லாளரொடு கொற்றவன் கோடி
வேத்திய லிழந்த வியனிலம் போல
வேனிற் கிழவனொடு வெங்கதிர் வேந்தன்
றானலந் திருகத் தன்மையிற் குன்றி
முல்லையுங் குறிஞ்சியு முறைமையிற் றிரிந்து
நல்லியல் பிழந்து நடுங்குதுய ருறுத்துப்
பாலை யென்பதோர் படிவங் கொள்ளுங்
காலை யெய்தினிர் காரிகை தன்னுடன்

இ - ள். வன்கண்மையன்றிக் குடியோம்பாத அமைச்சரோடே, நாடோறும் நாடி முறைசெய்யாது அரசனுங்கோல்கோடலானே, அரசியலிழந்த அகன்றநிலம் போல முதிர்ந்த வேனிலாகிய உரிய அமைச்சனோடே வெவ்விய விளக்கத்தோடே யமைந்த †வேந்தன்றானும் வெம்மைமிகுதலானே தமது இயற்கைகெட்டு முல்லை

* தொல்காப்பியம், சொல்லதிகாரம், கிளவியாக்கம், ருக.
† வேந்தன் - சூரியன்.

குறிஞ்சியென்னும் இருதிணையும் முறைமைதிரிந்து தமது நல்லியல்பையிழந்து தம்மைச் சேர்ந்தோரை நடுங்குந்துயரையுறுவித்துப் பாலையென்பதோர் வடிவைக் கொள்ளும் இந்தக்காலத்து இக்காரிகையோடு வந்தீர்நீரென்றானென்க.

பாலைக்கு நிலமின்மையும் முல்லையும் குறிஞ்சியும் இனிப் பாலையாதலும் முன்னர்ப் பதிகச்செய்யுளுரையிற் கூறப்பட்டன. அன்றியும், *"வானூ மூர்ந்த வயங்கொளி மண்டில, நெருப்பெனச் சிவந்த வுருப்பவி ரங்காட், டிலையில மலர்ந்த முகையி விலவம்" என முல்லை முறைமைதிரிந்து பாலையாயினவாறும், †"சீறருங் கணிச்சியோன்... ... ...,வரைபிளந் தியங்குந, ராறுகெட விலங்கிய வழலவி ராரிடை" எனக் குறிஞ்சி முறைமைதிரிந்து பாலையாயினவாறுங்காண்க.

கோடி இழந்த நிலம்போலக் கிழவனொடு வேந்தன்றிருகக் குன்றித் திரிந்து இழந்து உறத்துக் கொள்ளுங்காலையெனக்கூட்டுக. காரிகை தன்னுடன் காலையெய்தினிரென மாறுக. காலை - காலம்.

௬௮ - எ௩. அறையும் பொறையு மாரிடை மயக்கமு
நிறைநீர் வேலியு முறைபடக் கிடந்தவிந்
நெடும்பே ரத்த நீந்திச் சென்று
கொடும்பை நெடுங்குளக் கோட்டகம் புக்காற்
பிறைமுடிக் கண்ணிப் பெரியோ னேந்திய
வறைவாய்ச் சூலத் தருநெறி கவர்க்கும்

இ - ள். பாறையும் துறுகலும் அருவழியின் நெறிமயக்கமும் பேய்த்தேருமென்னுமிவை அடைவுபடக்கிடந்த இந்தத் தொலையாத பெரிய சுரத்துநெறியைத் தொலைத்துப்போய்க் கொடும்பாளூர் நெடுங்குளமென்னும் இரண்டூர்க்கும் பொது

* அகநானூறு, களிற்றியானைநிரை, கக: "வான மூர்ந்த வயங்கொளி மண்டில, நெருப்பெனச் சிவந்த வுருப்பவி ரங்காட், டிலையில மலர்ந்த முகையி விலவங், கலிகொ ளாய மலிபு தொகுபெடுத்த, வஞ்சுடர் நெடுங்கொடி பொற்பத் தோன்றுங், கயந்துக ளாகிய பயந்தபு கான, மெம்மொடு கழிந்தன ராயிற் கம்மென, வம்புவிரித் தன்ன பொங்குமணற் கான்யாற்றுப், படுசினை தாழ்ந்த பயிலிண ரெக்கர், மெய்புகு வன்ன கைகவர் முயக்க, மவரும் பெறுகுவர் மன்னே நயவர, நீர்வார் நிகர்மலர் கடுப்ப வோவா தறந், தறுகுள நிறைக்குந போல வைகலு, மழுதன் மேவல வாகிப், பழிதீர் கண்ணும் படுகுவ மன்னே" என்பது தலைமகன் பொருள்வயிற் பிரிந்த விடத்து ஆற்றாளாய தலைமகளது வேறுபாடுகண்டு ஆற்றாளாயதோழிக்குத் தலைமகள் ஆற்றுவலென்பதுபடச்சொல்லியது; ஔவையார்.

† கலித்தொகை, முதலாவதுபாலை, க. "தொடங்கற்கட் டோன்றிய முதியவன் முதலாக, வடங்காதார் மிடல்சாய வமரர்வந் திரத்தலின், மடங்கல்போற் சினைஇ மாயஞ்செ யவுணரைக், கடந்தடு முன்பொடு முக்கண்ணான் மூவெயிலு, முடன்றக்கான் முகம்போல வொண்கதிர் தெறுதலிற், சீறருங் கணிச்சியோன் சினவலி னவ்வெயி, லேறுபெற் றுதிர்வனபோல் வரைபிளந் தியங்குந, ராறுகெட விலங்கிய வழலவி ராரிடை, மறப்பருங் காதலி யொழிய, விறப்பத் துணிந்தனிர் கேண்மின்மற் றைஇய"

வாகிய எரியினது கனையைக் கழிந்துசென்றால் முடிக்குப் பிறையைக் கண்ணியாகச்சூடிய இறைவனேந்திய கண்ணறையாகிய வாளையுடைய சூலவேல்போல மூன்றுவழி அறிதற்கரியவாம்படி கவர்க்குமென்றானென்க.

பொறையைப் பொத்தையென்பாருமுளர், ஆவது மட்சிறுமலை. அரிடை - அரியவழி; ஆவது ஆறலைப்போரும் ஊறுசெயவிலங்குமுடைத்தாய் ஏற்றிழிவும் கவலைச்சின்னெறியுமாயிருப்பது. நிறைநீர்வேலியென்றார், பேய்த்தேரை; நீர் போலத்தோன்றுதலின். உடைகுளங்களுமாம். இவை இணைப்பெயர்பெற்றவூர். இனிக் கொடும்பைக்கோட்டகநெடுங்குளமெனவுமாம். கோட்டகம் - கரை; பள்ளமுமாம். நீந்திப் புகவரிதென்பதுதோன்றப் புக்காலென்றார். சூலத்து - சூலம் போல; சாரியை நிற்க உருபும் உவமவுருபும் தொக்கன.

எ௪. வலம்படக் கிடந்த வழிநீர் துணியின்

இ - ள். அங்ஙனம் கவர்ப்படுநெறியினுள் வலப்பக்கத்ததாய்க் கிடந்தவழியில் நீர் போகத்துணிவீராயினென்றானென்க.

நெறியருமைகூறினான்.

எரு - அசா. அலர்தலை மராமு முலறுதலை யோமையும்
பொரியரை யுழிஞ்சிலும் புன்முளி மூங்கிலும
வரிமரற் றிரங்கிய கரிபுறக் கிடக்கையு
நீர்நசைஇ வேட்கையின் மானின்று விளிக்குங
கானமு மெயினர் கடமுங் கடநதா
லைவன வெண்ணெலு மறைக்கட் கருமபுங்
கொய்பூந் தினையுங கொழும்புன வரகுங
காயமு மஞ்சளு மாய்கொடிக் கவலையும
வாழையுங் கமுகுந் தாழ்குலைத் தெங்கு
மாவும பலாவுஞ் சூழடுத் தோங்கிய
தென்னவன் சிறுமலை திகழ்ந்து தோன்று
மம்மலை வலங்கொண் டகன்பதிச் செல்லுமின்

இ - ள். விரிந்த தலைகளையுடைய வெண்கடம்பும், உலறிய தலைகளையுடைய ஓமையும் பொரிந்த தாளையுடைய வாகையும், தண்டுமுளிந்த புறக்கழாகிய மூங்கிலும், வரியையுடையமரல் நீர்வற்றித் திரங்கிய கரிந்துகிடக்கின்றவிடங்களும், அவ்விடத்தே நீருண்டலைவிருப்பி அவ்விருப்பத்தாலே உழைமான் நின்று உளைக்குங் காடும், எயினருரையடுத்தவழியுமாகியவவை கடத்தற்கரிய; அவற்றைக்கடந்து போனால், அவ்விடத்து மலைச்சாரலில்விளையும் நெற்பயிரும் முறிக்கும்பருவத்தைத் தன்னிடத்துடைய கரும்பும் கொய்யும்பருவத்தையுடைய தினையும் வளவிய புனத்தில்விளைந்த வரகும் வெள்ளுள்ளியும் மஞ்சளும் அழகியகொடியையுடைய கவலையும் தலைதாழ்ந்த குலையையுடைய வாழையும் கமுகும் தெங்கும் மாவும் பலாவு மென்னுமிவை தனக்குச் சுற்றெங்கும் சூழப்பட்டு ஓங்கிய தென்னனுடைய சிறுமலையென்னும் பெயரையுடைய மலை விளங்கித்தோன்றும்; அம்மலையை வலப்பக்கத்துக்கொண்டு இடப்பக்கத்து நெறியிற்சென்று மதுரையிற்புகுமினென்றானென்க.

* உலறுதல் - தலைமுளிதல். உழிஞ்சில் - உன்னமுமாம். புல் - புறக்காழ். வரிமரற்றிரங்கியவென்பதற்கு விலங்கு சுவைத்தலால் திரங்கியவென்றுமாம்; †"மரையா மரல்கவர" என்றாராகலின். எயினர் - மறவர். அறைக்கண் - வரைந்தகண்ணுமாம். பூந்தினை - பொலிவினையுடையதினை. காயம் - வெள்ளுள்ளி. சிறுமலை - பெயர். அகன்பதி - மூதூர்.

அஎ - கூஉ. அவ்வழிப் படரீ ராயி னிடத்துச்
செல்வழிப் பண்ணிற் சிறைவண் டரற்றுந்
தடந்தாழ் வயலொடு தண்பூங் காவொடு
கடம்பல கிடந்த காடுடன் கழிந்து
திருமால் குன்றத்துச் செல்குவி ராயிற்
பெருமால் கெடுக்கும் பிலமுண்டு

இ - ள். அங்ஙனமாகிய வலப்பக்கத்துநெறியைப் போகிராயின் இடப்பக்கத்துச் சிறையையுடையவண்டுகள் செவ்வழியாழ்ப்பண்ணினைப்பாடும் தாழ்ந்த தடத்தோடும் தாழ்ந்தவயலோடும் குளிர்ந்தபூங்காவினோடும் அருஞ்சுரங்கள் பலவும் இடைக்கிடந்த காட்டுநெறியையுங்கழிந்து திருமால்குன்றத்துச் செல்லக்கடவீராயின், அவ்விடத்தே மிக்க மயக்கத்தைக்கெடுக்கும் பிலத்துநெறியுண்டென்றானென்க.

திருமால்குன்றம் - அழகர்திருமலை.

கூஉ. ஆங்கு—இ - ள். அப்பிலத்துக்குள்ளே,

கூங - கூஎ. விண்ணோ ரேத்தும் வியத்தகு மரபிற்
புண்ணிய சரவணம் பவகா ரணியோ
டிட்ட சித்தி யெனும்பெயர் போகி
விட்டு நீங்கா விளங்கிய பொய்கை
முட்டாச் சிறப்பின் மூன்றுள

இ - ள். தேவர்களாலேத்தப்படுதலில் யாவரும் வியக்கத்தகும் மரபினையுடைய புண்ணியசரவணம் பவகாரணி இட்டசித்தியென்னும்பெயர் எங்கும் பரக்கப்பட்டு இடையறாத சிறப்பினையுடையவாய்த் தம்மிற்சேர்ந்திருக்கின்ற மூன்றுபொய்கைகளுளவென்றானென்க.

கூஎ. ஆங்கு—இ - ள். அவற்றுள்,

கூஅ - கூகூ. புண்ணிய சரவணம் பொருந்துவி ராயின்
விண்ணவர் கோமான் விழுநூ லெய்துவிர்

இ - ள். புண்ணியசரவணமென்னுநின்ற பொய்கையின் ஆடுவிராயின் இந்திரனாற்செய்யப்பட்ட ஐந்திரவியாகரணமென்னும் இலக்கணத்தை உணர்வீரென்றானென்க.

---

* அலறுதலெனவும் பிரதிபேதமுண்டு.

† கலித்தொகை, முதலாவது பாலை, ரு.

இது நினைவின்றிப் பெறும்பேறு. பொருந்துதல் - ஆடுதல். எய்துதல் - உணர்தல்.

கOO - கOக. பவகா ரணிபடிந் தாடுவி ராயிற்
பவகா ரணத்திறற் பழம்பிறப் பெய்துவிர்

இ - ள். அதுவன்றிப் பவகாரணியென்னும் பொய்கைக்கண் ஆடுவீராயின் இப்பிறப்பிற்குக் காரணமாகிய பழம்பிறப்பையுணர்வீரென்றுனென்க.

முன்னும்பின்னுமாகிய இருபிறப்பையும் உய்த்துணர்தற்குச் காரணமாகிய இப்பிறப்பிலே எப்பிறப்பையும் எய்தவுணர்வீரென்றுனெனினுமமையும். இனிப் பவமென்பதனை விகாரமாக்கிப் பாவத்தான்வரும்பிறப்புக்களையெனவுமாம்.

கOஉ - கOரு. இட்ட சித்தி யெய்துவி ராயி
னிட்ட சித்தி யெய்துவிர் நீரே

இ - ள். அதுவன்றி இட்டசித்தியென்னும் பொய்கையின் ஆடுவீராயின் நீர் நினைத்தவெல்லாம் எய்துதலையுடையீரென்றுனென்க.

இனி எண்வகைச்சித்திகளையும் தவஞ்செய்து வருந்திப்பெறுமல் நினைத்துழிப் பெறுவீரென்றுனெனினுமமையும்.

கOச. ஆங்குப் பிலம்புக வேண்டுதி ராயின்

இ - ள். அங்ஙனமாகிய அப்பிலத்துக்கட்புகுதலை விரும்புவீராயினென்றுனென்க.

கOரு - கOஎ. ஓங்குயர் மலையத் துயர்ந்தோற் றொழுது
சிந்தையி லவன்றன் சேவடி வைத்து
வந்தனை மும்முறை மலைவலஞ் செய்தால்

இ - ள். மிகவுமுயர்ந்த அத்திருமலைக்கணுள்ள பெரியோன்சேவடிகளைக் கையாற்றொழுது மனத்தானினைந்து வாக்காற்றுதித்தலுடனே அம்மலையை மும்முறை வலஞ்செய்தாலென்க.

அத்து - சாரியை. வைத்தல் - நினைத்தல்=தியானம். வந்தனை - ஏண்டுத் துதித்தல். தொழுது வைத்து வந்தனையோடு வலஞ்செய்தாலென்க.

கOஅ - ககக. நிலம்பக வீழ்ந்த சிலம்பாற் றகன்றலைப்
பொலங்கொடி மின்னிற் புயலைங் கூந்தற்
கடிமல ரவிழ்ந்த கன்னிகா ரத்துத்
தொடிவளைத் தோளி யொருத்தி தோன்றி

இ - ள். பாதாளகங்கைக்கு மேலுள்ள நிலம் கூறுபடும்படி அறுத்துத் தாழ்ந்த *சிலம்பாறென்னும் அகற்சியையுடைய ஆற்றினது கரைக்கண்ணதாகிய விளக்கத்தையுடைய முகைகளவிழ்ந்த மலரையுடையதோர் கோங்கினிழற்கண்ணே ஓர் பொற்கொடிபோலவும் மின்போலவும் புயல்போலும் ஐவகைக்கூந்தலையும் வளைந்த தொடிபுனைந்த தோளினையுமுடையாளொருத்தி தோன்றியென்க.

---

* சிலம்பாற்றினை நூபுரகங்கையென்பர்.

சிலம்பாறு - அவ்வியாற்றின்பெயர். தலை - இடம். இன் - உவமவுருபு. கன்னிகாரம் - கோங்கு. தொடி - வளைவு. ஒருத்தி - ஓரியக்கி.

ககஉ-ககஎ. இம்மைக் கின்பமு மறுமைக் கின்பமு
மிம்மையு மறுமையு மிரண்டு மின்றியோர்
செம்மையி னிற்பதுஞ் செப்புமி னீயிரிவ்
வரைத்தாள் வாழ்வேன் வரோத்தமை யென்பே
னுரைத்தார்க் குரியே னுரைத்தி ராயிற்
றிருத்தக் கீர்க்குத் திறந்தேன் கதவெனும்

இ - ள். அங்ஙனம் தோன்றினவள் இப்பிறப்பிற்கின்பமும் மறுபிறப்பிற்கின்பமும் இவையிரண்டுமொழிந்து எக்காலத்தும் ஒன்றாந்தன்மையாய்க் கோட்டமின்றி அழிவறநிற்குமின்பமுமாகியபொருள்கள் யாவை? அவற்றை நீயிருரைமின்; யான் இத்*தாள்வரைக்கண்ணே வாழ்வேன்; வரோத்தமையென்று கூறப்படுவேன்; யான் வினவிய இவற்றை உரைத்தாருளராயின், அவர்க்கு எத்தொழிற்குமுரியேன்; ஆதலின், திருத்தக்கீர், உரைத்திராயின், உமக்கு இப்பொழுதே இப்பிலவாயிற்கதவம் திறந்துதருவேனென்று சொல்லுமென்றாளென்க.

இம்மைக்கின்பம் - புகழ்; மறுமைக்கின்பம் - புண்ணியம்; செம்மையினிற்பது - மோக்கம். இனி, ஒருவர்க்கு இம்மைமறுமைகட்கு இன்பத்தைத்தந்து பூமியுள்ளளவும் நிற்பதுமாவது புகழ்; †"ஒன்றா வுலகத் .... ..தொன்றில்" எனவும், ‡"இவணிசை யுடையோர்க் கல்ல தவண, துயர்நிலை யுலகத் துறையு ளின்மை, விளங்கக் கேட்ட மாறுகொல்" எனவுங்கூறினாராகலின். கதவந்திறத்தற்குரியேனெனவுமாம். திறந்தேன் - காலமயக்கம்; வினைபொருட்கண்வந்தது.

* அடிமலையைப் பாதசைலமென்று வடநூலார் கூறுதலின், தாள்வரையென்றார். தாழ்வரையென்றும் பிரதிபேதமுண்டு.

† திருக்குறள், புகழ், ௩. "ஒன்றா வுலகத் துயர்ந்த புகழல்லாற், பொன்றாது நிற்பதொன் றில்."

‡ புறநானூறு, ௫0 :—"மாசற விசித்த வார்புறு வள்பின், மைபடு மருங்குல் பொலிய மஞ்ஞை, யொலிநெடும் பீலி யொண்பொறி மணித்தார், பொலங்குழை யுழிஞையொடு பொலியச் சூட்டிக், குருதி வேட்கை யுருகெழு முரச, மண்ணி வாரா வளவை யெண்ணெய், நுரைமுகந் தன்ன மென்பூஞ் சேக்கை, யறியா தேறிய வென்னைத் தெறுவர, விருபாற் படுக்குநின் வாளவா யொழித்ததை, யதூஉஞ் சாலுநற் றமிழ்முழு தறித, லதனொடு மமையா தணுக வந்துநின், மதனுடை முழவுத்தோ ளோச்சித் தண்ணென, வீசி யோயே வியலிடங் கமழ, விவணிசை யுடையோர்க் கல்ல தவண, துயர்நிலை யுலகத் துறையு ளின்மை, விளங்கக் கேட்ட மாறுகொல், வலம்படு குரிசினீ யீங்கிது செயலே." திணை - பாடாண்டிணை; துறை - இயன்மொழி. சேரமான் தகடூரெறிந்த பெருஞ்சேரலிரும்பொறை, முரசுகட்டிலறியாதேறிய மோசிகீரனைத் தவறுசெய்யாது அவன்றுயிலெழுந்துணையும் கவரிகொண்டுவீசியானை மோசிகீரனார்பாடியது. [இப்பாட்டே இந்திரவிழவூரெடுத்தகாதையில் முரசுகட்டிற்கு உதாரணமாக அடியார்க்குநல்லாராற்காட்டப் பட்டது; [கருஅ - ம் பக்கம், கஉ - ம் வரியிற்காண்க.]

கக௮ கஉரு. கதவந் திறந்தவள் காட்டிய நன்னெறிப்
புதவம் பலவுள போகிடை கழியன
வொட்டுப் புதவமொன் றுண்டத னும்பர்
வட்டிகைப் பூங்கொடி வந்து தோன்றி
யிறுதியி லின்ப மெனக்கிங் குரைத்தாற்
பெறுதிர் போலுநீர் பேணிய பொருளெனும்

இ - ள். அவ்வுரைப்பின், அவள் கதவைத்திறந்து இதுவென்றுகாட்டிய நல்ல வழியில்நீண்ட இடைகழிவாயில்கள் பலவுள; அவைகழிந்தால் இரட்டைக்கதவை யுடையதோர் வாயிலொன்றுண்டு; அதற்கு மேலாகச்சென்றால் வட்டிகையிலே யெழுதின பாவைபோல்வாளொருத்தி வெளிப்பட்டு ஈறில்லாத இன்பம் யாது? அதனை உரைத்திராயின் நீயிர் இம்மூப்பொருளினும் விரும்பியபொருளைப் பெறுவீ ரென்னுமென்றானென்க.

புதவம் - வாயில். போகு - நெடுமை. ஒட்டுப்புதவம் - இரட்டைக்கதவம். உம்பர் - மேல். பூங்கொடி - உவமப்பெயர். அன்றித் துவார்வட்டிகையிற் பூங் கொடி அங்ஙனங்கேட்குமெனவுமாம். இறுதியிலின்பம் - வீடு. பெறுதிர் - முன் னிலைப்பன்மை. போலி - ஒப்பில்போலி.

கஉச-கஉரு. உரையீ ராயினு முறுகண் செய்யே
னெடுவழிப் புறத்து நீக்குவ னும்மெனும்

இ - ள். வினயவள், யான்வினவியதனை நும்பேதைமையான் உரையீராயினும் நும்மை வருத்தஞ்செய்யேன்; நீர் போகக்கடவ நெடுநெறிக்கண்ணே நும்மைப் போக்குவலென்னுமென்றானென்க.

கஉசா-கஉஎ. உரைத்தா ருளரெனி னுரைத்த மூன்றின்
கரைப்படுத் தாங்குக் காட்டினள் பெயரும

இ - ள். அவள் அங்ஙனங்கேட்டபொருளை உரைத்தாருளராயின், முற்கூறப் பட்டபொய்கைமூன்றின்கரைக்கட்செலுத்தி அவை இவையென்றுகாட்டி மீளு மென்றானென்க.

ஆங்கு - அசை.

கஉ௮-கஙஉ. அருமறை மருங்கி னைந்தினு மெட்டினும்
வருமுறை யெழுத்தின் மந்திர மிரண்டு
மொருமுறை யாக வுளங்கொண் டோதி
வேண்டிய தொன்றின் விரும்பினி ராடிற்*
காண்டகு மரபின வல்ல மற்றவை

இ - ள். ஓதவும் உணரவுமரிய மறையிடத்தனவாகிய ஐந்தானும் எட்டானும் வருமுறைமைப்பட்ட எழுத்தினையுடைய *மந்திரமிரண்டையும் ஒருதன்மையாக

* மந்திரமிரண்டையும் முறையே பஞ்சாக்கரமென்றும், அட்டாக்கரமென் றுங்கூறுவர் அரும்பதவுரையாசிரியர்.

மனத்தானினைந்து வாக்காற்றுதித்து அவற்றுள் வேண்டியதியாதொன்று அதனில் விரும்பினீராயாடின், அவற்றின்பயனுயவை தவங்களைச்செய்தோர்க்கும் காணத் தரும் மரபினையுடையவல்லவென்றுனென்க.

இனி, அங்ஙனமாகிய பொய்கைகளின்பயனை விரும்பினீராய் ஒன்றிறுடின் அதன்பயனை நுகர்ந்தநெஞ்சம் பிறிதொன்றினையும் காதலியாதென்றுமாம். இன்னும் மற்றவை காண்டகுமரபினவல்லவென்பதற்கு இவையொழிந்ததீர்த்தங்கள் இவைபோலக் கைமேற் காணத்தரும் மரபினையுடையவல்லவெனினுமமையும்.

கரு௲-கரு௮. மற்றவை நினையாது மலைமிசை நின்றோன்
பொற்றா மரைத்தா ளுள்ளம் பொருந்துமி
னுள்ளம் பொருந்துவி ராயின் மற்றவன்
புள்ளணி நீள்கொடி புணர்நிலை தோன்றுந்
தோன்றிய பின்னவன் றுணைமலர்த் தாளிணை
யேன்று துயர் கெடுக்கும்

இ - ள். அங்ஙனமாகிய பொய்கைகளின்பயனை விரும்பீராயின், அவற்றை நினையாதே அம்மலைமீதுநின்றோனுடைய பொலிவுபொருந்திய தாமரைமலர்போலும் தாள்களைநினைமின்கள்; அங்ஙனநினைப்பீராயின், அப்பொழுதே அவனது கருடபுள்ளெழுதிய கொடித்தண்டு பொருந்திநிற்குநிலையிடத்தைக் காண்பீர்; கண்டவளவிலே அவன்றிருவடிநிலை நும்மை எடுத்துக்கொண்டு பிறவித்துன்பத்தைக் கெடுக்குமென்றுனென்க.

நீயிர் ஆண்டுச்சென்று அதுகாண்பீரென்பான் தோன்றுமென்றான். கெடுக்கும் - முற்று.

கரு௮-கரு௯. இன்ப மெய்தி
மாண்புடை மரபின் மதுரைக் கேகுமின்

இ - ள். அங்ஙனம் அதுகாண்டலிற் பின்னர்ப் பரமபதத்திற்குச்சேறலுமெய் யென்று இன்பமெய்தி மாட்சிமைபொருந்திய மரபினையுடைய மதுரைக்குச் சென் மின்களென்றுனென்க.

கசO. காண்டகு பிலத்தின் காட்சி யீது

இ - ள். கண்கூடாகக் காணத்தகும் பிலத்தின்றன்மை இத்தன்மையாயிருக்குமென்றுனென்க.

கசO-கசரு. ஆங்
கந்நெறிப் படரீ ராயி னிடையது
செந்நெறி யாகுந் தேம்பொழி லுடுத்த
வூரிடை யிட்ட காடுபல கடந்தா
லூரிடை யுண்டோ ரரணூர்த் தெய்வ
நடுக்கஞ் சாலா நயத்திற் றோன்றி
யிடுக்கண் செய்யா தியங்குநர்த் தாங்கு
மடுத்தூ டன் கெடுக்கு மதுரைப் பெருவழி

நீணிலங் கடந்த நெடுமுடி யண்ண
லுடொழு தகையேன் போகுவல் யானெனெ

இ - ள். அத்தன்மையவாகிய இரண்டு பக்கவழிகளிற் போகிராயின், இடைப்பட்டநெறி செவ்வியநெறி; அதனிடத்து இனிய பொழில்சூழ்ந்த ஊரும் ஊர்களை இடையிட்ட பலகாடுங்கடந்தாற் கடத்தற்கரியதோர் மிக்கவழிக்கண் மிக்க துயரைத்தருவதோர் தெய்வமுண்டு; அத்தெய்வந்தோன்றி வழிப்போவாரை இடுக்கண் செய்யாது; செய்வதியாதெனின், நடுக்கஞ்சாலாநயத்தாலே போவார்போக்கைத் தடுக்கும்; அங்ஙனமாகிய அதனைத்தப்பின், அப்பெருவழி போவார்யாவர்க்கும் முகஞ்செய்துகிடக்கும், ஆதலால் நீயிருஞ்சென்மின்; யானும் நிலங்கடந்த நெடுமுடியண்ணலுள்களைத் தொழுதகையையுடையேனாகலிற் போகுவலென்னவென்க.

தாங்கும் - தடுக்கும். மடுத்துடன்கிடக்கும் - இம்மூன்றுவழியும் ஒருபடிப்பட முகஞ்செய்துகிடக்குமெனினுமமையும்.

கரு௦-கருக. மாமறை யோன்வாய் வழித்திறங் கேட்ட
காவுந்தி யையையோர் கட்டுரை சொல்லும்

இ - ள். அங்ஙனம்போகுவலென்ற முதுமறையோன்வாக்கால் வழியின்றிறங்களைக்கேட்ட கவுந்தியடிகள் ஓர்பொருள்பொதிந்தவுரையை உரைக்கும்; அஃதியாதெனின்,—

கருஉ-கஙஎ. நலம்புரி கொள்கை நான்மறை யாள
பிலம்புக வேண்டும் பெற்றியீங் கில்லை
கப்பத் திந்திரன் காட்டிய நூலின்
மெய்ப்பாட் டியற்கை விளங்கக் காணாய்
பிறந்த பிறப்பி னெய்திய வெல்லாம்
பிறந்த பிறப்பிற் காணா யோநீ
வாய்மையின் வழாது மன்னுயி ரோம்புநர்க்
கியாவது முண்டோ வெய்தா வரும்பொருள்
காமுறு தெய்வங் கண்டடி பணிய
நீபோ யாங்களு நீணெறிப் படர்குது
மென்றம் மறையோற் கிசைமொழி யுணர்த்திக்
குன்றாக் கொள்கைக் கோவலன் றன்னுட
னன்னைப் பகலோ னரும்பதிக் கங்கி

இ - ள். நல்லொழுக்கத்தைப்புரிந்த கோட்பாட்டையுடைய மறைவல்லவனே, தேவர்களினும்மேவத்து ஆயுக்கற்பத்தினை மிகவுடைய இந்திரன்மேற்றுவித்த வியாகரணத்தினை எம்முடைய அருககுமரனருளிச்செய்த பரமாகமங்களிற் காண்கின்றிலேயோ, அஃதுளதாக, நின் புண்ணியசரவணம்பொருந்துதல்வேண்டா; அஃதன்றி முற்பிறப்பிற்செய்தவற்றை இப்பிறப்பிற் காண்கின்றிலேயோ, ஆகலான் நின்பவகாரணி படியவேண்டா; அஃதன்றி வாய்மையும் கொல்லாமையுமென்னும் இரண்டினையும் வழுவாதோம்புவார்க்குக் கடைகூடாதிருக்கும்பொருள் யாவது

மில்லை; ஆகலின், நின் இட்டசித்தியெய்துதல்வேண்டா; இவை இங்ஙனம்பெறு தலின், பிலம்புகவேண்டுமுறைமை எங்கட்கில்லைகாண்; நீ காமுற்றுவந்ததெய்வத் தைச் சென்று கண்டு அடிபணிதற்குப் போவாயாக; யாங்களும் எங்கட்கு ஏற்ற நெறியே செல்வோமென்று அந்தமறையோனுக்குப் பொருந்துவனவாகிய மொழி களையுணர்த்திக் குன்றாத ஒழுக்கத்தினையுடைய கோவலனுடனே அற்றைநாள் தங்குதற்கரியதோர் பதியிற்றங்கியென்க.

நூலம்புரிகொள்கை நான்மறையாளா - இகழ்ச்சி. கற்பமென்பதனைப் பிராகிருதத் தாற் கப்பமென்றார். தேவாகளிடைச்சென்று கற்பிக்குமிந்திரனென்றுமாம். மெய்ப் பாட்டியற்கை - பரமாகமம். அதில் ஐந்திரவியாகரணங்காணலாம். நூலினை யென்னுமுருபு தொக்கது. இந்தப்பிறப்பில்நுகர்வன முற்பிறப்பிற்புரிந்த வினைப் பயனென்பது கருத்து. 'வாய்மை...பொருள்.'— *"யாமெய்யா ... ...பிற" என வும், †"கொல்லான் ... ... தொழும்" எனவும் உட்கொண்டவாறெனக்கொள்க. இனிக் காமுறுதெய்வம் - காமமுறுந்தெய்வம்; எனவே காமக் குரோதாதிகளெல் லாமுடைய தெய்வமென்பதூஉமாயிற்று; கண்டு - கண்டுவைத்துமென்க.

கசுரு-கஎ0. பின்றையு மவ்வழிப் பெயர்ந்துசெல் வழிநாட்
கருந்தடங் கண்ணியுங் கவுந்தி யடிகளும்
வருந்துசெல் வருத்தத்து வழிமருங் கிருப்ப
விடைநெறிக் கிடந்த வியவுங்கொண் மருங்கிற்
புடைநெறிப் போயோர் பொய்கையிற் சென்று
நீர்நசை வேட்கையி னெடுந்துறை நிற்ப

இ - ள். முன்னாட்போலப் பின்பும் தங்கி அப்பதியினின்றும் பெயர்ந்துசென் மற்றைநாட் கரிய பெரிய கண்ணையுடையாளும் கவுந்தியடிகளும் வழிநடை வருத்தத்தினாலே வழிப்பக்கத்தேயிராநிற்க, முற்கூறிய இடைநெறிக்கிடந்த செல வைக்கொண்ட பக்கநெறியைக் கடந்துபோய் ஓர்பொய்கைக் கரையிற்சென்று நீருண்டல்விரும்பிய வேட்கையோடே கோவலன் ஒருபெரிய துறையிடத்தே நின்றானாகவென்க.

பின்றை - பின்னை. வழிநாள் - மற்றைநாள். வருந்து - வழி. இடைநெறி - நெறியிடையென்றுமாறினுமமையும். இயவு - செலவு. நீர்நசைவேட்கை - நீர் மேன்மிகவிருப்பம். இது கூறவே பாலைத்திணையின்றன்மைச்சிறப்புமாயிற்று.

கஎக-கஎரு. கானுறை தெய்வங் காதலிற் சென்று
நயந்த காதலி னல்குவ னிவளென
வயந்த மாலை வடிவிற் றோன்றிக்
கொடிநடுக் குற்றது போல வாங்கவ
னடிமுதல் வீழ்ந்தாங் கருங்கணீ ருகுத்து

இ - ள். அம்மறையோன்கூறிய ஆரணத்தெய்வமாகிய வனதெய்வம் தனது காதன்மிகுதியாற் சென்று கூடக்கருதி மாதவிமேல் நயந்தகாதலால் நம்மேல்

* திருக்குறள், வாய்மை, கப. † திருக்குறள், புலான்மறுத்தல், க0.

இவன் அன்புறுவனென்றெண்ணி அவடோழியாகிய வசந்தமாலையது வடிவைக் கொண்டு வந்து வெளிப்பட்டு ஒருகொடி காற்ருல் நடுக்கமுற்றதென்னும்படி அவனுடைய தாளிணைக்கண்ணேவீழ்ந்து பொய்க்கண்ணீரையுகுத்தென்க.

அருங்கண்ணீர் - அன்பின்மையின் உகுத்தமை தோன்ற நின்றது. சென்று தோன்றி வீழ்ந்து உகுத்தென்க.

கஎரு-கஎகூ. வாச மாலையி னெழுதிய மாற்றந்
தீதிலேன் பிழைமொழி செப்பினை யாதலிற்
கோவலன் செய்தான் கொடுமையென் றென்முன்
மாதவி மயங்கி வான்றுய ருற்று

இ - ள். இனி மாதவிகூற்ருகக் கொண்டுகூறுகின்றவள், வாசத்தையுடைய மாலையினெழுதிய ஓலைப்பாசுரத்தில் தவறுடையேனல்லேன், நீகூறிய மாற்றங்களிற் சிலதவறுண்டுபோலும்; அதனானன்றே கோவலன் எனக்குக்கொடுமை செய்தானென்று என்முன்னே மாதவி மயங்கிவீழ்ந்து மிக்கதுயாமுற்றென்க.

கஅ0-ககூக. மேலோ ராயினு நூலோ ராயினும்
பால்வகை தெரிந்த பகுதியோ ராயினும்
பிணியெனக் கொண்டு பிறக்கிட் டொழியுங்
கணிகையர் வாழ்க்கை கடையே போன்மெனச்
செவ்வரி யொழுகிய செழுங்கடை மழைக்கண்
வெண்முத் துதிர்த்து வெண்ணிலாத் திகழுந்
தண்முத் தொருகாழ் தன்கையாற் பரிந்து
துனியுற் றென்னையுந் துறந்தன ளாதலின்
மதுரை மூதூர் மாநகர்ப் போந்த
ததிர்வழிப் பட்டோ ரெனக்காங் குரைப்பச்
சாத்தொடு போந்து தனித்துய ருழந்தேன்
பாத்தரும் பண்பநின் பணிமொழி யாதென

இ - ள். முனிவரும் கற்ருேரும் கல்லாது நன்மைத்தன்மையறிவோரும் இது நெஞ்சையொறுக்கும்பிணியென்று உட்கொண்டு முகம்பாராது விடடுநீங்கப்பட்ட இப்பொதுமகளிருடைய செய்தொழில் கடையானதொழிலென்று சொல்லி, தனது சிவந்த அரிபரந்த வளவியகடையையுடைய கண்களால் வெண்முத்து, தைச்சொரிந்து விரும்பி முலைக்குப்பூட்டிய வெள்ளிய நிலாவிளங்கும் குளிர்ந், தனிமுத்துவடத்தையும்வெறுத்துப் பூட்டிய தன்கையாற்பரிந்து சிந்தித் துறவ வென்னையுந்துறந்தனள்; ஆதலான் நீங்கள் மதுரையென்னு மூதூராகிய நகை நோக்கிப்போந்ததனை வழியிலெதிர்ப்பட்டோர் எனக்குரைத்தலானே *வாணிக

* வாணிகச்சாத்து - வாணிகஞ்செய்வோர்திரள்; "சாத்தொடு வழங்குமு குடைப் பெருவழி" எனப்பெரும்பாணாற்றுப்படையிலும், "தாளி னூக்குபு சாத் னென்மனதவே" எனச் சிந்தாமணியிலும் கூறினர்.

சாத்தொடுபோந்து தனிமையால் யான்றுயருழந்தேன்; பகுத்தலரிய பண்பையுடையோனே, அதற்கு நீயருளிச்செய்யுமாற்றம் யாதென்றுகேட்பவென்க.

பிறக்கிடுதல் - பின்னிடுதலே; ஆவது முகம்பாராமை. வாழ்க்கை - பொய்த்தொழில். ஏகாரம் - தேற்றம். போன்ம் - போலும். *"செய்யு ளிறுதிப் போலிமொழிவயி, னகார மகார மீரொற் றாகும்" என்பதனாற்கொள்க. மேலோர் - முனிவர். நூலோர் - கற்றோர். பால்வகைதெரிந்தபகுதியோர் - மதிநுட்பமுடையோர்.

கசுக-உ00. மயக்குந் தெய்வமிவ் வன்காட் டுண்டென
வியத்தகு மறையோன் விளம்பின னாதலின்
வஞ்சம் பெயர்க்கு மந்திரத் தாலிவ்
வைஞ்சி லோதியை யறிகுவன் யானெனக்
கோவல னாவிற் கூறிய மந்திரம்
பாய்கலைப் பாவை மந்திர மாதலின்
வனசா ரிணியான் மயக்கஞ் செய்தேன்
புனமயிற் சாயற்கும் புண்ணிய முதல்விக்கு
மென்றிற முரையா தேகென் றேக

இ - ள். இங்ஙனம் இயக்கிநடிக்கக்கண்ட கோவலன் மதியை மயக்குவிக்குந் தெய்வம் இவ் வலிய காட்டினுண்டென்று அம்மறையோன் கூறினானாதலான் மந்திரத்தால் இந்த ஐவகைப்பட்ட சிலவாகிய ஓதியையுடையாளைத் தெய்வமகள் மானிடமகளென்பதறிவேனெனக்கருதி அவன் நாவிற்கூறியமந்திரம் அந்தரிமந்திரமாதலானே, அஞ்சி, யான் இவ்வனத்திற்றிரிகின்றவியக்கி, நின்றனை விரும்புதலான் மயக்கஞ்செய்யப் புக்கேன்; யான்செய்த இப்பிழையை நின்மனைவிக்கும் கவுந்தியடிகட்கும் மொழியாது போவாயாகவென்றுசொல்லித் தானும் தன்னிடமே போகவென்க.

தவத்தினும் கற்புச்சிறந்ததாகலின், முற்கூறினார். இவர் சாயலும் அறனுமுடையாரேனும் தவறுகண்டுழிக் கணத்தின் வெகுண்டு சவிப்பரென்றஞ்சி அவர்க்கு உரையாதொழியென்று இரந்தாளென்க.

உ0க-உ0உ. தாமரைப் பாசடைத் தண்ணீர் கொணர்ந்தாங்
கயர்வுறு மடந்தை யருந்துயர் தீர்த்து

இ - ள். அங்ஙனம் அவள்போனபின்பு தாமரைப்பொதியுள் தான் அந்தவிடத்திற் குளிர்ந்தநீரைக் கொண்டுசென்று நீர்வேட்கையான் வருத்தமுற்ற மடந்தையது வருத்தத்தைத் தீர்த்தென்க.

உ0ங-உ0சு. மீதுசெல் வெங்கதிர் வெம்மையிற் றொடங்கத்
தீதியல் கானஞ் செலவரி தென்று
கோவலன் றன்னொடுங் கொடுங்குழை மாதொடு
மாதவத் தாட்டியு மயங்கத ருழந்து

* தொல்காப்பியம், எழுத்ததிகாரம், மொழிமரபு, கஅ.

இ-ள். எழுகின்றகதிர் வெம்மைசெய்தலைத் தொடங்குதலாலே பாலைத்தன்மைநிகழ்கின்ற இக்கானம் இனி வழிச்சேறற்கு அரிதென்று கோவலனுடனும் வளைந்த மகரக்குழையையுடைய மாதினுடனும் மா:தவத்தாட்டியும் வழிமயக்கத்தையுடைய பாலைநிலப்பரப்பின்கண்ணெனக.

தீதியல்கானம் - தீங்காலியன்றகானமுமாம்.

௨௦௭-௨௧௬. குரவமு மரவமுங் கோங்கமும் வேங்கையும்
விரவிய பூம்பொழில் விளங்கிய விருக்கை
யாரிடை யத்தத் தியங்குந ரல்லது
மாரி வளம்பெறா வில்லே ருழவர்
கூற்றுறழ் முன்பொடு கொடுவில் லேந்தி
வேற்றுப்புலம் போகிநல் வெற்றங் கொடுத்துக்
கழிபே ராண்மைக் கடன்பார்த் திருக்கும்
விழிநுதற் குமரி விண்ணோர் பாவை
மையறு சிறப்பின் வான நாடி
யையைதன் கோட்ட மடைந்தன ராங்கென.

இ-ள். குராவும் வெண்கடம்புங் கோங்கும் வேங்கையும் தம்மிற்றலைமணந்த பொழில்சூழ்ந்த இருப்பிடத்து அரியவழிகளின் இயங்குவார்கைப்பொருளாகிய வளத்தை விரும்பினல்லது மழைவளத்தைவிரும்பாத விற்றொழிலையே உழவுதொழிலாகவுடைய மறவர் கூற்றத்தையொத்த வலியோடே வில்லையேந்திப் பகைவர்முனையிடத்தேபுக, அவர்க்குவென்றியைக்கொடுத்து அதற்கு விலையாகிய மிக்க ஆண்மைத்தன்மையையுடைய அவிப்பலியைத் தான்பெறுதற்கு வழிபார்த்திருக்கும் நெற்றிக்கண்ணையுடையகுமரி, விண்ணோர்பரவும்பாவை, குற்றமற்ற சிறப்பினையுடைய சுவர்க்கநாட்டையுடையாளாகிய ஐயைகோட்டத்தைச் சென்றடைந்தார் அப்பொழுதேயென்க.

போகி - போக. இனிப் 'போகவெனத்திரியாது ஏந்திப் போகி வெற்றங் கொடுத்துப் பார்த்திருக்குமென்பதும்பொருள். அதற்கு உழவர்க்கென நான்கனுருபு விரிக்க. முன்பொடுவெற்றங்கொடுத்தென்க. மயங்கதரமுவத்து விளங்கிய இருக்கைக்கட் கோட்டமென்க; அஃது ஏந்திப் போகிக் கொடுத்து இருக்கும் குமரி பாவை நாடியாகிய ஐயைகோட்டமென்க. கழிபேராண்மைக்கடன் - தன்னைத்தானிடும்பலிக்கடன். விழிநுதல் - நுதல்விழியென்க.

இஃது, எல்லாவடியும் நேரடியால்முடிதலின், நிலைமண்டிலவாசிரியப்பா.

பருந்து நிழலுமென ... ...அடியார்க்குநல்லானென்பான்.
ஒருந்தமிழ் ... ...நிரம்பையர்காவலனே.
காற்றை ... ...சொல்வித்ததே.

காடுகாண்காதை முற்றிற்று.

பன்னிரண்டாவது

வேட்டுவவரி.

கடுங்கதிர் திருகலி னடுங்கஞ ரெய்தி
யாறுசெல் வருத்தத்துச் சீறடி சிவப்ப
நறும்பல் கூந்தல் குறும்பல வுயிர்த்தாங்
கையை கோட்டத் தெய்யா வொருசிறை
வருந்துநோய் தணிய விருந்தன ருப்பால்
வழங்குவிற் றடக்கை மறக்குடித் தாயத்துப்
பழங்கட னுற்ற முழங்குவாய்ச் சாலினி
தெய்வ முற்று மெய்ம்மயிர் நிறுத்துக்
கையெடுத் தோச்சிக் கானவர் வியப்ப
விடுமுள் வேலி யெயினர்கூட் டுண்ணு
நடுவூர் மன்றத் தடிபெயர்த் தாடிக்
கல்லென் பேரூர்க் கணநிரை சிறந்தன
வல்வி லெயினர் மன்றுபாழ் பட்டன
மறக்குடித் தாயத்து வழிவளஞ் சுரவா
தறக்குடி போலவிந் தடங்கின ரெயினருங்
கலையமர் செல்வி கடனுணி னல்லது
சிலையமர் வென்றி கொடுப்போ ளல்லண்
மட்டுண் வாழ்க்கை வேண்டுதி ராயிற்
கட்டுண் மாக்கள் கடந்தரு மெனவாங்
கிட்டுத் தலையெண்ணு மெயின ரல்லது
சுட்டுத் தலைபோகாத் தொல்குடிக் குமரியைச்
சிறுவெள் ளரவின் குருளைநாண் சுற்றிக்
குறுநெறிக் கூந்த னெடுமுடி கட்டி
யிளைசூழ் படப்பை யிழுக்கிய வேனத்து
வளைவெண் கோடு பறித்து மற்றது
முளைவெண் டிங்க ளென்னச் சாத்தி
மறங்கொள் வயப்புலி வாய்பிளந்து பெற்ற
மாலை வெண்பற் றாலிநிரை பூட்டி
வரியும் புள்ளியு மயங்கு வான்புறத்

துரிவை மேகலை யுடீஇப் பரிவொடு
கருவில் வாங்கிக் கையகத்துக் கொடுத்துத்
திரிதரு கோட்டுக் கலைமே லேற்றிப்
பாவையுங் கிளியுந் தூவி யஞ்சிறைக்
கானக் கோழியு நீனிற மஞ்ஞையும்
பந்துங் கழங்குந் தந்தனர் பரசி
வண்ணமுஞ் சுண்ணமுந் தண்ணறுஞ் சாந்தமும்
புழுக்கலு நோலையும் விழுக்குடை மடையும்
பூவும் புகையு மேவிய விரையு
மேவ லெயிற்றிய ரேந்தினர் பின்வர*
வாறெறி பறையுஞ் சூறைச் சின்னமுங்
கோடுங் குழலும் பீடுகெழு மணியுங்
கணங்கொண்டு துவைப்ப வணங்கு முன்னிறீஇ
விலைப்பலி யுண்ணு மலர்பலி பீடிகைக்
கலைப்பரி யூர்தியைக் கைதொழு தேத்தி
யிணைமலர்ச் சீறடி யினைந்தனள் வருந்திக்
கணவனோ டிருந்த மணமலி கூந்தலை
யிவளோ, கொங்கச் செல்வி குடமலை யாட்டி
தென்றமிழ்ப் பாவை செய்த தவக்கொழுந்
தொருமா மணியா யுலகிற் கோங்கிய
திருமா மணியெனத் தெய்வமுற் றுரைப்பப்
பேதுறவு மொழிந்தனண் மூதறி வாட்டியென்
றரும்பெறற் கணவன் பெரும்புறத் தொடுங்கி
விருந்தின் மூர லரும்பின ணிற்ப
மதியின் வெண்டோடு சூடுஞ் சென்னி
நுதல்கிழித்து விழித்த விமையா நாட்டத்துப்
பவள வாய்ச்சி தவளவா ணகைச்சி
நஞ்சுண்டு கறுத்த கண்டி வெஞ்சினத்
தரவுநாண் பூட்டி நெடுமலை வளைத்தோ
டுளையெயிற் றுரகக் கச்சுடை முலைச்சி
வளையுடைக் கையிற் சூல மேந்தி
கரியி னுரிவை போர்த்தணங் காகிய
வரியி னுரிவை மேகலை யாட்டி
சிலம்புங் கழலும் புலம்புஞ் சீறடி

---

* 'பின்வர' என்றதன்பின், "மலர்ப்பலிப் பீடிகை நிலைப்பலி செய்தாங்கு" என்று ஓரடி சிலபிரதிகளில் அதிகமாக எழுதப்பட்டுள்ளது.

வலம்படு கொற்றத்து வாய்வாட் கொற்றவை
யிரண்டுவே றுருவிற் றிரண்டதோ ளவுணன்
றலைமிசை நின்ற தையல் பலர்தொழு
மமரி குமரி கவுரி சமரி
சூலி நீலி மாலவற் கிளங்கிளை
யையை செய்யவள் வெய்யவாட் டடக்கைப்
பாய்கலைப் பாவை பைந்தொடிப் பாவை
யாய்கலைப் பாவை யருங்கலப் பாவை
தமர்தொழ வந்த குமரிக் கோலத்
தமரிளங் குமரியு மருளினள்
வரியுறு செய்கை வாய்ந்ததா லெனவே

*உரைப்பாட்டுமடை.

வேறு.

நாக நாறு நரந்தை நிரந்தன
ஆவு மாரமு மோங்கின வெங்கணுஞ்
சேவு மாவுஞ் செறிந்தன கண்ணுதல்
பாக மாளுடை யாள்பலி முன்றிலே

செம்பொன் வேங்கை சொரிந்தன சேயிதழ்க்
கொம்பர் நல்லில வங்கள் குவிந்தன
பொங்கர் வெண்பொரி சிந்தின புன்கிளந்
திங்கள் வாழ்சடை யாடிரு முன்றிலே

மரவ மாதிரி புன்னை மணங்கமழ்
குரவங் கோங்க மலர்ந்தன கொம்பர்மே
லரவ வண்டின மார்த்துட னியாழ்செயுந்
திருவ மாற்கிளை யாடிரு முன்றிலே

வேறு.

†கொற்றவை கொண்ட வணிகொண்டு நின்றவிப்
பொற்றொடி மாதர் தவமென்னை கொல்லோ
பொற்றொடி மாதர் பிறந்த குடிப்பிறந்த
விற்றொழில் வேடர் குலனே குலனும்

---

* பாட்டுமடையென்றும் பிரதிபேதமுண்டு.

† 'கொற்றவை' முதலியமூன்றும் ஆடுநர்ப்புகழ்தலென்று சில மூலப்பிரதியில் எழுதப்பட்டுள்ளன.

ஐயை திருவி னணிகொண்டு நின்றவிப்
பையர வல்கு றவமென்னை கொல்லோ
பையர வல்குல் பிறந்த குடிப்பிறந்த
வெய்வி லெயினர் குலனே குலனும்

பாய்கலைப் பாவை யணிகொண்டு நின்றவிவ்
வாய்தொடி நல்லா டவமென்னை கொல்லோ
வாய்தொடி நல்லாள் பிறந்த குடிப்பிறந்த
வேய்வி லெயினர் குலனே குலனும்

வேறு.

ஆனைத்தோல் போர்த்துப் புலியி னுரியுடுத்துக்
கானத் தெருமைக் கருந்தலைமே னின்றாயால்
வானோர் வணங்க மறைமேன் மறையாகி
ஞானக் கொழுந்தாய் நடுக்கின்றி யேநிற்பாய்

வரிவளைக்கை வாளேந்தி மாமயிடற் செற்றுக்
கரிய திரிகோட்டுக் கலைமிசைமே னின்றாயா
லரியரன்பூ மேலோ னகமலர்மேன் மன்னும்
விரிகதிரஞ் சோதி விளக்காகி யேநிற்பாய்

சங்கமுஞ் சக்கரமுந் தாமரைக்கை யேந்திச
செங்க ணரிமான் சினவிடைமே னின்றாயா
கங்கை முடிக்கணிந்த கண்ணுதலோன் பாகத்து
மங்கை யுருவாய் மறையேத்த வேநிற்பாய்

வேறு.

ஆங்குக்,
கொன்றையுந் துளவமுங் குழுமத் தொடுத்த
துன்று மலர்ப்பிணைய றோண்மே லிட்டாங்
கசுரர் வாட வமரர்க் காடிய
குமரிக் கோலத்துக் கூத்துள் படுமே

வேறு.

ஆய்பொன் னரிச்சிலம்புஞ் சூடகமு மேகலையு மார்ப்ப வார்ப்ப
மாயஞ்செய் வாளவுணர் வீழநங்கை மரக்கான்மேல் வாளமலை யாடுமே போலும்
மாயஞ்செய் வாளவுணர் வீழ நங்கை மரக்கான்மேல் வாளமலை யாடு மாயிற்
காயா மலர்மேனி யேத்தி வானோர் கைபெய் மலர்மாரி காட்டும் போலும்

உட்குடைச் சீறூ ரொருமகனா னிரைகொள்ள வுற்ற காலை
வெட்சி மலர்புனைய வெள்வா ளுழத்தியும் வேண்டும் போலும்

வெட்சி மலர்புனைய வெள்வா ளுழத்தியும் வேண்டின் வேற்றூர்க்
கட்சியுட் காரி கடிய குரலிசைத்துக் காட்டும் போலும்
கள்விலை யாட்டி மறுப்பப் பொறுமறவன் கைவில் லேந்திப்
புள்ளும் வழிப்படரப் புல்லார் நிரைக்ருதிப் போகும் போலும்
புள்ளும் வழிப்படரப் புல்லார் நிரைகருதிப் போகுங் காலைக் [லும்.
கொள்ளுங் கொடியெடுத்துக்கொற்றவையுங்கொடுமரமுன்செல்லும்போ

வேறு.

இளமா வெயிற்றி யிவைகாணின் னையர்
தலைநாளை வேட்டத்துத் தந்த நிரைகள்
கொல்லன் றுடியன் கொளைபுணர்சீர் வல்ல
நல்லியாழ்ப் பாணர்த முன்றி னிறைந்தன

முருந்தே ரிளநகை காணாய்நின் னையர்
கரந்தை யலறக் கவர்ந்த நிரைகள்
கள்விலை யாட்டிநல் வேய்தெரி கானவன்
புள்வாய்ப்புச் சொன்னகணி முன்றி னிறைந்தன

கயமலருண் கண்ணாய் காணாய் நின்னைய
ரயலூ ரலற வெறிந்தநல் லானிரைக
ணயனின் மொழியி னரைமுது தாடி
யெயின ரெயிற்றியர் முன்றி னிறைந்தன

துறைப்பாட்டுமடை.

வேறு.

சுடரொடு திரிதரு முனிவரு மமரரு
மிடர்கெட வருளுநி னிணையடி தொழுதே
மடல்வலி யெயினர்நி னடிதொடு கடனிது
மிடறுகு குருதிகொள் விறறரு விலையே

அணிமுடி யமரர்த மரசொடு பணிதரு
மணியுரு வினைநின மலரடி தொழுதேங்
கணநிரை பெறும்விற லெயினிடு கடனிது
நிணனுகு குருதிகொ ணிகரடு விலையே

துடியொடு சிறுபறை வயிரொடு துவைசெய
வெடிபட வருபவ ரெயினர்க ளரைபிரு
ளடுபுலி யனையவர் குமரிநி னடிதொடு
படுகட னிதுவுகு பலிமுக மடையே

வேறு.

வம்பலர் பல்கி வழியும் வளம்பட
வம்புண் வல்வி லெயினர்கட னுண்குவாய்

சங்கரி யந்தரி நீலி சடாமுடிச்
செங்க ணரவு பிறையுடன் சேர்த்துவாய்

தண்ணெண் ணுடியொடு தூங்கு மெறிதரு
கண்ணி லெயின ரிடுகட் டுண்குவாய
விண்ணோ ரமுதுண்டுஞ் சாவ வொருவரு
முண்ணாத நஞ்சுண் டிருந்தருள் செய்குவாய்

பொருள்கொண்டு புண்செயி னல்லதை யார்க்கு
மருளி லெயின ரிடுகட லுண்குவாய்
மருதி னடந்துநின் மாமன்செய் வஞ்ச
வுருளுஞ் சகட முதைத்தருள் செய்குவாய்

வேறு.

மறைமுது முதல்வன் பின்னர் மேய
பொறையுயர் பொதியிற் பொருப்பன் பிறர்நாட்டுக்
கட்சியுங் கரந்தையும் பாழ்பட
வெட்சி சூடுக விறல்வெய் யோனே

க. கடுங்கதிர் திருகலின்—இ - ள். அங்ஙனமடைந்தவர் வெங்கதிர் முறுகுதலாலே,

தண்கதிருமுண்டாதலின், வெங்கதிரென்பதுதோன்றக் கடுங்கதிரென்றார்.

க - ரு. நடுங்கஞ ரெய்தி
யாறுசெல் வருத்தத்துச் சீறடி சிவப்ப
நறும்பல் கூந்தல் குறும்பல வுயிர்த்தாங்
கையை கோட்டத் தெய்யா வொருசிறை
வருந்துநோய் தணிய விருந்தனர்

இ - ள். நறிய பலவகைக்கூந்தலையுடையாள், கடுங்கதிர் அங்ஙனமுறுகுதலின் வெம்மைவிளைக்கும் பாலைத்தன்மையையுடைய நெறியைச்செல்லுதலால் நடுங்குதற்குக்காரணமான அஞரெய்தி மெய்வருத்தத்தோடே அடிகள் கொப்புளங்கோடலின் வல்லாநடையோடும் பலகாலுயிர்த்தலின், மேற்செல்லாராய் நோய்தணிய அவ்விடத்துளதாகிய முற்கூறிய ஐயை கோட்டத்துப் பலரும்புகுந்தறியாததோர் பக்கத்தே புக்கிருந்தார்களாகவென்க.

ரு. உப்பால்—இ - ள். மேலே,

சு - எ. வழங்குவிற் றடக்கை மறக்குடித் தாயத்துப்
பழங்கட னுற்ற முழங்குவாய்ச் சாலினி

இ - ள். அம்பைவழங்கும் வில்லைக் கையிலேயுடைய மறவர்குடியிற்பிறந்த உரிமையையுடைய சாலினியானவள்,

பழங்கடன் - முன்புநேர்ந்தகடன். முழங்குவாய் - கொக்கரிப்பையுடைய வாய். சாலினி - தேவராட்டி.

௮ - கக. தெய்வ முற்று மெய்ம்மயிர் நிறுத்துக்
கையெடுத் தோச்சிக் கானவர் வியப்ப
விடுமுள் வேலி யெயினர்கூட் டுண்ணு
நடுவூர் மன்றத் தடிபெயர்த் தாடி

இ - ள். அச்சாலினி, தனதூர்நடுவாகிய மன்றின்கண்ணே தான் தெய்வத்தன்மையுற்று மெய்ம்மயிர்சிலிர்த்து மூரிநிமிர்த்தகைகளையும் ஒற்றையும் இரட்டையுமாக்கி அவிநயத்தோடேகூட்டித் தாளத்திற்கொப்ப அடிபெயர்த்துக் கானவர் வியப்ப ஆடியென்க.

கூட்டுண்ணுமெயினரூர் ; வேலியையுடைய ஊர்.

௧உ - கரு. கல்லென் பேரூர்க் கணநிரை சிறந்தன
வல்வி லெயினர் மன்றுபாழ் பட்டன

அங்ஙனம் ஆடியவள் கூறுவாள் :—

இ - ள். முன்புசொல்லிய நுங்கடன்கொடாமையின், வலியவில்லையுடைய யினர்மன்றுகள் இன்று பாழ்பட்டன ; பகைவருடைய ஊர்களில் திரண்டநிரைள் மிக்கன.

கல் - அநுகரணம். சிறத்தல் - மிகுதி. பட்டது பாடமாயின், ஒருமைப்ன்மைமயக்கமென்க.

கச - கடு. மறக்குடித் தாயத்து வழிவளஞ் சுரவா
தறக்குடி போலவிந் தடங்கின ரெயினரும்

இ - ள். அங்ஙனம் அவட்குக் கடன்கொடாமையின், இம்மறக்குடியில் தாயம்ற்றிவருகின்ற எயினரும் தமக்கு முறைமையாகிவருகின்ற ஆறெறி சூறைகோள் முதலியவற்றாலில்லையும் வளங்குன்றி அறக்குடிகளைப்போலச் சினங்றைந்து செருக்கடங்கிவிட்டார்கள் ;

இது முன்னிலைப்புறமொழி.

௧௬ - கஎ. கலையமர் செல்வி கடனுணி னல்லது
சிலையமர் வென்றி கொடுப்போ ளல்லள்

இ - ள். கலையாகிய ஊர்தியைப்பொருந்திய செல்வி தான்கொடுத்தவென்றிக்குலையாகிய உயிர்ப்பலியை உண்ணக்கொடுப்பினல்லது நுஞ்சிலைக்குப்பொருந்திய வன்றியைக் கொடுப்பாளொருத்தியல்லள் ;

௧௮ - கக. மட்டுண் வாழ்க்கை வேண்டுதி ராயிற்
கட்டுண் மாக்கள் கடந்தரு மெனவாங்கு

இ - ள். களவுகண்டுண்ணும் ஊணையுடையமாக்கள், நுஞ்சுற்றத்தினுள்ளார்வுண்டுசெருக்கும் இல்வாழ்க்கையை நீர் விரும்புவீராயின், செல்விக்குநேர்ந்தடனைக் கடிதிற் கொடுமின்களென்று சாலினி சொல்லவென்க.

தாருமென்பது தருமென விகாரமாகிக் கொடுமென்பதாயிற்று. ஆங்கு - அசை.

உ0 - உக. இட்டுத் தலையெண்ணு மெயின ரல்லது
சுட்டுத் தலைபோகாத் தொல்குடிக் குமரியை

இ - ள். தாஞ்சுட்டிய பகைஞர்தலையைத் தாமேயறுத்திட்டு எண்ணுமதல்லது பகைஞர் சுட்டியெண்ணுதல் அவரிடத்து முடிவுபோகாமைக்குக் காரணமாகிய எயினர் தொல்குடிக் குமரியையென்க.

இனித் தலைகள் அரிந்து வைக்கவைக்கப் பிறர் எண்ணப்படுமேதல்லது ஈமத்திற் சுடப்பட்டு அவம்போகாக் குடியென்றுமாம். இன்னும் அரசன்சுட்டிய மாற்றரசர் தலையைப் பிறரிடத்துப்போகவிடாவென்றுமாம். சுட்டு - குறிப்புமாம்.

உஉ - உசு. சிறுவெள் ளரவின் குருளைநாண் சுற்றி
குறுநெறிக் கூந்த னெடுமுடி கட்டி
யிளைசூழ் படப்பை யிழுக்கிய வேனத்து
வளைவெண் கோடு பறித்து மற்றது
முளைவெண் டிங்க ளென்னச் சாத்தி

இ - ள். அங்ஙனம் கேட்டவெயினர், தமது குடிப்பிறந்த குமரியுடைய குறிதாக நெறித்தகூந்தலைச் சடையாகக்கட்டி அம்முடியிலே சிறிய வெள்ளிய அரவினது குருளையாகப் பொன்ஞாணினை வளையக்கிடத்திக் காவற்காடுசூழ்ந்த தோட்டப் பயிரையழித்த ஏனத்தினது கோட்டைப்பறித்து அதனை இளைய வெள்ளிய பிறை யென்னும்படி சாத்தி,

வெள்ளரவென்றார், சாதிபற்றி. குருளையென்றார், அச்சடையிற்பிறந்தமை தோன்ற. சடைமுடி பாம்பாற்கட்டுதலான், நாண் பாம்பாயிற்றென்றுமாம். இளை - கட்டுவேலியுமாம்.

உஎ - ௩0. மறங்கொள் வயப்புலி வாய்பிளந்து பெற்ற
மாலை வெண்பற் றாலிநிரை பூட்டி
வரியும் புள்ளியு மயங்கு வான்புறத்
துரிவை மேகலை யுடீஇ

இ - ள். கடுங்கண்மையையுடைய வலியபுலியை வாயைக்கிழித்து உதிர்த்த பல்லொழுங்கை வெள்ளிய நிரைத்தாலியாகக் கட்டி, அதனது வரியும்புள்ளியும் தம்முள் மயங்குதலையுடைய உரிவையை மேலே மேகலையாகவுடுத்தி,

வான் - பெருமை. புலி ஆக்கொள்ளுமுயற்சியான் வாயங்காந்துவருதலின், வாய்பிளந்தென்றார்.

௩0 - ௩க. பரிவொடு
கருவில் வாங்கிக் கையகத்துக் கொடுத்து

இ - ள். வயிரவில்லை வருத்தத்தோடுவளைத்து அவள் கையகத்துக்கொடுத்து, பரிவு - அன்புமாம்.

௩உ. திரிதரு கோட்டுக் கலைமே லேற்றி

இ - ள். முறுக்குண்ட கோட்டையுடைய கலையின்மீதேயிருத்தி,
ஊரிற்றிரிதருமென்றுமாம்.

௩௩ - ௩௫. பாவையுங் கிளியுந் தூவி யஞ்சிறைக்
கானக் கோழியு நீனிற மஞ்ஞையும்
பந்துங் கழங்குந் தந்தனர் பரசி

இ - ள். பாவைமுதலியவற்றைக்கொண்டு சேவித்துத் துதித்தனராய்,

பாவை - மதனப்பாவைமுதலியன. தூவி - சூட்டு. நீனிறம் - நீலநிறம்.

௩௬ - ௩௯. வண்ணமுஞ் சுண்ணமுந் தண்ணறுஞ் சாந்தமும்
புழுக்கலு நோலையும் விழுக்குடை மடையும்
பூவும் புகையு மேவிய விரையு
மேவ லெயிற்றிய ரேந்தினர் பின்வர

இ - ள். வண்ணமுதல் விரையீறாயவற்றை ஏவல்செய்யுமெயிற்றியர் ஏந்தினராய்ப் பின்செல்ல,

வண்ணம் - தோள் முலைகளின் எழுதும்வண்ணம். புழுக்கல் - அவரைதுவரைமுதலியன. நோலை - எட்கசி. விழுக்குடைமடை - நிணச்சோறு.

௪௦ - ௪௨. ஆறெறி பறையுஞ் சூறைச் சின்னமுங்
கோடுங் குழலு மீர்கெழு மணியுங்
கணங்கொண் டிசைப்ப வணங்குமுன் னிறீஇ

இ - ள் வழிபறிக்குங்காற் கொட்டும் பறையும் சூறைகொள்ளுங்கால் ஊதுஞ் சின்னமும் துத்தரிக்கொம்பும் குழிக்குழலும் எறிமணியுமாகியவிவை தம்மிற்கூடி யொலிப்ப இவ்வனைத்தையும் அணங்கின்முன்னேநிறுத்தவென்க.

நிறீஇ - நிறுத்த.

௪௩ - ௪௪. விலைப்பலி யுண்ணு மலர்பலி பீடிகைக்
கலைப்பரி யூர்தியைக் கைதொழு தேத்தி

இ - ள். தான்கொடுத்த வென்றிக்கு விலையாகிய உயிர்ப்பலியையுண்ணும், விரிந்த பலிபீடத்தை முந்துறத்தொழுது பின்னர்ச் செலவையுடைய கலையாகிய ஊர்தியையுடையாளைக் கையாற்றொழுதேத்தியென்க.

மலர்தல் - விரிதல்.

௪௫ - ௫௦. இணைமலர்ச் சீறடி யிணைந்தனள் வருந்திக்
கணவனோ டிருந்த மணமலி கூந்தலை
யிவளோ, கொங்கச் செல்வி குடமலை யாட்டி
தென்றமிழ்ப் பாவை செய்த தவக்கொழுந்
தொருமா மணியா யுலகிற் கோங்கிய
திருமா மணியெனத் தெய்வமுற் றுரைப்ப

இ - ள். இணையான மலர்போலும் சிறிய அடிகளைந்தனளாய் வருந்தி அவ் வருத்தந்தீரக் கணவனுடனேயிருந்த கண்ணகியைநோக்கி, இங்கிருக்கின்றவிவள் கொங்கநாட்டினையாளுஞ்செல்வி; குடநாட்டினையாளுஞ்செல்வி; தென்றமிழ் நாட்டினையாளும்பாவை; இங்ஙனமாதற்கு முற்பவத்திற்செய்த தவத்தின்கண் முளைத்த கொழுந்துபோல்வாள்; இவ்வுலகிற்கு முழுமாணிக்கம்போன்று உயர்ச்சி

பெற்ற பெண்ணுருக்கொண்டதோர் திருமணியெனச் சாலினி தன் தெய்வத்தன்மையான் இங்ஙனம் இவளை மிகுத்துரைப்பவென்க.

கண்ணகி அன்னளாதலை, *'கொங்கிளங் கோசர்' என்பதுமுதலியவற்றானறிக.

௫௧ - ௫௩. பேதுறவு மொழிந்தனள் மூதறி வாட்டியென்
றரும்பெறற் கணவன் பெரும்புறத் தொடுங்கி
விருந்தின் மூரல் அரும்பினள் நிற்ப

இ - ள். இங்ஙனம் சாலினிபுகழ்ந்துகூறிய அதனைப் பொறாதகண்ணகி இம்மூதறிவாட்டி தெய்வமயக்கத்தாற் கூறினாளெனக்கருதி நாணினால் தன்கணவனது புறத்தே மறைந்து அவளறிவின்மையையிகழ்ந்த புதிய சிறுநகையோடுநிற்பவென்க.

௫௪ - ௫௫. மதியின்வெண் டோடு சூடுஞ் சென்னி
நுதல்கிழித்து விழித்த விமையா நாட்டத்து

இ - ள். மதியாகிய வெள்ளிய இதழைச்சூடும் சென்னியையும், நுதலைத்திறந்துவிழித்த இமையாதநாட்டத்தினையுமுடைய,

௫௬ - ௫௭. பவள வாய்ச்சி தவளவா ணகைச்சி
நஞ்சுண்டு கறுத்த கண்டி

இ - ள். பவளம்போற்சிவந்த வாயினையும் வெள்ளிய நகையினையும் கரிய கண்டத்தினையுமுடையாள்,

௫௭ - ௫௮ வெஞ்சினத்
தரவுநாண் பூட்டி நெடுமலை வளைத்தோள்

இ - ள். கடிய சினத்தையுடைய வாசுகியை நாணாகப்பூட்டி மேருவரையை வில்லாகவளைத்தோள்,

இவள் கிரியாசத்தியானமையிற் கூறினார்.

௫௯. துளையெயிற் றுரக்கச் கச்சுடை முலைச்சி

இ - ள். நஞ்சுறும் துளையெயிற்றையுடைய பாப்புக்கச்சாற்பிணித்த முலையையுடையாள்,

௬௦. வளையுடைக் கையிற் சூல மேந்தி

இ - ள். வளையணிந்த கையாலே சூலத்தையேந்தினாள்,

௬௧ - ௬௨. கரியி னுரிவை போர்த்தணங் காகிய
வரியி னுரிவை மேகலை யாட்டி

இ - ள். சிங்கத்தையுரித்து அதன்றோலை மேகலையாகவுடுத்துக் கரியையுரித்து அதன்றோலை †ஏகாசமாகவிட்டோள்,

அணங்காகிய அரி கரியினுரிவையை உடுத்துப் போர்த்தோளென்க. அணங்கு - வருத்தம்.

---

* ௬௧ - ம் பக்கத்திற்காண்க.

† ஏகாசம் - உத்தரீயம்.

சுரு - சுச. சிலம்புங் கழலும் புலம்புஞ் சீறடி
வலம்படு கொற்றத்து வாய்வாட் கொற்றவை

இ - ள். இடப்புறத்துச் சிலம்பும் வலப்புறத்து வீரக்கழலுமொலிக்கும் சிறிய அடிகளையுடைய மேலானவெற்றியையுடைய வாட்டொழில் வாய்ப்புப்பெற்ற கொற்றவை,

சுரு - சுசு. இரண்டுவே றுருவிற் றிரண்டதோ ளவுணன்
றலைமிசை நின்ற தையல்

இ - ள். உடலுக்குத்தலைவேறான வடிவினையும் திரண்டதோளினையுமுடைய *விக்கிரமாசுரன்றலையைத்துணித்து அதன்மீதேநின்றதையல்,

சுசு - சுஅ. பலர்தொழு
மமரி குமரி கவுரி சமரி
சூலி நீலி மாலவற் கிளங்கிளை

இ - ள் தேவரும் முனிவரும்வணங்கப்பெறும் அலங்கரித்தலில்லாதோள், அழியாதோள், கௌரநிறத்தையுடையோள், சமரைவல்லாள், சூலத்தையுடையோள், நீலநிறத்தையுடையோள், மாலானவனுக்குத் தங்கையாயுள்ளாள்,

கிளை - கிளியையொப்பாளெனவுமாம்.

சுகூ - எக. ஐயை செய்யவள் வெய்யவாட் டடக்கைப்
பாய்கலைப் பாவை பைந்தொடிப் பாவை
யாய்கலைப் பாவை யருங்கலப் பாவை

இ - ள். வெய்ய மழுவாளைக் கையிலேயுடைய சயமகள், திருமகள், பாயும் கலையையுடையபாவை, ஆயும் கலையையுடையபாவை, அழகிய தொடியையும் கலங்களையுமுடையபாவைபோல்வாள்,

எஉ - எச. தமர்தொழ வந்த குமரிக் கோலத்
தமரிளங் குமரியு மருளினள்
வரியுறு செய்கை வாய்ந்ததா லெனவே

இ - ள். மாலும் அயனும் தொழத்தோன்றிய கன்னிக்கோலத்தினையுடையாளாய்ப் பொருந்திய அக்குமரியும் இச்சாலினிகொண்டகோலம் வாய்ப்புடைத்தென்றருளினளென்க.

சாலினி உற்று நிறுத்து ஒச்சி வியப்ப ஆடி, பட்டன; சிறந்தன; அடங்கினர்; ஆதலிற் கடனுண்ணினல்லது கொடுப்போளல்லன்; கடன்முறுமென, குமரியைக் கட்டிச் சுற்றிச் சாத்திப் பூட்டி உடீஇக் கொடுத்து ஏற்றிப் பரசிப் பின்வரத் தூவைப்ப நிறுத்த, தானேத்திப் பின்னர்க் கூந்தலே, செல்வி, ஆட்டி, பாவை, கொழுந்து, மணியெனத் தெய்வமுற்றுரைப்ப, கண்ணுகி ஒடுங்கி நிற்ப, சென்னியையும் நாட்டத்தையுமுடைய வரியச்சி, நகைச்சி, கண்டி, ஞௌத்தோள், முலைச்சி, ஏந்தி,

* இவ்விடத்து மகிடாசுரனென்று எழுதுவர் அரும்பதவுரையாசிரியர்.

யாலே வாளையேந்திப் பெரிய மயிடாசுரனைச்செற்றுக் கரிய முறுக்குண்ட கொம்பை யுடைய கலையின்மீதே நிலைபெற்றாய்; ஆகையால் இஃது என்ன மாயமோவென்க.

சங்கமுஞ் சக்கரமுந் தாமரைக்கை யேந்திச்
செங்க ணரிமான் சினவிடைமே னின்றாயாற்
கங்கை முடிக்கணிந்த கண்ணுதலோன் பாகத்து
மங்கை யுருவாய் மறையேத்த வேநிற்பாய்

இ - ள். கங்கையைச் சடைமுடியின்மீதணிந்த இறைவனது இடப்பக்கத்திற் குரிய இறைவிகொண்டவுருவாய் மறைகள்போற்ற அவற்றிற்குந்தோன்றாமல் நிற் கின்றநீ சங்குசக்கரங்களைக் கையிலேந்திச் சிவந்தகண்ணையுடைய அரிமானாகிய சினவிடையின்மீதேநின்றாய்; ஆகையால் இஃது என்னமாயமோவென்க.

இவைமூன்றும் முன்னிலைப்பரவல்.

ஆங்கு—இ - ள். அவ்விடத்து,

கொன்றையுந் துளவமுங் குழுமத் தொடுத்த
துன்று மலர்ப்பிணைய றோண்மே லிட்டாங்
கசுரர் வாட வமரர்க் காடிய
குமரிக் கோலத்துக் கூத்துள் படுமே

இ - ள். கொன்றைமலரையும் துளபத்தையும் கலந்துதொடுத்த மலர்செறிந்த மாலையை உத்தரீயமாகவிட்டு அசுரர் போரின்கண்ணேவாடும்படி அமரர்போரின் கண்ணாடிய கூத்து ஆடுதற்கு ஈண்டு உள்படுமென்க.

இது வென்றிக்கூத்து.

ஆய்பொன் னரிச்சிலம்புஞ் சூடகமு மேகலையு மார்ப்ப வார்ப்ப
மாயஞ்செய் வாளவுணர் வீழ நங்கை மரக்கான்மேல் வாளமலை யாடும் போலு
மாயஞ்செய் வாளவுணர் வீழ நங்கை மரக்கான்மேல் வாளமலை யாடு மாயிற்
காயா மலர்மேனி யேத்தி வானோர் கைபெய் மலர்மாரி காட்டும் போலும்

இ - ள். அழகிய பொன்னாற்செய்த அரிபொருந்தியசிலம்பும் சூடகமும் மே கலையும் ஆர்ப்ப ஆர்ப்ப வஞ்சித்துப்பொரும் போரைவல்ல வாளவுணர் போர்சாயும் படி நங்கை மரக்கான்மேனின்று வாட்கூத்தை ஆடாநிற்கும்; அங்ஙனமாடுமிடத்து வானோர் இவளுடைய காயாமலர்போலுமேனியை ஏத்துகையாற் பொழியுமலர் மழையைக் கூத்துக் காட்டாதிராதென்க.

இது கூத்துள்படுதல்.

உட்குடைச் சீறூ ரொருமகன் ணிரைகொள்ள வுற்ற காலை
வெட்சி மலர்புனைய வெள்வா ளுழத்தியும் வேண்டும் போலும்
வெட்சி மலர்புனைய வெள்வா ளுழத்தியும் வேண்டின் வேற்றார்க்
கட்சியுட் காரி கடியகுரலிசைத்துக் காட்டும் போலும்

இ - ள். மாற்றார்க்கு உட்குதலைக்கொடுக்கும் சீறூரிடத்துத் தனக்கிணையில்லாதவீரன் நிரைகொள்ளத் தலைப்பட்டவிடத்து அவற்குப் போர்ப்பூவாகிய வெட்சிமலரைச்சூட்டுதற்கு வெள்ளிய வாளுழத்தியும் வேண்டும்; அங்ஙனம் அவளும் உடன்செல்லக்கருதியவழிப் பகைவரூர்சூழ்ந்த காட்டிடத்துள்ள காரியென்னும்புள் தனதுகடியகுரலாலே அவர்க்குவருங்கேட்டினை முன்னறிவித்துநிற்குமன்றேயென்க.

வாளுழத்தி - கொற்றவை. இது கொற்றவைநிலை. அஃதாவது *“ஆளிமணிக்கொடிப் பைங்கிளிப் பாய்கலைக், கூளி மலிபடைக் கொற்றவை - மீளி, யாண்முருங்க வாகோள் கருதி னடையார், முரண்முருங்கத் தான்முந் துறும்” எனவரும். இது வெட்சி.

கள்விலை யாட்டி மறுப்பப் பொருமறவன் கைவி லேந்திப்
புள்ளும் வழிப்படரப் புல்லார் நிரைகருதிப் போகும போலும்
புள்ளும் வழிப்படரப் புல்லார் நிரைகருதிப் போகுங்காலைக் [லும்
கொள்ளுய கொடியெடுத்துக் கொற்றவையுங் கொடுமரமுன் செல்லும போ

இ - ள். கள்விற்குமவள் இவன் பழங்கடன்கொடாமையிற் பின் கட்கொடாது மறுப்ப, அதுபொருதவீரன் அந்நிலையே வில்லைக்கையிலேந்திப் புண்ணிமித்தமும் தன்கருத்திற்கேற்பச்சேறலிற் பகைவர்நிரைகொள்ளுதலைக்கருதிப் போகுதலைச் செய்யும். அங்ஙனம் போங்கால் தான்கைக்கொண்ட ஆளிக்கொடியையுயர்த்துக் கொற்றவையும் வில்லின்முன்னே செல்லுமன்றேயென்க.

என்பது, †“அருஅ நிலைச்சாடி யாடுறு தேறன், மருஅன் ...த்தடங் ...நீங்கடைய கன்னி - பொருஅன், கடுங்கண் மறவன் கழல்புனைந்தான் காலைக், ...ற்றவைநிலைப் நேரார் நிரை” எனவரும். இது தன்னுறுதொழில். இதுவும் ...காற்றவை நிலையு பாற்படும்; என்னை? ‡“மறங்கடைக் கூட்டிய துடிநிலை சிறந்த, ... மத்திணைப் புறனே” என்பதனானென்க. இது வெட்சிப்புறன

§ நொமர வெயிற்றி யிவைகாணில் லையர்
தலைநாளை வேட்டத்துத் தந்த நிரைகள்
கொல்லன் றுடியன் கொளைபுணர்சீர் வல்ல
நல்லியாழ்ப் பாணர்த முன்றி னிறைந்தன

இ - ள். மெத்தையுடைய இளையவேட்டுவமகளே, ...ன்றுளில் நின் ஐயன் மார் கவர்ந்துகொணர்ந்தநிரைகள், வேல்வடிக்குங்கொல்ல...ும் துடிகொட்டும்புலையனும் பாடவும் புணர்க்கவும் அடைக்கவும்வல்ல யாழ்ப்பா...ணரும் என்னுமிவரது முன்றிலின்கணிறைந்தன; நீ இவற்றைக் காண்பா...க.

* புறப்பொருள் வெண்பாமாலை, முதலா...டலம், ௨௦.
† ” ...௨.
‡ தொல்காப்பியம், பொருளதிகாரம், ...லை, ௩ - ம் சூத்திர
§ தொல்காப்பியப் பொருளதிகாரத்து ...தாரணமாகக்காட்டுக் கூறப்பட்டுள்ள கொடை என்னுந்து...டினர் நச்சினார்க்கினியர்.

முருந்தே ரிளநகை காணாய்நின் னையர்
கரந்தை யலறக் கவர்ந்த நிரைகள்
•கள்விலை யாட்டிநல் வேய்தெரி கானவன்
புள்வாய்ப்புச் சொன்ன கணிமுன் றி னிறைந்தன

இ - ள். முருந்துபோலும் முற்றாதநகையையுடையாய், நின் ஐயன் ஞட் கரந்தையாரலறும்படி கைக்கொண்டுவந்த நிரைகள், கள்விற்குமவளு, வேய்த்தொழிலை ஆராயுமவனும் புண்ணிமித்தங்கூறுமவனும் என்றுசொல்லப் பட்ட இவர்கள் முன்றிலின்கணிறைந்தன ; நீ இவற்றைக் காணுயென்க.

கயமலருண் கண்ணாய் காணாய் நின்னைய
ரயலூ ரலற வெறிந்தநல் லானிரைக
ணயனின் மொழியி னரைமுது தாடி
யெயின ரெயிற்றியர் முன்றி னிறைந்தன

இ - ள். பெரிய மலர்போலும் கண்ணையுடையாய், நின் ஐயன்மார் அயலவ ரூர் அலறும்படி தலைநாளிற்கைக்கொண்டுபோந்த நல்ல ஆனிரைகள், நயமில்லாத மொழியையும் நரைத்து நீண்டதாடியையுமுடைய எயினரும் அங்ஙனமூத்த எயிற் றியருமாகிய இவர்கள் முன்றிலின்கணிறைந்தன ; இவற்றைக் காணுயென்க.

இவைமூன்றும் *கொடையென்னுந்துறை. கண்டார்கூற்று.

துறைப்பாட்டுமடை - துறைப்பாட்டுக்களை நடுவேமடுத்தல்.

சுடரொடு திரிதரு முனிவரு மமரரு
மி[..]ர்கெட வருளுநி னிணையடி தொழுதே
மட[..]ல்வலி யெயினர்நி னடிதொடு கடனிது
மிட[..]கு குருதிகொள் விறறரு விலையே

இ - ள். கதிர[வ]னுடையவெம்மை உயிர்களை வருத்தாமல் அதனைத்தாங்கி அவ னுடனே சுழன்று தி[ரி]தருதலைச்செய்யும் †தெய்வவிருடிகளும் தேவர்களும் ஆகிய

* கொடையென்னுந்துறையாவது தாங்கொண்டநிரையை இரவலர்க்கு வரையாதுகொடுத்து மனமகிழ்தல். கொடையென்பது : "ஈண்டிய நிரையொழி வின்றி, வேண்டி யோர்க்கு விரும்பீ சின்று :—அங்கட் கிளையன் றுடியன் விற லிபாண், வெங்கட்கு சும் விலையாகுஞ் - செங்கட், செருச்சிலையா மன்னர் செரு முனையிற் சீறி, வரிச்சி[..]ாற் றந்த வளம்" என்பது புறப்பொருள்வெண்பாமாலை.

† இத்தெய்வமுனி[..]ரவன்வெம்மை உயிர்களைவருத்தாவண்ணம் அத னைத் தாம் தாங்கி அ[..]ன்றாரென்பதை, "நிலமிசை வாழ்ந ரலமர நீரத் தெறுகதிர்க் [..]ங்கிக், காலுண வாகச் சுடரொடு கொட்கு மவிர்சடை முனிவ[..]றநாற்றின், ௬௧ - வது செய்யுளாலும், திருமுருகாற்றுப்பா[..]செலன மரபினையர்க் கேந்திய தொருகை" என்பதன் விசேட[..]ன்வெம்மையைப் பல்லுயிரும் பொறுத்த லாற்றாவென்றுகரு[..]டரொடுதிரிந்து அவ்வெம்மையைப்பொறுக் கின்றமுனிவர்' என[..]எழுதியதனாலும் உணர்க. [பத்துப்பாட்டு, உக - ம் பக்கம்.]

இ-ள். லாதவீரன் மலனைச்சூட செல்லக்கட கடியகுரல டோர்கெடும்படி அருள்செய்யும் நினதடியிணையைத் தொழுதேம்; கெ வலியையுமுடைய எயினர்பெறும் வெற்றிக்குவிலையாக நின்காடிட சூளுற்ற கடனாகிய மிடற்றினின்றுமிழும் குருதியாகியவிலையைச் செ ;வென்க.

அணிமுடி யமரர்தம் மரசொடு பணிதரு
மணியுரு வினைநின மலரடி தொழுதேம்
கணநிரை பெறும்விற லெயினிடு கடனிது
நிணனுகு குருதிகொ ணிகரடு விலையே

இ-ள். அழகிய முடியையுடைய அமரர் தம்மரசனோடுவந்து பணிதலைச் செய்யும் நீலமணிபோலும் உருவினையுடையாய், நின் மலரடியைத்தொழுதே நிரைத்திரளைப்பெறும் விறலையுடைய எயினர்கள் பகையையடுதற்குக்காரணமா விலையாக இடுங்கடனாகிய நிணத்தோடுகலந்து உகாநின்ற குருதிப்பலியாகிய லைக் கொள்ளுவாயாகவென்க.

துடியொடு சிறுபறை வயிரொடு துவைசெய
வெடிபட வருபவ ரெயினர்க ளரையிரு
ளடுபுலி யனையவர் குமரிநி னடிதொடு
படுகட னிதுவுகு பலிமுக மடையே

இ-ள். துடியுடனே சிறுபறையும் கொம்பும் வெடித்தலுண்டாகமுழ அரையிருளின் எயினர் இருப்பிடத்தினின்றுவருகின்றவர் கொல்லும்புலியனைய முன்றாளில் நின்னடியைத்தொட்டுச் சூளுற்ற கடனாகிய மிடற்றினின்றுஞ்செ கின்ற குருதியாகியபலியைக் கொள்ளுவாயாகவென்க.

இவைமூன்றும் அவிப்பலி. குருதிப்பலியென்பாருமுளர்; என்னை "சிலைவேற் காளைக்கு நாளையே கொற்றவை, கைச்சிலைப்பு நல்கும்யாங் கரணை கொன் - மிச்சில்கூர், வாளின்வாய்த் தீண்டாதவார்குருதி மெய்சாய்ப்பத், தாளி வாய் வீழ்த்தான் றலை" என வருமாதலின்.

வம்பலர் பல்கி வழியும் வளம்பட
வம்புடை வல்வி லெயினர்கட னுண்குவாய்
சங்கரி யந்தரி நீலி சடாமுடிச்
செங்க ணரவு பிறையுடன் சேர்த்துவாய்

இ-ள். சங்கரி, அந்தரி, நீலி, சடையாகிய முடிமீதே பாம்பைப் பிறை யோடேமுடித்தோய், வழிப்போவார்மிக்கு அவரை கலிந்துகொள்ளும் பொரு ளாகியவளம் வழிதோறுமுண்டாவதாக; அதற்கு விலையாக் இப்பலிக்கடனை உண்பாயாகவென்க.

துண்ணென் றுடியொடு துஞ்சூ ரெறிதரு
கண்ணகி லெயின ரிடுகட னுண்குவாய்
விண்ணோ ரமுதுண்டுஞ் சாவ வொருவரு
முண்ணாத நஞ்சுண் டிருந்தருள் செய்

இ - ள். தேவர்கள் அமுதத்தையுண்டுஞ்சாவ ஒருவருமுண்ணாத நஞ்சையுண்டும் சாவாதிருந்தருள்கின்ற நீ கேட்டார் திட்டென்றிடத் திடிகொட்டிப் பகைவர்தாஞ்சுதலுற்றபொழுதின் ஊர்க்கொலைசெய்யும் கண்ணோட்டமிலாதவர் நினக்கிடும் கடனுகியவிதனை உண்பாயாகவென்க.

பொருள்கொண்டு புண்செயி னல்லதை யார்க்கு
மருளில லெயினா ரிடுகட னுண்குவாய
மருதி னடந்துநின் மாமன்செய் வஞ்ச
வுருளுஞ் சகட முதைத்தருள் செய்குவாய

இ - ள். நின்மாமன்செய்த வஞ்சமாகிய மருதின்மீதேநடந்து அதனைச்சாய்த்து உருளுதலையுடைய சகடத்தையும் உதைத்தலைச்செய்யுநீ வழிப்போவார்பொருளைக் கொண்டு அவர்க்குப்புண்ணைக்கொடுப்பினல்லது அவர்மாட்டு அருளுதல் சிறிதுமில்லாத எயினரிடும் கடனுகியவிதனை உண்பாயாகவென்க.

இவைமூன்றும் பலிக்கொடை.

மறைமுது முதல்வன் பின்னோர் மேய
பொறையுயர் பொதியிற் பொருப்பன் பிறநாட்டுக்
கட்சியுங் கரந்தையும் பாழ்பட
வெட்சி சூடுக விறல்வெய் யோனே.

இ - ள். முதியமறையையுண்டாக்கிய பிரமன்பின்னேனுகிய குறுமுனி பொருந்திய சந்தனம் அகில்முதலிய மரங்களாற் சுமைமிக்குயர்ந்த பொதியிற்பொருப்பனுகிய வெற்றியைவிரும்பும்பாண்டியன் பகைவருடைய முனையிடமும் அவர்மீட்குந்தொழிலும் பாழ்படும்படி வெட்சியைச் சூடுவோனுக வென்க.

துறை' என முற்கூறியவதனால், கொற்றவைக்குப் பரவுக்கடம்பூண்டலும் கொள்ளப்படும்; என்னை? "வந்த நிரையி னிருப்பு மணியுட, னெந்தலை நின்றலயந்தருது - முந்துநீ, மற்றவை பெற்று வயவேந்தன் கோலோங்கக், கொற்றவை கொற்றங் கொடு."

இது பஃறாழிசைக் கொச்சகக்கலிப்பா.

பருந்து நிழலுமென ... ...அடியார்க்குநல்லாரென்பான்.
ஒருந்தமிழ் ... ...நிரம்பையர்காவலனே.
காம்மை ... ...சொல்லித்ததே.

வேட்டுவவரி முற்றிற்று.

ருவது

றாத்தகாதை.

னணி பெயர்ந்தபிற் பாடு
ணிய மு. ருந்தடி பொருந்திக்
கதிர் வேக காரிகை பொருஅள்
தில சிறடிட வெங் கானத்துக்
வ ளுளியமு ப கொடும்புற் றகழா
வரி வேயகைய மான்கண மறலா
ந நு மினாதேர் முதலையு
முருமு ந சார்தவர்க் குறுகண் செய்யா
செங்கோற் றென்னவர் காக்கு நாடென
வெயகலும் போகிய விசையோ பெரிதே
பகலொளி தன்னினும் பலவுயி ரோம்பு
நிலவொளி விளக்கி னிரிடை மருங்கி
னிரவிடைக் கழிதற் கேத மில்லெனக்
குரவரு தோர்ந்த கொள்கையி னமர்ந்து
கொடுங்கோல் வேந்தன் குடிகள் போலப்
படுங்கதி ரமயம் பார்த்திருந் தோர்க்குப்
பன்மீன் றானையொடு பாற்கதிர் பரப்பித்
தென்னவன் குலமுதற் செல்வன் றோன்றித்
தாரகைக் கோவையுஞ் சந்தின் குழம்புஞ்
சீரிள வனமுலை சேரா தொழியவுந்
தாதுசேர் கழுநீர்த் தண்பூம் பிணையல்
போதுசேர் பூங்குழற் பொருந்தா தொழியவும்
பைந்தளி ராரமொடு பல்பூங் குறுமுறி
செந்தளிர் மேனி சேரா தொழியவு
மலயத் தோங்கி மதுரையின் வளர்ந்து
புலவர் நாவிற் பொருந்திய தென்றலொடு
பானிலா வெண்கதிர் பாவைமேற் சொரிய
வேனிற் றிங்களும் *வேண்டுதி யென்றே

பார்மக ளயாவுயிர்த் ;
தாரிடை யுழந்த மாதரை
கொடுவரி மறுகுங் குடி
மிடிதரு முளியமு மினை
தொடிவளைச் செங்கை தே;
மறவுரை நீத்த மாசறு கே
யறவுரை கேட்டாங் காரிடை
வேனில்வீற் றிருந்த வேய்க..
கான வாரணங் கதிர்வர வியப்ப
வரிநவில் கொள்கை மறைநால் ...க்கத் துப்
புரிநூன் மார்ப ருறைபதிச் சே ... து
மாதவத் தாட்டியொடு காதலி தன்னையோர்
நீதுநீர் சிறப்பிற் சிறையகத் திருத்தி
யிடுமுள் வேலி நீங்கி யாங்கோர்
நெடுநெறி மருங்கி னீர்தலைப் படுவோன்
காதலி தன்னொடு கானகம் போந்ததங்
கூதலைக் குருகி னுயிர்த்தனன் கலங்கி
யுட்புலம் புறுதலி னுருவந் திரியாக்
கட்புல மயக்கத்துக் கௌசிகன் றெரியான்
கோவலன் பிரியக் கொடுந்துய ரெய்திய
மாமலர் நெடுங்கண் மாதவி போன்றிவ்
வருந்திறல் வேனிற் கலர்களோ டுடனே
வருந்தினை போலுநீ மாதவி யென்றோர்
பாசிலைக் குருகின் பந்தரிற் பொருந்திக்
கோசிக மாணி கூறக் கேட்டே
யாதுநீ கூறிய வுரையிது கேனெனத்
தீதிலன் கண்டே னெனச்சென் றெய்திக்
கோசிக மாணி கொள்கையி னுரைப்போ
னிருநிதிக் கிழவனும் பெருமனைக் *கிழத்தியு
மருமணி யிழந்த நாகம் போன்று
மின்னுயி ரிழந்த யாக்கை யென்னத்
துன்னிய சுற்றந் துயர்க்கட லிழந்தது
மேவ லாளர் யாங்கணுஞ் சென்று
கோவலற் றேடிக் கொணர்கெனப் பெயர்ந்ததும்
பெருமக னேவ லல்லது யாங்கணும்

* கிழாஅளெனவும் பாடம்.

மாசே தஞ்சமென் றருங்கா னடைந்த
வருந்திறல் பிரிந்த வயோத்தி போலப்
பெரும்பெயர் மூதூர் பெரும்பே துற்றதும்
வசந்த மாலைவாய் மாதவி கேட்டுப்
பசந்த மேனியள் படர்நோ யுற்று
நெடுநிலை மாடத் திடைநிலத் தாங்கோர்
படையமை சேக்கைப் பள்ளியுள் வீழ்ந்ததும்
வீழ்துய ருற்றோள் விழுமங் கேட்டுத்
தாழ்துய ரெய்தித் தான்சென் றிருந்தது
மிருந்துய ருற்றோ ளிணையடி தொழுதேன்
வருந்துயர் நீக்கென மலர்க்கையி னெழுதிக்
கண்மணி யனையாற்குக் காட்டுக வென்றே
மண்ணுடை முடங்கன் மாதவி யீத்தது
மீத்த வோலைகொண் டிடைநெறித் திரிந்து
தீத்திறம் புரிந்தோன் சென்ற தேயமும்
வழிமருங் கிருந்து மாசற வுணர்ந்தாங்
கழிவுடை யுள்ளத் தாரஞ ராட்டி
போதவிழ் புரிகுழற் பூங்கொடி நங்கை
மாதவி யோலை மலர்க்கையி னீட்ட
வுடனுறை காலத் துரைத்தநெய் வாசங்
குறுநெறிக் கூந்தன் மண்பொறி யுணர்த்திக்
காட்டிய தாதலிற் கைவிட லீயா
னேட்டகம் விரித்தாங் கெய்திய துணர்வோ
னடிகண் முன்னர் யானடி வீழ்ந்தேன்
வடியாக் கிளவி *மனக்கொள வேண்டும்
குரவர்பணி யன்றியுங் குலப்பிறப் பாட்டியோ
டிரவிடைக் கழிதற் கென்பிழைப் பறியாது
கையறு நெஞ்சங் கடியல் வேண்டும்
பொய்தீர் காட்சிப் புரையோய் போற்றி
யென்றவ ளெழுதிய விசைமொழி யுணர்ந்து
தன்றீ திலளெனத் தளர்ச்சி நீங்கி
யென்றீ தென்றே யெய்திய துணர்ந்தாங்
கெற்பயந் தோற்கிம் மண்ணுடை முடங்கல்
பொற்புடைத் தாகப் பொருளுரை பொருந்தி
மாசில் குரவர் மலரடி தொழுதேன்

* மனங்கொளலென்றும் பாடம்.

கோசிக மாணி காட்டெனக் கொடுத்து
நடுக்கங் களைந்தவர் நல்லகம் பொருந்திய
விடுக்கண் களைதற் கீண்டெனப் போக்கி
மாசில் கற்பின் மனைவியோ டிருந்த
வாசில் கொள்கை யறவிபா லணைந்தாங்
காடிய கொள்கை யந்தரி கோலம்
பாடும் பாணரிற் பாங்குறச் சேர்ந்து
செந்திறம் புரிந்த செங்கோட்டி யாழிற்
றந்திரி கரத்தொடு திவவு றுத்தியார்த்
தொற்றுறுப் புடைமையிற் பற்றுவழிச் சேர்த்திக்
குரன்முதல் கைக்கிளை யிறுவாய்க் கட்டி
வரன்முறை வந்த மூவகைத் தானத்துப
பாய்கலைப் பாவை பாடற் பாணி
யாசான் றிறத்தி னமைவரக் கேட்டுப்
பாடற் பாணி யளைஇ யவரொடு
கூடற் காவதங் கூறுமி னீரெனக்
காழகிற் சாந்தய கமழ்பூங் குங்கும
நாவிக் குழம்பு நலங்கொ டேய்வை
மான்மதச் சாந்த மணங்கமழ் தெய்வத்
தேமென் கொழுஞ்சே றாடி யாங்குத்
தாதுசேர் கழுநீர் சண்பகக் கோதையொடு
மாதவி மல்லிகை மனைவளர் முல்லைப்
போதுவிரி தொடையற் பூவலை பொருந்தி
யட்டிற புகையு மகலங் காடி
முட்டாக் கூவியர் மோதகப் புகையு
மைந்தரு மகளிரு மாடத் தெடுத்த
வந்திம் புகையு மாகுதிப் புகையும்
பல்வேறு பூம்புகை யளைஇ வெல்போர்
விளங்குபூண் மார்பிற் பாண்டியன் கோயிலி
னளந்துணர் வறியா வாருயிர் பிணிக்குங்
கலவைக் கூட்டங் காண்வரத் தோன்றிப்
லவர் செந்நாப் பொருந்திய நிவப்பிற்
ாதியிற் றென்றல் போலா தீங்கு
ாத் தென்றல் வந்தது காணீர்
ய்த் தன்றவன் றிருமலி மூதூர்
ழியினுந் தகைக்குந ரிலலெனா

முன்றாண் முறைமையி னிருந்தவ முதல்வியொடு
பின்னையு மல்லிடைப் பெயர்ந்தனர் பெயர்ந்தாங்
கருந்திறற் கடவு ளகன்பெருங் கோயிலும்
பெரும்பெயர் மன்னவன் பேரிசைக் கோயிலும்
பால்கெழு சிறப்பிற் பல்லியஞ் சிறந்த
காலை முரசக் கனைகுர லோதையு
நான்மறை யந்தணர் நவின்ற வோதையு
மாதவ ரோதி மலிந்த வோதையு
மீளா வென்றி வேந்தன் சிறப்பொடு
வாளோ ரெடுத்த நாளணி முழவமும்
போரிற் கொண்ட பொருகரி முழக்கமும்
வாரிக் கொண்ட வயக்கரி முழக்கமும்
பணைநிலைப் புரவி யாலு மோதையுங்
கிணைநிலைப் பொருநர் வைகறைப் பாணியுங்
கார்க்கட லொலியிற் கலிகெழு கூட
லார்ப்பொலி யெதிர்கொள வாரூர் நீங்கிக்
குரவமும் வகுளமுங் கோங்கமும் வேங்கையு
மரவமு நாகமுந் திலகமு மருதமுஞ்
சேடலுஞ் செருந்தியுஞ் செண்பக வோங்கலும்
பாடலந் தன்னொடு பன்மலர் விரிந்து
குருகுந் தளவமுங் கொழுங்கொடி முசுண்டையும்
விரிமலர் அதிரலும் வெண்கூ தாளமுங்
குடசமும் வெதிரமுங் கொழுங்கொடிப் பகன்றையும்
பிடவமு மயிலையும் பிணங்கரின் மணந்த
கொடுங்கரை மேகலைக் கோவை யாங்கணு
மடைந்துநீர் போகிய வகன்றேந் தல்குல்
வாலுகங் குவைஇய மலர்பூந் துருத்திப்
பால்புடைக் கொண்டு பன்மல ரோங்கி
யெதிரெதிர் விளங்கிய கதிரிள வனமுலை
கரைநின் றுதிர்த்த கவிரிதழ்ச் செவ்வா
யருவி முல்லை யணிநகை யாட்டி
விலங்குநிமிர்ந் தொழுகிய கருங்கய னெடுங்கண்
விலைமலர் நீங்கா வவிரறற் கூந்தல்
*உலகுபுரந் தூட்டு முயர்பே ரொழுக்கத்துப்
புலவர் நாவிற் பொருந்திய பூங்கொடி

* உலகுபுரிந்தென்றும் பாடம்.

வையை யென்ற பொய்யாக் குலக்கொடி
தையற் குறுவது தானறிந் தனள்போற்
புண்ணிய நறுமல ராடை போர்த்துக்
கண்ணிறை நெடுநீர் கரந்தன ளடக்கிப்
புனல்யாற் றன்றிது பூம்புனல் யாறென
வனநடை மாதரு மையனுந் தொழுது
பரிமுக வம்பியுங் கரிமுக வம்பியு
மரிமுக வம்பியு மருந்துறை யியக்கும்
பெருந்துறை மருங்கிற் பெயரா தாங்கண்
மாதவத் தாட்டியொடு மரப்புணை போகித்
தேமலர் நறும்பொழிற் றென்கரை யெய்தி
வானவ ருறையு மதுரை வலங்கொளத்
தானனி பெரிதுந் தகவுடைத் தென்றாங்
கருமிளை யுடுத்த வகழிசூழ் போகிக்
கருநெடுங் குவளையு மாம்பலுங் கமலமுந்
தையலுங் கணவனுந் தனித்துறு துயர
மைய மின்றி யறிந்தன போலப்
பண்ணீர் வண்டு பரிந்தினைந் தேங்கிக்
கண்ணீர் கொண்டு காலுற நடுங்கப்
போருழந் தெடுத்த வாரெயி னெடுங்கொடி
வாரலென் பனபோன் மறித்துக்கை காட்டப்
புள்ளணி கழனியும் பொழிலும் பொருந்தி
வெள்ளநீர்ப் பண்ணையும் விரிநீ ரேரியுங்
காய்க்குலைத் தெங்கும் வாழையுங் கமுகும்
வேய்த்திரட் பந்தரும் விளங்கிய விருக்கை
யறம்புரி மாந்த ரன்றிச் சேராப்
புறஞ்சிறை மூதூர்ப் புக்கனர் புரிந்தென.

க. பெண்ணணி கோலம் பெயர்ந்தபிற் பாடு

இ - ள். முற்கூறிய சாலினியாகிய பெண் அணிந்தகோலமும் கூத்தும் முடிந்தபின்னாகவென்க.

பிற்பாடு - ஒருசொல். கோலமெனவே கூத்தும் அடங்கிற்று.

உ. புண்ணிய முதல்வி திருந்தடி பொருந்தி

இ - ள். தவத்திற்கு முதல்வியாகிய கவுந்தியடிகளுடைய திருந்திய அடியைச் சென்றுசேர்ந்தென்க.

௩ - ௪. கடுங்கதிர் வேனிலிக் காரிகை பொறாஅள்
படிந்தில சீறடி பரல்வெங் கானத்து

இ - ள். இவ்வழகு நீர்மையையுடையாள் இந்தக் கடிய கதிரின்வெம்மையைத் தன் மெய்யிற்படப்பொருள்; அதுவுமன்றி இவள் சிற்றடியும் வெய்யபருக்கையை யுடைய இப்பாலைநெறியிற் படிந்திலவென்க.

உள்ளுடை கொப்புளித்தலிற் குஞ்சித்து நடந்தமைகூறினன்.

ரு - சு. கோள்வ லுளியமுங் கொடும்புற் றகழா
வாள்வரி வேங்கையு மான்கண மறலா

இ - ள். நேரிட்டாரைக் கைக்கொள்ளுதற்குவலிய கரடியும் தாம் அகழக் கடவபுற்றினையும் அகழா; ஒளிபொருந்திய வரியையுடைய புலியும் தாம் மாறு படக்கடவ மானினத்தோடு மாறுபடாவென்க.

பாம்புறைதலிற் கொடும்புற்றென்றார்.

எ - க0. அரவுஞ் சூரு மிரைதேர் முதலையு
முருமுஞ் சார்ந்தவர்க் குறுகண் செய்யா
செங்கோற் றென்னவர் காக்கு நாடென
வெங்கணு முமபோகிய விசையோ பெரிதே

இ - ள். முற்கூறியவையன்றி, இரைதேருமுதலையும் பாம்பும் சூரும் உருமும் ஆகிய இவை தம்மைநலிந்தவர்க்கு வருத்தஞ்செய்யத் தகுவனவாயினும் செய்யா; செங்கோன்மையையுடைய தென்னர் ஆணையாற்காக்கு நாடென்று திசையெங்கும் பரந்த இசை மிகப் பெரிதாகலானென்க.

இவற்றான், இவனுணையும் ஐவகைநிலத்திற்குரிமையுங்கூறினர். ஐவகைநில னென்பது எவற்றுற்பெறுதுமெனின்,—கானமென்பதனுல் முல்லையும், சூர் நாடி யென்பவற்றுற் குறிஞ்சியும், வேங்கையென்பதனுற் பாலையும், உருமுவென்பதனுல் மருதமும், முதலையென்பதனுல் நெய்தலும் பெறுதும். இவ்வகையான் இவனுட்டு இக்காலத்துவருத்துவது இவ்வெயிலொன்றுமேயென்பதாயிற்று.

கக - கரு. பகலொளி தன்னினும் பல்லுயி ரோம்பு
நிலவொளி விளக்கி னீளிடை மருங்கி
னிரவிடைக் கழிதற் கேத மில்லெனக்
குரவரு நேர்ந்த கொள்கையி னமர்ந்து

இ - ள். அங்ஙனம் வருத்தும் பகற்கதிர்விளக்கத்தினும் பலவுயிர்க்கும் அருள் செய்யும் இராக்கதிர்விளக்கத்தோடே நெடிய வழியிடையைக் கழிதற்கு வரும் ஏதப்பாடு ஒன்றுமில்லையென்று கோவலன்சொல்லக் கவுந்தியடிகளும் ஒக்கு மென்று உடன்பட்ட கோட்பாட்டோடேமேவியென்க.

கரு - கசு. கொடுங்கோல் வேந்தன் குடிகள் போலப்
படுங்கதி ரமயம் பார்த்திருந் தோர்க்கு

இ - ள். கொடுங்கோன்மையையுடையவேந்தன்குடிகள் அவன்போங்காலத்தையும் தண்ணளிவேந்தன் வருங்காலத்தையும் நோக்கியிருக்குமாறுபோல வெங்கதிர் படுமமயத்தையும் தண்கதிர் எழுமமயத்தையும் பார்த்திருந்த இவர்கட்கென்க.

௧௭ - ௧௮. பன்மீன் றானையொடு பாற்கதிர் பரப்பித்
தென்னவன் குலமுதற் செல்வன் றோன்றி

இ - ள். அத்தென்னவன்குலத்திற்கு முதல்வனாகிய திங்கட்செல்வன் பலவகைப்பட்ட மீன்றானையுடனே தண்ணளிப்பகுதியவாகிய கதிர்களைப்பரப்பித் தோன்றவென்க.

தோன்றி - தோன்ற. மீன்றானை - கயற்கொடித்தானையுமாம்.

௧௯ - ௨௯. தாரகைக் கோவையுஞ் சந்தின் குழம்புஞ்
சீரிள வனமுலை சேரா தொழியவுந்
தாதுசேர் கழுநீர்த் தண்பூம் பிணையல்
போதுசேர் பூங்குழற் பொருந்தா தொழியவும்
பைந்தளி ராரமொடு பல்பூங் குறுமுறி
செந்தளிர் மேனி சேரா தொழியவு
மலயத் தோங்கி மதுரையின் வளர்ந்து
புலவர் நாவிற் பொருந்திய தென்றலொடு
பானிலா வெண்கதிர் பாவைமேற் சொரிய
வேனிற் றிங்களும் வேண்டுதி யென்றே
பார்மக ளயாவுயிர்த் தடங்கிய பின்னா

வேண்டுதி - முன்னிலைவினை.

இ - ள். பாரமகள், பாவாய், முன்னாள் நின்கொழுநன் நின்னைப்பிரிந்த இளவேனிற்காலத்தில், வான்மீனொழுங்குபோன்ற முத்துவடமும் சந்தனக்குழம்பும் சீர்மைபொருந்திய அழகிய இளையமுலைகளைச் சேரப்பெறுவாய் ஒழியவும் அழகிய சந்தனத்தளிரோடே பலபூக்களின்சேர்க்கையும் சிவந்த தளிர்போலும் மேனியைச் சேரப்பெறுவாயொழியவும், பலவகைப்பூந்தாதும் கழுநீர்ப்பிணையலும் முல்லைமலர் பற்றறாத பூங்குழலிற் பொருந்தாவாயொழியவும், மலயத்தேமுளைத்து மதுரையிலேவளர்ந்து புலவர்நாவிலேபூத்து நிலைபெற்ற தென்றலோடே வெள்ளிய ஒளியையுடைய திங்களின்கதிர் நின்மெய்யிற் சொரிதலொழியவும்வேண்டி இப்பொழுது வேனிற்றிங்கள் இவ்வெண்கதிரை நின்மெய்யிற்சொரியவும் விரும்பியிருப்பையே; இராயெனச்சொல்லி வருந்தி நெட்டுயிர்ப்புக்கொண்டு அடங்கியபின்னரென்க.

ஏகாரம் - எதிர்மறை. சிலசொற்கள்வருவிக்க. இத்துணையும் இவள் புணர்ச்சியின்பம் பெறாமைநோக்கிப் பார்மகள் இரங்கிக்கூறினாள். என்னை புணர்ச்சியில்லாதவாறெனின், — மாதவியோடு புலந்துபோதுதலானும், மதுரைக்குச்சேறற்கு ஒருப்பட்ட நெஞ்சினனாதலானும், மேற் கவுந்தியடிகளுடன் வழிச்சேறலானும் யாண்டும் மெய்யுறன்மாத்திரமல்லது புணர்ச்சியில்லெனவுணர்க.

௩௰ - ௩௨. ஆரிடை யுழந்த மாதரை நோக்கிக்
கொடுவரி மறுகுங் குடிஞை கூப்பிடு
மிடிதரு முளியமு மினையா தேகென

இ - ள். கோவலன் அரியவழியிடைத் துயருழந்த கண்ணகியைநோக்கி, இவ்விரவில் நாஞ்செல்கின்றநெறியிடைப் புலிமறுகும்; பேராந்தை குழறும்; கரடி இடிக்கும்; இவற்றிற்குத் துணுக்கென்றது ஏதுவாயாகவென்றெனக.

மறுகும் - வாய்விடும்; குறுக்கிடுமெனினுமமையும். இடிப்பு - அதிர்ப்பு; உற் டட்ட டட்டெனப் பற்பறைகொட்டல்.

௩௩ - ௩௫. தொடிவளைச் செங்கை தோளிற் காட்டி
மறவுரை நீத்த மாசறு கேள்வி
யறவுரை கேட்டாங் காரிடை கழிந்து

இ - ள். அங்ஙனங்கூறியகோவலன் இவட்குக் கண்டுயில் மயங்குதலானும் குஞ்சித்துத் தளர்ந்துநடத்தலானும் வளைவையுடைய வளைபொருந்தியசெங்கைக்குத் தன்றோள் ஆதாரமாதலே அங்ஙனங்கூறிக்காட்டி இவள்மனத்துயரநீங்குதற்பொருட்டு மறவுரைகளினின்றுநீங்கிய மாசற்ற கேள்வியையுடையாள்கூறும் அறவுரைகளைக்கேட்டு அதனானே தொலைத்தற்கரிய வழியைத் தொலைத்தெனக.

தொடி - வளைவு; *"தொடிக்கட் பூவை" என்றாராகலின். கேள்வியென்றார், அதனையுடைய கவுந்தியடிகளை; ஆகுபெயர்.

௩௬ - ௩௭. வேனில்வீற் றிருந்த வேய்கரி கானத்துக்
கான வாரணங் கதிர்வர வியம்ப

இ - ள். வேனில் நிலைபெறுதலாலே வெந்துகரிந்துகிடக்கின்ற மூங்கிற்காட்டிலே காட்டுக்கோழிச்சேவல்கள் கதிரெழுச்சியை அறிவிக்கவெனக.

ஆனித்திங்கட் கடைநாளாகலின், வீற்றிருந்தவென்றார்.

௩௮ - ௩௯. வரிநவில் கொள்கை மறைநூல் வழுக்கத்துப்
புரிநூன் மார்ப ருறைபதிச் சேர்ந்து

இ - ள். நாவால் மறைநூல்நவிலாது வரிப்பாட்டைநவிலும் கோட்பாட்டையுடைய நூலணிமார்பருறைவதோர் பதியைச்சேர்ந்தெனக.

புக்கென்னாது சேர்ந்தென்றதனால், அந்தப்பார்ப்பார் இழுக்கியவொழுக்கமுடைமை தமது சாவகநோன்புக்கேலாமையின், ஊர்க்கயலதோர் நகரிற் கோயிற் பக்கத்திற் சேர்ந்தாரெனக.

௪௦ - ௪௩. மாதவத் தாட்டியொடு காதலி தன்னையோர்
தீதுதீர் சிறப்பிற் சிறையகத் திருத்தி
இரிடிமுள் வேலி நீங்கி யாங்கோர்
நெடுநெறி மருங்கி னீர்நிலைப் படுவோன்

இ - ள். அந்தப் புலரிக்காலத்தே கவுந்தியடிகளுடனே கண்ணகியையும் ஒரொதுக்கமாகிய நல்ல அடைப்பகத்தேவைத்து அவ்வேலியில் இடுமுள்ளோன் றைப்பிரித்து அதனைநீங்கிக் காலைக்கடன்கழித்தற்கு நீணெறிக்கண்ணதோர் நீர் நிலைக்கண் தலைப்படுகின்றவனென்க.

நெடுநெறி - பெருவழி.

* சிந்தாமணி, குணமாலையாரிலம்பகம், ௮௨.

௪௪ - ௪௭. காதலி தன்னொடு கானகம் போந்ததற்
கூதுலைக் குருகி னுயிர்த்தனன் கலங்கி
யுட்புலம் புறுதலி னுருவந் திரியாக்
கட்புல மயக்கத்துக் கௌசிகன் றெரியான்

இ - ள். அங்ஙனம் சென்றுநின்ற கோவலன், தன் காதலியோடு கானகத்தின் கட்போந்ததற்கு உலையினூதுங்குருத்திபோல நெட்டுயிர்த்து உள்வெதும்பிக் கலங்கித் தனிமையுற்று நிறம்வேறுபடுதலாற் கௌசிகன் கட்புலமயக்கத்தான் அறியானு யென்க.

உலைக்குருகு - வெளிப்படை.

௪அ - ௫௩. கோவலன் பிரியக் கொடுந்துய ரெய்திய
மாமலர் நெடுங்கண் மாதவி போன்றிவ்
வருந்திறல் வேனிற் கலர்களைந் துடனே
வருந்தினை போலுநீ மாதவி யென்றோர்
பாசிலைக் குருகின் பந்தரிற் பொருந்திக்
கோசிக மாணி கூறக் கேட்டே

இ - ள். அங்ஙனம் அவன் நிறம்வேறுபடுதலானும் தான் சேய்மைக்கணிற்றலானும் ஐயுற்று அவ்வையந்தீர்வான் கோவலன்பிரிவிற்காற்றாது காமத்தியால் துயரமுற்று அலமரப்பொருது அப்பொழுதேவருந்துகின்ற மாதவியைப்போன்று நீயும் இளவேனினீங்க அப்பொழுதே அதற்காற்றாது பொறுத்தற்கரிய வெம்மையையுடைய முதுவேனிற்காலத்துவெயிலால் துயரமுற்று அலமரப்பொருது வளைந்து அக்காலவணிமையோடேவருந்தினாய்; மாதவியென்னும் பெயர்வாசிக்கோவென்று ஓர்பசிய இலையையுடைய குருக்கத்திபடர்ந்தநிழலையுடைய இடத்திலே சென்றுநின்று அக்கோசிகனென்கிற மறையவன் கூறக்கேட்டென்க.

கோசிகன் - பந்திகோசிகன். பாசிலையென்றார், இளவேனிற்கட் செந்தளிராயது முதுவேனிற்கு முற்றிப் பாசிலையாயிற்றென்பதுதோன்ற.

௫௪ - ௫௫. யாதுநீ கூறிய வுரையீ திங்கெனத்
தீதிலன் கண்டே னெனச்சென் றெய்தி

இ - ள். இங்ஙனம் கோசிகன்கூறக்கேட்டகோவலன் நீ இங்குக்கூறிய இக்கூற்றிற்குப் பொருள்யாதெனஅசதியாட, இனி ஐயமுடையேனல்லேன், கோவலனெனவறிந்தேனென உட்கொண்டு சென்றுசேர்ந்தென்க.

௫௬. கோசிக மாணி கொள்கையி னுரைப்போன்

இ - ள். கோசிகன் தான்வந்த கருமக்கோட்பாட்டினைக் கூறுகின்றவன்,

௫௭ - ௫அ. இருநிதிக் கிழவனும் பெருமனைக் கிழத்தியு
மருமணி யிழந்த நாகம் போன்றதும்

இ - ள். இருநிதிக்கிழவனும் அவன்மனைக்கிழத்தியும் அரிய மணியையிழந்த நாகம்போல அழகும் ஒளியுமிழந்து ஒடுங்கியதும்,

௫௯ - ௬௦. இன்னுயி ரிழந்த யாக்கை யென்னத்
துன்னிய சுற்றந் துயர்க்கடல் வீழ்ந்ததும்

இ - ள். நெருங்கியகிளைஞர் இனியவுயிரையிழந்த யாக்கைபோலச் செயன் மாண்டு துயர்க்கடலிலேயழுந்துகின்றதும்,

இனி யாக்கையிழந்த இன்னுயிரெனமாறி வீடுபெறற்குரியவுயிர் இளமைக் காலத்தே யாக்கையையிழத்தலில் தவஞ்செய்யப்பெறாது பிறவிக்கடலகத்தழுந்து மாறுபோலவென்வுமாம்.

௬௧ - ௬௨. ஏவ லாளர் யாங்கணுஞ் சென்று
கோவலற் றேடிக் கொணர்கெனப் பெயர்ந்ததும்

இ - ள். இருநிதிக்கிழவன் தன்சிலதரை நோக்கி எத்திசைக்கண்ணுஞ்சென்று கோவலனைத்தேடிக் கொண்டுவருகவென்றானாக அவர் எத்திசைகளிலுஞ்சென்ற தும்,

போந்ததும் பாடமாயின், இத்திசையினும் சிலர்போந்ததுவுமென்க.

௬௩ - ௬௬. பெருமக னேவ லல்ல தி யாங்கணு
மரசே தஞ்சமென் றருங்கா னடைந்த
வருந்திறல் பிரிந்த வயோத்தி போலப்
பெரும்பெயர் மூதூர் பெரும்பே துற்றதும்

இ - ள். எத்துணைச் சிறுதொழிலாயினும் பெருமகனேவிய பணிவிடையைச் செய்தலே அரியபொருளாதலல்லது பணிவிடையன்றாயின் அரசாட்சி என்னும் எண்மைப்பொருட்டாமென்று கருதி அடைதற்கரிய வெங்கானிலே சென்றடைந்த இராமன் நீங்கப்பட்ட அயோத்தியின்கணுள்ளார் செயலற்று மயங்கினாற்போலப் பெரிய புகழையுடைய புகாரின்கணுள்ளார்யாவரும் மிகவும் அறிவுமயங்கியசெய்தி யும்,

பெருமகன் - தசரதன். தஞ்சம் - எண்மை. அருந்திறல் - இராமன; அன் மொழித்தொகையாகுபெயர். பேதுறவு - அறிவின்றிரிவு.

௬௭ - ௭௦. வசந்த மாலைவாய் மாதவி கேட்டுப்
பசந்த மேனியள் படர்நோ யுற்று
நெடுநிலை மாடத் திடைநிலத் தாங்கோர்
படையமை சேக்கைப் பள்ளியுள் வீழ்ந்ததும்

இ - ள். திருமுகத்தை மறுத்துக்கூறியமாற்றத்தை வசந்தமாலைவாய்க்கேட் டுப் பசந்தமேனியளாய் நினைவாகிய வருத்தமுற்று உயர்ந்த எழுநிலத்தையுடைய மாடத்து நாலாநிலத்து ஓர்படுக்கையமைந்த சேக்கையிடத்தே மாதவி மயங்கி வீழ்ந்தசெய்தியும்,

ஆங்கு - அசை. பள்ளி - இடம்.

௭௧ - ௭௨. வீழ்துய ருற்றோள் விழுமங் கேட்டுத்
தாழ்துய ரெய்தித் தான்சென் றிருந்ததும்

இ - ள். அங்ஙனம் விரகநோயுற்றவள் இதமைப்பையைக்கேட்டுச் செருக்கடங்கித் தாழ்ந்த துயரமெய்தித் தான் சென்றிருந்தசெய்தியும்,

வீழ்துயர் - விருப்பத்தான்வருந்துயர்.

௭௩ - ௭௬. இருந்துய ருற்றே னிணையடி தொழுதேன்
வருந்துயர் நீக்கென மலர்க்கையி னெழுதிக்
கண்மணி யனையாற்குக் காட்டுக வென்றே
மண்ணுடை முடங்கல் மாதவி யீத்ததும்

இ - ள். அங்ஙனம் மிக்கதுயரமுற்ற மாதவி, நின்னிணையடியைத்தொழுதேன், எனக்கு இங்ஙனம்வருந்துயரைத் தீர்ப்பாயாகெனச்சொல்லித் தன்கையாலெழுதி இவ்வோலையை என்கண்ணிற் கருமணிபோல்வானுக்குக் காட்டுவாயாகவென்று தன்கையிற்றந்தசெய்தியும்,

இது தன்மைக்கண் வந்தது.

௭௭ - ௭௮. ஈத்த வோலைகொண் டிடைநெறித் திரிந்து
தீத்திறம் புரிந்தோன் சென்ற தேயமும்

இ - ள். அங்ஙனந்தந்த ஓலையைக்கொண்டு இடைநெறியெங்கும் திரிந்து தேடியுங்காணுமற் றான்சென்றதேயங்களும்,

௭௯ - ௮௨. வழிமருங் கிருந்து மாசற வுரைத்தாங்
கழிவுடை யுள்ளத் தாரஞ ராட்டி
போதவிழ் புரிகுழற் பூங்கொடி நங்கை
மாதவி யோலை மலர்க்கையி னீட்ட

இ - ள். முற்கூறிய நெடுநெறியாகிய வழிப்பக்கத்தேயிருந்து ஒழிவறவுரைத்த பின்பாக அழிதலைத்தருகின்ற உள்ளத்தையும் நிறைந்த காமநோயையுமுடையாளாகிய போது அவிழப்பட்ட புரிந்த குழலையுடைய மாதவிதந்தவோலையைக் கோவலன்கையிலே கொடுத்தானாக ;

போதவிழ் - குழலுக்கடை.

௮௩ - ௮௬. உடனுறை காலத் துரைத்தநெய் வாசங்
குறுநெறிக் கூந்தன் மண்பொறி யுணர்த்திக்
காட்டிய தாதலிற் கைவிட லீயா
னேட்டகம விரித்தாங் கெய்திய துணர்வோன்

உணர்வோன் - தொழிற்பெயர்.

இ - ள். அங்ஙனங்கொடுத்த ஓலைமடிப்புறத்துமண்மேல் மாதவி குறுநெறிக் கூந்தலாலொற்றிப்பொறி தன்னுடனே கூடியுறைகின்றகாலத்தே வாசநெய்யுரைத்த தன்மையைத் தனக்கு உணர்த்திக்காட்டியதாதலான் அதனைக் கையாற் கடிதின் விடுவியானாய்ப் பின்னர் விடுவித்து ஏட்டை விரித்து அதனுட்கிடந்த வாசகத்தின் பொருண்மையுணர்கின்றவனென்க.

குறுநெறி - செறிந்தவறல். 'வாசனையின் செவ்வியின்மையைப் பொறி காட்டிற்றெனவுமாம். கூந்தற்பொறியென்க., உரைத்தல் - பூசுதல். கைவிடலீயான் - மெய்மறந்தும் ஓலைத்தலையை நெகிழவிட்டிலனென்றுமாம். எழுதியநூஉம் பாடம்.

அஎ. அடிகண் முன்னர் யானடி வீழ்ந்தேன்

அடித்தலத்தில்வீழ்தல் - வணக்கம்.

இ - ள். தேவரீர்திருவடிகளைத் திக்குநோக்கித்தண்டம்பண்ணினேன்; இதனைத் திருவுளத்திலே கண்டருள்க;

கண்டருள்கவென இவ்விடத்து ஒருசொல்வருவிக்க. இஃது ஓலைமுகப்பாசுரம். இனி அக்காரிகைபாசுரம்.

அஅ - கூஉ. வடியாக் கிளவி மனக்கொளல் வேண்டுங்
குரவர்பணி யன்றியுங் குலப்பிறப் பாட்டியோ
டிரவிடைக் கழிதற் கென்பிழைப் பறியாது
கையறு நெஞ்சங் கடியல் வேண்டும்
பொய்தீர் காட்சிப் புரையோய் போற்றி

இ - ள். வடிமொழியுணர்ந்து குற்றந்தீர்ந்த நற்காட்சியையுடைய உயர்ந்தோனே, இருமுதுகுரவர் பணிவிடையொழிந்ததன்மேலும் குலத்திற்பிறந்து கற்பையாளுதலுடையவளுடனே இரவின்கண் நகரிடையைக் கழிந்துபோதற்கு வந்த பிழைப்பென்னை? அஃது அறியாது என்பிழைப்போவென்று அலமந்து அரற்றிக் கவலித்துக் கையாற்றின்கண் நெஞ்சமுங்காநின்றது; என்பிழைப்பென்னும் மகளிர்சொல் குற்றமறுதசொல்லென்று திருவுளம்பற்றல்வேண்டும்; இதுவேயன்றி எனக்கு இப்பொழுதுநடக்கின்ற இச்செயலறவு நன்றன்று, அதனைக்கடியல்வேண்டும்; ஆதலால் இவ்வாற்றான் நினக்கு ஓர்புகழ்க்குறைபாடின்றாகப் போற்றுவாயாக;

முன்னர், *"கங்கை தன்னைப்புணர்ந்தாலும்" எனவும், *"மங்கை மாதர் பெருங்கற்பு" எனவும் ஆண்டுக் கூறினமையின், ஈண்டுக் குலப்பிறப்பாட்டியெனத் தோற்றுவாய்செய்து தன்பிழைப்பின்மைகூறினாள். இதுவன்றியும், இருவரிருமுதுகுரவரும் ஏவலாளர் மேவலகூறின் இறந்துபடுவரென்பதூஉம், தேவருடைக் குலத்திற்கு மாசுவருமென்பதூஉம், தானிறந்துபடிற் சிறிதுபுகழேகுறைபடுமென்பதூஉம் உணர்த்தியவாறாயிற்று.

கூஉ - கூடு. என்றவ னெழுதிய விசைமொழி யுணர்ந்து
தன்றீ திலனெனத் தளர்ச்சி நீங்கி
யென்றீ தென்றே

இ - ள். இவ்வாறு பலவகையேதம்பயக்குமென்று அவனெழுதிய ஓலைப்பாசுரத்திற் பொருளெல்லாமுணர்ந்து மனங்குழைந்து அவன் தன்னாற்செய்யப்பட்ட தீதிலன்; இஃது என்னாற்செய்யப்பட்ட தீதேயெனத்தெளிந்து தளர்ச்சிநீங்கியென்க.

என்றீது - என்றீவினை.

கூடு - கூஎ. எய்திய துணர்ந்தாங்
கற்பயந் தோற்றிய மண்ணுடை முடங்கல்
பொற்புடைத் தாகப் பொருளுரை பொருந்தியது

* கானல்வரி, உ.

இ - ள். அவ்வோலையிற்பொருந்திய வாசகத்தையுணர்ந்து இவ்வோலைதானே என்றந்தைக்கும் பொலிவுடைத்தாம்படி வாசகங்களும் பொருளும் பொருந்திற்று; அஃது எங்ஙனம்பொருந்திற்றெனின், அடிவீழ்ந்தேனென்னுந்துணையும் முற் கூறியவாறேகொள்க. 'வடியா ... ... போற்றி' குரவர்பணிவிடைகளைத் தவிர்ந்ததொருதவறு; அன்றியும் குலத்திற்பிறந்தாளோடு இரவிடைக்கழிந்த தவறு ஒன்று; இவையிரண்டிற்கும் வரக்கடவதன்பங்காரணமாகத் திருவுளத்திற்றளர்ச்சி சிறிதுண்டாயினும் அதனைக் கடிந்தருளுக; இங்ஙனம் என்பிழைப்பறியாதயான் முதுக்குறைவாகச்சொல்லிய இவற்றை எருவிண்ணப்பமாகத் திருவுளம்பற்றுதொழிக; பேதைமைச்சொல்லென்றே திருவுளம்பற்றல்வேண்டும்; போற்றியென்றுனென்க. குரவர்க்குக் காப்புக்களைக்குறித்துப் போற்றியென்றன்மரபு ஈண்டு இவ்வோலை குரவர்க்குப்பொருந்தியவாறுணர்க.

கூஅ - ௯0௧. மாசில் குரவர் மலரடி தொழுதேன்
கோசிக மாணி காட்டெனக் கொடுத்து
நடுக்கங் களைந்தவர் நல்லகம் பொருந்திய
இடுக்கண் களைதற் கீண்டெனப் போக்கி

இ - ள். அங்ஙனம் பொருந்தியதென உட்கொண்டகோவலன், கோசிகமாணி, எங்குரவர் மாசில்மலரடியைத் திசைநோக்கித்தொழுதேனெனச்சொல்லி இவ்வோலையைக் காட்டெனக்கொடுத்து, என்பொருட்டாக அவர் நடுங்குநடுக்கத்தைக் களைந்து அகத்தினிகழ்கின்ற இடுக்கணும் நீக்குதற்கு விரைந்துசெல்வாயாகவெனப் போகவிட்டென்க.

ஈண்டுதல் - விரைதல். காட்டெனக்கொடுத்துக் களைதற்கீண்டெனப்போக்கி யென்க. எனச்சொல்லியென்று ஒருசொல்வருவிக்க.

௯0௨-௯0௩. மாசில் கற்பின் மனைவியோ டிருந்த
வாசில் கொள்கை யறவிபா லணைந்து

இ - ள் குற்றமற்ற கற்பினையுடைய தன்மனைவியுடனிருந்த குற்றமற்ற கோட்பாட்டையுடைய கவுந்தியடிகளிருக்கின்ற இடத்தைச்சேர்ந்தென்க.

ஒடு - ஒருவினையொடு; உயர்பின்றியதன்வழிக்கண நின்றது.

௯0௩-௯0௫. ஆங்கு
ஆடிய கொள்கை யந்தரி கோலம்
பாடும் பாணரிற் பாங்குறச் சேர்ந்து

இ - ள். அவ்விடத்துத் துர்க்கையது வெற்றிபொருந்திய அசுரரோடுபொருத போர்க்கோலத்தைப்பாடும் பாட்டாண்மையையுடைய அம்பணவரில் தானுமொருவனாகக் கலந்தென்க.

*"பாண ரொக்கல்" என்றார். ஆடு - வெற்றி. பாண் - பாட்டு.

* திருச்சிற்றம்பலக்கோவையார், ௪00: "காரணி கற்பகங் கற்றவர் நற்றுணை பாணரொக்கல், சீரணி சிந்தா மணியணி தில்லைச் சிவனடிக்குத், தாரணி கொன்றையன் றக்கோர்தஞ் சங்க நிதிவிதிசேர், ஊருணி யுற்றவர்க் கூரன்மற் றியாவர்க்கு மூதியமே."

௧0௫. செந்திறம் புரிந்த—இ - ள். தன்பண்ணியம் அத்திறமாய்த் தனக் கினமான செந்திறத்தோடுபுரிந்தவென்க.

என்றது : பண் *பண்ணியம் திறம் திறத்திறமென்னுமிவை சம்பூரணம், சாடவம், ஔடவம், சதுர்த்தமென வடமொழிப்பெயரானும் வழங்கும்; அவற்றுட் செந்திறமென்றவாறு.

௧0௬. செங்கோட்டி யாழில்—இ - ள். நாற்பெரும்பண்ணிற்கும் முத லாகிய நால்வகையாழினுள்ளும் செங்கோட்டியாழென்னும் யாழினதுறுப்பினு ளென்க.

௧0௭. தந்திரி கரத்தொடு திவவு றுத்தியார்த்து

இ - ள். அச்செங்கோட்டியாழினது அறுவகையுறுப்பினுள் தந்திரிகரம் திவ வென்னும் இரண்டையும் உறுதிபெறக்கட்டி,

அவற்றுள் தந்திரிகரமென்பது நரம்புதுவக்குதற்குத் தகைப்பொழிய இருசா ணால்விரல் நீளமாகக் குறுக்கிடத்துச்சேர்த்தும் ஐம்பத்தோருறுப்பு; என்னை? "தந் திரி கரமே தகைப்பற விலகி, வந்த விருசா ணால்விர லாகும்" .. .. என்று ராகலின். திவவென்பது நரம்புகளை வலிபெறக்கட்டும் வார்க்கட்டு.

௧0௮. ஒற்றுறுப் புடைமையிற் பற்றுவழிச சேர்த்தி

இ - ள். அவ்வியாழ் ஒற்றென்னுமுறுப்பையுடைத்தாகலானே அவ்வுறுப்போ டே பற்றைப்பிறப்பிக்கும் நெறிப்படச்சேர்த்தியென்க.

"செங்கோட்டி யாழே செவ்விதிற் றெரியி, னறுவகை யுறுப்பிற் றுரு மென்ப." "அவைதாம், கோடே திவவே யொற்றே .... தந்திரி கரமே நரம்போ டாறே" என்றார்

௧0௯. குரன்முதற் கைக்கிளை யிறுவாய்க் கட்டி

இ - ள். உழை குரலாகவும் கைக்கிளை தாரமாகவும் நரம்புகளைநிறுத்தியென்க.

என்றது அரும்பாலையென்னும் இசையைப்பிறப்பித்தென்றவாறு. இது குல , முதற்பாலைத்திரியெனக்கொள்க.

௧௧0-௧௧௨. வரன்முறை வந்த மூவகைத் தானத்துப்
பாய்கலைப் பாவை பாடற் பாணி
யாசான் றிறத்தி னமைவரக் கேட்டு

இ - ள். உழைமுன்னோர்க்கூறிய நூல்களின் வரலாற்றுமுறைமையான்வந்த மூவகைத்தானத்தானும் சதிபாய்ந்துசெல்லும் கலையையுடைய பாவைபோல்வா ளது பாடற்பண்ணை ஆசானென்னும், பண்ணியலாகிய நால்வகைச்சாதியினும் பொருந்துதல்வரச் செவிப்புலத்தானறிந்தென்றவாறு.

†ஆசான்சாதி நால்வகையாவன : ஆசானுக்கு அகச்சாதி காந்தாரம், புறச்சாதி சிகண்டி., அருகுசாதி தசாக்கரி, பெருகுசாதி சுத்தகாந்தாரமெனக்கொள்க. பண் நூற்றுமூன்று ; அவை நால்வகைப்படும் ; பண், பண்ணியம், திறம், திறத்திற மென. அவற்றுள் இது திறங்கூறிற்று. மூவகைத்தானம் எழுத்தும் அசையும்

* பண்ணியமெனவும் பிரதிபேதமுண்டு.
† அரசன்சாதியெனவும் பிரதிபேதமுண்டு.

சீருமெனினுமமையும் ; என்னை ? "எழுத்தே யசையே சீரே யென்றிவை, யிழுக்கி லவைமூன் றிற்கு மென்ப" என்றாராகலின்.

௧௧௩. பாடற் பாணி யளைஇ யவரொடு

இ - ள். இங்ஙனமாகிய பண்ணையும் திறத்தையும் அவரோடு கலந்துவாசித் தென்க.

௧௧௪. கூடற் காவதங் கூறுமி னீரென

இ - ள். இங்ஙனம் யாழ்வாசித்தகோவலன், இவ்விடத்திற்கு மதுரை எத் துணைக்காவதம ; அதனை நீர் கூறுமினென்றுகேட்பவென்க.

௧௧௫-௧௩௨. காழகிற சாந்த... ... ... காலரி

௧௧௫-௧௧௮. காழகிற் சாந்தங் கமழ்பூங் குங்கும
நாவிக் குழம்பு நலங்கொ டேய்வை
மானமதச சாந்த மணங்கமழ் தெய்வத்
தேமென் கொழுஞ்சே றாடி

இ - ள். அகிற்சாந்தும் கமழும் குங்குமப்பூக்குழம்பும் நாவிக்குழம்பும் குளிர்ச்சி நலத்தைக்கொண்ட சந்தனச்சாந்தும் கஸ்தூரிச்சாந்துமாகிய இத்தெய்வமணங்கமழுகின்ற வளவிய சேற்றையளைந்து,

௧௧௮-௧௨௧. ஆங்குத்
தாதுசேர் கழுநீர் சண்பகக் கோதையொடு
மாதவி மல்லிகை மனைவளர் முல்லைப்
போதவிழ் தொடையற் பூவணை பொருந்தி

இ - ள். தேன்சேர்ந்த கழுநீர்மலர் சணபகமலரென்னுமிவற்றாலாகிய மாலையோடு குருக்கத்தியும் மல்லிகையும் மனையின்கண்வளர்ந்த முல்லையுமென்னும் இவ்வவிழ்ந்த பூக்களால்நிறைத்த பொலிவினையுடைய அணையிலேபொருந்தி,

௧௨௨-௧௨௬. அட்டிற் புகையு மகலங் காடி
முட்டாக் கூவியர் மோதகப் புகையு
மைந்தரு மகளிரு மாடத் தெடுத்த
வந்தீம் புகையு மாகுதிப் புகையும்
பல்வேறு பூம்புகை யளைஇ

இ - ள். அடுக்களைகளில் தாளிப்புமுதலியபுகையும் அகன்ற அங்காடியிடத்து அப்பவாணிகர் முட்டாமற் சுடுகின்ற அப்பவகையிற்புகையும் மைந்தரும் மகளிரும் மயிர்க்கும் துகிற்கும் மாலைமுதலியவற்றிற்குமெடுத்த அழகிய இனிய அகிற்புகையும் யாகசாலைதோறும் ஆகுதிபண்ணுதலாலெழுந்தபுகையும் ஆகிய இப்பலவாகிய வேறுபட்ட பொலிவினையுடைய புகையையளவி,

௧௨௬-௧௨௯. வெல்போர்
விளங்குபூண் மார்பிற் பாண்டியன் கோயிலி
னளந்துணர் வறியா வாருயிர் பிணிக்குங்
கலவைக் கூட்டங் காண்வரத் தோன்றி

இ - ள். இந்திரனாற்பூட்டப்பட்ட விளங்காநின்ற ஆரத்தையுடைய மார்பாலே வெல்லும்போரைவல்ல பாண்டியனது கோயிற்கண் யாவரானும் அளவிட்டறியப் படாவாய இக்கலவைத்தொகுதி தன்மெய்யெல்லாம் கமழும்படி தோன்றியென்க.

அவை எத்தன்மையவாகிய கலவையெனின், தம்மைப் புலன்கள் ஒருகா லுகருமாயிற் பின்னை வீட்டுலகங்கருதித் துறவிற்செல்லவொட்டாது மனத்தைப் பிணித்துக்கொள்ளும் கோயிலிற்கலவையென்க. அவை முன்னர்க்கூறினவும் பிறவும்.

கஙO-கஙஉ. புலவர் செந்நாப் பொருந்திய நிவப்பிற்
பொதியிற் றென்றல் போலா தீங்கு
மதுரைத் தென்றல் வந்தது காணீர்

இ - ள். சங்கப்புலவரது செந்நாவாலே புகழப்பட்ட இச்சிறப்புக்களையுடைத் தாகலிற் பொதியிற்றென்றல் தன்னை ஒவ்வாமைக்குக்காரணமாகி இந்த மதுரைத் தென்றல்வந்தது, இதனைக் காணீரென்க.

ஆடிப் பொருந்தி அணைஇத் தோன்றித் தென்றல் வந்ததென்றாரென்க.

கஙங-கஙச. நனிசேய்த் தன்றவன் றிருமலி மூதூர்
தனிநீர் கழியினுந் தகைக்குந ரில்லென

இ - ள். காதங்கூறுமின்னென்றாற்குக் காணீர்; அதனால், மிக்க தூரிதன்று அப்பாண்டியனது செல்வமிக்கமூதூர்; அதுவன்றியும் துணைச்செல்வார் இந்நீர்மை யன்றி வேறுபட்டநீர்மையாரொருவர்செல்லினும் நில்லென்பாரில்லையென்று சொல்லவென்க.

கஙரு-கஙசா. முன்னா ளன்ன முறைமையி னிருந்தவ முதல்வியொடு
பின்னையு மல்லிடைப் பெயர்ந்தனர்

இ - ள். அற்றைநாளை ஆண்டுத்தங்கிப் பிற்றைநாள்று செல்லக்கருதியவர் முன்னைநாளை முறைமைபோலே இரவிடையிலே கவுந்தியடிகளுடனே பெயர்ந்தனரென்க.

கஙஎ - ௪௰. பெயர்ந்தாங்
கருந்திறற் கடவு ளகன்பெருங் கோயிலும்
பெரும்பெயர் மன்னவன் பேரிசைக் கோயிலும்
பால்கெழு சிறப்பிற் பல்லியஞ் சிறந்த
காலை முரசக் கனைகுர லோதையும்

இ - ள். அரிதாகிய அரித்தற்றொழிலைவல்ல கடவுளது அகன்ற பெரியகோயி லிடத்தும் மிக்க புகழையுடைய மன்னவன்கோயிலிடத்தும் வேறுபட்ட பகுதி பொருந்திய சிறப்பையுடைய காலைமுரசமாகிய பேரிசைப்பல்லியம் பெயர்ந்து கூடியொலிக்குமொலியும்,

பெயர்தல் - தாளமறுதல். கனைதல் - செறிதல்.

கசக. நான்மறை யந்தணர் நவின்ற வோதையும்

இ - ள். அந்தணர் நான்மறைநவில்விக்குமவைக்களந்தோறும் மறைக்குவிதி த்த மரபினையுடைய சுருதிகுன்றாமல் உச்சரிக்குமோதையும்,

கசஉ. மாதவ ரோதி மலிந்த வோதையும்

இ - ள். மாதவர்கள் சிறுகாலையில் மந்திரமோதுதலால் மிக்க ஓதையும்,

கசங-கசச. மீளா வென்றி வேந்தன் சிறப்பொடு
வாளோ ரெடுத்த நாளணி முழவமும்

இ - ள். மடங்காத வெற்றியையுடைய வேந்தனாற்பெற்ற சிறப்போடே வாள்வீரர் தத்தம்வீரத்திற்கெடுத்த வரிசையையுடைய முரசுமுதலியவற்றின் நாளணியோதையும்,

குடைநாட்கோள் முதலியவுமாம்.

கசரு. போரிற் கொண்ட பொருகரி முழக்கமும்

இ - ள். மாற்பகைமன்னரைப் போரின்வென்று கொண்டுவந்த போர்க்களிற்றின்முழக்கமும்,

கசசு. வாரிக் கொண்ட வயக்கரி முழக்கமும்

இ - ள். காட்டிற்பிடித்துக்கொண்டுவந்த வலிய யானையின்முழக்கமும்,

கசஎ. பணைநிலைப் புரவி யாலு மோதையும்

இ - ள். பந்திதோறுநின்ற புரவிகள் போர்நினைந்து ஆலிக்குமோதையும்,

கசஅ. கிணைநிலைப் பொருநர் வைகறைப் பாணியும்

இ - ள். கிணைப்பறையையுடைய மள்ளர் மருதநிலந்தோறும் வைகறைக்காலத்தே கொட்டுமோதையும்,

கிணை - மருதப்பறை; கூத்தர்பறையுமாம்.

கசகூ - கருo. கார்க்கட லொலியிற் கலிகெழு கூட
லார்ப்பொலி யெதிர்கொள வாரஞர் நீங்கி

இ - ள். இவையும்பிறவுமாகிய அக்கூடலிடத்து ஆர்க்குமொலியெல்லாம் கார்க்கடலொலிபோல ஒலித்து எதிர்கொள்ளுதலாலே முன்புழந்த வருத்தமெல்லாம் நீங்கி,

கருக - கருச. குரவமும் வகுளமுங் கோங்கமும் வேங்கையு
மரவமு நாகமுந் திலகமு மருதமுஞ்
சேடலுஞ் செருந்தியுஞ் செண்பக வோங்கலும்
பாடலந் தன்னொடு பன்மலர் விரிந்து

இ - ள். கரையின்புறவாயெங்கும், குரவும் மகிழும் கோங்கும் வேங்கையும் வெண்கடம்பும் சுரபுன்னையும் மஞ்சாடிமரமும் மருதும் உச்சிச்செலுந்தியும் செருந்தியும் சண்பகமரமும் ஆகியவிவை பாதிரியுடனே பலவகைமலரும்விரிந்து சூழ்ந்தவைமீதுடுத்த பூந்துகிலாகவும்,

கருரு - கசுo. குருகுந் தளவமுங் கொழுங்கொடி முசுண்டையும்
விரிமல ரதிரலும் வெண்கூ தாளமுங்
குடசமும் வெதிரமுங் கொழுங்கொடிப் பகன்றையும்
பிடவமு மயிலையும் பிணங்கரின் மணந்த

கொடுங்கரை மேகலைக் கோவை யாங்கணு
மிடைந்துசூழ் போகிய வகன்றேந் தல்குல்

இ - ள். அகவாயெங்கும், குருக்கத்தியும் செம்முல்லையும் முசுட்டையும் மோசி மல்லிகையும் வெள்ளைநறுந்தாளியும் வெட்பாலையும் மூங்கிலும் இவற்றிற்படர்ந்த பெருங்கையாலும் குட்டிப்பிடவமும் இருவாட்சியுமாகிய பலமலரும்விரிந்த பூங்கொடிகள் நிரைபடநெருங்கிப் படர்ந்துமன்னினவை தன்னைமிடைந்துசூழ்ந்த கோவையாகியமேகலையாகவுமுடைய கொடுங்கரையாகிய அகன்றேந்தியவல்குலையும்,

அல்குலென்பதற்கேற்பக் கொடுமைகூறினர். மேகலைக்கோவை - வேற்றுமைத்தொகை. கொழுங்கொடி விரிமலரென்னுமடைகளை ஏற்புழியெங்குமொட்டுக. அம் - சாரியை.

கசுக - கசுங. வாலுகங் குவைஇய மலர்பூந் துருத்திப்
பாற்புடைக் கொண்டு பன்மல ரோங்கி
யெதிரெதிர் விளங்கிய கதிரிள வனமுலை

இ - ள். அகற்சியையும் பொலிவையுமுடைத்தாகிய இடைக்குறையிலே பக்கங்கள் புடைக்கொண்டு கோங்கு வேங்கையென்னும் பலமலராகியசுணங்கால் உயர்ச்சிபெற்று ஒன்றுக்கொன்று மாறுபடவிளங்கிய மணற்குன்றாகிய நிறத்தமுலையினையும்,

கசுச. கரைநின் றுதிர்த்த கவிரிதழ்ச் செவ்வாய்

இ - ள். கரைக்கணின்றுதுத்த முருக்கிதழாகிய செவ்வாயினையும்,

கசுரு. அருவி முல்லை யணிநகை யாட்டி

இ - ள். அருவிநீரோடு இடையறுதுவக்த முல்லையாகிய நகையினையுமுடையாள்,

கசுசு. விலங்குநிமிர்ந் தொழுகிய கருங்கய னெடுங்கண்

இ - ள். குறுக்கேமறிந்தும் நெடுகவோடியுந்திரிகின்ற கயலாகிய நெடியகண்ணினையும்,

கசுஎ. விரைமலர் நீங்கா வவிரறற் கூந்தல்

இ - ள். இருமருங்கும் இரைகளரித்த மணமலர்நீங்காத விளங்குகின்ற அறலாகிய கூந்தலினையும்,

கசுஅ - கஎ0. உலகுபுரந் தூட்டு முயர்பே ரொழுக்கத்துப்
புலவர் நாவிற் பொருந்திய பூங்கொடி
வையை யென்ற பொய்யாக் குலக்கொடி

இ - ள். உலகைப் பாதுகாத்தற்குப் பலபொருள்களையும்விளைத்து நுகர்வித்தலான மிக்க பெரிய ஒழுக்கத்தினையுமுடையாள்; புலவர்நாவிற் புகழ்பொருந்தியவள்; சேர்ந்தோர்க்கு வரைவின்றி இன்பமளித்தலின் திருமகளையொப்பாள்; வையையென்று பெயர்கூறப்படுவாள்; பருவம்பொய்யாமையானும் வேற்றுவேந்தர் அணுகாமையானும் தென்னர்குலக்கொடியாயுள்ளவள்;

௧௭௧-௧௭௩. தையற் குறுவது தானறிந் தனள்போற்
புண்ணிய நறுமல ராடை போர்த்துக்
கண்ணிறை நெடுநீர் கரந்தன ளடக்கி

இ-ள். கண்ணகிக்கு மேல்வரும் துன்பங்களைத் தான் முன்னறிந்தாள்போலத் தன்னைக்கொண்டு அருச்சித்தார்க்குப் புண்ணியங்களைக்கொடுக்கும் நறியபூவாடையால் தனது மெய்ம்முழுதும்போர்த்துத் தன்கண் மல்கிநின்றநீரைப் புறத்திடின் அதுகண்டு வருந்துவாரென்று உள்ளடக்கி,

நெடுநீர் - மிக்கநீர். அடக்கவெனத்திரிக்க.

௧௭௪-௧௭௫. புனல்யா றன்றிது பூம்புனல் யாறென
வனநடை மாதரு மையனுந் தொழுது

இ-ள். அங்ஙனம்போர்த்த பூவாற் புனல் மறைதலின் இது புனல்யாறன்று பூவாறென்றுபுகழ்ந்து மாதரும் கொழுநனுந்தொழுது,

௧௭௬-௧௮௦. பரிமுக வம்பியுங் கரிமுக வம்பியு
மரிமுக வம்பியு மருந்துறை யியக்கும
பெருந்துறை மருங்கிற் பெயரா தாங்கண்
மாதவத் தாட்டியொடு மரப்புணை போகித்
தேமலர் நறும்பொழிற் றென்கரை யெய்தி

இ-ள் ஓடக்கோலுக்கு நிலைத்தலரியதுறையிற் சென்றோரைச்செலுத்தும் குதிரைமுகவோடமும் யானைமுகவோடமும் சிங்கமுகவோடமுமென்னும் இவற்றினேறிப் பலர்போகும் துறையிற்போகாது அதற்கயலதாகிய துறையிலே கவுந்தியடிகளுடனே மரப்புணையிலேபோகி மதுநாறுமலரையுடைய சோலைபொருந்திய தென்கரையிற் பலர்செல்லாததோரிடத்தே சென்றெய்தியென்க.

முன்னர், *'வம்பப் பரத்தை வறுமொழி யாளனொடு' சாபமுறுதலின், மண்டு மருங்கினென்றார். பரிமுகமுதலியவற்றைத் தொழிற்பெயராக்கினுமமையும்.

௧௮௧-௧௮௩. வானவ ருறைப்பு மதுரை வலஞ்செயாத்
தானனி பெரிதுந் தகவுடைத் தென்று
கருமிளை யுடுத்த வகழிசூழ் போகி

இ-ள். தேவர்களுறையும் மதுரையை வலங்கொண்டுசென்றால் மிகவும் பெரியதாகிய புண்ணியத்தையுடைத்தென்றெண்ணி அழித்தற்கரிய மிளைசூழ்ந்த கிடங்கின்புறத்தைச் சூழ்போந்தென்க.

மிளை - காவற்காடு; கட்டுவேலியுமாம்.

௧௮௪-௧௮௮. கருநெடுங் குவளையு மாம்பலுங் கமலமுந்
தையலுங் கணவனுந் தனித்துறு துயர
மையமின் றியறிந்தன போலப்
பண்ணீர் வண்டு பரிந்தினைந் தேங்கிக்
கண்ணீர் கொண்டு காலுற நடுங்க

இ - ள். குவளையும் ஆம்பலும் கமலமும், வையையும் கணவனும் மேல் தனித்துறுந் துயரத்தைத் தாம் தெளிய அறிந்தனபோல வண்டுகள் இரங்கும் பண்ணீர்மையைக் கொண்டு பரிந்தேங்கியழுது கண்ணீரைக்கொண்டு காலுறநடுங்காநிற்கவென்க.

பண்ணீர்மையன்றிப் பண்ணீரென்றமையால் திறம் பன்னிரண்டனுள் நேர் திறமெனவுமாம். கண்ணீர் - கள்ளாகிய நீரெனவுமாம். காலுற - காலிலேயுற வெனவும், காற்று உறுதலாலெனவுமாம். அறிந்தனபோல நடுங்கவென்க. ஏங்கி யென்னும் செய்தெனெச்சம் நடுங்கவென்னும் பிறவினைகொண்டுமுடிந்தது.

௧௮௯ - ௧௯௦. போருழந் தெடுத்த வாரெயிற் னெடுங்கொடி
வாரலென் பனபோன் மறித்துக்கை காட்ட

இ - ள். மாற்றார்வருந்தப் போர்தேய்த்தெடுத்த புறமதிற்றலையின்கொடிகள் இவளை இந்நகரில் வாராதொழிமினென்பனபோல் தம்கையின் மறித்துக்காட்ட வென்க

அன்றி வாரலென்பார்கையின் தன்மைபோலெனவுமாம்.

௧௯௧ - ௧௯௬. புள்ளணி கழனியும் பொழிலும் பொருந்தி
வெள்ளநீர்ப் பண்ணையும் விரிநீ ரேரியும்
காய்க் குலைத் தெங்கும் வாழையுங் கமுகும்
வேய்த்திரட் பந்தரும் விளங்கிய இருக்கை
யறம்புரி மாந்த ரன்றிச் சேராப்
புறஞ்சிறை மூதூர்ப் புக்கனர் புரிந்தென

இ - ள். புட்களாலழகுசெய்யப்பட்ட ஏரியும் பண்ணையும் கழனியும் சோலையும் தெங்கும் கமுகும் வாழையும் வேய்த்திரளாலிடப்பட்ட தண்ணீர்ப்பந்தர்களும் பொருந்திவிளங்கிய மூதூர்ப்புறமதிலிடத்ததாகி அறத்தைப்புரியும் தபோதனரன்றிப் பிறர்சேரப்படாத புறஞ்சேரிக்கண்ணே தாம் கருதிவந்தகோட்பாட்டிலே மனம்புரிந்து புக்காரென்க.

இது மேற்றிசைவயிற்கு அயலதோர் முனிவரிருப்பிடம். புரிந்துபுக்காரெனப் பொதுமையாற்கூறினமையின், முன்னர் நாடுகாண்காதைக்கண்ணே, *" அறிவனை யேத்த... . . . ஒன்றிய வுள்ள முடையேன்" என்பதனாற் கவுந்தியடிகளும் அறிவனைப் புரிந்துபுக்காரென்க. பண்ணை - தோட்டங்களும், ஓடைகளும்.

இது நிலைமண்டிலவாசிரியப்பா.

பருந்து நிழலுமென ... ...அடியார்க்குநல்லானென்பான்.
ஒருந்தமிழ் ... ...நிரயமையாகாவலனே.
காற்றை ... ...சொல்லித்ததே.

புறஞ்சேரியிறுத்தகாதை முற்றிற்று.

---

* நாடுகாண்காதை, ௫௭ - ௫௯.

பதினான்காவது

ஊர்காண் காதை.

புறஞ்சிறைப் பொழிலும் பிறங்குநீர்ப் பண்ணையு
மிறங்குகதிர்க் கழனியும் புள்ளெழுந் தார்ப்பப்
புலரி வைகறைப் பொய்கைத் தாமரை
மலர்பொதி யவிழ்த்த வுலகுதொழு மண்டிலம்
வேந்துதலை பணிப்ப வேந்துவாட் செழிய
னோங்குயர் கூட லூர்துயி லெடுப்ப
நுதல்விழி நாட்டத் திறையோன் கோயிலு
முவணச் சேவ லுயர்த்தோ னியமமு
மேழி வலனுயர்த்த வெள்ளை நகரமுங்
கோழிச் சேவற் கொடியோன் கோட்டமு
மறத்துறை விளங்கிய வறவோர் பள்ளியு
மறத்துறை விளங்கிய மன்னவன் கோயிலும்
வால்வெண் சங்கொடு வகைபெற் றோங்கிய
காலை முரசங் கனைகுர லியம்பக்
கோவலன் சென்று கொள்கையி னிருந்த
காவுந்தி யையையைக் கைதொழு தேத்தி
நெறியி னீங்கியோர் நீர்மைய ராகி
நறுமலர் மேனி நடுங்குதுய ரெய்த
வறியாத் தேயத் தாரிடை யுழந்து
சிறுமை யுற்றேன் செய்தவத் தீர்யான்
றொன்னகர் மருங்கின் மன்னர் பின்னோர்க்
கென்னிலை யுணர்த்தி யான்வருங் காறும்
பாதக் காப்பினள் பைந்தொடி யாகலி
னேத முண்டோ வடிகளீங் கென்றலுங்
கவுந்தி கூறுங் காதலி தன்னொடு
தவந்தீர் மருங்கிற் றனித்துய ருழந்தோய்
மறத்துறை நீங்குமின் வல்வினை யூட்டுமென்
றறத்துறை மாக்கள் திறத்திற் சாற்றி
நாக்கடிப் பாக வாய்ப்பறை யறையினும்
யாப்பறை மாக்க ளியல்பிற் கொள்ளார்

தீதுடை வெவ்வினை யுருத்த காலைப்
பேதைமை கந்தாப் பெரும்பே துறுவ
ரொய்யா வினைப்பய னுண்ணுங் காலைக்
கையாறு கொள்ளார் கற்றறி மாக்கள்
பிரிதற் றுன்பமும் புணர்தற் றுன்பமு
முருவி லாள னொறுக்குந் துன்பமும்
புரிகுழன் மாதர்ப் புணர்ந்தோர்க் கல்ல
தொருதனி வாழ்க்கை யுரவோர்க் கில்லை
பெண்டிரு முண்டியு மின்பமென் றுலகிற்
கொண்டோ ருறூஉங் கொள்ளாத் துன்பங்
கண்டன ராகிக் கடவுள் வரைந்த
காமஞ் சார்பாக் காதலி னுந்தாய்
யேமஞ் சாரா விடும்பை யெய்தின
ரின்றே யல்லா திறந்தோர் பலரால்
தொன்று படவரூஉந் தொன்மைத் தாதலிற்
றாதை யேவலின் மாதுடன் போகி
காதலி நீங்கக் கடுந்துய ருழந்தோன்
வேத முதல்வற் பயந்தோ னென்பது
நீயறிந் திலையோ நெடுமொழி யன்றோ
வல்லா டாயத்து மண்ணர சிழந்து
மெல்லிய றன்னுடன் வெங்கா னடைந்தோன்
காதலிற் பிரிந்தோ னல்லன் காதலி
தீதொடு படூஉஞ் சிறுமைய ளல்ல
ளடவிக் கானகத் தாயிழை தன்னை
யிடையிருள் யாமத் திட்டு நீங்கியது
வல்வினை யன்றோ மடந்தைதன் பிழையெனச்
சொல்லலு முண்டேற் சொல்லா யோநீ
யனையையு மல்லை யாயிழை தன்னொடு
பிரியா வாழ்க்கை பெற்றனை யன்றே
வருந்தா தேகி மன்னவன் கூடல்
பொருந்துழி யறிந்து போதுக *வென்றலு
மிளைசூழ் மிளையொடு வளைவுடன் கிடந்த
விலங்குநீர்ப் பரப்பின் வலம்புண ரகழியிற்
பெருங்கை யானை யினநிரை பெயரும்
சுருங்கை வீதி மருங்கிற் போகி.

* என்றபினென்றும் பாடம்.

கடிமதில் வாயில் காவலிற் சிறந்த
வடல்வாள் யவனர்க் கயிராது புக்காங்
காயிரங் கண்ணோ னருங்கலச் செப்பு
வாய்திறந் தன்ன மதிலக வரைப்பிற்
குடகாற் றெறிந்து கொடிநுடங்கு மறுகிற்
கடைகழி மகளிர் காதலஞ் செல்வரொடு
வருபுனல் வையை மருதோங்கு முன்றுறை
விரிபூந் துருத்தி வெண்மண லடைகரை
யோங்குநீர் மாடமொடு நாவா யியக்கிப்
பூம்புணை தழீஇப் புனலாட் டமர்ந்து
தண்ணறு முல்லையுந் தாழ்நீர்க் குவளையுங்
*கண்ணவிழ் நெய்தலுங் கதுப்புற வடைச்சி
வெண்பூ மல்லிகை விரியலொடு தொடர்ந்த
தண்செங் கழுநீர்த் தாதுவிரி பிணையல்
கொற்கையம் பெருந்துறை முத்தொடு பூண்டு
தெக்கண மலயச் செழுஞ்சே றாடிப்
பொற்கொடி மூதூர்ப் பொழிலாட் டமர்ந்தாங்
கெற்படு பொழுதி னிளநிலா முன்றிற்
றாழ்தரு கோலந் தகைபா ராட்ட
வீழ்பூஞ் சேக்கை மேலினி திருந்தாங்
காரத்தப் பூம்பட் டரைமிசை யுடீஇக்
குரற்றலைக் கூந்தற் குடசம் பொருந்திச்
சிறுமலைச் சிலம்பிற் செங்கூ தாளமொடு
நறுமலர்க் குறிஞ்சி நாண்மலர் வேய்ந்து
குங்கும வருணங் கொங்கையி னிழைத்துச்
செங்கொடு வேரிச் செழும்பூம் பிணையற்
சிந்துரச் சுண்ணஞ் சேர்ந்த மேனியி
லந்துகிர்க் கோவை யணியொடு பூண்டு
மலைச்சிற கரிந்த வசசிர வேந்தற்குக்
கலிகெழு கூடற் செவ்வணி காட்டக்
காரரசாளன் வாடையொடு வரூஉங்
கால மன்றியு நூலோர் சிறப்பின்
முகிறோய் மாடத் தகிறரு விறகின்
மடவரன் மகளிர் தடவுநெருப் பமர்ந்து
நறுஞ்சாந் தகலத்து நம்பியர் தம்மொடு

* கண்ணெகிழென்றும் பாடம்.

குறுங்க ணடைக்குங் கூதிர்க் காலையும்
வளமனை மகளிரு மைந்தரும் விரும்பி
யிளநிலா முன்றிலி னிளவெயி னுகர
விரிகதிர் மண்டிலந் தெற்கேர்பு வெண்மழை
யரிதிற் றோன்று மச்சிரக் காலையு
மாங்க தன்றியு மோங்கிரும் பரப்பின்
வங்க வீட்டத்துத் தொண்டியோ ரிட்ட
வகிலுந் துகிலு மாரமும் வாசமுந்
தொகுகருப் பூரமுஞ் சுமந்துடன் வந்த
கொண்டலொடு புகுந்து கோமகன் கூடல்
வெங்க ணெடுவேள் வில்விழாக் காணும்
பங்குனி முயக்கத்துப் பனியரசி யாண்டுளன்
கோதை மாதவி கொழுங்கொடி யெடுப்பக்
காவுங் கானமுங் கடிமல ரேந்தத்
தென்னவன் பொதியிற் றென்றலொடு புகுந்து
மன்னவன் கூடன் மகிழ்துணை தழூஉ
மின்னிள வேனில் யாண்டுளன் கொல்லென்
றுருவக் கொடியோ ருடைப்பெருங் கொழுநரொடு
பருவ மெண்ணும் படர்தீர் காலைக்
கன்மிக ராயமொடு களிற்றின நடுங்க
வென்றூழ் நின்ற குன்றுகெழு நன்னாட்டுக்
காரடு பிறப்பக் கனையெரி பொத்திக்
கோடையொடு புகுந்து கூட லாண்ட
வேனில் வேந்தன் வேற்றுப்புலம் படர
வோசனிக் கின்ற வுறுவெயிற் கடைநாள்
வையமுஞ் சிவிகையு மணிக்கா லமளியு
முய்யா னத்திடை யுறுதுணை மகிழ்ச்சியுஞ்
சாமரைக் கவரியுந் தமனிய வடைப்பையுங்
கூர்நுனை வாளுங் கோமகன் கொடுப்பப்
பெற்ற செல்வம் பிறழா வாழ்க்கைப்
பொற்றொடி மடந்தையர் புதுமணம் புணர்ந்து
செம்பொன் வள்ளத்துச் சிலதிய ரேந்திய
வந்தீந் தேறன் மாந்தினர் மயங்கிப்
பொறிவரி வண்டினம் புல்லுவழி யன்றியு
நறுமலர் மாலையின் வறிதிடங் கடிந்தாங்
கிலவிதழ்ச் செவ்வா யிளமுத் தரும்பப்

...னல்
...ளொளினு
-வி - மலைசேர்ந்த
.நீத்தல்பொருத்தம்.
ளன் தமயந்தியை
பொருட்டுவருந்தன்ப
ருட்டுவருந்தன்பமும்

புலவிக் காலத்துப் போற்றா துரைத்த
காவியங் கண்ணார் கட்டுரை யெட்டுக்கு
நாவொடு நவிலா நகைபடு கிளவியு
மஞ்செங் கழுநீ ராரம்பவிழ்த் தன்ன
செங்கய னெடுங்கட் செழுங்கடைப் பூசலுங்
கொலைவிற் புருவத்துக் கொழுங்கடை சுருளத்
திலகச் சிறுநுத லரும்பிய வியருஞ்
செவ்வி பார்க்குஞ் செழுங்குடிச் செல்வரொடு
வையங் காவலர் மகிழ்தரு வீதியுஞ்
சுடுமண் ணேறா வடுநீங்கு சிறப்பின்
முடியர சொடுங்குங் கடிமனை வாழ்க்கை
வேத்தியல் பொதுவிய லென்றிரு திறத்து
மாத்திரை யறிந்து மயங்கா மரபி
னாடலும் வரியும் பாணியுந் தூக்குங்
கூடிய குயிலுவக் கருவியு முணர்ந்து
நால்வகை மரபி னவினயக் களத்தினு
மெழுவகை நிலத்தினு மெய்பெற விரிந்து
மலைப்பருஞ் சிறப்பிற் றலைக்கோ லரிவையும்
வாரம் பாடுந் தோரிய மடந்தையுந்
தலைப்பாட்டுக் கூத்தியு மிடைப்பாட்டுக் கூத்தியு
நால்வேறு வகையி னயத்தகு மரபி
னெட்டுக் கடைநிறுத்த வாயிரத் தெண்கழஞ்சு
முட்டா வைகன் முறைமையின் வழாஅது
தாக்கணங் கனையார் நோக்குவலைப் பட்டாங்
கரும்பெற லறிவும் பெரும்பிறி தாகத்
தவத்தோ ராயினுந் தகைமலர் வண்டி
னுகைப்பதம் பார்க்கு மிளையோ ராயினுங்
காம விருந்தின் மடவோ ராயினு
மேம வைக லின்றுயில் வதியும்
பண்ணுங் கிளையும் பழித்த தீஞ்சொ
லெண்ணெண் கலையோ ரிருபெரு வீதியும்
முகவையும் பாண்டிலு மணித்தேர்க் கொடிஞ்சியு
மடவரப் புக கவசமும் வீழ்மணித் தோட்டியு
நெஞ்சா புனை யரணமு மரியா யோகமும்
* கண்ணெழு குழியமும் வால்வெண் கவரியு
ப் படமுங் கிடுகின் படமுங்

கானப் படமுங் காழூன்று கடிகையுஞ்
செம்பிற் செய்நவுங் கஞ்சத் தொழிலவும்
வம்பின் முடிநவு மாலையிற் புனைநவும்
வேதினத் துப்பவுங் கோடுகடை தொழிலவும்
புகையவுஞ் சாந்தவும் பூவிற் புனைநவும்
வகைதெரி வறியா வளந்தலை மயங்கிய
வரசுவிழை திருவி னங்காடி வீதியுங்
காக பாதமுங் களங்கமும் விந்துவு
மேகையு நீங்கி யியல்பிற் குன்றா
நாலவர் நொடிந்த நுழைநுண் கோடி
நால்வகை வருணத்து நலங்கே ழொளியவு
மேகையு மாலையு மிருவொடு துறந்த
பாசார் மேனிப் பசுங்கதி ரொளியவும்
பதுமமு நீலமும் விந்தமும் படிதமும்
விதிமுறை பிழையா விளங்கிய சாதியும்
பூச வுருவிற் பொலந்தெளித் தனையவுந்
தீதறு கதிரொளித் தெண்மட் டுருவவு
மிருதெளித் தனையவு மிருவே றுருவவு
மொருமைத் தோற்றத் தைவேறு வனப்பி
னிலங்கு கதிர்விடு நலங்கெழு மணிகளுங்
காற்றினு மண்ணினுங் கல்லினு நீரினுந்
தோற்றிய குற்றந் துகளறத் துணிந்தவுஞ்
சந்திர குருவே யங்கா ரகனென
வந்த நீர்மைய வட்டத் தொகுதியுங்
கருப்பத் துளையவுங் கல்லிடை முடங்கலுந்
திருக்கு நீங்கிய செங்கொடி வல்லியும்
வகைதெரி மாக்க டொகைபெற் றோங்கிப்
பகைதெற லரியாப் பயங்கெழு வீதியுஞ்
சாத ரூபங் கிளிச்சிறை யாடகஞ்
சாம்பூ நதமென வோங்கிய கொள்கையிற்
பொலந்தெரி மாக்கள் கலங்கஞ ரொழிதரங்
கிலங்குகொடி யெடுக்கு நலங்கிளர் வீதியு
நூலினு மயிரினு நுழைநூற் பட்டினும்
பால்வகை தெரியாப் பன்னூ றடுக்கத்து
நறுமடி செறிந்த வறுவை வீதியு
நிறைக்கோ றுலாத்தர் பறைக்கட் பர

ானல்
ளெனினு
-வி - மலைசேர்ந்த
நீத்தல்பொருத்தம்.
நளன் தமயந்தியை
பொருட்டுவருந்துன்ப
ருட்டுவருந்துன்பமும்

ரம்பண வளவைய ரெங்கணுந் திரிதரக்
கால மன்றியுங் கருங்கறி மூடையொடு
கூலங் குவித்த கூல வீதியும்
பால்வேறு தெரிந்த நால்வேறு தெருவு
மந்தியுஞ் சதுக்கமு மாவண வீதியு
மன்றமுங் கவலையு மறுகுந் திரிந்து
விசும்பகடு திருகிய வெங்கதிர் நுழையாப்
பசுங்கொடிப் படாகைப் பந்தர் நீழற்
காவலன் பேரூர் கண்டுமகிழ் வெய்திக்
கோவலன் பெயர்ந்தனன் கொடிமதிற் புறத்தென.

க - ௨. புறஞ்சிறைப் பொழிலும் பிறங்குநீர்ப் பண்ணையு
மிறங்குகதிர்க் கழனியும புள்ளொலிமுந் தார்ப்ப

இ - ள். முன்னர்ப் புரிந்துபுக்க மூதூர்ப் புறஞ்சேரியிடத்துளவாகிய பொழில களிடத்தும் விளங்காநின்ற நீர்நிறைந்த பண்ணையிடத்தும் வளைந்த கதிரையுடைய கழனியிடத்தும் உளவாகிய புட்கள் துயிலெழுந்து ஆரவாரியாநிற்பவென்க.

பிறங்குதல் - மிகுதலுமாம்.

௩ - ௬. புலரி வைகறைப் பொய்கைத் தாமரை
மலர்பொதி யவிழ்த்த வுலகுதொழு மண்டிலம
வேந்துதலை பனிப்ப வேந்துவாட் செழிய
னோங்குயர் கூட லார்துயி லெடுப்ப

இ - ள். வைகறைக்காலக்கழிவும் புலருதன்முன்னுமாகிய அக்காலத்தே பொய்கைகளில் தாமரைப்பூவின்முகைகளைப் புரிநெகிழ்த்து மலர்வித்த உலகமெல்லாந்தொழப்படும் ஆதித்தமண்டிலமானது பகைவேந்தர் தலைகணடுங்க விதிர்த்தேந்திய வாளையுடைய செழியனது புகழானோங்கி வண்மையானுயர்ந்த கூடலாகியவூரைத் துயிலெடுப்பாநிற்பவென்க

ஆர்ப்ப அவிழ்த்த மண்டிலம் எடுப்பவென்க.

௭. நுதல்விழி நாட்டத் திறையோன் கோயிலும

இ - ள். இறைவி கண்புதைத்தபொழுது நெற்றியிற்புறப்படவிட்ட கண்ணை -ய இறைவனது கோயிலும்,

நாட்டம் - வினைத்தொகை. இனி நுதலில் இமையாநாட்டமென்றுமாம்; மூன்றுவட்டமெனவுமாம்.

மடவரற்புணச் சேவ லுயர்த்தோ னியமமும்
நறுஞ்சாபுகழ்புட்சேவலைப் பதாகையாகவுயர்த்த திருமால்கோயிலும்,

---

* கண்ணெனெழுகுன்.

பலனுயர்த்த வெள்ளை நகரமும்

இ - ள். மேழியாகியபடையை வலமாகவேந்திய பலதேவர்கோயிலும், வலன் - வென்றியுமாம். மேழி - ஆகுபெயராற் கலப்பை. வெள்ளை - வெள்ளையோனெனப் பண்புகொள்பெயர்.

கO. கோழிச் சேவற் கொடியோன் கோட்டமும்

இ - ள். கோழிப்புள்ளாகிய சேவற்கொடியையுடைய முருகவேள்கோயிலும், சேவற்கொடியென்றார், படைக்கொடியைவிலக்குதற்கு. Hem.

கக. அறத்துறை விளங்கிய வறவோர் பள்ளியும்

அறத்துறை - அறமும் அறத்தின்றுறையுமென உம்மைத்தொகை. அறமாவது இருவகைத்து; இல்லறமுந் துறவறமுமென. அவற்றுள் இல்லறமென்பது கற்புடைமனைவியோடு இல்லின்கணிருந்துசெய்யுமறம். அதன்றுறையாவன: தன்னையொழிந்த மூவர்க்கும் துறந்தார்க்கும் துவ்வாதவர்க்கும் இறந்தார்க்கும் தேவர்க்கும முனிவர்க்கும் விருந்தினர்க்கும் சுற்றந்தார்க்கும் பிறர்க்கும் துணையாதலும் வேள்விசெய்தலும் சிலங்காத்தல் முதலியனவும் அருளுமன்புமுடையனாதலும் பிறவும். இனித் துறவறமாவது *நாகம் தோலுரித்தாற்போல அகப்பற்றும் புறப்பற்றுமறுத்து இந்திரியவசமறுத்து முற்றத்துறத்தல். அதன்றுறையாவன: சரியை, கிரியை, யோகம், ஞானமென்பன. அவற்றுள், சரியை அலகிடல்முதலியன. கிரியை பூசைமுதலியன. யோகம் எண்வகைய; அவை, இயமம் நியமம் ஆசனம் வளிநிலை, தொகைநிலை, பொறைநிலை, நினைதல், சமாதியென்பன. அவற்றுள், "பொய்கொலை களவே காமம் பொருணசை, யிவ்வகையைந்து மடக்கிய தியமம்" எனவும், "பெற்றதற் குவத்தல் பிழம்புநனி வெறுத்தல், கற்பன கற்றல் கழிகடுந் தூய்மை, பூசனைப் பெரும்பய மாசாற் களித்தலொடு, பயனுடை மரபி னியம மைந்தே" எனவும், "நிற்ற லிருத்தல் கிடத்த னடத்தலென், றொத்த நான்கி னெல்கா நிலைமையோ, டின்பம் பயக்குஞ் சமய முதலிய, வந்தமில் சிறப்பி னாசன மாகும்" எனவும், "உந்தியொடு புணர்ந்த விருவகை வளியுந், தந்த மியக்கந் தடுப்பது வளிநிலை" எனவும், "பொறியுணர் வெல்லாம் புலத்தின் வழாமை, யொருவகைப் படுப்பது தொகைநிலை யாமே" எனவும், "மனத்தினை யொருவழி நிறுப்பது பொறைநிலை" எனவும், "நிறுத்திய வம்மன நிலைதெரியாமற், குறித்த பொருளொடு கொளுத்துவது நினைவே" எனவும், "ஆங்ஙனங் குறித்த வம்முதற் பொருளொடு, தான்பிற னாகாத் தகைபது சமாதி" எனவும் கூறுவனவற்றாலுறிக. ஞானம்... ... ...

இ - ள். அறமும் அதன்றுறைகளும் விளங்குதற்குக் காரணமாகிய அறவோர்களுடைய இருப்பிடங்களும்,

ஈண்டுப் பள்ளியென்றது அவ்விடங்களை.

கஉ. மறத்துறை விளங்கிய மன்னவன் கோயிலும்

இ - ள். மறமும் அதன்றுறைகளும் விளங்குதற்குக் காரண...

...து கோயிலும்,

இதுவும் உம்மைத்தொகை.

பாகிறுந்தானல்
ந்தலவொளிலு
டவி - மலைசேர்ந்த
—ரீத்தல்பொருத்தம்.
னளன் தமயந்தியை

* "படநாகந் தோலுரித்தாற் போற்றுறந்து கண்டவாபொருட்டுவருந்துன்ப
—, டொருக வைம்பொறியும் வென்றார்க்கு" என்றார் சிந்தா...ருட்டுவருந்துன்பமும்

அதன்றுறையாவன : ஏழுவகைய ; அவை, வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ்சி, உழிஞை, நொச்சி, தும்பையெனவிவை. இனி விரிப்பினகலும். "தொகை மறவரதுதறுகண்" என்பதனான் இவையும் இவற்றின்றுறைகளும் வந்தவழிக்கண்டு கொள்க. கோயில் நியமம் நகரம் கோட்டம் பள்ளியென்பனவற்றின்வந்த பரியாயவலங்காரமுணர்க.

௧௩ - ௧௪. வால்வெண் சங்கொடு வகைபெற் றோங்கிய
காலை முரசங் கனைகுர லியம்ப

இ - ள். மேற்கூறியவிடங்களிற் பலவகையாற்பொருந்திய சிறப்பினையுடைய

௩உ௮ சிலப்பதிகாரம்.

அதன்றுறையாவன : ஏழுவகைய ; அவை, வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ்சி, உழிஞை, நொச்சி, தும்பையெனவிவை. இனி விரிப்பினகலும். "தொகை மறவரதுதறுகண்" என்பதனான் இவையும் இவற்றின்றுறைகளும் வந்தவழிக்கண்டு கொள்க. கோயில் நியமம் நகரம் கோட்டம் பள்ளியென்பனவற்றின்வந்த பரியாயவலங்காரமுணர்க.

௧௩ - ௧௪. வால்வெண் சங்கொடு வகைபெற் றோங்கிய
காலை முரசங் கனைகுர லியம்ப

இ - ள். மேற்கூறியவிடங்களிற் பலவகையாற்பொருந்திய சிறப்பினையுடைய

பாதக் காப்பினள் பைந்தொடி யாகலின்
ஏதமுண் டோவடி கள்ளிங் கென்றலும்

இ - ள். அடிகளே, இத்தொன்னகரிடத்துள்ள வணிகர்க்கு என்றன்மையுணர்த்தி வருந்துணையும் இவட்கு ஏதமின்றாகக் காத்தருளவேண்டுமெனக் கூறக்கருதியவன் தெளிந்து, *"போதுவல் யானும் போதுமின்" என்றவன்றே இவள் நம் பாதமாகிய காவலையுடையாளாதலின், இவட்கு இனி ஏதமுண்டோ; இல்லையென்று கையெடுத்துக் கூறினானென்க.

என்னிலை - மாசாத்துவாணிகன்மகனாகியும் இங்ஙனமாகிய தன்மை. பைந்தொடி - அன்மொழித்தொகை. காறு - அளவு. ஏங்கு ஏதமுண்டோவென்றான்; முன்னர் இவர் வழித்துயர் நீக்கி இவ்விடம் தலைப்படுத்தமைதோன்ற.

௫௬ - ௫௭. கவுந்தி கூறுங் காதலி தன்னொடு
தவந்தீர் மருங்கிற் றனித்துய ருழந்தோய

இ - ள். அங்ஙனங்கூறிய கோவலற்குக் கவுந்தியடிகள் கூறுவார்: முற்பிறப்பில் மிக நல்வினைசெய்து நீ அதனையொழிந்து பின்னர்ச் சிறிது தீவினையுஞ் செய்த பக்கத்தானே நின்கிளையையும் தந்தைசெல்வத்தையும்விட்டு நின்காதலியோடும் தனித்துத் துயரத்தையுழந்தோனே,

இனிப் பேரின்பத்தைத்தரும் தவத்தினின்றோர் அதனைவிட்டு இழிதலின்வினையாகிய நிரயத்துன்பத்தையுறுதலுமாம். தனித்துயர் - ஒப்பற்றதுயருமாம். தீர்தல் - விடுதற்பொருட்டு. உழத்தல் - அனுபவித்தல.

௫௮ - ௬௩. மறந்துறை நீங்குமின் வல்வினை யூட்டுமென்
றறந்துறை மாக்க ளறிந்திறச் சாற்றி
நாக்கடிப் பாக வாய்ப்பறை யறையினும்
யாப்பறை மாக்க ளியல்பிற் கொள்ளார்
தீதுடை வெவ்வினை யுருத்தகாலைப்
பேதைமை கந்தாப் பெருமபீப தாறுவர்

இ - ள். எவ்வுயிர்க்கும் யாவரும் மறஞ்செய்தற்றொழிலினின்றும் நீங்குமின்; நீங்கீராயின், அதன்வினைவாகிய துன்பத்தைத் தீவினையூட்டுமென்று அறங்களை உணர்த்தும்பெரியோர் ஒக்குந்திறங்களானே நாவாகிய கடிப்பான் வாயாகியபறையை அறைந்துசாற்றினும் புண்ணியத்தினுறுதியற்றோர் அதனை உறுதியாகக் கொள்ளாராகிப் பின்னர்த் தீங்கையுடைய வெய்ய வினைதோன்றித் துன்பம் செய்விக்குங்கால் தமது பேதைமைபற்றாக மிகவும் செயலற்று அழியாநிற்ப.

மறம் - அகிதம். அறம் - இதம். திறம் - நீதுகன்றென்று நிச்சயவு - எதிரதுபோற்றலென்னுமுத்தியாற் கொள்ளப்பட்டது.

௬௪ - ௬௫. ஒய்யா வினைப்பய னுண்ணுங் காலைக்
கையாறு கொள்ளார் கற்றறி மாக்கள்

---

* நாடுகாண்காதை, ௯௦.

இ - ள். கற்கப்படுவனவற்றைக்கற்று அவற்றின் பயனையுணர்ந்தபெரியோர், போக்கப்படாத தீவினைப்பயனாகிய துன்பத்தைநுகருங்கால் அதற்கிரங்கிச் செயலறவை நெஞ்சிற்கொள்ளார்; இது நாம்செய்யவந்ததென்று கொள்ளுவரென்க.

ஒய்தல் - போக்குதல்.

இனி, இன்பமும் பொருளும் சிறிது இன்பம்பயந்து, பெரிது துன்பம்விளைக்குமென்பதூஉம், அறம் சிறிது துன்பம்பயந்து, பெரிது இன்பம்விளைக்குமென்பதூஉங்கூறுவார்:

௫௫ - ௬௬. பிரிதற் றுன்பமும் புணர்தற் றுன்பமும்
உருவி லாள னொறுக்குந் துன்பமும்
புரிகுழன் மாதர்ப் புணர்ந்தோர்க் கல்லது
ஒருதனி வாழ்க்கை யுரவோர்க் கில்லை
பெண்டிரு முண்டியு மின்பமென் றுலகிற்
கொண்டோ ருறூஉங் கொள்ளாத் துன்பங்
கண்டனை யாகிக் கடவுளர் வரைந்த
காமஞ் சார்பாக் காதலி னுழந்தாங்
கேமஞ் சாரா விடும்பை யெய்தினர்
இன்றே யல்லா திறந்தோர் பலரால்
தொன்றுபட வரூஉந் தொன்மைத் தாகலின்

இன்பத்தையும் பொருளையும் குறித்து பெண்டிரும் உண்டியுமென்றாகலிற் பிரிதலையும் புணர்தலையும் இரண்டற்குமேற்றுக. இனி நிறுத்தமுறையானே கூறுவார்.

இ - ள். மகளிரைப் புணர்தற்பொருட்டு முயற்சியான்வருந்துன்பமும் அங்ஙனம் புணர்ந்தபின்னர்ப் பிரிதலான்வருந்துன்பமும் அவை நீட்டித்தவிடத்து அநங்கனொறுத்தலான்வருந்துன்பமுமென மூன்றும் துன்பமேயாம்; இனிப் பொருள்புணர்தற்பொருட்டு முயற்சியான்வருந்துன்பங்களும் அங்ஙனம்புணர்ந்த பொருள் பிரிதலான் வருந்துன்பமும் அவையிரண்டும் நீட்டித்தவிடத்துக் கட்புலனாகாத வறுமை நலிதலானவருந்துன்பமுமென மூன்றுவதும் துன்பமே; ஆகலின், இவ்விருதிறத்தினுந்தோன்றும் துன்பமனைத்தும மகளிரைப் புணர்ந்து மயங்கினோர்க்குளதாவதல்லது பற்றற்ற தனிவாழ்க்கையையுடைய பெரியோரிடத்தில்லை; ங்ஙனமாகிய துன்பங்களை இன்பமெனக்கொண்டோர் உறக்கடவ இடுங்கொள் துன்பங்களை மைத்தானுணர்ந்தனராகி முனிவரால் வரைந்து நீக்கப்பட்ட இவ்விருவகைக் காமத்தைச் சார்வாகப் பற்றுள்ளத்தினின்றுழந்து துன்பக்கடலிலழுந்திக் கரைகாணப் படாத இடும்பையையெய்தினோர் இன்று நின்னையளவினோரல்லர்; முன்னாளும் எண்ணிறந்தோர் பழகிப்போந்த முறைமையதாதலானன்றேயென்றுரைக்க.

பெரிதாகலின் முன்வைத்தாரேனும் புணர்தற்பின்னராகுதலிற் பிரிதல் பின்வைத்துக் கொள்ளப்பட்டது. உருவிலாளனென்பதைக் காமன்மேலும் வறுமைமேலுமேற்றுக. இல்லை - முற்று. இறந்தோர் - கழிந்தோருமாம். பலருமென்பதுதோன்ற. ஆல் - அசை.

இனி, அப்பலருள், தேவரிற்சிறந்தோனொருவனையும், மக்களுட்சிறந்தோனொருவனையும் எடுத்துக்காட்டுவார் :

௪௬ - ௪௯. தாதை யேவலின் மாதுடன் போகிக்
காதலி நீங்கக் கடுந்துய ருழந்தோன்
வேத முதல்வற் பயந்தோ னென்பது
நீயறிந் திலையோ நெடுமொழி யன்றோ

இ - ள் தன் றந்தையேவலானே மனைவியோடும் வனத்திற்போய் அவள் தன்னைப்பிரிதலானே கடிய துன்பத்தையுழந்தவன் வேதத்திற்குமுதல்வனாகிய நான்முகனைப்பயந்தோனென்பதனை உலகமெல்லாமறியவும் நீயறிந்திலையோ, அஃது உலகினடக்கின்ற புராணகதையன்றோவென்றாரென்க.

அறிந்தனையாயின் இரங்காயென்பதுகருதி அறிந்திலையோவென்றார். நெடுமொழி - புகழுமாம். இதனுள், இராமன் சீதைபொருட்டாக வில்லேற்றல் முதலிய புணர்தற்றுன்பமும், பின்னர் அவள் பிரிதலானேவருந்துந்துன்பமும், தசரதன தனக்கு முடிசூட்டத்தொடங்கிய பொருள் புணர்தற்பொருட்டு வருந்துன்பமும், பின்னர் அதனைக் கைகேசிவிலக்க அப்பொருள் பிரிதலானவருந்துன்பமும் கண்டுகொண்டவாறுணர்க. இது தேவரிற்சிறந்தோனொருவனைக் காட்டியது.

௫௦ - ௫௭. வல்லா டாயத்து மண்ணர சிழந்து
மெல்லிய றன்னுடன் வெங்கா னடைந்தோன்
காதலிற் பிரிந்தோ னல்லன் காதலி
தீத்தொழிற் படாஅச் சிறுமைய ளல்லள்
அடவிக் கானகத் தாயிழை தன்னை
யிடையிருள் யாமத் திட்டு நீக்கியது
வல்வினை யன்றோ மடந்தைதன் பிழையெனச்
சொல்லலு முண்டேற் சொல்லா யோநீ

இ - ள், நளன்றன் முன புட்கரனோடுபொருத சூதினாயத்தான் மண்ணையும் அரசாட்சியையுமிழந்து தன்மனைவியோடு வெய்யகானகத்தேசென்றடைந்தவன் பிறிதொருபொருண்மேற்சென்ற காதலான் அவளைப் பிரிந்தானல்லன்; அவளும் பிறிதொருமையோடு பொருந்தப்பட்டதனாற் சிறுமையுறுவாளுமல்லள்; ஆகவும் அடவியாகிய காட்டகத்து அரையிருள்யாமத்தே அவளை உறக்கிடைநீத்து நீக்கியது முன்செய்தீவினையன்றி அம்மடந்தைபிழையாலென்று சொல்லுதற்கு வேறுகாரணமுண்டாயின் நீசொல்லென்றாரென்க.

இல்லையென்பது கருத்து. இனி, அவனும் காதலினீங்கிப் பிரிந்தோனல்லன்; அவளும் காதலியே; அதனாற் பிரிவாற்சிறுமையுறுவாளுமல்லளெனினுமையும். ஆடம் - தாயம். மண்ணரசு - உம்மைத்தொகை. அடவி - மலைசேர்ந்தநாடு. ஆயிழை - தமயந்தி. இட்டுநீக்கியதெனவே துயிலிடைநீத்தல்பொருத்தம். நீக்கியது எவற்சொல். ஒகாரம் இடைச்சொல். இதனுள் நளன் தமயந்தியை மணஞ்செய்து புணர்தற்பொருட்டு வருந்துன்பமும் பிரிதற்பொருட்டுவருந்துன்பமும், சூதாடுகின்றுழி அச்சூதுவென்று பொருள்புணர்தற்பொருட்டுவருந்துன்பமும்

மண்ணும் அரசுமாகியபொருள்கள்பிரிதலான்வருந்துன்பமும் ஈண்டுவேந்தவாறுணர்க. இது மக்களிற்சிறந்தோனொருவனைக் காட்டியது.

"நெறியி னீங்கியோர் நீர்மையெ னாகிச், சிறுமை யுற்றேன்" என்றதற்கு *"வினைகடைக் கூட்ட வியங்கொண்டான்" என்றலானும், †"ஊழ்வினை கடைஇ யுள்ளந் துரப்ப" என்றலானும் கோவலனை வினை ஏவுதலானும், இராமனைத் தாதையேவுதலானும், நளனைப் புட்கரனேவுதலானும், இவர் மனைவியரோடு அறியாத்தேயத்தாரிடை யுழத்தலும், சிறுமையுறுதலும் ஒத்தபண்பினராதலின் உவமைகூறி, இனினும் உனக்கு ஒருறுதியுண்டென்றுகூறுவார்.

௫௮ - ௫௯. அனையையு மல்லை யாயிழை தன்னொடு
பிரியா வாழ்க்கை பெற்றனை யன்றே

இ - ள். இங்ஙனம் பலவகைத்தாய துன்பமுறுதலின், அவரோடு ஒத்ததன்மையையாயினும் அவரின் நீ வேறுபட்ட பெரிய நன்மையையுடையை; அஃதியாதெனின், நின்காதலி பிரியாதுவாழும் வாழ்க்கையைப் பெற்றனையன்றோவாதலானென்று தேற்றினாரென்க.

உம்மை - சிறப்பு. அன்றே - அசையுமாம்.

௬௦ - ௬௧. வருந்தா தேகி மன்னவன் கூடல்
பொருந்துழி யறிந்து போதீங் கென்றலும்

இ - ள். இனி நீ இங்ஙனம் வருந்தாதே இம்மன்னவன்கூடற்சென்று சாவக நோன்பு நிகழ்த்தற்கேற்ற இடமிதுவென்றறிந்து ஈண்டுவருவாயாகவென்று சொல்லலுமென்க.

பொருந்துழியறிந்து - நிருந்தநோன்பாளரிடத்தைத் யறிந்தென்றுமாம். ஈங்குப் போதெனவினையும்.

௬௨ - ௬௫. இளைசூழ் மிளையொடு வளைவுடன் கிடந்த
இலங்குநீர்ப் பரப்பின் வலம்படு அகழியிற்
பெருங்கை யானை யினநிரை பெயருஞ்
சுருங்கை வீதி மருங்கிற் போகி

இ - ள். கட்டுவேலிசூழ்ந்த காவற்காட்டோடு தானும் நகரைச்சூழ்தலை உடன்பட்டுக்கிடந்த வலத்திலேபொருந்திச்சுழலும் இலங்குநீர்ப்பரப்பையுடைய அகழிக்குப் பெரிய கையையுடைய யானையினமாகிய பலநிரைகள் போக்குவரத்துச் செய்தற்குபடுத்த சுருங்கையையுடைய வீதியைக் கழிந்துபோகியென்க.

வலம் - வெற்றியுமாம். இனநிரை - நிரையினம். சுருங்கை - கரந்துபடை.

௬௬ - ௬௭. கடிமதில் வாயில் காவலிற் சிறந்த
அடல்வாள் யவனர்க் கயிராது புக்கு

இ - ள். இங்ஙனமாகிய இளைமுதலியசூழ்ந்த உயர்ந்த மதில்வாயிலைக் காக்கும் தொழிலான்மிக்க கொல்லும்வாளையுடைய யவனரால் இவன் புதியனென்றையிர்க்கப்படாததன்மையாற்புகுதென்க.

---

* கனாத்திறமுரைத்தகாதை, ௭௮. † நாடுகாண்காதை, ௬.

கடி - மிருதி. யவனர் - துலுக்கர். போகிப் புக்கென்க.

௬௭. ஆங்கு—இ - ள். அவ்விடத்து,

௬௮ - ௬௯. ஆயிரங் கண்ணோ னருங்கலச் செப்பு
வாய்திறந் தன்ன மதிலக வரைப்பின்

இ - ள். ஆயிரங்கண்ணையுடைய இந்திரனது பெறுதற்கரிய மணிக்கலம் பெய்த பணிப்பெட்டகத்தைத் திறந்துவைத்தாலொத்த மதில்வட்டத்தையுடைய அகநகர்வரைப்பின்கண்ணென்க.

முன்னர்ப் புறநகர்ச்சிறப்புக்கூறி ஈண்டு அகநகர்ச்சிறப்புக்கூறுவார், மதிலக வரைப்பினென்றார்.

௭0 - ௭௬. குடகாற் றெறிந்து கொடிநுடங்கு மறுகிற்
கடைகழி மகளிர் காதலஞ் செல்வரொடு
வருபுனல் வையை மருதோங்கு முன்றுறை
விரிபூந் துருத்தி வெண்மணல் அடைகரை
ஓங்குநீர் மாடமொடு நாவா யியக்கிப்
பூம்புணை தழீஇப் புனலாட் டமர்ந்து

இ - ள். மேற்றிசைக்காற்று விசைத்தெறிதலானே மாடங்களினெடுத்த கொடி யெழுந்து நுடங்குமறுகின்கண்ணுள்ளாராகிய பொதுமகளிர் தாம் காதலிக்குஞ் செல்வத்தையுடைய காமுகரோடுகூடி இடையறாதுபெருகும் புனலையுடைய வையையாற்றுத் துறைமுன்னர்ப் பொலிந்துபரந்த இடைக்குறையில் வெளிய மணலையுடைய அடைகரைக்கண்ணே உயர்ந்தபள்ளியோடத்தோடு நாவாய்முதலியவற்றை எறிசெலுத்தியும் பொலிவையுடைய புணைகளைத்தழுவி நீந்தியும் இவ்வாறு புனல்விளையாட்டைவிரும்பியும்,

ஆடித்திங்களென்பதுதோன்றக் குடகாற்றுக்கூறினார். நாணும் மடனும் பெண்மையாதலின் இவற்றைக்கழிந்தே கடைகழியவேண்டுதலிற் கடைகழி மகளிரெனப் பொதுமகளிர்க்குப் பெயர்கூறினார். இவர்க்குக் காதல் பொருளின் மேலதாகலிற் காதலஞ்செல்வரென்றார். தம்மேற காதலையுடைய செல்வரோடு எனவுமாம். அம் - சாரியை. நாவாய் - தோணிமுதலாயுள்ள சலசரங்கள்.

இது, சிறுகாலைமாறினும் காலைப்பொழுதிற் பொழுதுபோக்குக்கூறிற்று.

௭௭ - ௮௩. தண்ணறு முல்லையுந் தாழ்நீர்க் குவளையுங்
கண்ணவிழ் நெய்தலுங் கதுப்புற வடைச்சி
வெண்பூ மல்லிகை வேரியொடு தொடர்ந்த
தண்செங் கழுநீர்த் தாதுவிரி பிணையல்
கொற்கையம் பெருந்துறை முத்தொடு பூண்டு
தெக்கண மலயச் செழுஞ்சே றாடிப்
பொற்கொடி மூதூர்ப் பொழிலாட் டமர்ந்தாங்கு

இ - ள். குளிர்ந்த நறிய முல்லைமலரும் தாழ்ந்த நீரிற்பூத்த குவளைமலரும் கண்போலமலர்ந்த நெய்தன்மலருமென்னுமிவற்றைத் தமது கொண்டை

களிலே மிகவைத்துப் புனைக்கச்செருகி மல்லிகையின் மலர்ந்த வெளியபூவோடே குளிர்ந்த செங்கழுநீரிதழ்களையும் கானெருங்கக்கட்டுதலால் தலைமலர்ந்தபிணைய லைக் கொற்கைத்துறையிற்படும் பெருமுத்தாற்செய்த வடத்தோடே பூண்டு தென் றிசைக்கண்ணதாகிய மலயவரையிற்பிறந்த சந்தனக்குழம்பை மேனிமுழுதும் மட் டித்துப் பொன்னாற்செய்த கொடிகளையுடைய மூதூர்க்கயலதாகிய பொழிலிடத்து விளையாடும் விளையாட்டைவிரும்பி,

தாணிர்க்குவளை பாடமாயின், தாளையுடைய நீர்மைக்குவளையென்க. பிணை யல் - மார்பிலிடுவன. உற - மிக. மல்லிகை விரியல்வெண்பூவென்க. தெக்கணம் - வடசொற்றிரிபு. சேறாடியென்றார், மெய்ம்முழுதும்பூசினமைதோன்ற. மூதூர்ப் பொழில் - இலவந்திகைச்சோலை. ஆங்கு - அசை. அடைச்சிப் பூண்டு அயர்ந்தென்க. காரையெதிர்பருவமாதலின் முல்லைகூறினர்.

இது, நண்பகற்பொழுதிற் பொழுதுபோக்குக்கூறிற்று.

௨௩ - ௨௫. ஏற்பாட்டுப் பொழுதிற் கிளர்நிலா முன்றிற்
றாழ்தரு கோலந் தகைபா ராட்ட
வீழ்பூஞ் சேக்கை மேவினி திருந்தாங்கு

இ - ள். எற்பாடாகியகாலத்தே ஆண்டுநின்றுமபோந்து நிலாமுன்றிற் கண்ணே முன்னைப் புனலினும் பொழிலினும் ஆடியினைத்தகோலத்தைத் தங் கொழுநர் பாராட்டித்திர்க்கக் கண்டோர் விரும்பப்படும் பூஞ்சேக்கையிடத்தே இனிமையோடிருந்து,

ஆங்கு - அசை. புணர்ச்சிகூறுவார், இனிதிருந்தென்றார். தகை - ஆகுபெய ராற் கொழுநர். தத்தம் மனத்திற்றங்கிய கோலத்தைப் புனைந்துபாராட்டவெனிறு மமையும்.

இஃது எற்படுபொழுதிற் பொழுதுபோக்குக்கூறிற்று.

௨௬ - ௩௭. அரத்தப் பூம்பட் டரைமிசை யுடீஇக்
குரற்றலைக் கூந்தற் குடசம் பொருந்திச்
சிறுமலைச் சிலம்பிற் செங்கூ தாளமொடு
நறுமலர்க் குறிஞ்சி நாண்மலர் வேய்ந்து
குங்கும வருணங் கொங்கையி னிழைத்துச்
செங்கொடி வேரிச் செழும்பூம் பிணையல்
சிந்துரச் சுண்ணஞ் சேர்ந்த மேனியில்
வெந்துகிர்க் கோவை யணியொடு பூண்டு
மலைச்சிற கரிந்த வச்சிர வேந்தற்குக்
கலிகெழு கூடற் செவ்வணி காட்டக்
காரர சாளன் வாடையொடு வரூஉங்
கால மன்றியும்

இ - ள். அங்ஙனம் பாராட்டச் சேக்கைமேலிருந்து, பூத்தொழிலையுடைய செம்பட்டை மேகலைமீதேயுடுத்துப் பூங்கொத்தை இடத்தேயுடைய கூந்தலிலே செங்குடசப்பூவைமுடித்துத் தென்னவனது சிறுமலையென்னுஞ்சிலம்பின்கட்

பூத்த செங்நறுந்தாளிப்பூவுடனே நறியமலரையுடைய குறிஞ்சியினது கொட்பூவைச் சூடிக் குங்குமநிறத்தையுடைய செஞ்சந்தனத்தைக் கொங்கையினெழுதிச் சிவந்த சுண்ணமப்பியமுலையாகத்தே செங்கொடுவேரியின் வளவிய பூவாற்கட்டப்பட்ட பிணையலை அழகிய பவளக்கோவையோடுபூண்டு பறந்துதிரியுமலைகளைச் சிறகை யரிந்த வச்சிரத்தையுடைய இந்திரனுக்குக் கூடலைச் செவ்வணியணிந்துகாட்டு தற்குக் காரையாளுமரசன் வாடைக்காற்றோடுவருங்காலமும், அக்காலமன்றியும்,

அரை - ஆகுபெயரான் மேகலை. குடசம் - வெட்பாலைவிசேடம். சிறுமலை - அதன்பெயர். மலர்க்குறிஞ்சி - முதற்கேற்றவடை. இழைத்து - வரித்து; எனவே எழுதியென்பதாயிற்று. சுண்ணம் - மேனிக்கடை. குடசமும், குறிஞ்சியும், கொடு வேரியுமென்னுமிவை கார்காலத்துப்பூவாய்த் தாம்விளைந்தனவாதலாற் காரரசாளன் காட்டவெனரூர. கார் - எண்டு முகில்; அதனையாளுமரசு - காலம். காலமும் கடவுளாதலால் தன்வேந்தனுக்குக் கையுறைகாட்டுவான கூடமைமகளிரான் வந்து விதித்துக்காட்டினன; அவற்கு மகளிர்மேல் மிக்க காதலுடைமையறிதலின். "கால முலகம்" என்பன உயர்திணைமேலனவாய்ப் பாலபிரிந்திசையாவெனவும், "நின் றுங் கிசைத்த லியலாயிலும் பின்று" எனவுங்கூறிவழுவமைக்கின்றயர், வேறிடத்து "இசைத்தலுமுரிய" என்பதன்ற காரரசாளனென உயர்திணையாற்கூறினார். இவ் விதி மேல்வருவனவற்றிற்குங்கொள்க.

வரி - ௧0௩. நூலோர் சிறப்பின்

முகிறோய் மாடத் தகிற்றரு விறகின்
மடவரன் மகளிர் தடவுநெருப் பமர்ந்து
நறுஞ்சாந் தகலத்து நம்பியர் தம்மொடு
குறுங்கண் ணடைக்குங் கூதிரக் காலையும்

இ - ள். சிறபநூல்வல்லோரானே சிறப்பித்துச்செய்யப்பட்ட முகிறோயவுயர்ந்த மாடங்களிலே மரக்கலந்தந்த அகிலாகியவிறகாலே மடப்பம்வருதலையுடைய மகளிர் தடக்கையினிட்ட இந்தனமாய்த்தலைவிருப்பி நறிய சாந்தணிந்தமார்பை யுடைய மைந்தரோடுகூடக் குறிய கண்களையுடைய சாளரங்களை அடைக்கும கூதிராகியகாலமும்,

நூலோர் சிறப்பி னென்னெனவினையைத்து, நூலோர் சிறப்பித்துக்கூறப்பட்ட கோக்கட்டிமுதலாகிய அறுவகைக்கூட்டெனினுமமையும். மடவரனமகளிர்தருமகி லெனவுமாம். அமர்ந்து அடைக்குமெனவினையும். நம்பியர் - காதலஞ்செல்வர். குறுங்கண் - ஆகுபெயர் இதுவும் மேற்கூறிய அச்சிரக்காலமும் உயர்திணைச் சொல்லடுத்தோதாது அஃறிணையியல்பாற்கூறுவன.

௧0௭ - ௧௧0. வளமனை மகளிரு மைந்தரும் விரும்பி
யிளநிலா முன்றிலி னிளவெயி னுகர
விரிகதிர் மண்டிலந் தெற்கேர்பு வெண்மழை
யரிதிற் றோன்று மச்சிரக் காலையும்

இ - ள். மகளிரும் மைந்தரும் வளமனையில் இளநிலாமுன்றிற்கண்ணே யிருந்து இளவெயிலைநுகரும்படி விரிந்தகதிரையுடைய ஆதித்தமண்டிலம் தெற்கேர்பு தென்

வீதியிலேயெழுந்து இயங்குதலானே வெண்முகில்கள் அரிதாகத்தோன்றும் முன் பனிக்காலமும் எவ்விடத்துள்ளன ;

மகளிரை முற்கூறினார், இன்பத்திற்கு முதல்வீராகலின். இளநிலா - மாலைப் பொழுதினிலா. அன்றிச் சுதைநிலாவென முன்றிற்கடையாக்கினுமமையும். நுகர்தல் - பயன்கோடல். ஏர்பு - எழுதலானெனக. வெண்மழை - பனிமாசு மாம். எவ்விடத்துள்ளனவென்று ஒருசொல் வருவிக்க.

௧௦௫. ஆங்கது அன்றியும்—இ - ள். அந்த முன்பனிக்காலமன்றியும்,

௧௦௬ - ௧௧௧. ஓங்கிரும் பரப்பின்
வங்க வீட்டத்துத் தொண்டியோ ரிட்ட
வகிலுந் துகிலு மாரமும் வாசமுந்
தொகுகருப் பூரமுஞ் சுமந்துடன் வந்த
கொண்டலொடு புகுந்து கோமகன் கூடல்
வெங்கணெடுவேள் வில்விழாக் காணும்
பங்குனி முயக்கத்துப் பனியர சியாண்டுளன் ,

இ - ள். குணதிசைக்கண் தொண்டியென்னும் பதியிலுள்ள அரசர் வங்கத் திரளோடு திறையிடப்பட்ட அகிலும் பட்டும் சந்தனமும் வாசமும் கருப்பூரமு மென்னுமிவற்றை அவ் வங்கத்திரளோடு சுமந்துவந்த கொண்டற்காற்றென்னு நண்பனோடு கோமகனது கூடற்கட்புகுந்து காமவேளுடைய வில்வெற்றிகழா நின்ற விழவு காணப்படும் பங்குனித்திங்களிறுகப்பொருந்திய பின்பனிக்கால மாகிய அரசன் எவ்விடத்துளன் ;

ஓங்கிரும்பரப்பு - இருபெயரொட்டு ; பரப்பென்பதனை விசேடித்து வங்கத் திற்கடையாயிற்று. ஈட்டத்து - ஈட்டத்தோடு. இனி 'தொகு' என்பதனை இறுதி விளக்காகக்கொண்டு பொருளுரைக்க. உரைக்குமாறு, *அகில் : அருமணவன் தக் கோலி கிடாரவன் காரகிலென்றுசொல்லப்பட்ட பலவகைத்தாய தொகுதியும், துகில் : கோசிகம் பீதகம் பச்சிலை அரத்தம் நுண்டுகில் சுண்ணம் வடகம் பஞ்சு இரட்டு பாடகம் கோங்கலர் கோபம் சித்திரக்கம்மி குருதி கரியல் பேடகம் பரி யட்டக்காசு வேதங்கம் புங்கர்க்காழகம் சில்லிகை தூரியம் பங்கம் தத்தியம் வண் ணடை கவற்றுமடி நூல்யாப்பு திருக்கு தேவாங்கு பொன்னெழுத்து குச்சரி தேவகிரி காத்தூலம் இறஞ்சி வெண்பொத்தி செம்பொத்தி பணிப்பொத்தியென்று சொல்லப்பட்ட பலவகைத்தாகிய தொகுதியும், ஆரம் : மலையாரம் தீமுரன்பச்சை கிழான்பச்சை பச்சைவெட்டை அரிசந்தனம் வேரிச்சுக்கொடியென்றுசொல்லப் பட்ட பலவகைத்தாயதொகுதியும், வாசம் : அம்பினிரச்சம் கத்தூரி சவாது சாந்து குங்குமம் பனிநீர் புழுகு தக்கோலம் நாகப்பூ இலவங்கம் சாதிக்காய் வசுவாசி நிரி யாசம் தைலமென்றுசொல்லப்பட்ட பலவகைத்தாகியதொகுதியும், கர்ப்பூரம் : மலைச்சரக்கு கலை அடைவுசரக்கு மார்பு இளமார்பு ஆரூர்க்கால் கையொட்டுக்கால் மார்ப்பற்று வராசான் குமடெறிவான் உருக்குருக்கு வாலுசு சூடன் சீனச்சூட

* இங்குக்கூறப்படும் பெயர்கள் இக்காலத்து வழங்காமையால், நன்குபுலப் படவில்லை.

னென்றுபெயர்கூறப்பட்ட பலவகைத்தாகியதொகுதியுமென விரித்தும் தொகுத்தும் பொருளுரைக்க. கொண்டல் - கீழ்காற்று. இறுதியாகிய பின்பனியென்பார் வேள் வில்விழாக்காணும் பங்குனியென அதற்கு அடைகூறினர். காணும் பனியரசெனவியைக்க. வேள் காணும்பங்குனியெனினுமமையும். தொண்டியோர் - சோழகுலத்தோர்.

௧௧௩ - ௧௧௭. கோதை மாதவி கொழுங்கொடி யெடுப்பக்
காவுங் கானமுங் கடிமல ரேந்தத்
தென்னவன் பொதியிற் றென்றலொடு புகுந்து
மன்னவன் கூடன் மகிழ்துணை தழூஉ
மின்னிள வேனில் யாண்டுளன் கொல்லென்று

இ - ள். மாதவி கொடியெடுப்பக் காவும் கானமும் மலரேந்தத் தென்னவனுடைய பொதியிற்றென்றலோடே அம்மன்னவனுடைய கூடனகரின்கட்புகுந்து தாம் மகிழுந்துணைகளைத் தழுவுவிக்கும் இனிய இளவேனிலென்னுமரசன் எவ்விடத்துளன்கொலென்று,

கோதைமாதவி - மாலைபோலப் பூக்கும் குருக்கத்தி. கானம் - நந்தனவனம்; காடுமாம். தழூஉம் - தழுவுவிக்கும்.

௧௧௮ - ௧௧௯. உருவக் கொடியோ ருடைப்பெருங் கொழுநரொடு
பருவ மெண்ணும் படர்தீர் காலை

இ - ள். கொடியுருவினோர் இங்ஙனமாகிய இன்பங்களைக்கருதி அவற்றவற்றின்பங்களைநுகர்தற்குவிரும்பித் தம்மையுடைய பெரியகொழுநரோடிருந்து அப்பருவவரவை யெண்ணும் வருத்தநீங்கியகாலத்தே,

தம்முருவிற் கோலக்கொடியோரென்றுமாம். இவர் புறவீதிமகளிராய் முற்கூறிய கடைகழிமகளிர். இவர் ஆண்டுக்கூறிய காதலஞ்செல்வரோடிருந்து பருவமெண்ணுங்காலையென்க.

௧௨0 - ௧௨௫. கன்றம ராயமொடு களிற்றின நடுங்க
வென்றூழ் நின்ற குன்றுகெழு நன்னாட்டுக்
காடுதீப் பிறப்பக் கனையெரி பொத்திக்
கோடையொடு புகுந்து கூட லாண்ட
வேனில் வேந்தன் வேற்றுப்புலம் படர
வோசனிக் கின்ற வுறுவெயிற் கடைநாள்

இ - ள். கன்றுகண்மேவியபிடித்திரளோடே அவற்றைக்காக்கும் களிற்றினமும் கண்டு நடுங்கும்படி வெயில் நிலைபெற்ற மலைசார்நாட்டுக் காடெங்கும் தீப்பட்டெரியும்படி முழங்குமழலைமூட்டிக் கோடைக்காற்றோடேவந்துபுகுந்து கூடலைத் தானண்ட வேனிலரசன் தனக்குப்புகலிடமாகிய வேற்றுப்புலங்களிற்சேறற்கு முயலாநின்ற வெயிலையுடைய கடைநாளிலென்க.

கடைநாள் - பருவத்தின்கடைநாள். என்றூழ்நின்றவென்றார், காலைதொடங்கி மாலையளவும் ஒருதன்மையாகக்காய்தலின். ஓசனித்தல் - போதற்கு ஒருப்பட்டு

முயறல்; *"உடைதிரை முத்தஞ் சிந்த வோசனிக் கின்ற வன்னம்" என்றார் சிந்தாமணியினும். ஒரோர்தேயங்கட்கு ஒரொருகாலம் மாறிநிகழ்தலின் வேற்றுப் புலம்படரவென்றார்.

கஉசு - கநக. வையமுஞ் சிவிகையு மணிக்கா லமளியு
முய்யா னத்தி னுறுதுணை மகிழ்ச்சியுஞ்
சாமரைக் கவரியுந் தமனிய வடைப்பையுங்
கூர்நுனை வாளுங் கோமகன் கொடுப்பப்
பெற்ற செல்வம் பிறழா வாழ்க்கைப்
பொற்றொடி மடந்தையர் புதுமணம் புணர்ந்து

இ-ள். கூடாரப்பண்டியும் கடகத்தண்டும் பல்லக்குமென்னும் இவ்வரிசைகள்பெற்றதேயன்றி நீராவிச்சோலைக்கண்ணே தமக்கு உற்றதுணைவனாகிய அரசனோடுமேவி மெய்தொட்டு விளையாடுமகிழ்ச்சியும் கவரியும் அடைப்பையும் உடைவாளுமெடுக்கும்வரிசையும் தங்கோமகன்கொடுப்ப அவை எக்காலத்தும் மாறாத வாழ்வையுடைய மடந்தையர் நாடோறும் புதியாரோடு மணம்புணர்ந்து,

புதியவரிதயமறிந்து புணர்தலருமையிற் புணர்ந்தென்று அவர்வல்லபங்கூறினார். இன்னும், புணர்ந்தெனவே இப்புணர்ச்சிமுன்னர் இன்பம் விளைத்தற்கு ஊடனிகழ்ந்தமையுணர்க. உய்யானம் - அரசர் விளையாடும் காவற்சோலை. சாமரைக் கவரி - இருபெயரொட்டு. புதுமணம்புணர்தல் - கரணவிசேடமுமாம்.

கநஉ-கநந. செம்பொன்வள் ளத்துச் சிலதிய ரேந்திய
வந்தீந் தேறன் மாந்தினர் மயங்கி

இ-ள். அங்ஙனம்புணர்ந்த புணர்ச்சியாலுண்டாய வருத்தமகற்றிச் செருக்கு விளைத்தற்குச் சிலதியர் பொன்வள்ளத்தேந்திய அழகிய இனிய கட்டேறலைப் பருகினராகிப் பின்னுமயங்கி,

சிலதியர் - ஏவன்மகளிர்.

கநச-கசரு. பொறிவரி வண்டினம் புல்லுவழி யன்றியு
நறுமலர் மாலையின் வறிதிடங் கடிந்தாங்
கிலவிதழ்ச் செவ்வா யிளமுத் தரும்பப்
புலவிக் காலத்துப் போற்றா துரைத்த
காவியங் கண்ணார் கட்டுரை யெட்டுக்கு
நாவொடு நவிலா நகைபடு கிளவியு
மஞ்செங் கழுநீ ரரும்பவிழ்த் தன்ன
செங்கய னெடுங்கட் செழுங்கடைப் பூசலுங்
கொலைவிற் புருவத்துக் கொழுங்கடை சுருளந்

---

* சீவகசிந்தாமணி, முத்தியிலம்பகம், ௫௭. "உடைதிரை முத்தஞ் சிந்த வோசனிக் கின்ற வன்னம், படர்கதிர்த் திங்க ளாகப் பரந்துவான் பூத்த தென்ன, வடர்பிணி யவிழு மாம்ப லலைகடற் கானற் சேர்ப்பன், குடைகெழு வேந்தற் கிப்பா லுற்றது கூறலுற்றேன்."

திலகச் சிறுநுத லரும்பிய வியருஞ்
செவ்வி பார்க்குஞ் செழுங்குடிச் செல்வரொடு
வையங் காவலர் மகிழ்தரு வீதியும்

இ - ள். அங்ஙனமாகிய காவியங்கண்ணார் மதுமயக்கத்தான் இதழின்மறைகின்றவிழிகளைப் பூவினிதழின்மறைகின்ற தமதினமெனக்கருதிச் சேர்ந்த பொறியையுடைய வரிவண்டினத்தைப் பரிந்தமாலையாற் கடியக்கருதியவர் அவசத்தாற் கைசோர்தலின் அவைமொய்யாதவிடங்களைக் கடிந்து முன்னர்ப் புலவிக்காலத்தே இலவிதழ்போலும் செவ்வாயின்மீதே இளமுத்துப்போலும் எயிறுகள் அரும்பும்படி தங்கேள்வரைக் கவவுக்கொண்டு நெருக்கிய புலவிக்குறை நெஞ்சிற்கிடந்தது கூறக்கருதிய கட்டுரையை எண்வகைத்தானத்தோடு நாவால் நவிலப்பெறாது குழறுதலாற் கேட்டோர்க்கு நகைவரத்தக்ககிளவியும், அழகிய செங்கழுநீரின் நீர்க்கீழரும்பை நெகிழ்த்துப்பார்த்தாலொத்த சிவந்த கயல்போலும் நெடிய கண்ணின் கடைச் சிவப்பாற்செய்தபூசலும், கொலைசெய்தவிற்போலும் புருவத்தின்கோடிகள் உள்வளையத், திலகம்பொருந்திய சிறியநுதற்கணரும்பிய வியருமாகியவிவை தீருஞ்செவ்வி பார்த்துவருந்தும் மேம்பட்ட குடிப்பிறந்த செல்வரோடே வையத்தைக்காக்கும் அரசரும் விரும்பப்படும்வீதியும்,

வரி - வரிப்பாட்டு. புல்லுதல் - இனமென்று புல்லுதல். என்னை? *"ஒருத்தி, கணங்கொண் டவைமூசக் கையாற்றாள் பூண்ட, மணங்கமழ் கோதை பரிவுகொண் டோச்சி" எனவும், *"ஒருத்தி, யிறந்த களியா னிதழ்மறைந்த கண்ணள், பறந்தவை மூசக் கடிவாள் கடியு, மிடந்தேற்றாள் சோர்ந்தனள் கை" எனவும் பிறருங்கூறினார். கட்டுரை - புலவிக்குறையெல்லாம் பொதிந்தவுரை. நாவொடு - 'நாவால்' குழைவிலென்பாருமுளர். கிளவியும், பூசலும், வியரும் தீருஞ்செவ்விபார்க்குஞ் செல்வரென்க. இவர் அரசனைக் காக்குமகளிர்.

௧௪௩-௧௪௪. சுடுமண் ணேறா .... இருபெரு வீதியும்

௧௪௫-௧௪௬. சுடுமண் ணேறா வடுநீங்கு சிறப்பின்
முடியரசொடுங்குங் கடிமனை வாழ்க்கை

இ - ள். கொடுங்கோன்மையாகிய வடுநீங்கும் செங்கோற்சிறப்பினையுடைய முடிசூடிய அரசரொடுங்குங் கடிமனை; அஃது எத்தன்மையதாகிய கடிமனையென்னின்,—சுடுமண் ஏறாத மனை; அம்மனையில்வாழும் வாழ்க்கையென்க.

சுடுமண் - ஓடு. ஒடுங்குதல் - பிறரறியாமலடங்குதல். கடி - வரைவு; மிகுதியுமாம். வாழ்க்கையையுடைய எண்ணெண்கலையோரென்க. இனி, வடுநீங்கிய சிறப்பினையுடைமையாற் சுடுமண் ஏறப்படாத முடியரசொடுங்குங்கடிமனையெனப் பொருள்கூறினும் பொருந்தும். ஈண்டு, சுடுமணென்றது செங்கலை. வடு - குடிக்குற்றம்; ஆவது †பதியிலாரிற் குடிக்குற்றப்பட்டாரை ஏழுசெங்கற்சுமத்தி ஊர் சூழ்வித்துப் புறத்திடுதல்மரபு.

---

* கலித்தொகை, மூன்றாவதும்ருதம், ௨௭.

† பதியிலாரிற் குடிக்குற்றப்பட்டாரைச் செங்கற்சுமத்தி ஊர்சூழ்வித்துப் புறத்திடுதல் மரபென்பதனை, மணிமேகலையில், "மாதவி யீன்ற மணிமே கலை

௧௪௮-௧௫௦. வேத்தியல் பொதுவிய லெனவிரு திறத்து
மாத்திரை யறிந்து மயங்கா மரபி
னாடலும்

இ - ள். வேத்தியல் பொதுவியலென்று சொல்லப்பட்ட இருவகைக்கூத்தின் தாளவறுதிகளையறிந்து அவை மயங்காதமரபானே ஆடுமாடலும்,

இவையிரண்டும் நகைத்திறச்சுவைபற்றிநிகழும் விநோதக்கூத்து. இவற்றை வசைக்கூத்துமென்ப; "பல்வகை யுருவமும் பழித்துக் காட்ட, வல்ல தாதல் வசையெனப் படுமே" என்றாராகலின்.

௧௫௦. வரியும—இ - ள். எண்வகையாகிய வரிக்கூத்துக்களும்,

அவையாவன: கண்கூடுவரி, காண்வரி, உள்வரி, புறவரி, கிளர்வரி, தேர்ச்சி வரி, காட்சிவரி, எடுத்துக்கோள்வரியெனவிவை; என்னை? "கண்கூடு காண்வரி யுள்வரி புறவரி, கிளர்வரி யைந்தோ டொருமூ வுரைப்பிற், காட்சி தேர்ச்சி யெடுத் துக் கோளென, மாட்சியின் வரூஉ மெண்வகை நெறித்தே" என்றாராகலின். இனி, இவ்வரியென்பதனை, நிலனும் தொழிலும் தோன்றநடிக்கும் விநோதக்கூத் தென்பாருமுளர்; என்னை? "வரியெனப் படுவது வகுக்குங் காலைப், பிறந்த நில னுஞ் சிறந்த தொழிலு, மறியக் கூறி யாற்றுழி வழங்கல்" என்றாராகலின். இவற் றின்பகுதி விரிப்பிற் பெருகும்; வந்தவழிக் காண்க.

௧௫௦. பாணியும்—இ - ள். தாளங்களும,

அவை, கொட்டும் அசையும் தூக்கும் அளவுமெனவிவை; என்னை? "கொட்டு மசையுந் தூக்கு மளவு, மொட்டப் புணர்ப்பது பாணி யாகும்" என்றாராகலின். அவற்றுள், கொட்டென்பது அரைமாத்திரை, வடிவு க; அசையென்பது ஒருமாத் திரை, வடிவு எ; தூக்கென்பது இரண்டுமாத்திரை, வடிவு உ; அளவென்பது மூன்றுமாத்திரை, வடிவு ஃ; என்னை? "ககரங் கொட்டே யெகர மசையே, *யுகரந் தூக்கே யளவே யாய்தம்" என்றாராகலின். இனி இவற்றின்றொழில்:— கொட்டாவது அமுக்குதல்; அசையாவது தாக்கியெழுதல்; தூக்காவது தாக்கித் தூக்குதல்; அளவாவது தாக்கினவோசை நேரே மூன்றுமாத்திரைபெறுமளவும் வருதலெனக்கொள்க.

௧௫௦. தூக்கும்—இ - ள். தூக்குக்களும்,

வல்லி, போதவிழ் செவ்வி பொருந்துதல் விரும்பிய, உதய குமரனு முலகாள் வண டின், சிதையா வுள்ளஞ் செவ்விதி னருந்தக், கைக்கொண் டாங்கவ ளேந்திய கடி ஞையைப், பிச்சை மாக்கள் பிறர்கைக் காட்டி, மற்றவன் றன்னுன் மணிமே கலை தனைப், பொற்றேர்க் கொண்டு போதே னாகிற், சுடுமண் ஏற்றி யாங்குஞ் சூழ் போகி, வடுவொடு வாழு மடந்தையர் தம்மோர், ரனையே னாகி யரங்கக் கூத்தியர், மனையகம் புகாஅ மரபினள்" என்று சித்திராபதி வஞ்சினங்கூறுமாற்றாலும் உண ர்க; ௧௮ - வது உதயகுமரன் அம்பலம்புக்ககாதை. சித்திராபதி - மாதவிதாய்.

* யகரந் தூக்கே என்றும் பாடம்.

அவையாவன : இத்தாளங்களின்வழிவரும் செந்தூக்கு, மதலைத்தூக்கு, துணிபுத்தூக்கு, கோயிற்றூக்கு, நிவப்புத்தூக்கு, கழாற்றூக்கு, நெடுந்தூக்கெனப்பட்ட ஏழுதூக்குக்களும் ; என்னை ? "ஒருசீர் செந்தூக் கிருசீர் மதலை, முச்சீர் துணிபு நாற்சீர் கோயி, லைஞ்சீர் நிவப்பா மறுசீர் கழாலே, யெழுசீர் நெடுந்தூக் கென்மனார் புலவர்" என்றாராகலின்.

௧௫௧. கூடிய குயிலுவக் கருவியு முணர்ந்து

இ - ள். முற்கூறிய ஆடன்முதலியவற்றோடுங்கூடியிசைக்கும் நால்வகை உத்தமத் தோற்பெருங்கருவிக் கூறுபாடுகளையுமுணர்ந்து,

நால்வகை உத்தமத் தோற்பெருங்கருவிகளாவன : மத்தளம், தண்ணுமை, இடக்கை, சல்லிகையென்பன ; என்னை ? "மத்தளந் தண்ணுமை யிடக்கைசல் லிகையென, வைத்த நான்கு முத்தமக் கருவி" என்றாராகலின். தண்ணுமை - குடமுழா.

௧௫௨-௧௫௪. நால்வகை மரபி னவினயக் களத்தினு
மெழுவகை நிலத்தினு மெய்திய விரிக்கு
மலைபருஞ் சிறப்பிற் றலைக்கோ லரிவையும்

இ - ள். அங்ஙனம் பிழையாமலுணர்ந்து நால்வகைப்பட்ட மரபினையுடைய அவினயநிலத்தினும் எழுவகைப்பட்டநிலத்தினும் சென்றெய்தும்படி கோப்புக் கலைவிரிக்கும் மலைத்தற்கரிய சிறப்பினையுடைய தலைக்கோற்பட்டமெய்திய அரிவையும்,

அவற்றுள், அவினயநிலம் நான்காவன : நிற்றலும், இயங்கலும், இருத்தலும், கிடத்தலுமென்பன ; என்னை ? "நிற்ற லியங்க லிருத்தல் கிடத்தலென், றத்தகு நான்கே யவிநயக் களனே" என்றாராகலின். எழுவகைநிலமாவன : ச ரி க ம ப த நியென்னுமெழுவகைப்பட்ட எழுத்தடியாகப்பிறக்கும் குரன்முதலாகிய ஏழும்.

௧௫௫. வாரம் பாடுந் தோரிய மடந்தையும்

இ - ள். வாரப்பாட்டினைப்பாடும் தோரியமடந்தையும்,

இவள் ஆடிமுதிர்ந்தபின்பு பாடன்மகளாய் ஆடன்மகளிர்காலுக்கு ஒத்தறுத்துப்பாடுங்கால் இடத்தூண்சேர்ந்தியலுமவள் ; என்னை ? "ஒக்கெறி வகையா லிடத்தூண் சேர்வோ, டொன்னெறி *மரபிற் றோரிய மகளே" †"தலைக்கோ லரிவை குணத்தொடு பொருந்தி, நலத்தகு பாடலு மாடலு மிக்கோ, ளியற்படு கோதைத் தோரிய மகளே" என்பனவற்றானறிக. வாரமாவது பற்று. அஃது இருவகைப் படும் ; ஒரொற்றுவாரம், ஈரொற்றுவாரமென. அவை தாளத்து ஒருமாத்திரையும், இரண்டுமாத்திரையும் பெற்று வருமெனக்கொள்க.

௧௫௬. தலைப்பாட்டுக் கூத்தியும்—இ - ள். தலைப்பாட்டைப்பாடுங்கூத்தியும்,

---

* இயற்கையெனவும்பாடம்.

† "தலைக்கோ லரிவை தாளத்தொடு பொருந்த, மலைத்தகு பாடலு மாடலு மிக்கோ, ளியற்படு கோதைத் தோரிய மகளே" எனவும் பாடம்.

௧௫௬. இடைப்பாட்டுக் கூத்தியும்—இ-ள். இடைப்பாட்டைப்பாடுங் கூத்தியும்,

தலைப்பாட்டாவது உகம்; இடைப்பாட்டாவது ஒளகம். இவர் கூட்டக்கூத்தியர். இவையெல்லாம் முன்னம் அரங்கேற்றுகாதைமுதலியவற்றுள் விரித்துக் கூறினவாதலின், ஈண்டும் விரித்துக்கூறுதல் 'கூறியது கூறல்' என்னுங்குற்றமாமெனின், ஒக்கும்; ஆண்டுக் கூறிய அடிகளே ஈண்டுங்கூறுதலானும், இக்காதை ஒன்றனையுமே கற்றுணர்வார்க்குப் புலப்படவேண்டுதலானும் ஈண்டும் விரித்துரைக்கப்பட்டன.

௧௫௭-௧௫௯. நால்வேறு வகையி னயத்தகு மரபி
னெட்டுக் கடைநிறுத்த வாயிரத் தெண்கழஞ்சு
முட்டா வைகன் முறைமையின் வழா

இ-ள். மேற்கூறிய தலைக்கோலரிவைமுதலான நால்வேறுவகையோடுங்கூடி, யாவரும் விரும்பத்தகும் முறைமையினால் ஒன்றுமுதல் ஆயிரத்தெண்கழஞ்சீறாக நாடோறும்பெறும் முறைமையினின்றும் வழுவாத,

என்றது தத்தம் ஆடல் பாடல் அழகென்னுமிவற்றாற்பெற்ற சீரின்வழித்தாகிய ஒன்றுமுதல் ஆயிரத்தெண்கழஞ்சீறாக நிச்சயிக்கப்பட்ட முறைமை; *"ஒப்பவொன் றாதி யாக வாயிரத் தோரெட் டீறாச், செப்பி" என்றார்பிறரும்.

௧௬௦-௧௬௭. தாக்கணங் கனையார் நோக்குவலைப் பட்டாங்
கரும்பெற லறிவும் பெரும்பிறி தாகத்
தவத்தோ ராயினுந் தகைமலர் வண்டின்
நகைப்பதம் பார்க்கு மிளையோ ராயினுங்
காம விருந்தின் மடவோ ராயினு
மேம வைக லின்றுயில் வதியும்
பண்ணுங் கிளையும் பழித்த தீஞ்சொ
லெண்ணெண் கலையோ ரிருபெரு வீதியும்

இ-ள். தீண்டவருத்தும் அணங்குபோல்வாருடைய கண்ணாகிய வலையிலகப்பட்டு அப்பொழுதே பெறுதற்கரிய தமது அறிவுமுதலியனகெடத் தவத்தோராயினும் நல்ல அவிழ்ந்த மலர்தோறுஞ்சென்று அவற்றின்றேனைப்பருகிப் பின்பாராது செல்லும் வண்டுபோல ஒருவழித்தங்காது புதுவோர்ப்புணர்ந்துசெல்லும் காமுகராயினும் காமவின்பத்திற்குப்புதியோராய் முன்புநுகர்ந்தறியாத பேதையோராயினும் நாடோறும் புணர்ச்சிமயக்கத்தோடுகூட்டிய் இனியதுயிலோடே தங்குவிக்கப்படும் பண்களையும் அவற்றின் திறங்களையும்பழித்த இனியசொல்லையுடைய அறுபத்துநான்கென்றுதொகுத்த கலைகளைவல்லோராகிய பதியிலாருடைய இருவகைப் பட்டவீதிகளும்,

அணங்கு - தெய்வமகள். ஆங்கு - அசையுமாம். நகை - ஆகுபெயராகிய இடக்கர். அன்றி அவர் காமக்குறிப்புநிகழநகைக்கும் நகையுமாம். பண் நான்கா

---

* சீவகசிந்தாமணி, நாமகளிலம்பகம், ௭௮.

வன: பாலை குறிஞ்சி மருதம் செவ்வழியென்பன. அவற்றின்திறங்களாவன: பாலைக்குப் புறம் - தேவாளி; அருகு - சீர்கோடிகம்; பெருகு - நாகராகம். குறிஞ்சிக்குப் புறம் - செந்து; அருகு - மண்டிலம்; பெருகு - அரி. மருதத்திற்குப் புறம் - ஆகரி; அருகு - சாயவேளர்கொல்லி; பெருகு - கின்னரம். செவ்வழிக்குப் புறம் - வேளாவளி; அருகு - சீராகம்; பெருகு - சந்தி. பிறவும் வந்தவழிக் கண்டு கொள்க. இருபெருவீதியாவன: சிறுதனம், பெருந்தனம்.

இத்துணையும் வீதிகளைச் சிறப்பித்துக்கூறி, இனி அங்காடிவீதிகூறுவார், கம்மியர்முதலாயினோர் புண்ணிவிற்பன கூறுகின்றார்.

௧௫௮ - ௧௭௯. வையமும்... ... ...அங்காடிவீதியும்

௧௫௮. வையமும்—இ - ள். கொல்லாப்பண்டியும்,

௧௫௮. பாண்டிலும்—இ - ள். தேர்வட்டையும்,

௧௫௮. மணித்தேர்க் கொடிஞ்சியும்—இ - ள். அழகிய தேர்மொட்டும்,

௧௫௯. மெய்புகு கவசமும்—இ - ள். மெய்புகுதற்கிடமாகிய கவசமும்,

௧௫௯. வீழ்மணித் தோட்டியும்—இ - ள். விரும்பப்படும் மணிகளழுத்தின அங்குசங்களும்,

௧௬௦. அதள்புனை யரணமும்—இ - ள். தோற்கைத்தளமும்,

௧௬௦. அரியா யோகமும்—இ - ள். கருவிவிலக்காகப் புனைந்த அரைப்பட்டிகையும்,

அரிதல்செய்யாத யோகமென்க; வியாதிகளைக்கெடுக்கும் மருந்தென்றுமாம்.

௧௬௧. வளைதரு குழியமும்—இ - ள். கட்டுக்குழியமும்,

௧௬௧. வால்வெண் கவரியும்—இ - ள். மிகவும் வெள்ளிய சாமரமும்,

௧௬௨. ஏனப் படமும்—இ - ள். பன்றிமுகக்கடகும்,

௧௬௨. கிடுகின் படமும்—இ - ள். தோற்கடகும்,

௧௬௩. கானப் படமும்—இ - ள். கானமாகியகடகும்,

கானத்துள்ளனவெல்லாம் எழுதுதலிற் கானமாயிற்று.

௧௬௩. காழ்ஊன்று கடிகையும்—இ - ள். குத்துக்கோல்களும்,

௧௬௪. செம்பிற் செய்நவும்—இ - ள். செம்பாற்செய்தனவும்,

௧௬௪. கஞ்சத் தொழிலவும்—இ - ள். கஞ்சத்தாற்செய்தனவும்,

௧௬௫. வம்பின் முடிநவும்—இ - ள். புதுமையாக முடிவனவும்,

என்றது அல்லிக்கயிறு குசைக்கயிறு முதலியன; வம்பு - கயிறு.

௧௬௫. மாலையிற் புனைநவும்—இ - ள். மாலையின்வர்க்கமாகப் புனைவனவும்,

என்றது தூக்குவர்க்கம்; இடையான் மாலைவிசேடங்களாகப் புனைந்துவிற்பனவும் பூமாலைவர்க்கமுமென்ப.

௧௬௬. வேதினத் துப்பவும் — இ - ள். ஈர்வாட்டொடக்கத்தனவாகிய கருவிகளும்; துப்பு - கருவி.

௧௭௬. கோடுகடை தொழிலவும்—இ-ள். ஆனைக்கோடு முதலியவற்றைக் கடையும் தொழிற்குரிய கருவிகளும்,

௧௭௭. புகையவும்—இ-ள் அகிற்புகைக்குறுப்பாயுள்ளனவும்,

அவை "நேர்கட்டி செந்தேனிரியாசம் பச்சிலை, யார மகிலுறுப்போ டாறு" என்பன.

௧௭௭. சாந்தவும்—இ-ள். மயிர்ச்சாந்துக்கு உறுப்பாயுள்ளனவும்; மெய்ச்சாந்துறுப்புமாம்.

௧௭௭. பூவிற் புனைநவும்—இ-ள். பூவாற்புனையப்படும் மாலைவிசேடங்களாயுள்ளனவும்,

௧௭௮-௧௭௯. வகைதெரி வறியா வளந்தலை மயங்கிய
அரசுவிழை திருவி னங்காடி வீதியும்

இ-ள். இச்சொல்லப்பட்ட வகைகள் இன்னதற்கு இவையெனத் தெரிதற்கரிய இவ்வளங்கள் தலைமயங்கியிருக்கின்ற அரசரும் காணடற்குவிரும்பப்படும் செல்வத்தையுடைய அங்காடித்தெருவுமென்க.

இங்ஙனம் பெரியகடை ஒருவாற்றாற்கூறி, இரத்தினக்கடையும் பொற்கடையுங்கூறுவார்.

௧௮௦-௧௮௩. காக பாதமுங் களங்கமும் விந்துவு
மேகையு நீங்கி யியல்பிற் குன்றா
நூலவர் நொடிந்த நுழைநுண் கோடி
நால்வகை வருணத்து நலங்கே ழொளியவும்

இனி அம்மணிகளொன்பதினும் வயிரத்திற்குக் குற்றமுங்குணமுங்கூறுவார்.

இ-ள். நூலோரால் குன்றுதலையுடையவென்று வரைந்துசொல்லப்பட்ட குற்றம் பன்னிரண்டினுள், காகபாதமும் களங்கமும் விந்துவும் ஏகையுமென்னும் இக்குற்றங்கள்நான்கும் நீங்கிக் குன்றாவாகிய குணங்களைந்தையும் வருணநான்கினிறங்களையும் இந்திரசாபம்போலும் ஒளியையுமுடைய வயிரச்சாதியும்,

இவற்றுட் குற்றம் பன்னிரண்டாவன: சரைமலம் கீற்று சம்படி பிளத்தல் துளை கரி விந்து காகபாதம் மிருத்து கோடியில்லன கோடிமுரிந்தன தாரைமழுங்கலெனவிவை; "சரைமலங் கீற்றுச் சம்படி பிளத்த, றுளைகரி விந்து காக பாத, மிருத்துக் கோடிக ளிலாதன முரித, றாரை மழுங்க றன்னோ, டீராறும வயிரத் திழிபென மொழிப" என்றாராகலின். இனிக் குணங்களைந்தாவன: எட்டுப்பலகையும், ஆறுகோடியும், தாரையும், சுத்தியும், தராசமுமெனவிவை; "பலகை யெட்டுங் கோண மாறு, மிலகிய தாரையுஞ் சுத்தியுந் தராசமு, மைந்துங் குணமென் றறைந்தனர் புலவ, ரிந்திர சாபத் திகலொளி பெறினே" என்றார். நால்வகைவருணத்தொளியாவன: "அந்தணன் வெள்ளை யரசன் சிவப்பு, வந்த வைசியன் பச்சை சூத்திர, னந்தமில் கருமையென் றறைந்தனர் புலவர்." இனி மிக்ககுற்றங்கள் நான்கின் பயனுவன: "காக பாத நாகங் கொல்லும்." "மலம்பிரி யாதது கிலந்தரு கிளைகெடும்." "விந்து சிந்தையிற் சந்தா பந்தரும்". "கீற்று வரலினை யேற்றவர் மாய்

வர்'' எனவரும். இனி வருணநான்கின்பயனுவன: ''மறையோ னணியின் மறையோ னாகிப், பிறவி யேழும் பிறந்துவாழ் குவரே'' ''மன்னவ னணியின் மன்னவர் சூழ, விந்தில வேந்த ராவ ரெழுபிறப்பும்'' ''வணிக னணியின் மணி பொன் மலிந்து, தணிவற வடைந்து தரணியில் வாழ்வர்'' ''சூத்திர னணியிற் றொகையில் கனகநெல், வாய்ப்பு மன்னி மகிழ்ந்துவாழ் குவரே'' எனவரும். ஏகை - இரேகை. இயல்பெனவே பலகை எட்டென்பதூஉம், கோடி ஆறென்பதூஉம் பெறுதும். குன்றுவென்பதனை அருத்தாபத்தியாக்கிக் குன்றுதலையுடைய வெனக் குற்றநான்கிற்குமேற்றுக. நுழைநுண்கோடி - இருபெயரொட்டாய் மிகவும் கூர்த்தகோடியென்பதாயிற்று. ஒளியவெனவே குறிப்பெச்சமாய் வலனென்பதாயிற்று.

முன்னர் வலனென்பாகிய வயிரச்சாதிகூறி, இனி அவன் வயிற்றின்புறத்தைக் கொத்திவிழுங்கியகருடன் நகைத்தலானுமிழ, அஃது இமவான்முதலிய பன்மலைகளிலும் வீழ்ந்துபிறத்தலிற் கருடோற்கார மென்றுபெயர்பெற்ற மரகதச்சாதிகூறுவார்.

௧அ௪-௧அ௬. ஐயை மாலை யிருளொடு துறந்த
பாசார் மேனிப் பசுங்கதி ரொளியவும்

இ-ள். ஐயையும் மாலையுமென்னும் குற்றங்களை இருளென்னும் குற்றத்தோடேநீக்கின பசுமைநிறைந்த மெய்யாயயுடைய பசிய கதிரொளிபரந்த மரகதச் சாதியும்.

இதற்குக் குற்றமெட்டவை: அவை, கருகல் வெள்ளை கல் மணல் கீற்று பரிவு, தார் சாயையிறுதல் என்பவை; என்னை? ''கருகுதல் வெள்ளை கன்மணல் கீற்று, பரிவுதார் சாயை யிறுதலென மரகதத், தெண்ணிய குற்ற மிவையென மொழிப'' என்றாராகலின். இவற்றுள், மிக்க குற்றமுடையன இம்மூன்றுமென்றுணர்க. ஐகை - இரேகைக்கீற்று; மாலை - தார; இருள் - கருகுதல். பாசார் மேனிப் பசுங்கதிரொளியென்ற மிகையானே குணங்களும் எட்டென்பதேபெறுதும்; ''நெய்த்தல் மயிற்கழுத்து ஒத்தலைபைம் பயிரிற், பசுத்தல் பொன்னுமை தன்னுடன் பசுத்தல், வக்கி பாய்தல் பொலிவுண் டென்வயி, ருசதுத் தெளிதலொ டெட்டுங் குணமே'' என்றாராகலினெனக்கொள்க.

௧அ௭-௧அ௮. பதுமம் நீலமும் விந்தமும் படிதமும
விதிமுறை பிழையா விளங்கிய சாதியும்

இ-ள். நூல்களின்விதித்த முறையிற்பிழையாவாய் விளங்கிய பதுமமும் நீலமும் விந்தமும் படிதமுமென்னும் நால்வகைச்சாதி மாணிக்கவருக்கமும்,

விதிமுறைபிழையாவெனவே பிறப்பிடமும், வருணமும், பெயரும், குணமும், குற்றமும், நிறமும், விலையும், பத்தியுமென்னுமிவையும் பிறவுமடங்கின; என்னை? ''மாணிக் கத்தியல் வருக்குங் கா[...]ச், சமனொளி சூழ்ந்த விருநான் கிடமு, நால்வகை வருணமு நவின்றவிப் பெயரும், பன்னிரு குணமும் பதினறு குற்றமு, மிருபத் தெண்வகை யிலங்கிய நிறமு, மருவிய விலையும் பத்தி பாய்தலு, மிவையென மொழிப வியல்புணர்ந் தோரே'' என்றாராகலின். இவற்றுள், பதுமம் - பதுமராகம்; சாதுரங்கமென்பதுமது. நீலம் - நீலகந்தி; சௌகந்தியென்பதுமது.

விந்தம் - குருவிந்தம் ; இரத்தவிந்தவென்பதுமது. படிதம் - கோவாங்கு. என்னை? "வன்னியிற் கிடக்கும் வருணநாற் பெயரு, முன்னிய சாதுரங்க மொளிர்குரு விந்தஞ், சௌகந்தி கோவாங்கு தானு மும்மே." எ-ம், *"தாமரை கழுநீர் சாதகப் புட்கண், கோப மின்மினி கொடுங்கதிர் விளக்கு, மாதுளைப் பூவிதை வன்னியி னைந்து, மோதுசா தூரங்க வொளியா கும்மே" எ-ம், திலக முலோத்திரஞ் செம்பருத் திப்பூக், கவிர்மலர் குன்றி முயலுதி ரம்மே, சிந்தூரங் குக்கிற் கண்ணென வெட்டு, மெண்ணிய குருவிந்த மன்னிய நிறமே" எ-ம், "கோகிலக்கண் செம்பஞ்சு கொய்ம்மலர்ப் பலாச, மசோகப் பல்லவ மணிமலர்க் குவளை, யிலவத் தலர்களொன் றுறு குணமுஞ், சௌகந் திக்குச் சாறறிய நிறனே" எனவும், "கோவைநற் செங்கல் குராமலர் மஞ்சளெனக், கூறிய நான்குங் கோவாங்கு நிறனே" எனவும் சொன்னார். ஒழிந்தனவும் விரிபபின், உரைபெருகும் ; வந்தவழிக்கண்டுகொள்க.

௧௮௮. பூச வுருவிற் பொலங்தெளித் தனையவும்

இ-ள். பூசத்தினது உருவினையுடைய பொன்னை மாசறத் தெளியவைத்தாலொத்த புருடராகவருக்கமும்,

௧௮௯. நீதறு கதிரொளித் தெண்மட் டுருவவும்

இ-ள். குற்றமற்ற ஞாயிற்றொளியெனத் தேன்றுளியெனச் சொல்லப்பட்ட வயிரேரியவருக்கமும்,

௧௯௦. இருடெளித் தனையவும் — இ-ள் இருளைத் தெளியவைத்தாலனைய நீலமணிவருக்கமும்,

இதற்குச்சாதிநான்கும் குணம் பதினொன்றும் குற்றம் எட்டுமெனக்கொள்க. என்னை? "நீலத் தியல்பு நிறக்குங் காலே, நால்வகை வருணமு நன்றாமா கரமுங், குணம்பதி னொன்றுங் குறையிரு நான்கு, மணிவோர் செயலு மறிந்திசி னோரே" என்றாராகலின். "வெள்ளை சிவப்புப் பச்சை கருமையென், றெண்ணிய நாற்குலத் திலங்கிய நிறமே" "கோகுலக் கழுத்துக் குவளை சுரும்ப, ராகுலக் கண்களவிரிச் சாறு, ... காயா நெய்தல் கனத்தல் பத்தி, பாய்த லெனக்குணம் பதினொன் றுமே" என்பன. இனிக் குற்றம் வந்தவழிக் கண்டுகொள்க.

௧௯௦. இருமேவ றுருவவும்— இ-ள். மஞ்சளும் சிவப்புங்கலந்தாலொத்த நிறத்தையுடைய கோமேதகவருக்கமும்,

௧௯௧-௧௯௨. ஒருமைத் தோற்றத் தைவேறு வனப்பி
னிலங்கு கதிர்விடூஉ நலங்கெழு மணிகளும்

* "சாதகப் புட்கண் டாமரை கழுநீர், கோப மின்மினி கொடுங்கதிர் விளக்கு, வன்னி மாதுளம் பூவிதை யென்னப், பன்னுசா தூரங்க வொளிக்குணம் பத்துஞ், செம்பஞ் சரத்தந் திலக முலோத்திர, முயலின் சோரி சிந்தூரங் குன்றி, கவிரல ரென்னக் கவர்நிற மெட்டாங், குருவிந் தத்திற் குறித்தன நிறமு, மசோகப பல்லவ மலரிசெம் பஞ்சு, கோகிலக் கண்ணே யிலவலர் செம்பெனத், தருசௌகந்தி தன்னிற மாறுஞ், செங்கல் குராமலர் மஞ்சள் கோவை, குங்கும மஞ்சிற் கோவாங்கு நிறமும்,... ... , இவையெனக் கூறிய நீலறயருட் கடவுள்" என்றார் கல்லாடத்திலும்,

இ - ள். ஒருமுதலிற்றோன்றி வேறுபட்ட ஐந்துவனப்பினையுடைய மாணிக்கம் புருடராகம் நீலம் கோமேதகம் வயிடூரியமென்னும் ஒளிவிடுமணிகளும்,

இவை ஒருவயிற் பல்பிறப்பு.

௧௯௩-௧௯௬. காற்றினு மண்ணினுங் கல்லினு நீரினுந்
தோற்றிய குற்றந் துகளறத் துணிந்தவுஞ்
சந்திர குருவே யங்கா ரகனென
வந்த நீர்மைய வட்டத் தொகுதியும்

இ - ள். காற்றினும் மண்ணினும் கல்லினும் நீரினுமுண்டாய்த் தோற்றிய மிக்ககுற்றங்கள் ஒருதுகளளவும் இல்லையாதலாலே தெளிந்த ஒளியையுடையனவும், சந்திரன் வெள்ளி அங்காரகன்போல வெண்ணீர்மை செந்நீர்மையையுடையவாய் உருண்டனவுமான முத்தவருக்கமும்,

காற்றேறு மணலேறு கல்லேறு நீர்நிலையென்பன மிக்ககுற்றங்கள்; பிறவும் குற்றங்கள்பலவுளவாயினுமென்க. சந்திரன் வெள்ளி அங்காரகனென்பன மிக்க குணமுடையன, பிறவும் குணங்களுளவாயினுமெனக்கொள்க. வட்டம் — நடு வட்டம்.

௧௯௭-௧௯௮. கருப்பத் துளையவுங் கல்லிடை முடங்கலுந்
திருக்கு நீங்கிய செங்கொடி வல்லியும்

இ - ள். கருப்பத்தே துளைபட்டனவும் கல்லிடுக்கிற்புக்கு முடங்குபட்டனவும் திருக்குமுறுக்குண்டெழுந்தனவுமென்னும் இக்குற்றங்களினீங்கிய செம்மைமிக்குக் கொழுவிதாகவளர்ந்த கொடிப்பவளவருக்கமும்,

இவை மிக்ககுற்றங்கள்; பிறவும் குற்றங்களுளவாயினுமெனக்கொள்க. இனிக் குணமிக்குக் குற்றங்களினீங்கியன, நிறமும் உருட்சியும் சிந்தூரமுமிக்க செங்காயும் முசுமுசுக்கைக் கனியும் தூதுவழுதுணம்பழமும் போல்வனவெனக்கொள்க.

௧௯௯-௨௦௦. வகைதெரி மாக்க டொகைபெற் றோங்கிய
பகைதெற லறியாப் பயங்கெழு வீதியும்

இ - ள். இவ்வொன்பதுவகைப்பட்ட மணியின் பிறப்புமுதல் சிறப்பீறாகிய வகைகளைத் தெரியவல்ல வணிகர்தொகுதலாற் சிறப்புப்பெற்றோங்கிப் பகைவரால் தெறுதற்றொழிலை எக்காலத்தும் கண்டறியாத பயன்மிக்க இரத்தினக்கடைத் தெருவும்,

பகைவர்தெறுதலைக் கனவிலுநினைந்தறியாதவெனவுமாம்.

௨௦௧-௨௦௪. சாதரூபங் கிளிச்சிறை யாடகஞ்
சாம்பூ நதமென வோங்கிய கொள்கையிற்
பொலந்தெரி மாக்கள் கலங்கஞ ரொழித்தாங்
கிலங்குகொடி யெடுக்கு நலங்கிளர் வீதியும்

இ - ள். சாதரூபமும் கிளிச்சிறையும் ஆடகமும் சாம்பூநதமுமென்னும் நால்வகைச்சாதிப்பெயர்பெற்றோங்கிய கோட்பாட்டையுடைய பொற்பேதத்தைப் பகுத்தறியும் பொன்வாணிகர் எவ்விடத்து எப்பொன்னுளதென்று ஐயுறுந்துன்ப

மொழிக்கும்படி இவ்விடத்து இப்பொன்னுள்ளதெனவிளக்கக் கொடிகள் வயின் வேறுவேறெடுக்கும் நன்மைபொருந்திய பொற்கடைகளும்,

ஒழித்து - ஒழிப்ப. ஆங்கு - அந்த அந்தவிடங்களிலே.

௨௦௫ - ௨௦௭. நூலினு மயிரினு நுழைநூற பட்டினும்
பால்வகை தெரியாப பன்னூ றடுக்கத்து
நறுமடி செறிந்த அறுவை வீதியும்

இ - ள். நுண்ணிய பருத்திநூலினானும் எலிமயிரினானும் பட்டுநூலினானும் தத்தம் பகுதிகளால் நெய்யப்பட்டு ஒன்றை நூலாகத் தெரிந்தக்கப்பட்ட அடுக்குப் பலநூறாகிய மடிப்புடைவைகள் நெருங்கவைத்த புடைவைக்கடைகளும்,

புடைவைக்கடைகளுக்கு வாசங்கொடுத்தலின், நறுமடியென்றார்.

௨௦௮ - ௨௧௧. நிறைக்கோற் றுலாத்தர் பறைக்கட் பராரைய
அம்பண அளவைய ரெங்கணுந் திரிதரக்
கால மன்றியுங் கருங்கறி மூடையொடு
கூலங் குவித்த கூல வீதியும்

இ - ள். நிறுக்குந்துலாக்கோலையுடையராய் மறிக்கும் பறையையுடையராய் அளக்கும் மரக்காலையுடையராய்த் தரகுசெய்வார் நின்றுழி நில்லாது எங்கும் தடுமாறும்படி எக்காலமும் பெரிய மிளகுபொதியுடனே பாக்கும் நிறக்கும்பண்டப் பொதிகளும் ஈரெண்வகைத்தாகிய கூலங்களுங்குவித்த கூலக்கடைத்தெருவும்,

பறைக்கட்பராரை - பராரைக்கட்பறையென்க. என்றது பரிய அரையையும் இரும்பால் வாய்மட்டாகக்கட்டின கண்ணையுமுடைய பறையென்றபடி. அம்பணம் - தரகர்அளக்குமரக்கால். காலமன்றியுமென்றதற்கு இரவும் பகலுமெனவுமாம். கருமை - பெருமை. இதனை மூடைக்கேற்றுக; கறிக்கேற்றின் கருமையும். மூடை - பொதி. ஒடு - எண்ணொடு; ஒடுவெண்ணின் பின்னும் சிலபண்டங்களையும் உணர்த்திநின்றது. கூலம் - ஈரெண்வகைத்து; என்னை? "நெல்லுப் புல்லு வரகு தினை சாமை, யிறுங்கு தோரை யிராகியொடு கூலம்" எனவும், "எள்ளுக் கொள்ளுப் பயறுழுந் தவரை, கடலை துவரை மொச்சை யென்றாங், குடன்பிறை முதிரைக் கூலத் துணையே" எனவும் சொன்னாராகலின்.

௨௧௨ - ௨௧௮. பால்வேறு தெரிந்த நால்வேறு தெருவும்
அந்தியுஞ் சதுக்கமு மாவண வீதியும்
மன்றமுங் கவலையு மறுகுந் திரிந்து
விசும்பகடு திருகிய வெங்கதிர் நுழையாப்
பசுங்கொடிப் படாகைப் பந்தர் நீழற்
காவலன் பேரூர் கண்டுமகிழ் வெய்திக்
கோவலன் பெயர்ந்தனன் கொடிமதிற் புறத்தென

இ - ள். குலம் நான்காகப்பகுத்தவகையால் தெரிந்த அந்தணர் அரசர் வாணிகர் வேளாளரெனச்சொல்லப்பட்டாரிருக்கும் நான்காய்வேறுபட்ட தெருக்களும் முச்சந்தியும் நாற்சந்தியும் கோயிலங்காடியும் பலிபெறும் மன்றிடங்களும் கவர்க்கு

நெறிகளும் தேர்வீதிகளுமாகிய இவ்விடங்களில் ஞாயிறு விசும்பினடுவாக நின்று முறுகி ஓடுதலின் அதனுடைய வெங்கதிர்கள்நுழையப்படாத புதிய கொடியும் படாகையுமென்னும் இவற்றின்பந்தர்நிழலிலேயிருந்து காவலனது பெரிய நகரியைக்கண்டு மகிழ்ச்சியெய்துதலாலே பொருந்துழியறிதலைமறந்து போந்தானென்க.

கவலை - முடுக்குவழிகள். கதிர் மேடவீதியின் நீங்குதலின் விசும்பகடுதிருகிய வென்றார். அகடு - நடு. திருகுதல் - முறுகுதல்; "தெறுகதிர் ஞாயிறு நடுநின்று காய்தலின்" என்றார் பிறரும். கொடி - சிறுகொடி. படாகை - பெருங்கொடி.

ஊர்ப்ப அவிழ்த்தமண்டிலம் துயிலெடுப்ப இயம்பச் சென்று ஏத்திச் சிறுமையுற்றேனென்றலும், கவுந்தியடிகள், அனையையுமல்லை; பெற்றனையன்றே; வருந்தாதேகிப் போதிங்கென்றலும மருங்கிற்போகி அயிராதுபுக்கு மகிழ்தருவீதியும் இருபெருவீதியும் அங்காடிவீதியும் பயங்கெழுவீதியும் நலங்கிளர்வீதியும் அறுவைவீதியும் கூலவீதியும் நால்வேறுதெருவும் அந்தியும் சதுக்கமும் ஆவணவீதியும் மன்றமும் கவலையும் மறுகுமாகிய இவ்விடங்களில் பந்தர்நிழலிற்றிரிந்து காவலனூரைக் கோவலன்கண்டு மகிழ்வெய்திப் பெயர்ந்தானென வினைமுடிக்க.

இது நிலைமண்டிலம்.

பருந்து நிழலுமென ... ...அடியார்க்குநல்லானென்பான்.
ஒருந்தமிழ் ... ...நிரம்பையர்காவலனே.
காற்றை ... ...சொல்வித்ததே.

ஊர்காண்காதை முற்றிற்று.

பதினைந்தாவது

அடைக்கலக் காதை.

நிலந்தரு திருவி னிழல்வாய் நேமி
கடம்பூண் டுருட்டுங் கௌரியர் பெருஞ்சீர்க்
கோலின் செம்மையுங் குடையின் றண்மையும்
வேலின் கொற்றமும் விளங்கிய கொள்கைப்
பதியெழு வறியாப் பண்புமேம் பட்ட
மதுரை மூதூர் மாநகர் கண்டாங்
கறந்தரு நெஞ்சி னறவோர் பல்கிய
புறஞ்சிறை மூதூர்ப் பொழிலிடம் புகுந்து
தீதுதீர் மதுரையுந் தென்னவன் கொற்றமு
மாதவத் தாட்டிக்குக் கோவலன் கூறழிந்
தாழ்நீர் வேலித் தலைச்செங் கானத்து
நான்மறை முற்றிய நலம்புரி கொள்கை
மாமறை முதல்வன் மாடல னென்போன்
மாதவ முனிவன் மலைவலங் கொண்டு
குமரியம் பெருந்துறை கொள்கையிற் படிந்து
தமர்முதற் பெயர்வோன் றாழ்பொழி லாங்கண்
வகுந்துசெல் வருத்தத்து வான்றுயர் நீங்கக்
கவுந்தி யிடவயிற் புகுந்தோன் றன்னைக்
கோவலன் சென்று சேவடி வணங்க
நாவ லந்தணன் றானவின் றுரைப்போன்
வேந்துறு சிறப்பின் விழுச்சீ ரெய்திய
மாந்தளிர் மேனி மாதவி மடந்தை
பால்வாய்க் குழவி பயந்தன ளெடுத்து
வாலா மைந்நா ணீங்கிய பின்னர்
மாமுது கணிகையர் மாதவி மகட்கு
நாம நல்லுரை நாட்டுது மென்று
தாமின் புறூஉந் தகைமொழி கேட்டாங்
கிடையிரு ளியாமத் தெறிதிரைப் பெருங்கட
லுடைகலப் பட்ட வெங்கோன் முன்னாட்

புண்ணிய தானம் புரிந்தோ னாகலி
னண்ணுவழி யின்றி நாள்சில நீந்த
விந்திர னேவலி னீங்கு வாழ்வேன்
வந்தே னஞ்சன் மணிமே கலையா
னுன்பெருந் தானத் துறுதி யொழியாது
துன்ப நீங்கித் துயர்க்கட லொழிகென
விஞ்சையிற் பெயர்த்து விழுமந் தீர்த்த
வெங்குல தெய்வப் பெயரீங் கிடுகென
வணிமே கலையா ராயிரங் கணிகையர்
மணிமே கலையென வாழ்த்திய ஞான்று
மங்கல மடந்தை மாதவி தன்னொடு
செம்பொன் மாரி செங்கையிற் பொழிய
ஞான நன்னெறி நல்வரம் பாயோன்
றுணங் கொளாஅந் தகைமையின் வருவோன்
றளர்ந்த நடையிற் றண்டுகா லூன்றி
வளைந்த யாக்கை மறையோன் றன்னைப்
பாகுகழிந் தியாங்கணும் பறைபட வரூஉம்
வேக யானை வெம்மையிற் கைக்கொள
வொய்யெனத் தெழித்தாங் குயர்பிறப் பாளனைக்
கையகத் தொழித்ததன் கையகம் புக்குப்
பொய்பொரு முடங்குகை வெண்கோட் டடங்கி
மையிரு குன்றின் விஞ்சைய னேய்ப்பப்
பிடர்த்தலை யிருந்து பெருஞ்சின மிறுத்தாக்
கடக்களி றடக்கிய கருணை மறவ
பிள்ளை நகுலம் பெரும்பிறி தாக
வெள்ளிய மனையோ ளினைந்துபின் செல்ல
வடதிசைப் பெயரு மாமறை யாளன்
கடவ தன்றுநின் கைத்தூண் வாழ்க்கை
வடமொழி வாசகஞ் செய்தநல் லேடு
கடனறி மாந்தர் கைந்நீ கொடுக்கெனப்
பீடிகைத் தெருவிற் பெருங்குடி வாணிகர்
மாட மறுகின் மனைதொறு மறுகிக்
கருமக் கழிபலங் கொண்மி னோவென
மருமறை யாட்டிடைப் பறுகக் கூஉ
யாதுநீ யுற்ற விடரீ தென்னென
மாதர்தா னுற்ற வான்றுயர் செப்பி

யிப்பொரு ளெழுதிய விதழிது வாங்கிக்
கைப்பொரு டந்தென் கடுந்துயர் களைகென
வஞ்ச லுன்ற னருந்துயர் களைகேன்
னெஞ்சுறு துயர நீங்குக வென்றாங்
கோத்துடை யந்தண ருரைநூற் கிடக்கையிற்
றீத்திறம் புரிந்தோள் செய்துயர் நீங்கத்
தானஞ் செய்தவ டன்றுயர் நீக்கிக்
கானம் போன கணவனைக் கூட்டி
யொல்காச் செல்வத் துறுபொருள் கொடுத்து
நல்வழிப் படுத்த செல்லாச் செல்வ
பத்தினி யொருத்தி படிற்றுரை யெய்த
மற்றவள் கணவற்கு வறியா னொருவ
னறியாக் கரிபொய்த் தறைந்துணும் பூதத்துக்
கறைகெழு பாசத்துக் கையகப் படலும்
பட்டோன் றவ்வை படுதுயர் கண்டு
கட்டிய பாசத்துக் கடிதுசென் றெய்தி
யென்னுயிர் கொண்டவ னுயிர்தா வென்ன
நன்னெடும் பூத நல்கா தாகி
நரக னுயிர்க்கு நல்லுயிர் கொண்டு
பரகதி யிழக்கும் பண்பீங் கில்லை
யொழிகநின் கருத்தென வுயிர்முன் புடைப்ப
வழிதரு முள்ளத் தவளொடும் போந்தவன்
சுற்றத் தோர்க்குந் தொடர்புறு கிளைகட்கும்
பற்றிய கிளைஞரிற் பசிப்பிணி யறுத்துப்
பல்லாண்டு புரந்த வில்லோர் செம்மல்
லிம்மைச் செய்தன யானறி நல்வினை
யும்மைப் பயன்கொ லொருதனி யுழந்தித்
திருத்தகு மாமணிக் கொழுந்துடன் போந்தது
விருத்தகோ பால நீயென வினவக்
கோவலன் கூறுமோர் குறுமகன் றன்னாற்
காவல் வேந்தன் கடிநகர் தன்னி
னாறைங் கூந்த னடுங்குதுய ரெய்தக்
கூறைகோட் பட்டுக் கோட்டுமா வூரவு
மணித்தகு புரிகுழ லாயிழை தன்னொடும்
பிணிப்பறுத் தோர்தம் பெற்றி யெய்தவு
மாமலர் வாளி வறுநிலத் தெறிந்து

காமக் கடவுள் கையற் றேங்க
வணிதிகழ் போதி யறவோன் றன்முன்
*மணிமே கலையை மாதவி யளிப்பவு
நனவு போல நள்ளிருள் யாமத்துக்
கனவு கண்டேன் கடிதீங் குறுமென
வறத்துறை மாக்கட் †கல்ல திந்தப்
‡புறஞ்சிறை யிருக்கை பொருந்தா தாகலி
னரசர் பின்னோ ரகநகர் மருங்கினின்
னுரையிற் கொள்வரிங் கொழிகநின் னிருப்புக்
காதலி தன்னொடு கதிர்செல் வதன்முன
மாட மதுரை மாநகர் புகுகென
மாதவத் தாட்டியு மாமறை முதல்வனுங்
கோவலன் றனக்குக் கூறுங்காலை
யறம்புரி நெஞ்சி னறவோர் பல்கிய
புறஞ்சிறை மூதூர்ப் பூங்க ணியக்கிக்குப்
பான்மடை கொடுத்துப் பண்பிற் பெயர்வோ
ளாயர் முதுமகள் மாதரி யென்போள்
காவுந்தி யையையைக் கண்டடி தொழலு
மாகாத் தோம்பி யாப்பய னளிக்குங்
கோவலர் வாழ்க்கையோர் கொடும்பா டில்லை
தீதிலண் முதுமகள் செவ்விய ளளியண்
மாதரி தன்னுடன் மடந்தையை யிருத்துதற்
கேத மின்றென வெண்ணின ளாகி
மாதரி கேளிம் மடந்தைதன் கணவன்
றாதையைக் கேட்கிற் றன்குல வாண
ரரும்பொருள் பெறுநரின் விருந்தெதிர் கொண்டு
கருந்தடங் கண்ணியொடு கடிமனைப் படுத்துவ
ருடைப்பெருஞ் செல்வர் மனைப்புகு மளவு
மிடைக்குல மடந்தைக் கடைக்கலந் தந்தேன்
மங்கல மடந்தையை நன்னீ ராட்டிச்
செங்கய னெடுங்க §ணஞ்சன மூட்டித்
தேமென் கூந்தற் சின்மலர் பெய்து
தூமடி யுடீஇத் தொல்லோர் சிறப்பி

* மணிமேகலையொடு மாதவிதுறப்பவுமென்றும் பாடம்.
† அல்லதையெனவும் பாடம். ‡ புறத்துறைவாழ்க்கையெனவும் பாடம்.
§ அஞ்சனந்தீட்டியெனவும் பாடம்.

ஐயமுங் காவலு மாயிழை தனக்குத்
தாயு நீயே யாகித் தாங்கிங்
கென்னொடு போந்த விளங்கொடி நங்கைதன்
வண்ணச் சீறடி மண்மக ளறிந்திலள்
கடுங்கதிர் வெம்மையிற் காதலன் றனக்கு
நடுங்குதுய ரெய்தி நாப்புல ராடித்
தன்றுயர் காணாத் தகைசால் பூங்கொடி
யின்றுணை மகளிர்க் கின்றி யமையாக்
கற்புக் கடம்பூண்ட இத்தெய்வ மல்லது
பொற்புடைத் தெய்வம் யாங்கண் டிலமால்
வானம் பொய்யாது வளம்பிழைப் பறியாது
நீணில வேந்தன் கொற்றஞ் சிதையாது
பத்தினிப் பெண்டி ரிருந்தநா டென்னு
மத்தகு நல்லுரை யறியா யோநீ
தவத்தோ ரடைக்கலந் தான்சிறி தாயினு
மிகப்பே ரின்பந் தருவது கேளாய்
காவிரிப் படப்பைப் பட்டினந் தன்னுட்
பூவிரி பிண்டிப் பொதுநீங்கு திருநிழ
லுலக நோன்பிக ளொருங்குட னிட்ட
விலகொளிச் சிலாதல மேலிருந் தருளித்
தருமஞ் சாற்றுஞ் சாரணர் தம்முன்
றிருவி லிட்டுத் திகழ்தரு மேனியன்
றாரன் மாலையன் றமனியப் பூணினன்
பாரோர் காணாப் பலர்தொழு படிமையன்
கருவிரற் குரங்கின் கையொரு பாகத்துப்
பெருவிறல் வானவன் வந்துநின் றோனைச்
சாவக ரெல்லாஞ் சாரணர்த் தொழுதீங்
கியாதிவன் வரவென விறையோன் கூறு
மெட்டி சாயல னிருந்தோன் றனாது
பட்டினி நோன்பிகள் பலர்புகு மனையிலோர்
மாதவ முதல்வனை மனைப்பெருங் கிழத்தி
யேத நீங்க வெதிர்கொள லமையத்
தார்ச்சிறு குரங்கொன் றொருங்குடன் புக்குப்
பாற்படு மாதவன் பாதம் பொருந்தி
யுண்டொழி மிச்சிலு முகுத்த நீரும்
தண்டா வேட்கையிற் றான்சிறி தருந்தி

யெதிர்முக நோக்கிய வின்பச் செவ்வியை
யதிராக் கொள்கை யறிவனு நயந்தனன்
மக்களி னோம்பு மனைக்கிழத் தியென
யிக்கோன் கூறிய மெய்ம்மொழி யோம்பிக்
காதற் குரங்கு கடைநா ளெய்தவுந்
தானஞ் செய்வுழி யதற்கொரு கூறு
தீதறு கென்றே செய்தன ளாதலின்
மத்திம நன்னாட்டு வாரணந் தன்னு
ளுத்தர கௌத்தற் கொருமக னாகி
யுருவினுந் திருவினு முணர்வினுந் தோன்றிப்
பெருவிறற் றானம் பலவுஞ் செய்தாங்
கெண்ணா லாண்டி னிறந்த பிற்பாடு
விண்ணோர் வடிவம் பெற்றன னதனாற்
பெற்ற செல்வப் பெரும்பய னெல்லாந்
தற்காத் தளித்தோ டானச் சிறப்பெனப்
பண்டைப் பிறப்பிற் குரங்கின் சிறுகை
கொண்டொரு பாகத்துக் கொள்கையிற் புணர்ந்த
சாயலன் மனைவி தானந் தன்னா
லாயின னிவ்வடி வறிமி னோவெனச்
சாவகர்க் கெல்லாஞ் சாற்றினன் காட்டத்
தேவ குமரன் றோன்றினன் னென்றலுஞ்
சாரணர் கூறிய தகைசா னன்மொழி
யாரணங் காக வறந்தலைப் பட்டோ
ரன்றப் பதியு ளருந்தவ மாக்களுந்
தன்றிறல் வாழ்க்கைச் சாவக மாக்களு
மிட்ட தானத் தெட்டியு மனைவியு
முட்டா வின்பத்து முடிவுல கெய்தினர்
கேட்டனை யாயினித் தோட்டார் குழலியொடு
நீட்டித் திராது நீபோ கென்றே
கவுந்தி கூற வுவந்தன னேத்தி
வளரிள வனமுலை வாங்கமை பணைத்தோண்
முளையிள வெண்பன் முதுக்குறை நங்கையொடு
சென்ற ஞாயிற்றுச் செல்சுட ரமையத்துக்
கன்றுதே ராவின் கனைகுர லியம்ப
மறித்தோ ளவியத் துறிக்கா வாளரொடு
செறிவளை யாய்ச்சியர் சிலர்புறஞ் சூழ

மிளையுங் கிடங்கும் வளைவிற் பொறியுங்
கருவிர லூகமுங் கல்லுமிழ் கவணும்
பரிவுறு வெந்நெயும் பாகடு குழிசியுங்
காய்பொன் னுலையுங் கல்லிடு கூடையுந்
தூண்டிலுந் தொடக்கு மாண்டலை யடுப்புங்
கவையுங் கழுவும் புதையும் புழையு
மையவித் துலாமுங் கைபெய ரூசியுஞ்
சென்றெறி சிரலும் பன்றியும் பணையு
மெழுவுஞ் சீப்பு முழுவிறற் கணையமுங்
கோலுங் குந்தமும் வேலும் பிறவு
ஞாயிலுஞ் சிறந்து நாட்கொடி நுடங்கும்
வாயில் கழிந்துதன் மனைபுக் கனளாற்
கோவலர் மடந்தை கொள்கையிற் புணர்ந்தென்.

க-அ. நிலந்தரு திருவி னிழல்வாய் நேமி
கடம்பூண் டுருட்டுங் கௌரியர் பெருஞ்சீர்க்
கோலின் செம்மையுங் குடையின் றண்மையும்
வேலின் கொற்றமும் விளங்கிய கொள்கைப்
பதியெழு வறியாப் பண்புமேம் பட்ட
மதுரை மூதூர் மாநகர் கண்டாங்
கறந்தரு நெஞ்சி னறவோர் பல்கிய
புறஞ்சிறை மூதூர்ப் பொழிலிடம் புகுந்து

இ - ள். நிலத்திற்குப் பலதிருவினையுந்தரும் அருளாகிய நிழலிடத்தேநின்ற நேமியை முறைமையான் மேற்கொண்டுசெலுத்தும் பாண்டியருடைய மிக்கபுகழ் பொருந்திய கோலினது செம்மையுங் குடையினது தண்மையும் வேலினது வெம்மையும் விளங்குதற்கிடமாகிய கோட்பாட்டையுடைய அவ்விடத்தினின்றும் நீங்குதலறியாத முறைமைமேம்பட்ட மதுரைமூதூராகிய மாநகரைக்கண்டு அந்நகரின் அறத்தைப் பிறர்க்கருளும் நெஞ்சினையுடைய அறவோர்பயின்ற புறமதிற்கண் உள்ளதாகிய மூதூர்ப்பொழிலிடத்தே தபோதனரிருக்கும் பள்ளிக்கண்ணே புகுந்தென்க.

இனி, நிலந்தருதிரு - விளைவு; அத்தணிழலிடத்தே நின்றெனினுமமையும். நேமி - ஆணை = சக்கரம். கௌரியர் - பாண்டியர். கொற்றம் - வெம்மை. தருதல் - கொடை.

௯-௧௦. தீதுதீர் மதுரையுந் தென்னவன் கொற்றமு
மாதவத் தாட்டிக்குக் கோவலன் கூறுழி

இ - ள். தீதுகள்நீங்கிய மதுரையின்சிறப்பையும் தென்னவன்கொற்றத்தையும் கவுந்தியடிகளுக்குக் கோவலன்கூறுகின்றவளவிலேயென்க.

தீது - பசியும் பிணியும் பகையும். தீர்தல் - நீங்குதல். 'கோலின்செம்மை' என்பதனாற் பசிநீங்குதலும், [*"கோணிலை திரிந்து நாழி... ... ...கோல் கோடி னென்றான்" என்பதனாற்கொள்க.] 'குடையின் றண்மை' என்பதனாற் பிணி நீங்குதலும், [†"கண்பொர விளங்குநின் விண்பொரு வியன்குடை, வெயின்மறைக் கொண்டன்றோ வன்றே வருந்திய, குடிமறைப் பதுவே" என்பதனாற்கொள்க.] 'வேலின் கொற்றம்' என்பதனாற் பகைநீங்குதலுங்கொள்க.

௧௧-௧௩. தாழ்நீர் வேலித் தலைச்செங் கானத்து
நான்மறை முற்றிய நலம்புரி கொள்கை
மாமறை முதல்வன் மாடல னென்போன்

இ - ள். தாழ்ந்தநீரைவேலியாகவுடைய ‡தலைச்செங்காடென்னுமூரிடத்து நான்குவேதத்தினையும் ஓதி முற்றுப்பெற்ற நலத்தைப்புரிந்த கோட்பாட்டையுடைய மறையவர்க்கு முதல்வனாகிய மாடலனென்று பெயர்கூறப்படுவோனென்க.

நீர்வேலி - கிடங்குமாம்.

௧௪-௧௯. மாதவ முனிவன் மலைவலங் கொண்டு
குமரியம் பெருந்துறை கொள்கையிற் படிந்து
தமர்முதற் பெயர்வோன் றாழ்பொழி லாங்கண்
வருந்துசெல் வருத்தத்து வான்றுயர் நீங்கக்
கவுந்தி யிடவயிற் புகுந்தோன் றன்னைக்
கோவலன் சென்று சேவடி வணங்க

இ - ள். அந்த மாடலனென்போன், அகத்தியனுடைய பொதியின்மலையை வலங்கொண்டு குமரியாற்றில் தீர்த்தமாடுமுறைமையினாடித் தனது குடும்பமிருக்கின்றவிடத்திற்கு மீண்டுவருகின்றவன் வழிவந்தவருத்தத்தானுண்டாய துயர்நீங்குதற்குக் கவுந்தியடிகளிருந்த பள்ளியிடத்தேசென்று புகுந்தவனைக் கோவலன் சென்று வணங்கவென்க.

தமர்முதல் - தமரிடம். வருந்து - வழி; §"வரைசேர் வருந்திற் கானத்துப் படினே" என்றார் மலைபடுகடாத்திலும். இடவயின் - இடத்தில். வான்றுயர்நீங்கத் தாழ்பொழிலாங்கட் கவுந்தியிடவயிற் புகுந்தோனென்க.

---

* சீவகசிந்தாமணி, நாமகளிலம்பகம், ௨௨௬ : கோணிலை திரிந்து நாழி குறைபடப் பகல்கண் மிஞ்சி, நீணில மாரி யின்றி விளைவஃகிப் பசியு நீடிப், பூண்முலை மகளிர் பொற்பிற் கற்பழிந் தறங்கண் மாறி, யாணையிவ் வுலகு கேடா மரசுகோல் கோடி னென்றான். "கோனிலை திரிந்திடிற் கோணிலை திரியும், கோணிலை திரிந்திடின் மாரி வறங்கூரு, மாரி வறங்கூரின் மன்னுயி ரில்லை, மன்னுயி ரெல்லா மண்ணாள் வேந்தன், றன்னுயி ரென்னுந் தகுதியின் றாகும்" என்றார் மணிமேகலையிலும்; ௭ - வது துயிலெழுப்பியகாதை.

† புறநானூறு, ௩௫ : இச்செய்யுள்முழுவதையும், ௧௩௧-ம் பக்கத்திற்காண்க.

‡ தலைச்செங்காடென்பது காவிரிப்பூம்பட்டினத்திற்குத் தென்மேற்கிலே நான்குநாழிகைவழித் தூரத்திலுள்ளது.

§ மலைபடுகடாம், ௨௪௨.

௨௦. நாவ லந்தணன் றானவின் றுரைப்போன்

இ - ள். நாவாற் சொல்வன்மையையுடைய அந்தணன் நீர் இங்ஙனம்வருதற்குக் காரணம் யாதென்று இவனை வினவித் தானுரைக்கின்றவனென்க.

௨௧-௨௭. வேந்துறு சிறப்பின் விழுச்சீ ரெய்திய
மாந்தளிர் மேனி மாதவி மடந்தை
பால்வாய்க் குழவி பயந்தன ளெடுத்து
வாலா மைநா ணீங்கிய பின்னர்
மாமுது கணிகையர் மாதவி மகட்கு
நாம நல்லுரை நாட்டுது மென்று
தாமின் புறூஉந் தகைமொழி கேட்டாங்கு

இ - ள். கரிகாலன்கொடுத்த மிக்க தலைவரிசையாற் சிறந்தபுகழினைப்பெற்ற மாவின்றளிர்போலும் மேனியையுடைய மாதவியாகியமடந்தை மேற்பெறக்கடவ நல்ல பகுதியையுடைய குழவியைப் பயந்தெடுத்து வாலாமையாகிய நாட்கணீங்கியபின் மிகவும் பிராயமுதிர்ந்த கணிகையர் மாதவிமகட்கு நாமகரணம்பண்ணுவோமென்று தாம் மகிழ்வுறுதற்குக்காரணமாகிய மங்கலமொழியைக் கேட்டு அப்பொழுது,

வாலாமை - ஆசௌசம். முதுகணிகையர் - தாயத்தாராயபெண்டிர்; அவர் சித்திராபதிமுதலாயினர். முன்னர்க் குழவியென்றதன் பொதுமைநீங்க மகட்கென்றார். நாட்டுதும் - பன்மைத்தன்மை. நாட்டுதல் - நிறுத்தல்.

௨௮-௩௭. இடையிருள் யாமத் தெறிதிரைப் பெருங்கட
லுடைகலப் பட்ட வெங்கோன் முன்னாட்
புண்ணிய தானம் புரிந்தோ னாகலி
னண்ணுவழி யின்றி நாள்சில நீந்த
விந்திர னேவலி னீங்கு வாழ்வேன்
வந்தே னஞ்சன் மணிமே கலையா
னுன்பெருந் தானத் துறுதியொழி யாது
துன்ப நீங்கித் துயர்க்கட லொழிகென
விஞ்சையிற் பெயர்த்து விழுமந் தீர்த்த
வெங்குல தெய்வப் பெயரீங் கிடுகென

இ - ள். முன்னாளிலே எறியுந்திரைகளையுடைய கடலிடத்து இடையிருள் யாமத்தில் தன்மரக்கலம் உடையப்பட்ட எங்கோன் முற்பவத்திற் புண்ணியத்தையும் தருமதானத்தையும் செய்தோனாதலின் தன்னையணுகும் இடையூறு ஒரிடத்துமின்றி அக்கடலிடையே சிலநாணீந்துழி, ஒர்தெய்வந்தோன்றி, இத்தீவினுள்ளாரை அரக்கர் வாதைபண்ணாமல் இந்திரனேவலாலே பாதுகாத்துவாழ்கின்றயான் நின்றுயர் கண்டு அதனையொழித்தற்குவந்தேன்; இனி அஞ்சாதொழிக; என்பெயர் மணிமேகலைகாண்; என்னாலன்றியும் நீ முன்பண்ணியதானமிகுதியான்வரும் புண்ணிய

மும் நினைவொழியாது; ஆகலான், நீ இத்துன்பத்தினின்றுநீங்கி இக்கடலினின்றும் ஏறுவாயாகவெனச்சொல்லித் தன்விஞ்சையால் ஓர்துடரிற்பெயர்த்து இடும்பையைத்தீர்த்த எங்குலதெய்வத்தினுடையபெயரை ஈங்கு நீரிடுமினென்று *நீ சொல்லவென்க.

கரைகாணக்கடலென்பார் பெருங்கடலென்றார்; எங்கோன் - எம்மரபில் முற்பட்டான். முன்னுளென்பதனை உடைகலப்பட்டவென்பதனோடும் புண்ணியதானமென்பதனோடும் மொட்டுக. நண்ணுவழியின்றியென்பதற்குக் கரைசேருமிடமின்றியென்றுமுரைப்பர். புண்ணியதானம் - உம்மைத்தொகை. தானத்துறுதி - தானப்பயன், ஆவது புண்ணியம். விஞ்சையிற்பெயர்த்தென்பதற்கு இக்கரையிலே மீளவுந்தந்தெனினுமமையும். எங்குலதெய்வம் - எங்குலத்தையுண்டாக்கிய தெய்வம், இன்னும் விஞ்சையிற் பெயர்த்து விழுமந் தீர்த்தவென்பதற்குத தன் விஞ்சையினாலே போயபொருளும் கல்வியும் வஞ்சமறத்தந்து இடும்பையைத் தீர்த்த எங்குலதெய்வமெனினுமமையும்; †"விஞ்சைகள் வல்லேன் விளிந்தநின் றோழரோ, டெஞ்சிய வான்பொரு ளெல்லா மிமைப்பினுள், வஞ்சமொன் றின்றி மறித்தே தருகுவ, னெஞ்சிற் குழைந்து நினையன்மி னென்றான்" என்றார்பிறரும்.

ஈங்கு - இக்கடலிடத்தெனவும், இந்நகரிடத்தெனவும், இப்படி விபத்தினின்று மெடுப்பதற்கெனவுமாம். வந்தேன்; அஞ்சல்; உறுதியொழியாது; நீங்கி ஒழி கெனப் பெயர்த்துத் தீர்த்த எங்குலதெய்வமென்க.

௩௨-௩௫. அணிமே கலையா ராயிரங் கணிகையர்
மணிமே கலையென வாழ்த்திய ஞான்று
மங்கல மடந்தை மாதவி தன்னொடு
செம்பொன் மாரி செங்கையிற் பொழிய

இ - ள். அணிந்தமேகலையையுடைய அநேகங்கணிகையர்கூடி மணிமேகலையென்று பெயர்கூறி அரசனையும் நகரையும்வாழ்த்திய அற்றைநாளிலே நிறைந்த அழகையுடைய மடந்தையாகிய மாதவியுடனே செம்பொன்னாகியமாரியைச் செங்கையாலே நீ பொழியாநிற்கவென்க.

௩௬-௪௧. ஞான நன்னெறி நல்வரம் பாயோன்
றானங் கொள்ளுந் தகைமையின் வருவோன்
றளர்ந்த நடையிற் றண்டுகா லூன்றி
வளைந்த யாக்கை மறையோன் றன்னைப்
பாகுகழிந் தியாங்கணும் பறைபட வரூஉம்
வேக யானை வெம்மையிற் கைக்கொள

* இதனை, "திரையிரும் பௌவத்துத் தெய்வமொன் றுண்டெனக், கோவலன் கூறியிக் கொடியிடை தன்னையென், றுமஞ் செய்த கன்று ணன்னிருட், காமன் கையற் கடுநவை யறுக்கு, மாபெருந் தவக்கொடி யீன்றனை யென்றே, நனவே போலக் கனவகத் துரைத்தேன்" என மணிமேகலாதெய்வங்கூறியதாக மணிமேகலையிற் கூறுமாற்றானுமுணர்க. ஏழாவது துயிலெழுப்பியகாதை.

† சீவகசிந்தாமணி, காந்தருவதத்தையாரிலம்பகம், உ௮.

இ - ள். அங்ஙனம்பொழியாநிற்க, வீட்டுலகஞ்சேர்தற்கு நல்லநெறியாகிய ஞானத்திற்குத் தானெல்லையாகிய மறையோனொருவன் தன்மூப்பான் யாக்கை வளைந்து நடைதளர்தலால் தான்பிடித்த தண்டினையே காலாகவூன்றிக் கூனின யாக்கையையுடையனாய்த் தானங்கொள்ளுதற்குத் தன்னைமதித்துவருகின்றவனைப் பாகர்செயலைக்கழிந்து எங்கணும் புறைகொட்டவருகின்ற மதவேகத்தையுடைய யானை சினத்தாற் கைக்கொண்டதாகவென்க.

௪௮-௫௩. ஒய்யெனத் தெழித்தாங் குயர்பிறப் பாளனைக்
கையகத் தொழித்ததன் கையகம் புக்குப்
பொய்பொரு முடங்குகை வெண்கோட் டடங்கி
மையிருங் குன்றின் விஞ்சைய னேய்ப்பப்
பிடர்த்தலை யிருந்து பெருஞ்சினம் பிறழாக்
கடக்களி றடக்கிய கருணை மறவ

இ - ள். அங்ஙனம் மறையோனைக்கைக்கொண்டவளவிலே யானையை அவனை நெருங்காதொழியென உரப்பி அக்கணத்திலே சென்றுசேர்ந்து தன்கையாலே மறையோனைநீக்கி அதன்கையில் தான்புக்கவளவிலே யானை கையாலவளைப்பப் புனைபொருந்திய வளைந்த கையினின்றுநீங்கி வெளிய கோட்டிலேயடங்கி அது பற்றுக்கோடாகவேறிக் கரிய பெரிய குன்றின்மேலிருந்த விஞ்சையனைப்போல அதன்பிடரினிடத்திருந்து மிக்க சினநீங்காக்களிற்றை மதத்தையடக்கிய கிருபா வீரனே!

ஒய்யென்பது யானையைப் பாகர் வையும் ஆரியமொழியெனினுமமையும்; *"அண்ணலங் களிற்றை வையா" என்றார் பிறரும். இனி விரையத் தெழித் தெனினுமமையும். தெழித்தல் பிரித்தலுமாம்; குடநாட்டார்வழக்கு. பொய் - புனை. பொரு - பொருந்தின; விகாரம். முடங்குகையையுடையகோடெனினுமமையும். மை - மஞ்சுமாம்; முகபடாத்துக்குவமையாக்குக. பிறழ்தல் - நீங்குதல். கருணை - அருள். மறம் - வீரம். †"மொய்கொளப் பிறழ்ந்து முத்தார் மருப்பிடைக் குளித்து" என்றார் பிறரும். கைக்கொளத் தெழித்து ஒழித்துப் புக்கு அடங்கி இருந்து அடக்கிய மறவவென்க.

௫௪-௭௫. பிள்ளை நகுலம் பெரும்பிறி தாக
வெள்ளிய மனையோ ளினைந்துபின் செல்ல
வடதிசைப் பெயரு மாமறை யாளன்

* சீவகசிந்தாமணி, குணமாலையாரிலம்பகம், ௧௨௮:—பெண்ணுயி ரவல நோக்கிப் பெருந்தகை வாழ்விற சாத, லெண்ணின னெண்ணி நொய்தா வினமலர் மாலை சுற்றா, வண்ணப்பொற் கடக மேற்றா வார்கச்சிற் றானை வீக்கா, வண்ணலங் களிற்றை வையா வார்த்துமே லோடி னானே.

† சீவகசிந்தாமணி, குணமாலையாரிலம்பகம், ௧௩௩:—கையகப் படுத்த லோடுங் கார்மழை மின்னி னெய்தா, மொய்கொளப் பிறழ்ந்து முத்தார் மருப்பிடைக் குளித்துக் காற்கீ, ழையென வடங்கி வல்லா னுடிய மணிவட் டேய்ப்பச், செய் யுழற் குரிசி லாங்கே கரந்துசே ணகற்றி னானே.

கடவ தன்றுநின் கைத்தூண் வாழ்க்கை
வடமொழி வாசகஞ் செய்தநல் லேடு
கடனறி மாந்தர் கைந்நீ கொடுக்கெனப்
பிடிகைத் தெருவிற் பெருங்குடி வாணிகர்
மாட மறுகின் மனைதொறு மறுகிக்
கருமக் கழிபலங் கொண்மி னோவெனு
மருமறை யாட்டியை யணுகக் கூஉ
யாதுநீ யுற்ற விடரீ தென்னென
மாதர்தா னுற்ற வான்றுயர் செப்பி
யிப்பொரு ளெழுதிய விதழிது வாங்கிக்
கைப்பொரு டந்தென் கடுந்துயர் களைகென
வஞ்ச லுன்ற னருந்துயர் களைகே
னெஞ்சுறு துயர நீங்குக வென்றாங்
கோத்துடை யந்தண ருரைநூற் கிடக்கையிற்
றீத்திறம் புரிந்தோள் செய்துயர் நீங்கத்
தானஞ் செய்தவ டன்றுயர் நீக்கிக்
கானம் போன கணவனைக் கூட்டி
யொல்காச் செல்வத் துறுபொருள் கொடுத்து
நல்வழிப் படுத்த செல்லாச் செல்வ

இ - ள். தான்வளர்த்தகீரி தன்பிள்ளையைக்காத்திருந்ததாக, ஒரு பார்ப்பனி அதனைக் கௌவித்துணித்த குருதிவாயோடு தன்வரவுபார்த்து எதிர்கொண்டதனைத் தன்பிள்ளையைக்கடித்ததெனக்கருதித் தன்கையின்மணையாற்புடைக்க அது மரித்ததாலே வடதிசையைநோக்கிக் கங்கையாடப்போகின்ற கொழுநனை மனைவிபின் செல்லப் பொருதிகழ்ந்து நின்னொழுக்கத்தின் உண்[illegible]னையறத்தின்கண் வாழும் வாழ்க்கை இனிக் கடவதன்று; ஆதலான், வடமொழிவாசகமெழுதிய இவ்வேட்டினை உரைக்கடவ பொருளையறியும் மாந்தர்கையகத்தே நீகொடுக்கவெனச்சொல்லி அவன்போக, பீடிகைத்தெருவினும் மாடமறுகினும் பிறர்மனைகளினும் போகமீளத் திரிந்து கருமக்கழிபலங்கொண்மினெனக் கூவும் அருமறையாட்டியைக்கூவி நீ இங்ஙனமாதற்கு நீயுற்றவிடர்யாது? இக்கூறியதியாதென்று கேட்ப, அம்மாதர் தான் கொலைசெய்தலாற் கொழுநன்பிரிய அவனைக்காணாது மிக்கதுன்பமுற்றதனைக்கூறி இத்திறமாகிய பொருளையெழுதிய ஏட்டினை வாங்கிக்கொண்டு கைப்பொருளைத் தந்து எனது கடுந்துயரைக் களைகவென்றுசொல்ல, அஞ்சாதொழி; நின்துயரை யானேகளைகேன்; நின்னெஞ்சின்மிக்கதுயரத்தை இனி நீங்குவாயாகவெனச்சொல்லி அப்பொழுதே தருமாசனத்தோருரைத்த நூல்வழியே அப் பார்ப்பனிக்குள்ளாகிய கொலைப்பாவநீங்குதற்குத் தானத்தையுஞ்செய்து அவள்துன்பநீக்கிக் காட்டுநெறிக்கட்போன கணவனையுங்கூட்டி அவர்க்கு மேலுள்ளகாலத்திற்குத் தளராத பலபடைப்பாகிய செல்வத்தோடே மிக்க கைப்பொருளையுங்கொடுத்து வேள்வியையுஞ்செய்வித்த தொலையாத செல்வனே!

வடதிசைப்பெயர்தல் - கங்கையாடப்போதல். கை - ஒழுக்கம்; கையாறுண்டொழுகும் இல்வாழ்க்கையெனவுமாம். வடமொழி - ஆரியம். வாசகம் - கவி. ஆவது "அபரீக்ஷ்ய நகர்த்தவ்யம் கர்த்தவ்யம் ஸுபரீக்ஷிதம் - பச்சாத் பவதி ஸந்தாபம் *ப்ராஹ்மணீ நகுலம்யதா" [அபரீக்ஷ்ய நகர்த்தவ்யங் கர்த்தவ்யம் ஸுபரீக்ஷிதம், பச்சாத்பவதி ஸந்தாபம் ப்ராஹ்மணீ நகுலம்யதா.] என்பது. ஏடு - இக்கவியையெழுதியவேடு. மறுகி - சுழன்று. கருமக்கழிபலம் - பாவத்தைக்கழிக்கும்புண்ணியம். கருமம் - அவள்கொன்றகொலை. அதனைக் கழிக்கை யாவது போனகணவனைக்கூடுதல். பலங்கொள்கை - அவன்வரும்படி தானம் பண்ணவேண்டும்பொருடருதல். தீத்திறம் - கொலைத்திறம். ஒல்காச்செல்வமுடையோனுதலாலே உறுபொருள்கொடுத்தென்றுமாம்.

௭௬-௯0. பத்தினி யொருத்தி படிற்றுரை யெய்த
மற்றவள் கணவற்கு வறியா னொருவ
னறியாக் கரிபொய்த் தறைந்துணும் பூதத்துக்
கறைகெழு பாசத்துக் கையகப் படலும
பட்டோன் றவ்வை படுதுயர் கண்டு
கட்டிய பாசத்துக் கடிதுசென் றெய்தி
யென்னுயிர் கொண்டீங் கிவனுயிர் தாவென
நன்னெடும் பூத நல்கா தாகி
நரக னுயிர்க்கு நல்லுயிர் கொண்டு
பரகதி யிழக்கும் பண்பீங் கில்லை
யொழிகநின் கருத்தென வுயிர்முன் புடைப்ப
வழிதரு முள்ளத் தவளொடும் போந்தவன்
சுற்றத் தோர்க்குந் தொடர்புறு கிளைகட்கும்
பற்றிய கிளைஞரிற் பசிப்பிணி யறுத்துப்
பல்லாண் டோம்பிய வில்லோர் செம்மல

இ - ள். ஒருபத்தினி பொய்ப்பழியெய்துதற்கு அறிவிலாதானொருவன் அவள் கணவனுக்குப் பொய்ச்சான்றேறுதலாலே †தவமறைந்தொழுகுவோர்முதலாகிய அறுவகையோரையும் புடைத்துண்ணும் பூதத்தினுடைய கரியபாசத்தினிடத்தே அவனகப்பட அங்ஙனம் அகப்பட்டோனுடைய தாய்படாநின்ற துயரத்தைக் கண்டு அவனைப்பூண்ட பாசத்தினுள்ளே விரையத்தானபுகுந்து, பூதநாதனே, நினக்குணவாக என்னுயிரைக்கைக்கொண்டு இவனுயிரைத்தருவாயாகவென்றிரப்பவும், பூதம் நல்காதாய் இக்கீழ்மகனுடைய உயிர்க்கு நினது நல்லுயிரைக்கொண்டு மேலாநகதியை இழக்குமுறைமை என்பாலில்லை; ஆதலால் நீ இக்கருத்தையொழிவாயாக; நின்முன்பே இவனைப்புடைத்துண்பேனெனப் புடைத்து விழுங்

---

* "ப்ராஹ்மண்யா நகுலோயதா" என்றும் பாடம்.

† தவமறைந்தொழுகுவோர்முதலாகிய அறுவகையோரையும் பூதம்புடைத்துண்ணுமென்பதை, இந்திரவிழவூரெடுத்தகாதை [௧௨௮ - ௧௩௪] யாலுணர்க.

சிற்குக; அதனால் நெஞ்சழிந்த இடும்பையோளொடு மீண்டுபோந்து அவனுடைய சுற்றத்தினுள்ளார்க்கும் தொடர்புபட்ட கிளைகட்கும் நெஞ்சாற்பற்றிய நின்கிளை ஞரைப்போல அன்புபட்டுப் பசியாகியபிணியைத்தீர்த்துப் பல்யாண்டு பாதுகாத்த இல்லத்தோர் தலைவனே!

படிறு - பொய். அறியாக்கரி - பொய்க்கரி. தவ்வை - தாய். நரகன் - நரகிற் கேதுவானவன். தன்னைவணங்கியகோவலனை, மாடலன், கடகளிறடக்கிய கருணை மறவ! நல்வழிப்படுத்த செல்லாச்செல்வ! பல்யாண்டுபுரந்த இல்லோர்செம்ம லெனப்புகழ்ந்து மேலுஞ்சொல்லுவான்:—

உக-உச. இம்மைச் செய்தன யானறி நல்வினை
உம்மைப் பயன்கொ லொருதனி யுழந்தித்
திருத்தகு மாமணிக் கொழுந்துடன் போந்தது
விருத்தகோ பால நீயென வினவ

இ-ள். மறவ! செல்வ! செம்மல்! கோபால! யானறிய இப்பிறப்பிற்செய்த வெல்லாம் நல்வினையாகவும் இம்மாணிக்கக்கொழுந்துடன் நீபோந்து ஒருதனி யுழந்தது உம்மைத்தீவினைப்பயனோதாமென்று வினவினவளவிலேயென்க.

உம்மை - முற்பிறப்பு. ஒருதனிபுழத்தல் - உசாவில்லாத்துன்பம். திருத்தகு மாமணி - முழுமாணிக்கம். கொழுந்தென்றார்; அவளிளமைபற்றி. விருத்தகோ பால - ஞானவிருத்தனே.

உரு-ஙஎ. கோவலன் கூறுமோர் குறுமகன் றன்னாற்
காவல் வேந்தன் கடிநகர் தன்னில்
நாறைங் கூந்த லணிங்குதுய ரெய்தக்
கூறைகோட் பட்டுக் கோட்டுமா வூரவு
மணித்தகு புரிகுழ லாயிழை தன்னொடும்
பிணிப்பறுத் தோர்தம் பெறுதி யெய்தவு
மாமலர் வாளி வறுநிலத் தெறிந்து
காமக் கடவுள் கையற் றேங்க
அணிதிகழ் போதி யறவோன் றன்முன்
மணிமே கலையை மாதவி யளிப்பவு
நனவு போல நள்ளிருள் யாமத்துக
கனவு கண்டேன் கடிதீங் குறுமென

இ-ள். மாடலன் உம்மைப்பயனோவென்றவினாவிற்குக் கோவலன்கூறு வான்:—ஓர்கீழ்மகனால் இக்காவல்வேந்தனுடைய இந்நகர்தன்னிலே மணம்பொருந் திய ஐவகைக்கூந்தலையுடைய இவள் நடுங்குந்துயரமுற யான் உடுத்தகூறையைப் பிறர்கொள்ளப்பட்டுக் கோட்டினையுடைய எருமையின்மேலேயேறவும் அணிபெற வகுக்கத்தக்க புரிந்த குழலையுடைய ஆயிழையுடனே பற்றற்றோர்பெறும்பேற்றை யான்பெறவும் காமக்கடவுள் மலர்வாளியை வெறுநிலத்தேயெறிந்து செயலற் றேங்கும்படி போதியறவோனிடத்தே மணிமேகலையை மாதவியளிப்பவும் மெய்

போலச் செறிந்த இருளையுடைய வைகறையாமத்தே கனவுகண்டேனாதலான் அது நன்றன்று; இப்பொழுதே வந்துறுமென்று சொல்லவென்க.

குறுமை - எண்டுப்பண்பன்று; சிறுமையென்னும்பொருட்டாய்க் குலத்திற்கடியாய் அதன் உயர்பின்மையுணர்த்திநின்றது. காவல்வேந்தன்கடிநகரொன்பதற்கு இகரச்சுட்டுவருவித்துரைக்க. கோட்படுதல் - பிறராற் கொள்ளப்படுதல். கோட்டுமா - எருமைமேற்றை; என்னை? "சொல்லத் தகுமுகட் டொட்டகம் வெட்டுந் துணைமருப்பா, ரில்லத் தெருமை கழுதைக ளென்றிவை யேறிநின்றே, மெல்லத் தரையி லிழிவதன் முன்னம் விழித்திடுமேற், கொல்லத் தலைவரு மற்றருஞ் சீற்றத் துக் கூற்றுவனே" என்றாராகலின். இனிப் பன்றியெனவுமாம்; *"களிறுமேற் கொள்ளவுங் காழக நீப்பவும், ... கனவி னரியன காணூ" என்றார் புறத்தினுமாதலால். களிறென்றது எண்டுப்பன்றியை. என்னை? "மிக்க வெயிற் றின கொம்பின பன்றி விறற்றூங்கு, தொக்கன தம்மைக் கனவினிற் காணிற் சுடர்மகுடச், சக்கர வர்த்திக ளாற்பய முண்டெனுந் தம்மயிக, ளுக்கன வாதல் செய் தாற்பொரு டேயும் பயமுடைத்தே" என்றாராகலின். கோட்டுமாவென் பதனை யானையெனின்,—"ஓதம் பசுவு மிடபமும் யானையு மோங்கல்களுஞ், சீர் துன்று கோயிலு மேறிடக் காணினுந் நிமலத்தை, மீதொன்ற மேனியிற் பூசினுங் கூசிடு மெல்லியலார், சூதொன்று கொங்கை புணரினும் வாழ்வென்று சொல்லி னரே" என்பதனால் யானையன்மையறிக. பிணிப்பு - பற்று. ஆவது அன்பாகிய ஒரு தளை. அதனையறுத்தோர் அருளுடையோர்; அவர்பெற்றியாவது சுவர்க்கமெனக்கொள்க; †"அருளிலார்க் கவ்வுலக மில்லை பொருளிலார்க், கிவ்வுலக மில்லாகி யாங்கு" என்றாராகலின். வாளி - வாளியை. வறுநிலம் - வெறுநிலம். நிலங்கண்டும் அல்லாமைகூறிற்று. கையற்று - செயலற்று. போதியறவோன் - புத்தன். நள் - நளியென்னுமுரிச்சொல் ஈறு திரிபு; செறிவின்கண்வந்தது; எனவே வைகறையாமமென்பதாயிற்று. கடிது - பொல்லாததொன்று. ஈங்குறும் - இவ்விடத்தேவரும். இனி இக்கனைக் கடையாமத்துக்கண்டதாதலால், இவ்விடத்தே கடிதிற்பலிக்குமென்றுரைனினுமமையும்; ‡"ஆயிடை, வெஞ்சுடர் தோன்றி விடி

---

* புறநானூறு, ௪௰.—காலனுங் காலம் பார்க்கும் பாராது, வேலீண்டு தானை விழுமியோர் தொலைய, வேண்டிடத் தடூஉம் வெல்போர் வேந்தே, திசையிரு நான்கு முற்கை யுற்கவும் பெருமரத், திலையி னெடுங்கோடு வற்றல் பற்றவும், வெங் கதிர்க் கனலி துற்றவும் பிறவு, மஞ்சுவரத் தகுந புள்ளுக்குர லியம்பவு, மெயிறு நிலத்து வீழவு மெண்ணெ யாடவுங், களிறுமேற் கொள்ளவுங் காழக நீப்பவும், வெள்ளி நோன்படை கட்டிலொடு கவிழவுங், கனவி னரியன காணூ நனவிற், செருச்செய் முன்பநின் வருதிற நோக்கி, மையல் கொண்ட வேமமி லிருக்கையர், புதல்வர் பூங்கண் முத்தி மனையோட், கெவ்வங் கரக்கும் பைதன் மாக்களொடு, பெருங்கலக் குற்றன்றாற் றானே காற்றோர், டெரிநிகழ்ந் தன்ன செலவிற், செருமிகு வளவநிற் சினைஇயோர் நாடே.

† திருக்குறள், அருளுடைமை, ௭.

‡ சீவகசிந்தாமணி, நாமகளிலம்பகம், ௩௩௦.—பஞ்சி யடிப்பவ ளத்துவர் வாயவ, ளெஞ்சு மிடைக்கன மூன்றலவ தோன்றலி, னஞ்சி நடுங்கின ளாய்மழை யாயிடை, வெஞ்சுடர் தோன்றி விடிந்ததை யன்றே.

ந்ததை யன்றே'' என்றார் சிந்தாமணியினும். ''படைத்தமுற் சாமமோ ராண்டிற் பலிக்கும் பகரிரண்டே, கிடைத்தபிற் சாம மிருதிங்க ளொட்டிற் கிடைக்குமென்னு, மிடைப்பட்ட சாமமொர் மூன்றினிற திங்களோர் மூன்றென்பவாற், கடைப்பட்ட சாமமு நாள்பத்து ளேபலங் கைபெறுமே.'' இவை கனநூலாதலாற்கொள்க. இன்னும், கடிதிங்கு - மிக்கதீங்கு ; அச்சந்தீதயுடைய தீங்கெனவுமாம்.

கoஎ-ககச. அறத்துறை மாக்கட் கல்ல திந்தப்
புறஞ்சிறை யிருக்கை பொருந்தா தாகலி
னரசர் பின்னோ ரகநகர் மருங்கினி
னுரையிற் கொள்வரிங் கொழிகநின் னிருப்புக்
காதலி தன்னொடு கதிர்செல் வதன்முன்
மாட மதுரை மாநகர் புகுகென
மாதவத் தாட்டியு மாமறை முதல்வனுங்
கோவலன் றனக்குக் கூறுங் காலை

இ - ள். அறவறத்தானுறையுமாக்கட்கல்லது இந்தப் புறஞ்சிறையிலிருக்கு மிருப்புப் பொருந்தாதாகலின், இவ்வகநகரிடத்துவாணிகர் மாசாத்துவான்மகனென் னும்புகழால் எதிரேற்றுக்கொள்ளுவார் ; ஆகலின், இவ்விடத்து நின்னிருப்பையொழிக. இனிக் கதிர்செல்வதன்முன்னே நின்காதலியுடனே மதுரைமாநகர்புகுகவென்று கவுந்தியடிகளும் மாடலனும் கோவலனுக்குக் கூறுகின்றகாலத்தேயென்க.

அறத்துறை - அறத்தின்றுறையெனவும், அறத்தின்கணுறையெனவுமாம். புறஞ்சிறை - புறம்பின்கட்பள்ளி. அகநகர்மருங்கினரசர்பின்னோரெனமாறுக. நின்னுரையென்றது, மாசாத்துவான்மகனென்பதனை. மதுரையாகிய மாநகரென்க.

ககரு-கககூ. அறம்புரி நெஞ்சி னறவோர் பல்சிப
புறஞ்சிறை மூதூர்ப் பூங்க ணியக்கிக்குப்
பான்மடை கொடுத்துப் பண்பிற் பெயர்வோ
ளாயர் முதுமகள் மாதரி யென்போள்
காவுந் தியையைக் கண்டடி தொழலும்

இ - ள். அங்ஙனங்கூறுகின்றுழி, ஆயர்குலத்துப்பிறந்து மாதரியென்றுபெயர் கூறப்படுவோள் ஒரு முதுமகள், பூப்போலுங்கண்ணையுடைய இயக்கிக்குப் பான் மடையேற்றி வழிபாட்டோடு மீளுகின்றவள் அறத்தைப்புரிந்தநெஞ்சினையுடைய அறவோர்பலராயிருக்கின்ற புறமதிற்பள்ளிக்கணிருந்த கவுந்தியடிகளைக்கண்டுவந்து அடிதொழுதாளாகவென்க.

இயக்கி - ஆரியாங்கனை. பான்மடை - பாற்சோறு.

கஉo-கஉச. ஆகாத் தோம்பி யாப்பய னளிக்குங்
கோவலர் வாழ்க்கையோர் கொடும்பா டில்லை
தீதிலண் முதுமகள் செவ்வியளளியண்
மாதரி தன்னுடன் மடந்தையை யிருத்தற்
கேத மின்றென வெண்ணின ளாகி

இ - ள். ஆவைக்காத்தோம்பி அவ்வாவின்பயனை யாவர்க்குமளிக்கும் இந்த இடையருடைய இல்வாழ்க்கையில் ஒருகொடுமைப்பாடுமில்லை; அதன்மேலும் இவள் நமதுநாைநெறியினிற்றலால் மனத்தில் அழுக்காறிலள்; அதுவுமன்றி முது மகள்; ஔவியமில்லாள்; அளிக்குந்தன்மையையுடையள்; ஆதலான் மாதரியி டத்தே இம்மடந்தையை அடைக்கலமாக இற்றைக்குவைப்பதற்கு வருந்தீங்கு யாதுமில்லையெனத் தன்மனத்தினெண்ணினளாகியென்க.

ஆக்களைக்காத்து - வெருவும் பிணியுமுற்றழிக் காத்து. ஓம்பி - புலத்தலைப் புல்லார்த்தி அலைத்தலை நீரூட்டி. ஆப்பயன் - பால்முதலியன. அளிக்குங்கோவலர் - கன்றருத்தி மிக்கதனை யாவர்க்குமளிக்குங்கோவலரென்க. தீது - அழுக்காறு; ஆவது மனத்தழுக்கு. செவ்வியள் - ஔவியமில்லாள்; ஆவது மனக்கோட்டமில லென்றபடி. அளியள் - யாவராலும் அளிக்கத்தக்காள்.

௧௨௫-௧௩0. மாதரி கேளிம் மடந்தைதன் கணவன்
றாதையைக் கேட்கிற் றன்குல வாண
ரரும்பொருள் பெறுநரின் விருந்தெதிர் கொண்டு
கருந்தடங் கண்ணியொடு கடிமனைப் படுத்துவ
ருடைப்பெருஞ் செல்வர் மனைப்புகு மளவு
மிடைக்குல மடந்தைக் கடைக்கலந் தந்தேன்

இ - ள். மாதரி, கேளாய்; இம்மடந்தையுடையகணவன் தந்தைபெயரைக் கேட்பாராயின், இவன்குலத்திலுள்ள இவ்வூரில்வாழ்வோர் பெறுதற்கரியபொரு ளைப் பெற்றாரைப்போல நல்விருந்தாக எதிர்கொண்டு கரிய பெரிய கண்ணினை யுடையாளோடு இவனைத் தங்கள் காவலையுடைய மனையகத்தே கொண்டுசென்று வைத்துக்கொள்வார்கள்; அங்ஙனமாகிய உடைய பெரிய செல்வரது மனையகத்தே சென்றுபுகுமளவும் இடைக்குலமடந்தாய்! உனக்கு நான் இவளை அடைக்கலமாகத் தந்தேனென்றாரென்க.

௧௩௧-௧௩௬. மங்கல மடந்தையை நன்னீ ராட்டிச்
செங்கய னெடுங்க ணஞ்சன மெழுதித்
தேமென் கூந்தற் சின்மலர் பெய்து
தூமடி யுடீஇத் தொல்லோர் சிறப்பி
னாயமுங் காவலு மாயிழை தனக்குத்
தாயு நீயே யாகித் தாங்கு

இ - ள். இவ்வுயர்குடியிற்பிறந்த இவளை நின்கையில் அடைக்கலமாகத்தந்தே னாதலால், இம்மடந்தையை மங்கலநீராலாட்டிச் சிவந்த கயல்போலும் நெடிய கண்ணின் அஞ்சனத்தையுமெழுதி நறிய மெல்லிய கூந்தலிலே சிலவாகிய மலரைப் பெய்து தூய மடிப்புடைவையையுடுத்து இவ்வாயிழைக்கு ஆயமகளிரும் செவிலித் தாயரும் நற்றாயும் நீயேயாய்த் தாங்குவாயாகவென்றாரென்க.

தொல்லோர்சிறப்பினாயம் - பழையோராகச் சிறப்பித்துக் கூறப்பட்டவாயம். ஆட்டி ஊட்டிப் பெய்து உடீஇத் தாங்கென்றாரென்க.

௧௩௯-௧௩௮. சங்கு

என்னொடு போந்த விளங்கொடி நங்கைதன்
வண்ணச் சீறடி மண்மக ளறிந்திலள்

இ - ள். இப்படித்துயருறுதற்கு என்னோடுபோந்த இளையகொடிபோலும் நங்கையுடைய அழகிய சிறியவடியை முன்பு நிலமகளும் கண்டறியாள்;

இவளடியைப் பூமிதேவியும் கண்டறியாளென்றது அகம்விட்டுப்புறப்பட்டறியாளென்றவாறு. இனி மண்மகள் இவள் மென்மையைத் தானறிந்துநெகிழ்ந்திலளென்றுமாம். இன்னும் கால் கொப்புளங்கொண்டு நிலத்திற்பாவாமையிற் கூறினாரெனினுமமையும்.

௧௩௯-௧௪௮. கடுங்கதிர் வெம்மையிற் காதலன் றனக்கு
நடுங்குதுய ரெய்தி நாப்புலர வாடித்
தன்றுயர் காணாத் தகைசால் பூங்கொடி
யின்றுணை மகளிர்க் கின்றி யமையாக்
கற்புக் கடம்பூண்ட வித்தெய்வ மல்லது
பொற்புடைத் தெய்வம் யாங்கண் டிலமால்
வானம் பொய்யாது வளம்பிழைப் பறியாது
நீணில வேந்தன் கொற்றஞ் சிதையாது
பத்தினிப் பெண்டி ரிருந்தநா டென்னு
மத்தகு நல்லுரை யறியா யோநீ

இ - ள். கதிரின்வெம்மையால் தன் காதலன்மெய் வருந்தியதென்று நடுங்கித் துயரமுற்று நாவும்புலரவாடித் தன்றுயரைன வேறுகாணாத பெருமையமைந்த பூங்கொடியை ஒப்பாள், தங்காதலர்க்கு இல்வாழ்க்கைத்துணையாகிய மாதர்க்கு இன்றியமையாத கற்பைக்கடமாகப்பூண்டுகொண்ட இத்தெய்வமேயல்லது வேறு பொலிவினையுடைய தெய்வத்தினை யாம்கண்டிலேம்; அதுவுமன்றிக் காலமழை பொய்த்தறியாது; வளம் பிழைத்தலையறியாது; வேந்தர்கொற்றம் சிதைந்தறியாது; அல்லது எந்நாடெனிற் பத்தினிப்பெண்டிரிருந்த நாடென்று நல்லோர்சொல்லும் அத்தகுமிகுதியையுடைய தருமநூலுரையை நீயறிவையோ அறியாயோவென்றாரென்க.

*இன்பதுன்பம் தோகைக்கும் தோன்றற்கும் ஒன்றாய்வருதலின், தன்றுயர் காணாவென்றார். கற்பைக் கடமாகப்பூண்ட பூங்கொடியாகிய இத்தெய்வமென்க.

௧௪௯-௧௫௦. தவத்தோ ரடைக்கலந் தான்சிறி தாயினு
மிகப்பே ரின்பந் தருவது கேளாய்

---

* திருச்சிற்றம்பலக்கோவையார், ௭௪:—காகத் திருகண்ணிற் கொன்றேப் மணிகலந் தாங்கிருவ, ராகத்து ளோருயிர் கண்டனம் யாமின்றி யாவையுமா, நியும் கத் தொருவ னிரும்பொழி லம்பல வன்மலையிற், றோகைக்குந் தோன்றற்குஞ் செல் றப் வருமின்ப துன்பங்களே. ரக்கிழத்தி

இ - ள். தவத்தினராயுள்ளோர் தாங்கொடுத்த அடைக்கலந்தான் அப்போது சிறிதாயிருப்பினும் பின்பு மிகப்பேரின்பத்தைத்தருவதை யான்சொல்ல நீ கேளா யென்றானென்க.

ஆய் - அசை.

கருக - கருரு. காவிரிப் படப்பைப் பட்டினந் தன்னுட்
பூவிரி பிண்டிப் பொதுநீங்கு திருநிழ
லுலக நோன்பிக ளொருங்குடனிட்ட
விலங்கொளிச் சிலாதல மேலிருந் தருளித்
தருமஞ் சாற்றுஞ் சாரணர் தம்முன்

இ - ள். காவிரியைத் தோட்டக்கூற்றிற்கு எல்லையாகவுடைய பட்டினத் துள்ளே பூவிரிந்த பொதுமைநீங்கின அழகியநிழலையுடைய பிண்டிமுதற்கண்ணே சாவகர் ஒருங்குகூடியிட்ட விளங்கொளிச் சிலாதலத்தின்மீதேயிருந்து தருமத்தை யாவர்க்கும்போதிக்கும் சாரணர் முன்பாகவென்க.

படப்பை - பக்கமுமாம். பொதுநீங்குதிருநிழல் - பிறிதொருமரத்திற்கின் றித் தனக்கேயுரிய நிழல்; ஆவது ஆதித்தன்சாயச் சாயாநிழல். உலகநோன்பிகள் - துறவாது விரதங்காக்குஞ்சாவகர். சிலாதலம் - அப் பட்டினத்துச் சிலாதலம்.

கருசு - கசு௦. திருவில் லிட்டுத் திகழ்தரு மேனியன்
றாரன் மாலையன் றமனியப் பூணினன்
பாரோர் காணாப் பலர்தொழு படிமையன்
கருவிரற் குரங்கின் கையொரு பாகத்துப்
பெருவிறல் வானவன் வந்துநின் றோனை

இ - ள். திருவிற்போல ஒளிவிட்டு அழகுதரும் திருமேனியையுடையனாய்த் தாரையுடையனாய் மாலையையுடையனாய்ப் பொற்பூணினையுடையனாய் மக்கள்கண் ணிற்குப்புலப்படாத தேவர்பலருந்தொழும் படிவையுடையவன் ஒருபாகத்துக்கை கருவிரற்குரங்கின் கையாகவுடைய தேவனொருவன் வந்துநின்றான்; நின்றவனை யென்க.

திருவில் - இந்திரவில். வில்லிட்டென்பதற்குத் தூமத்தானவொளியைப் புறப்படவிட்டென்பாருமுளர். தார் - பூமாலை. மாலை - மணிமாலை. தாரமாலை யெனப்பாடமோதி, மந்தாரமாலையையுடையனெனினுமமையும். படிமை - தெய்வ வடிவு. பெருவிறல் - பெரியவெற்றி. நின்றோனை - *" ஆவோ வாகும்" என்பத னான்முடியும்.

கசுக - கசு௨. சாவக ரெல்லாஞ் சாரணர்த் தொழுதீங்
கியாதிவன் வரவென விறையோன் கூறும்

இ - ள். அச்சிலாதலத்தின்கீழிருந்து அறங்கேட்டசாவகரெல்லாரும் எழுந்து சாரணரைத்தொழுது இவன் இங்ஙனம்வந்தவரவிற்குக் காரணம்யாதெனக்கேட்பச் சாரணர்கூறுவார் :—

---

* தொல்காப்பியம், சொல்லதிகாரம், வினையியல், கச.

௧௬௩—௧௯௧. எட்டி சாயல னிருந்தோன் றனது
பட்டினி நோன்பிகள் பலர்புகு மனையிலோர்
மாதவ முதல்வனை மனைப்பெருங் கிழத்தி
யேத நீங்க வெதிர்கொ ளமையத்
தூர்ச்சிறு குரங்கொன் றொருங்குடன் புக்குப்
பாறபடு மாதவன் பாதம் பொருந்தி
யுண்டொழி மிச்சிலு முகுத்த நீருந்
தண்டா வேட்கையிற் றான்சிறி தருந்தி
யெதிர்முக நோக்கிய வின்பச் செவ்வியை
யதிராக் கொள்கை யறிவனு நயந்துநின்
மக்களி னோம்பு மனைக்கிழத் தியென
விக்கோன் கூறிய மெய்ம்மொழி யோம்பிக்
காதற் குரங்கு கடைநா ளெய்தவுந்
தானஞ் செய்வுழி யதற்கொரு கூறு
தீதறு கென்றே செய்தன ளாதலின்
மத்திம நன்னாட்டு வாரணந் தன்னு
ளுத்தர கௌத்தற் கொருமக னாகி
யுருவினுந் திருவினு முணர்வினுந் தோன்றிப்
பெருவிறற் றானம் பலவுஞ் செய்தாங்
கெண்ணா லாண்டி னிறந்த பிற்பாடு
விண்ணோர் வடிவம் பெற்றன னாதலிற்
பெற்ற செல்வப் பெரும்பய னெல்லாந்
தற்காத் தளித்தோ டானச் சிறப்பெனப்
பண்டைப் பிறப்பிற் குரங்கின் சிறுகை
கொண்டொரு பாகத்துக் கொள்கையிற் புணர்ந்த
சாயலன் மனைவி தானந் தன்னா
லாயின னிவ்வடி வறிமினோ வெனச்
சாவகர்க் கெல்லாஞ் சாற்றினன் காட்டத்
தேவ குமரன் றோன்றின னென்றலும்

இ-ள். எட்டிப்பட்டத்தையுடைய சாயலனென்னும் வாணிகன் துறவாது இல்லறத்திருந்தவன்றனது உண்ணாவிரதத்தையுடையோர்பலரும் புகும் மனையகத்தே அவன்மனைக்கிழத்தி ஒரு பெரிய தவமுதல்வனைத் தன்வினைநீங்க எதிர்கொள்கின்ற பொழுதின்கண் அவ்வூரிடத்துத் துரப்புண்டு உணவும்பெறாது சிறுமையுற்றதோர் கருங்குரங்கு அச்சத்தோடு, ஒதுங்கிவந்து உள்புக்கு அருளறத்தின்பகுதிப்பட்ட மாதவனுடைய பாதத்தின்வணங்கி அவன் உண்டொழிந்த அன்னத்தையும் கைகழீஇய நீரையுஞ் சிறிதருந்திப் பெரும்பசிதீர்ந்து, எதிர்முகநோக்கிய முகச்செவ்வியைக்கண்டு சலியாவுள்ளத்தையுடைய அறிவனும் மனமகிழ்ந்து, இல்லறக்கிழத்தி

தன்னை, நீ நின்மக்களின் ஒருதன்மையாக ஓம்புகவெனக் கைப்படுப்ப, அவளும் மிக்கோனாற்கூறப்பட்ட மெய்ம்மொழியைத் தப்பாமற் பரிகரித்தொழுகாநிற்கின்றுழி, அங்ஙனங்காதலித்த அக்குரங்கு மரிக்க, அதனுடைய ஒருகூற்றைத் தானஞ்செய்கின்ற மனைக்கிழத்தி இதன் நீயபிறப்பறுகவெனச் செய்தனளாதலானே மத்திமதேசத்து வாரணவாசியென்னுநகரியின் உத்தரகௌத்தனென்னுமரசனுக்கு ஒருமகனாய் அழகினோடும் மெய்ப்பொறியோடும் உணர்வோடுந்தோன்றி மிக்க தானசூரனாய்ப் பலவகைப்பட்ட தானங்களையுஞ்செய்து அந்த அரசுரிமையிலே முப்பத்திரண்டாண்டிருந்து பின்பு தெய்வயாக்கைபெற்றனன்; ஆதலானே அங்ஙனம்பெற்ற சீழ்த்தான பெரும்பயனெல்லாம் தன்னைக்காத்தளித்தவள்செய்த தானத்தாற்பெற்ற சிறப்பென்று உட்கொண்டு முற்பிறப்பிற் கருங்குரங்கானவடிவிற் சிறியகையைத் தனது பெரிய ஒருபாகத்தேகொண்டு நன்மைக்கூற்றிலேபொருந்திய சாயலனுடைய மனையாள் தலைநாளிற்செய்த தானத்தாலே இந்தவடிவாயினேன்; இதனை நீங்களறிமினென்று சாவகநோன்பிசட்கெல்லாம் விளங்க அறிவித்தற்குத் தேவகுமாரன் இங்ஙனந்தோன்றினனென்றுசொல்லவுமென்க.

பட்டினிநோன்பிகள் - இரண்டு உவாவும் அட்டமியும் முட்டுப்பாடும் பட்டினி விட்டுண்ணும் விரதிகள். சிறுகுரங்கு - மெலிந்தகுரங்கு. கடைநாள் - மரணம். ஒருகூறென்றார்; பிள்ளைகளோர்பாதியை. உத்தரன் கவிப்பற் கொருமக னாகி யெனப்பாடமோதி, இக்குரங்கு உத்தரனென்னும்பெயரோடு கவிப்பனென்னும் வாணிகற்கு ஒருமகனாகப் பிறந்தெதென்பாருமுளர்.

௧௯௨-௧௯௭. சாரணர் கூறிய தகைசா னன்மொழி
யாரணங் காக வறந்தலைப் பட்டோ
ரன்றப் பதியு ளருந்தவ மாக்களுந்
தன்றறல் வாழ்க்கைச் சாவக மாக்களு
மிட்ட தானத் தெட்டியு மனைவியு
முட்டா வின்பத்து முடிவுல கெய்தினர்

இ - ள். அங்ஙனம் சாரணர்கூறிய பெருமையமைந்த நன்மொழியைத் தெய்வவாக்கியமாகக்கொண்டு அறத்தின்கட்டலைப்பட்டு அப்பதியிலிருந்த அருந்தவமாக்களும் தவத்தினாக்கெல்லாம் பொதுப்பட்டவாழ்க்கையையுடைய சாவகமாக்களும் தானமிட்ட எட்டியும் மனைவியும் முட்டாத இன்பத்தையுடைய வீட்டுலகத்தைப் பெற்றார்கள்காணென்றாரென்க.

'தவத்தோ ரடைக்கலந் தான்சிறி தாயினு மிகப்பே ரின்பந் தருவது கேளா' யென்றவர் இங்ஙனங்கூறினாரென்க. தன்றறல்வாழ்க்கை - தனதென்னுந் தன்மையில்லாதவாழ்க்கை; *"மன்றில் வதியுநா ட்சேட்புலப் பரிசிலர், வெல்போர்ச் சேஎய் பெருவிற லுள்ளி, வந்தோர் மன்ற வளியர் தாமென" என்றார் மலைபடுகடாத்திலும்.

௧௯௮-௨௦௦. கேட்டனை யாயினித் தோட்டார் குழலியொடு
நீட்டித் திராது நீபோ கென்றே
கவுந்தி கூற வுவந்தன னேத்தி

* மலைபடுகடாம், ௪௯௨ - ௪௯௪.

இ - ள். இவ்வடைக்கலத்தின்பயனை நீகேட்டியாயின் இந்தத் தோட்டார்குழ வினையுடையாளுடனே பொழுதுசெல்லுமளவும் நீட்டித்து இவ்விடத்திராது நீ போவாயாகவென்று கவுந்தியடிகள்கூறத் தான்பெற்ற கையடைக்கு உவந்தன ளாய்க் கவுந்தியடிகளையேத்திபென்க.

தோட்டார் - விகாரம்.

௨0௧-௨0௬. வளரிள வனமுலை வாங்கமை பணைத்தோள்
முளையிள வெண்பன் முதுக்குறை நங்கையொடு
சென்ற ஞாயிற்றுச் செல்சுட ரமையத்துக்
கன்றுதே ராவின் கனைகுர லியம்ப
மறித்தோ ளவியத் துறிக்கா வாளரொடு
செறிவளை யாய்ச்சியர் சிலர்புறஞ் சூழ

இ - ள். வளராநின்ற இளைய அழகிய முலையினையும் அமையினழகை வாங்கிக் கொண்டுபூரித்த தோளினையும் இளைய முளையெயிற்றினையும் சிறியபருவத்தே பெரிய அறிவினையுமுடைய நங்கையுடனே அத்தகிரிக்கட்சென்ற ஞாயிற்றினது சுருங் கனசுடரையுடைய மாலைப்பொழுதிலே சுரந்து கன்றைத்தேடிவாராநின்ற பசுக் களினுடைய முழங்குகுரல்களியம்ப ஆட்டுமறியையும் கோடரியையுமுடைய தோளிலே உறிகட்டின காலையுடைய இடையருடனேகூடப் பால்சுமந்துவரும் செறிந்த வளையையுடைய இடைச்சியரிற்சிலர் இவளழகுகண்டு புறஞ்சூழ்ந்துவாரா நிற்பவென்க.

௨0௭-௨௧௬. மிளையுங் கிடங்கும ... ... வேலும் பிறவும்

௨0௭. மிளையும்—இ - ள். காவற்காடும்,

௨0௭. கிடங்கும்—இ - ள். அகழியும்,

௨0௭. வளைவிற் பொறியும்—இ - ள். வளைந்து தானேயெய்யும் எந்திர வில்லும்,

௨0௮. கருவிர லூகமும்—இ - ள். கரியவிரலையுடைய குரங்குபோலிரு ந்து சேர்ந்தாரைக் கடிக்கும்பொறியும்,

௨0௮. கல்லுமிழ் கவணும்—இ - ள். கல்லையுமிழுங்கவணும்,

௨0௯. பரிவுறு வெந்நெயும்—இ - ள். காய்ந்திறைத்தலாற் சேர்ந்தாரை வருத்துவதாயநெய்யும்,

௨0௯. பாகடு குழிசியும்—இ - ள். செம்புருக்கும்,

அன்றி அங்ஙனமிறைத்தற்குப் பாகுகாயுங்குழிசிகளுமாம்.

௨௧0. காய்பொன் னுலையும்—இ - ள். உருகக்காய்ச்சியெறிதற்கு எஃகு பட்டிருக்கும் உலைகளும்,

௨௧0. கல்லிடு கூடையும்—இ - ள். இடங்கணிப்பொறிக்குக் கல்லிட்டு வைக்குங்கூடையும்,

௨௧௧. தூண்டிலும்—இ - ள். தூண்டில்வடிவாகப்பண்ணிப் போகட்டு வைத்துக் கிடங்குநீங்கி மதில்பற்றுவாரைக் கோத்துவலிக்குங்கருவியும்,

உ௧௧. தொடக்கும்—இ - ள். கழிகோல்போலக் கழுத்திற்பூட்டிமுறுக் குஞ்சங்கிலியும்,

கயிற்றுத்தொடக்குமாம்.

உ௧௧. ஆண்டலை யடுப்பும்—இ - ள். ஆண்டலைப்புள்வடிவாகப்பண்ணிப் பறக்கவிட உச்சியைக்கொத்தி மூளையைக்கடிக்கும் பொறிநிரைகளும்,

உ௧௨. கவையும்—இ-ள். கிடங்கிலேறின் மறியத்தள்ளும் இருப்புக்கவையும்,

உ௧௨. கழுவும்—இ - ள். கழுக்கோலும்,

கழுகும் பாடம்.

உ௧௨. புதையும்—இ - ள். அம்புக்கட்டும்,

*"அப்புப் புதையு மணிவரிச்சிலையும்" என்றார் கதையினும்.

உ௧௨. புழையும்—இ - ள். ஏவறைகளும்,

உ௧௩. ஐயவித் துலாமும்—இ - ள். பற்றாக்கை தூக்கிப்போகட்ட விட் டமும்,

அன்றிக் கதவையணுகாதபடி கற்கவிதொடங்கி நாற்றும் துலாமுமாம். சாணம்புக்கூடென்பாரும், சிற்றம்புகள்வைத்தெய்யும் இயந்திரமென்பாருமுளர்.

உ௧௩. கைபெய ரூசியும்—இ - ள். மதிற்றலையைப்பற்றுவாரைக் கையைப்பொதிர்க்கும் ஊசிப்பொறிகளும்,

இனிக் கதவொடுசேராதபடி வைத்த நிரைக்கழு வெனினுமமையும்.

உ௧௪. சென்றெறி சிரலும்—இ - ள். மாற்றார்மேற்சென்று கண்ணைக் கொத்தும் சிச்சிலிப்பொறியும்,

உ௧௪. பன்றியும—இ - ள். மதிற்றலையினேறினாருடலைக் கோட்டாற்கிழி க்க இரும்பாற்செய்துவைத்த பன்றிப்பொறியும்,

உ௧௪. பணையும் — இ - ள். வேய்வடிவாகப்பண்ணி அடித்தற்கமைத்த பொறியும்,

உ௧௫. எழுவுஞ் சீப்பும்—இ - ள். கதவுக்குவலியாக உள்வாயிற்படியிலே நிலத்திலேவீழவிடுமரங்களும்,

திறக்குங்காலத்து மேலேயெழுப்புகையால் எழுவுஞ்சீப்புமென்றார்; "சீப் புப் படியுறின்" என்றார் கதையினும்; இனிச் சீப்பு அகப்படக் குறுக்கேபோடக் கடவ மரமுமாம்.

உ௧௫. முழுவிறற் கணையமும்—இ - ள். கணையமரமும்,

உ௧௬. கோலும்—இ - ள். விட்டேறும்,

உ௧௬. குந்தமும்—இ - ள். சிறுசவளமும்,

* உதயணன்கதை, ௫௨ - வது பாலைநிலங்கண்டது. "வேம்பின்சினை தொறுங், கண்பா டவிந்த கருமணிப் பிறங்கலோ, டுழைக்கோ டணிந்த பீலி நாற் றிக், கழைக்கோற் றொடுத்த கதலிகை நுடங்கச், செறிதோற் பரமு மெறிகோல் வாளு, மப்புப் புதையு மணிவரிச் சிலையுஞ், செப்புநர் செய்த செல்வ முன்றில்"

உ௧௬. வேலும்—இ-ள். வல்லையமும்,

ஈட்டி முதலியனவுமாம்.

உ௧௬. பிறவும்—இ-ள். சதக்கினி, தள்ளிவெட்டி, களிற்றுப்பொறி, விழுங்கும்பாம்பு, கழுகுப்பொறி, புலிப்பொறி, குடப்பாம்பு, சகடப்பொறி, தகர்ப் பொறி, அரிநூற்பொறி, என்பனவும்,

சதக்கினி - நூற்றுவரைக்கொல்லி.

உ௧௭. ஞாயிறும்—இ-ள். குருவித்தலைகளும்,

இதனை ஏ வறையென்பாருமுளர்.

உ௧௭. சிறந்து—இ-ள். இவை சிறப்பெய்தப்பட்டு,

மிக்கென்றுமாம். *"மாற்றவர் ... ... கோண்மா" எனவும், "விற்பொறி கள் . ... மாநிலையே" எனவும், "செம்புருகு . ... பொறியே" எனவும், "கரும்பொனியல் ... ... இருந்தின்றே" எனவுஞ்சொன்னார் சிந்தாமணியிலும்.

உ௧௭-உ௧௯. நாட்கொடி நுடங்கும்
வாயில் கழிந்துதன் மனைபுக் கனளாற்
கோவலர் மடந்தை கொள்கையிற் புணர்ந்தென.

இ-ள். நாடோறும் வென்றுவென்றெடுத்த கொடிதானுடங்கும் மதில்வாயி லைக்கழிந்து மாதரி தன்மனையிடத்தே புக்காளென்க.

இடைக்குலமடந்தை ... மனைப்புகுமளவும் அடைக்கலந்தந்தேன்; ஆதலால், ஆட்டி ஊட்டிப் பெய்து உடீஇத் தாங்கு; அறியாயோநீ; தருவதுகேளாய்; முடி வுலகெய்தினர்; நீபோகென, முதுக்குறைநங்கையொடு கூனைகுரலியம்பச் சிலர் புறஞ்சூழக் கோவலர்மடந்தை வாயில்கழிந்து தன்மனைபுக்கனளென்க.

ஆல் - அன்றேயென்னும் அசை.

இஃது எல்லாவடியும் முதனடுவிறுதி அளவடியான் முடிதலின், நிலைமண்டில வாசிரியப்பா.

பருந்து நிழலுமென ... ...அடியார்க்குநல்லானென்பான்.

ஒருந்தமிழ் ... ...நிரம்பையர்காவலனே.

காற்ற ... ...சொல்லித்தகே.

அடைக்கலக்காதை முற்றிற்று.

---

* சீவகசிந்தாமணி, நாமகளிலம்பகம், ௭உ - ௭௩ - ௭௪ - ௭௫.

பதினாறாவது

கொலைக்களக்காதை.

அரும்பெறற் பாவையை யடைக்கலம் பெற்ற
விரும்பே ருவகையி னிடைக்குல மடந்தை
யளைவிலை யுணவி னாய்ச்சியர் தம்மொடு
மிளைசூழ் கோவல ரிருக்கை யன்றிப்
பூவ லூட்டிய புனைமாண் பந்தர்க்
காவற் சிற்றிற் கடிமனைப் படுத்துச்
செறிவளை யாய்ச்சியர் சிலருடன் கூடி
நறுமலர்க் கோதையை நாணீ ராட்டிக்
கூடன் மகளிர் கோலங் கொள்ளு
மாடகப் பைம்பூ ணருவிலை யழிப்பச்
செய்யாக் கோலமொடு வந்தீர்க் கென்மக
ளையை காணீ ரடித்தொழி லாட்டி
பொன்னிற் பொதிந்தேன் புனைபூங் கோதை
யென்னுடை நங்கையீங் கிருக்கெனத் தொழுது
மாதவத் தாட்டி வழித்துயர் நீக்கி
யேத மில்லா விடந்தலைப் படுத்தினை
ளேதக வுண்டோ நும்மக னார்க்கினிச்
சாவக நோன்பிக ளடிக ளாதலி
னாத்தூ ணங்கையொடு நாள்வழிப் படூஉ
மடிசி லாக்குதற் கமைந்தநற் கலங்க
ணெடியா தளிமி னீரெனக் கூற
விடைக்குல மடந்தைய ரியல்பிற் குன்றா
மடைக்கலந் தன்னொடு மாண்புடை மரபிற்
கோளிப் பாகற் கொழுங்கனித் திரள்காய்
வாள்வரிக் கொடுங்காய் மாதுளம் பசுங்காய்
மாவின் கனியொடு வாழைத் தீங்கனி
சாலி யரிசி தம்பாற் பயனொடு
கோல்வளை மாதே கொள்கெனக் கொடுப்ப
மெல்விரல் சிவப்பப் பல்வேறு பசுங்காய்
கொடுவாய்க் குயத்து விடுவாய் செய்யத்

திருமுகம் வியர்த்தது செங்கண் சேந்தன
கரிப்புற வட்டில் கண்டனள் பெயரா
வையெரி யூட்டிய வைவை தன்னொடு
கையறி மடைமையிற் காதலற் காக்கித்
தாலப் புல்லின் வால்வெண் டோட்டுக்
கைவன் மகடூஉக் கவின்பெறப் புனைந்த
செய்வினைத் தவிசிற் செல்வ னிருந்தபின்
கடிமல ரங்கையிற் காதல னடிநீர்
சுடுமண் மண்டையிற் றொழுதனண் மாற்றி
மண்ணக மடந்தையை மயக்கொழிப் பனள்போற்
றண்ணீர் தெளித்துத் தன்கையாற் றடவிக்
குமரி வாழையின் குருத்தகம் விரித்தீங்
கமுத முண்க வடிக ளீங்கென
வரசர் பின்னோர்க் கருமறை மருங்கி
னுரிய வெல்லா மொருமுறை கழித்தாங்
காயர் பாடியி னசோதைபெற் றெடுத்த
பூவைப் புதுமலர் வண்ணன் கொல்லோ
நல்லமு துண்ணு நம்பி யீங்குப்
பல்வளைத் தோளியும் பண்டுநங் குலத்துத்
தொழுனை யாற்றினுள் மேனி வண்ணனை
விழுமந் தீர்த்த விளக்குக் கொல்லென
வையையுந் தவ்வையும் விம்மித மெய்திக்
கண்கொளா நமக்கிவர் காட்சி யீங்கென
வுண்டினி திருந்த வுயர்பே ராளற்
கம்மென் றிரையலோ டடைக்கா யீத்த
மையி ரோதியை வருகெனப் பொருந்திக்
கல்லத ரத்தங் கடக்க யாவதும்
வல்லுந கொல்லோ மடந்தைமெல் லடியென
வெம்முனை யருஞ்சுரம் போந்தத றிரங்கி
யெம்முது குரவ ரென்னுற் றனர்கொல்
மாயங் கொல்லோ வல்வினை கொல்லோ
யானுளங் கலங்கி யாவது மறியேன்
வறுமொழி யாளரொடு வம்பப் பரத்தரொடு
குறுமொழிக் கோட்டி நெடுநகை புக்குப்
பொச்சாப் புண்டு பொருளுரை யாளர்
நச்சுக்கொன் றேற்கு நன்னெறி யுண்டோ

விருமுது குரவ ரேவலும் பிழைத்தேன்
சிறுமுதுக் குறைவிக்குச் சிறுமையுஞ் செய்தேன்
வழுவெனும் பாரேன் மாநகர் மருங்கீண்
டெழுகென வெழுந்தா யென்செய் தனையென
வறவோர்க் களித்தலு மந்தண ரோம்பலுந்
துறவோர்க் கெதிர்தலுந் தொல்லோர் சிறப்பின்
விருந்தெதிர் கோடலு மிழந்த வென்னைநும்
பெருமக டன்னொடும் பெரும்பெயர்த் தலைத்தாள்
மன்பெருஞ் சிறப்பின் மாநிதிக் கிழவன்
முந்தை நில்லா முனிவிகந் தனனா
வற்புளஞ் சிறந்தாங் கருண்மொழி யளைஇ
யெற்பா ராட்ட யானகத் தொளித்த
நோயுந் துன்பமு நொடிவது போலுமென்
வாயின் முறுவற் கவருள்ளகம் வருந்தப்
போற்றா வொழுக்கம் புரிந்தீர் யாவதும்
மாற்றா வுள்ள வாழ்க்கையே னாதலி
னேற்றெழுந் தனன்யா னென்றவள் கூறக்
குடிமுதற் சுற்றமுங் குற்றிளை யோரு
மடியோர் பாங்கு மாயமு நீங்கி
நாணமு மடனு நல்லோ ரேத்தும்
பேணிய கற்பும் பெருந்துணை யாக
வென்னொடு போந்தீங் கென்றுயர் களைந்த
பொன்னே கொடியே புனைபூங் கோதாய்
நாணின் பாவாய் நீணில விளக்கே
கற்பின் கொழுந்தே பொற்பின் செல்வி
சீறடி சிலம்பி னொன்றுகொண் டியான்போய்
மாறி வருவன் மயங்கா தொழிகெனக்
கருங்கய னெடுங்கட் காதலி தன்னை
யொருங்குடன் றழீஇ யுழையோ ரில்லா
வொருதனி கண்டுதன் னுள்ளகம் வெதும்பி
வருபனி கரந்த கண்ண னாகிப்
பல்லான் கோவல ரில்ல நீங்கி
வல்லா நடையின் மறுகிற் செல்வோ
னிமிலே றெதிர்ந்த திழுக்கென வறியான்
றன்குல மறியுந் தகுதியன் றாதலிற்
றாதெரு மன்றந் தானுடன் கழிந்து

மாதர் வீதி மறுகிடை நடந்து
பீடிகைத் தெருவிற் பெயர்வோ னாங்கட்
கண்ணுள் வினைஞர் கைவினை முற்றிய
நுண்வினைக் கொல்லர் நூற்றுவர் பின்வர
மெய்ப்பை புக்கு விலங்குநடைச் செலவிற்
கைக்கோற் கொல்லனைக் கண்டன னாகித்
தென்னவன் பெயரொடு சிறப்புப் பெற்ற
பொன்வினைக் கொல்ல னிவனெனப் பொருந்திக்
காவலன் றேவிக் காவதோர் காற்கணி
நீவிலை யிடுதற் காதி யோவென
அடியே னறியே னாயினும் வேந்தர்
முடிமுதற் கலன்கள் சமைப்பேன் யானெனக்
கூற்றத் தூதன் கைதொழு தேத்தப்
போற்றருஞ் சிலம்பின் பொதிவா யவிழ்த்தனன்
மத்தக மணியொடு வயிரங் கட்டிய
பத்திக் கேவணப் பசும்பொற் குடைச்சூற்
சித்திரச் சிலம்பின் செய்வினை யெல்லாம்
பொய்த்தொழிற் கொல்லன் புரிந்துட னோக்கிக்
கோப்பெருந் தேவிக் கல்லதை யிச்சிலம்
பியாப்புற வில்லை யெனமுன் போந்து
விறல்மிகு வேந்தற்கு விளம்பியான் வரவென்
சிறுகுடி லங்க ணிருமி னீரெனக்
கோவலன் சென்றக் குறுமக னிருக்கையோர்
தேவ கோட்டச் சிறையகம் புக்கபின்
கரந்தியான் கொண்ட காலணி யீங்குப்
பரந்து வெளிப்படா முன்ன மன்னற்குப்
புலம்பெயர் புதுவனிற் போக்குவ லியானெனக்
கலங்கா வுள்ளங் கரந்தனன் செல்வோன்
ஊடன் மகளி ராடற் றோற்றமும்
பாடற் பகுதியும் பண்ணின் பயங்களுங்
காவல னுள்ளங் கவர்ந்தன வென்றுதன்
னூட லுள்ள முள்கரந் தொளித்துத்
தலைநோய் வருத்தந் தன்மே லிட்டுக்
குலமுதற் றேவி கூடா தேகக்
மந்திரச் சுற்ற நீங்கி மன்னவன்
சிந்துரி நெடுங்கட் சிலதியர் தம்மொடு

கோப்பெருந் தேவி கோயி னோக்கிக்
காப்புடை வாயிற் கடைகா ணகவயின்
வீழ்ந்தனன் கிடந்து தாழ்ந்துபல ரேத்திக்
கன்னக மின்றியுங் கவைக்கோ லின்றியுந்
துன்னிய மந்திரந் துணையெனக் கொண்டு
வாயி லாளரை மயக்குதுயி லுறுத்துக்
கோயிற் சிலம்பு கொண்ட கள்வன்
கல்லென் பேரூர்க் காவலர்க் கரந்தென்
சில்லைச் சிறுகுடி லகத்திருந் தோனென
வினைவிளை கால மாதலின் யாவதுஞ்
சினையலர் வேம்பன் றேரா னாகி
யூர்காப் பாளரைக் கூவி யீங்கென்
றாழ்பூங் கோதை தன்கால் சிலம்பு
கன்றிய கள்வன் கைய தாகிற்
கொன்றச் சிலம்பு கொணர்க வீங்கெனக்
காவல னேவக் கருந்தொழிற் கொல்லனு
மேவ லுள்ளத் தெண்ணியது முடித்தெனத்
தீவினை முதிர்வலைச் சென்றுபட் டிருந்த
கோவலன் றன்னைக் குறுகின னாகி
வலம்படு தானை மன்னவ னேவச்
சிலம்பு காணிய வந்தோ ரிவரெனச்
செய்வினைச் சிலம்பின் செய்தி யெல்லாம்
பொய்வினைக் கொல்லன் புரிந்துடன் காட்ட
விலக்கண முறைமையி னிருந்தோ னீங்கிவன்
கொலைப்படு மகனல னென்று கூறும்
மருந்திறன் மாக்களை யகநகைத் துரைத்துக்
கருந்தொழிற் கொல்லன் காட்டின னுரைப்போன்
மந்திரந் தெய்வ மருந்தே நிமித்தந்
தந்திர மிடனே காலங் கருவியென்
றெட்டுட னன்றே யிழுக்குடை மரபிற்
கட்டுண் மாக்க டுணையெனத் திரிவது
மருந்திற் பட்டீ ராயின் யாவரும்
பெரும்பெயர் மன்னனிற் பெருநவைப் படுதிர்
மந்திர நாவிடை வழுத்துவ ராயி
னிந்திர குமரரின் யாங்காண் குவமோ
தெய்வத் தோற்றந் தெளிகுவ ராயின்

கையகத் தப்பொருள் காட்டியும் பெயர்குவர்
மருந்தி னங்கண் மயக்குவ ராயி
னிருந்தோம் பெயரு மிடனுமா ருண்டோ
நிமித்தம் வாய்த்திடி னல்லது யாவதும்
புகற்கி லரும்பொருள் வந்துகைப் புகுதினுந்
தந்திர கரண மெண்ணுவ ராயி
னிந்திரன் மார்பத் தாரமு மெய்துவ
ரிவ்விட மிப்பொருள் கோடற் கிடமெனி
னவ்விடத் தவரை யார்காண் கிற்பார்
காலங் கருதி யவர்பொருள் கையுறின்
மேலோ ராயினும் விலக்குநரு முண்டோ
கருவி கொண்டவ ரரும்பொருள் கையுறி
னிருநில மருங்கி னியார்காண் கிற்பா
ரிரவே பகலே யென்றிரண் டில்லை
கரவிடங் கேட்பினோர் புகலிட மில்லை
* தூதர்கோ லத்து வாயிலி னிருந்து
* மாதர் கோலத்து வல்லிருட் புக்கு
விளக்கு நிழலிற் றுளக்கிலன் சென்றாங்
கிளங்கோ வேந்தன் றுளங்கொளி யாரமெ
வெயிலிடு வயிரத்து மின்னின் வாங்கத்
துயில்கண் விழித்தோன் றோளிற் காணா
னுடைவா ளுருவ வுறைகை வாங்கி
யெறிதொறுஞ் செறிந்த வியல்பிற் காற்றான்
மல்லிற் காணா மணித்தூண் காட்டிக்
கல்வியிற் பெயர்ந்த கள்வன் றன்னைக்
கண்டோ ருளரெனிற் காட்டு மீங்கிவர்க்
குண்டோ வுலகத் தொப்போ ரென்றக்
கருந்தொழிற் கொல்லன் சொல்ல வாங்கோர்
திருந்துவேற் றடக்கை யிளையோன் கூறு
நிலனக ழுளிய னீலத் தானையன்
கலனசை வேட்கையிற் கடும்புலி போன்று
மாரி நடுநாள் வல்லிருண் மயக்கத்
தூர்மடி கங்கு லொருவன் றோன்றக்
கைவா ளுருவவென் கைவாள் வாங்க
வெவ்வாய் மருங்கினும் யானவற் கண்டிலே

---

* தூதர்க்கோலமெனவும், மாதர்க்கோலமெனவும் பாடம்.

னெறிதிவர் செய்தி யலைக்கும் வேந்தனு
முரியதொன் றுண்டோ வுறுபடை யிரெனக்
கல்லாக் களிமக னொருவன் கையில்
வெள்வா ளெறிந்தனன் விலங்கூ டறுத்தது
புண்ணுமிழ் குருதி பொழிந்துடன் பரப்ப
மண்ணக மடந்தை வான்றுயர் கூரக்
காவலன் செங்கோல் வளைஇய வீழ்ந்தனனே
கோவலன் பண்டை யூழ்வினை யுருத்தென.

௧-௨. அரும்பெறற் பாவையை யடைக்கலம் பெற்ற
விரும்பே ருவகையி னிடைகுல மடந்தை.

இ-ள். தனக்குப் பெறுதற்கரிய பாவைபோல்வாளைக் கவுந்தியடிகளால் அடைக்கலங்கொடுக்கப்பெற்ற மிகவும்பெரியதாகிய உவகையையுடைய இடையர் குலத்திற்பிறந்த மாதரியாகியமடந்தை,

மடந்தை - பருவமன்று; பெண்பாற்பெயர்.

௩-௬. அளைவிலை யுணவி னாய்ச்சியர் தம்மொடு
மிளைசூழ் கோவல னிருக்கை யன்றிப்
பூவ லூட்டிய புனைமாண் பந்தர்க்
காவற் சிற்றிற் கடிமனைப் படுத்து

இ-ள். மோர்விலையை உணவாகவுடைய ஆய்ச்சியரோடு இடையர்குடியிருந்த இல்லினன்றிக் கட்டுவேலிசூழ்ந்த காவலையும் அழகுபெறவிட்ட குளிர்ந்த காவணத்தையுமுடைய செம்மண்பூசப்பட்ட சிறிய இல்லாகிய புதியமனையிலேயிருத்தியென்க.

அளை - மோர். மிளை - கட்டுவேலி. பூவல் - செம்மண்; *"பூவற் படுவிற் கூவற் றொடிய" என்றார் புறத்திலும்.

௭-௮. செறிவளை யாய்ச்சியர் சிலருடன் கூடி
நறுமலர்க் கோதையை நாணீ ராட்டி

இ-ள். தன்சுற்றத்திலுள்ள செறிந்த வளையையுடைய ஆய்ச்சியர்சிலருடனே தானின்று நறிய மலர்க்கோதையினையுடையாளைப் புதுநீரான் மஞ்சனஞ்செய்வித்தென்க.

௯-௧௪. கூடன் மகளிர் கோலங் கொள்ளு
மாடகப் பைம்பூ ணருவிலை யழிப்பச்
செய்யாக் கோலமொடு வந்தீர்க் கென்மகள்
ஐயை காணீ ரடித்தொழி லாட்டி.

---

* புறநானூறு, ௩௧௧.

பொன்னிற் பொதிந்தேன் புனைபூங் கோதை
யென்னுடை நங்கையீங் கிருக்கெனத் தொழுது

இ-ள். இக்கூடல்நகரிடத்து மகளிர்கொள்ளும் அருவிலை ஆடகப்பைம்பூணாற் செய்த கோலமழித்தற்குச் செய்யாக்கோல்மோடுவந்த உமக்கு அடித்தொழிலாட்டி இல்லையென்று கருதற்பாலீரல்லீர்; என்மகள் ஐயைகாணும் அடித்தொழிலாட்டி; யான் உம்மைப் பொன்போலப் பொதிந்துகொள்வேன்; பூங்கோதையையுடைய நங்காய், இங்ஙனமாதலான், இனி ஒன்றற்குங்கவலாது இருப்பீராகவென்றுசொல்லித் தொழுவதுஞ்செய்தென்க.

கூடன்மகளிரென்றாள், தானறியுமூர் அதுவாகலின். இனிக் கூடன்மகளிர்க்கு அழகைக்கொடுக்கும் ஆடகப்பைம்பூணினது அருவிலையையழித்தற்குச் செய்யாக்கோலமொடு வந்தீர்க்கெனினுமமையும். செய்யாக்கோலம் - புனையாதவழகு; ஆவது இயற்கையழகு. வந்தீர்க்கென்றும், காணீரென்றும் உயர்சொல்லால் ஒருவரைக்கூறும் பன்மையாற் கூறினவள் ஈண்டு நங்கையென்றது ஒருமைப்பன்மை மயக்கமெனின்,—அற்றன்று, நம்பியெனப் பல்லோர்க்குறித்த முறைநிலைப்பெயர் நங்கையென்று புதல்வாமனைவியரைக்கூறும் முறைப்பெயராதலின், நங்கையென்றாளென்க. "நாத்தூ ணங்கையொடு" என்ப மேலும். இஃது அக்காலவழக்கு. கோவலனைத் தனக்குமகனாகக்கருதி இங்ஙனங்கூறினள். இனி வந்தாய்க்கெனவும், காணெனவும் பாடங்கூறுவாருமுளர்.

௪௫-கள. மாதவத் தாட்டி வழித்துயர் நீக்கி
யேதமில்லா விடந்தலைப் படுத்தினை
ரோதக வுண்டோ நும்மக ளார்க்கினி

இ-ள். மாதவத்தாட்டி திங்குள்ளநெறியின் ஒருதீங்குமுறாமற் காத்து வருத்தம் சிறிதுமில்லாவிடத்தே கூட்டினளாதலான் இனி நின்கொழுநற்கு இவ்விடத்தில் மனக்கவலையுறுதலுண்டோவென்றாளென்க.

இடந்தலைப்படுத்தல் - கூட்டுதல். புறனடைவிதியான், நோவுதல் - *நோதக வாயிற்று. நும்மகளார்க்கு - மகனென்பது ஆண்பாற்பெயர்; நும்முடையபுருடனுக் கென்பதாயிற்று; †"நினக்கிவன் மகனாய்த் தோன்றிய தூஉம், மனக்கினி யாற்குநீ மகளாய தூஉம், பண்டும் பண்டும் பலபிறப் புளவாற், கண்ட பிறவியே யல்ல காரிகை" என்றார் மணிமேகலையிலும். ‡"கண்போன்ற மாமன் மகன்" என்றார் சிந்தாமணியிலும். ஓகாரம் - எதிர்மறை.

௧௮-௨௧. சாவக நோன்பிக ளடிகளாதலி
னாங்கு நங்கையொடு நாள்வழிப் படூஉம்
மடிசி லாக்குதற் கமைந்தநற் கலங்க
ணெடியா தளிமி னீரெனக் கூற

---

* "நோதக விருங்குயி லாலு மரோ" என்றார் கலித்தொகையிலும்; பாலைக்கலி, ௩௨.

† மணிமேகலை, ௨௧ - வது கந்திற்பாவைவருவதுரைத்த காதை.

‡ சீவகசிந்தாமணி, பதிகம், ௨௧.

இ-ள். அடிகள் சாவகநோன்பிகளாதலின், நங்கையார் நாத்தூணுருடனே நீங்களும் பகற்பொழுதேயுண்ணும் அடிசில்சமைத்தற்குப் பொருந்தின நல்ல புதுக்கலங்களை விரையக்கொண்டுவந்து கொடுப்பீராகவென்று சொன்னாளாகவென்க.

சாவகநோன்பு - துறவாத விரதங்காத்தல். அடிகளென்றார், கோவலனை. நாத்தூணங்கை - நங்கைநாத்தூணென்க. நாத்தூணெடு நங்கை அடிசிலாக்குதற்கெனினுமமையும். நாள்வழிப்படூஉமடிசில் - போசனம். அமைந்தகலமென்றாள், தாங்களாளுங்கலமன்றி மேன்மக்களுண்டும் மடைக்கலங்களை. நற்கலம் - புதுக்கலம். கொடுத்தல் - நீட்டித்தல். நீரளிமினென்றாள், தனக்குச் செய்ம்முறையறியாதலின். இத்துணையுங்கூறியது இவர்கள்சென்ற அன்றிரவு செய்தனவும் மேற்செய்வனவும்; இனி மற்றைநாளைச்செய்தி கூறுகின்றார்.

௨௨-௨அ. இடைக்குல மடந்தைய ரியல்பிற் குன்றா
மடைக்கலந் தன்னொடு மாண்புடை மரபிற்
கோளிப் பாகற் கொழுங்கனித் திரள்காய்
வாள்வரிக் கொடுங்காய் மாதுளம் பசுங்காய்
மாவின் கனியொடு வாழைத் தீங்கனி
சாலி யரிசி தம்பாற் பயனொடு
கோல்வளை மாதே கொள்கெனக் கொடுப்ப

இ-ள். ஐயைமுதலாகிய இடைக்குலமடந்தையர் மாதரிகூறிய இயல்பிற் குன்றா மடைக்கலத்துடனே மாட்சிமையுடையோர்கொள்ளுக்கும் மரபுபோலப் பூவாதுகாய்க்கும் பாகலினுடைய கொழுவிய திரண்டகனிக்காயும் விளைந்த வரியையுடைய வெள்ளரிக்காயும் கொம்மட்டிமாதுளங்காயும் இனிய மாங்கனியும் வாழைக்கனியும் செந்நெலரிசியும் தம்மிடத்துள்ள பாலும் நெய்யுமென்னுமிவற்றைக் கொண்டுசென்று சேரிய வளையையுடையமாதே இவற்றைக்கொள்வாயாகவென்று கொடுக்கவென்க.

கோளிப்பாகல் - வெளிப்படை. கோளி - பூவாதுகாய்க்கும் மரம். என்னை? *"கோளி யாலத்து" என்றார். பாகல் - பலா. "முளிதயிர்மிசைபாகன்மென் பழம்" எனவும், †"பைம்பாகற் பழந்துணரிய, செஞ்சுளைய கனிமாந்தி" எனவும் சொன்னார் பாட்டினும். கனிக்காய் - முற்றியகாய். வாலரிக்கொடுங்காயென்று பாடமோதி, வெள்ளரிக்காயென்பாருமுளர். ‡"அணில்வரிக் கொடுங்காய்" எனப் புறத்தினுங் காட்டினராதலின், கொடுங்காயென்பது பெயர். வரி - அடை. மாதுளங்காய் கூறினார், புளித்தகறி பண்ணுதற்கு. பாற்பயன் - பாலும்பயனும்; என்னும்மைதொக்கு ஒடுவிரிந்து உடனிகழ்பொருளாயிற்று.

---

* புறநானூறு, ௫௮: "நீயே, தண்புனற் காவிரிக் கிழவனை யிவனே, முழுமுத லொரீஇந்த கோளியா லத்துக், கொழுநிழ னெடுஞ்சினை வீழ்பொறுத் தாங்குத், தொல்லோர் மாய்ந்தெனத் துளங்கல் செல்லாது, நல்லிசை முதுகுடி நடுக்கறத் தழீஇ, யிளைய தாயினுங் கிளையரா வெறியு, மருநரை யுருமிற் பொருநரைப் பொருஅச், செருமாண் பஞ்சவ ரேறே."

† பத்துப்பாட்டு, பொருநராற்றுப்படை, ௧௮௮ - ௧௮௯.

‡ புறநானூறு, ௨௪௭.

உ௬-௩௧. மெல்விரல் சிவப்பப் பல்வேறு பசுங்காய்
கொடுவாய்க் குயத்து விடுவாய் செய்யத்
திருமுகம் வியர்த்தது செங்கண் சேந்தன
கரிப்புற வட்டில் கண்டனள் பெயர
வைவெரி மூட்டிய வையை தன்னொடு
கையறி மடைமையிற் காதலற் காக்கி

இ - ள். அங்ஙனம் அவர்கொடுத்த பலவேறுவகைப்பட்ட பசுங்காய்களைக் கொடுவாய்க்குயத்தின் மெல்விரல்சிவப்ப விடுவாய்செய்யத் திருமுகம்வியர்த்தது; செங்கண் சேந்தன, கரியை இடத்தேயுடைய அட்டிலைக் கண்டனளாய் முக மாறிய பெயரும்வகை வைக்கோலால் எரியூட்டிய ஐயையுடனே தன் கைவல்ல மாத்திரத்தாலே காதலனுக்கு ஆக்கியென்க.

கொடுவாய்க்குயம் - கோடின வாயையுடைய அரிவாள். *"கூனிக் குயத் தின் வாய்நெல் லரிந்து" என்றார் பொருநராற்றுப்படையினும். விடுவாய்செய்தல் - அரிதல் திரு - அழகு; பெயருமாம். சேந்தன - சிவந்தன. கரிப்புறவட்டில் - புறம் கரிதான அட்டில்; புறம் - இடம். வைவெரியூட்டிய - வைக்கோலால் எரியை யூட்டிய. கையறிமடைமை பாடமாயின், கை அறிந்ததும் அறியாததுமாகவென்க. முன்பு ஆக்கிக் கைதேறினாற்போலவெனவுமமையும்.

௩௨-௪௰. தாலப் புல்லின் வால்வெண் டோட்டுக்
கைவல் மகடூஉக் கவின்பெறப் புனைந்த
செய்வினைத் தவிசிற் செல்வ னிருந்தபின்
கடிமல ரங்கையிற் காதல னடிநீர்
சுடுமண் மண்டையிற் றொழுதனன் மாற்றி
மண்ணக மடந்தையை மயக்கொழிப் பனள்போற்
றண்ணீர் தெளித்துத் தன் கையாற் றடவிக்
குமரி வாழையின் குருத்தகம் விரித்தீங்
கமுத முண்க வடிக ளீங்கென"

இ - ள். புற்களில் தாலப்புல்லினது மிகவும் வெள்ளியதோட்டாலே கை வன்மையையுடையமகள் அழகுபெறப் புனைந்துசெய்த தொழிலையுடைய தவிசிலே தனதுசெல்வன் வந்திருந்தபின்பு கடிமலரங்கையாற் சுடுமண்மண்டையாற் காதல னடிமலர் கழீஇயநீரைத் தான்தொழுதனளாய்மாற்றி மண்ணகமடந்தையுற்ற மயக் கத்தைத் தான் ஒழிக்கின்றாள்போலத் தன்கையாற் குளிர்ந்தநீரைத்தெளித்துத் தடவி மண்டலமிட்டு குமரிவாழையினது குருத்தைவிரித்து அதனகத்தே அமுதைப் பெய்து, அடிகள், ஈங்கு அமுதுசெய்தருளுகவென்றுசொல்லவென்க.

†"புறக்கா ழனவே புல்லென மொழிப" என்றாராகலின், தாலப்புல்லென்றார். வால்வெண்டோடு - இளைய வெள்ளிய தோடெனினுமமையும்; ‡"ஊர்தி

* பொருநராற்றுப்படை, உ௪௨.

† தொல்காப்பியம், பொருளதிகாரம், மரபியல், அ௬.

‡ புறநானூறு, ௩௨௰ாவதுசெய்யுள். இச்செய்யுளை ௬௯-ம்பக்கத்திற் காண்க.

வால்வெள் ளேறே" என்றாராகலின். மகடூஉ - பெண்பாற்பொதுச்சொல். தவிசு- தடுக்கு. அங்கை - அகங்கை ; *"அகமென் கிளவிக்குக் கைமுன் வரினே, முத னிலை யொழிய முன்னவை கெடுதலும், வரைநிலை யின்றே யாசிரியர்க்க, மெல் லெழுத்து மிகுத லாவயி னான" என்பதனான்முடிக்க. கழீஇயவென்பதூஉம், அமு தைப் பெய்தென்பதூஉம் முன்னத்தினுணருங்கிளவியாற் குறிப்பாற்கொள்ளப்பட் டன. மண்டையென்றது சுடுமண்மண்டையென்றார், புதுக்கலமாதலான்ற. இதனை மண்டையென இழித்துக்கூறினார், முன்னர்ப் பொன் வெள்ளிமுதலியன வழங்குதலின். வழிபாடுதோன்றத் தொழுதனண்மாற்றியென்றார். மணவகம் - ஒருசொல். மயக்கொழிப்பனள்போல் - மன்மடந்தை தங்கட்கு எதிர்வதுணர்ந்து மயங்கினானை மயக்கொழிப்பாள்போல. மயக்கம் - அனந்தரென்பாருமுளர். குமரி வாழை - இது பெயரின்வந்த சமாதியென்னுமலங்காரம். உண்க - இரந்துகோ டற்குறிப்பின்கண்வந்த ககரவீற்றுவியங்கோள். எங்கமுதமுண்கவென்றது, இவை யும் பொறுக்கவற்றேயென்னுமிரக்கம். ஆக்கி இருந்தபின் மாற்றித் தெளித்துத் தடவி விரித்து அமுதமுண்கவென்றாளெனக.

௪௪-௫௩. அரசர் பின்னோர்க் கருமறை மருங்கி
னுரிய வெல்லா மொருமுறை கழித்தாங்
காயர் பாடியி னசோதைபெற றெடுத்த
பூவைப் புதுமலர் வண்ணன் கொல்லோ
நல்லமு துண்ணு நம்பி யீங்குப்
பல்வளைத் தோளியும் பண்டுநங் குலத்துத்
தொழுனை யாற்றினுட் டீமணி வண்ணனை
விழுமந் தீர்த்த விளக்குக் கொல்லென
வையமுந் தவ்வையும் விம்மித மெய்தி
கண்கொளா நமக்கிவர் காட்சி யீங்கென

இ-ள். ஓதவும் உணரவுமரிய மறையிடத்து அரசர்பின்னோர்க்குரியவாக விதித்த வாய்ப்பூச்சுப் பலியிடுதல் முதலியவெல்லாம் ஒருமுறையாற் கழித்தபின்பு புறத்துநின்ற ஐயையும் மாதரியும் இந்தமதுரையில் இவ்வாயர்பாடியில் யாம்பெற்ற இந்நல்லமுதமுண்கின்ற இந்தநம்பி அந்தமதுரையில் ஆயர்பாடியில் அசோதை பெற்ற அந்த நல்லமுதமுண்ணும் புதிய காயாம்பூப்போலும் வண்ணத்தையுடைய கண்ணனோதான்; இவன்றுயர்தீர்த்த இப் பல்வளைத்தோளியும் காளிந்தியாற் றின்கண் தூய நீலமணிவண்ணனைத் துயர்தீர்த்த பின்னையென்னும் விளக்கோதா னென்று உவகைபொங்கி இவரழகு நம் கண்களினடங்காவென்று புகழ்ந்துகூற வென்க.

அரசர்பின்னோர் - வணிகர். தவ்வை - தாய். விம்மிதம் - அதிசயமுமாம்.

௫௪-௫௬. உண்டினி திருந்த வுயர்பே ராளற்
கம்மென் றிரையலோ டடைக்கா யீத்த
மையீ ரோதியை வருகெனப் பொருந்தி

* தொல்காப்பியம், எழுத்ததிகாரம், புள்ளிமயங்கியல், ௨௰.

இ - ள். அங்ஙனம் அவர்புகழ இனிதுண்டிருந்த மிக்கபுகழையுடைய கோவல னுக்கு அழகிய மெல்லிய சுருளோடே பிளவையுங்கொடுத்துநின்ற கரிய பெரிய ஓதியையுடையாளை வருகவென்று அருகணைத்தென்க.

ஓதி - ஆகுபெயர்.

ருஎ-சூஉ. கல்லத ரத்தங் கடக்க யாவதும்
வல்லுந கொல்லோ மடந்தைமெல் லடியென
வெம்முனை யருஞ்சுரம் போந்ததற் கிரங்கி
யெம்முது குரவ ரென்னுற் றனர்கொல்
மாயங் கொல்லோ வல்வினை கொல்லோ
யானுளங் கலங்கி யாவது மறியேன்

இ - ள். எம்முடைய முதுகுரவர், பருக்கைபொருந்திய சின்னெறியையுடைய அருநெறியைக்கடத்தற்குச் சிறிதும் வன்மையையுடையனவோ மடந்தையுடைய அடியென்று இவ்வெம்மையையுடைய எயினர், ஆறலைக்குஞ்சுரத்தினெறியிற் போந் ததற்கு இரங்கி என்ன இடும்பையுற்றார்களோ ; யாம் இங்ஙனமுற்றது கனவோ ; நனவாமாயின் முன்செய்த தீவினைப்பயனோ ; யான் இப்பொழுது உள்ளங்கலங்கு தலான் இவற்றினொன்றையும் அறிகின்றிலேன் ;

என்னுற்றனர்கொல் - இறந்துபட்டார்களோ. மாயம் - கனவு. யாவதும் - யாதும், பகுதிப்பொருள்விகுதி.

சுங-எ0. வறுமொழி யாளரொடு வம்பப் பரத்தரொடு
குறுமொழிக் கோட்டி நெடுநகை புக்குப்
பொச்சாப் புண்டு பொருளுரை யாளா
நச்சுக்கொன் றேற்கு நன்னெறி யுண்டோ
விருமுது குரவ ரேவலும் பிழைத்தேன்
சிறுமுதுக் குறைவிக்குச் சிறுமையுஞ் செய்தேன்
வழுவெனும் பாரேன் மாநகர் மருங்கீண்
டெழுகென வெழுந்தா யென்செய் தனையென

இ - ள். வீணரோடும் பரத்தரோடுங்கூடிப் பிறரைப்புறங்கூறும் அவையின் கண் வெடிசிரிப்புக்குட்பட்டு மறவியிற்பொருந்தி அமைந்தோர் விரும்பப்படும் பொருளாகிய நல்ல ஒழுக்கத்தைக்கெடுத்தவெனக்கு இனித் தீக்கதியன்றி நற்கதி யுண்டாமோ ; அதுவேயுமன்றி இருமுதுகுரவர்க்குஞ்செய்யும் ஏவலையும்பிழைத் தேன் ; நினக்குஞ்சிறுமைசெய்தேன் ; இவ்வழுவொழுக்கம் இழுக்கமென்பது சிறி தும்பார்த்திலேன் ; யான் இங்ஙனமானால் நம்முடையநகரிடத்துநின்றும் இந்நக ரிடத்துவருதற்கு எழுகவென்றேனாக, அது முறைமையன்றென மறாது என்னோடு ஒருப்பட்டெழுந்தாயே ; நீ என்னகருமஞ்செய்தாயெனக் கோவலன் இரங்கிக்கூற வென்க.

வறுமொழியாளர் - பயனிலகூறுவோர். வம்பப்பரத்தர் - புதிய காமநுகர்ச் சியைவிரும்புங்காமுகர்; பரத்தையை நுகர்வானும்.*பரத்தன். குறுமொழி - சிறு

* "பரத்தனென்பதற்கு இப்பொருள்கொண்டே "பெண்ணியலா ரெல்லா

சொல்; ஆவது பிறனையிகழ்ந்துகூறுதல். நகைபுக்கு - வெடிசிரிப்புக்குட்பட்டு. பொச்சாப்புண்டு - மறவியிற்பொருந்தி. நச்சு - நச்சப்படும்பொருள். இருமுதுகுரவர் - தந்தைதாயர். ஏவல்பிழைத்தல் - மாதவிநட்பை அவரொழிக்க ஒழியாமை. சிறுமுதுக்குறைவி - சிறியபிராயத்தே பெரிய அறிவையுடையாள். வழு - பழிப்புரை. எனும் - சிறிதுமென்றபடி. நகர் - தன்மனையுமாம். ஈண்டெழுகவென்பதற்கு நாம் போதற்குவினாயென்றுரைப்பினுமமையும். இத்துணையும் தனதொழுக்கத்தைவெறுத்து இவ்வரவிற்கு நீயுமுடன்பட்டாயெனத் தனதறிவின்மையை அவளொடுபடுத்துக்கூறினான். இனிக் கண்ணகிகூறுவாள் :

௭௧-௮௫. அறவோர்க் களித்தலு மந்தண ரோம்பலுந்
துறவோர்க் கெதிர்தலுந் தொல்லோர் சிறப்பின்
விருந்தெதிர் கோடலு மிழந்த வென்னையும்
பெருமக டன்னொடும் பெரும்பெயர்த் தலைத்தாண்
மன்பெருஞ் சிறப்பின் மாநிதிக் கிழவன்
முந்தை நில்லா முனிவிகந் தனனா
வற்புளஞ் சிறந்தாங் கருண்மொழி யளைஇ
யெற்பா ராட்ட யானகத் தொளித்த
நோயுந் துன்பமு நொடிவது போலுமென்
வாயின் முறுவற்கவ ருள்ளகம் வருந்தப்
போற்றா வொழுக்கம் புரிந்தீர் யாவது
மாற்றா வுள்ள வாழ்க்கையே னாதலி
னேற்றெழுந் தனன்யா னென்றவள் கூற

இ - ள். அறவோர் அந்தணர் துறவோர் விருந்தினரென்னுமிவர்கட்கு அளித்தலும் ஓம்பலும் எதிர்தலும் கோடலுமென்னுமிவற்றை இழந்தவென்னை நும் பெருமகளுடனே இருநிதிக்கிழவன்கண்டு, நீர் என்முன்புநில்லாமையான்வந்தவெறுப்பைக் கரந்தொழுகினேனாக," அவர்கள் அதுதெரிந்து தம்முள்ளத்தின்மிக்க அன்போடே அருள்கலந்தமொழியால் என்பொறையைப்பாராட்ட, யான் இதயத்தே மறைத்த மெய்வருத்தமும் மனக்கவலையும்வெளிப்பட்டு வாய்திறந்துசொல்லுவதுபோலேயிருந்ததென்று என் பொய்முறுவல்கண்டு அவர்வருந்த நீர் போற்றாவொழுக்கமேவினீராகவும் உம்முடைய வார்த்தையைச் சிறிதும் மாற்றாத உள்ளவாழ்க்கையையுடையேனாதலாலே யான் அதற்கு உடன்பட்டெழுந்தேனென்றாளென்க.

அறவோர் - சாவகநோன்பிகள். பெருமகள் - கோவலன்மாதா. பெயர் - புகழ். தலைத்தாள் - தலைமையுடையமுயற்சி. மன் - மன்னரால். நீரென ஒருசொல்வருவிக்க. இகந்தனனா - இகந்தேனாக; தன்மை. அற்பு - அன்பு. *"மெல்லொற்று ... ... இனையொற் றாகும்" என்பதனான் முடிந்தது. சிறத்தல் - மிகுதல்.

ரும் கண்ணிற் பொதுவுண்பார், நன்னேன் பரத்தநின் மார்பு" என்றார் திருவள்ளுவரும்; திருக்குறள், புலவிநுணுக்கம், ௧.

* தொல்காப்பியம், எழுத்ததிகாரம், குற்றியலுகரப்புணரியல், ௩.

நொடித்தல் - சொல்லுதல். வாயின்முறுவல் - பொய்ந்நகை. 'ஆற்று வுன்ன வாழ்க்கையீ ராதலின்' என்பதூஉம் பாடம்.

அச-கூரு. குடிமுதற் சுற்றமுங் குற்றிளை யோரு
மடியோர் பாங்கு மாயமு நீங்கி
நாணமு மடனு நல்லோ ரேத்தும்
பேணிய கற்பும் பெருந்துணை யாக
வென்னொடு போந்தீங் கென்றுயர் களைந்த
பொன்னே கொடியே புனைபூங் கோதாய்
நாணின் பாவாய் நீணில விளக்கே
கற்பின் கொழுந்தே பொற்பின் செல்வி
சீறடிச சிலம்பி னொன்றுகொண் டியான்போய்
மாறி வருவன் மயங்கா தொழிகென

இ - ள். சுற்றமுதலியநான்கினையுநீங்கி நாணமுதலியநான்குந்துணையாக அறிவற்ற என்னொடுபோந்து என் தனிமையைத்தீர்த்த பொன்னே! கொடியே! கோதாய்! பாவாய்! விளக்கே! கொழுந்தே! செல்வி! யான் நின்சீறடிக்கு அணியாகிய சிலம்பின் ஒன்றைக்கொண்டுபோய் விற்றுவருவேன்; வருந்துணையும் நீ தனிமையான் வருந்தாதொழிகவென்றானென்க.

குடிமுதற்சுற்றம் - தாய்தந்தைமுதலியோர். குற்றிளையோர் - குற்றேவன்மகளிர். அடியோர்பாங்கு - அடியார்பகுதித்திரள்; என்பார் செவிலித்தாய்முதலிய ஐவர்; *"ஐவர் நலனேம்ப" என்றார் பிறரும். ஆயம் - சேவிக்குந்தோழிமார். மடன் - கொளுத்தக் கொண்டு கொண்டதுவிடாமை. நல்லோரேத்து - மகளிரானேத்தப்படுமழகு. பேணியகற்பு - . . . ...•... பொன்முதலியவற்றிற்கெல்லாம் உவமம் விரித்துரைக்க.

கூசு - ௱௧. கருங்கய னெடுங்கட் காதலி தன்னை
யொருங்குடன் றழீஇ யுழையோ ரில்லா
வொருதனி கண்டுதன் னுள்ளகம் வெதும்பி
வருபனி கரந்த கண்ண னாகிப்
பல்லான் கோவல ரில்ல நீங்கி
வல்லா நடையின் மறுகிற் செல்வோன்

இ - ள். 'கரிய கயல்போலும் நெடிய கண்ணினையுடைய தனதுகாதலியை மெய்முழுதுந்தழுவி அவள் அருகில் யாவருமின்றித் தனியிருக்கின்ற அதனைக்கண்டு உள்ளகம்வெதும்புதலாலே மல்கிய கண்ணினீரை அவள்காணின் வருந்துமென்று அதனைக்கரந்த கண்ணினையுடையனாய்ப் பலபசுக்களையும் பலவெருமைகளையுமுடைய கோவலரில்லத்தைவிட்டுநீங்கி மாட்டாநடையோடே அத்தெருவிற்செல்கின்றவனென்க.

---

* சீவகசிந்தாமணி, நாமகளிலம்பகம், கூகூச:—அம்பொற் கொம்பி னாயிழை யையவர் நலனேம்பப், பைம்பொற் பூமிப் பல்கதிர் மூத்தார் சகடமுஞ், செம்பொற் றேரும் வேழமு மூர்ந்து திறிசிந்து, கம்பன் செல்லு நாளினு நாளு நலமிக்கே.

இதில 'உழையோரில்லா' எனவும், 'ஒருதனிகண்டு' எனவுங்கூறினர் ; ஆய்ச்சியரெல்லாம் குரவையாடப்போனமைதோன்ற.

௪00-௪0௧. இடபிலே றெதிர்ந்த திழுக்கென வறியான்
தன்குல மறியுந் தகுதியன் றாதலின்

இ - ள். அங்ஙனஞ்செல்கின்றவன் முரிப்பையுடைய கொல்லேறு எதிர்த்துப் பாயவந்ததனை நிமித்தவிரோதமென்று அறிந்திலன் ; அஃது இடையர்குலமன்றித் தன்குலத்துள்ளாரறியும் முறைமையன்மையானென்க.

இமில் - முரிப்பு.

௪0௨-௪0௪. தாதெரு மன்றந் தானுடன் கழிந்து
மாதர் வீதி மறுகிடை நடந்து
பீடிகைத் தெருவிற் பெயர்வோ னாங்கண்

இ - ள். அம்மறுகில் தாதெருவையுடைய மன்றத்தையெல்லாங்கழிந்து தளிச்தெருவினடுவேபோய்க் கடைத்தெருவிற் பெயர்கின்றவன் அவ்விடத்தே,

௪0௫-௪௧௨. கண்ணுள் வினைஞர் கைவினை முற்றிய
நுண்வினைக் கொல்லர் நூற்றுவர் பின்வர
மெய்ப்பை புக்கு விலங்கு நடைச்செலவிற்
கைக்கோற் கொல்லனைக் கண்டன னாகித்
தென்னவன் பெயரொடு சிறப்புப் பெற்ற
பொன்வினைக் கொல்ல னிவனெனப் பொருந்திக்
காவலன் றேவிக் காவதோர் காற்கணி
நீவிலை யிடுதற் காதி யோவென

இ - ள். உருக்குந்தட்டாரும் கைவினைமுற்றிய பணித்தட்டாருமாகிய நூற்றுவர்பின்வர அரசவரிசையாகிய சட்டையுடனே ஒதுங்கி நடந்துசெல்லுஞ்செலவினையும் கையிற்பிடித்த கொடிற்றையுமுடைய பொற்கொல்லனைக் கண்டனனாகிப் பாண்டியன்பெயரோடு வரிசைபெற்ற பொற்கொல்லனிவனெனக்கருதி அணுகச்சென்று, அரசன்றேவிக்குப் பூணலாவதோர்சிலம்பினை விலைமதித்தற்கு நீவல்லையோவென்று கேட்பவென்க.

மெய்ப்பை - சட்டை. விலங்குநடைச்செலவு - மேன்மக்களைக்கண்டு ஒதுங்கிநடத்தல். கைக்கோல் - கொடிறு. ஆதியோ - ஆவையோ; கருத்தனோவென்றுமாம். ஆதியோவென்றான், தன்சிலம்பின் அருவிலைகருதி. இவனைக்கண்டாலும் தீர்ந்நிமித்தமென்பர் பின்வர முன் கண்டனனாகியென்றார். இனிப் பொற்கொல்லன் கூறுவான் :—

௪௧௩-௪௧௬. அடியே னறியே னாயினும் வேந்தர்
முடிமுதற் கலன்கள் சமைப்பேன் யானெனக்
கூற்றத் தூதன் கைதொழு தேத்திப்
போற்றருஞ் சிலம்பின் பொதிவா யவிழ்த்தனன்

இ - ள். மகளிருடைய அடிக்கலம் விலைமதித்தற்கறியேனாயினும் வேந்தர் முடிக்கலமுதலியன சமைப்பேன்யானெனக் காலதூதனாகவந்த பொற்கொல்லன் கையாற்றொழுது புகழ்தலானே யாவர்க்கும்புகழவரிய சிலம்பினைப் பொதிந்த பொதிவாயை அவிழ்த்தனனாகவென்க.

ககஎ-கஉ0. மத்தக மணியொடு வயிரங் கட்டிய
பத்திக் கேவணப் பசும்பொற் குடைச்சூற்
சித்திரச் சிலம்பின் செய்வினை யெல்லாம்
பொய்த்தொழிற் கொல்லன் புரிந்துட னோக்கி

இ - ள். தலையானமாணிக்கத்தோடு வயிரமும் பத்திபடவழுத்திய கேவணத்தையுடைய கிளிச்சிறையென்னும் பசும்பொன்னாற்செய்த புடைபட்டு உட்கருவையுடைய சித்திரத்தொழிலையுடைத்தாகிய சிலம்பின் தொழிலருமையையெல்லாம் பொய்ச்செய்திசார்ந்த தொழிலையுடைய பொற்கொல்லன் நெஞ்சம் *இடுவந்திகூறுதலைப்புரிந்துநோக்கக் கண்கள் சிலம்பைநோக்க இவ்விருநோக்கும் கண்டார்க்கு ஒருநோக்கம்போலநோக்கியென்க.

மத்தகமணி - சூடிகைமணியுமாம். சிலம்பின்மத்தகத்தின்மணியெனினுமமையும். கேவணம் - மணியழுத்துங்குழி. குடைச்சூல் - புடைபடுதலென்பாருமுளர். செய்வினை - கைத்தொழில். பொய்த்தொழில் - பொய்சொல்லுதலை தொழிலாகவுடையவெனினுமாம். புரிந்துட னோக்கியென்பதற்குப் பணியும்விலையும்நோக்காது அவனை இடுவந்தியிடுவதற்கிசைந்து தான் வஞ்சித்துக்கொண்டசிலம்போடொக்கும்படியைப் பார்த்தென்பாருமுளர்.

கஉக-கஉசு. கோப்பெருந் தேவிக் கல்லதை யிச்சிலம்
பியாப்புற வில்லை யெனமுன் போந்து
விறல்மிகு வேந்தற்கு விளம்பியான் வரவென்
சிறுகுடி லங்க ணிருமி னீரெனக்
கோவல்ன் சென்றக் குறுமக னிருக்கையோர்
தேவ கோட்டச் சிறையகம் புக்கபின்

இ - ள். அரசனுடைய பெருந்தேவிக்கல்லது இப்பெருவிலைச்சிலம்பு வேறொருவர்க்கும் விலையில்லையென்றுசொல்லி, முன்னின்றும்போய் வெற்றிமிக்க வேந்தனுக்கு இதனையுணர்த்தி யான்வருந்துணையும் என் புன்குடிலுக்கருகாகிய அவ்விடத்தே நீரிருமெனக் கோவலனுஞ்சென்று அக்கீழ்மகனிருப்பிடத்திற்கு அயலதோர் அக்கசாலைப்பள்ளியின் மதிலுக்குள்ளே புக்கபினென்க.

ஐ - இடைச்சொல். யாப்புறவு - வினை; பொருத்தமுமாம். என - என்று சொல்லி. முன்போந்து - முன்னின்றும்போய். இனி, இவனுட்கோள்கூறுவார்:

கஉஎ-கருO. கரந்தியான் கொண்ட காலணி யிதுப்
பரந்து வெளிப்படா முன்னமன் னற்குப்
புலம்பெயர் புதுவனிற் போக்குவ னியானெனக்
கலங்கா வுள்ளங் கரந்தனன் செல்வோன்

---

* இடுவந்தி - குற்றமில்லாதவன்மேற் குற்றத்தையேற்றுதல். இது இத் தமிழ்நாட்டின் வடபாகத்தேவழங்குகின்றது.

இ - ள். யான் முன்பு வஞ்சித்துக்கொண்டசிலம்பு என்னிடத்ததேயென்பது பலருமறிய மன்னற்கு வெளிப்படுவதன்முன்னே வேறொருதேயத்தினின்றும்வந்த புதியவனோடே போக்குவேன்யானென்று துணிந்தவுளத்தைக்கரந்து செல்கின்றவன்,

யாங்கொண்டவென்றும், போக்குவமென்றுங்கூறற்பாலதனை இவன்கீழ்மகனாதலால், தனித்தன்மைகூறினார்.

கஙக-கசக. கூடன் மகளி ராடற் றோற்றமும்
பாடற் பகுதியும் பண்ணின் பயன்களுங்
காவல னுள்ளங் கவர்ந்தன வென்றுதன்
னூட லுள்ள முள்கரந் தொளித்துத்
தலைநோய் வருத்தந் தன்மே லிட்டுக்
குலமுதற் றேவி கூடா தேக
மந்திர சுற்ற நீங்கி மன்னவன்
சிந்தரி நெடுங்கட் சிலதியர் தம்மொடு
கோப்பெருந் தேவி கோயி னோக்கிக்
காப்புடை வாயிற் கடைகா ணகவயின்
வீழ்ந்தனன் கிடந்து தாழ்ந்துபல வேத்தி

இ - ள். கூடலில் நாடகமகளிருடைய ஆடலிடத்துத்தோன்றும் முகத்தோற்றமும் அவர் ஆடல்விகற்பமும் அவ்வாடல்விகற்பத்துக்கேற்ற பாடலின்வேறுபாடும் யாழிசையின்பயன்களும் காவலனுடைய உள்ளத்தை விரும்புவித்தனவென்றுகருதி ஊடியவுள்ளத்தைத் தன்னுள்ளேகரந்தொடுக்கி வருத்தத்தைச்செய்யும் தலைநோயென்பதனைத் தன்மேலேயிட்டுக்கொண்டு குலப்பிறப்பையுடைய பெருந்தேவி தன்னோடு மேவாதே தனதுகோயிற்கண்ணே அந்தப்புரத்திற்சென்று புகுந்துவிடுதலானே, அரசன் காமபரவசனாய் அமைச்சர்திரளினின்றுநீங்கி அரிசிந்திய கண்ணையுடைய சிலதியர்திரளுடனே கோப்பெருந்தேவியுடைய கோயிலைநோக்கிச் செல்வோனைக் காவலையுடைய வாயிற்கடையிடத்தே கண்டவளவிலே வீழ்ந்து தாழ்ந்து பலகாலேத்திச் சொல்கின்றவனென்க.

கலங்கா வுள்ளங் கரந்தனன் செல்வோன், தாழ்ந்து பலவேத்தியென்க.

கசஉ-கசஎ. கன்னக மின்றியுங் கவைக்கோ லின்றியுந்
துன்னிய மந்திரந் துணையெனக் கொண்டு
வாயி லாளரை மயக்குதுயி லுறுத்துக்
கோயிற் சிலம்பு கொண்ட கள்வன்
கல்லென் பேரூர்க் காவலர்க் கரந்தென்
சில்லைச் சிறுகுடி லகத்திருந் தோனென

இ - ள். கன்னக்கோலும் கவைக்கோலுமின்றாகவும் தன்மனத்தின்கட்பயின்ற துயின்மந்திரமே களவுக்குத்துணையெனக்கொண்டு வாயில்காவலரைமயக்கமுறுத்துந்துயிலெய்துவித்துக் கோயிற்கணிருந்த சிலம்பினை அபகரித்துக்கொண்ட கள்வன் இந்த ஒலியையுடைய பெரிய ஊர்காவலருடைய கண்ணைமறைத்து

அடியேனுடைய புன்குடிலகத்தே வந்திருக்கின்றானென்று அவ்வரசற்குச்சொல்லவென்க.

கன்னகம் - அகழ்கருவி. கவைக்கோல் - கொடிற்றுக்கோல்; ஆவது படைக்கல் இட்டிகைமுதலியவற்றைப் பறிக்குங்கருவி; குத்துக்கோலென்பாருமுளர். சில்லை - இழிவு. இன்றியுமென்னுமும்மை சிறப்பு. துணை - உசா. முன்னான் தன்னிடத்தில்லையென்று நிலைநின்றதற்கேற்பக் கோயிற்சிலம்புகொண்ட கள்வனென்றான். விற்கவந்து அகப்பட்டானென்பதுதோன்ற, என் சிறுகுடிலகத்திருந்தானென்றான்.

கசஅ-கருரு. வினைவிளை கால மாதலின் யாவதுஞ்
சினையலர் வேம்பன் றேரா னாகி
யூர்காப் பாளரைக் கூவி யீங்கென்
றாழ்பூங் கோதை தன்காற் சிலம்பு
கன்றிய கள்வன் கைய தாகிற்
கொன்றச் சிலம்பு கொணர்க வீங்கென

இ - ள். சினையலர்வேம்பன் ஊர்காக்கும் காவலாளரையழைத்து இங்ஙனமாகிய எனது தாழ்பூங்கோதையையுடையாடன்னுடைய காலணியாகியசிலம்பு இவன்சொன்ன களவிற்றழும்பிய கள்வனுடைய கையகத்ததாயின், அவனைக் கொல்ல அச்சிலம்போடு ஈங்குக்கொணர்கவெனக்கருதியவன் வினைவிளைகின்ற காலமாதலானே இதனைச் சிறிதுந்தேரானாய்த் தேவிகூடாதேகச் சுற்றநீங்கிச் சிலதியரோடு கோயினோக்கிக் காமபரவசனாய் அவள் கடையிடத்தோனாகலானே, அவனைக்கொன்று அச்சிலம்பை இவளூடறீர்த்தற்குதவியாக இவ்விடத்தே கொணர்வீராகவென்று சொல்லவென்க.

யாவதும் - சிறிதும். சினை - கொம்பு. அலர்வேம்பு - வேம்பலரென ஆகுபெயரான் மாலையாயிற்று. வேம்பன் "கொன்றையன்" என்பதுபோலநின்றது. கன்றிய - அடிப்பட்டவென்றபடி. கொன்று - கொல்லவெனத்திரிப்பினுமமையும். இனி என்கோதைதன் காற்சிலம்பு அடிப்பட்டகள்வன்கையதாகிற் கொன்றுகொணர்கவெனினும் தன்கட் கொடுங்கோன்மையின்மையுணர்க.

கருசு-கருஎ. காவல னேவக் கருந்தொழிற் கொல்லனு
மேவ லுள்ளத் தெண்ணியது முடித்தெனத்
தீவினை முதிர்வலைச் சென்றுபட் டிருந்த
கோவலன் றன்னைக் குறுகின னாகி

இ - ள். அங்ஙனங்கூறியகாவலன் ஏவற்காரரைத் தன்னோடேவுதலாலே கருந்தொழிற்கொல்லனும் ஏவப்பட்டவுள்ளத்தோடே நாம் எண்ணியவெண்ணம் முடிந்ததன்றேவெனக்கருதித் தீவினையாகிய சூழ்ந்த வலைக்குள்ளேசென்று அகப்பட்டிருந்த கோவலனைக் குறுகச்சென்றானாகவென்க.

கருந்தொழில் - கொலைத்தொழில். முடிந்ததென்பது விகாரம். இனி, எதிர்காலத்தன்மைவினையை விரைபொருட்கண் இறந்தகாலத்தாற் கூறினானெனினுமமையும். முதிர்தல் - சூழ்தல். முதிர்வினையென மாறித் தீய பழவினையாகிய வலைக்குள்ளேயெனினுமமையும்.

கரு௮-கசுக. வலம்படு தானை மன்னவ னேவச்
சிலம்பு காணிய வந்தோ ரிவரெனச்
செய்வினைச் சிலம்பின் செய்தி யெல்லாம்
பொய்வினைக் கொல்லன் புரிந்துடன் காட்ட

இ - ள். வெற்றிபொருந்திய தானைமன்னவனேவுதலாற் சிலம்புகாணிய இவர் வந்தார்; அதனைக் காட்டுமினெனச்சொல்லி அத்தொழில்பொருந்திய சிலம்பினருமையெல்லாங்கூறுவான்போலப் பொய்ம்மையைத் தொழிலாகவுடைய கொல்லன் அவரை வேறாக அழைத்துக் கோயிலிலிருக்கின்ற தனிச்சிலம்போடே பொருந்தச்சொல்லிக்காட்டவென்க.

காட்டுமினென்பது சொல்லெச்சம். காணிய - வினையெச்சம். புரிந்தெனவே அவனினிங்கியென்பதும், உடன்காட்டவெனவே அச்சிலம்போடு ஒருதன்மையாக ஒப்புக்கூறியென்பதும் கொள்ளப்பட்டன.

கசுஉ-கசுரு. இலக்கண முறைமையி னிருந்தோ னிங்கிவன்
கொலைப்படு மகனல னென்று கூறு
மருந்திறன் மாக்களை யகநகைத் துரைத்துக்
கருந்தொழிற் கொல்லன் காட்டின னுரைப்போன்

இ - ள். இவன், மெய்ப்பொறியானும் இருக்கின்றமுறைமையானும் கள்வனென்று நீ சொலலப்படுவானுமல்லன்; கொல்லப்படுவானுமல்லனென்றுசொல்லும் அரியதிறலையுடைய வேற்காரரை நகைத்து இகழ்ந்துகூறிக் கொலைத்தொழில் புரிந்த பொற்கொல்லன் களவுநூலிலுள்ள ஏதுக்களைக் காட்டினனாய் உரைக்கின்றவனென்க.

இலக்கணமுறைமை - இலக்கணத்தானும் இருந்தமுறைமையானுமென உம்மைத்தொகை. கொலைப்படுமகன் - கள்வன். அகநகை - இகழ்ச்சிநகை. அகநகவென்றுபாடமாயின், நகவுரைத்தென்க.

கசுசு-கசுகூ. மந்திரந் தெய்வ மருந்தே நிமித்தந்
தந்திர மிடனே காலங் கருவியென்
றெட்டுட னன்றே யிழுக்குடை மரபிற்
கட்டுண் மாக்க டுணையெனத் திரிவது

இ - ள். பொல்லாவொழுக்கத்திறற் களவுகண்டுண்ணுமாக்கள் மந்திரமுதலிய எட்டையுமன்றோ படையாகக்கொண்டு திரிவதென்றானென்க.

மருந்தே இடனேயென்ற ஏகாரமிரண்டும் எண். அன்றேயென்பது - தேற்றம். கட்டுண்மாக்கள் எட்டுடனன்றே துணையெனத்திரிவதென்க.

கள0-களக. மருந்திற் பட்டீ ராயின் யாவரும்
பெரும்பெயர் மன்னனிற் பெருநவைப் பட்டீர்

இ - ள். இவன் வலியையழித்துத் தப்புவதன்றி இவன்மருந்திற்பட்டீராயின், நம் பெரிய புகழையுடைய வேந்தனால்வருந்தண்டம் இப்பொழுதே பட்டீரன்றோவென்றானென்க.

பட்டர் - வினைப்பொருள்; சொன்னேம் சொன்னேமென்னும்வழக்கு. இது மூற்கூறினன்; அவர் அஞ்சிக் கடுகக் கோறற்கு. இனி மந்திரமுதலிய எட்டின் விளைவு கூறுவான் :

களஉ-களங. மந்திர நாவிடை வழுத்துவ ராயி
னிந்திர குமரரின் யாங்காண் குவமோ

இ - ள். தாம் சாதித்தமந்திரத்தை நாவிடத்தே வழுத்துவராயின், தேவகுமாரரைப்போல நாம் காணமாட்டோமென்றானென்க.

வழுத்தல் - அபிமந்திரித்தல்; இந்திரகுமரர் காணப்படார்; அவரைப்போல இவருங்காணப்படார். இந்திரர் - தேவர்; *"இந்திரர்க்கும் புகழ்வரிதே" எனவும், "இந்திர ரமுத மியைவ தாயினும்" எனவுஞ்சொன்னார் பிறரும். இனி அந்தர குமரரென்பாருமுளர்.

களச-களரு. தெய்வத் தோற்றந் தெளிகுவ ராயிற்
கையகத் துப்பொருள் காட்டியும் பெயர்குவர்

இ - ள். தாங்கள் ஆதரிக்குந்தெய்வம் எப்பொழுதும் தங்களுக்குமுன்னிற்கும்படி மனந்தெளிந்துநினைப்பாராயிற் கையிலேயகப்பட்ட மிக்கபொருளை நமக்குக் காட்டியும் தப்புவரென்றானென்க.

களசு-களஎ. மருந்தி னங்கண் மயக்குவ ராயி
னிருந்தோம் பெயரு மிடனுமா ருண்டோ

இ - ள். இவர் மருந்தினாலே நம்மிடத்து மயக்கஞ்செய்வாராயின், இருந்த நாம் புடைபெயருமிடமும் உண்டாமோவென்றானென்க.

மார் - இடைச்சொல்.

களஅ-களக. நிமித்தம் வாய்த்திடி னல்லதி யாவதும்
புகற்கி லருமபொருள் வந்துகைப் புகுதினும்

இ - ள். தாம் கண்டநிமித்தம் வாய்ப்புப்பெற்றாலல்லது பெறுதற்கரியபொருள் தானேவந்துகைப்புகுதினும் புகாரென்றானென்க.

யாவதும் - எளியவிடத்தினும்.

கஅ0-கஅக. தந்திர கரண மெண்ணுவ ராயி
னிந்திரன் மார்பத் தாரமு மெய்துவர்

இ - ள். களவுநூலிற்சொல்லிப்போதுகின்ற தொழில்களையறிந்து எண்ணிச் செய்வாராயின், தாம் மண்ணுலகத்திருப்பினும் விண்ணுலகத்திருக்கும் இந்திரனது மார்பிலணிந்த ஆரத்தை எய்தவேண்டின் அதனையும் எய்துவரென்றானென்க.

தந்திரம் - நூலிற்சொல்லுங்கிரியை எண்ணுதல் - எண்ணிச்செயல்.

கஅஉ-கஅங. இவ்விட மிப்பொருள் கோடற் கிடமெனி
னெவ்விடத் தவரை யார்காண் கிற்பார்

* சீவகசிந்தாமணி நாமகளிலம்பகம், கசச.

இ - ள். இப்பொருள் நாங்கோடற்கு இவ்விடமேயிடமென இவர்துணிவாராயின் அவ்விடத்து அவரை யார் கண்ணுற் காணவல்லாரென்றுனென்க.

இற்றல் - செய்தல்.

௧௬௪-௧௬௫. காலங் கருதி யவர்பொருள் கையுறின்
மேலோ ராயினும் விலக்கலு முண்டோ

இ - ள். அவர்கள் களவுகொள்ளுங்காலம் இதுவென்றுகருதிப் பொருளைக் கைப்பற்றுவாராயின், மேலோராயிருப்பினும் விலக்குதலுண்டாகுமோவென்றுனென்க.

௧௬௬-௧௬௭. கருவி கொண்டவ ரரும்பொருள் கையுறி
னிருநில மருங்கி னியார்காண் கிற்பார்

இ - ள். கருவிகளைக்கொண்டு பெறுதற்கரியபொருளைக் கைப்பற்றுவாராயின், இப்பூமியிடத்து யாவர் கண்கொண்டு காணவல்லாரென்றுனென்க.

இங்ஙனமாதலாலெனை ஒருசொல்வருவிக்க.

௧௬௮-௧௬௯. இரவே பகலே யென்றிரண் டில்லை
கரவிடங் கேட்பினோர் புகலிட மில்லை

இ - ள். இவர்க்கு இரவுபகலென்று இரண்டில்லை; இக்கரவின்பகுதியை நாம் கேட்பிற் புகழ்ந்துமுடியாது;

இக்களவுநூலை நாங்கேட்பின், ஒடியொளிக்கலாமிடமில்லையென்றுமாம்.

௧௭௦-௨௦௨. தூதர் கோலத்து வாயிலி னிருந்து
மாதர்கோ லத்து வல்லிருட் புக்கு
விளக்கு நிழலிற் றுளக்கிலன் சென்றாங்
கிளங்கோ வேந்தன் றுளங்கொளி யாரம்
வெயிலிடு வயிரத்து மின்னின் வாங்கத்
துயில்கண் விழித்தோன் றோளிற் காணு
னுடைவா ளுருவ வுறைகை வாங்கி
யெறிதொறுஞ் செறித்த வியல்பிற் காற்றான்
மல்லிற் காண மணித்தூண் காட்டிக்
கல்வியிற் பெயர்ந்த கள்வன் றன்னைக்
கண்டோ ருளரெனிற் காட்டு நீங்கிவர்க்
குண்டோ வுலகத் தொப்போ ரென்றக்
கருந்தொழிற் கொல்லன் சொல்ல

இங்ஙனம் களவுநூற்றுறைகூறி, முன்னாள் இத் தென்னவன்றம்பியிடத்து நிகழ்ந்ததென்று ஓர் பொய்க்கரிகூறுகின்றான்.

இ - ள். முன்னாளிலே ஒருகள்வன் தூதருருக்கொண்டுவந்து கொற்றவன் வாயிற்கட் பகற்பொழுதிருந்து இராப்பொழுது மாதருருக்கொண்டு உள்புகுந்து விளக்குநீழலிலே பள்ளியறையினுள் அஞ்சாதுபுக்கு அடங்கி இங்நெடுஞ்செழியற்கு

இளங்கோவாகிய வேந்தன் துயில்கின்றவனுடைய மார்பில் வெயிலிடுகின்ற வயிரத்தையுடைய ஆரத்தை விரைய வாங்கினானாக, துயிலுணர்ந்தவன் தோளிற்காணாய் உடைவாளையுருவினானாக, அதனுறையைக் கள்வன் கையிலேவாங்கி அவன் குத்துந்தோறும் வாளிலேயுறையைச்செறித்தான்; அங்ஙனஞ்செறித்தலின், அதற்கு ஆற்றானாய் மற்போராலே அவன்வலியினெல்லையைக்காண, ஆண்டுநின்றதோர் தூணைத் தானாகக்காட்டிக் கழிந்து தன்கள்வுநூற்கல்வியாற் றப்பியகள்வனைக் கண்டாருண்டாயின் அவர்களைக் காட்டிக்காணீர்; ஆதலான், இவர்க்கு இவரே ஒப்பாதலன்றி இவ்வுலகத்துப் பிறரையொப்பாகக்கூறுதலுண்டோவென்று அக் கொலைத்தொழிற்கஞ்சாத பொற்கொல்லன்சொன்னானாகவென்க.

வேந்தன் விழித்தோன் காணான் உருவ வாங்கிச் செறித்த இயல்பிற்காற்றான் காணக் காட்டிப் பெயர்ந்த கள்வனென்க. இதனால் அரசனெஞ்சுணர்ந்தும் நாவெழாமைகூறினான். இவர்க்கென்றான், கள்வரென்றசாதிபற்றி. அ-முன்னறிசுட்டு.

௨௦௨-௨௦௫. ஆங்கோர்

திருந்துவேற் றடக்கை யிளையோன் கூறும்

இ-ள். அவ்விடத்து அவர்களில் வேலைக் கையிலேயுடையானொரிளையவன் சொல்லும்; அஃதியாதெனின்,—

௨௦௬-௨௧௧. நிலனக ழுளிய னீலத் தானையன்
கலனசை வேட்கையிற் கடும்புலி போன்று
மாரி நடுநாள் வல்லிருண் மயக்கத்
தூர்மடி கங்கு லொருவன் றோன்றக்
கைவா ளுருவவென் கைவாள் வாங்க
வெவ்வாய் மருங்கினும் யானவற் கண்டிலே
னரிதிவர் செய்தி யலைக்கும் வேந்தனு
முரியதொன் றுரைமி னுறுபடை யீரென

இ-ள். முன்னாளிலே, நிலத்தையகழும் உளியையுடையனாய் நீலநிறத்தானையையுடையனாய்ப் பலகலன்களையும் நச்சியவேட்கையாற் பற்றியபொருளைவிடாமையிற் கொடும்பசியால் ஊனைக்கவ்விவிடாத புலிபோன்று சாற்காலத்து இடையாமமாகிய, இருளாற் கண்கள் மயங்கச்செய்தலையுடைய ஊரெல்லாம் துயிலான் மடிவித்தலைச்செய்யும் இராக்காலத்து ஒருகள்வன் வந்துதோன்ற,யான் என்கையில் வாளை உறைகழித்தேனாக, அவ்வாளை அவன்வாங்க, அவனையும் என்வாளையும் எவ்விடத்துங்கண்டிலேன்; ஆதலால் இவர்செய்கை யாவர்க்கும் அறியவரிது; இவனை நாம் நெகிழவிடின், அரசன் நம்மைவருத்தும்; ஆதலான், இனி இதற்குச் செய்தற்குரியதொன்றைத் துணிந்துகூறுமின்; மிக்க படைக்கலத்தையுடையீரென்றானென்க.

*“நிறங்கவர்பு புனைந்த நீலக் கச்சினர், மென்னூ லேணிப் பன்மாண் சுற்றினர், நிலனக ழுளியர் கலனசைஇக் கொட்குங், கண்மா றாடவ ரொடுக்க மொற்றி”

* பத்துப்பாட்டு, மதுரைக்காஞ்சி, ௬௩௯-௬௪௨.

என்றார் மதுரைக்காஞ்சியினும். இனி - உளியத்தென்று பாடமோதி, நின்று வந்த தொகைப்பின்னின்ற போன்றென்பதனை இதனோடுகூட்டி முடிப்பினுமமையும். இதற்கு நிலத்தானையன் நிலனகழ்தலால் உளியம்போன்றும், கலனசை வேட்கையாற் புலிபோன்றுமென்க.

உளியன் தானையன் புலிபோன்று ஒருவன்றோன்றவென்க.

௨௧௨-௨௧௭. கல்லாக் களிமக னொருவன் கையில்
வெள்வா ளெறிந்தனன் விலங்கூ டறுத்தது
புண்ணுமிழ் குருதி பொழிந்துடன் பரப்ப
மண்ணக மடந்தை வான்றுயர் கூரக்
காவலன் செங்கோல் வளைஇய வீழ்ந்தனன்
கோவலன் பண்டை யூழ்வினை யுருத்தென.

இ - ள். இங்ஙனம் இவர்கூறலின், அறிவின்மையாற் கொலையஞ்சான் ஒரு களிமகன் தன்கையில் வெள்வாளாலே வெட்டுதலுக, அது குறுக்கேதுணித்தது; துணிந்த உடற்குறைப்புண்வழியே கொப்புளிக்கின்றகுருதி குதித்து எங்கும்பரக்க நிலமடந்தை தனக்காவதுணர்ந்து மிக்கதுயரமுற அக்காவலனுடைய செங்கோல் வளைய முன்னைத் தீவினைமுதிர்தலாலே கோவலன் வெட்டுண்டுவிழுந்தானென்க.

வெள்வாள் - மாற்றாரையெறிந்து குருதிக்கறை தட்டாதவாளெனவுமாம்; போர்மாலை சூழ்ந்து புகர்புகாதவாள். விலங்கூடறுத்தது - அவ்வாள் குறுக்கே துணித்தது; முற்று. உமிழ்தல் - கொப்புளித்தல். வானும் கூர்ப்பும் மிகுதி.

இது எல்லாவடியும் அளவடியாய்வந்துமுடிதலின் நிலைமண்டிலவாசிரியப்பா.

நண்ணு மிருவினையு நண்ணுமின்க ளல்லவே
கண்ணகி தன்கேள்வன் காரணத்தான் - மண்ணில்
வளையாத செங்கோல் வளைந்ததே பண்டை
விளைவாகி வந்த வினை.

இ - ள். பாண்டியன் முன்செய்த தீங்கின்வினைவாகிவந்த வினையாலே, மண்ணில் வளையாத செங்கோல் கண்ணகிதன் கேள்வன்முன்னிலையாக வளைந்தது; ஆதலாற் செய்தானொருவனை இருவினையும் நண்ணுமென்பதனையறிந்து உலகத்தீர்! நல்வினையேசெய்யுமின்களென்று அடிகள்கூறினாரென்க.

ஆதலாலென ஒருசொல்வருவிக்க.

பருந்து நிழலுமென ... ...அடியார்க்குநல்லானென்பான்.

ஒருந்தமிழ் ... ...நிரம்பையர்காவலனே.

காற்றை ... ...சொல்வித்ததே.

கொலைக்களக்காதை முற்றிற்று.

பதினேழாவது

ஆய்ச்சியர் குரவை.

கயலெழுதிய விமய நெற்றியி
னயலெழுதிய புலியும் வில்லு
நாவலந் தண்பொழின் மன்ன
ரேவல்கேட்பப் பாரர சாண்ட
மாலை வெண்குடைப் பாண்டியன் கோயிலிற்
காலை முரசங் கனைகுர லியம்புமாகலி
னெய்ம்முறைநமக் கின்றாமென்
றையைதன் மகளைக்கூஉய்க்
கடைகயிறு மத்துங்கொண்
டிடைமுதுமகள் வந்துதோன்றுமன்

உரைப்பாட்டுமடை

குடப்பா லுறையா குவியிமி லேற்றின்
மடக்கணீர் சோரும் வருவதொன் றுண்டு

உறிநறு வெண்ணெ யுருகா வுருகு
மறிதெறித் தாடா வருவதொன் றுண்டு

நான்முலை யாய நடுங்குபு நின்றிரங்கு
மான்மணி வீழும் வருவதொன் றுண்டு

கருப்பம்

குடத்துப்பா லுறையாமையுங் குவியிமிலேற்றின் மடக்கண்ணீர் சோர்தலு முறியில்வெண்ணெ யுருகாமையு மறிமுடங்கி யாடாமையு மான்மணிநிலத் தற்றுவீழ்தலும் வருவதோர் துன்பமுண்டென மகளை நோக்கி மனமயங்காதே மண்ணின்மாதர்க் கணியாகிய கண்ணகியுந் தான்காண வாயர்பாடியி லெருமன்றத்து மாயவனுடன் றன்முனாடிய பாலசரிதை நாடகங்களில் வேனெடுங்கட் பின்னையோடாடிய குரவை யாடுதும் யாமென்றாள் கறவைகன்று துயர்நீங்குகவெனவே

கொளுச்சொல்

க. காரி கதனஞ்சான் பாய்ந்தானைக் காமுறுமிவ்
வேரி மலர்க்கோதை யாள், சுட்டு

௨. நெற்றிச் செகிலை யடர்த்தாற் குரியவிப்
பொற்றொடி மாதரா டோள்

௩. மல்லன் மழவிடை யூர்ந்தாற் குரியளிம்
முல்லையம் பூங்குழ றான்

௪. நுண்பொறி வெள்ளை யடர்த்தாற்கே யாகுமிப்
பெண்கொடி மாதர்தன் றோள்

௫. பொற்பொறி வெள்ளை யடர்த்தாற்கே யாகுமிந
நற்கொடி மென்முலை தான்

௬. வென்றி மழவிடை யூர்ந்தாற் குரியளிக்
கொன்றையம் பூங்குழ லாள்

௭. தூநிற வெள்ளை யடர்த்தாற் குரியளிப்
பூவைப் புதுமல ராள்

எடுத்துக்காட்டு

ஆங்கு,

தொழுவிடை யேறு குறித்து வளர்த்தா
ரெழுவ ரிளங்கோதை யார்

என்றுதன் மகளைநோக்கித்
தொன்றுபடு முறையானிறுத்தி
யிடைமுது மகளிவர்க்குப்
படைத்துக்கோட் பெயரிடுவாள்

குடமுத லிடமுறை யாக்குர றுத்தங்
கைக்கிளை யுழைபிளி விளரிதா ரமென
விரிதரு பூங்குழல் வேண்டிய பெயரே

மாயவ னென்றாள் குரலை விறல்வெள்ளை
யாயவ னென்றா ளிளிதன்னை யாயமகள்
பின்னையா மென்றாளோர் துத்தத்தை மற்றையார்
முன்னையா மென்றாண் முறை

மாயவன் சீருளார் பிஞ்ஞையுந் தாரமும்
வால்வெள்ளை சீரா ருழையும விளரியுங்
கைக்கிளை பிஞ்ஞை யிடத்தாள் வலத்துளாண்
முத்தைக்கு நல்விளரி தான்

அவருள், வண்டுபோய் மாலையை மாயவன் மேலிட்டுத்
தண்டாக் குரவைதா னுள்படுவாள் - கொண்டசீர்

வைய மளந்தான்றன் மார்பிற் றிருநோக்காப்
பெய்வளைக் கையாணம் *பின்னைதானாமென்றே
யையென்றா ளாயர்மகள்

கூத்துள்படுதல்

அவர்தாம், செந்நிலை மண்டிலத்தாற் கற்கடகக் கைகோஒத்
தந்நிலையே யாடற்சீ ராய்ந்துளார் - முன்னைக்
குரற்கொடி தன்கிளையை நோக்கிப் பரப்புற்ற
கொல்லைப் புனத்துக் குருந்தொசித்தான் பாடுதும்
முல்லைத்தீம் பாணியென் றாள்

எனாக்,
குரன்மந்த மாக விளிசம னாக
வரன்முறையே துத்தம் வலியா - வுரனிலா
மந்தம் விளரி பிடிப்பா ளவணட்பின்
பின்றையைப் பாட்டெடுப் பாள்

பாட்டு :

௧. கன்று குணிலாக் கனியுதிர்த்த மாயவ
னின்றுநம் மானுள் வருமே லவன்வாயிற்
கொன்றையந் தீங்குழல் கேளாமோ தோழீ

௨. பாம்பு கயிறாக் கடல்கடைந்த மாயவ
னீங்குநம் மானுள் வருமே லவன்வாயி
லாம்பலந் தீங்குழல் கேளாமோ தோழீ

௩. கொல்லையஞ் சாரற் குருந்தொசித்த மாயவ
னெல்லைநம் மானுள் வருமே லவன்வாயின்
முல்லையந் தீங்குழல் கேளாமோ தோழீ†

தொழுனைத் துறைவனோ டாடிய பின்னை
யணிநிறம் பாடுகேம் யாம்

௧. ‡இறுமென் சாய னுடங்க நுடங்கி
யறுவை யொளித்தான் வடிவென் கோயா
மறுவை யொளித்தா னயர வயரு
நறுமென்சாயன் முகமென் கோயாம்

---

* பின்னைதானாமென்றும் பாடம்.

† "கன்று குணிலா" என்பதுமுதலியமூன்றும், இரண்டாமடிகளிரட்டிக்கப் பெற்று நந்நான்கடியினவாக மிதிலைப்பட்டிப்பிரதியிற் காணப்படுகின்றன.

‡ "இறுமென்சாயல்" முதலிய மூன்றிலுமுள்ள 'என்கோயாம்' என்பன வற்றிற்கு 'என்பேமோயாம்' என்று பொருள்செய்திருக்கிறார்.

௨. வஞ்சஞ் செய்தான் றொழுனைப் புனலு
ணெஞ்சங் கவர்ந்தா ணிறையென் கோயா
நெஞ்சங் கவர்ந்தா ணிறையும் வளையும்
வஞ்சஞ் செய்தான் வடிவென் கோயாம்

௩. தையல் கலையும் வளையு மிழந்தே
கையி லொளித்தாண் முகமென் கோயாங்
கையி லொளித்தாண் முகங்கண் டழுங்கி
மைய லுழந்தான் வடிவென் கோயாம்

ஒன்றன்பகுதி

கதிர்திகிரி யான்மறைத்த கடல்வண்ண னிடத்துளாள்
மதிபுரையு நறுமேனித் தன்முன்னோன் வலத்துளாள்
பொதியவிழ் மலர்க்கூந்தற் பின்னைபிர் புறங்காப்பார்
முதுமறைதேர் நாரதனார் முந்தைமுறை நரம்புளர்வார்

மயிலெருத் துறழ்மேனி மாயவன் வலத்துளாள்
பயிலிதழ் மலர்மேனித் தன்முன்னோ னிடத்துளாள்
கயிலெருத்தங் கோட்டியநம் பின்னைபிர் புறங்காப்பார்
குயிலுவரு ணாரதனார் கொளைபுணர்சீர் நரம்புளர்வார்.

ஆடுநர்ப்புகழ்தல் :

மாயவன்றன் முன்னிளெனும் வரிவளைக்கைப் பின்னையோடுங்
கோவலர்தஞ் சிறுமியர்கள் குழற்கோதை புறஞ்சோர
வாய்வளைச்சீர்க் கடிபெயர்த்திட் டசோதையார் தொழுதேத்தத்
தாதெருமன் றத்தாடுங் குரவையோ தகவுடைத்தே

எல்லாநாம்,
புள்ளூர்தி கடவுளைப் போற்றுதும் போற்றுதும்
முள்வரிப் பாணியொன் றற்று

உள்வரிவாழ்த்து :

க. கோவா மலையாரங் கோத்த கடலாரந்
தேவர்கோன் பூணாரந் தென்னர்கோன் மார்பினவே
தேவர்கோன் பூணாரம் பூண்டான் செழுந்துவரைக்
கோகுல மேய்த்துக் குருந்தொசித்தா னென்பரால்

. பொன்னிமயக் கோட்டுப் புலிபொறித்து மண்ணாண்டான்
மன்னன் வளவன் மதிற்புகார் வாழ்வேந்தன்
மன்னன் வளவன் மதிற்புகார் வாழ்வேந்தன்
பொன்னந் திகிரிப் பொருபடையா னென்பரால்

௩. முந்நீரி னுள்புக்கு மூவாக் கடம்பெறிந்தான்
மன்னர்கோச் சேரன் வளவஞ்சி வாழ்வேந்தன்
மன்னர்கோச் சேரன் வளவஞ்சி வாழ்வேந்தன்
கன்னவிறோ ளோச்சிக் கடல்கடைந்தா னென்பரால்

முன்னிலைப்பரவல் :

௧. வடவரையை மத்தாக்கி வாசுகியை நாணாக்கிக்
கடல்வண்ணன் பண்டொருநாட் கடல்வயிறு கலக்கினையே
கலக்கியகை யசோதையார் கடைகயிற்றாற் கட்டுண்கை
மலர்க்கமல வுந்தியாய் மாயமோ மருட்கைத்தே

௨. அறுபொரு ளிவனென்றே யமரர்கணந் தொழுதேத்த
வுறுபசியொன் றின்றியே யுலகடைய வுண்டனையே
யுண்டவாய் களவினா னுறிவெண்ணெ யுண்டவாய்
வண்டுழாய் மாலையாய் மாயமோ மருட்கைத்தே

௩. திரண்டமரர் தொழுதேத்துந் திருமாலின் செங்கமல
விரண்டடியான் மூவுலகு மிருடீர நடந்தனையே
நடந்தவடி பஞ்சவர்க்குத் தூதாக நடந்தவடி
மடங்கலாய் மாறட்டாய் மாயமோ மருட்கைத்தே

படர்க்கைப்பரவல் :

௧. மூவுலகு மீரடியான் முறைநிரம்பா வகைமுடியத்
தாவியசே வடிசேப்பத் தம்பியொடுங் கான்போந்து
சோவரணும் போர்மடியத் தொல்லிலங்கை கட்டழித்த
சேவகன்சீர் கேளாத செவியென்ன செவியே
திருமால்சீர் கேளாத செவியென்ன செவியே

௨. பெரியவனை மாயவனைப் பேருலக மெல்லாம்
விரிகமல வுந்தியுடை விண்ணவனைக் கண்ணுந்
திருவடியுங் கையுந் திருவாயுஞ் செய்ய
கரியவனைக் காணாத கண்ணென்ன கண்ணே
கண்ணிமைத்துக் காண்பார்தங் கண்ணென்ன கண்ணே

௩. மடந்தாழு நெஞ்சத்துக் கஞ்சனார் வஞ்சங்
கடந்தானை நூற்றுவர்பா னாற்றிசையும் போற்றத்
தொடர்ந்தா ரணமுழங்கப் பஞ்சவர்க்குத் தூது
நடந்தானை யேத்தாத நாவென்ன நாவே
நாராயணா வென்னா நாவென்ன நாவே

என்றியாம்,
கோத்த குரவையு ளேத்திய தெய்வந்

மாத்தலைப் பட்ட துயர்தீர்க்க வேத்தர்
மருள வைகல் வைகன் மாறட்டு
வெற்றி விளைப்பது மன்னோ கொற்றத்
திடிப்படை வானவன் முடித்தலை யுடைத்த
தொடித்தோட் டென்னவன் கடிப்பிகு முரசே.

கயலெழுதிய விமய நெற்றியி
னயலெழுதிய புலியும் வில்லு
நாவலந்தண் பொழின் மன்ன
ரேவல் கேட்பப் பாரர சாண்ட
மாலை வெண்குடைப் பாண்டியன் கோயிலிற்
காலை முரசங் கனைகுர லியம்பு மாகலி
னெய்ம்முறை நமக்கின் றாமென
வையைதன் மகளைக் கூஉய்க்
கடைகயிறு மத்துங்கொண்
டிடைமுதுமகள் வந்துதோன்றுமன்

இ - ள். இமயநெற்றியில் தானெழுதிய கயலுக்கு அயலெழுதிய புலியையும் வில்லையுமுடைய செம்பியன் சேரனென்னுமன்னரும் நாவலந்தீவின்கண் மன்னரும் மற்றுமுள்ள குறுநிலமன்னரும் தன்னேவல்கேட்டொழுக நிலமுழுதுமாண்ட முத்தமாலைபொருந்திய வெண்கொற்றக்குடையையுடைய பாண்டியனது கோயிற்கண்ணே பள்ளியெழுச்சிமுரசு இயம்பும், ஆதலாலே நமக்கு இன்று கோயிலில் நெய்யளக்கும் முறையாமெனநினைந்து ஐயையாகிய தன்மகளையழைத்துக் கடைகயிறும் மத்துங்கொண்டு இடையர்குலத்திற்பிறந்த முதுமகளாகிய மாதரி தயிர்த்தாழியிருக்கின்றவிடத்தே வந்து தோன்றினளெனக.

மன்னருமென்னும் உம்மை தொக்கது, இயம்பும் - முற்று. கூஉய் - அழைத்து. அயற்றிக்கென்றது வடக்கும் மேற்கும். அக்கயலைச்சேவிக்க அயலெழுதிய புலியும் வில்லுமென்க; ஒப்பாகவெழுதிற்றிலரென்பதாம். புலியும் வில்லும் மன்னரும் ஏவல்கேட்ப இப்பாருக்குத் தான் அரசனாயாண்ட பாண்டியனென்க.

குடப்பா லுறையா குவியிமி லேற்றின்
மடக்கணீர் சோரும் வருவதொன் றுண்டு

இ - ள். அங்ஙனந்தோன்றினவள் கூறுவாள் :—நாம் பிரையிட்ட தாழிகளிற் பாலும் தோயாதொழிந்தன ; அதுவுமன்றி நமது நிரையுள் திரண்ட முரிப்பையுடைய விடையின்கண்களும் நீருகாநின்றன ; இவை இங்ஙனமாதலான் நமக்கு வருவதோருற்பாதமுண்டெனறாளென்க.

குடம் - தயிர்த்தாழி. உறைதல் - தோய்தல். குவிதல் - திரளுதல். இமில் - முரிப்பு. மடம் - ஈண்டு அழகு ; "மடவரன் மடமான்" போல.

உறிநறு வெண்ணெ யுருகா வுருகு
மறிதெறித் தாடா வருவதொன் றுண்டு

இ - ள். அங்ஙனம் பாலுறையாமையின் முதன்றோவெண்ணெய் தானவும் உருகுகின்றதில்லை; அதுவுமன்றி ஆட்டுமறிகளும் துள்ளிவிட குழைந்துகிடக்கும்; ஆதலான் நமக்கு வருவதோர் உற்பாதமுண்டென்றுமெ.

உருகுதல் - நெகிழ்தல். உருகும் - குழைந்துகிடக்கும்.

நான்முலை யாயம் நடுங்குபு நின்றிரங்கு
மான்மணி வீழும் வருவதொன் றுண்டு

இ - ள். நான்முலையையுடைய பசுத்திரள் மெய்நடுங்கிநின்று அரற்றும்; அதுவுமன்றிப் பசுக்களின்கழுத்திற் பெரியமணிகளும் வீழாநின்றன; ஆதலான் நமக்கு வருவதோர் உற்பாதமுண்டென்றுமொன்க.

ஆயம் - பசுத்திரள். நடுங்குபு - நடுங்கி. மான்மணி - பெரியமணி.

கருப்பம—இ - ள் இவைகேட்டிற்குக் கருப்பம்.

குடத்துப்பா லுறையாமையுங் குவிஇமி லேற்றின் மடக்கணீர் சோர்தலு முறியில்வெண்ணெ யுருகாமையு மறிமுடங்கி யாடாமையு மான்மணி நிலத்தற்று வீழ்தலும் வருவதோர் துன்பமுண்டென மகளை நோக்கி மனமயங்காதே மண்ணின் மாதர்க் கணியாகிய கண்ணகியுந் தான்காண வாயர்பாடியி லெருமன்றத்து மாயவனுடன் றன்முனாடிய வாலசரிதை நாடகங்களில் வேனெடுங்கட் பிஞ்ஞையோடாடிய குரவை யாடுது மியாமென்றாள்; கறவை கன்று துயர்நீங்குகவெனவே

இ - ள் உறையாமையானும் சோர்தலானும் உருகாமையானும் ஆடாமையானும் வீழ்தலானும் வருவதோர்துன்பமுண்டென்றுசொல்லி மகண்முகத்தை நோக்கி அஞ்சாதொழி; முன்னர் ஆயர்பாடியில் எருமன்றத்து மாயவன் தமையனோடாடிய பாலசரிதநாடகங்கள் பலவுள, அவற்றுள் வேல்போலும் நெடிய கண்ணையுடைய பிஞ்ஞையோடாடிய குரவைநாடகத்தை மண்ணின்மாதர்க்கெல்லாம் அணிகலமாகிய இக்கண்ணகியும் கண்டுநிற்க யாம் ஆடக்கடவேம்; இக்கறவையும் கன்றும் பிணிநீங்குகவென்றென்றாளென்க.

உறையாமையும் சோர்தலும் உருகாமையும் ஆடாமையும் வீழ்தலுமென்றெண்ணிய உம்மைகளில உறையாமையானுமென மூன்றனுருபுவிரிக்க; *"உம்மையெண்ணி னுருபுதொகலவையார்" என்றாராகலின். தான் - அசை.

கொளுச்சொல—இ - ள். குரவைக்கூத்திற்குக் கருத்து.

குரவையாவது எழுவரேனும் ஒன்பதின்மரேனும் கைகோத்தாடுங்கூத்து; "குரவை யென்பது கூறுங் காலைச், செய்தோர் செய்த காமமும் விறலு, மெய்தக் கூறு மியல்பிற் றென்ப" "குரவை யென்பது ...... ஆடலாகும்" என்றாராகலின்.

க. காரி கதனஞ்சான் பாயந்தானைக் காமுறுமிவ்
வேரி மலர்க்கோதை யாள

இ - ள். இக்காரியெருத்தினது சீற்றத்தை அஞ்சானைக் குதித்துச் சென்றவனைப் பெற்றவிருப்பினால் விரும்பும்; இந்த மலராற்கட்டிய மாலையையுடையாளென்க.

---

* தொல்காப்பியம், சொல்லதிகாரம், இடையியல், சகூ.

1---இ - ள். இது முதற் சுட்டு.

௨. நெற்றிச் செகிலை யடர்த்தாற் குரியவிப்
பொற்றொடி மாதரா டோள்

இ - ள். இச்செகிற்சுட்டியேற்றை வலிதொலைத்தானுக்குரியன; இம்மாதரு டையதோள்களென்க.

நெற்றிச்செகில் - நெற்றியொழிந்த செகில்; சிவந்தசுட்டியுமாம்.

௩. மல்லன் மழவிடை யூர்ந்தாற் குரியளிம்
முல்லையம் பூங்குழ றான்

இ - ள். இவ்வளவிய இளைய ஏற்றைத்தழுவியேறிச் செலுத்தினானுக்கு உரியாள்; இம்முல்லைப்பூங்குழலாளென்க.

தான் - அசை.

௪. நுண்பொறி வெள்ளை யடர்த்தாற்கே யாகுமிப்
பெண்கொடி மாதர்தன் றோள்

இ - ள். இச் சிலமறையினேற்றை வலிதொலைத்தானுக்கேயாம், இப்பெண் கொடியாகிய தன்மையையுடையாளுடைய தோள்களென்க.

௫. பொற்பொறி வெள்ளை யடர்த்தார்க்கே யாகுமிந்
நற்கொடி மென்முலை தான்

இ - ள். இம் மறையெருத்தின்சீற்றத்தைக் கெடுத்தவனுக்கு மனைவியாகும், மென்முலையையுடைய நல்ல கொடிபோல்வாளென்க.

தான் - அசை.

௬. வென்றி மழவிடை யூர்ந்தாற் குரியளிக்
கொன்றையம் பூங்குழ லாள்

இ - ள். வென்றியையுடைய, இளைய ஏற்றைத் தழுவிச்செலுத்தினானுக்குரியள்; இக்கொன்றைப்பழம்போலும் குழலையுடையவளென்க.

"கொன்றைப் பழக்குழற் கோதையர" என்றார் வளையாபதியினும்.

௭. தூநிற வெள்ளை யடர்த்தாற் குரியளிப்
பூவைப் புதுமல ராள்

இ - ள். இப் பால்வெள்ளையேற்றை வலிதொலைத்தானுக்கு மனைவியாகும்; காயாம்பூப்போலும் நிறத்தினையுடைய இவளென்க.

எடுத்துககாட்டு---இ - ள். இங்ஙனஞ்சுட்டிக்காட்டுதல்.

'ஆங்கு---இ - ள். அப்படியே,

தொழுவிடை யேறு குறித்து வளர்த்தா
ரெழுவ ரிளங்கோதையார்

இ - ள். இங்ஙனமாகிய தொழுவிடத்துண்டாகிய ஏழ்வகையேற்றைக்குறித்து வளர்த்தார்; இம்முல்லைக்கோதையையுடைய ஏழுகன்னியரென்க.

என்றுதன் மகளைநோக்கித்
தொன்றுபடு முறையாநிறுத்தி
யிடைமுது மகளிவர்க்குப்
படைத்துக்கோட் பெயரிடுவாள்

இ - ள். மாதரி இங்ஙனங்கூறியவள் தன்மகள் ஐயையைநோக்கி இம்மகளி ரைப் பழையநரம்புகள் நிற்குமுறைமைகளிலேநிறுத்தி இவர்க்குப் படைத்துக் கோட்பெயரிடுவாள். —

குடமுதல் இடமுறையாக் குரல் துத்தம்
கைக்கிளை யுழை யிளி விளரி தாரமென
விரிதரு பூங்குழல் வேண்டிய பெயரே

பாலை நான்குவகைப்படும்; ஆயப்பாலை, சதுரப்பாலை, திரிகோணப்பாலை, வட்டப்பாலையென. என்னை? "ஆயஞ் சதுரந் திரிகோணம் வட்டமெனப், பாய நான்கும் பாலை யாகும்" என்றார். அவற்றுள், வட்டப்பாலை வருமாறு. "வட்ட மென்பது வகுக்குங் காலை, யோரேழ் தொடுத்த மண்டல மாகும்" "சாணளவு கொண்டதொருவட்டந் தனயிது, பேணி யிருநான்கு பெருந்திசைக் - கோணத், திருநயிறு மேலோட்டி யொன்பானு மூன்றாம், ஒருமுறையே மண்டலத்தை வை" என்பது சூத்திரமென்றுகவிற்றேவெனின், வட்டப்பாலை மண்டலம் வருமிடத்துச் சாணுக் குச்சாணாக ஒருவட்டங் கீறிப் பெருந்திசைகளின் மேலே இரண்டிரண்டு கீறி மண்ட லஞ்செய்து பன்னிரண்டுகோணமாக வகுப்பது கவிற்று. "எதிரு மிராசி வலமிட மாக வெதிரா விடமீன மாக - முதிராத, வீராறிராசிகளை யிட்டடைவே நோக்கவே, யோரார்த மண்டலமென றெண" என்பது சூத்திர மென்றுகவிற்றேவெனின,— இட்ட பன்னிரண்டுகோணத்திற் பன்னிரண்டிராசிகளை நிறுத்தினால் இவற்றை நரம் புடனியல்வன எழுப்பதுணர்த்துகவிற்று. "எதுமிடப மலவனுடன் மியங், கோற்றருக் கும்பமொடு மீனமிவை - பார்த்துக், குரனமுதற் றாமிறு வாய்க் கிடந்த, நிரலேழு செம்பாலை கோ." இடபமும் இடபம் சற்கடகம் சிங் கம் துலாம் தனுக் கும்பம் மீனமென இவற்றனிறுத்தும். "துலைநிலைக் குரலுந் தனு நிலைத் துத்தமு, நிலைபெறு கும்பத்து நேர்கைக் கிளையு, மீனத் துழையும் விடை நிலத் திளியு, மானக் கடகத்து மன்னிய விளரிய, மரியிடைத் தாரமு மியைவுறக் கொளலே." இனி இந்நரம்புகளின்மாத்திரைகள்வருமாறு: "குரறுத்த நான்கு கிளைமூன் றிரண்டாங், குறையா வுழையிளி நான்கு - விறையா, விளரியெனின் மூன்றிரண்டு தாரமெனச் சொன்னார், களரிசேர் கண்ணுற் றவர்" எனக்கொள்க. இவற்றுள், தாரத்து உழைபிறக்கும், உழையிற் குரல்பிறக்கும், குரலுள் இளிபிறக் கும்; இளியுள் துத்தம்பிறக்கும். துத்தத்துள் விளரிபிறக்கும்; விளரியுட் கைக்கிளை பிறக்குமெனக்கொள்க. இவற்றுள் முதலிற்றோன்றியநரம்பு தாரம், இவை விரிப்பிற் பெருகும்; வந்தவழிக் கண்டுகொள்க இனி வட்டப்பாலையிலே நாலுபண்ணும் பிற க்கும். "தாரத் துழைதோன்றப் பாலையாழ் தண்குர, லோருமுழைத் தோன்றக் குறி ஞ்சியாழ், நேரே, யிளிகுரலிற் றோன்ற மருதயாழ் துத்த, மிளியிற் பிறக்கநெய்த லியாழ்." இப்பாலையாழுள்ளே எழுபாலையிசை பிறக்கும். "குரலிளியிற் பாகத் தை வாங்கியோ ரொன்று, வரையாது தாரத் துழைக்கும், விளரியின்றி, யெத்தும்

விளரி கிளைக்கீக்க வேந்திழையாய், துத்தங் குரலாகுஞ் சொல்.'' இந்நரம்பிற் பாலை பிறக்குமிடத்துக் குரலும் துத்தமும் இளியும் நான்குமாத்திரைபெறும்; கைக்கிளையும் விளரியும் மூன்றுமாத்திரைபெறும்; உழையும், தாரமும் இரண்டு மாத்திரை பெறும்; இவற்றுட் குரல்குரலாய் ஒத்துநின்றது செம்பாலை; இதனிலே குரலிற் பாகத்தையும் இளியிற்பாகத்தையுமவாங்கிக் கைக்கிளை உழை விளரி தாரத்திற்கு ஒரோவொன்றைக் கொண்டுசேர்க்கத் துத்தங்குரலாய்ப் படுமலைப்பாலையாம்; இவ்வாறேதிரிக்க இவ்வேழுபெரும்பாலைகளும் பிறக்கும். பிறக்குங்கால் திரிந்த குரலேழும் முதலாகப் பிறக்கும் அவைபிறக்குமாறு:—குரல்குரலாயது செம்பாலை; துத்தம் குரலாயது படுமலைப்பாலை; கைக்கிளை குரலாயது செவ்வழிப்பாலை, உழைகுரலாயது அரும்பாலை; இளிகுரலாயது கோடிப்பாலை; விளரிகுரலாயது விளரிப்பாலை; தாரம் குரலாயது மேற்செம்பாலையென வலன்முறையே ஏழுபாலையுங்கண்டுகொள்க. இதனை *வலன்முறையென்றும்; மேற்கேமுகமாகவிருந்துதிரிதலான். கிழக்கேநோக்கியிருக்கில் இடமுறையாமெனக்கொள்க.

இ - ள். குடதிசையிற் குரல்நரம்புமுதலாகக் குரல் துத்தம் கைக்கிளை உழை இளி விளரி தாரமென இவர்க்கு நிரலேயிட்டபெயரே மாதரியரும்புபெயரென்க.

படைத்துக்கோட்பெயரிடுவாள் - இனி ஆளுதற்கு இடுகுறிப்பெயர் கூறுவாள்:

மாயவ னென்றாள் குரலை விறல்வெள்ளை
யாயவ னென்றா ளிளிதன்னை, யாய்மகள்
பின்னையா மென்றாளோர் துத்தத்தை மற்றையார
முன்னையா மென்றாண் முறை

இ - ள். ... ...

மாயவன் சீருளார் பின்னையுந் தாரமும்
வால்வெள்ளை சேரா னுழையும் விளரியுங்
கைகக்கிளை பின்னைக் கிடத்தாள் வலத்துளான்
முத்தைக்கு நல்விளரி தான்

இ - ள் மாயவனென்று பெயர்கூறப்பட்ட குரனரம்பைச்சேரப் பின்னையென்னும் துத்தமும் தாரமுநின்றன, வெள்ளையாயவனென்று பெயர்கூறப்பட்ட இளியென்னுநரம்பைச்சேர உழையும் விளரியுநின்றன; கைக்கிளையென்னுநரம்பு பின்னைக்கு இடப்பக்கத்தே நின்றது; †முந்தையென்னும் தாரநரம்பிற்கு வலப்பக்கத்தே விளரிநின்றதென்க.

முந்தை - மூத்தை; விகாரம் "முத்தை முதலிய விகடி பிழைத்தா'' என்றார் பிறரும்.

அவருள், வண்டுழாய் மாலையை மாயவன் மேலிட்டுத்
தண்டாக் குரவைதா னுள்படுவாள், கொண்டசீர்
வைய மளந்தான்றன் மார்பிற் றிருநோக்காப்

* வலன்முறையென்றுமெனறும், வலமுறையெனறுமென்றும் பிரதிபேதமுண்டு.

† முந்தையாகிய அசேர்றைதையென்னுந் தாரநரம்பென்றும் பிரதிபேதமுண்டு

பெய்வளைக் கையாணம் பின்னைதா னாமென்றே
யையென்றா ளாயர்மகள்

இ - ள். வளவிய துழாய்மாலையை மாயவன்றோளிட்டு இசைநாடகநூலோரால் இகலப்படாத குரவைக்கூத்திற்கு உட்படட்டாடுவாள் உலகளந்த மாயவன் தன்னுடையதிருமார்பை இடங்கொண்ட அழகையுடைய திருமகளை நோக்காமைக்குக் காரணமாகிய சிறப்பையுடைய வளைபொருந்திய கையாளாகிய பின்னைதானேயாமென்று மாதரிவியந்தாளென்க.

*"நீணிரைநம்பின்னை" என்றார் பிறரும். நப்பின்னையென்பாருமுளர். ஐயென்றாள் - வியந்தாள்; †"ஐவியப் பாகும்" என்றாராகலின். ஆயர்மகள் - மாதரி.

படுத்துள்படுதல்—இ - ள். ஆடத்தொடங்குதல்.

அவர்தாம்—இ - ள். அம்மகளிர்தாம்,

செந்நிலை மண்டிலத்தாற் கற்கடகக் கைகோஓத்
தந்நிலையே யாடற்சீ ராய்ந்துளார், முன்னைக்
குரற்கொடி தன்கிளையை நோக்கிப் பரப்புற்ற
கொல்லைப் புனத்துக் குருந்தொசித்தாற் பாடுது
முல்லைத்தீம் பாணியென் றாள்

இ - ள். சமநிலையிலேநின்று நண்டுக்கரத்தைக்கோத்து மண்டலமிருந்து அப்பொழுதே ஆடற்றுக்குத் தானவுறுப்பை ஆராய்ந்துள்ளவரில முதலெண்ணப்பட்ட குரற்றானத்துநின்ற மாயவனாகிய அவள் தனதுகிளையாகிய துத்தநரம்பாகிய பின்னையைநோக்கிய பரந்தகன்ற கொல்லையில் வஞ்சத்தால்வந்துநின்ற குருந்தையொசித்தவனை முல்லையாகிய இனிய பண்ணாலே பாடியாடக்கடவேமென்றாளென்க.

செந்நிலை - சமநிலை. ஆன் - ஏறு. கற்கடகக்கை - நண்டுக்கை. அது நடுவிரலும் அணிவிரலு முனைமடக்கி மற்றைவிரலைநெகிழ்த்துக்கோத்தல். அந்நிலையே - அப்பொழுதே.

என்று—இ - ள். என்றிட்டு,

குரல்மந்த மாக விளிசம மாக
வரன்முறையே துத்தம் வலியா — வுழையிலா
மந்தம விளரி பிடிப்பா ளவணட்புப்
பின்னையைப் பாட்டெடுப் பாள்

மந்தோச்சசமங் கூறுவார் :

இ - ள். பாட்டெடுக்கின்றவள் குரலென்னுநரம்பு மந்தசுரமாக இளியென்னுநரம்பு சமசுரமாக வந்தமுறையே துத்தமென்னுநரம்பு வலிசுரமாக விளரியையும் வலிமையில்லாத மந்தசுரமாகப் பிடிக்கின்றவள் நன்னட்புநரம்பாகிய துத்தநரம்பாயவட்குப் பற்றுபபாடுகின்றாள்.

* சீவகசிந்தாமணி, கோவிந்தையாரிலம்பகம், ௭௬.
† தொல்காப்பியம், சொல்லதிகாரம், உரியியல், அ௬.

பாட்டு—இ - ள். அங்ஙனம் அவள்பாடுகின்ற பாட்டு.

க. கன்று குணிலாக் கனியுதிர்த்த மாயவ
னின்றுநம் மானுள் வருமே லவன்வாயிற்
கொன்றையந் தீங்குழல் கேளாமோ தோழீ

இ - ள். தோழீ, நிரைமேய்க்கின்றுழி விளவின்கனியையுதிர்க்கவேண்டி அவ்விடத்தில் மேய்கின்றபசுவின்கன்றைக் குறுந்தடியாகக்கொண்டு உதிர்த்தமாயவன் நம்வழிபாட்டால் இங்குள்ள பசுநிரையிடத்துவருவன்; அங்ஙனம்வந்தால் அவனூதும் கொன்றையங்குழலோசையைக் கேட்போமென்றாளென்க.

உ. பாம்பு கயிறாக் கடல்கடைந்த மாயவ
னீங்குநம் மானுள் வருமே லவன்வாயி
லாம்பலந் தீங்குழல் கேளாமோ தோழீ

இ - ள். தோழீ, கடலைக் கடைகின்றகாலத்து மேருவரைமத்தத்திற் சுற்றுங்கயிறு வாசுகியென்னும்பாம்பாகச்சுற்றிக் கடைந்த மாயவன் நம்வழிபாட்டால் ஈங்கு நம்மானிடத்துவருவன்; அங்ஙனம்வந்தால் அவனூதும் இனிய ஆம்பலங்குழலோசையைக் கேட்போமென்றாளென்க.

௩. கொல்லையஞ் சாரற் குருந்தொசித்த மாயவ
னெல்லைநம் மானுள் வருமே லவன்வாயின்
முல்லையந் தீங்குழல் கேளாமோ தோழீ

இ - ள். தோழீ, நம்புனக்கொல்லையைச்சார்ந்தவிடத்து வஞ்சனையால்வந்து நின்ற குருந்தைமுறித்த மாயவன் நம்வழிபாட்டாற் பகலே இங்குள்ள நம் ஆனிரையுள்வருவன்; அவன் அங்ஙனம்வந்தால் அவனூதும் இனிய முல்லையங்குழலோசையைக் கேட்போமென்றாளென்க.

கொன்றை ஆம்பல் முல்லை யென்பன சிலகருவி; இனி அவற்றைப் பண்ணென்றுகூறுபவெனின், அங்ஙனங்கூறுவாரும் ஆம்பலும் முல்லையுமே பண்ணுதற்குப் பொருந்தக்கூறினல்லது கொன்றையென ஒருபண்ணில்லையாதலானும் 'கலியுண் முல்லைத்திணையின்கண் அரும்பாட்டினுள் "கழுவொடு சுடுபடை சுருக்கிய தோற்க, ணிமிழிசை மண்டை யுறியொடு தூக்கி, யொழுகிய கொன்றைத் தீங்குழன் முரற்சியர், வழூச்சொற் கோவலர் தத்த மினநிரை, பொழுதொடு தோன்றிய கார்நனை வியன்புலத்தா" எனக் கருவிகூறினமையானும், "அன்றைப் பகற்கழிந் தாளின்றி ராப்பகற், கன்றின் குரலுங் கறவை மணிகறங்கக், கொன்றைப் பழக்குழற் கோவலராம்பலு, மொன்றறச்சுரும்பு நரம்பென வார்ப்பவும்" என வளையாபதியினுங் கருவிகூறிப் பண்கூறுதலானும் இவை ஒருபொருண்மேல் மூன்றடுக்கிவந்த ஒத்தாழிசையாதலானும் இரண்டு பண்ணும் ஒன்று கருவியுமாகக்கூறின், செய்யுட்கும் பொருட்கும் வழூஉச்சேறலானும் அங்ஙனங்கூறுதல் அமையாதென்க.

இதனுட் குழலென்றது வங்கியத்துப் பொதுப்பெயர். இஃது ஐந்துகூறுபடும். அவை "ஓங்கிய மூங்கி லுயர்சந்து வெண்கலமே, பாங்குறுசெங் காலி கருங்காலி-பூங்குழலாய், கண்ணனுவந்த கழைகளிவைகளாமென்றார், பண்ணமைந்த

நூல்வல்லோர் பார்த்து'' என்பன. நீளம் இருபதுவிரல்; சுற்றளவு நாலரைவிரல்; இது துளையிடுமிடத்து நெல்லரிசியில் ஓர்பாதிமரநிறுத்திக் கடைந்து வெண்கலத் தாலே அணைசுபண்ணி இடமுகத்தை அடைத்து வலமுகம்வெளியாகவிடப்படும்; என்னை? "சொல்லு மிதற்களவு நாலைந்தாஞ் சுற்றளவு, நல்லவிர லரையா நன் னுதலாய் - மெல்லத், துளையளவு நெல்லரிசி *நூப மிடமா, வளைவலமேல் வங்கிய மென்'' என்முராகலின். இனி வங்கியத்தின் துளையளவு: நீளம் இருபதுவிரல்; இதிலே தூம்புமுகத்தின் இரண்டுநீக்கி முதல்வாய்விட்டு அம்முதல்வாய்க்கு ஏழங் குலம்விட்டு வளைவாயிறும் இரண்டுவிரல்நீக்கி நடுவினின்ற ஒன்பதுவிரலினும் எட் டுத்துளையிடுக. இவற்றுள் ஒன்று முத்திரையென்றுகழித்துநீக்கி நின்றவேழினும் ஏழுவிரல்வைத்து ஊதப்படும்; துளைகளின்பரப்பு ஒருவிரலகலங்கொள்ளுக; என் னை? "இருவிரல்க ணீக்கி முதல்வாயேழ் நீக்கி, மருவு துளையெட்டு மன்னும் - பெருவிரலக, ஞலைஞ்சு கொள்க பரப்பென்ப நன்னுதலாய், கோலஞ்செய் வங்கி யூத்தின் கூறு'' என்முராகலின். இனி வங்கியமூதுமிடத்து வளைவாய்சேர்ந்ததுளை யை முத்திரையென்றுநீக்கி முன்னின்ற ஏழினையும் ஏழுவிரல்பற்றி வாசிக்க. ஏழு விரலாவன: இடக்கையிற்பெருவிரலும் சிறுவிரலுநீக்கி மற்றைமூன்றுவிரலும் வலக்கையிற் பெருவிரலொழிந்த நான்குவிரலும் ஆகவேழும்; என்னை? "வளைவா யருகொன்று முத்திரையாய் நீக்கித், துளையேழி னின்ற விரல்கள், விளையாட், டிட மூன்று நான்குவல மென்முர்கா ணேகா, வடமாரு மென்முலையாய் வைத்து'' என் முராகலின. இவ்வேழு துளைகளினும் இசைபிறக்குமாறு: ச ரி க ம ப த நி என் னும் ஏழெழுத்தினும் பிறக்கும்; என்னை? "சரிக மபதநியென் றேழெழுத்தாற் முனம், வரிபரந்த கண்ணினுய் வைத்தத் - தெரிவரிய, வேழிசையுந் தோன்றுமிவற் றுள்ளே பண்பிறக்கு, மூழ்முதலாஞ் சுத்தத் துளை'' என்முராகலின். ஏழிசை யாவன: சட்சம், ரிடபம், காந்தாரம், மத்திமம், பஞ்சமம், தைவதம், நிடாதமென விவை. இவைபிறந்து இவற்றுள்ளே பண்கள்பிறக்கும். இவற்றுட் கூறியவெல்லா முணர்ந்து கருவியாதல்கொள்க அவ்வாறுகொள்ளுங்கால், கருவியென்பதனை இடு குறியாகக்கோடுமோ காரணக்குறியாகக்கோடுமோவெனிற் காரணக்குறியாகக்கோ டும், என்னைகாரணமெனிற் கஞ்சத்தாற் குமுதவடிவாக அணைசபண்ணிச் செறித்த லின் ஆம்பற்குழலாயிற்றெனவும் கொன்றைப்பழத்தைத்துருவித் துளைத்து ஊதலிற் கொன்றைக்குழலாயிற்றெனவும் முல்லைக்கொடியால முப்புரியாகத் தெறறிய வளையை வளைவாய்க்கட்செறித்தலின் முல்லைக்குழலாயிற்றெனவுங் கொள்க.

> தொழுனைத் துறைவனோ டாடிய பின்னை
> யணிநிறம் பாடுகேம யாம

இ - ள். ... .

> க. இறுமென் சாய னுடனாக நடங்கி
> யறுவை யொளித்தான் வடிவென் கோயா
> அறுவை யொளித்தா னயர வயரு
> நறுமென் சாயன் முகமென் கோயாம்

* நூம்பிடமாயவென்றும் பிரதிபேதமுண்டு.

இ - ள். கட்புலனுகநோக்குவார் மென்மையாகலின் இப்பொழுது இறுமெனத் தகும் இடைநுடங்கும்படி அசைபவளது துகிலை ஒளித்தானுடைய வடிவினழ கையே புகழக்கடவேமோ; அன்றி, அங்ஙனம் துகிலையொளித்தவன் அவள்துகி லின்மைகண்டு சோர்கின்றவதனைக்கண்டு சோர்கின்ற நறிய மெல்லிய சாயலை யுடையாளது காமக்குறிப்பையுடைய முகத்தினழகையே புகழக்கடவேமோ;

உ. வஞ்சஞ் செய்தான் றொழுனைப் புனலு
ணெஞ்சங் கவர்ந்தா ணிறையென் கோயா
நெஞ்சங் கவர்ந்தா ணிறையும் வளையும்
வஞ்சஞ் செய்தான் வடிவென் கோயாம்

இ - ள். தொழுனையாற்றினுள் வஞ்சஞ்செய்தானுடைய நெஞ்சத்தைக்கவர்ந் தாளுடைய அழகையே புகழக்கடவேமோ; அன்றி அங்ஙனம் தன்னெஞ்சத்தைக் கவர்ந்தாளுடைய அழகையும் வளையையுமொளித்துக்கொண்டானுடைய வடி வையே புகழக்கடவேமோ;

ஈ. தையல் கலையும் வளையு மிழந்தே
கையி லொளித்தான் முகமென் கோயாங்
கையி லொளித்தாண் முகங்கண் டழுங்கி
மைய லுழந்தான் வடிவென் கோயாம்

இ - ள். கலையேயன்றி வளையையுமிழந்து நாணால் தன்கையிலேமறைந்தா ளாகிய தையலுடைய முகத்தினழகையே புகழக்கடவேமோ; அன்றி அங்ஙனம் கையிலே மறைந்தாளுடைய முகத்தின்றன்மையைக்கண்டு இரங்கி மயக்கத்தை யுழந்தானுடைய வடிவையே புகழக்கடவேமோவென்றவாறு.

இவை குரவைமகளிர்கூற்று.

ஒன்றன்பகுதி—இ - ள். ஒற்றைத்தாளத்தின்கூறு.

கதிர்திகிரி யான்மறைத்த கடல்வண்ண னிடத்துளாள்
மதிபுரையு நறுமேனித் தம்முனோன் வலத்துளாள்
பொதியவிழ் மலர்க்கூந்தற் பிஞ்ஞைசீர் புறங்காப்பார்
முதுமறைதேர் நாரதனார் முந்தைமுறை நரம்புளர்வார்

இ - ள். பகற்கதிரைத் தன்கையாழியான்மறைத்த கடல்போலும் வண்ணத் தையுடைய கண்ணன் இடப்பக்கத்துள்ளாள்; மதியையொத்த திருமேனியை யுடைய அவன்றமையன் வலப்பக்கத்துள்ளாள்; கட்டவிழ்ந்த மலர்பொருந்திய கூந்தலையுடைய பிஞ்ஞை. அவளுடைய தாளவொற்றறுப்பைப் புறங்காக்கின்றவர் முதியவேதத்திற் *சிக்கையென்னுமங்கத்தை ஆராயும் முதனரம்பை உருவிவா சிக்கும் நாரதனரென்க.

சிக்கையென்பது இசை.

---

* இதனை நாரதசிக்ஷையென்பர் வடநூலார்.

மயிலெருத் துறழ்மேனி மாயவன் வலத்துளாள்
பயிலிதழ் மலர்மேனித் தன்முன்னோ னிடத்துளாள்
கயிலெருத்தம் கோட்டியநம் பின்னைசீர் புறங்காப்பார்
குயிலுவரு ணாரதனார் கொளைபுணர்சீர் நரம்புளர்வார்

இ - ள். மயிலினது புறக்கழுத்தையொத்த திருமேனியையுடைய மாயவன் வலப்பக்கத்துள்ளாள்; பயின்ற வெள்ளிய மலர்போலும் மேனியையுடைய அவன் தமையன் இடப்பக்கத்துள்ளாள்; சிறப்புறமாகிய எருத்தங்கோட்டிய பின்னை. அவளுடைய தாளவறுதியைப் புறங்காக்கின்றவர் குயிலுவருட் சிறப்புப்புணர்ந் திருக்கும் தாளவறுதியையுடைய நரம்பை உருவிவாசிக்கும் நாரதனாரென்க.

கொளையென்பது ஒற்றறுப்பு, அது முன்னர்க்கூறினும்.

மாயவன் றன் முன்னினொடும் வரிவளைக்கைப் பின்னையொடுங்
கோவலர்தஞ் சிறுமியர்கள் குழற்கோதை புறஞ்சோர
வாய்வளைச்சீர்க் கடிபெயர்த்திட் டசோதையார் தொழுதேத்தத்
தாதெருமன் றத்தாடு குரவையோ தகவுடைத்தே

இ - ள். மாயவனோடும் அவன்றமையனோடும் எழுதிய வளையைக் கையின் கண்ணுடைய பின்னையோடும் கோவலருடைய சிறுமியர்களுடைய மணமாலை கள் புறத்தேசோர்ந்தசையச் சோர்ந்து கைகளிலணிந்த வளைகளொலிக்கின்ற தாளத் துக்கொக்க மிதித்திட்டு அசோதைப்பிராட்டியார் தொழுதேத்தத் துவராபதியில் எருமன்றத்தே அன்றாடிய குரவைக்கூத்து மிகவும் பெருமையையுடைத்தாயிருந்த தென மாதரிவியந்தாள்.

ஒடு இரண்டும் எண்ணொடு. சிறுமியர் - சிறுபெண்கள்; குடநாட்டுவழக்கு. ஓ - வியப்பு.

எல்லாநாம—இ - ள். ஏடி, நாமெல்லாம்; தோழியென்றுமாம்.

புள்ளூர் கடவுளைப் போற்றுதும் போற்றுதும்
உள்வரிப் பாணியொன் றுற்று

இ - ள். கருடப்புள்ளூர்கின்ற கடவுளை மிகவும்போற்றுவேம்; இக்குரவையுள் உள்வரியாகிய ஓர்பாட்டிலுறுமென்க.

௪. கோவா மலையாரங் கோத்த கடலாரந்
தேவர்கோன் பூணாரந் தென்னர்கோன் மார்பினவே
தேவர்கோன் பூணாரம் பூண்டான் செழுந்துவரைக்
கோகுல மேய்த்துக் குருந்தொசித்தா னென்பரால்

இ - ள். கோக்கப்படாத தன் பொதியின்மலையிலாரமும் கோக்கப்பட்ட தன் கொற்கைக்கடலிலாரமும் இந்திரன்முனிந்து இட்ட பூணாகிய ஆரமும் இம்மூன்று வகையாரமும் தென்னர்கோன் மார்பிடத்தன; அங்ஙனம் தேவர்கோனாரமிருக்கவுள் ளனபூண்டான் யாவனென்னின், வளவிய துவாரையிடத்துப் பசுத்திரளைமேய்த்துக் குருந்தையொசித்தானென்றுசொல்லுவர்;

கோவா, கோத்த இரண்டும்வெளிப்படை.

உ. பொன்னிமயக் கோட்டுப் புலிபொறித்து மண்ணாண்டான்
மன்னன் வளவன் மதிற்புகார் வாழ்வேந்தன்
மன்னன் வளவன் மதிற்புகார் வாழ்வேந்தன்
பொன்னந் திகிரிப் பொருபடையா னென்பரால்

இ - ள். பொன்னாகிய இமயவரைக் கொடுமுடியிலே தன்புலியைப்பொறித்து இப்பாலுள்ள மண்ணையெல்லாமாண்டவன் மதில்சூழ்ந்த புகாரில்வாழும் வளவனாகிய வேந்தன்; அவன் யாவனெனின், பொற்றிகிரியைத் தான் பொருதற்குப் படையாகவுடைய மாலென்றுசொல்லுவர்;

ங. முந்நீ ருள்புக்கு மூவாக் கடம்பெறிந்தான்
மன்னர்கோச் சேரன் வளவஞ்சி வாழ்வேந்தன்
மன்னர்கோச் சேரன் வளவஞ்சி வாழ்வேந்தன்
கன்னவில்தோ ளோச்சிக் கடல்கடைந்தா னென்பரால்

இ - ள். கடலினுள்புக்கு மூவாத கடம்பைவெட்டினவன் வளவிய வஞ்சியில் வாழும் வேந்தனாகியசேரன்; அவன் யாவனெனின், வரையென்றுசொல்லப்பட்ட தனதுதோள்களையோச்சிக் கடலைக்கடைந்த மாலென்றுசொல்லுவர்.

முந்நீர் - கடல்; ஆகுபெயர்; ஆற்றுநீர் ஊற்றுநீர் மேனீரென இவையெனப் பார்க்கு அற்றன்று; ஆற்றுநீர் மேனீராகலானும் இவ்விரண்டுமில்வழி ஊற்றுநீரும் இன்றாமாதலானும் இவற்றை முந்நீரென்றல் பொருந்தியதன்று, மூன்றியல்நீரெனின், *"நெடுங்கடலுந் தன்னீர்மை குன்றும்" என்பதனால் அதுவும் மேனீரின்றி அமையாமையின் ஆகாது; ஆனால் முந்நீர்க்குப் பொருளியாதோவெனின், முச்செய்கையையுடையநீர் முந்நீரென்பது; முச்செய்கையாவது மண்ணைப்படைத்தலும் மண்ணையழித்தலும் மண்ணைக்காத்தலுமாம். மூவாக்கடம்பு - வரத்தால் நிற்கின்றதாகலின், மூப்பின்றி ஒருநாள்போலநின்றது. மூவா - மூத்தவென்னும் பெயரெச்சத்தெதிர்மறை. இவைமூன்றும் பூவைநிலை

இவற்றுட் சேரனை முற்கூறாது பாண்டியனை முற்கூறியதென்னையெனின், இது மதுரைக்காண்டமாதலானும் இக்காப்பியஞ்செய்தார் விழைவுவெறுப்பற்ற சேரமுனியாதலானும் †'முடிகெழு வேந்தர் மூவர்க்குமுரியது' எனச் சாத்தர் கூறினமையானுமென்க. இவை உள்வரிவாழ்த்து.

க. வடவரையை மத்தாக்கி வாசுகியை நாணாக்கிக்
கடல்வண்ணன் பண்டொருநாட் கடல்வயிறு கலக்கினையே
கலக்கியகை யசோதையார் கடைகயிற்றாற் கட்டுண்கை
மலர்க்கமல வுந்தியாய் மாயமோ மருட்கைத்தே

இ - ள். கடல்வண்ணனே! கமலவுந்தியாய்! நீ முன்பு ஒருநாள் வடவரையை மத்தாகநாட்டி வாசுகியென்னும்பாம்பைக் கடைகயிறாகப்பூட்டிப் பாற்கடலினடுவைக் கலக்குவித்தாய்; அங்ஙனம் கடலைக்கலக்கியநின்கைகள் அசோதைப்பிராட்டியாருடைய கடைகயிற்றாலேகட்டுண்டகை; இஃது ஒருமாயமோ; மிகவும் மருட்கையையுடைத்தாயிராநின்றதென்றாரென்க.

* திருக்குறள், வான்சிறப்பு, எ. † பதிகம், சுக.

கடல்வண்ணன் - அண்மைவிளி ; *"அண்மைச் சொல்லே யியற்கை யாகும்" என்பதனால். இது மேலுங்கொள்க.

உ. அறுபொரு ளிவனென்றே யமரர்கணந் தொழுதேத்த
உறுபசியொன் றின்றியே யுலகடைய வுண்டனையே
உண்டவாய் களவினா லுறிவெண்ணெ யுண்டவாய்
வண்டுழாய் மாலையாய் மாயமோ மருட்கைத்தே.

இ - ள். மாலையாய், ஐயமற்றபொருள் இவனென்றேகொண்டு அமரர்திரளெல்லாம் உன்னைத் தொழுதேத்தாநிற்கவும் நீ மிக்க பசியொன்றுமின்றியே உலகடங்கலுமுண்டாய் ; அங்ஙனமுண்டவாய் களவிடத்தே உறிவெண்ணெயைப் பெரும் பசியாலே உண்டவாய், இஃது ஒருமாயமோ ? எங்கட்கு மருட்கையையுடைத்தாயிராநின்றதென்றவாறு.

அறுபொருள் - அற்றபொருள், வினைத்தொகை ; ஐயமற்றபொருளென்றவாறு. இனி அறுபொருள் - தீர்ந்தபொருளென்றுமாம் ; "அற்றகாரியம்" என்றாற்போல. இனி அறுபொருள் - அறுவகைச்சமயத்தாரும் துணிந்தபொருளெனவுமாம்.

ங. திரண்டமரர் தொழுதேத்துந் திருமாலின் செங்கமல
இரண்டடியான் மூவுலகு மிருள்தீர நடந்தனையே
நடந்தவடி பஞ்சவர்க்குத் தூதாக நடந்தவடி
மடங்கலாய் மாறட்டாய் மாயமோ மருட்கைத்தே.

இ - ள். திருமாலே, அட்டாய், அமரர் திரண்டு ஏத்தாநிற்கும் நினது செங்கமலம்போலும் இரண்டடியாலே மூன்றுலகமும் இருணீங்கநடந்தாய், அங்ஙனம் இருணீங்கநடந்தவடி பஞ்சபாண்டவர்க்குப் பின்பு தூதாகநடந்தவடி, இஃது ஒருமாயமோ ; எங்கட்கு மருட்கையையுடைத்தாயிராநின்றதென்றவாறு.

அமரர்திரண்டெனமாறுக. மடங்கல் - நரசிங்கம். மாறு - பகை. இவை மூன்றும் முன்னிலைப்பரவல்.

க. மூவுலகு மீரடியான் முறைநிரம்பா வகைமுடியத்
தாவியசே வடிசேப்பத் தம்பியொடுங் கான்போந்து
சோவரணும் போர்மடியத் தொல்லிலங்கை கட்டழித்த
சேவகன்சீர் கேளாத செவியென்ன செவியே
திருமால்சீர் கேளாத செவியென்ன செவியே.

இ - ள். இரண்டடிக்குக்குறைபடும்படி மூவுலகையும் முடியத்தாவிய சேவடி சிவக்கும்படி தம்பியோடுங்கூட வனத்தின்கட்போந்து சோவெனுமரணமும் அவ்வரணத்துள்ளாரும் போரின்கட்டொலைந்துமடியவும் அதுவேயுமன்றிப் பழைய இலங்கையையும் காவலழித்த சேவகனுடைய புகழைக்கேளாதசெவியும் சிலசெவியே ; அத்திருமாலுடைய புகழைக்கேளாத செவியும் சிலசெவியேதானென்றவாறு.

* தொல்காப்பியம், சொல்லதிகாரம், விளிமரபு, கO.

உம்மை - எச்சவும்மை. செவியென்னசெவியென்றார்; மண்ணினும் மரத்தினும் கல்லினும் செவியுண்டாகலின். போந்து மடியக் கட்டழித்த சேவகனென்க. எகாரம் ஈண்டுப் பிரிநிலை. செவியுஞ்செவியேயென்று பாடமாயின், செவியுமென்னுமும்மை இழிவுசிறப்பு.

௨. பெரியவனை மாயவனைப் பேருலக மெல்லாம்
விரிகமல வுந்தியுடை விண்ணவனைக் கண்ணுந்
திருவடியுங் கையுங் கனிவாயுஞ் செய்ய
கரியவனைக் காணாத கண்ணென்ன கண்ணே
கண்ணிமைத்துக் காண்பார்தங் கண்ணென்ன கண்ணே

இ - ள். எல்லாத்தேவரினும் பெரியவனை மாயங்களைவல்லவனைப் பெரிய உலகனைத்தையும் விரிகின்ற கமலவுந்தியையுடைய விண்ணவனைக் கண்முதல் கனிவாயீறாகவுள்ளனவெல்லாம் செய்ய கரியவனைக் காணப்பெறாதகண்கள் என்னகண்களோ; அங்ஙனம் காணுங்கால் இமையாதுகாண்டலின்றி இடையிமைத்துக்காண்பார்கண்கள் என்னகண்களோவென்றாரென்க.

விரிகமலம் - வினைத்தொகை. செய்ய கரியவனென்பது விரோதமென்னுமலங்காரம். என்னகண்களென்றதற்கு முன்னர்க்கூறியவாறேகூறுக; நீலக்கணுமுண்டாகலின். இனி இமைத்துக்காண்பார கண்ணென்றது மக்கள்கண்ணே யெனினுமமையும்.

௩. மடந்தாழு நெஞ்சத்துக் கஞ்சனார் வஞ்சங்
கடந்தானை நூற்றுவர்பா னாற்றிசையும் போற்றத்
தொடர்ந்தா ரணமுழங்கப் பஞ்சவர்க்குத் தூது
நடந்தானை யேத்தாத நாவென்ன நாவே
நாராய ணாவென்னா நாவென்ன நாவே

இ - ள். மடந்தங்கிய நெஞ்சத்தையுடைய கஞ்சனார்செய்த வஞ்சங்களைக்கடந்தவனைத் திசைநான்கினுமுள்ள தேவர்கள்போற்ற ஆரணந்தொடர்ந்துமுழங்கப் பஞ்சவர்க்காக நூற்றுவர்பாற் றூதுநடந்தவனை ஏத்தாத நா என்னநாவோ, நாராயணாவென்றுகூறாதநா என்னநாவோதானென்றாரென்க.

மடமை - அறிவின்மை. தாழ்தல் - தங்குதல். கஞ்சனார் - சிறவின்கட் பான்மயக்கம். என்னநாவோவென்றதுபது, சிற்கைநாக் கலப்பைநா இவையுமுண்டாகலின். இவை மூன்றும் படர்க்கைப்பரவல்.

என்றியாங்
கோதத குரவையு ளேத்திய தெய்வந
யாத்தலைப் பட்ட துயர்தீர்க்க வேந்தா
மருளா வைகல் வைகன்மாறட்டு
வெற்றி விளைப்பது மன்னோ கொற்றத்
திடிப்படை வானவன் முடித்தலை யுடைத்த
தொடிதோட் டென்னவன் கடிப்பிகு முரசே.

இ - ள். என்றுகொண்டு நாந்தொடுத்த குரவைக்கூத்தினுள் நாமேத்தப்பட்ட தெய்வம் நம்மாவிடத்துத் தலைப்பட்டபிணிகளைத் தீர்ப்பதாக; கொற்றத்தையுடைய இடியைப்படையாகவுடைய இந்திரனுடைய முடியிடத்தேயுடைத்த தொடிபொருந்திய தோளையுடைய தென்னனுடைய கடிப்பானெறியுமுரசம் வேந்தர்மருள எந்நாளும் மாற்றாரைவென்று முழங்குவதாகவெனச்சொல்லி வாழ்த்திக் குரவை நாடகத்தை ஆடிமுடித்தாரென்க.

இதுவுங்கூத்தாற்பெற்றபெயர்.

பருந்து நிழலுமென ... ...அடியார்க்குநல்லானென்பான்.

ஒருந்தமிழ் ... ...நிரம்பையர்காவலனே.

காற்றை ... ...சொல்வித்ததே.

ஆய்ச்சியர் குரவை முற்றிற்று.

பதினெட்டாவது

துன்பமாலை.

ஆங்கு,
ஆயர் முதுமக ளாடிய சாயலாள்
பூவும் புகையும் புனைசாந்துங் கண்ணியு
நீடுநீர் வையை நெடுமா லடியேத்தத்
தூவித் துறைபடியப் போயினாண் மேவிக்
குரவை முடிவிலோ ரூரரவங் கேட்டு
விரைவொடு வந்தா ளுளள்
அவடான்,
சொல்லாடாள் சொல்லாடா நின்றாளந் நங்கைக்குச்
சொல்லாடுஞ் சொல்லாடுந் தான்

எல்லாவோ,
காதலற் காண்கிலேன் கலங்கிநோய் கைம்மிகு
மூதுலை தோற்க வுயிர்க்குமென் னெஞ்சன்றே
யூதுலை தோற்க வுயிர்க்குமென் னெஞ்சாயி
னேதிலார் சொன்ன தெவன்வாழி யோதோழீ

நன்பகற் போதே நடுக்குநோய் கைம்மிகு
மன்பனைக் காணா தலறுமென் னெஞ்சன்றே
யன்பனைக் காணா தலறுமென் னெஞ்சாயின்
மன்பதை சொன்ன தெவன்வாழி யோதோழீ

தஞ்சமோ தோழீ தலைவன் வரக்காணேன்
வஞ்சமோ வுண்டு மயங்குமென் னெஞ்சன்றே
வஞ்சமோ வுண்டு மயங்குமென் னெஞ்சாயி
னெஞ்சிலார் சொன்ன தெவன்வாழி யோதோழீ
சொன்னது:
அரைசுறை கோயி லணியார் ஞெகிழங்
கரையாமல் வாங்கிய கள்வனா மென்றே
கரையாமல் வாங்கிய கள்வனா மென்றே
குரைகழன் மாக்கள் கொலைகுறித் தனரே

எனக்கேட்டு,

பொங்கி யெழுந்தாள் விழுந்தாள் பொழிகதிர்த்
திங்கண் முகிலோடுஞ் சேணிலங் கொண்டெனச்
செங்கண் சிவப்ப வழுதாடன் கேள்வனை
யெங்கணா வென்னா வினைந்தேங்கி மாழ்குவாள்

இன்புறு தங்கணவ ரிடரெரி யகமூழ்கத்
துன்புறு வனநோற்றுத் துயருறு மகளிரைப்போல்
மன்பதை யலர்தூற்ற மன்னவன் றவறிழைப்ப
வன்பனை யிழந்தேன்யா னவலங்கொண் டழிவலோ

நறைமலி வியன்மார்பி னண்பனை யிழந்தேங்கித்
துறை*பல திறமூழ்கித் துயருறு மகளிரைப்போல்
மறனொடு திரிகோன் மன்னவன் றவறிழைப்ப
வறனென்னு மடவோயா னவலங்கொண் டழிவலோ

தம்முறு பெருங்கணவன் றழலெரி யகமூழ்கக்
கைம்மைகூர் துறைமூழ்குங் கவலைய மகளிரைப்போற்
செம்மையி னிகந்தசொற் றென்னவன் றவறிழைப்ப
விம்மையு மிசையொரீஇ யினைந்தேங்கி யழிவலோ

காணிகா,

வாய்வதின் வந்த குரவையின் வந்தீண்டு
மாய மடமகளி ரெல்லீருங் கேட்டீமின்
ஆய மடமகளி ரெல்லீருங் கேட்டைக்க
பாய்திரை வேலிப் படுபொரு ணீயறிதி
காய்கதிர்ச் செல்வனே கள்வனோ வென்கணவன்
கள்வனோ வல்லன் கருங்கயற்கண் மாதராய்
ஒள்ளெரி யுண்ணுமிவ் வூரென்ற தொருகுரல்.

ஆங்கு—இ-ள். அவ்விடத்து,

ஆயர் முதுமக ளாடிய சாயலாள்
பூவும் புகையும் புனைசாந்துங் கண்ணியும்
நீடுநீர் வையை நெடுமா லடியேத்தத்
தூவித் துறைபடியப் போயினாள் மேவிக்
குரவை முடிவிலோ ரூரரவங் கேட்டு
விரைவொடு வந்தா ளுளள்

* பலதொறுமெனவும் பாடம்.

இ - ள். மாதரி இங்ஙனம் அவராடிய குரவைமுடிந்தவளவிலே ஒழுக்சுறுத நீரையுடைய வையையாற்றின்கரையிடத்து நெடுமாலடியைப் பூமுதலியவற்றைத் தூவி ஏத்துதற்கு நீராடப்போயினளாக ; சாயலாள் வேறோருத்தி உண்ணகரத்துப் பிறந்ததோர் வார்த்தைகேட்டுச் சென்றிருந்து கூறுதற்கு விரைவோடுவந்தாளுள ளென்க.

ஆடிய சாயலாளெனச் சேர்த்து அசைந்த சாயலாளென்பாருமுளர். புனை சாந்து - மெய்ச்சாந்து. நெடுமால் - அந்தரவானத்தெம்பெருமான். துறைபடிதல்- நீராடுதல் ; அக்காலவழக்கு. முதுமகள் போயினளுடைய சாயலாள் அரவங்கேட்டு வந்து அவ்விடத்துநின்றுளாளென்ன ஐயமேலேற்றுவாருமுளர். போயினள் கேட்டு வந்தாளுளளெனப் பொருண்மைசுட்டலாக்கி மாதரிமேலேற்றலுமொன்று. இது புறஞ்சேரியாதலின், ஊரரவமென்றார்.

ஆவடான்—இ - ள். அங்ஙனம் விரைவொடுவந்துநின்றவடான்,

சொல்லாடாள் சொல்லாடா நின்றாளந் நங்கைக்குச்
சொல்லாடுஞ் சொல்லாடுந் தான்

இ - ள். அங்ஙனங்கேட்டுவந்து கண்ணகிக்குத் தன்வாக்காற்சொல்லாளாய்க் குரவைமுடித்து நீராடவந்து நின்ற ஆயர்மகளிர்க்கு மறையிற்கூறி அவரோடு தானும் விம்முறுகின்றவள் இவளழகும் இளமையும் தனிமையுங்கண்டு ஆற்றாளாய் நெஞ்சழிந்து சொல்ல நாவெழாதுதானிறகுமென்க.

இனி வாக்காற்சொல்லாதவள் தன்மெய்ப்பாட்டாற் சொல்லுமென்றுமாம். இனி அங்ஙனநின்றாளாகிய அந்நங்கைக்குக் கண்ணகி தானசொல்லுமென்னு மமையும். அது மேற்கூறுகின்றார்.

எல்லாவோ—இ - ள். ஏடி ; ஓ இரக்கக்குறிப்பு.

காதலற் காண்கிலேன் கலங்கிநோய் கைம்மிகு
முதுலை தோறக வுயிர்க்குமென் னெஞ்சன்றோ
மூதுலை தோறக வுயிர்க்குமென் னெஞ்சாயின்
ஏதிலார் சொன்ன தெவன்வாழி யோதோழீ

இ - ள். தோழீ, என்காதலனை வரக்காண்கின்றிலேன் , அங்ஙனங்காணாமை யின் நெஞ்சுகலங்கி நோய் கைம்மிகாநின்றது ; அதுவேயுமன்றி உலையூதுந்துருத்திமூக்குந்தோற்கும்படி மூச்சும்அழலெழவயிராநின்றன, இவையிங்ஙனமாகாநிற்கு மாயின் என்னைநோக்கி இவ்வாய்ச்சியர் குறிப்பாற்கூறுகின்றது யாதோவெனவறி கின்றிலேனென இரங்கிக்கூறினளென்க.

அன்றேயென்பது அசை. ஏதிலாரென்றாள் ; சொன்னவனையும் கேட்கின்றா ளையும் . வாழி - இடைச்சொல். ஓவென்பது இரக்கக்குறிப்பு இவை மேலுங் கொள்க. நெஞ்சு கலங்கிக் கைமிகும் உயிர்க்குமென்க. சொன்னதெவனென்னுறு அறிகியோவென்னும் வினைப்பொருண்மைதோனற உரைப்பினுமமையும்.

நன்பகற் போதே நடுக்குநோய் கைம்மிகு
மன்பனைக் காணா தலறுமென் னெஞ்சன்றோ

நன்பகனேக் காணு தலறுமென் னெஞ்சாயின்
வன்பதை சொன்ன தெவன்வாழி யோதோழி

இ - ள். தோழி, நன்பகற்பொழுதின்கண்ணே நடுக்கமுறுவிக்குநோய் ஒருகாற்கொருகாற் கைமமிகாநின்றது; அதுவேயுமன்றி என்னுல் அன்புசெய்யப்பட்டானையும் வரக்காணகின்றிலேனுதலால் என்னெஞ்சு வருந்தாநின்றது; இவையிங்ஙனமாகாநிற்குமாயின் குறிப்பால் இம்மகளிர்பலருங் கூறுகின்றது யாதோவெனறறிகின்றிலேனென்ருளென்க.

கோவலன் போனபோதே தன்னெஞ்சு கலங்குதலால் நன்பகற்போதேயென்றுள்.

தஞ்சமோ தோழி தலைவன் வரக்காணேன்
வஞ்சமோ வுண்டு மயங்குமென் னெஞ்சன்றே
வஞ்சமோ வுண்டு மயங்குமென் னெஞ்சாயின்
யெஞ்சிலார் சொன்ன தெவனவாழி யோதோழி

இ - ள். தோழி, இவ்வயலார்சொல்லுகின்றமறை எளிதன்று, அதற்கேற்பஎன் றலைவனையும வரககாணகின்றிலேனுகலின, என்னை வஞ்சித்ததொன்றுணடு; அது வேயுமன்றி எனனெஞசுமயங்காநின்றது, இவை இங்ஙனமாகாநிறகுமாயின, குறிப்பால இவாசொலலுகினறது யாதோவென்றறிகின்றிலேனென்ருளென்க.

இனித் தோழி, எனககு இனி என்னதஞ்சமுணடென அழுகையிற்றேன்றிய மருட்கையொன்றும் மெய்ப்பாடாக்கினுமமையும், தஞ்சமாய் அல்லவென்பது போலநின்றது. தோழியென்றது ஐயையை.

சொன்னது—இ - ள். அவள்சொன்னபடி

அரசுறை கோயி லணியார் ஞெகிழங்
கரையாமல வாங்கிய கள்வனு மென்றே
கரையாமல வாங்கிய கள்வனு மென்றே
குரைகழல் மாக்கள் கொலைகுறித் தனரே

இ - ள். இங்ஙனம் இவளிரங்காநிற்க ஊரரவங்கேட்டு விரைவொடுவந்து சொல்லாடாளாய்ச சொல்லாநின்றவள் அரசனவிரும்பியுறையும் அந்தப்புரத்திலிருக்கும் அழகுநிறைந்தசிலம்பை வருந்தாமல் தன்கைத்தாகக்கொணட கள்வனிவனேயாமென்று ஒலிக்கும் வீரககழலையுடைய வேற்காரர் இவனைக் கொலைசெய்தலைககுறித்தனரென்ருளென்க.

கொன்றுர்களெனின், இவளுயிர்க்கு இறுதிபயக்குமெனக்கருதிப் பரியாயத்தாற்கூறினளாம். என்றேயென்றவேகாரமிரணடினும் பிறந்த தேற்றத்தைப் பிரிநிலையாயெதிர்மறைத்துக்கூறினள். இதனை ஐயைகூற்றென்பாருமுளர். அரசன் கோயிலென்னுது உறைகோயிலென்றமையான் அந்தப்புரமாயிற்று. கரைதல் - ஓசைப்படுதலுமாம்; அவகாசித்தலுமாம்.

எனக்கேட்டு—இ - ள். என்று அவள்சொல்லக்கேட்டு,

பொங்கி யெழுந்தாள் விழுந்தாள் பொழிகதிர்த்
திங்கண் முகிலொடுஞ் சேணிலங் கொண்டென

செங்கண் சிவப்ப வழுதாடன் கேள்வனை
யெங்கணு வென்று வினைந்தேங்கி மாழ்குவாள்

இ - ள். தனதாற்றாமையான் வசமழிந்து நிலத்தினின்றுமெழுந்து மறிந்தும் விழுந்துகிடக்கின்றவள் எங்ஙனம்வீழ்ந்துகிடந்தாளெனின், கதிரையுடைய திங்கள் பொழியக் கால்கொண்டுவீழ்ந்த புயலோடு பெரியநிலத்தில் வீழ்தலைக்கொண்ட தெனவிழுந்தாள்; விழுந்தவள் தன்கணவன் முன்னர் வருகெனப்பொருந்துதலாற் செவ்வரிபாய்ந்தகண் கலங்கிச்சிவக்கும்படி கையால் மோதிக்கொண்டழுதாள்; பின்பு தன்கொழுநனை நீ எவ்விடத்தாய்காணென்றுவருந்திப் பொருமி மயங்கி யாவுந்தோன்றாவென்று அழுதாளென்க.

முகத்திற்கும் குலைந்தகுழலுக்கும் திங்களும் புயலுமுவமை. எழுந்தனளாய் விழுந்தவள் மாழ்குவாளாய் அழுதாளென்க. ஆண்டுச் *"கண்ணகிகருங்கண" என்றவர் ஈண்டுச் செங்கணென்றார், காலையில் தலையளியாற்பிறந்த செவ்விதோன்ற. ஆஅ - இரக்கக்குறிப்பு. இனி மாழ்குவாள் எழுந்தாள் கொண்டென விழுந்தாள்; விழுந்தவள் செங்கண்சிவப்பத் தன்கேள்வனை எவ்விடத்தாயோ ஆஅவென அழுதாளெனவுமாம்.

இன்புறு தங்கணவ ரிடரெரி யகமூழ்கத்
துன்புறு வனநோற்றுத் துயருறு மகளிரைப்போன்
மன்பதை யலர்தூற்ற மன்னவன் றவறிழைப்ப
வன்பனை யிழந்தேன்யா னவலங்கொண் டழிவலோ

இ - ள். அங்ஙனம் மருண்டழுதவள், தம்மோடின்புற்ற தங்கணவர் இடரைச் செய்யும் எரியின்கண்மூழ்க அவரோடு அதனிடைமூழ்காது துன்பமுறுந்தன்மைய வாகிய கைம்மைநோன்பைநோற்று இடர்ப்படும் உயவற்பெண்டிரைப்போல மக்கட்பரப்பினுள்ளோரெல்லாம் தன்னைப்பழிதூற்றும்படி பாண்டியன் தவற்றைச் செய்ய அன்பனையிழந்தேனாகிய யான் இருந்தழுவாள் ஒருத்தியோவென்று தெளிந் திரங்கினளென்க.

துன்புறுவனவென்றார், †"வெள்ளெட் சாந்தொடு புளிப்பெய் தட்ட, வேளை வெந்தை வல்சி யாகப், பரற்பெய் பள்ளிப் பாயின்று வதியும்" என்பதனை. இது புறம்.

* இந்திரவிழவூரெடுத்தகாதை, உ௬௭.

† புறநானூறு, உ௪௬: பலசான் றீரே பல்சான் றீரே, செல்கெனச் சொல்லா தொழிகென விலக்கும், பொல்லாச் சூழ்ச்சிப் பல்சான் றீரே, யணிலவரிக் கொடுங் காய் வாள்போழ்ந் திட்ட, காழ்போ னல்விளர் நறுநெய் தீண்டா, தடையிடைக் கிடந்த கைபிழி பிண்டம், வெள்ளெட் சாந்தொடு புளிப்பெய் தட்ட, வேளை வெந்தை வல்சி யாகப், பரற்பெய் பள்ளிப் பாயின்று வதியு, முயவற் பெண்டிரே மல்லே மாதோ, பெருங்காட்டுப் பண்ணிய கருங்கோட் டீம, நுமக்கரி தாகுக தில்ல வெமக்கெம், பெருந்தோட் கணவன் மாய்ந்தென வரும்பற, வள்ளித ழவிழ்ந்த தாமரை, நள்ளிரும் பொய்கையுந் தீயுமோ ரற்றே. பூதப்பாண்டியன்றேவி பெருங் கோப்பெண்டு தீப்பாய்வாள் சொல்லியது.

நறைமலி வியன்மார்பி னண்பனை யிழந்தேங்கித்
துறைபல திறமூழ்கித் துயருறு மகளிரைப்போன்
மறனொடு திரியுங்கோன் மன்னவன் றவறிழைப்ப
வறனெனு மடவோயா னவலங்கொண் டழிவலோ

இதுவுந் தெருள்.

இ - ள். நறைமிக்ககன்ற மார்பினையுடைய தந்நண்பன் நெருப்பின்மூழ்க அவனையிழந்து ஏங்கி நீர்த்துறைகள்பலவற்றுள்ளும் தாங்குளிரப்புக்காடித் துயர முற்றிருந்தழும் உயவன்மகளிரைப்போல், மறத்தொடுபொருந்தி அறத்திற்றிரியுஞ் செங்கோலையுடைய பாண்டியன தவற்றைச்செய்யப் பார்த்திருந்த அறக்கடவு ளென்கின்றவறிவற்றோய்! யான் அவலம் வருத்தமுற்றிரங்குவாளொருத்தியோ; கூறென்றாளென்க.

மூழ்குதல் - அழுக்கறக் குளிரக் குளித்தல். அறனெனுமடவோயென்றாள்; தன்னைநீத்துப் பகையாகிய மறனொடுந்திரியக்கண்டும் ஆண்டுநின்றாயெனப் புலந்து.

தமருறு பெருங்கணவன் றழலெரி யகமூழ்கக்
கைம்மைகூர் துறைமூழ்குங் கவலைய மகளிரைப்போற்
செம்மையி னிகந்தகோற் றென்னவன் றவறிழைப்ப
விம்மையு மிசையொரீஇ யினைந்தேங்கி யழிவலோ

இ - ள். தம்மோடொத்த அன்பையுடைய தலைமைபொருந்தியகணவன் அழலும் எரியிடத்தேமூழ்கத் தாம் அவனோடு அவ்வெரியிடத்தே மூழ்காது கைம்மை நோன்புமிகும் நீர்த்துறைகளிலே குளிரமூழ்கும் உயவற்பெண்டிரைப்போல, செம்மையினின்றுநீங்கின கோலையுடைய தென்னவன் தவற்றைச்செய்ய இப்பிறப் பின்கண்ணும் இப்பெயர்படைத்து மிகவருந்தி இடகிருந்தழுவாளொருத்தியோ யானென்றாளென்க.

இம்மையுமென்றது பரலோகத்தைநினைந்து. ஆவது இம்மையிற் புகழையும் மறுமையிற் புண்ணியத்தையும் விட்டென்றபடி.

காணிகா — இ - ள். காண்பாயாக,

இகவென்னுமுன்னிலையசை இகாவென ஈறுதிரிந்து காண்பாயாகவென்ப தாயிற்று.

வாய்வதின் வந்த குரவையின் வந்தீண்டு
மாய மடமகளி ரெல்லீருங் கேட்டீமி
னாய மடமகளி ரெல்லீருங் கேட்டைக்க
பாய்திரை வேலிப் படுபொரு ணீயறிதி
காய்கதிர்ச் செல்வனே கள்வனோ வென்கணவன்
கள்வனோ வல்லன் கருங்கயற்கண் மாதராய்
வொள்ளெரி யுண்ணுமிவ் வூரென்ற தொருகுரல்

இ - ள். வாய்ப்புடைத்தாகிய உற்பாதசாந்திப்பொருட்டு ஆடிய இக்குரவை புல்வந்துதிரண்ட ஆயருடைய மகளிர் நீரெல்லீருங்கேண்மின்; அங்ஙனமாகிய

மகளிரொல்லீரும் கேட்பீராக; பரந்த திரையையுடைய கடல்சூழ்ந்த இவ்வுலகினுண்டானபொருளில நீயறியாதபொருளில்லை, ஆதலாற்கதிர்ச்செல்வனே, நீயறிய என்கணவன் கள்வனோவென்றாளாக, அவன் அசரீரியாய்நின்றுகூறுகின்றவன், நின் கணவனோ கள்வனல்லன், அவனைக் கள்வனென்ற இவ்வூரை மாதராய் எரியுண்ணுங் காணென்றானென்க.

கேட்டீமின் - கேண்மின்; ஒருசொல். கேட்டைக்க - கேட்டையென்னும் வினையெச்சச்சொல் உடனடுக்கிவரற்பாலது கேட்டீமினென்பதனோடு மொழியிடையடுக்காகி ஈற்றுவியங்கோட்பொருண்மையாற் கேட்கவென்னும்பொருட்டாயிற்று. பாய்திரை - பரந்ததிரை. படுதல் - உண்டாகுதல். ஒகாரம் - பிரிநிலை. ஒள்ளெரி - நின்னைவல்கேட்குமெரி இவ்வூர் - இதுசொன்ன இவ்வூர். இனி ஓகாரத்தை இரக்கக்குறிப்பெனினுமமையும். உண்ணுமிவ்வூர் - இவ்வூரையுண்ணும். முற்றுமமை.

இது மயங்கிசைக் கொச்சகக்கலிப்பா.

பருந்து நிழலுமென ... ...அடியார்க்குநல்லானென்பான்.
ஒருந்தமிழ் ... ...நிரமையாகாவலனே.
காற்றை... ... ...சொல்வித்ததே.

துன்பமாலை முற்றிற்று.

பத்தொன்பதாவது

ஊர் சூழ் வரி.

என்றனள் வெய்யோ னிலங்கிர் வளைத்தோளி
நின்றில ணின்ற சிலம்பொன்று கையேந்தி
முறையி லரசன்ற னூரிருந்து வாழும்
*நிறவுடைப் பத்தினிப் பெண்டிர்கா ளீதொன்று
பட்டேன் படாத துயரம் படுகாலை
யுற்றே னுறாத துறுவனே யீதொன்று
கள்வனோ வல்லன் கணவனென் காற்சிலம்பு
கொள்ளும் விலைப்பொருட்டாற் கொன்றாரே யீதொன்று
மாதர்த் தகைய மடவார்கண் முன்னரே
காதற் கணவனைக் காண்பனே யீதொன்று
காதற் கணவனைக் கண்டா லவன்வாயிற்
றீதறு நல்லுரை கேட்பனே யீதொன்று
றீதறு நல்லுரை கேளா தொழிவேனே
னோதக்க செய்தாளென் றெள்ளா ரிதுவொன்றென்
றல்லலுற் றாற்றா தழுவாளைக் கண்டேங்கி
மல்லன் மதுரையா ரெல்லாருந் தாமயங்கிக்
களையாத துன்பமிக் காரிகைக்குக் காட்டி
வளையாத செங்கோல் வளைந்த திதுவென்கொல்
மன்னவர் மன்னன் மதிக்குடை வாள்வேந்தன்
றென்னவன் கொற்றஞ் சிதைந்த திதுவென்கொல்
மண்குளிரச் செய்யு மறவேலோன் றண்குடை
தண்குடை வெம்மை விளைத்த திதுவென்கொல்
செம்பொற் சிலம்பொன்று கையேந்தி நம்பொருட்டால்
வம்பப் பெருந்தெய்வம் வந்த திதுவென்கொ
லையரி யுண்க ணழுதேங்கி யரற்றுவா
டெய்வமுற் றாள்போலுந் தகைய திதுவென்கொ
லென்பன சொல்லி யினைந்தேங்கி யாற்றவும்
மன்பழி தூற்றுங் குடியதே மாமதுரைக்
கம்பலை மாக்கள் கணவனைத் தாங்காட்டச்

* நிறையுடையெனவும் பாடம்.

செம்பொற் கொடியனையாள் கண்டாளைத் தான்காணான்
மல்லன்மா ஞால மிருளூட்டி மாமலைமேற்
*செவ்வென் கதிர்சுருங்கிச் செங்கதிரோன் சென்றொளிப்பப்
புல்லென் மருண்மாலைப் பூங்கொடியாள் பூசலிட
வொல்லென் றொலிபடைத்த தூர்
வண்டா ரிருங்குஞ்சி மாலைதன் வார்குழன்மேற்
கொண்டா டழீஇக் கொழுநன்பாற் காலைவாய்ப்
புண்டாழ் குருதி புறஞ்சோர மாலைவாயக்
கண்டா ளவன்றன்னைக் காணாக் கடுந்துயரம்
என்னுறு துயர்கண்டு மிடருறு மிவளென்னீர்
பொன்னுறு நறுமேனி பொடியாடிக் கிடப்பதோ
மன்னுறு துயர்செய்த மறவினை யறியாதே
னென்னுறு வினைகாணா விதுவென வுரையாரோ
யாருமின் மருண்மாலை யிடருறு தமியேன்முன்
றார்மலி மணிமார்பந் தரையுறக் கிடப்பதோ
பார்மிகு பழிதூற்றப் பாண்டியன் றவறிழைப்ப
வீர்வதோர் வினைகாணா விதுவென வுரையாரோ
கண்பொழி புனல்சோருங் கடுவினை யுடையேன்முன்
புண்பொழி குருதியிராய்ப் பொடியாடிக் கிடப்பதோ
மண்பதை பழிதூற்ற மன்னவன் றவறிழைப்ப
வுண்பதோர் வினைகாணா விதுவென வுரையாரோ
பெண்டிரு முண்டுகொல் பெண்டிரு முண்டுகொல்
கொண்ட கொழுந ருறுகுறை தாங்குறூஉம
பெண்டிரு முண்டுகொல் பெண்டிரு முண்டுகொல்
சான்றோரு முண்டுகொல் சான்றோரு முண்டுகொ
லீன்ற குழவி யெடுத்து வளர்க்குறூஉஞ்
சான்றோரு முண்டுகொல் சான்றோரு முண்டுகொல்
தெய்வமு முண்டுகொ றெய்வமு முண்டுகொல்
வைவாளிற் றப்பிய மன்னவன் கூடலிற்
றெய்வமு முண்டுகொ றெய்வமு முண்டுகொல்
என்றிவை சொல்லி யழுவாள் கணவன்றன்
பொன்றுஞ்சு மார்பம் பொருந்தத் தழீஇக்கொள்ள
நின்றா னெழுந்து நிறைமதி வாண்முகங்
கன்றிய தென்றவள் கண்ணீர்கை யான்மாற்ற
வழுதேங்கி நிலத்தின்வீழ்ந் தாயிழையா டன்கணவன்

* செல்லென்கதிரெனவும் பாடம்.

பெருமுதலைய திருந்தடியைத் துணைவனைக்கை யாற்பற்றப்
பருமொழிந் தெழுந்திருந்தான் பல்லமரர் குழாத்துளா
னெழுதெழின மலருண்க ணிருந்தைக்க வெனப்போனான்
மாயங்கொன் மற்றென்கொன் மருட்டியதோர் தெய்வங்கொல்
போயெங்கு நாடுகேன் பொருளுரையோ விதுவன்று
காய்சினந் தணிந்தன்றிக் கணவனைக் கைகூடேன்
தீவேந்தன் றனைக்கண்டித் திறங்கேட்பல் யானென்றா
ளென்றா ளெழுந்தா ளிடருற்ற தீக்கனா
நின்றா ணினைந்தா ணெடுங்கயற்க ணீர்சோர
நின்றா ணினைந்தா ணெடுங்கயற்க ணீர்துடையாச்
சென்றா ளரசன் செழுங்கோயில் வாயின்முன்.

௩-௪. என்றனன் வெய்யோ னிலங்கிர் வளைத்தோளி
நின்றிலள் நின்ற சிலம்பொன்று கையேந்தி
முறையி லரசன்ற னூரிருந்து வாழு
நிறையுடைப் பத்தினிப் பெண்டிர்கா ளீதொன்று

இ - ள். வெய்யோன் கள்வனல்லனென்றானாக, அவ்வளைத்தோளி, மற்றைச் சிலம்பொன்றைத் தன்கையிலேந்திக்கொண்டு அவ்வாயர்பாடியினின்றும் ஊர்க்குள்ளேபோனவள் ஆண்டுள்ள கற்புடைமகளிரைநோக்கி முறைசெய்தலில்லாத அரசனிருக்கின்ற ஊரின்கணிருந்துவாழும் கற்பையுடையபெண்டிர்காள், இஃது அதன் மற்றைச்சிலம்பு காணுங்கோளென்றாளென்க.

நின்றிலள் - போனாள். நின்றசிலம்பு - மற்றைச்சிலம்பு. முறையில் ...... பெண்டிர்காள் - இகழ்ச்சி; என்னை? *“அருந்திற லரசர் முறைசெயி னல்லது, பெரும்பெயர்ப் பெண்டிர்க்குக் கற்புச் சிறவாது” என்பதனானும், †“வானம் பொய்யாது வளம்பிழைப் பறியாது நீணில வேந்தன் கொற்றஞ் சிதையாது” என்பதனானும் இகழ்ந்தாள். அவனாட்டிலிருந்த மகளிர்க்கும் கற்பின்றுமாகலின், அவனிருக்கின்ற ஊரின்கணிருந்துவாழ்கின்ற நுமக்கும் கற்புநிறைவுண்டாமோவென்பது இகழ்ச்சி. இலங்கிர்வளை - ஈர்க்கிலங்குவளை. நின்றிலளென்றது ஆசித்தனைச் சான்றுகாட்டினபின் ஆயர்பாடியினின்றிலளென்றவாறு. ஈதொன்று - இஃது அதனிணைச்சிலம்பு, அன்றி இஃதோரநியாயமென்றுமாம்.

௫-௬. பட்டேன் படாத துயரம் படுகாலை
யுற்றே னுறாதது உற்றேனே யீதொன்று

இ - ள், உலகிற்பிறந்தாரொருவர் படாத துயரம்பட்டேன்; ஒருவருறாததுயர முற்றேன்; உறுகின்றயான் மாணவேதனைபோலவுற்றேன்; இங்ஙனமுறக்கடவேன் இனியொன்றன்றேவென்றாளென்க.

ஏகாரம் - ஈற்றசை. இனிப் படுகாலை - அந்திக்காலத்தெனினுமமையும். உறுவன் - அல்லீறு அன்னீறாயிற்று.

* நடுகற்காதை, ௨0௯-௨௰. † அடைக்கலக்காதை, ௧௪௫-௧௪௬.

௭-௮. கள்வனோ அல்லன் கணவனென் காற்சிலம்பு
கொள்ளும் விலைப்பொருட்டாற் கொன்றாரே ஈதொன்று

இ - ள். என்கணவன் கள்வனல்லன் . என்காற்சிலம்புபெறும் விலையைக் [illegible] கொண்டுவிடுதல்காரணத்தாற் கள்வனென்று ஒருபெயரையிட்டுக் கொன்றார்களே இஃதோராச்சரியமிருந்தபடி என்னென்றாளென்க.

என்காற்சிலம்பென்றாள் ; தான் அரசன் . யான் ஒருவணிகன்மனைவி , என் காலணியினின்றுபெற்றவிலை தாராமைக் கள்வனென்று ஒருபெயரிட்டுக் கொன்றார்களேயென்று. இஃதோரநியாயமிருந்தபடி என்னென்று வெளிக்குக்கூறினாள். கொன்றாரேயெனப் பன்மைகூறினாள் , அரசனோடு அமைச்சரையுங்கருதி. [illegible] ரம் பிரிக்கிலே.

௯-௰௪. மாதர்த் தகைய மடவார்கண் முன்னரே
காதற் கணவனைக் காண்பனே ஈதொன்று
காதற் கணவனைக் கண்டா லவனைத்தன்
தீதறு நல்லுரை கேட்பனே ஈதொன்று
தீதறு நல்லுரை கேளா தொழிவனேல்
நோதக்க செய்தாளென் [illegible] ஈதொன்று

இ - ள். தங்காதலாகாதலிகளும் கற்பையுடைய மனைவியர்முன்னே [illegible] டையகணவனைப் பண்டுபோலக் காண்பேனோ, அங்ஙனங்காண்பேனாயின் [illegible] தொருபுதுமையன்றோ, அங்ஙனம் அவனைக்கண்டால் அவனைக்காதலாற் [illegible] குற்றமற்ற நல்லுரையைக் கேட்பேனோ ; அங்ஙனங் கேட்பேனாயின் இதுவு ஒருறுதி ; அங்ஙனம் தீதற்றவுரையை அவன்வாய்க்கேளேனாயின், நோதக்கசெய்தாளென்று என்னை இகழ்மின்கள் , இது நீங்கட்கு ஒருவாய்ப்பு.

கேளாதொழிவேனேலென்றது சமய [illegible] [illegible] சொல்லாதொழிவேனேலென்றவாறு. என்னெனின் [illegible] டினவுதவுமன்றிப் பட்ட என்கணவன் [illegible] கேளேனாகில், நிறையுடைப்பத்தினிப்பெண்டாகாளென்று [illegible] னைக் கள்வன்மனைவியென்று என்றுமின், [illegible] ளென்க. எள்ளல் - அவமதித்துவியங்கோள் “* [illegible]” போல.

௰௫-௰௮. என்று, அல்லற் [illegible] கண்டேங்கி
மன்னன் மதுரையா ரெல்லாருந் தாமயங்கிக்
களையாத துன்பமிக் காரிகைக்குக் காட்டி
வளையாத செங்கோல் வளைந்த திதுவென்கொல்

இ - ள். என்று வருத்தமுற்று ஆற்றாதழுகின்றவளை மதுரையாரெல்லாருங் கண்டு ஆற்றும்வழிகாணாராய்த் தாமிரங்கி அறிவு மயங்கக் கூறுகின்றவர் இறைசகு மளவும் நீங்காததுன்பத்தை இக்காரிகைக்குண்டாக்கிய அதனானே ஒருகாலுங் கோடாதசெங்கோல் கோடிற்று ; இதனானே மேல் யாதுவிளையுமோ என்கின்றாரென்க.

* தொல்காப்பியம், சொல்லதிகாரம், வினையியக்கம், [illegible].

அல்லல் - வருத்தம், மல்லல் - வளன். கலையாததுன்பம் - கணவனையிழத்தல். இதுவென்றூர்; கோடாதசெங்கோல் கோடியவதனை.

க௯-உ0. மன்னவன் செல்வன் மதிக்குடை வாள்வேந்தன்
தென்னவன் கொற்றஞ் சிதைந்த திதுவென்கொல்

இ - ள் மன்னன் செல்வன்; மதிபோலுங்குளிர்ந்த குடையையும் வெய்ய வாளையுமுடைய வேந்தனாகிய தென்னவனுடைய அரசியல் அழிந்தது: இதனான் மேல்யாதுவிளையுங்கொல்லோவென்றுரைக்க.

குடையும் வாளுமுடையோனெனவே அளியுங்கோறலுமுடைமைகூறினார். மதிக்குடை - உவமைத்தொகை. வாள்வேந்தன் - வேற்றுமைத்தொகை.

உக-உஉ. மண்குளிரச் செய்யு மறவே னெடுந்தகை
தண்குடை வெம்மை விளைத்த திதுவென்கொல்

இ - ள் உலகிற்கு அருளையும் பகைவர்க்கு மறத்தையுஞ் செய்யும் வேலையுடைய நெடுந்தகையுடைய தண்ணளியையுடைய குடையானது வெம்மையைவிளைத்தது: இதனான் மேல் யாதுவிளையுங்கொல்லோவென்றுரைக்க.

உ௩-உ௪. செம்பொற் சிலம்பொன்று கையேந்தி நம்பொருட்டால்
வம்பப் பெருந்தெய்வம் வந்த திதுவென்கொல்

இ - ள் செம்பொனாற் செய்த சிலம்பொன்றைக் கையிலேந்தி நம்மைக்கெடுத்தற்பொருட்டுப் புதுமையையுடைய பெரியதெய்வம் ஈண்டுவந்தது; இதனால் இனி யாதுவிளையுங்கொல்லோவென்றுரைக்க.

ஒன்று கையேந்தியெனவே ஒன்று அதன் இணைபோலுமென்பது கருத்து. பெருந்தெய்வம் - தெய்வத்தினும் பெரியதுணைக்கற்புடைத்தெய்வம்; என்னை? "* கற்புக் கடம்பூண்ட இத்தெய்வ மல்லது, பொற்புடைத் தெய்வம் யாங்கண் டிலமால்" எனவும், "† தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுவாளைத், தெய்வந் தொழுந்தகைமை திண்ணமால்" எனவுங் கூறினமையின். இனி வம்பு நிலையின்மையாகசி, உலாவுந்தெய்வமென்றுமாம். இனி நம்பொருட்டாலென்பதற்கு இவள் கற்புநலங்கண்டு பாவித்தற்பொருட்டாலென்பதுமொன்று.

உரு-உசு. ஐயரி யுண்க ணழுதேங்கி யரற்றுவாள்
தெய்வமுற் றாள்போலுந் தகைய ளிதுவென்கொல்

இ - ள் வியப்பையுடைய அரிபரந்த மையுண்ட கண்ணையுடையவள் விம்மி விம்மி வாய்விட்டரற்றுகின்றவள் தெய்வமேறினாள்போலும் தகைமையுடையவளாயாநின்றாள். இதனான் மேல் யாதுவிளையுங்கொல்லோவென்றுரைக்க.

இவண்மாட்டு மருளுந்தெருளுங்கண்டு தெய்வமுற்றாள்போலுமென்றார். இவ்வையர்களால் அரசர்க்கேதங் கிடைக்கின்

உஎ-உஅ. என்பன சொல்லி யினைந்தேங்கி யாற்றவும்
மன்பழி தூற்றுங் குடியதே மாமதுரை

* அடைக்கலக்காதை, கரு-கசு.

† இது கட்டுரைகாதையின் இறுதிவெண்பா.

கம்பலை மாக்கள் கணவனைத் தாங்காட்டச்
செம்பொற் கொடியனையாள் கண்டாளைத் தான்காணான்

இ - ள். வளையாதசெங்கோல் வளைந்ததென்றன் முதலியனசொல்லி இவணிலைமைக்குவருந்தி மன்னனிலைமைக்கு ஏங்கி மிகவும் மன்னன் கோல்கோடின தன்மையால் அவனைப் பழிதூற்றுங்குடியதாகிய மதுரையிற் கம்பலைமாக்கள்தாம் அவள் கணவன்பட்டவனைக்காட்டச் சிவந்த பொற்கொடியையொத்தவள் தன்னைக்கண்டாளைத் தான்கண்டிலன்;

மற்றவும் - மிகவும். கம்பலைமாக்கள் - வேறுசில காட்சிகண்டு திரியுமவர். தான் காணானன்றார்; இறந்தமைதோன்ற. மதுரை கம்பலைமாக்களென்று பாடமோதிக் குடியது மதுரையென முற்றுவிக்கவுமாம்.

௩௧-௩௪. மல்லன்மா ஞால மிருளூட்டி மாமலைமேற்
செவ்வென் கதிர்சுருங்கிச் செங்கதிரோன் சென்றொளிப்பப்
புல்லென் மருண்மாலைப் பூங்கொடியாள் பூசலிட
வொல்லென் னொலிபடைத்த தூர்

இ - ள். வளப்பத்தையுடைய பெரிய ஞாலத்தை இருளைக்கூட்டி உயர்ந்த அத்தகிரியிடத்தே தனது சிவந்தகதிர்களைச்சுருக்கி அக்கதிரையுடையோன் சென்று மறைய, அங்ஙனம் அவன்மறைதலாற் புன்மையுண்டாகப்பட்ட இரவுபகலென்று வரையறுக்கப்படாத மருட்சியையுடைய மாலைக்காலத்தே பூத்தகொடியையொத்தகண்ணகி அரசன்மேலே யமனுடையபூசலைவிளைக்க ஒலலென்னுமோசையைப்படைத்தது அவ்வூரென்க.

ஊட்டி - தானுண்ட இருளை உலகை உண்ணப்பண்ணி. ஒல் - அனுகரணம். சுருங்கி - விகாரம். ஊட்டிச் சுருக்கி ஒளிப்பப் புல்லென் மருண்மாலையென்க.

௩௫-௩௮. வண்டா ரிருங்குஞ்சி மாலைதன் வார்குழன்மேற்
கொண்டாள் தழீஇக் கொழுநன்பாற் காலைவாய்ப்
புண்தாழ் குருதி புறஞ்சோர மாலைவாய்க்
கண்டா ளவன்றன்னைக் காணாக் கடுந்துயரம்

இ - ள். காலைப்பொழுதின்கண் ஆயர்பாடியிடத்தே தன் கணவனைத்தழீஇ அதற்குக்கைம்மாறாக அவனுடைய வண்டொலிக்குங் குஞ்சியின்மாலையைவாங்கித் தன் வார்குழன்மேற்கொண்ட கண்ணகி மாலைப்பொழுதின்கணே அவன்மெய்யிற் புண்ணினின்றுங்குதிக்கின்ற குருதிப்புனல் இடமெல்லாநனைப்ப அவன் தன்னைக்காணாத துயரத்தைத் தான்கண்டாளென்க.

அவள் கணவன் தன்னைக்காணாததனைத் தான்கண்டாளென்றது மரணத்தை யென்றபடி. காலைவாய்த் தழீஇ மாலைகொண்டவள் மாலைவாய்ப் புறஞ்சோரத் தன்னைக்காணாததுயரத்தைத் தான்கண்டாளென்க.

௩௯-௪௨. என்னுறு துயர்கண்டு மிடருறு மிவளென்னீர்
பொன்னுறு நறுமேனி பொடியாடிக் கிடப்பதோ
மன்னுறு துயர்செய்த மறவினை யறியாதேற்
கென்னுறு வினைகாணா இதுவென வுரையாரோ

இ - ள். என்னுடைய தனிமைமிக்கதுயரைக்கண்டுவைத்தும் இதற்கு இவள் இடருறுமெனநினைக்கின்றிலீர்; அதுநிற்க; நும்முடைய சந்தனுதிகளாலாட்டப்பட்ட பொன்போலுந்திருமேனி பொடியாடிக்கிடக்கத்தகுவதொன்றோ; அஃதன்றாயின், மன்னனாற்செய்யப்பட்ட இக்கொலைத்தொழில் இப்பெற்றியான்முடிந்ததென்றறியாத எனக்கு முற்பவத்திற்செய்த என்றீவினைகாணுதுவென்று இந்நாட்டிற்சொல்லார்களோவென்க.

இஃது அழுகையைச்சார்ந்தவெகுளி: மேல் வருவனவற்றிற்குங்கொள்க.

சஅ-சகூ. யாருமில் மருண்மாலை யிடருழந்து தமியேன்முன்
றாரன்ன மணிமார்பந் தரைமூழ்கிக் கிடப்பதோ
பாரமிகு பழிதூற்றப் பாண்டியன் றவறிழைப்ப
வீர்வதோர் வினைகாணா விதுவென வுரையாரோ

இ - ள். துணைப்படுதற்கு ஒருவருமற்ற மருட்சியையுடைய இம்மாலைக்காலத்தே மிக்கதுன்பமுழுகின்ற தனித்தியேன் கண்முன்பே நும்முடைய மாலைத்திரளுக்குள்ளேயழுகும் திருமார்பம் வெறுநிலத்தே மூழ்கிக்கிடக்கத்தகுவதொன்றோ; அஃதன்றாயின், பாரிலுள்ளார் மிகவும் பழிதூற்றுதற்குக்காரணமாகப் பாண்டியன் தவற்றையெண்ண வெட்டுவிப்பதோர் தீவினைகாணிதுவென்று இந்நாட்டிற்சொல்லார்களோவென்றாளென்க.

வெட்டிக் கவிழ்த்தமைதோன்ற மார்பம் தரைமூழ்கிக்கிடப்பதோவென்றாள்.

ருO. கண்பொழி புனல்சோருங் கடுவினை யுடையேன்முன்
புண்பொழி குருதியராய்ப் பொடியாடிக் கிடப்பதோ
மண்பதை பழிதூற்ற மன்னவன் றவறிழைப்ப
வுண்பதோர் வினைகாணா விதுவென வுரையாரோ

இ-ள். கண்கள் பொழியும்புனலைச் சொரியாநிற்கின்ற தீவினைப்பயனையுடைய என்னுடையகண்முகப்பே வெட்டுவாயினின்றுங்குதித்துப் பெருகுகின்ற குருதியையுடையீராய்ப் பொடியாடிக்கிடக்கத்தகுவதொன்றோ; அஃதன்றாயின், மண்ணிலுள்ளோர்பலரும் பழிதூற்றுதற்குக்காரணமாக மன்னவன் தவற்றையெண்ண அங்காவதோர்வினைகாணிதுவென்று நாட்டிற் சொல்லார்களோவென்றாளென்க.

இர் - முன்னிலைப்பன்மைக்கண்வந்து ஈண்டு ஒருவனைக்கூறும் பன்மைக்கிளவியாயிற்று. கிடப்பதோ - பிரிநிலை. உண்பதோர்வினையென்பதற்கு உயிரையுண்பதோர்வினையென்பதும்பொருள்; *"ஊழ்வினை வந்தவ ணுயிருண்டு கழிந்தது" என்றார்பிறரும். இவைமூன்றும் முதுபாலை; என்னை? "கனைமிகு சுரத்திடைக் கணவனை யிழந்து, தனிமகள் புலம்பன் முதுபாலை யாகும்" என்பதனால்.

*மணிமேகலை, ஆறாவது சக்கரவாளக்கோட்டமுரைத்த காதை: "ஊழ்வினை வந்தவ ணுயிருண்டு கழிந்தது, மாபெருந் துன்பமொழிவா யென்றலு, மென்னுயிர் கொண்டவ னுயிர்தந் தருளிலன், கண்ணில் கணவனை யிவன்காத் தோம்பிடு, மென்னுயிர் தந்தென னுயிர்வாங் கென்றலும்."

ருக-ருங. பெண்டிரு முண்டுகொல் பெண்டிரு முண்டுகொல்
கொண்ட கொழுந ருறுகுறை தாங்குறூஉம்
பெண்டிரு முண்டுகொல் பெண்டிரு முண்டுகொல்

பெண்டிர் - கற்புடைமகளிர். கொண்டகொழுநர் - தம்மை நெஞ்சினுற் கொண்டகொழுநர். அவருறுகுறையைத்தாங்கும் பெண்டிர் - அவருற்றபிணிக்கு மனத்துயர்க்கும் மெய்யாகத் தாங்கும்பெண்டிர். அன்றி உறுகுறைதாங்குதல் பொதுமகளிரிடைப்பிரிதலும் அவரோடு கலந்தசெல்வியும் புணர்ச்சிக்குறிகளுங்கண் டுழியும் அவர் தெருட்டத்தெருண்டு குறையுறப்பொறுத்தலுமாம். தாங்குறூஉம் வினைத்திரிசொல்.

ருச-ருசா. சான்றோரு முண்டுகொல் சான்றோரு முண்டுகொல்
ஈன்ற குழவி யெடுத்து வளர்க்குறூஉம்
சான்றோரு முண்டுகொல் சான்றோரு முண்டுகொல்

ஈன்ற . . . . . . வளர்க்குறூஉம் - பிள்ளைப்பேறளிக்குமென்றுமாம்.

ருஎ-ருகூ. தெய்வமு முண்டுகொல் தெய்வமு முண்டுகொல்
வைவாளிற் றப்பிய மன்னவன் கூடலில்
தெய்வமு முண்டுகொல் தெய்வமு முண்டுகொல்

கொல் - ஐயம்.

இ - ள். கூர்த்தவாளால் என்கொழுநனைத்தவறுதலாற் கொலைசெய்த மன்னனுடைய இக்கூடலென்னுநகரிடத்துப் பெண்டிருஞ் சான்றோருந் தெய்வமுமுண்டோ; உண்டாயின், இவ்வநியாயம்பிறவாது; ஆதலால் இலரென்றுமெனக.

சா0-சாஎ. என்றிவை சொல்லி யழுவாள் கணவன்றன்
பொன்றுஞ்சு மார்பம் பொருந்தத் தழீஇக்கொள்ள
நின்றா னெழுந்து நிறைமதி வாண்முகம்
கன்றிய தென்றவள் கண்ணீர்கை யான்மாற்ற
வழுதேங்கி நிலத்தின் வீழ்ந்த வாயிழையாள் றன்கணவன்
றொழுதகைய திருந்தடியைத் துணைவளைக்கை யாற்பற்றப்
பழுதொழிந் தெழுந்திருந்தான் பல்லமரர் குழாத்துளான்
எழுதெழின் மலருண்க ணிருந்தைக்க வெனப்போனான்

இ - ள். என்று இன்னனசொல்லி அழுகின்றவள் தன்கணவனுடைய திருத்துஞ்சுமார்பம் தன்மார்போடுபொருந்தும்படி தழுவிக்கொண்டாளாக; எழுந்திருந்துநின்றவன, நிறைந்தமதிபோலும் ஒளிபொருந்தியமுகம் கன்றியதேயென்று வாக்காற்சொல்லிக் கையாலே அவள் கண்ணீரை மாற்றினான்; மாற்றியபின்பு அவ்வாயிழையாள் ஏங்கியழுது நிலத்தின்கண்வீழ்ந்து தன்கணவனுடைய தொழுந்தகைமையையுடைய திருந்திய அடியினை இரண்டுகையாலும் பூண்டுகொண்டாளாக; இப்பொல்லாதவுடம்பைக் கைவிட்டுச் சுவர்க்கம்புகுதற்கு எழுந்திருந்தவன் நீ இருக்கவென்றுசொல்லிப் பல அமரர்குழாத்துள்ளானானெனக.

பழுது நிதென்ப உடம்புக்குபெயர், ' பழுதுடைய நின்மகன் நீதுறந்திலை'' என்றார்பிறரும். இனி முன்பே பழுதொழிந்தெழுந்திருந்தவன் அமரர்குழாத்துள்

ளான் தமரீஇக்கொள்ள எழுந்திருந்துநின்றவன் மாற்றப் பின் இருந்தடியைத் துணைவளைக்கையாற்பற்ற, உணக்கண், இருந்தைதக்கவெனப்போனானெனக் கூட்டலுமொன்று. எழுந்திருந்தான் குழாத்துள்ளான் நின்றானென்னும்பெயர்கள் அடுக்கிவந்து போனானென்னும் பயனிலைகொண்டுமுடிந்தன.

௫௮-௬௧. மாயங்கொல் மற்றென்கொல் மருட்டியதோர் தெய்வங்கொல்
போயெங்கு நாடுகேன் பொருளுரையோ விதுவன்று
காய்சினந் தணிந்தன்றிக் கணவனைக் கைகூடேன்
தீவேந்தன் றனைக்கண்டித் திறங்கேட்பல் யானென்றாள்

இ - ள். இங்ஙனம் எழுந்திருந்துநின்றது மாயமோதான்? அஃதன்றாயிற் பின்னை யாதுதான்? என்மனத்தை மருட்டியதோர் தெய்வமோதான், ஒன்றையுந்தெளிகின்றிலேன், ஆதலால் எங்கும்போயாராய்ந்துகூடுவேன்; அங்ஙனங்கூடுதல் எளிதாயினும் எனது மிக்கசினந் தணிந்தாலன்றிக் கூடேன், இச்சினந்தணிதற்கு அக்கொடியவேந்தனை யான் கண்டு அவனை என்கணவனைக்கொன்ற இத்தீத்திறம் யாதென்றுகேட்பேனென்று தன்னொடு சொல்லிக்கூறினாளென்க.

தெய்வங்கொலென்றாள்; இருதுணியாகிய உடல்கூடி ஒருயிர்பெற்றுநின்றமைபற்றி. பொருளுரையாவென்றாள்; தன்பின்போதாமைபற்றி. கேட்பல் யானென்றாள்; நாணுப்புறஞ்செய்யத்துணிந்து.

௬௨-௬௫. என்றா ளெழுந்தா ளிடருற்ற தீக்கனா
நின்றா ணினைந்தா ணெடுங்கயற்கண் ணீர்சோர
நின்றா ணினைந்தா ணெடுங்கயற்கண் ணீர்துடையாச்
சென்றா ளரசன் செழுங்கோயில் வாயின்முன்.

இ - ள். இங்ஙனஞ்சொன்னவள் அவனைப்போதற்கெழுந்தாள்; எழுந்தவள் தன்பாரித்த தீக்கனவை நின்றுநினைந்தாள்; நினைந்தவள் கண் நீர் சோர்தலால் தானசெல்லும் வழி காண்டற்காக அக்கொடிய கயற்போலுங் கண்கள்சொரியும் புனலைத்துடைத்து அரசனுடைய வளவிய கோயில் வாயிலிடத்தே சென்றாளென்க.

என்று என்றும் எழுவாய்க்குச் சென்றாளென்பதனைப் பயனிலையாக்குக.

இனிப் பெருந்தேவி செய்தி கூறுகின்றார்.

இஃது அயன்மயங்கிசைக் கொச்சகக்கலிப்பா.

பருந்துநிழலும்போல ... ... அறியார்க்குதல்லானென்பான்.

உருவகமிப ... ... [illegible].

காரிகை ... . சொலவிக்கப்பெற்றே.

ஊர்சூழ்வரி முற்றிற்று.

இருபதாவது

*வழக்குரைகாதை.

ஆங்குக்
குடையொடு கோல்வீழ நின்று நடுங்குங்
கடைமணி யின்குரல் காண்பென்கா ணெல்லா
திசையிரு நான்கு மதிர்ந்திடு மன்றிக்
கதிரை யிருள்விழுங்கக் காண்பென்கா ணெல்லா
விடுங்கொடி வில்லிர வெம்பகல் வீழுங்
கடுங்கதிர் மீனிவை காண்பென்கா ணெல்லா
கருப்பம
செங்கோலும் வெண்குடையுஞ் செறிநிலத்து மறிந்துவீழ் தரு
நங்கோன்றன் கொற்ற வாயின் மணிநடுங்க நடுங்குமுள்ள
மிரவுவில்லிடும் பகன்மீன்விழு மிருநான்கு திசையு மதிர்ந்திடு
மருவதோர் துன்பமுண்டு மன்னவற்கியா முரைத்துமென
வாடியேந்தினர் கலனேந்தினர் அவிழ்ந்த பூந்துகில் ஏந்தினர்
கோடியேந்தினர் பட்டேந்தினர் கொழுந்திரையலின் செப்பேந்தினர்
வண்ணமேந்தினர் சுண்ணமேந்தினர் மான்மதத்தின் சாந்தேந்தினர்
கண்ணியேந்தினர் பிணையலேந்தினர் கவரியேந்தினர் தூபமேந்தினர்
கூனுங்குறளு மூமுங்கூடிய குறுந்தொழி லிளைஞர் செறிந்துசூழ்தர
நரைவிரை இய நறுங்கூந்தல ருரைவிரை இய பலர்வாழ்த்த
வீண்டுநீர் வையங்காக்கும் பாண்டியன் பெருந்தேவிவாழ்கென
வாயமுங் காவலுஞ்சென் றடியீடு பரசியேத்தக்
கோப்பெருந்தேவி சென்றுதன் றீக்கனாத் திறமுரைப்ப
வரிமா னேந்திய வமளிமிசை யிருந்தனன்
றிருவீழ் மார்பிற் றென்னவர் கோவே, இப்பால்
வாயி லோயே வாயி லோயே
யறிவறை போகிய பொறியறு நெஞ்சத்
திறைமுறை பிழைத்தோன் வாயி லோயே
யிணையரிச் சிலம்பொன் றேந்திய கையள்

* இக்காதைமுதலிய பதினொன்றற்கும் அடியார்க்குநல்லாருரை அகப்படவில்லை.

கணவனை யிழந்தாள் கடையகத் தாளென்
றறிவிப் பாயே யறிவிப் பாயே, யென
வாயிலோன், வாழியெங் கொற்கை வேந்தே வாழி
தென்னம் பொருப்பின் றலைவ வாழி
செழிய வாழி தென்னவ வாழி
பழியொடு படராப் பஞ்சவ வாழி
அடர்த்தெழு குருதி யடங்காப் பசுந்துணிப்
பிடர்த்தலைப் பீட மேறிய மடக்கொடி
வெற்றிவேற் றடக்கைக் கொற்றவை யல்லள்
அறுவர்க் கிளைய நங்கை யிறைவனை
யாடல்கண் டருளிய வணங்கு சூருடைக்
கானக முகந்த காளி தாருகன்
பேருரங் கிழித்த பெண்ணு மல்லள்
செற்றனள் போலுஞ் செயிர்த்தனள் போலும்
பொற்றொழிற் சிலம்பொன் றேந்திய கையள்
கணவனை யிழந்தாள் கடையகத் தாளே
கணவனை யிழந்தாள் கடையகத் தாளே, யென
வருக மற்றவள் தருக வீங்கென
வாயில் வந்து கோயில் காட்டக்
கோயில் மன்னனைக் குறுகினள் சென்றுழி
நீர்வார் கண்ணை யெம்முன் வந்தோய்
யாரையோ நீ மடக்கொடி யோயெனத்
தேரா மன்னா செப்புவ துடையேன்
எள்ளறு சிறப்பி னிமையவர் வியப்பப்
புள்ளுறு புன்கண் டீர்த்தோ னன்றியும்
வாயிற் கடைமணி நடுநா நடுங்க
ஆவின் கடைமணி யுகுநீர் நெஞ்சுசுடத் தான்றன்
அரும்பெறற் புதல்வனை யாழியின் மடித்தோன்
பெரும்பெயர்ப் புகாரென் பதியே யவ்வூர்
ஏசாச் சிறப்பி னிசைவிளங்கு பெருங்குடி
மாசாத்து வாணிகன் மகனை யாகி
வாழ்தல் வேண்டி யூழ்வினை துரப்பச்
சூழ்கழன் மன்னா நின்னகர்ப் புகுந்திங்
கென்காற் சிலம்பு பகர்தல் வேண்டி நின்பாற்
கொலைக்களப் பட்ட கோவலன் மனைவி
கண்ணகி யென்பதென் பெயரே, யெனப், பெண்ணணங்கே

கள்வனைக் கோறல் கடுங்கோ லன்று
வெள்வேற் கொற்றங் காணென வொள்ளிழை
நற்றிறம் படராக் கொற்கை வேந்தே
யென்காற் பொற்சிலம்பு மணியுடை யரியே யெனத்
தேமொழி யுரைத்தது செவ்வை நன்மொழி
யாமுடைச் சிலம்பு முத்துடை யரியே
தருகெனத் தந்து தான்முன் வைப்பக்
கண்ணகி யணிமணிக் காற்சிலம் புடைப்ப
மன்னவன் வாய்முதற் றெறித்தது மணியே, மணிகண்டு
தாழ்ந்த குடையன் றளர்ந்தசெங் கோலன்
பொன்செய் கொல்லன் றன்சொற் கேட்ட
யானோ வரசன் யானே கள்வன்
மன்பதை காக்குந் தென்புலங் காவ
லென்முதற் பிழைத்தது கெடுகவென் னாயுளென
மன்னவன் மயங்கிவீழ்ந் தனனே தென்னவன்
கோப்பெருந் தேவி குலைந்தன ணடுங்கிக்
கணவனை யிழந்தோர்க்குக் காட்டுவ தில்லென்
றிணையடி தொழுதுவீழ்ந் தனளே மடமொழி.

* அல்லவை செய்தார்க் கறங்கூற்ற மென்னும்
பல்லவையோர் சொல்லும் பழுதன்றே - பொல்லா
வடுவினையே செய்த வயவேந்தன் றேவி
கடுவினையேன் செய்வதூஉங் காண்.

காவி யுகுநீருங் கையிற் றனிச்சிலம்பும்
ஆவி குடிபோன வவ்வடிவும் - பாவியேன்
காடெல்லாஞ் சூழ்ந்த கருங்குழலுங் கண்டஞ்சிக்
கூடலான் கூடாயி னான்.

மெய்யிற் பொடியும் விரித்த கருங்குழலுங்
கையிற் றனிச்சிலம்புங் கண்ணீரும் - வையைக்கோன்
கண்டளவே தோற்றானக் காரிகைதன் சொற்செவியி
லுண்டளவே தோற்றா னுயிர்.

வழக்குரைகாதை முற்றிற்று.

---

* மூதுரை, ௨௭; நான்மணிக்கடிகை, ௮௩.

இருபத்தொன்றாவது

வஞ்சினமாலை.

கோவேந்தன் தேவி கொடுவினை யாட்டியேன்
யாவுந் தெரியா இயல்பினேன் ஆயினும்
*முற்பகல் செய்தான் பிறன்கேடு தன்கேடு
பிற்பகல் காண்குறூஉம் பெற்றிய காண்
[illegible]ன்னி மரமும் [illegible] சான்றாக
முன்னி[illegible] மொய்குழலா[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
மன்னன் [illegible] வஞ்சிக்கோன்
தன்னைப் புனல்[illegible] புனலின் பின்சென்று
[illegible]
[illegible] தழீஇக்கொண்டு
[illegible] போதந்தாள் மன்னி
[illegible] நோக்கிக்
[illegible] விணையாய
[illegible] குழவி [illegible] தன்குழவி யுங்கிணறூஉ
விழுந்த [illegible] கொண்டெழுந்த வேற்கண்ணாள் வேறொருவன்
னீநோக்கல் கண்டு நிறைமதி வாண்முகத்தைத்
தானோர் குரக்குமுக மாகென்று போன
கொழுநன் வரவே குரக்குமுக நீத்த
[illegible] யல்குற்பூம் பாவை [illegible]
†பெண்ணறி வென்பது பேதைமைச் சந்தனங்
[illegible] நோக்க கோண்ட மார்பினன்
[illegible] பெட்பச
[illegible] நீயோர் புகை மடையினன்

* திருக்குறள், இன்னாசெய்[illegible]வர் கோட்டமு[illegible]க்குச்
தமக்கின்னா, பிற்பகற் றாமே வருமாறுங்கூட [illegible]தவேற்

† "[illegible] வுடைமை ——————— பெரும்பேதைமைத்தே." [illegible]

கொழுந னவளுக்கென்றி யானுவந்த மாதறங்
கெழுமி யவளுரைப்பக் கேட்ட விழுமத்தாற்
சிந்தைநோய் கூருந் திருவிலேற் கென்றெடுத்துத்
தந்தைக்குத் தாயுரைப்பக் கேட்டாளாய் முந்தியோர்
கோடிக் கலிங்க முடுத்துக் குழல்கட்டி
நீடித் தலையை வணங்கித் தலைப்பெய்த
வாடகப் பாவை யவள்போல்வார் நீடிய
மட்டார் குழலார் பிறந்த பதிப்பிறந்தேன்
பட்டாங்கி யானுமோர் பத்தினியே யாமாகி
லொட்டே னரசோ டொழிப்பேன் மதுரையுமென்
பட்டிமையுங் காண்குறுவாய் நீயென்னா விட்டகலா
நான்மாடக் கூடன் மகளிரு மைந்தரும்
வானக் கடவுளரு மாதவருங் கேட்டீமின்
யானமர் காதலன் றன்னைத் தவறிழைத்த
கோநகர் சீறினேன் குற்றமிலேன் யானென்
றிடமுலை கையாற் றிருகி மதுரை
வலமுறை மும்முறை வாரா வலமந்து
மட்டார் மறுகின் மணிமுலையை வட்டித்து
விட்டா ளெறிந்தாள் விளங்கிழையாள் வட்டித்த
நீல நிறத்துத் திரிசெக்கர் வார்சடைப்
பால்புரை வெள்ளெயிற்றுப் பார்ப்பனக் கோலத்து
மாலை யெரியங்கி வானவன் றான்றோன்றி
மாபத் தினிநின்னை மாணப் பிழைத்தநாட்
பாயெரி யிந்தப் பதியூட்டப் பண்டேயோ
ரேவ லுடையேனா லியார்பிழைப்பா ரீங்கென்னப்
பார்ப்பா ரறவோர் பசுப்பத்தினிப் பெண்டிர்
...தோர் குழவி யெனுமிவரைக் கைவிட்டுத்
...றத்தார் பக்கமே சேர்கென்று காய்த்திய
...புகையழன் மண்டிற்றே

...மாளிகையு...
...கற்புக்...
...டவுளரு
...று.
...ிற்று.

இருபத்திரண்டாவது

அழற்படு காதை.

ஏவற் றெய்வத் தெரிமுகந் திறந்து
காவற் றெய்வங் கடைமுக மடைத்தன
அரைசர் பெருமா னடுபோர்ச் செழியன்
வளைகோ லிழுக்கத் துயிராணி கொடுத்தாங்
கிருநில மடந்தைக்குச் செங்கோல் காட்டப்
புரைதீர் கற்பிற் றேவி தன்னுடன்
அரைசு கட்டிலிற் றுஞ்சிய பின்னர்
ஆசான் பெருங்கணி யறக்களத் தந்தணர்
காவிதி மந்திரக் கணக்கர் தம்மொடு
கோயின் மாக்களுங் குறுந்தொடி மகளிரு
மோவியச் சுற்றத் துரையவிர் திருப்பக
ராரோர் வாதுவர் கடுந்தே ரூருநர்
வாய்வாண் மறவர் மயங்கினர் மலிந்து
கோமகன் கோயிற் கொற்ற வாயிற்
றீமுகங் கண்டு தாமிடை கொள்ள
நித்திலப் பைம்பூ ணிலாத்திகழ் பூண்மார்பிற்
றணைகதிர் மதியத் தன்ன மேனிய
னொளிகதிர் நித்திலப் பூணொடு புனைந்து
வெண்ணிறத் தாமரை யறுகை நந்தியென்
றின்னவை முடித்த வானிறச் சென்னிய
*றுரையென விரிந்த நுண்பூங் கலிங்கம
புலரா துடுத்த வுடையினன் மலரா
*வட்டிகை விளம்பெரி வன்னிகைச் சந்தனங்
கொட்டமோ டரைத்துக் கொண்ட மார்பினன்
றேறுமா பாலுங் கட்டியும் பெட்பச்
சேரவன பெறூஉந் தீப்புகை மடையினன்
றிரத்தக் கணையுந் தேவர் கோட்டமு
மோர்ந்தின் நாலையு மொருங்குட னின்று

* இவ்வடியின்பொருள் நன்குவிளங்கவில்லை.

பின்பகற் பொழுதிற் போனின னார்போ
னன்பகல் வரவுடி யுற்றிய காலினன்
விரிகுடை தண்டே குண்டிகை காட்டப்
பிரியாத் தருப்பை பிடித்த கையின
ஞவிறு மாபிறு நவின்ற நாவினன்]
முத்தீ வாழ்க்கை முறைமையின் வழாஅது
வேத முதல்வன் வேள்விக் கருவியோ
டாதிப் பூதத் ததிதெய்க் கடவுளும்
[வென்றி வெங்கதிர் புரைய மேனியன்
குன்று மணியொடு புனைந்த பணியினன், பசும்பொ
முடிமுதற் கலன்கள் பூண்டனன் முடியொடு
சண்பகங் கருவிளை செங்கூ தாளந்
தண்கமழ் பூநீர்ச் சாதியோ டினையவை
கட்டுங் கண்ணியுந் தொடுத்த மாலையு
மொட்டிய திரணையோ டொசிந்த புயின
னங்குலி கையெறிந் தந்தமகளிர்
குங்கும வருணங் கொண்ட பாயிலை
பொங்கொளி யாத்தப் பூம்பட் டுடையினன்
முகிழ்த்தகைச்
சாலி யயினி பொற்கலத் தேந்தி
யேனு நற்சுவை யியல்புளிக் கொணர்ந்து
வெம்மையிற் கொள்ளு மடையினன் செம்மையி
பவளச் செஞ்சுடர் திகழொளி மேனிய
னாழ்கடல் ஞால மாள்வோ னாணிர
புரசொடு வெண்குடை கவரி நெடுங்கொடி
யுரைசா லங்குசம் வடிவேல் வடிகயி
றெனவிவை பிடித்த கையின னாகி
யெண்ணருஞ் சிறப்பின் மன்னரை யோட்டி
மண்ணகங் கொண்டு செங்கோ லோச்சிக்
கொடுந்தொழில் கடிந்து கொற்றங் கொண்டு
நெடும்புகழ் வளர்த்து நானிலம் புரக்கு
முரைசால் சிறப்பி னடியோ டென்ன
'ச பூதத் தருந்திறற் கடவுளுந்
திறப் பசும்பொன் புரையு மேனியன்
'ய சிறப்பின் மறவேன் மன்னவ
. யொழிய வமைத்த பூணினன்

வாணிக மரபி னீணில னோம்பி
நாஞ்சிலுந் துலாமு மேந்திய கையினர்
[நுனைசால் பொன்னிறங் கொண்ட வுடையினர்
வெட்சித் தாழை கட்கப் பூம்பல்
சேடெனைத் தலைப் புனை யருந்தங்
கடமுண் டிருந்த சென்னிய னீடொளிப்
பொன்னென விரிந்த நன்னிறச் சாந்தந்
தண்ணெனப் புனைந்த மின்னிற மார்பினர்
கொள்ளும் பயறுந் துவரையு முழுந்தும்
நல்லிய பல்வு ணயந்துடன் கொளீஇக்
கொள்ளெனக் கொள்ளுறு படையினர் புடைதரு
சொல்லுடைக் கணனே புன்னுடைக் கழனி
மானிகப் பிடிகை கினிபுற காருசா
பானிகைக் கொண்டு முப்பகற் பொழுதி
னுண்மகிழ்ந் துண்ணு மோனே மயனே
நாஞ்சிற் படையும் வயந்தரு துலாபுகழ்
நவிழானிற் காது மியாழு மேந்தி
விளக்குபு மிருந்து விருந்துபுகக் கருது
மலையுங் கடலு மருபயன் கொணர்ந்து
விலைய மாமே வேண்டுநர் புணர்த்தாங்]
குழுவிற் காழி னூதைய பகுதில வாழ்க்கைக்
கழுவ னெனபோல கிளமோதிச சென்னியி
னிபாம்பிலும் குழம விளைபயமை வழியினோர்
விளக்கொளிப் புகு வியன்பெருங் கூலரும்
[தருவிள புனைபு மேனிய னர்பெரி
வெள்ளி புரைந்த புரிநூ லொண்மொழி
காழகஞ் செறிந்த வுடையினர் காழகிற்
கோதுபுரைத் தகழ்ப மார்பின ரேந்திய
கோட்டுவை கொடுமிறு கிரிறு கிலைக்குழுங்
காட்டிய பூவிற் கலந்த பித்தைகயன்
காமியர் செயவினைக் கல்லுமா மேந்திச்
செம்மையின் வருஉஞ் சிறப்புப் பொருந்தி]
மண் ணுறு திருமணி புரையு மேனிய
ரொண்ணிற மழகுஞ் சேர்ந்த வுடையின
முடிப் புனைந்த வுவறுகெழு பொருந்திப்
பாடற் கமைந்த பலதுறை போகிப்

கலிகெழு கூடற் பலிபெறு பூதத்
தலைவ னென்போன் றானுந் தோன்றிக்
கோமுறை பிழைத்த நாளி லிந்நகர்
தீமுறை யுண்பதோர் திறனுண் டென்பது
தாமுறை யாக வறிந்தன னாதலின்
யாமுறை போவ தியல்பன் றோவெனக்
கொங்கை குறித்த கொற்ற நங்கைமு
னாற்பாற் பூதமும் பாற்பாற் பெயரக்
கூல மறுகுங் கொடித்தேர் வீதியும்
பால்வேறு தெரிந்த நால்வேறு தெருவு
முரைக்குரங் குயர்ந்த வொண்சிலை யுரவோன்
காவெரி யூட்டிய நாள்போற் கலங்க
அறவோர் மருங்கி னழற்கொடி விடாது
மறவோர் சேரி மயங்கெரி மண்டக்
கறவையுங் கன்றுங் கனலெரி சேரா
தறவை யாயர் அகன்றெரு வடைந்தன
மறவெங் களிறு மடப்பிடி நிரைகளும்
விரைபரிக் குதிரையும் புறமதிற் பெயர்ந்தன
சாந்தந் தோய்ந்த வேந்திள வனமுலை
மைத்தடங் கண்ணார் மைந்தர் தம்முடன்
செப்புவா யவிழ்ந்த தேம்பொதி நறுவிரை
நறுமல ரவிழ்ந்த நாறிரும் பூசிய
நறுமலர்ப் பிணையல் சொரிந்த பூந்துகள்
துஞ்சுமே லெழுதிய கொங்கை முன்றில்
ஐங்கா ழாரம் பரிந்தன பரந்த
தூமென் சேக்கைத் துனிப்பதம் பாராக்
காமக் கள்ளாட் டடங்கினர் மயங்கித்
திதலை யல்குற் றேங்கமழ் குழலியர்
குதலைச் செவ்வாய்க் குறுநடைப் புதல்வரொடு
பஞ்சியார்ந்த வமளியிற் றுஞ்சுதுயி லெடுப்பி
வானவர்க் கூந்தன் மகளிரொடு போ
வருவிருந் தோம்பி மனையற முட்டாப்
பெருமனைக் கிழத்தியர் பெருமகிழ் வெ
யிலங்குபூண் மார்பிற் கணவனை யிழந்த
சிலம்பின் வென்ற சேயிழை நங்கை
கொங்கைப் பூசல் கொடிதோ வன்றென.

பொங்கெரி வானகத் தெழுதனை சேத்தின
எண்ணெண் கிரட்டி யிருங்கலை பயின்ற
பண்ணியன் மடந்தையர் பயங்கெழு வீதித்
தண்ணுமை முழவந் தாழ்தரு தீங்குழல்
பண்ணுக் கிளைபயிரும் பண்ணியாழ்ப் பாணியொடு
நாடக மடந்தைய ராடரங் கிழந்தாங்
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

அழற்படுகாதை முற்றிற்று.

---

* இக்காதையில் இருதலைப்பகரத்தினுட்பட்ட பாகங்கள் இர
மட்டுமிருந்தன.

இருபத்துமூன்றுவது

கட்டுரைகாதை.

சடையும் பிறையுந் தாழ்ந்த சென்னிக்
குவளை யுண்கட் டவளவாண் முகத்தி
கடையெயி றரும்பிய பவளச்செவ் வாய்த்தி
யிடைநிலா விரிந்த நித்தில நகைத்தி
யிடமருங் கிருண்ட நீல மாயினும்
வலமருங்கு பொன்னிற மாகிய மேனிய
ளிடக்கை பொலம்பூந் தாமரை யேந்தினும்
வலக்கை யஞ்சுடர்க் கொடுவா ளேந்தினும்
வலக்கால் புனைகழல் கட்டினு மிடக்கால்
றனிச்சிலம் பரற்றுந் தகைமைய ளாயினும்
கொற்கைக் கொண்கன் குமரித் துறைவன்
பொற்கோட்டு வரம்பன் பொதியிற் பொருப்பன்
குலமுதற் கிழத்தி யாதலி னலமந்
தொருமுலை குறைந்த திருமா பத்தினி
யமர்முக வரசி திருமுகத் தேரிழை நங்கை
முன்னிலை யீயாள் பின்னிலைத் தோன்றிக்
கேட்டிசின் வாழி நங்கையென் குறையென
வாட்டிய திருமுக மெய்யாது போக்கி
யாரை யென்பின் வருவோ யென்னுடை
யருந்துய ரறிதி யோவென
வருந்துய ரறிந்தேன் அணியிழாய்
பெருங் கடுவன் ...
டனை யாட்டியேன் யானின் கணவற்
குற்ற வெறசியேன் பைந்தொடி கேட்டி
பெருந்தகைப் பெண்ணொன்று கேளாயென் றனது
வந்திய புலம்புறு நோய்
ழிநீ யிதொன்று கேட்டியென் கோமகற்
கூழ்வினை வந்தக் கடை ...

யெனும் கட்டுரையாட்டியேனென்றும்பாடம்.

மாதரா யீதொன்று கேளாய்நின் கணவற்குத்
தீதுற வந்த வினை ; இதின் [illegible]
மறைநா வோசை யல்ல தியாவது
மணிநா வோசை கேட்டது மிலனே
யடிதொழு திறைஞ்சா மன்னரல் லது
குடிபழி தூற்றுங் கோலனு மல்ல
னின்னுங் கேட்டி நன்னுதன் மடந்தை
மடங்கெழு நோக்கின் *மதமுகந் திறப்புண்
டிடங்கழி நெஞ்சத் திளமை யானை,
கல்விப் †பாகரிற் கையகப் படாஅ
தொல்கா ‡வுள்ளத் தோடு மாயினு
மொழுக்கொடு புணர்ந்தவிவ் விழுக்குடிப் பிறந்தோர்க்
கிழுக்கந் தாரா தென்பதுங் கேட்டி,
யுதவா வாழ்க்கைக் கீரந்தை மனைவி
புதவக் கதவம் §புடைத்தன னொருநா
ளரைச வேலி யல்லது யாவதும்
புரைதீர் வேலி யில்லென மொழிந்து
மன்றத் திருத்திச் சென்றீ ரவ்வழி
யின்றவ் வேலி காவா தோவெனச்
செவிச்சூட் டாணியிற் புகையழல் பொத்தி
நெஞ்சஞ் சுடுதலி னஞ்சிநடுக் குற்று
வச்சிரத் தடக்கை யமரர் கோமா
னுச்சிப் பொன்முடி யொளிவளை யுடைத்தகை
குறைத்த செங்கோற் குறையாக் கொற்றத்
திறைக்குடிப் பிறந்தோர்க் கிழுக்க மின்மை
யின்னுங் கேட்டி, நன்வா யாகுதல்.
||பெருஞ்சோறு பயந்த திருந்துவேற் றடக்கைத்
திருநிலை பெற்ற பெருநா ளிருக்கை
யறைகெழு செங்கோன் மறநெறி நெடுவாட்
புறவுநிறை புக்கோன் கறவைமுறை செய்தோன்
பூம்புனற் பழனப் புகார்நகர் வேந்தன்

---

* மதிமுகமெனவும் பாடம். † பாகரென்றும் பாடம்.

‡ உள்ளமோடுமாயினுமென்றும் பாடம்.

§ புடைத்தனனொருவனெனவும் பாடம்.

|| பாண்டவரும் துரியோதனாதியரும் போர்புரிந்தகாலத்தில் அவர்சேனைக்குச் சோழருளொருவன் சோறிட்டானாதலின், 'பெருஞ்சோறு பயந்த திருந்துவேற் றடக்கை' என்றார் ; இதனைப் புறப்பாட்டாலுணர்க.

ரூங்கா விளையு ளன்று டதனுள்
வலவைப் பார்ப்பான் பராசர னென்போன்
குலவுவேற் சேரன் கொடைத்திறங் கேட்டு
வண்டமிழ் *மறையோற்கு †வானுறை கொடுத்த
திண்டிறல் நெடுவேற் சேரலற் காண்கெனக்
காடு நாடு மூரும் போகி
நீடுநிலை மலயம் பிற்படச் சென்றாங்
கொன்றுபுரி கொள்கை யிருபிறப் பாளர்
முத்தீச் செல்வத்து நான்மறை முற்றி
யைம்பெரு வேள்வியுஞ் செய்தொழி லோம்பு
மறுதொழி லந்தணர் பெறுமுறை வகுக்க
நாவலங் கொண்டு நண்ணா ரோட்டிப்
பார்ப்பன வாகை சூடி யேற்புற
நன்கலங் கொண்டு தன்பதிப் பெயர்வோன்
செங்கோற் றென்னன் றிருந்துதொழின் மறையவர்
தங்கா லொன்னா ரிடையடைந்தா
பாசிலை பொதுளிய போதி மன்றத்துத்
தண்டே குண்டிகை வெண்குடை பாடு
பண்டச் சிறுபொதி பாதக் காப்பொடு
கழிந்தன னிருப்போன் காவல னொருவனை
விளைந்து முதிர் கொற்றத்து விறலோன் வாழி
கடற்கடம் பெறிந்த காவலன் வாழி
விடர்ச்சிலை பொறித்த வேந்தன் வாழி
பூந்தண் பொருநைப் பொறையன் வாழி
மாந்தரஞ் சேரல் மன்னவன் வாழ்கென
குழலுங் குடுமியு மழலைச் செவ்வாய்த்
தளர்நடை யாயத்துத் தமர்முதல் நீங்கி

---

* மறையோனென்றது பாலைக்கௌதமனாரை; இவருக்குச் சுவர்க்கங்கொடுத்த சேரன் இமயவரம்பன்றம்பி பல்யானைச் செல்கெழுகுட்டுவனென்பவன்; இதனைப் பதிற்றுப்பத்தின் மூன்றாம்பத்திறுதியிலுள்ளதாகிய அடியில்வரும் வாக்கியத்தாலுணர்க : 'பல்யானைச்செல்கெழுகுட்டுவனைப் பாலைக்கௌதமனார்பாடினார் பத்துப்பாட்டு... .பாடிப் பெற்றபரிசில், நீர்வேண்டியது கொண்மினென யானும் என்பார்ப்பனியும் சுவர்க்கம்புகல்வேண்டுமெனப் பார்ப்பாரிற்பெரியோரைக் கேட்டு ஒன்பது பெருவேள்வி வேட்பித்துப் பத்தாம்பெருவேள்வியிற் பார்ப்பானையும் பார்ப்பனியையுங் காணாராயினார்.' இச்சரிதை, பழமொழி ௩௧௬ - ம் பாட்டிலுங் கூறப்பட்டுள்ளது.

† வானைக்கொடுத்தவென்றும் பாடம்.

விளையாடு சிறாஅ ரெல்லாஞ் சூழ்தரக்
*குண்டப் பார்ப்பீ ரென்னோ டோதியென்
பண்டச் சிறுபொதி கொண்டுபோ மின்னெனச்
சீத்தற்குச் சிறப்பின் வார்த்திகன் புதல்வ
†னாலமர் செல்வன் பெயர்கொண்டு வளர்ந்தோன்
பாற்பெறு செவ்வாய்ப் ‡படியோர் முன்னர்த்
தேர்ந்த வாயின் மறைவிளி வழாஅ
தாவமலி யுவகையோ டேற்ப வோத்த
§நக்கணைமை தன்னை மிக்கோன் வியந்து
[illegible] பூணூ லத்தகு புனைகலம்
[illegible] நாட [illegible] பையுறை [illegible]
[illegible]
[illegible]
வார்த்திகன் றன்னைக் காத்தன ரோம்பிக்
கோத்தொழி லிளையவர் கோமுறை யன்றிப்
படுபொருள் வௌவிய பார்ப்பா னிவனென
இடுசிறைக் கோட்டத் திட்டன ராக
வார்த்திகன் மனைவி கார்த்திகை யென்போள்
அலந்தனள் ஏங்கி அழுதனள் நிலத்திற்
புலந்தனள் புரண்டனள் பொங்கினள் ஆகலின்
மையறு சிறப்பி னையை கோயிற்
செய்வினைக் கதவந் திறவா தாகலின்
[illegible]
[illegible] மயங்கிக்
[illegible] சொற்றனைக் குற்ற
விடுமின் [illegible]
வெம்ம விளையவர் [illegible]
[illegible] வாய்மொழி யுரைப்ப
[illegible] நெடுமொழி கூறி
யறியா மாக்களின் முறைநிலை திரிந்தவென்
றிறைமுறை பிழைத்தது பொறுத்தல் நின்கடனெனத்
[illegible] கழனி [illegible]

* குண்டப்பார்ப்பீரென்றுமபாடம்.
† ஆலமர்செல்வன்பெயர் - தக்ஷிணாமூர்த்தியென்பது
‡ படியோர் - படிமத்தையுடையோர்=பிரமசாரிகள்
§ தக்கவென்றும் பாடம்.

மடங்கா விளையுள் வயலூர் நல்கிக்
கார்த்திகை கணவன் வார்த்திகன் முன்னர்
இருநில மடந்தைக்குத் திருமார்பு நல்கிய
வணியா வேட்கையுஞ் சிறிதுதணிந் தனனே
நிலைகெழு கூட னீணெடு மறுகின்
மலைபுரை மாட மெங்கணுங் கேட்பக்
கலையமர் செல்வி கதவந் திறந்தது
சிறைபடு கோட்டஞ் சீமின் யாவதுங்
கறைபடு மாக்கள் கறைவிடு செய்ம்மின்
இடுபொரு ளாயினும் படுபொரு ளாயினு
முற்றவர்க் குறுதி பெற்றவர்க் காமென
யானை யெருத்தத் தணிமுர சிரீஇக்
கோன்முறை யறிந்த கொற்ற வேந்தன்
றான்முறை பிழைத்த தகுதியுங் கேளாய்
யாடித் திங்கட் பேரிருட் பக்கத்
தழல்சேர் குட்டத் தட்டமி ஞான்று
வெள்ளி வாரத் தொள்ளெரி யுண்ண
வுரைசா னதுரையோ டரைசுகே டுறுமெனு
முரையு முண்டே நிரைதொடி யோயே
கடிபொழி லுடுத்த கலிங்கநன் னாட்டு
வடிவேற் றடக்கை வசுவுங் குமரனுந்
தீம்புனற் பழனச் சிங்க புரத்தினுங்
காம்பெழு கானக் கபில புரத்தினும்
*அரைசாள் செல்வத்து நிறைதார் வேந்தர்
வியாத் திருவின் விழுக்குடிப் பிறந்த
தாய வேந்தர் தம்முட் பகையுற
விருமுக காவதத் திடைநிலத் தியாங்கணுஞ்
செருவெல் வென்றியிற் செல்வோ ரின்மையி
னருபொருள் வேட்கையிற் பெருங்கலன் சுமந்து
கரந்துறை மாக்களிற் காதலி தன்னொடு
சிங்கா வண்புகழ்ச் சிங்க புரத்தினோ
ரங்கா டிப்பட் டருங்கலன் பகருஞ்
சங்கம னென்னும் வாணிகன் றன்னை
முந்தைப் பிறப்பிற் பைந்தொடி கணவன்
வெந்திறல் வேந்தற்குக் கோத்தொழில் செய்வோன்

* உரைசால்செல்வத்தென்றும்பாடம்.

பரத னென்னும் பெயரனக் கோவலன்
விரத நீங்கிய வெறுப்பின னாதலி
னொற்ற னிவனெனப் பற்றினன் கொண்டு
வெற்றிவேன் மன்னற்குக் காட்டிக் கொல்வுழிக்
கொலைக்களப் பட்ட சங்கமன் மனைவி
நிலைக்களங் காணா ணீலி யென்போ
ளரசர் முறையோ பரதர் முறையோ
ஊரீர் முறையோ சேரியீர் முறையோவென
மன்றினு மறுகினுஞ் சென்றனள் பூசலிட்
டெழுநா ளிரட்டி யெல்லை சென்றபின்
றொழுநா ளிதுவெனத் தோன்ற வாழ்த்தி
மலைத்தலை யேறியோர் மால்விசும் பேணியிற்
கொலைத்தலை மகனைக் கூடுபு நின்றோ
ளெம்முறு துயரஞ் செய்தோ ரியாவரு
மெம்முறு துயரமிற் றாக வென்றே
விட்டோ ளிட்ட வழுவில் சாபம்
பட்டனி ராதலிற் கட்டுரை கேளாய்
யும்மை வினைவந் துருத்த காலைச்
செம்மையி லோர்க்குச் செய்தவ முதவாது
வாமொழி ...த்தலை மையகன் றன்னை

---

* இச்சாபவரலாற்றை இப்படியே மணிமேகலையில் உசு-வது வஞ்சிமாநகர் ...க்காதையிலும் மணிமேகலைக்குக் கண்ணகிகூறியதாகக் கூறினர். அதுவரு ...று :—"வேட்கை துரப்பக் கோட்டம் புக்கு, வணங்கி நின்று குணம்பல வேத்தி, ...புக்கட னில்லாது நற்றவம் படராது, கற்புக்கடன் பூண்டு நுங்கடன் முடித்த, ...ளல் வேண்டுமென் றழுதன ணிற்ப, வொருபெரும் பத்தினிக் கடவுளாங் குழை ...போ, ளெம்மிறைக் குற்ற விடுக்கண் பொறாஅள், வெம்மையின் மதுரை வெவ்வழற் ...நாண், மதுரா பதியெனு மாபெருந் தெய்வ, மிதுநீர் முன்செய் வினையின் பய ...ற், காசில் பூம்பொழிற் கலிங்கநன் னாட்டுத், தாய மன்னவர் வசுவுங் குமரனுஞ், ...க புரமுஞ் செழுநீர்க் கபிலையு, மங்காள் இன்றோ ரடற்செரு வுறுநாண், மூவிரு ...வத முன்னுா ரின்றி, யாவரும் வழங்கா விடத்திற் பொருள்வேட்டுப், பல்கலங் ...ண்டு பலரறி யாமே, லெல்வனை யானோ டரிபுர மெய்திப், பண்டக் கலம்பகர் ...கமன் றன்னைக், கண்டனர் கூறத் தையனின் கணவனப், பார்த்திபன் றொழில் ...யும் பரத னென்னுந், தீத்தொழி லாளன் றெற்றெனப் பற்றி, யொற்ற னிவ ...னை வுரைத்து மன் னற்குக், குற்றமி லோனைக் கொலைபுரிந் திட்டன, னங்கவன் ...வி யழுதன ளரற்றி, யேங்கிமெய் பெயர்ப்போ ளிறுவரை யேறி, யிட்ட சாபங் ...டிய தாகு, மும்மைவினை யுருத்த லொழியா தென்னு, மெய்ம்மைக் கிளவி ...ம்பிய பின்னுஞ், சீற்றங் கொண்டு செழுநகர் சிதைத்தேன்"

யீரேழ் நாளகத் தெல்லை நீங்கி
வானோர் தங்கள் வடிவி னல்லது
நீனோர் வடிவிற் காண்ட லில்லென
மதுரைமா தெய்வ மாபத் தினிக்கு
விதிமுறை சொல்லி யழல்வீடு கொண்டபின்
கருத்துறு கணவற் கண்டபி னல்லது
இருத்தலு மில்லே *னிறத்தலு மிலனெனக்
கொற்றவை வாயிற் பொற்றொடி தகர்த்துக்
கீழ்த்திசை வாயிற் கணவனொடு புகுந்தேன்
மேற்றிசை வாயில் வறியேன் பெயர்கென
இரவும் பகலு மயங்கினள் கையற்
றுரவுநீர் வையை யொருகரைக் கொண்டாங்
கவல வென்னா ளவலித் திழிதலின்
மிசைய வென்னாண் மிசைவைத் தேறலிற்
கடல்வயிறு கிழித்து மலைநெஞ்சு பிளந்தாங்
கவுணரைக் கடந்த சுடரிலை நெடுவே
னெடுவேள் குன்ற மடிவைத் தேறிப்
பூத்த வேங்கைப் பொங்கர்க் கீழோர்
தீத்தொழி லாட்டியேன் யானென் றேங்கி
யெழுநா ளிரட்டி யெல்லை சென்றபின்
றொழுநா ளிதுவெனத் தோன்ற வாழ்த்திப்
பீடுகெழு நங்கை பெரும்பெய ரேத்தி
வாடா மாமலர் மாரி பெய்தாங்
கமரர்க் கரசன் றமர்வந் தேத்தக்
கோநகர் பிழைத்த கோவலன் றன்னொடு
வான வூர்தி யேறினள் மாதோ
காமர் புரிகுழற் கண்ணகி தானென்

தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுவாளைத்
தெய்வந் தொழுந்தகைமை திண்ணிதால் - தெய்வமாய்
மண்ணக மாதர்க் கணியாய கண்ணகி
விண்ணக மாதர்க்கு விருந்து.

கட்டுரைகாதை முற்றிற்று.

---

* இறத்தலுமிலனென்றும் பாடம்.

முடிகெழு வேந்தர் மூவ ருள்ளும்
படைவிளங்கு தடக்கைப் பாண்டியர் குலத்தோ
ரறனு மறனு மாற்றலு மவர்தம
பழவிறன் மூதூர்ப் பண்புமேம் படுதலும்
விழவுமலி சிறப்பும் விண்ணவர் வரவு
மொடியா வின்பத் தவருறை நாட்டுக்
குடியுங் கூழின் பெருக்கமு மவர்தம்
வையைப் பேரியாறு வளஞ்சுரந் தூட்டலும்
பொய்யா வானம் புதுப்பெயல் பொழிதலு
மாரபடி சாத்துவதி யென்றிரு விருத்தியு
நேரத் தோன்றும் வரியுங் குரவையு
மென்றிவை யனைத்தும் பிறபொருள் வைப்போ
டொன்றித் தோன்றுந் தனிக்கோ ணிலைமையும்
வடவா ரியர்படை கடந்து
தென்றமிழ் நாடொருங்கு காணப்
புரைதீர் கற்பிற் றேவி தன்னுட
னரைசு கட்டிலிற் றுஞ்சிய பாண்டிய
னெடுஞ்செழியனோ டொருபரிசா
நோக்கிக் கிடந்த
மதுரைக் காண்ட முற்றிற்று.

மதுரைக்காண்டம் முற்றிற்று.

மூன்றாவது

வஞ்சிக்காண்டம்.

உச. குன்றக்குரவை.

உரைப்பாட்டுமடை

குருவியோப்பியுங் கிளிகடிந்துங் குன்றத்துச் சென்றுவைகி
யருவியாடியுஞ் சுனைகுடைந்து மலவுற்று வருவேமுன்
மலைவேங்கை நறுநிழலின் வள்ளிபோல்வீர் மனநடுங்க
முலையிழந்து வந்துநின்றீர் யாவிரோவென முனியாதே
மணமதுரையோ டரசுகேடுற வல்வினைவந் துருத்தகாலைக்
கணவனையங் கிழந்துபோந்த கடுவினையேன் யானென்றா
ளென்றலு மிறைஞ்சியஞ்சி யிணைவளைக்கை யெதிர்கூப்பி
நின்றவெல்லையுள் வானவரு நெடுமாரி மலர்பொழிந்து
குன்றவருங் கண்டுநிற்பக் கொழுநனொடு கொண்டுபோயின
ரிவள்போலு நங்குலத்துக்கோ ரிருந்தெய்வ மில்லையாதலிற
*சிறுகுடியீரே சிறுகுடியீரே தெய்வங்காளுநயன் சிறுகுடியீரோ
நிறங்கிளரருவிப் பறம்பின் றாழ்வரை
நறுஞ்சினை வேங்கை நன்னிழற் கீழோர்
தெய்வங் கொள்ளுமின் சிறுகுடியீரோ
தொண்டகந் தொடுமின் சிறுபறை தொடுமின்
கோடுவாய் வைம்மின் கொடுமணி யியக்குமின்
குறிஞ்சி பாடுமின் னறும்புகை யெடுமின்
பூப்பலி செய்ம்மின் காப்புக்கடை நிறுமின்
பரவலும் பரவுமின் விரவுமலர் தூவுமின்
னொருமுலை யிழந்த நங்கைக்குப்
பெருமலை துஞ்சாது வளஞ்சுரக்கவெனவே

கொளுச்சொல்

ஆங்கொன்று காணா யணியிழா யீங்கிதுகா
ணஞ்சனப்பூழி யரிதாரத் தின்னிடிய

* சிறுகுடியோரேயென்றும்பாடம்.

சிந்துரச் சுண்ணஞ் செறியத்தூய்த் தேங்கமழ்ந்
திந்திர வில்லி னெழில்கொண் டிழுமென்று
வந்தீங் கிழியு மலையருவி யாடுதுமே
யாடுதுமே தோழி யாடுதுமே தோழி
யஞ்சலோம் பென்றாரை நலனுண்டு நல்காதான்
மஞ்சுசூழ் சோலை மலையருவி யாடுதுமே

இவைமூன்றும் சிறைப்புறம்,
தோழிக்குத் தலைவி சொல்லியது

எற்றொன்றுங் காணேம் புலத்த லவர்மலைக்
கற்றீண்டி வந்த புதுப்புனல்
கற்றீண்டி வந்த புதுப்புனன் மற்றையா
ருற்றாடி னோந்தோழி நெஞ்சன்றே

என்னொன்றுங் காணேம் புலத்த லவர்மலைப்
பொன்னாடி வந்த புதுப்புனல்
பொன்னாடி வந்த புதுப்புனன் மற்றையார்
முன்னாடி னோந்தோழி நெஞ்சன்றே

யாதொன்றுங் காணேம் புலத்த லவர்மலைப்
போதாடி வந்த புதுப்புனல்
போதாடி வந்த புதுப்புனன் மற்றையார்
மீதாடி னோந்தோழி நெஞ்சன்றே

பாட்டுமடை

உரையினி மாதரா யுண்கண் சிவப்பப்
புரைதீர் புனல்குடைந் தாடினோ மாயி
னுரவுநீர் மாகொன்ற வேலேந்தி யேத்திக்
குரவை தொடுத்தொன்று பாடுகம் வா தோழி

சீர்கெழு செந்திலுஞ் செங்கோடும் வெண்குன்று
மேரகமு நீங்கா விறைவன்கை வேலன்றே
பாரிரும் பௌவத்தி னுட்புக்குப் பண்டொருநாட்
சூர்மா தடிந்த சுடரிலைய வெள்வேலே

அணிமுகங்க ளோராறு மீராறு கையு
மிணையின்றித் தானுடையா னேந்திய வேலன்றே
பிணிமுகமேற் கொண்டவுணர் பீடழியும் வண்ண
மணிவிசும்பிற் கோனேத்த மாறட்ட வெள்வேலே

சரவணப்பூம் பள்ளியறைத் தாய்மா ரறுவர்
திருமுலைப்பா லுண்டான் றிருக்கைவே லன்றே
வருதிகிரி யோனவுணன் மார்பம் பிளந்து
குருகுபெயர்க் குன்றங் கொன்ற நெடுவேலே

பாட்டுமடை

இறைவளை நல்லா யிதுநகையா கின்றே
கறிவளர் தண்சிலம்பன் செய்தநோய் தீர்க்க
வறியாண் மறனன்னை யலர்கடம்ப னென்றே
வெறியாட றான்விரும்பி வேலன்வரு கென்றாள்

ஆய்வளை நல்லா யிதுநகையா கின்றே
மாமலை வெற்பனோய் தீர்க்கவரும் வேலன்
வருமாயின் வேலன் மடவ னவனிற்
குருகு பெயர்க்குன்றங் கொன்றான் மடவன்

செறிவளைக்கை நல்லா யிதுநகையா கின்றே
வெறிகமழ் வெற்பனோய் தீர்க்கவரும் வேலன்
வேலன் மடவ னவனினுந் தான்மடவ
னாலமர் செல்வன் புதல்வன் வருமாயின்

நேரிழை நல்லாய நகையா மலைநாடன்
மார்புதரு வெந்நோய் தீர்க்கவரும் வேலன்
தீர்க்கவரும் வேலன் றனினுந் தான்மடவன்
கார்க்கடப்பந் தாரெங் கடவுள் வருமாயின்

பாட்டுமடை

வேலனார் வந்து வெறியாடும் வெங்களத்து
நீலப் பறவைமே னேரிழை தன்னோடு
மாலமர் செல்வன் புதல்வன் வரும்வந்தான்
மால்வரை வெற்பன் மணவணி வேண்டுதுமே

கயிலைநன் மலையிறை மகனைநின் மதிநுதல்
மயிலியன் மடவரன் மலையர்தம் மகளார்
செயலைய மலர்புரை திருவடி தொழுதே
மயன்மண மொழியருள வர்மண மெனவே

மலைமகன் மகனைநின் மதிநுதன் மடவரல்
குலமலை யுறைதரு குறவர்தம் மகளார்
நிலையுயர் கடவுணின் னிணையடி தொழுதேம்
பலரறி மணமவர் படுகுவ ரெனவே

குறமக ளவளெம குலமக ளவளொடு
அறுமுக வொருவநின் னடியிணை தொழுதேந்
துறைமிசை நினதிரு திருவடி தொழுநா
பெறுகநன் மணம்விடு பிழைமண மெனவே.

பாட்டுமடை

என்றியாம் பாட மறைநின்று கேட்டருளி
மன்றலங் கண்ணி மலைநாடன் போவான்முன்
சென்றே னவன்றன் றிருவடி கைதொழுது
நின்றே னுரைத்தது கேள்வாழி தோழி

கடம்பு சூடி யுடம்பிடி யேந்தி
மடந்தை பொருட்டால் வருவ திவ்வூர்
அறுமுக மில்லை யணிமயி லில்லை
குறமக ளில்லைச் செறிதோ ளில்லைக்
கடம்பூண் டெய்வ மாக நேரார்
மடவர் மன்றவிச் சிறுகுடி யோரே

என்றியாம்
கலர்பாடு பெற்றமை யானுரைப்பக் கேட்டுப்
புலர்வாடு நெஞ்சம் புறங்கொடுத்துப் போன
மலர்தலை வெற்பன் வரைவானும் போலு
முலையினான் மாமதுரை கோளிழைத்தாள் காதற்
றலைவனை வானோர் தமராகக் கூடிப்
பலர்தொழு பத்தினிக்குக் காட்டிக் கொடுத்த
நிலையொன்று பாடுதும் யாம்

பாடுகம்வா வாழி தோழியாம் பாடுகம்
பாடுகமவா வாழி தோழியாம் பாடுகங்
கோமுறை நீங்கக் கொடிமாடக் கூடலைத்
தீமுறை செய்தாளை யேத்தியாம பாடுகந்
தீமுறை செய்தாளை யேத்தியாம் பாடுங்கான்
மாமலை வெற்பன் மணவணி வேண்டுதுமே

பாடுற்றுப்
பத்தினிப் பெண்டிர் பரவித் தொழுவாளோர்
பைத்தர வல்குனம் பைம்புனந் துள்ளாளே
பைத்தர வல்குல் கணவனை வானோர்க
ளுய்த்துக் கொடுத்துத்தாயோ வொழியாரோ

வானக வாழ்க்கை யமரர் தொழுதேத்தக்
கான நறுவேங்கைக் கீழாளோர் காரிகையே
கான நறுவேங்கைக் கீழாள் கணவனொடும்
வானக வாழ்க்கை மறுதரவோ வில்லாளே

மறுதர வில்லாளை யேத்திநாம் பாடப்
பெறுகதில் லம்ம விவ்வூரு மோர்பெற்றி
பெற்றி யுடையதே பெற்றி யுடையதே
பொற்றொடி மாதர் கணவன் மணங்காணப்
பெற்றி யுடையதிவ் வூர்

என்றியாங்
கொண்டு நிலைபாடி யாடுங் குரவையைக்
கண்டுநங் காதலர் கைவந்தாரானா
துண்டு மகிழ்ந்தானா வைகலும் வாழியர்
வில்லெழுதிய விமயத்தொடு
கொல்லி யாண்ட குடவர் கோவே.

குன்றக்குரவை முற்றிற்று.

இருபத்தைந்தாவது

காட்சிக்காதை.

மாநீர் வேலிக் கடம்பெறிந் திமயத்து
வானவர் மருள மலைவிற் பூட்டிய
வானவர் தோன்றல் வாய்வாட் கோதை
விளங்கில வந்தி வெள்ளி மாடத்
திளங்கோ வேண்மா ளுடனிருந் தருளித்
துஞ்சா முழவி னருவி யொலிக்கு
மஞ்சுசூழ் சோலை மலைகாண் குவமெனப்
பைந்தொடி யாயமொடு பரந்தொருங் கீண்டி
வஞ்சி முற்ற நீங்கிச் செல்வோன்
வளமலர்ப் பூம்பொழில் வானவர் மகளிரொடு
விளையாட்டு விரும்பிய விறல்வேல் வானவன்
பொலம்பூங் காவும் புனல்யாற்றுப் பரப்பு
மிலங்குநீர்த் துருத்தியு மிளமரக் காவு
மரங்கும் பள்ளியு மொருங்குடன் பரப்பி
யொருநூற்று நாற்பது யோசனை விரிந்த
பெருமால் களிற்றுப் பெயர்வோன் போன்று
கோங்கம் வேங்கை தூங்கிணர்க் கொன்றை
நாகந் திலக நறுங்கா ழார
முதிர்பூம் பரப்பி னொழுகுபுன லொளித்து
மதுகர ஞிமிறொடு வண்டினம் பாட
நெடியோன் மார்பி லாரம் போன்று
பெருமலை விலங்கிய பேரியாற் றடைகரை
யிடுமண லெக்க ரியைந்தொருங் கிருப்பக்
குன்றக் குரவையொடு கொடிச்சியர் பாடலும்
வென்றிச் செவ்வேள் வேலன் பாணியுந்
தினைக்குறு வள்ளையும் புனத்தெழு விளியு
நறவுக்கண் ணுடைத்த குறவ ரோதையும்
பறையிசை யருவிப் பயங்கெழு மோதையும்
புலியொடு பொரூஉம் புகர்முக வோதையுங்
கலிகெழு மீமிசைச் சேணோ னோதையும்

பயம்பில்வீழ் யானைப் பாகரோ தையு
மியங்குபடை யரவமோ டியாங்கணு மொலிப்ப
வளந்துகடை யறியா வருங்கலஞ் சுமந்து
வளந்தலை மயங்கிய வஞ்சி மூதூர்த்
திறைமகன் செவ்வி யாங்கணும் பெறாஅது
திறைசுமந்து நிற்குந் தெவ்வர் போல
யானைவெண் கோடு மகிலின் குப்பையு
மான்மயிர்க் கவரியு மதுவின் குடங்களுஞ்
சந்தனக் குறையுஞ் சிந்துரக் கட்டியு
மஞ்சனத் திரளு மணியுறு தாரமு
மேலவ் வம்பியு மிருங்கறி வல்லியுங்
கூவை நூறுங் கொழுங்கொடிக் கவலையுந்
தெங்கின் பழனுந் தேமாங் கனியும்
பைங்கொடிப் படலையும் பலவின் பழங்களுங்
காயமுங் கரும்பும் பூமலி கொடியுங்
கொழுந்தாட் கமுகின் செழுங்குலைத் தாறும்
பெருங்குலை வாழை யிருங்கனித் தாறு
மாளியி னிணையு மரியின் குருளையும்
வாள்வரிப் பறழு மதகரிக் களபமுங்
குரங்கின் குட்டியுங் குடாவடி யுளியமும்
வரையாடு வருடையு மடமான் மறியுங்
காசறைக் கருவு மாசறு நகுலமும்
பீலி மஞ்ஞையு நாவியின் பிள்ளையுங்
கானக் கோழியுந் தேமொழிக் கிள்ளையு
மலைமிசை மாக்க டலைச்சென்று கொண்டாங்
கேழ்கிளர்ப் பழுவமொ டாழ்கலின் கொற்றங்
கான வேட்டுவ ரெழுதரு காரிகை
தாய்முலை பிரிந்து தனித்துய ரெய்தி
வானவர் போற்று மன்னெறிக் கூடி
வானவர் போற்று வானகம் பெறாஅ
ளெந்நாட் டாள்கொல் யாமவள் கொல்லோ
நின்னொ டியாங்க ணினைப்பது மறியேம
பன்னா ளுயிரைத் தாங்குவா ழியரென
மணக்களி நெடுவேள் மனைவயி னீண்டு
கண்களி மகிழ்க்கத்துக் காதலொ டிருந்த
தண்டமிழ் பூரண சாத்தனிற் றுளங்கு

ஒண்டொடி மாதர்க் குற்றதை யெல்லாந்
திண்டிறல் வேந்தே செப்பக் கேளாய்
தீவினைச் சிலம்பு காரண மாக
வாய்தொடி யரிவை கணவற் குற்றதும்
வலம்படு தானை மன்னவன் முன்னர்ச்
சிலம்பொடு சென்ற சேயிழை வழக்குஞ்
செஞ்சிலம் பெறிந்து தேவி முன்னர்
வஞ்சினஞ் சாற்றிய மாபெரும் பத்தினி
யஞ்சி லோதி யறிகெனப் பெயர்ந்து
முதிரா முலைமுகத் தெழுந்த தீயின்
மதுரை மூதூர் மாநகர் [illegible]
மரபா [illegible]
திருவீழ் மார்பிற் றென்னவர் கோமான்
தயங்கிணர்க் கோதை [illegible]
மயங்கினன் [illegible]
தலைத்தா ணெடுமொழி [illegible]
கலக்கங் கொள்ளாள் [illegible]
மன்னவன் செல்வுழிச் [illegible]
தன்னுயிர் கொண்டவ ளுயிர்தேடினள் போற்
பெருங்கோப் பெண்டு மொருங்குடன் மாய்ந்தனள்
கொற்ற வேந்தன் கொடுங்கோற் றன்மை
யிற்றெனக் காட்டி யிறைக்குரைப் பனள்போற்
றன்னாட் டாங்கட் டனிமையிற் செல்லா
ளின்னா டகவயி னடைந்தன ணங்கையென
வொழிவின் றுரைத்தனன் [illegible]
வழிவழிச் சிறக்கநின் வலம்படு கொற்றந்
தென்னர் கோமான் றீத்திறங் கேட்ட
மன்னர் கோமான் வருந்தினன் உரைப்போ
னெம்மோ ரன்ன வேந்தர்க் குற்ற
செம்மையி னிகந்தசொற் செவிப்புலம் படாமு
னுயிர்ப்பதிப் பெயர்ந்தமை யுறுக வீங்கென
வல்வினை வளைத்த கோலை மன்னவன்
செல்லுயிர் நிமிர்ந்து செங்கோ லாக்கியது
மழைவளங் கரப்பின் வான்பே ரச்சம்
பிழையுயி ரெய்திற் பெரும்பே ரச்சங்
குடிபுர வுண்டுங் கொடுங்கோ லஞ்சி

மன்பதை காக்கு நன்குடிப் பிறத்தல்
துன்ப மல்லது தொழுதக வில்லெனத்
துன்னிய துன்பந் துணிந்துவந் துரைத்த
நன்னூற் புலவற்கு நன்கன முரைத்தாங்
குயிருடன் சென்ற வொருமகன் றன்னினுஞ்
செயிருடன் வந்தவிச் சேயிழை தன்னினு
நன்னுதல் வியக்கு நலத்தோ ரியாரென
மன்னவ னுரைப்ப மாபெருந் தேவி
காதலன் றுன்பங் காணாது கழிந்த
மாதரோ பெருந்திரு வுறுக வானகத்
தத்திற நிற்கநம் மகலுறை யடைந்தவிப்
பத்தினிக் கடவுளைப் பரசல் வேண்டுமென
மாலை வெண்குடை மன்னவன் விரும்பி
நூலறி புலவரை நோக்க வாங்கவ
ரொற்கா மரபிற் பொதியி லன்றியும்
விற்றலைக் கொண்ட வியன்பே ரிமயத்துக்
கற்கால் கொள்ளினுங் கடவு ளாகுங்
கங்கைப் பேர்யாற் றினுங் காவிரிப் புனலினுந்
தங்கிய நீர்ப்படை தகவோ வுடைத்தெனப்
பொதியிற் குன்றத்துக் கற்கால் கொண்டு
முதுநீர்க் காவிரி முன்றுறைப் படுத்தன்
மறத்தகை நெடுவா ளெங்குடிப் பிறந்தோர்க்குச்
சிறப்பொடு வருஉஞ் செய்கையோ வன்று
புன்மயிர்ச் சடைமுடிப் புலரா வுடுக்கை
முந்நூன் மார்பின் முத்தீச் செல்வத்
திருபிறப் பாளரொடு பெருமலை யரசன்
மடவதின் மாண்ட மாபெரும் பத்தினிக்
கடவு ளெழுதவோர் கற்றா ரானெனின்
வழிநின் றுபயவா மாண்பில வாழ்க்கை
கழிந்தோ ரொழிந்தோர்க்குக் காட்டிய காஞ்சியு
முதுகுடிப் பிறந்த முதிராச் செல்வியை
மதிமுடிக் களித்த மகட்பாற் காஞ்சியுந்
தென்றிசை யென்றன் வஞ்சியொடு வடதிசை
நின்றெதி ரூன்றிய நீள்பெருங் காஞ்சியு
நிலவுக்கதிர் முடித்த நீள்பெருஞ் சென்னி
யலர்மந் தாரமொ டாங்கயன் மலர்ந்த

வேங்கையொடு தொடுத்த விளங்குவிறன் மாலை
மேம்பட மலைதலுங் காண்குவ மீங்கெனக்
கொடைநிலை வஞ்சியுங் கொற்ற வஞ்சியும்
நெடுமா ராய நிலைஇய வஞ்சியும்
வென்றோர் விளங்கிய வியன்பெரு வஞ்சியும்
பின்றாச் சிறப்பிற் பெருஞ்சோற்று வஞ்சியும்
குன்றாச் சிறப்பிற் கொற்ற வள்ளையும்
வட்கர் போகிய வான்பனந் தோட்டுடன்
புட்கைச் சேனை பொலியச் சூடிப்
பூவா வஞ்சிப் பொன்னகர்ப் புறத்தென்
வாய்வாண் மலைந்த வஞ்சி சூடுதுமெனப்
பல்யாண்டு வாழ்கநின் கொற்ற மீங்கென
வில்லவன் கோதை வேந்தற் குரைக்கும்
நும்போல் வேந்தர் நும்மோ டிகலிக்
கொங்கர்செங் களத்துக் கொடுவரிக் கயற்கொடி
பகைப்புறத்துத் தந்தன ராயினு மாங்கவை
திசைமுக வேழத்தின் செவியகம் புக்கன
கொங்கணர் கலிங்கர் கொடுங்கரு நாடர்
பங்களர் கங்கர் பல்வேற் கட்டியர்
வடவா ரியரொடு வண்டமிழ் மயக்கத்துன்
கடமலை வேட்டமென் கட்புலம் பிரியாது
கங்கைப் பேர்யாற்றுக் கடும்புன னீத்த
மெங்கோ மகளை யாட்டிய வந்நா
ளாரிய மன்ன ரீரைஞ் ஞூற்றுவர்க்
கொருநீ யாகிய செருவெங் கோலங்
கண்விழித்துக் கண்டது கடுங்கட் கூற்ற
மிமிழ்கடல் வேலியைத் தமிழ்நா டாக்கிய
விதுநீ கருதினை யாயி னேற்பவர்
முதுநீ ருலகின் முழுவது மில்லை
யிமய மால்வரைக் கெங்கோன் செல்வது
கடவு ளெழுதவோர் கற்கே யாதலின்
வடதிசை மருங்கின் மன்னர்க் கெல்லாந்
தென்றமிழ் நன்னாட்டுச் செழுவிற் கயற்புலி
மண்டலை யேற்ற வரைக வீங்கென
நாவலந் தண்பொழி னண்ணா ரொற்றுநங்
காவல் வஞ்சிக் கடைமுகம் பிரியா

ரு

வம்பணி யானை வேந்த ரொற்றே
தஞ்செவிப் படுக்குந் தகைமைய வன்றோ
வறைபறை யென்றே யழும்பில்வே ளுரைப்ப
நிறையருந் தானை வேந்தனு நேர்ந்து
கூடார் வஞ்சிக் கூட்டுண்டு சிறந்த
வாடா வஞ்சி மாநகர் புக்கபின்
வாழ்க வெங்கோ மன்னவர் பெருந்தகை
ஊழிதோ றூழி யுலகங் காக்கென
விற்றலைக் கொண்ட வியன்பே ரிமயத்தோர்
கற்கொண்டு பெயருமெங் காவல னாதலின்
வடதிசை மருங்கின் மன்ன ரெல்லா
மிடுதிறை கொடுவந் தெதிரீ ராயிற்
கடற்கடம் பெறிந்த கடும்போர் வார்த்தையும்
விடர்ச்சிலை பொறித்த வியன்பெரு வார்த்தையுங்
கேட்டு வாழுமின் கேளீ ராயிற்
றோட்டுணை துறக்குந் துறவொடு வாழுமின்
றாழ்கழன் மன்னன் றன்றிரு மேனி
வாழ்க சேனா முகமென வாழ்த்தி
யிறையிகல் யானை யெருத்தத் தேற்றி
யறைபறை யெழுந்த தணிநகர் மருங்கென.

காட்சிக்காதை முற்றிற்று.

இருபத்தாறாவது

கால்கோட் காதை.

அறைபறை யெழுந்தபி னரிமா னேந்திய
முறைமுதற் கட்டி லிறைமக னேற
வாசான் பெருங்கணி யருந்திற லமைச்சர்
தானைத் தலைவர் தம்மொடு குழீஇ
மன்னர் மன்னன் வாழ்கென் றேத்தி
முன்னிய திசையின் முறைமொழி கேட்ப
வியம்படு தானை விறலோர்க் கெல்லா
முயர்ந்தோங்கு வெண்குடை யுரவோன் கூறு
மிமயத் தாபத ரெமக்கீங் குணர்த்திய
வமையா வாழ்க்கை யரசர் வாய்மொழி
நம்பா லொழிகுவ தாயி னாங்கஃ
தெம்போல் வேந்தர்க் கிகழ்ச்சியுந் தருஉம்
வடதிசை மருங்கின் மன்னர்தம் முடித்தலைக்
கடவு ளெழுதவோர் கற்கொண் டல்லது
வறிது மீளுமென் வாய்வா ளாகிற்
செறிகழல் புனைந்த செருவெங் கோலத்துப்
பகையரசு நடுக்காது பயங்கெழு வைப்பிற்
குடிநடுக் குறூஉங் கோலே னாகென
வார்புனை தெரியலு மலர்தார் வேம்புஞ்
சீர்கெழு மணிமுடிக் கணிந்தோ ரல்லா
ரஞ்சினர்க் களிக்கு மடுபோ ரண்ணனின்
வஞ்சினத் தெதிரு மன்னரு முளரோ
விமய வரம்பநின் னிகழ்ந்தோ ரல்ல
ரமைகநின் சினமென வாசான் கூற
வாறிரு மதியினுங் காருக வடிப்பயின்
றைந்து கேள்வியு மமைந்தோ னெழுந்து
வெந்திறல் வேந்தே வாழ்கநின் கொற்ற
மிருநில மருங்கின் மன்னரெல் லாநின்
றிருமலர்த் தாமரைச் சேவடி பணியு

முழுத்த மீங்கிது முன்னிய திசைமே
லெழுச்சிப் பாலை யாகென் றேத்த
மீனா வென்றி வேந்தன் கேட்டு
வாளுங் குடையும் வடதிசைப் பெயர்க்கென
வுரவுமண் சுமந்த வரவுத்தலை பனிப்பப்
பொருந ரார்ப்பொடு முரசெழுந் தொலிப்ப
விரவிடங் கெடுத்த நிரைமணி விளக்கின்
விரவுக்கொடி யடுக்கத்து நிரயத் தானையோ
டைம்பெருங் குழுவு மெண்பே ராயமும்
வெம்பரி யானை வேந்தற் கோங்கிய
கரும வினைஞருங் கணக்கியல் வினைஞருந்
தரும வினைஞருந் தந்திர வினைஞரு
மண்டிணி ஞால மாள்வோன் வாழ்கெனப்
பிண்ட முண்ணும் பெருங்களிற் றெருத்தின்
மறமிகு வாளு மாலைவெண் குடையும்
புறநிலைக் கோட்டப் புரிசையிற் புகுத்திப்
புரைதீர் வஞ்சி போந்தையிற் றொடுப்போ
னரசுவிளங் கவைய முறையிற் புகுதர
வரும்படைத் தானை யமர்வேட்டுக் கலித்த
பெரும்படைத் தலைவர்க்குப் பெருஞ்சோறு வகுத்துப்
பூவா வஞ்சியிற் பூத்த வஞ்சி
வாய்வா ளொடுந்தகை மணிமுடிக் கணிந்து
ஞாலங் காவலர் நாட்டிறை பயிரும்
காலை முரசங் கடைமுகத் தெழுதலும்
நிலவுக்கதிர் முடித்த நீளிருஞ் சென்னி
யுலகுபொதி யுருவத் துயர்ந்தோன் சேவடி
மறஞ்சேர் வஞ்சி மாலை யொடுபுனைந்
திறைஞ்சாச் சென்னி யிறைஞ்சிவலங் கொண்டு
மறையோ ராக்கிய வாவுதி நறும்புகை
நறைகெழு மாலையி னல்லகம் வருத்தக்
கடக்களி யானைப் பிடர்த்தலை யேறினன்
குடக்கோக் குட்டுவன் கொற்றங் கொள்கென
வாடக மாடத் தறிதுயி லமர்ந்தோன்
சேடங் கொண்டு சிலர்நின் றேத்தத்
தெண்ணீர் கரந்த செஞ்சடைக் கடவுள்
வண்ணச் சேவடி மணிமுடி வைத்தலின்

னாங்கது வாங்கி யணிமணிப் புயத்துத்
தாங்கின னாகித் தகைமையிற் செல்வுழி
நாடக மடந்தைய ராடரங் கியாங்கணுங்
கூடையிற் பொலிந்து கொற்ற வேந்தே
வாகை தும்பை மணித்தோட்டுப் போந்தையோ
டோடை யானையி னுயர்முகத் தோங்க
வெண்குடை நிழலெம் வெள்வளை கவர்ந்து
கண்களி கொள்ளுங் காட்சியை யாகென
மாகதப் புலவரும் வைதா ளிகருஞ்
சூதரு நல்வலந் தோன்ற வாழ்த்த
யானை வீரரு மிவுளித் தலைவரும்
வாய்வாண் மறவரும் வாள்வல னேத்தத்
தானவர் தம்மேற் றம்பதி நீங்கும்
வானவன் போல வஞ்சி நீங்கித்
தண்டத் தலைவருந் தலைத்தார்ச் சேனையும்
வெண்டலைப் புணரியின் விளிம்புசூழ் போத
மலைமுது குநெளிய நிலைநா டதர்பட
வுலக மன்னவ னொருங்குடன் சென்றாங்
காலும் புரவி யணித்தேர்த் தானையொடு
நீல கிரியி னெடும்புறத் திறுத்தாங்
காடியல் யானையுந் தேரு மாவும்
பீடுகெழு மறவரும் பிறழாக் காப்பிற்
பாடி யிருக்கைப் பகல்வெய் யோன்ற
னிருநில மடந்தைக்குத் திருவடி யளித்தாங்
கருந்திறன் மாக்க ளடியீ டேத்தப்
பெரும்பே ரமளி யேறிய பின்ன
ரியங்குபடை யரவத் தீண்டொலி யிசைப்ப
விசும்பியங்கு முனிவர் வியனில மாளு
மிந்திர திருவனைக் காண்குது மென்றே
யந்தரத் திழிந்தாங் கரசுவிளங் கவையத்து
மின்னொளி மயக்கு மேனியொடு தோன்ற
மன்னவ னெழுந்து வணங்கிநின் றோனைச்
செஞ்சடை வானவ னருளினில் விளங்க
வஞ்சித் தோன்றிய வானவ கேளாய்
மலயத் தேகுதும் வான்பே ரிமய
நிலயத் தேகுத லின்கருத தாதலி

ணருமறை யந்தண ராங்குளர் வாழ்வோர்
பெருமலை மன்னர் காத்தனின் கடனென்
றுங்கவர் வாழ்த்திப் பெயர்ந்ததற் பின்னர்
வியலுநீர் ஞால மாள்வோன் வாழ்கெனக்
கொங்கணக் கூத்தருங் கொடுங்கரு நாடருந்
தங்குலக் கோதிய தகைசா லணியின
ரிருள்படப் பொதுளிய சுருளிருங் குஞ்சி
மருள்படப் பரப்பிய வொலியன் மாலையர்
வடஞ்சுமந் தோங்கிய வளரிள வனமுலைக்
கருங்கய னெடுங்கட் காரிகை யாரோ
டிருங்குயி லால வினவண்டி யாழ்செய
வரும்பவிழ் வேனில் வந்தது வாரார்
காதல ரென்னு மேதகு சிறப்பின்
மாதர்ப் பாணி வரியொடு தோன்றக்
கோல்வளை மாதே கோலங் கொள்ளாய்
காலங் காணாய் கடிதிடித் துரறிக்
காரோ வந்தது காதல ரேறிய
தேரோ வந்தது செய்வினை முடித்தெனக்
காஅர்க் குரவையொடு கருங்கய னெடுங்கட்
கோற்றொடி மாதரொடு குடகர் தோன்றத்
தாழ்தரு கோலத் தமரொடு சிறந்து
வாள்வினை முடித்து மறவாள் வேந்த
னூழி வாழியென் றோவர் தோன்றக்
கூத்துள் படுவோன் காட்டிய முறைமையி
னேத்தின ரறியா விருங்கல னல்கி
வேத்தினம் நடுக்கும் வேலோ னிருந்துழி
நாடக மகளி ரீரைம் பத்திருவருங்
கூடிசைக் குயிலுவ ரிருநூற் றெண்மருந்
தொண்ணூற் றறுவகைப் பாசண் டத்துறை
நண்ணிய நூற்றுவர் நகைவே ழம்பருங்
கொடுஞ்சி நெடுந்தே ரைம்பதிற் றிரட்டியுங்
கடுங்களி யானை யோரைஞ் ஞாறு
மையீ ராயிரங் கொய்யுளைப் புரவியு
மெய்யா வடவளத் திருபதி னாயிரங்
கண்ணெழுத் துப்படுத் தனகைபுனை சகடமுஞ்
சஞ்சயன் முதலாத் தலைக்கீடு பெற்ற

கஞ்சுக முதல்வ ரீரைஞ் ஞூற்றுவர்
சேயுயர் விற்கொடிச் செங்கோல் வேந்தே
வாயி லோரென வாயில் வந்திசைப்ப
நாடக மகளி ரீரைம் பதின்மருங்
கூடிசைக் குயிலுவக் கருவியா ளருஞ்
சஞ்சயன் றன்னொடு வருக வீங்கெனச்
செங்கோல் வேந்தன் றிருவிளங் கவையத்துச்
சஞ்சயன் புகுந்து தாழ்ந்துபல வேத்தி
யானையிற் புகுந்த வைம்பத் திருவரொடு
மாண்வினை யாளரை வகைபெறக் காட்டி
வேற்றுமை யின்றி நின்னொடு கலந்த
நூற்றுவர் கன்னருங் கோற்றொழில் வேந்தே
வடதிசை மருங்கின் வானவன் பெயர்வது
கடவு ளெழுதவோர் கற்கே யாயி
னோங்கிய விமயத்துக் கற்கால் கொண்டு
வீங்குநீர்க் கங்கை நீர்ப்படைச் செய்தாங்
கியாந்தரு மாற்றல மென்றன ரென்று
வீங்குநீர் ஞால மாள்வோய் வாழ்கென
வடல்வேன் மன்னா ராருயி ருண்ணுங்
கடலந் தானைக் காவல னுரைக்கும்
பாலகுமரன் மக்கண் மற்றவர்
காவா நாவிற் கனகனும் விசயனும்
விருந்தின் மன்னர் தம்மொடுங் கூடி
யருந்தமி ழாற்ற லறிந்தில ராங்கெனக்
கூற்றங் கொண்டிச் சேனை செல்வது
நூற்றுவர் கன்னர்க்குச் சாற்றி யாங்கு
கங்கைப் பேர்யாறு கடத்தற் காவன
வங்கப் பெருநிரை செய்க தாமெனச்
சஞ்சயன் போனபின் கஞ்சுக மாக்க
ளெஞ்சா நாவின ரீரைஞ் ஞூற்றுவர்
சந்தின் குப்பையுந் தாழ்நீர் முத்துந்
தென்ன ரிட்ட திறையொடு கொணர்ந்து
கண்ணெழுத் தாளர் காவல் வேந்தன்
மண்ணுடை முடங்கல மன்னவர்க் களித்தாங்
காங்கவ ரேகிய பின்னர் மன்னிய
வீங்குநீர் ஞால மாள்வோ னேங்கிய

நாடாள் செல்வர் நல்வல னேத்தப்
பாடி யிருக்கை நீங்கிப் பெயர்ந்து
கங்கைப் பேர்யாற்றுக் கன்னரிற் பெற்ற
வங்கப் பரப்பின் வடமருங் கெய்தி
யாங்கவ ரெதிர்கொள வந்நாடு கழிந்தாங்
கோங்குநீர் வேலி யுத்தர மரீஇப்
பகைப்புலம் புக்குப் பாசறை யிருந்த
தகைப்பருந் தானை மறவோன் றன்முன்
னுத்தரன் விசித்திர னுருத்திரன் பைரவன்
சித்திரன் சிங்கன் றனுத்தரன் சிவேதன்
வடதிசை மருங்கின் மன்னவ ரெல்லாந்
தென்றமி ழாற்றல் காண்குது மியாமெனக்
கலந்த கேண்மையிற் கனக விசயர்
நிலந்திரைத் தானையொடு நிகர்த்து மேல்வர
விரைதேர் வேட்டத் தெழுந்த வரிமா
கரிமாப் பெருநிரை கண்டுளஞ் சிறந்து
பாய்ந்த பண்பிற் பல்வேன் மன்னர்
காஞ்சித் தானையொடு காவலன் மலைப்ப
வெயிற்கதிர் விழுங்கிய துகிற்கொடிப் பந்தர்
வடித்தோற் கொடும்பறை வால்வளை நெடுவயி
ரிடிக்குர லுரச மிழுமென் பாண்டி
லுயிர்ப்பலி யுண்ணு முருமுக் குரல
மயிர்க்கண் முரசமொடு மாதிர மதிரச்
சிலைத்தோ ளாடவர் செருவேற் றடக்கையர்
கறைத்தோன் மறவர் கடுந்தே ரூருநர்
வெண்கோட் டியானையர் விரைபரிக் குதிரையர்
மண்கண் கெடுத்தவிம் மாநிலப் பெருந்துகள்
களங்கொள் யானைக் கவிழ்மணி நாவும்
விளங்குகொடி நந்தின் வாய்களை நாவு
நடுங்குதொழி லொழிந்தாங் கொடுங்கியுள் செறியத்
தாருந் தாருந் தாமிடை மயங்கத்
தோளுந் தலையுந் துணிந்துவே றாகிய
சிலைத்தோண் மறவ ருடற்பொறை யடுக்கத்
தெறிபிண மிடறிய குறையுடற் கவந்தம்
பறைக்கட் பேய்மகள் பாணிக் காடப்
பிணஞ்சுமந் தொழுகிய நிணம்படு குருதியிற்

கணங்கொள் பேய்மகள் கதுப்பிகுத் தாட
அடுந்தேர்த் தானை யாரிய வரசர்
கடும்படை மாக்களைக் கொன்று களங்குவித்து
நெடுந்தேர்க் கொடுஞ்சியுங் கடுங்களிற் றெருத்தமும்
விடுபரிக் குதிரையின் வெரிநமும் பாழ்பட
வெருமைக் கடும்பரி யூர்வோ னுயிர்த்தொகை
யொருபக லெல்லையி னுண்ணு மென்ப
தாரிய வரச ரமர்க்களத் தறிய
நூழி லாட்டிய சூழ்கழல் வேந்தன்
போந்தையொடு தொடுத்த பருவத் தும்பை
யோங்கிருஞ் சென்னி மேம்பட மலைய
வாய்வா ளாண்மையின் வண்டமி ழிகழ்ந்த
காய்வேற் றடக்கைக் கனகனும் விசயனு
மைம்பத் திருவர் கடுந்தே ராளரொடு
செங்குட் டுவன்றன் சினவலைப் படுதலுஞ்
சடையின ருடையினர் சாம்பல் பூசினர்
பீடிகைப் பீலிப் பெருநோன் பாளர்
பாடு பாணியர் பல்லியத் தோளின
ராடு கூத்த ராகி யெங்கணு
மேந்துவா ளொழியத் தாந்துறை போகிய
விச்சைக் கோலத்து வேண்டுவயிற் படர்தரக்
கச்சை யானைக் காவலர் நடுங்கக்
கோட்டுமாப் பூட்டி வாட்கோ லாக
வாளழி வாங்கி யதரி திரித்த
வாளே ருழவன் மறக்களம் வாழ்த்தித்
தொடியுடை நெடுங்கை தூங்கத் தூக்கி
முடியுடைக் கருந்தலை முந்துற வேந்திக்
கடல்வயிறு கலக்கிய ஞாட்புங் கடலகத்
திலங்கையி லெழுந்த சமரமுங் கடல்வணன்
றேரூர் செருவும் பாடிப் பேரிசை
முன்றேர்க் குரவை முதல்வனை வாழ்த்திப்
பின்றேர்க் குரவைப் பேயாடு பறந்தலை
முடித்தலை யடுப்பிற் பிடர்த்தலைத் தாழித்
தொடித்தோட் டுடுப்பி னுழைஇய வூன்சோறு
மறப்பேய் வாலுவன் வயினறிந் தூட்டச்
சிறப்பூண் கடியினஞ் செங்கோற் கொற்றத்

தறக்களஞ் செய்தோ னூழி வாழ்கென
மறக்கள முடித்த வாய்வாட் குட்டுவன்
வடதிசை மருங்கின் மறைகாத் தோம்பினர்
தடவுத்தீயவியாத் தண்பெரு வாழ்க்கைக்
௨௫௦ காற்றூ தாளரைப் போற்றிக் காமினென
வில்லவன் கோதையொடு வென்றுவினை முடித்த
பல்வேற் றானைப் படைபல ஏவிப்
பொற்கோட் டிமயத்துப் பொருவறு பத்தினிக்
கற்கால் கொண்டனன் காவல னாங்கென்.

கால்கோட்காதை முற்றிற்று.

இருபத்தேழாவது

நீர்ப்படைக் காதை.

வடபே ரிமயத்து வான்றரு சிறப்பிற்
கடவுட் பத்தினிக் கற்கால் கொண்டபின்
சினவேன் முன்பிற் செருவெங் கோலத்துக்
கனக விசயர்தங் கதிர்முடி யேற்றிச்
செறிகழல் வேந்தன் றென்றமி ழாற்ற
லறியாது மலைந்த வாரிய மன்னரைச்
செயிர்த்தொழின் முதியோன் செய்தொழில் பெருக
வுயிர்த்தொகை யுண்ட வொன்பதிற் றிரட்டியென்
றியாண்டு மதியு நாளுங் கடிகையு
மீண்டுநீர் ஞாலங் கூட்டி யெண்கொள
வருபெருந் தானை மறக்கள மருங்கி
னொருபக லெல்லை யுயிர்த்தொகை யுண்ட
செங்குட் டுவன்றன் சினவேற் றானையொடு
கங்கைப் பேர்யாற்றுக் கரையகம் புகுந்து
பாற்படு மாசிற் பத்தினிக் கடவுளை
நூற்றுறை மாக்களி னீர்ப்படை செய்து
மன்பெருங் கோயிலு மணிமண் டபங்களும்
பொன்புனை யரங்கமும் புனைபூம் பந்தரு
முரிமைப் பள்ளியும் விரிபூஞ் சோலையுந்
திருமலர்ப் பொய்கையும் வரிகா னரங்கமும்
பேரிசை மன்னர்க் கேற்பவை பிறவு
மாரிய மன்ன ரழகுற வமைத்த
தெண்ணீர்க் கங்கைத் தென்கரை யாங்கண்
வெள்ளிடைப் பாடி வேந்தன் புக்கு
நீணில மன்னர் நெஞ்சுபுக லழித்து
வானவ மகளிரின் வதுவைசூட் டயர்ந்தோ
ருலையா வெஞ்சம மூர்ந்தம ருழக்கித்
தலையுந் தோளும் விலைபெறக் கிடந்தோர்
நாள்விலைக் கிளையு ணல்லம ரழுவத்து

வாள்வினை முடித்து மறத்தொடு முடிந்தோர்
குழிகட் பேய்மகள் குரவையிற் றொடுத்து
வழிமருங் கேத்த வாளொடு மடிந்தோர்
கிளைக டம்மொடு கிளர்பூ ணகந்து
வளையோர் மடிய மடிந்தோர் மைந்தர்
மலைத்துத் தலைவந்தோர் வாளொடு மடியத்
தலைத்தார் வாகை தம்முடிக் கணிந்தோர்
திண்டேர்க் கொடிஞ்சியொடு தேரோர் வீழப்
புண்டோய் குருதியிற் பொலிந்த மைந்தர்
மாற்றருஞ் சிறப்பின் மணிமுடிக் கருந்தலைக்
கூற்றுக கண்ணோட வரிந்துகளங் கொண்டோர்
நிறஞ்சிதை கவயமொடு நிறப்புண் கூர்ந்து
புறம்பெற வந்த போர்வாண் மறவர்
வருக தாமென வாகைப் பொலந்தோடு
பெருநா ளமயம் பிறக்கிடக் கொடுத்துத்
தோடார் போந்தை தும்பையொடு முடித்துப்
பாடுதுறை முற்றிய கொற்ற வேந்தன்
ஆடுகொள் மார்போ டரசுவிளங் கிருக்கையின்
மாடல மறையோன் வந்து தோன்றி
வாழ்க வெங்கோ மாதவி மடந்தை
கானற் பாணி கனக விசயர்தம்
முடித்தலை நெரித்தது முதுநீர் ஞாலம்
மடிப்படுத் தாண்ட வரசே வாழ்கெனப்
பகைப்புலத் தரசர் பலரீங் கறியா
நகைத்திறங் கூறினை நான்மறை யாள
யாதுநீ கூறிய வுரைப்பொரு ளீங்கென
மாடல மறையோன் மன்னவற் குரைக்கும்
கானலந் தண்டுறைக் கடல்விளை யாட்டினுள்
மாதவி மடந்தை வரிநவில் பாணியோ
டூடற் காலத் தூழ்வினை யுருத்தெழக்
கூடாது பிரிந்து குலக்கொடி தன்னுடன்
மாடமூ தூர் மதுரை புக்காங்கு
இலைத்தார் வேந்த னெழில்வா னெய்தக்
கொலைக்களப் பட்ட கோவலன் மனைவி
குடவர்கோவே நின்னாடு புகுந்து
வடதிசை மன்னர் மணிமுடி யேறினள்

ளின்னுங் கேட்டரு ளிகல்வேற் றடக்கை
மன்னர் கோவே யான்வருங் காரண
மாமுனி பொதியின் மலைவலங் கொண்டு
குமரியம் பெருந்துறை யாடி மீள்வே
னூழ்வினைப் பயன்கொ லுரைசால் சிறப்பின்
வாய்வாட் டென்னவன் மதுரையிற் சென்றேன்
வலம்படு தானை மன்னவன் றன்னைச்
சிலம்பின் வென்றனள் சேயிழை யென்றலுந்
தாதெரு மன்றத்து மாதரி யெழுந்து
கோவலன் றீதிலன் கோமகன் பிழைத்தா
னடைக்கல மிழந்தே னிடைக்குல மாக்காள்
குடையுங் கோலும் பிழைத்தவோ வென
விடையிரு ளியாமத் தெரியகம் புக்கதுந்
தவந்தரு சிறப்பிற் கவுந்தி சீற்ற
நிவந்தோங்கு செங்கோ னீணில வேந்தன்
போகுயிர் தாங்கப் பொறைசா லாட்டி
யென்னோ டிவர்வினை யுருத்ததோ வென
வுண்ணா நோன்போ டுயிர்பதிப் பெயர்த்ததும்
பொற்றேர்ச் செழியன் மதுரை மாநகர்க்
குற்றது மெல்லா மொழிவின் றுணர்ந்தாங்
கென்பதிப் பெயர்ந்தே னென்றுயர் போற்றிச்
செம்பியன் மூதூர்ச் சிறந்தோர்க் குரைக்க
மைந்தற் குற்றது மடந்தைக் குற்றதுஞ்
செங்கோல் வேந்தற் குற்றதுங் கேட்டுக்
கோவலன் றாதை கொடுந்துய ரெய்தி
மாபெருந் தானம் வான்பொரு ளீத்தாங்
கிந்திர விகார மேழுடன் புக்காங்
கந்தர சாரிக ளாறைம் பதின்மர்
பிறந்த யாக்கைப் பிறப்பற முயன்று
துறந்தோர் தம்முன் றுறவி யெய்தவுந்
துறந்தோன் மனைவி மகன்றுயர் பொறாஅ
ளிறந்ததுய ரெய்தி யிரங்குமெய் விடவும்
கண்ணகி தாதை கடவுளர் கோலத்
தண்ணலம் பெருந்தவத் தாசீவகர்முன்
புண்ணிய தானம் புரிந்தறங் கொள்ளவுந்
தானம் புரிந்தோன் றன்மனைக் கிழத்தி

யாள்வீழ் நல்லுயிர் நீத்துமெய் விடவு
மற்றது கேட்டு மாதவி மடந்தை
நற்றாய் தனக்கு நற்றிறம் படர்கேன்
மணிமே கலையை வான்றுயா ருறுக்குங்
கணிகையர் கோலங் காணா தொழிகெனக்
கோதைத் தாமங் குழலொடு களைந்து
போதித் தானம் புரிந்தறங் கொள்ளவு
மென்வாய்க் கேட்டோ ரிறந்தோ ருண்மையி
னன்னீர்க் கங்கை யாடப் போந்தேன்
மன்னர் கோவே வாழ்க வீங்கெனத்
தோடார் போந்தை தும்பையொடு முடித்த
வாடா வஞ்சி வானவர் பெருந்தகை
மன்னவ னிறந்தபின் வளங்கெழு சிறப்பிற்
றென்னவ னாடு செய்ததீங் குரையென
நீடுவா ழியரோ நீணில வேந்தென்று
மாடல மறையோன் மன்னவற் குரைக்குநின்
மைத்துன வளவன் கிள்ளியொடு பொருந்தா
வொத்த பண்பின ரொன்பது மன்ன
ரிளவர சு பொறாஅ ரேவல் கேளார்
வளநா டழிக்கு மாண்பின ராதலி
*னொன்பது குடையு மொருபக லொழித்தவன்
பொன்புனை திகிரி யொருவழிப் படுத்தோய்
பழையன் காக்குங் குழைபயி னெடுங்கோட்டு
வேம்பு முதல் தடிந்த வேந்துவாள் வலத்துப்
போந்தைக் கண்ணிப் பொறைய கேட்டருள்
கொற்கையி லிருந்த †வெற்றிவேற் செழியன்
பொற்றொழிற் கொல்ல ரீரைஞ் ஞூற்றுவ
ரொருமுலை குறைத்த திருமா பத்தினிக்
கொருபக லெல்லை யுயிர்ப்பலி யூட்டி
யுறைசெல வெறுத்த மூதூ
ரரசுகெடுத் தலம்வரு மல்லற் காலைத்
தென்புல மருங்கிற் றீதுதீர் சிறப்பின்
மன்பதை காக்கு முறைமுதற் கட்டிலி

* "ஆராச் செருவிற் சோழர்குடிக் குரியோ, ரொன்பதின்மர் வீழ வாயிற் புறத் திறுத்து" என்றார் பதிற்றுப்பத்திலும்; ஐந்தாம்பத்தின் பதிகம்.

† இளங்கோச்செழியனென்றும் பாடம்.

னிரைமணிப் புரவி யோரேழ் பூண்ட
வொருதனி யாழிக் கடவுட் டேர்மிசைக்
காலைச் செங்கதிர்க் கடவுளே றினனென
மாலைத் திங்கள் வழியோ னேறினன்
னூழிதொ றூழி யுலகங் காத்து
வாழ்க வெங்கோ வாழிய பெரிதென
மறையோன் கூறிய மாற்ற மெல்லா
மிறையோன் கேட்டாங் கிருந்த வெல்லையு
ளகல்வாய் ஞால மாரிருள் விழுங்கப்
பகல்செல *முதிர்ந்த படர்கூர் மாலைச்
செந்தீப் பரந்த திசைமுகம் விளங்க
வந்திச் செக்கர் வெண்பிறை தோன்றப்
பிறையேர் வண்ணம் பெருந்தகை நோக்க
விறையோன் செவ்வியிற் கணியெழுந் துரைப்போ
னெண்ணான்கு மதியம் வஞ்சியி லிருந்தது
மண்ணாள் வேந்தே வாழ்கென் றேத்த
நெடுங்காழ்க் கண்ட நிரல்பட நிரைத்த
கொடும்பட நெடுமதிற் கொடித்தேர் வீதியுட்
குறியவு நெடியவுங் குன்றுகண் டன்ன
வுறையுண் முடக்க மொருங்கிடம் போகி
வித்தகர் கைவினை விளங்கிய கொள்கைச்
சித்திர விதானத்துச் செம்பொற் பீடிகைக்
கோயி லிருக்கைக் கோமக னேறி
வாயி லாளரின் மாடலற் கூஉ
யிளங்கோ வேந்த ரிறந்ததற் பின்னா
வளங்கெழு நன்னாட்டு மன்னவன் கொற்றமொடு
செங்கோற் றன்மை தீதின் றோவென
வெங்கோ வேந்தே வாழ்கென் றேத்தி
மங்கல மறையோன் மாடல னுரைக்கும்
வெயில்விளங்கு மணிப்பூண் விண்ணவர் வியப்ப
வெயில்மூன் றெறிந்த விகல்வேற் கொற்றமுங்
குறுநடைப் புறவி னெடுந்துயர் தீர
வெறிதரு பருந்தி னிடும்பை நீங்க
வரிந்துடம் பிட்டோ னறந்தரு கோலுந்
திரிந்துவே றாகுங் காலமு முண்டோ

* முரஞ்சியவென்றும் பாடம்.

நீயோ வில்லைச் செல்லற் காலையுங்
காவிரி புரக்கு நாடுகிழ வோற்கென்
றருமறை முதல்வன் சொல்லக் கேட்டே
பெருமகன் மறையோற் பேணி யாங்கவற்
காடகப் பெருநிறை யையைந் திரட்டித்
தோடார் போந்தை வேலோன் றன்னிறை
மாடல மறையோன் கொள்கென் *றீத்தாங்
காரிய மன்னரை யிருபதின் மரைச்
சீர்கெழு நன்னாட்டுச் செல்கவென் றேவித்
தாபத வேடத் துயிருய்ந்து பிழைத்த
மாபெருந் தானை மன்ன குமரர்
சுருளிடு தாடி மருள்படு பூங்குழ
லரிபரந் தொழுகிய செழுங்கடை நெடுங்கண்
விரிவெண் டோட்டு வெண்ணகைத் துவர்வாய்ச்
சூடக வரிவளை யாடமைப் பணைத்தோள்
வளரிள வனமுலைத் தளரியன் மின்னிடைப்
பாடகச் சீறடி யாரியப் பேடியோ
டெஞ்சா மன்ன ரிறைமொழி மறுக்குங்
கஞ்சுக முதல்வ ரீரைஞ் ஞூற்றுவ
ரரியிற் போந்தை யருந்தமி ழாற்ற
லறியாது மலைந்த கனக விசயரை
யிருபெரு வேந்தர்க்குக் காட்டிட வேவித்
திருந்துதுயில் கொள்ளா வளவை யாங்கணும்
பரம்புநீர்க் கங்கைப் பழனப் பாசறைப்
பயிலிளந் தாமரைப் பல்வண்டி யாழ்செய
வெயிலிளஞ் செல்வன் விரிகதிர் பரப்பிக்
குணதிசைக் குன்றத் துயர்மிசைத் தோன்றக்
குடதிசை யாண்ட கொற்ற வேந்தன்
வடதிசைத் தும்பை வாகையொடு முடித்துத்
தென்றிசைப் பெயர்ந்த வென்றித் தானையொடு
நிதிதுஞ்சு வியனக ரீடுநிலை நிவந்து
கதிர்செல வொழித்த கனக மாளிகை
முத்துநிரைக் கொடித்தொடர் முழுவதும் வளைஇய
சித்திர விதானத்துச் செய்பூங் கைவினை

* இவ்வாறு தானஞ்செய்தல் மலைநாட்டரசர்களிடத்து இக்காலத்தும் நடைபெற்றுவருகின்றது; அது துலாபாரதானமென்று சொல்லப்படும்.

யிலங்கொளி மணிநிரை யிடையிடை வகுத்த
விலங்கொளி வயிரமொடு பொலந்தகடு போகிய
மடையமை செறிவின் வான்பொற் கட்டிற்
புடைதிர டமனியப் பொற்கா லமளிமிசை
யிணைபுண ரெகினத் திளமயிர் செறித்த
துணையணைப் பள்ளித் துயிலாற்றுப் படுத்தாங்
கெறிந்துகளங் கொண்ட வியறேர்க் கொற்ற
மறிந்துரை பயின்ற வாயச் செவிலியர்
தோட்டுணை துறந்த துயரீங் கொழிகெனப்
பாட்டொடு தொடுத்துப் பல்யாண்டு வாழ்த்தச்
சிறுகுறுங் கூனுங் குறளுஞ் சென்று
பெறுகநின் செவ்வி பெருமகன் வந்தா
னறுமலர்க் கூந்த றாளணி பெறுகென
வமைவிளை தேறன் மாந்திய கானவன்
கவண்விடு புடையூஉக் காவல கைவிட
வீங்குபுன முணீஇய வேண்டி வந்த
வோங்கியல் யானை தூங்குதுயி லெய்த
வாகை தும்பை வடதிசைச் சூடிய
வேக யானையின் வழியோ நீங்கெனத்
திறத்திறம் பகர்ந்து சேணோங் கிதணத்துக்
குறத்தியர் பாடிய குறிஞ்சிப் பாணியும்
வடதிசை மன்னர் மண்ணெயின் முருக்கிக்
கவடி வித்திய கழுதையே ருழவன்
குடவர் கோமான் வந்தா னாளைப்
படுநுகம் பூணாய் பகடே மன்னர்
ரடித்தளை நீக்கும் வெள்ளணி யாமெனுந்
தொடுப்பே ருழவ ரோதைப் பாணியுந்
தண்ணான் பொருநை யாடுந ரிட்ட
வண்ணமுஞ் சுண்ணமு மலரும் பரந்து
விண்ணுறை விற்போல் விளங்கிய பெருந்துறை
வண்டுளை மலர்ந்த மணித்தோட்டுக் குவளை
முண்டகக் கோதையொடு முடித்த குஞ்சியின்
முருகுவிரி தாமரை முழுமலர் தோயக்
குருகலர் தாழைக் கோட்டுமிசை யிருந்து
வில்லவன் வந்தான் வியன்பே ரிமயத்துப்
பல்லா னிரையொடு படர்குவிர் நீரெனக்

காவல னொருநாள் நீர்த்துறை படீஇக்
கோவல ரூதுங் குழலின் பாணியும்
வெண்டிரை பொருத வேலை வாலுகத்துக்
குண்டுநீ ரடைகரைக் குவையிரும் புன்னை
வலம்புரி யீன்ற நலம்புரி முத்தங்
கழங்காடு மகளி ரோதை யாயத்து
வழங்குதொடி முன்கை மலரேந்தி
வானவன் வந்தான் வளரிள வனமுலை
தோணல முணீஇய தும்பை போந்தையொடு
வஞ்சி பாடுது மடவீர் யாமெனு
மஞ்சொற் கிளவிய ரந்தீம் பாணியு
மோர்த்துட னிருந்த கோப்பெருந் தேவி
வால்வளை செறிய வலம்புரி வலனெழ
மாலைவெண் குடைக்கீழ் வாகைச் சென்னியன்
வேக யானையின் மீமிசைப் பொலிந்து
குஞ்சர வொழுகையிற் கோநக ரெதிர்கொள
வஞ்சியுட் புகுந்தனன் செங்குட் டுவனென்.

நீர்ப்படைக்காதை முற்றிற்று.

இருபத்தெட்டாவது

நடுகற் காதை.

தண்மதி யன்ன தமனிய நெடுங்குடை
மண்ணக நிழற்செய மறவா ளேந்திய
நிலந்தரு திருவி னெடியோன் றனாது
வலம்படு சிறப்பின் வஞ்சி மூதூ
ரொண்டொடித் தடக்கையி னொண்மலர்ப் பலிதூஉய்
வெண்டிரி விளக்க மேந்திய மகளி
ருலக மன்னவன் வாழ்கென் றேத்திப்
பலர்தொழ வந்த மலரவிழ் மாலை
போந்தைக் கண்ணிப் பொலம்பூந் தெரியல்
வேந்துவினை முடித்த வேந்துவாள் வலத்தா
யானை வெண்கோ டழுத்திய மார்பு
நீள்வேல் கிழித்த நெடும்புண் முகமு
மெய்க்கணை கிழித்த பகட்டெழி லகலமும்
வைவாள் கிழித்த மணிப்பூண் மார்பமு
மைம்மல ருண்கண் மடந்தைய ரடங்காக்
கொம்மை வரிமுலை வெம்மை வேதுறீஇ
யகிலுண விரிந்த வம்மென் கூந்தன்
முகிலுளை மதியத்து முரிகருஞ் சிலைக்கீழ்
மகரக் கொடியோன் மலர்க்கணை துரந்து
சிதரரி பரந்த செழுங்கடைத் தூது
மருந்து மாயதிம் மாலையென் றேத்த
விருங்கனித் துவர்வா யிளநிலா விரிப்பக்
கருங்கயல் பிறழுங் காமர் செவ்வியி
றிருந்தெயி றரும்பிய விருந்தின் மூரலு
மாந்தளிர் மேனி மடவோர் தம்மா
லேந்துபூண் மார்பி னிளையோர்க் களித்துக்
காசறைத் திலகக் கருங்கறை கிடந்த
மாசில்வாண் முகத்து வண்டொடு சுருண்ட
குழலுங் கோதையுங் கோலமுங் காண்மார்
நிழல்காண் மண்டிலந் தம்மெதிர் நிறுத்தி

வணர்கோட்டுச் சீறியாழ் வாங்குபு தழீஇப்
புணர்புரி நரம்பிற் பொருள்படு பத்தர்க்
குரல்குர லாக வருமுறைப் பாலையிற்
றுத்தங் குரலாத் தொன்முறை யியற்கையி
னந்தீங் குறிஞ்சி யகவன் மகளிரின்
மைந்தர்க் கோங்கிய வருவிருந் தயர்ந்து
முடிபுற முரிஞ்சுங் கழற்காற் குட்டுவன்
குடிபுறந் தருங்காற் றிருமுகம் போல
வுலகுதொழத் தோன்றிய மலர்கதிர் மதியம்
பலர்புகழ் மூதூர்க்குக் காட்டி நீங்க
மைந்தரு மகளிரும் வழிமொழி கேட்ப
வையங்காவலர் நெடுவே ளரசுவீற் றிருந்த
வெண்ணிலா முன்றிலும் வீழ்பூஞ் சேக்கையு
மண்ணீட் டரங்கமு மலர்ப்பூம பந்தரும்
வெண்கா லமளியும் விதானவே திகைகளுந்
தண்கதிர் மதியந் தான்கடி கொள்ளப்
படுதிரை சூழ்ந்த பயங்கெழு மாநிலத்
திடைநின் றோங்கிய நெடுநிலை மேருவிற்
கொடிமதின் மூதூர் நடுநின் றோங்கிய
தமனிய மாளிகைப் புனைமணி யரங்கின்
வதுவை வேண்மாண் மங்கல மடந்தை
மதியேர் வண்ணங் காணிய வருவழி
யெல்லவளை மகளி ரேந்திய விளக்கம்
பல்லாண் டேத்தப் பரந்தன வொருசார்
மண்கணை முழவும வணர்கோட் டியாழும்
பண்கனி பாடலும் பரந்தன வொருசார்
மான்மதச் சாந்தும் வரிவெண் சாந்து
கூறுங் குறைஞருங் கொண்டன வொருசார்
வண்ணமுஞ் சுண்ணமு மலர்பூம் பிணையலும்
பெண்ணணிப் பேடிய ரேந்தின ரொருசார்
பூவும் புகையு மேவிய விரையுந்
தூவியஞ் சேக்கை சூழ்ந்தன வொருசா
ராடியு மாடையு மணிதரு கலன்களுஞ்
சேடியர் செவ்வியி னேந்தின ரொருசா
ராங்கவ டன்னுடை யணிமணி யரங்கம்
வீங்குநீர் ஞால மாள்வோ னேறித்

திருநிலைச் சேவடிச் சிலம்புவாய் புலம்பவும்
பரிதரு செங்கையிற் படுபறை யார்ப்பவுஞ்
செங்க ணாயிரந் திருக்குறிப் பருளவுஞ்
செஞ்சடை சென்று திசைமுக மலம்பவும்
பாடகம் பதையாது சூடகந் துளங்காது
மேகலை யொலியாது மென்முலை யசையாது
வார்குழை யாடாது மணிக்குழ லவிழா
துமையவ ளொருதிற னாக வோங்கிய
விமையவ னாடிய கொட்டிச் சேதம்
பாத்தரு நால்வகை மறையோர் பறையூர்க்
கூத்தச் சாக்கைய னாடலின் மகிழ்ந்தவ
னேத்தி நீங்க விருநில மாள்வோன்
வேத்தியன் மண்டப மேவிய பின்னர்
நீலன் முதலிய கஞ்சுக மாக்கண்
மாடல மறையோன் றன்னொடுந் தோன்றி
வாயி லாளரின் மன்னவற் கிசைத்தபின்
கோயின் மாக்களிற் கொற்றவற் றொழுது
தும்பை வெம்போர்ச் சூழ்கழல் வேந்தே
செம்பியன் மூதூர்ச் சென்றுபுக் காங்கு
வச்சிர மவந்தி மகதமொடு குழீஇய
சித்திர மண்டபத் திருக்க வேந்த
னமரகத் துடைந்த வாரிய மன்னரொடு
தமரிற் சென்று தலையடி வணங்க
நீளம ரழுவத்து நெடும்பே ராண்மையொடு
வாளுங் குடையும் மறக்களத் தொழிந்துக்
கொல்லாக் கோலத் துயிருய்ந் தோரை
வெல்போர்க் கோடல் வெற்ற மன்றெனத்
தலைத்தேர்த் தானைத் தலைவற் குரைத்தனன்
சிலைத்தா ரகலத்துச் செம்பியர் பெருந்தகை
யாங்குநின் றகன்றபி னறக்கோல் வேந்தே
யோங்குசீர் மதுரை மன்னவற் காண
வாரிய மன்ன ரமர்க்களத் தெடுத்த
சீரியல் வெண்குடைக் காம்புநனி சிறந்த
சயந்தன் வடிவிற் றலைக்கோ லாங்குக
கயந்தலை யானையிற் கவிகையிற் காட்டி
யிமயச் சிமயத் திருங்குயி லாலுவத்

துமையொரு பாகத் தொருவனை வணங்கி
யமர்க்கள மரசன தாகத் துறந்து
தவப்பெருங் கோலங் கொண்டோர் தம்மேற்
கொதியழற் சீற்றங் கொண்டோன் கொற்றம்
புதுவ தென்றனன் போர்வேற் செழியனென்
றேனை மன்ன ரிருவருங் கூறிய
நன்மொழி யெல்லா நீலன் கூறத்
தாமரைச் செங்கண் டழனிறங் கொள்ளக்
கோமகன் றுறத்தலுங் குறையாக் கேள்வி
மாடல மறையோன் மன்னவர் மன்னே
வாழ்கநின் கொற்றம் வாழ்கவென் றேத்திக்
கறிவளர் சிலம்பிற் றுஞ்சுமி யானையிற்
சிறுகுர னெய்தல் *வியலூ ரெறிந்தபி
னாரிய னெதிரிய வொன்பது மன்னரை
நேரி வாயி னிலைச்செரு வென்று
நெடுந்தேர்த் தானையொ டிடும்பிற் புறத்திறுத்துக்
கொடும்போர் கடந்து நெடுங்கட லோட்டி
யுடன்றுமேல் வந்த வாரிய மன்னரைக்
கடும்புனற் கங்கைப் பேர்யாற்று வென்றோய்
நெடுந்தார் வேய்ந்த பெரும்படை வேந்தே
புரையோர் தம்மொடு பொருந்த வுணர்ந்த
வரைசே றேறே யமைகநின் சீற்ற
மன்னர் மன்னா வேந்தேநின் வாணாட்க
டண்ணான் பொருநை மணலினுஞ் சிறக்க
வகழ்கடன் ஞால மாள்வோய் வாழி
மிகுதியுற் றென்சொற் கேட்டல் வேண்டும்
வையங் காவல் பூண்டநின் னல்யாண்
டைஐயைந் திரட்டி சென்றதற் பின்னு
மறக்கள வேள்வி செய்யா தியாங்கணு
மறக்கள வேள்வி செய்வோ யாயினை
வேந்துவினை முடித்த வேந்துவாள் வலத்துப்
போந்தைக் கண்ணிநி னூங்கணோர் மருங்கு
கடற்கடம் பெறிந்த காவல னாயினும்
விடர்ச்சிலை பொறித்த விறலோ னாயினு

* வியலூரென்றும் பாடம்.

நான்மறை யாளன் செய்யுட் கொண்டு
மேனிலை யுலகம் விடுத்தோ னாயினும்
போற்றி மன்னுயிர் முறையிற் கொள்கெனக்
கூற்றுவரை நிறுத்த கொற்றவ னாயினும்
வன்சொல் யவனர் வளநா டாண்டு
பொன்படு நெடுவரை புகுந்தோ னாயினும்
மிகப்பெருந் தானையோ டிருஞ்செரு வோட்டி
யகப்பா வெறிந்த வருந்திற லாயினும்
முருகெழு மரபி னயிரை மண்ணி
யிருகட லாடி வந்தோ னாயினும்
சதுக்கப் பூதரை வஞ்சியுட் டந்து
மதுக்கொள் வேள்வி வேட்டோ னாயினும்
மீக்கூற் றாளர் யாவரு மின்மையின்
யாக்கை நில்லா தென்பதை யுணர்ந்தோய்
மல்லன்மா ஞாலத்து வாழ்வோ ரீங்கு
செல்வம் நில்லா தென்பதை வெல்போர்த்
தண்டமி ழிகழ்ந்த வாரிய மன்னரிற்
கண்டனை யல்லையோ காவல வேந்தே
யிளமை நில்லா தென்பதை [illegible]
குணாவுடை மக்க [illegible]
திருஞெமி ரகலத்துச் செங்கோல் வேந்தே
நரைமுதிர் யாக்கை நீயுங் கண்டனை
விண்ணோ ருருவி னெய்திய நல்லுயிர்
மண்ணோ ருருவின் மறிக்கினு மறிக்கும்
மக்கள் யாக்கை யுடையினு முடையும்
மிக்கோய் விலங்கி னெய்தினு மெய்தும்
விலங்கின் யாக்கை விலங்கிய வின்னுயிர்
கலங்கஞர் நரகரைக் காணினுங் காணும்
யாடுங் கூத்தர்போ லாருயி ரொருவழிக்
கூடிய கோலத் தொருங்குநின் றியலாது
செய்வினை வழித்தா யுயிர்செலு மென்பது
பொய்யில் காட்சியோர் பொருளுரை யாதலி
னெழுமுடி மார்பநீ யேந்திய தலைமேல்
வழிவழிச் சிறக்க வயவாள் வேந்தே
யரும்பொருட் பரிசிலே னல்லே னியானும்
பெரும்பே ரியாக்கை பெற்ற நல்லுயிர்

மலர்தலை யுலகத் துயிர்போகு பொதுநெறி
புலவரை யிறந்தோய் போகுதல் பொறேஅன்
வானவர் போற்ற வழிநினக் களிக்கு
நான்மறை மருங்கின் வேள்விப் பார்ப்பா
னருமறை மருங்கி னரசர்க் கோங்கிய
பெருநல் வேள்விநீ செயல்வேண்டு
நாளைச் செய்குவ மறமெனி னின்றே
கேள்வி நல்லுயிர் நீங்கினு நீங்கு
மிதுவென வரைந்து வாழுநா ளுணர்ந்தோர்
முதுநீ ருலகின் முழுவது மில்லை
வேள்விக் கிழத்தி யிவளொடுங் கூடித்
தாழ்கழன் மன்னர்நின் னடிபோற்ற
வூழிதோ றூழி யுலகங் காத்து
நீவா ழியரோ நெடுந்தகை யென்று
மறையோன் மறைநா வுழுது வான்பொரு
ளிறையோன் செவிசெறு வாக வித்தலின்
வித்திய பெருநலம் விளைந்துபத மிகுத்துத்
துய்த்தல் வேட்கையிற் சூழ்கழல் வேந்தன்
நான்மறை மரபி னாயம்பெற் றமைந்த
கேள்வி முடித்த வேள்வி மாக்களை
மாடல மறையோன் சொல்லிய முறைமையின்
வேள்விச் சாந்தியின் விழாக்கொள வேவி
யாரிய வரசரை யருஞ்சிறை நீக்கிப்
பேரிசை வஞ்சி மூதூர்ப் புறத்துத்
தாழ்நீர் வேலித் தண்மலர்ப் பூம்பொழில்
வேளா விக்கோ மாளிகை காட்டி
நன்பெரு வேள்வி முடித்ததற் பின்னாட்
டமர்பெருஞ் செங்கோ லரசர் சார்வதுஞ் சொல்லியம
மன்னவர்க் கேற்பன செய்க நீயென
வில்லவன் கோதையை விருப்புட னேவிச்
சிறப்போர் கோட்டஞ் சீறினர் பாகசனுய
கறைகெழு நல்லூர்க் கறைவீடு செய்ம்மென
வழும்பில வேளோ டாயக் கணக்கரை
முழுங்குறா வேலி முற்றுறா ரேவி
யருந்திற லரசர் முறைசெயி னல்லது
பெரும்பெயர்ப் பெண்டிர்க்குக் கற்புச் சிறவாதெனப்

பண்டையோ ருரைத்த தண்டமிழ் நல்லுரை
பார்தொழு தேத்தும் பத்தினி யாகலின்
ஆர்புனை சென்னி யரசற் களித்துச்
செங்கோல் வளைய வுயிர்வா ழாமைத்
தென்புலங் காவல் மன்னவற் களித்து
வஞ்சினம் வாய்த்தபி னல்லது யாவதும்
வெஞ்சினம் விளியார் வேந்த ரென்பதை
வடதிசை மருங்கின் மன்னவ ரறியக்
குடதிசை வாழுங் கொற்றவற் களித்து
மதுரை மூதூர் மாநகர் கேடுறக்
கொதியழற் சீற்றங் கொங்கையின் விளைத்து
நன்னா டணைந்து நளிர்சினை வேங்கைப்
பொன்னணி புதுநிழற் பொருந்திய நங்கையை
யறக்களத் தந்தண ராசான் பெருங்கணி
சிறப்புடைக் கம்மியர் தம்மொடுஞ் சென்று
மேலோர் விழைய நூனெறி மாக்கள்
பால்பெற வகுத்த பத்தினிக் கோட்டத்
திமையவ ருறையு மிமையச் செவ்வரைச்
சிமையச் சென்னித் தெய்வம் பரசிக்
கைவினை முற்றிய தெய்வப் படிமத்து
வித்தக ரியற்றிய விளங்கிய கோலத்து
முற்றிழை நன்கல முழுவதும் பூட்டிப்
பூப்பலி செய்து காப்புக்கடை நிறுத்தி
வேள்வியும் விழாவும் நாடொறும் வகுத்துக்
கடவுண் மங்கலஞ் செய்கென வேவினன்
வடதிசை வணங்கிய வானவர் பெருந்தகை.

நடுகற்காதை முற்றிற்று.

இருபத்தொன்பதாவது

வாழ்த்துக்காதை.

உரைப்பாட்டு மடை.

குமரியொடு வடவிமயத் தொருமொழிவைத் துலகாண்ட சேரலாதற்குத் திகழொளிஞாயிற்றுச் சோழன்மக ளீன்றமைந்தன் கொங்கர் செங்களம்வேட்டுக் கங்கைப்பேர்யாற்றுக் கரைபோகிய செங்குட்டுவன் சினஞ்செருக்கி வஞ்சியுள்வந் திருந்தகாலை வடவாரிய மன்னராங்கோர் மடவரல் மாலைசூட்டி யுடனுறைந்த விருக்கைதன்னி லொன்றுமொழி நகையினராய்த் தென்றமிழ்நா டாளும்வேந்தர் செருவேட்டுப் புகன்றெழுந்து மின்றவழு மிமயநெற்றியில் விளங்குவிற்புலி கயல்பொறித்தநா ளெம்போலு முடிமன்னரீங் கில்லைபோலு மென்றவார்த்தை யங்குவாழு மாதவர்வந் தறிவுறுத்த விடத்தாங்க ணுருள்கின்ற மணிவட்டைக் குணில்கொண்டு துரந்ததுபோ லிமயமால்வரைக் கற்கடவுளா மென்ற வார்த்தை யிடந்துரப்ப வாரியநாட் டரசோட்டி யவர்முடித்தலை யணங்காகிய பத்தினிக் கற்சுமத்திப் பெயர்ந்துபோந்து நயந்தகொள்கையிற் கங்கைப்பேர் யாற்றிருந்து நங்கைதன்னை நீர்ப்படுத்தி வெஞ்சினந்தரு வெம்மைநீங்கி வஞ்சிமா நகர்புகுந்து நிலவரசர் நீண்முடியாற் பலர்தொழு படிமங்காட்டித் தடமுலைப் பூசலாட்டியைக் கடவுண்மங்கலஞ் செய்தபின்னாட் கண்ணகிதன்கோட்டத்து மன்னவரசர் திறைகேட்புழி யலம்வந்த மதிமுகத்திற் சில்செங்கய லருவிமுகப் பொடியாடிய கருமுகி றன் புறமுதுகு வண்ணமழித்துக் கோவலன்றன் வினையுருத்துக் குறுமகனாற் கொலையுண்ணக் காவலன்ற னிடஞ்சென்ற கண்ணகிதன் கண்ணீர்கண்டு மண்ணரசர் பெருந்தோன்ற லுண்ணீரற் றுயிரிழந்தமை மாமறையோன் வாயக்கேட்டு மாசாத்துவான் றான்றுறப்பவு மனைக்கிழத்தி யுயிரிழப்பவு மெனைப்பெருந் துன்பமெய்திக் காவற்பெண்டு மடித்தோழியுங் கடவுட்சாத்த னுடனுறைந்த தேவந்தியு முடன்கூடிச் சேயிழையைக் காண்டுமென்று மதுரைமா நகர்புகுந்து முதிராமுலைப் பூசல் கேட்டாங் கடைக்கலமிழந் துயிரிழந்த விடைக்குலமக ளிடமெய்தி யையையவள் மகளோடும் வையையொரு வழிக்கொண்டு மாமலைமீ மிசையேறிக் கோமகடன் கோயில்புக்கு நங்கைக்குச் சிறப்பயர்ந்த செங்குட்டுவற்குத் திறமுரைப்பார்மன்.

தேவந்திசொல்

முடிமன்னர் மூவருங் காத்தோம்புந் தெய்வ
வடபே ரிமய மலையிற் பிறந்து
கடுவரற் கங்கைப் புனலாடிப் போந்த
தொடிவளைத் தோளிக்குத் தோழிநான் கண்டீர்
சோணாட்டார் பாவைக்குத் தோழிநான் கண்டீர்

காவற்பெண்டுசொல்

மடம்படு சாயலாள் மாதவி தன்னைக்
கடம்படாள் காதற் கணவன்கைப் பற்றிக்
குடம்புகாக் கூவற் கொடுங்கானம் போந்த
தடம்பெருங் கண்ணிக்குத் தாயர்நான் கண்டீர்
தண்புகார்ப் பாவைக்குத் தாயர்நான் கண்டீர்

அடித்தோழிசொல்

தற்பயந்தாட் கில்லைத் தன்னைப் புறங்காத்த
வெற்பயந் தாட்கு மெனக்குமோர் சொல்லில்லைக்
கற்புக் கடம்பூண்டு காதலன் பின்போந்த
பொற்றொடி நங்கைக்குத் தோழிநான் கண்டீர்
பூம்புகார்ப் பாவைக்குத் தோழிநான் கண்டீர்

தேவந்தியரற்று

செய்தவ மில்லாதேன் தீக்கனாக் கேட்டநாள்
ளெய்த வுணரா திருந்தேன்மற் றென்செய்தேன்
மொய்குழன் மங்கை முலைப்பூசல் கேட்டநாள்
ளவ்வை யுயிர்வீவுங் கேட்டாயோ தோழீ
யம்மாமி தன்வீவுங் கேட்டாயோ தோழீ

காவற்பெண்டரற்று

கோவலன் றன்னைக் குறுமகன் கோளிழைப்பக்
காவலன் றன்னுயிர் நீத்ததுதான் கேட்டேங்கிச்
சாவதுதான் வாழ்வென்று தானம் பலசெய்து
மாசாத்து வான்றுறவுங் கேட்டாயோ வன்னை
மாநாய்கன் றன்றுறவுங் கேட்டாயோ வன்னை

அடித்தோழியரற்று

காதலன் றன்வீவுங் காதலிநீ பட்டதூஉம்
மேதிலார் தாங்கூறு மேச்சுரையுங் கேட்டேங்கிப்

போதியின்கீழ் மாதவர்முன் புண்ணியதா னம்புரிந்த
மாதவி தன்துறவுங் கேட்டாயோ தோழீ
மணிமே கலைதுறவுங் கேட்டாயோ தோழீ

தேவந்தி ஐயையைக்காட்டியரற்றியது

ஐயந்தீர் காட்சி யடைக்கலங் காத்தோம்ப
வல்லாதேன் பெற்றேன் மயலென் றுயிர்நீத்த
அவ்வை மகளிவடா னம்மணம் பட்டிலா
வையெயிற் றையையைக் கண்டாயோ தோழீ
மாமி மடமகளைக் கண்டாயோ தோழீ

செங்குட்டுவன் கூற்று

என்னேயி தென்னேயி தென்னேயி தென்னேகொல்
பொன்னஞ் சிலம்பிற் புனைமே கலைவளைக்கை
நல்வயிரப் பொற்றோட்டு நாவலம் பொன்னிழைசேர்
மின்னுக் கொடியொன்று மீவிசும்பிற் றோன்றுமால்

செங்குட்டுவற்குக்
கண்ணகியார் கடவுணல்லணிகாட்டியது

தென்னவன் றீதிலன் தேவர்கோன் றன்கோயில்
நல்விருந் தாயினா னானவன் றன்மகள்
வென்வேலான் குன்றில் விளையாட்டி யானகலேன்
என்னோடு தோழிமீ ரெல்லீரும் வம்மெல்லாம்

வஞ்சிமகளிர்சொல்

வஞ்சியீர் வஞ்சி யிடையீர் மறவேலான்
பஞ்சடி யாயத் தவரெல்லாம் வம்மெல்லாம்
கொங்கையாற் கூடற் பதிசிதைத்துக் கோவேந்தைச்
செஞ்சிலம்பால் வென்றாளைப் பாடுதும் வம்மெல்லாம்
தென்னவன் றன்மகளைப் பாடுதும் வம்மெல்லாம்
செங்கோல் வளைய வுயிர்வாழார் பாண்டியரென்
றெங்கோ முறைநா வியம்பவிந் நாடடைந்த
பைந்தொடிப் பாவையைப் பாடுதும் வம்மெல்லாம்
பாண்டியன் றன்மகளைப் பாடுதும் வம்மெல்லாம்

ஆயத்தார்சொல்

*வானவ னெங்கோ மகளென்றாம் வையையார்
கோமகன் றன்பெற்ற கொடியென்றாள் - வானவனை

* இவ்வெண்பா, சிலபிரதிகளிற் காணப்படவில்லை.

வாழ்த்துவோ மாமாக வையையார் கோமானை
வாழ்த்துவார் தேவ மகள்

வாழ்த்து

தொல்லை வினையாற் றுயருழந்தாள் கண்ணினீர்
கொல்ல வுயிர்கொடுத்த கோவேந்தன் வாழியரோ
வாழியரோ வாழி வருபுனனீர் வையை
சூழு மதுரையார் கோமான்றன் றொல்குலமே

மலையரையன் பெற்ற மடப்பாவை தன்னை
நிலவரசர் நீண்முடிமே லேற்றினான் வாழியரோ
வாழியரோ வாழி வருபுனனீர்த் தண்பொருநை
சூழ்தரும் வஞ்சியார் கோமான்றன் றொல்குலமே

எல்லாநாம்
காவிரி நாடனைப் பாடுதும் பாடுதும்
பூவிரி கூந்தல் புகார்

அம்மானைவரி

வீங்குநீர் வேலி யுலகாண்டு விண்ணவர்கோ
னோங்கரணங் காத்த வுரவோன்யா ரம்மானை
யோங்கரணங் காத்த வுரவோ னுயர்விசும்பிற்
றூங்கெயின் மூன்றெறிந்த சோழன்கா ணம்மானை
சோழன் புகார்நகரம் பாடேலோ ரம்மானை

புறவுநிறை புக்குப் பொன்னுலக மேத்தக்
குறைவி லுடம்பரிந்த கொற்றவன்யா ரம்மானை
குறைவி லுடம்பரிந்த கொற்றவன்முன் வந்த
கறவை முறைசெய்த காவலன்கா ணம்மானை
காவலன் பூம்புகார் பாடேலோ ரம்மானை

கடவரைக ளோரெட்டுங் கண்ணிமையா காண
வடவரைமேல் வாள்வேங்கை யொற்றினன்யா ரம்மானை
வடவரைமேல் வாள்வேங்கை யொற்றினன் றிக்கெட்டுங்
குடைநிழலிற் கொண்டளித்த கொற்றவன்கா ணம்மானை
கொற்றவன்றன் பூம்புகார் பாடேலோ ரம்மானை

அம்மனை தங்கையிற் கொண்டங் கணியிழையார்
தம்மனையிற் பாடுந் தகையேலோ ரம்மானை
தம்மனையிற் பாடுந் தகையெலாந் தார்வேந்தன்

கொம்மை வரிமுலைமேற் கூடவே யம்மானை
கொம்மை வரிமுலைமேற் கூடிற் குலவேந்த
னம்மென் புகாரநகரம் பாடேலோ ரம்மானை

கந்துகவரி

பொன்னிலங்கு பூங்கொடி பொலஞ்செய்கோதை வில்லிட
மின்னிலங்கு மேகலைக ளார்ப்பவார்ப்ப வெங்கணுந்
தென்னன்வாழ்க வாழ்கவென்று சென்றுபந்த டித்துமே
தேவரார மார்பன்வாழ்க வென்றுபந்த டித்துமே

பின்னுமுன்னு மெங்கணும் பெயர்ந்துவந்தெ ழுந்துலாய்
மின்னுமின் னிளங்கொடி வியனிலத் திழிந்தெனத்
தென்னன்வாழ்க வாழ்கவென்று சென்றுபந்த டித்துமே
தேவரார மார்பன்வாழ்க வென்றுபந்த டித்துமே

துன்னிவந்து கைத்தலத் திருந்ததில்லை நீணிலந்
தன்னினின்று மந்தரத் தெழுந்ததில்லை தானெனத்
தென்னன்வாழ்க வாழ்கவென்று சென்றுபந்த டித்துமே
தேவரார மார்பன்வாழ்க வென்றுபந்த டித்துமே

ஊசல்வரி

வடங்கொண் மணியூசன் மேலிரீஇ ஐயை
யுடங்கொருவர் கைநிமிர்த்தாங் கொற்றைமே லூக்கக்
கடம்பு முதறடிந்த காவலனைப் பாடிக்
குடங்கைநெடுங் கண்பிறழ வாடாமோ வூசல்
கொடுவிற் பொறிபாடி யாடாமோ வூசல்

ஓரைவ ரீரைம் பதின்ம ருடன்றெழுந்த
போரிற் பெருஞ்சோறு போற்றாது தானளித்த
சேரன் பொறையன் மலையன் திறம்பாடிக்
காரசெய் குழலாட வாடாமோ வூசல்
கடம்பெறிந்த வாபாடி யாடாமோ வூசல்

வன்சொல் யவனர் வளநாடு வன்பெருங்கற்
றென்குமரி யாண்ட செருவிற் கயற்புலியான்
மன்பதைகாக்குங் கோமான் மன்னன் றிறம்பாடி
மின்செய் யிடைநுடங்க வாடாமோ வூசல்
விறல்விற் பொறிபாடி யாடாமோ வூசல்

வள்ளைப்பாட்டு

தீங்கரும்பு நல்லுலக்கை யாகச் செழுமுத்தம்
பூங்காஞ்சி நீழ லவைப்பார் புகார்மகளி
ராழிக் கொடித்திண்டேர்ச் செம்பியன் வம்பலர்த்தாப்
பாழித் தடவரைத்தோட் பாடலே பாடல்
பாவைமா ராரிக்கும் பாடலே பாடல்

பாடல்சால் முத்தம் பவழ வுலக்கையான்
மாட மதுரை மகளிர் குறுவரே
வானவர்கோ னாரம் வயங்கியதோட் பஞ்சவன்றன்
மீனக் கொடிபாடும் பாடலே பாடல்
வேப்பந்தார் நெஞ்சுணக்கும் பாடலே பாடல்

சந்துரற் பெய்து தகைசா லணிமுத்தம்
வஞ்சி மகளிர் குறுவரே வான்கோட்டாற்
கடந்தடுதார்ச் சேரன் கடம்பெறிந்த வார்த்தை
படர்ந்த நிலம்போர்த்த பாடலே பாடல்
பனந்தோ டுளங்கவரும் பாடலே பாடல்

ஆங்கு, நீணில மன்னர் நெடுவிற் பொறையனற்
றாடொழுதார் வாழ்த்த நமக்கரிது சூழொளிய
வெங்கோ டடங்கையு மேத்தி[illegible]
செங்குட் டுவன்வாழ்க வென்று. *

வாழ்த்துக்காதை முற்றிற்று.

* பத்தினிக்கடவுள், நெடுஞ்செழியனையும் பெருங்கிள்ளியையும் வாழ்த்தியதாக இளங்கோவடிகள் கூறியபாடல்கள் கையெழுத்துப்பிரதிகளிற் காணப்படவில்லை.

முப்பதாவது

வரந்தருகாதை.

வடதிசை வணங்கிய வானவர் பெருந்தகை
கடவுட் கோலங் கட்புலம் புக்கபின்
தேவந் திகையைச் செவ்விதி னோக்கி
வாயெடுத் தரற்றிய மணிமே கலையார்
யாதவ டுறத்தற் கேதுவீங் குரையெனக்
கோமகன் கொற்றங் குறைவின் றோங்கி
நாடு பெருவளஞ் சுரக்கவென் றேத்தி
யணிமே கலையா ராயத் தோங்கிய
மணிமே கலைதன் வான்றுற வுரைக்கு
மையரி ரோதி வகைபெறு வனப்பி
னைவகை வகுக்கும் பருவங் கொண்டது
செவ்வரி யொழுகிய செழுங்கடை மழைக்க
ணவ்விய மறிந்தன வதுதா னறிந்திலை
ளொத்தொளிர் பவளத் துளவொளி சிறந்த
நித்தில விளநகை நிரம்பா வளவின
புணர்முலை விழுந்தன புல்லக மகன்றது
தளரிடை நுணுகலு நகையல்குல் பரந்தது
குறங்கிணை திரண்டன கோலம் பொறாஅ
நிறங்கிளர் சீறடி செய்யதோய் தளிரின
தலைக்கோ லாசான் பின்னுள னாகக்
குலத்தலை மாக்கள் கொள்கையிற் கொள்ளார்
யாது நின் கருத்தென் செய்கோ வென
மாதவி நற்றாய் மாதவிக் குரைப்ப
வருகவென் மடமகள் மணிமே கலையென்
றுருவி லாள னொருபெருஞ் சிலையொடு
விரைமலர் வாளி வெறுநிலத் தெறியக்
கோதைத் தாமங் குழலொடு களைந்து
போதித் தானம் புரிந்தறம் படுத்தனள்
ஆங்கது கேட்ட வரசனு நகரமு

மோங்கிய நன்மணி யுறுகடல் வீழ்த்தோர்
தம்மிற் றுன்பந் தாநனி யெய்தச்
செம்மொழி மாதவர் சேயிழை நங்கை
தன்றுற வெமக்குச் சாற்றின ளென்றே
யன்புறு நன்மொழி யருளொடுங் கூடினா
பருவ மன்றியும் பைந்தொடி நங்கை
திருவிழை கோல நீங்கின ளாதலி
னரற்றின னென்றாங் கரசற் குரைத்தபிற்
குரற்றலைக் கூந்தல் குலைந்துபின் வீழத்
துடித்தனள் புருவந் துவரிதழ்ச் செவ்வாய்
மடித்தெயி றரும்பினள் வருமொழி மயங்கின
டிருமுகம் வியர்த்தனள் செங்கண் சிவந்தனள்
கைவிட் டோச்சினள் கால்பெயர்த் தெழுந்தனள்
பலரறி வாராத் தெருட்சியண் மருட்சிய
ளுலறிய நாவின ளுயர்மொழி கூறித்
தெய்வமுற் றெழுந்த தேவந் திகைதான்
கொய்தளிர்க் குறிஞ்சிக் கோமான் றன்முன்
கடவுண் மங்கலங் காணிய வந்த
மடமொழி நல்லார் மாணிழை யோரு
ளரட்டன் செட்டிதன் னாயிழை பயந்த
விரட்டையம் பெண்க ளிருவரு மன்றியு
மாடக மாடத் தரவணைக் கிடந்தோன்
சேடக் குடும்பியின் சிறுமக ளீங்குளள்
மங்கல மடந்தை கோட்டத் தாங்கட்
செங்கோட் டுயர்வரைச் சேணுயர் சிலம்பிற்
பிணிமுக நெடுங்கற் பிடர்த்தலை நிரம்பிய
வணிகயம் பலவுள வாங்கவை யிடையது
கடிப்பகை நுண்கலுங் கவிரிதழ்க் குறுங்கலு
மிடிக்கலப் பன்ன விழைந்துகு நீரு
முண்டோர் சுனையத னுட்புக் காடினர்
பண்டைப் பிறவிய ராகுவ ராதலி
னாங்கது கொணர்ந்தாங் காயிழை கோட்டத்
தோங்கிருங் கோட்டி யிருந்தோ யுன்கைக்
குறிக்கோ டகையது கொள்கெனத் தந்தே
யுறித்தாழ் கரகமு முன்கைய தன்றோ.
கதிரொழி காறுங் கடவுட் டன்மை

முதிரா தந்நீர் முதிரா மகளிரைத்
தெளித்தனை யாட்டினிச் சிறுகுறு மகளி
ரொளித்த பிறப்பின ராகுவர் காணாய்
பாசண் டன்யான் பார்ப்பனி தன்மேன்
மாடல மறையோன் வந்தே னென்றலு
மன்னவன் விம்மித மெய்தியம் மாடலன்
றன்முக நோக்கலுந் தானனி மகிழ்ந்து
கேளிது மன்னா கெடுகநின் றீயது
மாலதி யென்பாண் மாற்றாள் குழவியைப்
பால்சுரந் தூட்டப் பழவினை யுருத்துக்
கூற்றுயிர் கொள்ளக் குழவிக் கிரங்கி
யாற்றாத் தன்மைய ளாரஞ ரெய்திப்
பாசண் டன்பாற் பாடு கிடந்தாட்
காசில் குழவி யதன்வடி வாகி
வந்தன னன்னைநீ வான்றுய ரொழிகெனச்
செந்திறம் புரிந்தோன் செல்ல னீக்கிப்
பார்ப்பனி தன்னொடு பண்டைத் தாய்பாற்
காப்பிய தொல்குடிக் கவின்பெற வளர்ந்து
தேவந் திகையைத் தீவலஞ் செய்து
நாலீ ராண்டு நடந்ததற் பின்னர்
மூவா விளநலங் காட்டியென் கோட்டத்து
நீவா வென்றே நீங்கிய சாத்தன்
மங்கல மடந்தை கோட்டத் தாங்க
ணங்குறை மறையோ னாகத் தோன்றி
யுறித்தாழ் கரகமு மென்கைத் தந்து
குறிக்கோள் கூறிப் போயினன் வாரா
தங்கது கொண்டு போந்தே னாதலி
னீங்கிம் மறையோன் றன்மேற் றோன்றி
யந்நீர் தெளியென் றறிந்தோன் கூறினன
மன்னர் கோவே மடந்தையர் தம்மேற்
றெளித்திங் கறிகுவ மென்றவன் றெளிப்ப
வொளித்த பிறப்புவந் துற்றதை யாதலிற்
புகழ்ந்த காதலன் போற்றா வொழுக்கி
னிகழ்ந்ததற் கிரங்கு மென்னையு நோக்கா
யேதில னாட்டி யாருமி லொருதனிக்
காதலன் றன்னொடு கடுந்துய ருழந்தா

யான்பெறு மகளே, யென்றுணைத் தோழி
வான்றுயர் நீக்கு மாதே வாரா
யென்றே னிருந்த விலங்கிழை நங்கை
தனரோ டிடையிருட் டனித்துய ருழந்து
போனதற் கிரங்கிப் புலம்புறு நெஞ்சும்
யானது பொறேஎ னென்மகன் வாராய்
வருபுனல் வையை வான்றுறைப் பெயர்ந்தே
னுருகெழு மூதூ ரூர்க்குறு மாக்களின்
வந்தேன் கேட்டேன் மனையிற் காணே
னெந்தா யிளையா யெங்கொளித் தாயோ
வென்றுங் கரறி யினைந்தினைந் தேங்கிப்
பொன்றா முகலத்துப் போவெய் யோன்முன்
குதலைச் செவ்வாய்க் குறுந்தொடி மகளிர்
முதியோர் மொழியின் முன்றி னின்றழத்
தோடலர் போந்தைத் தொடுகழல் வேந்தன்
மாடல மறையோன் றன்முக நோக்க
மன்னர் கோவே வாழ்கென் றேத்தி
முந்நூல் மார்பன் முன்னிய துணைப்போன்
மறையோ னுற்ற வான்றுயர் நீங்க
வுறைகவுள் வேழக் கையகம் புக்கு
வானோர் வடிவம் பெற்றவன் பெற்ற
காதலி தன்மேற் காதல ராதலின்
மேனிலை யுலகத் தவருடன் போகுந்
தாவா நல்லறஞ் செய்தில ரதனா
லருசெரு சாய லருகா தணுகும்
வஞ்சி மூதூர் மாநகர் மருங்கிற்
பொற்கொடி தன்மேற் பொருந்திய காதலி
னறபுளஞ் சிறந்தாங் கரட்டன் செட்டி
மடமொழி நல்லாண் மனமகிழ் சிறப்பி
னுடன்வயிற் றோரா யொருங்குடன் றோன்றின
ராயர் முதுமக ளாயிழை தன்மேற்
போய பிறப்பிற் பொருந்திய காதலி
னாடிய குரவையி னரவணைக் கிடந்தோன்
சேடக் குடும்பியின் சிறுமக ளாயினண்
ணற்றிறம் புரிந்தோர் பொற்படி யெய்தலு
மற்புளஞ் சிறந்தோர் பற்றுவழிச் சேறலு

மறப்பயன் விளைதலு மறப்பயன் விளைதலும்
பிறந்தவ ரிறத்தலு மிறந்தவர் பிறத்தலும்
புதுவ தன்றே தொன்றியல் வாழ்க்கை
யானே றூர்ந்தோ னருளிற் றோன்றி
மாநிலம் விளக்கிய மன்னவ னாதலிற்
செய்தவப் பயன்களுஞ் சிறந்தோர் படிவமுங்
கையகத் தனபோற கண்டனை யன்றே
யூழிதோ றூழி யுலகங் காத்து
நீடுவா ழியரோ நெடுந்தகை யென்ற
மாடல மறையோன் றன்னொடு மகிழ்ந்து
பாடல்சால் சிறப்பிற் பாண்டிநன் னாட்டுக்
கலிகெழு கூடல் கதழெரி மண்ட
முலைமுகந் திருகிய மூவா மேனிப்
பத்தினிக் கோட்டப் படிப்புறம் வகுத்து
நித்தல் விழாவணி நிகழ்கென் றேவிப்
பூவும் புகையு மேவிய விரையுந்
தேவந் திகையைச் செய்கென் றருளி
வலமுறை மும்முறை வந்தனன் வணங்கி
யுலக மன்னவ னின்றோன் முன்ன
ரருஞ்சிறை நீங்கிய வாரிய மன்னரும்
பெருஞ்சிறைக் கோட்டம் பிரிந்த மன்னருங்
குடகக் கொங்கரு மாளுவ வேந்தருங்
கடல்சூ ழிலங்கைக் கயவாகு வேந்தனு
மெந்நாட் டாங்க ணிமைய வரம்பனி
னன்னாட் செய்த நாளணி வேள்வியுள்
வந்தீ கென்றே வணங்கினர் வேண்டத்
தந்தேன் வரமென் றெழுந்த தோர்குர
லாங்கது கேட்ட வரசனு மரசரு
மோங்கிருந் தானையு முறையோ டேத்த
வீடுகண் டவர்போன் மெய்ந்நெறி விரும்பிய
மாடல மறையோன் றன்னொடுங் கூடித்
தாழ்கழன் மன்னர் தன்னடி போற்ற
வேள்விச் சாலையின் வேந்தன் பெயர்ந்தபி
னியானுஞ் சென்றே னென்னெதி ரெழுந்து
தேவந் திகைமேற் றிகழ்ந்து தோன்றி
வஞ்சி மூதூர் மணிமண் டபத்திடை

நுந்தை தாணிழ லிருந்தோய் நின்னை
யரசுவீற் றிருக்குந் திருப்பொறி யுண்டென்
றுரைசெய் தவன்மே லுருத்து நோக்கிக்
கொங்கவிழ் நறுந்தார்க் கொடித்தேர்த் தானைச்
செங்குட் டுவன்றன் செல்ல னீங்கப்
பக்கல் செல்வாயிற் படியோர் தம்மு
னகலிடப் பார மகல நீக்கிச்
சிந்தை செல்லாச் சேணெடுந் தூரத்
தந்தமி லின்பத் தரசாள் வேந்தென்
றொன்றிற முரைத்த விமையோ ரிளங்கொடி
தன்றிற முரைத்த தகைசா னன்மொழி
தெரிவுறக் கேட்ட திருத்தகு நல்லீர்
பரிவு மிடுக்கணும் பாங்குற நீங்குமின்
றெய்வந் தெளிமின் றெளிந்தோர்ப் பேணுமின்
பொய்யுரை யஞ்சுமின் புறஞ்சொற் போற்றுமி
னூனூண் டுறமி னுயிர்க்கொலை நீங்குமின்
றானஞ் செய்ம்மின் றவம்பல தாங்குமின்
செய்ந்நன்றி கொல்லன்மின் றீநட் பிகழ்மின்
பொய்க்கரி போகன்மின் பொருண்மொழி நீங்கன்மி
னறவோ ரவைக்கள மகலா தணுகுமின்
பிறவோ ரவைக்களம் பிழைத்துப் பெயர்மின்
பிறர்மனை யஞ்சுமின் பிழையுயி ரோம்புமி
னறமனை காமி னல்லவை கடிமின்
கள்ளுங் களவுங் காமமும் பொய்யும்
வெள்ளைக் கோட்டியும் விரகினி லொழிமி
னிளமையுஞ் செல்வமும் யாக்கையு நிலையா
வுளநாள் வரையா தொல்லுவ தொழியாது
செல்லுந் தேஎத்துக் குறுதுணை தேடுமின்
மல்லன்மா ஞாலத்து வாழ்வீ ரீங்கென.

கட்டுரை.

முடியுடை வேந்தர் மூவ ருள்ளுங்
குடதிசை யாளுங் கொற்றங் குன்றா
வார மார்பிற் சேரர்குலத் துதித்தோ
ரறனு மறனு மாற்றலு மவாதம்

பழவிறன் மூதூர்ப் பண்புமேம் படுதலும்
விழவுமலி சிறப்பும் வானவர் வரவு
மொழியா வின்பத் தவருடை நாட்டுக்
குடியின் செல்வமுங் கூழின் பெருக்கமும்
வரியுங் குரவையும் விரவிய கொள்கையிற்
புறத்துறை மருங்கி னறத்தொடு பொருந்திய
மறத்துறை முடித்த வாய்வாட் டானையொடு
பொங்கிரும் பரப்பிற் கடல்பிறக் கோட்டிக்
கங்கைப் பேர்யாற்றுக் கரை போகிய
செங்குட் டுவனோ டொருபரிசு நோக்கிக்
கிடந்த வஞ்சிக் காண்ட முற்றிற்று.

வஞ்சிக்காண்டம் முற்றிற்று.

கட்டுரை.

குமரி வேங்கடங் குணகுட கடலா
மண்டிணி மருங்கிற் றண்டமிழ் வரைப்பிற்
செந்தமிழ் கொடுந்தமி ழென்றிரு பகுதியி
னைந்திணை மருங்கி னறம்பொரு ளின்ப
மக்கள் தேவ ரெனவிரு சார்க்கு
மொத்த மரபிற் றொழுக்கொடு புணர
வெழுத்தொடு புணர்ந்தசொல் லகத்தெழு பொருளை
யிழுக்கா யாப்பி னகனும் புறனு
மவற்று வழிப்படூஉஞ் செவ்விசிறந் தோங்கிய
பாடலு மெழாலும் பண்ணும் பாணியு
மரங்கு விலக்கே யாடலென் றனைத்து
மொருங்குடன் றழீஇ யுடம்படக் கிடந்த
வரியுங் குரவையுஞ் சேதமு மென்றிவை
தெரிவுறு வகையாற் செந்தமி ழியற்கையி
லாடிநன் னிழலி னீடிருங் குன்றங்
காட்டு வார்போற் கருத்துவெளிப் படுத்து
மணிமே கலைமே லுரைப்பொருண் முற்றிய
சிலப்பதிகார முற்றும்.

சிலப்பதிகாரம் முற்றிற்று.

உ

கணபதி துணை.

சிலப்பதிகார அரும்பதவுரை.

இது

கும்பகோணம் காலேஜ் தமிழ்ப்பண்டிதராகிய

உத்தமதானபுரம்

வே. சாமிநாதையரால்

பரிசோதித்து,

சென்னை:

வெ. நா. ஜூபிலி அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1892.

முகவுரை.

சிலப்பதிகாரத்தின் அரும்பதவுரையாகிய இஃது, அடியார்க்குநல்லாருரைக்கு முந்தியது. இவ்வுரையாசிரியர் பெயர்முதலியன யாதொன்றுந் தெரியவில்லை. இவ்வுரையையே பெருங்கருவியாகக்கொண்டு இந்நூலுக்கு அடியார்க்குநல்லார் உரைசெய்தனரென்பது இவ்விரண்டுரைகளையும் வைத்து ஒப்புநோக்கின் நன்கு விளங்கும். ஆயினும் இந்நூலில் இவ்விரண்டுரையாசிரியர்களுங்கொண்டபாடம் சிலசிலவிடத்து வேறுபட்டுள்ளன; அவ்வேறுபாடுகள் அவ்வவ்விடத்துள்ள உரைநடைகளால் நன்கு புலப்படும். அடியார்க்குநல்லாருரையிற் காணப்படாத பல மேற்கோள்களும் சிலநூற்பெயரும் இவ்வுரையிற் காணப்படுகின்றன. வாக்கியங்களின் முதலிறுதிகளையேனும், முதலைமட்டுமேனும், சொற்களையேனும் எழுதிப் பொருளெழுதுவதும், ஒன்றையுமெழுதாது பொருளைமட்டும் எழுதிக்கொண்டு போவதும் இவ்வுரைநடையாக இருக்கின்றன. இதிற் சங்கச்செய்யுட்களுடைய கருத்துமுதலியவற்றை இவ்வுரையாசிரியர் ஆங்காங்கு விளக்கிச்செல்வதுடன் சிலசிலவிடத்து மிகச் செவ்விதாகப் பதசாரமும் எழுதியிருக்கிறார். அடியார்க்குநல்லாருரையாற் புலப்படாத விஷயங்களும் இவ்வுரையால் விளங்குகின்றன. இவ்வுரையிற் பலவிடங்களில் வாக்கியங்கள் பூர்ணமாக எழுதப்படவில்லை. சில பாகங்களுக்கு ஒருவகையாக உரையெழுதிப் பின்பு அவற்றிற்கு வேறுவகையாக உரையெழுதும்பொழுது அதைப் புலப்படுத்தற்குரிய உம்மைமுதலியவைகள் கிடையா. இவ்வுரையிலுள்ள முடிவுகளும் பொருளும் இல்லையாயின், அடியார்க்குநல்லாருடைய உரைகிடையாத பாகங்களுக்குப் பொருள்காண்பது மிக அரிது.

ஐந்நூறு வருடங்களுக்குமுன் மிகப் பழையதாகிய இவ்வுரைப்பிரதியொன்று, எனதுநண்பர் தேரழுந்தூர் ம-ா-ா-ஸ்ரீ சக்கரவர்த்தி இராசகோபாலாசாரியரவர்களிடமிருந்து கிடைத்தது. அது, மிகவும் பழுதுபட்டு ஏடுகள்குறைந்தும் உள்ள ஏடுகள் தேய்ந்தும் முன்னுள்ளவைகள் பின்னும் பின்னுள்ளவைகள் முன்னுமாக மாறி எழுதப்பட்டும் அதிகமாகப் பிழைகள்விரவியும் இருந்தது. அதனோடு ஒப்புநோக்கிப் பொருளை ஒழுங்குபடுத்துவதற்கு இன்னும் கையெழுத்துப்பிரதிகள் கிடைத்தால் அனுகூலமாகவிருக்குமென்று பலவிடங்களிலே தேடிப்பார்த்தும் வேறுபிரதி அகப்படவில்லை. இந்தவொருபிரதியையே வைத்துக்கொண்டு சோதித்துப் பதிப்பித்தற்கு எனக்குச் சிறிதும் மனமில்லையாயினும், இவ்வொருபிரதியுஞ் சிலநாளில் இறந்துவிடின் அதனோடு இவ்வுரை இறந்தேவிடுமாகையால், இதனையும் சோதித்துப் பதிப்பிக்கவேண்டுமென்று, சில அன்பர்கள் தூண்டினமையின், துணிந்து பரிசோதித்து வெளிப்படுத்தலானேன். இதிலுள்ள மேற்கோள்களுள் அடியார்க்குநல்லாருரையால் விளங்குவனவற்றின் முதலிறுதிகளைமட்டும் விளக்கி அவற்றின் இடையில் (..) இவ்வொற்றைப்புள்ளிக்குறிகள் போடுவித்தும், பாடபேதமிருப்பின் அந்தப்பாகத்தைமட்டும் விளக்கியும், அவ்வுரையிற்காணப்படாத மேற்கோள்களை முற்றுங்காட்டியும், ஏடுகளிற் பழுதுபட்டுப்போன இடங்களைப் புலப்படுத்துவதற்கு அவ்வவ்விடத்தில் மேற்கூறிய ஒற்றைப்புள்ளிக்குறியையேனும் (* * * * * *) இவ்வுடுக்குறியையேனும் போடுவித்தும் விளங்காதபாகத்தின் முதலிறுதிகளில் [ ] இவ்விருதலைப்பகரம்சேர்த்தும், படிப்பவர்களுக்குப் பொருள் புலப்படுதற்கு மூலத்தின் வரியெண்களையேனும் முதலையேனும் அவ்வவ்விடங்களில் அமைத்தும் பிரதியில் இருந்தவாறே பதிப்பித்திருக்கிறேன்.

இவ்வரிய அரும்பதவுரையேட்டுப்பிரதியை எனக்கு உபகரித்த சக்கரவர்த்தி இராசகோபாலாசாரியரவர்களுடைய பேருதவி ஒருபொழுதும் மறக்கற்பாலதன்று.

ஒன்றுக்கும்பற்றாத சிறியேனை இம்முயற்சியிற்புகுத்தி நடத்தி நிறைவேற்றியருளிய எம்பெருமானது திருவருளை அனவரதமும் சிந்தித்து வந்திக்கின்றேன்.

இங்ஙனம்

வே. சாமிநாதையன்.

சூசிபத்திரம்.

உ

கணபதி துணை.

சிலப்பதிகார அரும்பதவுரை.

வெண்பா.

கரும்பு மிளநீருங் கடலைக் கனியும்
விரும்பும் விநாயகனை வேண்டி - யரும்புவிழு தார்ச்
சேரமான் செய்த சிலப்பதிகா ரக்கதையைச்
சாரமாய் நாவே தரி.

பதிகம்.

௧. குணவாயிற் கோட்டம்-திருக்குணவாயிற் கோயில்.

௨. சேரலென்றது செங்குட்டுவனை. சேரற்கு இளங்கோவாகிய அடிகளென்க. இளங்கோவடிகள் தாந் துறந்திருந்து இக்காவியஞ் செய்தார்.

(௭)கொடிமுகிழற்கண் நின்று(எ)காட்டி.

௮. கட்புலம்-கண்ணென்கின்ற புலம். விட்புலம் - விண்ணென்கின்ற இடம்.

௧௩. பேராச்சிறப்பு-நீங்காதபெருமை.

௧௫. நாடக மேத்து நாடகக் கணிகை- நாடகத்தை ஆடிச் சிறப்பிக்குங் கணிகை.

௧௬. ஆடிய கொள்கையின் - இவள் ஆடிய கோட்பாட்டால்.

௨0. புகுந்தனன் - புகுந்தனனாய்.

௨௧. பீடிகை - வணிகர்தெரு.

௨௪. யாப்புறவில்லை-பொருத்தமில்லை.

௨௫. பண்டுதான்கொண்ட - முன்பு தான் கலுழிற்கொண்ட.

௨௯., கன்றிய காவலர் - கர்வலிற்ற மும்பியவர்.

௩௨. நிலைக்களம்-நிலையிடம். நெடுங்கணீருகுத்து-நெடுங்கண்ணால் நீருகுத்து.

௩௩. பத்தினி யாகலின் - ஆக்கலும் அழித்தலும் வல்லளாதலின்.

௩௪. முலைமுகம் - முலையிடம்.

௩௫. புலர்புகழ் பத்தினி யாகும் இவளென்று சாத்தன்சொல்ல.

௩௬. அதிராச் சிறப்பு - பகைவரால் அதிர்ச்சியில்லாத சிறப்பு.

௪0. கொன்றையஞ்சடைமுடி - ஆகுபெயர்.

௪0 - ௪௧. மன்றப் பொதியில் வெள்ளியம்பலம் - மன்றத்தின்கட் பொதியிலாகிய வெள்ளியம்பலம்.

௪௨. வீரபத்தினி - சிறியகற்புடையாள்.

௪௫. பைந்தொடி - முன்னிலைப் பெயர்.

௪௭. சிங்காமை - சுருங்காமை.

௪௮ - ௪௯. கணவனொடு கட்டியதென்க.

௫0. கூந்தல் - கூந்தால்.

௫௩. ஈனோர் - இவ்வுலகத்தின்மக்கள். காண்டல் இல்லென - காண்டலில்லை யென்றுசொல்ல.

ருசு. உரைசால் பத்தினிக்கு - புகழமைந்த பத்தினியை.

ருஎ. ஊழ்வினை - முறைமையாகிய பழவினை. உருத்துவந்து - வெளிப்பட்டுவந்து.

ருஅ. சூழ்வினை - சூழ்ந்த சிறப்புத்தொழில்.

சு0. பாட்டுடைச் செய்யுள் - உருவாகிய பாட்டுக்களையுடைய காவியம்.

சுக. முடிகெழு வேந்தர் மூவர்க்குமுரியது - புகாரினும் மதுரையினும் வஞ்சியினும் நிகழ்தலான் மூவர்க்குமுரியது.

சுஉ. அடிகளென்றது - இளங்கோவடிகளை. என்றற்கு - என்றுசொன்னதற்கு அவனுக்கு.

சுரு. மங்கலவாழ்த்து - கலியாணவாழ்த்து.

சுஅ. மடல் - பூ.

எக. விறைத் திறத்து - கவுந்தியடிகள் விறலியதிறத்தையுடைய.

எரு. தோடலர்.

எஅ. கண்பக னடுக்கிய - கண்ணைக் கண்பகற்கண்ணே நடுக்கிய.

அஉ. கட்டுரை - விளங்கச் சொல்லுதல்.

அஉ - அரு. மட்டலர் கோதையர் குன்றக் குரவை - குறத்தியராடிய குரவை.

அஎ. பாட்டும் உரையும் கலந்துவந்த காவியம்.

வஞ்சிமூதூர் மணி மண்டபத் திடைத் தந்தையோடிருந்துழி அரசு வீற்றிருக்குந் திருப்பொறியுண்டென்று ஓர் நிமித்திகன் சொல்ல, முன்னோனாகிய செங்குட்டுவனிருப்ப இவ்வாறு முறையிறழக் கூறியது பொருது குணவாயிற் கோட்டத்துக் கடவுளர் முன்னர்த் துறந்திருந்த இளங்கோவடிகளுக்குக் க[illegible]வா[illegible] வர்போற்றத் தன் கணவனோடுகூடியது கண்டு செங்குட்டுவனுக்குரைத்த குறவா வந்து எல்லாமறிந்தோய், இதனை அறிந்தருளென்று கூறிப்போக, பின்பு செங்குட்டுவனைக்கண்டு போந்து அடிகளுழை வந்த சாத்தன் அதுபட்டவாறெல்லாங் கூற, அதுகேட்டு, அரசியல் பிழைத்தோர்க்கு அறங்கூற்றாவதூஉம், பத்தினி மகளிர் [illegible] பெய்யுமழை [illegible] பதூஉம், ஊழ்வினை உருத்துவந்து [illegible] ட்டுமெனபதூஉம், இக்கதை[illegible] [illegible] மையின், [illegible] செய்வோமென்று [illegible] கோவடிகள் கூற, [illegible]வேந்தர் நாட்டிடத்தும் நிகழ்ந்த கதையாகலான் [illegible] [illegible]ரு வேந்தர் [illegible] பும் [illegible] பொதுவா[illegible] எல்லா மு[illegible] [illegible] [illegible]. சாத்தன் சொல்ல, [illegible] செய்யுளை இளங்கோவடிகளாகக் கூலவாணிகன் சாத்தன் கே[illegible]

உரைபெறுகட்டுரை.

உ. பொங்கிளங்கோசர் - குறும்புசெலுத்துவார் சிலவீரர்.

ரு. நாட்பலி பீடிகைக் கோட்டம் - நித்தலும் பலியிடுமிடத்தையுடைய கோட்டம். அரந்தை - துக்கம். பிழையாவினையுள் - குன்றாவினையுள்.

அ. கோழி - உறையூர். எழ்இறந்தானும் - வேண்டி [illegible] வேண்டிய [illegible] லாம நித்தல்விழாவணி - நித்தமாகிய அணிவிழா.

உரைபெறுகட்டுரை - உரைத்துப்போதுகின்ற கட்டுரை

புகார் காண்டம்.

க.—மங்கலவாழ்த்துப்பாடல்.

திங்களைப்போற்றுதும் திங்களைப்போற்றுது மென்னு மடுக்கு, சிறப்பின்கணவந்தது. அங்கணுலகு - அழகிய உலகிடம்.[*] காமநீர் - அச்சத்தைத்தருகின்ற கடல். மேனின்று - எல்லாப் பொருளுக்குமேலாக நின்று.

வீங்குநீர் - நிறைந்த நீர்.

இவை நான்கு சிந்தியல் வெண்பாவும் செம்பியனையும் புகாரினையுஞ் சிறப்பித்தன.

ஆங்கு - ஆதலால்.

பொதியிலாயினும் - பொதியில் இம

யம் புகாரென்ற மூன்றனையும் ஒருவாற்றான் ஒப்புமைக்கின்றார்:

பொதுவறு சிறப்பு - தனக்கே உரிய சிறப்பு. நிலீஇயர் - நிற்பதாக. கேள்வியான் முழுதுணர்ந்தோர் அப்படிப் புகழினல்லது இம்மூன்றிடத்திற்கும் ஒடுக்கங் கூறுர்; உயர்ந்தோருண்மையானென்க. புகார்ச்சிறப்புக் கூறியவாறு.

அதனால் - ஆதலால்.

நாகருலகத்திடனும் தேவருலகத்திடனும் போகம் நீள்புகழ் இவை பொருந்தும். மாகவான - விண்ணின் மேகம். நகை - பொன்.

போதிலார் திரு - போதில் நிறைந்த திரு. இவ்வடிவென வருவிக்க. வயங்கிய பெருங்குணத்துக் காதலாள் - விளங்கிய பெருங்குணத்தாற் காதலித்தவள்.

இவளை முன்கூறிற்று; கதைநாயகியாதலின்.

பெருமகன் முன்னைச் செப்பட்ட ... சராகிய தன் இனிமே போகக்கூடும் உயர்ந்த செல்வத்தையுடையான். இது *சுற்றந்தழாற் சுற, படவொழுகல் ... னவே தம க்குத் தாமேயிகராகிய வணிகரொன்றவாறுயிற்று. மாசாத்துவான் - குடிப்பெயர்.

மண்டேய்த்த புகழ் - பூமி சிறுகும்படி வளர்ந்தபுகழ். மடவார் ஆயத்துக் கண்டேத்துஞ் செவ்வேளென்று கண்டார் கொண்டேத்துங் கிழமையான்.

யானையெருத்தின்மேல் அணியிழையரைமையிருத்தி மாநகர்க்கு அறிவித்தார்.

முருடு - மத்தளம். அகலுள் - வீதி லே. மங்கலவணியெழுந்தது - மாங்கலிய சூத்திரம் வலஞ்செய்தது.

மாலைதாழ் சென்னித்தூண்.

சந்திரன் உரோகிணியைச்சேர அருந்ததியினது தகையாளைக் கோவலன் கலியாணமபண்ணுவது.

விரையினா மலரினராகிய விளங்கு மேனியர், பிறவுமன்ன இவை வினைக்குறிப்புப்பெயர்.

இச்சொலலப்பட்ட கொடியன்னர். உலகில் அருந்ததி - இல்பொருளுவமை. உழையதாம்படி உருட்டுவோமெனன அம ளியேற்றினரென்க.

௨.—மனையறம்படுத்தகாதை.

௧. உரைசால் சிறப்பு - புகழமைந்த சிறப்பு.

௨. பாதா - கடலோடிகள்

௩. வழங்க-உபகரிக்க தவா-கெடாத.

௪. விருந்திற்றேயம - பரதேசங்கள

௫. அதந்தேயங்களிற் பொருள்களினை தொகுகிகூறுவார், தேயம ஒருங்குதொக் கன்னவென்றார்

௬. குலத்திற்குன்றா - குலதருமத்திற் குன்றாத. செல்வர் - இருவர் பிதாககளும்.

௭-௰. அத்தகுதிரு ...... தோன்றிய - அங்ஙனம் தக்க திருவினையுடைய அருந்தவமுடித்தோர் போகபூமியிற்றோறுமாறுபோலத் தோன்றிய.

கலத்தினும் காலினுந் தருவனரீட்டத லால் விருந்திற்றேயம ஒருங்குதொக்கன பண்டம் வழங்கத் தவா அப்பெருக்கத்தாகி அரும்பெறல் இருவினையுடைய கடலோடிகள் மலிந்தநகர் உத்தரகுருவினை யொக்கும்படி செல்வர்க்குத் தோன்றிய கண்ணகியுங்கோவலனும். இவர்தோன்றுதலான் நகர் உத்தரகுருவை ஒத்தது.

௨௪. இருவரது புணர்ச்சி கூறுவார், 'தாரும் மாலையு மயங்கி' என்றார். கையற்று - செயலற்று=புணர்ச்சியால் அவசமாகி.

கண்ணகியும் கோவலனும் இடைநிலத்திருந்துழித் தென்றல்கண்டுமகிழ்வெய்திச் சிறந்து ஏறி இருந்து எழுதிக' கையறெனக்கூட்டுக.

கையற்றென, நயப்புக் கூறுகின்றது.

௩௦. உரிதின் - உரித்தாக.

௩௨-௩௫. காமனுக்கு வென்றிகொடுத்தலால் அமரமேம்படுநரது முறைமை இவட்குக் கூறப்பட்டது.

௩௮. இவளைத் திருமகளாக்கி அமிர்தினுடன்பிறத்தல் கூறப்பட்டது

* திருக்குறள், சுற்றந்தழால், ௪.—"சுற்றத்தாற் சுற்றப் படவொழுகல் செல்வந்தான், பெற்றத்தாற் பெற்ற பயன்." ௫௨௪

சக - ருஉ. இவ்வாறு ஒருரிமையின்றியேயும் எம்மை வருத்தும் இயல்பினுனன்றே குமரவேள் தன்கையில்வேலொன்றையும் இரண்டாக்கித்தந்தது.

ருரு. நன்னுதல் - நுன்னிலைப்பெயர்.

ருசு. செறிதல் - ஒளித்தல்.

ருஅ. குழைசதல் - கூட்டுதல்; இல்பொருளுவமை.

இனி நீங்காவாயின அதனால் அளியவென்க.

சுஉ. நலம்பாராட்டுநர் - ஒப்பிப்பார்.

சுரு. மங்கலவணி - இயற்கையழகு.

சுச. பிறிதணி அணிதலாற் பெறறபயன் என்.

சுசு. எல் - ஒளி. என்றூற்றனர் - என்னவுறவுடையார.

சுஎ. நானம் - நாற்றம்.

சுஅ. மான்மதம் - புழுகு கத்தூரிமுதலாயின. வந்ததை - வந்தவுறவு.

எo. உற்றது - உறவு.

எஉ. என்னுற்றனர் - என்னபித்தேறினார்.

அக. உலவாமை - ஒழியாமை.

அஉ. தருக்கி - மிக்கு.

அச. பேரிற்கிழத்தி - கோவலன் மாதா

அரு. கேணமை - சுற்றத்தாரைப்பேணுதல். அறபரிகாரம் - அறத்தாரைப் பூசித்து அறத்தைப பரிகரித்தல்.

அசு. பெருந்தனவாழ்க்கை - இல்லறம்.

அஎ வேறுபடுதிருவின் - நானாவிதமான செல்வததோடே. வீறு - பெருமை.

அஅ. உரிமைச்சுற்றம் - அமைவுநன் ஒருதனியாகப புணர்க்கவென்க

ங.—அரங்கேற்றுகாதை.

க-கக தெய்வமால்வரை...... மன்னற்குக் காட்டல் வேண்டி

கூத்தியநாயகி கூறுகின்றது.

க. தெய்வமால்வரை - பொதியின்மலை; தெய்வத்தன்மையையுடைய வரை; உருபுதொக்குத் தெய்வமால்வரையென்றாயிற்று. திருமுனி - அகத்தியன். அருள - அவன் சாபமிட்டருள

உ. எய்திய - அச்சாபத்தை யெய்திய.

க. அருளாலென்று பாடமோதி அருளில் ஓர் சாபநீங்கியவென்றுமாம்.

உ. இந்திரசிறுவன் - சயந்தகுமாரன். இந்திர சிறுவனொடென்றதைற் சயந்தகுமாரனோடே உருப்பசியும் சாபநீங்கிப்போனளென்க: "இருந்திய ... வாகிவந்தனளென" என்றாராகலின்.

ங. தலைக்கோற்றானம் - நாடக வரங்கு.

ச. மலைப்பருஞ் சிறப்பின் வானவர் மகளிரென்றது - இப்படியால் ஒப்பில்லாத சிறப்பினையுடைய வானவர் மகளிர்; ஆவார் |=தனியிலார்| உருப்பசி வந்துசாபத்தாற் பிறக்கையால் அவள் வழியுள்ளாரையும் வானவர்மகளி ரென்றாராயிற்று. அவருள்,—

சிறப்பு - வரிசை. செய்கை - தொழில்.

ரு. பிறப்பு - அம்மரபிலேயிலக்கப்பிறப்பு பெருந்தோளுமடந்தை - மூங்கில்போன்ற தோள்பெருக்கை இலக்கணம். என்னை? *"அகலல் ... கலவ ... வழிப் பெருகி" என்றாராகலின.

எ. தாதவிழ் புரிகுழன் மாதவி தன்னை யென்றது-பூகளின் தாதுக்களையுமிழ்க்கும் புரிந்த குழலையுடைய மாதவியாகியவள் தன்னை.

அ-க. ஆடலும் ...... குறைபடாமலென்றது - கூத்தும் பாட்டும் அழகுமென்றுசொல்லப்பட்ட இம்மூன்றினுள் ஒன்றுங்குறைபடாமல்.

கo. ஏழாண்டியாண்டில் ... குறைவில் - மையுண்கண்ணிடந்தைமகளை ஐயாண்டு நிரம்பியபின்னைக்காலைப்போர் காணா அரங்கிற் |பிரவம்| இருபொழுது ஏழாண்டியற்றுவித்து இப்படியாற பன்னிரண்டு பிராயம புகுகின்பு.

கக. சூழ்கழன் மன்னற்குக் காட்டல் வேண்டி வீரக்கழலினையுடைய சோழன் கரிகாற் பெருவளத்தான் அவை

* கலித்தொகை, முல்லைக்கலி, அ.

அரங்கேறிக் காட்டல்வேண்டி யென்ற வாறு.

இனி ஆடலாசிரியனமைதி கூறுகின்றது.

௩௨ - ௨௫. இருவகைக்கூத்தின் ....ஆடற்கமைந்த வாசான் றன்னொடு மென்றது - தேசியும் மார்க்கமுமென்று சொலப்பட்டநின்ற இரண்டுவகைப்பட்ட அகக்கூத்தினது இலக்கணங்களையறிந்து பலவகைப்பட்ட புறநடங்களையும் விலக்குறுப்புக்களைச் சேரப்புணர்க்கவும் வல்லனாகி அல்லிய முதலாகக் கொடு கொட்டியீறாகக்கிடந்த பதினொரு கூத்தும் அக்கூத்துக்குரிய பாட்டுக்களும் அவற்றுக்கடைந்த வாச்சியக்கூறும நூல்களின்வழியே தெரியவறிந்து அக்கூத்தும் பாட்டும் தாளங்களும் தாளங்களின் வழியேவந்த தூக்குகளும் தம்மிற்கூடி நிகழுமிடத்துப் பிண்டி பிணையல் எழிற்கை தொழிற்கையென்னும் அந்தாளிகையும் ... கூறுபாட்டையறிந்து அகக்கூத்தினிடத்துக் ... செய்தலை வாரக ... வாரக்கூத்தியாகச்செய்தலை ... புறக்கூத்தில் ... அவிநய ... அவி ... ஆடல்கழ ... குரவைக்கூத்தும் வரிக்கூத்தும் ... செலுத்தவல்ல ஆடலாசிரியனுமென்றவாறு.

இது பொழிப்புரை ... சொல்லிய வாறென்னெனின், —

௩௨. இருவகைக்கூத்தாவன தேசி மார்க்கம் என்பன ; "மார்க்க மென்பது வகையின் பெயரே." இவ் ... இலக்கணமாவது - "அறுவகை ... வாகு மென்ப." இவை ... நகுறைப்பிற் பெருதும் ; ... கொள்க ... விலக்குறுப்புக்களை ... கூத்தை இலக்கணத்துடனே பொருந்தக் கற்றெறன்றவாறு.

௩௩. பல்வகைக்கூத்தும் விலக்கினிற் புணர்த்தலாவது - சாந்திக்கூத்து முதலாகப் பல்வகைப்பட்ட புறநடங்களையும் வேத்தியல்விலக்கும் பொதுவியல்விலக்கும் ஊர்விலக்குமென்று சொல்லாநின்ற விலக்குக்களாகிய பாட்டுக்களுக்கு உறுப்பாய்வருவனவற்றுடனே பொருந்தப்புணர்த்தல், என்றது பாட்டுக்களுக்கு வரவுறுக்கும்படியை. விலக்குறுப்பாவன : பொருள், யோனி, விருத்தி, சந்தி, சுவை, சாதி, குறிப்பு, சத்துவம், அவிநயம், சொல், சொல்லின் கூறுபாடு, வண்ணம், வரி, சேதமென இவைபதினான்கும் ; என்னை ? "விலக்குறுப் பென்பது ... ... னீரே ழுறுப்பே." இவை நகுறைப்பிற் பெருகும்.

௩௪-௩௫. பதினொ ... வறிந்தென்பது - அல்லியமுதற் கொடுகொட்டியீறாகக்கிடந்த பதினொருகூத்தும், அக்கூத்துக்களுக்குரிய பாட்டுக்களும் அக்கூத்துக்களின விகற்பங்களுக்கெல்லா மமைந்த வாச்சியக் கூறுகளும் நூலின்வழியே விளங்கவறிந்து.

அவற்றுள், பதினொ ராடலாவன :— "கடைய . . பதினோர் கூத்து." இவை தெய்வவிருத்தி ; இரண்டுகூறு பட்டன :— "அல்லியங் ... ... லாறு" "குடைகடையம் ......லைந்து." இவை அசுரரைக்கொல்ல அமரராடின. இவை யிறந்தின்விரிவ நூல்களுட்காண்க.

௩௪. பாட்டுமென்பது அகநாடகங்களுக்கும் புறநாடகங்களுக்குமுரிய உருக்களுமென்றவாறு. அகக்கூத்திற்குரிய உருவாவன :—கந்தமுதலாகப் பிரபந்தவுருவீறாக இருபத்தெட்டும். புறநாடகங்களுக்குரிய உருவாவன :—தேவபாணி முதலாக அரங்கொழி செய்யுளந்தமாகச் செந்துறை விகற்பங்களெல்லாமென்ற வாறு.

௩௪. கொட்டுமென்பது கூத்து விகற்பங்களுக்கமைந்த வாச்சியக்கூறுகளுமென்றவாறு. அவை கீதானுகம், நிருத்தானுகம், உபயானுகமெனவிவை. இவற்றுள், கீதானுகம் - கீதத்துக்குவாசித்தல்; நிருத்தானுகம் -நிருத்தத்துக்குவாசித்தல்; உபயானுகம் இரண்டுக்கும் வாசித்தல்.

௩௫. விதிமாண் கொள்கையின் விளங்கவறிந்தென்பது - நூல்களின் விதித்த வழியே விளங்கவறிந்து. ஆங்கென்பது - அசைச்சொல்.

௩௬. ஆடலுமென்பது - அகக்கூத்தினும் புறக்கூத்தினுமுள்ள ஆடலுமென்றவாறு. கீற்று கடிசரிமுதலாகத் தேசிக்குரியகால்களும், சுற்றுதல் எறிதல் உடைத்தன்முதலான வடுகிற்குரிய கால்களும், உடற்றாக்குமுதலாய உடலவர்த்தனையுமுடைய அகக்கூத்துக்குரியன. ஈங்

குச் சிங்களமென வழங்கிவருகின்ற கூத்துச் சொல்லிற்றிலரெனின், "சிங்கள .... மெய்தும்" என்னுஞ் சூத்திரத்தால் அதற்கு வேறுகால்களின்மையினென்பது ; பாலைக்கு நிலமில்லாததுபோல வென்க புறக்கூத்திற்குரியகூத்தாவன : பெருநடை சாரியை பிரமரி இவைமுதலாயினவும் பதினோராடலுமான கூத்துக்களுமாம். இவ்வகையால் அகக்கூத்துக்களுக்கும் புறக்கூத்துக்களுக்குமுரிய ஆடலுமென்றவாறு.

கரு. பாடலுமென்பது-பண்ணல் முதலான வெட்டுவகைப்பட்ட குறிக்கோளும் அவை "இன்பங்...... பயனே" என வெண்வகைப்பட்ட பயனையுமுடைய பாடலுமென்றவாறு.

கரு. பாணியுமென்பது - தாளங்களுமென்றவாறு. அவை சச்சபுடமுதலான பஞ்சதாளமும், அரைமாத்திரை யுடைய ஏகதாளமுதலாகப் பதினாறு மாத்திரையுடைய பார்வதிலோசனமீறாகச் சொன்ன நாற்பத்தொரு தாளமும், அறனமட்டம எட்டனமட்டமென்பனவும, தாளவொரியல் தனிநிலையொரியலென்பனவும், ஒன்றன்பாணிமுதலாக எண்கூத்துப்பாணியிறுதியாகக்கிடந்த பதினொருபாணி விகற்பங்களும் முதனடை வாரமுதலாயினவுமென்றவாறு

கரு. தூக்குமெனபது - இத்தாளங்களின்வழிவரும் செந்தூக்கு, மதலைத்தூக்கு, துணிவுதூக்கு, கோயிற்றூக்கு, நிவப்புத்தூக்கு, கழாற்றூக்கு, நெடுந்தூக்கென்று சொல்லப்பட்ட ஏழுதூக்குக்களுமென்றவாறு.

கஎ. கூடியநெறியினவென்பது - இச்சொல்லப்பட்ட கூத்தும் பாட்டும் தாளமும் தூக்கும் தம்மிற்கூடிய நெறியையுடைய அகக்கூத்தும் புறக்கூத்துமுதலியனவென்றவாறு.

கஎ. கொளுத்துங்காலையென்பது - ஆடுவிக்குமிடத்தும பாடுவிக்குமிடத்துமென்றவாறு.

கஅ. பிண்டி - ஒற்றைக்கை ; அவை பதாகைமுதலாக இருபத்துநான்கு.

கஅ. பிணையல் - இரட்டைக்கை ; அவை அஞ்சலிமுதலாகப் பதின்மூன்று.

கஅ. எழிற்கை - அழகுபெறக்காட்டுங்கை.

கஅ. தொழிற்கை - தொழில் பெறக்காட்டுங்கை.

"அவைதா, மெழிற்கை......பொருளா கும்மே."

கக. கொண்டவகையறிதல் -பிண்டியும் பிணையலும் புறக்கூத்திற்குரிய கையென்றும, எழிற்கையும் தொழிற்கையும் அகக்கூத்திற்குரிய கையென்று மறிதல.

கக. கூத்துவரு காலையென்பது - கூத்துக்களின்கைவருநிகழுமிடத்தென்றவாறு.

உ0-உக கூடை செய்தகை ... களிதலுமென்பது - அகக்கூத்தினிடத்து ஒற்றையிற்செய்த கைத்தொழில் இரட்டையிற்புகாமலும் இரட்டையிற்செய்த கைத்தொழில் இரட்டைக்கிரட்டியிலும் ஒற்றையிலும் புகாமலுங்களிதல. இன்னும் தேசியிற கைத்தொழில மார்க்கத்திற்புகாமலும, மார்க்கத்திற் கைத்தொழில் தேசியிற் புகுதாமலும களிதலென்றுமாம். ஒற்றையும் இரட்டியும தேசிக்கூறுதலானும், இரட்டியும் இரட்டிக்கிரட்டியும வங்கிற் கூறுதலானுமென்றுமாம.

உஉ-உங. பிண்டி ... களிதலுமென்பது - புறக்கூத்தினிடத்துப பிண்டியென்பது பொருட்கையென்றும் பிணையலென்பதுதொழிற்கையென்றுமறிந்து ஆடல்நிகழுமிடத்து அவிநயம் நிகழாமலும அவிநயம் நிகழுமிடத்து ஆடல்நிகழாமலுங் களிதலென்றவாறு.

உச. குரவையும் ... செறுத்தியென்பது - குரவைக்கூத்திற்குரிய காலும் வரிக்கூத்திற்குரிய காலும் தம்மில் விரவாதபடி செறுத்தியென்றவாறு, "குரவையென்பது .... மியல்பிற் றாகும்" "வரியெனப் ...... வழங்கல்" என்பவாகலின்.

உரு ஆடற் கமைந்த வாசான் றன்னொடுமென்பது - இக்கூத்துக்களை இப்படியால் அமைந்துடனேபொருந்த ஆடவும் ஆடுவிக்கவும் வல்ல ஆடலாசிரியனொடுமென்றவாறு

(இனி இசையாசிரியனைக் கூறுகின்றது.)

உசு - கூசு. யாழுங்குழலும் ...... இசையோன்முறைமை - யாழ்ப்பாடலும், வங்கியப்பாடலும், இருவகைத் தாளக்கூறுபாடுகளும், மிடற்றுப்பாடலும், மத்தளமாகிய சாரதத்தினையுடைய தண்ணுமை

யும், அகக்கூத்துப் புறக்கூத்துப் பதினோராடலென்னுங்கூத்துக்களும் வல்லனாய் இவற்றுடனே. சேரச்செய்த உருக்களை இசைகொள்ளும்படியும் இரதம் பொருந்தும்படியும் புணர்க்கவும்வல்லனாய் இருவகைப்பட்ட பாடல்களுக்கும பொருளான இயக்கம் நான்கினையுமமைத்துத் தேசாந்தரங்களிற் பாஷைகளையுமறிந்து அந்தப்பாஷைகள் இசைபூணும்படியையுமறிந்து இயற்புலவனியல்பினையும் நாடகப் புலவனிடும் வரவுகளும் இவற்றுக்கடுத்த பாடல்களும் தமமிற்சந்திக்குமிடத்துக் குற்றந்தீர்ந்தநூல்வழக்காலே வகுக்கவும் விரிக்கவும் தொகுக்கவும வல்லனாயுள்ள இசைப்புலவனுமென்றவாறு.

இது பொழிப்புரை; என்சொல்லிய வாறோவெனின,—

௨௨. யாழுமென்பது - "கோட்டினமைதியும் .... வகையே" முடிக்கப்பட்ட யாழ்ப்பாடலுமென்றவாறு.

௨௩. குழலுமென்பது பருமையும் நீளமும் இலக்கணத்துடனமைந்து விரலிடையிட்ட விரலுளர்துளையும் ஊதுதுளையுமுடைத்தாய்ச் சுரபேதங்கள் நிலைகுலையாமல் அளவறுக்கப்பட்டுநின்ற வங்கியப்பாடலுமென்றவாறு.

௨௪. சீருமென்பது-"செம்முறை ... னிமிர்த்தல்" என்றுசொல்லப்படாநின்ற வண்ணக்கூறுபாட்டையும் இருவகைத் தாளக்கூறுபாட்டையும பாலைநிலையினையும் பண்ணுநிலையினையும் நிலைப்படையகத்துத் தாய்தாகக காட்டுந்தன்மையுமென்றவாறு.

௨௫. மிடறுமென்பது - மூலாதாரந் தொடங்கிய மூச்சைக் காலாறுகிளப்பிச் சருத்தாலியக்க ஒன்றெனத்தாக்கி இரண்டெனப் பகுத்துப் பண்ணீர்மைகளைப் பிறப்பிக்கப்பட்ட பாடலியலுக்கமைந்த மிடற்றுப்பாடலுமென்றவாறு.

௨௬. தாழ்குரற் றண்ணுமையென்பது - தாழ்ந்தகுரலினையுடைய தண்ணுமைக்கருவிமுதலாயின வாசித்தலுமென்றவாறு.

௨௭. ஆடலொடென்பது - அகக்கூத்துப் புறக்கூத்துப் பதினோராடலென்றுசொல்லப்படாநின்ற ஆடலுடனென்றவாறு. ஒடுவென்பது - உடனிகழ்ச்சி; இச்சொல்லப்பட்டவற்றுடனேயென்றவாறு.

௨௭ - ௨௮. இவற்றி னிசைந்த ... ... படுத்தென்பது - இச்சொல்லப்பட்ட கூத்துக்களுக்குச் சேரச்செய்த உருக்களை இசைகொள்ளும்படியும் இரதம் பொருந்தும்படியும் புணர்க்கவல்லனாகியென்றவாறு.

௨௯. வரிக்கு ... னியக்கியென்பது - செந்துறை வெண்டுறையென்னப்படாநின்ற இருவகைப்பாடல்களுக்கும் பொருளாயமைந்த இயக்கநான்கினையுமமைத்தென்றவாறு.

௩௦. தேசிகத் ... பிடித்தென்பது - இயற்சொல திரிசொல் திசைச்சொல் வடசொலென்று சொல்லப்படாநின்ற சொற்கள் இசைபூணும்படியைக் கடைப்பிடித்தெனறவாறு.

௩௧ - ௩௨. தேசிகத் ... ... னாகியென்பது - இச்சொற்களிற்புணர்ப்புண்ட இசைவேறுபாடுகளையெலலாம் குற்றந்தீர உணரவல்ல அறிவினையுடையனாகியென்றவாறு.

௩௩. கவியது குறிப்புமென்றது-இயற்புலவனினைத்தகோட்பாடுமென்றவாறு.

௩௩. ஆடற்றொகுதியுமென்பது - ஆடலாசிரியனிடும் வரவுகளின் றொகுதியுமென்றவாறு.

௩௪. பகுதிப்பாடலுமென்பது - இவற்றுக்கமைந்த பாடற்பகுதியுமென்றவாறு.

௩௪. கொளுத்துங்காலையென்பது - இக்கூத்துக்களை ஆசிரியன்குறிப்புக்கும் பாடலுள்ளிட்டனவற்றுக்குஞ் சேரவியற்றுமிடத்தென்றவாறு.

௩௫ - ௩௬. வசையறு ... ...றோனுமென்பது - இச்சொல்லப்பட்டவற்றைக் குற்றந்தீர்ந்த நூல்வழக்கால் வகுக்கவும் தொகுக்கவும்வல்ல பாடலாசிரியனுமென்றவாறு.

இசையுடன்படுத்து இயக்கிக் கடைப்பிடித்து அறிவினனாகி விரிக்கும் இசையோனெனக.

இனிக் கவிஞனன்மைகூறுகின்றது.

௩௭ - ௪௪. இமிழ்கடல் வரைப்பில் ... ... நாத்தொலை வில்லா நன்னூற் புலவனும்:

௩௭ - ௩௮. இமிழ்கடல் ... ... னாகியென்பது-ஆரவாரத்தினையுடைய கடல் சூழ்ந்தநிலத்தில் வடக்குந்தெற்குங் குடக்குங் குணக்கும் வேங்கடம் குமரி தீம்புனற்பௌவமெனத் தமிழோரால் எல்லை

கூறப்படாநின்ற தமிழ்த்தேசத்தாரறிய மூன்றுதமிழும் போமென்னுந் தன்மையையுடையனுகியென்றவாறு.

௩௯ - ௪௰. வேத்தியல் .. ... கடைப்பிடித்தென்பது - வேத்தியலென்றும் பொதுவியலென்றும் இரண்டுகூறுபாட்டினையுடைய நாடகநூல்களை நன்றாகக் கடைப்பிடித்தென்றவாறு.

௪௧ - ௪௨. இசையோன் ... ... வைத்தென்பது-இசைப்புலவன் ஆளத்தி வைத்தபண்ணீர்மையை முதலும் முறைமையும் முடிவும் நிறைவும் குறையும் கிழமையும் வலிவும் மெலிவும் சமனும் வரையறையும் நீர்மையுமென்னும் பதினொருபாகுபாட்டினானுமறிந்து அவன் அவை தாளநிலையில எய்தவைத்த நிறம் தன் கவியினிடத்தே தோன்றவைக்கவல்லனுயென்றவாறு.

௪௩ - ௪௪. மாற்றோர் செய்த ...... புலவனுமென்பது - சத்துருக்களாற செய்யப்பட்ட வசையாயுள்ளனவறிந்து அவைதோற்றுதபடி வசையின்மொழிகளால், நாடகக்கவிசெய்யவல்ல நல்ல நூல்களையுணர்ந்த புலவனுமென்றவாறு, "இன்ன...... தருமே" என்றாராகலின்.

தன்மையனுகிக் கடைப்பிடித்து உணர்ந்து வைத்து அறிந்து தோலவில்லாத புலவனென்க.

இனித் தண்ணுமையாசிரியனமைதி கூறுகின்றது.

௪௫ - ௫௫. ஆடல்பாடல் ... முதல்வனுமென்பது - எல்லாக்கூத்துக்களும், எல்லாப்பாட்டுக்களும், எல்லாவிசைகளும், வடவெழுத்தொரீஇயவந்த எழுத்தாலேகட்டப்பட்ட இசைக்கட்டளைக்கூறுபாடுகளும், எல்லாப்பண்களும, இருவகைத்தாளங்களும், எழுவகைத்தூக்குக்களும், இவையிற்றின்முடங்களும், இயற்சொல் திரிசொல் திசைச்சொல் வடசொலென்னுஞ்சொற்களுமென்று சொல்லப்பட்டனவற்றையுணர்ந்து ஒருருவை இரட்டிக்கிரட்டி சேர்த்தவிடத்து நெகிழாதபடி நிரம்பநிறுத்தவும் அவ்விடத்துப் பெறுமிரட்டியை நுட்பாக உருவானவழி நிற்குமானநிறுத்திக் கழியுமானங்கழிக்கவும்வல்லனய் இப்படிநிகழ்ந்த உருக்களில் யாழ்ப்பாடலும் குழலின்பாடலும் கண்டப்பாடலும் இயைந்துநடக்கிறபடி கேட்போர் செவிக்கொள அமைந்தகரணத்தாற் குறியறிந்து சேரவாசித்தலும் மற்றைக் கருவிகளிற் குறைநிரப்புதலும் அக்கருவிகளின் மிகுதியடக்குதலும் ஆக்குமிடத்தும் அடக்குமிடத்தும் இசையினிரக்கிரந்தோன்றுதபடி செய்தலும் செய்யுமிடத்துக் கைததொழில் அழகுபெறச் செய்துகாட்டலும் வல்லனய் அழகுதக்க தண்ணுமைக் கருவியினையும் அரியதொழிலினையுமுடைய ஆசிரியனுமெனறவாறு.

இதுபொழிப்புரை; என்சொல்லியவாறோவெனின்,—

௪௫. ஆடலென்பது எல்லாக்கூத்துக்களும.

௪௫. பாடலென்பது பண்ணால்முசலிய பாடலியல்புகளும்.

௪௬. இசையாவது நரப்படைவாலுணக்கப்பட்ட பதினோராயிரத்துத் தொள்ளாயிரத்துத்தொண்ணூற்றொன்றுகிய உதியிசைகளும், அவையாவன "உயிருயிர் . கடனே" என்னுஞ் சூத்திரத்தானறிந்து கொள்க.

௪௭. தமிழாவது வடவெழுத்தொரீஇவந்த எழுத்தாலே கட்டப்பட்ட வாகியக்கூறுகளும், இயலிசைநாடகங்களுமென்று சொல்லப்படாநின்ற மூன்று தமிழ்களும்.

௪௮. பண்ணென்பது நரப்படைவால் நிறந்தோன்றப் பண்ணப்படாநின்ற பண்களும், பண்ணியற்றிறமும், திறமும், திறத்திறமும்.

௪௯. பாணியென்பது இருவகைத்தாளவிகற்பங்களும்.

௫௰. தூக்கென்பது- செந்தூக்குமுதலாய எழுதூக்குக்களும

௫௧. முடமென்பது இவையிற்றின்குற்றங்களும்.

௫௨. தேசிகமென்பது-இயற்சொல் திரிசொல் திசைச்சொல் வடசொலென்று சொல்லப்படாநின்ற சொற்பிரயோகம

௫௩. இவையாசிறுணர்ந்தென்பது- இச்சொல்லப்பட்ட ஒன்பதும் இலக்கணவழியே நுணுகியதாக வறிந்தென்றவாறு.

௫௪ - ௫௫. கூடைநிலத்தைக்.... .... வாங்கவென்பது-ஒருருவை இரட்டிக்கிரட்டி சேர்த்தவிடத்து நெகிழாதபடி நிரம்பநிறுத்தவும் அவ்விடத்துப்பெறுமிர

ட்டியை ஒப்பாக உருவானவழி நிற்கு மானநிறுத்திக் கழியுமானங்கழிக்கவும் வல்லனு யென்றவாறு.

௫௦ - ௫௨. வாங்கிய ...... சேர்த்தியென்பது - இப்படி நிகழ்ந்த உருக்களில் யாழ்ப்பாடலும் குழலிசையும் கண்டப் பாடலும் இயைந்துநடக்கின்றபடி கேட்போர்க்குச் செவிகொள்ளாநிற்கத் தண்ணுமைக்கருவியமைந்தகரணத்தாற் குறியறிந்து சேரவாசிக்கவல்லனு யென்றவாறு.

௫௩. ஆக்கல் - மற்றக்கருவிகளிற் குறையை நிரப்புகை

௫௩. அடக்கல் - மற்றக்கருவிகளின் மிகுதியடக்குதல்.

௫௩. மீதிறம்படாமை - ஆக்குமிடத்தும் அடக்குமிடத்தும் இரந்திரந்தோன்றுமற் செய்கை

௫௪. சித்திரக்கரணஞ் சிதைவின்று செலுத்தும் - இவ்வினைத்துஞ் செய்யுமிடத்துக் கைத்தொழில் அழகுபெறச் செய்து காட்டவல்லானென்றவாறு.

௫௫. அத்தகு ...... முதல்வனுமென்பது - மேற்சொல்லப்பட்ட கூறுபாடுகளில் ஒன்றும் குறைவின்றியே யிருக்கும் தண்ணுமைக்கருவியாசிரியனுமென்றவாறு.

உணர்ந்து மிகுத்து வாங்கிச் சேர்த்திச் செலுத்துந் தண்ணுமைமுதல்வனென்க.

இனி நூலோர் பாடலாசிரியன் கூறுகின்றது.

௫௬ - ௫௭. சொல்லியவியலபிற ...... குழலோன் றானும் :

௫௬. சொல்லிய வியல்பாவது - நூல்களிற் சொன்ன முறைமையென்றவாறு.

௫௬ - ௫௭. சித்திரவஞ்சனை புல்லியவறிந்தென்பது - சித்திரபுணர்ப்பும் வஞ்சனைப்புணர்ப்புமென்று சொல்லப்படாநின்ற இரண்டுகூற்றினையு மறிந்தென்றவாறு.

இவற்றுள் சித்திரப்புணர்ப்பாவது இசைகொள்ளுமெழுத்துக்களின்மேலே பண்ணீர்மைநிறுத்தல், வஞ்சனைப்புணர்ப்பாவது - இசைகொள்ளாவெழுத்தின்மேல் வல்லொற்றுவந்தவழி மெல்லொற்றுப்போல் நெகிழ்த்துப்புணர்த்தல்.

௫௭. புணர்ப்போன்பண்பினென்பது புணர்க்கத்தக்க பாடலாசிரியனையொத்த அறிவினையுடையனாகி யென்றவாறு.

௫௮. வர்த்தனை ...... பெய்தாங்கென்பது - வங்கியத்து விரலுணர்ந்து தூர்த்தலைகள் தர்ச்சனிமுதலாக விட்டுப்பிடிப்பது ஆரோகணமாதலானும் கனிட்டன்முதலாக விட்டுப்பிடிப்பது அவரோகணமாதலானும் இரணடுகூறும் இப்படிச் செய்தல் வர்த்தனையாதலின் இப்படியால் நாற்றுமூன்று பண்ணீர்மைகளையும் தந்நிலைகுலையாமல் நிரம்பக் காட்டவல்லானுயென்றவாறு. ஆங்கு - அவ்விடத்து. தர்ச்சனி [=சுட்டாமுட்டி.] கனிட்டன் - சிறுவிரல்.

௫௯ - ௬௦. ஏற்றிய குரலிளி ...... னுகியென்பது பதினேற்கோவையினிடத்துக் குரலைரம்பிரட்டிக்கவரும் அரும்பாலையும் இளிநரம்பு இரட்டிக்கவரும் மேற்செம்பாலையும்போல அல்லாத பாலைகளையும் இசைநூல்வழக்காலே இணைநரம்புதொடுத்துப்பாடும் அறிவினையுடையானுயென்றவாறு.

௬௧. பண்ணமை ...... யறிந்தென்பது - பண்ணுதலமைந்த முழவின்கண்ணெறியினையறிந்தென்றவாறு.

௬௨. தண்ணுமை ...... பொருந்தியென்பது - தண்ணுமையாசிரியன்றன்னொடும் பொருந்தியென்றவாறு. உம்மையாற பொருந்துமிடம் பொருந்தியென்க.

௬௩. வண்ணப் ...... வைத்தெனபது - பட்டடையென்பது நரம்புகளில் இளிக்குபெயர், என்னை? எல்லாப்பண்ணிற்கும் அடிமனையாதலின். வண்ணமென்பது நிறம், நிறத்தினையுடைய பட்டடையென்றவாறு. இதனை யாழ்மேல் வைத்தென்க. ஆங்கென்பது அசை.

௬௪. இசையோன் ...... னியற்றுகையென்பது - இக்கிரமத்தினலே பண்களை யாழ்மேல்வைத்து அதன்வழியே இசைக்காரன்பாடிய பாட்டினியல்பையென்றவாறு.

௬௫. வந்தது வளர்த்தென்பது - பாடுகின்ற பண்வரவுகளுக்குச் சுரம் குறைவுபடாமனிறுத்தியென்றவாறு.

௬௬. வருவதொற்றியென்பது-அந்தப் பண்ணுக்கு அயல்விரவாமல் நோக்கியென்றவாறு.

௬௭. இன்புறவியக்கியென்பது-வண்ணமுதலாகக் காட்டப்பட்ட பாடலியல்வழகெல்லாம் இரசம்பொருந்தநிரம்பக் காட்டியென்றவாறு.

௬௮. இசைபடவைத்தென்பது - முற்கூறிய மூதலும் முறையுமுதலான பண்

ணிலக்கணம் பதினொன்றினையும் நிரம்ப வைக்கவல்லானுமென்றவாறு.

சுஎ. வார நிலத்தைக் கேடின்று பார்த்தென்பது முதனடை வாரம் கூடை திரளென்று சொல்லப்படாநின்ற இயக்கநான்கினும் முதனடை மிகவுந்தாழ்ந்த செலவினையுடைத்தாதலானும், திரள் மிகவும் முடுகியநடையினை யுடைத்தாதலானும், இவைதவிர்ந்த இடைப்பட்ட வாரபபாடல் சொல்லொழுக்கமும் இசையொழுக்கமுமுடைததாகலானும், கூடைப்பாடல் சொற்செறிவும் இசைச்செறிவுமுடைத்தாகலானும், சிறப்புநோக்கி இவ்விரண்டினுள்ளும் வாரப்பாடலை அளவுநிரம்பநிறுத்தவல்லானுமென்றவாறு. எனவே கூடைப்பாடலும் அமைவதாயிற்று. நிலம் - இடைநிலம்.

சுஎ - சுஅ. ஆங்கீர நிலத்தினெழுத்தெழுத்தாகவெனபது - பாடலிடததுச் சொன்னீர்மையினெழுத்துக்கள் சிதையாமல் எழுத்தை எழுத்தாகவிசைக்குங் குழலோனென்றவாறு. அனறியும் சரிகமபதநி என்பாருமுளர்.

சுகூ. வழுவின்றிசைக்குங் குழலோன்றானுமென்பது - இச்சொல்லப்பட்ட இயல்புகளை இலக்கணப்படியே வாசித்துக் காட்டவல்ல வங்கியவாசிரியனுமென்றவாறு.

அறிந்து மயலறப்பெய்து உணர்வினனுேி அறிந்து பொருந்தி வைத்து வளர்த்து ஒறறி இயக்கி வைத்துப் பார்த்து இசைக்குங் குழலோனென்க.

இனி யாழாசிரியனமைதி கூறுகின்றது.

௭0 - கூச. ஈரேழ் தொடுத்த......... புலமை யோனுடன்:

எ0 - எக. ஈரேழ் தொடுத்த . ... வேண்டியென்பது - ஆயப்பாலையாய் நின்ற பதினாற்கோவை பொலிந்த செப்பமுடைத்தாய்ப் பாடலியல்பொத்தமைந்த சிறப்புடைத்தாகலினால் அதிலே செம்பாலை படுமலைப்பாலை செவ்வழிப்பாலை அரும்பாலை கோடிப்பாலை விளரிப்பாலை மேற்செம்பாலையென்று சொல்லப்பட்ட எழுபாலையினையும் இணைநரம்பாகத்தொடுத்து நிரம்பநிறுத்திக்காட்டல் காரணமாகவென்றவாறு.

எஉ - எஅ. வன்மையிற்கிடந்த.... டவள்வயிற் சேரவென்பது - "தாரபாக முங் .... மென்மனார் புலவர்" என்னுஞ்சூத்திரத்தாலே வரப்பட்ட பாலையின்முடிவுதானமாய் வலிந்த நிலைமையினையுடைய தாரம்பெற்ற இரண்டலகில் ஓரலகையும் விளரிப்பாலையின் முதற்றுராமாதலின் மேனிற்கிற குரனரம்பு பெற்ற நாலலகில் இரணடலகையும் தாரநரம்பின் அந்தரக்கோவிலே கைக்கிளையாகநிறுத்தத் தாரந்தான் கைக்கிளையாயிற்று. அந்தரம்பில் ஒழிந்த மூலகையும் பண்டையவிளரியிலே கூட்ட அவ்விளரி துத்தநரம்பாயிற்று. இப்படியாற் பன்னிருகாற்றிரிக்கப் பன்னிரு பாலையுமபிறக்கும், பன்னிருபாலையினுரு தொணூற்றறுன்றும் பன்னிரணடுமாய பணகள் நூற்றுமூன்றாதற்கு காரணமாமெனக்கொள்க. இவ்விடத்துத் தாரநரம்பின் அந்தரக்கோலைத் தாரமென்றது, "தன்னுமுந் தாரமுந் தனவழிப படா" என்னுஞ் சூத்திரத்தாலெனக்கொள்க

எரு. என்ன மகளிருங் கிளைவழிச் சேரவெனபது - இதனைப பெண்டாக்குரிய தானமாகிய பதினாற்கோவையிலே கூட்டவேணுமெனறவாறு கூட்டும்படி —

அ0 - அக. மேல துழையினி ... ... செம்பாலை யாயதென்பது - உழைமுதறகைக்கிளை யிறுதியாக மெலிவுநான்குமசமமேழும் வலிவுமூன்றுமாய் உழைமுதலாகச் செம்பாலையாயதென்க.

அஉ - அங. இறுதி யாதி . . . . . ளிங்காதெனபது - தாரமுதலாகப் பெறுமுறையாய்வந்தபடியே நீங்காமலென்றவாறு.

அச - அரு. படுமலை செவ்வழி .. . திரிந்தபினென்பது-கைக்கிளைகுரலாய்ப் படுமலைப்பாலையும் துத்தங்குரலாய்ச் செவ்வழிப்பாலையும் குரல்குரலாய் அரும்பாலையும் தற்கிழமைதிரிந்தபினென்க. அரும்பாலைக்கு நரம்பு இரட்டித்தபெறறிதென்றவாறு.

அசு - அஎ. முன்னதன் வகையே ..... கிடக்கையினெனபது-முன்பிற்படியே தாரங்குரலாகக் கோடிப்பாலையும், விளரிகுரலாத விளரிப்பாலையும், இளிகுரலாக மேற்செம்பாலையுமாயின; இனி மேற்செம்பாலை இளிநரம்பிரட்டித்த நிலைமையினையுடைத்தாய் இப்படிச் சமைந்த பதினாற்கோவைப்பாலைநிலையிலென்றவாறு.

கo. இளைநரம் புடையன விணைவுறக் கொண்டாங்கென்பது - இப்பதினாற் கோவைப்பாலைநிலையினும் பண்ணுநிலையிலும் இரட்டித்த குரல்குரலாகிய அரும்பாலையும் இளிகுரலாகிய மேற்செம்பாலையும்போல அல்லாத ஐந்து பாலையும் உழைகுரலாகச் செம்பாலைக்கு உழை பெய்தும் கைக்கிளைகுரலாகப் படுமலைக்குக் கைக்கிளைபெய்தும் துத்தங்குரலாகச் செவ்வழிப்பாலைக்குத் துத்தம்பெய்தும் தாரங்குரலாகக் கோடிப்பாலைக்குத் தாரம்பெய்தும் விளரிகுரலாக விளரிப்பாலைக்கு விளரிபெய்தும் பாடப்படுமென்றவாறு.

கக - கஉ. யாழ்மேற் பாலை . . . . மெலியவென்பது - யாழினிடத்து அரும்பாலைமுதலியன இடமுறை மெலியவும் குழலினிடத்துக் கோடிப்பாலைமுதலாயின வலமுறைமெலியவும் பாடப்படுமென்றவாறு.

கஙு - கச. வலிவு . புலமையோனுடனென்பது - இப்படியால வலிவும் மெலிவும் சமனுமென்று சொல்லப்படாநின்றதானநிலையினையுடைய இசைக்கூறுபாடுகளுக்கெல்லாம் ஈரப்பவைகெடாமலும் பண்ணீர்மை முதலாயின குன்றாமலும் புணர்க்கவல்லனாய் அப்புணர்ப்பிற் கமைந்த எழுத்துக்களால் இசைசெய்யவல்ல யாழாசிரியனுமே னேறவாறு.

(எக) இறத்தல்வேண்டிப் (கஎ) பொலியக்கோத்த புலமையோனென்க

உடனென்பது - ஆடலாசிரியன்முதலாயினாருடனென்றவாறு.

(ஆ) அரங்கின் மாத்திரை கூறுகின்றது.

கஅ - ககச. எண்ணியநூலோர் . . . . . அருந்தொழிலரங்கத்து

. . - . . எண்ணியநூலோர் . . வகுத்தனர்கொண்டென்பது - எண்ணப்பட்ட நாடகநூலாசிரியர் வகுத்த இயல்புகளின் வழுவாதவகை அரங்குசெய்யத்தவர் வரிவினை பொருத்தமுதலிய சில குற்றங்கள் நீங்கினவிடத்திலே கலந்தெரிந்து இவ்விடமென்று வகுத்துக்கொண்டென்றவாறு.

கஎ - கoo. புண்ணிய நெடுவரைப் . . . . . நால்விரலாகவென்பது - பொதியில் வரைமுதலான புண்ணியநெடுவரைப்பக்கங்களில் நெடிதாகி உயரவளர்ந்த மூங்கிலிற் கண்ணொடுகண்ணிடை ஒருசாணாக வளர்ந்ததுகொண்டு நூல்களிற்சொல்லுகிறபடியேஅரங்குஞ்செய்ய அளக்குங்கோல் உத்தமன்கைவிரல் இருபத்துநாலுகொண்டது ஒருமுழமாகக் கோல்நறுக்கியென்றவாறு; "ஒத்த வணுமுத லுயர்ந்து வருகணக்கி, லுத்தமன் பெருவிர லிருபத்து நால்கு, கொண்டது கோலே கோடற் குறிப்பணர்ந்த, தண்டாத கேள்வித் தலைவர் இளந்தனரே" என்றாராகலின்.

கoக - கoஉ. எழுகோ . . . . . . தாகியென்பது - அக்கோலால் எழுகோலகலமும் எட்டுக்கோல் நீளமும் ஒருகோல் குறட்டுயரமுமாயென்க; என்னை? "அக்கோலேழகன் . . . மூயரவுமுரித்தே" என்றாராகலின்.

கoஙு - கoச. உத்தரப் பலகை . . . வரங்கிலென்பது - தூணத்துக்குமீது வைத்த உத்தரப்பலகைக்கும் அரங்கினிடத்து அகலத்துக்கிட்டபலகைக்கும் இடைநின்றநிலம நான்குகோலாக உயரங்கொண்டு இத்தன்மையவாய அளவுக்குப்பொருந்த வகுத்த வாயிலிரண்டினையுடையதாகச்செய்த அரங்கிலென்றவாறு. வாயிலிரண்டும், புகச்சமைத்தவாயிலும் புறப்படச்சமைத்தவாயிலுமெனக்கொள்க

கoரு தோற்றியவரங்கு - இப்படியாற் சமைக்கப்பட்ட நூலிற்சொல்லுகிறபடியே எல்லாவிலக்கணமும் தோற்றின அரங்கென்க.

கoசு - கoஎ தொழுதன . . . . .வைத்தென்பது - அந்தணர் அரசர் வணிகர் சூத்திரரென்று சொல்லப்படாநின்ற நாலு வருணத்துப்பூதரையும் மேனிலத்தேயாவரும் புகழ்ந்து வணங்கவைத்தென்றவாறு; என்னை? "கூறிய வரங்கிற் . . . . . வியற்பிற் றுமே" என்றாராகலின்.

கoஅ. தூணிழற் . . . . கெடுத்தென்பது - தூணகளினிழல் நாயகப்பத்தியின்கணணும் அவையினகணணும் படாதபடி மாட்சிமைப்பட்ட விளக்கையேற்றியென்றவாறு.

கoகூ - ககo. ஒருமுகவெழினியும் . . வகுத்தென்பது - இடத்தூணினிலையிடத்து ஒருமுகவெழினியும் இரண்டுவலத்தூணினிலையிடத்துப் பொருமுகவெழினியும் • கரந்துவரலெழினிமேலதாகவும் செயற்பாட்டுடனே வகுத்தென்றவாறு.

ககக. ஓவியவிதானத்து - சித்திரவிதானமான பலதொழில்களையுமுடைத்தாகி.

ககக - ககஉ. உரைபெறு.... ...நாற்றியென்பது - நல்லவாகிய முத்துமாலைகளாற் சல்லியுந்தூக்குமாக நாற்றி.

ககரு. விருந்துபடக் ... ...லரங்கத்தென்பது - அழகினாற் புதுமைத்தாகச் சமைத்த அரங்கினகத்தென்றவாறு.

(கரு) வகுத்தனர் கொண்டு (க0சி) வைத்து (க0எ) எடுத்து (கக0) வகுத்து (ககஉ) நாற்றிக் (ககரு) கிடந்த அரங்கமென்க.

நாற்றுதற்கு இடமாகிக் கிடந்த அரங்கமென்க.

ககசு - கஉஅ. பேரிசைமன்னர்...... புகுந்து முன்வைத்து:

ககஎ - கச) பேரிசை மன்னர்..... நனிகொண்டென்பது - பெரிய கீர்த்தியையுடைய அரசர் பொருதுடைந்து புறங்கொடுத்தவழிப் பறிக்கப்பட்ட அழகிய நற்கொற்றக்குடையின் காம்பைத் தலைக்கோலாகக்கொண்டென்றவாறு.

என்றது - தலைக்கோல் கொள்ளுமிடத்து மாற்றுவேந்தரெயிற்புறத்து வெட்டினமூங்கிலும புண்ணியவரையின் மூங்கிலும் மாற்றரசர் குடைக்காம்புமாமென்றவாறு. இது கூறிற்று; வேதநூலும் பொதுவியலுமாதலான்.

கக - கஎ. கண்ணிடை . . போகியென்பது-கணுக்டோறும் நவரத்தினங்களாற் கட்டி இடைநிலங்களைச் சாம்பூநதமென்னும் பொற்றகட்டாலே செறிய மலக்கமாகக்கட்டியென்றவாறு.

மலக்கமாவது மாறுகக்கட்டுவது.

கசஉ - கஉ0. காவலவெண்குடை ...தலைக்கோலென்பது இத்தலைக்கோலைத் தேவேந்திரன்மகன் சயந்தனாகநினைந்து மந்திரவிதியாலே பூசித்து வழிபட்டு இராசாவின் கோயிலிலே காப்பமைத்திருத்தக்கடவதென்றவாறு.

சயந்தனென்றதற்குக் காரணம் மேலே சொன்னோம்.

கஉக - கஉஉ. புண்ணிய நன்னீர . மாலையணிந்தென்பது - நாடகக்கணிகை தலைக்கோல் கொள்ளுநாளன்று புண்ணிய தீர்த்தங்களினீரைப பொற்குடத்திலே யெடுத்துக்கொண்டுவந்து இத்தலைக்கோலை அபிடேகம்பண்ணி அதன்பின்பு மாலைகளுஞ் சூட்டி யென்றவாறு.

முன்புசொல்லிப்போந்த (உரு) நாடகவாசிரியன்முதலானோர் (ககரு) அரங்கத்தின்கணே (கஉஅ) இத்தலைக்கோலை வைத்துப் (கஉக) பொற்குடத்தால் (கஉஉ) நீராட்டி மாலைசூட்டியென்க.

கஉரு. நலந்தருநாளாலென்பது-நல்ல நாளிலென்றவாறு.

இத்தை நல்லநாளில் (கஉஉ) நீராட்டியென்று முன்னேசேர்க்க.

கஉரு - கஉசு. பொலம்பூ ஓடை ... கொண்டென்பது - பொற்பட்ட முதலாகிய ஆபரணங்களையுடைய பட்டவர்த்தனத்தினகையில வாழ்த்துடனே கொடுத்தென்றவாறு.

கஉஎ - கஉஅ. முரசெழுந் தியம்பப் .. முன்வைத்தெனபது - வீரமுரசு முதலாகிய பலவாச்சியங்களுமார்ப்ப அரசனும் மந்திரியும் புரோகித சேனாபதித்தொடக்கத்தாருங்கூட [illegible] தேரினையும் [illegible] செய்து தேரின்மேனின்ற [illegible] தலைக்கோலைக் கொடுத்து தேரினை [illegible] அரங்கத்தின்கட்பதுத்து தலைக்கோலை [illegible] முகமாகவைத்தபின்னென்றவாறு

[illegible]

[illegible]

கஉ[illegible] [illegible] முன்வைத்தென [illegible]

[illegible] முதலியென்பது [illegible]

கருக. [illegible] - நாடகக்கணிகையாள் [illegible] முறையாய் மேலிருப்ப [illegible] முறைமையாவது "ஆடல் முக்கோல் [illegible] [illegible]" என்று [illegible] முறைமையுமேகதிற்றகை. [illegible] - [illegible] கருவியாளர்.

கருச - கருஎ. [illegible] முன் வழக்கொடு பொருந்தியென்பது நாடகக்கணிகையாகிய அரங்கேறுகின்ற [illegible]

தவி அரங்கத்திலே வலக்கான் முற்பட விட்டேறிப் பொருமுகவெழினிக்கு நிலையிடனான வலப்பக்கத்துத் தூணிடத்தே சேர்தல் வழக்கென்றுயிடததாலே சேர்ந்தென்றவாறு.

கஙக - கஙச. இந்நெறி வகையா ... தோரியமகளிருமென்பது மாதவி வந்தேறிநின்றபடி இடத்தூணிலையாகிய ஒருமுகவெழினியிடம்பற்றிய பழைய நெறியியற்கையினையுடைய தோரிய மடந்தைமுதலாயினருமென்றவாறு.

தோரியமடந்தையராவார் - ஆடிமுதிர்ந்தார், என்னை? "இந்நெறி வகையா ... ... தோரிய மகளிர்" எனவும், "தலை: சோர்கவை .. தோரிய மகளே" எனவும் சொல்லுதலின்.

கஙரு - கஙசு ... பாட ... வென்பது - ... ... செய்யப்பாட ... பாடவென்றவாறு.

வாரமிரண்டாவன ... ... சொற்றுவாரமென்றும் செய்யுள் அவை தாளத்து ஒருமாத்திரைக்கு இரண்டு மாத்திரையும் பெறுவதாம்.

கஙஎ - கஙஅ ... கருவிகளெல்லாமென்பது - செய்யப்பாடலின்கணின்று கூடி இசைக்கப்படாநின்ற கருவிகளெல்லாமென்றவாறு.

இக்கருவிகள் ... ... கூடியிசைத்தனவோவெனின்,—

கஙக. குழல்வழி நின்றது யாழே யென்பது - வங்கியத்தின்வழிச் செல்கின்றது யாழ்ப்பாட்டென்றவாறு. எனவே மிடற்றுவழி யாழாதலின் மிடற்றுமட்டமும் யாழ்வழித்தெனக்கொள்க.

கஙக - கச0. யாழ்வழித் ... ... தகவேயென்பது - யாழ்ப்பாடலின்வழியே தண்ணுமைக்கருவிநின்றதென்றவாறு.

கச0 - கசக. தண்ணுமைப் பின்வழி நின்றது முழவேயென்பது - மத்தளக்கருவியின்வழியே குடமுழவுநின்றதென்றவாறு.

கசக - கசஉ. முழவொடு கூடிநின்றிசைத்த தாமந்திரிகையென்பது - முழவொடுகூடிநின்ற வாச்சியக் கூறுகளை அமைத்தது ஆமந்திரிகையென்னுங் கருவியென்றவாறு.

ஆமந்திரிகையாவது - இடக்கை. நின்றது கருவி யென்றது இசை யென்க.

அஃதேல் மிடற்றுப்பாடல் சொல்லிற்றிலராலெனின், வாரப்பாடல் பாடியபின்னனவே மிடற்றுப்பாடலுமடங்கும்.

கசங. ஆமந் திரிகையோ டந்தரமின்றியென்பது - இவ்வாமந் திரிகையோடே முன்சொன்ன குயிலுவக் கருவிகளனைத்தும் பருந்துமநிழலும்போல ஒன்றாய்நிறபவென்றவாறு.

கசச. கொட்டிரண் டுடையதோர் மண்டல மாகவென்பது - ஒரு தாளத்துக்கு இரண்டுபற்றாக வென்றவாறு.

கசரு. கட்டிய மண்டலம் பதினொன்று போகவென்பது - பஞ்சதாளப்பிரபந்தமாகக் கட்டப்பட்ட தேசியொத்தை ஒருதாளத்துக்கு இரண்டுபற்றாகப் பத்தும் ... ஒன்றுமாகப் பதினொருபற்றாலே தேசிக்கூத்தை ஆடிமுடித்தென்றவாறு.

கசசு. வந்த முறையின் வழிமுறை வழாமலென்பது - இப்படிச் செய்கை நாடகநூல்களினமைந்த முறையாகலான், அம்முறை வழுவாமலென்றவாறு.

கசஎ. அந்தரக் கொட்டுட னடங்கிய பின்னரென்பது - . ... அந்தரக் கொட்டென்றும் முகமென்றும் ஒத்தென்றும் இதற்குப்பெயர்.

இந்த ஒத்தாடிய பின்னரல்லது உருவு காட்டுகை வழக்கல்ல வென்றவாறு; என்னை? "முகமா டெறிரி யோகப பொருட்டே" என்பதனாற் காண்க.

கசஅ - கசகூ. மீத்திறம் .... வக்காலை-வகுத்துப் பாறபட நின்ற பாலைப் பண்மேலென்பது - மங்கலப் பண்ணாய் நரப்படைவுமுடைத்தாயிருக்கிற பாலைப் பண்ணை அளவுகெடாதபடி அளத்தியிலேவைத்து அதனமேலே யென்றவாறு.

கரு0. நான்கினொரீஇய நன்கனமறிந்தென்பது - மங்கலச்சொல்லினையுடைத்தாய் நாலுறுப்புங்குறைபாடில்லாத உருவுக்குச் சொற்படுத்தியும் இசைப்படுத்தியும் அறிந்து பாட்டும் கொட்டும் கூத்தும் நிகழ்த்தியென்றவாறு.

நாலுறுப்பாவன :—உக்கிரம் துருவை ஆபோகம் பிரகலை எனவிவை. நாலுறுப்புங் குறைபாடில்லாத உருவெனவேண்டியது, மூன்றுறுப்பாலே வருவனவுமுளவாதலின. அவை இரண்டாமடியே ஈற்றடியாகப் பாடிமுடிவன; அவை மங்கலத்துக்குப் பொருந்தாவென்க.

கருக. மூன்றளந் தொன்று கொட்டி யென்பது - மூன்றொத்துடைய மட்டத் தாளத்திலே யெடுத்து ஒரொத்துடைய ஏகதாளத்திலே முடித்தென்றவாறு.

கருஉ. ஐதுமண் டலத்தாலெனபது - அழகிய மணடலநிலையாலென்றவாறு; எனனை? "கொண்ட தேசிப் பகுதி யெல்லாம், மண்டல நிலையின் வருதக வுடைத்தே" என்பவாகலின்.

கருஉ. கூடை போக்கியென்பது - தேசிககு ஒற்றித்தொத்தலும் இரட்டித் தொத்தலுமேயாகலின், தேசிக்கூறெல்லாம் ஆடிமுடித்தெங்க.

இனி மார்க்கங் கூறுகின்றது.

கருச. ஆறு நாலு மம்முறை போக்கி யென்பது-பஞ்சதாளப்பிரபந்தமாககட்டப்பட்ட வடுகெலாத்தையும் தேசியெர்த்தைக் காட்டினாற்போல இரட்டிக்கிரட்டியாக வாடியென்றவாறு.

கருரு - கருசா. கூறிய வைந்தின்..... பின்றையென்பது - சொல்லிப்போந்த தேசிபோலவடுகும்மட்டத்தாளமுதலாக ஏகதாளம் அந்தமாக வைசாகநிலையிலே ஆடிமுடித்தபின்னரென்றவாறு; என்னை? "வைசாக நிலையே வடுகிற்கும் வனாயார்" என்றாராகலின்.

கருஎ. பொன்னியல் பூங்கொடி புரிந்துடன் வகுத்தெனவென்பது - பொலிவினையுடைத்தொரு பொற்கொடியானது கூத்தாடினாற்போலவென்றவாறு.

கருஅ-கருகூ. நாட்டிய . . . . ளாதலினென்பது - தாண்டவம் நிருத்தம் நாட்டியமென்னும் மூன்று கூறுபாட்டினும் நாட்டியமென்பது புறநடத்தையாதலின், அதனை நூல்களிற் சொன்னமுறைமை வழுவாமல் அவினயங்காட்டி பாவகந்தோன்ற விலக்குறுப்புப பதினொவின் வழுவாமல் ஆடிக்காட்டினாளாதலினென்றவாறு. அன்றியும், நாட்டிய நன்னூல் - இக்காதையிற் கூறிய முத்தமிழ் வகையும் காட்டினளாதலினென்றுமாம்.

கசுய. [இலைப்பூங் கோதையியல்பினின் வழாஅதென்பது - இம்மாதவியுடைய கூத்துக்கும் பாட்டுக்கும் அழகுக்கும் தக்கபடியென்றவாறு. அன்றியும், இலைப் பூஙகோதை - அரசனுடைய மாலையுடனே முறைமையாகிய ஆயிரத்தெண் கழஞ்சு பொன்னும் சிறப்பாகப்பெற்றாள்; என்னை? "முட்டில் பாணரு ... ... பெறுப" என்றாராதலின். இலைப்பூங் கோதை - பச்சைமாலை. இத்துடனே தலைக்கோலெய்தியென்றுமாம். பச்சை மாலைக்கிடை ஆயிரத்தெண்கழஞ்சாதலின், இது பரிசத்துக்குப் படிக்கலனென்றுமாம்.]

கசுக. தலைக்கோ லெய்தி யென்பது வரிசைக்குத் தக்கபடி தலைககோற்பெயர்பெற்றென்றவாறு.

கசுக. தலையரங்கேறியென்பது - முன்னரஙகேறப்பெற்றெனறவாறு.

கசுஉ - கசுங. விதிமுறைக் பெற்றனளென்பது-இந்நாடகக்கணிகையர்க்குத் தலைவரிசை ஆயிரத்தெண்கழஞ்சுபொன் பரியம்பெறுகை வழக்காதலின், இவளும் ஆயிரத்தெண்கழஞ்சு பொன் பரியம்பெற்றாளெனறவாறு.

கசுரு. ஒருமுறையாகவெனபது - ஒரு நாளைக்குப பரியமாகவென்று அரசனாற பெறப்பட்டாள். பெறுகை நினைப்பிக்கையுமாம். ஆயிரங்கழஞ்சு பரியத்திற்கும், எணகழஞ்சு அறிவுகருமாகநிச்சயித்தது.

கசுசா. அதுவேயென்பது - அன்று தொடங்கி நாடோறும் அந்தபபடியே பரியமாகவென்றவாறு. அன்றியும், அந்த மாலையென்றுங்கொள்க.

கசுஎ - கசுஅ. நூற்றுப்பத்தடுக்கி . . பான்மையி னிறுத்தவென்பது - இப பொன்றந்து இம்மாலைவாஙகுவான் மாதவிக்கு மணவாளப்பிள்ளையாமென்று சொலலி மான்விழி போன்ற நோக்கினையுடையாளோர் கூனிகைக்கொடுத்து நகரியிற் பெருந்தெருவிலே விலைக்குவிற்பாணைப்போலவதோர் பக்கமே நிறுத்தவென்றவாறு.

இவருக்குப்பரியமென்னுந்தே மாலைக்குப் பரியமென்றது இடக்கரடக்கு. வீறுயர்பசும்பொன் - மாற்றற்றபசும்பொன். இம்மாலை இராசாவின்பக்கற்பெற்ற பசைமாலை.

கஎய - கஎஉ. மாமலர் நெடுங்கண்... மணமனைபுக்கென்பது - பெரியதாமரைமலர்போன்ற கண்ணினையுடைய மாதவி மாலையைப் பரியம் ஆயிரத்தெணகழஞ்சு பொன்னையுங்கொடுத்து வாங்கிக் கோவலன் கூனியுடனே மாதவியுடைய மணமனையிலே புகுந்தென்றவாறு.

கஎஉ - கஎச. மாதவிதன்னோ......... விரும்பினனாயினனென்பது - இக்கோவலன மாதவிதன்னுடனே அணைந்தபொழுதே அயர்ந்து மயங்கியிருந்து மனையையும் அவளையும் விட்டுநீங்கமுடியாத விருப்பத்தையுடையனாயினனென்றவாறு.

கஎரு. வடுநீங்கு........மறந்தெனஎன்பது - குற்றமற்ற சிறப்பினையுடைய அகத்தையும மனையாளையு மறந்தென்றவாறு.

எனவென்பது ஈற்றசை.

ச.—அந்திமாலைச்சிறப்புச்செய்காதை.

க - அ. விரிகதிர் பரப்பி.........காவலனிசிறந் ததுவென:

உ. திகிரி - தேராழி.

ங திசைமுகம் - திசையாகியமுகம். மலர்க்கண் - மலராகிய கண.

ரு - சு. கள்ளாகியநீர்.

சு. மாலைக்காலத்துப் பனியமுண்டாகலான்.

அ. அரசு - தன்கொழுநன், என்றது ஆதித்தனை.

கூ. கறை - கடமை

க0. அறைபோகு குடிகள் - கீழற்றுப்போனகுடிகள்.

கஉ. விருந்தின்மன்னர் - வேற்றரசர். இன் - போல. கறைகெழுகுடிகள், கணவனிமுதலான தாழ்துணை துறந்தோர்க்குவமை விருந்தினமன்னர், மாதவிமுதலான காதலர்புணர்ந்தோர்க்குவமை.

கங. தாழ்தல் - தங்குதல்.

கரு - கசு. குழலவனாமுல்லை ... ஊதத - கோவலருதும குழலினும் வளர்கின்ற முல்லையினும கோவலரும் தும்பியும் வாய்வைத்தூத. இது நிரனிறை. அன்றியும் கோவலர் குழலினுண்டாகிய முல்லைப்பண்ணைப்பூவிலே தும்பியூதவெனக.

கஎ. அறுகால - அறுகாலாகியவண்டு. குறும்பெனூர், தென்றல் தளிர்ப்பித்தும் பூப்பித்துஞ்செய்யத் தான் ஈண்டுவே புகுந்துண்டலான்.

கஅ. சிறுகாற்செல்வன் - மந்தமாருதமாகிய செல்வன்.

உ0. இறுத்தென - இறுத்ததாக.

அல்லலந்தாலையிலே பிரிந்தோர்துயரமெய்தப்புணர்ந்தோர் மகிழ்வெய்தத் தும்பியூதவாசத்தைச் செலவன் தூற்றமகளிர் விளக்கெடுப்ப விருந்தின்மன்னரைப்போல மாலைவந்திறுத்ததெனக. மாலையைக்குறும்பென்றூர்; இடைநின்ற காலம் பார்த்துவருதலான்.

உரு. மீனரசு - மீனாகிய அரசு; அரசனுலாவப்படுமிடமும் அரசெனப்படும்.

(உரு) பிறைதோன்றி (உசு) மீனரசாடலாலுண்டாகிய விளக்கம்.

உசு. வெள்ளிவிளக்கம் - வெண்மையாகிய ஒளி.

பிறை இம்மாலைக்குறும்போட்டிக்கதிர்பரப்பிச் சந்திரனாட்டையாண்ட விளக்கத்திலேயென்க. வெண்மையொளி - நிலா.

உஅ. சேக்கைப்பள்ளி - சேக்கையிடம்

கூ0. அந்துகின் மேகலை - புடைவைமேற்சூழ்ந்தமேகலை.

கூக. கோவலற்கெதிரி - கோவலனையெதிரேற்று, எனவே முயக்கங்கூறியது.

கூஉ. கோலங் கோடல் - முயக்கத்தாற்குலைந்த ஒப்பனையைத்திருத்தல்.

(உசு) வெள்ளிவிளக்கத்து (கூக) நிலாமுற்றத்துப் (உஅ) பொலிந்து (கூ0) அசைந்தனவருந்தக் (கூக) கோவலற்கெதிரதலாற் (கூஉ) கோலங்கொண்ட மாதவியென்க.

கூக. எதிர்தல் - ஏற்றுக்கொண்டு இன்பஞ்செய்தல்.

கூரு. வெள்ளயிர் - புகைக்குங்கண்டசருக்கரை; கண்டசருக்கரையோடு அகிற்புகைத்தல் மரபு

கூஎ. வான்கேழ் வட்டம் - அழகுகெழுமிய சிலாவட்டம்.

கூஅ. மறுக - தேய்த்துத்திமிர.

(கூஅ) தாமரைக் கொழுமுறியினையும் அதன்மலரினையும் (ச0) குவளையையும் கழுநீர்மலரினையுமுடைய (சக) படலைமாலை; இவ்வகை விரவித்தொடுத்த மாலைக்குப் படலைமாலையென்றுபெயர்.

சஉ. சுந்தரம் - அழகு.

சக - சரு. படலை ஆரம் இவை சிந்தி வேறுபட்ட.

(ருச) மாதவியன்றியும் (சரு) காவியங்கண்ணார் (ருரு) அகிற்புகைதுறந்து (சச) மலிந்துமயங்கிக் (சரு) களித்துயி லெய்தவெனக.

சஎ. சீறடிஸ்யச் சிலம்பொழிய. பிறவற்றிற்கும் இவ்வாறுரைக்க.

ருய. மங்கலவணி - இயற்கையழகு.

ருக. குழையைத்துறந்து வடிந்துதாழ்ந்தகாது.

ருஉ. வியர்ப்பிரிய - கூட்டமில்லாமையின் வியர்வுநீங்க.

ருஎ. கையறுநெஞ்சம் - செயலறவினையுடைய நினைவு.

(சஎ) சிலம்புழுதலியன (ருக) துறந்து (சஅ) நீங்க (ருச) செய்யணிமறப்பச் (ருஎ) செயலறவையுடையளான கண்ணகியெனக.

ருஅ. காதலர்ப்பிரிந்தமாதர் - தங்கள் கொழுநரைப்பிரிந்த மகளிர். நோதக - கண்டார்க்குநோவதக

சுக. அடைதது - அடைபப.

சுஉ. துணைபுணரன்னமென்றார், "புலவன்னை தூவி போலே" என்றமையால் அந்த அணைக்கிட்ட பஞ்சினமெனமைக்கு.

சுஅ. தங்களையுடைய கொழுநரோடு ஊடுதலையுடைய காலததை.

எய. கலங்கா வுள்ளங் கலங்க - அவாகலங்காவுள்ளம் அணையிலே கலங்க.

(ருஎ) கண்ணகியன்றியும் (ருஅ) பிரிந்தமாதர் (சுஎ) இணையணைமேம்படத் திருந்துதுயில்பெறாது (சுஅ) முன்பு ஊடினகாலத்து (எக) விலங்கிநிமிர்ந்த செங்கண் இப்பிரிந்தகாலத்துப புலம்பாலுண்டாகிய முத்துறைப்பவெனக.

எக. விலங்கு பாடமாயின், பக்கமெனக. புலம்பு - தனிமை. முத்து - கண்ணீர்த்துளி

(ருஎ) கண்ணகியன்றியும் (ருஅ) பிரிந்தமாதர் (எக) கண் புலம்புமுத்துறைப்ப.

எஉ - எச. அன்னமாகிய மென்னடையையும், ஆம்பலாறும் நறுவிரையையும், தாமரையாகிய செவ்வாயையும், அறலாகிய கூந்தலையுமுடைய பொய்கையாகிய பெண்.

எரு. வண்டாகிய பள்ளியுணர்த்துவான், நேர்திறம்பாட - புறநீர்மையெனாஇன்றபண்ணைப்பாட.

எசு. குவளை கண்மலர்போல விழிப்ப

எஎ. புள்வாயாகிய முரசம்

எஅ. முன்வாய் - கூர்த்தவாய்

எகு. உரவுநீர்ப்பரப்பினூர் - கடற்பரப்பையொத்தவூர். துயிலெடுப்பியொனுரர்; பிரிந்தார்க்கும் புணர்ந்தார்க்கும் துயிலாமை காமமுண்டாதலால்.

அய. இரவுத்தலைபபெயரும்-தகரமெய்விகாரம், தலை - இடம்; இராத்திரியினிடத்து.

அக பருக்கப்படுதலின், பகல், பகைந்துர்சான் - எல்லாருந்துர்சும் அவைய முன்யாமத்தும ஒருநாதகிரைப்போதுந்துஞ்சாது, மதுரைகாஞ்சியில், "ம றை யாமம் பகலுறக் கழிப்பி" என்பதுமது. இரவும்பகலுந்துஞ்சானையைந்தன் திரிதரவெனக.

(ருச) மாதவியன்றியும் (சரு) காவியங்கணணார் களிததுயிலெய்தவும் (ருஎ) கண்ணகியன்றியும (ருஅ) பிரிந்தமாதா (ருக) உயிர்த்து ஒடுங்கிக் (சுய) சிறந்து குறுங்கண் அடைத்து (சுரு) நாரமுழவு கணை அடையாதுவருந்தக் (சுச) கழுநா (சுரு) சேக்கையிலே மேவாதுகழியா (சுஎ) கண்டுயிலபெறாமல் (எக) உறைப்ப (எரு) வண்டுபாடக் (எசு) குவளைவிழிப்ப (எஅ) ஆர்ப்ப (அய) இரவுப்போம்வைகறையுளவும் (அக) யாமத்தும் பகலுந்துஞ்சான் (அஉ) மகரக்கொடியைந்தன் (அஅ) வாளியொடு வில்லையேந்தி (அகு) திரிதலானே (அச) நகர்காவல் சிறந்ததெனக.

வண்டுபாடக் குவளைவிழிப்ப இரவு போம்வைகறையெனக.

௫.—இந்திரவிழவூரெடுத்தகாதை.

க - உ௫0. அலைநீராடை.........நாள கத்தென :

க-உ. மலையாகியமுலையையுடையஆக த்துப் பேரியாறாகிய ஆரமிழ்னவுறாக்க. (க) நீரை ஆடையாகவும், மலையை முலையாகவும் (உ), யாற்றை ஆரமாகவும், மாரியைக் கூந்தலாகவுமுடைய (௩) மணங்கமழ்ந்தையுடைய (௪) இருளாகியபடாத்தைநீக்கியென்க.

௬. உலகுவிளங்குதற்குக்காரணமான ஒளி - அதித்தன். கதிரைப்பரப்ப.

எ. வேயாமாடம் - தட்டோடிட்டுச் சாந்துவாரப்பட்டன, நிலாமுற்றமுமாம். கலவிருக்கை - பண்டசாலை.

அ. மான்கட்காலதர் - மான்கண்போன்ற சாளரம்

கூ. கயவாய் - புகார்

௰ யவனர் - சோனகர்.

கக. புலம்பெயர் மாக்கள் - கடலோடிகள்

க௨ இலங்குநீர்வரைப்பு - அவர்களிருக்கும் அலைவாய்க்கரை

க௩ வண்ணம் - தொய்யிலெழுதுவன.

க௪. பகை - மயிருக்குப்பகைக்கும் அகிற்புகையாயின் அவையாவன :- "அஞ்சனம் சட்டி யரியாசம் பச்சிலை. யாரமகில் ... டைந்து." விரையாவன — "கோட்டம் .. விரை"

க௭ காருகர் - நெய்வோர், அச்சுக்கட்டிகள் முதலியோர்.

௨௦ அருங்கலம் - ஆபரணம். வெறுக்கை - அர்த்தம். அளந்தறிகடையறியா-அளந்தறிய முடிவறியாத

௨க வளந்தலைமயங்கிய - கப்பல்வளங்களால் தலைமையாகிய.

௨௨. பருதிப்பண்டமொடு - இங்ஙனஞ்சொன்ன பலபண்டங்களுடனே.

௨௩. கூலம் - கருஞ்சரக்கு. கூலவீதி - அங்காடி.

௨௪. காழியர் - பிட்டுவிற்பார். வண்ணருமாம். கூவியர் - அப்பஞ்சுடுவார்.

௨௫. பாசவர் - வெற்றிலைகட்டுவோர். வாசவர் - பரிசவாசம் விற்போர்; அவை "தக்கோலக்..... டைந்து." குட்டிறைச்சிவிற்பாருமாம். பன்னிணவிலைஞர் - ஆட்டுவாணிகர்.

௨எ. ஓசுநர் - பாவர்; மீகாமர், எண்ணெய்விற்பாருமாம்.

௨அ. கஞ்சகாரர் - வெண்கலம்விற்பார், கன்னார். செம்புசெய்ஞர்-செம்புகொட்டுவார்.

௨கூ. கருங்கை - வலியையுடையகை.

௩௦. கண்ணுள்வினைஞர் - சித்திரகாரிகள். மண்ணீட்டாளர்-சுதையாற்பாவையுள்ளிட்டன பண்ணுவார். மண் - சுதை; *"மணணே டியைந்த மரத்தனையர்" என்றாராகலின் குயவருமாம்.

௩க. பொன்செய்புலவர் - உருக்குத்தட்டார்; அரிப்பாருமாம். நன்கலந்தருநர் - இரத்தினப்பணித்தட்டார்.

௩௨. துன்னகாரர் - பாணர். தோலின்றுன்னர் - செம்மார்.

௩௩. கிழி - சீலை. கிடை - கிடைச்சு.

௩௪. பழுதில்செய்வினைப்பால்கெழுமாக்கள் - இவையிற்றாற் கொண்டை முதலியன செய்புலவர்.

௩௫. வழித்திறம் - பண்வழிப்பிறக்குந்திறம்.

௩எ. பெரும்பாண-குழலர்முதலோர்.

௩அ - ௩கூ. சிறுகுறு பாக்கமும - இங்ஙனங்கூறின இவரொழிந்த பிறதொழில்கலையுடையவர்களோடும் விளங்கிய மருவூர்ப்பாக்கமுமென்க.

௪௦. கோவியன்வீதி - செண்டுவெளிப்புறத்தெரு; இராசமார்க்கமெனினுமாம்.

௪௨. மாடமறுகு - வணிகர்குடியிருப்பு. மறையோரிருக்கை - [பஞ்சக்கிராமிகளிருப்பு.]

௪௪. ஆயுள்வேதர் [= கோயிலார்]. காலக்கணிதர் - கணியர்; காலத்தையெண்ணியிடுவார்

௪௫. திருமணிகுயிற்றுநர் - முத்துக்கோப்பார்; வேகடிகள்.

௪எ. வளைபோழுநர் - சங்கறுப்பார்.

௪அ. சூதர் - கைவாரிகள்=நின்றேத்துவார். மாகதர் - இருந்தேத்துவார் = பட்டுக்கள். வேதாளிகர் - வைதாளியாடுவார்.

* திருக்குறள், கண்ணோட்டம், எ.

௪௯. நாழிகைக்கணக்கர் - கடிகையார். கண்ணுளர் - சாந்திக்கூத்தர்.

௫௦. காவற்சணிகையர் - இராக்கிடை வேசையர். ஆடற்கூத்தியர் - அகககூத்துமுதலியனவாடுவார்.

௫௧. பூவிலைமடந்தையர் - பரிசநூகொள்வார். சிலதியர் - குற்றேவன்மகளிர்,

௫௨. குயிலுவர் - தோற்கருவி துளைக்கருவி நரப்புக்கருவி உருக்குக்கருவியாளர். பன்முறைக்கருவியர் - படைக்கும் விழவுக்குநகொட்டுவார்.

௫௩. வேழம்பர் [=சாரமாணிகள்.]

௫௪. பரிகடவுநர் - அசுவவாதியர்; [பண்ணுவாருமாம்.] களிற்றின்பாகர் - யானைப்பாகர்.

௫௫. தேரூருநர் - தேர்ப்பாகர். மறவர் - வீரர்.

௫௬. பாயிருக்கை - பரந்தவிருப்பு

௫௭. இவற்றையுடைய பீடுகெழுசிறப்பிற் பெரியோரென்க.

௫௭ - ௫௮. பெரியோரிரண்ட பெருமையையுடைய பாடலமைந்த சிறப்பிற் பட்டினப்பாக்கமுமென்க.

மருவூர்ப்பாக்கமும் பட்டினப்பாக்கமுமென இருவகைத்தாகிய வூரின்நடுவிடத்ததை மூனையிடம்போலவென்றது, அவற்றிற்கிடைநிலம் வெளிபபட்டப பொதுப்படக் கிடத்தல்கருதி.'

௬௧. கடைகால்யாத்த - கடை ஒருங்காகயாத்த. மிடைமரச் சோலை - மரநெருங்கினசோலை.

௬௧ - ௬௩. கடைகளை மரத்தடியிலே கட்டப்பட்ட மரச்சோலையையுடைய நாளங்காடியென்க.

௬௪. சித்திரைச்சித்திரைத் திங்கள் சிறந்தென - சித்திரைமாதத்துச் சித்திரைநாள் சிறந்ததென்கையாற் சித்திராபூரணையென்க.

௬௫. உற்றதை - இடையூற்றை.

௬௭. பூதத்துக்கடை - பூதவாசல். பீடிகை - பலிபீடிகை.

௬௮ - புழுக்கல் - அவரை துவரை முதலியன. நோலை - எள்ளுருண்டை. விழுக்குடைமடை - மாங்கிசத்துடனே விரவினசோறு.

௬௯. பொங்கல் - கள்ளு.

௭௦. துணங்கை - சிங்கி; என்னை? "பழுப்புடை ... ... கையாகும்." குரவை - கைகோத்தாடுதல், "குரவைக் கூத்தே கைகோத் தாடல்." அணங்கெழுந்தாடி - தெய்வமேறியாடி.

௭௧ - ௭௩. நிலமடங்கலும் பசியும் பிணியும் பகையுநீங்கி மன்னனுக்கு வசியும் வளனும் சுரக்கவெனவாழ்த்தி. வசி - வசிகரம்.

௭௪. மாதிர்க்கோலம் - எல்லாரும் காதலிக்கப்பட்ட ஒப்பனை. வலவையின் - சமத்தால்; நாணிலிகளபோல வென்றுமாம்.

௭௫. மூதிற்பெண்டிர் - மறக்குடிமகளிர். ஒதையில் - ஆரவாரத்துடனே. பெயர - அவர்பலியிட்டுப்போனவளவிலே.

(௬௯) அவிரொளி கதிர்பரப்பாகிற்பப் (௬௮) புழுக்கல்முதலாயினவற்றைப் (௬௭) பீடிகையிலே (௬௮) சொரிந்து (௭௧) நிலமடங்கலும் (௭௨) பசியும் பிணியும் பகையுநீங்க (௭௧) மன்னனுக்கு (௭௩) வசியும் வளனும் சுரக்கவெனப (௭௫) பெண்டிராகின்று (௭௩) வாழ்த்திப (௭௫) பெயரவென்க.

௭௫. உற்றதை யொழிக்கென - வீரரும் மாக்களும் ஒருவரினொருவர் முறபடப போய் முழுபபலிப் பீடிகையிற் பலி கொடுத்து ஒழிப்பாயாகவென்று பூததுக்குச்சொல்லி.

௮௦. வலிக்குவரம்பாகெனல் - வலிக்கு எல்லையாகென வஞ்சினங்கூறல.

௮௧. கறைத்தோல் - கருங்கடகு.

௮௨. பல்வேற்பரப்ப - பலவேலையுமுடையபரப்பு.

௮௩. களங்கொண்டோர் - வென்றோர். அமலம் - பரப்பு.

௮௮ - ௮௯. சூர்த்து .. . வைத்து - அச்சத்தைச்செய்து கடைசிவந்த கண்ணினையுடைய தலையை அறுத்து நற பலி பீடிகையிலேவைத்தென்க

இனி அரசர்செய்தி கூறுகின்றது.

௯௧. புண்ணியத்திசை - வடக்கு.

௯௫. நசைபிறக்கொழிய - வெண்ணினைவுமேற்போகாது பின்னிட்டொழிய.

௯௬. பகைவிலக்கியது - பகையாய்த் தடுத்தது.

௯௮. கொடுவரியேற்றி - பலியைப பொறித்து. பெயர்வோற்கு - மீள்வோனுக்கு.

௧௦௦. இறைகொடுத்த - விருந்திறையாகக்கொடுத்த. பந்தர் - முத்தின்பந்தர்.

க0உ. பகைபுறத்து - பகையிடத்து. புறம் - இடம்; பகைப்புறமென்பதனைப் பகைபுறமென்றது விகாரம். கொடுத்த - முன்பகையாய்ப் பின் திறையிட்ட. பட்டிமண்டபம் - ஓலக்கமண்டபம்.

க0௩. உவந்தனனெகொடுத்த - மித்துருவாய்க்கொடுத்த.

க0௪. தோரணவாயில் - தோரணத்தையுடையவாசல்.

க0௫ - க0௯ இவைதாம் பொன்னானும் மணியானுஞ்செய்யப்பட்டனவாயினும் கம்மியராற் காணப்படாதன; இவர்களுடைய முன்னோர்செய்த உதவிக்குப் பிரதியுபகாரமாக மயன் நிருமித்துக்கொடுத்தன; இவை தனித்தனி இத்தன்மையவாயினும் தம்மிற்புணர்த்தேத்தப்படுமென்க.

கக0. அன்றியும் - இங்ஙனம் சொல்லப்படுமூன்றிடமன்றியும்.

ககக. வம்பமாக்கள் - புதியோர். தம்பெயர்பொறித்த - தமது பெயரெழுதிய.

ககஉ. கண் - அவ்விடத்து எழுததுப்படுத்த - இன்னாரது பொதியெனவெழுதி இலச்சினையிட்ட.

ககஉ - கக௩. பொதியினையுடைய கடைமுகத்துவாயிலும் கருந்தாழாகிய காவலும் இவற்றையுடையோர்காவலும்.

கக௪. ஓரியதாகி - நீங்கினதாகி.

கக௫. கட்போர் - களவுகாண்போர்.

கக௬. பனிக்கும் - நடுங்கும்

ககக - கக௬. புதியோர் பெயர்பொறித்த தனத்தைக் களவுகொள்ளுவோருண்டாமல் எடுத்ததனத்தைத் தங்கள் தலையிலேவைத்துச் சுழன்றுதிரிகிறதன்றியிற் கொண்டுபோகக்கொடாமையான நினைத்த கள்ளரைக்கடிக்கும் வெள்ளிடைமன்றமென்க.

கஉக. இலஞ்சி - மடு.

கக௮-கஉக. கூனர் குறளர் ஊமர் செவிடர் வியர்தியாளர் முழுகிவலஞ்செய்ய நன்னிறம்பெறும் இலஞ்சிமன்றமெனக.

கஉஉ. வஞ்சமுண்டு-வஞ்சனைப்பட்டு. மயற்பகையுற்றோர் - மயக்கமாகியபகையையுற்றோர்.

கஉ௪. அழுந்தினர் - அழுந்தப்பட்டோர்.

கஉ௭. நிழல் - ஒளி.

கஉஉ - கஉ௭ வஞ்சமுண்டு மயக்கமூர்ந்துயருமுற்று அழுந்தப்பட்டோர் சூழ்ந்துவணங்க நீங்கும் ஒளிகாலப்பட்ட கலலுநின்றமன்றமென்க.

கஉ௮. தவமறைந்தொழுகல் - தவத்திலே மறைந்து தவமின்றியொழுகுதல்.

கஉ௯. அவமறைந்தொழுகும் அலவைப்பெண்டிர் - மறைந்து அவமேயொழுகும் அலவைப்பெண்டிர்.

க௩0. அறைபோகமைச்சர் - கீழறுக்குமமைச்சர். பிறர்மனைநயப்போர் - பிறர்மனைவிரும்பினோர்.

க௩க. பொய்க்கரியாளர் - பொய்ச்சாட்சிக்காரர். புறங்கூற்றாளர் - புறங்கூறுவோர்.

க௩உ. பாசத்துக்கை - பாசத்திடத்து.

க௩௩. காதநான்கும் - ஊர்சூழ்ந்த நாற்காதவட்டகையும்.

க௩௪. பூதசதுக்கம் - பூதந்திரிகின்ற நாற்சந்தி.

தன்மையிலாளர்முதல் ஆறுவகையாகிய இவர்களைப் பாசத்திலகப்படுத்திப் பூதம் புடைத்துண்ணும் சதுக்கமென்க.

க௩௬ ஒருதிறம் - ஒருபக்கம்.

க௩௭. நாவொடு நவிலாது - நாவினுலுரையாமல். நவை - குற்றம். குற்றத்துக்காகக் கண்ணீருகுக்கையால் நவைநீரென்றார். நவைநீரென்றுபாடமோதிப் புதியநீருகுக்குமென்பாருமுளர்.

க௩௫ - க௩௮. கோலகோடினும் உரைநூல் வாரம்பற்றினும் வாய்திறந்து சொல்லாமல் அழுதுகாட்டும் பாவைமன்றமெனக.

க௪0. இவ்வைந்துமன்றத்திலும் பலியிட்டென்க.

பீடத்திலே தலையைவைத்து முரசுமுழக்கி மண்டபமுதலியவற்றும் மன்றங்களிலும் பலியிட்டென்க.

க௪க. வச்சிரக்கோட்டம் - வச்சிராயுதமிருக்குங் கோட்டம். இவ்விடத்திருக்கிறமுரசு.

க௪உ. கச்சை - கீழ்வயிற்றுக்கச்சை. பிடாத்தலை - பிடராகியதலை.

க௪௩. களிற்றரசுவயங்கியகோட்டம் - ஐராபதநிற்குமிடம்.

க௪௫. தருநிலைக்கோட்டம் - கற்பகநிற்குங்கோயில்.

க௪க - க௪௬. வச்சிரக்கோட்டத்திலிருந்தமுரசை ஐராபதநிற்குங்கோட்டத்திலே கொணடுவந்து யானையிலே

௪௯. நாழிகைக்கணக்கர் - கடிகையார். கண்ணுளர் - சாந்திக்கூத்தர்.

௫௦. காவற்கணிகையர் - இராக்கிடை வேசையர். ஆடற்கூத்தியர் - அகக்கூத்து முதலியனவாடுவோர்.

௫௧. பூவிலைமடந்தையர் - பரிசங்கொள்வார். சிலதியர் - குற்றேவன்மகளிர்.

௫௨. குயிலுவர் - தோற்கருவி துளைக்கருவி நரப்புக்கருவி உருக்குக்கருவியாளர். பன்முறைக்கருவியர் - படைக்கும் விழவுக்குங்கொட்டுவோர்.

௫௩. வேழம்பர் [=சாரமாணிகள்.]

௫௪. பரிகடவுநர் - அசுவவாதியர்; [பண்ணுவாருமாம்.] களிற்றின்பாகர் - யானைப்பாகர்.

௫௫. தேரூருநர் - தேர்ப்பாகர். மறவர் - வீரர்.

௫௬. பாயிருக்கை - பரந்தவிருப்பு

௫௭. இவற்றையுடைய பீடுகெழுசிறப்பிற் பெரியோரென்க.

௫௭ - ௫௮. பெரியோர்திரண்ட பெருமையையுடைய பாடலமைந்த சிறப்பிற் பட்டினப்பாக்கமுமென்க.

மருவூர்ப்பாக்கமும் பட்டினப்பாக்கமுமென இருவகைத்தாகிய ஊரின்நடுவிடத்தை முனையிடம்போலவென்றது, அவற்றிற்கிடைநிலம் வெளிபடப் பொதுப்படக்கிடத்தல்கருதி.

௬௧. கடைகால்யாத்த - கடை ஒருங்காகயாத்த. மிடைமரச் சோலை - மரநெருங்கினசோலை.

௬௧ - ௬௩. கடைகளை மரத்தடியிலே கட்டப்பட்ட மரச்சோலையையுடைய நாளங்காடியென்க.

௬௪. சித்திரைச்சித்திரைத் திங்கள் சிறந்தென - சித்திரைமாதத்துச் சித்திரைநாள் சிறந்ததென்கையாற் சித்திராபூரணையென்க.

௬௫. உற்றைதை - இடையூற்றை.

௬௭. பூதத்துக்கடை - பூதவாசல். பீடிகை - பலிபீடிகை.

௬௮ - புழுக்கல் - அவரை துவரை முதலியன. நோலை - எள்ளுருண்டை. விழுக்குடைமடை - மாங்கிசத்துடனே விரவினசோறு.

௬௯. பொங்கல் - கள்ளு.

௭௦. துணங்கை - சியதி; என்னை? "பழுப்புடை ... ... கையாகும்." குரவை - கைகோத்தாடுதல்; "குரவைக் கூத்தே கைகோத்தாடல்." அணங்கெழுந்தாடி - தெய்வமேறியாடி.

௭௧ - ௭௩. நிலமடங்கலும் பசியும் பிணியும் பகையுநீங்கி மன்னனுக்கு வசியும் வளனும் சுரக்கவெனவாழ்த்தி. வசி - வசீகரம்.

௭௪. மாதிர்க்கோலம் - எல்லாரும் காதலிக்கப்பட்ட நீப்பனை. வலவையின் - சமத்தால்; நாணிலிகளைப்போல வென்றுமாம்.

௭௫. மூதிற்பெண்டிர் - மறக்குடிமகளிர். ஒதையில் - ஆரவாரத்துடனே. பெயர - அவர்பலியிட்டுப்போனவளவிலே.

(௬௬) அவிரொளி கதிர்பரப்பாநிற்பப் (௬௮) புழுக்கல்முதலாயினவற்றைப் (௬௭) பீடிகையிலே (௬௯) சொரிந்து (௭௧) நிலமடங்கலும் (௭௨) பசியும் பிணியும் பகையுநீங்கி (௭௧) மன்னனுக்கு (௭௩) வசியும் வளனும் சுரக்கவெனப் (௭௫) பெண்டிர்நின்று (௭௩) வாழ்த்திப் (௭௫) பெயரவென்க.

௭௬. உற்றதை யொழிக்கென - வீரரும் மாக்களும ஒருவரினொருவர் முற்பட்டப் போய் முழுப்பலிப் பீடிகையிற் பலிகொடுத்து ஒழிப்பாயாகவென்று பூதத்துக்குச்சொல்லி.

௮௦. வலிக்குவரம்பாகெனல் - வலிக்கு எல்லையாகெனவஞ்சினங்கூறல்.

௮௧. கறைத்தோல் - கருங்கடகு.

௮௨. பலவேற்பரப்ப - பலவேலையுமுடையபரப்பு.

௮௩. களங்கொண்டோர் - வென்றோர். அமலை - பரப்பு

௮௪ - ௮௫. சூர்த்து ... ... வைத்து - அச்சத்தைச்செய்து கடைசிவந்த கண்ணினையுடைய தலையை அறுத்து நற்பலி பீடிகையிலேவைத்தென்க

இனி அரசர்செய்தி கூறுகின்றது.

௮௬. புண்ணியத்திசை - வடக்கு.

௮௭. நசைபிறக்கொழிய - எண்ணினை மேற்போகாது பின்னிட்டொழிய.

௮௮. பகைவிலக்கியது - பகையாய்த் தடுத்தது.

௮௯. கொடுவரியேற்றி - புலியைப் பொறித்து. பெயர்வோற்கு - மீள்வோனுக்கு.

௯௦. இறைகொடுத்த - விருந்திறையாகக்கொடுத்த. பந்தர் - முத்தின்பந்தர்.

கo௨. பகைபுறத்து - பகையிடத்து. புறம் - இடம்; பகைப்புறமென்பதனைப் பகைபுறமென்றது விகாரம் கொடுத்த - முன்பகையாய்ப் பின்பு திறையிட்ட. பட்டிமண்டபம் - ஒலக்கமண்டபம்

கoக. உவந்தனன்கொடுத்த - மித்துருவாய்க்கொடுத்த.

கoச. தோரணவாயில் - தோரணத்தையுடையவாசல்.

கoரு - கoசு இவைதாம் பொன்னாலும் மணியாலுஞ்செய்யப்பட்டனவாயினும் கம்மியராற் காணப்படாதன; இவர்களுடைய முன்னோர்செய்த உதவிக்குப் பிரதியுபகாரமாக மயன் நிருமித்துக்கொடுத்தன; இவை தனித்தனி இத்தன்மையவாயினும் தம்மிற்புணர்ந்தேத்தப்படுமென்க.

ககo. அன்றியும் - இங்ஙனம் சொல்லப்படுமூன்றிடமன்றியும்.

ககக. வம்பமாக்கள் - புதியோர். தம்பெயர்பொறித்த - தமது பெயரெழுதிய.

கக௨. கண் - அவ்விடத்து எழுத்துப்படுத்த - இன்னாரது பொதியென வெழுதி இலச்சினையிட்ட.

கக௨ - கக௩. பொதியினையுடைய கடைமுகத்துவாயிலும் கருந்தாழாகிய காவலும் இவற்றையுடையோராகவலும்.

கக௪. ஓரியதாகி - சிங்கினதாகி.

ககரு. கட்போர் - களவுகாண்போர்.

ககசு. பனிக்கும் - நடுக்கும்

ககக - ககசு. புதியோர் பெயர்பொறித்த தனத்தைக் களவுகொள்ளுவோருண்டானால் அத்தனத்தைத் தங்கள் தலையிலேவைத்துச் சுழன்றுதிரிகிறதன்றிப் போகக்கொடாமையானே நினைத்த கள்ளரைநடுக்கும் வெள்ளிடைமன்றமென்க.

க௨க. இலஞ்சி - மடு.

ககஅ-க௨க. கூனர் குறளர் ஊமர் செவிடர் வியர்தியாளர் முழுகிவலஞ்செய்ய நன்னிறம்பெறும் இலஞ்சிமன்றமென்க.

க௨௨. வஞ்சமுண்ட-வஞ்சனைப்பட்டு. மயற்பகையுற்றோர் - மயக்கமாகியபகையையுற்றோர்.

க௨௪. அழுந்தினா - அழுந்தப்பட்டோர்.

க௨எ. நிழல் - ஒளி.

க௨௩ - க௨எ. வஞ்சமுண்டு மயக்கமுந்துயருமுற்று அழுந்தப்பட்டோர் சூழ்ந்துவணங்க நீங்கும் ஒளிகாலப்பட்ட கல்லுநின்றமன்றமென்க.

க௨அ. தவமறைந்தொழுகல் - தவத்திலே மறைந்து தவமின்றியொழுகுதல்

க௨கூ. அவமறைந்தொழுகும் அலவைப்பெண்டிர் - மறைந்து அவமேயொழுகும் அலவைப்பெண்டிர்.

க௩o. அறைபோகமைச்சர் - கீழறுக்குமமைச்சர். பிறர்மனைநயப்போர் - பிறர்மனைவிரும்பினோர்.

க௩க. பொய்க்கரியாளர் - பொய்ச்சாட்சிக்காரர். புறங்கூற்றாளர் - புறங்கூறுவோர்.

க௩௨. பாசத்துக்கை - பாசத்திடத்து.

க௩௩. காதநான்கும் - ஊர்சூழ்ந்த நாற்காதவட்டகையும்.

க௩௪. பூதசதுக்கம் - பூதந்திரிகின்ற நாற்சந்தி.

தன்மையிலாளர்முதல் ஆறுவகையாகிய இவர்களைப் பாசத்திலகப்படுத்திப் பூதம் புடைத்துண்ணும் சதுக்கமென்க.

க௩௬. ஒருதிறம் - ஒருபக்கம்.

க௩எ. நாவொடு நவிலாது - நாவினாலுரையாமல். நவை - குற்றம். குற்றத்துக்காகக் கண்ணீருகுக்கையால் நவைநீரென்றார். நவநீரென்றுபாடமோதிப் புதியநீருகுக்குமென்பாருமுளர்.

க௩௬ - க௩அ. கோலகோடினும் உரைநூல் வாரம்பற்றினும் வாய்திறந்து சொல்லாமல் அழுதுகாட்டும் பாவைமன்றமென்க

க௪o. இவ்வைந்துமன்றத்திலும் பலியிட்டென்க.

பீடத்திலே தலையைவைத்து முரசுமுழக்கி மணடபமுதலியவற்றும் மன்றங்களிலும் பலியிட்டென்க.

க௪க. வச்சிரக்கோட்டம் - வச்சிராயுதமிருக்குங் கோட்டம். இவ்விடத்திருக்கிறமுரசு.

க௪௨. கச்சை - மேல்வயிற்றுக்கச்சை. பிடர்த்தலை - பிடராகியதலை.

க௪௩. களிறுறைசுவயங்கியகோட்டம் - ஐராபதநிற்குமிடம்.

க௪௪. தருநிலைக்கோட்டம் - கற்பகநிற்குங்கோயில்.

க௪க - க௪௩. வச்சிரக்கோட்டத்திலிருந்தமுரசை ஐராபதநிற்குங்கோட்டத்திலே கொண்டுவந்து யானையிலே

யேற்றி விழவின்முடிவும் முதலுமறிவித்துக் கற்பகதிற்குங்கோயிலிலிருந்த கொடியை வானிலேசெல்லவெடுத்தென்க.

கசஎ-கருசு. 'மரகதமணியொடு' என்பதுமுதலாக 'மேவியகொள்கைவீதி' ஈறாக வீதிக்குச்சிறப்பு.

கசஎ. குயிற்றிய - செய்த.

கசஅ. காலையுடைய.

கசஎ - கசகூ. மரகதமணியொடு வயிரத்தைக்குயிற்றிய திண்ணை.

கருo. கிம்புரிப்பகுவாய் - மகரவாய். கிளர்முத்து - அதன்வாயினின்றும் புறப்பட்டமுத்து.

கருக. மங்கலம் - அவை: "செங்கயலிரட்டைதிரு வார்சுடர்க ளாடி, பொங்குகொடி வார்முரசந் தோட்டிபுணர் கும்பம்."

கசகூ - கருஉ. கடைமுகமெல்லாம் கிம்புரிப்பகுவாயினின்றும் புறப்பட்டதாகப்பண்ணின முத்தொழுக்கத்தினையுடைய தோரணங்களைப்பெற்ற பொற்கும்பம் பாலிகை விளக்குப் படாகை கவரி சுண்ணம் இவற்றையுடைய வீதியென்க. இனியின்னெழுநில் முதன்மேலேறிற்று.

'கருஎ. ஐம்பெருங் குழுவு மெண்பேராயமும் - "சாந்துங் கச்சாடை பாகிலை கஞ்சுக்நெ, யாய்ந்த விவை ரெண்மராயத்தார் - வேந்தர்க்கு, மாசனம்பார்ப்பார்மருத்தர் வாழ்த்திமித்த ரோடமைச்ச, ராசி லவைக்களத்தா ரைந்து."

(கருக) அகரிலைமருங்கில தம்மரசனை மேம்படுத்தற்கு (கருo) ஈண்டி (கருஉ) வேந்தன் கொற்றங்கொள்வானாகவென வாழ்த்தி (கசுச) அரசுதலைக்கொண்ட (கசுரு) குடத்தினீரை (கருசு) இவ்வீதியிலேயடையச்செறிந்து (கசுஉ) ஏற்றிச் (கசுசு) சாற்றி (கசுரு) எடுத்துப் (க..) புரவியர்களிற்றின்றெருகுதியர் (கருo) தேரினராய் (கருஉ) அரசகுமரரும் வணிககுமரரும் (கசுஅ) ஆட்டவெனக.

கருஅ. ஆட்டி - ஆட்ட.

கருகூ. பெரியோன் - மகாதேவன்.

கஎக. வால்வளை மேனி வாலியோன்- பலதேவன்

கஎடு. திருமறை - ஓமம். இக்கோயில்களிலே ஓமஞ்செய்யாநிற்க. ஒருபால் - ஒருபக்கம்.

கஎரு. நால்வகைத் தேவர் - வசுக்கள், திவாகரர், உருத்திரர், மருத்துவர். [ஆதியங்கடவுளர்.]

கஎசு. அறவோர் பள்ளி - அருகதானம். அறிவோம்படை - தருமம்பாதுகாக்கிறவிடம்.

கஅ0 புறநிலைக்கோட்டம் - புறம்புள்ள திருக்கோயில்.

அறவோர் பள்ளியிடத்து அறங்காத்தலையும், சத்திரமுதலான சாலைகளிலே புண்ணியதானங்களையும் நல்லோருரைக்கும் செயல்சிறந்தது ஒருபக்கம்.

கஅரு. பாடற்பாணர் - புணர்க்கும் பாணர்.

கஅசு. இசைசிறந்தொருபக்கம்.

சிறக்கவிழாநாட்ட விழவுக சிறந்த வியப்பொனைக்கூட்டுக. சிறக்கவென அடையாத்திரிக்க.

கஅஅ. அங்கண் - அகன்ற இடத்து.

(கஅகூ) 'காதற் கொழுநனை' என்பது முதல (க..) 'நன்மணப்பு இணைத்து' என்பதிறுதியாகக் கோவலனோடு நகரமாருதத்துக்கு ஒத்தபண்பு

க.. - க.. காதற்கொழுநனை . . .

மாதவியெனப்பதிலைடைக்காதலிக்கப்பட்ட தன் கொழுநனைப் பிரிந்து வேறுபட்டு அலருற்ற அழகிய மலர்ந்த மகரக்குழையையுடைய மாதவியென்றும், எல்லோருங்காதலிக்கும் கொடுமைய நிலையாக் தன்மையையுட்கொண்டு அப்பாகாக வளைந்த தாரினையுடைய குருக்கத்தியென்றுஞ் சொல்லுக. மாதவி - குருக்கத்தி. கணவனைப் பிரிந்து அலரெய்தலாற் பிரிந்து அலரெய்தா மாதவியென்றார். குருக்கத்தி அலருறுமை - செவ்வியழிதலை.

(கசுக) முல்லை, மல்லிகை, மயிலை இருவாட்சி, (கசுஉ) குவளை, ... (க..) பயின்றகோதையாகிய பயிலையாள்.

க.. - க..o. பொழிலிளையாட்டு விரும்பி நாடோறும் மகிழ்ந்திருக்கும் இருப்பையுடைய நாளங்காடியிற் பூவிற் குயிட்டங்களிற் செவ்விமணத்திலேபுக்கு

கசுஎ. பூவின்மிகுதிபற்றிக் காணமென்றார்.

கசுஅ. புலராது - புலராமை.

கசுகூ. ஆயத்து - ஆயத்தோடே.

உoo. பரீதர் - தூர்த்தர்.

கஅஅ - உoரு. வியலுளாங்கண் மாதவிதன்னைப்பெர்லித்து எய்தி அமர்ந்து

புக்குச் சிறந்து இனைத்துப் பரதரோடும் பாணரோடும் திரிதரும் கோவலன் போல மாருதந் திரிதருமறுகென்க.

உ0அ - உகூ0. திங்களாகியவிலத்திலே அமுதமாந்தி மெய்பெறவென்க. மெய் - வடிவு.

உகூ-உகஉ. இப்பதியிலே திருமகள் புகுந்தகாரணம் மன்னனுக்கு வணங்காட்டவென்க.

உகூ. ஆமெனா - ஆமெனக்கருதி

உகசு. முல்லையுமன்றி - இவையேயன்றி.

உகரு. உள்வரிக்கோலம் - கிருத்திரிம வேடம். கோலத்து - கோலத்தோடே. தாமனையானது தன்வடிவொழிய வேறுருவடிவுகொள்ளுதல.

உகசு. உறுதுயர் - திருமகள்

உஉஉ. பண்மொழி நரம்பில் - பண்ணைச்சொல்லுகின்ற யாழ்நரம்புபோல.

உஉகூ. உணர்கொலென வேறேருரிடைச்சொல வருவிக்க.

உஉ - உஉ. ஒருபெருஞ்சேனை ... விலங்கி - பரத்தையரைமாறுபட்ட புதர்கணமிலை அஃதது எதிரே நின்றதன்று.

அன்றியும், விலங்கி - விலக்கி: புலவியாலே கூடாதமகளிரைப் போகாமலே திரிகிறது சந்த்ர நிலாம் புகழ்ந்து புலவியைத் தீர்த்தெனவாமாம்.

உஉ - ... அவொழுகுவரிக்கோலம் - ... முறைமெய்யமுறத்திகென்க. முழுமெய்ய முறுகதியென்றது, புணர்ச்சிபெற்றதாயிற்று

உகூ0 - ...க. குவளைபபோது தான் தோற்றுப்போகிய

• உகூஉ. யாவதும் - சிறிதும்.

உகூ. மாநிலவரைப்பு-பூமியிலுள்ளார்.

உகூசு. நல்விழா - விழா.

(உ0கூ) மறுகிடத்துத் (உ0எ) திங்களுமுண்டோ; (உகக) வல்லிவருதலுமுண்டோ; (உகஎ) கமலந்திரிதலுமுண்டோ; (உஉகூ) பெற்றியுமுண்டோவெனச்சொல்லிச் (உஉசு) சேனையாகிய பரத்தையரீத்துப் போகாமல் (உஉரு) விலக்கிப் பின்பு தம்மனைகளிலே புக்கு (உஉசு) எழுதுவரிக்கோலத்தைத் தம்மேனிமுழுவதும் உறுவித்துப் பின்பு (உஉஅ) ஒழுக்கொடுபுணர்ந்த (உஉகூ) மனையுறைமகளிர் (உஉஅ) உடனுறைவு மருவுதற்கு (உஉஎ) விருந்தொடுபுக்க கணவர (உகூசு) கையற்றுநடுங்குகநாளென்க.

• உகூ. நறுந்தாதெறிப்ப - தாது ஒளிவிட.

உகூஎ - உகூகூ. கருங்கணென்றது, கண்ணகிக்குப்புணர்ச்சியில்லாமையால்; நிறைகரந்து துன்பத்தாற் கண்கள் நீருகுத்தன. செங்கணென்றுரைத்தது, மாதவிக்குப் புணர்ச்சிவிதும்பலால்; அகத்து நிறைகரந்தொளித்து இன்பத்தாற் கணகள் நீருகுத்தன. கண்ணகிக்கு நிறைகரத்தல் - கற்பாற் பரிகாரப்பட்டதாதல்; ஆற்றாமை மிகுதிகூறிற்று. மாதவிக்கு ... நிறுத்தலைக்கரந்து காமத்தாலே நீருகுத்தன. கண்ணகிக்கு அழுகைக் கண்ணீர்: மாதவிக்கு உவகைக்கண்ணீர்; எனமுறை எண்ணினவடைவே பின்பு கண்ணகிக்குக் கூட்டமுண்டாகையால் இடக்கண்டுடித்தன; மாதவிக்குப் பின்பு பிரிவுண்டாகையால் வலக்கண் துடித்தன.

ரு.—கடலாடுகாதை.

க. வியன்பெருஞ்சேடி - அகன்றுயாந்த வடசேடி.

உ. காமக்கடவுள் - காமதேவன்.

ச. விருந்தாட்டயரும்-விழாக்கொண்டாடிப்போதும். விஞ்சைவீரன் - விச்சாதரவீரன்.

ரு. சேழும்பதி - காவிரிப்பூம்பட்டினம்.

சு. கொண்டு - கருதி

அ. கொடுவரியூக்கத்து - புலிவலியால். கோநகா - அமராபதி.

கூ. அண்ணல் - சோழன்.

எ - கூ. அவுணர் தொலைந்தாராய்.

க0. இவனெஞ்சு இருண்டுமயங்க. நிகர்த்து - தம்மிடைத்து.

கக. வஞ்சம் - இருளாகவரவிட்டவஞ்சம்; என்பது அந்தகாரத்தைப்பண்ணவருவதோராயுதம்; தாமசாத்திரம். அவ

ன்மேல் அசுரர்விட்ட வஞ்சத்தைமாற்றின பூதமென்க.

கஉ. திருந்துவேலண்ணற்கு-சோழன் பொருட்டாக.

கங. இருந்துபலியுண்ணுமிடனும் காண்போமென்க.

கச. அமராபதிகாத்து- தேவலோகத்தைக்காத்து. அமரரிறபெற்று - அமரரிடத்திலேபெற்று.

கரு. தமரிற்றந்து - சோழன்மரபினுள்ளாராற்றரப்பட்டு.

கஎ. ஐவகைமன்றத்தமைதி - ஐந்துவகைப்பட்ட மன்றத்தின்சிறப்பு.

அமராபதிக்கு அசுரரால்வந்த இடர் நீக்கி இந்திரனாலேபெற்று இவன்மரபினுள்ளாராற்றரப்பட்டுக் காவிரிப்பூம்பட்டினத்திலேபெறவைத்த ஐவகைமன்றமுங்காணபோமென்க.

கஅ. நாரதன்வீணை - நாரதமுனி வீணை. நயந்தெரிபாடலும் - நயந்தெரியப்பட்டபாடலும்.

ககூ. தோரியமடந்தை - பற்றப்பாடுவாள்.

உ0. ஆயிரங்கண்ணோன் - இந்திரன். செவியகநிறைய - செவியிடமநிறையும படி.

உக. நாடக முருப்பசி நல்கா ளாகி - நாடகமாடு முருபபசிபாடி, ஆடலைவிரும்பாளாதலால.

அதற்குக்காரணமான சயந்தனிடத்தே புகுஞ்சாபத்தால வீணை சாபம்பட்டு அபணமாயிற்றென்க. வீணை மங்கலமிழப்பச் சாபம்பட்டென்றுமாம்.

உச. மாதவி வழிமுதற்றோன்றிய,— மாதவி - இவள்வழிவந்த அவள்பெயருமாதவியென்க.

உஎ. அமரர்தலைவனை வணங்குதும் யாமெனா - இங்குப்பூசைகொள்ளுகின்ற இந்திரனைக்காண்போமென்று.

ங0 தாங்காவிளையுள் - நிலம்பொறுத விளைச்சல்.

ஙங. தொழுதனள்காட்டி - இந்திரனைத்தொழுதபின்னைக்காட்டி.

ஙரு. மாயோன்பாணி - தேவபாணி. வருணப்பூதர் - நால்வகைவருணத்துபபூதர்.

ஙஎ. வானூர்மதியம் - சந்திரனைப்பாடுந்தேவபாணி. பாடி - இம்மூவகைப்பாணியும்பாடி.

ஙஅ. சீரியல்பொலிய - தாளவியல்பு பொலிவுபெற. நீரலநீங்க - நீரல்லாதன நீங்க. நீரல்லாதன - அவதாளம்.

ஙகூ. பாரதி - பைரவி. அரங்கம் - சுடுகாடு. "இவளாடுதலாற் பாரதியரங்கென்று சுடுகாட்டுக்குப் பேராயிற்று.

ச0. திரிபுரமெரியத் தேவர்வேண்டுதலால்;

சக. எவல்கேட்ப - சுட்டவளவிலே.

சஉ. ஒருதிறமாக - ஒருபக்கமாக

சங. தேர்முன் - தேரிடம் தேர்த்தட்டே அரங்கமாக.

சஎ. அறுசாவண்ண முடியவாடல் பத்தாள்.

சஅ. அல்லியத்தொகுதி - அல்லியவாடல் = யானைமருப்பொசித்தாடல

ருகூ. குடையீழ்த்து - குடையைத்தாழ்த்து.

ரு0 - ருக. உலோகங்களாலும் மண்ணாலுங் குடங்கொண்டு வாசுதேவனாடினது.

ருஉ - ருங. அவுணர் பாம்பந்தேனும் விடத் தாக்கை மரக்காலினமேனியாருடினள்.

சு0 - சுக. திருமகள், செருக்கோலம் அவுணரிங்கப் பாவையாகவாடியது.

சுஉ - சுங. வாயிற்புறத்து வடக்குவாயிலிடத்துநின்று கடையியர்வடிவுகொண்டு இராணியாடிய கடையமும்.

"கடையமயி ... ... பதினோர் கூத்து." இவை, நிலைநின்றாடல், பதம் வீழ்த்தாடலென இருவகைய அவை "அல்லியங் ... . லாறு" துடி கடையம் . . . . . லேத்து."

எஉ. அருந்தரதன்னோர் - தேவர்கள்

எஉ - எங. அறியாமரபின் ... ... விழவு - பிறரறியாமல வந்துகாணும்விழவு.

( ) விஞ்சைவீரன், தெய்வயாக்கையை மறைத்துவந்து (உஎ) வணங்குதுமெனச்செல்லின் (ஙக) காட்டிய பின்னரும் (ஙஉ) புகாவெய்தி (ஙங) விழாக்காண்போன் இவற்றைக் (சுஎ) காணாயென்று (எ0) காதலிக்குரைத்துக் கண்டு மகிழ்வெய்திய (எக) விஞ்சையனென்க.

(ஙஅ) நீரலநீங்க (ஙகூ) அவ்வானவனியுடனாடிய (சுரு) நிலையும் படிதமும் நீங்கா மரபினையுடைய (சுகூ) பதினோராடலுமெனக்கூட்டுக.

எச. ஆடற்கோலம் - மாதவி பதினோராடலுக்குங்கொண்ட கோலம். அணி - ஆடுங்காலத்துப் பிறக்குமணி; பாவரசம். கடைக்கொள - முடிந்தவளவிலே.

எரு. ஊடற்கோலமோடிருந்தோன் - கோவலன். அவனூடிதற்குக் காரணம், திருநாள்முடிதலானவந்தவெறுப்பு; இவளாடலிற் கோலநீட்டித்தலாலும் பலரும் இவளைப்பற்றிப்பார்த்தலிற் பொருமையாலும் வந்தவெறுப்புமாம். உவப்ப - அவனூடநீர்ந்து உவகையெய்தும்படி.

எசு. பத்துத்துவராவன.— "பூவந்திதிரிபலை புணர்செங் கருங்காலி, ... றுவரோ" ["மாந்தளிர முப்பழஞ் சீர்த்த முதுதக்காசு" எனவுங்கொள்க. ஐந்து விரையாவன :—"நறும்பிசி ரேகண நற்கோட்ட மாஞ்சி, வெறுங்கவடில் வெண்ணை விரை." "கோட்டந் . . . . விரை" எனவுங்கொள்க.

எஎ. முப்பத்திருவகை ஓமாலிகையாவன :—" இலவங்கம் பசிலை .. ... நண்ணு மரத்தை நறும்பிசின்-னெண்ணும், குடசம்வக வாசிஞ்ம் பூச்சண் பகமுகையோ, டெண்ணுங்கு மோமா லிகை."

(எஅ) இவற்றின் ஊறியநீராலே(எகூ) ஆட்டியென்க.

எஅ. உரைத்த - தேய்த்த. நெய்வாசம் - புழுகுநெய்.

அ0. புகையிற் ..... கூந்தலை - அகிற்புகையாலுலர்த்தியகூந்தலை.

அஉ. அலத்தகம் - செம்பஞ்சி; அரத்தகமெனவுமாம்.

அந. மெல்விரனல்லணி - கான்மோதிரம்.

அச. பரியகம் - காற்சவடி. நூபுரம் - சிலம்பு.

அரு. அரியகம் - பாதசாலம்.

அசு. குறங்குசெறியணி - கவான்செறியாபரணம்.

அஎ. முத்தரை - அரையின்முத்துவடம். பிறங்கியமுத்து - பெரியமுத்து.

அஎ - அஅ. முப்பத்திரண்டுவடத்தினாற்செய்த விரிசிகையென்கின்ற மேகலையைப் பூந்துகிலுள்ளுடுத்த; உடுத்தல் - குழ்தல். பெரிய முத்துவடம் முப்பத்திருகாழையுடைய அரையிலே பூந்துகிலையுடுத்தென்றுமாம்.

அகூ - கூ0. காமர் கண்டிகை.... .. தோள்வளையென்றது - கழுத்துவடத்தின் பின் தாலிக்கு இரண்டுபக்கமும் பகுத்துப்போந்து வாகுவலயத்தோடு தொடக்கிசகிடப்பதோராபரணம்; காமர்கண்டிகையுடனே மணிநெருங்கின தோள்வளையைத் தோளுக்கணிந்தென்றுமாம்.

கூக. மத்தகமணி - உச்சியிலேவைத்த மாணிக்கம்; மத்தகத்தையுடைய சூடகத்துச்சியிலேயுள்ளமணியோடு வயிரங்கட்டுதலுமாம்.

கூஉ. கைவளை - சந்துக்காரை.

கூந. பரியகம் [=பாசித்தாமணி]; கைச்சரியுமாம வால்வளை - சங்கவளை. இதுவும் ஒரோவொன்றிடுவார்கள். பவழப்பலவளை - கடகவளை.

கூரு. வாளைப்பகுவாய்மோதிரம் - முடக்குமோதிரம்.

கூசு. சேழ்கிளர் செங்கேழ் கிளர்மணி மோதிரம் - செங்கேழ்மணியையுடைய மோதிரம்; அவை இரத்தினங்கட்டின அடுக்காழி. முன்னிற்சேழ் மோதிரத்திற்கேற்றுக.

கூஎ. வாங்குவில்வயிரம் - நுடங்கின ஒளியையுடைய வயிரம். மரகதத்தாள்செறி - மரகதத்தையுடைய தாள்செறி. இவை மரகதநாயகமாகிய வட்டப்பூ.

கூஅ. விரல்கரப்ப - விரல்மறைய.

கூகூ. சங்கிலி - வீரச்சங்கிலி. நுழைவினை நுணுகாண் - நுண்ணிய தொழிலையுடையஞாண.

க0க - க0உ. கயிற்கடையொழுகிய கோவை - கழுத்தாபரணங்களிற் கொக்கிவாய்முத்தாரமாகச்செய்ததிலே நவரத்தினங்களைக்கோத்து முதுகுமறையவிடும் பின்றாலி.

க0ந - க0ச. இந்திரநீலக்கடிப்பிணை - நீலக்குதம்பை இடையிடை திரண்ட சந்திரபாணியென்னும் நாமவேறுபாட்டையுடைய வயிரம்முழுதுங்கட்டின கடிப்பிணை, இவை இரண்டும் இரண்டு காதிலணிவன.

க0ரு. தெய்வவுத்தி - சீதேவி.

க0எ தொய்யகம் - தலைப்பாளை. புல்லகம் - தென்பல்லிவடபல்லி.

க0எ. தொடர்ந்ததலைக்கணி - இவை முதலிய தொடர்ந்ததலைக்கணிகளை.

க0அ. மாண்புறவணிந்து - அழகுபெறவணிந்து.

௧௧௧. உவவுத்தலை - உவவுக்காலம்; ஏழாவது இடமும்பொருளும் காலத்துடன்மயக்கும்.

௧௧௨. பெருநீர்போகும் - ஏழாவதிரண்டாவதுடனே மயங்கிற்று. பெருநீர் - கடல். இரியன்மாக்கள் - நீர்த்துமாட விளைந்து போம்பொழுது விளையாடு சனம்.

௧௧௩. விளையாட்டு - பிறர்விளையாடல்.

௧௧௫. புள்வாய் - ஒலிப்ப.

௧௧௬. யாமம் - யாமத்தை.

௧௧௭. வெள்ளிவெழுந்துவிளக்கம்.

௧௧௯. வயனைகயமா - கோவலன். அத்திரி - கோவேறுகழுதை. அஃதாவது குதிரையில் ஒருசாதி.

௧௨௦. வையம் - தேர்; கொல்லாவண்டியுமாம்; கூடாரப்பண்டியுமாம்.

௧௨௩. மலரணிதல - அகல்விளங்கிய விடத்திலே.

௧௨௪. வீசி - நாவி

௧௨௭. திருமகளிருக்கை - சிதேவிநடியிருப்பான பீடிகைத்தெருவெனக. இவை பட்டினப்பாக்கம்.

௧௨௯. நகரவீதி - மருவூர்ப்பாக்கவீதி.

௧௩௨. கொடியெடுத்துநுவலும் - இன்னதாளென்று கொடிக்கட்டியெடுத்து சரக்குக்களது நன்மையையறிவித்தும்

௧௩௩. [illegible]லைச்சேரி - நெருங்குபட்ட பரதேசிகளிருப்பு.

௧௩௭. காழியர் - பிட்டுவாணியர். ஊழுறுதல் - குலைதல.

௧௩௯. கூவியர் காரகற் குடைகால் விளக்கு - அப்பவாணியர் காரகலென்ற தண்டைக்கடைந்திட்ட விளக்கு.

௧௩௯. கொண்டைவிற்கடை - பலபண்டமும் விற்பார்கடை, [பாரடைவலேயுமாம்.]

௧௪௪. கலங்கரைவிளக்கம் - திக்குத்தறி காட்டிக் கலத்தை அழைக்கிறவிளக்கம்.

௧௪௩. மொழிபெயர் தேஎத்தோர் - பரதேசிகள். ஒழியாவிளக்கு - விடிவிளக்கு.

௧௪௫. எண்ணுவரம்பறியா - அளவறியா.

௧௪௭. இடிக்கலப்பு - மாவைத்தம்மிற் கலத்தல். அயிர் - நுண்மணல்.

௧௪௭. கடிப்பகை - சிறுகடுகு. காட்சியதாகி - காணுங்காட்சியையுடையதாகி.

௧௪௫-௧௫௰. விளக்கங்களிண்டி நாண் மணலில்வீழ்ந்த வெண்சிறுகடுகைப பலரும்காணும காட்சியதாக இதனாலே தாமரைபூத்த மருதநிலம்போலத் தோன்றும் நெய்தனிலம், கைதைவேலியையுடைய நெய்தலங்கானல். விளக்குக்கிண்டிக் கடிப்பகைகாணுங்காட்சியையுடைத்தாய் மருதவேலிபோலத் தோன்றுமென்றுமாம். இஃது இடத்தினிகழ் பொருளின்விளையை இடத்திலேயேற்றிற்று.

௧௫௧. பொய்தல் - விளையாட்டு.

௧௫[illegible]. நிரை தலை யெய்த்த - நிரையிலே இடத்திறந்தயிதச. தாரம் - பலபண்டம்

௧௫௩ - ௧௫[illegible]. விளையாட்டாயத்துடனேசென்று கானலைப்பொருந்தி.

(௧௫[illegible].) நிரையாகக்குவித்த (௧[illegible]) மலைகளும் அலைகளுமெனக.

௧[illegible]. தளர்ந்தகலவிருக்கை - [illegible] [illegible]ருக்[illegible].

௧[illegible]. தோள்கொண்மருங்கு - தோ[illegible] [illegible]

௧[illegible]. [illegible] [illegible] - [illegible] [illegible]

௧[illegible] - ௧[illegible]. [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] கூறுகளை [illegible]

௧[illegible]. [illegible] - சித்திரப்பணி [illegible]; [illegible] மசகரி.

௧௭௧. [illegible] - உழிவக்த[illegible] வருந்[illegible]. வசந்தமாலை - சேடி. செவ்வனம் - [illegible].

(௯[illegible]) [illegible] [illegible] [illegible] [illegible] (௧௦[illegible]) [illegible] [illegible] (௧௧௦) பள்ளி[illegible] [illegible] (௧௧௧) உவவுத்தலை [illegible] (௧௧[illegible]) கடல்விளையாடல் (௧௧[illegible]) காணடயினவண்டி (௧௧[illegible]) அணிந்து (௧௨௦) வையமேறி (௧௨[illegible]) தெருவினைக் (௧௨[illegible]) கழிந்து (௧௨[illegible]) கல்வட்போகி (௧௩[illegible]) வைத்த (௧௪௦) கானலில் (௧௫௧) ஆயமொடுபொருந்தியபின (௧௬[illegible]) மணற்பரப்பிலே (௧௬௦) அமளி [illegible] (௧௬[illegible]) யாழ்வாங்கி (௧௭௯) கோவலன்றன்னோடிருந்தாளெனக் கூட்டுக

எ.—கானல் வரி.

சித்திரப்படம் - உறை. கோடு - யாழ்க்கோடு.

மணமகளிர் - கலியாணமகளிர்

முன்பிற்காதையில் 'யாழ் செவ்வனம் வாங்கி' என்று வைத்தது இக்காதையிலும் 'யாழ்கையிற்றொழுதுவாங்கி' என்றது கதைத்தொடர்பறிவித்தற்கும், யாழின் அலங்காரங்கூறுதற்குமெனக.

குற்றமாவன :—செவ்விர்தவ்யசாய்ய யென்பன; என்னை? சிந்தாமணியிலும், * "நோய்நான்குநீங்கி" என்றார்.

இசையெழுவும் எண்வகையாவன.— பண்ணல்முதலாயின

அவற்றுள்,—

பண்ணலாவது —"வலக்கைப்பெருவிரல் குரல்கொளச் சிறுவிரல், விலக்கின் இளிகிழி கேட்டு மெலிவழி, யாரர்ங் கிளைகொள வடிப்பது, விளிப்பரு மரபிற பண்ணலாகும்."

"பரிவட்டணையெனப் படுவது தானே, முன்னைக் கடையின் முடியிற்றாகி, வலக்கையிருவிரல் வலியுறத் தழீஇ, இடக்கை விரலி னியைபடத் தாக்க, தொடையொடு தோன்றியுந் தோன்றாதாகிய, நடையொடு தோன்றும் நயத்ததாகும்."

"ஆராய்தலென்ப தமைவரக் கிளப்பின், குரன்முதலாக விளிவழிக் கேட்டு மிகையுமிடையும் பயமொழிக் கேட்டுத், தாரமுமுழையுந் தம்மிற் கேட்டுக், குரலுமிளியுந் தம்மிற் கேட்டுத், துத்தமும் விளரியுந் தம்மிற் கேட்டும், விளரிக்கைக் கிளை விதியுளிக் கேட்டுத், தளரா தாகிய தன்மைத் தாகும்."

"தைவர லென்பது சாற்றுங் காலை, மையறு சிறப்பின் மாமகிழ் செய்தித், தொடையொடு பட்டும் படாஅ தாகியும், நடையொடு தோன்றி யாப்புடைத் தின்றி, யோவாது செய்தியின் வட்டணை யியாழ்கிச், சேர்த்தியிற் றியல்வாய் தாகியும், நீர்வாகு நிறைய தெனப."

"செலவெனப் படுவ தன் செய்கை தானே, பாலை பண்ணே திறமே கூடமென, நால்வகை யிடத்து நயத்த தாகி, இயக்கமுந் நடையு மெய்திய வகைத்தாய்ப், பதினோ ராடலும் பாணியு மியல்பும், விதிநான்கு தொடர்ந்து விளங்கிச் செல்வதுவே."

"விளையாட் டென்பது விரிக்குங் காலைக், கிளவிய வகையி னெழுவகை யெழூஉ, மளவிய தகைய தாகு மென்ப."

"கையூ ழென்பது கருதுங் காலை,யெவ் விட்டதானு மின்பமுஞ் சுவையுஞ், செவ் விதிற் றோன்றிச் சிலேத்துவ ரவின்றி, நடைநிலை திரியாது நண்ணித் தோன்றி, நாற்பத் தொன்பது வனப்பும் வண்ணமும், பாற்படத் தோன்றும் பகுதித் தாகும்"

"குறும்போக் கென்பது குடக்குத் துள்ளூர், தள்ளா தாகிய வுடனிலைப் புணர்ச்சி, கொள்வன வெல்லாங் குறும்போக் காகும்." இவையெல்லாம் ஈண்டு விரித் துரைப்பிற்பெருகும்.

பண்வகையாற் பரிவுதீர்ந்து - பண் கூறுற்ற குற்றந்தீர்ந்து.

மரகதமணிமோதிரங்கள் செறிந்த விரல்கள் பாடுகின்ற வண்டின்கிளைகளை யொப்ப

வார்தல் வடித்தல் ... ... செவியி னோர்ந்தென்றது .

வார்தலென்பது - சுட்டுவிரற்செய் தொழில்.

வடித்தலென்பது-சுட்டுவிரலும் பெருவிரலுங்கூட்டி நரம்பை அகமும்புறமும் ஆராய்தல்

உந்தலென்பது - நரம்புகளை உந்திவலி விற்பட்டதும் மெலிவிற்பட்டதும் நிரல் பட்டதும் நிரலிழிபட்டதுமென்றறிதல்.

உறழ்தலென்பது - ஒன்றிடையிட்டும் இரண்டிடையிட்டும் ஆராய்தல்.

உருட்டலென்பது - இடக்கைச்சுட்டு விரல் தானேயுருட்டலும் வலக்கைச் சுட்டுவிரல் தானேயுருட்டலும் சுட்டொடு பெருவிரற்கூட்டியுருட்டலும் இருபெருவிரலும் இயைந்துடனுருட்டுமெனவரும்

"தெருட்டலென்பது செப்புங் காலை, யுருட்டி வருவ தொன்றே மற்றது, வொன்றன் பாட்டுமடை யூொன்ற நோக்கின், வல்லோ ராய்ந்த நூலே யாயினும், வல்லோர் பயிற்றுங் கட்டுரை யாம்."

* சீவகசிந்தாமணி, காந்தருவதத்தையாரிலம்பகம், உஉஅ.

பாட்டொழிந் துலகினி னொழிந்த செய்கையும், வேட்டது கொண்டு விதியுற நாடி" எனவரும். இவை இசைத்தமிழ்ப் பதினாறுபடலத்துட் காணவோத்துட் காண்க.

பட்டவகைதன்செவியினோர்த்ற நீட்டவெங்க.

கோவலன்கை யாழநீட்ட - யாழைத் திருத்தித் தான் முற்படவாசியாதே அவன்றலைமைதோன்றத் திருத்தப்பார்த்துக் கொடுத்தான். ஏவலனபின்பணியாதெனவென்றது - இப்பொழுது இதனைவாசியென்று விதிக்கின்றேனல்லேன்; இனி வாசிக்குந்தானமியாதென்று தானறியலுறுவான்போலக் கொடுத்தான். ஏவலன் - தன்மையொருமை.

இனி வரிப்பாடலாவது :—பண்ணும் திறமும் செயலும் பாணியும் ஒருநெறியன்றி மயங்கச் சொல்லப்பட்ட எட்டனியலபும் ஆறனியல்பும்பெற்றுத் தன்முதலும் இறுதியுங்கெட்டு இயல்பும் முடமுமாகமுடிந்து கருதப்பட்ட சந்தியும் சார்த்தும் பெறறும பெறுதும்வரும். அது தான், தெய்வஞ்சுட்டியும் மக்களைப்பழிச்சியும்வரும்

அவற்றுள், தெய்வஞ்சுட்டிய வரிப்பாட்டு வருமாறு :—"அழலணங்கு தாமரையருளாழியுடையகோ னடிக்கீழ்ச் சேர்ந்து, நீழலணங்கு முருகுயிர்த்து நிரந்தலர்ந்து தோடேந்தி நிழற்றும் போலும், நிழலணங்கு முருகுயிர்த்து நிரந்தலர்ந்து தோடேந்தி நிழற்றுமாயிற், றொழுதணங்கு மன்புடையார் சூழொளியும் வீழகரியுஞ் சொல்லாவன்றே." இது கூடைச்செய்யுள். "கூடை யென்பது கூறுங் காலை, நான்கடி யாகி யிடையடி மடக்கி, நான்கடி யஃகி நடத்தற்கு முரித்தே." "வார மென்பது வகுக்குங் காலை, நடையினு மொலியினு மெழுத்தினு நோக்கித், தொடையமைந் தொழுகுந் தொன்மைத் தென்ப." இவை அடிவரையிட்டன.

இனி மக்களைச்சுட்டிய வரிப்பாட்டு வருமாறு :—"திங்கண் மாலை ... ... காவேரி" என்பதுபோல வருவது.

"திங்கண்மாலை"—கயலாகியகண்ணையுடையாய்; புலவாதொழிந்தது மாதர் பெருங்கற்பு, அதனைகாணநின்றேன்.

"மன்னுமாலை"—கன்னி - குமரி.

"உழவரோதை"—தண்பதங்கொள் விழவர் - புதுப்புனலாடுவார். வாய்காவாமழவர் [—எறி ஆங்குத் தானென்று நாயகனை நெருங்கும்வீரர்.] இவை ஆற்றுவரி. வண்ணம் - ஒழுகுவண்ணம்.

இனி வரியாவது முகமுடைவரி, முகமில்வரி, படைப்புவரியென மூன்று வகைப்படும். வரிப்பாட்டுக்கு முகமாக நிற்றலின், முகமெனப்படும்; என்னை? "நிலமுத லாகிய வுல்கியல் வரிக்கு, முகமாய் நிற்றலின் முகமெனப் படுமே" என்றாராகலின். அம்முகமுடையவரி - மூன்றடிமுதலாக எழடியீறாக வரும், "சிந்து நெடிலுஞ் சேரினும் வரையார்."

முகமில்வரியாவது முகமொழிந்து ஏனையுறுப்புக்களான் வருவது.

படைப்புவரியாவது எல்லாவுறுப்பும் ஒன்றானும் பலவானும் வெள்ளையானும் ஆசிரியமானும் கொச்சகம்பெற்றும் பெறுதும வேறுவேறாகி ... ... வருவது

இவற்றுள், "திங்கண்மாலை" முதலாயினமூன்றும் முகமுடைவரி. இவை கண்டனகூறிற்றாக யாழினிட்டபாட்டு

"மோதுமுதுதிரை"—பரிந்து - அறுத்து. அசையக கொண்டோச்சுமெனக. [குவளைமாலைப்போது சிதறினவை சிறங்கணித்துப பார்த்தாற்போலக் கிடக்க அவ்வூரிலுள்ளாககளைகள் கண்டெனாறு நீபுற்றுப் போகாதபுகாரெனக. அன்றியும் கடைக்கணிக்கவென்றது குவளையானது மாலைக்காலம்பகையாதலால் அஞ்சிப பார்க்கப்போவாாகவும் போகாது இக்குவாழ்வானைச் சிறங்கணித்தகவென்று தம்பேதைமையாற் போயபார்த்துநிற்றலான நாககளும் பேதையமென்றவாறு.]

"காதலராகி"—எம்பின்வந்தார் எதிலர் தாமாகியென முன்னிலையைப் படர்க்கை வாய்பாட்டாற்கூறினார்.

"கரிய"—பொய்த்தாரெனபது - முன்னிலைப்படர்க்கை. காட்டிப்பொய்த்தாரெனக. இவை இரண்டும் தோழி தலைமகன்முன்னின்று வரைவுகடாயது, கையுறைமறையெனினுமமையும். சார்த்துவரி - "பாட்டிடைத் தலைவன் பதியொடும் பேரொடுஞ், சார்த்திப் பாடிலிற் சார்த்தெனப் படுமே" இங்குப் பாட்டிடைத் தலைவன் - சோழன. அதுதான் முகச்சார்த்து முரிச்சார்த்து கொச்சகச்சார்த்

தென மூவகைப்படும். அவற்றுள், முகச்சார்த்து - மூன்றடிமுதல ஆறடியீறாக வரும், இடை நான்கடியானும் ஐந்தடியானும்வரும். முரிச்சார்த்தாவது:— "முரிந்தவற ... ..., குறளெழுத் தியலாற் குறைகிய நடையாற, பெற்ற வடித்தொகை மூன்று மிரணடும், நற்றமில்லெனக் கூறினர் புலவர்;" கொச்சகச்சார்த்து - கொச்சகம்போன்றமுடியும். இவற்றுள், இவைமூன்றும முகச்சாரதது.

"துறைமேய்"—மணலிமேனதோய்ந்த. உறைமலி - மலிபுறையால. உறை - மருந்து. உய்யாநோய் - மருந்தாற்போக்கமுடியாதநோய். போலும - ஒப்பில் போலி. குறியிடத்துச்சென்றபாஙகன தலைமகளது காதனமிகுதி குறிபபி[illegible]னறிந்து கூறியது. இது முகச்சார்வரி.

"நிணங்கொள்"—த[illegible] - ஒருவியாசம். இது சமு[illegible]றைமறை.

"வலைவாழ்நர்சேரி"—இதுவமது. கானல்வரி.

"கயல்எழுதி"—கானல்செயவெழுதி - பிறைமருநதும [illegible] முகம் - பணி[illegible]க் கைவிட்ட முகம். [illegible]

"எறிவளை"—[illegible] [illegible] [illegible]. [illegible] [illegible]. அன்றியும், "[illegible]டை [illegible]" [illegible].

"[illegible]"—[illegible] - [illegible] - செறிகமை[illegible]. [illegible]. இவைமூன்றும் [illegible] [illegible]பட்ட [illegible] நத தலைமக[illegible] இவை [illegible] 'முகமு முரியுந் [illegible]முடைட, தலையுடையது [illegible]"

"பொழிறரு [illegible]", "[illegible]", "[illegible]"—[illegible] - [illegible]கரம் இவைமூன்றும் தலைமகளுடைய[illegible]கண்கேட்ப உறறதனைச் [illegible]. இவைமு[illegible]வரி, "எடுத்த வியலு மிசையுந் தம்மின், [illegible]ரிந்தப் பாட்டை முரிவரிபபடுமே."

"கடல்புக்குயிர்"—[illegible]டல்புக்கு [illegible]வலி[illegible]ல புக்குகின்ற. இடைபுக்கு - இடைரிலேகிடந்து. இடையிழவல் - இடையிழவாதேகொள். என்றது நின்தமரும் நீயுஞ்செய்கிற கொடுமையாலே இடைமுரியவுங்கூடும்; அதற்கு உட்பகையாய்த் துணைககாரணமாகிய முலைகளுமுளவாதலால் இடையைப் பரிகரியென்றவாறு; என்வருத்தத்தைத் தீரென்பதாம். இவை மூன்றந்தமொக்கும்.

"ஒருந்திமில்"—பிறரெவ்வம்பார்த்தல் - உனக்குப்பெருமையாவது பிறரெவ்வம்பார்த்தல், தன்பெருககமு முமதனுற் பிறரெவ்வம்பாராத முலையென்றுமாம். எவ்வமுமென்னுமுமமை தொக்கது. இவைமூன்றும் புணர்ச்சிநீட இடந்தலைப்பாட்டிற் புணர்தலுறுவான் ஆற்றுமை கூறியது.

"பவளவுலக்கை"—குவளையல்ல - நிறம்பற்றிக் குவளையென்னவேண்டா.

"புன்னைநீழல்"—அன்னநடப்ப - அன்னம் இந்நடையைப்பார்தது நடக்கும் படி; அன்றி, நடைக்கஞ்சி ஓடவென்றுமாம. சொன் - மிகுதியும் கூர்மையும். [illegible]டைபபாள் கணகள் மிகவெய்யவாகலாற் கூற்றமெனக. "கள்வாய்நீலம்"—புள்வாயுணங்கல் - உணங்கலிடத்துப்புள். இவைமூன்றும் குறியிடததுக்கண்ட பாஙகன் சொல்லியது; புணாந்து நீங்குவான் விடுத்தல் [illegible]நயான் [illegible]ற்றுமையத் தன்னெஞ்சிற்குச் சொலலியதுமாம்.

"சொன்மடவன்னம்"—விளையாட்டு விருப்பினால ஒருவாளைக்கண்டு பின்னையுட்டுறைக்குமென்று சொல்லுவர் டலவராயினும இவன் விளையாட்டொழிந்து நன்னியல ... ...வியொவ்வாய்; அதனுற் சேராதேகொள. இது *காமஞ் சாலா இளமையோள்வயின் எமஞ்சாலா [illegible]ம்மைபெய்தியோன் சொலலியது. இவையேழும் திணைநிலைவரி.

ஐந்து - அவ்விடத்து.

"கானல்வரிப்பாடல்கேட்ட"—கோவலன் வாசித்தவருக்கள் களவில தலைமகன் கூற்றுதலால இவன் தனமேல் அன்பில னெனவுட்கொண்டு புலந்து அது தோன்[illegible]மல் மனமகிழ்ந்தாள்போலத் தன்பக்கல் வேறுகுறிப்பிலளாயினும் வேறுகுறிப்புடையான்போல இவனுக்கு நயந்தோன்

* தொல்காப்பியம், பொருளதிகாரம், அகத்திணையியல், ருo.

றத் தானும் கானல்வரிப்பாணி பாடத் தொடங்கினானென்க. கலம்-யாழ். கண்டம் - மிடறு.

"மருங்குவண்டு"—ஒல்கி-பெண்மையாலேபொதுங்கி. வளையாமையேயெனத்தேற்றேகாரம் வருவிக்க. முற்றையேகாரங்களும் இன்னவெனக்கொள்க. அதனையறிந்தேகொள்க.

"பூவாரசோலை"—வேலின்றிநீங்கண்டு - பிறரால்வருதசம் இனி இல்லையென்று.

"வாழியவன்"—பகல்செய்வோன் சூரியவம்சமாதலால்; நலனைவிரும்புவானென்றுமாம். இவை ஆற்றுவரி.

"தங்கதிர்"—மணிமுறுவல்-நல்லமுறுவல். செவ்வாய்முறுவலை ஒவ்வாவேனும மணியென்றது முத்தை. வாங்கும - கொள்ளும். மானமகன் - மயங்கினமகன்; காமன்போலவெனபாருமுளர். வீங்கோதம் வெண்முத்தத்தைத்தந்து பூங்கோதையைக்கொண்டு. ஓதம - ஒழுவாய். இது கையுறைமறை.

"மறையின்"—மறையின் மணந்தானை - அப்படிமணந்தவனை. அன்னம் அரும்பிப்பூத்த புன்னையிலே - எறியிருக்க நிறையநியம் நீறுமெனக்கருதி ஆம்பல் மலருமெனக. வண்டு ஊதுமெனவே மலாதலபெற்றாம். இங்ஙனம் கூறிற்று; மதிக்கண்ட ஆம்பல் மலருமாதலால் *"உடைதிரை முத்தஞ் சிந்த வோசனிக்கின்ற வன்னம்" என்றாரபிறரும். மதியம் பிறப்பின்று கண்டாக்கருதம [illegible] ஆம்பலூதுமென [illegible].

"உண்டாளை"—உண்டாளை யென்னறு - உண்டவர்களைக் கனையசெய்யுநறு. ஊடுறையாய் - உண்டபுலாமறையாத; இறைபொவாரியாத நிலவாரணையும தோழியிற்கூட்டங்கூடிப் பின்பு வரைவென்கலென்றுகூற தோழிகூறியது.

"புணர்துணை"—நீங்கும் - விளையாடும். உணர்வொழிய - உணர்வு தன்னைவிட. சேர்ப்பன்வண்ணம். இலது, அறியேனென்று வலிதாகச்சொல்லிக் குறையயப்பித்தது.

"தமமுடைய"—விட்டாரோ, ஓகாரம் ஒழியிசை. தன்னையரியும் தாழும தேருமெனப் பின்பு சிலசொல்லப்புக்கு அதனைக் கூறுவதன்மிகுதியாற் கலங்கி விட்டாரென்றான் அன்றி உயர்திணையையும் அஃறிணையையுமெண்ணி உயர்திணையாற்முடித்தாரெனறுமாம். தன்னையரியும் தேருமிவக, அவற்றிற்கு என்ன உறவுண்டு. மறக்கமாட்டேமென்றது ஒருசொல்.

"புணர்கண"—துயிலல் - பொருந்தல். இக்கல்வாய் மெய்தாவென்றது தன்கணை துயிலாதவருந்த [illegible] யினறி [illegible], [illegible] யாதலாற கேட்கும் சொலல மாட்டாயென்று. [illegible] உறகருவா [illegible].

"புள்ளியன்மா"—புள்ளின் இயலையுடைய குதிரை, இது மாயின [illegible] மை கூறிற்று; † "புள்ளியன் கலிமா வுடைமையான" என்றார் பிறரும். [illegible] மொழிந்தானொன்றது - [illegible], எம்மனம் [illegible] [illegible]. [illegible] [illegible] யாய், [illegible] [illegible].

"நேர்ந்தநங்காதலர்"—நேர்ந்த - [illegible] பொருந்தின. [illegible].

"[illegible]"—[illegible] [illegible] போலிருந்து [illegible]; [illegible] [illegible] [illegible].

"நன்னித்திலத்தின்" [illegible] [illegible] [illegible] [illegible] - [illegible].

"வாரித்தரளம்"—வாரிதரளம் - [illegible] முத்து. கடல்வலைவாருது - [illegible]

---

* சீவகசிந்தாமணி, முத்தியிலம்பகம், [illegible] :—"உடைதிரை முத்தஞ் சிந்த வோசனிக் கின்ற வன்னம், படர்கதிர்த் திங்க ளாகப் பாந்தவாம் பூத்த தெய்ல, வுடர்பிணி யவிழ மாம்ப லிலைகட் கானற் சேர்ப்பன்; குடைகெழு வேந்தற் கப்பா லுற்றது கூற லுற்றேன்."

† தொல்காப்பியம், பொருளதிகாரம், களவியல், [illegible].

வழிபட்டு. அறியின் - ஆராய்ந்தறியின்.

"புலவுற்று"—புலவுற்றிரங்கியது - புலானாற்றமுற்று வருந்தியது; துனியால் இரங்குதலுமாம். நீங்க - புலானாற்ற நீங்க. கலவை - பலவுங்கலந்தது. செம்மல் - பழம்பூ. பலவுற்று - பல்நோயிலே பொருந்தி. பல துன்பங்களுமுறுதலால், ஒருநோயிற் றுணியவொண்ணாத நினைவையுடைய. நோனோய் மடவாள், தானேயறிந்தனுபவிக்க. அலவுறுதலும் இரங்கல். ஒருவரறியப்படாத நோயை பனிநோவு. அன்னையறியாத நோய் நோய காரணமாக அன்றிறாக பயலைக்கு இன்னதிலையறியுமாறு வருந்தினவொழுக்கம். இவைமூன்றும் அலரறிவுறீஇ வரைவுகடாவியது.

"இளையிருள்"—இளையிருள் - இளைய விருள், விகாரம். கன்றுறகிய வருந்ததனால் வந்தது.

"கதிரவன மறைந்தனனே"—எதிர் மலர் - செவ்வியலர், எதிர்தகுபயிராதத மலரென்றுமாம்; நேர்முகலறயடமொன்றுமாம்.

"பறவை"—பாட்டடங்கி - ஒலித்தலடங்கின. நிறைசெல்லா - நிறைசெல்லாவாய். நோய்கூர - நோயுடையாகாநிற்க. மறவை - மறத்தலையுடைத்தாய். இவை மூன்றும் பொழுதுகண்டிரங்கினதாகிய தலைமகள் தோழிக்குரைத்தது.

'கைதை வேலி'—மேய்கையுரித்து - விளையாட்டையுமறப்பித்து, நீங்குமா பாட்டை "இசைபோயினவிடப்பார்க்கு, சிறுவினையாடலழுகைக, நினைக்குமா பெருந்துயர மாகிய நோயே" என்றாற்போல. 12

"கானல்வேலி"—என்றேகிற்கை - என்றுசொல்லியேகிற்கை. கப்பாவை யென்றனை, வேற்றுமையில்லாதலால். மானேர்நோக்கம் - மானையொத்த நோக்கம்.

"அன்னந்துணை"—பொன்னேர்சுணங்கின் - பொன்தோற்றுகின்ற சுணங்கு போல இவைமூன்றும் மெலிதாகச்சொல்லிக் குறைநயப்பித்தல், அற்றவிதற் பொருட்டுத் தோழி இயற்படுக்கத் தலைமகள் இயற்படமொழிந்ததனை மாம்.

'அடையல்குருகே' நோயுணாயாயென்றது முற்று. ஆதலால், மங்கான வில்வந்தடையாதே கொள்ளென்றாள். இது காமமிக்க கழிபடர்கிளவி.

"ஆங்கனம்"—ஆங்கனம்பாடிய - அவன்பாடினாற்போலப்பாடிய. மெல்விரல் - மெல்விரலாலே. பண்ணு - பண்ணோ.

"நுளையா"—விளரியென்றார், விளரி இரங்கினோர்பாடும் பண்ணாதலால். இது "விளரிப்பண் பண்ணினோ பாணர்" என்று வந்ததுபோலும்; நெய்தற்கு இரங்கனிமித்தமும் உரிப்பொருள். விளரி நொடிதரும்பாலை - விளரிப்பாலை. நொடிதருதல் - சொல்லுதல். இளிகிளையிற்கோடல் - நின்றநரம்பிறகு ஆருநரம்புபகை; அது கூடமென்னுங்குற்றம், இளிமுதலாகக் கைக்கிளையாருவதாம். இளிக்குக் கைக்கிளை பகையென்றது. தங்கண்மயக்கத்தாலே பகைநரம்பிலே சென்று தடவ. கொளைவல்லாய் - கொளைநூலை வல்லாய்நீ.

"பிரிந்தார"—எங்கி-வருந்தி. உயிர்ப்புறத்தாய் - உயிரைச்சூழ்ந்தாய். உள்ளாற்றுவேந்தன் - நெஞ்சியான். எயிறபுறத்துவேந்தன் - உழிஞையான். வேந்தனொடு - வேந்தற்கு.

"பையுளோய்"—இவ்வையத்துள்ளார் கண்புதைப்ப. நீயென்றதும், அவரென்றதும் கொடுமைகுறித்து." ஞாலம் நல்கூர்ந்ததென்றாள், தன்னோய் எல்லார்க்கும ஒக்குமாகத்தனக்குத்தோற்றுதலால, 'தான்சாக உலகுகவிழும்' என்னும் பழமொழிபோல. இவைமூன்றும் மாலைப்பொழுதுகண்டு தலைவி கூறியது.

"சித்துமைழி"—மாலை - மாலையை. ஞாக்காது - நம்மைவருத்துமென்று கருதாது. துணிந்தவித்துயரொஞ்சுகின்வியால் - துணிதற்குக்காரணமான நல்ல வார்த்தையோடே. ஆவது நின்னிற்பிரியேனென்றல். இது, வரைவுநீட்டித்தவிடத்துத் தலைமகனை சிறைப்புறத்தானாகக்கூறியது. இது கொச்சகம். முகமிலே முரிகளாறயந்த வேறுபட்டபொருண்மையெல்லாம் தன்னகத்தடக்கி ஒருநெறிப்படுதலாற் கொச்சகமெனப்படும். அது வெண்பாயாலும், அகவலானுமுடியும். இது முகமிலவரிவந்தவாறு

"எனக்கேட்டு"—என்றிவள் பாடக்கேட்டுச் சொல்லுவான் :—நான் கானல்

முற்றுமழலையோடெழுதலாவது பேசிப் பேசியெழுதுகை.

(௪௯) தாழைப்பூந்தோட்டிற் (௫௰) பித்திகைமுகையை எழுத்தாணியாகக் கொண்டு (௫௭) எழுதினானென்க.

௬௮. படருறுமாலை - நினைவுகூரும் மாலைப்பொழுது.

௬௯. வசந்தமாலை - சேடி.

௭௨. நெடுங்கண் - வசந்தமாலை.

௭௭. கணகூடுவரி - பிரதமதேசத்தில் நடித்தநடிப்பு. இஃது ஒருவர்கூட்டவன்றித தானேவாகது நிற்குநிலைமை.

௮௫. காண்வரி - அழைக்கவந்து போதச்சொல்லிப் போகியநடம்.

௮௬. உள்வரி - [பல்காலும்வந்து காணும்படி நடித்தநடம்.] வருதசமறிந்து தன் வடிவுகரந்து பிலதியர்வடிவுடன் தமரறியாமல்வந்து நடித்தநடிப்பு. உள்வரி - வடிவுமறைத்தல்.

௯௨. திறத்துவேறுகியசிறமை - இவள் நீக்கத்து ஆற்றாமை கூறினதென்க.

௯௫. புறவரி - இவனுடனணையாது வாயிற்புறம்பேநின்றாடிய நடிப்பு.

௯௬. நன்னுதல்தோன்றி - வந்தணுகாதே புறவாயிலிலேநின்று.

௯௭. சிறகுறுந்தொழிலியர் - சிலதியர். மறுமொழியுய்ப்ப - மறுமாற்றஞ்சொல்ல.

௯௮ - ௯௯. புணர்ச்சியுட் பொதிந்த கலாந்தரு கிளவியி னிருபறமொழிப்பொருளென்றது - புணர்ச்சிநிமித்தமாகப் புலந்து தன் சிலதியர்க்குச்சொல்லிவிட்ட வார்த்தையைக்கேட்டு, அப்படியன்றிப் புலந்து சொன்னதாகக்கொண்டு தான் நடித்துப்போன நடம்.

௧௦௫ - ௧௦௪. தேர்ச்சிவரியாவது - தன்னுறவுமுறையார்க்குத் தன் விதனங்களை விசாரித்துச்சொன்ன நடம்.

௧௦௬. கண்டவர்க்கு - கண்டவெல்லார்க்கும். உரைத்தல் - தன் விதனத்தைச்சொல்லுதல். காட்சிவரியாவது - தன்வருத்தம் பலருங்காணும்படி நடித்த நடம்.

௧௦௮. எடுத்துக்கோள்வரியாவது - கையறவெய்தி வீழ்ந்தாளாக வீழ்ந்து பிறர் எடுத்துக்கொள்ளும்படி நடித்த நடம்.

௧௦௯. மகளே, ஐ - இடைச்சொல். ஆயிழையென்றது கூனியை. இவள் வசந்தமாலை; அண்மைவிளி. வரியென்றது நடம்.

(௭) வேனிற்காலம் வந்தது; (௧௦) காமனுக்குப் பரிகாரமாயுள்ளோர் (௧௧) போர்க்கோலங் கொள்ளுமென்று காமனுக்குப் படையளிழக்குங் (௧௨) குயிலோனென்னும் (௧௩) படைச்சிறுக்கன்கூறக் (௧௪) கானலந்தண்டுறைக்கண் கடலாடப்போயிருந்துழிக் (௧௫) கோவலனோடப் பிரிவாளாய்த் தன்மனையின்கணிருந்த (௧௬) மாதவியும் விரும்பி (௧௭) மாளிகையின் (௧௮) வேனிலகோணமாடும் பஞ்சரத்தினிருந்து (௧௯) முத்தையும் சந்தனத்தையும் (௨௧) ஏனாகதத் (௨௨) தையுறையாகவேந்தி (௨௩) இயல்பின் வழாத யாழை வாங்கித் தொழுது கைக்கொண்டு வேனிற்காலத்துக்கடுத்த பண்ணை (௨௨) இயச்சு மிடற்றிறைப்பாடுதலும் (௨௪) பன்முறைமைகெட மயங்கினாளென்று கூட்டுக.

௨௬ மதுரகீதம் பாடினள் மயங்கி - தாரமுதலான மேற்செம்பாலையெனும் பண்ணைக் கண்டத்தாற்பாடி மயங்கி அப்பண்ணையே யாழினும்பாடிச் செய்வனென்றவாறு. இதனாற்போந்த பொருள் - நிலம் கலம் கண்டமென்னும் நெறி மூன்றினும், "கண்ட மல்லது நிரம்பக் காட்டக், கருவிக் கின்பங் கொடுப்பதுமது, பெருவரு நிலத்தைப் புணர்ப்பதுவே" என்றுஞ் சொல்லாகத்தியச்சூத்திரத்தாலும் முற்படக் கண்டத்தாலே பாடியெனவும் செம்பாலைப்பண்ணை யாழினும் பாடினாளெனவுங்கொள்க.

ஒன்பான் விருத்தியுட் டலைக்கண் விருத்தியாவது - நிருபத்தொரு கோவைமுதலாக நாற்கோவையீறுகக்கிடந்த கோவைகளுள் ஒன்பான்கோவையில் மேற்செம்பாலை தாரமுதலென்பது, 'தமயினதாரஞ் செய்யுந் தாரம்' என்பதனைற்பெறும் ஒன்பான்கோவை: "தொண்டுபடு திவவின் முண்டக நல்யாழ்" எனவாசிரியமாலையுள்ளுங் கண்டுகொள்க. முற்பட மிடற்றிற் பாடியபண்ணை யாழினமேலேற்றுப்பதாகலின், நண்டு மிடற்றுப்பாடல் சொல்லிற்றிலர்; அது *"பரு

* சீவகசிந்தாமணி, காந்தருவதத்தையாரிலம்பகம், உ௯௮.

ந்து மதனிழலும் பாட்டு மொழாலும்" என்பதனுற்கொள்க.

இனி 'வலக்கைப் பதாகை கோட்டொடு சேர்த்தி' என்பதுமுதலாக (௪௬) 'புறத்தொரு பாணியிற் பூங்கொடி மயங்கி' என்பதீருக முன்னுரைப்பாடியவெ பாண்கோவையின் மேற்செம்பாலைப் பண்ணெழுந்து பதினுற்கோவையாகிய சகோடயாழை வாங்கி வலக்கையைப் பதாகையாக்கி அக்கையால கோட்டு அசையாதபடிபிடித்து இடக்கைநாலுவிரலும் மாடகத்தையுறப் பிடித்த. செம்பகையும் ஆர்ப்பும் அதிர்வும் கூடமுமாகிய பகைநீக்க முறைமையிற்பிழையாத நரம்பின்றற் பதினுநாமயினையும் உழைமுதற் கைக்கிளையிறுவாயாக "மெல்விற செலவில மந்தக் குரலே' என்பதனுன் உழை குரலான மந்தமும், "வலிவிற் செல்ல வணைகைக் கிளையே" என்பதனற் கைக்கிளையிறுவாயான வலிவும் இ... கிளை பகை நட்பின்வழிகளிலே பொருந்தப்பார்த்துக் குரலைகோபினமை யறிந்து அசைபாட்டநமைபகைய இளிநரமபை யும் முற்பட ஆராய்ந்து இசைசேர்த்து அதன்முறைமையிலொத நரம்பகளையும் ஆராய்ந்து இசைசேர்த்துத் தன்மை யறிந்து உழை முதலாகவும் உழையிறுகவுமென மந்தமுதலாகவும் மந்தமிறுகவும குரல்நரம்ப மந்தமாகப்பெற்று குரலிறுமபே முதலுமுடிவுமாகவும் அகநிலைமருதமும் புறநிலைமருதமும் அருகியல்மருதமும் பெருகியல்மருதமுமென நாலவகைச் சாதிப்பெரும்பண்கள் விளைவுமபெற வலிவு மெலிவு சமமென்னுமமூவகை இயக்கம் முறைமையிலே அராயந்துபாடிப் பின்னா மாத்திரைகுறைந்த திறபண்களைப்பாடுகிலவகைக்கண் அப்பண்களை நீக்கிப்பாடி, கேடுவற்ற மனத்தினளாய் அப்பொழுதாள்ளனவுமாம.

௩௨. கேட்டனன் - செவியினிலே அளந்தாள். திறப்பண்பாடுகிற எல்லை அப்பண்களுக்கடைத்தபாட்டின் புறத்தொரு பாணியென்பது நால்வகைச்சாதியாகிய பெரும்பண்களையாக்கி அதன்வழிப்பிறந்த திறப்பண்பாடுகின்றவளவிலே பிரிவின்கண் வேனிறபாணிபாடநினைந்தாள்; பொழுது கண்டு கலங்கினளாதலாலே காலப்பண்ணுக்கமைத்த பாட்டுமொழிய வேறுசில விரவிற்றெனக

இத்தன்மையளாய்ப் பாடல்தவிர்ந்து கோவலனுக்கு ஓலையும் தூதும் விடுத்தாளென்க

ககஎ. பொருந்தாது - கூடாது.

வேனிற்பள்ளியேறி யாழ் கைவாங்கி மயங்கி மாலையினா நங்வுவைத்துத தொடுத்த தாழைப்பூந்தோட்டிலே எழுதி அம்மாலையை வசந்தமாலைகைக்கொடுத்து அவனைக்கொணர்வருகவென, அவள்சென்று கொடுத்துழிக் கோவலன் வரியைப் பாராட்டி இபபண பாடுபெற்றனவென்றுசொல்லக்கேட்டு இரங்கிச்சென்றுரைப்ப வாரானாகிற் காலைகாண்போமெனச் செயலறுப் பாயலிற் பொருந்தாதுவதிந்தனளெனக்கூட்டுக

"வரியெனப் படுவது ... ... நெறித்தே" "அவற்றுள், கண்கூடென்பது .. தன்மைத் தென்ப." "காண்வரியென்பது ..... தன்மைய தாகும்." "உள்வரியெனபது .. . .. மாடுதற்குரித்தே" "புறவரி யென்பது ... ... விடைபெறுவதுவே." "கிளர்வரியென்பது ... . நிற்பதுவே." "தேர்ச்சியென்பது தேர்ச்சிவரி யாகும்" "காட்சியென்பது ... ..., பரிந்துநிற்பதுவே." "எடுத்துக் கோளே .... தொகுத்துக்கோளே."

"செந்தாமரை"—கொத்து - கொந்தென மெலிந்தது. கூனி ஓலைகொண்டு செல்லுகின்றகாலத்துத் தன்னுள்ளே சொலலியது, கோவலனுக்கு இவள் சொல்லியதூஉமாம்

"ஊடற்காலை"—இக்காதையில் இவள் செய்தபடியைக் கோவலனுக்கறிவிக்கின்றாள். சாறறிடுய் கானலிற் பாட்டிலே வருந்தியேய்! இதனைக்காணென்று கோவலன்கையிலே ஓலையைநீட்டினுள்.

கூ.—கனாத்திறமுரைத்தகாதை.

உ. கிகர்மலர் - ஒளிமலர்.

உ - ரு. தூவி விளக்கேற்றவென்க.

ரு - ச. இரவிற்கோர்கோலம்-இராப் பொழுதைக்கு ஆம்படி சொய்தானுவை உடுத்தும் புனைந்தும் ஒப்பித்தகோலம்.

ச மேலைநாள் - முனனேறர்நாள்.

ரு. சோர - சாய.

எ. படாதன - இல்லாதன.

கூ. தருக்கோட்டம் - கற்பகம் நிற்குங் கோயில். [சாந்திகளைக்கோட்டமெனனும்.]

கo. வெள்ளைநாகர் - பலதேவர். பகல்வாயில் - பகற்கூற்றுகிறவாயில், கீழ்த்திசை.

கக. உச்சிக்கிழான் - சூரியன்; அன்றிப் பகற்பொழுதுக்குவழியான உச்சிக்கிழானென்றுமாம்.

கக. ஊர்க்கோட்டம் - ஸ்ரீகைலாயம்.

கக. வேற்கோட்டம்-முருகன்கோயில்.

கஉ வச்சிரக்கோட்டம் - வச்சிராயுத மிருக்கிறகோயில்

கஉ. புறம்பணையான் - மாசாத்தன்; பறம்பு அலைக்கைவிடம் பறப்ப ... யாயிற்று.

கரு. நிக்கந்தக்கோட்டம் - நிக்கந்த தேவரான அருகன்கோயில்.

கரு. நிலாக்கோட்டம் - சந்திரன்கோயில்.

கரு. பாசண்டச்சாத்தற்கு - சாத்தனென்கிற ஐயனகோயிலிலே

உக. பிணந்தின்னு ... ஈளிபபேய்.

ககூ. எசம்படி அழகாலே எல்லாரையும் இகழும்படி. இளங்கொடியாய்-ஒரு பெணகொடியாய்.

கஅ. பொருளுரை - மெய்புரை

க௯. பசிதல் - உண்டாதல். பசித்தாள் - பசித்து.

உஉ. மடியகம் - வயிற்றிடம்; "படியை மடியகத் திட்டான்" என்றுராதலால்.

(ககூ) பிணந்தாவென்றசொல்லிப் பசித்து (உஉ) வயிற்றிடத்திட்டானொனக.

உஎ மடித்திரைத்து - வயிற்றிலே பணைத்து, மடியாகிய்புடைவையிலே ஒக்கலையிலே திரைத்தென்றுமாம்.

ருo. அவர் - மாதாபிதாக்கள். முடிதல் - மரித்தல்.

ருக. தாயத்தார் - ஞாதிகள்.

ருஉ. கடன் - உதகக்கிரியை; பலிகன்மம். மேயினை - மேயினவனை.

ருச. மேவி - கூடி. பூவந்தவுண்கண் - பூப்போலுமுண்கண். பொறுகென்று - பொறுப்பனவாகவென்று; தெய்வயாகாகயாதலாற் பொருதென்று பெறுப பித்தானென்க.

ருஅ. கங்கைநீர்த்துறைபழுவேனென்று அகன்றவனையெனாக.

ருஅ - சo. கணவன் துறைபடியேவெனன்று அகன்றனைதலால், அவனைப் பெயர்த்து இங்ஙனம் மீட்டுத்தருவாயென்று உலகத்து ... சாத்தற்குப் பூவமர் ... யிருந்தான்.

சஉ. இனையளாய் - வருத்தத்தளாய், இனைதல் - ... இனையாயிற்று.

சரு ... - ... பரி காரமாக சாத்தற்கு ... கணையாகி பாற ... கணவனைவிடததே ... யோபாருமு ...

ச ... பிரப்ப சென்று பெறுக ... ஒரு சொல வருவிக, கணவனை ... பெறுக, ... பாருடொக்கு, தெய்வத்தை ... செய்த அதுகொண்டு பெறுக ...

ச ... - ... களவிடல் - களவிடத்து

... போய் - ... போய் போய் ... இருவர் ...

... தேவர் கொட்டம் ... தேவர் ... பணையும், தேவென்று பொய்ம்மை ஒன்றை இட்டாவொப்ப.

... கோவலற் கூற்றென்பது பழி மொழியாதலால், ஒருவன்மேற் கோவலனைத உற்றதோரக்கென்று ஒருசொல் வருவிக்க

ருo - ருக. காவலனை ... கூற்ற இங்குமொழி ... உண்டால் - காவலன்

* நான்மணிக்கடிகை, கடவுள்வாழ்த்து.

வாழும் ஊர் தீப்பாகம் உண்டாகையால். உரையாடேன் - பொல்லாக் கனவாதலால் உனக்குச்சொல்லேன், *"உரையா, ரிழிதக்க காணிற் கனு". என்றாராதலின்.

௫௨. தீக்குற்றம் - கொடியகுற்றம்; அஃதாவது முலைதிருகியெறிதல.

௫௩. உறுவன் - மிககோன்; என்றது கோவலனை.

௫௪. நற்றிறம் - இருவரும் தேவலோகம்புகுதவுள்ள நன்மை நகையாகுமென்றாள்; அதனைமிகுதியினைத்து. [illegible] ஒருசொல்லுருவிக்க.

௫௫ - ௫௬, என்றது நீசொன்னபடியே கூட்டம்பெறுவேன்; ஆயினும் ஒரையமுண்டு கண்டகனாவாலேயென்று கண்ணகி சொல்ல நீகண்டகனாக்கொண்டு வருந்தவேண்டா; நீ அவனால் வெறுக்கப்பட்டாயுமல்லை.

௫௭. கைத்தல் - அவனால்வெறுக்கப்படுதல.

௫௮. உய்த்து - சேரவுய்த்து.

௫௯. சோமகுண்டமும் சூரியகுண்டமுமென்னும் பொய்கையுடையன. [illegible]

௬௦ - ௬௧. [illegible] காரணமாக [illegible]; அதற்குப்பரிகாரமாவது [illegible] படித்தாடிக் கோட்டத்[illegible] கனவ[illegible] மன்றுசொல்ல, கண்ணகியும

[illegible] பீடன்றெனவிருக்க பின்னா - நலத்திற் பிறந்தார்க்குப பெருமையல்லவென இருக்ககாலே.

[illegible] காவலனபோதும் கோவலன் கடையிலிருந்து [illegible] மாதவிகள் அன்றியும் [illegible] பாதத்தைப்பற்று அக்காவலனைப்போகவென்று அவன் அறுமியவிடத்து [illegible] கோவலனென்றாள். கோவலன்வந்து நங்கடைத்தலையான்; அவன்றான் நெடுங்காலம் நம்மை நீங்காக் குறிப்பினையுடையனென்றாள்.

௬௬ - ௬௭. சிலதிகூறுதலும் கோவலன் உட்புகுந்தான்.

(௬௪) கொடியிடையார்தாம் கோலங்கொள்ளாநிற்க, அக்காலத்தே (௬௬) கோவலன் (௬௭) பாடமைசேக்கையுட் புக்கானென்க.

௬௯. சலம் - பொய். சலதி - பொய்ச்சி. [illegible] - அனுபவித்து.

௭௦. குலந்தருவான்பொருள் - தாயத்தாராற்றரப்பட்டபொருள்.

௭௧. இலம்பாடு - வறுமை.

௭௨. நகை - ஒளி.

௭௪. சென்றகலன் - முன்பு வாங்கியழித்த ஆபரணம்

௭௫. உலந்தபொருள் - கெட்டபொருள்.

௭௪. சிலம்புமுதலாகவென்றான், வாணிகஞ்செய்வதற்கு முதலிடென்பதாகலான்.

(௭௬) மதுரையிடத்துச்சென்று (௭௫) ஈட்டலுற்றேனென்க.

௭௭ - ௭௮. எழுகென்று வியங்கொண்டானென்க.

௭௭ நீடி - நெடுங்காலநின்று.

௭௮. வியங்கொண்டான் - வினையினை தேவலேக்கொண்டான்.

௭௯ - ௮௦. கங்குலை இடத்துநின்றும் சுடர்போக்குவதன் முன்னென்க; என்றது, இருளிலேபோதலபற்றி.

"காதலிகண்ட" — மாதவி தன்சொல்லை உறிதாக்கவென்றது, வேனிற்காதையிற் 'காலைகாண்குவம' என்றவார்த்தையை. மூத்தை - மூத்தையாயிற்று.

௧௦.—நாடுகாண் காதை.

௧. வான்கண் - ஆதித்தன். கண்விழித்தல் - விளங்குதல்

௨. நீங்க - வெண்மதி நீங்கினவளவிலே.

௩. காரிருளின்ற கடைநாள் - காரிருள் [illegible] கடையிலேயென்றதான்; [illegible]

௫. ஊழ்வினை கடாவுதலால் உள்ளந்துணைத் துரப்ப. வினைசெலுத்தி உன்னாத்தை நெஞ்சை ஒட்ட.

௬. எழகதகா - மெழுகம். எகினமாகிய கவரி.

* [illegible] ௧௨௩.

௬. துணையெனத்திரிதருமென்றது இவை ஒன்றோடொன்று இனமல்லவாயினும் பழக்கத்தாற் றிரியும் (அ) வாயில்.

௭. தாழொடு குயின்ற தகைசால் சிறப்பெனவே தாழ்முதலான உறுப்பெல்லாமடங்கிற்று.

௮. வாயிலென்றது ஆகுபெயராற் கதவை. தாழொடுகுயிற்றுதல் - போர்க்கதவு பண்ணும்போதே தாழோடே பண்ணுமென்றது. வாயினெடுங் கடையாவது - முதலான தோரணவாயில்.

௧௦. வலஞ்செயா - வலத்திலேயிட்டு.

௧௧. போதிக்கு ஐந்து கொம்பாதலாற் பிணையைந்தோங்கியவென்றார்.

௧௨. திருமொழி - தருமம்.

௧௩. அந்தரசாரிகள் - ஆகாயசாரிகள் அறைந்தனர் சாற்றலை - அகமத்தை(ச்) சொல்லி விளக்கப்பொருள் சொல்லுதல்.

௧௪. இந்திரவிகாரம் — இந்திரன் நிருமித்தது; என்றது இவை அன்று கழிந்தபடியாலே அவற்றையடைவே கழிந்து போய்.

௧௫. புலியூர் - மச்சமாங்கிசம்.

(௧௬) பொய்யாவிரதத்து (௧௭) விழுமியோரெனக்.

௧௬ - ௧௭. விரதத்தோடேயடங்கிய

௧௮. ஐவகைநின்ற கோயில - ஐந்து சந்திக்கும் ஐந்து கோயில் நின்ற கோயில்.

௧௯. சந்தியைந்து - ஐஞ்சந்தி. அவையாவன: பஞ்சபரமேஷ்டிகள் தெரு. அவர்: அருகர், சித்தர், ஆசாரியர்கள், உபாத்தியாயர்கள், சாதுக்கள்.

௨௦. இவைகள் கூடினமன்று.

(௨௦) இம்மென்றிற் (௨௧) பிண்டிநிழலின் (௨௨) யிட்ட (௨௩) சிலாதலமெனக.

௨௨. நீரணிவிழவு - திரு அபிஷேகவிழவு; அயனம், சங்கிரமம், பதபபுனலாட்டினவுமாம். தேர்விழவு - திருநாள்.

௨௪. உலகநோன்பிகள் - உலகைவழக்கோடு பொருந்தின நோன்பிகள், அவர் இல்லறத்தையுடைய சாவகர்.

௨௫ - ௨௭. வாயிலுக்குவமம் மலை; தெருவுக்குவமம் யாறு. உலகவிடைகழி - உலகத்தாரெல்லாரும் போகலான ஊர் வாயில், தெருவிடை ஒழுங்குக்கு இடையே கழிதலால் இடைகழி.

௨௮ கலை - சரீரம்; அன்றிக் கலையிலானென்றது, கலைகளினின்றும் காமன்

௨௯. மன்னவன் - சோழன். இறுக்கும் - இறையிடும்.

௩௦. மரபபந்தர் - சோலையென்றுமாம்.

௨௮ - ௩௧. காமன் வேனிற்காலத்தையும் தென்றலையும் சோழனுக்குத் திறையிடும் பொழிலையுடைய எயில; இலவந்திகை - பிராவி. எயில் - சுற்றுமதில். சோலையையும் பொய்கையையுமுடைய எயிலென்றுமாம்.

௩௨. தண்பதப்பெருவழி - புனலாட்டுக்குப்போம் பெருவழி; திருமஞ்சனப் பெருவழியுமாம்.

௩௩. காவிரிக்கரையிடத்து வாயில்

௩௪ குடதிசைக்கொண்டு - மேற்கு நோக்கி.

௩௫ வடபெருங்கோடு - வடகரை

௩௬ கவுந்தியடிகள் பள்ளியையுடைய கோவில்.

௩௭. ...ரங்காரம் - மூப்படைகாரம் ...ரைகாதமென்பர், அவட்கு அறகாதம் ஆகாதமென்பர் போலத்தோன்ற

௩௮ ...நால - பெயர். ஆக்கு - களைந்து. சதுக்கம் =சோகவருவதனைச் செகத்தாற்பிறந்த விகாரம.

௩௯. சிறையகம் - ஸ்ரீகோயில் ஒரு பக்கத்தே பள்ளியகம்

௪௧ பெருமகன் - அருகதேவன்.

௪௨. உறுகண்ணாளர் - துன்பமுறுபாவமுடையார்போல, மிடியாளரைப்போலவென்றுமாம்.

௪௩. கடைகழிந்து - வாசலைவிட்டு

௫௦. உரையாட்டிலலை - சொல்லலாவதொன்றில்லை ஒருவாசகம்.

௫௧. பூசார்க்கணமேனி பொருளீட்டும் வேட்கையோ; பொருள்வரைதல் வேட்கையெனக, வரைதல் - தன்னிடத்தாக்குதல்; இன்னதற்கு மேற்பட்டது தானுந்தக்கேயென்று வரைந்திடுதலுமாம்.

மேற்கவுந்தியடிகள் வார்த்தை:—

௫௨. பறப்பகை உழக்கமாட்டா

௫௩. காம்ம் காமமியவழிகடக்க.

௫௪. அறிவன் செவ்வி - இவன் செவ்வியில் மென்மையால் நடக்கத்தக்கமையிலவொன்றதாம். அறிகுநர்யாரோ - வல்லவாகவாமாக்குமன்றோ.

௫௫ - ௫௭. மதுரைக்கொன்றியவென்பதற்குப் போதவெனா ஒருசொல் வருவிக்க.

௬௨ - ௬௩. என்றொடிவளைத் தோளி துயர்தீர்த்தேனென்று கோவலன் சொல்ல

௬௪. கானறை - பாராய். வழிக்கொண்ட நெறியிடத்து. இந்நெறி - காவிரி வடகரைவழி.

௬௫. யாங்கும் மிகவுள்ளன.

௬௭. படர்குவமாயின். என்றாள், தன்னையும் உளப்படுத்தி.

௬௮-௭௧. சண்பகம் குழியைநிறைத்த பொங்கர். போற்றாமாக்கள் : பரிகரித்துப்போதுமாக்கள் குழியைச் சண்பக நிறைத்த தாதுசோ பொங்கா பரிகரியா மாக்கட்குத் தம்பக்கலிருந்தரும் பூவாலினிறைத்தல் பெற்றும் ; தாதுசோ பொங்கரென்றலின். பொங்கா - சோலையுமாம்.

௭௩. மேல்நோக்குநிற பழமாகிய பகையிலே முட்டிறுமுட்டவோ

௭௪. வலயம - தோட்டம்

௭௭. யாற்றுக்கரையைவிடாது வயல் வழியே போகில்

௭௮. [illegible]கொய் - [illegible]ழவர்

௮௦. வினைக - [illegible]

௮௨. அ[illegible] [illegible]. வேட்கை - [illegible]

[illegible]. [illegible] - [illegible]

[illegible]. [illegible] - [illegible], சடறசுளையுமாம

௯௧. [illegible] - [illegible] [illegible].

௯௨ - ௯௩. அலை[illegible] [illegible] போல் [illegible] [illegible] அவை [illegible] [illegible] [illegible]

௯௬. அய[illegible]பட - வேறுபட.

௯௭. ஒடியவிலை[illegible]சொல்லி

௯௯. அ[illegible] - தேசவிசேஷம்.

௧௦௦. மொழிப்பொருட் டெய்வம் - மொழியாகிய தெய்வம், பொருள் மொழி - உபதேசம் : மந்திரம்.

௯௮ - ௧௦௧. குறவா தாம்பெனக்காயுந்தி கொண்டு மொழிப்பொருட்டெய்வம் நமக்கு வழித்துணையாகவென்றுசொல்லி வழிப்போகப் புரிந்தோர்.

௧௦௨. கரியவன் - சனி. புகைக்கொடி - தூமகேது. சனி தூமகேதுவைக் கூடினாய்.

௧௦௩. தாரம் - சந்தனம் அகில்முதலாயின.

௧௦௭. கடல்வளம் - "ஒர்க்கோலை...... நெடுந்து." எதிர - வளத்தோடெதிர்க்கையாலே ; கடல்வளம் காவிரியோடெதிர. கயவாய் - புகார்.

௧௦௯. ஒவு அவிர்ந்து.

௧௧௦. ஆம்பி - பத்தா. கிழார் - பூட்டை.

௧௧௧. பிழா - இடா.

௧௧௨. கம்புட்கோழி - ஒருசாதி.

௧௧௩. காக்கை - நீர்க்காகை.

௧௧௭. உள்ளுமூரலும்-உள்ளலும் ஊரலும். புதா - பெருநாரை; மரக்காரை.

௧௨௦. உழாநுணைபொளி-தானைபட்ட சேறு.

௧௨௧. காரான் - எருமை.

௧௨௨. சொரிபுறம் - திணவையுடைய முதுகு.

௧௨௩. குமரிக்கூடு - அழியாக்கூடு. கொழுமபலலுணவு - பலவாக்கத்துணவு; அவரை துவரையுள்ளிட்டன.

௧௨௫. கருங்கைவினைஞர் - பள்ளர், பறையர். களமர் - உழுகுடிவேளாளர்.

௧௨௮ - ௧௨௯. அறுகையும் குவளையையுங்கலந்து கதிரோடு தொடுத்தமாலையை எருதின்மேலே சூட்டிப் பாருடைப்பனர்போல் எமராசிக்கின்றாள். குட்டக்கலப்பையிலே நட்டதென்றுமாம்.

௧௩௩. அரி - அரிந்திடுந்து.

௧௩௭. முகவை பாடுவார் - பொலிபாடுவார் ; நெல்லு முகந்துகொடுக்கப்படுதலாலே. "புகர்முகவை" போல.

௧௩௯. யாற்றடைகரைகளிலே இவ்வோசைகளை முறையிற்கேட்டு. நீரில் - சீர்மையுடனே. உருவக்கேட்டுப்போதுகை.

௧௪௧. கேட்டதுணர்தலால் அவலித்துக் கொள்ளாராய்.

௧௪௩. உழைப்புலிக்கொடி - புலியை இடத்திலேயுடையகொடி.

௧௪௫. மழைக்குக் கருப்பமாவது தூமம். அட்டில் - மடைசாலை. கொற்றத்துடனே மழைக்கருவையும் தோற்றுவித்து அவ்வளவிலே விளங்கிய சாலையென்க.

௧௪௭. வானவருணு - சோற்றுவி ; அவியிடுகிற ஆவி.

௧௪௯. இறை - இறப்பு

கசஅ. காவிரிப்புதல்வர் - வேளாளர். (கடுo) விளைப்போரான (கசஅ) புதல்வர் பழவிறலூர்களும்.

கசகூ. புரப்போர் - காக்குமரசர்.

கடுக. பொங்கழி - தூற்றுப் பொலி. பரந்து - பரக்க.

கடுஉ. மங்குல் - இருட்சி.

(கசஎ) மறையோரிருக்கையும் (கடுo) பழவிறலூர்களும் (கடுஉ) மலைமுற்றேன்றும் (கடுகூ) நாடென்க.

(கசக) எறிப்படாபுரிந்தார் (கடுஎ) செல்லுநாருள் ஒருநாளென்க.

கடுகூ. ஆறுறுவீயரங்கம் - ஆற்றை மறைக்குமரங்கம்; ஆவது துறை, அது சீரங்கம்; ஆற்றவியெல்லாமுளா.

கடுஎ. அடுக்கம் - மரச்செறிவு; அரங்கத்துக்கு அடுத்தவிடம்.

கடுஅ. ஒருசிறை - ஒருபக்கத்திலே

கடுகூ முனபுசொன்ன சாரணர் தோன்ற.

கசுo. ஐயர் - முன்சொன்ன உலக நோன்பிகள்.

ஐயர் பட்டினப்பாக்கத்திலிட்ட சிலாதலத்திருந்து தருமஞ்சாற்றுதல் சாரணர்க்கு அடையாகலின் அவர் இங்கேதோன்றவென்க.

கசுஎ. சிந்தைவிளக்கு - அவதிஞானம். என்றது திரிகாலஞானத்தை

கசுஉ. வித்தின - வித்துபபோல.

கசுஅ. ஏனைநான்மென்றது. அநந்தஞானம், அநந்ததரிசனம், அநந்தவீரியம், அநந்தசுகம், அநந்தநாமம், நிட்காமம், நிராயுட்யம், சத்பாவனையெனவிவை.

கசுக. பொறியறை - பிறவியாகிய துவரமில்லாத அறை.

கசுசு. ஒருமூன்று - காமம் வெகுளி மயக்கம.

கசுஅ. ஐவர் - பஞ்ச இந்திரியங்கள்.

கசுஅ - கசுகூ. மற்றைத்தேவர் இனையடிகளைக் கைவிடத்தேகாணினும், அநியமாகிய சமயதேவர்களைக் காணினும அவரை எனக்கணகாணு.

உoo. திருமெய்க்கு - திருமெய்ப்பொருட்டு.

உoஉ. அருகனறவோர் - இருடிகள்.

உoகூ. தலையிடத்து.

உoகூ. இறுதியிலின்பம் - அநந்தசுகம்.

உoசு. உயர்மிசை - சிலாவட்டம். ஒங்கி - எழுந்திருந்து.

உகக. பந்தம் - சம்சாரம்.

உகஉ. நீரணிமாடம் - பள்ளியோடம், அதனுடேபோந்து.

உகக வம்பப்பரத்தை: வம்பு-புதுமை; பரத்தைத்தன்மைக்குப் புதியவள். வறமொழியாளன்-பயனிலசொல்லுமவன்.

உஉக-உஉஉ. காமனுந்தேவியும்போலும இவராரெனக்கருதி, போலும்-ஒப்பில்போலி.

உஉகூ. கோற்றனைவ் - பட்டினிவிட்டனைல்.

உஉச. ஆற்றுவழி - நெறியிடத்து.

உஉடு. மாசறியாக்கையர் - நீங்கள் நினைத்த காமனுந்தேவியு மல்லவென்றவாறு.

உஉசு. பரிபலம்பினர் - செலவாற் வருந்தினர்.

உஉகூ-உகூo புனைத்து நெடுங்காதிற்ப

உகூஉ. பட்டைதயறியார் - மனத்தில இவர்நினைத்ததாதலால அறிந்திலர்.

பினபு அறிந்தபடி: அவர்கள் முன்னே கரியாரைபடியாறும், தங்களைப்போல்லோர்க்கு கூறினமையாறும், அவ்விடத்து இவரலைது வேறுசாபமிட வல்லாரில்லையாகலாறும், நூச்சாபம் இவராலேவந்ததென்று இவரறிந்தார்; அறிந்து (உசo) உய்திக்காலம் உரையீரோவென்றார்.

உசஉ. கொச்சி - மதில், [புதவமாம்.] என்றது காவல்வேண்டாத வீரனென்றவாறு.

உசகூ. படர்நோய் - உறழ்ச்சியானுண்டான நோய்.

உசஎ. குறம்பனைந் - வாரணம்-யானை.

உசஎ - ... வாரணம - கோழி, புறத்தே சிறைநையுடைய கோழி. உறையூர்; கோழி - ஆகுபெயர். யானையைக் கோழிமுருக்கலால் கோழியென்றுபெயராயிற்று. யானையைச்சயித்தகோழி தோன்றினவிடம் வலியுடைத்தென்று கருதி அவ்விடத்து அதன்பெயராலே சோழனரகாமாக்கின் பொழுது சிறையுங் கருத்துமாக்கியவதநால புறம்பே சிறையையுடைய கோழியென்றுயிற்று.

கட்டுரை.

௯. அறம் - தருமாசனம். மறம் - இமயத்துப்புலிபொறித்தது. ஆற்றல்-அமராபதிகாத்தது.

௪. மூதூர்ப்பண்பு - காவிரிப்பூம்பட்டினத்துப்பண்பு.

௫. விழவு - இந்திரவிழவு. வானோர்வரவு - தேவர்கள்வரவு

௬-௭. நாட்டுக்குடி - உழவிடைவிளைப்போர்.

௭. கூழின் பெருக்கம் - 'கவிர்செந்நெற்காய்த்தலை கூட்டி' நெற்சொரிதல்.

௮. காவிரிச்சிறப்பு - ஆற்றுவரி.

௯. பொய்யாவானம் புதுப்புனல் தருதல் - மழைக்கருவயிறு ...த்தல.

௰. அரங்கு மாடமும் - அரங்கேற்றுகாதையிற்கூறுவது. தலைக்கோல் ... - "தூசு கணைமாலை" முதலான முகமுடைவரிகள்

௧௧. பாரம்விருத்து - கடலாடுகாதையிற்கூறிற்று.

௧௨. இணைநிலைவரி - "புணர்துணையோடாடும்" என்றன்முதலாயின. இணைநிலைவரி - அல்லாத நிலைமுதலாயின.

௧௩. யாழின்பகுதி - வேனிற்காதையிற்சொன்ன "உழைமுதற்கைக்கிளை" முதலாயின.

௧௪. இடைநிலைப்பாலை - "கோடிவிளரி மேற்செம பாலை" முதலாயின.

௧௫. தாரத்தாக்கமுந் தான்றெரிபண்ணும் - "புறஞ்சொரு பாணியிற் பூங்கொடி மயங்கி" என்பதுமுதலாயின.

௧௬. ஊரகத்தேர் - ஊர்காண்காதையிற்சொன்ன ஊர்களின்வண்ணம்.

௧௬. வரியுடைப்பாணி - "வெங்கட்டொலைச்சிய விருந்திற்பாணி" முதலாயின.

௧௭. பிறபொருள்வைப்பு - இவைமுதலாயின.

௧௮-௨௦. தனிக்கோணிலைமை ... ... யுடைய புகார்காண்டம் முற்றிற்று.

புகார்காண்டம் முற்றிற்று.

மதுரைக்காண்டம்.

௧௧.—காடுகாண்காதை.

௧. திங்கள்மூன்றடுக்கிய - மூன்றுதிங்களை அடுக்கினதொத்த.

௨-௩. ஞாயிற்றையைப்போல ஒளிசிறந்த அறிவன். சிறந்தகோதையெனக்கூட்டினுமாம்.

௪. அறிவனொன்றது உறையூர் ஸ்ரீகோயில் நாயனை.

௫. கந்தன்பள்ளி-உறையூர் ஸ்ரீகந்தன்பள்ளி.

௬. அந்தில் - அசைநிலை. அரங்கம் - திருவரங்கம்; ஆற்றின்குறையென்பாருமுளர்.

௯. அல்கியொடுங்கி - விட்டு அடங்கித் தங்கி.

(௬) அரங்கத்திற்கண்ட (௭) சாரணர் சொன்ன தருமவுரையைக் (௫) கடவுளர்க்கு (௮) மொழிந்து (௧௧) வாரணங்கழிந்து வழிக்கொண்டு (௧௪) இளமரக்கானத்துப் புக்குழியென்க.

௧௪. இருக்கை - இருப்பிடம்.

(௪) வணங்கி (௮) மொழிந்து (௧௪) கானத்திருக்கைபுக்குழியெனக.

௧௭. அடியிற்றன்னளவு - கடலினளவை அடியாலே. அரசர்க்குணர்த்தி - இன்னளவினது இதுவென்று காட்டி; அவுணரி - அடியினாலே தன்பெருமையை அரசர்க்கறிவித்தெனபாருமுளர்.

௧௮. வேலாலெறிந்தபகை.

௧௯. பஃறுளியாறு - குமரிப்பக்கத்ததோராறு.

௨௦. கோடு - கரை. கொடுங்கடல் கொள்ள - வளைந்தகடல் கொள்ளுகையிலே.

௨௬. முதல்வன் சென்னிமுடியிலே வளையுடைத்தோனென்க; முதல்வன் - இந்திரன்.

௫௨. கண்கள் என்னுள்ளத்தைக்கலக்கக்கலக்க; கண் - ஏழுவாய்.

௫௯. தீத்திறம் - அக்கினி.
௬௦. தொழிலாளர் - மந்திரிகள்.
௬௩. நலங்கிருக - நலம்வேறுபட.
௬௮. அறை - கற்பாறை. பொறை - பொற்றைமலை = சிறுமலை. ஆரிடை - அருவழி.
௬௯. நிறைநீர் வேலி - நிறைந்த நீர்க்கு வேலியான ஏரிக்கரை.
௭௧. கொடும்பை - கொடும்பாளூர், அவ்வூரிலே நெடுங்குளங்கரைக்குள்ளாகப்புக்கால்.
௭௩. அறைவாய் - அற்றவாய். சூலத்து - சூலம்போலக் கவர்க்கும்.
௭௫. அலர்தலை - விரிந்ததலை.
௭௬. புன்முளி மூங்கில் - தண்டுலர்ந்த ...ல்.
௭௯. கடம் - வழி.
௮௦. அறை - அறுத்தலையுடைய. கட்கரும்பு - கண்ணையுடையகரும்பு.
௮௨. காயம் - வெள்ளுள்ளி.
௮௩. சிறுமலையென்பது ஒரு மலை.
௮௬. வலங்கொண்டு - ப...த்திட்டு. அகன்பதி - மதுரை
௮௭. இடத்து - இடப்பக்கத்து.
௯௦. கடம் - பாலைநிலத்துவழி.
௯௧. திருமால்குன்றம் - அழகர்திருமலை
௯௨. ஆர்ந்த - அப்பிலத்துவாய்
௯௬. விட்டுநீங்காத - சம்பிநீங்காத.
௯௭. முட்டாச்சிறப்பு - விசேடம். இந்தவிசேடம் எக்காலத்துமுள். மூனறுள - மூன்றுபொய்கையுள.
௯௮. விழுநூல் - ஐந்திரவியாகரணம் எய்துவிர் - உணர்விர்.
௯௯. பொருந்துதல - ஆடுதல்.
௧௦௭. வந்தனை - வந்தனையோடே
௧௦௮. சிலம்பாறென்பது - ஒராறு. அகன்றலை - அகன்றவிடம்.
௧௦௯ - ௧௧௧. பொற்கொடிபோன்ற ஒளியினையும் புயல்போலும் ஐங்கூந்தலினையுமுடைய தொடிவளைத்தோளாள் ஒருத்தி கன்னிகாரம்போலத் தோன்றி; கன்னிகாரம்போலவென்றார், மதாணியணிதலின். கோங்கடியிலேதோன்றியென்றுமாம்.
௧௧௨. இம்மைக்கின்பம் - பொருள். மறுமைக்கின்பம் - புண்ணியம்.
௧௧௩ - ௧௧௪. இரண்டுமின்றிச் செம்மையினிற்பது வீடுபேறு.
௧௧௫. உரியேன் - தொழில்செய்வேன்.
௧௧௭. திறந்தேனென்றது வினாவு.
௧௧௮. போகிடைகழியன - நீண்ட இடைகழியிறுள்ளன.
௧௨௦. ஓட்டுப்புதவம் - இரட்டைக்கதவம்.
௧௨௧. வட்டிகையினெழுதிய கொடிபோல்வாள்.
௧௨௨. இறுதியிலின்பம் - வீடு.
௧௨௩. பேணியபொருள் - மூன்றினொன்றாய் வினைத்தகாரியம்.
௧௨௫. நெடுவழிப் புறம் - நீங்கள்போகின்ற பெருவழியிடம்.
௧௨௮. ஐந்தும் எட்டுமெனவன. பஞ்சாக்கரம் அட்டாக்கரம்.
௧௩௧ - ௧௩௨. வேண்டியதொருபொய்கைக்கண் ஆடினால் வினையவிரண்டும் தோன்றுமரபினவல்ல.
௧௩௪. உள்ளம்பொருந்துமின் - நினையுங்கோள்.
௧௩௫. புண்ணிய...ன்கொடி நின்றநிலைமை தோன்றும். கொடிபுணர்நிலை - கொடிமரத்தும ... ருவாச...மாம்.
௧௩௭. ஆயிரமலைத்தாமரை - திருவடி.
௧௩௮. கேட்குமென்பது - முற்று. கேட்டதால் ...ப்பெய்துமென ஒருசொல் வருவிக்க.
௧௪௨. செந்நெறி - செவ்வியவழி.
௧௪௩. நாற்றுத்தெய்வம் - வருத்துந்தெய்வம்.
௧௪௬. மயங்குநாத்தடுக்கும் - வழிபோவாரைப் போக்குவிலக்கும்.
௧௪௭. இவ்வகைச்சென்றுகிடக்கும்.
௧௪௯. கற்பம் - கப்பமென்னின்றது. பிராகிருதம்.
௧௫௩. மெய்ப்பாட்டியற்கை - பரமாகமம், பரமாகமத்துநல இத்திரன்றால் காணலாம்.
௧௫௪. இடைநெறி - முன்சொற்ற வழிமூன்றிற்கும் நடுவின்வழி, நெறியிடையிலேயென்றுமாம். இயவுக்கொள் - செலவுகொண்டு.
௧௬௨. நயந்தகாதலுடையதைதலால், யான்சொல்லுகின்றவதற்கு இவன் நல்குவானென்ன.
௧௬௭ - ௧௬௮. யான்மாற்றம் தீர்கிலேன்; நீ பிழைக்கச்செப்பினை.
௧௮௦. மேலோர் - அருந்தவர். நூலோர் - கற்றோர்.

௧௮௧. பால்வகைதெரிந்தபகுதியோர்- ஒதாது நன்மைநிமையறிவோர்; ஞாதிகளில் உயர்ந்த கூற்றேரென்றுமாம.
௧௮௨. பிறக்கிடுகை - பின்னிடுகை; என்றது முகம்பாராமை.
௧௮௨-௧௮௩. அவர்கள் இது பிணியெனக்கருதிக் கழிந்துபோங் கணிகையர்.
௧௯௧. பாத்தரும்பண்பு - பகுத்தலரியு பண்பனே, என்றது பிறர்க்கிலலாத பண்பு.

௧௯௫. அறிகுவனென்றுகருதி.
௨௦௫. கோவலன் றன்னொடுங் கொடுங்குழை மாதொடுமென்பன எண்ணொடுவுமாம்.
௨௦௬ - ௨௧௦. ஆரிடை யத்தத் தியங்குநருடைய வளமல்லது மழைவளம் பெருமறவர்.
௨௦௮ - ௨௧௯. பொழில் விளங்கிய இருக்கையிடத்து ஐயைகோட்டமென்க.

௧௨.—வேட்டுவவரி.

௧. திருகலின் - முறுகலின்.
௨. எய்யாவொருசிறை - பலரும் அறியாத ஒருபக்கம்.
௩. உப்பால் - மேல்
௪. வழங்குவிற்றடக்கை-வில்லெழுத்து தடக்கை
மாம். தாயம் - உரிமை
௭. படிவகடன் - முன்பசொல்லித்துப் போதுங்கடன; அது கொடுத்துப் போந்தாள்.
௮. சாலினி - தேவராட்டி.
௧௧. [illegible] மனறமை - [illegible]
௧௨. கலைமலிப்பெ[illegible] [illegible]கள்.
௧௩. நிரைகவர்ந்து வாராதபடியர்ப் வயினர்மன்று பாழ்பட்டது
௧௭. மறக்குடித் தாயமாய வழிவளஞ் சுரவாது. வழிவாம் - போவாரை அலைத்துப்பறித்தல,
௧௮. அறக்குடி - அறஞ்செய்யுங்குடிகள். அவிந்தடங்குதல-ஊனைகோடலும் ஆறலைத்தலுமொழிதல; இது 'மறக்குடி அறஞ்செய்யக் கெடும்' என்னும வழக்கு
௧௯. மட்டுண்வாழ்க்கை - கள்ளுணவுகளிக்கும்வாழ்க்கை.
௧௬. கட்டுண் மாக்கள் - களவே கட்டு உணவாகவுடையராகிய கடந்தருமென்றது சாலினி கடந்தருமென்னாதாருமென்பது விகாரத்தால் தருமெனப தாயிற்று. அங்கு - அவ்விடத்தில்.
தங்குடியில ஒருபெண்ணை ஒப்பிக்கிறபடி கூறுகின்றார் :—
௨௦. இட்டுத் தலையெண்ணு மெயினரல்லது - தலையறுத்திட்டு எண்ணப்படும்

௨௧. சுட்டுத்தலைபோகா-நோயாற்செத்துச் சுட்டுப்போகாத, என்றது மறங்கூறியதாம்.
௨௦ - ௨௧. அன்றியும், மாற்றார் தலையைத் தாங்கள் வெட்டியிட்டு எண்ணுமதல்லது பிறரால் கருதலானவிடத்தைப் போகாதவென்றுமாம். அன்றியும், மறத்திற்கு முற்படவிட்டெண்ணுமெயினர், தாங்கொள்ளச்சுட்டினல்லது பிறர்கொள்ளச் சுட்டுமுடிவுபோகாத தொல்குடியிற் குமரியென்றுமாம்.
௨௨. அரவின்குருளை நாணென்றது பொன்னாற்றபண்ணின பாம்பு; ["ஆரப் பெற்று" என்பதுபோல உருவமாறிநின்றது.]
௨௨ - ௨௩. சுற்றிக்கட்டி.
௨௪. இளைசூழ்படப்பை - காவல்சூழ்ந்த கொல்லைதோட்டம். இழுக்கிய - பட்ட.
௨௫. மாலை - ஒழுங்கு.
௨௬, ௨௭. நிரைபுலிப்பற்றாலி - நிரைத்த புலிப்பற்றாலி.
௨௮ - ௩௦. வரிப்புறத்துரிவை - தூய புறத்தினையுடைய் புலியுரிவை.
௩௨. திரிதருகோடு - புரிந்தகொம்பு.
௩௩. தூவி - சிறகின்மயிர்.
௩௪. பந்தும்கழங்குங்கொண்டு சேவித்து.
பீடிகையிற் சென்று நிலைப்பலிசெய்து.
௪௦. அறெறிபறை-வழிபறித்தற்கொட்டும்பறை. குறைச்சின்னம் - குறைகொள்ளுமிடத்து ஊதுஞ்சின்னம்.
௪௨. அணங்கு மெய்ந்நிறீஇ - அக்குமரிமேல் அணங்கையேற்றி.

சக. விலைப்பலி-வெற்றிகொடுத்துண்ணும்பலி. மலர்பலிபீடிகையென்றது கோட்டத்தை.

சக-சச. உண்ணுமூர்தி.

சக-சச. பீடிகைக்கு அருகேநிற்கிற கலைப்பலியூர்தியைக் கைதொழுதேத்தி. ஏத்தி-ஏத்த. கலைப்பலியூர்தியென்றது தெய்வமேறப்பட்டானை. கலைப்பரி-பரிக் கலையென்க.

(எ) சாலினிதானும் (சஉ) அணங்கு மெய்க்கிறீஇ (சச) ஏத்திப் பின்னும் (ருய) தெய்வமுற்று, (சஎ) கொங்கைச் செல்வி' என்பதுமுதலாக, (ரு0) 'திருமாமணி' என்பதீறாகக் கண்ணகிக்கு நிகழ்வது கூறினள். 'கொங்கைச் செல்வி', 'குடமலை யாட்டி' என்றது மேற்பட்டு இவளைத் தெய்வமாகக்கொண்டாடுமிடக்கூறினபடியாலே, இவள் தீர்க்கையாகவே பிறந்தாளென்றவாறு.

சுகூ. இரண்டுவேறுரு - தலை கிடாவானவடிவு. அவுணன் - மகிடாசுரன்.

சுஅ. சூலி - சூலத்தையுடையாள் மாலவற்கிளங்கிளை - மாலின் தங்கை.

எக. ஆய்கலைப் பாவை - கலைக்கியாணப்பெண். அருங்கல பாவை - இரத்தினப்பாவை.

எஉ. தமர்தொழ வந்த குமரி - எயினர் தொழ வந்த குமரி.

எகூ. அமரிளங் குமரி - குமரிமாதேவி.

(எச) வாய்ந்ததென்று கண்டார்கூற (எகூ) அருளினளென்க.

சாலினி சொன்ன ஓப்பித்துப் பந்து முதலாயின கொண்டு சிலர் பின்வாரா நிற்பப் பறைமுதலியன நின்று துவைப்பப் பலிசெய்து அப்பலியிட்ட அப்படி மத்தான் தெய்வத்தைத்தொழுதேத்த, அத்தெய்வம் இவண்மேற்பொருந்தி அங்கிருந்த கண்ணகியைப்புகழ, அதுகண்டு கண்ணகி நாணி மயக்கத்தான்மொழிக்தாளென்று தன்கணவன்புறத்தொதுங்கி நகைத்துநிற்பத் தமர்தொழவந்த குமரிக்கோலத்தமர்ந்த இளங்குமரியும்கொண்ட வரிக்கோலம் வாய்ந்ததென்று கண்டார் சொல்ல அருளினளெனக்கூட்டுக.

அன்றியும், மதியின் வெண்கோடுமுதலாயின இப்பொழுது பிரதிவிம்பமானது தனக்கேயாக்கி, ஆய்கலைப்பாவை வரியுறுசெய்கைவாய்ந்ததாலெனத் தமர் தொழவந்த குமரியும் அருளினளென்றுரைப்பாருமுளர்.

பண்டு அருளாக்குமரியும் அருளினளென்க.

உரைப்பீடமேடை - உரைச்செய்புளை இடையிலே மடித்தல்.

"நாகநாறு"—நாகம் - சுரபுன்னை. நாறுநீங்தம் - நாரத்தை. ஆ - ஆச்சா. ஆமை-சந்தனம்; ஆத்தியுமாம். சேயென்பது ஒருமரம; ஞாழிந்திலுமாம்; அழிஞ்சிலுமாம்.

"செய்பொன்"— செய்பொன் வேங்கைசொரிந்தன - செம்பொன்னை வேங்கைசொரிந்தன. குவிந்தன - குவித்தன.

"மரவம்"—மரவம்-கடம்பு; குங்கும மரமுமாம்.

"கொற்றவை"—கொற்றவை-ஐயை.

"பாய்கலை"—ஏவில - ஏவையுடைய வில்.

"ஆனைத்தோல"—நடிக்கின்றிநிற்பாய், நீ இடைபொழுது இங்ஙனேநின்று யென்க.

"வரிவளை"—செற்றென்றது, இப்பொழுது மிகைத்துநிற்கின்ற நிலைமை. பூமேலோன்-பிரமன். அகமலர்-இதயகமலம்.

"கொன்றை"—கூத்துள்படும் - கூத்தாடுமெனின்றது.

"செம்பொன்"—மரக்கால - அசுரர்தாம்மேல்பாம்பும்தேளும் மாயத்தினாலே ஏவிநகையாற் காலிலே மரத்தைக் கட்டி ஆடியெடுத்து நின்றாடுங்கூத்து. வானோரைக் மலர்பெய்மாரியைக்காட்டி.

"உட்குடை"—வேண்டும்-விரும்பும். காரி - கருப்புருவி. கடியகுரல் - நிமித்தம்.

"கள்விலை"-கொள்ளாக்கொடி - தான் தெரித்துகொள்ளுமாகக்கொடி. கொடுமரம் - வில். கொற்றவையும் கொடுமெடுத்துச்செல்லுமென்க. அன்றியும் எத்துக்கின்றதனை எங்ஙபவென்றுநிரித்து இவள் விலைலயெடுப்பச் செல்லுமென்பாருமுளர்.

இசைதிசைகளிற் போதுமென்றது ஒப்பில்போலி.

"இளமா"—இளமாவெயிற்றி-மாமை நிறத்தையுடைய இளவெயிற்றி.

"முருக்கே"—வேய்தெரி கானவன் - ஒற்றன்.

"கயமல"—நயனின்மொழி - நயப்பாடில்லாதமொழி. நரைமுதிர்தாடியையுடைய எயினர்.

துறைப்பாட்டு - வெட்சித்துறை சொன்னபாட்டு.

"சுடரொடு" — சுடரொடுதிரிதரு முனிவர் - ஆதித்தன்வெப்பம் தணிதல் காரணமாக அவனுடனே கூடித் திரியு முனிவர். 'நின் அடிதொடு கடனிது - சூளுற்றகடனிது.' விறலுருவிலே - நீகொடுத்த வெற்றிதந்த வில்லே

"அணிமுடி"—அமரர் - எழுவாய்.

"துடியொடு"— பகைட னிதுவென்றது - துடிமுதலாகிய வாச்சியங்களுடனேசெய்யும் பூசையை. பலிமுகமடை - சோறு.

"வம்பலர்"—உண்குவை-உண்பாயாக.

"பொருள்கொண்டு"—மருதிடைநடந்து - மருதிடைநடந்து. செய்குவாய் - விளி.

"மறைமுது"— மறைமுது முதல்வன் - மாதேவன். இவன்பின்னர் - அகத்தியனறிய கடவுள். பொருப்பன் - பாண்டியன்; இவன் வெய்யோன்; விறல்வெய்யோன் - வெற்றியை விரும்புதலையுடையோன். கட்சி - காடு. கரந்தை - அவர் மீட்குந்தொழில்.

இத்தாழிசைகள் கொற்றவையைப் பரவுவாரவார்த்தை.

கங.—புறஞ்சேரியிறுத்தகாதை.

[illegible] உவரியம் - சமுத்திரம்

[illegible] நீளிடை [illegible]

[illegible] நூலவ - [illegible] இருந்து - இருக்க

[illegible] பஞ்சதிராவிடம் [illegible]

[illegible] தாரகைக்கோவை-[illegible] முக்கோவை. [illegible]

[illegible] மொழுமெசேர [illegible] முலையைச் சேரதொழிய [illegible]

௨௩. பைந்தளிர், தளிர் - முதல் [illegible] அடை

(௧௩) தாரகைக்கோவை முதலான மூன்றுபகுதியும் தனமதனுடனே கொள்க.

[illegible] தோன்றி [illegible] பாலைமேற்சொரியவென்று [illegible] கழைசொல [illegible] வர்.

[illegible] சொரிகதவரிலே [illegible] க்குப் பிரியமாகப் பலைவை [illegible] மும் வேனடியன்றோ [illegible] நோக்கிக்கூறினன். அன்றியும், [illegible] தனிரோடே அல்லாத தனிரும் மேனியைச்சேரதொழியவும்; இது முதுவேனிற்காலம். இவை இவை பொருதொழியவும் நிலவின்பங்கிரும் தென்றலும் பாலைமேற்சொரியச் செல்வன்றேன்றப் பார்மகள் அயானுயிர்ப்பு அடங்குகின்றான் இவை இவை ஒழியவும் [illegible] னிலா வெண்கதிலாச்சொரிதற்கு வேனிற்றிங்களும் விரும்புவதாயிற்றன்றேவென்றடங்கினன். 'தென்றலொடு' என்பது வேறுவினையொடு, இங்ஙனமுங்கொள்க

௩௭-௩௮. கேள்வியறவுரை - கேள்வியையுடையாரது அறவுரை.

௩௯. மறுகும் - திரியும். குடிஞை - கோட்டான், பேராந்தை.

௪௧-௪௨. மறுகும், கூப்பிடும், இது தரும - முற்று.

௪௨. உளியமுமிடிக்கும்.

௪௩. தோளிற்காட்டி - அவள்கையைத் தன்றோளிலே சேர்த்தி.

௪௭. கானவாரணம் - காட்டுக்கோழி.

[illegible] வரி - பாட்டு.

௫௩-௫௫. மனைநால் வழுக்கத்துப் புரிநூன்மார்பர்-அம்பணவர். வழுக்கம்-தப்புதல்.

௭௩. சேமமுள்ளதோரிடத்திருத்தி.

[illegible] இடுமுள்வேலி - சுற்றும் வேலியையுடைய இவர்களிருக்கிறவிடம்.

[illegible] சித்திரப்படைக்கை - சந்திபண்ணுகை

[illegible] கட்பலமயக்கத்து - கண்ணிற்பிரபையற்றதாதலால்; தன்னறிவுமயக்கத்தாலென்றுமாம். கவுசிகன் - கோசிககோத்திரத்தான்; பெயருமாம். இவன் மாதவிகடையாய்ந்தரைந்தனன. அவனே அல்லனேவென்றயிர்த்து.

௯௨. குருகு - தருக்கத்தி.

௯௬. கண்டேனென்ற வார்த்தையாலயிர்த்து.

௫௦ - ௫௨. கோடையால் எழுந்தபூ வெல்லாமுதிர்ந்து பொலிவழிந்துநின்ற தனைக்கண்டு மாதவியைப்போலப் பொலிவழிந்ததனையென்று குருக்கத்தி நீழற்பொருந்தினன். மாதவி - குருக்கத்தி.

௫௫. நிலன்கண்டேன்-கோவலனை இவன்கண்டேனென்று பொருந்தினன்.

௫௭. பெருமனைக்கிழாள் - கோவலன் மாதா.

௬௩. பெருமகன் - தயரதன்.

௬௭. இவர்கள் பெயர்ச்சிப்படியைவசந்தமாலை சொல்லக்கேட்டு.

௬௮. மேனியள் - மேனியையுடையளாய்.

௭௧. துயருற்றோள் - மாதவி.

௭௨. தான் - கோசிகன்.

௭௩. இனையடி - கோசிகனடி.

௭௪. மண்ணுறுமுடங்கல் - இலச்சினை.

௮௩. கூடினகாலத்துப் பூசின பழுகு நெய். இலச்சினையிடுவார் * * * யாவிடுவதும் ஓர்குறி, நாற்றம் அறிவிக்கு மாதலின்.

௮௪. கூந்தல் மண்பொறி - கூந்தலாவிட்ட இலச்சினை.

௮௫. நாற்றம் அறிவித்ததாதலால் தான் விடுகலனாய்.

௮௬-௯௩. உணர்வோன், இசைமொழியுணர்ந்தெனக்கூட்டுக.

௮௯. மனகொளல்வேண்டும் - திருவுளத்தடைக்கவேண்டும்.

௯௦-௯௧. இரவிடைக்கழிதற்கு யான் செய்தகுற்றம ஏதென்றறியாது நெஞ்சம் கையறுநின்றது; அதனைப் பொறுக்கவேணும்; இது மாதவிகருத்து. இனிப் பிதாவுக்கு, இரவிடைக்கழிதல் காரணமாக யான்செய்தகுற்றம் பாராது கையறுநெஞ்சம் கடியலவேண்டுமென்க.

௯௩. இசைமொழி - வாசகம்.

௯௫. எய்தியதுணர்த்தல் - தான்போந்தகாரணஞ்சொல்லுதல்.

௧௦௦. நடுககலகளைந்து - நீநடுங்குகிற நடுக்கத்தைவிட்டு. அவர்நல்லகம்பொருந்திய - மாதாபிதாக்கள் இதயம் பொருந்தின.

௧௦௦ - ௧௦௧. மாதாபிதாக்கள் விதனங்களைதற்கு எழுவாயாகெனப்போக்கி.

௧௦௪. ஆடிய கொள்கை' னந்தரி - கொற்றவை.

௧௦௫. பாடும்பாணர் - அம்பணவர்.

௧௦௬. செங்கோட்டியாழ்-அம்பணவர் யாழ்.

௧௦௮. ஏற்றுஉறப்பு - நரம்பினும் பத்தரினும் தாக்குவதோர் கருவி.

௧௧௨. ஆசான்றிறம் - காந்தாரம்; ஆசாரியன்று ஒருபண்ணிற்குப் பேராகவும் இசைத்தமிழிற்கூறுப.

௧௧௩. பாணி-பாட்டு. அளவி-கலந்து.

௧௧௪. தேய்வை - சந்தனக்குழம்பு.

௧௧௭. மான்மதம் - கத்தூரி.

௧௧௮. இவையாகிய சேமென்கொழுஞ்சேறென்க; வாசம்பொருந்திய மெல்லிய அழகிய குழம்புகலந்து; ஊடி - கலந்து.

௧௨௧. இவையாகிய போதுவிரிதொடையல்.

௧௨௩. ஆகிய பல்வேறுபூம்புகையளைஇ யென்க.

௧௨௪. உணரவறியா - உணர்வாலறியா.

௧௨௪ - ௧௨௫. அரத்தக்கரியகலவை வெளிப்படத்தோன்றி.

௧௨௬. கலவைக்கூட்டம் - பரிமளக்கூட்டம்.

௧௨௬ - ௧௨௭. தோன்றிவந்ததென்க.

௧௩௭. திக்கெல்லாபரிமளம்.

௧௩௮. முன்னணை முறைமையின் - நிலவிலே வைகறையைகாலத்தேபுறப்பட்டு.

௧௩௭. அருந்திறற்கடவுள் - அயிராவதம்.

௧௪௦. காலைமுரசம் - பள்ளியெழுச்சி முரசு.

௧௪௧. முனிவர்சத்திர மோதுகிற வோசை

௧௪௨. . . . - இருடிகளுடைய சிறுகாலை அறுட்டானவோசை.

௧௪௩ - ௧௪௪. வேந்தன்பிறப்புடையராய் ஏனோர்பெருத்தமுழவு; வானோரவீரர்; வீரர்க்கு அரசன் வரிசையாகக் கொடுத்தமுழவு.

௧௪௭. பிணா - பந்தி.

௧௪௮. பொருநர்-வைகறைபாடுவார்.

௧௫௦. ஆகிய ஆர்ப்பொலி.

௧௫௨. திலகம் - மஞ்சாடிமரம்.

௧௫௩. குருகுமுதலியன கோட்டுப்பூ

௧௫௪. அதிரல் - காட்டுமல்லிகை. கூதாளம் - கூதாளி, தாளி, நறுந்தாளி.

௧௫௭. குடசம் - வெட்பாலை.

௧௫அ. மயிலை - கொடிமல்லிகை.

(௧௫௪) பன்மலர்விரிந்து (௧௫௩) கோவை யாங்கணும் (௧௬௦) சூழ்போகிய அகன்றேந்திய (௧௫௬) கொடுங்கரையாகிய (௧௬௦) அல்குலை; (௧௫௧ - ௧௫௪) வேனிற்பூ அன்றியும், (௧௫௯) இப்பிணங் கரிய்மணந்த (௧௫௯) மேகலைக்கோவை சூழ்போகிய கரையாகிய அல்குல்.

(௧௬௧) திருத்தியாகிய (௧௬௩) முலை, (௧௬௨) பாசப்புடைகொண்டு பன்மலரோங்கி, (௧௬௩) எதிரெதிர்விலங்கிய (௧௬௧) வாலுகக்குவையிய மலர்ப்பூந் திருத்தியாகிய (௧௬௩) எதிரினமுலை. பக கம்புடைக்கொண்டு மாரோங்கு ஒன்றை யொன்று நெருக்குகின்ற திருத்தி.

பாசப்புடைகொண்டு எழுகைய பன்மலரோங்குதலையும் ஒன்றையொன்று நெருக்குதலும் முலைக்குமொக்கும். பாசப்புடைக்கொண்டு பன்மலரோங்கி எதிரெதிர் விலங்கியவென்பதனை முலையடிக்கு மேற்கொள்க. பாசப்புடைகொண்ட - சுற்றுப்புடை கொண்டதால்.

௧௬௪. பனைமரம்போலுமென்னும் பாடம்.

௧௬௫. கயிர் - முருக்கு, மதிருக்குப் புறமாதலால்.

(௧௬௫) கோங்கரையாகிய (௧௬௦) அல்குலும் காடுமுருக்குயாகிய (௧௬௫) முலையினையும் (௧௬௬) கலாகாய வாயையும் (௧௬௬) முல்லையாகிய நகைகளையும் (௧௬௭) கயலாகிய கண்களையும் (௧௬௯) அறலாகிய கூந்தலையுமுடைய (௧௭௦) வையையென்னுமகள் (௧௭௩) மலராகிய ஆடையை முட்டாக்கிட்டு.

௧௭௩. கண்ணிறைநெடுநீர் - கண்ணிடத்து நிறைந்த நெடுநீர், இடம்நிறைந்த மிக்கநீரையடக்கி, கண்ணீரென்றுந்தெரி

௧௭௪. நீராறன்று இது பூவாறு.

௧௭௭. அரிமுகவம்பி - சிங்கமுகவோடம்.

௧௭௭ - ௧௭அ. இயக்குந்துறை - நீருள்ளகாலத்து ஓடம்விடுந்துறை.

௧௭௯. மரப்புணை - கட்டுப்புணையில்; ஓடத்திற் பலருமேறுவாராதலால் தாங்கள்மூவரும் தனியே மரப்புணையிலே போனாரகளெனக்கொள்க.

(௧அ௨) தகவுடைத்தென்று (௧அ௩) சூழ்ந்த அகழைபபோகிப் (௧௧௩) புக்காரெனக.

௧அ௮. கள் நீர்கொண்டு - கள்ளாகிய நீரை கொண்டு.

௧அ௯ - ௧௯௦. ஆரெயில் நெடுங்கொடிமேற் காற்றடிக்க அசைகின்றவை வாராதேயெனபனபோல மறித்துக் கை காட்ட= கோவலனை இங்குவாராதே போவென்று கைகாட்டினாற் போன்றன.

௧௯௩. புறஞ்சிறை-புறஞ்சேரி. புறஞ்சிறைமூதூர - புறததுமூதூர்.

அவ்விடத்தில இருடிகள் யோகமிருக்கும் பெரியமுதலியவற்றால் விளங்கிய இருக்கையிலே சென்றுபுக்கனர்.

௧௪.—ஊர் காண் காதை.

௧ - ௨. பொழிலிலும், பண்ணையிலும் ஆர்ப்பவெனக.

௩. புலரிவைகறை - புலருகின்றவை

௬. மலர்பொதி-பெரும்பொதி; மலர் பொதியவிழ்த்தற்குக்காரணமான மணடிலம்.

௫. பனித்தவாள்-பனித்தற்குக்காரணமான வாள்.

௭. நுதல்விலேவிழித்த நாட்டத்தை யுடைய.

அ. நியமம் - கோயில்.

௯. மேழி வலனுயர்த்த வெள்ளை - மேழியைக் கையாயுதமாக வலனுயர்த்தபல தேவர்.

௧௭. நெறியிலீங்கியோர் - இல்லறநெறியிலீங்கிய வேசையர்பதிகள்.

௨௩ - ௨௪. பாதக் காப்பினள் .... ஏதமுண்டோ - உன்னுடைய பாதமாகிய துணையை யுடையவளாதலால், இவளுக்கு ஏதமுண்டோ; இல்லையென்றதாம்; பாதமாகிய காவலுண்டாக இவளுக்கு ஏதமுண்டோவென்றுமாம்.

௨௫. தவம் - புண்ணியம்; தவந்தீர் மருங்கின் - புண்ணியமுடிந்த கூற்றால்.

௩௦. யாபபறைமாக்கள்: அறை-அறுதல். இயல்பில் - நன்மைக்கூற்றில்.

௩௨. அறியாமைதுணையாக மிக்க மயக்கமுறுவர்.

௩௩ ஒய்யாவினை - போக்கவொண்ணுதவினை.

௩௪. உரவோர் - இருடிகள்.

௪௫. தொன்றுபட வருஉந் தொன்மைத்து - அடிப்பற்றி வருகின்ற பழைமைத்து; முற்று. ஆதலாலென்று மேற்சொல்லுகின்றார்.

௪௬. கெடுமொழி - பெருவார்த்தை.

௩௫. பிரிதற்றுன்பம் - பிரிதலால்வருந்துன்பம். புணர்தற்றுன்பம் - புணர்தல் காரணமாக வருந்துன்பம்.

௩௫ - ௩௭. இரணடுகாலத்தும் காமன் ஒறுக்குந்துன்பம்.

௩௩ - ௪௨. மனத்து இன்பமென்று கொண்டோா உறும் தம்மளவல்லாத துன்பத்தைக்கணடு தவதிகள்நீக்கின காமம்.

௪௪ இறந்தனர் - முற்காலத்திற் கழிந்தார்.

௪௫. பழைதாகப் போதுகின்ற பெருவார்த்தையன்றேயென்றுமாம்

௫௦. வல்லாடாயம் - சூதாடுந்தானம்

௫௧. மெல்லியல் - தமயந்தி. வெஙகானடைந்தோன் - நளன்.

௫௨. காதலிற் பிரிந்தோ னல்லன் - அவள் காதல்காரணமாகப் பிரியக் கருதியவனல்லன்.

௫௨ - ௫௩. அவளும் இவனிடத்துப் பிரியவேண்டிப் பிரிவினுமல்லள்.

௫௪. அனையையு மல்லை - அவாகளைப் போல மனைவியைவிட்டுப் பிரிந்தாயுமல்லை.

௬௨. இளை - அரண்காவல், மிளை - அதனைச் சூழ்ந்த காவற்காடு.

௬௫. சுருங்கைவீதி - யானைபோகலாம்படி கீழ்சுருங்கையாக அதனைமேல்விட்ட வீதி. சுருங்கை - கரந்துறை, ஒழுகுநீர் புகுகை ஒருத்தருமறியாதபடி மறைத்துப்படுத்த வீதிவாயுதலே.

௬௭. அயிராமறப்புக்கு.

௭௦. எறிந்து - எறிய; கோடை எறிதலால்.

௭௧. கடைகழிமகளிர் - பரத்தையர்.

௭௨. மருதோங்கு துறை - * திருமருதந்துறை.

௭௪. நீர்மாடம் - பள்ளியோடம்.

௭௫. புணை - தெப்பம்.

௭௬. தாழ்நீர்க் குவளை - தங்கின நீரையுடைய குவளை; ஆழ்ந்த நீர்க்குவளையென்றுமாம்.

௭௮. வெண்பூமல்லிகை - முதல் தகை - கொழுநனை பிறமலியாகிய பிலம்பு

(அ 'ஆரத்த பூபபட்டு' முதலாக, (௩௩) குகிாக்கோவை' ... னவை கார்காலத்துப் பருக அணிவன

... மலைச்சிறகரித்த - மலையைச் சிறகரித்த.

... அரும்பியும், கூதிரும் முன்பனியும்.

௯௭. ...லோர் - சிற்பர், அவர்பசுமணைபடைய ... மாடமெலக

அறி... ...—

௭ ... ...யல - பூ

௮௧. பலைச் செழுந் சேறு - சந்தனக் குழம்பு

... தலைமையைக் ... காதல ... சேவை ... பாராட்ட ... தேக கைமேலையிருந்து

... - கொத்து

... சாளர - காரகால

... மாடம மயக்கமறியாராற பசுமச்சியையு ... மாடமென்றுமாம்.

௯௯. தடவு - இந்தளம்.

௧௦௰ சாந்து - அகில்நெய்.

௧௦௧. குறுங்கண் - சாளரம்.

௧௦௪. மண்டிலம் - ஆதித்தன், இவன் தெற்கே மிதுனவீதியிலே இயங்குதலானே. வெண்மழை - வெள்ளைமேகம்.

௧௦௫. அரிதாகத் தோன்றும் முன்பனிக்காலம்.

---

* திருமருதந்துறையென்பது வையையாற்றிலுள்ள துறைகளுளொன்று; அதனைப் பின்வரும் கலித்தொகைச் செய்யுளாலுணர்க: பாலைக்கலி, ௨௬: "இசை திசை தேனார்க்குந் திருமருத முன்றுறை, வசைதீர்ந்த வென்னலம் வாடுவ தருளுவார், நசைகொண்டு தந்நிழல் சேர்ந்தாரைத் தாங்கித்த, மிசைபரந் தலகேத்த வேந்தரோட் டுறைபவர்."

க0சு. பரப்பு - கடல்.

ககஎ. யாண்டுளன் - எங்கேயுள்ளான்.

(ககஎ) எங்கேயுள்ளானென்று (ககரு) போனகாலங்களைக்குறித்து.

க0எ. வங்கவீட்டத்தாலே.

க0அ. வாசம் - தக்கோலம் சாதிக்காய்முதலியன.

(க0எ) வங்கவீட்டத்தாலே தொண்டியிலுள்ளோரிட்ட (க0அ - க0கூ) பலசரக்குக்களைச் சுமந்துவந்து புகுந்த (கக0) ஈழகாற்றோடேபுகுந்து தென்னவன்கூடலெடுக்கும் (ககக) வில்விழாக்காணும் (ககஉ) பங்குனிமாதத்தோடேபொருந்தின பனியரசென்றது - பின்பனிககாலம்.

க0கூ. அவற்றைச்சுமந்து - அவற்றின் காற்றத்தைச்சுமந்து.

க0அ. துகில் - பட்டுவர்க்கம்: நாற்றங்கொள்ளுதலால் இவற்றுடனெண்ணினார்.

கக0 - ககக. கூடலிடத்து வில்விழா - காமனுக்குச்செய்யும் விழவு

இவ்விழாவைக்காணவேண்டி புகுந்துகாணும் பங்குனிமாதமுடன்பொருந்திய பின்பனிககாலமாகிய அரசன்யாண்டுளன்.

ககரு. கோதை - ஒழுக்கு.

ககஅ. உருவக்கொடியோர் - கொடியுருவத்தினோர், வல்லியாகவெழுதுங் கொடியுமாம்

(ககஅ) தம்மையுடைய கொழுநருடனே (அரு) வீழ்பூஞ்சேக்கையினிருந்து (ககரு) பருவங்களை (ககஉ - ககஎ) எங்குளனென்று எண்ணுகிற காலம் கோடைக்காலமாகையாலே, அல்லாத காலங்களை நினைத்தெண்ணினார்.

கஉ0. ஆயம் - கிளை.

கஉக. கோடைத்தன்மை நீடியகுன்றம்.

கஉஉ. பொத்திய - பொதிந்த.

கஉச - கஉரு. வேற்றுபுலம் படர்ந்தது எடுத்துப்பார்க்கின்றமுதுவேனில் கழிகிறகாலிலே. சிந்தாமணியினும். * "ஓசனிக் கின்ற வன்னம" என்றார்.

கஉகூ. கோமகன் - பாண்டியன்.

ககஅ. உடைப்பெருங்கொழுநரொடு-

[illegible]

தம்முடைய கொழுநருடன் பூஞ்சேக்கையிலிருந்து இப்பருவங்களை எங்கேயுள்ளவென்று எண்ணுகிற காலையென்று சேர்க்க.

(எக) 'காதலஞ்செல்வரொடு' என்றதுமுதல் (அரு) 'வீழ்பூஞ் சேக்கை மேவினி திருந்து' என்றதிறுதியாக முதுவேனிற்காலம் கூறினபடி.

ஐந்துகாலமுங்கழிந்தது கூறுகின்றார், 'உடைப்பெருங் கொழுநரொடு, பருவமெண்ணும் படர்தீர் காலை' என்றார்; என்றது - வேனிற்காலத்தை.

கஉரு. கோடை - மேல்காற்று.

கஉச. படர - படர்கைகாரணமாக.

கஉரு ஒசனித்தல் - வெக்கையால் தலையெடுத்தல்; கடைநாள் - வேனிற் பின்றொன்றுமாம்.

கஉச. கோமகன - இராசராசன.

கஉஎ. உய்யானங்களில உறுதுணையோடு மகிழுமகிழ்ச்சி.

கஉஅ. சாமரையிடப்பெறுகையும், பொன்னாற்செய்த வெற்றிலைப்பெட்டி பிடித்திடப்பெறுகையும வரிசை.

கரு0. அப்படிப்பெற்றுடையராதல் - சிலதியர் சூழ்ந்து வாட்பிடிக்கப்போதல் முதலியன.

கருசு - கருரு. வண்டுபொருந்தினவிடமன்றியே களிப்பாலேவறிதிடத்திலும் மாலைகொண்டோச்சுதல.

இன்னும்,—

கஉஎ. உய்யானத்து மகிழ்ச்சி - சோலையிலே சேவிப்பாருடனிருந்து விநோதங்காண்டல்.

கருச. புல்லுவழி - வண்டுபொருந்தின இடம்

(ககஅ) கொழுநரொடு (கருக) புதுமணம்புணர்ந்தென்றுகூட்டுக.

கருஅ. கட்டுரை யெடுக்குநர் - வார்த்தைசொல்லப் புகுந்தவர்.

கருகூ. நகைபடு கிளவி - களியாற் கேட்டாரை மகிழ்ச்சிபிறப்பிக்கும் வார்த்தை; கேட்டோர்க்கு நகைவிளைக்கும் நாவாற்சொல்லாத கிளவி.

கசச. செழுங்குடிச்செல்வர் - அரசரல்லா ஏனையோர்.

கசசு - கசஎ. ஒடுமேயாது பொற்றகடுமேய்ந்தமனை; அன்றியும், சாதிக்குற்றப்பட்டால தலையிலே செங்கலேற்றி ஊர்சூழ்வித்துக் கழித்துவிடுதல் மரபு;

* சீவகசிந்தாமணி, முத்தியிலம்பகம், ருச.

முடியரசொடுங்குங் கடிமனை - *ஆசைப்பட்டரசு வைகுமனை; அரசர் ஆர்வத்தாலடங்குமனையென்றுமாம்.

இன்னும்.

கசஉ. சுருளல் - புருவம் கோபத்தாலேறுவதிழிவதாகை.

கசங. சுடுமண் - மட்கலம்; மாடவோடுமாம்; பொற்றகட்டான் மேய்ந்ததென்க. அரசொடுங்குமனை; அரசர்புகுந்தாலும் தெரியாத மனை = பேரிடமான மனை.

கசஅ. வேத்தியல் - அரசர்க்காடுங் கூத்து. பொதுவியல் - எல்லார்க்கும் ஒப்ப ஆடுங்கூத்து.

கருo. ஆடல் - இப்படிப்பட்டகூத்து. வரி - வரிப்பாட்டு. பாணி - தாளம் தூக்கு - வாச்சியம்.

கருஉ அவினயம: "நிற்ற ... ... களனே." என் - அரங்குமாம்.

கருங. எழுவகைநிலத்தினுமெய்திய வரியாவது-ஆற்றுவரி, சார்த்துவரி, திணைநிலைவரி, மயங்குதிணைநிலைவரி, முகமுடைவரி, முகமில்வரி, படைப்புவரி யெனவாம், அன்றிக் குரன்முதலான ஏழுநரம்பென்றுமாம்.

கருச. தலைக்கோலரிவை - கூத்தாடுமவள் * * *

கசுo. தாக்கணங்கு-தீண்டி வருத்தஞ்செய்யும் தெய்வம்; சீதேவியுமாம். நோக்காகிய வலையிலேபட்டு.

கசுக. பெரும்பிறிதாகை - கையற்றுப்போகை.

(கசுஉ) தவத்திகளாயினும் வண்டுபோல் இவர்கள் (கசுங) நகையின்பச் விபார்க்கும் காமுகராயினும் (கசுச) காமத்துக்குப் புதியமடவோராயினும் (கசு..) தங்கியேபோகவேண்டும் (கசுஎ) விதி.

கசுரு கிளை-கின்னை: கின்னையைக் கிளையென் இடைக்குறைத்தார். கிளை - பண்ணின்திறமுமாம்.

கசுஎ. எண்ணெண்கலையோர் - தளியிலார். இன்னும் தலைக்கோலரிவைமுதலான நால்வேறுவகையுமாம்.

(கசுக) அரும்பெறலறிவும் பெரும்பிறிதாக (கசுo) நோக்குவலைப்பட்டுத் (கசுஉ) தவத்தோர்முதலாயினோர் (கசுங) இன்றுயில்வதியும் (கசுஎ) விதியென்க.

கசுஎ. இருபெருவீதி - சிறுதனம் பெருந்தனமென்க.

கசுஅ. பாண்டில் - இரண்டுருளையையுடைய சகடம்=கொல்லாப்பாண்டில்; பாண்டியென்றுபாடமோதிக் கூடாரப்பண்டியென்பாருமுளர்.

கசுஅ. கொடிஞ்சி - தேர்மொட்டு.

கசுகூ. கவசம் - கைத்தனம்.

கசுகூ. விரும்பப்பட்ட அழகிய தோட்டி.

கஎo. அதன்புனை யாணம் - தோற்கைத்தளம்.

கஎo. ஆரியயோகம் - விசாதிகட்குக் கொல்லுமருந்து; சன்மகமுமென்ப, அரித்தல் - கெடுத்தல், ஆராயப்பட்ட ஔடதமென்றுமாம்.

கஎக. குழியம் - வாசவுண்டை, கட்டிக்குழியமுமென்ப.

கஎஉ. ஏனப்படம்-பன்றிமுகக்கடகு; பன்றிவலையுமாம.

கஎஉ. கிடுகினபடம் - சிறுகடகு.

கஎங. காயப்படம் - காடெழுதின கடகு, யானை சிங்கமுதலிய சித்திரமெழுதுகடகு. இடதநிகழ்பொருளின் பெருமையை இடத்திற்கேற்றுகூறார், பெருவாரவலையுமாம்.

கஎச. காழூன்று கடிகை - காழாற் பிணித்த கடகு. படாந்தாமம்.

*நைநாலும் ... சேடம்.

கஎரு. மாலையிற்புனை-வேடச்சுமாலை.

கஎரு. வேதினம் - ஈர்வாள். வேதினத் துப்பவும் - ஈர்வாள் வலியப்பெற்றவையும்; எனறது ஈருங்கருவியாற் பண்ணப்பட்டன.

கஎசு. கோடு - தந்தம்.

கஎஎ. புகையவும்மென்றது, புகைக்குறுப்பான கோட்டமுதலான நூற்றும்.

கஎஎ. சாந்தவும - சாந்துக்குறுப்பான முப்பத்திரண்டுறுப்பும்.

கஎஅ. பூவிற்புனைநவும் - மாலைவிகற்பங்கள்.

கஎஅ. மயங்கி - மயங்கப்பட்டு.

தந்தத்தாற் கடைந்தவை இரதத்திற் செய்தவை; சந்தனத்தாற்செய்தவை கலவைகூட்டின; பூவிற்புனைந்த - மாலை.

கஎஅ. வேறுபாடுதெரியாவென்னுமென்றுர்; முன் கூறணியவற்றை.

---

* சீவகசிந்தாமணி, நாமகளிலம்பகம், அo.

கஅ0 - கஅங. காகபாதம் களங்கம் விந்து இரேகையென்னும் இந்நான்கு குற்றமுமின்றிக் கோடியும் பலகையுமுள்ளன நல்லவயிரம்.

கஅச-கஅரு. வெள்ளையம் மாலையும் இருளும் மரகதத்திற்குக் குற்றம். இக்குற்றமற்றுப் பசுங்கதிரொளியையுடையது மரகதம்.

கஅசா - கஅஎ. பதுமமும் நீலமும் விந்தமும் படிதமுமாகிய விதிமுறையிற் சொல்லுகிற குற்றமின்றி வருகின்ற சாதி மாணிக்கம்.

கஅஅ. பூனைக்கண்போன்று பொன்னை ஒப்பத் தேய்த்தாற்போன்றது புருடராகம்.

கஅகூ. ஒளியினையுடைய மட்டுநிறமாயிருப்பது கோமேதகம்.

ககூ0. இருள் தெளிந்தனைய நிறத்தினையுடையது நீலம்.

ககூ0. இருவேறுருவினையுடையது வயிடூரியம்.

ககூக. ஒருமைத்தோற்றம் - ஓரிடத்தே தோற்றல்; ஓரிடமென்றது பளிங்கை.

ககூங - ககூச. காற்றுமுதலான இக்குற்றம் நீங்கினவும்.

ககூச. குற்றமென்றது முன்புசொன்ன குற்றங்களை.

ககூரு. சந்திரகுரு-வெண்முத்து. அங்காரகன் - செம்முத்து. வட்டத்தொகுதி - ஆணிமுத்து.

ககூஎ. கருப்பத்துளை - உள்ளே துளையாகை. கலனுடை முடங்கல - கலனை உள்ளேயுடைய வளைவு

ககூஅ. திருக்கு - திருகல்; இவை மூன்றுகுற்றமுநீங்கிய செங்கொடிவல்லி - பவளம்.

உ0க - உ0உ. சாதரூபம் கிளிச்சிறை ஆடகம் சாமபூநதமெனனும் இவைநான்கும் பொன்னின்சாதி.

உ0ங. பொலந்தெரிமாக்கள் - செட்டியர்.

உ0ச. கொடியெடுத்தல் - பொருளெல்லைக்கு.

உ0ரு. நூற்பட்டு - பட்டுநூல்.

உ0எ. மடி - பலமடி.

உ0கூ, உ0அ. அம்பணம் - பறை; பறைகட்டாரை யம்பணமென்றது பட்டமணிந்தவாயையும் பரியவரையையுமுடைய அம்பணவளவை; ஆவது - அளக்கும் பறைமுதலியன.

உக0. கறிமூடை - மிளகுபொதி.

உகஉ. பாலவேறு தெரிந்த - பகுதிவேறு தெரிந்த. நான்காய் வேறுபடுதெரு.

உகங. அந்தி - முச்சந்தி. சதுக்கம் - நாற்சந்தி.

உகச. கவலை-பலவாய் ஒன்றுன முடுக்கு. மறுகு - குறுந்தெரு.

உகரு. விசும்பகடு திருகிய - விசும்பிடத்து முறுகிய.

(உகசா) துகிற்கொடிநீழலிலே (உகச) இரிந்து.

(ச) மண்டலம் (ரு) துயிலெடுப்ப (சாஎ) யவனரை அயிராதுபுக்கு (உகஎ) நகரிகாவு (உகச) இரிந்து (உகஎ) மகிழ்ந்து (உகஅ) மதிற்புறத்துப்பெயர்ந்தனனெனக்கூட்டுக

கரு.—அடைக்கலக்காதை.

க. நிலத்தருதிரு - விளைவு. நேமி - நேமியை.

உ. கடம்பூண்டு - முறைமையைமற கொண்டு. கவுரியர் - பாண்டியர்.

(ச) விளங்கிய (ரு) மூதூர்.

ரு. ஆங்கு - அப்பொழுதே.

கச. முனிவன் - அகத்தியன்.

உ0. கவின்றுரைத்தல் - பலகாற்சொல்லுகை.

உச. வாலாமை - தூய்மையின்மை.

உரு. முதுகணிகையராவார் பாட்டிமார்; தாய்மார்.

உகூ. எங்கோனென்றது, கோவலன் மரபினுள்ளாரொருவனை.

கூ0. புண்ணியதானம் முன்பு செய்து ஒழுகினுதலால்.

கூக. நண்ணும்வழியின்றி - கரையைக் கிட்டுமிடமின்றி.

(உஅ) கடலின் இடையிருள்யாமத்துக் (கூக) கரைகாணுது சிலநாள் நீந்திச்செல்ல.

௩௨. இந்திரனேவலால் இத்தீவிலுள்ளாரை அசுரர் வாதியாமற்காத்து இங்கு வாழ்வேன்.

௩௪. உறுதியொழியாது - முற்று; நீ முன்புசெய்த தானங்களாலவந்தபுண்ணியம் உன்னைவிடாது.

௩௫. ஒழிகவெனச்சொல்லி.

௩௭. எங்குலத்தெய்வமென்றான்; அவ்வுதவிபற்றி. என-என்று கோவலன்கூற.

௪௧. பொழிய - பொழியாநிற்க.

(௪௩) வருவோனாகிய (௪௫) மறையோனை.

௪௬. பாகு - பாகர்.

௪௮. ஒய்யென - விரைய. தெழித்து - உரப்பி.

௫0. பொய்பொரு முடங்குகை - பொய்பொருந்தின துதிக்கை. வெண்கோட்டடங்கி - கொம்புகளுக்கு நடுவே புக்கு.

௫௩. கருணைமறவ - கிருபாவீரனே.

௫௪. பிள்ளைநகுலம் - கீரிக்குட்டி. பெரும்பிறிதாகை - மரிக்கை

௫௫. எள்ளியமனையோள் - அவனால் இகழப்பட்ட மனையாள்.

௫௭. கைத்தூண் வாழ்க்கை - நான் உண்டுவாழும் வாழ்க்கை; நீ இட்டதனை உண்டுவாழ்தல் கடவதன்றென்றுமாம்.

௫௮. வடமொழிவாசகமாவது ஒரு கிரந்தம்; அது, "அபரீக்ஷிதகர்த்தவ்யங் கர்த்தவ்யம் ஸுபரீக்ஷிதம், பச்சாத்பவதி ஸந்தாபம் ப்ராஹ்மணீ நகுலம்யதா" என்பது.

௫௯. கொடுக்கென - கொடுகக்வென.

௬௨. கருமக் கழிபலங் கொண்மின் - இவ்வேட்டைவாங்கிப் பாவத்தைக் கழிக்கும் புண்ணியஞ்செய்து கொண்மின்; என்றது - காரியமாயிருப்பதொரு நிமித்த பலமென்றவாறு; என்றது - தான்கொன்ற கீரிக்கொலைத்தொழினீங்கப் போனகணவனை வரும்படி தானம்பண்ணவேண்டும் பொருள்வேண்டக் காரியமாயிருப்பதொரு நிமித்தபலம்.

௬௫. கூவி - அழைத்து

௬௬. நீயுற்ற இடர்யாதென. ஈது என்னை இவ்வேடு என்னென்றசொல்ல.

௭0. நூற்கிடக்கை - வேதவிதி.

௭௧. நீத்திறம் - கொலைத்திறம்.

௭௪. செல்வத்துறுபொருள் - செல்வத்திலேயுற்றபொருள்; செல்வத்தாலேயுற்றவென்றுமாம்.

௭௫. செல்லாச்செல்வ - தொலையாச் செல்வ.

௭௬. படிற்றுரை - பொய்ப்பழி.

௭௭. வறியோன் - அறிவில்லான்.

௭௯. கன்றமெழுபாசம் - கரியபாசம்.

௮௫. இழக்கும் - கழுவும்.

௮௬. உயிர்முன் புடைப்பவென்றது, ஆகுபெயரான் உடம்பை.

௮௯. கிளைஞரின் - கிளைஞரைப்போல.

௯0. இல்லோர் - வறியோர். செம்மல் - தலைவன். இல்லோர்தலைவனென்பதற்கு இல்லறத்தார்தலைவனென்றுமாம்.

௯௪. விருத்தகோபால - ஞானவிருத்தகோபாலனே

௯௪. வினவ - உம்மைப்பயனேறவென்றலால் மாடலன்வினவவென்க.

௯௫. குறுமகன் - கீழ்மகன்.

௯௮. கோட்டுமா - பன்றி, எருமைக்கடாவுமாம்.

௧00. பிணிப்பு - பற்று பெற்றி - பெருமை=சுவர்க்கம்.

௧0௧. வாளி - வாளியை

௧0௨. கையறவு - செயலறவு.

௧0௬. கடிஞ்சாதுறம் - பொல்லாதசொன்று இவ்விடத்தே வரும்.

௧0௭. அககர்மருங்கின் அரசர்பின் றோன்க.

௧௧0. உரை - மாசாத்துவானென்னும் பிரகாசம்.

(௧0௯) அதலால் (௧௧௨) மதுரையிலே போவென்று (௧௧௩) மாடலனும் கவுந்தியுங் (௧௧௪) கூற.

௧0௯ - ௧௧0. வாணிகா நின்பிரகாசத்தாலே நின்னை அகநகர்மருங்கில் வைத்துக் கொள்வரென்றுமாம்.

௧௧௭. பான்மடை - பாற்சோறு

௧௨௮. கழமனைப் படுத்துவர் - காவலையுடைய தங்கள் வீடுகளிலே வைத்துக் கொள்வர்.

௧௩௮. அவனைப்புறப்படவிடாமையாலே அவ்வடியைப் பூமிதேவியும் கண்டறியாள்; கொப்புளங் கொண்டதென்பாள், மண்மகளறிந்திலளென்றான்; காலின்மென்மைக்குத் தக்கபடி தானும் மெல்கிற்றிலளென்றுமாம்.

௧௫௧. காவிரிப் படப்பைப் பட்டினம் - காவிரிப்பூம்பாக்கத்துப் பட்டினம்.

௧௫௨. பொதுநீங்குதிருவிழல் - பிறிதோரம்போல ஆதித்தனுடன் திரியாதுநிற்

குழல், ஆவது ஆதித்தன் கிரணத்தாற் சாயாதேநிறமல

க[illegible] உலக நோன்பிகள் - சாவகர்

க[illegible]. நல்லொளியை விட்டு.

க[illegible]. பாரோரகனைடற்பாவானவன் [illegible]

(க[illegible]) [illegible]ருபாகத்துக[illegible]க [illegible] [illegible] (க[illegible]) வானவன் [illegible] [illegible] (க[illegible]) கேட்க [illegible]றையோ[illegible] கூறும்.

க[illegible]. எட்டிசாயலென்போ[illegible] [illegible]ணிகன். எட்டி - பட்டப்பெயர். [illegible] [illegible] செய்தவன் [illegible] [illegible] [illegible].

க[illegible]. தன்பாறபட்ட மாதவத்தை யுடையவளை

க[illegible]. [illegible] - [illegible]

க[illegible]. [illegible]செய்ய-ப[illegible] [illegible]

[illegible]

க[illegible]. [illegible] - [illegible]

க[illegible]. [illegible]முனப [illegible] [illegible]

க[illegible]. [illegible] - [illegible]

க[illegible]. [illegible]

[illegible]

[illegible]

[illegible] சுடா [illegible]

[illegible] கருவிழல் - [illegible]

[illegible] [illegible]

உ௧0. காய்பொன்னுலே - இருப்புவட்டுக்கள் காய்கிற உலே.

உ௧0. கல்லிடுகூடை - இடங்கணிக்கல் வீசுங் கூடை.

உ௧௧. தொடக்கு - கயிற்றுத்தொடக்கு.

உ௧௧ ஆண்டலையடுப்பு - ஆண்டலைப்புள்ளின் றலை.

உ௧உ. கவை - கவைக்கோல்.

உ௧உ. கழு - கழுக்கோல்.

உ௧உ. புதை - அப்புக்கட்டு; மண்ணிற்புதைந்த இரும்பாணியுமெனப.

உ௧உ புழை - ஏவறை.

உ௧[illegible]. ஐயவித்துலாம் - கதவை அணுகாதபடி கற்கவிதொடங்கி நாற்றுந் துலாம், அப்புப்பறுக்கை தூக்கிற் றென்பாருமுளர்; சிறம்புகளை வைத்து வையம் [illegible]ந்திரமுமாம்.

உ௧[illegible]. கைபெயரூசி - கையினசுட் பொருதுமூசி; பொய்யூசியென்று பாடம்; மாற்றாரகைகையைப்பொய்யாக்குமூசியென்பாருமுளர்.

[illegible] சிரல - சிச்சிலி.

[illegible] பன்றி-வேல்வடிவாகப்பண்ணி வைப்பது. முரசென்பாருமுளர்; குஇ[illegible] [illegible].

[illegible] = விசை], கதவோடு பொருந்த[illegible] மேலிருமூமரம்; நிறைத்த [illegible], [illegible]பு - கதவுக்குவலியாக [illegible]யிலே வீழாது எடு[illegible] [illegible] இறக்குங்காலத்து மே[illegible] [illegible] [illegible]

[illegible] க[illegible]யம் [illegible]ப்பு அகப்படக் [illegible]கக் [illegible]டக்கடவ மரம்.

உ௧[illegible]. கோல் - விட்டேறு.

உ௧[illegible]. குந்தம் - சிறுசவளம்.

[illegible]. நாட்கொடி - நல்லநாளிலே கட்டின கொடி. நாள்தோறுஞ்செய்த வெற்றிக்குக்கட்டின கொடியுமாம்.

[illegible]. கோவலர்மடந்தை - இடைச்சியா மாதரி.

[illegible] கோவலர்மடந்தை (உ௧அ) வாயிலைகடந்து புகனென்க.

மாதரி அடைக்கலங்கொண்டகொள் கையென [illegible]னென்க.

௧௬.—கொலைக்களக் காதை.

௬. அளை - மோர்.

௰ - ௧௧. பூவாரொட்டிய சிற்றில் - செம்மண்ணூட்டிய சிற்றில்; புதிதாகச் செம்மண் பூசிய சிற்றிலாகிய காவன்மனையிலேயிருத்தி.

௯. கூடலென்றாள், தான் அறியுமூர் அதுவாகலின்.

௧௦ - ௧௧. ஆபரணத்தின் உயர்ச்சியை யழித்தற்குப் பிறவியழகொடுவந்தாக்கு செய்யாக் கோலம் - பிறவியழகு.

௧௪. நங்கை - நங்காய்.

௧௫. மாதவத்தாட்டியென்றது கவுந்தியை.

௧௬. அடிகளென்றது கோவலனை.

௧௭. சாத்தூர் மங்கை - மாதரிமகள் ஐயை.

௧௯ - ௨௦. நாள்வழிப் படூஉமடிசில் - காலத்திலே ஆக்கும் அடிசில்; சாவகநோன்பிகளாதலின், இரவுண்ணா ரென்பது.

௨௨. மடைக்கலம் - ஆக்குங்கலம்.

௨௨ - ௨௩. இயல்பிற் குன்றாக் கலமென்றார், புதுக்கலத்தை, மடைமேலேற்றுவாருமுளர்.

௨௪. கோளிப்பாகல் - பூவாதேகாய்க்கும் பலா; கனிக்காய் - உதாயக்காய். வெளிப்பாடு, கனிக்கு அங்காய்.

௨௫. வாளவரிக் கொடுங்காய் - வெள்ளரிக்காய்.

௨௬. மாதுளங்காய் - கொம்மட்டிமாதுளங்காய்; பசித்தகறி யாக்குதற்குக் கொம்மட்டிமாதுளங்காய் சிறக்கும்.

௨௭. தமபாற் பயன் - தனக்குள்ள பாலாகிய பயன்.

௩௦. குயம் - அரிவாள்.

௩௧. வினைவாய்செய்தல் - அரிதல்.

௩௩. வை - வைக்கோல்.

(௩௨) அட்டிலைக்கண்டு பெயரும்படி (௩௩) வைக்கோலால் எரியூட்டிய வெண்கை, திமூட்டுவது வைக்கோலாதலால்.

௩௨. பெயர - புகைகண்டறியாதபடியாலே திரும்ப.

௩௪. கையறி மடைமை - தன்கைவல்ல அளவாலே.

(௩௦) வினைவாய்செய்ய (௩௧) முகம் வியர்த்தது; (௩௨) கரிந்த இடத்தையுடைய அட்டிலைக்கண்டு பெயர்ந்தவள் விலே (௩௧) கண் சேந்தன; இவ்வாறாக வும் (௩௪) கையறிமடைமையிற் காதலற் காக்கி.

௩௫. தாலப்புல் - பனையாகிய புறக்காழ்மரம்.

(௩௬) அங்கையின் (௩௭) மாற்றி.

௩௯-௪௦. மயக்கொழித்தல - இலைக்கு நிகழ்வனவறிந்து மயங்கின மயக்கந்தீர்த்தல.

௪௨. குமரிவாழை - ஈனாத முதல் வாழை.

௪௪-௪௫. அருமறை மருங்கினுரிய - பலியிடுதற்குரிய. தன்னூரிற்செய்வனவெல்லாம் செய்யப்பெறுமையின், ஒருமுறைநிகழ்ந்ததென்றார்.

இன்றும்,—

௩௫. தாலப்பல் - பனை * *

௩௭. தவிசு - தடுக்கு.

௪௦. மயக்கொழிக்கை - அனந்தசித்தல

௪௪ - ௪௫. அருமறைமருங்கினுரிய வென்றது - வாய்பூசல் முதலாய

௪௬) ஒருமுறைகழித்து (௪௭) உண்டினிதிருந்தவென்றக்கூட்டுக.

௪௭. தவ்வை - தமக்கை, தாயுமாம் முறையால்

௪௮ - ௫௦. கல்லதரத்த ... சென்றுற்றனனென்றது - வல்லவோ அடியென்னுமிடமென்றுறரை ... னகு

௫௧. குறுமொழிக்கோட்டி - சிறுசொல்லுடையார்.

௫௩. பொச்சாப்புண்டு - மறவியிற் பொருந்தி.

௫௪. நச்சப்படுபொருளினைச்சென்றார்.

௫௫. சிறுமுதுக் குறைவிக்கு - சிறிய வயதிலே பெரிய அறிவினையுடைய உனக்கு

௫௬. மாககர்மருங்கு - மருங்கினின் றும். ஈண்டு - இவ்விடத்து, மதுரையாய்.

௫௭. என்செய்தனை - செய்தவருமை என்னென்று வியந்தது.

இன்றும்,—

௫௯. விம்மிதம் - வியப்பு

௬௧. திரையல - வெற்றிலைச்சுருள்.

௬௩. நின்னை இவ்வாறு தனியாக்குதற்குக் காரணமாம் என்பொருட்டொலைவாலவந்த பாவமையினை இன்னதென்று ஒன்றுமறிகிலேன்.

௬௩. வறுமொழி - பயனில்சொல்.

௬௩. வம்பமாந்தர் - ஒன்றிற்படாத மாந்தர்.

௬௪. நெடுநகை - மிக்க நகை.

௬௫ - ௬௬. பொருளுரை யாளர் நச்சுக் கொன்றேற்கு-மெய்யுரைக்கும சான்றோரால் நச்சப்படுந்தொழிலைக் கெடுத்தேனுக்கு; அவது அசீரம.

௬௮. [illegible] முதிர்ந்த அறிவினையுடைய நினக்கு நோயுற்செய்தேன்

௭௧ - ௭௦ வழியிடை நினக்குவரும் [illegible] ஒன்றுங்கருதாது எழுகவென்றுயானசொல்ல

௭௧. 'அறிவோரகல்' [illegible] என்பது முதற் [illegible]

௭௧. அறவோர் - துறவாது விரதங் காத்தோர்.

௭௨. துறவோர்க்கு - துறந்தோரை

௭௩ பெருமகன் - மேலவன்மாதர்.

௭௪ - ௭௫ பெரிய பசனையும் தலையான [illegible] யுமுடைய மாநிதிக் கிழவன் - மாசாத்துவான்.

௭ [illegible] வாழுனைபகைமலாமையாருன்னொவெறுபகை உகந்தொழுகினேனாக, அதனை அறிந்து அவர்களுடைய [illegible] அருண்மொழி [illegible] கெடுத்த [illegible] அருமையையா [illegible] [illegible] முறையல காரணமாக அவரைருந்தாயம் பொற்றொழுக்கத்தை [illegible]; மாற்ற [illegible] தன்னையாலே [illegible] போந்தேன

௮௦ குற்றிளையோர் - குற்றேவன்மகளிர்.

௮௦. அடியோர்பாங்கு - சேவிக்கும் பெயர். ஆயம் - தோழியர்.

௯௦; காணிலையுடைய பாவாய், சாதியைக்ற்க உருபுகொண்டது.

௯௧. ஒருங்குடன்றழீஇ - மேனிமுழுதும் தழுவி.

அன்று,—

*

௭௪. பெருபெயர்த் தலைச்சாள் மாநிதிக்கிழவனென்றது - பெரியபொருளைத் தன்னிடத்தேயுடைய மாநிதிக்கிழவனென்றவாறு. என்றது, மாசாத்துவானை.

௭௬. முந்தைநில்லா முனிவுகந்தனை- நீர் என்முன்புநில்லாமையால்வந்தவெறுபகை உகந்தொழுகினேனாக.

(௭௬) கரந்தொழுகினவாறே அவர்களிருவரும் இக்குணத்தைக்கண்டு (௭௭) அற்புளஞ்சிறந்து.

௭௯. நோய்-உடம்பின்மெலிவு. துன்பம - மனத்தளர்ச்சி.

௮௧ - ௮௨. நீர் போறருவொழுக்கத்தை மேவினீராயிருக்கவும ஆற்றுவுள்ள வாழ்க்கையையுடையேனுதலாலே.

௮௩. எற்று - உடன்பட்டு.

௮௪ குற்றிளையர் - வெடுத்துக்கைநீட்டுவார்.

௮௫. அடியோர்பாங்கு - அடியோர் பகுதி ஆயம - சேவிகருந்தோழிமார். சுறறமுதலான நான்குக்கும் நான்குந் [illegible]யாக

௮௮ நல்லோரேத்து-நல்லோராலே ஏத்தப்படுந்தன்மை.

௯௩. வல்லாநடை - மாட்டாநடை; துணையிலலாத தனிமையைக்கண்டு விட்டுநீங்கமாட்டாமையால்.

௧00. எதிர்தகல - இடையரறியும் நிமித்தமாதலின் அறிந்திலன்.

௧0௩. மாதர்வீதி - பெண்டுகள்தெரு.

௧0௩ - ௧0௬. சிறபத்தொழிலெல்லாம் துறைபோகியகொல்லா. கம்மாளரது வினையாகிது - சிறபம்.

௧0௭ மெய்ப்பை - சட்டை. விலங்குநடைச்செலவு - இழிகுலத்தோராதலின, உயாந்தோராவந்தவிடமெங்கும் விலகிநடத்தல்.

௧0௮. கைககோல் - புற்றுக்கொடிறு.

௧0௯. சிறபபு - வரிசை.

௧௧௨. ஆதியோ - ஆவையோ.

௧௧௩. பொதிவாய் - கட்டினவாய்.

௧௧௭. மத்தகமணி - தலையாணமணி

௧௧௮. கேவணம - கலலழுததுங்குழி; பதியாகவகுத்த கேவணம. [குடைச்சூல - புடைதாழ்த்தல் = புடை உள்ளுட்டாழ்த்தல்]

௧௨0 பொய்த்தொழில் ... ... உடந்தைகி - கொலலன் தானமறைத்த சிலம்போடொக்கும்படியைப் பார்த்து.

௧௨௨. போந்து - போய்.

௧௨௪. சிறுகுடி லாங்கண் - சிறுகுடிலுக்கு அருகான அவ்விடம்; ஆவது

அவனிருக்கையருகான தேவகோட்டம் = அக்கசாலை.

௧௨௮. மன்னற்கு வெளிப்படாமுன் னென்க.

௧௨௯. புலம்பெயர் புதுவன் - வேறொரு தேசத்திலிருந்து வந்த பரதேசி.

[illegible] அரசனுக்கு [illegible] [illegible] உள்ளது [illegible] அவனையங் குறுகினவன [illegible] தொழுதது.

[illegible] செய்வோம் [illegible]

௧[illegible]. கன்னகம் - அகழ்கருவி சலாகைக்கோல் - குத்துக்கோல் [illegible] டிறு - மண்வாங்குங் கருவி.

௧[illegible]. மந்திரம - தூயின்மந்திரம்.

௧[illegible]. இல்லை - இதுவே.

௧[illegible]. என் கோளை - கள் [illegible] றேவி.

௧[illegible]. கன்றியகள்வன் - களவிற்றழும் பினவன்.

௧[illegible]. வெறுள்ளத்து-வெப்பட்ட உள்ளத்தோடே. எண்ணியது முடிசசென - எண்ணியது [illegible] [illegible] - தன்றொழிலினை.

௧[illegible]. தீவினையால் வந்து நிற்கிற [illegible]

௧[illegible]. குறுகினானென - குறுகி.

௧[illegible]. அருந்திறன் மாக்கட் கசொக [illegible] இவனிருந்தபடியாற் கள்வ னல்லவென்றுரைத்தவர்கள் மனம் [illegible] [illegible] டம்பும்படி வார்த்தைகள் சொல்லி [illegible]

[illegible]. காட்டினன் - எதுக்களிக்கா [illegible]

௧[illegible]. மருந்திற் பட்டீராயின் - இவன் மருந்தினை தப்பினவிடத்து.

௧[illegible]. இந்திர குமரரில் - இந்திரகும [illegible] படாகதபேசு நாமுங்காண [illegible] டேம்.

[illegible] தெய்வத் தோற்றந் தெளிகுவ [illegible] - கள்ளர் நாங்கள் தெய்வத்தோற் [illegible] பாராயின்

[illegible]. கையகத் தப்பொருள்.

[illegible] - கைப்பிலகப்பட்ட பொரு [illegible] புந்தப்புவர்.

[illegible] ங்கண் - நம்மிடத்து. மயக்கு ராயின் - மயக்குவரென்றல்.

௧[illegible]. இருந்தோம் பெயருமிடனுமா ருணரோ - இருந்தநாம் [illegible] இருந்து போகலாமிடமுமுணரோ.

௧[illegible]. புகற்கிலார் - புகார்கள்.

௧[illegible]. [illegible] சரணம் - சரவடம்.

[illegible] சரவிடம்-[illegible] [illegible] - பகர்ந்து [illegible]

[illegible]

[illegible]

[illegible] - [illegible]

அன்றி —

[illegible] அவர்க்குக் [illegible] [illegible]

௧[illegible] [illegible] மாட்டோம்.

[illegible] - [illegible]

[illegible]

[illegible]

[illegible] யாக [illegible] மாம்.

[illegible] உறையைத் [illegible] [illegible] அறிந்தார், அதி [illegible] மலைவி [illegible] [illegible] [illegible]

[illegible] இவர்க்கு [illegible] கள்ளருக்கு

உ[illegible]. [illegible] இவர்களுடனிருந்து [illegible] —

[illegible] கைவர் உறைவிட்[illegible] அவரை [illegible] [illegible] வின் இவர் செய்து தெரியாது; இவனை நாம் கொலைசெ [illegible] அரசனை நம்மை வருத்தும், இனி உரியது செய்க வென, ஒருவன் [illegible] அது விலங்கவட [illegible], விறைந்தான்.

அன்றி, —

௨௧௨. கல்லாக்களிமகன் - கல்வியின்மையின் மயங்கின மகன்.

உ௬௯. வாளெறிந்தனன்; விலங்கூட றுத்தது=குறுக்கே ஊடறுத்தது அந்தவா ளொன்க; அறுத்தது - மூற்று
உ௬௯. அதனிலே வீழ்ந்தான்.
[illegible] உருப்பது - [illegible]

''[illegible]''— கண்ணகிதன் கேள்வன் காரணமாக வனாந்தது. இதுபண்டைவி னை. ஆதலால் இருவினையும் நண்ணும்; [illegible] உலகத்தீர அறஞ்செய்மின் என்று இளங்கோவடிகள் அருளிச்செய்தது.

கஎ.— ஆய்ச்சியர் குரவை.

[illegible]

''[illegible]''— [illegible] யப [illegible] டைய [illegible]

[illegible]

[illegible] - மூ [illegible]

[illegible]

[illegible] - [illegible]

[illegible]

''[illegible]''— [illegible]

''[illegible]''— [illegible]

[illegible]

''[illegible]''— [illegible]

[illegible]

கருப்பம் - [illegible]

'குடத்துப்பா' [illegible] வைனா, [illegible] யாழ் [illegible] [illegible] ங்க [illegible] மாலைச்சிறைதாட்டம் - பின்னேச்சிகராட கி. [illegible] வெப்பருவத்துப்பலதேச [illegible] பின்னை யோல்மாட [illegible] குரவைக்கூத்தைக் கூறு கின்றான்.

''குரவையென்பது ... ... [illegible] ற்றம்பது.''

கொளைச்சொல் - குரவைக்கீக்கருத்து.

''செற்றி''—செக்கல் - சிவாகசட்டி.

''மல்லன்''—மல்லல் - வலி.

''பொற்பொறி''—தானை - [illegible]

பந்தித்திக்காட்டென்றது - இவ்வேறு கொண்டானுக்கு [illegible] ரியனென்றல்.

''குடமுதல்''—குடமுதல் - மேற்றி சைமுதலாக வட்டப்பாலேவருமாறு

*''ஆதிப் [illegible] சிறுசிறுதி [illegible] டன் [illegible] பெருதாதி [illegible] கைக் [illegible] மெனணிக கருதி நிலக் [illegible]'' ''இளியிடபங் கற் [illegible] ம, களராத தார [illegible] குரலகோற் றனுத் [illegible] ழை [illegible] ''தரநல்லவிற் றுத்தங் கைக் [illegible], பரிய வழைமினம் பா வ - யிதாரகு, கொல்லே றிளிவிளரி [illegible] கோபயமைந்த, தொலலே [illegible] ம்.'' இப்படி எழுநர [illegible] 'எழுவ ரிளங்கோதை' யார் என்ற எழுபெண்களையும் எழுநரம் [illegible] நரம்புதிற்குதிலேகளிலே நிறுத்தி * * *

அவருள்.—

'மாயவனென்றாள்'—மாயவ னென் [illegible] குரலே, மறைநை வெள்ளையாயவனெ [illegible] ஒருமகள் பின் [illegible] துத்தத்தை; மற்றைப பெண்களைகைகளின் உழைவிளரி தார மென்றாள்.

[உழைபவிமென்று உழைக்குப் பெ யர்.]

''மாயவன்''—மாயவனென்ற குர லரம்பைப பினையான துத்தமும் தார முஞ்சேராதின்றன; பலதேவராகிய இளி நரம்பை உழையும் விளரியுஞ் சேராதின் [illegible] கைக்கிளையெனகின்றநரம்பு பின் [illegible] டப்பக்கமேநின்றது; முந்தை யாகிய தாரத்துக்கு வலப்பக்கமே நின் றன் விளரி.

[''குரன்மருங்கிற் பாகந் துன்மருங் கடைந்து நின்ற வுழைகைக் கிளைகண்

மேலொரோ வலகு செல்லவு மமைப் பது துத்தங் குரலாகவக் குரன்முத லே மூவகை யோசையு நிரல்படப் பிரிந்திசைப்பது நேரிசை மண்டிலம்.''] இது திரிபுருத்திரம்.

''வண்கிழாய்''—மாயவன்-மாயவனைக கிறுத்தினவள்.

சொக்காதவளிக்கையாள். ஐ யென்றாள் - வியந்தாள்.

கூத்துள்படுதல்-தான்கூத்துக்குள் ஒத் தாடுதல.

''செந்நிலைமண்டிலம்''—செந்நிலையாவது சமநிலை. மண்டிலத்தான - மண்டிலத்தோடே. கற்கடகக்கை - சுவிரலும் அணிவிரலும் முனைசேர நின்றுமடித்து மற்றை இரண்டுவிரல்களுங் கோத்தல.

[''இருவிரல் கிளையுந் தம்முள்ளே கோத்துப், பெருவிரல்க ளீக்கநண டாம்'']

''பாம்புசுயிறு'' — ஆம்பன்முதலான வை சிலகருவி, ஆம்பல் - பணறுமாம். மொழியாம்பல் வாயாம்பல முததாம்ப லென்றுசொல்லுவர் பண்ணறுக்கு.

''கன்றுகுணில்''—குணில - குறுந்தடி. கொன்றையிக் தீங்குழலென்றமைதிலன் முன்பிலவையும் பணையினமேற்செலுத தாது கருவிமேற் செலுத்துக ; பணைகருமாம்.

''தொழுனை கணவறெடாடிய பின்னை - யணிநிறம் பாடுகம் யாம்'' என்று ஒரு குறள்வெண்பாவிட்டோதுவாரு முளர்.

ஒன்றன்பகுதி - ஒற்றைத்தாளத்தின் கூறு.

''மாயவன்றன்'' — மாயவன் - எழுவாய். அசோதை - இடைச்சேரியில் வளர்த்த தாய்பெயர்.

எல்லா - தோழி ; அன்றி ஏ ர்மெல்லா மென்றுமாம்.

''கோவர்''—மலையாரம் - சந்தனம். கொ ப்பணை. கோ - பசு.

''முந்நீர்''—மூவாக் கடம்பு - ஒ னத்தால் நிறைநாகலின் ; மூப்பின்றி ஒருநாளைப்போலநிற்றல்.

இம்மூன்றும் புறநிலை.

உள்வரிபாழ்தமென்பது, பிறிதொரு வர்கொண்டிம கொள்ளாதும் வாழ்த்துவது.

''மூவுலகு''—சோவரணம் - அசுரர் நகரம்.

''கோத்த''—தெய்வம் கம ஈத்தலைப் பட்டதுயனைத ர்ப்பதாக முரசம்மாற டமுழக்குவதாக.

*காலைவாய்த்தழுவிறைன் மாலைவாய்க் கணடாளென்கையால், குரவையாடியது கோவலனோர் கொலையுண்ட அன்றே யென்க.

இது நாளைச்செய்யுள்.

க௮.—துன்ப மாலை.

ஆங்கு - அவ்விடத்து.

''ஆயர்''—ஆயர் முதுமகள் - மாதரி. அடிய - அசைந்த. சாயலாள் - ஐயை. சேடிமால் - ஸ்ரீ இருந்தவனமுடையார். பூமலர்லாயிரவறனைத் தூவி. துறைபடிய - தீர்த்தமாட வந்தாளென்பது ஐயையை ; வேறொருத்தியென்றுங்கூறுவர். இதனும், நீபலினவையக்கணேசணைமுதலாயின நாகி ; துறைப்பெய்தல் - பலியிடுதல். வந்தாளென்றது, இடைச்சியை.

எல்லா - தோழி.

'காவலற்''—எதிரோர்சொன்னது யாதென்று ஐயுற்றாள், எதிரோரெனறது மறையச்சொன்னவர்களை.

'தருசமோ' —வேறுது போகாண்கின் றிலேன. வந்தசோவுண்டு - இருதகிரிமாமாகதானறுமவ . வஞ்சிலார - அயலார் (வஞ்சலார் என்றும் பாடம்)

சொன்னது - அவர்கள் சொன்னபடி. என்றுள, வருபாட்டைப்பற்றி.

''அச்சுநை''—ஒருகிழம் - சிலம்பு. கனையூரம்ல் - ஓசைபடாமல்.

''பொங்கி''—மாழ்குதல - மயங்குதல்.

''தம்முறு''—இம்மைம்மெய்ன்றது, பரலோகத்தையுங்கருதி.

'வாய்வதின''—வாய்வதின்வந்த குரவை - புத்திபூர்வமாகவெய்த்த குரவை. கேட்டைக்க-கேட்க; இரட்டித்தார், எல்

லாருங் கேட்டற்கு. ஒருகுரல் - அசரீரி

இதுவன்றி,—சொல்லாடாநின்றாள், தான் - அந்நிலைதான், அந்நங்கைக்கு - அந்தக் கண்ணகிக்கு, சொல்லாடும்-சொல்லுதலைச்செய்யும். அன்றி, சொல்லாடளாய்வந்த அந்நங்கைக்குத் தானே கண்ணகி சொல்லாடுமென்றுமாம்.

"காதலீர்"—எதிலார்-நகரிலுள்ளார். தோழியென்றது [illegible]யை.

"தீர்ந்தமோ"—தஞ்சம் - வேறுதுணை. மயங்குகெஞ்சு - முற்று ஆயினு - ஆதலால். கொலை குறித்தனளென்றாள் ஐயை.

"பொங்கி"-திங்கள்முகிலோடும் நிலங்கொண்டாற்போல. எங்கணும்-எங்குற்றாய்

"இர்ப்புறு"—இடரெரி - இடர்செய்யெரி.

"நறைமலி"—அறனென்றது தர்மதேவதையை.

"சமமுற"—கைம்மையொழுக்கத்தினையுடைய நோன்பு

காணிகாகாணிக - இகவென்பது ஈறு திரிந்தது, இரண்டும் விளைவின்கண்வந்தன.

"வாய்வதின்"— ஊருண்ணுமென்பது முற்று

கசு.—ஊர்சூழ்வரி.

உ நின்றசிலம்பு - மற்றைச்சிலம்பு மற்றைச்சிலம்பைக் கையிலேந்தி நின்றிலெனக.

கூ என்னால் - அதிர்த்தனையஞ்சான்று காட்டி இவனையும் வாரதனைக்கேட்பேனென்றமையால், அரியாய்செய்தாக வொன்றுமப்படி எல்லார்க்கும் தோற்றிற்று, அதனால இப்பாச் செய்திலேனென்னை, எங்கணை இகழ்கொள்ளாள்

என்றதனால், (க) மதுரையாரெல்லாரும் மயங்கி (ம) சொலலி எங்கி மிகவும்.

எ நற்பொருட்டால் - நன்மைச்செய்த்தற்பொருட்டால, அவனது கெளி இவனுடைய பிரிவுத்தால மதுரையிலுள்ளாரும் கெடப்புகுந்ததென்று தோன்றிற்றும்.

இன்னும்,—

(எ). ஒருவனுபடாத துயரம் யான்பட்டேன். பக்காலை - அக்கிபபொழுது.

அ. ஒருவருறாத தாற்றேனா; நானுறக்கடவேனோ. "தொழுது - இப்பிழி புரிந்தாயம்.

அ விலைப்பொருட்டால் - விலைகொள்ளாமைக்காக.

கூ - கூ. தீதிலனென்னும் நல்வார்த்தை கேட்பேன், கேட்டிலேனாகில், பின்பு நோதக்கசெய்தாளென்று இகழ்ச. ன்னல் - *"பயனிலசொற் பாராட்டு

வானை மகனெனல்" என்பதுபோலக் கொள்க.

கடு - கசு. மதுரையாரெல்லாரும் வளையாத செங்கோல் வளைந்ததிதுவென் கொலென்றார்; அதிர்த்தனையும் சான்று காட்டி (கூ) 'நோதக்க செய்தாளென்றென்னல்' என்றமையால்.

உரு. தெய்வமுற்றாள் - தெய்வத்தன்மையுற்றாள்.

உஎ-உஅ மிகவும் மன்னவனைப் பழி தூற்றுங்குடியது மதுரையென முற்றுவிக்க.

உகூ. கம்பலைமாக்கள் - வேறுசிலர்.

கூஉ. தானசாணமாட்டாது செங்கதிரோனும் சென்றொளித்தான்.

கூரு - கூசு. தூங்கிக்கொழுநன் குருதி புறஞ்சோரத் தன்னை அவன் காணாதுகிடக்கின்ற கந்துயரத்தினைக் கண்டாள்.

சுக என்னுடைய உறுதுயர்கண்டும் எவலீரென்றது, கோவலனைநோக்கி.

சஉ என்வினைகாணிதுவென்று ஒருவார்த்தை சொலலாகாவோ சான்றோர்.

கூக - ௫எ. "பெண்டிர்", "சான்றோர்", "தெய்வம்"—'உண்டோ' என்றது - உண்டாயின், இப்படிப் பிறவாது ஆதலால இல்லை எனறவாறு.

(ருo) அழுவாள் (ருக) கொண்டவளவிலே (ருஉ) எழுந்திருந்தான்பெயரா அம

* திருக்குறள், பயனிலசொல்லாமை, ரு.

ரர்குழாத் துள்ளானாய்ப் (கஅ) போனான்.

கக. களைவினை உண்டாயிருக்க, எங்குப்போயாராய்வேன். இதுமெய்யுரையன்றென்றது, அனபின்பு போதாமைபற்றி.

எஉ. எனவெழுந்தாள். இடருறத் தீக்கனவென்றது, முன்பு தான் கண்டு தேவந்திக்குச்சொன்னகனவினை.

எக. நினைந்திளைந்தாள் கனைந்திளைந்து; இனி அவ்வாறே செய்வலென்று.

எச - எரு. வழிகாண ஈரதுடைத்துச் (எரு) சென்றாள்.

இன்னும்,—

உக. தெய்வமுற்றாள் - தெய்வமேறினாள்.

உஎ. என்பனசொல்லி - இன்ன சொல்லி.

கஉ - கக. ஒளித்தான்; ஒளிக்கப் புல்லென்ற மாலைக்கணவனை.

கக. தந்தைக்கொழுநன் - அப்படி யினின்றும போதுகிறபோது கொழுநனைத்தழுவி.

கஎ. புற [illegible] சோர - அவ்விரத்தம் புறம்பெல்லாம்விழுந்துகளைப்ப.

க [illegible]. அவனமுடைய அறியாதிறுயாத்தை.

சo. பொன்னூறுமேனி - பொன்போலுமேனி.

[illegible]. வினைகாரணவிது, ஆ - அசை. உரையாரோ-இவ்வழக்கை இந்நாட்டிற் சொல்லார்களோ, என்றது அருமிலலேலுக்கு இந்நாட்டிற் சொல்லார்களோவென்றதாம்.

[illegible] [illegible] தேர்வினை - [illegible] தோவினை.

[illegible]. 'என்னுவதுயர்' முதலானஇறன்றும் முதுபாலே.

[illegible]. வானிற்றப்பிய - வானாற்கொண்ட.

[illegible] பொன் - [illegible] தேவி! கொண்டவளவிலே எழுந்திருந்தினாளே, பெயா [illegible] பழுமெசாழிந் தெழுந்திருக்தலா வது - [illegible] தன்மையொழிந்து இற றவ பட்டபொ [illegible] தெய்வலோகப [illegible] குனைகப [illegible], அ [illegible] துள்ளான அப்பாறமுதும ஒழிந்து எழுந்தாவெ [illegible]

[illegible] - அன்னைமலினி இருநமையாக - [illegible]

[illegible] போம் [illegible] - எங்கும்போய் [illegible] என்றது, பக [illegible] காணட [illegible] [illegible]

உ௦.—வழக்குரைகாதை.

க. காணபென் - கனவின [illegible] பன.

உ. எல்லாவென்று பிற [illegible] தான்கருத்தாற்கண்ட கனவின் [illegible] ரைக்கும.

[illegible]. கதிரைவிழுங்குமென [illegible] இரு [illegible] ண்டேன்

[illegible] கொடிவில் - ஒழுங்குபட்டவில்

எ. கங்கதிர்மீன் - ஒளியின் மிகுதி கூறினார், கங்கதிர் - மிக்கவொளி [illegible] மாம்

கச இரவு வில்லிடும். பகல் மீன்வி ழும், இவற்றைநக காணபேன்.

கூ. செங்கோலும் குடையுமென வு அவற்றையே பின்னுங்கூறினான்.

கக - கஉ. அதிர்ந்திபமாதலால், வருவ தோர்துன்பமுணடென்க [illegible] யாமென் றான்; தம்பிராட்டியாதலால் தன்பெரு மிதந்தோன்ற.

[illegible] - கடை [illegible]

[illegible] மொழியாரகிய [illegible]

[illegible] வந்திளை [illegible]

[illegible]

[illegible] - [illegible] மையவினி.

[illegible]

[illegible]

உரைப்பவனாக

[illegible] புண்மையின், இரு [illegible] யிருப்பபட்டமாறபு. இருக்கி [illegible]

[illegible] அறி [illegible] றுப்பபோகிய பொ [illegible] - [illegible]

[illegible] - [illegible]

[illegible] பசுந்துணிப் பிடாத்தலை - [illegible] - கடா. பிட [illegible] தலையாகிய [illegible]; அதனைப் [illegible] [illegible] கொழ [illegible] கொ [illegible] துவையனக.

சுஎ. அறுவர்க்கிளையநங்கை-சத்தமாதாக்களில் ஏழாவதிளையாள்; அவள் பிடாரி.

சுஅ. ஆடல்கண்டருளிய அணங்கு - பத்திரகாளி. அவர்களென்னலாம்; அவர்களிலல்லள்.

(சுஎ) நங்கை (சுஅ) அணங்கு (சுகூ) காளி பெயர்.

எக. செறுநை - மூக்கக்கோட்டம் செயிர்க்கை - மனக்கோபம்.

எஉ. கணவனையிழந்தாளொருத்தியென்க.

(எஉ) இ[illegible]யாகிய அரிச்சிலம்பில் ஒன்றையேந்திய கையளாய்க (சுக) கடைய சத்த[illegible]ன்றுசொல்க.

ஏ0 - ஏக வாழிகளபலவும் வாழ்த்துப்பாவையிற்று, ஒன்றுக்கொருசொல் [illegible]; "[illegible] முடி மன்னை போற்றி" என்றாற்போல

அன்றி,—

எக. செற்றாள்போலும் - மாற்சரியமுடையாள்போலும் செயிர்த்தனள் போலும் - மிக்ககோபமுடையாள்போ[illegible].

[illegible] பொட்டாக - அவிழப்புகுத [illegible]

[illegible] வாகண [illegible] - [illegible]வாராத [illegible]யுடையார்

[illegible] யானை, [illegible] - இடைச்சொல்

[illegible] - அசைய

[illegible] கடைமணி - கனமணிக் கடை.

[illegible] பசா[illegible]துப்பதி.

[illegible] - இடைச்சொல்

[illegible] செலவு[illegible] அவன்மகனையி[illegible] செய் [illegible] செல்வம்வேண்டி.

[illegible] - [illegible]வித்தல்.

(சுகூ) பெண்ணணங்கே, (சுசு) கள்வனைக்கோறல் (சுரு) வெள்வேற்கொற்றம்

சுரு. வெள்வேற்கொற்றம்-இராசநீதி.

சுசு. நற்றிறம்படரா - நல்லகூற்றிற் செல்லாத

சுஎ. எனகாற் பொற்சிலம்பின் அரி மாணிக்கம். பொற்சிலம்புமுடைய அரியென்க.

சுஅ. செவ்வைநன்மொழி - செவ்விய வார்த்தை.

எ0. கொடுவருகவென அழைத்து - அரசன் உள்ளுமபடியே செய்வாளுகை வருகவெனவழைத்து. தான் - அசை.

எக. மணிக்கால் - மணியை இடத்திலேயுடைய; மணிக்காற்சிலம்பு - தட்டான்வாங்கிக் கள்ளப்படி செய்வார் கையிற்கொடுத்த பொற்சிலம்பு.

எ0 தருகெனவாங்கித் தனமுன்னேவைப்ப-முத்துடையரியும் மணியுடையரியும் அறிவதாகவாங்கித் தன்முன்னேவைப்ப.

எஉ. வாய்முதற் றெறித்தது மணியே- மணியுடைச்சிலம்பு தானே விண்டுவாய்முதறெறித்ததென்க.

இங்ஙன் இராசாத் துஞ்சினபின்பு கண்ணகி தனகைச்சிலம்பைத் தேவிமுன்னே யெறிந்தாள்

என என்முதல் - என்னைத்தொடங்கி.

உ0 கணவனையிழந்தோர்க்குக் காட்டுவதில்லென்றது - தந்தை தாய் முதலாயினரை இழந்தார்க்கு அம்முறைசொல்லிப் பிறரைக் காட்டலாம்; இஃது அவ்வாறு வரக்காணுஞ்சொல்லாகாமையின், காட்டுவதிலலென்றாள்.

"அல்லவை"—கல்வினையேன் - பாவத்தைப பண்ணினேன். செய்வனுஉங்கா னென்க.

உக.—வஞ்சினமாலை.

க. கோவேந்தன்றேவி - விளி. கொடுவினையாட்டியேன் - பேதமாம்

உ. யாவுந் தெரியாவியல்பினேனாயினும் - ஒன்றுமறியாத தன்மையேனாயினும்.

ச. கன்றுகுறாவம் பெற்றியகாண் - கானேற்றுத்தன்மையை நன்றாகவென்பது; பிரகாசமானபகவென்பசினை.

கூ. சூழ்போகநின்ற - சூழ்போதலால் உந்திக்கணின்ற, உந்திநின்ற - ஆற்றின் நடுவு குறையாம்படிநின்ற.

உக பழுமணி - பழுத்தமணி=சிவந்த மணி, மாணிக்கம்.

உ0. நீணோக்கம்- விடாமற்பார்த்தல்.

உகூ. கொழுமியவளென்றது, பிள்ளை தாயாகிய தன்றோழியை

* சீவகசிந்தாமணி, நாமகளிலம்பகம், உகூ

உகூ - கூ0. இளங்காலத்து விளையாடிச்சொன்னவார்த்தையை அவன் மெய்யாகக்கொண்டு பேசக்கேட்ட விழுமத்தாலே நோய்கூரும்; இன்னும், யானுரைத்தமாற்றத்தைப் பொருந்தக்கேட்டவள் உரைப்பக்கேட்ட * * திருவிடுலற கெனினுமாம்; சிந்தைநோய் கூரும் - முற்று. என்றெடுத்து - பிரகாசிக்க.

கூக. முந்தி - தந்தைக்கும் தாய்க்கும் முற்பட்டு=கொடுப்பவும், அடுப்பவுமின்றித் தானேமுற்பட்டு.

கூகூ. நீடித் தலையை வணங்கி - விடாமே நெடிதாகத் தலையைவணங்கி; நீடிச் சுமந்த - விடாமறசுமந்த.

கூசு. பட்டாங்காகில் - உண்மையாகில்.

கூஎ. ஒட்டேன் - இசையேன்; ஒட்டேனென்பதற்கு இனிதிருக்கவென வருவிக்க. ஒழித்த அரசனோடு மதுரையமழிப்பேன்.

கூஅ. பட்டிமை - படிறு.

சு0. வானக்கடவுளர் - தேவர்கள். *"சுடரொடு திரிதரு முனிவரும" என்றாரகலால். இன்னும், வானக்கடவுளர் - வெளிப்படை. மாதவர் - இங்குள்ளோர்.

சுக. கைம்மாற் றிருகி - வலக்கையாற் றிருகி.

சுரு. வட்டித்து-பிரதக்ஷிணம்பண்ணி-

சுசு. விட்டாளெறிந்தாள் - விட்டெறிந்தாள், இன்னும், சுழற்றியென்றுமாம். வர்த்தனை - வட்டணையாயிற்று.

"(சுசு) வட்டித்தசருல்வந்த (சுள) வானவன; இன்னும், வட்டித்த - எழுதிஞெலாத்த.

சஎ. திரிசடை - திரிந்தசடை. திரித்தல் - முறுக்கல்.

சஅ. மாலை - ஒழுங்கு.

ரு0. மாண - திண்ணிதாக.

ருஉ. உடையோறல் - உடையோனைதலால் [illegible] பிறைமுடியார்-மார்தபபுவார்.

[illegible] காய்த்திய - சுடவேண்டி; கோவிக்க வவ.

உஉ.—அழற்படுகாதை.

க. வெற்றெய்வம் - அங்கி. அக்கினியுடைய எரியினைகூறு பிரகாசித்தது

உ. காவற்றெய்வம - நகரிகாவற்றெய்வமாகிய நானகுவருணப்பூதங்கள் கடைமுகம் - கோட்டைவாயில். அடைத்தன - நோக்குவழிதாழ்ந்தன

இன்னும், (க) எரிமுகம் - அங்கி அடக்கநீங்கி வெளிப்பட்டது. (உ) நகரிகாவற்றெய்வங்களினுடைய கோட்டைவாயில்கள் அடைத்தன=அவை காவாவாயின.

ச. வளைகோல் - வளைந்தகோல். இழுக்கது - இழுக்கினவிடத்திலே; [illegible] உயிராகியவாணி =.ஆருயிர [illegible]

ஆங்கு - அவ்விடத்து.

எ. அரசுகட்டில்-சிங்காசனம். துஞ்சியதறியாது-செழியனை துஞ்சியதறியாது.

அ. ஆசான் - புரோகிதன். பெருங்கணி - கணிதவித்தகன். அறக்களத்தந்தணர் - தன்மாசனத்துக்கருத்தாக்கள்.

கூ. காவிதி - வரியிலார். மந்திரக்கணக்கர் - மந்திரவோலையெழுதுவார்

கச புலியசசுற்றத்து - சித்திரத்திரள்போல

[illegible] காவிதார - பரிக்காரர். வாதுவர் - வாசிவாரியர்

சரு. விடைகொள்ள - அரசனையுட்கொள்ளற்க. மிடைகொள்ள - நெருப்பலித்தற்கு வந்து மிடைந்தென்றுமாம

(கஎ) "தீதுஇல்பாப்பூத" முதலாகப் (உஉ) "பூதத்ததிபதிக்கடவுள" என்றுகப பிரமபூதம்

(க [illegible]) [illegible] நிரையிலொவ்வி போலதகரிழ்ந்தன (கூ [illegible]) அதிபபூதம, (உசு) முதர்வாபூதகளை உருவாத (கூசு) பூதம

கூஉ. வேதமுதல்வன் - பிரமன். கருவி - சமிதைமுதலாயின.

பிரமன் வேள்விக்குச்சொன்ன உறுப்புக்களோடு முத்தீவாழ்க்கை முறைமையின்வழுவாத அதிபூதக்கடவுளும்.

(கூஉ) கருவியோங்கு (கூச) முறைமைவழுவாவென்கூட்டுக.

அப்பூதத்துக்கு நிறம் வெள்ளை.

* வேட்டுவவரி.

(௫௧) "பவளச்செஞ்சுடர்" முதலாக அரசபூதத்தைக் கூறிற்று. அப்பூதத்துக் குநிறம் பவளம்.

௫௧ - ௬௧. பவள ... ... அருந்திறற்கடவுளும் - பவளவொளி திகழ்தரு மேனியையுடைய] அரசபூதமாகியகடவுள்.

௫௨. ஆள்வோன் - அருச்சுனன்.

(௫௨) இவனிடத்துச்சாரதியாய்நின்ற (௫௩) முரசுமுதலாகிய (௫௫) பிடித்தகை யினாகிய (௫௬) மன்னனையோட்டி (௫௭) ஓச்சிக் (௫௮) கடிந்து கொற்றங்கொண்டு (௫௯) புரக்கும் (௬௦) உரையமைந்த சிறப்பையுடைய நெடியோனையொத்த கடவுட்பூதமெனக (இன்னும், பாண்டியனுடைய கையினிலக்கணம பூதத்துக்கும பிடித்தன, ஏனைய இருவாக்கும் ஒத்தபண்பு. இவற்றால் உலகளந்தோனை ஒத்தபூதமென்க (௬௨) வாய்ககயிறுவடிக்கை - புரவியைவசமாக்குகை.

௫௩. முரசுமுதலானவேழும் இராசாக்களுக்கும் அப்பூதத்திற்குமுரியன.

௫௬. மன்னர் - துரியோதனாதிகள்.

(௬௨) "செந்நிற பசும்பொன்" முதலாக (௬௭) "வியனபெருங கடவுள்" ஈறாக வணிகபூதத்தைக கூறிற்று

அப்பூதத்துககுநிறம் பொன்

(௬௨) பொனபுரை மேனிககடவுள்.

௬௩ பூணினன் - பூணினனாய்.

௬௫ மரபின் - மரபால.

௬௬ துலாம் - துலாக்கோல்.

(௬௬) நாஞ்சிலும் துலாக்கோலுமேந் தியகையினனாய் (௬௫) வாழ்க்கைக்கு (௬௬) உரியவொனறசொல்லப்படு வோனுகிய (௬௭) பூதக்கடவுளென்க.

(௬௮) "மண்ணுறுதிருமணி" முதலாகப் (௭௧ - ௭௨) "பலிபெறுபூததலைவன்" ஈறாக வேளாண்பூதத்தைககூறிறறு

அதற்குநிறம நீலம்.

௬௮ - ௭௨. மண்ணுறு . என்போன் :

௬௮. திருமணி - நீலமணி.

௬௯. ஆடற்கமைந்தவை - வாச்சியம்.

௭௦. துறைபோகல - முடியவறிதல் (௭௦) முடியப்போகிய (௭௧) பலி பெறுமென்க.

௭௨. இக்நால்வருந்தோன்றி.

௭௪. நீமுறையுணபது நெருப்புநியாயமாகவுணபது.

௭௫. ஆமுறையாக - ஆவதொருநியாயமாக; இன்னும், ஆமுறையாகவறிந்தனம் - மேல் வரக்கடவதொருவிதியென்று முன்னேயறிந்தேம்.

௧௧௦. நால்வேறுதெரு - நால்வகைவருணத்தார்தெரு.

௧௧௨. கா - காண்டாவனம்.

௧௧௩ அறவோரிட்த்து அழற்கொடிவிடாதாய்

௧௧௪. அறவை - அறத்தையுடைய.

௧௨௧. செப்பு வாய்திறந்து சொரிந்த விரை=சாந்து புழுகுநெய் முதலாயின.

௧௨௫. பரிந்தனபரந்த - கையற்றுப்பரந்த (௧௨௬) சேக்கை.

௧௨௬ துனியினசெவ்வி பார்க்கவேண்டாத.

௧௨௭. அடங்கினர் மயங்க - ஒழிந்தோர.

௧௩௬. கொடிதன்று - நியாயம்.

(௧௩௩) விலைமடந்தையரது வீதியில் (௧௪௨ மடந்தையர் (௧௪௦) தண்ணுமை முழவு குழல (௧௪௧) யாழ் பாணி இவற்றுடனே (௧௪௨) ஆடும அரங்கினையிழந்து (௧௪௩) இவ்வொருமகள் (௧௪௩ - ௧௪௯) எந்நாட்டாள்கொல? யாமகள், கொலவென்ன (௧௫௦) நகரியிலே (௧௫௧) இயங்குதலையுஞ் செய்யும்; மயங்குதலையுஞ்செய்யும். இவ்வகை (௧௫௫) ஆருருறற வீரபத்தினிமுன் (௧௫௬) ஊர் எரியுண்டதற்குப் பொழுது (௧௫௭) வந்து தோன்றினள் மதுராபுரியென்னும் தேவதையென்க.

"மாமகளு"-தாம்படைதத வொற்றத்தாள் - இவர்கள்படைத்த கொற்றமெல்லாமுடையாள்; "நாவினுங் வாளினும்" என்ற மூவகைவென்றியும்.

இன்னும்,—

௧௧௫ - ௧௧௬. கனலெரிசேரா, ஆயா தெருவிலடைந்தன; அறவை-அறத்தை யுடைய.

௧௨௧ - ௧௨௩. செப்பிலேவாயவிழ்ந்த பிணையலென்க; நறுவிரையையுடைய பிணையல், முச்சிப்பிணையலென்க. நறுமலரவிழ்தல் - முச்சிக்கடை.

௧௨௬. துனிபபதம்பாரா - துனியளவு விட்டிராத; இவர் பிள்ளைபெறுதவர்.

௧௩௬. பண்ணியன்மடந்தயர் - இசையறிவார்.

௧௩௨. நாடகமடந்தையர்-தளியிலார்.

(௧௱௧)வீதியிடத்(௧௪௨)தாங்கிழந்து.
௧௪௭. அந்திவிழவு - சீபலி.
௧௪௮. தெய்வம்பரவல்- தெய்வபூசனை.
௧௫௯. மறுகிலேமறுகுமென்றது - சுழன்றுதிரியும். கவலை - குறுந்தெரு. கவலும் - போம்.
௧௫௪. இயங்கலுமியங்கும் - இயங்குதலையுஞ்செய்யும்.
௧௫௫. இவ்வகை ஆரஞருற்ற.
௧௫௬. பொருள் - பொருளாய்.
"மாமக"—மாமகள் - சீதேவி. நாமமுலை - அச்சத்தைத்தரும்முலை.

௨௩.—கட்டுரைகாதை.

௧. சடையும் பிறையும் - சடையிடத்தேபிறையும்.
௯. கடையெயிறு - பன்றிக்கொம்புபோலப் புறப்பட்ட எயிறு.
௮. கொல்வாள் - மழு ; சூலமுதலாதல்.
௧௯. அடியெதொடங்கி இரட்சிக்கற்குரியளாதல்.
௧௭. முன்னிலையியாள் - முன்னிலையாள்=அவளுக்கு முன்னிற்றலைச்செய்யாள்.
௨௯. கட்டுரை யாட்டியேன் - ஒருவார்த்தைசொல்லுதலுடையேன்.
௨௯-௨௪. நினைக்கவருதப்பட்ட கவற்சியையடையேனேயினும் நீகேளென்க
௨௮, ௨௭. ஊழ்வினை வந்தக்கடை - ஊழ்வினை வந்தபடிகேளாய், வந்தக்கடை - சுகரவொற்று விகாரம்.
(௩0) வினை (௨௭) கேளென்க
௩௧. மறைநா - அந்தணர். ஒசை - ஓதிஞாவாயில் நியமமான வார்த்தை.
௩௩. மன்னனைப் பழிதூற்றுயதல்லது!
௩௭. மடங்கெழ கோக்கின் - மகளிருடையபார்வையாலே * *
* * * * * *
* * * சிலைடையார்க்கு.
௪௨. உதவாவாழ்க்கை - பிறர்க்கு உதவமாட்டாத மிடிவாழ்க்கை.
௪௩. [புதவக்கதவம் - கதவில்லாதவீடு, குழை.]
௪௪. மன்றம்-அரணில்லாதவீடு. அவ்வழி - நீபோகின அக்காலத்து.
௪௮. செவிச்சூட்டாணி - செவியைச்சுடுவதாகிய ஆணி, சுடுதலுள்ள இறைச்சிசூட்டிறைச்சியானாற்போல.
௫௧-௫௨. கைகுறைத்தசெங்கோல் - கைகுறைத்தற்குக் காரணமாகிய செங்கோலையும்.
௫௪. நன்வாயாகுதல் - நன்றாகியமெய்யாதல்.
௫௫. பெருஞ்சோறுபயந்த - பாண்டவர்கள்படைக்கும் துரியோதனன்படைக்கும் சோழன் சோறிட்டதனை
௫௮. பெருநாளிருக்கை - பெரிய நாளோலக்கத்திருக்கை
௬௭. மறநெறி செங்கோல் - மறத்தினெறியொழுகினவனை.
௬௪. தீங்கிலைமலைய - போகிய தீமலையம்.
௬௭. ஒன்று - முத்தி. இருபிறப்ப - உபநயனத்துக்கு முன்னும் பின்னும்
௬௮. முதல் - அசையியம், காருகபத்தியம, தக்கிணாக்கினி
௭0. அறந்தாழ்வோனர் பெறுமுறை - ... தல் ... வேட்டல் வேட்பித்தல் ... பெறுமுறையை ... - அதனுக்குக் கூறப்பட்ட.
௭௧. நாவெற்றியையுடையோராய்.
(௭0) பெறுமுறைவகுத்த (௭௧) நன்கலங்கொண்டெனக.
௭௩. நாவலங்கொண்டு - தருக்கஞ்சொல்லி; நாவலம - நாவெற்றியுமாம்.
(௭௩) நாவலங்கொண்டு நட்டீச் (௭...) ...க (௭௯) கொண்டு தனது பெயர் மேவான் போதர.
௭௭. இருக்குநேரரின்மறையவர் - பஞ்சாக்கினிகள்.
௭௯. தவகாம் - இருத்தங்காரர்.
௮௦. அரசுநிற்குமன்று.
௮௧. காட்டம - சமித்து.
௮௪. வாழ்கெனவாழ்கவென்றுசொல்லவென்க.
(௮௯) குடையையும் (௯0) கொற்றத்தையுமுடைய விறலோன்.
௯௩. சிறாருழந்த - தன்னை அவர்கள் உழந்த.

அ௯. குண்டப பாரப்பீர் - பிழுக்கை மாணிகாள்; சிறுமாணிகாள், சிறுபிள்ளைகளென்னின்றுமாம்.

௯௧. அப்பமா செல்வன பெயர் - தக்ஷிணாமூர்த்தி.

௯௨. பாறையுசெவியாறையுடைய பிரசாரிகள். படிமம் - படியெனவுமாயிற்று. படிமத்தார் - தன்னை இளமையாகவொருபார்; படி - வேடமுமாம்.

௯௩. புனைவனவும் பூணபனவுமாக வேறுபடுதலிற் புனைபவும்பூண்பவுமென்றார்

௧௦௩. கோமுறையன்றி - இராசநீதியன்றி

௧௦௪. பட்பொருள் - புதையல, களவுபொருளென்றுமாம்

௧௦௭. ஊரையம்கோயில் - மதுரையிற்றுர்க்கைகோயில

௧௧௦. செந்மொழிகூறி - பகர்ந்து சொன்னது

௧௧௧. மயரூர் - ஊரின்பெயர்.

௧௧௨-௧௧௩. இவளாபிறக்க தகனாறு... வைத்தொன்பதோருமவிட்டு

௧௨௧. திருமார்புகலந்தாக - தெண்டமிகை அவன்... மடந்தையைஅவனைப்பணிப்பித்தவர்... மடந்தைதந்த திருமார்பு ... யர்.

௧௨௨. ...பிரிவைப் பெருமையார்... கவேட்கை

௧௨௩. கறை - கடமை

௧௨... பொருள் - ப...
... அ
...யம் தனதேட் ... தால மிக்கபொருள்.
... பயனவெ... ...

௧௨... உறவைக்குறத - ... தாக நித்த. பெற்றவக்க - கொணடவர் ... அ விருபாகரும ... ரக.

அதலால், தமக்காகாது, பெற்றவர்களமென்று அறையிஞள்.

௧௩௧. கோமுறையறந்த - இராசநீதியினை நீதியாகச்செய்யான.

௧௩௩. பேரிருட்பக்கம - கிருஷ்ணபக்ம.

௧௩௪. அழல்சேர்குட்டம் - கார்த்திகைபரணி.

௧௩௭. உரை - சோதிடவார்த்தை; உரையிமுணடென்பது, எதிரதுதழீஇய எச்சவும்மை.

௧௩௯ - ௧௪௪. வசுவுங்குமரனுமாகிய வேந்தரிருவர் தம்மில்தாயவேந்தர்.

௧௪௫. இருவரது மலையுமெல்லைவென்றி நிகழுதை காரணமாகச் செல்வோரின் மையால.

௧௪௬. காந்தமை றமாக்களைப்போல பரணைங்களாகசுமந்து போந்தென்று ஒருசொல வருவிகக.

௧௪௭ - ௧௪௮. சிங்கபுரத்தின் ஓரங்காடியிடத்தாறகவிருந்து.

௧௪௯. பைந்தொடி - முன்னிலே.

௧௫௦. விரதசிங்கிய - கொல்லாவிரதத்தாலசிங்கிய. வெறுப்பினனைதலின் - வெறுக்கபபடுவனைதலால்.

௧௫௨. பரதனென்றது - கோவலனை, முறைப்பெயரா.

௧௫௩. விசும்பேணியில் - விசும்பெல்லையில், †"நளியிருமுந்நீர் ரேணியாக" என்றார் தலைமகனைக்கூவெதாகநின்றாள்.

சா (௧௫௪) வீடுவோளென்க.

௧. யாவதும் - எப்படியாலும்

௨. தம்முறு துயராமிறருகுக-தாங்களும இப்படி படுவார்களாக.

௧௫௭. செய்தோரென்னும் போந்தபொருளிற் படுவார்களாகவென முடியங்கோள் வருவித்தலோடுமுடிந்தது.

௧௬௦. நான்பட்டதேபடுகவென்றது, வழுவிட்ட படிமைக்கொண்டு.

௧௬௧ - ௧௬௨. உம்மைவினை ... யாதவாது உம்மையிற் செவ்விய மனமிலாதோர்க்கு அககாலத்துச் செய்தவினை வந்து பலிக்குங்காலத்து முன்புசெய்த நலவினையாதும் உதவாது, இத்தீவினைவந்து கெடுப்பதற்கு முன்னேவந்துதவுதல பின்புங்கதுவுதல செய்யுமித்தனை. அந்நலவினையும் உதவாமற்போகாது; பாவமானதும் தனியே அனுபவிக்கவேணும்.

௧௬௫. எஞ்ஞோர் - எங்குள்ளோர். இல்லென்று மதுரைமாதெய்வம்சொல்ல.

௧௬௭. பொற்றொடி - பொலிவினையுடைய சங்கவளை. தாக்கைகோயில் வாசலிலே தன் கைவளையைத் தகர்த்து.

---

* திருக்குறள், வெஃகாமை, உ. † புறநானூறு, ஙரு.

௧௮௫. தமியேனைப் பெயராகின்றே னெனச்சொல்லி.

௧௮௬. இரவும்பகலுமயங்கினன் - இரவும்பகலும் அறியாதுமயங்கி.

௧௮௯. அவலித்திழிதல் - பதறியிழிதலாற் குழியென்று பார்க்கிலன்.

௧௯௦. நெடுவேள்குன்று - திருச்செங்கோடு. அடிவைத்தேறியென்றார், அதற்குமுன்பு வருத்தத்தாற் கால் நிலத்துப் பாவாமையால.

௧௯௧. வேங்கையின்கீழேநின்றெனக

௧௯௨. குறத்தியாகேட்கத் தீதொழிலாட்டியேன் யானென்றுசொல்லி; எங்கியென்றது - சொல்லியெனாபடி.

௧௯௫. எழுநாளிரட்டி - வேங்கை நீழலினின்ற நாளளவு. எல்லையென்றது - பகலை. அவணின்ற நாளளவு, அன்று பதினாலாநாளாயிற்று. பதினாலாநாள் பகற்பொழுது சென்றபினெனக. பதிகத்திலும் *"ஈரேழ் நாளகத் தெல்லை" என்றார்.

(௧௯௪) 'தொழுநாளிது' என்றது முதலாக, (௧௯௭) 'தமர்வந்தேத்த' என்பது-அமரர்க்கரசன் தமர்வந்து, கண்ணகி தன்கணவனைத் தோன்றவாழ்த்தித் தொழுநாளிதுவெனக்கருதி இவள்பெயரைச் சொல்லி மலர்தூவி ஏத்தினார்; இவள் பெயர் மந்திரோச்சரிப்பதலால்.

"இன்னும் கண்ணகி கோவலனைத் தோன்றவாழ்த்தி வானவூர்தியேறினள்; பெருமபெயரேத்தி மலர்மாரிபெய்து தமர் வந்தேத்த வானவூர்தியேறினளெனக.

"தெய்வந்"—மண்ணகமாதர்-உலகத்துக் கற்புடைமகளிர். விண்ணகமாதர்க்கு விருந்தாயினள்: ஆதலால் தெய்வந் தொழுகை திண்ணிதெனக.

மதுரைக்காண்டம் முற்றிற்று

வஞ்சிக்காண்டம்.

௨௪.—குன்றக்குரவை.

"குருவியோப்பியும்" — குன்றத்துச் சென்றதுவிக் குருவியோப்பியுமெனக.

வள்ளி - வல்லி; தங்கள் வல்லியென்றின்று பெணணுமாம்; 'என்றது - குமரவேள் தேவியை.

நினைநீர், யாவிர் - இவை உயர்த்துக் கூறினா.

பரியாதே - அவர்கள் கேட்டதற்கு வெருதே.

மணமதுரை - கலியாணமதுரை.

முன் தேவருடன் போனபடியை விரியக்கூறினது இது

போயினார் - முற்று.

பறம்பின்றாழ்வரை - நெடுவேள்குன்றமாகிய பறம்பின் தாழ்வரையில்.

வேங்கைக்கீழ் ஓர் தெய்வமாகப் பண்ணிக்கொள்ளுமின்.

தொடுத்தல - வாசித்தல்.

கோடு - கடமாக்கொம்பு.

கொடுமணி - ஓசைகடிதாணமணி.

காப்பு - சுற்றுமதில்.

கடை - வாயில சுற்றுமதிலிட்டு வாசலும் செய்ம்மின

வளர்த்தேச்சாது சூரக்கவென்று நங்கைக்குச் செய்ம்மினென்று முன்னேகூட்டுக.

"ஆங்கொன்று" — ஆங்கொன்று காணுமென்றது, தூரநின்று. கிட்டச்சென்று, நீங்கிதுவென்றான். இதுவென்றான், கண்ணகி இங்கேவந்தவளவிலே மழை பெய்தலால் விழுகிற அருவியை. அவ்வருவிதூங்கக்கண்டு தங்களையறுகவைத்தபடியே. * * * செறிய - செறியா ---. ஆடுதுமே, ஏகாரம் - தேற்றம். அவனை கொடுமை கிடக்கச்செய்தேயும் அவனுடைய மலையருவியை ஆடவேண்

---

* பதிகம், ௫௧.

டிற்றேயென்றான். அஞ்ச லோம்பு - அஞ்சுதலைப் பரிகரி.

கொளுச்சொலென்றது, மேற்சொல்லுகின்ற மூன்றுபாட்டின் சொற்களைப் போதந் இப்பாட்டின் கருத்தென்றுமாம்.

"எற்றென்று"—எறெனுன்றும்-என்னென்றும்; விகாரம் அவர்செய்த கொடுமையால் நாம் அவாமலேயில்வந்த புதுப்புணலோடு புலத்தற்குச் சிறிதும் காரணமில்லை. மற்றையாரென்றது, அருவியாடு வாளை=தன்னையொழிய முன் அந்நீரிற் குளித்த மகளிரை. தனக்கு முற்படவாடின், அவரோடு நெஞ்சுதான வேறுபட்டுப் புலத்தற்குக் காரணம் என்னென்றான். அன்றேயெனபது - இசைநிறைக் கிளவி. இவைமூன்றும முன்னிலைப்புறமொழி.

'எறறென்றும்' என்பது முதலாக மூன்றும சிறைப்புறம். தோழிக்குத் தலைமகன்சொல்லியது.

"உரையினி" — உரையினி - இனிச்சொல்.

"சீர்கெழு" — செந்தில் - திருச்செந்தில். செங்கோடு - திருச்செங்கோடு. வெண்குன்றம் - சுவாமிமலை. ஏரகம் - * * சூரமா - சூரனாகியமா. சுடரிலைய, அ - இடைச்சொல். சுடரிலைய வேல், இறைவன்வேலென்க.

"அணிமுக"—இணையின்றி - இவ்வடிவு பிறர்க்கு இலலாமையாற் பிறரொப்பில்லாதான்.

'சீர்கெழுசெந்தில்' முதலிய மூன்றும் வரைவுமுடிவதாகத் தெய்வம்பரவியது.

'இறைவனைகல்லாய்' முதல, 'என்றியாம்பாட' இறுதி அறத்தொடுநிலை.

"சரவண" — அறுவர் - கார்த்திகையார் குருகுபெயர்க்குன்றம் - கிரவுஞ்சபருப்பதம்.

"செறிவளை"—வெற்பனேய் - வெற்பனல்வந்த நோய்.

"வேலனோ"—நீலப்பறவை - மயில்.

"கயிலை"—மகனை, ஐ-இடைச்சொல். அயன்மணம் - பிராகாபத்தியம். ஒழி - இதனை விலக்குவாய்

"மலைமகன்"—பலரறிமணமென்றார், இதற்குமுன்பு களவாதலால். படுகுவர் - உடன்படுகுவாராக. அவரென்றது தலைவனை.

"குறமக"—நின் திருவடிதொழுநரென்றது, சூளுற்றதலைவனை. துறை-நீர்த்துறை.

"என்றியாம்"—மறைநின்று - மறையச் சிறைப்புறமாகநின்று.

"கடம்பு"—[இப்படிச்சூடி ஏந்தி இவ்வூர் வருவது,அவனை முருகனென்று கண்டார் கலுழுதல்வேண்டி இச்சிறுகுடியோர் தெய்வமாக உடன்படா; ஆதலால் அறியார். மடவர் - அறியார்.]

"அலர்பாடு" — புறங்கொடுத்துப் போன - தன்பின்னே கிடக்கப்போன. தமராகக் கூடி - தமரெலலாருங்கூடி. நிலை - தன்மை.

"பாடுகம்"—அத்தன்மையினை நாம் பாடுமிடத்து இதனை வேணடிக்கொள்வோ மென்றார்

பாடுற்று - பெருமையுற்று.

"பத்தினி"—வானோர் கொடுத்தபின்பும் அவளைப் புகழுமொழியார்

"மறுதர"—மறுதரவு - மீட்சி. இவ்வூரும் ஒருவிரதம்பெறுக கணவன்மணமவைவு.

"கொண்டுநிலை" — கொண்டுநினை - பொருளைக் கொண்டுநிற்குநிலை. கைவந்தார் - அவன்பிரசாதத்தாலே நம்வழியிலேபுகுந்தார். உண்டு - வீரபானமுணடு. ஆனைக்கொறும்வாழ்வாராக.

இவ்வுறுப்புக்களையுடைய கொச்சகப்பாத் தலைமகட்குத் தோழி வரைவுகூறியது.

இன்னும்,—

"அணிமுகம்" — பிணிமுகம் - மயில்

"சரவண"—சரவணப்பூம் பள்ளியறை - சரவணப்பொய்கையில் தாமரையாகிய பள்ளியறை. தாய்மாரறுவர் - கார்த்திகைநக்ஷத்திரம். கிரியோனவுணன் - மலையைச் சூழவரும் அவுணன. மார்பம்பிளந்து - மார்பம்பிளக்க.

"குறமகள்"—துறைமிசை - நீர்த்துறையில்; நின் திருவடியைச் சூளுறுமவரென்க; *"யாறுங் குளனும்" என்றாதலின்.

* பத்துப்பாட்டு, திருமுருகாற்றுப்படை, உ௨௪.

"என்றியாம்"—சென்றேன்-சென்று நின்றேன் - நின்றநான்.

"கடம்புசூடி"— இச்சிறுகுடி யோர் மடவர் - அறிவிலார். ஆதலால * * * * * * * * *

சொல்லுமாறு:—அறுமுகமில்லை; அணி மயிலில்லை என்று சொல்லுவார்களென்று வேறுகாட்டினான். தலைமகன், கடம்பு சூடி உடம்பிடியேந்தித் தன்னைக் குமரனென்று பிறர் கருதவந்த காரணம் *"பணைத்தந்தன், மணங்கமழ் மெய்வத்திளநலங் காட்டி" என்றாதலால்.

"அலர்பாடு" — புலர்வாடுநெஞ்சம் புலருநெஞ்சம். புறங்கொத்துப்போன ஒழியப்போன்.

௨௫.—காட்சிக்காதை.

௧ மாநீர் வேலிக் கடம்பு - இருண்ட நீரை வேலியாகவுடைய கடம்பு.

௪. இலஙக்கு - நீராவி.

[illegible] இளங்கோவேண்மான் - பெயர், நன்னன்வேண்மான், உதியஞ்சேரலவேண்மான் என்பனபோல. வேண்மானுடனிருந்து, இளங்கோவை அருவிப்பாட்டென்றுமாம்.

(௯) செங்குட்டுவன் (எ[illegible]கொண்குவ மென்றசொல்லி [illegible] பெயர்வோன்போனது.

௧௨ - ௧௩ பூககமுதலான [illegible] யானைமேற்[illegible]

௧௪. அரங்கு - [illegible] பள்ளி - மண்டபம்.

(௧௬) [illegible] இடைநிறைப [illegible] பபபி [illegible] நாகமுதலியனவதிர்த்த [illegible] பூம்பாப் பாற் புனல் ஒலித்தது

௨௨. மலையைவிட[illegible] போயது - ஒர்யாறுநிறைபெ[illegible].

௨௩. எகர் - [illegible]சரிடத்து. இவைந் தொருங்கிருப்ப - மூவருங்கூடியிருப்ப

௨௫. செய்வேள்வேலன் - செய்வேளுடைய வேலன்; வேலன் - படிமத்தான்.

௩௦. சேயோன் - பணிமேவோன

௩௧ [illegible] - யானைப்[illegible]

௩௨. ஒலிப்ப - ஒலியாநிற்க

௩௩. 'அளந்துகடையறியா' என்பது முதல் நிறையினவர்க்கு அடை.

௩௫: யானையயிராகிய வெண்சாமரை மதுவின்குடம - தேன்குடம்.

௩௨ கூவைநீறு - கூவைக்கிழங்கி[illegible]

௩௬ பைங்கொடிப்படலை - பச்சிலைமாலை

[illegible] காயம் - வெள்ளுள்ளி பூமலி கொடி - பூங்கொடி

[illegible] அணைஇ - நட்டு.

[illegible] வான்வரி - புலி. கரிக்கடம் - யானைக்கன்று

௫௦. குடமுடப்[illegible] - பின்னைக்கமுடி, திசைச்[illegible]

[illegible]

[illegible] - [illegible]

[illegible] - [illegible]

[illegible]

[illegible] சாயாடலின், விராமிவ் வெமொனறு

(௫௬) [illegible] ஒழி[illegible] உணர்குமென், உணைக்குமென்பது [illegible].

[illegible] பலித்தற்குச்[illegible]

[illegible]

[illegible] பொருள்[illegible]

[illegible]

[illegible] - கல் [illegible] யாள், அவள்சொல்லியது முடியக்கேட்டிலன்.

[illegible] கலக்கங் கொள்ளாளென்றார், கலக்கமிறந்தாளென்பது தோன்ற.

(௭௦) [illegible] சுட்டாமை 'சொல்லியென ஒருமை [illegible] வருவிக்க.

[illegible] மின்னு - முன்னிலைப்பெயர்

பத்துப்பாட்டு, திருமுருகாற்றுப்படை, ௨௩௧ - ௨௪0

கூரு எம்மோரன்னவென்றது உட்கோள்.

கூரு - கூஎ. பாண்டியனது உயிரை உடம்பினின்று நீக்கினமை இப்பொழுது கங்கச் சென்றறவேனுமென்.

கூகூ. அக்கியது - முற்று.

க0க. பிறைபுயிமெய்திர் - உயிர்கள் யாதானுமொன்று [illegible] வருந்தின.

க0ச - க0ரு. தொழுதகவில்லென வந்ததை.

க0௬. துன்னியதுன்பம் - கண்ணகிக்குத் துன்னிய துன்பத்தை.

க0கூ. நன்றுகல் - முன்னிலைப்பெயர்

ககக. காதலன் - பாண்டியன்

ககஉ - ககஎ. மாதர் - அவன் தேவி; அவள் [illegible] திருவுறுக; அதுகூற [illegible] வேண்டு மென்று தேவி சொல்ல.

ககஅ. [illegible] புலவா - அமைச்சர்

கஉ0 - கஉக. [illegible] கங்கை, [illegible] காவிரி

கஉஉ. [illegible] - தேவவிருதுகள்.

கஉரு. [illegible] - பண்ணை.

கஉ௬. [illegible] மகட்டுருத [illegible] அரசனை [illegible] கலதாராருயி [illegible]

கஉஎ - கஉஅ. [illegible] பயன்படாத [illegible] இருந்தோர்க்குக் [illegible] யும்.

கஉகூ. [illegible] - [illegible]. மகட்பாற் [illegible] கொடுத்த காஞ்சியும்

கநக - கநக. தென்றிசைக்கண்ணே போர்செலவு அவன் எதிருன்றலையுயர்த்தான்.

கநஎ - [illegible]. சென்னியிலே மந்தார மாலையோடு [illegible] கைப்பூ இடையிட்டுத் தொடுத்த [illegible] யைத் தான் சூடிநிற்கு மதுவங்காணப்பெண்; [அவையும் வெட்டுவெதாமபதாம்]

(கச க) 'கொடைநிலைவ[illegible]' முதலாக, (க[illegible]) 'பெருந்சோற்று வஞ்சி' ஈறாகத் தன் [illegible] (க[illegible]) [illegible].

க[illegible]. [illegible]ட்கார் போகிய - [இடையில் முறியலாத;] நோதார் போகைக்குக் காரணமாகிய போக்கையென்றுமாம்.

கசஎ. பூட்கை - புட்கை.

கசஅ. பூவாவஞ்சி - கருவூர்.

கருஉ - கருக. பல்யாண்டு வாழ்கவென்று இனிச் சொல்லுகின்றான்; வில்லவன்கோதையென்னு மந்திரி.

கருஉ. நம்மையொக்கும்வேந்தரென்றான், குலம்பற்றி.

கருக - கருரு. புலிக்கொடியும் கயற்கொடியும் பகைக்களத்திலே உனக்குத் தந்து ஒழிந்தாராயினும் அவை எங்கும் பரந்து திக்கயங்களின் செவியகம்புக்கன.

கருஅ. தமிழ்பபடைமயங்கிய செருக்களம்.

கருகூ. கடமலே வேட்டமென் கட்புலம் பிரியாது - நீ நின்யானையை விட்டபடி என் கண்ணினின்றும் போகாது.

க௬க. எங்கோமகளென்றது செங்குட்டுவன்மாதாவை; இவளை இவன் கொண்டுபோய்த் தீர்த்தமாட்டினதொரு கதை.

க௬உ - க௬௬. ஆரியவரசராயிரவர்க்கு நீயொருவனாகச்செய்த போர்க்கோலங் கண்டது கூற்றமன்றோ.

க௬எ - க௬உ. இமிழ்கடல்வேலியைத் தமிழ்நாடாக்கவேண்டி இமயத்தே கற்காலகொள்கருகின், எப்பார் யாரென்று அரசனுக்குச்சொல்லி ஓலையெழுதுகவென்றான்.

க௬அ. செல்வது-செல்லுகிறபடியை.

கஎக-கஎஉ. வில்லுகயல்புலி இவையிற்றினையுடைய இலச்சினைமண்ணேற்ற ஓலைகளை மன்னர்க்கெல்லாம் வரைகவென.

மேல் அழும்பில்வேள் கூற்று :—

கஎந - கஎஎ. நண்ணார்வரவிட்ட ஒற்றுப்பிரியா; ஆகையாலே அவ்வொற்றே அரசர்செவிக்கு அறிவிக்குந்தன்மையையுடைய; வடதிசைக்குச்செலவு ஆனைமேல இங்கே பறையறைய வடுக்குமென்றான்.

கஎஅ. பகைமேற்செல்பொழுது நிறுத்துதலரியதானை. நேர்ந்து - உடன்பட்டு.

கஎகூ - கஅ0. வஞ்சிக்கூட்டு - எடுத்துச்செலவாற்கொண்ட திறை; அந்நாற் பொலிவுபெற்ற கருவூரிலே திரியச்சென்று அரசன் பேராற்றங்கரையினின்றும் போந்துபுக்கபின்.

கஅக. 'வாழ்க' என்றதுமுதல் பறையறைகின்றார்வார்த்தை.

௧௮௪. எங்காவலன் பெயருமென்பது முற்றுக்கி ஆதலினென்க.

௧௮௬ - ௧௯௧. எதிரேற்றுக்காணீராயின், கடலுட்புக்கும் மலையினேறியும் உறைமினென்பார், இரண்டுவார்த்தையும் கேட்டுவாழுமினென்றார்.

[அவ்விடத்துப்படை அதன்புகழேயாதலான, அவ்விடங்களிற்செல்லாதுஈண்டே உறைமினென்பார், அரசன் போர்கருதினதிசையிற் போம்படியைக கேளீராயினென்றார்.]

௧௯௦. தோட்டுணை - மகளிர். துறவு தவம்.

௧௯௧ - ௧௯௨. திருமேனியாகிய சேரமுகம்; சேரமுகம் அரசனுக்குச் சிறமையின், திருமேனியென்றார்.

௧௯௩. இறையிக வியானை - பட்டவர்த்தனம்.

௧௯௪. பறை - பறையொலி.

காட்சி - கற்பொள்ள மலைத்தால் நிச்சிரதல்.

௨௯.—கால்கோட்காதை.

௪ - ௫. தானைத் தலைவர் தம்மோடு ஆசான் பெருங்கணி அருந்திறலமைச்சர் கூடி யேத்திக்கேட்ப.

(எ) ஏவப்பட்ட தானைத்தலைவர்க்கெல்லாம் (அ) கூறுமென்க

௯. தாபதர் - தீர்த்தமாட இமயத்தினின்றும் வந்த தாபதர்

௧௦ அமையாவாழ்க்கை - நிலைபெறாத உயிர்வாழ்க்கை; பலமில்லாத வாழ்க்கையெனலுமாம். அந்தவள ஆரியமன்னர்சொன்ன வார்த்தை.

௧௧. நம்பால் ஒழிகுவதாயின் - அது நம்மிடத்தே கிடபபதொருவார்த்தையாயின் அவர்க்குப் பலியாது—நம்மிடத்தே கிடந்துவிடிற் சோழபாண்டியரிடத்தில் இகழ்ச்சியுந்தரும்.

௧௮. ஆகவென்று சொல்ல.

௧௩ - ௨௪. இமயவரம்ப, சோழபாண்டியரையல்லது நின்னை இகழ்ந்தகூறினரல்லர்; அப்போரண்ணலே, நீ வஞ்சினங்கூறுதற்கு நின்னுடன் எதிர்க்கும் மன்னருமுளரோ; ஆதலால், நின்சினந் தணிகவென்றான. இது புரோகிதன் வார்த்தை.

௨௫. ஆறிருமதியினும் - இராசி பன்னிரண்டிலும். காருவமு - நிரகநிலை.

௨௬. ஐந்துகேள்வி - திதி வாரம் நக்ஷத்திரம் யோகம் கரணம், கட்பு ஆட்சி உச்சம் பகை நீசக்கோளுமாம் அறிந்தவன் - *மௌத்திகன்.

௩௦ - ௩௧. இது †முகிழ்த்தம்; எழும் பக்கத்தையாகவெனச் சொல்ல.

௩௨ உரவோன் - சாத்தான.

௩௩ இரவிடங்கெடுத்த விளக்கிடையென்றது * * விநகிறபடியாலே.

* * * *

௩௭. நிரயத்தானை - மாற்றார்க்கு நரகவேதனைசெய்யுந்தானை.

௪௦ சுருமவினைஞர் - படைநிகிநர்.

௪௩. பிணடமுமுற்றும் பெருங்களிறு - * பிணடத்துக்குரிய களிறு பட்டவர்த்தனம்

௪௭. பரந்தி - பகவிட்டு

௪௯. தொகப்போனா - சேரன்

௫௨ - ௫௩. அரசரிக்கிறையைய அவைக்கருரசர்

௫௭. எக்கிய - வைத்த. பகை - அக்னிகோத்திரம

௫௬, ௫௭ அக்கினி கோத்திரங்களையும் நமஸ்கரித்து.

(௬௦) எதிரான் (௬௭) தாங்கினனசெல்வழி

௬௨. படகமாடம் - திருவநந்தபுரம் இரவிபுரமென்பாருமுளர்.

௬௬ குடையிற பொலிந்து - குவிந்தகையுடனேபொலிந்து, கூடைக்கை இரட்டை ஒற்றைக்கை.

௭௦ - ௭௧. அரசர்க்குவென யானைக்குஞ்சூட்டுதலின், வாளையும் குடையையும் போக்கதயோடு நின்யானைமுகத்து புனைத்தோன்றவென்றார்.

(௭௩) கட்டியையுடைனைமனாகவென (௭௪) நாடகமடந்தையர் (௭௫) வாழ்த்த நிற்க.

* மௌகூர்த்திகன். † முகூர்த்தம்; இது முழுத்தமெனவும் வழங்கும்.